ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

திருமங்கை மன்னன் திருவாய் மலர்ந்தருளிய

பெரிய திருமொழி

பரம காருணிகரான

பெரிய வாச்சான் பிள்ளை

அருளிச்செய்த வ்யாக்யானம்

இரண்டாம் பாகம் 5, 6, 7, 8 பத்துக்கள்

பெரிய திருமொழி

இரண்டாம்
பாகம்
5, 6
7, 8
பத்துக்கள்

DONATION

9135

कांगड़ी विश्वविद्यालय

"Forwarded Free of Cost, & with the Compliments of the Department of Education, Government of India, New Delhi

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

திருமங்கை மன்னன் திருவாய் மலர்ந்தருளிய

பெரிய திருமொழி

5, 6, 7, 8 பத்துக்கள்

पुस्तकालय

DONATION

8135

பரம காருணிகரான பெரியவாச்சான் பிள்ளை
அருளிச்செய்த வ்யாக்யானத்துடனும்,
அப்பு அரும்பதத்துடனும், உரையுடனும்

ஸ்ரீ வைஷ்ணவ க்ரந்த முத்ராபக ஸபையாரால்
பதிப்பிக்கப்பட்ட வ்யாக்யானத்தின்

மறுபதிப்பு

ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீ
ஹைதராபாத் – 500 045.

1992
ஆங்கிரஸ ஆண்டு

ரூ. 250/- மூன்று பாகங்கள்

மறுபதிப்பு — 1992

காப்பிகள் — 1000

விலை ரூ. 250/- (3 பாகங்களும்)

அச்சிட்டோர் :
லிப்ரா ஆப்செட் பிரிண்டர்ஸ்,
தஞ்சாவூர்.

கிடைக்குமிடம் :

8, Mayor Sambandam Colony,
Kodambakkam,
MADRAS - 24.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

அஞ்சாம்பத்து முதல் திருமொழி.

அறிவதரியான் ப்ரவேசம்.

வ்யா. — ஒருகாலோரிடத்தே நசை பண்ணிப் பெறுவிட்டால் "கிடைத்ததில்லை" என்று மீளலாம்படியன்றிறே இவர் நசை இருப்பது; நசைபண்ணுமவிருக்கவொண்ணாதபடி யிருக்குமிறே விஷயஸ்வபாவத்தைப் பார்த்தாலும். இனித்தான், உகந்தருளின நிலங்களிலே வந்து நிற்கிறது - தன்பக்கல் ருசியுடையாரோடே நினைத்தபடிகளெல்லாம் பரிமாறவிறே. ராஜாக்கள் தோப்புக்கள் பல சமைத்தால், "இன்னதோப்பிலே இன்னானுக்கு முகங்கொடுக்கக்கடவோம்" என்றறுதியிட்டிருக்குமாபோலே, உகந்தருளின நிலங்கள் பலவிடங்களிலும் நிற்கிறது - ஒன்றல்லாவோரிடத்திலே ஓரொருத்தருக்கு முகங்கொடுக்கைக்காக; ஆனபின்பு, நமக்கிவ்விடத்திலே முகந்தர நினைத்திலனாகில் மற்றோரிடத்திலே யாகிறது என்று உகந்தருளின நிலங்கள்தோறும் புக்குத்திரிவர்; "இன்னவிடத்திலே முகந்தரும்" என்றறியாரே; ஆகையால், திருப்புள்ளம்பூதங்குடியிலே ஸந்நிஹிதனானான், அங்கு நிற்கிறவன்றான். ஆஶ்ரிதர்க்குத் தானே அர்த்தியாய்க்கொண்டு காரியம் செய்யும் ஸ்வபாவன், ஆஶ்ரிதரோடு பிராட்டியோடு வாசியற முகங்கொடுப்பானொருத்தன், தன்னை யறிகைக்கீடான ஸுக்ருதம் பிறக்கைக்கும் தான் ப்ரவர்த்தகன், அதுக்குமேலே நிரதிசயபோக்யனும் என்று அவன்படிகளைப்பேசி யநுபவிக்கிறார். ... ... *

அரு.—அறிவதின்ப்ரவேசம்.—"சிறிதும் திருமேனி இந்த வண்ணமென்று காட்டீர்" என்று இந்தளூரில் லொய்த்தவர், இங்குச் செய்யாதே போனாலும் திருவெள்ளியங்குடியிலே நினைத்தவகைகளெல்லாம் பரிமாறலாமென்று புக்கநுபவித்தவிடத்தில், அங்கும் அர்ச்சாஸமாதி குலையாமலிருக்கக் கண்டவர், இன்னும் புள்ளம்பூதங்குடியிலே போகைக்குக் காரணமென், கைவிடவன்றோ வடுப்பது என்னும் ப்ரஶ்நத்தின்மேலே, இன்னும் நாலு திருப்பதிகளிலே போய்ப் பார்க்கிறாரென்று விவக்ஷித்து, அதுக்கு ஹேதுவை யருளிச்செய்கிறார் (ஒருகாலித்யாதி). (இவ்விடத்திலே) திருவெள்ளியங்குடியிலே. *மயர்வற மதிநலம் பெற்றவிவர், இன்னவிடத்

தில்·செய்வன், செய்யான் என்றறியாரோ வென்ன; ஆசாபரவசராகையாலே கலங்கியிருப்ப ரென்றருளிச்செய்கிறார் (இன்னவிடத்திலே யித்யாதி). தம்மாலறியப் போகாமையாலேயிறே முந்துற "அறிவதரியான்" என்றருளிச் செய்கிறாரென்று கருத்து. (க) "மாணுருவாகிய" இத்யாதிகளைப்பற்ற (ஆஶ்ரிதர்க்கித்யாதி). (உ) "வெற்பால்மாரி" என்கிறபாட்டைக் கடாக்ஷித் தருளிச்செய்கிறார் (ஆஶ்ரிதரோடித்யாதி). (ங) "அன்னமாகி யருமறைக ளருளிச்செய்த வமலன்" என்றத்தை யுட்கொண் டருளிச்செய்கிறார் (தன்னை யித்யாதி). (க) "கூத்தன்" (ச) "நேமியங்கை மாயன்" என்னு மவற்றை நோக்கி யருளிச்செய்கிறார் (அதுக்கித்யாதி) ... *

மூ.—அறிவதரியானனைத் துலகு முடையானென்னை யாளுடையான்
குறிய மாணுருவாகிய கூத்தன் மன்னி யமருமிடம்
நறியமலர்மேல் சுரும்பார்க்க வெழிலார் மஞ்ஞை நடமாடப்
பொறிகொள் சிறைவண்டிசைபாடும் புள்ளம் பூதங்குடிதானே.

பதம்.	உரை.	பதம்.	உரை.
அறிவது	ஸ்வயத்நத்தாலே அறிகைக்கு	இடம்	திவ்யதேசமானது,
அரியான்	துர்லபனானவனும்,	நறிய	பரிமளமுடைத்தான
அனைத்துலகும்	ஸமஸ்த லோகங்களையும் [டையவனும்	மலர்மேல்	புஷ்பங்களின்மேலே
உடையான்	தனக்கு சேஷமாக வு	சுரும்பு	சுரும்புஎன்னும் வண்டுகளானவை
என்னை	என்னை [னும்	ஆர்க்க	ஒலியாநிற்க,
ஆளுடையான்	அடிமை கொண்டவ	எழில்ஆர்	அழகுமிக்க
குறிய	வாமநமான	மஞ்ஞை	மயில்களானவை
மாணுருவாகிய	ப்ரஹ்மசாரிவேஷங்கொண்ட	நடமாட	ஆடாநிற்க, [ம்
கூத்தன்	மநோஹரமானசேஷ்டிதங்களை யுடையவனுமான ஸர்வேஶ்வரன்	பொறிகொள்	ரேகைகளை யுடையது
மன்னி	அமர்ந்து	சிறை	இறகுகளையுடையதுமான
உறையும்	வர்த்திக்கிற	வண்டு	வண்டுகளானவை
		இசைபாடும்	காநம் பண்ணாநின்ற
		புள்ளம்பூதங்குடி	புள்ளம்பூதங்குடிஎன்னும் திவ்யதேசமாம். (க)

(க) ரு-க-க. (உ) ரு-க-அ. (ங) ரு-க-கூ,
(ச) ரு-க-ரு.

வ்யா.—முதற்பாட்டு. (அறிவதரியான்) ஸ்வயத்நத்தாலே அறியப்பார்ப்பார்க்கு, என்றுமொக்க அறியவரிதாம்படி யிருக்கும் ஸ்வபாவன். (அனைத்துலகு முடையான்) அறிகையும் அறியாதொழிகையுமாகிற இவ்வர்த்தம் கிடக்க, ஸர்வலோகேச்வரனாக ஸர்வர்க்கும் ஸம்ப்ரதிபந்நன். (என்னையாளுடையான்) விஶேஷித்து என்னை யடிமைகொண்டவன்; (க) “ 𑌅𑌸𑍍𑌮𑌤𑍍 𑌸𑍍𑌵𑌾𑌮𑌿𑌨𑍍 - அஸ்மத் ஸ்வாமின் ”. (குறியவித்யாதி) இப்படி ஸர்வாதிகனானவன் வாமநவேஷத்தைப் பரிக்ரஹித்து, இரப்பிலே தகணேறின வடிவோடேகூட மஹாபலி யஜ்ஞவாடத்திலே புக்கு மநோஹாரியான சேஷ்டிதத்தையுடையவன் நித்யவாஸம்பண்ணி “விடேன்” என்று வர்த்திக்கிறதேசம். யஜ்ஞவாடத்திலே நடந்தபோது வல்லாராடினாப்போலே யாய்த்திருந்தது.

(நறியவித்யாதி) பரிமளத்தை யுடைத்தான மலரின்மேலே, சுரும்பென்று - வண்டிலே ஒரு அவாந்தரஜாதி, அவை ஆரவாரத்தைப்பண்ண, அழகுமிக்கிருந்துள்ள வடிவையுடைத்தான மயில்களாட; (பொறியித்யாதி) வரியையும் சிறகையுமுடைத்தான வண்டுகளானவை, அவற்றின் காலுக்கீடாகப் பாடாநிற்குமாய்த்து. ... (க)

அரு.—முதற்பாட்டு. (அறிவதித்யாதி). தாம் இலாய்த்துப் பின்பு செய்வானென்றெண்ணித் திருவெள்ளியங்குடியில் புக, பின்பு செய்யாமையாலே அறிவதரியானென்கிறாரென்று விவக்ஷித்துத்தாத்பர்ய மருளிச்செய்கிறார் (ஸ்வயத்நத்தாலே யித்யாதி). துர்ஜ்ஞேயனாகில் விடலாகாதோ, புள்ளம்பூதங்குடியிலும் போய்த் துடருவானேனென்னும் சங்கையிலே யருளிச்செய்கிறாரென்று விவக்ஷித்துத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (அறிகையித்யாதி). அனைத்துலகில் தாமும் கூட்டன்றோ, விசேஷித்துச் சொன்னாருண்டோ வென்ன வருளிச்செய்கிறார் (அஸ்மதித்யாதி). (க) “𑌅𑌖𑌿𑌲𑌜𑌗𑌤𑍍 𑌸𑍍𑌵𑌾𑌮𑌿𑌨𑍍 - அகிலஜகத் ஸ்வாமின்” என்று வைத்து, மீளவும் “அஸ்மத்ஸ்வாமின்” என்றாரே யென்று கருத்து. “மன்னி” என்னச்செய்தே “அமரும்” என்னவேணுமோ வென்ன; பேதம்காட்டுகிறார் (நித்யேத்யாதி).

“பொறி - சிறை - கொள்” என்றந்வயித்தருளிச் செய்கிறார் (வரியித்யாதி). ... ... (க)

(க) கத்யத்ரயம்-க-

மூ.—கள்ளக்குறளாய் மாவலியை வஞ்சித்துலகம் கைப்படுத்துப்
பொள்ளைக்கரத்த போதகத்தின் துன்பந்தவிர்த்த புனிதனிடம்
பள்ளச்செறுவில் கயலுகளப் பழனக்கழனியதனுட்போய்
புள்ளுப் பிள்ளைக்கிரைதேடும் புள்ளம் பூதங்குடிதானே. (௨)

பதம்.	உரை.	பதம்.	உரை.
கள்ளம்	வஞ்சகமான	இடம்	திவ்யதேசமானது,
குறளாய்	வாமநனாய்க் கொண்டு	பள்ளம்	தாழ்ந்திருக்கிற
மாவலியை	மஹாபலியை	செறுவில்	கழனிகளில்
வஞ்சித்து	வஞ்சனைபண்ணி	கயல்	மத்ஸ்யங்களானவை
உலகம்	(அவனுடையதாயிருந்த) லோகத்தை	உகள	துள்ளாநிற்க,
கைப்படுத்து	ஸ்வாதீநமாக்கிக்கொண்டும்,	புள்ளு	பக்ஷிகளானவை
பொள்ளை	த்வாரத்தையுடைய	பழனம்	நீர்நிலைகளையுடைய
கரத்த	துதிக்கையையுடைத்தான	கழனியதனுள்	வயல்களினுள்ளே
போதகத்தின்	கஜேந்த்ராழ்வானுடைய	போய்	ப்ரவேசித்து
துன்பம்	துஃக்கத்தை	பிள்ளைக்கு	(தம் தம்) குட்டிகளுக்கு
தவிர்த்த	போக்கினவனுமான	இரை	ஆஹாரத்தை
புனிதன்	பரிசுத்தனான ஸர்வேஶ்வரன் நித்யவாஸம் பண்ணுகிற	தேடும்	ஆராயாநின்ற

புள்ளம்பூதம் குடிதானே. (௨)

வ்யா.—இரண்டாம்பாட்டு. (கள்ளமித்யாதி) “இவன் ஸர்வேஶ்வரன், தேவர்கள் ஹிதம்செய்யவந்தான், அகப்படாதேகிடாய்” என்று சுக்ராதிகள் சொன்னவார்த்தை அவன் நெஞ்சில்படாதபடியான வாமந வேஷத்தைப் பரிக்ரஹித்து, தன்னதல்லாதத்தை “தன்னது” என்றிருந்தவன்பக்கல் நின்றும் தன்னதாக்கிக்கொண்டானாய்த்து. (பொள்ளையித்யாதி) துளைக்கையையுடையனான ஸ்ரீகஜேந்த்ராழ்வானுடைய துஃக்கத்தைப்போக்கித் தன் துஃக்கம் தீர்ந்தானாயிருக்கிறவன் வர்த்திக்கிற தேசம்.

(பள்ளமித்யாதி) தாழ்ந்த செய்களிலே கயல்களானவை செருக்குக்குப் போக்குவிட்டு உகள, நீர்நிலையையுடைத்தான கழனிகளினுள்ளிட்டுப்போய். (புள்ளுப்பிள்ளைக்கிரைதேடும்) ஆகிறது - “ஆலவாயுடையான் கேட்க, பட்டர் அருளிச்செய்தார்” என்று நாம் ப்ரஸித்தமாகச் சொல்லிப்போருமதிறே; - “கயலுகளாநின்றதாகில் புள்ளுக்குத் தேடிப்போக வேண்டுகிறதென்?” என்ன; “பிள்ளை, அவ்விடமறிந்ததில்லையோ; பிள்ளைக்கன்றோ தேடுகிறது, நிலமிதியாலே அவை

தான் தூறும் துலாமும்போலே வளர்ந்திருக்கும்; அதிலிதுக்கு ஸாத்மிக்கு மவை தேடிப் போகாநிற்கும்". ... ... (௨)

அரு.—இரண்டாம்பாட்டு. (கள்ளமித்யாதி). கீழ்ப்பாட்டில் தேவர்களுக்காகத் தன்னை இரப்பாளனாக்கினவன் செயலில் நசையாலே மீளவும் சொல்லிக்கொண்டு, இதிலும் ஒரு திர்யக்கு இரக்க வந்துதவினத்தையுமநுஸந்தித்து, தம்முடைய இரப்பும் தலைக்கட்டு மென்றிருக்கிறா ரென்று ஸங்கதி.

"புனிதன்" என்றதுக்குத் தாத்பர்ய மருளிச்செய்கிறார். (தன்னித்யாதி).

"பழனம்" என்றதி னர்த்தம் (நீர்நிலையை யுடைத்தான) என்றது. (௨)

மூ.—மேவாவரக்கர் தென்னிலங்கை வேந்தன் வீயச்சரந்துரந்து
மாவாய் பிளந்து மல்லடர்த்து மருதம் சாய்த்தமாலதிடம்
காவார்தெங்கின் பழம் வீழக் கயல்கள் பாயக் குருகிரியும்
பூவார்கழனி யெழிலாரும் புள்ளம்பூதங்குடிதானே. (௩)

பதம்.	உரை.
மேவா	(தன்னோடு) பொருந்தாத
அரக்கர்	ராக்ஷஸர்களுடையதான
தென்	தெற்குத்திக்கிலுள்ள
இலங்கை	லங்கைக்கு
வேந்தன்	ராஜாவான ராவணன்
வீய	முடியும்படியாக
சரம்	பாணங்களை
துரந்து	ப்ரயோகித்தும்,
மா	குதிரையான கேசியினுடைய
வாய்	வாயை
பிளந்து	கிழித்தும்,
மல்	மல்லர்களை
அடர்த்து	நெருக்கிச் சூர்ணமாக்கியும்,
மருதம்	மருதமரங்களை
சாய்த்த	விழச்செய்தவனுமான
மாலது	ஆஶ்ரித வ்யாமுக்தனை ஸர்வேஶ்வரனுடைய
இடம்	திவ்யதேசமானது,
ஆர்	நெருங்கியிருக்கிற
கா	தோட்டங்களில்
தெங்கின்	தென்னைமரங்களில்நின்றும்
பழங்கள்	பழங்களானவை
வீழ	விழ;(அதைக்கண்டு)
கயல்கள்	மத்ஸ்யங்களானவை (பயந்து)
பாய	வேறோரிடத்தில் துள்ளியோட, (அதைக்கண்டு)
குருகு	நாரைகளானவை
இரியும்	சிதறியோடா நிற்பதாய்,
பூ ஆர்	கமலம்முதலிய பூக்கள் நிறைந்த
கழனி	வயல்களுடைய
எழில்	அழகினாலே
ஆரும்	பூர்ணமான

புள்ளம்பூதங்குடிதானே (௩)

வ்யா.—மூன்றாம்பாட்டு. (மேவாவித்யாது) ஒரு உபாதியாலன்றிக்கே த்வேஷமே ப்ரக்ருதியாயிருக்கிற ராக்ஷஸர் வர்த்திக்கிற லங்கைக்கு நிர்வாஹகனான ராவணன் முடியும்படியாக அம்பையோட்டி, கேசிவாயைக்கிழித்து, மல்லவர்க்கத்தை யடர்த்து, ஒன்றோடொன்று சேர்ந்துநின்ற மருதுகளை முறித்தருளின. (மாலதிடம்) பிராட்டிபக்கலிலும் ஆஸ்ரிதர் பக்கலிலுமொக்க வ்யாமோஹம் பண்ணுகிறவன் வர்த்திக்கிறதேசம்.

(காவாரித்யாதி) செறிந்தசோலையில் தெங்கின்பழம்வீழ, அது தன்னை உத்தேசித்து விழுகிறதாகக்கொண்டு கயல்களானவை பாய. (குருகிரியும்) அக்கயல்தன்னை யுத்தேசித்துப் பாய்கிறதாகக்கொண்டு குருகுகள் சிதறியோடா நிற்குமாய்த்து. இரண்டுக்கு மொக்குமாய்த்துக்கலக்கம்; - தன்னைக்குறித்தன்றிக்கே யிருக்கச்செய்தே அஞ்சா நிற்குமாய்த்துக்கயல்; குருகு, அது தனக்கு ஆமிஷமாய் தானதுக்கு பாத ([illegible])க மாகா நிற்கச்செய்தேயும் அஞ்சியோடா நிற்குமாய்த்து. ... ... (௩)

அரு —மூன்றாம்பாட்டு. (மேவாவித்யாதி). ஒருநீர்ப்புழுவுக்கும் ஆனைக்கும் வந்த விரோதத்தைப் பரிஹரித்துப் புநிதனான வளவன்றிக்கே, தலைபத்துப் படைத்தவன் அபலையான பிராட்டிக்கு விரோதிக்க நிரஸித்தபடியும், அது தானும் பருவம் நிரம்பி வில்லுங்கையுமாக "எதிரிநான்" என்று வந்தவனை வென்றதாகையாலே அதிலுமாஸ்சர்யமாம்படி, திர்யக்காயும் ஸ்த்தாவரமாயுமிருந்த விரோதிகளைக் கையாலும் காலாலும் பிள்ளைத்தனத்திலே நிரஸித்த விது விஞ்சினதாகையால் இவையிரண்டையு மநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

மேவுதல் - பொருந்துதலாய், அதில்லாமையை நிரூபகமாக வருளிச்செய்ததுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஒருவித்யாதி).

மருதுகளிரண்டா யிருக்கவும் ஏகவசநமாக வருளிச்செய்தத்தாலே ஒன்றிலே வெளிகண்டு போனானென்னும்படி க்ருதஸங்கேதர்களாயிருந்தன வென்னுமர்த்தந் தோற்றுகிறதென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார் (ஒன்றோடொன்றித்யாதி). ... ... (௩)

மூ.—வெற்பால் மாரி பழுதாக்கி விறல்வாளரக்கர் தலைவன்றன்
வற்பார் திரடோளைநான்கும் துணித்த வல் விலிராமனிடம்
கற்பார் புரிசை செய் குன்றம் கவினார்கூடம் மாளிகைகள்
பொற்பார் மாட மெழிலாரும் புள்ளம்பூதங்குடி தானே. (௪)

பதம்.	உரை.
வெற்பால்	கோவர்த்தந மலையினால்
மாரி	மழையை
பழுதாக்கி	(கோ கோபர்க்கு பாதக(ஸாதக) மாகாதபடி) வீணாம்படி பண்ணி,
விறல்	பலத்தையுடையராய்
வாள்	வாளாயுதத்தையுடையரான
அரக்கர்	ராக்ஷஸர்களுக்கு
தலைவன்தன்	நிர்வாஹகனான ராவணனுடைய
வற்பு	திண்மையினால்
ஆர்	மிக்கிருந்துள்ளவைகளும்
திரள்	(மாம்ஸளங்களாய்) திரண்டவைகளுமான
ஐ நான்கு தோளையும்	இருபது புஜங்களையும்
துணித்த	தறித்துப் போகட்ட
வல்	த்ருடமான
வில்	தநுஸ்ஸையுடைய
இராமன்	சக்ரவர்த்தித் திருமகனுடைய
இடம்	திவ்யதேசமானது,
கற்பு ஆர்	ஶ்லாக்யமான வேலைப்பாட்டையுடையவைகளாய்
புரிசைசெய்	மதிள்களாகச் செய்யப்பட்டிருக்கிற
குன்றம்	மலைகளென்ன
கவின் ஆர்	அழகுமிக்க
கூடம்	க்ருஹங்களென்ன
மாளிகைகள்	அரண்மனைகளென்ன
பொற்பு ஆர்	ஸ்ப்ருஹணீயங்களான
மாடம்	மண்டபங்களென்ன (இவற்றினுடைய)
எழில்	அழகினாலே
ஆரும்	ஸம்ருத்தமான

புள்ளம்பூதங்குடிதானே. (௪)

வ்யா.—நாலாம்பாட்டு. (வெற்பால்மாரி பழுதாக்கி) மலையாலே, இந்த்ரன் அபிஸந்திபூர்வகமாக வர்ஷித்த வர்ஷத்தை வ்யர்த்தமாம்படி பண்ணி; பெருமிடுக்கராய் ஸாயுதருமாயிருந்துள்ள ராக்ஷஸர்க்கெல்லாம் வழியடித்துப் புக்கொதுங்கலாம்படி அஞ்சினான் புகலிடமாயிருந்துள்ளவனுடைய, வன்மைமிக்குத் திரண்டிருந்துள்ள தோள்களிருபதையும் துணித்த, மிடுக்கையுடைத்தான வில்லையுடைய சக்ரவர்த்தித்திருமகன் வர்த்திக்கிறதேசம்.

(கற்பாரித்யாதி) தொழில்மிக்கிருந்துள்ள மதிள்செய் குன்றங்கள், அழகுமிக்கிருந்துள்ள கூடங்கள், மாளிகைகள், அழகுமிக்கிருந்துள்ளமாடம், இவற்றினுடைய எழில் மிக்கிருந்துள்ள. ... (௪)

அரு.—நாலாம்பாட்டு. (வெற்பாலித்யாதி) க்ருஷ்ணாவதாரத்தில் மிகவு மாஶ்சர்யாவஹமாய் திர்யக்ஸ்த்தாவரங்களை ரக்ஷித்த வளவன்றியே தேவஜாதிக்கு நிர்வாஹகனான அநுகூலன் விரோதித்தத்தை, மலையைச்

சமர்த்தாகிலும் கையோயும்படி பண்ணின செயலும், ராமாவதாரத்தில் கையோயாதே கைவிஞ்சி சரவர்ஷத்தை வர்ஷித்துக்கொண்டு நின்றவனிடத்திலும் வீய ஒருசரம் துரந்து முடித்துவிட மாட்டாதே "அநுகூலிக்குமோ" என்னும் ஶங்கையாலே கைகழியவிட்டுக்கொண்டு வந்ததும் இவரை ஈடுபடுத்துகையாலே அவ்வவதாரத்வயத்தை யநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

(அஞ்சினான் புகலிடம்) என்றது - பயந்தார்க்கு அபயப்ரதாநம் பண்ணவல்லனென்கை. வற்பு - வல்லமை, ஆர் - மிகுந்திருந்துள்ள வென்று பதபேதம் திருவுள்ளம் பற்றி தாத்பர்யமருளிச்செய்கிறார் (வன்மையித்யாதி).

"கற்பு, ஆர்" என்றுபதபேதமாக்கி யருளிச்செய்கிறார் (தொழிலித்யாதி). (மதிள்செய்குன்றங்கள்) என்றது-மதிளாகச் செய்யப்பட்ட பர்வதமென்கை. "கவின்" என்றதினர்த்தம் (அழகு) என்றது. "பொற்பு" ஸ்ப்ருஹணீயதையாய் அருளிச்செய்கிறார் (அழகித்யாதி). ... ... (௪)

மூ.—மையார்தடங்கண் கருங்கூந்தலாய்ச்சி மறையவைத்த தயிர்
நெய்யார் பாலோடமுதுசெய்த நேமியங்கை மாயனிடம்
செய்யாராரலிரை கருதிச்செங்கால் நாரை சென்றணையும்
பொய்யாநாவில் மறையாளர் புள்ளம் பூதங்குடிதானே. (௫)

பதம்.	உரை.
மை ஆர்	அஞ்சநத்தினாலே பூர்ணமாக அலங்கரிக்கப்பட்டு
தடம்	விசாலமான [ம
கண்	கண்களையுடையவளு
கரு	கருத்தவர்ணமுடைய
கூந்தல்	கேசங்களை யுடையவளுமான
ஆய்ச்சி	யசோதையானவள்
மறைய	க்ருஷ்ணன் கண்படாதபடி
வைத்த	சேமித்துவைத்த
தயிர்	தயிரையும்
ஆர்	ஸம்ருத்தமான
நெய்	நெய்யையும்
பாலோடு	பாலோடுகூட
அமுதுசெய்த	அமுதுசெய்தவனாய்
நேமி	திருவாழியாலே
அம்	அழகியதான
கை	கையையுடைய
மாயன்	ஆஶ்சர்யபூதனான ஸர்வேஶ்வரனுடைய
இடம்	திவ்யதேசமானது,
செய்	கழனிகளிலே
ஆர்	நிறைந்திருக்கிற
ஆரல்	ஆரல் என்னும் மத்ஸ்யங்களை
இரை	(தனக்கு) ஆஹாரமாக
கருதி	எண்ணி [ய
செங்கால்	சிவந்தகால்களையுடை
நாரை	நாரையானது
சென்று	போய்
அணையும்	சேராநிற்பதாய்
பொய்யா	பொய்யில்லாத
நாவில்	நாக்களிலே
மறை	வேதங்களை
ஆளர்	ஆளுமவர்களானப்ராஹ்மணோத்தமர்கள் வர்த்திக்கிற

புள்ளம்பூதங் குடிதானே. (௫)

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (மையார்) பிள்ளை பக்கலுண்டான வாத்ஸல்யத்தாலே, அவனனுங் காமைக்காக, எப்போது மொக்க அஞ்ஜநங்கொண்டு கண்களை அலங்கரித்தும், மயிர்முடியைப் பேணியும் போருமாய்த்து. (ஆய்ச்சி மறையவைத்த தயிர்) இவனறியாத தோரிடம்தேடிவைக்குமாய்த்து. சாந்துப்பரணியிலே தயிரை வைக்குமாய்த்து. (நெய்யாரித்யாதி) நெய்யும் பாலு மமுதுசெய்த. (நேமியங்கை மாயனிடம்) யசோதைப் பிராட்டியைப் பேணியும் போருமாய்த்து.

(செய்யார்) செய்கள் நிறைந்திருந்துள்ள ஆரலாகிற மத்ஸ்யவிசேஷத்தை, கலியர் "கலவரிசிச் சோறுண்ணவேணும்" என்னுமா போலே, ஆமிஷமென்று புத்திபண்ணி, சிவந்த காலையுடைத்தான நாரைகள் சென்று கிட்டாநிற்குமாய்த்து. (பொய்யா) யதாபூதவாதிகளான ப்ராஹ்மணர் வர்த்திக்கிற... ... ... (௫)

அரு.—அஞ்சாம்பாட்டு. (மையித்யாதி). கீழ்ப்பாட்டில்-இந்த்ரன் விரோதித்ததுக்கு ஹேது "ஆஶ்ரிதருடைய கரஸ்பர்சமுள்ள அடிசிலை தேவதாந்தரத்துக்கு ஆக்கவொண்ணுது" என்று, தானே (௧) "[illegible] - கோவர்த்தநோஸ்மி" என்றநுபவித்ததாகையாலே, அத்தை நினைத்து, இவனுக்கு ஆஶ்ரித கரஸ்பர்ஶமுள்ள த்ரவ்யத்திலே இத்தனை நசையோவென்ன; யசோதை மறையவைத்தத்தையெல்லா மமுதுசெய்தபடி கண்டோமென்ற அதிலே ஈடுபட் டநுஸந்திக்கிருரென்று ஸங்கதி.

ஆய்ச்சியை இங்ஙன் விசேஷித்ததுக்குக் கருத்தருளிச்செய்கிருர்(பிள்ளை யித்யாதி). (அனுங்காமைக்காக) வேற்றுருக்கண் டஞ்சி பிள்ளைநோய் வாராமைக்காக. மறையவைக்கைக்கு இவனறியாத விடமுண்டோ வென்ன அருளிச்செய்கிருர் (சாந்தித்யாதி); இத்தால் - தரையிலே வைத்தாலும் உறியிலே வைத்தாலும் இவனறியாத விடமில்லையே, ஆகையாலே, இடங்காணுமல் சாந்துப் பரணியில்வைத்தா லத்தனை போக்கி அவளாலே மறைக்கவொண்ணு தென்றதாய்த்து. தன்னிலே தான் மறையவைத்ததாக எண்ணியிருக்கிரு ளித்தனை, *நேமியங்கையனான நாராயணனுக் கொளிக்கப்போமோ வென்று கருத்து. (௨) "பூசும் சாந்தென்னெஞ்சமே" என்னும்படியான நெஞ்சுக் காஶ்ரயமான தம்முடம்பிலே, விருப்பத்தை - ஸ்நேஹத்தையும் போக்யதாபுத்தியையும் பண்ணினும் அவன் விடாதே தனக்காக்கிக்கொள்வனென்னு மது ஸ்ப்புரிக்க, (சாந்துப் பரணியிலே) என்கிருரென்று கண்டுகொள்வது. கையும் திருவாழியுமாய் அவன் முன்னே கூத்தாடி உகப்பிட ரமென்னும் தாத்பர்யத்தை யருளிச்செய்கி

---

(௧) (௨) தி-வாய்-௪-௩-௧.

றார் (யசோதை யித்யாதி). (பேணியும்) என்ற சகாரத்தாலே - மறையவைத்தத்தையும், பண்டுதானறியாதவனைப்போலே ஆதரித்துப் போருமென்றதாய்த்து.

(கலியர்) க்ஷுதார்த்தர். பொய்யாகாத நாவிலே மறையை ஆளுவரென்று விவக்ஷித் தருளிச்செய்கிறார் (யதேத்யாதி). ... ... (௫)

மூ.—மின்னினன்ன நுண்மருங்குல்வேயேய்தடந்தோள் மெல்லியற்
மன்னுசினத்த மழவிடைகளேழன்றடர்த்த மாலதிடம் [காய்
மன்னுமுது நீரரவிந்தமலர்மேல் வரிவண் டிசை பாட
புன்னைபொன்னேய் தாதுதிர்க்கும்புள்ளம்பூதங்குடிதானே.(௬)

பதம்.	உரை.	பதம்.	உரை.
மின்னினன்ன	மின்னோடொத்த	இடம்	திவ்யதேசமானது,
நுண்	ஸூக்ஷ்மமான	மன்னு	(வற்றாமல்)பொருந்தியிருப்பதாய்
மருங்குல்	இடையையும் [தாய்		
வேய் ஏய்	மூங்கிலோடொத்த	முது	பழையதான
தடம்	விசாலமான [ளான	நீர்	ஜலத்திலுண்டான
தோள்	புஜங்களையு முடைய	அரவிந்தமலர் மேல்	தாமரைப் பூக்களின் மேலே
மெல்லியற்காய்	பெண்ணான நப்பின்னைப்பிராட்டிக்காக	வரி	ரேகைகளையுடைய
மன்னு	(மாறாதே) பொருந்தியிருக்கிற [தாய்	வண்டு	வண்டுகளானவை [ய்
		இசைபாட	காநம் பண்ணா நிற்பதா
சினத்த	கோபத்தை யுடைத்	புன்னை	புன்னை மரங்களானவை
மழம்	இளம்பருவத்தை யுடையனவான	பொன் ஏய்	பொன்னோடொத்த வர்ணத்தை யுடைய
ஏழ்விடைகள்	ஏழு ருஷபங்களையும்		
அடர்த்த	நெரித்தவனாய்		
மால்அது	வ்யாமோஹத்தை யுடையவனுமான ஸர்வேஶ்வரனுடைய	தாது	தாதுகளை
		உதிர்க்கும்	உதிரப்பண்ணுவதான

புள்ளம்பூதங் குடிதானே. (௬)

வ்யா.—ஆறாம்பாட்டு. (மின்னித்யாதி) மின்னோடொத்த நேரியவிடையையும், வேய்போலே இருந்துள்ள பெரிய தோளையுமுடையளான நப்பின்னைப் பிராட்டிக்காக. கருமாரீ பாய்ந்தும் அணைய வேணுமாய்த்து வடிவழகு. (மன்னு) மாறாத சினத்தையுடைத்தாய், "காட்டு, காட்டு" என்று வருகிற இளமையை யுடைத்தான ருஷபங்களேழையும் ஊட்டியாக நெரித்த பரமப்ரணயியானவன் வர்த்திக்கிறதேசம்.

(மன்னித்யாதி) மாருதமுது நீரில் தாமரைப்பூவின்மேலே, வரியையுடைத்தான வண்டு மதுபாநமத்தமாய்க் கொண்டிசைபாட, புன்னையானது பொன்னையொத்த தாதுகளை உதிராநிற்குமாய்த்து; பொன் பொடிக்களைக் கொண்டு தூவுவாரைப்போலே பாடுவார்க்கு. ... (௬)

அரு—ஆறும்பாட்டு. (மின்னித்யாதி). கீழே-வெண்ணெயமுதுண்டபடியை அநுஸந்தித்தவர், தம்மைப்போலே மெல்லியளான ஒரு பெண்ணமுதை யுண்டபடியை அநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

விடைகளின் கொம்புகளின் நடுவே இவன் குதிக்கைக்கு ஹேதுவாக வர்ணிக்கிறாரென்கிறார் (கருமாரி யித்யாதி). கருமாரி பாய்கையாவது-காஞ்சீபுரத்திலே சக்தியினாலயத்திலே குளத்தி லிரண்டு கூச்சுக்கள்நடுவே குதிக்கை. ... ... (௬)

மூ.—குடையா விலங்கல் கொண்டேந்திமாரி பழுதா நிரைகாத்து
சடையானோட வடல் வாணன் தடந்தோள் துணித்த தலைவனி
குடையாவண்டுகள்ளுண்ணக் கோலநீலம் மட்டுகுக்கும் [டம்
புடையார்கழனி யெழிலாரும் புள்ளம்பூதங்குடிதானே. (௭)

பதம்.	உரை.	பதம்.	உரை.
விலங்கல்	கோவர்த்தந மலையை	தலைவன்	ஸர்வ நிர்வாஹகனான க்ருஷ்ணனுடைய
குடையாகொண்டு	குடையாக அங்கீகரித்து	இடம்	திவ்யதேசமானது,
ஏந்தி	அநாயாஸேந தரித்து	குடியா	குடும்பமாகவிருந்து
மாரி	மழையை	வண்டுகள்	வண்டுகளானவை
பழுதா	வீணாக்கி	உண்ண	பானம் பண்ணும்படியாக
நிரை	பசுக்கூட்டங்களை	கோலம்	ஸுந்தரமான [னது
காத்து	ரக்ஷித்தும்,	நீலம்	கருநெய்தல் புஷ்பமா
சடையான்	ருத்ரனானவன்	மட்டு	தேனை
ஓட	(யுத்தத்தில்முதுகுகாட்டி) ஓட	உகுக்கும்	பெருக்காநிற்பதாய்
அடல்	யுத்தோந்முகனான	புடை ஆர்	பரப்பையுடைத்தான
வாணன்	பாணாஸுரனுடைய	கழனி	வயல்களினுடைய
தடம்	விசாலங்களான	எழில்	அழகினாலே
தோள்	புஜங்களை [வனுமான	ஆரும்	நிறைந்த
துணித்த	சேதித்துப் போகட்ட		புள்ளம்பூதங்குடிதானே. (௭)

வ்யா.—ஏழாம்பாட்டு. (குடையாவித்யாதி) கல்வர்ஷத்துக்குப் பரிஹாரமாகக் கல்லைக் குடையாகத் தரித்து. (ஏந்தி) பரார்த்தமான

வ்யாபாரமாகையாலே வருத்தமற்றிருந்தபடி. (மாரி) ப்ரதானனை இந்த்ரன் வ்யாபாரம் வ்யர்த்தமாம்படி, பண்ணின உபகார மறியாத பசுக்களை ரக்ஷித்து, ஈஸ்வராபிமாநி யானவன் முதுகுகாட்டியோட, யுத்தகண்டூதியையுடைய பாணனுடைய தோள்களைத்துணித்த. "ரக்ஷகனும் பொகட்டுப்போனான், நாமிவனைத் தலையறுக்கலாகாது" என்றிரங்கி தோள்களைக்கழித்துவிட்டானாய்த்து. அவன் விட்டுப்போனதாய்த்து இவனுக்கிரக்கத்துக்கடி. (க) [முண்டநீறனித்யாதி] பஸ்மத்தாலே உடம்படங்கலும் அலங்கரித்துக்கொண்டு வந்து தோற்றின ருத்ரன், அவனுடைய மக்கள், ஜ்வரம், பிடாரி, அக்நி இவையடங்க ஓடி மடங்கக்கண்டு. [நாணி] "எதிரியைக்கண்டவாறே ஓடுகிறவர்களைப் பற்றி வந்தவனையோ நாமழியச்செய்யப் பார்ப்பது" என்று லஜ்ஜித்து, பாணனுக்கிரங்கினான்; பர்த்ரு ஹீநையான ஸ்த்ரீயைக்கண்டிரங்குவாரைப்போலே. (தலைவனிடம்) மாறாத இவ்வாதிக்யத்தை யுடையவன் வர்த்திக்கிறதேசம்.

(குடியாவித்யாதி)புத்ர பௌத்ராதிகளோடும் பார்யாதிகளோடுங்கூட வண்டுகளானவை மதுபாநத்தைப்பண்ண. ஒரு கொசுகு கடலிலே இழிந்ததென்னா அதிலே ஒருமூலை சுவறுதிறே. தர்ஶநீயமான நீலமானது மது வெள்ளமிடாநின்றுள்ள பரந்த கழனியிலுண்டான எழில் மிக்கிருக்கிற புள்ளம்பூதங்குடிதானே. ... ... (எ)

அரு.—ஏழாம்பாட்டு. (குடையாவித்யாதி). கீழ்ப்பாட்டில்-ஓரிடைச்சிக்காக விடைகொண்டபடியை அநுஸந்தித்தார்; இடைச்சாதிக்காகக் கொடைபிடித்து இடையர்களோடு கூடின பசுக்களை நோக்கி, அவ்வளவன்றி, விடையோன் என்றபிமாநித்த சடையானைக் கடகாக்கிக் கொண்ட வாணன் கரங்கழித்தபடி தன்னையு மநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

தலையறுக்கவொண்ணாதோ வென்ன (ரக்ஷகனு மித்யாதி). ஓட, அத்தை ஹேதுவாக்கி அருளிச்செய்கிறார் (அவனித்யாதி). ஓடுகை இவனிரக்கத்துக்கு ஹேதுவென்னு மதுக்கு ஸம்வாதம் காட்டுகிறார் (முண்டனித்யாதி).

"மட்டுருக்கும்" என்றதினர்த்தம் (மதுவெள்ள மிடாநின்றுள்ள) என்றது. ... ... (எ)

மூ.—கறையார்நெடுவேல் மறமன்னர்வீய விசயன் தேர்கடவி
இறையான்கையில் நிறையாதமுண்டம் நிறைத்த வெந்தையிடம்

(க) தி.ச-வி-எக.

மறையால்முத்தீயவை வளர்க்கும் மன்னுபுகழால் வண்மையால்
பொறையால்மிக்க வந்தணர்வாழ் புள்ளம்பூதங்குடிதானே. (அ)

பதம்.	உரை	பதம்.	உரை.
கறை ஆர்	ரக்தக்கறை மாறாத	நிறைத்த	பூர்ண மாக்கினவனுமான
நெடு	நீண்ட	எந்தை	என் ஸ்வாமியினுடைய
வேல்	வேலாயுதத்தை யுடையவர்களும்	இடம்	திவ்யதேசமானது,
மறம்	கோபத்தை யுடையவர்களுமான	மறையால்	வேதங்களினாலே
மன்னர்	ராஜாக்கள்	முத்தீ அவை	த்ரேதாக்நிகளையும்
வீய	நசிக்கும்படியாக	வளர்க்கும்	வளர்த்தா நிற்பாராய்
விசயன்	அர்ஜுநனுடைய	மன்னு	(அதினால்) ஸ்திரமான
தேர்	ரதத்தை	புகழால்	கீர்த்தியினாலும்
கடவி	நடத்தியும்,	வண்மையால்	ஔதார்யத்தினாலும்
இறையான்	ஈஶ்வராபிமாநியான ருத்ரனுடைய	பொறையால்	க்ஷமையினாலும்
கை	கையிலே யொட்டினதாய்	மிக்க	அதிசயித்திருக்கிற
நிறையாத	ஒருவராலும் நிறைக்கப்போகாத	அந்தணர்	ப்ராஹ்மணோத்தமர்
முண்டம்	ப்ரஹ்ம கபாலத்தை	வாழ்	நித்யவாஸம் பண்ணுகின்ற
			புள்ளம்பூதங்குடிதானே. (அ)

வ்யா.—எட்டாம்பாட்டு. (கறையாரித்யாதி) சத்ருநிரஸநத்தால் வந்த கறை கழுவ அவஸரமில்லாமையாலே மாறாத கறையையுடைய நெடிய வேலையும் மறத்தையு முடையரான ராஜாக்க ளுடைய முடியும்படி அர்ஜுநனுக்கு ஸாரத்யத்தைப் பண்ணி, ஈஶ்வராபிமாநியான ருத்ரன்கையில் ப்ரஹ்மாவினுடைய சாபத்தாலே ஒருகாலும் நிறையாதே யிருக்கிற தலையோட்டைத் தன் திருமேனியில் ஜலபிந்துவாலே நிறைத்த வென்ஸ்வாமி வர்த்திக்கிறதேசம்.

(மறையாலித்யாதி) வேதத்தாலே அக்நித்ரயத்தையும் வளர்க்கும் மாறாத புகழால், ஔதார்யத்தால், க்ஷமையால், இவை யெல்லாவற்றாலும் மிக்கிருந்துள்ள ப்ராஹ்மணர் வர்த்திக்கிறதேசம். ... (அ)

அரு.—எட்டாம்பாட்டு. (கறையித்யாதி). கீழ்ப்பாட்டில்-இந்த்ரனெதிரிடவும், அவனிலும் விஞ்சின சடையானைத் துணையாக்கி வாணனெதிரிடவும், இருவரையும் கைபொழியப் பண்ணிவிட்டாரென்றார்; இதில் - அந்த இந்த்ரன் சிறுவனுக்குக் கையாளாயும், அந்த சடையானுடைய கை

டியோடு ஒழியவும் பண்ணினான், இதென்ன ஆஶ்சர்யம்! என்றீடு படுகிறாரென்று ஸங்கதி

"முண்டம்" என்றதினர்த்தம் (தலையோட்டை) என்றது... (அ)

மூ:—துன்னிமண்ணும் விண்ணாடும் தோன்றாதிருளாய் மூடியநாள்
அன்னமாகி யருமறைக ளருளிச்செய்த வமலனிடம்
மின்னுசோதி நவமணியும் வேயின்முத்தும் சாமரையும் [னே.
பொன்னும் பொன்னி கொணர்ந்தலைக்கும் புள்ளம்பூதங்குடிதா

பதம்.	உரை.	பதம்.	உரை.
மண்ணும்	பூலோகமும்	அமலன்	பரிசுத்தனான ஸர்வேஶ்வரனுடைய
விண்ணாடும்	ஆகாசத்திலுள்ள ஸ்வர்க்காதி லோகங்களும்	இடம்	திவ்யதேசமானது,
தோன்றாது	தெரியாமற்படி	மின்னு	விளங்காநின்ற
இருளாய்	அந்தகாரமேயாய்	சோதி	காந்தியையுடைய
துன்னி	நெருங்கி	நவமணியும்	நவரத்நங்களையும்
மூடிய	கப்பியிருக்கிற	வேயில்	மூங்கிலில்நின்று முதிர்ந்த
நாள்	நாளிலே	முத்தும்	முத்துக்களையும்
அன்னமாகி	ஹம்ஸரூபியாய்க்கொண்டு	சாமரையும்	சாமரங்களையும்
அரு	துர்லபமான	பொன்னும்	ஸுவர்ணங்களையும்
மறைகள்	வேதங்களை	கொணர்ந்து	கொண்டுவந்து
அருளிச்செய்த	க்ருபைபண்ணி உபதேசித்த	பொன்னி	திருக்காவேரியானது
		அலைக்கும்	தள்ளாநின்றுள்ள

புள்ளம்பூதங் குடிதானே. (கூ)

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (துன்னியித்யாதி) மண்ணும் விண்ணும் தோன்றாது துன்னி, இருள்தானே மூடினநாள். (அன்னமாகி) "ஆசார்யாநுவர்த்தநம்பண்ணிக் கேட்கைக்கு அநதிகாரிகளாயிருக்கவும் கூடும்" என்று திர்யக்வேஷ பரிக்ரஹம் பண்ணினானாய்த்து; ஸாரதியாய் நின்று உபதேசித்தாப்போலே. அஸுரர்களோடே கலந்து உருமாய்ந்துபோனத்தைப் பிரிக்கைக்காக, நீரையும் பாலையும் பிரிக்கும் பதார்த்தத்தின் வடிவைக் கொண்டானாய்த்து. (அமலனிடம்) ப்ரத்யுபகார நிரபேக்ஷயாகவு முபகரித்த சுத்தியு மொருசுத்தியே! சிலரபேக்ஷிக்க வன்றிக்கே தன் பேறாக உபகரித்தானாய்த்து.

(மின்னித்யாதி) ப்ரத்யுபகார நிரபேக்ஷமாக உபகரிக்குமவன் படியுண்டாய்த்து காவேரிக்கும். புகரையுடைத்தாய் உள்ள மண்பூற்

றன்றிக்கே யிருக்கும் நவரத்நங்களும். புறம்பே புகருடடி உள்ளு மண்பற்றாயிருக்கை யன்றிக்கே எங்குமொக்க ஒளியாயிருக்கும். ஜ்ஞாதாவும் ஜ்ஞாநமும் போலே இரண்டும் ஸ்வயம்ப்ரகாசமாயிறே இருப்பது. வேய்க ளுதிர்க்கிற முத்தையும், சாமரத்தையும், பொன்னையும், பொன்னி, கொணர்ந்தலைக்கும் - "இவற்றைக் கொள்ளு, கொள்ளு" என்று கொடுவந்து தள்ளாநிற்கும். ... ... (௯)

அரு.—ஒன்பதாம்பாட்டு. (துன்னியித்யாதி). கீழ்ப்பாட்டில்-* இறையான்கையில் நிறையாத முண்டம் நிறைத்தான்" என்று குருபாதகவிமோசநத்தைப் பண்ணினபடி சொன்னார்; இதில் - அவனுக்குங் கூட ஜநகனாய் பஹு (బహు) முகமான ஈஸ்வராபிமாநியா யிருக்குமவனுக்குக் கண்கொடுத்தாப்போலே வேதப்ரதாநம் பண்ணினமையை அருளிச்செய்கிறாரென்று ஸங்கதி.

தேவஸஜாதீயனாய் வந்து மறையைக் கொடுக்கலாகாதோ, அன்னமாவானென்னென்ன அருளிச்செய்கிறார் (ஆசார்யேத்யாதி); (௧) "ஈஸ்வரோஹம்" என்றிருப்பாரில் தலைவனாகையாலே ஆசார்யோபஸத்திப்ரகாரங்களைப்பண்ணா னென்று கருதி, இப்படிப்பட்டவனுக்கு முபதேசிக்க வேணுமென்று, திர்யக்கானால் அதிகாரிக் கொழியச்சொல்லலாகா தென்கிற நியமமில்லாமையாலே அப்படியா யுபதேசித்தானென்று கருத்து. இப்படி தாழ்ந்தாகிலு மிவ னுபதேசித்த விடமுண்டோ வென்ன வருளிச்செய்கிறார் (ஸாரதி யித்யாதி). திர்யக்காகவேண்டினால், வேதோத்த(த்)ரணம் பண்ணின மத்ஸ்யமான வேஷத்தாலே கொடுக்கலாகாதோ, ஹம்ஸமாக வேணுமோவென்ன அருளிச்செய்கிறார்(அஸுரரித்யாதி). இத்தால்-அஸுரர்கள் கையி லகப்பட்டு விஸ்வராதிகளாலே கெட்டு அர்த்தாந்தர ப்ராமகங்களானவற்றை, நீரக்ஷீர விபாகம் பண்ணுமாபோலே யதாவஸ்த்திதமாகவிபஜித்துக் கொடுத்தானென்றதாய்த்து. வேதரூப சப்தராசியை அபஹரிக்கை யாவதென்? அத்தைக் கொண்டுவந்து கொடுக்கையாவதென்னென்னில்; வேதாபிமாநி தேவதையை அபஹரிக்க, அவ்வழியாலே இவனுக்கு வேதம் மறக்க, அஸுரரில் ஸஹவாஸத்தாலே வேதபுருஷன் ப்ரஸந்நனன்றிக்கே யிருக்க, அவர்கள் பலாத்காரத்தாலே சில அப்யஸிக்க, அது உருமாய, இவன் அவ்வஸுரனை ஸம்ஹரித்து, வேதாபிமாநி புருஷனைக்கொடுத்து, யதாவஸ்த்திதமாக வேதாநுபூர்வியு முண்டாக்கிக் கொடுத்தானென்னத் தட்டில்லை யிறே. அமலத்வத்துக்கு ஹேத்வந்தர மருளிச்செய்கிறார் (சிலரித்யாதி). ப்ரஹ்மா தானும் ஆசார்யோபஸத்தி பண்ணாதே திர்யக்கென்றெண்ணி யிருக்கவும் உபகரித்தானென்று கருத்து. (௯)

---

(௧) கீதை-௧௬-௧௪.

மூ.—கற்றாமறித்துக் காளியன்றன் சென்னிநடுங்க நடம்பயின்ற
பொற்றாமரையாள் தன் கேள்வன் புள்ளம் பூதங்குடிதன்மேல்
கற்றார்பரவும் மங்கையர்கோன் காரார்புயற்கைக் கலிகன்றி
சொற்றானீரைந்திவைபாடச் சோர நில்லா துயர்தானே. (௧௦)

திருமங்கையாழ்வார்திருவடிகளே சரணம்.

* * *

பதம்.	உரை.
ஆ	பசுக்கள்போலே வளர்த்தியையுடைய
கன்று	கன்றுகளை [னும்)
மறித்து	வளைத்து (மேய்த்தவ
காளியன்தன்	காளியனுடைய
சென்னி	சிரஸ்ஸானது
நடுங்க	குலுங்கும்படியாக
நடம்	நர்த்தநத்தை
பயின்ற	செய்த்வனுமாய்,
பொன்	ஸ்ப்ருஹணீயமான
தாமரையாள் தன்	தாமரைப்பூவை இருப்பிடமாக வுடைய பெரியபிராட்டியார்க்கு
கேள்வன்	வல்லபனான ஸர்வேஶ்வரன் நித்யவாஸம் பண்ணுகிற
புள்ளம்பூதங்குடிதன்மேல்	புள்ளம்பூதங்குடியென்னும் திவ்யதேச விஷயமாக,
கற்றார்	பாகவத வைபவமறிந்து கற்க வல்லவர்களாலே
பரவும்	ஸ்தோத்ரம்பண்ணப்பட்டவராய்
மங்கையர்	திருமங்கையிலுள்ளார்க்கு
கோன்	நிர்வாஹகராய்,
கார் ஆர்	கருமைநிறைந்த
புயல்	மேகம்போன்ற
கை	ஔதார்யத்தையுடையரான
கலிகன்றி	ஆழ்வாருடைய
இவை	இந்த
ஈரைந்து	பத்தான
சொல்தான்	பாசுரங்களை
பாட	அப்யஸிக்கவே
சோர	ஆத்மாவை நரகாதிகளில் விழப்பண்ணுமதாய்
துயர்	துக்கப்ரதமான பாபமானது
நில்லா	நில்லாது. (௧௦)

வ்யா.—பத்தாம்பாட்டு. (கற்றாமறித்து) பசுமேய்க்கை நித்யஸூரிகளுக்கு ஓலக்கங் கொடுத்தவோபாதியாய், கன்றுகளை மேய்க்கிறவிடத்திலே, * நல்லதோர் பொய்கை காளியனாலே தூஷிதமாய்க் கிடக்க, "அவனை அங்கு நின்றுமோட்டவேணும்" என்று அவன் தலை நடுங்கும்படி கூத்துக்களை யாடின. (பொற்றாமரையாள் தன்

கேள்வன்) தன்னைப்பாராதே யாய்த்து அழிவுக்கிட்டது. ஸ்ரியஃபதியான தன் ஸௌகுமார்யத்துக்குச் சேராதிறே இஸ்ஸாஹஸம். (கற்றாரித்யாதி) (க) "രാമോ രാമോ രാമഃ - ராமோ ராமோ ராமஃ" என்கிறபடியே - இரண்டக்ஷரம் பிணைக்கவல்லா ரெங்குமுண்டு, ஆழ்வாருமொருவரே! என்னாநிற்கு மத்தனையாய்த்து. (காராரித்யாதி) நீர்கொண்டெழுந்த காளமேகம்போலே யாய்த்துக் கொடையிருப்பது. இத்திருமொழியை உபகரித்தவரிறே. (சொற்றானீரைந் திவைபாட)இதுக்கு மேற்பட்டதில்லை யிறே ரஸ்யதைக்கு. (சோரநில்லா துயர்தானே) இவ்வாத்ம வஸ்துவைச் சோரக்கொடுக்கும் வினை நில்லாது. (க௦)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

* * *

அரு.—பத்தாம்பாட்டு. (கற்றா வித்யாதி). வளர்த்தியாலே ஆக்களென்னும்படியான கன்றுகளை யென்று சப்தார்த்தம் விவக்ஷித்து, இப்படி விசேஷித்தத்தாலே ஸௌசீல்யம் தோற்றிற்றென் றருளிச்செய்கிறார் (பசுவித்யாதி). விவரணம் (ஸ்ரியஃ பதிஇத்யாதி). பரவுகை-ஸ்துதிக்கையாய், அத்தாலே - கற்றிருக்கை அர்த்தஸித்தமன்றோ, "கற்றார்" என்று விசேஷிப்பானென்னென்ன வருளிச்செய்கிறார் (ராமஇத்யாதி). பகவத்விஷயத்தி லிரண்டெழுத்தாகிலும் கூட்டாதாரில்லை, அதுவன்று கற்பது, பாகவத வைபவமறிந்து தத்விஷயத்திலே இரண்டெழுத்துக் கூட்டப்பெற்றாருண்டாகில் அவர்களிறே கற்றாரென்னத் தக்கவரென்றுகருத்து. "பாட" என்ற பதவாஸனை (இதுக்கித்யாதி). ... ... (க௦)

ஜீயர் திருவடிகளே சரணம்.

* * *

அஞ்சாம்பத்தில் முதல்திருமொழி முடிந்தது.

* * *

ஆழ்வார்-திருவடிகளே சரணம்.

அஞ்சாம்பத்து இரண்டாந்திருமொழி

தாந்தம் ப்ரவேசம்.

* * *

வ்யா.— "வெள்ளியார்வணங்க விரைந்தருள் செய்வான்" என்றார் - கீழிற்றிருமொழியில்; "பிறராஸ்ரயிக்க விரைந்தருள்செய்வான்,

---

(க) ரா-யு-கஙக-க௦ச.

க௦சு

என்று இதொரு பழங்கதை சொல்லவேணுமோ, தானே வந்து என் ஹ்ருதயத்திலே புகுந்து விரைந்தருள் செய்தவனன்றோ” என்று அவன்படிகளை அநுஸந்தித்து, இப்படிப்பட்டவன்றான் திருக்கூடலூரிலே வந்து ஸந்நிஹிதனானான், அவனாகிறான்- ஸர்வாதிகனாயிருந்து வைத்துத் தன்மேன்மைபாராதே ஆஸ்ரிதர்க்காகத் தாழநின்று கார்யம் செய்யும் ஸ்வபாவன், அவன் வர்த்திக்கிற தேசந்தான்- நிரதிசயபோக்யம் என்று, அத்தைப்பேசி யநுபவிக்கிறார். ... ... *

அரு.—தாந்தம்பெருமையின் ப்ரவேசம். — (கீழிற்றிருமொழியில்) என்றது- *அறிவதரியானுக்குக் கீழ்த்திருமொழியிலே என்றபடி. (அவன் படிகளை யநுஸந்தித்து) என்றது-“அறிவதரியான்”-ஸ்வயத்நபரர்க்கு துஷ்ப்ராபன், “என்னை யாளுடையான்” - எனக்குத் தன் ஸ்வாமித்வத்தை நிர்ஹேதுகமாகக் காட்டினவன் என்று, இப்புடைகளிலே *புள்ளம்பூதங்குடியோனிடத்திலே அநுஸந்தித்தென்றபடி. முதற்பாட்டில் ப்ரமேயத்தை அருளிச்செய்கிறார் (அவனாகிறா னித்யாதி): ... ... (*)

மூ.—தாந்தம் பெருமை யறியார் தூது
வேந்தர்க்காய வேந்தனூர் போல்
காந்தள் விரல் மென்கலை நன்மடவார்
கூந்தல்கமழும் கூடலூரே. (க)

பதம்.	உரை.	பதம்.	உரை.
தாம்	ஸர்வஜ்ஞரான தாமும் [யை	விரல்	விரல்களையுடையராய்
தம்பெருமை	தம்முடைய மேன்மை	மெல்	ம்ருதுவான
அறியார்	அறியாதவராய்	கலை	வஸ்த்ரங்களை அணிந்தவராய்
வேந்தர்க்கு	பாண்டவர்களுக்காக	நல்	விலக்ஷணர்களான
தூது ஆய்	தூதுபோனவருமாய்	மடவார்	ஸ்த்ரீகளுடைய
வேந்தர்	ராஜாதி ராஜனுமான க்ருஷ்ணனுடைய	கூந்தல்	குழல்களானவை
ஊர்	திவ்யதேசமானது,	கமழும்	பரிமளியாநின்றுள்ள
காந்தள்	காந்தள் புஷ்பம்போலே யிராநின்ற	கூடலூர்	கூடலூரென்னும் திவ்ய தேசமாம். (க)

வ்யா.—முதற்பாட்டு. (தாம்) ஸ்வதஸ்ஸர்வஜ்ஞரா யிருந்தாரேயாகிலும். (க) “యస్సర్వజ్ఞస్సర్వవిత్ - யஸ்ஸர்வஜ்ஞஸ்ஸர்வவித்” (உ) “పరాస్య శక్తిర్వివిధైవ శ్రూయతే స్వాభావికీ జ్ఞాన బలక్రియా చ - பராஸ்யசக்திர் விவி

(க) முண்டகோப-கக. (உ) ஶ்வேதாஶ்வ-சு.

தைவ ஶ்ரூயதே ஸ்வாபாவிகீ ஜ்ஞாந பலக்ரியாச” என்று ஶ்ருதிஸ்ம்ருதிகளோதாநின்றனவே யாகிலும். (தம்பெருமையறியார்) ஆஶ்ரிதரா யிருப்பார் தம்மையநுபவித்து, “ஆஶ்ரிதர்க்காகத் தாழநிற்கிற இதுவு மொரு நீர்மையே!” என்று ஆழங்கால் படுமதொழிய, தம்மாலறியப் போகாது. (தூதித்யாதி) (க) “இன்னார் தூதனென நின்றான்” என்றும், (உ) “நாடுடைமன்னர்க்குத் தூதுசெல்நம்பி” என்றும் சொல்லுகிறபடியே - பிறர்க்காகத்தன்னைத் தாழவிட்டுத் தூதுபோகாநிற்குமாய்த்து. எந்தனையேனும் தாழ்ந்தாரும், பிறர்க்காகத் தாங்கள் தூதுபோக இசையார்களிறே; அங்ஙனன்றியே, இவனறிவித்துத் திரிகிற ராஜாக்களுக்காகத் தூதுபோகாநிற்குமாய்த்து. (வேந்தரூர்போல்) இவனிப்படியே தன்னைத் தாழவிட்டாலும் இவனைத் தாழநினைத்திருப்பாரைக் கிடையாதே!; ராஜாதிராஜன் என்கிற பெருமையாலும் மிக்குத்தோன்றுகிறது.

(காந்தளித்யாதி) செங்காந்தள்போலே யிருந்துள்ள விரலையுடையருமாய், ம்ருதுவான பரியட்டத்தையுமுடையராய், ஸர்வப்ரகாரத்தாலும் விலக்ஷணைகளான ஸ்த்ரீகளுடைய. (கூந்தல்கமழும்கூடலூரே) (௩) “सर्वगन्धः - ஸர்வகந்தஃ” என்கிறவஸ்து நித்யவாஸம் பண்ணுகிற தேசமாயிருக்கச்செய்தேயும், அத்தையமுக்கி, இவர்களுடைய குழலில் பரிமளமே விஞ்சிவாராநிற்குமாய்த்து. ... ... (க)

அரு—முதற்பாட்டு. (தாமித்யாதி) “தம்பெருமை யறியார்” என்ன வமைந்திருக்க, “தாம்” என்றதுக்குக் கருத்தருளிச் செய்கிறார் (ஸ்வத இத்யாதி). ப்ரமாண கதநபூர்வகம் விவரணம் (யஸ்ஸர்வேத்யாதி). ஸ்வதஸ் ஸர்வஜ்ஞனவனறியாவிட்டால் அவனுக்குப் பெருமை யுண்டென்னுமிது அறிவார்தானாரென்ன வருளிச்செய்கிறார் (ஆஶ்ரிதரித்யாதி); *மயர்வற மதிநல மருளப்பெற்றவர் அவன் பெருமையைக் கரைகண்டு, ஸௌலப்யத்தைக் கரைகாண மாட்டாதே (ச) “எத்திறம்!” என்று மோஹிக்கையாலே, அவன் பெருமை யறிவாருண்டென்று கருத்து. (அங்ஙனன்றியே) என்றது - தாழ்மையில்லாத மாத்ரமன்றியே என்றபடி. (இவனறிவித்து) என்றது - “இவன் ஸர்வாதிகன்” என்று ருஷிகள் வாக்யங்களாலும் அதிமாநுஷ சேஷ்டிதங்களாலும் அறிந்து லோகத்தார்க் கறிவித்துத் திரிகிற என்றபடி. அன்றிக்கே, தானே இவர்களுக்கு சதுர்ப்புஜத்வாதிகளாலே பரத்வத்தை யறிவிக்க அறிந்து திரிகிற வென்னுதல். இரண்டர்த்

(க) உ-உ-௩. (உ) தி-வாய்-சு-சு-ச.

(௩) சாந்தோ-௩-கச. (ச) தி-வாய்-க-௩-க.

தத்தாலும் - தன் பெருமையறிந்தவர்க்கே தாழ்மை செய்தானென்றதாய்த்து. தூதுபோவானை "தூதன்" என்னாதே, "வேந்தர்" என்பானென்னென்ன அருளிச்செய்கிறார் (இவனைப்படி யித்யாதி). ... ... (க)

மூ.—செறுந் திண் டிமிலேறுடைய பின்னை
பெறுந்தண் கோலம் பெற்றாரூர்போல்
நறுந்தண்டீன் தேனுண்ட வண்டு
குறிஞ்சி பாடும் கூடலூரே (உ)

பதம்.	உரை	பதம்.	உரை
செறும்	மேல்விழாநிற்பனவாய்	பெற்றார்	லபித்தவரான க்ருஷ்ணனுடைய
திண்	பலிஷ்டங்களான	ஊர்	திவ்யதேசமானது,
திமில்	முசுப்புக்களையுடைய	நறு	பரிமளமுடைத்தாய்
ஏறு	ருஷபங்களை [ளான	தண்	குளிர்ந்தும்
உடைய	பந்தயமாக வுடைய	தீன்	போக்யமுமான
பின்னை	நப்பின்னைப்பிராட்டியினுடைய	தேன்	மதுவை
		உண்ட	பாநம்பண்ணுகின்ற
		வண்டு	வண்டுகளானவை
பெறும்	அவளே பெறத்தகுந்ததாய் [படியான	குறிஞ்சி	குறிஞ்சியென்னும் காநத்தை
தண்	கண்டார் கண்குளிரும்	பாடும்	பாடாநின்ற
கோலம்	அழகை	கூடலூர். (உ)	

வ்யா.—இரண்டாம்பாட்டு. (செறும்) எதிரிகள்மேலே சென்றுநிற்பனவாய், திண்ணிதான கருத்துக்களையுடைய ருஷபங்களுடைய. (பின்னைபெறுந்தண்கோலம் பெற்றாரூர்போல்) நப்பின்னைப்பிராட்டி ஒருத்திக்குமேயாய் - வேறோராஶ்ரயத்தில் கிடவாதபடியான, அழகை லபித்துப் பெறும்பேறு பெற்றானாய் அவன் வர்த்திக்கிற தேசம் போலே;

நறுவிதாய்க் குளிர்ந்து இனிதாயிருந்துள்ள தேனைப் பாநம்பண்ணின வண்டுகள், உள்ளுப்புக்க த்ரவ்யம் இருந்தவிடத்திலிருக்கவொட்டாமையாலே, காலநியதி பாராதே எப்போதுமொக்க குறிஞ்சி என்கிற பண்ணைப்பாடா நிற்குமாய்த்து. ... ... (உ)

இரண்டாம்பாட்டு. (செறுமித்யாதி) *தாம் தம்பெருமை அறி தூதுபோன வளவன்றியே, ஓரிடைச்சிக்காகத் தன்னைப் பே ரசி பாயத்துடங்கினானென்கிறாரென்று ஸங்கதி.

நிற்பனவாய்) என்றது - கிட்டாநிற்பனவாய் என்றாய், மேல் வாய் என்றபடி. "திமில்" என்றதினர்த்தம் (கருத்துக்களை)

என்றது. உடையவென்றது - சிதிலமாக வென்னுதல்; சுல்க்ஷமாக வுடைய வென்னுதல். நப்பின்னையே பெறத்தக்கதாய், தண் - குளிர்ந்த, கண்குளிரப் பார்க்கத்தக்கதான, நப்பின்னையின் கோலத்தைப் பெற்றவரென்று சப்தார்த்தம் விவக்ஷித் தருளிச்செய்கிறார் (நப்பின்னை யித்யாதி). கீழ்வாக்ய விவரணம் (வேறித்யாதி).

“தீன்” என்றதினர்த்தம் (இனிதாய்) என்றது. .... (௨)

மூ.—பிள்ளை யுருவாய்த் தயிருண்டடியே
னுள்ளம் புகுந்த வொருவரூர்போல்
கள்ள நாரை வயலுள் கயல்மீன்
கொள்ளை கொள்ளும் கூடலூரே. (௩)

பதம்.	உரை.
பிள்ளையுருவாய்	பாலனுடையவடிவையுடையராய்க் கொண்டு
தயிர்	தயிரை
உண்டு	அமுதுசெய்து
அடியேன்	தாஸபூதனான என்னுடைய
உள்ளம்	ஹ்ருதயத்திலே
புகுந்த	ப்ரவேசித்த
ஒருவர்	அத்விதீயரான க்ருஷ்ணன் வர்த்திக்கிற
ஊர்	தேசமானது,
கள்ளம்	வஞ்சகமான
நாரை	நாரையென்னும் பக்ஷியானது
வயலுள்	கழனிகளிலே
கயல்மீன்	கயலென்னும் மத்ஸ்யங்களை
கொள்ளை கொள்ளும்	அபஹரியாநின்ற
கூடலூர்.	

(௩)

வ்யா.—மூன்றாம்பாட்டு. (பிள்ளையுருவாய்த் தயிருண்டு) ஸர்வேஶ்வரனாயிருந்து வைத்து வெண்ணெயமுதுசெய்யப் பார்த்தால் இசைவாரில்லை; அதுக்காக, பிள்ளைவடிவுகொண்டு தயிரமுதுசெய்து, இப்படி ஆஶ்ரித ஸ்பர்சமுடைய த்ரவ்யத்தாலல்லது செல்லாத நீர்மையைக் காட்டி அநந்யார்ஹனாக்கி, விலக்காததோரவகாசம் பெற்றவாறே ஹ்ருதயத்திலேவந்து அவன் வர்த்திக்கிற தேசம்போலே.

(கள்ளமித்யாதி) அங்குத்தை நாரைகளானவை, காலிலே மத்ஸ்யங்கள் குத்தாநிற்கச்செய்தேயும், அவற்றிலோரபேக்ஷை யில்லாதாப்போலே அநாதரித்திருந்து, தான்கணிசித்த ஆமிஷம்வந்து கிட்டினவாறே மேல்விழுந்து கொள்ளைகொள்ளுமாய்த்து. யசோதைப்பிராட்டி தயிரையும் வெண்ணெயையும் சேமிக்கும்போது (௧) * ஓராதவன்

---

(௧) சிறிய திருமடல்-௩௨.

போலுறங்கி, அவள் பேரநின்றவாறே தான்கண்டபடி கொள்ளைகொள்ளுமாபோலே யாய்த்து இவற்றின் ஸ்வபாவமும். அவன் நகரக்ஷோபத்தை விளக்குமாபோலே யாய்த்து இவையும். ... ... (௩)

அரு.—மூன்றாம்பாட்டு. (பிள்ளையித்யாதி) *தாந் தம்பெருமை யறியாமைக்கு நீளாதேவியான நப்பின்னைக்காகத் தன்னைப் பேணாமையே யன்றிக்கே, ஒரு சிறுப்பிள்ளையாய் கள்ளத்தனத்தாலே தயிருண்டு என்னுள்ளம் புகுந்தானென்கிறாரென்று ஸங்கதி.

(இசைவாரில்லை) ப்ராப்த சேஷியென்று ஸம்மதிப்பாரொருவருமில்லை யென்கை.

நாரையின் கள்ளத்தனத்தை விவரிக்கிறார் (அங்குத்தை யித்யாதி). நாராயணன் படியாய்த்து நாரைகளின்படியு மென்கிறார் (யசோதை யித்யாதி). (ஓராதவன் போல்) அறியாதவன்போ லென்கை.... (௩)

மூ.—கூற்றே ருருவில் குறளாய் நிலநீ
ரேற்றா னெந்தை பெருமானூர்போல்
சேற்றே ருழவர் கோதைப் போதூண்
கோற்றேன் முரலும் கூடலூரே. (௪)

பதம்.	உரை.	பதம்.	உரை.
கூறு	சொல்லுகைக்கு(கொண்டாடுகைக்கு)	ஏர்	ஏர்கட்டி உழவல்லரான
ஏர்	தகுதியான	உழவர்	கர்ஷகருடைய
உருவில்	வடிவையுடைய	கோதை	மயிர்முடியிலே வைக்கப்பட்ட
குறளாய்	வாமநனாய்க்கொண்டு	போது	புஷ்பங்களிலேயுள்ள தேனை
நிலம்	பூமியை	ஊண்	உண்ணாநிற்பதாய்
நீரேற்றான்	தாநம்வாங்கினவனாய்	கோல்	சோலைகளிலே வாஸம் பண்ணாநின்ற
எந்தை	எனக்கு ஸ்வாமியாய்	தேன்	வண்டுகளானவை
பெருமான்	என் குலநாதனானக்ருஷ்ணனுடைய	முரலும்	பாடாநின்ற
ஊர்	ஊரானது,	கூடலூர்.	
சேறு	சேறுகளிலே		

(௪)

வ்யா.—நாலாம்பாட்டு. (கூற்றேரித்யாதி) “மமேதம்- மமேதம்” என்னுமபேக்ஷையுடைய வாமநவேஷத்தைப் பரிக்ரஹித்து என்னுதல்; அன்றியே, கண்டாரடங்கலும் “இதொருகுறள் வடிவிருக்கும் படியே!” என்று கூறப்பட்ட வடிவையுடையனாயென்னுதல். தன்னதல்லாததொன்று பெற்றாற்போலேயிருக்க, பூமிப்பரப்படைய நீரே

ற்று அச்செயலாலே என்னை எழுதிக்கொண்ட என்குலநாதனானவன் வர்த்திக்கிற தேசம்போலேயிருந்தது.

(சேற்றேரித்யாதி) மிக்க சேறுகளிலே ஏரை நடத்தவல்லராயிருந்துள்ள உழவருடைய மயிர்முடியில் வைத்தமாலையில் பூக்களிலே யுண்டான மதுவைப் பாநம்பண்ணின வண்டுகளானவை, மரத்திலே நின்றலர்ந்த போதைச்செவ்வியிலே மதுபாநம் பண்ணினதிற்காட்டிலும், இவர்கள் குழலிற்போதைச் செவ்வியிலே மதுபாநம்பண்ணி ஆளத்தி வையாநிற்கும். (கோல்தேன்) சோலையிலே படிந்த வண்டென்றபடி. ... ... (௪)

அரு.—நாலாம்பாட்டு. (கூற்றேரித்யாதி). பிள்ளையாய் கள்ளத்தனத்தால் தயிருண்டு அடியேனுள்ளம் புகுந்ததிலும், தன்னை இரப்பாளனாக்கினத்தாலே தம்பெருமை யறியாரென்னுமது ஸ்பஷ்டமாக அறியலாமென்கிறாரென்று ஸங்கதி.

கூறுகைக்கு-"தேஹி ([illegible])" என்று கேட்கைக்கு, ஏர் - தகுதியான, உரு - ப்ரஹ்மசாரி வேஷத்தையுடைய, குறளாய் என்று சப்தார்த்தம் விவக்ஷித்துத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (மமேத மித்யாதி). ... (௪)

மூ.—தொண்டர் பரவச்சுடர் சென்றணவ
அண்டத்தமரு மடிகளூர்போல்
வண்டலலையுள் கெண்டை மிளிரக்
கொண்டலதிரும் கூடலூரே. (௫)

பதம்.	உரை.	பதம்.	உரை.
தொண்டர்	ஆஶ்ரிதரானவர்கள்	வண்டல்	வண்டல்கள் பாய்ந்திருப்பதாய்
பரவ	ஸ்தோத்ரம் பண்ணாநிற்க,	அலையுள்	அலைகளையுடைத்தான நீர்நிலங்களிலே
சுடர்	ஸூர்ய மண்டலத்தை (திருமேனியானது)	கெண்டை	கெண்டைமத்ஸ்யங்களானவை
சென்று	கிட்டி	மிளிர	(தன்னொளியாலே) மின்னாநிற்க (அதைக் கண்டு)
அணவ	ஸ்பர்சிக்கும்படியாக	கொண்டல்	மேகங்களானவை
அண்டத்து	ஆகாசமெல்லாம்	அதிரும்	கர்ஜநம்பண்ணாநின்ற
அமரும்	வ்யாபித்திருக்கிற	கூடலூர்	(௬)
அடிகள்	ஸ்வாமியான க்ருஷ்ணனுடைய		
ஊர்	ஊரானது.		

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (தொண்டரித்யாதி) (க) "సఙ్ఘైస్సురా ణాం - ஸங்க்கைஸ்ஸுராணாம்" என்கிறபடியே ஆஶ்ரிதரானவர்கள் திரண்டேத்த, திருமேனியில் ஏகதேசமானது ஆதித்யபதத்தளவிலே சென்று ஸ்பர்சிக்க, ஆகாசாவகாசமுள்ள இடமடையத் தன்திருமேனியாலே பாரித்த ஸ்வாமிகள் வர்த்திக்கிற ஊர்போலே. (அண்டத்தமரும்) அண்டபித்தியிலே செல்ல வளர்ந்தவென்னுதல்.

(வண்டலித்யாதி) வண்டலலைமிக்கிருந்துள்ள நீர் நிலங்களிலே கெண்டையானது செருக்காலே மிளிர. (கொண்டலதிரும் கூடலூரே) உடம்பில் புகரைக்கண்ட மேகமானது தன்னுடம்பின் மின்னுக்கொண்டு, அதுக்கநந்தரமான முழக்கத்தை முழங்காநிற்குமாய்த்து. நீர் விழுகிறபோது இங்கே கண்டு, கார்யகாலத்திலே அங்கே கண்ட ஸ்ரீவாமநனைப்போலே யாய்த்து இவையும். ... ... (ரு)

அரு.— அஞ்சாம்பாட்டு. (தொண்டரித்யாதி) கையில் நீர்விழுந்தவுடனே, அல்பனைப்போலே, கார்யம்பெற்ற ஸந்தோஷாதிசயத்தாலே ஆகாசத்தை எட்டினதும் - தம் பெருமையைத் தாமறியாமைக்கு ஸூசகமென்று விவக்ஷித்து, த்ரிவிக்ரமன்படியையு மநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி. ஏகரூபனாயிருப்பான் இத்தனை யுகந்து பெருக்கையும் பெருமை யறியாமைக்குடலிறே.

"சுடரை" திருமேனி, சென்றணவ என்றத்யாஹாரம் திருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிறார் (திருமேனியி லித்யாதி). (பாரித்த)-வ்யாபித்த.

வண்டலிட்டிருக்கிற, அலையுள் - ப்ரசுரமாக அலைகளையுடைய, நீர் நிலத்திலென்றருளிச்செய்கிறார். (வண்டலித்யாதி). ... ... (ரு)

மூ.—தக்கன்வேள்வித் தகர்த்ததலைவன்
துக்கந்துடைத்த துணைவரூர்போல்
எக்கலிடு நுண்மணல்மேலெங்கும்
கொக்கின் பழம் வீழ் கூடலூரே. (சு)

பதம்.	உரை.	பதம்.	உரை.
தக்கன்	தக்ஷ ப்ரஜாபதியினுடைய	தலைவன்	தன்னை ப்ரதாநனாக அபிமாநித்திருக்கிற ருத்ரனுடைய
வேள்வி	யாகத்தை		
தகர்த்த	அழித்தவனாய்,		

(க) விஷ்ணுதத்வம்.

துக்கம்	துஃக்கத்தை
துடைத்த	போக்கின
துணைவர்	ஆபத்ஸகனான க்ருஷ்ணன் வர்த்திக்கிற
ஊர்	தேசமானது,
எக்கல் இடு	வண்டல் ஓடியிருக்கிற
நுண் மணல் மேல்	சிறு மணற்களின்மேலே
எங்கும்	எல்லாவிடங்களிலும்
கொக்கின் பழம்	மாம்பழங்களானவை
வீழ்	விழாநின்ற

கூடலூர். (௬)

வ்யா.—ஆறாம்பாட்டு. (தக்கனித்யாதி) “𑌦𑌕𑍍𑌷𑌾𑌧𑍍𑌵𑌰𑌧𑍍𑌵𑌂𑌸𑌨𑍍 - தக்ஷாத்வர த்வம்ஸன்” என்னக்கடவதிறே ருத்ரனை; “எல்லாரையும் கீழாக்கித்தானே மேலாகவேணும்” என்று அபிமானித்திருக்கிறவனுடைய துஃக்கத்தைப் போக்கின ஆபத்ஸகனானவன் வர்த்திக்கிற ஊர்போலேயிருந்தது.

(எக்கலித்யாதி) வண்டலிட்ட நுண்ணிய மணல்களிலே மாம்பழங்கள் விழுந்து சேரக்கிடக்கிறபோது, பழுக்கைக்குச் சேரப்பதித்து வைத்தாப்போலேயிருந்ததாய்த்து. ... ... (௬)

அரு.—ஆறாம்பாட்டு. (தக்கனித்யாதி) தம் பெருமையறியாதே இந்த்ரனுக்காக இரப்பாளனாய் அது பெற்றுத் திருவுடம்பு பூரித்த வளவன்றிக்கே; யஜ்ஞ விக்க்நகரனாய் “எனக்கெதிரில்லை” என்றிருந்து தம்மையும் நிர்ஜிதராம்படி பண்ணினவன் சாபம் தீர்த்ததும் ஒரு பெருமையறியாமைக்கூடலென்று அத்தை அநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

அவன் தன்னை “தலைவன்” என்றெண்ணியிருக்கவும், அவனுக்குத் தலைவனான தன் பெருமை பாராதே அவன் துஃக்கமே பார்த்தென்கை. இத்தால் - இச்சேதநரெத்தனை துர்மாநிகளாகிலும் தன்னீஶ்வரத்வப் பிடாராலே நிக்ரஹிக்கமாட்டாதே, இவர்களாப்த்தே செப்பேடாக உதவுகைக்கு இவனைப்போலில்லை என்றதாய்த்து.

“எக்கலிடு நுண்மணல்” என்று விசேஷிக்கையாலே - சில கொக்கின்பழங்கள் விழ, மேல் எக்கலிட, மீளவும் விழவும் அதின்மேல் எக்கலிட, இங்ஙனிருப்பது தோற்றுகையாலே அத்தை யருளிச்செய்கிறார் (பழுக்கைக்கித்யாதி). ... ... (௬)

மூ.—கருந்தண்கடலும் மலையு முலகும்
அருந்து மடிக ளமருமூர்போல்
பெருந்தண் முல்லைப் பிள்ளை யோடிக்
குருந்தம் தழுவும் கூடலூரே (௭)

பதம்.	உரை.
கரு	நீலவர்ணமாய்
தண்	குளிர்ந்திருந்துள்ள
கடலும்	ஸமுத்ரங்களையும்
மலையும்	பர்வதங்களையும்
உலகும்	(மற்றுமுள்ள)லோகங்களையும்
அருந்தும்	அமுதுசெய்யாநின்ற
அடிகள்	ஸ்வாமியான ஸர்வேஶ்வரன்
அமரும்	நித்யவாஸம் பண்ணுநின்ற
ஊர்	ஊரானது,
பெரு	பெருத்தும்
தண்	குளிர்ந்துமிருக்கிற
முல்லைப்பிள்ளை	முல்லைக் கொடியானது
ஓடி	எங்குமொக்க வ்யாபித்து
குருந்தம்	குருந்தமரத்தை
தழுவும்	மூடும்படியாக ஸம்ஶ்லேஷித்திருக்கிற
கூடலூர்.	

(எ)

வ்யா.—ஏழாம்பாட்டு. (கருந்தண்) கறுத்து ஶ்ரமஹரமாயிருந்துள்ள கடலும், பூமிக்கு ஆணியடித்தாப்போலே நிற்கிற பர்வதங்களும், மற்றுமுண்டான லோகங்களும், இவற்றை யடையக் கட்டளை கொலையாதபடி புஜித்த ஸ்வாமியானவன், இன்னுமிங்ஙனொத்த ஆபத்துக்களைப்போக்கி ரக்ஷிப்பதாகப் பொருந்தி வர்த்திக்கிற தேசம்போலே யிருந்தது.

(பெருந்தணித்யாதி) பெருத்து ஶ்ரமஹரமாயிருந்துள்ள முல்லைக்கொடியானது ஓடி குருந்தை முட்டாக்கிடப் படராநின்றுள்ள.

அரு.—ஏழாம்பாட்டு. (கருமித்யாதி) ஒரு துரபிமாநியான ருத்ரன் துஃக்கத்தைப் போக்கினவளவன்றிக்கே, மண்ணும் கல்லுமான லோகத்தை எல்லாம் தன்வயிற்றிலே வைத்துத் தன் ஸௌகுமார்யத்தைப் பாராதே ரக்ஷித்தவனென் றருளிச்செய்கிறாரென்று ஸங்கதி.

"உலகு மருந்துமடிகள்" என்ன வமைந்திருக்க * கடலும் மலையும் சொல்லுவானென்?, கடலுக்குக் கருமையையும் தண்மையையு மிட்டதுக்குத் தானும் கருத்தென்னென்கிற சங்கையிலே, கடல் கலங்காதே இருந்தபடியே யிருக்கும்படியும், மலையானது சலியாதே ஆணியடித்தாப்போலே இருந்தபடியே வயிற்றிலே வைத்தானென்று தோற்றுகைக்காக என்றும் விவக்ஷித்து, மலைக்குமொரு விசேஷண மிட்டருளுகிறார் (பூமிக்கித்யாதி).

"பிள்ளை" - பெண்பிள்ளையாய், அதுபோன்ற கொடியென்று அருளிச்செய்கிறார் (முல்லைக் கொடியானது) என்று. ... ... (எ)

மூ.—கலைவாழ் பிணையோ டணையும் திருநீர்
மலைவாழெந்தை மருவு மூர்போல்
இலைதாழ் தெங்கின் மேல் நின்றிளநீர்
குலைதாழ் கிடங்கின் கூடலூரே. (அ)

பதம்.	உரை.
கலை	ஆண்மானானது
பிணையோடு	பெண்மானோடு
அணை	சேர்ந்து
வாழும்	வாழாநின்ற
திருநீர்மலை	திருநீர்மலையென்னும் திவ்யதேசத்திலே
வாழ்	ஸுகமாக எழுந்தருளியிருக்கிற
எந்தை	என்ஸ்வாமியானவன்
மருவும்	பொருந்தி வர்த்திக்கிற
ஊர்	திவ்யதேசமானது,

பதம்.	உரை.
தாழ்	தழைத்திருக்கிற
இலை	இலைகளையுடைய
தெங்கின்மேல்	தென்னை மரங்களின் மேலே
நின்று	இருக்கிற
இளநீர்க்குலை	இளநீர்க்குலைகளானவை
தாழ்	(தன்மேல்) தாழ்ந்திருக்கிற
கிடங்கின்	வெற்றிலைத்தோட்டங்களை யுடைய
கூடலூர்.	(அ)

வ்யா.—எட்டாம்பாட்டு. (கலைவாழ்) கலைகளானவை, பிணையோடே - மானோடே, அணைந்து வாழாநின்றுள்ள திருநீர்மலையைத் தனக்கு வாஸஸ்த்தாநமாகக் கொண்டு வர்த்திக்கிற வென் ஸ்வாமியானவன்; அத்தேசமும் தனக்குண்டாயிருக்க, பொருந்தி வர்த்திக்கிற தேசம் போலே யிருந்தது.

(இலைதாழ்) படர்ந்த இலைகளையுடைத்தான தெங்குகள் கிடங்கின்கரையிலே நிற்கும்; அவற்றிலுண்டான இளநீர்க் குலைகளானவை தாழ்ந்து நிற்கிறபோது, கிடங்கை இளநீராலே நிறைத்து இலையாலே மறைத்துவைத்தாப்போலே யிருக்குமாய்த்து. ... ... (அ)

அரு.—எட்டாம்பாட்டு. (கலையித்யாதி) இந்தப்ராக்ருதமான லோகத்தை வயிற்றிலே வைத்து நோக்கினவளவன்றிக்கே, "இவை ஈடுபடுமோ" என்று நிற்பதிருப்பது கிடப்பது நடப்பதாய் திருநீர்மலையி லப்படி கிடந்தான் தன் பெருமை யறியாதே யென்கிறாரென்று ஸங்கதி. (க) "நின்றானிருந்தான் கிடந்தான் நடந்தாற்கிடம் மாமலையாவது நீர்மலையே" என்னக்கடவதிறே.

புருஷோத்தமனான தான் ஸ்த்ரீப்ராயரான இவர்களோடே ஒரு நீராகக் கலக்கவேணு மென்னு மிதுக்குக் குருகுலவாஸம் பண்ணவேணுமென்று திருநீர்மலையிலே வந்தானென்று தோன்ற, அங்குள்ள திர்யக்குக்களை விசேஷிக்கிறாரென்று உட்கொண்டு தாத்பர்ய மருளிச்செய்கிறார் (அத்தேச மித்யாதி). அங்குப் பலபடியிருந்ததும் போராதே இங்கும் வந்தானே என்று கருத்து.

கிடங்கு - வெற்றிலைக்கொடிக்கால். ... ... (அ)

(க) உ-௪-க.

மூ.—பெருகு காத லடியேனுள்ள
முருகப் புகுந்த வொருவரூர்போல்
அருகு கைதை மலராக் கெண்டை
குருகென் றஞ்சும் கூடலூரே. (௯)

பதம்.	உரை.	பதம்.	உரை.
பெருகு	வளராநின்ற	அருகு	ஸமீபத்திலே
காதல்	ஆசையை யுடையனான	கைதை	தாழையானது
அடியேன்	அடியேனுடைய	மலர	புஷ்பியாநிற்க(அதைக்கண்டு)
உள்ளம்	மநஸ்ஸானது		
உருக	கரையும்படியாக	கெண்டை	கெண்டையென்னும் மத்ஸ்யமானது
புகுந்து	ப்ரவேசித்த		
ஒருவர்	அத்விதீயனான ஸர்வேஶ்வரன் வர்த்திக்கிற	குருகு என்று	நாரைப்பக்ஷியென்று எண்ணி
		அஞ்சும்	பயப்படாநின்ற
ஊர்	திவ்யதேசமானது,	கூடலூர்.	(௯)

வ்யா. — ஒன்பதாம்பாட்டு. (பெருகுகாதல்). நாட்செல்ல நாட்செல்ல ஆற்றுப்பெருக்குப்போலே பெருகாநின்றுள்ள காதலையுடைய அடியேனுடைய ஹ்ருதயமானது உருகும்படியாகப் புகுந்த அத்விதீயனானவன் வர்த்திக்கிற தேசம்போலே யிருந்தது.

அருகே தாழையானது மலர, கெண்டைகளானவை அத்தைக் கண்டு குருகென்றஞ்சாநிற்குமாய்த்து. இரண்டும் நித்யமாயிருக்கச் செய்தே, பயமும் நித்யமாய்ச் செல்லாநிற்குமாய்த்து. ... (௯)

அநு.—ஒன்பதாம்பாட்டு. (பெருகித்யாதி) தம்பெருமை பாராதே "அடியேனுள்ளம் புகுந்த வொருவர்" என்றநுஸந்தித்திருந்தார்-மூன்றாம் பாட்டில்; அது உயிர்ப்பாட்டாகையாலே அதுவே திருவுள்ளத்திற்கிடந்து, மீளவும் அதிலுண்டான ஈடுபாடுதோன்ற அநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

"அஞ்சாநிற்கும்" என்கிறதென், ஒருகால் கண்டஞ்சினால் "இது குருகன்று" என்று அஞ்சாதிருக்கவும் கூடுமே யென்னில் (இரண்டு மித்யாதி). குருகுக்கும் கைதைக்குமுள்ள ஸாதர்ம்யாதிசயத்தாலே பயம் மாறாதென்று கருத்து.... ... ... (௯)

மூ.—காவிப்பெரு நீர் வண்ணன் கண்ணன்
மேவித் திகழும் கூடலூர்மேல்

கோவைத்தமிழால் கலியன்சொன்ன
பாவைப்பாடப் பாவம்போமே. (௧௦)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

* * *

பதம்.	உரை.
காவி	கருநெய்தல்போலவும்
பெரு	ஸம்ருத்தமான
நீர்	ஜலத்தையுடையஸமுத்ரம்போலவும்
வண்ணன்	வர்ணத்தை யுடையனான
கண்ணன்	க்ருஷ்ணனானவன்
மேவி	பொருந்தி
திகழும்	உஜ்ஜ்வலனாய் நித்யவாஸம்பண்ணுகிற

பதம்.	உரை.
கூடலூர்மேல்	கூடலூரென்னுந்திவ்யதேசவிஷயமாக
கோவை	லக்ஷணக்ரமத்தை யுடைத்தான
தமிழால்	தமிழ்பாஷையினாலே
கலியன்	ஆழ்வார்
சொன்ன	அருளிச்செய்த
பாவை	பாசுரங்களை
பாட	பாடவே
பாவம்	பாபங்களானவை
போம்	நசித்துவிடும். (௧௦)

வ்யா.—பத்தாம்பாட்டு. (காவியித்யாதி) காவிபோலேயும் பெருங்கடல்போலேயு மிருந்துள்ள வடிவையுடைய க்ருஷ்ணன் திருவுள்ளத்தோடே பொருந்தி உஜ்ஜ்வலனாய் வர்த்திக்கிற திருக்கூடலூர்மேல். (கோவைத்தமிழால்) அடைவே, ஆழ்வாரருளிச்செய்த. (பாவைப்பாடப் பாவம்போமே) "பால்குடிக்க நோவு போம்" என்பாரைப்போலே. ... ... (௧௦)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

* * *

அரு.—பத்தாம்பாட்டு. (காவியித்யாதி) காவிபோலே - கருநெய்தல்போலே, "கோவை -" கோக்கையாய், லக்ஷணக்ரமத்திலென்று யருளிச்செய்கிறார் (அடைவே) என்று. "பாட" என்றபதத்தாலே ஸூசிதமான ஸௌலப்யதையை யுட்கொண்டருளிச்செய்கிறார் (பாவித்யாதி). ... (௧௦)

ஜீயர் திருவடிகளே சரணம்.

* * *

அஞ்சாம்பத்தில் இரண்டாம்திருமொழி முடிந்தது.

* * *

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

அஞ்சாம்பத்து மூன்றாந் திருமொழி

வென்றிமா மழு ப்ரவேசம்.

வ்யா. — "அடியேனுள்ள முருகப்புகுந்த வொருவரூர்போல்" என்று தம்முடைய ஹ்ருதயத்திலே புகுந்திருந்த உபகாரத்தை அநுஸந்தித்து ஹ்ருஷ்டரானார் - கீழிற்றிருமொழியிலே; அவ்விருப்புத்தான் பேறாய்த்தோற்றுவது - திருவடிகளிலே ஸ்வரூபாநுரூபமான கைங்கர்யத்தைப்பண்ணி வர்த்திக்கப் பெறிலிறே; அது பெறுமையாலே, க்லேசத்துக்குடலாய்த் தோற்றிற்று; - முதலிலே செய்யாதொழிந்திருந்ததல்ல, குறைவறச்செய்த தல்ல; ஒருவாசி செய்தருளப் பார்த்தால் அது முடியச்செய்து தலைக்கட்ட வேண்டாவோ, ஆனபின்பு, த்வத்ப்ராப்தி ப்ரதிபந்தகத்தைப்போக்கி தேவர் திருவடிகளிலுண்டான கைங்கர்யத்தை நான் பெறுவேணும்படி என் பக்கலிலே க்ருபைபண்ணியருளவேணு மென்கிறார். ... ... (*)

அரு.—வென்றிமாமழுவின் ப்ரவேசம்.—(அது பெறுமையாலே) திருக்கூடலூரில் அது பெறுமையாலே யென்கை. க்லேசத்துக்கு உடலாவானென்னென்ன வருளிச்செய்கிறார் (முதலிலே யித்யாதி). (வாசி)நாட்டாரில் வாசி. (வேண்டாவோ) என்ற வநந்தரம், "என்றெண்ணிக் கூடலூரில் பெறாவிட்டால் திருவெள்ளறையில் பெறலாம்" என்று கூட்டுவது. (*)

மூ.—

வென்றி மாமழுவேந்தி முன் மண்மிசைமன்னரை மூவெழுகால் [யே
கொன்ற தேவ நின் குரைகழல் தொழுவதோர்வகையெனக் கருள்புரி
மன்றில்மாம்பொழில்நுழைதந்து மல்லிகைமௌவலின்போதலர்த்தித்
தென்றல்மாமணம் கமழ்தரவரு திருவெள்ளறை நின்றானே. (௧)

பதம்.	உரை.	பதம்.	உரை.
தென்றல்	தென்றல்காற்றானது	நுழைதந்து	ப்ரவேசித்தும்
மன்றில்	இடை வெளிகளிலேயுள்ள	மல்லிகை	மல்லிகையினுடையவும்
மாம்பொழில்	மாந்தோட்டங்களிலே	மௌவலின்	முல்லைகளுடையவும்

போது	புஷ்பங்களை
அலர்த்தி	விகஸிப்பித்தும்
மா	அதிசயித்திருக்கிற
மணம்	பரிமளத்தை
கமழ்தர	லோகத்தில் பரிமளிப்பிக்கைக்காக
வரு	வந்துலாவாநின்ற
திருவெள்ளறை	திருவெள்ளறை என்னும் திவ்யதேசத்திலே
நின்றானே	எழுந்தருளியிருக்கும் ஸ்வாமியே!
முன்	பூர்வகாலத்திலே,
வென்றி	ஜயப்ரதமாய்
மா	பெரிதான
மழு	பரசுவென்னும் ஆயுதத்தை
ஏந்தி	தரித்து
மண்மிசை	பூலோகத்திலுள்ள
மன்னரை	ராஜாக்களை
மூவெழுகால்	இருபத்தோரு தலைமுறை
கொன்ற	கொன்ற
தேவ	தேவனே!
நின்	உன்னுடைய
குரை	சப்தியாநின்ற
கழல்	திருவடிகளை
தொழுவது	ஆஸ்ரயிக்கும்படியாக
ஓர்வகை	ஒரு ப்ரகாரத்தை
எனக்கு	எனக்கு
அருள்புரி	க்ருபைபண்ணாய்.(க)

வ்யா.—முதற்பாட்டு. (வென்றியித்யாதி) பூமிக்கு ராஜாக்களால் வந்த நலிவைப்போக்கி ரக்ஷித்த அருமை வேணுமோ என்னுடைய ப்ரதிபந்தகத்தைப் போக்கி என்னை அடிமைகொள்ளுகைக்கென்கிறார். (முன்) நீதான் விரோதியைப்போக்கப் புக்கது இன்றோ. (வென்றியித்யாதி) ஆரேனும் கையிலே கொடுக்கிலும் வெற்றியைப் பண்ணிக்கொடுக்கக்கடவதாய், எதிரிகளளவல்லாதபடியான பெருமையையுடைத்தாயிருக்கிற மழுவை, அழகுக்குத் தரிப்பாரைப்போலே தரித்து, முன்பொருநாள், பூமியில் ராஜாக்களை இருபத்தொருபடிகால் வாரியறுத்துப் பொகட்டு, ப்ரதிபந்தகத்தைப் போக்கின விது பிறர்க்கு உபகரித்தாயாகையன்றிக்கே உன்பேறென்னுமிடம் வடிவில் புகரிலே தோற்றும்படி யிருக்கிறவனே! (க) “విజ్వరః ప్రముమోదహ - விஜ்வரঃ ப்ரமுமோதஹ” என்கிறபடியே. அப்போது அதுசெய்தமையுண்டு, உமக்குச் செய்யவேண்டுவதென்னென்ன; (நின்னித்யாதி) உன்னுடைய, ஆபரணங்களாலே அலங்க்ருதமாய் அவற்றால் வந்த த்வநியையுடைத்தான திருவடிகளிலே, நான் என்னுடைய ஸ்வரூபாநுரூபமான வ்ருத்தி விசேஷத்தைப பண்ணுவதொரு ப்ரகாரம் எனபக்கலிலே க்ருபைபண்ணியருளவேணும்.

(க) ரா.பால-க-அடு.

(மன்றிலித்யாதி) அவ்வூரில பதார்த்தங்களடங்கலும் பரார்த்தமாயாய்த்திருப்பது. தனக்காயிருக்குமதன்றி பிறர்க்காயிருக்கையே தனக்குப் பேறாயிருக்கை. மன்றுகளிலே செறியப்பூத்துப் பழங்களையுடைத்தான மாமரங்களிலேபோய்ப்புக்கு அதிலுண்டான பரிமளத்தை வாஸிதமாக்கிக்கொண்டு, மல்லிகை மௌவல் என்கிற இவற்றின் புஷ்பங்களை அலர்த்தி அவற்றிலுண்டான பரிமளத்தைத் தன்னுடம்பிலே ஏறிட்டுக்கொண்டு, தென்றலானது மிக்க பரிமளத்தையுடைத்தாய்க்கொண்டு வந்துலாவுகிற திருவெள்ளறை நின்றானே! அவ்வூரிலுள்ளார்க்கு அபிமதஸித்திக்கு நின்றநிலையில்நின்றும் போக வேண்டாதபடியன்றோ இருக்கிறது சைத்ய ஸௌரப்ய ஸௌகந்த்ய மார்த்தவங்களை யுடைத்தாயிறே காற்றிருப்பது.

(௧) [𑌪𑌦𑍍𑌮𑌕𑍇𑌸𑌰𑌸𑌂𑌸𑍍𑌪𑍃𑌷𑍍𑌟𑌃 - பத்மகே ஸரஸம்ஸ்ருஷ்டஃ] துராலான அம்சத்தைக் கழித்து பூத்தன்னிலும் ஸம்ஸர்க்கத்துக்கு மேற்பட ஆழவிழியுமதன்றிக்கே யிருக்கை. [𑌵𑍃𑌕𑍍𑌷𑌾𑌨𑍍𑌤𑌰 𑌵𑌿𑌨𑌿𑌸𑍍𑌸𑍃𑌤𑌃 - வ்ருக்ஷாந்தர விநிஸ்ஸ்ருதஃ] வெய்யிற்படப் பொறாத செல்வாலே சோலைக்குள்ளிட்டாய்த்து †வழிபோந்தது. (௨) [குன்றாடுபொழில் நுழைந்து] சந்தநகிரியிலே போய்ப்புக்கு. [கொடியிடையார் முலையணவி] கறுவினவிடத்திலே முகங்காட்டி. [மன்றாடு தென்றலுலா] அதுகை புகுந்த கர்வத்தாலே வெளிநிலத்திலே புறப்பட்டு உலாவாநின்றதாய்த்து. சேதநஸமாதியாலே சொல்லுகிறாராய்த்து. ... (௧)

அரு.—முதற்பாட்டு. (வென்றியித்யாதி) “மாமழுவேந்தி” என்றும் “மூவெழுகால்” என்றும் விசேஷித்து விரோதிநிரஸநத்தை இப்போதருளிச்செய்ததுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (பூமிக்கித்யாதி). மன்னரைக்கொன்றது முன்னாயிருக்க, “முன்” என்று விசேஷித்ததுக்குக்கருத்தருளிச்செய்கிறார் (நீதானித்யாதி). வாக்யார்த்தமருளிச்செய்கிறார் (ஆரேனுமித்யாதி). “தேவ” என்றத்தாலே - காந்திமத்தை தோற்றவருளிச் செய்கிறார் (பிறர்க்கித்யாதி). மேலுக்கவதாரிகை (அப்போதித்யாதி).

(பதார்த்தங்களடங்கலும்) என்றது - பொழிலில் மரங்களோடு, கொடிகளோடு, அவற்றைத் தழுவிவரும் தென்றலோடு வாசியற எல்லாப்பதார்த்தங்களுமென்கை. மௌவல்-முல்லை. கமழ்தருஎன்னலாயிருக்க, “வரு” என்றதுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அவ்வூரிலுள்ளார்க்கித்யாதி).

---

(௧) ரா-கிஷ்கி-௧-௭௧. (௨) பெரி-திரு-௪-௮-௯.

† (பா) இழிந்துபோந்தது.

காற்று எவ்வாகாரத்தால் அபிமதமென்ன வருளிச்செய்கிறார் (சைத்யேத்யாதி).

இது அபிமதமென்று கொண்டாடினாருண்டோ வென்ன அருளிச்செய்கிறார் (பத்மேத்யாதி). "பத்ம - ஸம்ஸ்ருஷ்ட:" என்னாதே * கேஸர பதப்ரயோகத்தாலும், அதிலும் "ஸம்ஸ்ப்ருஷ்ட:" என்னாதே *ஸம்ஸர்க்க மாத்ரம் சொன்னத்தாலும் - பாஹ்யதள ஸம்பந்தமின்றிக்கே கேஸரங்களிலும் உள்ளில் தூள்படியும்படி, ஸம்பந்தியாதே வந்ததென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார் (தூராலித்யாதி). தூரால் - ருஜீஷம். அஸாரமென்றபடி. (செல்வாலே) செல்வத்தாலே. "எனக்கருள்புரியே" என்று கைங்கர்யத்தை ப்ரார்த்திக்கிற இவ்வாழ்வாருக்கு ஒரு நாயிகாதசையின்றிக்கேயிருக்க, காமுகர்க்கு அபிமதமான தென்றலின்படிகளைச் சொல்லுவானென்னென்ன; பெரியாழ்வார் திருப்பதிக்கு அதிசயமாக வர்ணித்தாப்போலே இவரு மருளிச்செய்தாரென்று விவக்ஷித்தருளிச் செய்கிறார் (குன்றாடித்யாதி). (கறுவினவிடத்திலே) என்றதுக்கு-காற்று முலையில்புக, அத்தாலே முலைகளுக்கு நாயிகாந்தராவயவவிசேஷ ஸம்ஶ்லேஷ மிதுக்குண்டாய்த்தென்று கறுவுதல் வருமென்னும் விவக்ஷையாலே அருளிச்செய்தாரென்று கருத்து.‡ காற்றை, ஒரு மலையைக்கிட்ட, வேறொருமலைக்குக் கறுவுதல் வர, அது திரப்பெற்றவாறே உலாவிற்றென்று சொல்லுகை சேருமோவென்ன வருளிச்செய்கிறார் (சேதநேத்யாதி). ... ... (௧)

௨. வசையில்நான்மறைகெடுத்தவம்மலரயற்கருளிமுன்பரிமுகமாய்
இசைகொள்வேதநூலென்றிவைபயந்தவனேயெனக்கருள்புரியே
உயர்கொள்மாதவிப்போதொடுலாவிய மாருதம் வீதியின்வாய்த்
திசையெல்லாம்கமழும்பொழில்சூழ்திருவெள்ளறைநின்றானே.

பதம்.	உரை.	பதம்.	உரை.
உயர்கொள்	ஆகாசத்தில் ஓங்கி வளராநின்ற	சூழ்	சூழப்பட்ட
மாதவி	குருக்கத்தி மரங்களிலே		திருவெள்ளறை நின்றானே!
போதொடு	அவை பூக்கும் காலங்களிலே(அணைந்து)	வசை இல்	குற்றமற்றதான
வீதியின்வாய்	வீதிகள்தோறும்	நால் மறை	நாலு வேதங்களையும்
உலாவிய	ஸஞ்சரியாநின்ற	கெடுத்த	போக்கடித்துக் கொண்டவனாய்
மாருதம்	காற்றானது	அம்மலர்	அந்தத் திருநாபீகமலத்திலே இருக்கிற
திசையெல்லாம்	திக்குக்களெங்கும்	அயற்கு	ப்ரஹ்மாவின் விஷயத்தில்
கமழும்	பரிமளியாநிற்பதாய்	அருளி	க்ருபைபண்ணி
பொழில்	சோலைகளாலே	முன்	பூர்வகாலத்திலே

---

‡ இதுஸந்திக்த்தம்.

பரிமுகமாய்	ஹயக்ரீவனாய்க் கொண்டு
இசைகொள் நல்ல	த்வநியை யுடைத்தான
வேதம்	வேதங்களென்ன
நூல்	சாஸ்த்ரங்களென்ன
என்று இவை	என்கிற இவற்றை
பயந்தவனே	உண்டாக்கிக் கொடுத்தவனே!
எனக்கு	என்விஷயத்தில்
அருள்புரி	க்ருபைபண்ணி யருளாய். (௨)

வ்யா.— இரண்டாம்பாட்டு. (வசையித்யாதி) விப்ரலம்பாதி தோஷ ஸம்பாவனையில்லாத நாலுவேதத்தைக்கொடுத்து, (க) "𑌧𑌾𑌤𑌾 𑌯𑌥𑌾𑌪𑍂𑌰𑍍𑌵𑌮𑌕𑌲𑍍𑌪𑌯𑌤𑍍 - தாதா யதாபூர்வ மகல்பயத்" என்று - "முன்புபோலே இவற்றையுண்டாக்கு" என்றுவிட, அவனும், வேதத்தை அஸுரர்கள் கையிலே பறிகொடுத்து (௨) "𑌵𑍇𑌦𑌾𑌮𑍇 𑌪𑌰𑌮𑌂𑌚𑌕𑍍𑌷𑍁𑌰𑍍𑌵𑍇𑌦𑌾𑌮𑍇 𑌪𑌰𑌮𑌂𑌧𑌨𑌮𑍍 - வேதா மே பரமஞ் சக்ஷுர் வேதா மே பரமந்தநம்" என்று கண்ணும் கண்ணநீருமாய் நின்றுகூப்பிட; அவன்பக்கலிலே க்ருபையைப்பண்ணி. (அம்மலரயற்கருளி) அவன் தன்னதிகாரத்தில் குலையாதே நின்றாய்த்து அபேக்ஷித்தது. (முன்பரிமுகமாய்) "ஓராசார்யாநுவர்த்தநம் பண்ணிக்கேட்கவென்றால் இவனிறாய்க்கும்" என்று தன்னைத் தாழவிட்டு ஹயக்ரீவனாய் நின்றாய்த்து உபதேசித்தது. ஸாரதியாய் நின்று உபதேசித்தாப்போலே யாய்த்து. (இசைகொள்) நல்லநாதத்தை யுடைத்தாயிருந்துள்ள வேதம், இதிஹாஸாதிகள், இவற்றையுண்டாக்கினவனே! என்பக்கலிலே க்ருபையைப்பண்ணி யருளவேணும். நூலென்று - சாஸ்த்ரங்களைச் சொல்லவுமாம். அன்றிக்கே, அல்லாத இதிஹாஸபுராணங்களைச் சொல்லிற்றானபோது, (௩) "𑌤𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌂 𑌵𑍈𑌹𑌰𑍇𑌸𑍍𑌤𑌨𑍁𑌃 - தத்ஸர்வம் வைஹரேஸ்தநு:" என்கையாலே - அவர்களை சரீரமாகக்கொண்டு நின்று தான் சொல்லுகையாலே அவன் சொன்னானென்னத்தட்டில்லை.

(உயர்கொள்மாதவி) ஆகாசாவகாசமிட மடையும்படி வளர்ந்த குருக்கத்தியிலே, காலங்களிலே. (வீதியின்வாய்) வீதியிலே. (உலாவியமாருதம்) ஸஞ்சரியாநின்றுள்ள காற்றானது திக்குக்கள்தோறும் கமழாநிற்பதாய், பொழிலாலே சூழப்பட்டிருப்பதாய். (௨)

அரு.— இரண்டாம்பாட்டு. (வசையித்யாதி) ஸ்ரீபரசுராமனாய் விரோதிகளைக் கிழங்கெடுத்தவளவன்றிக்கே, அதிகாரிபுருஷனான அயனுக்குக் கண்கொடுத்தாப்போலே வேதப்ரதாநம் பண்ணினவனல்லையோ, தத்ப்ர

(க) தை-நாரா-க-௩௮. (௨) (௩) வி-பு-க-௨௨-௩௮.

திபாத்யமான கைங்கர்யத்தை ஆசைப்பட்ட எனக்கு மத்தைத் தந்தருள வேணுமென்கிறாரென்று ஸங்கதி.

“அயற்கு” என்னாதே, “அம்மலர்” என்று விசேஷிக்கையாலே - தாய்கையில் குழந்தை என்னாப்போலே, திருநாபி கமலத்தில் பிறந்தபோதையில் செவ்வியழியாத சைசவம் தோற்றுகையாலே, அவன் கெடுக்கும்போது முன்பவன் கையில் கொடுத்தாருண்டாக வேணுமென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார் (விப்ரலம்பேத்யாதி). “அயன்” என்றத்தாலே - லோக ஸஜாதீய ஜந்மராஹித்யம் விவக்ஷிதமாய், அப்படி யருளிச்செய்ததுக்குக் கருத்தருளிச்செய்கிறார் (அவனித்யாதி). வேதம் போனவுடனே கொடுத்தவனைத் தேடித்தரச்சொல்லி ப்ரார்த்தித்தான் சிசுவைப்போலே என்று கருத்து. (சாஸ்த்ரங்களை) பகவச்சாஸ்த்ரங்களை. (அவர்களை) வ்யாஸாதிகளை.

‘வீதியின்வாய்” என்னவேணுமோ, “திசையெல்லாம்” என்றால் போராதோ வென்ன; அதுக்காக, உயர்கொள் மாதவிப்போதொடு - வீதியின்வாய்-உலாவின மாருதம், அவ்வளவில் நில்லாதே, திக்குக்களெல்லாம் வ்யாபித்ததென் றருளிச்செய்கிறார் (ஆகாசேத்யாதி). ... (௨)

மூ.—வெய்யனாயுலகேழுடன் நலிந்தவனுடலக மிருபிளவாக்
கையில் நீளுகிர்ப்படையது வாய்த்தவனே யெனக்கருள்புரியே
மையினார் தருவராலினம்பாய வண்டடத்திடைக்கமலங்கள்
தெய்வநாறுமொண்பொய்கைகள் சூழ் திருவெள்ளறை நின்றானே.

பதம்.	உரை.	பதம்.	உரை
மை ஆர் தரு	கறுப்புமிக்கிருந்துள்ள	உலகு ஏழ்	ஸப்தலோகங்களையும்
வரால்	மத்ஸ்யங்களுடைய	உடன்	ஏககாலத்தில்
இனம்	திரளானது	நலிந்தவன்	உபத்ரவித்த ஹிரண்யனுடைய
வண்	ஸௌந்தரமான		
தடத்து இடை	தடாகங்களிலே	உடல்	சரீரத்திலேயுள்ள
பாய	துள்ளிவிழாநிற்க,	அகம்	உள்ப்ரதேசமும்
கமலங்கள்	(அங்குள்ள) தாமரைப்பூக்கள் (அலர்ந்து)	இருபிளவா	இரண்டு கூறாம்படி
		கையில்	திருக்கைகளிலே
தெய்வம்	ஶ்லாக்யமாக	நீள்	நீண்டிருக்கிற
நாறும்	பரிமளியாநின்ற	உகிர்	நகங்களையே
ஒண்	ஸௌந்தரமான	அது	அப்படிப்பட்ட
பொய்கைகள்	தடாகங்களாலே	படை	ஆயுதமாக
சூழ் திருவெள்ளறை நின்றானே!		வாய்த்தவனே	பெற்றவனே!
வெய்யனாய்	அதிக்ரூரனாய்க்கொண்டு	எனக்கருள்புரி.	(௩)

வ்யா.—மூன்றாம்பாட்டு. (வெய்யனாயித்யாதி) மிக்க க்ரௌர்யத்தையுடையனாய் ஸகலலோகங்களையு மொருகாலே நலிந்த ஹிரண்யனுடைய சரீரமானது இரண்டு கூறும்படியாக, திருவாழியைக்கொண்டு கார்யம் செய்யப்பெறாதபடி அவன் வரம் பெற்றிருக்கையாலே திருவுகிரே ஆயுதமாகக்கொண்டு வ்யாபரித்தவனே! (எனக்கருள்புரியே) என்னுடைய விரோதியைப்போக்கி என்பக்கலிலே க்ருபையைப் பண்ணி யருளவேணும்.

(மையித்யாதி) கறுப்பு மிக்கிருந்துள்ள வராலினமுண்டு, இவற்றினுடைய திரளானவை பூக்களைக் கிழித்துக்கொண்டு அழகிய தடாகங்களிலேபாய, அக்கமலங்கள் மணம் நாறாநின்றுள்ள பொய்கைகள் சூழ்ந்த திருவெள்ளறை நின்றானே. ... ... (௩)

அநு.—மூன்றாம்பாட்டு. (வெய்யனாயித்யாதி) ப்ரஹ்மாவுக் கபேக்ஷிதமான வேதப்ரதாநம் பண்ணுகைக்கு பரிமுகமா யிரண்டு வடிவுகொண்டவளவன்றிக்கே, ஒரு சிறுக்கனுக்காக விரோதி கழிக்கவேண்டி அரிமுகமா யிரண்டுவடிவு கொண்டு நகாக்ரத்தாலே விரோதியைக் கழித்தவனல்லையோ வென்கிறாரென்று ஸங்கதி.

உடலில், அகம் - அந்தஃப்ரதேசமுங்கூட, இருபிளவாக, கையில் நீண்ட உகிராகிற அப்படிப்பட்ட படை, வாய்த்தவனே- பல(ஃல)வத்தாம்படி பெற்றவனே என்று சப்தார்த்தம் திருவுள்ளம்பற்றி தாத்பர்ய மருளிச்செய்கிறார் (மிக்கவித்யாதி).

"இன்" - சாரியைச்சொல்லாய், "மையார்தரு" என்றதுக்கர்த்தம் (கறுப்பித்யாதி). வரால் - மத்ஸ்யம். "தெய்வம்" என்றது - திவ்யமென்றாய், ஶ்லாக்யமான நாறுகையைச் சொல்லுமென்கிறார் (மணம் நாறாநின்றுள்ள) என்று. ... ... (௩)

மூ.—வாம்பரியுகமன்னர்தமுயிர் செகவைவர்கட் கரசளித்த
காம்பினார் திருவேங்கடப் பொருப்ப நின் காதலையருளெனக்கு
மாம்பொழில்தளிர் கோதியமடக்குயில்வாயது துவர்ப்பெய்த
தீம்பலங்கனி தேனது நுகர் திருவெள்ளறை நின்றானே. (௪)

பதம்.	உரை.	பதம்.	உரை.
மாம்பொழில்	மாந்தோட்டங்களிலே	மடம்	பவ்யதையை யுடைத்தான
தளிர்	அவற்றின் தளிர்களை	குயில்	குயில்களானவை
கோதிய	கொந்தாநின்றுள்ள	வாயது	தமது வாய்களிலே

துவர்ப்பு	துவர்ப்பென்னும் ரஸத்தை
எய்த	அடைய (அந்த ரஸத்தை மாற்றுகைக்காக)
தீ	மதுரமான
பலங்கனி	பலாப்பழத்திலுள்ள
தேனது	மதுவை
நுகர்	பாநம் பண்ணாநின்ற
திருவெள்ளறை நின்றானே!	
வாம்	மேல்விழுந்து வராநின்ற
பரி	குதிரைகள்
உக	நசிக்கும்படியாகவும்
மன்னர்தம்	ராஜாக்களுடைய
உயிர்	ப்ராணன்களானவை
செக	அழியும்படியாகவும் செய்து
ஐவர்கட்கு	பஞ்சபாண்டவர்களுக்கு
அரசு	ராஜ்யத்தை
அளித்த	க்ருபை பண்ணினவனாய்
காம்பு ஆர்	மூங்கில்கள் நிறைந்த
திருவேங்கடப் பொருப்ப	திருவேங்கட மென்னும் திருமலையிலெழுந்தருளி யிருக்குமவனே!
நின் காதலை	உன்விஷயமான பரமபக்தியை
எனக்கு	என்க்கு
அருள்	க்ருபைபண்ணியருள வேணும். (௪)

வ்யா.— நாலாம்பாட்டு. (வாம்பரி) தாவிவாராநின்றுள்ள குதிரைகள் உக்கிப்போம்படியாக, அவற்றை மேற்கொண்டு தோற்றின ராஜாக்கள் முடியும்படி, பாண்டவர்களுக்கு முடியைக்கொடுத்த. பரிகரத்தையுடையவர்கள் தங்களையழியச்செய்து, பாண்டவர்கள் பக்கலிலே ஓரத்தைப்பண்ணின. (காம்பினார்) மூங்கில்மிக்கிருந்துள்ள திருவேங்கடமாகிற மலையையுடையவனே! (நின்காதலையருளெனக்கு) தேவர் திருவடிகளிலுண்டான கைங்கர்யத்துக்கு பூர்வக்ஷணவர்த்தியான பரமபக்தியை எனக்குப் பண்ணியருளவேணும்.

(மாம்பொழில்) மாம்பொழிலிலேபோய்ப்புக்கு அதிலுண்டான தளிரைச் செருக்காலே தன்வாயாலே கோதின, மடக்குயிலானது - பெண்குயிலானது. (வாயது துவர்ப்பெய்த) "அத்தை ரஸாந்தரத்தையிட்டு மாற்றவேணும்", என்று, இனிய பலாப்பழத்திலே சென்று அதிலுண்டான தேனை புஜியாநின்றுள்ள. ... ... (௩)

அரு.—நாலாம்பாட்டு. (வாமித்யாதி) பக்தாக்ரேஸரரான ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானுக்காக நரஸிம்ஹமா யுதவின வளவன்றியே, ராஜ்யார்த்திகளா யிருப்பாரிடத்திலும் பக்ஷபதித்து *ஆதியஞ்சோதி யுருவுகொண்டே தூத்யஸாரத்யாதிகளைப் பண்ணியருளி, அவ்வளவன்றிக்கே, த்ருஷ்டார்த்திகளுக்கு இஷ்டங்களைக் கொடுக்கவேணுமென்று ஸ்ரீவேங்கடாசலத்தில்

நின்று உதவினவனல்லையோ, ஸ்வரூபாநுரூபமான கைங்கர்யோபயோகியானப்ரீதியைத் தந்தருள வேணுமென்கிறாரென்று ஸங்கதி.

(அழியச்செய்து) என்ற வநந்தரம், அதில்லாத என்று கூட்டுவது.(ச)

மூ.—மானவேலொண்கண் மடவரல்மண்மகளழுங்க முந்நீர்ப்பரப்பில்
ஏனமாகியன்றிருநில மிடந்தவனே யெனக்கருள்புரியே
கானமாமுல்லைகழைக்கரும்பேறி வெண்முறுவல்செய்தலர்கின்ற
தேனின்வாய்மலர் முருகுகுக்கும் திருவெள்ளறை நின்றானே.

பதம்.	உரை.
கானம்	காட்டிலேயுள்ள
மா	பெரிய
முல்லை	முல்லைக் கொடியானது
கரும்பு	கரும்பினுடைய
கழை	நுனியளவும்
ஏறி	சென்று படர்ந்து
வெண்	வெண்மையான
முறுவல்	புன்சிரிப்பை
செய்து	செய்வதுபோல்
அலர்கின்ற	விகஸியாநின்ற
மலர்	(முல்லைப்) பூவானது
தேனின்	வண்டுகளுடைய
வாய்	வாயிலே
முருகு	தேனை
உகுக்கும்	பெருக்காநின்ற
திருவெள்ளறை நின்றானே!	
மானம்	பரப்பையுடைத்தான
வேல்	வேலாயுதம் போன்றதாய்
ஒள்	ஸௌந்தரமான

பதம்.	உரை.
கண்	கண்களையுடையளாய்
மடவரல்	க்ஷமைமுதலிய ஆத்மகுணங்களையுடையளான
மண்மகள்	பூமிப்பிராட்டி
அழுங்க	ப்ரளயார்ணவத்தில் மூழ்கிக்கிடக்க
அன்று	அந்த ப்ரளய காலத்திலே
முந்நீர்	அந்தப்ரளயார்ணவத்தினுடைய
பரப்பில்	மஹாஜலத்திலே
ஏனமாகி	மஹாவராஹமாய்க் கொண்டு (இழிந்து)
இருநிலம்	விசாலமான பூமியை
இடந்தவனே	அண்டபித்தியில் நின்றும் குத்தி எடுத்தவனே!
எனக்கு	அர்த்தியான எனக்கு
அருள்புரி	க்ருபைபண்ணாய் (ரு)

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (மானவேலித்யாதி) இலையகன்றவேல்போலேயாய் தர்சநீயமாயிருக்கிற திருக்கண்களையுடையளாய், க்ஷமை துடக்கமான ஆத்மகுணங்களால் மிக்கிருக்கிற ஸ்ரீபூமிப்பிராட்டி, தன் விபூதிமுகத்தாலே புக்கழுந்த. (முந்நீர்ப்பரப்பில்) ப்ரளயத்திலே யகப்பட நீருக்கும் சேற்றுக்குமிழுயாத வராஹவேஷத்தைப் பரிக்ரஹித்து, அண்டபித்தியிலே யொட்டினபூமியை இடந்தெடுத்துக்கொண்

டேறினவனே! (எனக்கருள்புரியே) அர்த்திக்கவும் மாட்டாதபூமியை ரக்ஷித்த உனக்கு, அர்த்தித்த என்னுடைய ரக்ஷணம் பண்ணுகை பெரியபணியோ?

(கானமாமுல்லை) நெய்தல், மருதம், குறிஞ்சி, பாலை, முல்லை என்கிற நிலங்களெல்லாம் தன்னிலே கலந்தாய்த்திருப்பது. ஊரையணைந்த வயலருகுண்டான காட்டில் பெரியமுல்லையானது, கரும்பின் நுனியளவும் மூடப்படர்ந்து, ஏறின ஒக்கத்தாலுண்டான ஹர்ஷத்தாலே ஸ்மிதம்பண்ணினாப்போலே அலருகிற மலரானது, தன்னிலே மதுபானார்த்தமாகப்படிந்த வண்டினுடைய வாயிலே தேனை ஒழுக்காநின்றுள்ள. ... ... (௫)

அரு.—அஞ்சாம்பாட்டு. (மானவேலித்யாதி) (க) ‘‘ద్రౌపద్యా సహితా స్సర్వే నమశ్చక్రుర్జనార్దనమ్ - த்ரௌபத்யா ஸஹிதாஸ்ஸர்வே நமஶ்சக்ருர்ஜநார்த்தநம்’’ என்று ப்ரார்த்தித்தவர்க்காகத் தான் இஷ்டத்தைக் கொடுத்த வ்ளவன்றிக்கே, பூமி அர்த்தியாதே யிருக்க ஆபத்தையே செப்பேட்டாக்கி உதவினவனல்லையோ, எனக்கு மருளவேணுமென்கிறாரென்று ஸங்கதி.

காட்டிலிருக்கிற முல்லைக்கும் வயலிலிருக்கும கரும்புக்கும் என்ன சேர்த்தியுண்டென்ன வருளிச்செய்கிறார் (நெய்தலித்யாதி). ‘‘முருகு’’ என்றதினர்த்தம் (தேனை) என்றது. உகுக்கை - கொடுக்கையாய், ப்லிதம் (ஒழுக்காநின்றுள்ள) என்றது. ... ... (௫)

மூ.—

பொங்குநீண்முடியமரர்கள் தொழுதெழவமுதினைக்கொடுத்தளிப்பான்
அங்கோராமையதாகியவாதி நின்னடிமையையருளெனக்கு
தங்குபேடையோடூடிய மதுகரம் தையலார் குழலணைவான்
திங்கள்தோய் சென்னிமாடம் சென்றணை திருவெள்ளறைநின்றானே.

பதம்.	உரை.	பதம்.	உரை.
தங்கு	பூவிலே தங்கியிருக்கிற	குழல்	கேசபாசங்களை
பேடையோடு	பெண் வண்டோடு	அணைவான்	கிட்டி (அங்கே மறைந்திருக்கைக்காக)
ஊடிய	ப்ரணயகலஹம்செய்த	திங்கள்	சந்த்ரமண்டலத்திலே
மதுகரம்	வண்டானது,	தோய்	படிந்திருக்கிற
தையலார்	ஸ்த்ரீகளுடைய	சென்னி	சிகரங்களையுடைய

(க) பார-

மாடம	க்ருஹங்களை	அமுதினை	அம்ருதத்தை
சென்று	கிட்டி	கொடுத்து	கொடுத்து
அணை	சேராநின்ற	அளிப்பான்	ரக்ஷிக்கைக்காக
திருவெள்ளறை நின்றானே!	[ய்	ஓர்	அத்விதீயமாய் [ன
பொங்கு	அபி(ಭಿ)வ்ருத்த(ಧ)ரா	அது	அப்படி பலிஷ்ட்டமா
நீள்	சிரகாலஸ்த்தாயி	ஆமையாகிய	கூர்மாவதாரத்தை
	யான [ரான		ப்பரிக்ரஹித்த
முடி	கிரீடங்களை யுடைய	ஆதி	காரணபூதனே!
அமரர்கள்	இந்த்ராதி தேவர்கள்	நின்	உன்விஷயமான
தொழுது	(தன்னை) ஆஶ்ரயிக்	அடிமையை	கைங்கர்யத்தை
	கைக்காக	எனக்கு	எனக்கு
எழ	உத்யோகிக்க,[ளுக்கு)	அருள்	தந்தருளவேணும்.
அங்கு	அக்காலத்திலே(அவர்க		

வ்யா.—ஆறாம்பாட்டு. (பொங்குநீண்முடியித்யாதி) விஸ்த்ருதராய், நிலைநின்ற முடியையுடையராயிருக்கிற தேவர்கள், திருவடிகளிலே விழுந்து உஜ்ஜீவிப்பதாக மநோரதிக்க; அவர்களுக்கு அஸுரர்களால் வந்த வினையைப்போக்கி ரக்ஷிக்கைக்காக, மந்தரத்தைத் தரிக்க வல்ல ஆமையின்வேஷத்தைப் பரிக்ரஹித்து அவர்களைரக்ஷித்து, அவர்களுக்கு ஸத்தாஹேதுவானவனே! (நின்னடிமையயருளெனக்கு) எனக்கு, தேவர்திருவடிகளிலுண்டான அடிமையைத் தந்து என்ஸத்தையைத் தந்தருளவேணும்.

(தங்கு) பூவிலே தங்கின பேடையோடே, அத்தை இத்தைச்சொல்லி ஊடினவண்டானது, “இதுக்குத் தெரியாததோரிடந்தேடி மறையவேணும்” என்று, அதுக்காக ஸ்த்ரீகளுடைய குழலிலே மறையக்கோலி, சந்த்ரபதந்தளவும் செல்ல ஓங்கின சிகரத்தையுடைத்தான மாடங்களிலே சென்றணையா நிற்குமாய்த்து. ... ... (௬)

அநு.—ஆறாம்பாட்டு. (பொங்கித்யாதி) கீழ்ப்பாட்டில்-பூமிப்பிராட்டிக்கு விபூதியாகையாலே தான் பூதர (ಭೂಧರ) னானென்றார்; ப்ரயோஜநாந்தர பரர்க்காக பூதர(ಭೂಧರ)த்தைத் தரித்து அமுதளித்தானென்று, வராஹாவதாரத்துக்கு முன்னாகச் சொல்லப்பட்ட கூர்மாவதாரத்தை அருளிச்செய்கிறாரென்று ஸங்கதி.

அம்ருதரூப பலத்துக்குத் தொழுதெழுகை ஸாதநமாக வேண்டுகையாலே, தொழுகைக்கு, எழ - உத்யோகிக்க என்றாய், அருளிச்செய்கிறார் (மநோரதிக்க) என்று. (மந்தரத்தைத் தரிக்கவல்ல) என்றது-“அது” என்றதினர்த்தம். (என்ஸத்தையைத் தந்தருளவேணும்) என்றது-*ஆதிபதஸமபிவ்யாஹார லப்யார்த்தம்.

(அத்தை இத்தைச் சொல்லி) என்றது—“நானொரு பூவில்நின்றுமொரு பூவில் போக வொருப்பட்டால் (௧) “𑌅𑌗𑍍𑌰𑌤𑌸𑍍𑌤𑍇 𑌗𑌮𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 - அக்ரதஸ்தே கமிஷ்யாமி” என்று புறப்பட்டாதே யிருந்த உனக்கு, பூவில் கால்தங்கிற்றோ? என்னிலு முனக்குத் தேனினிதாய்த்தோ” என்றாப்போலே சொல்லுகை. ... ... (௬)

மூ.—ஆறினொடொருநான்குடை நெடுமுடியரக்கன்றன்சிரமெல்லாம்
வேறுவேறாக வில்லது வளைத்தவனே யெனக்கருள்புரியே
மாறில் சோதிய மரதகப்பாசடைத் தாமரைமலர்வார்ந்த
தேறல் மாந்திவண்டின்னிசைமுரல் திருவெள்ளறை நின்றானே

பதம்.	உரை.	பதம்.	உரை.
மாறுஇல்	ஒப்பில்லாத	ஆறினொடு	ஆறுதலைகளோடு
சோதிய	தேஜஸ்ஸை யுடையனவாய்	ஒருநான்குடை	ஒருநாலு தலைகளையுடையனாய்
மரதகம்	மரதக மணிபோன்ற	நெடு	தீர்க்கமான [ஞன
பாசு	பசுமை வர்ணத்தை யுடைத்தான	முடி	கிரீடங்களை யுடைய
அடை	இலைகளையுடைய	அரக்கன்தன்	ராவணாஸுரனுடைய
தாமரை	தாமரைகளினுடைய	சிரமெல்லாம	எல்லாத்தலைகளையும்
மலர்	புஷ்பங்களில் நின்றும்	வேறுவேறாக	வெவ்வேறாக (அறுந்துவிழும்படியாக)
வார்ந்த	பெருகாநின்ற		
தேறல்	தேனை	அது	அப்படிப்பட்ட
மாந்தி	பாநம்பண்ணி	வில்	தநுஸ்ஸை
வண்டு	வண்டுகளானவை:	வளைத்தவனே	வளைத்தசக்ரவர்த்தித் திருமகனே!
இன்	ஶ்ராவ்யமான		
இசை	காநங்களை	எனக்கு	என்விஷயத்தில்
முரல்	பாடாநின்றுள்ள	அருள்புரி	க்ருபைபண்ணாய்.(௭)

திருவெள்ளறை நின்றானே!

வ்யா.—ஏழாம்பாட்டு. (ஆறினொடித்யாதி) பத்துத்தலையையுடைய ராவணனுடைய தலைபத்தையும் சிந்நம் பிந்நமாய்ப் போம்படியாக வில்லை வளைத்தவனே! என் பக்கலிலே க்ருபையைப் பண்ணியருளவேணும்.

(மாறிலித்யாதி) ஒப்பில்லாத புகரையுடைய வாய் மரதகம்போலே யிருந்துள்ள பச்சையிலையையுடைத்தான தாமரைமலரில் நின்றுமொழுகாநின்றுள்ள தேனைப்பருகி வண்டுகளானவை இனிய விசையைப் பாடாநின்றுள்ள.... ... ... (௭)

---

(௧) ரா-அயோ-௨௭-௬.

௧௦௯

அரு.—ஏழாம்பாட்டு. (ஆழித்யாதி) தேவர்களுக்கு அமுதூட்டின படி சொன்னார் - கீழ்; அவர்களுக்குக் குடியிருப் பரிதாம்படி தலைபத்துப் படைத்தானாய் மிகுந்த ராவணனை வென்று, அவர்களை ரக்ஷித்த குணத்தை யநுஸந்திக்கிறா ரென்று ஸங்கதி.

“வார்ந்த” என்றதினர்த்தம் (ஒழுகாநின்றுள்ள) என்றது. “மாந்தி” என்றதினர்த்தம் (பருகி) என்றது. ... ... (௭)

மூ.—முன்னிவ்வேழுலகுணர்வின்றி யிருள்மிகவும்பர்கள் தொழுதேத்
அன்னமாகியன்றருமறை பயந்தவனே யெனக்கருள்புரியே [த
மன்னு கேதகை சூதக மென்றிவை வனத்திடைசுரும்பினங்கள்
தென்னவென்றுவண்டின் னிசைமுரல் திருவெள்ளறை நின்றானே.

பதம்.	உரை.
மன்னு	மாறாதேபூத்திருக்கிற
கேதகை	தாழைகளென்ன
சூதகம்	மாமரங்களென்ன
என்று இவை	என்கிற இவற்றையுடைத்தான
வனத்துஇடை	சோலைகளின் நடுவே
சுரும்பு	சுரும்பு என்னும் வண்டுகளுடைய
இனங்கள்	கூட்டங்களானவை
தென்ன என்று	தென்ன தென்ன என்று பாடாநிற்க, (அதைக்கேட்டு)
வண்டு	வண்டுகளானவை
இன் இசை	(அப்பாட்டில் பரிபக்வமாய்) போக்யமான காநத்தை
முரல்	பாடாநின்ற
	திருவெள்ளறை நின்றானே!

பதம்.	உரை.
முன்	முற்காலத்திலே
இவ்வேழுலகு	இந்த ஸப்கலோகங்களும்
உணர்வுஇன்றி	ஜ்ஞாந சூந்யமாய்க்கிடக்க
இருள்மிக	அந்தகாரம் மேலிட்டு
உம்பர்கள்	ப்ரஹ்மாதிதேவர்கள்
தொழுது	(உன்னை) ஆஸ்ரயித்து நிற்க,
ஏத்த	ஸ்தோத்ரம் பண்ண
அன்று	அக்காலத்திலே
அன்னமாகி	ஹம்ஸரூபியாய்க்கொண்டு
அருமறை	துர்லபமான வேதத்தை
பயந்தவனே	உண்டாக்கிக் கொடுத்தவனே!
எனக்கு	என்விஷயத்தில்
அருள்புரி	க்ருபைபண்ணு.(௮)

வ்யா. — எட்டாம்பாட்டு. (முன்னிவ்வேழுலகித்யாதி) பண்டு இந்த லோகங்களேழும் வெளிச்செறிப்பின்றியே இருளானது மிக ப்ரஹ்மாதிகள் திருவடிகளிலே விழுந்து ஸ்தோத்ரம்பண்ண, அஸுர்களோடே கலந்து உருமாய்ந்துபோன வேதத்தைப் பிரிக்கைக்குடலாக, நீரையும் பாலையும் பிரிக்கவல்ல அன்னத்தின்வடிவைக்கொண்டு, தன்னைப்பெறினும் பெற வரிதான, தன்படிகளை யடங்கலும் பேசவற்

ருயிருக்கிற வேதத்தை யுண்டாக்கினவனே! என் பக்கலிலே க்ருபையைப்பண்ணி யருளவேணும்.

மாறாத பூக்களையுடைத்தான தாழை தேமா என்கிற இவற்றாலே நெருங்கின சோலையினுள்ளே, சுரும்புகளானவை மதுபானம்பண்ணி, உள்ளுப் புக்க த்ரவ்யம் இருந்த விடத்திலிருக்க வொட்டாமையாலே "தென்ன, தென்ன" என்று ஆளத்திவைக்க, வண்டுகளானவை அதில் முறுகினபாட்டைப் பாடா நிற்குமாய்த்து. ... ... (௮)

அரு.—எட்டாம்பாட்டு. (முன்னித்யாதி) ஊண் கொடுத்தும் குடியிருப்புப் பண்ணிக்கொடுத்தும் ரக்ஷித்த வளவன்றிக்கே, தேவர்களை ஓதுவித்தவனும் நீயே யல்லையோ, எனக் கருளவேணு மென்கிறாரென்று ஸங்கதி.

இரண்டாம்பாட்டில் "பரிமுகமாய் வேதப்ரதாநம் பண்ணினான்" என்றதுக்கும், இங்கே "அன்னமாய் வேதப்ரதாநம் பண்ணினான்" என்றதுக்கும் தோற்றுகிற விரோதத்தை, கல்பபேதேந கூடுமென்று பரிஹாரம் பண்ணிக்கொள்ளுதல்; அன்றிக்கே, இரண்டும் வித்யாப்ரதங்களான அவதாரங்களாகையாலே தர்மைக்யத்தைப் பற்ற ஒன்று செய்தவை மற்றையதுக்கும் சொல்லலாமென்னுதல் கண்டுகொள்வது.

(முறுகினபாட்டை) பரிபக்வமான பாட்டை. ... ... (௮)

மூ.—ஆங்குமாவலிவேள்வியிலிரந்து சென்றகலிட முழுதினையும்
பாங்கினாற்கொண்ட பரமநிற்பணிந்தெழுவே னெனக்கருள்புரியே
ஓங்குபிண்டியின் செம்மலரேறி வண்டுழி தர மாவேறித்
தீங்குயில்மிழற்றும் படப்பைத் திருவெள்ளறை நின்றானே. (௯)

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஓங்கு	உயர்ந்து வளராநின்ற	மிழற்றும்	அவ்யக்தமதுரமாகக் கூவாநின்ற
பிண்டியின்	அசோக மரத்தினுடைய	படப்பை	தொடித் தோட்டங்களை யுடைத்தான
செம்மலர்	சிவந்த புஷ்பங்கள் மேலே		திருவெள்ளறை நின்றானே!
வண்டு	வண்டுகளானவை	மாவலி	மஹாபலியினுடைய
ஏறி	ஏறி	வேள்வியில்	யாகத்திலே
உழிதர	ஸஞ்சரியாநிற்க (அதைக்கண்டு,	ஆங்கு	அந்த மஹாஸபையிலே
தீன்	மதுரமான ஸ்வரத்தையுடைய	சென்று	போய்
குயில்	குயில்களானவை	இரந்து	யாசித்து
மா ஏறி	மாமரங்கள் மேலேறிநின்று	அகல்	பரந்த

இடமுழுதினையும்	பூமியெல்லாவற்றையும்	கொண்ட	தாநம்பாங்கி ஸ்வாதீநமாக்கிக்கொண்ட
பாங்கினால்	செவ்வையினாலே (அந்த மஹாபலியினுடைய இடமாக எண்ணி)	பரம	ஸர்வாதிகனே!
		நின்	உன்னை
		பணிந்து	பணியவேணுமென்று
		எழுவேன்	உத்யோகித்திருக்கிற
		எனக்கு	அருள்புரி. (௯)

வ்யா——ஒன்பதாம்பாட்டு. (ஆங்குமாவலி யித்யாதி) மஹாபலியினுடைய யஜ்ஞவாடமான அவ்விடத்தில் தன்னை இரப்பாளனாக்கிக் கொண்டுசென்று, பூமிப்பரப்பை யடங்கலும் அவனதாகக்கொண்ட ஸர்வாதிகனே! ராவணாதிகளைப் போலே தலையையறுத்துப் பொகட்டு வாங்கிக்கொள்ளலா யிருக்கச்செய்தே ஔதார்யத்துக்குச் சமைந்திருந்தபடியாலே, தன்னை இரப்பாளனாக்கி அவனதாகக்கொண்டானாய்த்து. (நிற்பணிந்தெழுவே னெனக்கருள்புரியே) இந்த்ரனுடைய ஆஶ்ரயணத்தோபாதி போராதோ என்னுடைய ஆஶ்ரயணம்.

(ஓங்கித்யாதி) ஆகாசாவகாசம் வெளியடையும்படி வளர்ந்த அசோகமானது சிவக்கப்பூத்துக்கிடக்க, "இதிலே மதுபாநம் பண்ணலாம்" என்று அதுக்காக வண்டுகள் ஸஞ்சரிக்க, அத்தைக்கண்ட குயில்களானவை "நெருப்பு" என்று அருகுசெல்ல அஞ்சி நின்ற மாவிலே ஏறி, இவை நெருப்பிலே அகப்பட்டனவாகக் கொண்டு அநக்ஷரரஸமான பேச்சாலே "டடுகுலை கிடிகோள்" என்றுப்போமலை கூப்பிடா நின்றதாய்த்து. இதில் வாஸமும் நித்யமாயிருக்கச் செய்தே, பயமும் நித்யமாய்ச் செல்லாநிற்குமாய்த்து. ... ... (௯)

அரு.—ஒன்பதாம்பாட்டு. (ஆங்கித்யாதி) அமரர்களை யமுதூட்டிக் குடியிருப்புப் பண்ணிக்கொடுத்து வேதாத்யயநத்தைப் பண்ணுவித்தவளவன்றியே, அவர்களுக்காகத் தானிரந்திட்டான் என்று ஸ்ரீ வாமநாவதாரத்தை அநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

"ஆங்கு" என்றதுக்கு - ஒரு தேச விசேஷமும், அவ்விடத்திலே மாவலி வேள்வியும், ‡(அருகேயொருப்ரதேசமுமாகத்)தோன்றுகையால் அதுக்கு ப்ரயோஜநமில்லாமையாலே, "மாவலி வேள்வியில் - ஆங்கு" என்று அந்வயம் திருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிறார் (மஹாபலி யித்யாதி). இப்போது, (அவ்விடத்தில்) என்றத்தால் - மஹா ஸதஸ்ஸென்று தோன்றுகையாலே, அப்படிப்பட்ட ஸதஸ்ஸி லிரந்தத்தாலே ஆஶ்ரித வாத்ஸல்யம் தோன்றுகை ப்ரயோஜநமாகவுமாம். அன்றிக்கே, இரப்பும் கார்யகரமாக

---

‡ குண்டலித மநந்விதம்.

வொட்டாத சுக்ராதிக ளிருந்தவிடமென்றாதல் ப்ரயோஜநம் கொள்ளலாமென்று திருவுள்ளம். அவனுடையபாங்கினாலென்று சப்தார்த்தம் திருவுள்ளம்பற்றித் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (அவனதாகவித்யாதி). இத்தால்- அவன் “என்னது” என்று அபிமாநித்திருந்தத்தை அப்படியே தானு மெண்ணிக் கையேற்றபடி சொல்லிற்றாய்த்து. பரஸ்வத்தைத் “தன்னது” என்றிருந்தால் தலையறுக்க வொண்ணாதோ, பிச்சையெடுக்கவேணுமோ வென்ன வருளிச்செய்கிறார் (ராவணாதி யித்யாதி). “கொடுக்கவேணும்” என்று இச்சை யுண்டாகையாலே பிச்சை யெடுத்தானென்று கருத்து.

படப்பை - கொடித்தோட்டம். … … … … (௯)

மூ.—மஞ்சுலா மணி மாடங்கள் சூழ் திருவெள்ளறை யதன்மேய
அஞ்சனம் புரையும் திருவுருவனை யாதியை யமுதத்தை
நஞ்சுலாவிய வேல்வலவன் கலிகன்றி சொல்லையிரண்டும்
எஞ்சலின்றி நின்றேத்தவல்லா ரிமையோர்க்கரசாவர்களே. (௧௦)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

* * *

பதம்.	உரை.
மஞ்சு	மேகமண்டலத் தளவும்
உலா	சென்று ஓங்கியிருக்கிற
மணி	ரத்நங்களிழைத்த
மாடங்கள்	க்ருஹங்களினாலே
சூழ்	சூழப்பட்ட
திருவெள்ளறையதன்	திருவெள்ளறை என்னும் அந்தத் திவ்ய தேசத்திலே
மேய	நித்யவாஸம் பண்ணுகிறவனாய்
அஞ்சநம் புரையும்	அஞ்ஜநத்தோடொத்த
திரு	ஸுந்தரமான
உருவனை	வடிவை யுடையனாய்
ஆதியை	ஜகத்காரண பூதனாய்
அமுதத்தை	போக்ய பூதனுமான ஸர்வேஶ்வரன் விஷயமாக,
நஞ்சுஉலாவிய	விஷம்போலே திரியாநின்றுள்ள
வேல்வலவன்	வேலை ஆளுமவரான
கலிகன்றி	ஆழ்வார்
சொல்	அருளிச்செய்த
ஐயிரண்டும்	இந்தப் பத்துப்பாட்டுக்களையும்
எஞ்சலின்றி	குறைவின்றி
நின்று	ஒருபடிப் பட்டுநின்று
ஏத்தவல்லார்	ஸ்தோத்ரம்பண்ணத் தகுந்தவர்கள்
இமையோர்க்கு	நித்யஸூரிகளுக்கு
அரசாவர்கள்	ராஜாக்கள் போலே ஆதரணீயராவர்கள்.

வ்யா.—பத்தாம்பாட்டு. (மஞ்சித்யாதி) மேகபதத்தளவும் செல்ல வோங்கியிருப்பதாய் மணிமயமான மாடங்களாலே சூழப்பட்ட

திருவெள்ளறையதன், மேய - நித்யவாஸம் பண்ணுகிற. (அஞ்சன மித்யாதி) அஸந்நிஹிதனே யாகிலும் விட வொண்ணாதாய்த்து வடிவழகு; அழகில்லையே யாகிலும் விடவொண்ணாதாய்த்து ப்ராப்தி; ப்ராப்தியில்லையே யாகிலும் விடவொண்ணாதாய்த்து போக்யதை. (நஞ்சித்யாதி) த்ருஷ்டி விஷம்போலே யிருக்கிற வேலையுடைய ஆழ்வாருளிச்செய்த இப்பத்தையும் ஒன்றும்விடாதே ஏத்த வல்லவர்களை, நித்யஸூரிகள் ஸ்ரீ வைகுண்டநாதனைவிட்டு இவர்களை ஆதரியா நிற்பர்கள். ... ... (௧௦)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

அரு.—பத்தாம்பாட்டு. (மஞ்சித்யாதி) (போக்யதை) என்றது- மற்றை ஸர்வப்ரகாரத்தாலு முள்ள போக்யதை. "எஞ்சலின்றி" என்றதினர்த்தம் (ஒன்றும் விடாதே) என்றது. ... ... (௧௦)

ஜீயர் திருவடிகளே சரணம்.

அஞ்சாம்பத்தில் மூன்றாந்திருமொழி முடிந்தது.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

அஞ்சாம்பத்தில் நாலாந்திருமொழி

உந்திமேல் ப்ரவேசம்.

வ்யா.—"நின்குரைகழல் தொழுவதோர்வகை யெனக்கருள்புரியே" என்றார்-கீழிற்றிருமொழியிலே; " 'அருள்புரியே'என்று நீரிங்ஙனே இழவாளராய் ப்ரார்த்திக்கிறதென், நாமுமக்கொன்று முபகரித்திலோமோ, உபகரிக்கவன்றோ நாம் கோயிலிலே வந்து ஸந்நிஹிதராய்த்து" என்று இங்ஙனே ஸந்நிஹிதனானபடியைக் காட்டிக்கொடுத்தான்; அத்தை யநுஸந்தித்து ஹ்ருஷ்டராய் *இனித்தான் அறிவுடையாரடங்கலும் ப்ராப்யபுத்தி பண்ணி விடாதே வர்த்திக்கிற தேசமென்று அது தன்னைப்பேசி இனியராகிறார். ... ... (*)

அரு.—உந்திமேலின் ப்ரவேசம்.—"அருள்புரியே" என்று ஒருகால் சொன்னாற்போலே ஒன்பதின்கால் சொன்னவிடத்திலும் வாய்திறவாதே

யிருக்கவும், இவர் "இன்னமொரு தேசத்திலே யாகிலும் முகங்கொடுப்பன்" என்னும் நசையாலே யிருக்குமளவில், அரங்கத்தம்மான் அப்படியே நி(ஷ)த்த ஸமாதாநம் பண்ண, ஸமாஹிதரானாரென்று ஸங்கதி யருளிச் செய்கிறார் (நின்குரைகழலித்யாதி) (உபகரித்திலோமோ) என்ற வநந்தரம் "அப்படியே மேலும்" என்று சேஷம். *(இனித்தான்)ஹ்ருஷ்டராயநுபவிக்கு மிடத்திலே. … … … … … … (*)

மூ.—உந்திமேல் நான்முகனைப் படைத்தா னுலகுண்டவ
னெந்தைபெம்மா னிமையோர்கள் தாதைக்கிடமென்பரால்
சந்தினோடு மணியும் கொழிக்கும் புனல் காவிரி
அந்திபோலும் நிறத்தார் வயல்சூழ் தென்னரங்கமே. (க)

பதம்.	உரை.
சந்தினோடு	சந்தநக்கட்டைகளோடு கூட
மணியும்	ரத்நங்களையும்
கொழிக்கும்	தள்ளிக்கொண்டு வாராநின்ற
புனல்	ஜலத்தையுடைய
காவிரி	திருக்காவேரி நதியினாலும்,
அந்திபோலும்	ஸந்த்யாகாலம் போன்ற
நிறம்	வர்ணத்தினால்
ஆர்	பூர்ணமான
வயல்	கழனிகளாலும்
சூழ்	சூழப்பட்ட
தென்	ஸுந்தரமான
அரங்கம்	திருவரங்கமென்னும் திவ்ய தேசமானது,

பதம்.	உரை.
உந்திமேல்	(தன்னுடைய) திருநாபியிலே
நானமுகனை	சதுர்முகனான ப்ரஹ்மாவை
படைத்தான்	ஸ்ருஷ்டித்தவனும்
உலகு	(ப்ரளயகாலத்திலே) லோகங்களை
உண்டவன்	அமுதுசெய்து தன் வயிற்றிலே வைத்தவனும்
எந்தை	என்னுடைய தகப்பன் முதலானபெரியோர்களுக்கு
பெம்மான்	ஸ்வாமியானவனும்
இமையோர்கள்	நித்யஸூரிகளுக்கு
தாதைக்கு	நாதனானவனுமான ஸர்வேஶ்வரனுக்கு
இடம் என்பர்	வாஸஸ்தாநம் என்றுசொல்லுவர்கள்.

வ்யா.—முதற்பாட்டு. (உந்திமேல் நான்முகனைப் படைத்தான்) ப்ரஹ்ம ஸ்ருஷ்டிக்கவ்வருகுள்ளசடங்கலும் தானே கைதொட்டாக்கி, பின்னை "இவ்வருகுண்டான கார்யவர்க்கத்தை இவன்வழியாலே யுண்டாக்கவேணும்" என்று தன்னுடைய திருநாபீகமலத்திலே சதுர்முகனை ஸ்ருஷ்டித்தவன். (உலகுண்டவன்) அப்படி கார்யங்

முகாள்ளுமவர்களை ப்ரளயங்கொண்டவாறே பூமியை யெடுத்து வயிற்றிலேவைத்து நோக்கினவன். (எந்தை பெம்மான்) ஸர்வஸ்ரஷ்டாவாய் ஆபத்ஸகனுமாயிருக்கிற விருப்பைக்காட்டி என் குலத்துக்கு நாதனானவன். (இமையோரித்யாதி) அஸ்ப்ருஷ்ட ஸம்ஸாரகந்தரான நித்ய ஸூரிகளுக்கு நாதனானவன் வர்த்திக்கிறதேச மென்னாநிற்பர்கள். (க) “அடியார்கள் குழாங்களை - உடன் கூடுவதென்றுகொலோ” என்று சொல்லும் நித்யஸூரிகளும் இவ்விடத்தை விரும்பி, இங்கே படுகாடு கிடப்பர்களாய்த்து.

(சந்தித்யாதி) சந்தநத்தோடே கூட மணிகளையும் கொழித்தெறடா நின்றுள்ள புனலையுடைத்தான காவேரி; அந்தியுண்டு -ஸந்த்யை, அதுபோலேயிருண்ட நிறத்தையுடைத்தான வயல்; இவற்றாலே சூழப்பட்ட தென்னரங்கமே. (உ)“கருநெற் சூழ் கண்ணமங்கை” என்னுமாபோலே - கருவடைந்த பயிராகையாலே எங்குமொக்க இருண்டு தோற்றுமாய்த்து. ஸந்த்யை சிவந்தன்றோ விருப்பது என்னும் நிர்ப்பந்தமுண்டாகில், நுனி நெல் பழுத்த வயலாலே சூழப்பட்ட என்றாகிறது. ... ... (க)

அரு.—முதற்பாட்டு. (உந்தியித்யாதி) (ங) “ఈశ్వరాయనివేదితమ్ - ஈஸ்வராயநிவேதிதம்” என்கிறபடியே - தமக்குக் கரண களேபரப்ரதானம் பண்ணினது தமக்குபகாரமாகத் தோற்றுவிக்க, இப்படி உபகரித்தவன்றானே ஆட்கொள்ளானோ என்று ஹ்ருஷ்டராய், அவன் கரணகளேப்ரப்ரதாநம் பண்ணுகைக்குப் பட்டபாடெல்லா மநுஸந்திக்கிறாரென்று தாத்பர்ய மருளிச்செய்கிறார் (ப்ரஹ்ம ஸ்ருஷ்டிக் கித்யாதி). எந்தைகளுக்குப் பெம்மான் என்று விவக்ஷித்தருளிச்செய்கிறார் (ஸர்வேத்யாதி). தம்மைக்கொண்டு மேல் கைங்கர்யம் கொள்ளுவனென்கைக்கு ஸூசகம் - “இமையோர்கள்” என்றதென்று விவக்ஷித்துத், தாத்பர்ய மருளிச்செய்கிறார் (அடியார்களித்யாதி). அவர்களைக் கொண்டு கைங்கர்யம் கொள்ளுமாபோலே, ருசியுடைய தம்மையும் கொண்டு கைங்கர்யம் கொள்ளுவரென்று ஹ்ருஷ்டரானாரென்கை. ... ... (க)

மூ.—வையமுண்டாலிலை மேவுமாயன் மணிநீண்முடிப்
பைகொள் நாகத் தணையான் பயிலுமிடமென்பரால்
தைய நல்லார் குழல் மாலையும் மற்றவர் தடமுலைச்
செய்ய சாந்தும் கலந்திழி புனல்சூழ் தென்னரங்கமே. (உ)

(க) தி-வாய்-உ-ங-கo (உ) கo-க-க. (ங) விஷ்ணுதத்வம்.

பதம்.	உரை	பதம்.	உரை.
நல்	ஸாத்விகாசாரமுடைய	உண்டு	(ப்ரளயகாலத்திலே) அமுதுசெய்து
தையலார்	ஸ்த்ரீகளுடைய[ரான	ஆலிலை	ஆலந்தளிரிலே
குழல்	கேசங்களிலே சூட்டப்	மேவும்	பொருந்தி கண்வளர்ந்தருளாநின்ற
மாலையும்	பூமாலையும், [பட்ட	மாயன்	ஆஶ்சர்ய சக்தியுக்தனாய்,
மற்று	அதுக்குமேலே	மணி	ரத்நங்களிழைத்த
அவர்	அந்தஸ்த்ரீகளுடைய	நீள்	தீர்க்கமான [னாய்
தடம்	விசாலமான	முடி	கிரீடத்தை யுடைய
முலை	ஸ்தநங்களிலே பூசப்	பைகொள்	விசாலமான [கிற
செய்ய	சிவந்த [பட்ட	நாகம்	திருவநந்தாழ்வானை
சாந்தும்	சந்தநமும் (ஆகிய இவற்றோடு)	அணையான்	படுக்கையை யுடையனுமான ஸர்வேஶ்வரன்
கலந்து	சேர்ந்து (கலங்கி)	பயிலும்	நித்யவாஸம் பண்ணாநின்ற
இழி	ப்ரவஹியாநின்ற		இடம் என்பர். (உ)
புனல்	(காவேரி) ஜலத்தினாலே		
சூழ்	சுற்றப்பட்ட		
தென்னரங்கம்,			
வையம்	பூமியை		

வ்யா.—இரண்டாம்பாட்டு. (வையமுண்டித்யாதி) ப்ரளயத்திலே பூமிப்பரப்படங்க எடுத்து வயிற்றிலேவைத்து ஒருபவனை ஆலந்தளிரிலே கண்வளர்ந்தருளின ஆஶ்சர்ய சக்தியுக்தன். (மணியித்யாதி) ஆதிராஜ்ய ப்ரகாசகமான திருவபிஷேகத்தை யுடையனாய்க் கண்வளர்ந்தருளுகைக் கீடான பரப்பையுடையனா யிருக்கிற திருவநந்தாழ்வான்மேலே கண்வளர்ந்தருளுகிறவன் விடாதே வர்த்திக்கிற தேசமென்று சொல்லாநிற்பர்கள்.

(தையல் நல்லாரித்யாதி)குழலிலே பூக்களை வைத்து முலைகளைக் குங்குமத்தாலே அலங்கரித்திருந்துள்ளவர்கள், படுக்கையைவிட்டு ப்ராஹ்மமுஹூர்த்தத்திலே ஸ்நாநார்த்தமாக இழிவர்கள்; குழலில் மாலையும் குங்குமமுமாய்க் கலங்கி யோடாநிற்குமாய்த்து. ... (உ)

அரு.—இரண்டாம்பாட்டு. (வையமித்யாதி) கீழ்ப்பாட்டில் "உலகுண்டவன்" என்று சொன்ன உபகாரத்தை அருளிச்செய்துகொண்டு, "இமையோர்கள் தாதை" என்கைக்கு ஜ்ஞாபகமான அநந்த சாயித்வத்தை அநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

ஷ்தையுலாரென்னாதே, "நல்லார்" என்கையாலே - (௧) "வெள்வரைப்பதன் முன்னம் துறைபடிந்து" என்கிறபடியே-ஸாத்விக காலத்தில் துறைபடிந்தமை நன்மையென்று விவக்ஷித்தருளிச் செய்கிறார் (ப்ராஹ்ம முஹூர்த்தத்திலே)என்று. மற்று-அதுவொழிய, அவர்களுடைய தடமுலைச் செய்ய சாந்தம் என்று சப்தார்த்த முட்கொண்டருளிச் செய்கிறார் (குழலி வித்யாதி). ... ... (௨)

மூ.---பண்டிவ்வையமளப்பான் சென்று மாவலி கையில் நீர்
கொண்ட வாழித் தடக்கைக் குறளனிடமென்பரால்
வண்டு பாடும் மது வார் புனல் வந்திழி காவிரி
அண்டம் நாறும் பொழில் சூழ்ந்தழகார் தென்னரங்கமே. (௩)

பதம்.	உரை.
வண்டு	வண்டுகளானவை
பாடும்	பாடும்படியாக
மது	தேனானது
வார்	ஒழுகாநின்ற
புனல்	ஜலமானது
வந்து	வந்து
இழி	ப்ரவஹியாநின்ற
காவிரி	திருக்காவேரியினாலும்,
அண்டம்	ஆகாசமெங்கும்
நாறும்	பரிமளியாநின்ற
பொழில்	சோலைகளாலும்
சூழ்ந்து	சூழப்பட்டு
அழகு ஆர்	மிக அழகியதான
தென்னரங்கம்,	
பண்டு	பூர்வகாலத்தில்

பதம்.	உரை.
இவ்வையம்	இந்தபூமியை
அளப்பான்	அளந்து வசப்படுத்திக் கொள்ளுகைக்காக
சென்று	போய் [டைய
மாவலி	மஹாபலியினு
கையில்	கையில்நின்றும்
நீர்	தாநஜலத்தை
ஆழி	திருவாழியை ஏந்தத்தக்க
தடம்	விசாலமான
கை	ஸ்ரீஹஸ்தத்திலே
கொண்ட	ஏந்தின
குறளன்	வாமநனுடைய
இடம் என்பர். (௩)	

வ்யா.—மூன்றாம்பாட்டு. (பண்டித்யாதி) மஹாபலியாலே அபஹ்ருதமான பூமியை மீட்டுக்கொள்ளுகைக்காக அவனுடைய யஜ்ஞவாடத்திலே சென்று, திருவாழியைப் பிடிக்கக்கடவ கையாலே நீரை ஏற்ற ஸ்ரீவாமநன் வர்த்திக்கிற தேசமென்னாநிற்பர்கள்.

(வண்டித்யாதி) ஜலத்திலுண்டான ரஸ்யதையாலே வண்டுகளானவை மொய்த்துக்கிடக்குமாய்த்து. வண்டுகளானவை மதுபாந மத்தமாய்க்கொண்டு பாடுகைக்கீடான மதுவொழுகாநின்றுள்ள புனலானது

---

(௧) நா-தி-௧-௨.

வந்திழிகாவிரியாலும், அண்டாவகாசமடைய கந்தி(ஸ்ரீ)யாநின்றுள்ள பொழிலாலும் சூழப்பட்டு தர்ஸநீயமான தென்னரங்கமே. அண்டநாறு மென்று - நாவி கஸ்தூரி தடக்கமானவற்றைச் சொல்லவுமாம்.

அரு.—மூன்ரும்பாட்டு. (பண்டித்யாதி) தமக்குக் கரணகளேபரப்ரதாநம் பண்ணியும் வயிற்றிலே வைத்து ரக்ஷித்த உபகாரத்தையும் கீழ்ப்பாட்டுக்களி லருளிச்செய்து, "எந்தை பெம்மான்" என்று சொல்லும்படி என்னைத் தனக்காக்கிக்கொண்டானென்னு முபகாரத்தை யநுஸந்தித்து, அதுக்கு த்ருஷ்டாந்தமயா வையங்கொண்டசெயலை அருளிச்செய்கிருரென்று ஸங்கதி.

"அண்டம்" என்றபதம் - ஆகாச வாசக மன்றிக்கே, புழுகுபூனையின் பீஜவாசகமாய், அது உபலக்ஷணமென்று விவக்ஷித்தருளிச்செய்கிருர் (அண்டமித்யாதி). ... ... (௩)

மூ.—விளைத்த வெம்போர் விறல் வாளரக்கன் நகர் பாழ்பட
வளைத்த வல் வில் தடக்கையவனுக் கிடமென்பரால்
துளைக் கை யானை மருப்புமகிலும் கொணர்ந்துந்தி முன்
திளைக்கும் செல்வப் புனல் காவிரிசூழ் தென்னரங்கமே. (௪)

பதம்.	உரை.	பதம்.	உரை.
துளை	த்வாரத்தையுடைய	விறல்	பலிஷ்டனுமாய்
கை	துதிக்கையை யுடைத்தான	வாள்	வாளாயுதத்தை யுடையனுமான
யானை	யானையினுடைய	அரக்கன்	ராவணனுடைய
மருப்பும்	தந்தங்களையும் [யும்	நகர்	பட்டணமான லங்கையானது [க
அகிலும்	அகில் கட்டைகளை		
கொணர்ந்து	அடித்துக்கொண்டு வந்து	பாழ்பட	அழிந்து போம்படியா
		வளைத்த	வளைக்கப்பட்ட
முன்	முன்னே	வல்	த்ருடமான
உந்தி	தள்ளி [ஸ்வர்யத்தை	வில்	தநுஸ்ஸை
செல்வம்	(லீலாரஸமாகிற) ஐ	தடம்	விசாலமான
திளைக்கும்	அநுபவியாநின்ற	கை	கையிலேயுடையனான
புனல்	ஜலத்தையுடைத்தான	அவனுக்கு	அந்தச் சக்ரவர்த்தித் திருமகனுக்கு
காவிரிசூழ் தென்னரங்கம்,		இடம் என்பர். (௪)	
வெம்போர்	க்ரூரமான யுத்தத்தை		
விளைத்த	செய்யுமவனாய்		

வ்யா.—நாலாம்பாட்டு. (விளைத்தவித்யாதி) வெம்போரை விளைப்பானாய், பெருமிடுக்கனாய், அந்தாலே வழிகெட வர்த்திப்பானாய்,

ஸாயுதனாயிருக்கிற ராக்ஷஸனுடைய நகரியானது (௧) "𑌶𑍍𑌮𑌶𑌾𑌨𑌸𑌦𑍃𑌶𑍀 ஶ்மசாந ஸத்ருசியாகவேணும்" என்றபடியே - பாழ்பட்டுப் போம்படியாக வளைத்த பெருமிடுக்கையுடைத்தான வில்லையும், அதுக்காஶ்ரயமாகப் போரும்படியான கையையுமுடைய சக்ரவர்த்தித் திருமகன் சாய்ந்தருளுகிற தேசமென்னுகிற்பார்கள். (௨) "செருவிலே யரக்கர் கோனைச்செற்ற நம் சேவகனார் மருவிய பெரியகோயில்" என்பர்களிறே.

(துளக்கை) துளையையுடைத்தான கையையுடைய ஆனைக்கொம்பும் அகிலும் துடக்கமானவற்றைக் கொடுவந்து, "கொள்வாருண்டோ" என்று கொடுப்பாரைப்போலே தள்ளி, தன் செருக்காலே லீலாரஸ மநுபவியா நின்றுள்ள புனலையுடைத்தான. சக்ரவர்த்தித் திருமகன்படியுண்டாய்த்து காவேரிக்கும். ... ... (௪)

அரு.—நாலாம்பாட்டு. (விளைத்தவித்யாதி) "எந்தை பெம்மான்" என்னும்படி என்னைத் தனக்காகக் கொள்ளுகையாலே ஸம்ஸார ஸமுத்ர மத்யகதமான (௩) *ஆக்கையின்வழி யுழலுகையைப் போக்கின உபகாரத்தையுமெண்ணி, இதுக்கு த்ருஷ்டாந்தமாக இலங்கை யழித்தமையை யருளிச்செய்கிறாரென்று ஸங்கதி.

(௪) "𑌸𑌹𑌪𑌤𑍍𑌨𑍍𑌯𑌾 𑌵𑌿𑌶𑌾𑌲𑌾𑌕𑍍𑌷𑍍𑌯𑌾 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌮𑍁𑌪𑌾𑌗𑌮𑌤𑍍 - ஸஹபத்ந்யா விசாலாக்ஷ்யா நாராயண முபாகமத்" என்கிறபடியே -பெருமாளுக்கு உபாஸ்யரான பெரிய பெருமாளை அவராகச் சொன்னாருண்டோவென்ன வருளிச்செய்கிறார் (செருவிலே யித்யாதி).

"முன்-உந்தி" ‡வேர்த்து-ந்ருத்தம்பண்ணி யென்றாய் அருளிச்செய்கி (கொள்வாரித்யாதி). லீலாரஸாநுபவத்திலே த்ருஷ்டாந்தமருளிச்செய்கிறார்(சக்ரவர்த்தியித்யாதி). ஓரம்பாலே இலங்கையழிக்க வல்லராயிருக்கச்செய்தேயும் செருக்காலே சர(ஶர)பரம்பரையாலே விளையாடினாப்போலே, அலைகளை மேன்மேலுமெறிந்துகொண்டு விளையாடுகிற தென்று கருத்து. ... ... (௪)

மூ.—வம்புலாம் கூந்தல் மண்டோதரி காதலன் வான்புக
அம்புதன்னால் முனிந்தவழகனிடமென்பரால்
உம்பர்கோனுமுலகேழும் வந்தீண்டி வணங்கும் நற்
செய்பொனாரும் மதிள் சூழ்ந்தழகார் தென்னரங்கமே. (௫)

---

(௧) ரா-ஸு-௨௬-௨௬.
(௨) திருமா-௧௧.
(௩) தி-வாய்-௩-௨-௧.
(௪) ரா-அயோ-௬-௧.
‡ (பா) திற்று.

பதம்.	உரை.
உம்பர்	தேவதைகளுக்கு [ம்
கோனும்	நாதனை ப்ரஹ்மாவு
உலகு ஏழும்	ஸப்தலோகங்களும்
வந்து	கிட்டி
ஈண்டி	ஒன்றாகத்திரண்டு
வணங்கும்	ஆஶ்ரயிக்குமதாய்,
நல்	ஸ்ப்ருஹணீயமாய்,
செம்பொன்	பசும்பொன்னோடு
ஆரும்	ஒத்திருக்கிற காந்தி
	லயை யுடையதுமா
	ன [லே
மதிள்	ப்ராகாரங் களினா
சூழ்ந்து அழகுஆர் தென்னரங்கம்,	
வம்பு	பரிமளமானது
உலாம்	உலாவாநின்ற [ளான
கூந்தல்	மயிர்முடியை யுடைய
மண்டோதரி	மண்டோதரிக்கு [ன்
காதலன்	வல்லபனான ராவண
வான்	வீரஸ்வர்க்கத்தை [க
புக	ப்ரவேசிக்கும் படியா
அம்புதன்னால்	பாணத்தினாலே [ற)
முனிந்த	சீறி (அவனைக்கொன்
அழகன்	வீரஶ்ரீயை யுடைய
	னான சக்ரவர்த்தி
	த் திருமகனுடைய
இடம் என்பர்.	(ரு)

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (வம்புலாம்கூந்தல்) பிராட்டியோடே கூட சக்ரவர்த்தித்திருமக னநுபவிக்கத் தானும் மண்டோதரியோடே அநுபவிக்கை யன்றிக்கே வழிகெட வநுபவிப்பதாகப்பாரித்த ராவணனவன் சித்ரவதத்தாலே வீரஸ்வர்க்கத்தைப்ராபிக்க, அவர்களைப்போலே வழிகெடவன்றிக்கே நேர்கொடு நேரே அம்பாலே அழியச்செய்த வீரஶ்ரீயால் குறைவற்ற சக்ரவர்த்தித் திருமகன் வர்த்திக்கிறதேசமென்னாநிற்பர்கள். எதிரிகளும் (க) ‹‹రఞ్జనీయస్య విక్రమైః ரஞ்ஜநீயஸ்ய விக்ரமைঃ'' என்னாநிற்பர்களிறே.

(உம்பரித்யாதி) தேவர்களுக்கு நிர்வாஹகனான ப்ரஹ்மாவும் அவனாலே ஸ்ருஷ்டமான ஜகத்திலுள்ளாரும் திரண்டு ஆஶ்ரயிக்கும்படியாய், ஸ்ப்ருஹணீயமாய், உள்ளுச்சாய்ந்த வஸ்துவுக்கு அரணாகப் போரும்படியான மதிளாலே சூழப்பட்டு தர்ஶநீயமான தென்னரங்கமே. ... ... (ரு)

அரு.—அஞ்சாம்பாட்டு. (வம்பித்யாதி) எந்தை பெம்மானாகையாலே (உ) "என்னைத் தீமனம் கெடுத்தாய்" என்று சொன்ன உபகாரத்தை அநுஸந்தித்து, அதுக்கு த்ருஷ்டாந்தமாக, (௩) ‹‹దశేన్ద్రియాననం ఘోరం యోమనోరజనీచరమ్ - தசேந்த்ரியாநநம் கோரம் யோ மநோ ரஜநீசரம்'' என்று சொல்லத்தக்க ராவண நிரஸநத்தை யருளிச்செய்கிறாரென்று ஸங்கதி.

(க) ரா-யு-க௦௬-௬. (உ) திவாய்-௨-எ-அ. (௩)

ராவணனை இங்ஙன் விசேஷித்ததுக்குக் கருத்தருளிச் செய்கிறார் (பிராட்டி யித்யாதி). ... ... (௫)

மூ.—கலை யுடுத்த வகலல்குல் வன் பேய்மகள் தாயென
முலை கொடுத்தா ளுயி ருண்டவன் வாழுமிடமென்பரால்
குலையெடுத்த கதலிப் பொழிலூடும் வந்துந்தி முன்
அலையெடுக்கும் புனல்காவிரிசூழ் தென்னரங்கமே. ... (௬)

பதம்.	உரை.	பதம்.	உரை.
எடுத்த	உயரவெடுக்கப்பட்ட	அகல்	விசாலமான
குலை	குலைகளையுடைத்தான	அல்குல்	நிதம்ப ப்ரதேசத்தையுடையளாய்
கதலி	வாழைகளுடைய		
பொழிலூடும்	சோலைகளினுள்ளே	தாயென	தாயான யசோதையைப்போலே
வந்து	ப்ரவேசித்து (அம்மரங்களைப்பறித்துக் கொண்டு)	முலைகொடுத்தாள்	முலையைக் கொடுத்தவளுமாய்,
		வன்	க்ரூர ஸ்வபாவையுமாய்
முன்	முன்னே	பேய்மகள்	பேய்ச்சியுமான பூதனையினுடைய
உந்தி	தள்ளி		
அலையெடுக்கும்	அலைவீசி யடியாநின்ற	உயிர்	ப்ராணனை
		உண்டவன்	பக்ஷித்த கண்ணன்
புனல்	ஜலத்தையுடைத்தான	வாழும்	நித்யவாஸம் பண்ணுகிற
காவிரிசூழ் தென்னரங்கம்,			
கலை	பட்டவஸ்த்ரத்தை	இடம் என்பர். (௬)	
உடுத்த	அணிந்த		

வ்யா.—ஆறாம்பாட்டு. (கலையுடுத்தவகலல்குல்) யசோதைப் பிராட்டியைப்போலே அலங்கரித்துக்கொண்டு கலையை யுடுத்து அகன்ற நிதம்பப்ரதேசத்தை யுடைய. (வன்பேய்மகள்) யசோதைப்பிராட்டியி லிவளுக்கோரேற்றம் - வன்மையாய்த்து. (தாயித்யாதி) யசோதைப் பிராட்டியைப்போலே பரிவெல்லாம் தோற்ற ஓசழக்காகத் தூக்கியெடுத்து. (முலைகொடுத்தாளுயிருண்டவன்) அவள்முலை கொடாவிடில் தரியாதாளாய் வந்தாப்போலே, இவனும் முலையுண்ணாவிடில் தரியாதானாய் அவளுயிரை முடித்தவன். இன்னு மிங்ஙனொத்த விரோதிகளைப் போக்குகைக்காக அணித்தாகவந்து வர்த்திக்கிற தேசமென்னா நிற்பார்கள்.

(குலை) ஓங்கின குலைகளையுடைத்தாயிருந்துள்ள வாழைச்சோலைக்குள்ளே வந்துபுகுந்து அவற்றையடையப் பறித்துக் கொடுபோந்து

சுமை தள்ளுவாரைப்போலே தள்ளாநின்றுள்ள புனலை யுடைத்தான காவிரிசூழ் தென்னரங்கமே. க்ருஷ்ணன் விரோதிகளைப்போக்குமாபோலே, நேரேநின்ற மரங்களைப் பறித்துக் கொடுவந்து போகடாநிற்குமாய்த்து. ... ... (௬)

அநு.—ஆறாம்பாட்டு. (கலை யித்யாதி) (௧) * கள்ளத்தே நானும்தொடாய்த்தொண்டுக்கே கோலம்பூண்ட யாதொரு கள்ளமனமுண்டு, அத்தையும் தவிர்த்து, (௨) * மருவித்தொழும் மனமேதந்த உபகாரத்தை எண்ணி, இதுக்கு நேரான த்ருஷ்டாந்தமாக பூதநா நிரஸநத்தை யருளிச்செய்கிறாரென்று ஸங்கதி.

(ஓசழக்காகத்தூக்கி) சற்றே தூக்கி. ... ... (௬)

மூ.—கஞ்சன்நெஞ்சும் கடுமல்லரும் சகடமும் காலினால்
துஞ்ச வென்ற சுடராழியான் வாழுமிடமென்பரால்
மஞ்சு சேர் மாளிகை நீடகிற்புகையும் மறையோர்
செஞ்சொல்வேள்விப் புகையும் கமழும் தென்னரங்கமே. (௭)

பதம்.	உரை.	பதம்.	உரை.
மஞ்சு	மேகமண்டலத்தை	கமழும்	பரிமளியாநின்ற
சேர்	(ஓங்கி) அளாவியிருக்கிற	தென்னரங்கம்,	
மாளிகை	க்ருஹங்களிலே யுண்டாய்	கஞ்சன்	கம்ஸனுடைய
நீடு	ஓங்கிப்போகா நின்ற	நெஞ்சும்	மநஸ்ஸூம்
அகில்புகையும்	அகில் தூமமும்	கடு	க்ரூரமான
மறையோர்	ப்ராஹ்மணர்களாலநுஷ்ட்டிக்கப் பட்டதாய்	மல்லரும்	சாணூராதிகளும்
		சகடமும்	சகடாஸுரனும்
		துஞ்ச	அழியும்படியாக
		காலினால்	திருவடிகளினாலே
செம் சொல்	அழகிய சொல்லான வேதத்திலே ப்ரதிபாதிக்கப் பட்டதான	வென்ற	(உதைத்து) ஜயித்தவனாய்
		சுடர்	உஜ்ஜ்வலமான
		ஆழியான்	திருவாழியை யுடையவனுமான ஸர்வேஶ்வரன்
வேள்வி	யாகத்திலேயுண்டான		
புகையும்	தூமமும்	வாழும் இடம் என்பர். (௭)	

வ்யா.—எழாம்பாட்டு. (கஞ்சனித்யாதி) கஞ்சனுடைய திண்ணிய நெஞ்சும், அவன்றன் கார்யத்தில் அவன்றன்னிலும் பரிவராகை

---

(௧) திருமா-௩௪. (௨) தி-வாய்-௨-௭-௭.

யாலே கடியராயிருக்கிறமல்லரும்,கடுமைதோன்றாதபடி மறையநின்ற சகடமும். (காலினால்) திருவாழியும் கையிலே யுண்டாயிருக்கச் செய்தே அதுகொண்டு வ்யாபரிக்கப் பற்றாமையாலே, (௧) "திருக்காலாண்ட பெருமான்" என்கிறபடியே - திருவடிகளாலே யழியச்செய்தவன் வர்த்திக்கிற தேசமென்பர்கள். தலைமயிரைப்பிடித்துக் கீழே விழவிட்டு முதுகிலே திருவடிகளாலே பாய்ந்தும், மல்லவர்க்கத்தைத் தானே திருவடிகளாலே நெருக்கியும், முலைவரவு தாழ்த்து நீட்டின வ்யாஜத்தாலே உதைத்தும் திருவடிகளாலே யிறே நிரஸித்தது.

(மஞ்சித்யாதி) மேகபதத்தளவும் செல்ல ஓங்கின மாளிகைகளிலே அகில்களாலே ப்ரவர்த்திப்பித்த ஓங்கின புகையும், வேதவிஹிதமானபடியே அங்குத்தை ப்ராஹ்மணர் யாகாதிகளிலே யுண்டாக்கின ஹோமதூமமும், இவை தன்னிலே விரவிக்கொண்டு கமழாநின்றுள்ள தென்னரங்கமே. ... ... (௭)

அரு.—ஏழாம்பாட்டு. (கஞ்சனித்யாதி) தம்முடைய ஸகலவிரோதி பாபங்களையும் போக்கினது தன் கால்வலத்தாலே என்றெண்ணி, இவ்வுபகாரத்துக்கு மொரு த்ருஷ்டாந்த மருளிச்செய்கிறாரென்று ஸங்கதி.

கஞ்சனும் என்னவேண்டி யிருக்கவும் "நெஞ்சும்" என்று சொல்லுகை இவனுடைய நெஞ்சே அதிக்ரூரமென்று தோற்றுகைக்கென்று விவக்ஷித் தருளிச்செய்கிறார் (திண்ணியநெஞ்சு) என்று. காலினால் பாய்ந்தது சகடத்தையன்றோ வென்ன வருளிச்செய்கிறார் (தலையித்யாதி). (திருவடிகளாலே) என்ற வநந்தரம், "கஞ்சனை" என்று கூட்டுவது.

(விரவி) பரவியென்கை. ... ... (௭)

மூ.—ஏன மீனாமையோடரியும் சிறு குறளுமாய்த்
தானுமாய தரணித் தலைவனிட மென்பரால்
வானும் மண்ணும் நிறையப் புகுந்தீண்டி வணங்கும் நல்
தேனும் பாலும் கலந்தன்னவர் சேர் தென்னரங்கமே. (௮)

பதம்.	உரை.	பதம்.	உரை.
வானும்	பரமபதத்திலுள்ள நித்யஸூரிகளும்	புகுந்து	வந்துப்ரவேசித்து
		ஈண்டி	ஒன்றாகத்திரண்டு
மண்ணும்	பூமியிலுள்ள ஸம்ஸாரிகளும்	வணங்கும்	ஆஶ்ரயியாநிற்க (அப்பொழுது)
நிறைய	ஸம்பூர்ணமாக	நல்	மதுரமான

---

(௧) தி-வாய்-௬-௯-௪.

தேனும்	தேனும்
பாலும்	பாலும்
கலந்தன்னவர்	ஒன்றாகச்சேர்ந்தாப்போலே ஏகரஸராயிருக்கிற பக்தஜனங்கள்
சேர்	அடைந்திருக்கிற
தென்னரங்கம்,	
ஏனம்	மஹாவராஹமாகவும்
மீன்	மத்ஸ்யரூபியாகவும்
அரியும்	நரஸிம்ஹமாகவும்
சிறு	மிகவும் சிறியனான
குறளும்	வாமனனாகவும்
ஆய்	அவதரித்தவனாய்,
தானும் ஆய	தானே பூர்ணாவதாரமெடுத்தவனாய்க்
தரணி	பூமிக்கு [சொண்டு
தலைவன்	நிர்வாஹகனான சக்ரவர்த்தித் திருமகனாக அவதரித்தவனுமான ஸர்வேச்வரனுக்கு

இடம் என்பர். (அ)

வ்யா—எட்டாம்பாட்டு. அநேகாவதாரங்களைப் பண்ணிக்கொண்டு வந்து ரக்ஷகனானவன் அவ்வவதாரகாலங்களில் பிற்பாடர்க்கு மிழக்க வேண்டாதபடி வந்து ஸந்நிஹிதனான தேசம் கோயிலென்கிறார்

(ஏனமித்யாதி) ப்ரளயங்கொண்ட ஜகத்தை யெடுத்துக்கொண்டேறுகைக்காக வராஹவேஷத்தைப் பரிக்ரஹித்தும், அப்படிப்பட்ட ப்ரளயந்தன்னைத் தன் செலுவிலே யடக்கவற்றான மத்ஸ்யமாயும், மந்தரம் கீழ்விழாதபடி தரிக்கவல்ல ஆமையாயும், இப்படி யொருவடிவு கொண்டுவந்து உதவுகையன்றிக்கே, சேராத வடிவைச்சேர்த்துக் கொடுவந்து தோற்றின நரஸிம்ஹமாயும், நாட்டில் வாமனர்களடங்கலும் வளர்ந்தருளினவிடம் என்னும்படி குறள்வடிவைக் கொண்டும். (தானுமாய) (க) "முன்னு மிராமனாய்த்தானாய்ப் பின்னு மிராமனாய்" என்னக்கடவதிறே. அல்லாத விடங்கள் சக்த்யைக தேசம், அவன் முன்னே வந்தானென்னக் கடவதிறே ராமாவதாரத்தை. அப்படியே பூமிப்பரப்படங்கலுக்கும் நிர்வாஹகனான சக்ரவர்த்தித் திருமகன் வர்த்திக்கிற தேசமென்பர்கள்.

(வானுமித்யாதி) பரமபதத்தில் நித்யஸூரிகளும் பூமியிலுள்ள ஸம்ஸாரிகளும் நிறையப்புகுந்து திரண்டு ஆஶ்ரயிக்க, நன்றான தேனும்பாலும் கலந்தாப்போலே யாய்த்து இங்குள்ளாரெல்லாரும் தங்களிலே ஒருமிடறு யினியராயிருக்கும்படி. விஜாதீயத்ரவ்யம் கலந்தாப்போலன்றியே, ஸ்ஜாதீயம் கலந்தாப்போலே யாய்த்து. நித்யஸூரிகள் ஸம்ஸாரிகள் என்கிற வாசிதெரியாதே ஒரு நீராய்ப்பரி

(க) அ-அ-௯௦.

மாறுகிற்பர்கள். தேசாந்தரங்களில் முன்பு கண்டறியாதார் வந்து போகப்புக்கால், "பிரிந்துபோகா நின்றோம்" என்று கண்ணும் கண்ணீருமாயிறே யிருப்பது. ... ... (௮)

அந.—எட்டாம்பாட்டு. (ஏனமித்யாதி) கீழெல்லாம் தமக்கு பஹு விதோபகாரங்களைப் பண்ணினவன் பலபடிகளைக் கொண்டானென்றதுவுமொரு தமக்கு உபகாரமென் றநுஸந்திக்கிறாரென்னும் ஸங்கதி தன்னை ஸூசிப்பிக்கிறார் (அநேகேத்யாதி).

(தன்செலுவிலே) தன் கீழ்வயிற்றிலே. ப்ரளயஜலத்தைக் கீழ்வயிற்றிலே அடக்கி ப்ராணிகளைத் தன்மேலே வைத்தான் மத்ஸ்யாவதாரத்திலே யென்று கருத்து. "தரணித்தலைவன்" என்றால் போராதோ, "தானுமாய" என்று விசேஷண மிடவேணுமோவென்ன; அஸாதாரண விக்ரஹ விசிஷ்டமாய் ஸகல கல்யாணகுணங்களுக்கு மாகரமாயிருக்கு மிருப்பு ராமாவதாரத்தில் ஸ்ப்புடமாகையாலே விசேஷித்தாரென்று திருவுள்ளம்பற்றி, இவர்க்கிப்படி கருத்தென்கைக்கு நியாமக மென்னென்ன வருளிச்செய்கிறார் (முன்னு மித்யாதி). அப்பாட்டில் தானும் அல்லாதவவதாரத்தைப் பற்றத் தானான தன்மை யருளிச்செய்வானென்னென்ன வருளிச்செய்கிறார் (அல்லாத வித்யாதி). ராமாவதாரம் பூர்ணாவதார மாகையால் மற்றை யவதாரங்களை சக்த்யாவேசமென்று சொல்லலாம்படி யிருக்குமென்று கருத்து. இத்தால் - மற்றையவற்றுக்கு அபூர்த்தி சொல்லவந்ததில்லை; *நஹிநிந்தாந்யாயேந ராமாவதாரத்திலேற்றம் சொன்ன இத்தனை யென்றதாய்த்து.

தேனும்பாலும் கலந்தால் மாதுர்ய ரஸமொன்றுமே விஞ்சியிருக்குமா போலே ஏகரஸமாக விருந்தவர்களென்று ஒருயோஜனை யருளிச்செய்து, தேனும் தேனும் பாலும் பாலும் தன்னில் தான் கலந்தாப்போ லிருந்தவர்களென்று அர்த்தாந்தர மருளிச்செய்கிறார் (விஜாதீயேத்யாதி). ... (௮)

மூ.—சேயனென்றும் மிகப்பெரியன் நுண்ணேர்மையினாயவிம்
மாயையை யாரு மறியாவகையானிடமென்பரால்
வேயின்முத்தும்மணியும் கொணர்ந்தார் புனல்காவிரி
ஆய பொன் மா மதிள் சூழ்ந் தழகார் தென்னரங்கமே. (௯)

பதம்.	உரை.	பதம்.	உரை.
வேயின்	மூங்கில்நின்று முதிர்	ஆர்	ஸம்ருத்தமான
முத்தும்	முத்துக்களையும் [ந்த	புனல்	ஜலத்தையுடைய [ம்,
மணியும்	ரத்நங்களையும்	காவிரி	திருக்காவேரியினாலு
கொணர்ந்து	கொண்டுவந்து	ஆய	தகுதியாய்
	ளாநின்றுள்ள	பொன்	பொன்போலே ஸ்ப்
			ருஹணீயமாய்

மா	பெரிதுமான
மதிள்	ப்ராகாரங்களினாலும்
சூழ்ந்து அழகு	ஆர் தென்னரங்கம்,
சேயன்	தூரஸ்த்தனாயிருந்தும்
மிகப்பெரியன்	ஸர்வாதிகனாயிருந்தும்
நுண்	ஸூக்ஷ்ம பதார்த்தங்களிலும்
நேர்மையினாய	உட்புக்கு அதிஸூக்ஷ்மமாயிருக்கையாகிய
இம்மாயையை	இந்த ஆஶ்சர்ய சக்தியை
யாரும்	எவராலும்
என்றும்	எக்காலத்திலும்
அறியா	அறியக்கூடாத
வகையான்	ப்ரகாரத்தையுடையனான ஸர்வேஶ்வரனுடைய

இடம் என்பர். (௯)

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (சேயனித்யாதி) தூரஸ்த்தனாய் ஸர்வேஶ்வரனாயிருக்குமிருப்பு, ஸூக்ஷ்மத்வத்திலதி ஸூக்ஷ்மமான பதார்த்தங்களெங்கும் புக்கு வ்யாபித்துத் தரித்துக் கொடுநிற்கையாகிற இந்த ஆஶ்சர்ய சக்தியோகம், எத்தனையேனுமளவுடையாரு மொருநாளு மறியவொண்ணாதபடி யிருக்கிறவன் வர்த்திக்கிற தேசமென்பர்கள்.

(வேயித்யாதி) ஸஹ்யபர்வதத்திலுண்டானவேய்களுதிர்த்த முத்தும், அதிலுண்டான மணிகளையும் கொண்டுவந்து ‡எறடாநின்றுள்ள மிக்க புனலையுடைத்தான காவிரி. உள்ளுச்சாய்ந்த வஸ்துவுக்கு அரணாகப் போரும்படியான ஸ்ப்ருஹணீயமாயிருந்துள்ள மதிள்களாலே சூழப்பட்ட தர்ஶநீயமான கோயில். ... (௯)

அரு.—ஒன்பதாம்பாட்டு. (சேயனித்யாதி) கீழ் அவதாரங்களையெல்லாம் ஸ்வார்த்தமாக அநுஸந்தித்தாப்போலே வ்யாப்தியையும் ஸ்வார்த்தமாக வநுஸந்தித்து, தம்மைப்பிடிக்க வளைத்தானென்று அவ்வுபகாரத்தை யநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

“என்றும்” என்றபதத்தை “ஆரும்” என்றவநந்தரம் அந்வயித்து அர்த்தமருளிச்செய்கிறார் (ஒருநாளும்) என்று.

“ஆய” என்றதினர்த்தம் (அரணாகப் போரும்படியான) என்றது. (௯)

மூ.—அல்லிமாதரமரும் திருமார்வனரங்கத்தைக்
கல்லின் மன்னுமதிள் மங்கையர் கோன்கலிகன்றிசொல்
நல்லிசைமாலைகள் நாலிரண்டுமிரண்டுமுடன்
வல்லவர் தாமுலகாண்டு பின்வானுலகாள்வரே. (௧௦)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

---

‡ (பா) திரட்டாநின்றுள்ள.

பதம்.	உரை.
அல்லி	தாமரைப்பூவைப் பிறப்பிடமாக வுடைய [பிராட்டியார்
மாதர்	பெண்ணான பெரிய
அமரும்	பொருந்தி நித்யவாஸம் பண்ணாநின்ற
திரு	அழகிய
மார்வன்	திருமார்பை யுடையனான ஸர்வேஶ்வரன் நித்யவாஸம் பண்ணுகிற
அரங்கத்தை	திருவரங்கமென்னும் திவ்யதேச விஷயமாக, [டு
கல்லில்	கல்லாலே கட்டப்பட்
மன்னு	த்ருடமாயிருக்கிற
மதிள்	ப்ராகாரத்தையுடைய
மங்கையர்	திருமங்கையிலுள்ளா
கோன்	ஸ்வாமியான [ர்க்கு
கலிகன்றி	ஆழ்வார்
சொல்	அருளிச்செய்ததாய்
நல்	அழகியதாய்
இசை	கானத்தோடுகூடின
மாலைகள்	சப்த ஸந்தர்ப்ப ரூபமான
நால்இரண்டும் இரண்டும்	பத்துப் பாட்டுக்களையும் [தோடு
உடன்	அர்த்தாநு ஸந்தானத்
வல்லவர்தாம்	அப்யஸிக்குமவர்கள்,
உலகு	பூலோகத்திலுள்ள திருவரங்க மென்னும் திவ்யதேசத்திலே (இருந்து)
ஆண்டு	பகவத்குணங்களை அநுபவித்து,
பின்	இந்த சரீரம் கழிந்தவாறே
வானுலகு	பரமபதத்தை
ஆள்வர்	ஆளக்கடவர்கள். ௧௦)

வ்யா. — பத்தாம்பாட்டு. அல்லிமாதரமரும் திருமார்வனரங்கத்தை யாய்த்துக் கவிபாடிற்று. "இம்மார்வைவிட்டு, பழையதாமரைப் பூவிலே போயிருக்க வேண்டில் செய்வதென்?" என்று அஞ்சும்படியான மார்வைப்படைத்தவன். (௧) "அகலகில்லேன்" என்றிறே வார்த்தை. (கல்லிலித்யாதி) அரணாகப் போரும்படியான மதிளாலே சூழப்பட்ட திருமங்கையி லுள்ளார்க்கு நிர்வாஹகரான ஆழ்வாரருளிச்செய்த, நன்றான இசையோடே கூடின தொடை நாலிரண்டு மிரண்டினையும். இதிலுண்டான ஆதரத்தாலே சேர்த்தநுபவிக்கிறார். இவற்றை ஸாபிப்ராயமாக அப்யஸிக்க வல்லவர்கள், கோயிலிலே யிருந்தநுபவித்து, பின்னை சரீர ஸமநந்தரம் பரமபதம் தாங்களிட்ட வழக்காகப் பெறுவர்கள். ... ... (௧௦)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

---

(௧) தி-வாய்-௬-௧௦-௧௦..

அரு.—பத்தாம்பாட்டு. (அல்லியித்யாதி) “அல்லி” என்று - தாமரையிதழாய், அதில் “மாதரம்ரும்” என்று விசேஷித்ததுக்குத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (இம்மார்வை யித்யாதி). கல்லாலே, மன்னு - த்ருடமாயிருக்கிற வென்று சப்தார்த்தமா யருளிச்செய்கிறார் (அரணித்யாதி). பத்து என்னாதே இப்படிப் பிரித்துச் சொன்னதுக்குத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (இதிலித்யாதி). இத்தால் - இரண்டிரண்டாக வொருநாலும் தனியே ஓரிரண்டுமாகப் பிரிக்கைக்கு, “உந்தி” “வையம்” என்கிற விரண்டும், உலகுண்ட வடதளசாயி விஷயதயா ஒரு சேர்த்தியுடைத்தாய், “விளைத்த” “வம்பு” என்கிற விரண்டும் - ராமன் விஷயமாகையால் ஒரு கோவையுடைத்தாய், “கலை” “கஞ்சன்” என்றிரண்டும் - க்ருஷ்ண விஷயமாகையால் அதொரு நேருடைத்தாய், பரத்வ ப்ரதிபாதகமாய்க்கொண்டு அதுக்குறுப்பான ஶ்ரியஃபதித்வத்தை ப்ரதிபாதிக்கிற “சேயன்” “அல்லி” என்கிற பாட்டுக்கள் ஒரு சேர்வை; இப்படி நாலுத்விகத்தில் ஒருப்ரேமமும் திருக்குறளன் விஷயம் ஒருபாட்டும் ஸகலாவதாரஸமுதாய விஷயமாக ஒரு பாட்டுமாயிருக்கிற “பண்டு” “ஏனம்” என்கிற விரண்டில் தனித்தனியே ஒரு ப்ரீதியு முடையராய், இப்படி விசேஷித்தா ரென்றதாய்த்து. “உடன்” என்றதுக்கு உக்தப்ரகாரமான சேர்த்தியில் கருத்துடன் என்றர்த்தம் விவக்ஷித் தருளிச்செய்கிறார் (ஸாபிப்ராயமாக) என்று. அரங்கத்தை ப்ரதிபாதிக்கிற திருமொழிக்கு *அரங்கன் திருமுற்றத்தடியாரோடிருக்கையை பல(ஃபல)மாகச் சொல்லவேண்டுகையாலே, “உலகாண்டு” என்றது பூலோகத்தில் ஶ்ரீமந்மந்திரமான விடத்தி லிருப்பைச் சொல்லுமென்று விவக்ஷித் தருளிச்செய்கிறார் (கோயிலிலே யித்யாதி). ... ... (௧0)

ஜீயர் திருவடிகளே சரணம்.

அஞ்சாம்பத்தில் நாலாந்திருமொழி முடிந்தது.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

அஞ்சாம்பத்து அஞ்சாந் திருமொழி

வெருவாதாள் ப்ரவேசம்.

வ்யா.—தன்னைப்பேணாதே ரக்ஷிக்குமவன் ஸந்நிஹிதனாயிருக்க, அபேக்ஷை யுண்டாயிருக்க, அபிமதமான கைங்கர்யம் பெறாமையாலே தமக்குப்பிறந்த அவஸாதாதிசயத்தை, பகவத் விரஹத்தால் வந்த ஆற்றாமையோடே இருக்கிறாளொரு பிராட்டி தசையை யநு

ஸந்தித்து, "அவனை இவளோடே கூட்டமாட்டுகிறிலேன், இவளை நோவுபடாதபடி பண்ணமாட்டுகிறிலேன், எத்தைச் செய்வேன்!" என்று நோவுபடுகிறாளொரு திருத்தாயார் பாசுரத்தாலே யருளிச்செய்கிறார். ... ... (*)

அரு. — வெருவாதாளின் ப்ரவேசம்.—கீழ்த்திருமொழியில் தமக்கு பஹுப்ரகாரமாக அவன் பண்ணின உபகாரங்களை அநுஸந்தித்தவர், இதில் அவஸாதத்தாலே நோவுபடுகைக்கு ஸங்கதி யென்னென்ன; தாம் பல திருப்பதிகளிலும் நுழைந்தவிடத்திலும் நினைத்தபடி பரிமாற முகங்கொடாதிருக்க; அவன் *ஏனமீனாமையோ டரிகுறளாய் பலபடியுடையனாய் அபேக்ஷித்தா ரபேக்ஷித்தபடி செய்யுமவன் என்னபேக்ஷிதம் செய்யாமல் போனானென்று நோவுபட்டு பிராட்டி தசையை யடைந்து வாய் வெருவுகிறாரென்னும் ஸங்கதியை யருளிச்செய்கிறார் (தன்னை யித்யாதி). ... ... (*)

மூ.—

வெருவாதாள் வாய்வெருவி வேங்கடமே வேங்கடமே யென்கின்றாளால்
மருவாளாலென்குடங்கால் வாணெடுங்கண்டுயில் மறந்தாள்வண்டார்கொண்ட
லுருவாளன்வானவர்தமுயிராளனொலிதிரைநீர்ப்பௌவம்கொண்ட
திருவாள னென்மகளைச் செய்தனகளெங்ஙனம் நான் சிந்திக்கேனே

பதம்.	உரை.	பதம்.	உரை.
வெருவாதாள்	(என்மகள்) அச்சமற்றவளாய்க்கொண்டு	துயில்	உறக்கத்தை
வாய்வெருவி	வாய்புலற்றினவளாய்	மறந்தாள்	மறந்துவிட்டாள் (நித்ரைபோகிறிலள்);
வேங்கடமே வேங்கடமே என்கின்றாள்	திருவேங்கடமே என்று பலகாலும் சொல்லாநின்றாள்;	வண்டு	வண்டுகளினாலே
ஆல்	கஷ்டம்;	ஆர்	பூர்ணமான
என்குடங்கால்	என்மடியில்	கொண்டல்	மேகம்போன்ற
மருவாள்	பொருந்துகிறிலள்;	உரு ஆளன்	திருமேனியுடையனாய்,
ஆல்	கஷ்டம்;	வானவர்தம்	நித்யஸூரிகளுக்கு
வாள்	வாள்போலே தீக்ஷ்ணமாய்	உயிராளன்	ப்ராணபூதனாய்,
நெடு	பரப்பையுடைத்தான	ஒலி	சப்தியாநின்ற
கண்	கண்களிலே	திரை	அலைகளினுடைய
		நீர்	ஜலத்தையுடைத்தான
		பௌவம்	ஸமுத்ரத்திலே
		கொண்ட	பிறப்பை யுடையனான

திரு	பெரிய பிராட்டியார்க்கு	செய்தனகள்	செய்தவகைகளை
ஆளன்	வல்லபனுமான ஸர்வேஸ்வரன்	நான்	நான்
எனமகளை	என்னுடைய பெண்பிள்ளையை	எங்ஙனம்	எப்படி
		சிந்திக்கேன்	நினைப்பிடுவேன்? (க)

வ்யா.—முதற்பாட்டு. (வெருவாதாளித்யாதி) பெருமாளுடைய இங்குத்தை வரவாறே பிடித்து ஆற்றாமைக் குடலாம்படி காணும் பிறந்த ப்ராவண்யாதிசயம். "திருப்பாணாழ்வார் (க) 'அன்று நேர்ந்த நிசாசரரை' என்று - ராவணவதமே தொடங்கிப் பெருமாளை அடியொத்தினர், அது தெற்குத் திருவாசலாலே புகுந்து கிடந்தது; (உ) 'மந்திபாய்' என்று - பரமபதமே தொடங்கி அடியொத்தினர், திருமலையிலே புகுந்துகிடந்தது; அங்கே பார்த்தவாறே நின்றபடியைக் கண்டார், இன்னமும் போக்கிலே ஒருப்பாடுதோற்றி யிருந்தது என்று அவ்விடமேதொடங்கி அடியொத்தினவாறே வடக்குத் திருவாசலாலே புகுந்து, படுக்கை இங்கேயாயிருந்தது' என்று, பட்டர் *அமலனாதிபிரானருளிச்செய்யாநிற்க நான் கேட்டேன்" என்று பிள்ளை அருளிச்செய்தார். (வெருவாதாள்) அஞ்சாதாளென்றபடி; நெஞ்சில்†களவு கலசாமையாலே. தனக்கோடுகிறது சிலர்க்கு அஞ்சி மறைத்தல், சிலர்க்கு வெளியிடுதல் செய்யும் பருவமல்லாதவள். ‡அஞ்சவறியாதவளென்கை. நன்னால் மறைக்கலாவதெல்லாம் மறைத்தாள், மறைக்க முடியாமை. அவ்வளவேயோ, பரத்வத்தைவிட்டு, வ்யூஹத்தை விட்டு, விபவங்களைவிட்டு, உகந்தருளின தேசத்தையே வாய்வெருவி யிருக்கும்படியாய் விழுந்தது. ஒருகால் "திருமலை" என்னு, பின்னையும் உள்ளுப்புக வறிகிறிலள். (ங) *"காட்கரையேத்தும் அதனுட் கண்ணு" என்கிறிலள். (என்கின்றாளால்) அப்பேச்சு தனக்காகர்ஷகமாயிருக்கிறபடி. (ச) "ஸீதேதி மதுராம் வாணீம் - ஸீதேதி மதுராம் வாணீம்" என்று வாய் வெருவுவானவனு யிருக்க, அத்தலை யித்தலையாய்விட்டது. "ஸீதேதி மதுராம்வாணீம்" என்று சொல்லுகிறவர் தாம் *தீமதாம் (தீமதாம்) வரராய், வார்த்தை தான் பிராட்டி விஷயமான பேச்சாய், பிரிவால் வந்த மிடற்றில் துவட்சியாலே சொல்லுகிறது சால மதுரமாயிருக்குமிறே. "பட்டர் 'அழகிய மணவாளப்

(க) அமல-உ. (உ) அமல-ங. (ங) தி-வாய்-கூ-சு-எ. (ச) ரா-ஸு-ஙசு-சச.
† களவு-யௌவநம். ‡ (பா) அஞ்சிமறையாதவள்

பெருமாள்' என்னும் போதும், அநந்தாழ்வான் 'திருவேங்கடமுடையான்' என்னும் போதும், பா(ஃ)வபந்தமடையத் தோற்றி யிருக்கும்படி காண்!" என்று ஜீயர்

மற்றொன்றை வாய்வெருவாள்; ஏதேனு மளவிலும் முன்பு உன் மடியிலே வைத்து ஆற்றப்பார்க்கில் ஆறும், நீ அப்படி ஆஶ்வஸிப்பித்தாலோவென்ன; பண்டு மருவிப்போந்தவள் என்மடியிலிப்போது மருவுகிறிலள். அதுதான் செய்யாமையு மில்லை; இவளிசையாமையுமில்லை; அப்படி இவளால் செய்து தலைக்கட்டப் போகிறதில்லை. "தாய்மடி" என்று ‡மனிச்சடித்து நெருப்பிலே யிருக்கப்போகாதிறே; தாய்மடியும் பொருந்தாதபடி ஆர்மடி இவளை இப்படி துஶ்ஶிக்ஷை பண்ணிவிட்டதோ! அறிகிறிலேன். என் மடியல்லது அறியாதவள் என்மடியில் பொருந்துகிறிலள். மடியிலிராளாகில் படுக்கையிலே வளர்த்தி உறங்குமாகில் பார்த்தாலோவென்ன (வாணெடுங்கணித்யாதி) அது, முதலிலே பிடித்து வ்யுத்பத்தி பண்ணுவிக்கவேணும். (வாள்) ஓராளு மொருநோக்கும் நேராயிருக்கை. (நெடுங்கண்) போக்தாவால் புஜித்துக் கரைகாண வொண்ணாதகண். பெரியவூர் குடி வாங்கினாப்போலே கண்ணில் பரப்பித்தனையும் நித்ரை குடிபோனபடி. ஆகையால், கண்ணில் பரப்பித்தனையும் தலைச்சுமையாய்த்து.

(க) "𑌗𑍋𑌪𑌜𑌨𑌂 𑌸𑍍𑌮𑌰𑌨𑍍 - கோபஜநம் ஸ்மரன்" என்னப்பண்ணினாசை சொல்லுகிறதுமேல் (வண்டாரித்யாதி) வடிவழகாலும் சேஷ்டிதங்களாலுமாகவாய்த்து இப்படி பண்ணிற்று. அகவாயில் ஜலத்தினுடைய ரஸ்யதையாலே மேகத்திலே வண்டுகள் படிந்திருக்குமென்றுமாம். (வண்டு) (உ) "செங்கட்கருமுகிலின் திருவுருப்போல் மலர்மேல் தொங்கிய வண்டினங்காள்" என்று வண்டை வடிவுக்குப் போலியாகச் சொல்லிற்றிறே. (வானவரித்யாதி) இவ்வடிவு தன்னை அரைக்ஷணம் கண்ணுக்கிலக்காகாதபடி மாறவைக்கில், ஒருநாடாக ஜீவியாதபடி பண்ணுமவன். (ஒலியித்யாதி) கடலைக்கடைந்து பிராட்டியை லபித்தவன். (என்னித்யாதி) அவளைப் பெறுகைக்குச் செய்ததித்தனையும் போருமாய்த்து இவளை நோவுபடுத்துகைக்குச் செய்ததும். (எங்ஙனமித்யாதி). இவள் தன் ஸர்வஸ்வத்தையும் நேர்ந்து செய்தத்தை என்னாலே நினைக்கப்போமோ? அவனகப்படுத்த இவள் குமிழி

(க) சாந்தோ-அ-கஉ.   (உ) நா-தி-கூ-ரு

‡ மனிச்சடித்து-முனையாலே சலிகைபண்ணி. சலிகை-செல்வாக்கு.

நீருண்ணுமித்தனை யொழிய, கரையிலே நிற்கிற வென்றால் "இன்னபடி" என்று நினைக்கப்போமோ? ... ... (க)

அநு.—முதற்பாட்டு. (வெருவாதாளித்யாதி) கீழே திருவரங்கத்தை அநுபவித்தவராயும், மேலும் அரங்கத்தையே அநுபவிக்கையாலும், இத்திருமொழி நிகமத்திலே - "திருவரங்கத் தம்மானைச் சிந்தைசெய்த" என்றிருக்கையாலும், கோயிலையன்றே வாய்வெருவ வேண்டுவது, திருமலையை வெருவுகைக்குக் காரண மென்னென்ன வருளிச்செய்கிறார் (பெருமாளுடைய வித்யாதி). (க) "𑌵𑌿𑌧𑍇𑌰𑌿𑌕𑍍𑌷𑍍𑌵𑌾𑌕𑍁𑌲𑌬𑍍𑌧𑌾𑌯 𑌵𑌿𑌭𑍀𑌷𑌣𑌕𑍃𑌤𑍇𑌪𑍁𑌨𑌃 । 𑌦𑌤𑍍𑌤𑌾𑌯 விதேரிக்ஷ்வாகு லப்த்தாய விபீஷணக்ருதேபுந: தத்தாய" என்றன்றே வரவாறு, திருமலை வரவாறுவானென்னென்ன வருளிச் செய்கிறார் (திருப்பாணாழ்வாரித்யாதி). *அமலனாதிபிரானில் முதற்பாட்டில் - பரமபதத்தையும் திருமலையையும் திருவரங்கமுமாக அநுபவித்த வநந்தரம், திருவுலகளந்தவனையும் காகுத்தனையு மநுபவித்தும், மூன்றாம்பாட்டில் - திருவேங்கடத்தை யநுபவித்தும், இங்ஙனே அரியுருவையும் ஆலினிலையானையும் வெண்ணெயுண்டவாயனையு மநுபவித்துப் போந்ததெல்லாம், (உ) "மற்றொன்றினைக் காணாவே" என்ற அதிமாத்ர ப்ராவண்யத்துக்குச் சேர அடியொத்தினதித்தனை யொழிய, இவர்க்கு அவற்றிலும் ப்ராதாந்யேந ப்ரேமமில்லையென்ன வேண்டுகையாலே, பட்டர் திருவாசற்களாலே புகுந்ததாக அநுபவமுண்டாய்த்தென்று அருளிச்செய்தாராகையாலே, இவ்வாழ்வாரும், கீழ்த்திருமொழியில் - ஆலிலைமேவு மாயன் முதலாக ராமக்ருஷ்ணாத்யவதாரங்களை எல்லாம் பெரியபெருமாளாக அநுபவித்தபடி சொல்லுகையால், பாரிசேஷ்யாத் திருமலையை அடியொத்தின படியையும் சொல்ல வேண்டுகையாலே அத்தை இப்பாட்டி லருளிச்செய்தாரென்று திருவுள்ளம். "மந்திபாயென்று" என்றத்தை, "நின்றபடியைக்கண்டார்" என்றத்தோ டந்வயிப்பது. அஞ்சாமைக்கு ஹேதுவென்னென்ன வருளிச் செய்கிறார் (நெஞ்சி லித்யாதி). களவு கலசாமையாவ தென்னென்ன வருளிச்செய்கிறார் (தனக்கித்யாதி). ‡பால்யத்தாலே மறைக்கமாட்டாமையன்றிக்கே, அவஸ்த்தை முறுகி அத்தாலும் மறைக்கமாட்டாளென்கிறார் (அஞ்ச லித்யாதி). எத்தனைதசை முறுகினாலும் தாய்க்கு ஒளிக்கவேண்டாவோ வென்ன வருளிச்செய்கிறார் (தன்னாலித்யாதி). (முடியாமை) என்றவநந்தரம், வெருவுகிறாள் என்று சேஷம். '(அவ்வளவேயோ) என்

(க)-

(உ) அமல-கO.

‡ தாய்க்கு மறைக்கையும் தோழிக்கு வெளியிடுகையும். பால்யத்தாலே மறைக்கமாட்டாமை யன்றிக்கே அவஸ்த்தைமுறுகி அதினாலும் மறைக்கமாட்டாளென்கிறார் (அஞ்சி மறையாதவளென்கை) என்று அரும்பதாந்தரம்; இதுக்கநுகுணமாக, "அஞ்சி மறையாதவள்" என்று சில வ்யாக்யாந ஸ்ரீகோசங்களில் பாடம் காண்கிறது.

றது- அவன் பேரைச்சொல்லி வாய்வெருவுகிற மாத்ரமேயோ என்றபடி. வீப்ஸாதாத்பர்யம் (ஒரு காலித்யாதி). உள்ளுப்புக - திருவேங்கடத்தான் பேர்சொல்ல. வெருவாநின்றாள் என்று ஒரு சொல்லால் சொல்லாதே, கீழே "வெருவி" என்றுவைத்து "என்கின்றாள்" என்றதுக்குத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (அப்பேச்சித்யாதி);"ஆல்"என்று ஆஶ்சர்யமாய், அதின் தாத்பர்ய மென்னவுமாம் "என்கின்றாள்" என்கிற வர்த்தமான நிர்த்தேசத்தாலே - பெண்பிள்ளைக்கு இதிலினிமை தோற்றுகையால், அத்தைத் திருத்தாயார் சொல்லுகிறாளாக யோஜிக்கவுமாம். பெண்பிள்ளை பேச்சினிதானாப்போலே அழகிய மணவாளப்பிள்ளை பேச்சு மினிதாயிருக்குமோவென்ன வருளிச்செய்கிறார் (ஸீதேத்யாதி). வன்றிக்கே, ஆல் - விஷாதத்திலே அதின் தாத்பர்யமாகவுமாம். இடைவிடாம லநுஸந்திக்கைக்கு போக்யதை குறைவற்றிருக்கு மென்றதுக்கு த்ருஷ்டாந்தகதந பூர்வகமாக வ்யாக்யாதா ஈடுபடுகிறாரென்னவுமாம். "ஸீதே" என்று இரண்டெழுத்துக் கூட்டினால் இதில் மாதுர்ய முண்டாகைக்கு நியாமக மென்னென்ன வருளிச்செய்கிறார் (ஸீதேத்யாதி) இப்பெண்பிள்ளை தனக்கினிமை தோற்றச் சொன்னாளென்கைக்கு த்ருஷ்டாந்த மருளிச்செய்கிறார் (பட்டரித்யாதி). அன்றிக்கே, பாவபந்தமுடையார் சொல் எல்லார்க்கும் போக்யமாயிருக்கு மென்கைக்கு நியாமக மாகவுமாம்.

மேலுக்கவதாரிகை (மற்றொன்றை யித்யாதி). (வெருவாள்) என்ற வநந்தரம், ஆகிலும் என்று சேஷம். இப்போது "மருவாள்" என்றதுக்கு, முன்பு மருவுதலுண்டாகவேணுமென்று விவக்ஷித்தருளிச் செய்கிறார் (பண்டித்யாதி). இப்போது மருவாமைக்கு ஹேது என்குடங்காலாகை யென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார் (அதுதானித்யாதி). நான் தாயாராகையாலே ஆஶ்வஸிப்பியாதே உபேக்ஷித்தவளுமன்று, பெண்ணாகையாலே அவள் வந்திராதே போனவளுமன்று, மடியிலிருப்பு அவள்மடியிலிருப்புக்கு ஸ்மாரகமாய் பாதக (बाधक) மாகையாலே இருக்கமாட்டாதே போனாளென்று கருத்து. "ஆல்" என்று விஷாதப்படுகைக்குக் கருத்தருளிச்செய்கிறார் (தாயித்யாதி). தாய் மடியிலிருக்கப் போகாதிருப்பா னென்னென்ன வருளிச்செய்கிறாராகவுமாம். பிண்டிதார்த்தம் (என்மடி யித்யாதி). "நெடும்" என்று விசேஷித்ததுக்குத் தாத்பர்யாந்தர மருளிச்செய்கிறார் (பெரிய வித்யாதி)

வண்டோடொத்த உருவமென்று சப்தார்த்தமாக்கி யருளிச்செய்கிறார் (செங்கணித்யாதி). (சொல்லிற்றிறே) என்ற வநந்தரம், அப்படியாகவுமாம் என்று சேஷம். பௌவத்திலே பிறப்பைக்கொண்ட திருவாளனென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார் (கடலையித்யாதி). "நான் சிந்திக்கேனே" என்கையாலே - அவனையு மிவளையும் வ்யாவர்த்திக்கிறதென்கிறார் (இவள் தன்னித்யாதி). ... ... (க)

மூ.—

கலையாளா வகலல்குல் கனவளையும் கையாளா வென்செய்கேன் நான்
விலையாளாவடியேனை வேண்டுதியோ வேண்டாயோவென்னும்மெய்ய
மலையாளன் வானவர்தம் தலையாளன் மராமரமேழெய்த வென்றிச்
சிலையாளனென் மகளைச் செய்தனக ளெங்ஙனம் நான் சிந்திக்கேனே.

பதம்.	உரை.
அகல்	பரந்த
அல்குல்	நிதம்பப்ரதேசமானது
கலை	வஸ்த்ரத்தை
ஆளா	தரிக்கிறதில்லை;
கனம்	ஸ்வர்ணமயமான
வளையும்	வலயங்களும்
கை	(இவள்) கைகளைப் பற்றி
ஆளா	ஆளமாட்டுகிறதில்லை; (தங்குகிறதில்லை);
நான்	நான்
என்செய்கேன்	எத்தைச்செய்வேன்?
அடியேனை	தாஸ்யத்திலே பொருந்தின என்னை
விலையாளா	க்ரய விக்ரயார்ஹையாம்படி கொள்ளுகைக்கு
வேண்டுதியோ	இச்சிப்பாயோ?
வேண்டாயோ	இச்சிக்கமாட்டாயோ?
என்னும்	என்று சொல்லாநின்றாள்;
மெய்யம்	திருமெய்யமென்கிற
மலை ஆளன்	திருமலையைவாஸஸ்தாநமாக உடையனாய்
வானவர்தம்	நித்யஸூரிகளுக்கு
தலை ஆளன்	ஸ்வாமியாய்க் கொண்டு
ஏழ்	ஏழான
மராமரம்	ஸால வ்ருக்ஷங்களை
எய்த	பிளந்துவிட்டதும்
வென்றி	ஜயசீலமுமான
சிலை ஆளன்	பாணத்தை யுடையவனுமான சக்ரவர்த்தித் திருமகன்
என்மகளைச் செய்தனகள் எங்ஙனம் நான் சிந்திக்கேனே. (௨)	

வ்யா.—இரண்டாம்பாட்டு. (கலையாளாவகலல்குல்) அடியில், அகன்றிருக்கும் நிதம்பப்ரதேசமானது இப்போது விரஹக்ருசமாகையாலே பரியட்டத்தை ஆளுகிறதில்லை. (கனவளையும்கையாளா) ஶ்லாக்யமானவளை கையில் தங்குகிறதில்லை. (என்செய்கேன்நான்) இவள் பரியட்டப்பண்பும் கையும் வளையுமே ஜீவநமாயிருக்கக்கடவ நான் எத்தைச்செய்வேன்? பரியட்டத்தையும் வளையையும் தங்கும்படி பண்ணுவேனோ, இவளை ஈடுபடாதபடி பண்ணுவேனோ, அவனை ஆளாகக்கொள்ளும்படி பண்ணுவேனோ, எத்தைச்செய்வேன். (விலையாளாவித்யாதி) இது இரண்டுபடி,- விலையை ஆளாத அடியேனை உன்னாலும் பிறர்க்காக்கவொண்ணாதபடி அநந்யார்ஹையான வென்னை; அன்றிக்கே, விலையாளாக - உனக்கு க்ரயவிக்ரயார்ஹையாக

இஷ்டவிநியோகார்ஹையாக, என்னைக்கொள்வுதியோ? கொள்ளாயோ? நான் ஜீவியாதொழிய என்னும்; (௧) "𑌤𑌾𑌵𑌦𑍍𑌯𑌹𑌮𑍍 - தாவத்யஹம்" இத்யாதிவத்.

(மெய்யமித்யாதி) * அயர்வறு மமரர்களதிபதியா யிருந்துவைத்துத் தன்ஸௌலப்யத்தைக் காட்டி "விலையாளாவடியேனை வேண்டுதியோ?" என்று இவளையிட்டுச் சொல்லுவித்துக் கொள்கைக்காகத் திருமெய்யத்திலே வந்து ஸந்நிஹிதனானவன்;(௨)*பின்னானார் வணங்குஞ் சோதியிற்போலே;- (௩) "𑌯𑌤𑍍𑌰 𑌪𑍂𑌰𑍍𑌵𑍇 𑌸𑌾𑌧𑍍𑌯𑌾𑌸𑍍𑌸𑌨𑍍𑌤𑌿 𑌦𑍇𑌵𑌾𑌃 - யத்ர பூர்வே ஸாத்யாஸ்ஸந்தி தேவா:" என்கிறபடியே-முற்பாடரான ஸூரிகளுக்கு மவ்வருகாயிருந்துவைத்து, இவ்வருகுண்டான பிற்பாடர்க்கும் உதவுகைக்காகவிறே இங்கு வந்ததும். (மராமரமித்யாதி) தன்னைக்கொண்டு காரியங்கொள்ளாதார்க்கும் மழுவேந்திக்கொடுத்துக் காரியம் செய்யுமவனன்றோ. (என்மகளித்யாதி) மஹாராஜரை விஶ்வஸிப்பிக்கைக்குச் செய்ததித்தனையும் போருமாய்த்து இவளை விஶ்வாஸம் குலைக்கைக்குச் செய்ததும். தானேரக்ஷகன் என்றிருக்குமிவளை, வாய்விட்டுக் கூப்பிடும்படி பண்ணினானே. பெறுவிக்குமத்தைப் பார்த்தால், "நமக்கொன்று செய்யப்ராப்தியுண்டோ" என்றிருக்கிறாளிவள்; "பெறுவதவனையானால் இருந்தவிடத்தே யிருக்கப்போமோ" என்றிருக்கிறாள் மகள். ... ... (௨)

அரு —இரண்டாம்பாட்டு. (கலையித்யாதி) கீழ்ப்பாட்டில் வடவேங்கடத்தை வாய் வெருவினவளவன்றிக்கே, தெற்கில் திருமெய்ய மலையாளனை முன்னிட்டு வந்து ஸம்ஶ்லேஷியாமையால் பொய்யமலை யென்றெண்ணி, "வேண்டுதியோ வேண்டாயோ" என்னும்படி விரஹகார்ஶ்யம் மிகுத்து வாய்வெருவினமையைச் சொல்லித் திருத்தாயார் கூப்பிடுகிறாளென்று ஸங்கதி.

அல்குல் அகன்றிருந்ததாகில் கலையாளாதே யிருக்குமோ வென்ன வருளிச்செய்கிறார் (அடியிலித்யாதி). அடியில்- விஶ்லேஷத்துக்கு முன்பு என்றபடி. கையில் தங்கி நிறம்பெற விருக்கும் வளைகளும் கையைப்பற்றி ஆளமாட்டாதாய்த் தென்று விவக்ஷித்துத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (ஶ்லாக்யேத்யாதி). "கனம்" என்றது - கடைக்குறைத்தலாய், கநகமென்றபடி. "நான்" என்றதுக்குத் தாத்பர்யம் (இவளித்யாதி). (பண்பும்) உடையழகும். இத்தால்-"கனவளை அஹம் மமக்ருதிகள்" என்கிறபடியே த்யாஜ்யமானவை இரண்டும் ஆகாராந்தரத்தாலே (௪) "𑌦𑌾𑌸𑍋𑌽𑌹𑌮𑍍- தாஸோஹம்" என்கிறபடியே உபாதேயங்களாய், நானென்று அபிமானித்

---

(௧) ரா-ஸு-௩௪-௩௧. (௨) தி-நெ-௧௦. (௩) பு-ஸூ- (௪) ரா-ஸு.

துக்கொண்டு கையும் கைங்கர்யமுமா யிருக்கை உபாயாத்ய(ధ్య)வஸாயத்துக்கு அபேக்ஷிதமென்ற ஸ்வாபதேசம் ஸூசிதமாய்த்து. (ஆளாகக்கொள்ளும்படி) இவளை அடிமை கொள்ளும்படி. (கொள்வுதியோ) என்ற வநந்தரம், ஜீவிக்கும்படி என்று சேஷம். அவருளாவிட்டால் ஜீவியேனென்ற விடமுண்டோ வென்ன (தாவத்த்யஹமித்யாதி); ''నచాస్యమాతా న పితా న చాన్యస్స్నేహా ద్విశిష్టోస్తి మయాసమోవా। తావద్ధ్యహం దూత జిజీవిషేయం యావత్ప్రవృత్తిం శృణుయాం ప్రియస్య- நசாஸ்ய மாதாநபிதா நசாந்யஸ்ஸ்நேஹாத் விசிஷ்டோஸ்தி மயாஸமோவா । தாவத்த்யஹம்தூத ஜிஜீவிஷேயம் யாவத் ப்ரவ்ருத்திம் ஶ்ருணுயாம் ப்ரியஸ்ய''என்று - பெருமாளிடத்தில் ஸ்நேஹத்தில் வந்தால், தாயும் தகப்பனும் மற்றுமுள்ள பந்துஜநமும் என்னிலும் மிகுத்தாரும் ஒத்தாருமில்லை, ஆகையாலே, பெருமாளுக்கு நானும் வேணும் வேண்டாவென்னும் ப்ரக்ருஷ்டையான மநோவ்ருத்தி கேட்குமளவும் ஜீவித்திருக்க நினையாநின்றேன் என்கையாலே - வேண்டாதபோது ஜீவியாமை ஸித்தமிறே என்று கருத்து.

''வானவர்தம் தலையாளன், மராமரமேழெய்த வென்றிச்சிலையாளன்-மெய்யமலையாளன்'' என்றந்வயித்தருளிச்செய்கிறார்(அயர்வித்யாதி). (ஸௌலப்யத்தை) என்றது - மஹாராஜர்க்காக மராமரமெய்த ஸௌலப்யத்தை என்கை. உக்தார்த்தத்துக்கு ஸம்வாதம் (பின்னானாரித்யாதி). ''இமையோர்க்கென்றும் முன்னானாய்'' என்றத்தையும் கூட்டி ப்ரமாண பூர்வகம் பாசுரத்துக்கர்த்த மருளிச்செய்கிறார் (யத்ரேத்யாதி). ஸௌலப்யத்தைக் காட்டினமையை ப்ரதீக பூர்வகம் விவரிக்கிறார் (தன்னையித்யாதி). ''என்மகளைச் செய்தனகள்'' என்று வெறுத்திருக்கிற திருத்தாயார், கீழே விஶ்வாஸ ஹேதுவான அபதாநத்தைச் சொல்லுகை எங்ஙனே சேருமென்ன வருளிச்செய்கிறார் (மஹாராஜரை யித்யாதி). விஶ்வாஸம் குலையும்படி பண்ணினதென்னென்ன (தானேரக்ஷகனித்யாதி); இத்தால் ருஶ்ய(ఋశ్య)மூகபர்வதத்தில் தன்னுடைய இஷ்டாநிஷ்ட ப்ராப்தி பரிஹர்த்ருத்வமாகிற உபாயத்வத்தில் விஶ்வாஸம் பிறக்கைக்கு மழுவேந்திக்கொடுத்து உபாயத்வத்தை நிலைநிறுத்திக்கொண்டதெல்லாம், ஸத்யபர்வதமான மலையில்வந்து ப்ராப்யவைலக்ஷண்யத்தைக்காட்டி, ''அவனே உபாயம்'' என்றிருக்கிற பெண்பிள்ளை அத்யவஸாயத்தைப் போக்கி, ஸ்வயத்ந பரையாக்க வந்தானென்னும்படி வந்தாலும், ததநுகுணமாக ஆளாதே கூப்பிடப் பண்ணினானென்று வெறுக்கிறாளென்று தாத்பர்யம் சொல்லிற்றாய்த்து. இவள் ப்ராப்யவைலக்ஷண்ய மடியாகக் கூப்பிடுகிறாளென்றறிந்தாளாகில் ''எங்ஙனம் நான் சிந்திக்கேன்'' என்று விசாரப்பட்டு வெறுப்பானென்னென்ன வருளிச்செய்கிறார் (பெறுவிக்கு மத்தையித்யாதி). இத்தால் - இவள் கூப்பிடு உபாய கோடியிலேயாய் விழுமோ என்னு மதிசங்கையாலே விசாரப்படுகிறாளென்றதாய்த்து. பெறுவிக்குமது - உபாயம், பெறுவது - ப்ராப்யம். ... ... (௨)

மூ.—
மானையமென்னோக்கி வாணெடுங் கண்ணீர்மல்கும் வளையும் சோரும்
தேனைய நறுந்துழா யலங்கலின் திறம்பேசி யுறங்காள்காண்மின்
கானையன் கடிமனையில்தயிருண்டு நெய்பருக நந்தன்பெற்ற
ஆனையனென் மகளைச் செய்தனகளம்மனைமீரறிகிலேனே. (௩)

பதம்.	உரை.
மானைய	மானோடொத்ததாய்
மெல்	ம்ருதுவான
நோக்கி	கண்களையுடையஎன் பெண்ணானவள்
வாள்	ஒளியையுடைத்தாய்
நெடு	தீர்க்கமான
கண்	கண்களிலே
நீர்	ஜலத்தை
மல்கும்	விழவிடாநின்றாள்,
வளையும்	வலயங்களும்
சோரும்	(கைகள்நின்றும்) நழுவாநின்றன;
தேனைய	தேனைப் பரிபூர்ணமாக உடையதாய்
நறு	பரிமள ப்ரசுரமான
துழாய்	திருத்துழாயாலே கட்டப்பட்ட
அலங்கலின்	மாலையினுடைய
திறம்	ப்ரகாரங்களை
பேசி	சொல்லிக்கொண்டு
உறங்காள் காண்மின்	தூங்குகிறிலள் பிடிகோள்;
கான் ஆயன்	காட்டிலே தங்குமவனாய்
சடி	ரக்ஷையையுடைத்தான
மனையில்	இடையர்களுடைய க்ருஹங்களிலேயுள்ள
தயிர்	தயிரை
உண்டு	புஜித்து
நெய்	நெய்யை
பருக	பாகம் பண்ணும்படியாக
நந்தன்	நந்தகோபர்
பெற்ற	லபித்த
ஆனையன்	இடையனான க்ருஷ்ணன்
என்மகளை	என் பெண்பிள்ளையை வசீகரிக்கைக்கு
செய்தனகள்	செய்தவகைகளை
அம்மனைமீர்	ஓ தாய்மார்களே!
அறிகிலேன்	அறிய மாட்டுகிறிலேன். (௩)

வ்யா.—மூன்றாம்பாட்டு. (மானைய) முக்த்த ([illegible]) மாய் ம்ருதுவான நோக்கையுடையவள். (வாளித்யாதி) எதிர்த்தலையிலே கண்ணநீரை யுண்டாக்கக்கடவ கண். வாளென்று - ஒளியாகவுமாம்; ஓராளுமொருநோக்கும் நேரானதென்றுமாம். (நெடும்) போக்தாவினளவல்லாத கண். கண்ணநீரையும் தாங்கப்போகிறதில்லை; வளையையும் தாங்கப்போகிறதில்லை. நித்ரையாலே போதுபோக்கப் பார்த்தாலோவென்ன(தேனையவித்யாதி) ஒரு தேன்வெள்ளமே! ஒரு செவ்வியே! ஒரு தொடைய்பூவே! ஒரு குளிர்த்தியே! ஒரு மணமே! என்னாநின்றாள்.

(கானையனித்யாதி) தானென்னகார்யத்துக்கு வந்தான், இப்போது செய்து திரிகிறதென்னபுது என்று ஒன்று மறிகிறிலேன்.

(கானுபன்) (௧) "கானம்சேர்ந்து" என்னும்படி-காட்டிலே தங்குமவன் நாகரிகர் செயலிலே அந்வயிப்பதே!. காட்டில் மரங்களின் வாசியறியக்கடவவன், பெண்களின் வாசியறிவதே! கடி என்று-அரண் *துன்னுபடல்களை யிட்டடைத்துச் சேமித்துவைப்பர்களிறே. (கபிரித்யாதி). (௨) "𑌮𑌹𑌾𑌤𑌪𑌸𑌾 - மஹாதபஸா" என்று சக்ரவர்த்தி "நாடாளவொருபிள்ளை பெறவேணும்" என்று ஒருநோன்பு நோற்று பெற்றாப்போலே, "த(ர)வ்யங்கள் பாழ்போகவொண்ணாது, இவற்றை புஜிப்பானொரு பிள்ளைவேணும்" என்று இதுக்கன்றோ இவனைப் பெற்றது. (ஆனுபன்) பசுக்களை மேய்க்குமவனோதான். (என்மகளித்யாதி) (௩) "𑌯𑌤𑍋 𑌵𑌾𑌚𑍋 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇 𑌅𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌮𑌨𑌸𑌾 𑌸𑌹-யதோவாசோநிவர்த்தந்தே அப்ராப்யமநஸாஸஹ" என்கிற பகவதுத்கர்ஷத்தைச் சிறிதறியலாம், ப்ரணயதாரையில் அவன் செய்துநிற்கிறவிவை என்னாலொன்றுமறியப்போகிறனவில்லை. (அறிகிலேன்) கீழ்ச்சொன்னவை ஒரு திங்மாத்ரமித்தனை, என்னாலறியப்போகாது ... ... (௩)

அரு.—மூன்றாம்பாட்டு. (மானுயவித்யாதி) திருமலையிலும் மெய்யமலையிலும் வாய்வெருவி மகளீடுபட்டபடிக்கு "நான்-என்செய்கேன்" என்று சிந்திக்கிற திருத்தாயாரைத்தேற்றுகைக்காக, சில அசலகத்தார்வந்து, "பதினாறுமாயிரவர் முதலான பெண்களை யாண்டவனன்றோ, வாசியறிந்து தானே வருவன்" என்று உணர்த்தி உறங்கப்பண்ணிக்கொண்டிருக்கலாகாதோ" என்று முந்துறத்தோற்றினவாறே, அவர்களைக்குறித்து *காடுவாழ்சாதியை விஸ்வஸித்துத் தேற்றக்கூடுமோ, அவன் செய்தனகள் எனக்குத் தெரிந்ததில்லை என்கிறாளென்று ஸங்கதி.

"மானுய" என்றது - மான் நோக்குப் போலேயாய் என்று விவக்ஷித்து, பலித்தஸௌந்தர்யத்தை யருளிச்செய்கிறார் (முக்த்தமாய்) என்று. கண்ணையிப்போது விசேஷித்ததுக்குத் தாத்பர்யம் (எதிரித்யாதி). "வாள்"-ஆயுதமாய், அர்த்தாந்தரம் (ஓராளுமித்யாதி). ஒருவெட்டுக்கு ஓராள் விழுமாபோலே ஒருபார்வைக்கு ஒருவன் வசப்படுமென்கை. தேனேயென்னலாம்படி தத்ப்ரசுரமாய், என்றும் பரிமளத்தை யுடைத்தாய், துழாயலங்கலின் - திருத்துழாய்மாலையின், திறம் - ப்ரகாரங்களை, பேசி என்று சப்தார்த்தமாய், உக்தாநுக்தப்ரகாரங்களை எல்லாம் பேசி ஈடுபடுகிறாளென்று தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஒருவித்யாதி).

இவளிப்படி துழாயின் திறங்களிலே ஈடுபட்டு உறங்காமைக்கு அவன் செய்தவை என்னென்றும், வாராமைக்கு ஹேதுவென்னென்றும் வரும்

---

(௧) தி-பா-௨௮. (௨) ரா-ஆர-௯௯-௧௩. (௩) தை-ஆந-௯.

சங்கையிலே, "கானாயன்" இத்யாதி என்று விவக்ஷித்து, தாத்பர்யமருளிச்செய்கிறார் (தானித்யாதி). (என்னகாரியத்துக்கு) என்றது-காட்டில் வஸிக்கைக்கும், மரங்களின் வாசியறிகைக்கும், நந்தன்மனையில் நெய்யும் பாலுமுண்கைக்கும், பசுமேய்க்கைக்கும் என்றபடி. (செய்துதிரிகிறது) என்றது - ப்ரணயதாரையில் தாழ்ந்து பரிமாறின செயல்களைச்செய்து திரிகிற தென்றபடி. இவரிப்படி படுகைக்குஹேது - ப்ரணயதாரையில் செயல்களும், வருவனென்று நிஸ்சயியாமைக்குஹேது - காட்டில் வஸிக்கை முதலான வையுமாகையாலே, என்பெண்ணைத் தேற்றப்போகிறதில்லை என்று கருத்து. மேலே "ஆனாயன்" என்று சொல்லாநிற்கவும், இங்கே "ஆயன்" என்றதுக்குத்தாத்பர்யமருளிச்செய்கிறார்(காநமித்யாதி). "கான்" என்று விசேஷித்ததுக்கு உட்கருத்தருளிச்செய்கிறார் (காட்டிலேயித்யாதி). (அவனோதான்) என்ற வநந்தரம், இங்கு வரப்புகுகிறான் என்றுசேஷம். "கண்ணீர்மல்கும்" என்று-ப்ரணயதாரையிலவன் செய்தமை கிடையாமையால் வந்தவிகாரங்களைச் சொல்லியிருக்க, நீ "அறிகிலேன்" என்பானென்னென்ன வருளிச்செய்கிறார் (கீழித்யாதி). † (திங்மாத்ரம்-) ஏகதேசம்.

மூ.—

தாய்வாயிற்சொற்கேளாள் தன்னாயத்தோடணையாள தடமென்கொங்கை
யேயாரச்சாந்தணியா ளெம்பெருமான் திருவரங்க மெங்கேயென்னும்
பேய்மாயமுலையுண்டிவ்வுலகுண்ட பெருவயிற்றன் பேசில்நங்காய்
மாமாயனென்மகளைச் செய்தனகள் மங்கைமீர் மதிக்கிலேனே. (௪)

பதம்.	உரை.	பதம்.	உரை.
தாய்	தாயான என்னுடைய	அணியாள்	(முன்புபோலே) அலங்கரிக்கிறிலள்,
வாயில்	வாயினால் மொழிந்த		
சொல்	சொல்லையும்	எம்பெருமான்	எனக்கு ஸ்வாமியானவன் எழுந்தருளியிருக்கிற
கேளாள்	கேட்கிறிலள்,		
தன்	தன்னுடைய		
ஆயத்தோடு	ஸகிஜநங்களோடும்	திருவரங்கம்	திருவரங்கம் என்னும் திவ்யதேசமானது
அணையாள்	சேரமாட்டாள்,		
தடம்	பரந்தும் [மான		
மெல்	ம்ருது ஸ்வபாவமு	எங்கேஎன்னும்	எங்கேயென்று கேளாநின்றாள்;
கொங்கையே	ஸ்தநங்களையே		
ஆர	ஸம்பூர்ணமாக	மங்கைமீர்	யுவதிகளான
சாந்து	சந்தநத்தினாலே	நங்காய்	பெண்களே!

---

† "(திங்மாத்ரம்) திக்கு என்று - ஏகதேசமாய், அல்பமென்றபடி" என்று அரும்பகாந்தரம்.

பேய்	பூதனையானவள்
மாய	முடியும்படியாக
முலை	அவள் முலையை
உண்டு	புஜித்து,
இவ்வுலகு	இந்தபூமியை
உண்ட	(ப்ரளய காலத்தில்) விழுங்கின
பெருவயிற்றன்	பெரிய திருவுதரத்தை யுடையனாய்
மா	அபரிச்சிந்நமான
மாயன்	ஆஸ்சர்யசக்தி யுடையனான அவன்
என்மகளை	என்னுடைய பெண்பிள்ளை விஷயமாக
செய்தனகள்	செய்தவற்றை
பேசில்	சொல்லப்புகில்
மதிக்கிலேன்	பரிச்சேதித்துச் சொல்ல மாட்டுகிறிலேன். (௪)

வ்யா.—நாலாம்பாட்டு. (தாய்வாயிலித்யாதி) ஏதேனும் தசையிலும், தாய்சொல்லிற்றுச் செய்யவேணுமிறே; (௧) "𑌜𑍀𑌵𑌤𑍋 𑌵𑌾𑌕𑍍𑌯𑌕𑌰𑌣𑌾𑌤𑍍 - ஜீவதோர் வாக்யகரணாத்". தனக்கோடுகிற ப்ரேமத்துக்கு அபிமதமாக நான் வார்த்தைசொல்லிலும், தாய்வார்த்தையன்றோ! என்றிராநின்றாள். (கேளாள்) அநுஷ்டியாதொழிய வமையாதோ? ஹிதம்சொல்லும் த்யாஜ்யகோடியை விடுகிறாள்; ப்ரியம்சொல்லும் உபாதேயரை உபேக்ஷிக்கவேணுமோ? தோழிமாரும் தாய்மாரோபாதியாய்விட்டது. (௨) "𑌮𑌾𑌤𑌰𑌂 - மாதரம்" என்றவோபாதி * "𑌸𑌖𑍀𑌂 - ஸகீந்" இறே. இங்குவந்தால், அன்னைபக்கலணைவுண்டு, வார்த்தை கேளாதொழிகிற வித்தனை; அவர்கள்பக்கல் அணைகையேபிடித்துச் செய்கிறிலள். அவர்களையிட்டு வளைத்துக்கொள்ளலா மென்னுமிடமும் போய்த்து. (தடமித்யாதி) தாய்மாரையும் தோழிமாரையும் விட்டால், அவனை உபேக்ஷிக்கவேணுமோ? அவன் வரக்கடவனே, ததர்த்தமாகப் பண்ணும் வ்யாபாரங்களைத் தவிர்ந்தாளென்றபடி. போக்யதையாலும் பெருத்து விரஹஸஹமல்லாதபடி ம்ருதுவுமாயிருக்கையாலே அத்தையே பேணுமாய்த்து அல்லாத காலங்களில். (கொங்கையே ஆர) அவன்வந்திருந்தாலும் அவனை த்ருணீகரித்து இத்தையே பேணுமித்தனைகாணும். (எம்பெருமானித்யாதி) தாயையும் அல்லாதாரையுமொக்க உபேக்ஷிக்கும்படி நிருபாதிகபந்துவான தன்பக்கலிலே பாவ(𑌭𑌾𑌵)பந்தத்தைப் பிறப்பிக்கிறவன் வர்த்திக்கிற தேசமெங்கே? என்னாநின்றாள். ஸ்வாமித்வம் இவைபோல் ஔபாதிகமல்லவிறே. (எம்பெருமான்) என்னைத் தோற்பித்தவன் என்றேகாணும் அவனையறிவது; இதிறே * நபஸ்ஸப்தார்த்தம்.

---

(௧)

(௨) விஹகேந்த்ரஸம்ஹிதை-௨ உ-படலம்.

(பேயித்யாதி) பேயினுடைய, தாய்முலையாக வஞ்சித்துக்கொடு வந்த முலையென்னுதல்; பேய்மாயும்படியாக வென்னுதல். (இவ்வுலகித்யாதி) அநுகூலரக்ஷணத்தோடு விரோதிநிரஸநத்தோடு வாசியில்லையாய்த்து அவனுக்கு ஊணாக. (நங்காய்) (௧) "𑌮𑍈𑌤𑍍𑌰𑍇𑌯-மைத்ரேய" என்னுமாபோலே. (மாமாயன்) பிரிவில்முடியவொண்ணாத ஆஶ்சர்யங்களையுடையவன். ஒருபால்யத்திலே பேய் முலையையுண்பதாம். செய்வதறியாதே என்மகளைச்செய்தன. (மங்கைமீர்) நீங்களுமெல்லாம் ஒருபருவம் ஸ்த்ரீத்வமுடையிகோளாயிருக்கிறிகோளிறே. (மதிக்கிலேனே) என்றால் "இவ்வளவ்" என்று பரிச்சேதிக்கப்போகிறதில்லை. ... ... (௪)

அநு.—நாலாம்பாட்டு. (தாயித்யாதி) இங்ஙனே நீ "அறிகிலேன்" என்று சொல்லக்கடவையோ, ஹிதபரையான நீயும் ப்ரியபரரான தோழிமாரு மிருக்கப் பெண்ணை வசப்படுத்த வொண்ணாதோ வென்ன; அங்ஙன் சொல்லவொண்ணாதபடி த்யாஜ்யகோடியிலே யாக்கி, *வெண்ணெயுண்டவாயன் பள்ளிகொண்டருளும் போகமண்டபத்தைப் பிதற்றாநின்றாளென்கிறாளென்று ஸங்கதி.

என்வாய் என்னாதே, "தாய்" என்றதுக்குக் கருத்தருளிச் செய்கிறார் (ஏதேனுமித்யாதி). தாய்வார்த்தை கேட்கவேணுமென்னு மிதுக்கு ப்ரமாணம் (ஜீவதோரித்யாதி). 𑌜𑍀𑌵𑌨𑍍𑌤𑍀𑌚 - 𑌜𑍀𑌵𑌂𑌶𑍍𑌚 𑌜𑍀𑌵𑌨𑍍𑌤𑍌, 𑌤𑌯𑍋𑌰𑍍𑌮𑌾𑌤𑌾𑌪𑌿𑌤𑍍𑌰𑍋𑌃 ஜீவந்தீச ஜீவம்ஶ்ச ஜீவந்தௌ, தயோர்மாதா பித்ரோ: என்றிறே இதுக்கர்த்தம். தாய்ச்சொல் என்ன வமையாதோ, "வாயில்" என்பானென்னென்ன; அஹ்ருதயமாக வாயிலே ப்ரியமான்வார்த்தை வந்தாலும் அதுவும் என்வாய்என்று நினைத்துக்கேளாளென்கிறாள் என்றருளிச்செய்கிறார் (தனக்கித்யாதி). செய்யாள்என்னாதே, "கேளாள்" என்றதுக்குக் கருத்தருளிச்செய்கிறார் (அநுஷ்ட்டியாதித்யாதி). தன் - தனக்கு அஸாதாரணரான, ஆயத்தோடு, ஸகீஜநத்தோடு - சேராளென்று சப்தார்த்தம் விவக்ஷித்து, தாத்பர்யங்களை அருளிச்செய்கிறார் (ஹிதமித்யாதி). உட்கருத்தருளிச்செய்கிறார் (அவர்களையித்யாதி). அவனை உபேக்ஷிக்கை யாவதென்னென்ன வருளிச்செய்கிறார் (அவனித்யாதி). ததர்த்தமாகப் பண்ணும் வ்யாபாரமாவது- (௨) "கொங்கைமேல் குங்குமத்தின் குழம்பழியப் புகுந்தொருநாள் தங்குமேல்" என்கிறபடியே விரஹதசையிலும் வருவன் என்றெண்ணித் தன்னை அலங்கரித்திருக்கை என்கை. "ஆரச்சாந்தணியாள்" என்றால் - சிறிதணியாநின்றாளென்று தோற்றுமே, அது கூடுமோ வென்ன அருளிச்செய்கிறார் (போக்யதையாலுமித்யாதி). "தடம்" என்றதினர்த்

---

(௧) வி-பு-௧-௧-௧௨. (௨) நா-தி-௮-௭.

தம் (போக்யதையாலும் பெருத்து) என்றது. இத்தால் - முன்பெல்லாமாரச் சாந்தணியுமவள் இப்போது சிறிது மணியாளென்றதாய்த்து. ஏவகாரார்த்தம் (அவனித்யாதி). தாய்முதலாக எல்லாரையும் விடுவானென்? நீ அலங்கரியாதிருப்பானென்? என்று கேட்டார்க்குச் சொல்லும் வார்த்தையைக் கேளிகோளென்று சொல்லுகிறாளென்னுமிடந்தோற்ற அருளிச்செய்கிறார் (தாயையு மித்யாதி); இத்தால் எம்பெருமானாகையாலே தாய் முதலானாரை விட்டேனென்றும், திருவரங்கத்தில் புகுராமையாலே அலங்கரிக்கவில்லை என்றும் சொன்னாளென்றதாய்த்து.

இப்படி தசைமுறுகினால் இவள் தரித்திருக்கும்படி எங்ஙனே என்னுமபேக்ஷையிலே, "பேய்மாய" இத்யாதி என்று விவக்ஷித்தருளிச் செய்கிறார் (பேயினுடைய வித்யாதி). மாயமுலை - வஞ்சகமான முலையென்று சப்தார்த்தம். (மைத்ரேய என்னுமாபோலே) என்றது - மேலே "மங்கைமீர்" என்று பருவத்தைச் சொல்லி ஸம்போதித்ததிலும், ஆத்மகுணமான பூர்த்திக்கு வாசகமான விதுவே விசேஷ்யபதமென்றபடி. "மாமாயன்" என்றதுக் கர்த்தாந்தரம் (ஒருவித்யாதி). மேலுக்குத் தாத்பர்யம் (செய்வதறியாதே) என்றது; செய்யலாம் செய்யப்போகாது என்றறியாதே என்றபடி. "நங்காய்" என்றது- ஜாத்யேகவசநமாய், [மங்கைமீரான - நங்கைகாள், பேய்முலையித்யாதி, பெருவயிற்றன் - மாமாயன், என்மகளைச் செய்தன - பேசில் - மதிக்கிலேன்] என்றந்வயம். ... ... (௪)

மூ —

பூண்முலைமேல்சாந்தணியாள் பொருகயற்கண்மையெழுதாள்பூவைபேணா
ஏணறியாளெத்தனையுமெம்பெருமான்திருவரங்கமெங்கேயென்னும் [ள்
நாண்மலராள் நாயகனாய் நாமறிய வாய்ப்பாடி வளர்ந்தநம்பி
ஆண்மகனாயென்மகளைச் செய்தனகளம்மனைமீரறிகிலேனே. (௫)

பதம்.	உரை.	பதம்.	உரை.
பூண்	அலங்கரிக்கப்பட்ட	பேணாள்	ஆதரிக்கிறிலள்;
முலைமேல்	ஸ்தநங்கள்மேல்	எத்தனையும்	ஏதேனுமொரு வஸ்துவையும்
சாந்து	சந்தநத்தை	ஏண் அறியாள்	எண்ண மாட்டுகிறில [ள்;
அணியாள்	பூசுகிறிலள்;	எம்பெருமான்	உபகாரகனானஸர்வேஶ்வரனுடைய
பொரு	ஒன்றோடொன்று ஸத்ருசமான	திருவரங்கம்	திருவரங்கமென்னும் திவ்யதேசமானது
கயல்	மத்ஸ்யங்கள்போன்ற	எங்கேஎன்னும்	எங்கே யிருக்கிறது என்னாநின்றாள்;
கண்	கண்களிலே	நாள்	செவ்வியழியாத
மை	அஞ்சநத்தை		
எழுதாள்	இடுகிறிலள்;		
பூவை	லீலாசுகத்தை		

மலராள்	கமலப்பூவில் வாஸம் பண்ணுகின்றபிராட்டிக்கு
நாயகனாய்	வல்லபனாய்
நாம்அறிய	நாமெல்லாரும் அறியும்படியாக
ஆய்ப்பாடி	திருவாய்ப்பாடியிலே
வளர்ந்த	வளர்ந்தருளின
நம்பி	பூர்ணனுமானவன்
ஆண்மகனாய்	புருஷஶ்ரேஷ்டனாய்க்கொண்டு

என்மகளைச் செய்தனகள் அம்மனைமீரறிகிலேன். (௫)

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (பூண்முலை) முத்தாரம் பூண்டிருக்கிறவென்னுதல்; தானே ஆபரணமான முலையென்னுதல். (பொரு) வேறொன்றால் ஒருதன்னேற்றம் செய்யவொண்ணாத கண்களில், மங்களார்த்தமாகவும் அஞ்ஜநமெழுதுகிறிலள். (பூவை) "தன்னது" என்னத்தொடங்குவதுக்கு முன்னே பேணிப்போருமவற்றையும் பேணுகிறிலள். (ஏணறியாள்) அநுஸந்தேயபதார்த்தமின்னதென்று, லோகயாத்ரையிலொன்று மநுஸந்திக்கிறிலள். (எம்பெருமானித்யாதி) அதில் மாஸ்ஸஹகாரமும் வேண்டுகிறதில்லை.

(நாண்மலராளித்யாதி) ஶ்ரிய:பதி என்று ஒருத்தியையிட்டன்றோ தம்மை வ்யபதேசிப்பது. (நாமறிய) இதொருபழங்கிணறு கண்வாரவேணுமோ; இவ்விசைவிருந்தபடி எல்லாருமறியோமோ? (நம்பி) பெண்களுக்குக்கையாளாய், [illegible]த்தாலே தன்னைப்பூர்ணனாகநினைத்திருக்குமவனன்றோ? (ஆண்மகனாய்) இவ்வளவிலே வந்தவாறே, (க) "[illegible] - பதிம்விஶ்வஸ்ய" என்று ப்ரபுத்வம் கொண்டாடாநின்றான். பெண்ணடியான் முதன்மை கொண்டாடுவதே! (என்மகளித்யாதி) † இவளொருத்தியளவும் குறையுங்காட்டில் தம்முடைய முதன்மை ஒறுவாய்ப்போமோ? ... ... (௫)

அரு. — அஞ்சாம்பாட்டு. (பூ[illegible]த்யாதி) தாய்மார் தோழிமாரெல்லாரும் த்யாஜ்யகோடியிலேயாம்படி தசை முறுகிற்றென்னா நின்றாயாகிலும், சிறுப்ருவமே தொடங்கி தானே ஆதரித்து வளர்த்த பூவைமுதலான லீலோபகரணங்களைக் காட்டி ஆற்றவொண்ணாதோவென்ன; அதுவும் செய்யவொண்ணாதபடி யானாளென்கிறாளென்று ஸங்கதி.

"பொரு" என்று-ஒப்பாய், ஒன்றுக்கொன்று ஒப்பாமதொழிய வேறொப்பில்லாமலிருக்கிற கயல்கள்போலே யிருக்கிற கண்களென்கையா

(க) தை-நா-கக. † இவளொருத்தியளவும் குறையுங்காட்டில்- இவளொருத்திக்கும் தாழுங்காட்டில்.

லே - நிரதிசய ஸௌந்தர்யம் ஸூசிதமாகையாலே - மையால் இதுக்கொரு அதிசயம் ஸம்பாதிக்க வேண்டாமை பலிக்கையாலே, அத்தைத் திருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிறார் (வேறித்யாதி). *பூவையைச் சொன்னது லீலோபகரணங்களுக்கெல்லா முபலக்ஷணமாக்கி, எம்பெருமானோடே "உன்னது, என்னது" என்று ப்ரணயகலஹம் பிறக்கைக்கு முன்புதானே பால்யந்தொடங்கி விரும்பப்படு மவை என்றீ விவக்ஷித் தருளிச்செய்கிறார் (தன்னதித்யாதி). "எத்தனையும் - எணறியாள்" என்றந்வயித்தர்த்தமருளிச்செய்கிறார் (அநுஸந்தேயேத்யாதி). எத்தனையும் - ஏகதேசமும். இத்தால் அநுஸந்தேயமான எம்பெருமானையும் மற்றும் லோகயாத்ரையிலொன்றும் எண்ணமாட்டாளென்றதாய்த்து. எண்ணமாட்டாளாகில், "எம்பெருமான் திருவரங்கமெங்கே?" என்னக்கூடுமோ வென்ன வருளிச்செய்கிறார் (அதி லித்யாதி).

தம்பெண்ணை இப்படி படுத்தின கொடுமையாலே திருத்தாயார் இப்போது ஸ்ரிய:பதித்வத்தைச் சொல்லுகைக்கு வெறுப்பாகத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸ்ரிய:பதி யித்யாதி); இத்தால் - இப்படி என்மகளைப் படுத்தில் அவள் முகம்கொடுப்பளோ, அவளாலன்றோ தன்ஸ்வரூபம், அதறியாதே இப்படி படுத்தலாமோ வென்று கருத்து. (பழங்கிணறு கண்வார) என்றது - (க) "𑌹𑍍𑌰𑍀𑌶𑍍𑌚 𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌶𑍍𑌚 𑌪𑌤𑍍𑌨𑍍𑌯𑍌 - ஹ்ரீஸ்சதே லக்ஷ்மீஸ்ச பத்ந்யௌ" இத்யாதியான அநாதிஸ்ருதியில் விபரீதார்த்த நிரஸந பூர்வகமாக, ஊற்றுக்கண் கிளம்ப தூர்வாரவேணுமோ வென்றபடி. (இவ்விசைவிருந்தபடி) - இப்படி பெண்கள் இன்றாக இசைந்த ப்ரகாரம். (இவ்வளவிலே) - இப்போது இவ்வளவிலே என்றபடி. (பெண்ணடியான்) - இப்பெண்பிள்ளை முதலான். "ஆண்மகனாய்" என்ற பதத்தோடே கூட்டித் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (இவளித்யாதி). (ஒறுவாய்ப்போமோ) மூளியாமோ வென்றபடி. ... ... (௬)

மூ.—தாதாடுவனமாலைதாரானோவென்றென்றேதளர்ந்தாள் காண்மின்
யாதானுமொன்றுரைக்கிலெம்பெருமான்திருவரங்கமென்னும்பூமேல்
மாதாளன்குடமாடிமதுசூதன்மன்னர்க்காய்முன்னம்சென்ற
தூதாளனென்மகளைச் செய்தனகளெங்ஙனம் நான்சொல்லுகேனே.

பதம்.	உரை.	பதம்.	உரை.
தாது	தாதுகளானவை	வனம்	காட்டிலேயுண்டான
ஆடு	நடையாடாநின்ற (தாதுகள் நிறைந்த)	மாலை	பூமாலையை
		தாரான்	தாராதொழிந்தான்,

(க) பு-ஸூ-௨.

ஓ	கஷ்டம்!
என்று என்றே	என்று பலகாலும் சொல்லி
தளர்ந்தாள்	சிதிலையாகாநின்றாள்
காண்மின்	காணுங்கோள்,
யாதானும்	ஏதாவது
ஒன்று	ஒருவித வசநத்தை
உரைக்கில்	சொல்லப்புகில்
எம்பெருமான் திருவரங்கம்	ஸர்வேஸ்வரன்எழுந்தருளியிருக்கிற திருவரங்கம்
என்னும்	என்றுஅதுக்குப்பதில் உரையாநின்றாள்;
பூமேல்	தாமரைப்பூவின்மேல் நித்யவாஸம் பண்ணுகின்ற
மாது	பெண்ணான பெரியபிராட்டியார்க்கு
ஆளன்	வல்லபனாய்,
குடம்ஆடி	குடக்கூத்தாடினவனாய்,
மதுசூதன்	மதுவென்னும் அஸுரனை ஸம்ஹரித்தவனாய்,
மன்னர்க்காய்	பஞ்ச பாண்டவர்களுக்காக
முன்னம்	முற்காலத்தில்
தூதுசென்ற	தூதுபோன
ஆளன்	ஸ்வாமியானவன்

என்மகளைச்செய்தனகள் எங்ஙனம் நான் சொல்லுகேனே. (௬)

வ்யா.—ஆறாம்பாட்டு. (தாதாடு) தாதுமாறுத. ஆடுகையாவது-நடையாடுகை. காட்டிலேதானும் (௧) * தன்னேராயிரம்பிள்ளைகளுங் கூடப்பறித்துச் செவ்வியழியாதமாலையை. அது பாரார்த்தமென்றிருந்தோம்; அத்தை "தாரானோ" என்று வெண்கலத்வநிபோலே ஒரு சொல்லுக்கொருசொல்லு ஓயாநின்றாள். இனி இத்த்வநிதானும் கேளாதொழியப் புகுகிறேனோ. (யாதானுமித்யாதி) "இத்தனை அதிமாத்ர ப்ராவண்யமாகாதுகாண், இது குடிப்பிறப்புக்குப் போராதுகாண், இது தர்மி(𑌧𑌰𑍍𑌮𑌿)லோபத்தை பலி(𑌫𑌲)ப்பிக்குங்காண், அவன் ஸ்த்ரைணன் காண்" என்று ஒருஹிதவசநம்பண்ணினால், அதுக்கு உத்தரமாக, என்னை அநந்யார்ஹையாக்கினவன்வர்த்திக்கிறதேசமென்னாநின்றாள்.

(பூமேல்) ஒருத்தியை அநபாயிநியாம்படி பண்ணுவிக்கிறவனன்றோ. பிரிவென்றறியாதபடி பண்ணுவிக்கிறவனன்றோ. (குடமாடி) பெண்களுக்காக மன்றிலே தன்னை ஸர்வஸ்வதாநம் பண்ணினவனன்றோ. (௨) [மங்கையர்தம் கண்களிப்பக் கொன்னவிலும் கூத்தனாய்] அவன் கையில்படுமது நன்றாய்த்து. அக்கூத்திற்காட்டிலும் (மதுசூதன்) ஆஶ்ரிதவிரோதிநிரஸநமே என்று மொக்கயாத்ரையாய்ப் போருமவன். (மன்னர்க்கித்யாதி) உகந்தார்க்குத் தன்னை அழிவுக்கிடுமவன். (என்மகளை) இப்போது இவளை அழிவுக்கிட்டுத் தன்னைக்கொண்டு எழுநிற்கிறபடியை என்னபாசுரமிட்டுச் சொல்லுவேன். (௬)

---

(௧) பெரி-திரு-௩-௧-௧. (௨) பெரியதிருமடல்-௪௨,

அரு.—ஆறாம்பாட்டு. (தாதித்யாதி) லீலோபகரணங்களை முதலா உபேக்ஷிக்கும்படி இத்தனை கைகழியவிடலாமோ, நீங்கள் தாய்மாராயிருந்துவைத்து நாநாமுகமாக ஹிதம்சொல்லி அடக்கவேண்டாவோ வென்ன; நாங்களெத்தைச்சொன்னாலும் காதில்புகுராதே "திருவரங்கம்" என்னுமித்தனை, வேறுரைக்கவில்லை, என்ன சொல்லுவே னென்கிறாளென்று ஸங்கதி.

வநத்திலுண்டாக்கின மாலைஎன்று சப்தார்த்தம் திருவுள்ளம்பற்றி ருளிச்செய்கிறார் (காட்டிலே யித்யாதி). "தாரான் ஓ!" என்று பதத்தைப் பிரித்து, "ஓ" என்று - விஷாத ஸூசகத்வநியாய், அதுக்குத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (அதித்யாதி). இங்ஙனன்றாகில் மிகவும் தளர்த்தி சொல்லக்கூடாதிறே என்று கருத்து. முன்னிலையாக இவளைப் பார்த்திருப்பார்க்கு "காண்மின்" என்று காட்டவேணுமோ வென்ன; தன்னுடைய அவஸாதத்தாலே சொல்லுகிறாளென்று விவக்ஷித்துத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (இனி யித்யாதி).

கீழ்வாக்ய விவரணம் (பிரிவித்யாதி). கொல்லுகையை நவிலுமதான கூத்தென்று எடுத்த பாசுரத்தில் பதத்துக்குத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (அவனித்யாதி). ... ... (௬)

மூ.—

வாராளுமிளங்கொங்கை வண்ணம்வேறாயின வாறெண்ணாளெண்ணில்
பேராளன்பேரல்லால்பேசாளிப்பெண்பெற்றேனென்செய்கேன்நான்
தாராளன் தண்குடந்தை நகராளனைவர்க் காயமரிலுய்த்த
தேராளனென்மகளைச் செய்தனகளெங்ஙனம் நான்செப்புகேனே.

பதம்.	உரை.
வார்	கச்சாலே
ஆளும்	ஆள(கட்ட)த்தகுந்ததாய்
இளம்	இளம்பருவத்தையுடைய
கொங்கை	ஸ்தநத்தினுடைய
வண்ணம்	வர்ணமானது
வேறாயின ஆறு	வேறுபட்ட படியை
எண்ணாள்	நினைக்கிறிலள்,
எண்ணில்	நினைக்கப்புகில்
பேர்	பெரியோனான
ஆளன்	ஸ்வாமியினுடைய

பதம்.	உரை.
பேரல்லால்	திருநாமமல்லது
பேசாள்	உரைக்கமாட்டாள்,
இப்பெண்பெற்றேன்	இவ்விதமான பெண்ணைப்பெற்ற
நான்	நான்
என்செய்கேன்	என்னசெய்வேன்;
தார்ஆளன்	திருமாலையைத் தரித்தவனாய்
தண்	குளிர்ந்த
குடந்தைநகர் ஆளன்	திருக்குடந்தையிலே சேர்ந்தருளினவனாய்

ஐவர்க்காய்	பஞ்ச பாண்டவர்களுக்காக
அமரில்	யுத்தத்தில்
தேர்	ரதத்தை
உய்த்த	நடத்தின
ஆளன்	ஸ்வாமியானவன்

என்மகளைச்செய்தனகள் எங்ஙனம் நான் செப்புகேனே.
செப்புகை - சொல்லுகை. (எ)

வ்யா.—ஏழாம்பாட்டு. (வாராளும்) போகயோக்யமாய், "இலக்கைக்காட்டு, காட்டு" என்று கிளர்ந்துவருகிற சொற்கேளாப்பருவமான முலையானது. வாராலே தாங்கவேண்டும்படியாய், "காட்டு, காட்டு" என்று வளருகிறமுலையானது, அபேக்ஷிதம் பெருமையாமே. தன்னிறம்மாறி விவர்ணமாகிறபடி யொன்று மெண்ணுகிறிலள். ஸ்வவிஷயத்தில் ஜ்ஞாநமொன்றுமில்லை. (க) [విస్మారతదాత్మనమ్ - விஸ்மார ததாத்மாநம்] தன்தசையை எண்ணுதவள் வேறொன்றை எண்ணுகையில்லையிறே; (எண்ணில்) எண்ணுதிருக்கும் போதாய்த்துப் பெரிது; அர்த்தாத் ஒன்றை எண்ணில், ஸர்வாதிகனான ஸர்வேஶ்வரன் திருநாமமல்லது சொல்லாள். (உ) "అవాపపరమాం కాష్ఠాం మనసశ్చాపి సంయమే -அவாப பரமாம் காஷ்ட்டாம் மநஸஶ்சாபி ஸம்யமே" இறே; ஆகையாலே எண்ணுவது மில்லை; மநஃபூர்வகமாகச் சொல்லுவதுமில்லை. (இப்பெண்ணித்யாதி) புறம்பொன்றை நினையாமையும், பகவத்விஷயத்தில் நினைவும் சொலவும் மாறுதிருக்கிறபடியையு மநுஸந்தித்து, பிறர்க்கு வெறுக்கிறாளாய், தன்களிப்புத்தோற்ற வார்த்தை சொல்லுகிறாள். ஸ்வவிஷயத்திலும் இதரவிஷயத்திலும் விரக்தியும் பகவத்விஷயத்தில் ப்ரீதியும்மாறாதே செல்லும்படியாயிருப்பாளொரு பெண்பிள்ளையை, என்னைப்போலே புறம்பு பெற்றாருண்டோ வென்கிறாள்.

(தாராளன்) ரக்ஷணத்துக்குத் தனிமாலையிட்டிருக்கிறவன் கிடீர் ஸ்த்ரீவதம் பண்ணுகிறான்!. (தண்குடந்தை) குறைவற்றான நித்யஸூரிகளுக்காக வன்றிக்கே, குறைவாளருடைய ரக்ஷணத்துக்காகக் கிட்டப் புடைவீடுசெய்துகொடு கிடக்கிறவன்கிடீர்!. (ஐவர்க்கித்யாதி) அத்தை அநுஷ்ட்டாந பர்யந்தமாக்கி, உகந்தார்க்குத் தன்மார்விலே அம்பேற்குமவன்கிடீர்!. (ங) "தேசமறியவோர் சாரதியாய்" என்று எல்லாரும் காணத்தன்னை ஸாரதியாக்கி ஆஶ்ரிதர்க்காகத் தன்னை அழியமாறுமவனிறே. (என்மகளையித்யாதி) அப்போது பீஷ்மாதிகளம்

(க)

(உ)

(ங) தி-வாய்-எ-டு-கூ.

புக்குத்தன்னை இலக்காக்கினாப்போலே, இப்போது தனக்காக இவளைக் காமசரத்துக்கு இலக்காக்குகிறான்; இப்போதிவளை அழிவுக்கிட்டபடி என்னாலே பேசப்போமோ வென்கிறாள். ... ... (௬)

அரு.—ஏழாம்பாட்டு. (வாராளுமித்யாதி) ஹிதவசநம் கேளாதபடி யிருப்பாருண்டோ, மெய்மறந்தாளோ, நாங்களும் பெண்களைப் பெறவில்லையோ வென்ன; இப்படிப்பட்ட பெண் பெற்றேன், என்செய்கேன் என்கிறாளென்று ஸங்கதி.

கீழ்விசேஷணங்களுக்குத் தாத்பர்ய மருளிச்செய்தாராய், வாக்யார்த்த மருளிச்செய்கிறார் (வாராலே யித்யாதி). உட்கருத் தருளிச்செய்கிறார் (ஸ்வவிஷயத்தி லித்யாதி). மேலுக்குத் தாத்பர்யம் சொல்லுகைக்காக கீழ்பலித்த வர்த்தத்தை யருளிச்செய்கிறார் (தன்னித்யாதி). யதி(ஹ)சப்தத்தாலே பலித்தவர்த்தம் (எண்ணாதித்யாதி). (ஒன்றை யெண்ணில்) என்றவநந்தரம், சொல்லி என்று கூட்டுவது. பேர் - பெரியோனான, ஆளன் - ஆளுமவனென்று சப்தார்த்தமாய், அத்தை யருளிச்செய்கிறார் (ஸர்வாதிகனான) என்று. (அல்லது) என்றவநந்தரம், எண்ணாள் என்றும் கூட்டுவது. இப்படி மூலத்திலும் அத்யாஹரித்துக்கொள்வது. “[illegible]சாபி” என்கையாலே-வாங்நியமமும் சொல்லுமென்று விவக்ஷித் தருளிச்செய்கிறார் (ஆகையாலே யித்யாதி). “தாயைப் பார்த்து மகளைக்கொள்” என்கிற கணக்கிலே, பெண்பிள்ளை இப்படி அதிப்ரவணையானாளாகில் தாய்க்கும் பகவத்விஷய ப்ராவண்ய முண்டாயிருக்கவேண்டாவோ, கேவலம் வெறுத்துக்கொண்டே யிருக்கக்கூடுமோ வென்ன; அங்ஙனன்று, உள்ளே உகப்புண்டு என்று விவக்ஷித்து, அத்தை “இப்பெண்” என்கிற பதத்தில் ஏறிட்டு அர்த்த மருளிச்செய்கிறார் (புறம்பித்யாதி வாக்யத்வயத்தாலே). (களிப்பு) என்றவநந்தரம், தனக்கு என்று சேஷம்.

“அமர்” என்று - யுத்தமாய், பலிதார்த்தம் (அம்பேற்றுமவன்) என்றது. ... ... (௭)

மூ.—உறவாது மிலளென்றென்றொழியாது பலரேசுமலராயிற்றால்
மறவாதேயெப்பொழுதும்மாயவனே யாதவனேயென்கின்றாளால்
பிறவாத பேராளன் பெண்ணாளன் மண்ணாளன் விண்ணோர்தங்க
ளறவாள னென்மகளைச் செய்தனகளம்மனைமீரறிகிலேனே. (௮)

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஆதும்	எவ்விதமுமான	ஒழியாது	தீராமல்
உறவு இலள்	சுற்றத்தாரை யுடையளாயிருக்கிறிலள்,	பலர்	அநேகரும்
		ஏசும்	குற்றம் சொல்லும்படி
என்றென்று	என்று இவ்வளவுமாத்ரத்திலேயே	அலர்	பழியானது (லோகமெங்கும்)

ஆயிற்று	உண்டாயிற்று,
ஆல்	கஷ்டம்!
மறவாதே	விஸ்ம்ருதி யில்லாமல்
எப்பொழுதும்	ஸர்வகாலமும்
மாயவனே	ஆஶ்சர்யபூதனே!
மாதவனே	ஶ்ரிய:பதியே!
என்கின்றாள்	என்று சொல்லாநின்றாள்;
பிறவாத	ஜந்மத்தைப் போக்குமதானாய்
பேர் ஆளன்	திருநாமத்தை யுடைய
பெண் ஆளன்	பெண்களுக்கு நிர்வாஹகனாய்
மண் ஆளன்	பூமிக்கு ரக்ஷகனாய்
விண்ணோர் தங்கள்	நித்யஸூரிகள் விஷயத்தில்
அறவாளன்	ஆந்ருசம்ஸ்யத்தை யுடையனான அவன்
என்மகளைச்	செய்தனக ளம்மனைமீர் அறிகிலேனே. (௮)

வ்யா.—எட்டாம்பாட்டு. (உறவாதுமிலளென்று) பெற்றாரோடு தோழிமாரோடு வாசியற இவளிப்படி கண்ணறுவதே என்பர்கள்; பழமைகள்பார்த்து ஒன்றும் உறவுடையளாயிருக்கிறிலள். (க) ‘‘𑌪𑌿𑌤𑌾 𑌨𑌾𑌮 𑌮𑍂𑌰𑍍𑌤𑌶𑍍𑌶𑌿𑌰𑍋𑌰𑍋𑌗𑌃 - பிதாநாமமூர்த்தஶ்ஶிரோரோக:’’ என்றாய்த்திருக்கிறது. (உ) [𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌸𑍍𑌥𑌿𑌤𑍍𑌵𑌾 𑌬𑌹𑌿𑌷𑍍𑌕𑍁𑌰𑍁𑌮𑍍- த்ருஷ்ட்வா ஸ்த்தித்வா பஹிர்குரும்] இதுக்கு பட்டர் ‘‘இவள் க்ருஷ்ணவிஷய ப்ரேமத்தில் புதியதுண்டிலள் காண்’’ என்றருளிச்செய்தார் சிலரைக் கண்ணுக்குத்தோற்றிற்றிறே என்று. (௩) [𑌕𑌾𑌚𑌿𑌤𑍍 - காசித்] ஒருத்தி புறப்பட்டு க்ருஷ்ணன் பாடேறப்போனாள். வழிகாட்டினாரென்ன; ப்ரேமத்தாலேயிருண்டது, அவ்விருட்சி வழிகாட்டப்போனாள். (என்றித்யாதி) இத்தையே சொல்லிவிடாதே பலருமேசும்படி பழியாய் விழுந்தது. (மறவாதே) ஸ்மாரகருண்டாக மறப்பு வாராதிறே. இவளையும் அவனையும் சொல்லி அடுத்திறே பழிசொல்லுவது. இப்படி பழிசொல்லுகிறபோது அவள் செய்கிறதென்னென்னில்; (மாயவனே) ஆஶ்சர்யகுணசேஷ்டிதங்களை யுடையவனே! (மாதவனே) ப்ரணயதாரையில் அவளுக்கு ஆனைக்குக் குதிரைவைக்கையாலே பரமரஸிகனானவனே! என்னாநிற்கும். அதாவது- கலக்கிறவிடத்தில் தாழநின்று பரிமாறினபடியையும், அதுக்கடியான சீலத்தையும், கலந்தபோதை பரிமாற்றத்தின் வகைகளையும், இதில் ஶ்ரோத்ரியனாகைக்கு வ்யுத்பத்திபண்ணினவிடத்தையும் சொல்லாநிற்கும்.

(க)

(க) வி-பு-௫-௧௩.௨௰.

(உ) வி-பு-௫-௧௩-௧௬

(பிறவாத) ஆஶ்ரிதார்த்தமாக நூறுயிரம்படி பிறவாநிற்கச்செய்தேயும் ஒன்றும் செய்திலனாய், (க) "ఋణం ప్రవృద్ధమివ - ருணம் ப்ரவ்ருத்தமிவ" என்னும்படியான ஆஶ்ரிதவிஷயத்தில் வ்யாமோஹாதிசயத்தை யுடையவன். பெரியோனென்றபடி. அன்றிக்கே, பிறவியை அறுப்பதான திருநாமத்தையுடையவன். துஃக்கநிவர்த்தகமான திருநாமங்கள் கிடீர்! இவளுக்கு துஃக்கத்தைப் பண்ணுகிறது. (பெண்ணுளன்) பெண்பிறந்தாரையடைய இப்படிபண்ணுமவன்; (உ)†("நங்கைமீர்" இத்யாதி). (மண்ணுளன்) (ங) "రక్షితా జీవలోకస్య - ரக்ஷிதா ஜீவலோகஸ்ய". (விண்ணோரித்யாதி) நித்யஸூரிகள் தன் ஆந்ருசம்ஸ்யத்தைக்கொண்டாட, அவர்களுக்கு ஓலக்கம் கொடுக்குமவன். (என்மகளித்யாதி) இவளளவில் அவன்பண்ணின ஆந்ருசம்ஸ்ய ப்ரவ்ருத்திகள் என்னால் பேசிமுடியப்போகாது. ... ... (அ)

அரு.—எட்டாம்பாட்டு. (உறவித்யாதி). "இப்பெண் பெற்றேன்" என்று - கூடபாவை(గూఢభావై)யாய், உகப்பு உள்ளிருக்க மேலாக வெறுத்தவாறே, அவர்கள் ‡பாவ (భావ)ஜ்ஞராய், தாய்மாரையும் தோழிமாரையும் மற்றுமெல்லாரையும் விட்டு நாயகனையே விரும்பினால் நாட்டார் பழிசொல்லாரோ, நீ உபேக்ஷிக்கலாமோ வென்ன; பழியும் விளைந்து அந்தாலே மிகவும் ப்ராவண்ய மிரட்டித்தது, எனக்கொன்றும் தெரிகிறதில்லையென்கிறாளென்று ஸங்கதி.

இப்படி பகவத்விஷயத்திலே உறவுகளற்று வர்த்தித்தாருண்டோவென்ன (பிதாநாமேத்யாதி ப்ரமாணத்ரயம்). "కాచిదావసథస్యాన్తే దృష్ట్వా స్థిత్వా బహిర్గురూన్। తన్మయత్వేన గోవిన్దం దధ్యౌ మీలితలోచనా - காசிதாவஸதஸ்யாந்தே த்ருஷ்ட்வா ஸ்த்தித்வா பஹிர்குரும் । தந்மயத்வேந கோவிந்தம் தத்யௌ மீலிதலோசநா" இத்யாதி. ப்ரேமம் விஞ்சினால் குருதர்சநம் இவளுக்குக் கூடுமோவென்ன (இதுக்கித்யாதி). "యయౌ చ కాచిత్ప్రేమాన్ధా తత్పార్శ్వమవిలమ్బితమ్- யயௌசகாசித் ப்ரேமாந்தா தத்பார்ஶ்வ மவிலம்பிதம்" என்றதுக் கர்த்த மருளிச்செய்கிறார் (ஒருத்தி யித்

---

† குண்டலிதக்ரந்தம் க்வாசித்கமாகிலும் "பெண்பிறந்தாரை அப்படி படுத்துமோ வென்ன வருளிச்செய்கிறார் (நங்கைமீரித்யாதி)." என்று. அரும்பதாந்தரத்தில் காண்கையால், ப்ரக்ஷிப்தமன்று.

‡ இது ஸந்திக்த்தம். பாவா (భావా) கபிஜ்ஞராய் என்றிருக்கலாமோ?

(க) பார-உத்யோ-ருஅ. (உ) தி-வாய்-ச-உ-கூ. (ங) ரா-ஸு-ருகூ-கo.

யாதி) (ஸ்மாரகர்)-பழியிடுவார். (ஶ்ரோத்ரியன்)-ப்ரணயதாரையில் ஸமர்த்தன்

(ஆந்ருசம்ஸ்ய ப்ரவ்ருத்திகள்) என்றது-விபரீதார்த்த லாக்ஷணிகம். ... ... (அ)

மூ.—

பந்தோடுகழல்மருவாள் பைங்கிளியும்பாலூட்டாள் பாவைபேணாள்
வந்தானோ திருவரங்கன் வாரானோ வென்றென்றே வளையும்சோரும்
சந்தோகன் பவழியனைந்தழலோம்பு தைத்திரியன் சாமவேதி
அந்தோவந் தென்மகளைச் செய்தனகளம்மனைமீரறிகிலேனே. (கூ)

பதம்.	உரை.
பந்தோடு	பந்தோடுகூட
கழல்	கழல்என்கிற (பெண்களாடுகிற) காய்களை
மருவாள்	விரும்புகிறிலள்,
பை	பசுமையான
கிளியும்	கிளிக்கும்
பாலூட்டாள்	க்ஷீரபானம் செய்விக்கிறிலள்,
பாவை	பொம்மையை
பேணாள்	ஆதரிக்கிறிலள்,
திருவரங்கன்	அழகிய மணவாளன்
வந்தான்	எழுந்தருளினான்
ஓ!	அதிசயம்
என்று	என்றுசொல்லியும்,
வாரான்	வருகிறிலன்
ஓ!	கஷ்டம்
என்றே	என்று சொல்லியும்
வளையும்	(கைகளில்) வலயங்களையும்

பதம்.	உரை.
சோரும்	இழவாநின்றாள்;
சந்தோகன்	ஸாம விசேஷத்தின் அர்த்த மறிந்தவனும்
பவழியன்	கௌஷீதகி ப்ராஹ்மணத்தின் அர்த்த மறிந்தவனும்
ஐந்துஅழல்	பஞ்சாக்நிமத்யவர்த்தியும்
ஓம்பு	ஹோமம் பண்ணுமவனும்
தைத்திரியன்	தைத்திரீயோபநிஷத்தினர்த்த மறிந்தவனும்
சாமவேதி	ஸாமவேதார்த்தமறிந்தவனுமான அவன்
வந்து	இவளிருக்குமிடம் வந்து
என்மகளைச்செய்தனகளம்மனைமீரறிகிலேனே.	
அந்தோ	கஷ்டம். (கூ)

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (பந்து) நித்ராஸமயத்திலும் ஒன்றல்லாவொன்று கைவிடாதவள் இரண்டையும் விட்டாள். (பைங்கிளியும்) பெற்றாரை உபேக்ஷிக்கையன்றியே, பிறந்தாரையும் உபேக்ஷியாநின்றாள். (பாவைபேணாள்) முன்பு இவளுக்குச் சிலர் அநபிமதம் செய்கையாவது பாவைபேணுதொழிகையாய்த்து; அத்தைத் தானே செய்யாநின்றாள். (க) * [illegible] †[illegible]

(க)

† (பா) [illegible]-ஸதா.

தஸ்மாத்பால்யே விவேகாத்மா யதேத ஶ்ரேயஸே நரஃ ஆனபடியைச் சொல்லிற்றாய்த்து. ஆக, பழைய யாத்ரையையடையக் கைவிட்டாளென்றபடி. (க) [𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑌾 𑌮𑌯𑌾 𑌲𑌙𑍍𑌕𑌾 - பரித்யக்தா மயா லங்கா] ப்ராபகவிஷயத்தில் தன்னையே உபாயமாகப்பற்றினால் இதரோபாயங் களோபாதி, ப்ராப்யவிஷயத்திலும் அல்லாதவை ப்ராப்யாபாஸமாய் த்யாஜ்யமாயிருக்குமிறே.

புறம்புள்ளவற்றையடையக் கைவிட்டாள்; அவன்வரவு நிஶ்சிதமென்றிருந்தாள்; தன்தசையே செப்பேடாக (வந்தானோ' திருவரங்கன் என்று) புறம்புள்ளபற்றறுக்க வந்திருக்கிறவன் பற்றற்றாலும் வந்து முகங்காட்டானோ என்னுமாய்த்து. (வாரானோ') நானித்தசையோடே முடியுமித்தனையோ என்னும். குணாதிகரல்லாதார் விஷயத்தில் பற்றோபாதியாய் விழுந்ததே நமக்கு இவ்விஷயத்தில் பற்றும் என்னும். (வளையும்)பந்து கழல்கள் பார்வையோபாதியாய் விழுந்தது வளையும். (உ) "𑌶𑍈𑌥𑌿𑌲𑍍𑌯𑌮𑍁𑌪𑌯𑌾𑌨𑍍𑌤𑍍𑌯𑌾𑌸𑍁 - சைதில்ய முபயாந்த்யாசு"

(சந்தோகனித்யாதி) இத்தை ஒரு அஜ்ஞன்செய்தானாகில் பொறுக்கலாய்த்திறே; (ந) "𑌵𑍇𑌦𑌵𑌿𑌦𑍇𑌵𑌚𑌾𑌹𑌮𑍍-வேதவிதேவசாஹம்" என்றவன் கிடீர் இத்தைச்செய்கிறான். (சந்தோகன்) என்கிறவிது - சந்தோக ஸாமத்தைப் பிரித்துச்சொல்லுகிறதாகவுமாம்; அன்றிக்கே, இத்தால் - வேதைக ஸமதிகம்ய னென்றபடியாய், மேல் - வேதாந்தவித்தமனென்றதாகவுமாம். (அந்தோவித்யாதி) ஒருஸர்வஜ்ஞன், அஜ்ஞன் செய்வத்தைச்செய்தால், இதுக்குமேல் என்றால் போக்கடிதேடப் போமோ? (வந்து) இவள் தன் திறத்துப்படாதிருக்கத் தானேவந்து இப்படிபண்ணி, தானே உபேக்ஷிப்பதே!. முன்தீமை செய்வானும் தானேயாய் உபேக்ஷிப்பானும் தானேயாவதே!. (என்பொன்மகள்) என்றுபாடமானபோது - ஶ்லாக்யையான பெண்பிள்ளையென்றபடி.

அரு—ஒன்பதாம்பாட்டு. (பந்தித்யாதி) உன் பெண்பிள்ளை பழியே ஹேதுவாக ப்ராவண்ய மதிசயித்து இப்பாடுபட்டால் "அவனென்மகளைச் செய்தனகள்" என்று வெறுப்பானென், "குற்றமென்பெண்ணது" என்று ஆறியிருக்கலாய்த்தே என்ன; ஸர்வஜ்ஞனறியானோ, பழி விளையாமல் பண்ணி ஆளவேண்டாவோ, உபேக்ஷித்தவரை யொழிய வெறுப்பது ஆரை என்கிறாளென்று ஸங்கதி.

(க) ரா-யு-க கூ-ரு. (உ.)வி-பு-ஞ-கஅ-உ.கூ. (ந) கீ-கரு-கரு.

பந்தோடு மருவாள் கழலோடு மருவாள் என்று சப்தார்த்தமாய், மருவு-ஸதா(సదా)பரிசயமாய், அதினெல்லையிலத்தளவும் தாத்பர்யமருளிச்செய்கிறார் (சித்ரேத்யாதி). “கிளியும்” என்ற சகாரத்தாலே தோற்றின ப்ராதாந்யத்தை, “உறவாது மிலள்” என்கிறத்தைக்கடாக்ஷித்துத் தாத்பர்யமாக வருளிச்செய்கிறார் (பெற்றாரை யித்யாதி). மரப்பாவையை ஆதரியாளென்று சப்தார்த்தமாய், தாத்பர்ய மருளிச்செய்கிறார்(முன்பித்யாதி). இத்தால் ஸ்வாபதேசமேதென்ன வருளிச்செய்கிறார் (தஸ்மாதித்யாதி); “బాల్యేక్రీడనకాసక్తాః యౌవనే విషయోన్ముఖాః। అజ్ఞా నయన్త్యశక్త్యాచ వార్ధక్యం సముపస్థితాః॥ తస్మాద్బాల్యే వివేకాత్మా యతేత శ్రేయసే నరః - பால்யே க்ரீடநகாஸக்தா: யௌவநே விஷயோந்முகா:। அஜ்ஞா நயந்த்யசக்த்யாச வார்த்தக்யம் ஸமுபஸ்த்திதா:। தஸ்மாத் பால்யேவிவேகாத்மா யதேத ஶ்ரேயஸே நர:” என்கிறபடியே - க்ரீடநகங்களான பந்தும் கழலும்-விஷயங்களுக்கு உபலக்ஷணமாக, கிளி பாவை இவற்றையெல்லாம் விட்டாளென்றதாய்த்து. ஶ்ரேயஸ்ஸுக்கு இவள் யத்நம் பண்ணுகை யாவதென்னென்ன வருளிச்செய்கிறார் (ஆகவித்யாதி). இப்படிவிட்ட பேருண்டோ வென்ன (பரித்யக்தேத்யாதி). ப்ராபகாந்தரத்யாக மன்றோ வேண்டுவது, ப்ராப்யாந்தரத்யாகமும் பண்ணவேணுமோ அவன் வருகைக்கென்ன வருளிச்செய்கிறார் (ப்ராபகேத்யாதி).

மேலுக்கவதாரிகை (புறம்பித்யாதி). “வந்தானோ!” என்றவிடத்தில் “ஓ!” என்றது-ஹர்ஷத்திலே. “வாரானோ!” என்றதுக்குத் தாத்பர்யம் (புறம்புள்ள பற்றித்யாதி). “வாரானோ” என்கிற ஓகாரத்துக்கு - அவன் வரக்காணாமையாலே விஷாதத்திலேயாய், அதுக்குத்தாத்பர்ய மருளிச்செய்கிறார் (காணித்யாதி). “திருவரங்கன்-வந்தானோ - என்று, திருவரங்கன்-வாரானோ - என்றேவளையும் சோரும்” என்று அந்வயம் திருவுள்ளம் பற்றி “என்றே” என்ற ஏவகாரத்துக்கு பலிதார்த்த மருளிச்செய்கிறார் (குணாதிகரித்யாதி). தானே வளைகள்சோர்ந்த விடமுண்டோ வென்ன (சைதில்ய மித்யாதி); “అనురాగేణ శైథిల్య మస్మాసు వ్రజతో హరేః। శైథిల్య ముపయాన్త్యాశు కరేషు వలయాన్యపి- அநுராகேண சைதில்யமஸ்மாஸு வ்ரஜதோ ஹரே:। ஶைதில்ய முபயாந்த்யாசு கரேஷு வலயாந்யபி” என்று வசநசேஷம். “ஹரௌ வ்ரஜதிஸதி-அஸ்மாஸு-சைதில்யமுபயாதி” இத்யந்வய:.

“వేదైశ్చసర్వై రహమేవవేద్యః వేదాన్తవిద్వేదవిదేవచాహమ్ - வேதைஶ்ச ஸர்வைரஹமேவ வேத்ய: வேதாந்தவித் வேதவிதேவசாஹம்” என்கிறபடியே-வேதவேத்யனாகையாலும், வேதவேதாந்தார்த்த வித்தமனாகையாலும், ஸர்வஜ்ஞனாக ப்ரஸித்தனானவனே செய்தால் பொறுக்க வொண்ணாதென்னு மர்த்தத்தை வ்யதிரேகமுகேந வருளிச்செய்கிறார் (இத்தை யித்யாதி) “சந்தோகன்” என்றது - ஸாம விசேஷார்த்தவித்தென்றும்,

"பவுழியன்" என்றது- கௌஷீதகிப்ராஹ்மணத்தினர்த்த வித்தென்றும், "ஐந்தழல்" - பஞ்சாக்நி மத்யவாஸியாய், "ஓம்பு-" ஹோமசீலனாய், இத்தால் - வேதார்த்தாநுஷ்ட்டாதாவென்றும், "தைத்திரியன்-" தைத்திரீய சாகார்த்த வித்தென்றும், "சாமவேதி" ஸாமார்க்யோக ஸாமவேதார்த்த வித்தென்றும் ஒரு யோஜநை அருளிச்செய்தாராய்; *சந்தஸ்ஸப்தம்-ஸாமார்க்யோக வேத பரமாக்கி, அத்தாலே - ஸகல வேதங்களை யடைந்தவனென்றதாய், தத்ப்ரதிபாத்யனென்றாக்கி, மேல்சொல்லுகிற "பவுழியன்" என்றது - உபநிஷத்தாகையாலே வேதாந்தார்த்த வித்தென்றும், "ஐந்தழலோம்பு தைத்திரியன் சாமவேதி" என்றதுக்கு - முன்புபோலே வேதார்த்தாநுஷ்ட்டாதாவாய்க்கொண்டு வேதார்த்த வித்தென்றும் திருவுள்ளம் பற்றி யோஜநாந்தர மருளிச்செய்கிறார் (அன்றிக்கே யித்யாதி). ஆக, இத்தால் - "சந்தோகன்" என்றதுக்கு - இரண்டர்த்தம் சொல்லிற்றாய்த்து எல்லாவற்றாலும் - ஸர்வஜ்ஞனென்றதாய்த்து. கீழெல்லாவற்றாலும் தோற்றின விஷாதாதிசயத்தை "அந்தோ!" என்கிற பதாரூடமாக்கிக் காட்டுகிறார் (ஒருவித்யாதி). "வந்து" என்கிற பதமில்லாமல் வேறு பாட (ஸ்ரீ) முண்டென்று காட்டி. அர்த்த மருளிச்செய்கிறார் (என்னித்யாதி). (கூ)

மூ.-சேலுகளும்வயல்புடைசூழ் திருவரங்கத்தம்மானைச்சிந்தைசெய்த
நீலமலர்க்கண்மடவாள் நிறைவழிவைத் தாய் மொழிந்தவதனை நேரார்
காலவேல் பரகாலன் கலிகன்றி யொலிமாலை கற்றுவல்லார் [தாமே.
மாலைசேர் வெண்குடைக்கீழ் மன்னவராய்ப் பொன்னுலகில் வாழ்வர்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பதம்.	உரை.	பதம்.	உரை.
சேல்	மத்ஸ்யங்களானவை	நிறைவு	ஸ்த்ரீத்வ பூர்த்தி
உகளும்	துள்ளாநின்ற	அழிவை	அழிந்தமையை
வயல்	கழனிகளாலே	தாய்	தாயானவள்
புடை	பர்யந்த ப்ரதேசங்களெங்கும்	மொழிந்த.	சொன்ன
சூழ்	வ்யாப்தமான	அதனை	அந்த அவஸ்த்தாவிஷயமாக,
திருவரங்கத்து	திருவரங்கமென்னும் திவ்ய தேசத்தில் கண்வளர்ந்தருளுகிற	நேரார்	எதிர்த்துவந்த சத்ருக்களுக்கு
அம்மானை	ஸ்வாமியான நம்பெருமாள் விஷயமாக	காலன்	யமன்போலே யிருக்கிற
சிந்தைசெய்த	நினைப்பிட்ட	வேல்	வேலாயுதத்தையுடையராய்(அதினாலே)
நீலமலர்	கருநெய்தல்போன்ற	பரகாலன்	சத்ருக்களுக்குக் காலன்போன்றவரான
கண்	கண்களையுடைய	கலிகன்றி	ஆழ்வார்
மடவாள்	பெண்ணினுடைய	ஒலி	அருளிச்செய்த

மாலை	சப்தஸந்தர்ப ரூபமான இப்பத்துப் பாட்டையும்
கற்று	ஆசார்ய ஸகாசத்தில் அப்யஸித்து
வல்லார்	அறிய வல்லவர்கள்
மாலைசேர்	முத்துமாலைகள் ஸரம் ஸரமாக சேர்ந்திருக்கிற
வெள்	வெளுத்திருக்கிற
குடைக்கீழ்	குடையின் கீழிருந்து
மன்னவராய்	ராஜாக்களாய் ராஜ்ய பரிபாலனம் பண்ணி (அநந்தரம்)
பொன்உலகில்	பரமபதத்தில்
வாழ்வர்	ஸுகாநுபவம் பண்ணுகிற்பர்கள்.(௧௦)

வ்யா.—பத்தாம்பாட்டு. (சேலுகளும்) திர்யக்குக்களுங்கூடக் களித்து வர்த்திக்கும்படியான வயல்சூழ்ந்த கோயிலிலே வர்த்திக்கிற ஸர்வேஶ்வரனைச் சிந்தைசெய்தபடியாய்த்து. (நீலமலரித்யாதி) எதிர்த்தலை சிந்திக்கும்படியான வடிவழகையுடையவள். (நிறைவழிவை) ஸ்த்ரீத்வமழிந்தபடியை. (தாய்) அவள்தான் அறிவுநிறைவுகள் அழிந்துகிடக்க, திருத்தாயார் அவள்தசையைச் சொன்னபாசுரமாய்த்து. (நேராரித்யாதி) "நானெதிரி" என்று மார்தட்டி நேரேநிற்கும் எதிரிகளுக்கு ம்ருத்யுவான வேலை யுடையராகையாலே - பரகாலனென்று பேர்பெற்ற ஆழ்வாரருளிச்செய்த சொல்தொடையைக் கற்றுவல்லார்கள். கைப்பறிபறிக்கையன்றிக்கே, இதின்பொருளை ஆசார்யர்களோடே கற்றறியுமவர்கள். (மாலையித்யாதி) தனிமுத்து- குடைக்கீழே இதிலபேக்ஷையுண்டாகில் ஐஶ்வர்யத்தை அநுபவித்து, பரமபதத்திலே நித்யாநுபவம் பண்ணப்பெறுவர்கள். ... ... (௧௦)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

அரு.—பத்தாம்பாட்டு. (சேலித்யாதி) பெண்பிள்ளை திருவரங்கத்தை "சேலுகளும்" என்று விசேஷித்ததுக்குத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (திர்யக்கித்யாதி). திர்யக்குக்களும் களிக்கும் தேசமாகையாலே நாமிங்கே களிக்கவேணுமென்று சிந்தை செய்தாளென்றதாய்த்து. " வல்லார் " என்றபோதே கற்கை அர்த்தஸித்தமா யிருக்க, " கற்று " என்றதுக்குக் கருத்தருளிச் செய்கிறார் (கையித்யாதி). ஶ்ரீகோசத்தைப் பற்றி பலாத்கார்த்தாலே தன் புத்தி பலத்தாலே, ஸ்வரஸமான அர்த்தம் கிடக்க, அதிலர்த்தத்தை அறிகையன்றிக்கே என்றபடி. "மாலை"-முத்துமாலையாக்கி அருளிச்செய்கிறார் (தனியித்யாதி). ... ... (௧௦)

ஜீயர் திருவடிகளே சரணம்.

அஞ்சாம்பத்தில் அஞ்சாந்திருமொழி முடிந்தது.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

அஞ்சாம்பத்து ஆறுந் திருமொழி

கைம்மானம் ப்ரவேசம்.

வ்யா.--- "மறவாதே எப்பொழுதும் மாயவனே மாதவனே என்கின்றாள்" என்று - திருநாமங்களைப் பலகாலும் தானே சொல்லியும், திருத்தாயார் அவற்றை அநுபாஷிக்கக்கேட்டும், ஆக இப்படி திருநாமங்களிலே வாஸனை பிறந்தது; ஸத்தாதாரகமாயிறே திருநாமங்கள் தானிருப்பது; அத்தாலே உணர்ந்து தரித்தார். தரித்தவநந்தரம், "நீரிங்ஙனேகிடந்து படுகிறதென், பரமபதம் கலவிருக்கையாயிருக்க நாமிங்கே வந்து ஸுலபராகிறது உமக்காகவன்றோ" என்று அவதார ஸௌலப்யங்களையும்காட்டி, "அங்ஙன் காதாசித்கமாகவன்றிக்கே கோயில்களிலே வந்து ஸந்நிஹிதராகிறதும் உமக்காக, அந்தப்பொதுவன்றிக்கே விசேஷித்துக் கோயிலிலே வந்து ஸந்நிஹிதராய்த்ததும் உமக்காக, நம்முடைய ஸந்நிதியாலுள்ள பல(ஃல)ந்தான் நீர் பெறுவதும் செய்தீர், நாமே உம்முடைய கார்யத்துக்குக் கடவோம் என்று நம் தலையிலே ந்யஸ்தபரராயிருக்கப் பெற்றீரிறே, இனி அலமாக்கிறதென்" என்ன; ஸ்ரீகௌஸலையார், பெருமாள் காடேறப்போகிறபோது, "ஏகபுத்ரையாயிருக்கிற நான் உம்மைவிட்டிருக்கமாட்டேன்" என்று புறப்பட; ஒருகால் அவர் முகத்தைப்பார்த்து, "ஆச்சீ! நீர் சொல்லுகிறது தர்மஹாநிகிடீர்!, இனி பர்த்தாவிருக்க புத்ரனை அநுவிதாநம் பண்ணவும் கடவதல்ல, ஆனபின்பு, இனி மீளும்" என்ன; அவள் காப்பிட்டு மீண்டாளிறே; அப்படியே, இவர் அவ்வார்த்தையாலே ஹ்ருஷ்டராய், பெற்றதிலே லாபாம்சத்தைச்சொல்லி க்ருதார்த்தராகிறார். ... ... *

அரு.—கைம்மானம் ப்ரவேசம்.—*வெருவாதாளில்-நிலைவழிந்தபடியைத் தாய்மொழியும்படி அவஸாதமுண்டாயிருக்க, "யான் கண்ட தணிநீர்த்தென்னரங்கத்தே" என்று களிக்கக்கூடுமோ வென்ன; ஸத்ருஷ்டாந்தமாக, அவஸாதம்தீர்ந்து ஹர்ஷித்ததுக்கு ஹேதுவைக் காட்டுகிறார் (மறவாதே யித்யாதி). ... ... *

மூ.—கைம்மான மழகளிற்றைக் கடற்கிடந்த கருமணியை
மைம்மான மரதகத்தை மறையுரைத்த திருமாலை
எம்மானை யெனக்கென்று மினியானைப் பனிகாத்த
வம்மானை யான் கண்டதணிநீர்த் தென்னரங்கத்தே. (௧)

பதம்.	உரை.	பதம்.	உரை.
மானம்	நீண்டிருக்கிற [தாய்	எனக்கு	(அவனை அநுஸந்தியா
கை	துதிக்கையை யுடைத்		நின்ற) எனக்கு
மழம்	இளம்பருவத்ததான	என்றும்	ஸர்வகாலத்திலும்
களிற்றை	யானை போன்றவனா	இனியானை	போக்யபூதனாய்,
கடல்	ஸமுத்ரத்தில் [ய்,	பனி	கல்மழையை
கிடந்த	கண்வளர்ந்தருளுகிற	காத்த	(கோவர்த்தநமலையை
கருமணியை	நீலரத்நம் போன்றவ		யெடுத்துத்)தடுத்து
	னாய்,		ரக்ஷித்த [வனை
மை	ஶ்யாமவர்ணமானது	அம்மானை	எனக்கு ஸ்வாமியான
மானம்	அதிசயித்திருக்கிற	யான்	நான்
மரதகத்தை	மரதகப்பச்சை போ	அணி	அழகியதான [டு
	ன்றவனாய்,	நீர்	ஜலத்தினால் சூழப்பட்
மறை	வேதங்களாலே	தென்	ஸௌந்தரமான
உரைத்த	ப்ரதிபாதிக்கப்பட்ட	அரங்கத்து	திருவரங்கமென்னும்
திருமாலை	ஶ்ரியஃபதியாய்,		திவ்யதேசத்தில்
எம்மானை	எனக்கு ஸ்வாமியாய்,	கண்டது	காணாநின்றேன். (௧)

வ்யா.—முதற்பாட்டு. (கைம்மானமித்யாதி) (௧) "ஆனையில் கிடந்தகிடக்கை" என்று ஓரானை கைகளையும் கால்களையும் பரப்பிக்கொடு கிடக்குமாபோலே கிடக்கிற கிடை. நீண்ட துதிக்கையையுடைத்தாய், பருவத்தால் இளையதாயிருப்பதொரு ஆனை சாய்ந்தாப்போலே யிருக்கிறவனை. (கடலித்யாதி) கடலில் பாழ்தீரும்படி ஒரு நீலரத்நம் சாய்ந்தாப்போலே திருப்பாற்கடலிலே கிடந்தவனை. (மையித்யாதி) ஶ்யாமத்வம் மிக்கிருந்துள்ள மரதகரத்நம்போலே யிருக்குமவனை. (மறை) வேதங்களாலே ஒருமிடறுசெய்து பேசப்பட்ட ஶ்ரியஃபதியை. (௨) "𑌹𑍍𑌰𑍀𑌶𑍍𑌚 𑌤𑍇 - ஹ்ரீஶ்சதே" (௩) "𑌅𑌸𑍍𑌯𑍇𑌶𑌾𑌨𑌾 - அஸ்யேசாநா".

(எம்மானை) இருவருமான சேர்த்தியைக்காட்டி என்னை அநந்யார்ஹனாக்கினவனை. (எனக்கு) ஏதேனும் நொந்ததசையிலும் தன்னை

---

(௧) பெரு-திரு-௭-௨. (௨) பு-ஸூ-௬- (௩) ஶ்ரீஸூ-

அநுஸந்தித்தால் எனக்கினியனாயிருக்குமவனை. (பனி) இப்படியே தானல்லது ரக்ஷகரில்லாதாரை அரியன செய்தும் ரக்ஷிக்குமவனை; “ஒருகால் மலையை எடுத்துப் பசுக்களையும் இடையரையும் ரக்ஷித்தான், திருப்பாற்கடலிலே கிடந்தான்” என்று கேட்டார் வாய் கேட்கையன்றிக்கே, நான் கோயிலிலே காணப்பெற்றேன். ... (க)

அரு.—முதற்பாட்டு. (கைம்மானமித்யாதி). தாத்பர்யமருளிச்செய்து, சப்தார்த்த மருளிச்செய்கிறார் (நீண்டவித்யாதி); மானமான கையையுடைய மழலையான ஆனையென்று சப்தார்த்தமென்று கருத்து. ஏகதேசத்தைச் சொல்லாமல், “கடல்” என்ற ஸாமாந்யோக்திக்குத் தாத்பர்யம் (கடலித்யாதி).

“பனி” என்று - கல்மாரியை லக்ஷணயா சொல்லுகிறதென்றருளிச்செய்கிறார் (இப்படியே யித்யாதி). இத்தால் - தம்முடைய விஶ்லேஷவ்யஸந ஜநிதமான கண்பனி காத்ததை ஸூசிதமென்று திருவுள்ளம் பற்றி, மேலுக்குத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (ஒருகா லித்யாதி). .. (க)

மூ.—பேரானைக் குறுங்குடியெம்பெருமானைத் திருத்தண்கா
லூரானைக் கரம்பனூருத்தமனை முத்திலங்கு
காரார் திண்கடலேழும் மலையேழிவ்வுலகேழுண்டு
ஆராதென்றிருந்தானைக் கண்டது தென்னரங்கத்தே. (உ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
பேரானை	திருப்பேர்என்னும் திவ்யதேசத்திலே ஸந்நிஹிதனாய்,	கார் ஆர்	கருமைமிக்கதாய்,
குறுங்குடி	திருக்குறுங்குடியிலே எழுந்தருளியிருக்கிற	திண்	த்ருடமான (அநபிபவநீயமான)
எம்பெருமானை	ஸ்வாமியாய்,	ஏழ்கடலும்	ஸப்தஸமுத்ரங்களையும்
திருத்தண்காலூரானை	திருத்தண்கால் என்னும் திவ்யதேசத்தில் நித்யவாஸம் பண்ணுமவனாய்,	ஏழ்மலை	ஸப்தகுலாசலங்களையும்
கரம்பனூர்	திருக்கரம்பனூரில் எழுந்தருளியிருக்கும்	ஏழ்இவ்வுலகு	ஸப்தத்வீபங்களையுமுடைய இந்தலோகத்தை
உத்தமனை	ஸர்வாதிகனாய்,	உண்டு	அமுதுசெய்து
முத்து	முத்துக்களானவை	ஆராதுஎன்று	த்ருப்தி பிறக்கவில்லை என்று
இலங்கும்	ஒளிவிடாநிற்பதாய்	இருந்தானை	ரக்ஷணத்தில் அபூர்த்தி தோற்ற இருந்தவனுமான ஸர்வேச்வரனை
		கண்டது தென்னரங்கத்தே. (உ)	

வ்யா.—இரண்டாம்பாட்டு. (பேரானை) ஆற்றங்கரையிலே, ஸர்வ போக்யமாம்படி திருப்பேரிலே ஸந்நிஹிதனானவனை. (குறுங்குடி) திருக்குறுங்குடியிலே ஒரு விசேஷ ப்ராப்தியுண்டிறே இவர்க்கு; - ஆழ்வார் ஸ்வாதந்த்ர்யமிறே அங்கு நடப்பது. (திருத்தண்காலூரானை) அவ்வூரிலுள்ளவர்களிலே தானுமொருவனாய், தன் வ்யாவ்ருத்தி தோற்றாதபடியிருந்தவனை. (கரம்பனூர்) வழிக்கரையிலே திருவாசலுக்கொரு கதவிடாதே வந்து கிடக்கிறவனை.

(முத்தித்யாதி) முத்துக்கள் ஒளிவிடாநிற்பதாய், கருமைமிக்கு, தான் கரையை அதிக்ரமிக்கக் கடவதன்றிக்கே நிற்கிறநிலையை ஒருவரால் கொலைக்கவொண்ணாதபடி அதில் திண்ணிதாயிருக்கிற கடல்களேழும், பூமிக்கு ஆணியடித்தாப்போலே இருக்கிற மலைகளேழுமான இந்த லோகங்களேழையும் தன் வயிற்றிலே வைத்து ரக்ஷிக்கச் செய்தேயும் ஒன்றும் செய்திலனாயிருக்கையாலே, உபகாரம் கொண்டார்க்கு ப்ரத்யுபகாரம்தேடி நெஞ்சாறல் படவேண்டாதபடி யிருந்தவனை. ... ... (௨)

அரு.—இரண்டாம்பாட்டு. (பேரித்யாதி). கீழ்ப்பாட்டில் பெரியபெருமாள் கிடையழகிலீடுபாட்டாலே, பாற்கடல் கிடக்கையையும், தம்முடைய *𑌸𑌨𑍍𑌤𑌤𑌦𑍁𑌃𑌖𑌵𑌰𑍍𑌷𑌂 ஸந்தததுஃக்க வர்ஷத்தைப் போக்கினதுக்கு ஜ்ஞாபகமான பனிகாத்தமையு மநுஸந்தித்தவராகையாலே, அத்தோடு தோள் தீண்டியான திருப்பேரிலும் திருக்கரம்பனூரிலும் கிடந்தபடியை அநுபவித்துக்கொண்டும், "தெற்கு வீட்டிலே உம்மபேக்ஷிதம் செய்கிறோம்" என்று பெரிய பெருமாள் அருள்பாடிட்ட திருக்குறுங்குடிக்குப் போகிற வழியில் திருத்தண்காலூரானோடு கூடத் திருக்குறுங்குடி யெம்பெருமானை அநுபவிக்கிறாரென்று ஸங்கதி.

"எம்" என்று விசேஷித்ததுக்குத் தாத்பர்யம் (திருக்குறுங்குடியித்யாதி). விசேஷப்ராப்தி ஏதென்னவருளிச்செய்கிறார் (ஆழ்வாரித்யாதி). இத்தால், பெரிய பெருமாள், இவர் திருமேனியில் சாபல்யத்தாலே, இங்கே இவர் (௧)"மங்கவொட்டு" என்று சொன்னவளவிலும் ஸம்மதியாதே யிருந்து, *திருவாணையிடும்படியான பாகம்(𑌪𑌕𑍍𑌵)முதிர்ந்தவாறே இங்குதாம்காணமாட்டாமல் தெற்குவீட்டுக்கு அருள்பாடிட, அவர் "நமக்கு ஆஶ்ரிதபாரதந்த்ர்ய மன்றோ ஸ்வரூபம், இஷ்டம் செய்கையும் அநிஷ்டம் தவிருகையு மன்றோ க்ருத்யம்" என்று வீடு கொடுக்கையாலே, ஆழ்வார் ஸ்வாதந்த்ர்யம் நடந்ததென்று கருத்து. தன்னைக் கொடுக்கும் ஔதார்யத்

---

(௧) தி-வாய்-௧௦-௭-௧௦.

தாலே உத்தமனென்று விவக்ஷித் தருளிச்செய்கிறார் (வழியித்யாதி). எல்லாரும் நடக்கும் வழியாகையாலே ஸேவிப்பார் மிகுகையால் கதவிட அவஸரமில்லையென்று கருத்து. ... ... (௨)

மூ.—ஏனாகி யுலகிடந்தன் றிருநிலனும் பெருவிசும்பும்
தானாய பெருமானைத்தன்னடியார் மனத்தென்றும்
தேனாகி யமுதாகித் திகழ்ந்தானை மகிழ்ந்தொருகால்
ஆனாய னானானைக் கண்டது தென்னரங்கத்தே. (௩)

பதம்.	உரை.	பதம்.	உரை.
அன்று	வராஹகல்பாதியில்	தன் அடியார்	தன் தாஸபூதருடைய
ஏனாகி	மஹா வராஹமாய்க் கொண்டு	மனத்து	மாநஸ்ஸில்
உலகு	பூலோகத்தை	என்றும்	ஸர்வகாலத்திலும்
இடந்து	(அண்டபித்தியில் நின்றும்) குத்தியெடுத்தவனுமாய்,	தேனாகி	தேன்போலவும்
இரு	விசாலமான	அமுதாகி	அம்ருதம் போலவும் போக்யபூதனாக
நிலனும்	பூமியையும்	திகழ்ந்தானை	விளங்குமவனாய்,
பெரு	பரந்த	மகிழ்ந்து	ப்ரீதியுடனே
விசும்பும்	ஆகாசத்தையும்	ஒருகால்	த்வாபராந்தத்தில்
தானாய	தனக்கு ப்ரகாரமாக வுடையனான	ஆன்	பசுக்களைமேய்க்க வல்ல
பெருமானை	ஸ்வாமியுமாய்,	ஆயனானானை	இடையனான க்ருஷ்ணனுமானவனை
		கண்டது தென்னரங்கத்தே.	(௩)

வ்யா.—மூன்றாம்பாட்டு. (ஏனாகி) பூமியை ப்ரளயங்கொண்டவன்று ஏனமாய் இத்தை இடந்தெடுத்து. (இருநிலனும்) பூம்யந்தரிக்ஷாதிகளுடைய "தான்" என்கிற சொல்லிலே அடங்கும்படி இத்தை ப்ரகாரமாகவுடைய ஸர்வேஶ்வரனை. (தன்னடியாரித்யாதி) ஒருவன் காலிலே முள்பாய்ந்தால் சரீரியானவன் நோவுபடுமாபோலே, ஜகத்துக்கு வந்த ஆபத்து தன்னதாம்படி இதுக்கபிமாநியாயிருக்கிற விருப்பை யநுஸந்தித்திருக்கும்.

தனக்கஸாதாரணரானார்க்கு ஸர்வவிதபோக்யனாய், அத்தாலே உஜ்ஜ்வலனாயிருக்குமவனை. (மகிழ்ந்தித்யாதி) க்ருஷ்ணனாயவதரித்து, "பரமபதம் கலவிருக்கையாயிருக்க நமக்கிங்கே வந்து குறையநிற்க வேண்டாநின்றது" என்னும் இன்னாப்போடன்றிக்கே, "இப்படியாகிலு மிவர்களுக் குறுப்பாகப்பெற்றோம்!" என்னும் ப்ரீதிப்ரகர்ஷத்

தோடே, பண்டொருகால் பசுக்களையும் கன்றுகளையும் மேய்க்குமிடையனாய், அதில் புரையற வர்த்தித்தவனை. ... ... (௪)

அநு.—மூன்றாம்பாட்டு. (ஏனாகியித்யாதி). கீழ்ப்பாட்டில் - திருக்குறுங்குடி எம்பெருமான் தம்மை ஸம்ஸார ப்ரளயத்தில் நின்றுமெடுத்தமைக்கு த்ருஷ்டாந்ததயா வராஹநாயனார் வ்ருத்தாந்தத்தை அருளிச்செய்கிறாரென்றாதல்; "ஒருபாகவதனுக்கு போக்யபூதனாய்த் திருக்குறுங்குடியிலேயிருந்தேன்" என்று பூமிப்பிராட்டிக்கு உரைத்த கைசிக வ்ருத்தாந்தத்தைப்பற்றவாதல் ஏனத்தை அநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி. ... (௩)

மூ.—வளர்ந்தவனைத் தடங்கடலுள் வலியுருவில் திரிசகடம்
தளர்ந்துதிர வுதைத்தவனைத் தரியாதன்றி ரணியனைப்
பிளந்தவனைப் பெருநில மீரடிநீட்டிப் பண்டொருநா
ளளந்தவனை யான் கண்டதணிநீர்த் தென்னரங்கத்தே. (௪)

பதம்.	உரை.	பதம்.	உரை.
தடம்	விசாலமான	அன்று	அக்காலத்தில்
கடலுள்	ஸமுத்ரத்தில்	இரணியனை	ஹிரண்யாஸுரனை
வளர்ந்தவனை	கண் வளர்ந்தருளின	பிளந்தவனை	கிழித்துப் பொகட்டவனாய்,
வலி	த்ருடமான [வனாய்,		
உரு	சரீரத்தையுடைத்தாய்	பண்டு ஒருநாள்	முன்பு ஒருகாலத்திலே
திரி	ஊர்ந்துவாராநின்ற		
சகடம்	சகடாஸுரனை [ய்	பெரு	விசாலமான
தளர்ந்து	ஸந்திபந்தம் சிதிலமா	நிலம்	பூமியை [ங்கும்படி
உதிர	விழும்படி	ஈரடி	இரண்டடியிலே யட
உதைத்தவனை	உதைத்தவனாய்,	நீட்டி	திருவடிகளை நீட்டி
		அளந்தவனை	அளந்த த்ரிவிக்ரம: மானவனை
தரியாது	ப்ரஹ்லாதனுடைய து:க்கத்தைப் பொறுக்க மாட்டாதவனாய்க் கொண்டு	யான் கண்ட	தணிநீர்த் தென்னரங்கத்தே. (௪)

வ்யா.—நாலாம்பாட்டு. (வளர்ந்தவனை) பரப்பையுடைய கடலிலே, அவதாரங்களுக்கு நாற்றங்காலாம்படி வந்து கண்வளர்ந்தவனை. (வலியித்யாதி) பின்பு, "அஸுரர்கள் மிகைத்தார்கள்" என்று கேட்டவாறே வந்தவதரித்து, அஸுராவேசத்தாலே திண்ணிய வடிவையுடைத்தாய் ஊர்ந்துவருகிற சகடம் சின்னம் பின்னமாய்ப் போம்படி திருவடிகளாலே உதைத்தவனை. (தரியாது) சிறுக்கனைக் கடலிலே தள்ளு

வது, மலையிட்டு அமுக்குவதாகப் புக்கவாறே, அத்தைப் பொறுக்க மாட்டாதபடியாலே, நரஸிம்ஹமாய் ஹிரண்யனைப் பிளந்து பொகட்டவனை.

(பெருநிலமித்யாதி) பரப்பையுடையபூமி இரண்டடியிலே யடங்கும்படி திருவடிகளை நீட்டி யளந்துகொண்டவனை. ... (௪)

அரு.—நாலாம்பாட்டு. (வளர்ந்தவனை யித்யாதி). கீழ்ப்பாட்டில்-ஆனையையும் ஏனத்தையும் அநுபவித்தவராகையாலே; (க) "ఏషనారాయణ శ్రీమాన్ క్షీరార్ణవ నికేతనః - ஏஷநாராயண ஸ்ரீமான் க்ஷீரார்ணவ நிகேதந:" என்கிறபடியேயாய், அதுக்கடியான திருப்பாற்கடலானையும், ஏனத்துக்கு அநந்தராவதாரங்களான நாரஸிம்ஹ வாமநாவதாரங்களையு மநுபவிக்கிறாரென்று ஸங்கதி.

"திரிசடகம்" என்னவேணுமோ, சகடமானபோதே திரியாதோ வென்ன வருளிச்செய்கிறார் (அஸுரேத்யாதி) ... ... (௪)

மூ.—நீரழலாய் நெடுநிலனாய் நின்றானை யன்றரக்க
னூரழலாலுண்டானைக் கண்டார் பின்காணுமே
பேரழலாய்ப் பெருவிசும்பாய்ப் பின்மறையோர் மந்திரத்தின்
ஆரழலாலுண்டானைக் கண்டது தென்னரங்கத்தே. (௫)

பதம்.	உரை.	பதம்.	உரை.
நீராய்	ஜலஸ்வரூபியுமாய்	உண்டானை	அழித்தவனாய்,
அழலாய்	அக்நிரூபியுமாய்	பேர்	பெரிய [பியாய்
நெடு	விசாலமான	அழலாய்	பட(ப³) பாக்நி ஸ்வரூ
நிலனாய்	பூமியுமாய்	பெரு	அபரிச்சிந்நமான
நின்றானை	இப்படி பஞ்சபூதங்களுக்கும் அந்தர்யாமியா யிருக்குமவனாய், [ல்	விசும்பாய்	பரமபதத்துக்குநிர்வாஹகனாய்,
		பின்	அதுக்குமேலே [ய
		மறையோர்	ப்ராஹ்மணர்களுடை
அன்று	ராமாவதார காலத்தி	மந்திரத்து	மந்த்ர(பூ)பூதமான ஹவிஸ்ஸை
அரக்கன்	ராவணாஸுரனுடைய		
ஊர்	லங்காநகரத்தை	ஆர் அழலால்	(அந்த ஹவிஸ்ஸுக்களாலே) த்ருப்தனான அக்நிமுகத்தாலே
கண்டார்	(முன்னே) கண்டவர்கள்		
	அநந்தரத்தில்		
காணுமே	(அவ்வழகுடன்) கா	உண்டானை	அமுதுசெய்தவனை
அழலால்	அக்நியினால்[ணுமற்படி	கண்டது தென்னரங்கத்தே. (௫)	

(க) ஹரிவம்சம்-௧௧௩-௬௨.

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (நீரழலித்யாதி)த்ரிவ்ருத்கரணத்தாலே பஞ்சீகரணத்தைச் சொன்னபடி. (அன்றித்யாதி) ராவணன் மிகைத்தவன்று, அவனூரை அரணும் அட்டாலையும் தெருவுமாகக்கண்டவர்கள், அநந்தரக்ஷணத்திலே அப்படி காணாதே (௧) *ஶ்மஶாநஸத்ருஶீ-ஶ்மஶாந ஸத்ருசமாகக்காணும்படி அக்நியாலே அத்தை முடித்தவனை.

(பேரழலாய்) படபா(வடவா)முகாக்நியாய். இங்குத்தை மர்யாதைகளைத்தப்பி அவ்வருகு பட்டார்க்கு ப்ராப்யமான பரமபதமுமாய். (மறையோரித்யாதி) அத்தை அவர்கள் பெறுகைக் குறுப்பாக, ப்ராஹ்மணருடைய யாகங்களிலே மந்த்ரபூதமான ஹவிஸ்ஸுக்களை த்ரேதாக்நிமுகத்தாலே புஜிக்குமவனை; (௨) "அஹம் ஹி - அஹம்ஹி". (௫)

அரு.—அஞ்சாம்பாட்டு. (நீரித்யாதி) கீழ்ப்பாட்டில்-வாமநனாய் மண்ணளந்த த்ரிவிக்ரமாபதாந வ்யாப்திக்கு ப்ரத்யபிஜ்ஞாபகமாகையாலே காரணாவஸ்த்தையில் வ்யாப்தியோடு,பேரழலானது உபலக்ஷணமாய் கார்யாவஸ்த்தையில் வ்யாப்தியோடு வாசியற அந்தர்யாமித்வத்தை அநுஸந்தித்துக்கொண்டு, கீழ்ச்சொன்ன நரஸிம்ஹாவதாரத்தில் நிரஸ்யனான ஹிரண்யனுடைய மறுபிறவியில் ப்ராதிகூல்யத்தைப்போக்கின ராமாவதாரத்தில் (௩) *சராசரங்களை வைகுந்தத்தேற்றின செயலோடு, தத்ஸாதந பூதகர்மாராத்யத்வத்தையு மநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

"நீராய்; அழலாய், நிலனாய்" என்று மூன்றைச் சொன்னது - மற்றையிரண்டுக்கு முபலக்ஷணமானமைக்கு ஶ்ருதியை த்ருஷ்டாந்தமாக்குகிறார் (த்ரிவ்ருதித்யாதி). சாந்தோக்யத்திற் சொன்ன த்ரிவ்ருத்கரணம் உபலக்ஷணமானாப்போலே இதுவு முபலக்ஷணமென்று கருத்து. "அன்றரக்கனூர், கண்டார் பின்காணுமே - அழலாலுண்டானை" என்றந்வயித்து அர்த்த மருளிச்செய்கிறார் (ராவணனித்யாதி). (அட்டாலை) மேல் தளம்.

*இன் - சாரியைச் சொல்லாய், "மந்திரத்து" என்ற பதம் - லக்ஷணயா ஹவிஸ்ஸைச்சொல்லிற்றாய், ஆரழல் - ஹவ்யங்களால் த்ருப்தி பிறந்த அழலென்று விவக்ஷித் தருளிச்செய்கிறார் (அத்தை யித்யாதி). அத்தை - பரமபதத்தை. ... ... (௫)

மூ.—தஞ்சினத்தைத் தவிர்த்தடைந்தார் தவநெறியைத்தரியாது
கஞ்சனைக்கொன்றன் றுலகமுண்டு மிழ்ந்த கற்பகத்தை
வெஞ்சினத்த கொடுந்தொழிலோன் விசையுருவை யசைவித்த
அஞ்சிறைப் புட்பாகனை யான் கண்டது தென்னரங்கத்தே. (௬)

---

(௧) ரா-ஸு-௨௬-௨௬. (௨) கீதை-௯-௨௪. (௩) பெரு-திரு-௧௦-௧௦.

பதம்.	உரை.
தம்	தங்களுடைய
சினத்தை	கோபத்தை
தவிர்த்து	விட்டுவிட்டு [ளுடைய
அடைந்தார்	தன்னை அடைந்தவர்க
தவம்	அத்யவஸாயரூபமான
நெறியை	உபாயத்தை நிர்வஹிக்குமவனாய்,
தரியாது	(தாய்தமப்பன்மார் பட்ட துஃக்கத்தைப்) பொறாமல்
கஞ்சனை	கம்ஸனை
கொன்று	ஸம்ஹரித்தவனுமாய்,
அன்று	அப்ப்ரளயகாலத்தில்
உலகம்	லோகத்தை
உண்டு	விழுங்கி
உமிழ்ந்த	ஸ்ருஷ்டிகாலத்தில்வெளிப்படுத்தின
கற்பகத்தை	பரமோதாரனாய்,

பதம்	உரை
வெம்	அத்யுக்ரமான [னாய்
சினத்த	கோபத்தை யுடைய
கொடும்	க்ரூரமான
தொழிலோன்	வ்யாபாரத்தை யுடையவனுமான ருத்ரனுடைய [ன
விசை	வேகத்தை யுடைத்தா
உருவை	சரீரத்தை
அசைவித்த	(பாணயுத்தத்தில்) சலிக்கப் பண்ணினவனுமாய்,
அம்	அழகிய
சிறை	இறகுகளையுடைய
புள்	பெரிய திருவடியை
பாகனை	நடத்துமவனுமான ஸர்வேஶ்வரனை
யான்கண்டது	தென்னரங்கத்தே. ௬

8135

வ்யா.—ஆறாம்பாட்டு. (தம்சினத்தை) (க) "ம்யநஸூயவே- அநஸூயவே" என்று-"உன்றனை அதிகாரிகளைக் கண்டிலேன்காண், என் வைபவத்தைச் சொன்னவிடத்தில் சிவீலென்றிருந்திலை, இன்னமும் எனக்கு வைப்பானவற்றைச் சொல்லுகிறேன், செவிதாழ்த்துக்கேட்டுக்காண்" என்றானிறே. ப்ரத்வேஷம் பண்ணாதொழியு மத்தனையாய்த்து வேண்டுவது, த்வேஷத்தைத் தவிர்ந்து தன்னை யடைந்தவர்களுக்கு ஸ்வப்ராப்த்யுபாயத்தைத் தானே நிர்வஹித்துக் கொடுக்குமவனை. (தரியாது) த்வேஷமேயாயிருப்பா ரளவிலிருக்கும்படி. ஸ்ரீவஸுதேவரையும் தேவகியாரையும் நலியப்புக்கவாறே, அத்தைப்பொறாதே, "இனி அரைக்ஷணமிவனை வைக்கவொண்ணாது" என்று அவனைக் கொன்றானாய்த்து. (அன்றித்யாதி) த்வேஷமும் பண்ணாதே தன்னை யடைவதும் செய்யாதேயிருப்பா ரளவிலிருக்கும்படி. ஆபத்தை அடையாளமாக ரக்ஷிக்குமித்தனை யாய்த்து. தானறிந்த ஸம்பந்தத்தை யேபார்க்கு மித்தனை. (கற்பகத்தை) "இப்படி உபகரித்தோம்" என்று நினைத்திராதவனை.

(க) கீதை-௯-க.

(வெஞ்சினத்தவித்யாதி) வெவ்வியசினத்தையுடையனாய், ப்ராணி ஹிம்ஸாரூபமான உபஸம்ஹாரத்தைத் தொழிலாகவுடைய ருத்ரனுடைய, பெரியவேகத்தையுடைய வடிவை அசைவித்தானாய்த்து. ருஷபம் வாலையெடுத்துக்கொண்டோட, தான் ஜடையைவிரித்துக்கொண்டு முதுகுகாட்டி, (க) "కృష్ణ కృష్ణ మహాబాహో-க்ருஷ்ண க்ருஷ்ண மஹாபாஹோ" என்றாப்போலே சொல்லிக்கொண்டோடும்படி பண்ணின, திருவடியை வாஹநமாகவுடையவனை. இது, † (பாணனை என்றும் சொல்லுவர்கள்). நரகனையென்றும் சொல்லுவர்கள். ... (௬)

அரு.—ஆறாம்பாட்டு. (தஞ்சினத்தை யித்யாதி) கீழ்ப்பாட்டில்-மோக்ஷஸாதநமான கர்மாராத்யதையையும், அதுக்குறுப்பான அந்தர்யாமித்வத்தையும், மோக்ஷத்தை பூரி (భూరి) தாநம் பண்ணின ராமனையு மநுபவித்தவர், இப்பாட்டில் - மோக்ஷத்துக்குத்தானே உபாயபூதனானென்னுமதுக்குறுப்பாக, விரோதி நிரஸநசீலனாய், ஆபத்ஸகனாய், ரக்ஷகாந்தரத்தில் நசையறப் பண்ணின க்ருஷ்ணாவதாரத்தை அநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

சினத்தை - குணங்களில் தோஷபுத்தியாகிற அஸூயா ஹேதுவான த்வேஷத்தை, தவிர்த்து, தன்னை யடைந்தவருடைய, தவமாகிற - அத்யவஸாய ரூபமாகிற, நெறியை - மார்க்கமானவனை என்று அர்த்தமாக விவக்ஷித்து, ததேகோபாயத்வத்துக்கு வேண்டு மதிகாரம் - த்வேஷமின்றிக்கே யிருக்கையே என்றதுக்கு ப்ரமாணம் காட்டுகிறார் (அநஸூயவே இத்யாதி). "ఇదన్తు తే గుహ్యతమం ప్రవక్ష్యామ్యనసూయవే । జ్ఞానవిజ్ఞానసహితం యజ్జ్ఞాత్వా మోక్ష్యసేఽశుభాత్-இதந்துதே குஹ்யதமம ப்ரவக்ஷ்யாம்யநஸூயவே । ஜ்ஞாநவிஜ்ஞாந ஸஹிதம் யத்ஜ்ஞாத்வா மோக்ஷ்யஸேऽசுபாத்" என்கிறதுக்குத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (என்னித்யாதி). (சிவீல்) அஸஹ்யப்படுகை. ப்ரக்ருதத்திலே ஏறிடுகிறார் (ப்ரத்வேஷ மித்யாதி). அந்வயமுகேந வாக்யார்த்த மருளிச்செய்கிறார் (த்வேஷத்தை யித்யாதி). (அடையாளம்) ரக்ஷணத்துக்கு வேண்டினகுறி. ஆபத்து ரக்ஷணத்துக்குக் குறியாகைக்கு ஹேதுவேதென்ன. வருளிச்செய்கிறார் (தானித்யாதி). (உ) "మామ్ - மாம்" என்கிற ஸமாதிக்குச் சேரப் பொருள் (இப்படி யித்யாதி).

அசைவித்தபடி தன்னை விவரிக்கிறார் (ருஷபமித்யாதி). "கொடுந்தொழிலோன்" என்றது - ஸாமாந்ய சப்தமாகையாலே, நரகாஸுரனைச் சொல்லவுமாமென்கிறார் (இதித்யாதி). ... ... (௬)

(க) வி-பு-௫-௩௩-௪௧. † குண்டலிதம் க்வாசித்கம்.

(உ) கீதை-௧௮-௬௬.

மூ.—சிந்தனையைத் தவநெறியைத் திருமாலைப் பிரியாது
வந்தெனது மனத்திருந்த வடமலையை வரிவண்டார்
கொந்தணைந்த பொழிற் கோவலுலகளப்பானடிநிமிர்த்த
வந்தணனை யான் கண்டதணிநீர்த் தென்னரங்கத்தே. (௭)

பதம்.	உரை.
சிந்தனையை	என்னுடைய மநோரதத்துக்கு விஷயமானவனும்,
தவம்	அத்யவஸாய ரூபமான
நெறியை	உபாயத்தைநிர்வஹிக்குமவனும்,
திருமாலை	ப்ரியஃபதி யானவனும்,
வடமலையை	திருவேங்கடத்தை
பிரியாது	விஶ்லேஷியாமல் (அங்கேநின்று)
வந்து	அங்குநின்றும் வந்து
எனது	என்னுடைய
மனத்து	மநஸ்ஸில்
இருந்த	நித்யவாஸம் பண்ணுமவனும்,
வரி	ரேகைகளையுடைய
வண்டு	வண்டுகளினாலே
ஆர்	நிறைந்த
கொந்து	பூங்கொத்துக்கள்
அணைந்த	நெருங்கியிருக்கிற
பொழில்	சோலைகளாலே சூழப்பட்ட.
கோவல்	திருக்கோவலூரில்
உலகு	லோகங்களை
அளப்பான்	அளக்கைக்காக
அடி	திருவடிகளை
நிமிர்த்த	நீட்டிய
அந்தணனை	ஸ்வாமியுமானவனை
யான்கண்டதணிநீர்த்தென்னரங்கத்தே. (௭)	

வ்யா.—ஏழாம்பாட்டு. (சிந்தனையை) (௧) "வழுவிலா வடிமை செய்யவேண்டு நாம்" என்றுண்டான என்மநோரதத்துக்கு விஷயமாய் ப்ராப்யமாயுள்ளவனை. (தவநெறியை) அத்தைப் பெறுவிக்குமுபாயம் தானேயாயுள்ளவனை. இப்படி ப்ராப்ய ப்ராபகங்களிரண்டும் தானேயாயிருக்கிறவஸ்து தானேதென்ன (திருமாலை) ப்ராபகத்தில் புருஷகாரமுமாய், ப்ராப்யத்துக்கு அவனோபாதி யாயிறேயிருப்பது. (பிரியாதித்யாதி) திருமலையைத் தனக்கு வாஸஸ்த்தாநமாக உடையனாயிருந்துவைத்து, இவ்வவஸ்த்தைகளை என்னெஞ்சிலே பிறப்பிக்கைக்காகத்தானே வந்து மநஸ்ஸிலே விடாதே பொருந்தியிருக்கிறவனை.

(வரியித்யாதி) நல்லநிறத்தையுடைய வண்டுகள் படிந்திருக்கும் பூங்கொத்துக்கள் நெருங்கின பொழிலையுடைய திருக்கோவலூரிலே, இந்தலோகங்களை அளக்கைக்காகத் திருவடியை நீட்டிக்கொடு நிற்கிற

---

(௧) தி-வாய்-௩-௩-௧.

விநீதவேஷத்தைக்காட்டி இத்தையடையத் தன்னதாக்கிக் கொண்டவனை. (யான்கண்டது) தானே அர்த்தியாய்க்கொண்டிருக்க, நான்கண்டது கோயிலிலே. ... ... (௭)

அரு—ஏழாம்பாட்டு. (சிந்தனையை யித்யாதி) கீழ்ப்பாட்டில்- எம்பெருமானுடைய உபாயத்வத்தை ஸப்ரகாரமாக அநுஸந்திக்க, அத்தால் பெறும் ப்ராப்யமும், பெறுவிக்குமவளோட்டைச் சேர்த்தியும், இதெல்லாம் காணலாம்படி வடவேங்கடத்திலிருந்து திருவடிகளின் கீழிட்டுக்கொண்டபடி யெல்லாம் திருவுள்ளத்திலோடி, த்வயத்தின் பதங்களின் பொருளை அநுஸந்தித்திருக்கும்படி கடாக்ஷித்த பெரிய பெருமாளிடத்தில் க்ருதஜ்ஞதாநுஸந்தாநம் பண்ணுகிறாரென்று ஸங்கதி.

விசிஷ்டத்துக்கு ப்ராபகத்வம் சொல்லும்போது விசேஷணமான இருவுக்கும் ப்ராபகத்வம் வாராதோவென்ன வருளிச்செய்கிறார் (ப்ராபகேத்யாதி). (இவ்வவஸ்த்தைகள்) என்றது-த்வயத்தில் பதங்களில் தோற்றின ப்ராப்யத்வ ப்ராபகத்வ ப்ரதிபத்திகள்.

"அந்தணனை" என்று - வேதத்தைக் காக்குமவனை என்று அவனைச் சொல்லுகையாலே, ப்ரஹ்மசாரியானவிநீத வேஷத்தைச் சொன்னதுக்குத்தாத்பர்யமருளிச்செய்கிறார் (தானே யித்யாதி). ... ... (௭)

மூ.—துவரித்த வுடையவர்க்கும் தூய்மையில்லாச்சமணர்க்கும்
அவர்கட்கங்கருளில்லா வருளானைத் தன்னடைந்த
எமர்கட்கு ‡மடியேற்கு மெம்மாற்கு மெம்மனைக்கும்
அமரர்க்கும் பிரானாரைக் கண்டது தென்னரங்கத்தே. (௮)

பதம்.	உரை.
துவரித்த	செகப்பாகப் பண்ணின
உடையவர்க்கும்	காவிவஸ்த்ர மணிந்த புத்தர்க்கும்
தூய்மைஇல்லா	பாரிசுத்ய மில்லாத
சமணர்க்கும்	ஜைநர்க்கும்
அவர்கட்கு	இப்படி வேதபாஹ்யரான அவர்கள் விஷயத்தில்
அருள் இல்லா	க்ருபைபண்ணாத
அருளானை	க்ருபாவானுமாய்,
தன் அடைந்த	தன்னையே ஆஶ்ரயித்த
எமர்கட்கும்	என் ஸம்பந்த முடையார்க்கும்
அடியேற்கும்	அடியேனுக்கும்
எம்மாற்கும்	என்னுடைய தந்தைக்கும்
எம்மனைக்கும்	என்னுடைய தாய்க்கும்
அமரர்க்கும்	நித்ய ஸூரிகளுக்கும்
பிரானாரை	உபகாரகரு மானவரை
கண்டது தென்னரங்கத்தே. (௮)	

---

‡ "அடியேற்கும்"என்றே மூலஶ்ரீகோசங்களில் காண்கிறது; அரும்பதத்துக்கு "அடியேர்க்கு" என்று பஹுவசநமாக பாடமாம்.

வ்யா.—எட்டாம்பாட்டு (துவரித்த) சிவந்தவாஸஸ்ஸைத்தரிக்கக்கடவ புத்தர்க்கும், வைதிகரல்லாமையாலே ஸ்பர்ஶயோக்யரல்லாத அமணர்க்கும், வேதோக்தமான கர்மத்தாலே தன்னை ஆஶ்ரயியாதாரளவிலொருகாலும் க்ருபைபண்ணக்கடவ தன்றிக்கேயிருக்குமருளையுடையவனை. பால்மரமே யாகிலும் அகாலத்திலே குத்தினால் பால் மறுத்திருக்குமாபோலேயாய்த்திருப்பது.

(தன்னடைந்தவித்யாதி) தன்னையேபற்றின என்னோடு ஸம்பந்தமுடையார்க்கும்;- வைஷ்ணவர்களுக்குமென்றபடி; எனக்கும், எனக்குத்தாயும் தமப்பனுமென்றிருக்கிற விவர்களுக்கும், நித்யஸூரிகளுக்கு மொக்கத் தரம் வையாதே சேஷியாயிருக்குமவனை. ... (அ)

அரு.—எட்டாம்பாட்டு. (துவரித்தவித்யாதி). கீழ்ப்பாட்டிற் சொன்ன த்வயார்த்த நிஷ்டரிடத்தில் எம்பெருமானுக்குள்ள க்ருபையை யநுஸந்தித்து, இப்படி பரம வைதிகரான தம்மிடத்தில் (க) *கேசவன்றமரிற்படியே திருவடிகளின் ஸம்பந்தமுடையாரோடு திருமேனி ஸம்பந்தமுடையாரோடு வாசியற எல்லாரிடத்திலும் 'நித்யஸூரிகளிடத்திற் போலே பரிமாறினபடியைக் கண்டு, தம்மோடெதிரிட்ட புத்தாதிகளிடத்தில் பத்த (பத்)வைரராயிருந்தபடியை அநுஸந்தித்தினியராகிறாரென்று ஸங்கதி.

“துவரித்த வுடையவர்க்கும்” என்றும் “சமணர்க்கும்” என்றும் எடுத்திருக்க, மீளவும் “அவர்கட்கு” என்று அநுவதிக்கைக்கு ப்ரயோஜநம் ஸ்வப்ரதிகோடித்வம் தோற்றுகைக்காக என்று விவக்ஷித்து, “அவர்கட்கு” என்றது- அவர்களிடத்திலென்றுப்போலே ஸப்தம்யர்த்த மாக்கித் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (வேதோக்தமான வித்யாதி). “அருளானை” என்று - அருளே நிரூபகமானால் அவர்களிடத்தி லருளில்லாதவரா யிருக்கக்கூடுமோ வென்ன வருளிச்செய்கிறார் (பால்மர மித்யாதி).

விவரணம் (வைஷ்ணவரித்யாதி). “அடியேர்க்கும்” என்றது-ஸ்வாபாவிக பகவத்தாஸ்ய ப்ரபாவத்தாலே பூஜாயாம் பஹுவசநமென்று திருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிறார். (எனக்கும்) என்று. “எம்மனைக்கும்” என்றதினர்த்தம் (தாயும்). என்றது. “எம்மாற்கும்” என்றதி னர்த்தம் (தமப்பனும்) என்றது. ... ... (அ)

மூ.—பொய்வண்ணம் மனத்தகற்றிப் புலனைந்தும் செலவைத்து
மெய்வண்ணம் நினைந்தவர்க்கு மெய்நின்றவித்தகனை
மைவண்ணம் கருமுகில்போல் திகழ்வண்ணமரதகத்தின்
அவ்வண்ணவண்ணனை யான் கண்டது தென்னரங்கத்தே. (கூ)

(க) தி-வாய்-உ-எ.

பதம்.	உரை
பொய்	அநித்யங்களான ப்ராக்ருத வஸ்துக்களினுடைய
வண்ணம்	ஸ்வபாவத்தைப்பற்றி [யிருக்கிற
மனம்	மநஸ்ஸை [யும்
அகற்றி	நீக்கி
ஐந்துபுலன்	பஞ்சேந்த்ரியங்களை
செலவைத்து	விஷயங்களில் நின்றும் புறம்பாக்கி
மெய்வண்ணம்	யதார்த்தமாக
நினைந்தவர்க்கு	தன்னைத்யாநித்தவர்களுக்கு
மெய்நின்ற	யதார்த்த பூதனை

பதம்.	உரை.
வித்தகனை	ஆஶ்சர்ய பூதனும்,
மைவண்ணம்	அஞ்ஜநத்தின் நிறம் போலவும்
கருமுகில்போல்	இருண்ட மேகம்போலவும்
திகழ்	விளங்காநின்ற
வண்ணம்	வர்ணத்தையுடைய
மரதகத்தின்	மரதகமென்னும் ரத்நத்தினுடைய
அவ்வண்ணம்	அப்படிப்பட்ட நிறம் போன்ற [னவனை
வண்ணனை	நிறத்தையுடையனுமா
யான்கண்டது	தென்னரங்கத்தே. கூ

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (பொய்வண்ணம்) பொய்யென்றது-ப்ரக்ருதிப்ராக்ருதங்களை (க) "𑌸𑌤𑍍𑌯𑌞𑍍𑌚𑌾𑌨𑍃𑌤𑌞𑍍𑌚 - ஸத்யஞ்சாந்ருதஞ்ச" பொய்யினுடைய வண்ணத்தைப்பற்றின மநஸ்ஸை. (அகற்றி) ப்ரக்ருதிப்ராக்ருதங்களை "நன்று, ஸ்த்திரம்" என்றுப்போலே நினைத்திருக்கு மவற்றைவிட்டு. (புலனித்யாதி) மநஸ்ஸை அகற்றினாலும் பின்னையு மவற்றிலே கொடுபோய் மூட்டுமவையிறே - பாஹ்யேந்த்ரியங்கள்; அவை விஷயங்களில் போகாதபடிபண்ணி. (மெய்யித்யாதி) ஆத்மயாதாத்ம்ய ஜ்ஞாநபூர்வகமாகத் தன்பக்கலிலே பக்தியைப்பண்ணுமவர்களுக்கு. (மெய்நின்றவித்தகனை) தன்ஸ்வரூபாதிகளை உள்ளபடியே காட்டிக்கொடுக்கும் விஸ்மயநீயனை.

அவர்களுக்கு உள்ளபடியேகாட்டிக் கொடுப்பதெத்தை என்ன, (மையித்யாதி) (உ) "𑌵𑌿𑌵𑍃𑌣𑍁𑌤𑍇 𑌤𑌨𑍂𑌂 𑌸𑍍𑌵𑌾𑌂 - விவ்ருணுதே தநூம் ஸ்வாம்" அஞ்ஜநத்தினுடைய நிறம் இருண்டமேகம்போலே விளங்காநின்றுள்ள நிறத்தையுடைய மரதகத்தினுடைய அந்த நிறம்போலேயிருக்கிற நிறத்தையுடையவனை.... ... ... (கூ)

அரு.—ஒன்பதாம்பாட்டு. (பொய்யித்யாதி) கீழ்ப்பாட்டில்-புத்தாதிகளான பொய்யர்க்கெல்லாம் பொய்யனானபடியும், தம்மிடத்தில் மெய்யனாய் ஸம்பந்திகளளவும் க்ருபை பண்ணுமவனென்றநுபவித்தவர், தம்

(க) தைத்திரீ-ஆந-சு. (உ) கடோப-ரு-உரு.

மைப்போலே நிரதிசயபக்தி நிஷ்ட்டரான ஆழ்வார்களிடத்தில் (க) * அரவத்தமளிப்படியே யெழுந்தருளி யிருக்கும்படியை அநுஸந்தித்து ஈடுபடுகிறாரென்று ஸங்கதி. அன்றிக்கே, பரிநிஷ்பந்நமான ஸாதநபக்தி நிஷ்ட்டரிடத்திலே யிருந்தாப்போலே என்பக்கலநுக்ரஹித்தாரென்று த்ருஷ்டாந்தார்த்தமாக அநுஸந்திக்கிறாரென்னவுமாம்.

(அந்ருதம்) என்றது-அஸ்த்திரங்களான ப்ரக்ருதி ப்ராக்ருதங்களைச் சொல்லுகிறது. "செல" என்றது-செல்லவென்றாய், விஷயங்களில் நின்றும் புறம்பே போம்படி பண்ணியென்னு மர்த்தத்தை யருளிச்செய்கிறார் (அவையீத்யாதி). ... ... (கூ)

மூ.—ஆமருவி நிரைமேய்த்த வணியரங்கத்தம்மானைக்
காமரு சீர்க் கலிகன்றி யொலிசெய்த மலிபுகழ்சேர்
நாமருவு தமிழ்மாலை நாலிரண்டோடிரண்டினையும்
தாமருவி வல்லார் மேல் சாரா தீவினை தானே. (கo)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பதம்.	உரை.
ஆ நிரை	பசுக்கூட்டங்களை
மருவி	பொருந்திநின்று
மேய்த்த	ரக்ஷித்தவனாய்,
அணி	பூலோகத்துக் கலங்காரமான
அரங்கத்து	திருவரங்கத்திலே கண் வளர்ந்தருளுகிற
அம்மானை	ஸ்வாமியானவன் விஷயமாக,
காமரு	ஆசைப்படத்தகுந்த
சீர்	ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீயையுடைய
கலிகன்றி	ஆழ்வார்
ஒலிசெய்த	அருளிச்செய்ததாய்
மலி	ஸம்ருத்தமான
புகழ்சேர்	கீர்த்தியை யுடையதாய்
நாமருவு	நாவிலே பொருந்தியிருக்குமதாய்
தமிழ்மாலை	த்ராவிடகாதா (गाथा) ரூபமான
நால் இரண்டோடு இரண்டினையும்	பத்துப் பாசுரங்களையும்
தாம்	தாங்கள்
மருவி	பொருந்தியிருந்து
வல்லார்மேல்	அப்யஸித்தவர்களிடத்தில்
தானே	ஸ்வயமே
தீவினை	பாபங்களானவை
சாரா	அணையமாட்டா. கo

வ்யா.—பத்தாம்பாட்டு. (ஆமருவி) ஸ்வரக்ஷணத்துக்கு ஒரு கைம் முதலில்லாத பசுக்களை அவற்றோடே பொருந்தி ரக்ஷித்து, "அது

(க) பெரி-திரு-ரு-உ-கo.

தான் பரதசை'' என்னும்படி கோயிலிலேவந்து ஸுலபனானவனை. எல்லார்க்கும் ஸ்ப்ருஹை பண்ணவேண்டும்படியான வைஷ்ணவலக்ஷ்மியையுடைய ஆழ்வார், ஒலியுடைத்ததாகச்செய்த தமிழ்மாலை. (நாமருவு) மநஸ்ஸஹகாரம் வேண்டாதே, இத்தை ஒருகால் நாக்கிலேயிட்டால், பின்னை நா விடாதே யிருக்குமாய்த்து. (மருவிவல்லார்) மநஸ்ஸோடே இத்தை யநுஸந்தித்துக் கற்றவர்கள்மேல், இவர்கள் "போக்கவேணும்'' என்று நினையாதிருக்க, துஷ்கர்மங்கள், தானே "இது நமக்கு நிலமல்ல'' என்று விட்டோடிப்போம். ... ... (௧௦)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

அரு.—பத்தாம்பாட்டு. (ஆமருவி யித்யாதி) "ஆ-நிரையை-மருவி-மேய்த்த'' என்று அர்வயம் திருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிறார் (ஸ்வரக்ஷணத்துக் கித்யாதி). (நாவிடாதே) என்றது - நாக்கானது ரஸ்யதையாலே விடாதே யென்கை. ... ... (௧௦)

ஜீயர் திருவடிகளே சரணம்.

அஞ்சாம்பத்தில் ஆறாந்திருமொழி முடிந்தது.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

அஞ்சாம்பத்து ஏழாந் திருமொழி

பண்டை ப்ரவேசம்.

வ்யா.—ஜகத்காரணபூதனாய், ப்ரஹ்மாதிகளுக்கும் ஆஶ்ரயணீயனாய், ஸகலசேதநர்க்கும் துஃக்கநிவர்த்தகனாய், ஆஶ்ரிதர்க்கு அபேக்ஷிதஸமயங்களிலேவந்து உதவும் ஸ்வபாவனான ஸர்வேஶ்வரன், அவ்வவதாரங்களைப்பண்ணியருளுகிற காலங்களிலுதவாதாரு மிழக்கவேண்டாதபடி, அவதாரங்கள்போலே தீர்த்தம் ப்ரஸாதியாதே கோயிலிலே வந்து நித்யவாஸம்பண்ணியருள, கண்டநுபவிக்கப்பெற்றேன் என்றினியராய்ப் பேசுகிறார்.

அரு.—பண்டைநான்மறையின் ப்ரவேசம். கீழ்த்திருமொழியில் தாம் கண்டுகளித்தமையை அநுபவித்தவர், இத்திருமொழியில் அவன் ஸ்த்தாவர

ப்ரதிஷ்ட்டையா யிருந்தமையை அநுஸந்தித்து இனியராகிறாரென்னும் ஸங்கதி யுட்கொண்டு, ப்ரமேயோபந்யாஸம் பண்ணுகிறார் (ஜகதித்யாதி).

மூ.—

பண்டைநான்மறையும்வேள்வியும் கேள்விப்பதங்களும்பதங்களின்பொருளும்
பிண்டமாய் விரிந்த பிறங்கொளியனலும் பெருகியபுனலொடுநிலனும்
கொண்டல்மாருதமும்குரைகடலேழுமேழுமாமலைகளும்விசும்பும்
அண்டமும் தானாய்நின்றவெம்பெருமா னரங்கமாநகரமர்ந்தானே

பதம்.	உரை.	பதம்.	உரை.
பண்டை	அநாதியான	கொண்டல்	மேகமும்,
நால் மறையும்	சதுர்வேதங்களும்,	மாருதமும்	காற்றும்,
வேள்வியும்	யாகங்களும்,	குரை	சப்தியாநின்ற
கேள்வி	கேட்டறியவேண்டிய	ஏழ்கடலும்	ஸப்தஸமுத்ரங்களும்,
பதங்களும்	வ்யாகரண சாஸ்த்ரமும்,	மா	பெரிய
		ஏழ்மலைகளும்	ஸப்தகுல பர்வதங்களும்,
பதங்களின்	சப்தங்களினுடைய	விசும்பும்	ஆகாசமும்,
பொருளும்	அர்த்தமான (சாஸ்த்ர ப்ரதிபாத்யமான) ஜீவ ஸமஷ்டியும்,	அண்டமும்	ப்ரஹ்மாண்டமும் (ஆகிய இவற்றை)
		தானாய்	தனக்கு ப்ரகாரமாகவுடையனாய்க்கொண்டு
பிண்டமாய்	காரணாவஸ்த்தமாயிருந்து		
விரிந்த	(பின்பு) விஸ்த்ருதமாகாநின்றுள்ளதாய்	நின்ற	எழுந்தருளி யிருக்கிற
		எம்பெருமான்	ஸர்வேஶ்வரன்
பிறங்கு	விளங்காநின்ற		
ஒளி	காந்தியை யுடைத்தான	அரங்கமாநகர்	திருவரங்கமென்னும் பெரிய திவ்யதேசத்தில்
அனலும்	அக்நியும்,		
பெருகிய	ப்ரவஹியாநின்ற		
புனலொடு	ஜலத்தோடுகூடின	அமர்ந்தான்	கண்வளர்ந்தருளாநின்றான். (க)
நிலனும்	பூமியும்,		

வ்யா.—முதற்பாட்டு. (பண்டைநான்மறையித்யாதி)(க) "𑌪𑍂𑌰𑍍𑌵𑍇 𑌪𑍂𑌰𑍍𑌵𑍇𑌭𑍍𑌯𑍋 𑌵𑌚 𑌏𑌤𑌦𑍂𑌚𑍁𑌃-பூர்வே பூர்வேப்யோ வச ஏததூசு:" என்கிறபடியே - பூர்வபூர்வோச்சாரண க்ரமத்தைப்பற்ற உத்தரோத்தரோச்சார்யமாணமாகையாலே, புருஷபுத்த்யதீநமானால் வரக்கடவ தோஷங்களொன்றுமில்லாத வேதங்களும், அவ்வேதங்களாலே விதிக்கப்படுகிற யாகாதிக்ரியைகளும், பதரூபத்தாலும் அக்ஷரரூபத்தாலும் ஶ்ரவணம் பண்ணி யறியவேண்டும்படியிருக்கிற வ்யாகரணசாஸ்த்ரமும், அவ்

(க)

வோபதங்களாலே யறியப்படுகிற ஜீவஸமஷ்டியும், நாநாவான கார்யங்களுக்கெல்லாம் காரணமாயிருக்கிற அசித்ஸமஷ்டியில் நின்றும் விஸ்த்ருதமாகாநின்றுள்ள தேஜஃபதார்த்தம், ஜலதத்வம், பூமி என்றாப்போலேசொல்லுகிற ப்ருதிவ்யாதிபூதபஞ்சகமும், சேதநர்க்கு அபேக்ஷித ஸமயங்களிலே முகங்காட்டி உபகரிக்கக்கடவமேகங்கள், அப்படி உபகரிப்பதான வாயுதத்வமும், பூமிக்குவேலியிட்டாப்போலேயாய் மிக்க கோஷத்தையுடைத்தான ஸப்தஸமுத்ரங்களும், பூமிக்கு ஆணியடித்தாப்போலேயிருக்கிற குலபர்வதங்களும், இத்தனைக்கும் அவகாசப்ரதாநம்பண்ணுகிற ஆகாசமும், இவை எல்லாமாயிருக்கிற அண்டமெங்கும்புக்கு அநுப்ரவேசித்து, (க) "𑌤𑌾𑌨𑌿𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌤𑌦𑍍𑌵𑌪𑍁𑌃 - தாநிஸர்வாணி தத்வபுஃ" என்கிறபடியே இவற்றைச்சொன்னபாசுரம் தன்னளவும் வரும்படியாயிருக்கையாலே இவையடைய "தான்" என்று சொல்லும்படி சரீரதயா சேஷமாகத்தான் சேஷியாயிருக்கிற ஸர்வேஶ்வரன், கோயிலிலேவந்து கண்வளர்ந்தருளக்கண்டு அநுபவிக்கப்பெற்றேனென்கிறார். ... ... (க)

அரு.—முதற்பாட்டு. (பண்டையித்யாதி) பண்டை- அநாதியான, நாலுவகைப்பட்ட மறைகளென்று சப்தார்த்தமாய், அப்போதைக்கப்போது உச்சார்யமாணமாயிருக்க அநாதித்வ மெங்ஙனே என்கிற சங்கையைப் பரிஹரியாநின்றுகொண்டு, தாத்பர்ய மருளிச்செய்கிறார் (பூர்வ இத்யாதி). கேள்விக்கே யோக்யமாய் பதஸமுதாயாத்மகமான வ்யாகரணமென்றருளிச் செய்கிறார் (பதேத்யாதி). (அக்ஷர ரூபத்தாலும்) என்றது "அ இ உண்" இத்யாத்யக்ஷரரூபத்தாலும் என்றபடி. மேல் அசித்தைச் சொல்லுகையாலே "பொருள்" என்று சேதந ஸமஷ்டியாக்கி அருளிச் செய்கிறார் (அவ்வோவித்யாதி). கட(஘ட)சராவாதிகளுக்குக் காரணாவஸ்த்தமான பிண்டாவஸ்த்தைபோலே காரணாவஸ்த்தாபந்நமான அவ்யக்தாவஸ்த்தமாய், விரிந்த- மஹதாதி ரூபேண விஸ்த்ருதமாய், பிறங்கு - விளங்காநின்றுள்ள, ஒளியையுடைய அனலும், ப்ரவஹிக்கை ஸ்வபாவமான ஜலமும், பூமியுமான தேஜோऽபந்நங்களை மற்றை இரண்டுக்கு முபலக்ஷணங்களாக்கி, காரணாவஸ்த்தங்களான பஞ்சீக்ருதங்களைச் சொல்லுகிறதென்று விவக்ஷித் தருளிச்செய்கிறார் (நாநாவித்யாதி). ... ... (உ)

மூ.—

இந்திரன்பிரமனீசனென்றிவர்க ளெண்ணில் பல்குணங்களேயியற்ற
தந்தையும் தாயும் மக்களும் மிக்க சுற்றமும் சுற்றிநின்றகலாப்

(க) வி-பு-க-உஉ-அசு

பந்தமும்பந்தமறுப்பதோர்மருந்தும் பான்மையும்பல்லுயிர்க்கெல்லா
அந்தமும் வாழ்வு மாய வெம்பெருமா னரங்கமாநகரமர்ந்தானே. [ம்

பதம்.	உரை.	பதம்.	உரை.
இந்திரன்	இந்த்ரன்	சற்றமும்	ஜ்ஞாதிகளும்,
பிரமன்	ப்ரஹ்மா	சுற்றிநின்று	சூழ்ந்திருந்து
ஈசன்	ருத்ரன்	அகலா	விட்டுநீங்காத
என்று	என்றுசொல்லப்பட்ட	பந்தமும்	பந்துக்களும், [தை
இவர்கள்	இவர்கள்	பந்தம்	ஸம்ஸார ஸம்பந்தத்
எண்இல்	அஸங்க்யேயமான	அறுப்பது	போக்காநின்ற
பல்குணங்க	அநேக குணங்களைச்	ஓர்	அத்விதீயமான
ள்	சொல்லி [நிற்கா	மருந்தும்	ஔஷதமும், [ம்
இயற்ற	ஸ்தோத்ரம் பண்ணு	பான்மையும்	ப்ராப்ய ஸ்வபாவமு
பல்லுயிர்க்	அநேக ஜீவ கோடிக	அந்தமும்	லயஸ்த்தாநமும்,
கெல்லாம்	ளுக்கும்	வாழ்வும்	ஸுகமும்,
தந்தையும்	தகப்பனும்,	ஆய	ஆகிய இந்த ஸ்வரூபி
தாயும்	மாதாவும்,		யா யிருக்கிற
மக்களும்	பிள்ளைகளும்,	எம்பெருமான்	அரங்கமாநகர் அமர்
மிக்க	அதிகமான	ந்தானே.	(உ)

வ்யா.—இரண்டாம்பாட்டு. (இந்திரனித்யாதி) தன்னாலே ஸ்ருஜ்யரான இந்த்ரன், ப்ரஹ்மா, ருத்ரன் என்று ப்ரதாநராகச்சொல்லுகிற இவர்கள். இதில், இந்த்ரனை முற்படவெடுத்துப் பின்னை இவர்களைச் சொல்லுகையாலே-இவனோடு அவர்களோடு வாசியில்லை; சதுர்முகனை ஈஶ்வரன் என்று சிலர் சொல்லுமன்று ருத்ரன்பக்கல் ஈஶ்வரத்வமுள்ளது; இப்படி ஜகத்துக்கு ப்ரதாநராயிருக்கிற விவர்கள், பக்நாபிமாநராய்க்கொண்டு, அஸங்க்யேயமான பலகுணங்களையும் சொல்லி ஸ்துதியாநின்றுகொண்டு ஆஶ்ரயிக்க; ப்ராணிகளுக்கெல்லாம் ஹிதப்ரவர்த்தகராயிருக்கக்கடவ பிதாவும், ப்ரியத்திலே நடக்கக்கடவ தாயும், நிரயநிஸ்தாரகரான புத்ரர்களும், அளவிறந்திருந்துள்ள ஜ்ஞாதிவர்க்கமும், கிட்டிவிடாதே நிற்கக்கடவ பந்துவர்க்கமும், இப்படிப்பட்ட ஸம்ஸாரஸம்பந்தத்தைப் போக்கக்கடவதான பேஷஜமும், இஸ்ஸம்ஸாரஸம்பந்தமற்றால் இருக்கக்கடவ நிஷ்களஸ்வபாவமும், ஸகலசேதநர்க்கும் லயூத்தி லிருப்பிடமாயிருக்குமவனும், பாலநத்தால் வரக்கடவதான ஸுகமும், இவ்விரண்டாலும் ஸ்ருஷ்டியையும் நினைக்கிறது. இப்படி ஸகலப்ராணிகளுடைய ஸ்ருஷ்டிஸ்த்திதி ஸம்ஹாரங்களுக்கும் கடவனாயிருக்கிற ஸர்வேஶ்வரன். ... ... (உ)

அநு.—இரண்டாம்பாட்டு: (இந்திரனித்யாதி) (௧) "வாழ்த்துவார் பலராக நின்னுள்ளே நான்முகனை மூழ்த்த நீருலகெல்லாம் படையென்று முதல் படைத்தாய்" என்கிறபடியே - எத்துகைக்காக, கீழ்ப்பாட்டில் - ஜகத்ஸ்ருஷ்டி ப்ரகாரேண ஸர்வவ்யாபநத்தைச் சொல்லும்வகையாலே ஸகல ஜகத்காரணத்வம் சொன்னாராய், அந்த ஸ்ருஷ்டி ப்ரயோஜநமான ப்ரஹ்மாத்யாஶ்ரயணத்தை இப்பாட்டிலருளிச்செய்கிறாரென்று ஸங்கதி.

(உள்ளது) என்ற வநந்தரம், "என்று சிலர் சொல்லும்" என்று அநுஷங்கித்துக்கொள்வது. "பந்தமும்" என்றது-ஸம்பந்தமுடைய பந்துவர்க்கத்தைச் சொல்லுகிறதென்கிறார் (கிட்டியித்யாதி). (நிஷ்கள ஸ்வபாவம்) முக்தஸ்வரூபம். "அந்தம்" என்கிற நாசவாசகமான சப்தம் - அதிகரண வாசகமென்று திருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிறார் (லயத்தி லித்யாதி). … … … … … … … (௨)

மூ.—

மன்னுமாநிலனும் மலைகளும் கடலும் வானமும்தானவருலகும்
துன்னுமாயிருளாய்த்துலங்கொளிசுருங்கித்தொல்லைநான்மறைகளும்மறைய
பின்னும்வானவர்க்கும்முனிவர்க்கும்நல்கிப்பிறங்கிருள்நிறங்கெடவொருநாள்
அன்னமாயன்றங்கருமறை பயந்தானரங்கமாநகரமர்ந்தானே.

பதம்.	உரை.
மன்னு	த்ருடமாய்(கடிநமாய்)
மா	விசாலமான
நிலனும்	பூமியும்,
மலைகளும்.	குலபர்வதங்களும்,
கடலும்	ஸமுத்ரமும்,
வானமும்	ஆகாசமும்,
தானவர்	அஸுரர்களுடைய
உலகும்	லோகமும் (குடியிருப்பும்) (இவையெல்லாம்)
துன்னு	நெருங்கியிருக்கிற
மா	பெரிய
இருளாய்	அந்தகார(த்தினால் ஆவ்ருத) மாய்க்கொண்டு,
துலங்கு	ப்ரகாசியாநின்ற
ஒளி	தேஜஸ்ஸானது
சுருங்கி	ஸங்கோசமடைந்து,
தொல்லை	அநாதியான
நால் மறைகளும்	நான்கு வேதங்களும்
மறைய	அந்தர்த்தாநமாய்விட (அக்காலத்தில்)
பின்னும்	மறுபடியும்
வானவர்க்கும்	தேவர்கள் விஷயத்திலும்
முனிவர்க்கும்	ருஷிகள் விஷயத்திலும்
நல்கி	ஸ்நேஹத்தைப் பண்ணி
பிறங்கு	மிக்குவாராநின்ற
இருள்	அந்தகாரமானது

---

(௧) தி-வாய் ௩-௧-௭.

நிறம் கெட	கழியும்படியாக	அரு	பெறுதற்கரிதான
அன்று ஒருநாள்	அப்போதொரு காலத்தில் [கொண்டு	மறை	வேதங்களை
அன்னமாய்	ஹம்ஸரூபியாய்க்	பயந்தான்	கொடுத்தருளினவன்
அங்கு	அவர்கள்விஷயத்தில்	அரங்கமா நகரமர்ந்தான். (௩)	

வ்யா.—மூன்றாம்பாட்டு. (மன்னுமாநிலனித்யாதி) கடினையான ப்ருதிவியும், குலபர்வதங்களும், ஸமுத்ரமும், ஆகாசமும், அஸுரர்களுடைய குடியிருப்பும், இவையடைய நெருங்கினபேரிருளாய், ப்ரகாசதத்வந்தான்போய் ஸங்குசிதமாய், ப்ரகாசத்தைப்பண்ணித் தரக்கடவதாயிருந்துள்ள வேதங்களும் மறைய. (பின்னும்) பின்னையும். (௧) "𑌯𑍋 𑌵𑍈 𑌵𑍇𑌦𑌾𑌂𑌶𑍍𑌚 𑌪𑍍𑌰𑌹𑌿𑌣𑍋𑌤𑌿 - யோவைவேதாம்ஶ்ச ப்ரஹிணோதி" என்கிறபடியே - ஒருகால் ஓதுவித்துவிட்டோமாகில் அத்தைப்பறிகொடுத்தபின்பு இனி நம்மால் செய்யலாவதுண்டோ! என்று கைவாங்குகையன்றிக்கே, தேவர்கள்பக்கலிலும் ப்ராஹ்மணர்கள் பக்கலிலும் ஸ்நேஹத்தைப்பண்ணி, மிக்கவிருளானது கழியும்படியாக, தன்னைப் பேணாதே கேட்கிறவனுக்கு ஆசார்யாநுவர்த்தநம் பண்ணவேண்டுகிறதோ! என்று கூசவேண்டாதவடிவைக்கொண்டு, தன்னைப்பெறிலும் பெறவொண்ணாத வேதங்களை வெளியிட்டவன். (அரங்கமாநகரமர்ந்தானே) அன்று ப்ரமாணத்தை வெளியிட்டுத்தந்தவன், இன்று ப்ரமேயபூதனான தன்னை வெளியிட்டுக்கொண்டு வந்து கண்வளர்ந்தருளினான். .... (௩)

அரு.—மூன்றாம்பாட்டு. (மன்னுமித்யாதி) கீழ்ப்பாட்டில் - ப்ரஹ்மாதிகளுக் காஶ்ரயணீயனா யிருக்கும்படியைச் சொன்னாராய், இதில் - அதுக்குறுப்பாக வேதப்ரதாநாதி முகேந து:க்கநிவர்த்தகத்வம் சொல்லுகிறாரென்று ஸங்கதி.

"துன்னு" என்றதினர்த்தம் (நெருங்கினால்) என்றது.... ... (௩)

மூ.—மாயிருங்குன்றமொன்று மத்தாக மாசுணமதனொடுமளவி
பாயிரும்பௌவம்பகடுவிண்டலறப்படுதிரைவிசும்பிடைப்படர
சேயிருவிசும்பும்திங்களும் சுடரும்தேவரும்தாமுடன்திசைப்ப
ஆயிரந்தோளாலலைகடல் கடைந்தானரங்கமாநகரமர்ந்தானே.

---

(௧) ஶ்வேதாஶ்வ-௬.

பதம்.	உரை.
மா	அகன்றும்
இரும்	உயர்ந்துமிருக்கிற
ஒன்று	அத்விதீயமான
குன்றம்	மந்தரபர்வதத்தை
மத்தாக	கவ்வமாகநாட்டி,
அதனொடும்	அத்தோடும் (அந்த பர்வதத்தில்)
மாசுணம்	வாஸுகி யென்னும்
அளவி	சுற்றி, [பாம்பை
பா	பரந்தும்
இரும்	நீண்டுமிருக்கிற
பௌவம்	ஸமுத்ரமானது
பகுவிண்டு	வாய்திறந்து [வும்,
அலற	கூப்பிடும்படி யாக
படு	(அதில்) உண்டாகாநின்ற
திரை	அலைகளானவை
விசும்பிடை	ஆகாசத்தின் நடுவே
படர	வ்யாபிக்கும்படியாகவும்,
சே	தூரஸ்த்தமாய்
இரு	பரந்திருந்துள்ள
விசும்பும்	ஸ்வர்க்காதிலோகங்க
திங்களும்	சந்த்ரனும் [ளும்
சுடரும்	(மற்றஎல்லாத்) தேஜஸ்ஸுக்களும்
தேவரும்	தேவதைகளும்
உடன்	ஏககாலத்திலே
திசைப்ப	ஆஶ்சர்யப் படும்படியாகவும்,
அலை	அலை யெறியாநின்ற
கடல்	ஸமுத்ரத்தை
ஆயிரம் தோளால்	ஆயிரம் தோள்களாகத்தோற்றும்படியான நாலு திருத்தோள்களினால்
கடைந்தான்	மதநம்பண்ணினவன்

அரங்கமாநகர் அமர்ந்தான்.(ச)

வ்யா.—நாலாம்பாட்டு. (மாயிருமித்யாதி) அகலத்தாலும் அளவாலும் குறைவற்றிருந்துள்ள மந்தரபர்வதமானது மத்தாக, வாஸுகியினுடம்பை அத்தோடேசுற்றி, பரந்து நீண்டிருந்துள்ள கடலானது ஆனை பிளிறுமாபோலே கிடந்து கோஷிக்க, அப்போதை க்ஷோபத்திலேயுண்டான திரைகள் ஆகாசத்தை இடமடைத்துக்கொண்டு படர; தூரஸ்த்தமாய் விஸ்த்ருதமாயிருந்துள்ள ஸ்வர்க்காதிலோகங்களும், சந்த்ரனும், மற்றுமுண்டான தேஜஃபதார்த்தங்களும், மற்றுமுண்டான தேவஜாதியும், ஏககாலத்திலே விஸ்மயப்படச்செய்த கார்யம். (ஆயிரந்தோளால்) நாலுதோள்கொண்டு வ்யாபரித்தபடிதான், ஆயிரந்தோள்கொண்டு வ்யாபரித்தான் என்னலாமபடி யாய்த்து. (ச)

அரு.—நாலாம்பாட்டு. (மாயிருமித்யாதி) கீழ்ப்பாட்டில் - வேதப்ரதாநமுகேந துஃக்கநிவர்த்தகத்வத்தை யருளிச்செய்து, இதில் - அம்ருதப்ரதாநமுகேந துஃக்கநிவர்த்தகத்வத்தை அருளிச்செய்கிறாரென்று ஸங்கதி.

(அளவால்) என்றது - ஔந்நத்யத்தால் என்றபடி. "மாசுணம்" என்றது - பாம்பாய், அதினர்த்தம் (வாஸுகி) என்றது. பகு - வாயாய், வி

ண்டு - திறந்தென்று சப்தார்த்தமாயருளிச்செய்கிறார் (ஆணையித்யாதி). (ஸ்வர்க்காதி லோகங்களும்) என்றது - தத்ரத்யரைச் சொல்லுகிறது. (௪)

மூ.—எங்ஙனேயுய்வர்தானவர் நினைந்தா லிரணியனிலங்கு பூணகலம்
பொங்குவெங்குருதிபொன்மலைபிளந்துபொழிதருமருவியொத்திழிய
வெங்கண்வாளெயிற்றோர்வெள்ளிமா விலங்கல்விண்ணுறக் கனல்விழித்தெழுந்தது
அங்ஙனேயொக்கவரியுருவானானரங்கமாநகரமர்ந்தானே.

பதம்.	உரை.
தானவர்	அஸுரர்கள்
நினைந்தால்	(இந்த ஹிரண்யவதத்தை) நினைந்தார்களாகில்
எங்ஙனே உய்வர்	எப்படி ப்ராணதாரணம் பண்ணுவார்கள்?
இரணியன்	ஹிரண்யாஸுரனுடைய
பூண்	ஆபரணங்களாலே
இலங்கு	விளங்காநின்றுள்ள
அகலம்	மார்பில்நின்றும்,
பொங்கு	வ்ருத்தியடையாநிற்பதாய்
வெம்	உஷ்ணமாயிருக்கிற
குருதி	ரத்தமானது,
பொன்மலை	ஸ்வர்ணமயமான மேரு மலையை
பிளந்து	பிளந்துகொண்டு
பொழிதரும்	ப்ரவஹியாநின்ற
அருவிஒத்து	மலையாறுபோலே
இழிய	பெருகும்படியாக,
வெம்	சிவந்திருக்கிற
கண்	கண்களையும்
வாள்	வாளாயுதம்போன்ற
எயிறு	பற்களையுமுடையதாய்
மா	பெரிதாய்
ஓர்	அத்விதீயமான
வெள்ளிவிலங்கல்	வெள்ளிமலையானது
விண் உற	ஆகாசத்தைக்கிட்டி,
கனல்விழித்து	தீவிழி விழித்து
எழுந்தது ஒக்க	தோற்றினதுபோலிராநின்ற
அங்ஙன்	அப்படிப்பட்ட
அரி உரு ஆனான்	நரஸிம்ஹாவதாரம் பண்ணினவன்
அரங்கமாநகர்	அமர்ந்தான். (௫)

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (எங்ஙனே) நம்மைப்போலே அநுகூலித்து, ப்ரஹ்லாதனைப்போலே "இது நமக்காகச்செய்தசெயல்" என்றிருப்பார் உஜ்ஜீவிக்குமத்தனைபோக்கி, சத்ருபக்ஷமான அஸுரவர்க்கம் இவ்வபதாநத்தை ஸ்மரித்தால் எங்ஙனே உஜ்ஜீவிக்கும்படி? ஹிரண்யனுடைய, ஆபரணங்களாலே அலங்க்ருதமாகா நின்றுள்ள மார்வானதில். (பொங்குவெங்குருதி) போக்கிடம் காணாமையாலே பெரியகிளர்த்தியோடே கோஷித்துக்கொண்டுவருகிற ருதிரவெள்ளமானது, மேருவைப்பிட்டுக்கொடு வெள்ளமிடாநின்றுள்ள அருவிபோலே வந்திழிய. அவனும் ஹிரண்யனிறே. நாநாவான தாதுக்களா

லே கலங்கி மேருவைப்பிட்டுக்கொடு இழிகிறது, ஹிரண்யனுடலைப் பிளந்து கிழித்துக்கொடு இழிகிற ருதிரம்போலே யிராநின்றதாய்த்து. வெவ்விதான கண்ணையும், ஒளியையுடைத்தான எயிற்றையுமுடைத்தாய், வெள்ளியாலே சமைந்ததொரு பெரியமலையானது, ஆகாசத்தை ஊடுருவி அக்நிகல்பமாகப் பாராநின்றுகொண்டு தோற்றினது போலே யிருக்க, நரஸிம்ஹவேஷத்தைக் கொண்டவவன், இன்னமப்படிக்கொத்த விரோதிவர்க்கம் வந்து கிட்டினால் போக்குகைக்காக இங்கேவந்து ஸந்நிஹிதனானான். ... ... (ரு)

அரு —அஞ்சாம்பாட்டு. (எங்ஙனேயித்யாதி) கீழிரண்டு பாட்டாலும்-வேதப்ரதாநத்தாலும் அம்ருத ப்ரதாநத்தாலும் ப்ரஹ்மாதிகளுடைய து:க்கம் போக்கினபடி யருளிச்செய்தாராய், இனி அஞ்சு பாட்டாலும் - து:க்க நிவர்த்தகனான மாத்ரமன்றிக்கே ஆஶ்ரித ரபேக்ஷித்தபோது முகங்காட்டி உதவும் ஸ்வபாவங்களைச் சொல்லுகிறாரென்று ஸங்கதி.

(பிட்டுக்கொடு) பிளந்துகொண்டு. பொன்மலையை த்ருஷ்டாந்தமாக்கினதுக்குக் க்ருத்தருளிச்செய்கிறார் (அவனுமித்யாதி). அருவி வெளுத்தன்றோ விருப்பது, குருதிக்கு த்ருஷ்டாந்தமாகக் கூடுமோ வென்ன வருளிச்செய்கிறார் (நாநாவான வித்யாதி). ... ... (ரு)

மூ.—

ஆயிரம்குன்றம்சென்ற தொக்கனையவடல்புரையெழிறிகழ்திரடோள்
ஆயிரந்துணியவடல் மழுப்பற்றி மற்றவனகல்விசும்பணைய
ஆயிரம்பெயராலமரர் சென்றிறைஞ்சவறிதுயிலலைகடல்நடுவே
ஆயிரம்சுடர்வாயரவணைத் துயின்றானரங்கமாநகரமர்ந்தானே. (சு)

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஆயிரம்குன்றம்	ஆயிரம் மலைகள்	துணிய	அறும்படியாக,
		அடல்	யுத்தத்திலே [தை
தொக்கு	சேர்ந்து	மழு	மழுவென்னும்ஆயுதத்
சென்றது அனைய	சென்றாப்போலே யிருந்ததாய் [யாய்	பற்றி	கையிலே தரித்து,
		மற்று	அதுக்குமேலே
அடல்புரை	யுத்தத்துக்குத் தகுதி	அவன்	அந்தகார்த்த வீர்யனானவன்
எழில்	காந்தியானது		
திகழ்	விளங்காநின்றதாய்	அகல்	பரந்திருந்துள்ள
திரள்	திரண்டிருக்கிற	விசும்பு	வீரஸ்வர்க்கத்தை
தோள்ஆயிரம்	(கார்த்த வீர்யனுடைய) ஆயிரம் புஜங்களும்	அணைய	அடைய, (அநந்தரம்)
		அமரர்	தேவர்கள்
		சென்று	கிட்டி

ஆயிரம்பெயரால்	ஸஹஸ்ரநாமங்களைச் சொல்லி	ஆயிரம்வாய்	ஸஹஸ்ரமுகங்களையுடைய
இறைஞ்ச	ஸ்தோத்ரம் பண்ணநிற்க	அரவு அணை	திருவனந்தாழ்வானாகிற படுக்கையிலே
அலை	அலைமோதாநின்ற	அறிதுயில்	யோக நித்ரையை
கடல்நடுவே	ஸமுத்ரத்தின் மத்யத்தில்	துயின்றான்	பண்ணினவன்
சுடர்	உஜ்ஜ்வலங்களான	அரங்கமாநகர் அமர்ந்தான். (௬)	

வ்யா.—ஆறும்பாட்டு. (ஆயிரம் குன்றமித்யாதி) ஆயிரம் மலைகள் தன்னிலே திரண்டு சென்றாப்போலே, யுத்தத்துக்குத் தகுதியாய், எழில் விளங்காநிற்பதாய், திரண்டிருந்துள்ள தோள்களாயிரமும் துணியும்படியாக, யுத்தத்திலே கையிலே மழுவைத்தரித்து, மற்றவனுண்டு—ஸஹஸ்ரபாஹ்வர்ஜுநன், ஸ்வஹஸ்த வதத்தாலே வீரஸ்வர்க்கத்தை ப்ராபிக்க; அவனாலே பீடிதரான தேவர்களடங்கலும், அநந்தரம் திருநாமங்களாயிரம் சொல்லி ஆஶ்ரயிக்க, யோகநித்ரையை, ஸ்வஸந்நிதாநத்தாலே களித்துத் திரை மோதாநின்றுள்ள கடலின் நடுவே, நித்யாநுபவம் பண்ணுகையால் வந்தஹர்ஷத்துக்குப் போக்குவீடாகப், புகரையுடைத்தான பலவாய்களையுமுடைய திருவனந்தாழ்வான்மேலே கண்வளர்ந்தருளினவன், அப்படியே காணலாம்படி இங்கேவந்து ஸந்நிஹிதனானான் ... ... (௬)

அந.—ஆறும்பாட்டு (ஆயிரமித்யாதி) "ஆயிரம் - குன்றம்- தொக்கு- சென்றது - அனைய" என்றந்வயித்தருளிச்செய்கிறார் (ஆயிரமித்யாதி). (யோகநித்ரையை) என்றதுக்கு, (கண்வளர்ந்தருளினவன்) என்றத்தோடந்வயம்; பாகம் பசதி (పాకం పచతి) என்னுமாபோலே. ... ... (௬)

மூ.—

சுரிகுழற்கனிவாய்த்திருவினைப்பிரித்த கொடுமையிற்கடுவிசையரக்கன்
எரிவிழித்திலங்கு மணிமுடி பொடிசெய்திலங்கை பாழ்படுப்பதற்கெண்ணி
வரி சிலை வளைய வடுசரம்துரந்து மறிகடல் நெறிபட மலையால்
அரிகுலம்பணி கொண்டலைகடலடைத்தா னரங்கமாநகரமர்ந்தானே.

பதம்.	உரை.	பதம்.	உரை.
சுரி	ஸௌந்தரமான	திருவினை	பிராட்டியை
குழல்	கேசங்களையும்	எரிவிழித்து	க்ரூரமாகப்பார்த்து
கனி	கோவைப் பழம்போன்ற	பிரித்த	விஶ்லேஷிப்பித்தவனாய்,
வாய்	அதரத்தையுமுடைய		

கொடுமை	க்ரௌர்யத்தையும்
கடுவிசை	அதிவேகத்தையு முடையனான
அரக்கன்	ராவணாஸுரனுடைய
இலங்கு	ப்ரகாசியாநின்றுள்ள
மணி	ரத்நமயமான
முடி	கிரீடங்களை
பொடிசெய்து	சூர்ணமாக்கி
இலங்கை	லங்கையை
பாழ்படுப்பதற்கு	அழிக்கவேணுமென்று
எண்ணி	ஸங்கல்பித்து,
வரி	ஸுந்தரமான
சிலை	தநுஸ்ஸை
வளைய	வளைத்து
அடு	சொல்லவல்ல
சரம்	பாணங்களை (அதிலே)
துரந்து	(ஸந்திப்பித்து) ப்ரயோகித்து,
மறி	அலைகள் மடியாநின்ற
கடல்	ஸமுத்ரமானது
நெறிபட	வழிபடும்படியாக
அரிகுலம்	வாநரஜாதியை
பணிகொண்டு	அடிமையாகக் கொண்டு
அலை	அலைமோதாநின்ற
கடல்	ஸமுத்ரத்தை
மலையால்	பர்வதங்களினாலே
அடைத்தான்	ஸேதுபந்தநம் பண்ணினவன்
அரங்கமாநகர்	அமர்ந்தான். (எ)

வ்யா.—ஏழாம்பாட்டு. (சுரிகுழல்) (க) ‘‘𑌸𑍁𑌕𑍇𑌶𑍍𑌯𑌾- ஸுகேஶ்யா’’ என்றும், (உ) ‘‘𑌚𑌾𑌰𑍁𑌕𑍇𑌶𑍀𑌮𑍍-சாருகேசீம்’’ என்றும் சொல்லுகிறபடியே-அழகிய திருக்குழலையும், கனிந்த அதரத்தையுமுடையளான பிராட்டியை. (பிரித்த) (ங) ‘‘𑌅𑌨𑌨𑍍𑌯𑌾 𑌰𑌾𑌘𑌵𑍇𑌣𑌾𑌹𑌮𑍍- அநந்யா ராகவேணாஹம்’’ (ச) ‘‘𑌅𑌨𑌨𑍍𑌯𑌾 𑌹𑌿 𑌮𑌯𑌾 𑌸𑍀𑌤𑌾- அநந்யா ஹிமயாஸீதா’’ என்று இரண்டுதலையும் சொல்லலாம்படி யிருக்கிற இருவரையும் இரண்டிடத்திலே யாம்படி பண்ணி, க்ரௌர்யத்தையும் பெரிய வேகத்தையுமுடையனான ராவணனுடைய, அக்நிகல்பமாய்க்கொண்டு விளங்காநின்றுள்ள ரத்நங்களாலே செய்யப்பட்ட முடிகளைப் பொடிசெய்தென்னுதல்; அன்றிக்கே, எரிவிழித்து- திருவினைப்பிரித்த வென்னுதல். லங்கை மூலையடியே நாயும் நரியும் போம்படியாகப் பாழ்படுத்தும்படி மநோரதித்து; தர்சநீயமான வில்லு வளையக் கொலையம்புகளை நடத்தி; பெரிய க்ஷோபத்தை யுடைத்தான கடல்வந்து முகங்காட்டி, ‘‘நான் முதுகுகாட்டிச் செறிந்து தருகிறேன், அடைத்துக்கொடுபோவது’’ என்று வழிபட. ஏதேனுமாக இட்ட தடையக்கொண்டு ஆழக்கடல் கடல் வழிபட, நீரிலேபுக்கு அமிழக்கடவ மலைகள் மிதந்து அணையாக, கணக்கு வழக்குப்பட ஒரு வ்யாபாரம் பண்ணமாட்டாத வாநர

(க) (உ) (ங) ரா-ஸு-உக-கரு. (ச) ரா-யு-கஉக-ககூ.

ஜாதியைக் கொண்டு அடிமைகொண்டு, நீர்க்கிளப்பத்தை யுடைத்தான கடலை யடைந்தான். ... ... (௭)

அரு —ஏழாம்பாட்டு. (சுரீயித்யாதி). (கனிந்த) - கனிபோலிருந்த. *கடுமையும் *விசையும் அர்த்தத: மீமிசை யாகையாலே (பெரிய வேகத்தை) என்றது. அடுகையே ப்ரயோஜநமான சரமென்று சப்தார்த்தம் திருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிறார் (கொலையம்புகளை) என்று. மறிகடல் - திரைகளானது ஒன்றுக்கொன்று மறிக்கும்படியான கடலென்று பலிதார்த்தம். (பெரியகோஷத்தை) என்று. ... ... (௭)

மூ:—

ஊழியாயோமத்துச்சியா யொருகாலுடைய தேரொருவனாயுலகில்
சூழிமால்யானைத்துயர் கெடுத்திலங்கைமலங்க வன்றடுசரந்துரந்து
பாழியால்மிக்க பார்த்தனுக்கருளிப் பகலவனொளி கெடப் பகலே
ஆழியா லன்றங்காழியை மறைத்தா னரங்கமாநகரமர்ந்தானே. (௮)

பதம்.	உரை.
ஊழியாய்	காலாதி ஸகலபதார்த்த நிர்வாஹகனாய்,
ஓமத்து	ஹோமத்திலே
உச்சியாய்	(ஆராத்யனாய்க் கொண்டு) ஶ்ரேஷ்டனாய்,
ஒருகால் உடைய	ஒரு சக்ரத்தையுடைய
தேர்	தேரை யுடையனான ஸூர்யனுக் கந்தர்யாமியாய்க்கொண்டு
ஒருவனாய்	அத்விதீயனாய், [து)
உலகில்	லோகத்திலே (வந்
சூழி	முகப்பட்டத்தை யுடைத்தாய்
மால்	மதத்தையுடைத்தான
யானை	கஜேந்த்ராழ்வானு
துயர்	து:க்கத்தை [டைய
கெடுத்து	போக்கி,
இலங்கை	லங்கையானது [க
மலங்க	வ்யாகுலப்படும்படியா
அன்று	அந்த ராமாவதாரத்தி
அடு	கொல்லவல்ல [லே
சரம்	பாணங்களை
துரந்து	ப்ரயோகித்தும்,
பாழியால்	பல’பல)த்தினாலே
மிக்க	அதிசயித்திருக்கிற
பார்த்தனுக்கு	அர்ஜுநன் விஷயத்தில்
அருளி	க்ருபைபண்ணி,
பகலவன்	ஸூர்யனுடைய
ஒளி	தேஜஸ்ஸானது
கெட	மங்கும்படியாக,
பகலே	திநத்திலேயே
அங்கு அன்று	அந்த பாரத ஸமர ஸமயத்தில்
ஆழியால்	திருவாழியினாலே
ஆழியை	ஸூர்யனை
மறைத்தான்	மறைத்தவன்
அரங்கமாநகர்	அமர்ந்தான். (௮)

வ்யா.—எட்டாம்பாட்டு. (ஊழியாய்)காலோபலக்ஷிதமான ஸகல பதார்த்தங்களுக்கும் நிர்வாஹகனாய், (க) ''𑌅𑌹𑌂 𑌹𑌿 𑌸𑌰𑍍𑌵 𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌂 𑌭𑍋𑌕𑍍𑌤𑌾-அஹம் ஹி ஸர்வயஜ்ஞாநாம் போக்தா'' (உ) ''𑌭𑍋𑌕𑍍𑌤𑌾𑌰𑌂 𑌯𑌜𑍍𑌞𑌤𑌪𑌸𑌾𑌂-போக்தாரம் யஜ்ஞதபஸாம்'' என்கிறபடியே - ஸர்வ கர்ம ஸமாராத்யனாய், ஏகசக்ரமான ரதத்தையுடைய ஆதித்யனுக்கு அந்தராத்மாவாய்க்கொண்டு அவ்வழியாலே உபாஸ்யனாய், லோகத்திலே, முகப்பட்டத்தை யுடைத்தாய் மத முதிதமாய்க்கொண்டு ஸஞ்சரியாநின்றுள்ள ஶ்ரீ கஜேந்த்ராழ்வானுடைய துக்கத்தைப் போக்கி, லங்கையானது ஒருவர்கூறை எழுவருடுக்கும்படி கொலையம்பு நடத்தி, பல (𑌬𑌲)த்தால் மிக்கிருந்துள்ள அர்ஜுநனுக்குக் க்ருபைபண்ணி, ஆதித்யனானவனொளிமழுங்கும்படியாக, அவனுடைய ப்ரகாசத்துக்கு அடைத்த காலந்தன்னிலே, அநேகமாயிரம் ஆதித்யர்கள் சேர உதித்தாப்போலே யிருந்துள்ள புகரையுடைய திருவாழியைக்கொண்டு அந்த ஆதித்யனை மறைத்தவன். இந்த ஆதித்யனுடைய தேஜஸ்ஸு கண்ணாலே முகக்கலாம்படி அளவுபட்டிருக்கையாலே, தமஸ்ஸு போம்படியாயிருக்கும், அங்ஙனன்றிக்கே, திருவாழியாழ்வான் தேஜஸ்ஸு நேர்கொடு நேர்கண்கொண்டு பார்க்கவொண்ணாதபடி மிக்கிருக்கையாலே பளபளத்துக் கண்ணை இருளப்பண்ணிற்று. பகலே - பகலவனொளிகெட. ... ... (அ)

அரு.—எட்டாம்பாட்டு. (ஊழியாயித்யாதி) ஓமத்துக்குச்சி - ஆராத்யத்யா ஶ்ரேஷ்டனென்றருளிச்செய்கிறார்(அஹம்ஹியித்யாதி). கர்மாராத்யதைக் குறுப்பாக இந்த்ராத்யந்தராத்மத்வம் சொல்லவேண்டுகையால், ''ஊழியாய்'' என்றத்தை யருளிச்செய்தாராய், இங்கே ஆதித்யாந்தர்வர்த்தித்வம் சொன்னது-கர்மாங்கியான ஸர்வவித்யோபாஸ்யத்வம் சொல்லுகிறதென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார் (அவ்வழியாலே யித்யாதி). ஓழ் அந்தர்யாமித்வம் சொல்லி, இத்தால் ஸர்வஸ்மாத்பரனானவன் இவ்வுலகில் வந்து செய்த செயல்களை அருளிச்செய்கிறாராகையாலே, ''உலகில்'' என்றது-''மறைத்தான்'' என்னுமளவும் அன்வயிக்குமென்று திருவுள்ளம்பற்றியருளிச்செய்கிறார் (லோகத்திலே யித்யாதி). ''சூழி'' - முகப்பட்டமென்றருளிச்செய்கிறார் (முகப்பட்டத்தை யித்யாதி). ''பாழியால்'' என்றதினர்த்தம் (பலத்தால்) என்றது. நிரவதிக தேஜஸ்ஸுடைய திருவாழியால் ஆதித்யனை மறைத்தால் இருளுண்டாம் வழியென்னென்ன வருளிச்செய்கிறார் (இந்த வித்யாதி). அன்வயம் காட்டுகிறார் (பகலேயித்யாதி) (அ)

(க) கீதை-௯-௨௪.

(உ) கீதை-௫-௨௯.

மூ.—

பேயினார்முலையூண்பிள்ளையாயொருகால் பெருநிலம்விழுங்கியதுமிழ்ந்த
வாயனாய் மாலாயாலிலைவளர்ந்து மணி முடி வானவர்தமக்குச்
சேயனாயடியேற்கணியனாய் வந்தென்சிந்தையுள் வெந்துயரறுக்கும்
ஆயனாயன்றுகுன்றமொன்றெடுத்தா னரங்கமாநகரமர்ந்தானே, (௯)

பதம்.	உரை.	பதம்.	உரை.
பேயின்	பூதனையினுடைய	வானவர்தமக்கு	தேவதைகளுக்கு
ஆர்	விஷத்தினால் பூர்ணமான	சேயனாய்	தூரஸ்த்தனுமாய்,
முலை	ஸ்தநத்தை	அடியேற்கு	அடியேனுக்கு
ஊண்	உண்ட	அணியனாய்	ஸந்நிஹிதனாய்க் கொண்டு
பிள்ளையாய்	பேதையாய்,	வந்து	தானேவந்து
ஒருகால்	ஒரு (ப்ரளய) காலத்தில்	என்சிந்தையுள்	என் மநஸ்ஸிலுள்ள
பெரு	விசாலமான	வெம்	க்ரூரமான
நிலம்	பூமியை	துயர்	துஃக்கத்தை
விழுங்கி	உண்டு,	அறுக்கும்	நசிப்பிக்குமவனுமாய்,
அது	அந்தபூமியை (ஸ்ருஷ்டிகாலத்தில்)	அன்று	அந்த க்ருஷ்ணாவதார ஸமயத்தில்
உமிழ்ந்த	வெளியிலே புறப்பட விட்டனுமாய்,	ஆயனாய்	க்ருஷ்ணனாய்க்கொண்டு
வாயனாய்	அதரத்தை யுடைய	ஒன்று குன்றம்	ஒரு கோவர்த்தன மலையை
மாலாய்	ஸர்வாதிகனுமாய்,	எடுத்தான்	உயரவெடுத்துப் பசுக்களை ரக்ஷித்தவன்
ஆலிலை	ஆலந்தளிரில்	அரங்கமாநகர்	அமர்ந்தான். (௯)
வளர்ந்து	கண் வளர்ந்தருளினவனுமாய்,		
மணி	மணிமயமான		
முடி	கிரீடங்களையுடைய		

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (பேயினாரித்யாதி) பேயினுடைய, விஷத்தாலே நிறைந்த முலையை, தாய் முலைக்கும் வேற்றுமுலைக்கும் வாசியறியாதே யுண்ட முக்த்த (ஶிஶு)னாய். (ஒருகால்) விழுக்காடறியாமை என்றும் ஒக்குமாய்த்து. ஒருகால், பரப்பை யுடைத்தான பூமியை வயிற்றிலே வைத்து, அது ஸாத்மியாமையாலே உமிழ்ந்த திருவதரத்தை யுடையனாய், ஸர்வாதிகனான் ஸர்வேஶ்வரனாய், சிறு வடிவைக்கொண்டு பெரிய லோகங்களை வயிற்றிலே வைத்து ஒரு பவனான ஆலந்தளிரிலே கண்வளர்ந்தருளி, ப்ரஹ்மாதிகளுக்கு தூரஸ்த்தனாய், என்போல்வார்க்குக் கையாளாய், என்பக்கல் அபேக்ஷாமாத்ர

முமின்றிக்கே யிருக்கத் தானே வந்து என்னுடைய மாநஸ வ்யஸநத்தைப் போக்குமாயனாய். (அன்று குன்றமொன்றெடுத்தான்) கோவர்த்தநகிரியைத் தரித்து, பண்ணின உபகாரமறியாத பசுக்களையும் இடையரையும் நோக்கினவன். ... ... (௯)

அரு —ஒன்பதாம்பாட்டு (பேயினாரித்யாதி) ஆர்தல் - பூர்த்தியாய், எத்தாலேயென்ன வருளிச்செய்கிறார் (விஷத்தாலே) என்று. உட்கருத்தருளிச்செய்து, வாக்யார்த்த மருளிச்செய்கிறார் (ஒருகாலித்யாதி). "வந்து" என்றதுக்குக் கருத்தருளிச்செய்கிறார் (என்பக்கலித்யாதி). ... (௯)

மூ.—
பொன்னுமாமணியும் முத்தமும்சமந்து பொருதிரை மாநதிபுடை சூழ்ந்து
அன்னம் மாடுலவு மலைபுனல்சூழ்ந்த வரங்கமா நகரமர்ந்தானை
மன்னுமாமாடமங்கையர் தலைவன் மானவேல் கலியன்வாயொலிகள்
பன்னிய பனுவல் பாடுவார் நாளும் பழவினை பற்றறுப்பாரே....(௧௦)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பதம்.	உரை.	பதம்.	உரை.
பொன்னும்	ஸுவர்ணங்களையும்	புனல்	சந்த்ரபுஷ்கரிணி முத
மா	ஶ்லாக்யமான		லான தடாகங்க
மணியும்	ரத்நங்களையும்		ளால்
முத்தமும்	முத்துக்களையும்	சூழ்ந்த	சூழப்பட்டு மிருக்கிற
சமந்து	திரட்டிக்கொண்டு	அரங்கமாநகர்	திருவரங்கத்தில்
பொரு	ஒன்றோடொன்று உ	அமர்ந்தானை	கண்வளர்ந்தருளுகிற
	தையாநின்ற		பெரியபெருமாள்
திரை	அலைகளையுடைத்தான		விஷயமாக,
மா	ஶ்லாக்யமான	மன்னு	அழிவற்று
நதி	திருக்காவேரியினால்	மா	ஶ்லாக்யங்களான
புடை	பர்யந்த ப்ரதேசங்க	மாடம்	க்ருஹங்களையுடைய
சூழ்ந்து	சூழப்பட்டும், [ளிலே	மங்கையர்	திருமங்கையிலுள்ளா
மாடு	பர்யந்தங்களிலே	தலைவன்	ஸ்வாமியாய் [ர்க்கு
அன்னம்	ஹம்ஸங்களானவை	மானம்	அளவுடைத்தான
உலவும்	ஸஞ்சரியா நிற்பன	வேல்	வேலாயுதத்தை
	வாய் [ன		யுடையரான
அலை	திரைகளையுடைத்தா		

கலியன்	ஆழ்வார் [ய்,	பாடுவார்	அப்யஸிக்குமவர்கள
வாயொலிகள்	அருளிச் செய்ததா	நாளும்	தினந்தோறும் [களை
பன்னிய	லக்ஷணங்களினால் கு	பழவினை	ப்ராசீநமான 'கர்மங்
	றைவற்றதான	பற்றுஅறுப்	ஸவாஸநமாகப்போக்
பனுவல்	பாசுரங்களை	பார்	குவர்கள். (௧௦)

வ்யா.—பத்தாம்பாட்டு. (பொன்னித்யாதி) பொன்னும், பெருவிலையுள்ள ரத்நங்களும், முத்துக்களும் சுமந்து, தன்னில்தான் பொராநின்றுள்ள திரைகளையுடைய மஹாநதியுண்டு - காவேரி, அது பர்யந்தத்திலே சூழப்பட்டிருப்பதாய், அருகே அன்னங்கள் ஸஞ்சரியாநின்றுள்ள ஸ்ரீசந்த்ர புஷ்கரிணி துடக்கமான பொய்கைகள் சூழ்ந்த கோயிலிலேவந்து கண்வளர்ந்தருளுகிற ஸர்வேஶ்வரனை, ப்ரளயங்களுக்கு மழியாத மாடங்களாலே சூழப்பட்ட திருமங்கையிலுள்ளார்க்கு நிர்வாஹகராய், அளவுடைத்தான வேலைப் பரிகரமாக வுடைய ஆழ்வாரருளிச்செய்த, லக்ஷணங்களிலொன்றும் குறையாதபடி விஶ்ருத்தமான வித்தை அப்யஸிக்கவல்லார், ப்ராக்தநமான கர்மங்களை வாஸனையோடே போக்கப் பெறுவர். ... ... (௧௦)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

* * *

அரு.—பத்தாம்பாட்டு. (பொன்னித்யாதி) "நதியுடைசூழ்ந்து" என்று சொல்லியிருக்க, மீளவும் "அலைபுனல்சூழ்ந்து" என்றால் புநருக்தமன்றோ வென்ன வருளிச்செய்கிறார் (ஸ்ரீசந்த்ர புஷ்கரிணியித்யாதி). ... (௧௦)

ஜீயர் திருவடிகளே சரணம்.

* * *

அஞ்சாம்பத்தில் ஏழாந்திருமொழி முடிந்தது.

* * *

ஆழ்வார்திருவடிகளே சரணம்.

அஞ்சாம்பத்து எட்டாந் திருமொழி

ஏழை ப்ரவேசம்.

* * *

வ்யா.—இவ்வாழ்வாராகிறார் - சாஸ்த்ரவாஸனையாலே யாதல் தபஸ்ஸாலே யாதலன்றிக்கே பகவத் ப்ரஸாதத்தாலே தத்வத்ரயத்தையும்

யதாதர்ஸநம் பண்ணியிருப்பா ரொருவராய்த்து. பரஸ்வரூபத்தை யதாதர்சநம் பண்ணுகையாவது ஏதென்றால்; ஸ்ரிய:பதியாய், அகில ஹேயப்ரத்யநீகனாய், ஸமஸ்த கல்யாணகுணாத்மகனாய், அந்த குணங்களுக்கும் ப்ரகாசகமாய் ஸௌந்தர்ய ஸௌகுமார்யாத்யாகரமாயிருந்துள்ள திவ்ய விக்ரஹத்தை யுடையனாய், உபய விபூதிநாதனாய், நிரதிசய போக்யனா யிருக்குமென்றறிகை; ஸ்வஸ்வரூபத்தை யதாதர்சநம் பண்ணுகையாவது - அநந்யார்ஹமாய், ஸ்வரக்ஷணத்தில் ப்ராப்தியின்றிக்கே பரதந்த்ரமா யிருக்குமென்றறிகை; அசித்தினுடைய ஸ்வரூபத்தை யதாதர்சநம் பண்ணுகையாவது-ஸ்வஸ்வரூப பரஸ்வரூபங்களை யதாதர்சநம் பண்ணவொண்ணாதபடி இடைச்சுவராய்க் கொண்டு விரோதித்வமே ஸ்வரூபமா யிருக்குமென்றறிகை. இவ்விரோதியைக் கழித்து இச்சேதநன் விலக்ஷணவஸ்துவை லபிக்கும்போது அதுக்கநுரூபமா யிருப்பதொரு உபாய பரிக்ரஹம் பண்ணிக்கொள்ளவேணுமிறே. இம்மூன்றினுடைய ஸ்வரூபத்தையு மநுஸந்தித்தால் அவனையே பற்றவேணும்; விரோதி ப்ரபலமாகையாலே அவனைக்கொண்டே கழித்துக்கொள்ளவேணும்; ஸ்வஸ்வரூபத்தைப் பார்த்தால் ஸ்வரக்ஷணத்தில் ப்ராப்தியில்லாதபடி பரதந்த்ரமாகையாலே அவனையே பற்றவேணும்; அவ்வஸ்துதான் அநந்யஸாத்யமாகையாலும் அவ்வஸ்துவையே பற்றவேணும். இப்படி அவனே உபாயமாகப் பரிக்ரஹிக்குமிடத்தில், பரத்வம், தேசவிப்ரக்ருஷ்டமாய்க் கழிந்தது; வ்யூஹம், தத்ப்ராயமாய் ஸம்ஸாரிகளுடைய சிறுமையாலும் பகவத் வைபவத்தாலும் கழிந்தது; ஆபத்துண்டானபோது, ப்ரஹ்மாதிகளுக்கு ஆஸ்ரயணியமாதல் ஸநகாதிகளுக்குக் காதாசித்கமாக ஆஸ்ரயணீய மாதலத்தனையிறே; விபவமும், காலவிப்ரகர்ஷத்தாலே மண்டல வர்ஷம்போலேயாய்க் கழிந்தது; அக்குறைகள்தீர, ஸ்வஸத்தா ஸ்திதி ப்ரவ்ருத்திகளும் ஆஸ்ரிதாதீநமாம்படி பண்ணிக்கொடு நிற்கிற நிலையிறே - அர்ச்சாவதாரம். அதாவது- ஆஸ்ரிதருகந்த த்ரவ்ய விசேஷத்தையே திருமேனியாகக்கொண்டு நிற்கையும், தன் க்ருஹத்தில் ஒரு ப்ரதேசத்திலே திருப்பள்ளியறையாக்கி "இங்கே எழுந்தருளி யிருக்க வேணும்" என்றால் அங்கே எழுந்தருளி யிருக்கையும், "திருமஞ்ஜநம்பண்ணி யருளவேணும், அமுது செய்தருளவேணும்" என்றால் அப்போது அமுதுசெய்தருளுகையும்; அவற்றை இவன் அநாதரிக்கும்போது தானும் அநாதரிக்கையும், அவதாரங்களிற்போலே

அஜஹத்ஸ்வபாவனாய், ஆஸ்ரிதர்க்கு அபிமத பல(ஃல)ப்ரதானம் பண்ணுகைக்கும், ஆஸ்ரயணீயனாகைக்கு முண்டான ஜ்ஞாநசக்த்யாதி குணங்களோடேகூட *ஆஸ்ரித பராதீநனாகையு மாயிறே யிருப்பது. ஆகையாலே, அர்ச்சாவதாரத்தை யாய்த்து இவர் ஆஸ்ரயணீயஸ்த்தலமாக நினைத்திருப்பது. முதல் தன்னிலே (௧) "சூழ் புனல்குடந்தையே தொழுது" என்றும், (௨) "தஞ்சைமாமணிக்கோயிலே வணங்கி" என்று மிறே இவரிழிந்தது; ஆகையாலே, தம்முடைய ஆகிஞ்சந்யத்தை முன்னிட்டுக்கொண்டு, சரண்யரான பெரியபெருமாள்திருவடிகளிலே சரணம் புகுகிறார்.

இவர் (௩) *தாயே தந்தைதுடங்கிப் பலவிடங்களிலும் சரணம் புக்குப் போந்தார்; பகவல்லாபத்துக்கு ஸக்ருத்க்ருத மமைந்திருக்கச்செய்தே பலகாலும் சரணம்புகுகிறது த்வராதிசயத்தாலேயிறே. இப்ப்ரபந்தத்துக்கு ஏற்றம்-சீர்மையுடைய பெரியபெருமாள் சரண்யராகையும், ஆழ்வார் அநுஷ்ட்டாதாவாகையும், ஸர்வாதிகாரமான த்ராவிடபாஷையாலே அருளிச்செய்கையும், த்ருப்த (த்ருஷ்ட)ப்ரபந்நரான நமக்கு இவ்வார்த்தி இல்லையேயாகிலும் இவர் பாசுரத்தைச் சொல்லவே இவரளவிலே இவர்க்கிரங்கினாப்போலே பெரிய பெருமாளிரங்குவரென்கிறதும். ப்ரயோஜநாந்தரத்துக்காகவும், து:க்க நிவ்ருத்திக்காகவும் சரணம்புகுகிறவர்கள் பாசுரத்தை முன்னிட்டுக்கொண்டு சரணம்புகுகிறார்; அதுக்கடி என்னென்னில்; அவ்வோப்ரயோஜநங்களில் அவர்களுக்குள்ள ஆதரம் இவ்விஷயத்தே தமக்குண்டாகையாலும், அவர்களுக் ககப்பட இரங்குமவர் தமக்கிரங்காமையில்லை என்று நினைத்திருக்கையாலும்.

திருமாலையில் - ப்ராப்ய ப்ராபகங்கள் சொல்லிற்று; *அமலனாதிபிரானில் - ப்ராப்யம் சொல்லிற்று; இத்திருமொழியில் - ப்ராபகம் சொல்லுகிறது. ... ... (*)

அரு.—ஏழையேதலன்ப்ரவேசம். — கீழிரண்டு திருமொழிகளிலும் பெரியபெருமாளாலே ஸமாஹிதராய்த் திருவரங்கத்தில் கண்டு களிச்சவர், (௪) "அடியேற்கணியனாய் வந்தென் சிந்தையுள் வெந்துயரறுக்குமையன்". என்று து:க்க நிவர்த்தகத்வத்தை அநுஸந்தித்திருக்கச் செய்தேயும், தம்மை

---

(௧) ௧-௧-௭. (௨) ௧-௧-௬ (௩) ௧-௯. (௪) ௫-௭-௯.

*அநந்தக்லேச பா (ஞ°)ஜநமான ஸம்ஸாரத்தி லிருக்கக்கண்டு, விரோதியான தேஹ ஸம்பந்தத்தைக் கழிக்கக்காணாமையாலே ஆர்த்தி மிகுந்து, பெரியபெருமாளைச் சரணம் புகுகிறாரென்னும் ஸங்கதி சொல்லுகையில்; இவர்க்கிப்படி ஆர்த்தி மிகும்படி ஜ்ஞாநம் பிறந்ததுக்கு மூலமேதென்றும், பரத்வாதிகளிருக்க இங்கே சரணம் புகுவானென்னென்றும், இவர் கீழே சரணம் புகுந்ததில்லையோ? மீளவு மிங்கே சரணம் புகுவானென்னென்றும், இத்திருமொழிக்குச் சரணம் புகுந்த திருமொழிகளில் வாசிதானென்னென்றும், இதில் ப்ரயோஜநாந்தர பரரை த்ருஷ்டாந்தமாக்கிக் கொள்ளுவானென்னென்றும் வருகிற சங்காபஞ்சகத்தையும் பரிஹரிக்கிறார் (இவ்வாழ்வா ரித்யாதி). கீழ் - ஆர்த்தி பிறக்கும்படியான ஜ்ஞாநம் வருகைக்கு மூல மருளிச்செய்தாராய், தத்கார்யதயா உபாயவரணத்தை அருளிச்செய்கிறார் (இவ்விரோதியை யித்யாதி). உபாயபரிக்ரஹம் பண்ணவேண்டினால் கர்மஜ்ஞாநாதிக ளில்லையோ வென்ன வருளிச்செய்கிறார் (இம்மூன்றி னித்யாதி வாக்யசதுஷ்டயத்தாலே). இத்தால் - தத்வத்ரயத்தையும் அவன் ப்ரஸாதத்தால் யதாதர்சநம் பண்ணினவராகையாலே அவனையே உபாயமாகப் பற்றினாரென்றதாய்த்து. அவனையே பற்றினால் பரத்வாதிகளில்லையோ வென்ன வருளிச்செய்கிறார் (இப்படி யித்யாதிவாக்ய சதுஷ்டயத்தாலே). (மண்டலவர்ஷம்) வர்ஷாகாலவர்ஷம். "ப்ரவ்ருத்தி" என்றது நிவ்ருத்திக்கும் உபலக்ஷணமாக்கி யருளிச்செய்கிறார் (அவற்றை யித்யாதி). ஸத்தாதிகள் இவனிட்ட வழக்கானால் ஜ்ஞாந சக்த்யாதிகள் வேண்டாவோ ஆஶ்ரயணீயனாகைக்கு என்ன வருளிச்செய்கிறார் (அவதாரங்களி லித்யாதி).

கீழ் பலவிடங்களிலும் ப்ரபத்திபண்ணிற்றும் ஆர்த்த்யதிசயத்தாலேயிறே, இத்திருமொழியிலார்த்தி மிகவும் அதிசயித்திருக்கு மென்கிறதுக்கு நியாமகமேதென்கிற சங்கையிலே, இதினேற்றஞ்சொல்லவே தானே தோற்றுமென்று இதின் ஸர்வாதிசாயித்வத்தை யருளிச்செய்கிறார் (இப்ப்ரபந்தத்துக் கித்யாதி). இத்தால் - (க) "என்னடியாரது செய்யார்" என்னும்படி குணபூர்த்தியுள்ளவர் விஷயமாகையால் ஆர்த்தி மிகுத்திருக்கு மென்னுமது தோற்றுகையாலும், *மயர்வற மதிநலம்பெற்ற ஆழ்வார் அநுஷ்ட்டாதாவாகையாலே நீர்மையுள்ள விஷயத்தி லார்த்தி மிகுகை யுக்தமாகையாலும், எல்லார்க்கும் தெரியும்படி தமிழாகச் செய்கையாலே இதிலர்த்த விசாரத்தாலே ஆர்த்தியினாதிக்யம் காணலாமாகையாலும், ஆர்த்தியில்லாதார்க்கும் இதிலந்வய மாத்ரத்தாலே ஆர்த்தி யுண்டானதாக இரங்கும்படி யிருக்கையாலும், இதிலார்த்தி மிகுத்திருக்குமென்றதாய்த் அன்றிக்கே, ப்ராஸங்கிகமாக ப்ரபந்த வைலக்ஷண்யத்தைச் சொ படுகிறாரென்னவுமாம்.

(க) பெரி-திரு-௪-௯-௨.

பெரியபெருமாள், திருமாலை பாடிலும் அமலனாதி பிரான்பாடிலும் இரங்காரோ, இதுவே இரக்கத்துக்கு உடலாவா னென்னென்ன வருளிச் செய்கிறார் (திருமாலை யித்யாதி). ... ... (*)

மூ.—ஏழை யேதலன் கீழ் மகனென்னா
திரங்கி மற்றவற்கின்னருள்சுரந்து
மாழை மான் மட நோக்கியுன்தோழி
உம்பி யெம்பியென்றொழிந்திலை உகந்து
தோழன் நீ யெனக் கிங்கொழியென்ற
சொற்கள் வந்தடியேன் மனத்திருந்திட
ஆழிவண்ண நின்னடியிணை யடைந்தேன்
அணிபொழில் திருவரங்கத்தம்மானே. (க)

பதம்.	உரை.
ஏழை	விஷயசபலன் (அஜ்ஞன்)
ஏதலன்	சத்ரு,
கீழ்மகன்	நீசஜாதி,
என்னாது	என்று நினையாமல்
இரங்கி	தயைபண்ணி
மற்று	அதுக்குமேலே
அவற்கு	அந்த குஹப்பெருமாள் விஷயத்தில்
இன்	இனிதான (ஸ்வயம் ப்ரயோஜநமான)
அருள்	க்ருபையை
சுரந்து	பண்ணி,
மாழை	முக்த்தமான
மான்	மானினுடைய
மடம்	ம்ருதுவான
நோக்கி	கண்கள்போன்ற கண்களையுடைய இந்த ஸீதை
உன்தோழி	உனக்கு ஸகி,
உம்பி	உனக்குத் தம்பியான லக்ஷ்மணன்
எம்பி	என்னுடைய தம்பி,
என்று	என்று சொன்ன இவ்வளவு மாத்ரத்தி
ஒழிந்திலை	விடாதவனாய்க் கொண்டு,
உகந்து	ஆதரத்துடனே
நீ	நீ
எனக்கு	எனக்கு
தோழன்	ஸ்நேஹிதன்,
இங்குஒழி	இங்கே நிற்கக்கடவாய்
என்றசொற்கள்	என்றுசொன்ன உக்திகள்
வந்து	வந்து கர்ணகர்ணிகையாக
அடியேன்	தாஸபூதனான என்னுடைய
மனத்து	மநஸ்ஸில்
இருந்திட	பொருந்தியிருக்க, (அதிலீடுபட்டு)
ஆழி	ஸமுத்ரம்போன்ற
வண்ண	ஸ்வபாவத்தை யுடையவனே!
அணி	அலங்காரமான
பொழில்	சோலைகள் சூழ்ந்த
திருவரங்கத்து	திருவரங்கத்தில் கண்வளர்ந்தருளுகிற
அம்மானே	ஸ்வாமியே!
நின் அடியிணை	உன் இரண்டு திருவடிகளை
அடைந்தேன்	சரணமாகப் புகுந்தேன். (க)

வ்யா. — முதற்பாட்டு. (ஏழை) அஜ்ஞன். ஏழையென்ன அஜ்ஞன் என்று காட்டுமோவென்னில்; சபலனென்றபடி. விஷயசாபல்யம் - அஜ்ஞாந கார்யமிறே. அஜ்ஞாநந்தான், ஜ்ஞாநாநுதயம், அந்யதாஜ்ஞாநம், விபரீதஜ்ஞாநம் என்று த்ரிப்ரகாரமாயிறே இருப்பது. ஜ்ஞாநம் பிறந்தவாறே ஜ்ஞாநாநுதயம் போம்; யதாஜ்ஞாநத்தாலே அந்யதாஜ்ஞாநம்போம்; விஷய ப்ராவண்யரூபமான விபரீதஜ்ஞாநமிறே போக்கவரிது. (க) "𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑌮𑍍𑌪𑌨𑍍𑌨𑌃 - ஜ்ஞாநஸம்பந்நஃ" என்கிற தேவர்க்கு எதிர்த்தட்டா யிருக்கிறபடி. இத்தால்-ஜ்ஞாநக்கொத்தையைச் சொல்லிற்று.

(ஏதலன்) சத்ரு. தாயைச் சோறுவேண்டும்போதும் வாளை விதிர்த்த வேண்டும்படியான சாத்ரவத்தைச் சொல்லுகிறது. (உ) "𑌰𑌿𑌪𑍂𑌣𑌾𑌮𑌪𑌿 𑌵𑌤𑍍𑌸𑌲𑌃 - ரிபூணாமபி வத்ஸலஃ" என்கிறதுக்கு எதிர்தட்டாயிருக்கிறபடி. (ங) "𑌮𑌰𑍍𑌯𑌾𑌦𑌾𑌨𑌾𑌞𑍍𑌚 - மர்யாதாநாஞ்ச" என்கிறவர்க்கு எதிர்த்தட்டாம்படி மர்யாதாபங்கம் பண்ணியிறே இருப்பது. இத்தால் - வ்ருத்தத்தில் கொத்தை சொல்லுகிறது.

(கீழ்மகன்) இவை இத்தனையும் பூஷணமாம்படியான ஜந்மத்தையுடையவன். கீழ்ச்சொன்னவை இரண்டும், ஜ்ஞாநஸாத்யமாயும் ப்ராயஶ்சித்த ஸாத்யமாயு மிருக்குமிறே; இது, வேறொன்றால் கழிக்கவொண்ணாதே. (ச) "𑌇𑌕𑍍𑌷𑍍𑌵𑌾𑌕𑍁 𑌵𑌂𑌶 𑌪𑍍𑌰𑌭𑌵𑌃 - இக்ஷ்வாகுவம்சப்ரபவஃ" என்கிறவர்க்கு எதிர்த்தட்டாயிருக்கிறபடி. இத்தால் - ஜந்மத்தின் கொத்தைசொல்லுகிறது. இம்மூன்றாலுமாக, பெருமாளுடைய நீர்மையிலேற்றம் சொல்லிற்றாய்த்து.

(என்னாதிரங்கி) இவையொன்றும் பாராதேயாய்த்து இரங்கிற்று; (ரு) "𑌋𑌷𑍀𑌣𑌾𑌮𑌗𑍍𑌨𑌿𑌕𑌲𑍍𑌪𑌾𑌨𑌾𑌮𑍍 - ருஷீணாமக்நிகல்பாநாம்" என்று ஜந்மவித்யா வ்ருத்தங்களையுடையரா யிருக்கும் உபாஸகரான ருஷிகளுக்கும், (சு) "𑌅𑌹𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 - அஹம் ஸர்வம் கரிஷ்யாமி" என்னும் இளையபெருமாளுக்கும், ஸாதநஸித்த்யர்த்தமாகவும் போக(𑌭𑍋𑌗)ஸித்த்யர்த்தமாகவும் இரங்கு மிரக்கத்தை யிறே இவரளவி லிரங்கிற்று. அதவா, (என்னாதிரங்கி) இப்பாசுரம் சொல்லாதிருக்க, இரங்கி.

(க) ரா-பால-க-கஉ. (உ) ரா-யு-ருO-ருசு. (ங) ரா-ஸு-ஙரு-சக.
(ச) ரா-பா-க-அ. (ரு) ரா-பா-க-சரு. (சு) ரா-அயோ-ஙக-உரு.

(க) “𑌨𑌧𑌰𑍍𑌮𑌨𑌿𑌷𑍍𑌠𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 - நதர்மநிஷ்டோஸ்மி” (உ) “𑌅𑌮𑌰𑍍𑌯𑌾𑌦𑌃 - அமர்யாதஃ” (ங) “𑌰𑌾𑌵𑌣𑍋𑌨𑌾𑌮 - ராவணோநாம” இத்யாதிகளிலே - சரணம புகுவார் ஸ்வநிகர்ஷத்தை முன்னிட்டுக் கொள்ளக்கடவர்கள் என்னா நின்றதிறே.

ஸ்ரீகுஹப்பெருமாள் சொல்லக்கடவ பாசுரத்தை இவர் சொல்லுவானென்னென்னில்; அவருடைய கருத்தாலே. (மற்றவற்கு) அவனுக்கு அதுக்குமேலே. (இன்னருள் சுரந்து) இவ்விஷயீகாரத்துக்கு மேலே, இனிய அருளைச்சுரந்து. (இன்னருள்) தன்பேறான அருள். (சுரந்து) வத்ஸ ஸகாசத்தில் தேநு (𑌧𑍇𑌨𑍁)வானது க்ஷீரத்தைச் சுரக்குமாபோலே, குணங்களைச் சுரந்து.

இத்தை உபபாதிக்கிறது மேல். (மாழை மான் மடநோக்கி) நிகர்ஷம் சொன்னால், ப்ரதமத்தில் முன்னிடக்கடவ அர்த்தத்தைச் சொல்லுகிறது. முக்த (𑌮𑍁𑌗𑍍𑌧)மான மானினுடைய ம்ருதுவான நோக்குப்போலேயுள்ள நோக்கையுடையவள். இத்தால்-ஸம்பந்தம் இருவரோடும் ஒத்திருக்கச்செய்தே இவளுடைய கடாக்ஷத்தினுடைய முற்பாடு சொல்லுகிறது. இவனைப்பாரா அவனைப்பார்க்கும்; (ச) *𑌪𑍍𑌰𑍇𑌕𑍍𑌷𑌿𑌤𑌜𑍍𑌞𑌾𑌸𑍍𑌤𑍁 𑌕𑍋𑌸𑌲𑌾𑌃 - ப்ரேக்ஷிதஜ்ஞாஸ்து கோஸலாஃ இறே. ப்ரணயிநி, ப்ரணயிகளுக்கு வாயாலே சொல்லுவதில்லையிறே. “இத்தனை குறைவாளனை விஷயீகரியா தொழிகிறதென்!” என்னாப்போலேயாய்த்துப் பார்வை இருக்கிறது. இவள் பருவத்தையும் நோக்கையும் கண்டால் இவள் வழியே போவாரொருவனிறே. (உன்தோழி) உனக்கு ஸ்வாமிநி என்னாதே, தோழி என்கிறார் - நீர்மையாலே; சீரியார், சேஷபூதரையும் “அண்ணா” “ஆச்சீ” என்னா நிற்பார்களிறே. இவர்கள்தான் இங்ஙனல்லது சொல்லமாட்டார்கள். (ரு) “𑌮𑌿𑌤𑍍𑌰𑌭𑌾𑌵𑍇𑌨 - மித்ரபாவேந”. (சு) “𑌮𑌿𑌤𑍍𑌰𑌮𑍌𑌪𑌯𑌿𑌕𑌮𑍍 - மித்ரமௌபயிகம்” (எ) “𑌤𑍇𑌨𑌮𑍈𑌤𑍍𑌰𑍀𑌭𑌵𑌤𑍁𑌤𑍇 - தேநமைத்ரீ பவதுதே” இவ்வார்த்தை போழ்க்கனா யிருக்கையன்றிக்கே, ப்ராப்தி ஸமயத்திலும், (அ) “𑌨𑌿𑌰𑌞𑍍𑌜𑌨𑌃 𑌪𑌰𑌮𑌂 𑌸𑌾𑌮𑍍𑌯𑌮𑍁𑌪𑍈𑌤𑌿 - நிரஞ்ஜநஃ பரமம் ஸாம்யமுபைதி” என்று குணஸாம்யத்தையும் போக (𑌭𑍋𑌗)

(க) ஸ்தோ-ர-உஉ. (உ) ஸ்தோ-ர-சுஉ. (ங) ரா-யு-கஎ-கஉ.
(ச) (ரு) ரா-யு-கஅ-ங. (சு) ரா-ஸு-உக-கக.
(எ) ரா-ஸு-உக-உக. (அ) முண்ட-ங-க-ங.

ஸாம்யத்தையும் தேஹஸாம்யத்தையும் போக்ய (భోగ్య) ஸாம்யத்தையும் கொடுத்திறே வைப்பது.

(உம்பி எம்பி) உன்னுடைய தம்பி, என்னுடையதம்பி. இங்ஙனே சொல்லுவானென்னென்னில்; பெருமாள் விஷயீகரித்திருக்குமவர்களை அவரோபாதியாக நினைத்திருக்கும் இளையபெருமாள் கருத்தாலே; (௧) "భక్తిరష్టవిధా హ్యేషా యస్మిన్ మ్లేచ్ఛేపి వర్తతే। తస్మై దేయం తతో గ్రాహ్యం స చ పూజ్యో యథాహ్యహమ్ - பக்திரஷ்டவிதா ஹ்யேஷா யஸ்மிந் ம்லேச்சேபி வர்த்ததே। தஸ்மைதேயம் ததோக்ராஹ்யம் ஸசபூஜ்யோ யதாஹ்யஹம்" என்றும், (௨) "தொழுமினீர் கொடுமின் கொண்மினென்று நின்னோடொக்க வழிபட வருளினாய்" என்றும் சொல்லுகிறபடியே. (௩) "பதியினில் பாங்கினில் பாதங்கள் கழுவினர்" என்று - ஸம்ஸாரத்தில் நின்றும் ஒருவன் முக்தனாய்ச்சென்றால் ஸ்ரீபாதம் விளக்கி ஸூரிகள் ஆதரிக்கக்கடவர்கள் என்னாநின்றதிறே. அவர்களிலே பிறிகதிர்ப்பட்டுப் போந்தவரிறே இளையபெருமாள். இத்தால் - வைஷ்ணவாங்கீகாரம் பண்ணிக்கொடுத்தபடி. (௪) "அவன் செய்யும் சேமம்" என்றும், (௫) "அடியார்க்கென்னை யாட்படுத்த விமலன்" என்றும் சொல்லக்கடவதிறே. (என்றொழிந்திலை) அவ்வளவில் விட்டிலை. பிராட்டியை "தோழி" என்றும், இளையபெருமாளை "தம்பி" என்றும் சொன்னபோதே, ஆர்த்த (ఆర్త)மாக வருமிறே தம்முடைய தோழமை.

(உகந்து) உகப்பாலே, "தோழன்நீ" என்கிறார். உகப்பு ஓரளவில் நிற்குமதன்றே. (தோழன்நீ எனக்கு) ஸ்வநிகர்ஷத்தைச் சொல்லிப் புருஷகாரத்தை முன்னிட்டு வைஷ்ணவாங்கீகாரமுண்டானால், அநந்தரம் உபாயஸ்வரூபம் அநுஸந்தேயமாகக் கடவதிறே; அத்தைச் சொல்லுகிறது. (இங்கொழி) பின்துடர்ந்து போகப்புக்கார் போலே காணும் இவரும். படைவீடு கெடாமைக்கு ஒருவனைவைத்தோம், வழியடி கெடாதபடி இங்கேயிரும். ஸ்வேச்சாநுரூபமாக வன்றியிலே, (௬) *க்ரியதாமிதியிலேயிறே அங்குமுள்ளது. (என்ற சொற்கள்) அவ்வர்த்தங்களன்றிக்கே, அப்பாசுரங்காணு மிவரை வருத்துகிறது. (வந்து) ஒருகால விசேஷத்திலே யாயிருக்க, கர்ணபரம்ப

---

(௧) (௨) திருமா-௭௨. (௩) தி-வாய்-௧௦-௯-௧௦-
(௪) தி-வாய்-௭-௫-௧௦- (௫) அமல-௧. (௬) ரா-ஆர-௧௫-௭.

ரையாகவந்து; இவர்நெஞ்சிலே யாய்த்து ஊற்றிருந்தது. இப்பாசுரந் தன்னை (௧) "గుహేన సహితో రామో లక్ష్మణేనచ సీతయా - குஹேநஸஹிதோ ராமோ லக்ஷ்மணேநச ஸீதயா" என்று ஸ்ரீ வால்மீகிபகவான் சொல்லிவைத்தானிறே. (அடியேன் மனத்திருந்திட) (௨) "సంస్మ రామ్యస్య వాక్యాని - ஸம்ஸ்மராம்யஸ்ய வாக்யாநி" என்னுமாபோலே இவர் நெஞ்சிலேயாய்த்து வேர்விழுந்தது. சேஷபூதனுடைய தயநீயமான பாசுரம் சேஷிநெஞ்சிலே வேர்விழுந்து ரக்ஷணத்துக்காய்க் கிடக்குமாபோலே, சேஷிபாசுரம் சேஷபூதனுடைய நெஞ்சிலே கிடக்கக்கடவதிறே கைங்கர்யத்துக்காக.

(ஆழிவண்ணா) ரத்நங்களாலே கடல் நிரம்பி யிருக்குமாபோலே, ஆஶ்ரயணத்துக்கு ஏகாந்தமான குணங்களாலே நிரம்பின கடல். (௩) "అపారకారుణ్య - அபாரகாருண்ய" இத்யாதி. (௪) [యథా రత్నాని జలధేరసఙ్ఖ్యేయాని పుత్రక। తథా గుణాహ్యనన్తస్య అసఙ్ఖ్యేయా మహాత్మనః - யதா ரத்நாநி ஜலதேரஸங்க்க்யேயாநி புத்ரக। ததா குணாஹ்யநந்தஸ்ய அஸங்க்க்யேயா மஹாத்மந:] உத்பத்தியு மங்கேயாய், வாஸமும் அங்கேயாய், புறம்போரிடத்தி லின்றிக்கே எல்லாரு மாதரிக்கும்படி ரத்நங்களிருக்குமாபோலே யாய்த்து குணங்களிருக்கும்படி. அதவா, கடல்போலே ஶ்ரமஹரமான வடிவையுடையவனே! வடிவைக்கண்டபோதே ஸாம்ஸாரிகமான தாபங்களடைய ஆறும்படியாய்த்திருப்பது. (நின்னடியிணை) அநந்தரத்தில் (௫) "చరణౌ - சரணௌ" என்கிறபதத்தை நினைக்கிறது. (அடைந்தேன்) க்ரியாபதத்தில் வர்த்தமாநம் கௌண (గౌణ)மென்னுமிடம் சொல்லுகிறது.

(அணிபொழிலித்யாதி) ராமாவதாரத்தைச் சொல்லி இங்கே சேர்க்கையாலே (௬) "நம் சேவகனார் மருவிய பெரியகோயில்" என்கிறபடியே - அவரே இங்குச்சாய்ந்தாரென்கிறது. அணி என்று - பொழிலுக்கு விசேஷணமுமாய், கோயிலுக்கு விசேஷணமுமாயிருக்கிறது. அதாகிறது - ஸம்ஸாரத்துக்கு ஆபரணம்போலே யிருக்கை. சோலைவாய்ப்புக்கண்டு சாய்ந்தாப்போலே யிருக்கச்செய்தேயும், ஆஶ்ரயிப்பார் தேட்டமாயன்றோ இங்குச்சாய்ந்தருளிற்று. (அம்மானே)

---

(௧) ரா-பா-௧-௫௦. (௨) ரா-ஆர-௧௬-௩௬. (௩) கத்ய-

(௪) (௫) த்வயம். (௬) தி-மா-௧௧.

உடையவனாகையாலே உடைமை தேட்டமாயன்றோ இங்குவந்து சாய்ந்தருளிற்று. ... ... (௧)

அரு. — முதற்பாட்டு. மேல்பாட்டில் - "வாதமாமகன் மற்கடம்"² என்று திருவடியை விஷயீகரித்தமையைச் சொல்லுகையாலே, இதுக்கு முன்னே விஷயீகரித்த ஶ்ரீகுஹப்பெருமாள் விஷயமாகத் திருவுள்ளம் பற்றி வ்யாக்யாநம் செய்தருளுகிறார். விஷயசாபல்ய ஹேதுவான அஜ்ஞாநம் - அபோக்யங்களில் போக்யதாபுத்தி யாகையாலே, அதின் கொடுமை சொல்லுகைக்குறுப்பாக அவாந்தரபேதங்களை அருளிச்செய்கிறார் (அஜ்ஞாநந் தானித்யாதி). (விஷயப்ராவண்ய ரூபமான) என்றது-விஷயப்ராவண்யமாகப் பரிணமித்தவென்றபடி. இத்தால்-"ஏழை" என்றசப்தம் - அமுக்யமாக விபரீதஜ்ஞாநத்தைக் காட்டுமென்றபடி. (௧) "𑌨𑌰𑌾𑌮𑌃 𑌪𑌰𑌦𑌾𑌰𑌾𑌂𑌸𑍍𑌤𑍁 𑌚𑌕𑍍𑌷𑍁𑌰𑍍𑌭𑍍𑌯𑌾𑌮𑌪𑌿 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 - நராம: பரதாராம்ஸ்து சக்ஷுர்ப்யாமபி பஶ்யதி" என்கிறபடியே யுண்டானபுகழை (௨) "𑌯𑌶𑌸𑍍𑌵𑍀-யஶஸ்வீ" என்றதாய், அதுக்கடியான ஜ்ஞாநஸம்பத்தியைச்சொல்லி, தத்பலமான சுசி (𑌶𑍁𑌚𑌿)த்வம் சொல்லுகையாலே விஷய ப்ராவண்யலேசமில்லாதபடி சொல்லிற்றென்று விவக்ஷித்துக் கருத்தருளிச்செய்கிறார் (ஜ்ஞாநேத்யாதி).

(பூஷணமாம்படி) என்றது-குணமென்று சொல்லலாம்படி என்கை.

இவையொன்றும் பாராதே இரங்கினாரென்கையாலே-இரக்கத்துக்குத்தகாத விஷயமென்றதாய்த்து. ஆனால் இரங்கத்தக்க விஷயமேதென்னவருளிச்செய்கிறார் (ருஷீணாமித்யாதி). ‡(பாசுரத்தை) என்றவநந்தரம், சொல்லாதிருக்க என்று சேஷம்.

‡"அவர்க்கு" என்று - குஹப்பெருமாளை உபசரித்துச் சொல்லுகையால், தம்கருத்தால் சொன்னவரன்றென்று கருத்து.

(முன்னிடக்கடவ அர்த்தம்) புருஷகாரமென்றபடி. ஶ்ரீகுஹப்பெருமாள் பெருமாள்பக்கல் ஸ்நேஹத்தாலே நாலடியிட்டுவர, பெருமாள் கடாக்ஷிக்கைக்கு முன்னே, பிறந்தகத்தில் தோழன்மார்வந்ததாகக் கடாக்ஷித்து, அநந்தரம் பெருமாளை அங்கிகாரஹேதுவாக அழகாகவும் ஸாபிப்ராயமாகவும்பார்க்க, இவற்றை யெல்லாமறிந்து பெருமாள் "மாழைமான் மடநோக்கி யுன்தோழி" என்கிறாரென்று திருவுள்ளம்பற்றி, அதில் "தோழன் நீ யெனக்கு" என்றாப்போலே சொல்லாதே, "உன்தோழி" என்றத்தால் பலித்தகருத்தருளிச்செய்கிறார் (இத்தாலித்யாதி). நோக்கையிட்டு விசேஷித்ததுக்கு(ஜூ)பாவம் (இவனையித்யாதி). "மடம்" என்றத்தால் தோற்றின ம்ருதுத்வந்தா னென்னென்ன வருளிச்செய்கிறார் (இத்தனையித்யாதி). "மாழை" என்றதுக்குக் கருத்தருளிச்செய்கிறார் (இவள்பருவமித்யாதி). எத்தனை நீர்மையுண்டானாலும் தம்பெருமை போகச்சொல்லுவரோ

---

(௧) ரா-அயோ-௭௨-௪௮. (௨) ரா-பா-௧-௧௨.

‡ இவ்வாக்யத்வயம் அநந்விதம்.

வென்ன (ஓரியாரித்யாதி).லோகத்தில் நியமேந அப்படியே வ்யவஹரிப்பரென்னக்கூடுமோ வென்ன வருளிச்செய்கிறார் (இவர்கள்தானித்யாதி). ஆனாலும், உபசரித்துச் சொன்னவார்த்தை நீர்ஸமக்குடலாமோ வென்ன வருளிச்செய்கிறார் (இவ்வார்த்தை யித்யாதி). (போழ்க்கன்) காபட்யம்.

உம்பியான இளையபெருமாள் எம்பிஎன்று தாத்பர்யம் விவக்ஷித்தருளிச்செய்கிறார் (உன்னுடைய வித்யாதி). பெருமாள் தன்நீர்மையாலே ஸாம்யத்தைக் கொடுப்பராகையாலே அப்படி "உம்பி" என்று அருளிச்செய்தாரே யாகிலும், அந்தை அநுவதிக்கிற ஆழ்வார் அங்ஙன் அநுவதிக்கக் கூடுமோ, வானவரில் தலையானவர்க்கும், "ஏழையேதலன்" இத்யாதிப்படியே கானவரில் தலையானவர்க்கும் நெடுவாசியுண்டே என்னும் சங்கையை அநுவதித்துப் பரிஹரிக்கிறார் (இங்ஙனே இத்யாதி). (இவரும்) ஆழ்வாரும், சொல்லலாம் என்று சேஷம். இளையபெருமாள் அப்படி பகவத்ஸமராக நினைத்திருக்கைக்கு ப்ரமாணம் (பக்திரித்யாதி). இந்தப்ரமாணம் இவ்விபூதியிலுள்ளார்க்காகச் சொன்னதன்றோ, இளைய பெருமாள் நித்யஸூரிகளன்றோ வென்ன வருளிச்செய்கிறார் (பதியினி லித்யாதி). பெருமாள் "உம்பி" என்றத்தால் பலித்த வர்த்தமென், "உன்தோழி" என்றத்தால் கொடுத்ததரம்போராதோ வென்ன வருளிச்செய்கிறார் (இத்தாலித்யாதி). (அங்கிகாரம்) என்றது - உத்தேஶ்யதயா எண்ணும்படி பண்ணுகை. இப்படி அவன் வைஷ்ணவாங்கீகாரம் பண்ணிக்கொடுத்தவிடமுண்டோ வென்ன வருளிச்செய்கிறார் (அவனித்யாதி). "சேமம்" என்றது - பாகவதாபிமாநம் என்று திருவுள்ளம். ஶ்ரீலோகஸாரங்க முநிகள் தம்மைத் தோளிலே கொண்டுவரச்செய்தே அவர்க்குத்தாம் பரதந்த்ரரானபடியை அநுஸந்தித்தபடியாலே "ஆட்படுத்த" என்றாரிறே என்று கருத்து.

"உன்தோழி" என்றாப்போலே உனக்கு நான் தோழன் என்னவேண்டியிருக்க, "தோழன் நீஎனக்கு" என்றத்தாலே - தமக்குள்ள தோழமை ஒரு சரக்காகத் தோன்றாமையாலே, அவர் தம்மைத் தோழமை கொண்டதே கனக்க நினைத்தருளிச்செய்தார்; இத்தால்-உபாயஸ்வீகாரம் பண்ணினபடியாய்த் தென்கிறார் (ஸ்வநிகர்ஷத்தை யித்யாதி). (க) "పద్భ్యామభిగమాచ్చైవ స్నేహసన్దర్శనేనచ - பத்ப்யாமபிகமாச்சைவ ஸ்நேஹஸந்தர்சநேந ச" என்று சொல்லுகிறபடியே - நாலடி வருகையே ஸங்கப்ரபத்தி என்றெண்ணி யிருந்தாரென்றதாய்த்து. ஆழ்வார்க்கு கங்காகூலம் விப்ரக்ருஷ்டமா யிருக்குமே, ஓரிடத்தில் தாமுமவரு மிருந்து சொல்லுமாபோலே "இங்கு" என்னக்கூடுமோ வென்ன வருளிச்செய்கிறார் (பின்னித்யாதி. இவரும்) என்ற வநந்தரம், அவரைப்போலே என்று சேஷம். ஆனால்

(க) ரா-அயோ-ரு0-ச0.

அவர் பின்தொடர்ந்தால் காட்டுக்குத் துணையாகக் கூட்டிக்கொண்டு போக வொண்ணாதோ, "ஒழி" என்று நிஷேதிக்கை தோழமைக்குச் சேராதே யென்ன வருளிச்செய்கிறார் (படையித்யாதி). இத்தால் - "பரதாழ்வானுக்கு நாம் போனவழிகாட்டு" என்று இஷ்ட விநியோகார்ஹமாம்படி பண்ணி யருளுகையாலே நிரதிசய புருஷார்த்தத்தை நியமித்தாரென்றதாய்த்து. கர்ணபரம்பரயா வந்ததென்றதுக்கு நியாமக மருளிச்செய்கிறார் (இப்பாசுரந்தன்னை யித்யாதி). "గుహమాసాద్య ధర్మాత్మా నిషాదాధిపతిం ప్రియమ్ గుహేన సహితో రామో లక్ష్మణేనచ సీతయా-குஹமாஸாத்யதர்மாத்மா நிஷாதாதிபதிம்ப்ரியம்। குஹேந ஸஹிதோராமோ லக்ஷ்மணேநச ஸீதயா" என்றத்தாலே - இளையபெருமாளுக்கு முற்பட குஹரோட்டைச் சேர்த்தி சொல்லியும், அநந்தரம் அவர்க்கு இவர் தம்பிஎன்னும்படி ஸ்நிக்த்தரான இளைய பெருமாளைச் சொல்லியும், அதுக்கநந்தரம் இருவர்க்கும் புருஷகார பூதையான பிராட்டியைச் சொல்லியும் போருகையாலேயும், "ப்ரியம்" என்கையாலேயும், "உன்தோழி உம்பி, எம்பி, தோழன் நீஎனக்கு" என்றவை சொல்லிற்றாய்த்தென்று திருவுள்ளம். பரதாழ்வான் ஸ்ரீஸூக்திகள் பெருமாள் திருவுள்ளத்திலே சிரகாலம் கிடந்தத்தை த்ருஷ்டாந்தமாக வருளிச்செய்கிறார் (ஸம்ஸ்மரா மியித்யாதி).

"யதா - ததா" என்றதுக்குக் கருத்தருளிச்செய்கிறார் (உத்பத்தியு மித்யாதி).

"அணி" என்றது *அரங்கத்துக்கு விசேஷணமானபோது தாத்பர்ய மருளிச்செய்கிறார் (அதாகிறதித்யாதி). *பொழிலுக்கு விசேஷணமான போது தாத்பர்யம் (சோலையித்யாதி). ... ... (௧)

மூ.—வாத மா மகன் மற்கடம் விலங்கு
மற்றோர்சாதியென்றொழிந்திலை உகந்து
காதலாதாம் கடலினும் பெருகச் செய்
தகவினுக்கில்லை கைம்மாறென்று
கோதில்வாய் மையினாயொடுமுடனே
உண்பனானென்ற வொண்பொருளெனக்கும்
ஆதல் வேண்டுமென்றடியிணை யடைந்தேன்
அணிபொழில் திருவரங்கத்தம்மானே. (௨)

பதம்.	உரை.	பதம்.	உரை.
மற்றோர்சாதி	வேறொரு (மநுஷ்ய ஜாதியல்லாத) ஜாதியில் பிறந்தவன்,	விலங்கு	(அதாவது) ஜ்ஞாநஹீநமான திர்யக் ஜாதி,

மற்கடம்	(அதிலும்) குரங்கு,
வாதம்	(அதுக்குமேலே அஹங்கார ஹேதுவான) வாயுவினுடைய
மா	ஶ்லாக்க்யமான
மகன்	பிள்ளை
என்று	ஆகிய இந்தத்தன்மைகளைப் பார்த்து
ஒழிந்திலை	கைவிடாதவனாய், (அதுக்குமேலே)
உகந்து	(அவன்விஷயத்தில்) ப்ரீதிபண்ணி,
காதல்	ஸ்நேஹமும்
ஆதரம்	(அதின் முதிர்ந்தநிலமான) காமமும்
கடலினும்	ஸமுத்ரத்தைக்காட்டிலு மதிகமாக
பெருக	வளராநிற்க,
செய்	(நீர்) செய்த [குந்த)
தகவினுக்கு	உபகாரத்துக்கு (த்த
கைம்மாறு	ப்ரத்யுபகாரமானது,

இல்லை	கிடையாது
என்று	என்றுசொல்லி,
கோதுஇல்	நிர்த்துஷ்டமான
வாய்மையினாயொடும்	(ப்ரிய) பா(ஷா)ஷணத்தையுடையரான உம்மோடு
உடனே	கூடியிருந்தே (உம்மைத் தழுவிக்கொண்டு)
நான்	நான்
உண்பன்	(நிரதிசய ஸுககரமான திருமேனியை) அநுபவிக்கக் கடவேன்
என்ற	என்றருளிச்செய்த
ஒள்	அழகியதான
பொருள்	அர்த்தமானது
எனக்கும்	என் விஷயத்திலும்
ஆதல்வேண்டுமென்று	உண்டாகவேணுமென்று கருதி

அடியிணையடைந்தேன் அணிபொழில் திருவரங்கத்தம்மானே! (உ)

வ்யா.—இரண்டாம்பாட்டு. ஜந்மவ்ருத்தங்களால் குறையநின்ற ஶ்ரீகுஹப்பெருமாள்பக்கல் பண்ணின விஷயீகாரத்தை என்பக்கலிலேபண்ணவேணுமென்று சரணம்புக்கார் - கீழிற்பாட்டில்; மநுஷ்யஸஜாதீயத்வம் கிடக்கச்செய்தே வந்த நிகர்ஷமிறே-கீழ்ச்சொல்லிற்று; இங்கு-விஸஜாதீயமான திர்யக்கையகப்பட தத்கத(தத்கத)நிகர்ஷம்பாராதே விஷயீகரித்தமாத்ரமேயன்றிக்கே அந்தஃபுரகைங்கர்யத்திலே ஏவியடிமைகொண்டாப்போலே, என்னளவிலும் கைங்கர்யத்தைக் கொள்ளவேணுமென்கிறார். இவ்வதிகாரிக்கு விஷயீகாராநந்தரம் கைங்கர்யத்திலே அந்வயிக்குமத்தனைபோக்கி, ஸாதநத்திலந்வயிக்கவேண்டுவதில்லை போலேகாணும். "இங்கொழி" என்றவிடத்தில் சொல்லிற்று இத்தனையிறே.

(வாதமாமகனித்யாதி) விஷயீகாரத்துக்கு நிகர்ஷத்தை முன்னிடுகிறவோபாதி, கைங்கர்யத்துக்கும் நிகர்ஷத்தைமுன்னிடவேணுமிறே;

விஸஜாதீயர் நிகர்ஷம் சொல்லும்போதும் "மற்றோர்சாதி" என்னவமையுமிறே. அது தன்னிலே வருகிற நிகர்ஷம் சொல்லுகைக்காக (விலங்கு) என்கிறது - திர்யக்கு; ஜ்ஞாநத்தில் விலங்குதலையிட்டுச் சொல்லுகிறது. (க) "𑌯𑌸𑍍𑌤𑍁 𑌤𑌿𑌰𑍍𑌯𑌕𑍍𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌸𑍍 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌤𑌿𑌰𑍍𑌯𑌗𑍍𑌯𑍋𑌨𑌿𑌸𑍍𑌸 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇. யஸ்து திர்யக்ப்ரவ்ருத்தி ஸ்ஸ்யாத் திர்யக்யோநிஸ்ஸ உச்யதே" என்னக்கடவதிறே. ஜ்ஞாநத்துக்கு விலங்குதல் வருவது - ஆஹாரநியதி இல்லாமையாலும், ஜந்யஜநகபாவத்தில் முறையிலே பரிமாறாமையாலுமிறே. (மற்கடம்) அதிலும் தண்ணியதொன்று சொல்லுகிறது. தானே இரங்கிக்கொடுக்குமத்தையும் ஸ்வஸாமர்த்யத்தாலே அபஹரித்துக்கொண்டதாயிறே இருப்பது; (உ) "𑌵𑌾𑌨𑌰𑍇𑌣 𑌮𑌯𑌾𑌸𑌹-வாநரேண மயாஸஹ" என்னுமாபோலே. (வாதமாமகன்) வாயுவினுடைய ஶ்லாக்யபுத்ரன். நிகர்ஷம்சொல்லுகிற ப்ரகாணத்தில் உத்க்ருஷ்டஜந்மத்தைச் சொல்லுகிறது எதுக்குறுப்பாக வென்னில்; ஜாதியைப் பற்றவன்றிக்கே, ஸ்வபாவத்தைப்பற்றவிறே. கீழ் உக்த நிகர்ஷம்போலன்றே "வாயுபுத்ரன்" என்கிற அஹங்காரத்தால் வந்த நிகர்ஷம். அர்த்தகாமங்களுக்கடி - அஹங்காரமிறே; ஸ்வரூபநாசத்தைபலி(ஃலி)ப்பிக்குமிறே. இந்த அஹங்காரத்துக்கடி-அந்த உத்க்ருஷ்டஜந்மம். (ங) "𑌪𑍁𑌣𑍍𑌯𑌪𑌾𑌪𑍇 𑌵𑌿𑌧𑍂𑌯 - புண்யபாபே விதூய" என்னுமாபோலே த்யாஜ்யத்தில்முற்படவேண்டுவது இதிறே; ஆகையிறே (ச) "𑌧𑌰𑍍𑌮𑌾𑌨𑍍 𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌜𑍍𑌯-தர்மாந் பரித்யஜ்ய" என்கிறது. (என்றொழிந்திலை) இவையோரோவொன்றே போருமிறே கைவிடுகைக்கு; இவைபார்த்துக்கைவிட்டிலை. இரக்கமுடையவனுக்கு இவைபார்த்துக் கைவிடவொண்ணாதிறே.

கைவிடாதவளவேயன்று (உகந்து) அதாவது-சேஷபூதனுக்குக் கைங்கர்யத்தை உண்டாக்குகையும் அவனுக்கு ப்ராப்தமென்று நினைத்திருக்கையுமன்றிக்கே தன்பேறாக நினைத்திருக்கையும், ப்ரத்யுபகாரம் தேடித்தடுமாற வேண்டாமையும். உகப்பை உபபாதிக்கிறது மேல். (காதலாதரம்) இது புநருக்தமன்றோவென்னில்; அவ்யாப்தி அதிவ்யாப்திரஹிதமான லக்ஷணவாக்யத்தில் புநருக்திதோஷமாவது; ஆற்றாமையும் ஆதரமும் சொல்லுவிக்கச் சொல்லுகிறதாகையாலே தடையில்லை. கிஞ்ச, அபிஸந்திபேதத்தாலே புநருக்தமுமன்று,-(ரு) "செங்

(க)

(உ)

(ங) முண்ட-ங-க-ங.

(ச) கீதை-கஅ-சுசு.

(ரு) தி-வாய்-உ-ரு-க.

தாமரைத்தடங்கண்" என்கிறது தன்னையே பலகாலும் சொல்லுகிறதுக்குத்தாத்பர்யமிதிறே. காதலினுடைய கார்யமிறே-ஆதரமாகிறது. (௧)"సఙ్గాత్సఞ్జాయతే కామః-ஸங்காத்ஸஞ்ஜாயதே காம:" என்கிறபடியே-கர்மநிபந்தநமாகச்சிலவர்க்கு வருமத்தையிறே பெருமாளுக்கும் பிராட்டிக்கும் சொல்லுகிறது. பிராட்டிக்கு, பெருமாளைக் கண்டபோதே, "வில்லைமுறித்துக் கைப்பிடிக்கவல்லரே!" என்று ஸங்கம்பிறந்தது; பின்னை அநுபவித்தல்லது நிற்கவொண்ணாததசை-காமம்; அவர்க்கு பித்ருக்ருததாரம் என்று பிறந்ததுஸங்கம். (௨) "గుణేన రూపేణ విలాస చేష్టితైః- குணேந ரூபேண விலாஸ சேஷ்டிதை:" என்கிறபடியே-குணரூபசேஷ்டிதங்களைப்பற்றப் பிறந்தது-காமம். (கடலினும்பெருக) கடல்குளப்படியாம்படி பெருகுகிறஸமயத்திலே. இரண்டாச்ரயமும் கடல் போலேகாணும். பெருகுகையாவது - மர்யாதாபங்கம் பிறக்கையிறே. அதாவது - (௩) "తత్తస్య - தத்தஸ்ய" என்கிறநிலை குலைந்து வேண்யுத்க்ரதநத்திலே ஒருப்படுகையும், (௪) "అవాక్యనాదరః - அவாக்யநாதர:" என்னும் நிலைகழிந்து (௫) "అవగాహ్యార్ణవం స్వప్స్యే- அவகாஹ்யார்ணவம் ஸ்வப்ஸ்யே" என்னும்படியாகையும்.

(செய்தகவினுக்கு) தகவாகிறது-தர்மம். அதாகிறது-ஒருப்ரயோஜநத்தைக் கணிசியாதே செய்யுமதிறே. (௬)"ధర్మతః పరిరక్షితాః-தர்மத: பரிரக்ஷிதா:" என்கிறபடியே-ப்ரயோஜந நிரபேக்ஷமாக எங்களை எல்லாரையும் ரக்ஷித்தவனல்லையோ. (இல்லைகைம்மாறென்று) சேஷபூதன் சேஷியைப்பார்த்துச் சொல்லுகிற பாசுரத்தை சேஷிசொல்லுகிறானிறே நீர்மையாலே. என்கையிலே திருவாழிமோதிரத்தைத் தந்து எல்லாரும் தேடிக்கொடு திரியாநிற்க, (௭) "సేయమాసాదితా మయా-ஸேயமாஸாதிதாமயா" என்று நானிப்பேறு பெறும்படி பண்ணுவதே! என்று நான் சொல்லக்கடவ பாசுரத்தை இவர் சொல்லுவதே! என்றிறே இவருடைய அபிப்ராயம்.

(கோதில்வாய்மையினாயொடும்) வாய்மை-வாகிந்த்ரியவ்யாபாரம். அதாகிறது - வசநம். அதுக்குக் கோதில்லாமையாவது-(௮) "సంశ్రవే మధురం వాక్యమ్ - ஸம்ச்ரவே மதுரம்வாக்யம்" என்று பிராட்டியுடைய திருவுள்ளத்தே மெய்யென்றுபட்டு அவள் தரிக்கும்படி சொல்லு

---

(௧) கீதை-௨-௬௨. (௨) ஸ்தோ-ர-௩௮. (௩)-ரா-ஸு-௩௧-௩௦.
(௪) சாந்தோ-௩-௧௪-௨. (௫) ரா-யு-௫-௮. (௬)
(௭) ரா-ஸு-௩௧-௧௬. (௮) ரா-ஸு-௩௧-௧.

கையும், (௧) "𑌦𑍃𑌷𑍍𑌟𑌾𑌸𑍀𑌤𑌾 - த்ருஷ்டாஸீதா" என்று இவர் தரிக்கும்படி சொல்லுகையும், (உடனேயுண்பன் நானென்ற) இனி நாமொக்க ஜீவிக்கக்கடவோம்.

இவ்வர்த்தம் (௨) "𑌏𑌷𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌵𑌭𑍂𑌤𑌸𑍍𑌤𑍁 - ஏஷஸர்வஸ்வ பூதஸ்து" என்கிறத்தைப்பற்றச் சொல்லுகிறது. ஒருகலத்திலே உண்பாரைப் போலே சேஷசேஷிகளிருவர்க்கும் அநுபாவ்யமிறே திருமேனி. [ஸர்வஸ்வபூதஃ] ஸ்வரூப ரூப குணங்களிலும் பிராட்டிமாரிலும் அபிமதமாயிருக்கையாலே. அதாவது - ருசிஜநகமாயிருக்கையாலும், தானே ஸாதநமுமா யிருக்கையாலும், ஸதாதர்சந விஷயமாயிருக்கையாலும். ரக்ஷகனுக்கு ரக்ஷணத்துக்கு ப்ரதாநபரிகரம் திருமேனியிறே; அவ்வுடம்போடே யணைந்த உடம்பென்றிறே தன்னுடம்பையும் அவன் விடமாட்டாதே யிருக்கிறது.

(ஒண்பொருள்)சீரிய அர்த்தம். (எனக்குமாதல்வேண்டுமென்று) இப்பெரியபேற்றை ஆசைப்படுகையாவதென்! என்று கைவாங்கார்களிறே க்ருபணராயிருப்பார். (அடியிணையடைந்தேன்) சரணாகதிக்கு பலி(ஃப)யாததொன்றுமில்லை என்றிருக்கிறார். அத்தலையாலே வருமன்று எல்லாம் கைபுகுருமிறே. (அடியிணையடைந்தேன்) உன்னுடைமைகண்டேன் என்று வந்தவனில் வ்யாவ்ருத்தி.

(அணிபொழில் திருவரங்கத்தம்மானே) ஆபிமுக்யம் பிறந்தால் கைங்கர்யத்திலே அந்வயிப்பிக்கைக்காகவன்றோ இங்குவந்து கண்வளர்ந்தருளுகிறது. ... ... (௨)

அநு—இரண்டாம் பாட்டு. (வாதமித்யாதி) கீழ்ப்பாட்டில் பகவத்விஷயீகாரத்தை ப்ரார்த்தித்தவுடனே, நிரதிசய புருஷார்த்தமான கைங்கர்யத்தை ப்ரார்த்திக்கக்கூடுமோ, கைம்முதலை யன்றோ ப்ரார்த்திக்க வடுப்பதென்ன வருளிச்செய்கிறார் (இவ்வதிகாரிக்கித்யாதி). ஆனால் விஷயீகரித்தவுடனே ஶ்ரீகுஹப் பெருமாளைக் கொண்டு கைங்கர்யத்தைக் கொண்டாரோ வென்ன வருளிச்செய்கிறார் (இங்கொழி யித்யாதி).

விஷயீகரிக்கைக்கு ஶ்ரீகுஹப்பெருமாளை வ்யாஜீகரித்துத் தம்முடைய நிகர்ஷம் முன்னிட்டாரே யாகிலும், விஷயீகாரம் பெற்றபின் கைங்கர்யத்தை ப்ரார்த்திக்கும்போது திருவடியை வ்யாஜீகரித்து நிகர்ஷத்தை முன்விடவேணுமோ வென்ன வருளிச்செய்கிறார் (விஷயீகாரத்துக் கித்யாதி). இத்தால் - புருஷார்த்தத்தினுடைய கௌரவத்தைப் பார்த்தால் ஸ்வநிகர்ஷமும் முன்விட வேண்டியிருக்குமென்றதாய்த்து. "ஏழை, ஏதலன்,

---

(௧) ரா-பால-௧-௭௮. (௨) ரா-யு-௧-௧௩.

கீழ்மகன்" என்றவிடத்தில் உத்தரோத்தரம் நிகர்ஷாதிக்யம் சொல்லுமா போலே, இங்கே க்ரமேண சொல்லுமளவில் உத்தரோத்தர நிகர்ஷம் சொல்லக்கூடாமையாலே வ்யுத்க்ரமேண வ்யாக்யாநம் செய்தருளுகிறார் (விஸஜாதீய ரித்யாதி). (அதுதன்னிலே) - அந்த நிக்ருஷ்ட ஜாதிதன்னிலே. "மற்கடம்" என்றபோதே "விலங்கு" என்றது ஸித்தமன்றோ வென்ன வருளிச்செய்கிறார் (திர்யக்கித்யாதி). திர்யக்குக்களிலும் தண்ணிதானமையை உபபாதிக்கிறார் (தானே யித்யாதி). இத்தால் - பஶ்வாதிகளுக்குப் புல்லிட்டால் முகம்பார்த்துத்தின்னும்; குரங்குகளுக்குச் சோறுகாட்டினால் பறித்துக்கொண்டோடும்; அங்ஙனே, நிர்ஹேதுக க்ருபையால் ஈஶ்வரன் கொடுத்ததையும் தன்னாலே வந்ததாக எண்ணியிருக்கை மிகவும் தண்ணிதென்ற தாய்த்து. "உத்க்ருஷ்ட ஜந்மம்த்யாஜ்யம்" என்னுமதுக்கு த்ருஷ்டாந்தாந்தரம் (ஆகையிறே யித்யாதி). ஆனால் "வாதமாமகன்" என்றதொன்றைச் சொல்ல வமைந்திருக்க, இதிலும் குறைந்தவற்றை அருளிச்செய்வானென்னென்ன வருளிச்செய்கிறார் (இவையித்யாதி). தோஷங்களில் ப்ரதாநங்களை முந்துறச் சொன்னத்தால் கைவிடுகைக்கு எல்லாம் துல்யங்க ளென்கைக்காக வென்று கருத்து.

அவ்யாப்தியாவது - லக்ஷ்யைக தேசத்தில் லக்ஷணமில்லாம லிருக்கை; அதிவ்யாப்தியாவது-அலக்ஷ்யத்தில் லக்ஷணம் வர்த்திக்கை; புநருக்தி என்றது - புநஃ அவ்யாப்தி வாரணார்த்தமாக வாதல், அதிவ்யாப்தி வாரணார்த்தமாக வாதல் பதாந்தரங்க ளுண்டாகை. திருவடி விஷயத்தில் பெருமாள்செய்த ஆதரத்தில் இவ்வாழ்வாருக்கு ஆற்றாமையாதல் ஆதரமாதல் சொல்லுவிக்கையாலே புநருக்தியாகிலும் தோஷாயவன்றென்கிறார் (ஆற்றாமை யித்யாதி). இங்ஙனன்றிக்கே, பெருமாளுக்கும் பிராட்டிக்குமுள்ள ஸங்ககாமங்களை "காதலாதரம்" என்கையாலே புநருக்தியில்லை என்கிறார் (கிஞ்சேத்யாதி). கீழே முன்னேசொன்ன யோஜனையை ஸத்ருஷ்டாந்த முபபாதிக்கிறார் (செந்தாமரை யித்யாதி). இரண்டாம்பக்ஷத்தை உபபாதிக்கிறார் (காதலினுடைய வித்யாதி). கர்மநிபந்தநமான காதலாதரம் அவதார விசேஷமான இவர்களுக்குக் கூடுமோவென்ன வருளிச்செய்கிறார் (ஸங்காதித்யாதி). தாத்பர்யாந்தரம் (இரண்டித்யாதி). கடல் போலே ஒருவர் பாவ (ഭാവ) மொருவர்க்குத் தெரியாதபடி கம்பீரரானவர் இப்படி படுகிறாரென்று கருத்து.

பெருமாள் நினைவு இதானால் திருவடி நினைவு ஏதென்ன வருளிச்செய்கிறார் (என் கையிலே யித்யாதி).

பிராட்டிமாரினு மபிமதமானதுக்கு நியாமக மருளிச்செய்கிறார் (அதாவதித்யாதி); ஆஶ்ரிதோப யோகியாகையாலே அபிமதமென்று கருத்து. (அவன்) திருவடி. "எனக்கும்" என்கிற சகார லப்யார்த்த மருளிச்செய்

கிறார் (இப்பெரிய வித்யாதி). "ஆதல்வேண்டும்" என்றது - ஆகவேணும் என்று சப்தார்த்தம் கண்டுகொள்வது. "வேண்டுமென்றடியிணை யடைந்தேன்" என்று ஸாதரமாகச் சொல்லக்கூடுமோ வென்ன வருளிச்செய்கிறார் (அத்தலையித்யாதி). தாத்பர்யாந்தர மருளிச்செய்கிறார் (உன்னுடைமை யித்யாதி). கார்யம் செய்துவந்தவனுக்கு முகங்கொடுத்தா யென்னு மதன்றிக்கே காலைப்பற்றிக் கிடக்கிறேனென்ற வ்யாவ்ருத்தி என்று கருத்து.... ... ... (௨)

மூ.—கடிகொள் பூம்பொழில் காமரு பொய்கை
வைகு தாமரை வாங்கியவேழம்
முடியும்வண்ணமோர் முழு வலி முதலை
பற்ற மற்றது நின்சரண் நினைப்பக்
கொடியவாய் விலங்கினுயிர் மலங்கக்
கொண்டசீற்ற மொன்றுண்டுள தறிந்துன்
அடியனேனும் வந்தடியிணை யடைந்தேன்
அணிபொழில் திருவரங்கத்தம்மானே. (௩)

பதம்.	உரை.	பதம்.	உரை.
கடிகொள்	பரிமளத்தை யுடைத்தான	அது	அந்த யானையானது
பூ	புஷ்பங்கள் நிறைந்த	நின்சரண்	உன் திருவடிகளை
பொழில்	சோலையினால் சூழப்பட்டதாய்	நினைப்ப	த்யாநிக்க (அப்பொழுது)
காமரு	ஸ்ப்ருஹணீயமான	கொடிய	க்ரூரமான
பொய்கை	மடுவிலே	வாய்	வாயையுடைய
வைகு	இராநின்ற	விலங்கின்	திர்யக்கான முதலையினுடைய
தாமரை	தாமரைப்பூவை	உயிர்	ப்ராணனானது
வாங்கிய	பறித்த	மலங்க	வ்யாகுலப்படும்படியாக
வேழம்	ஸ்ரீ கஜேந்த்ரனை,	கொண்ட	எறிட்டுக்கொண்ட
முடியும்வண்ணம்	(தன்னுடைய சாபம்) முடியும் விதத்தை	ஒன்று	அத்விதீயமான (ஆஶ்ரிதார்த்தமான)
ஓர்	ஆலோசியாநின்றதாய்	சீற்றம்	கோபமானது
முழுவலி	பூர்ணப(௩)லத்தை யுடையதான	உண்டு	உண்டாயிற்று,
முதலை	முதலையானது	உளது	(இப்படி ஆஶ்ரிதவிரோதி நிரஸநார்த்தமாக.) உள்ள கோபத்தை
பற்ற	நெருக்கிப்பிடிக்க,		
மற்று	அதுக்குமேலே		

அறிந்து	அறிந்து
உன்	உனக்கு
அடியனேன்	தாஸபூதனான நான்
வந்து	அகிஞ்சனனாய்வந்து

அடியிணையடைந்தேன் அணிபொழில் திருவரங்கத்தம்மானே! (௩)

வ்யா.—மூன்றாம்பாட்டு. விஷயீகாரத்தையும் விஷயீகார பலமான கைங்கர்யத்தையும் சொல்லிற்று-கீழ்; கைங்கர்யத்துக்கு இடைச்சுவரான விரோதியைப் போக்கி ஸ்ரீ கஜேந்த்ராழ்வானைக் கைங்கர்யத்திலே அந்வயிப்பித்தாப்போலே, என்னுடைய விரோதியைப் போக்கி, என்னைக் கைங்கர்யத்திலே அந்வயிப்பிக்க வேணுமென்கிறார். விஷயீகாரத்துக்கும் கைங்கர்யத்துக்கும் நிகர்ஷம் முன்னிட வேண்டுகையாலே சொன்னார் - கீழ்; விரோதி நிரஸநத்துக்கு நிகர்ஷம் முன்னிட வேண்டுவதில்லையிறே; விஷயீகாரமாகிறது- உபாயத்தளவும் செல்ல பலி (ஃலி)க்குமதிறே; அவன் உபாயமானால் பின்னை கைங்கர்யத்திலே அந்வயிப்பிக்கு மித்தனை; அதுக்கு விரோதி யறுகையிறே பின்னையுள்ளது; அந்த விரோதிதான் உபயாகாரமா யிருக்கக்கடவது; அவையாகிறன- இந்த்ரியவஶ்யதையும், யமவஶ்யதையு மிறே. மேலிற்பாட்டில் - யமவஶ்யதை; இங்கு இந்த்ரியவஶ்யதை சொல்லுகிறது. எங்ஙனே யென்னில்; ஸ்ரீ கஜேந்த்ராழ்வானுக்கு விரோதியான முதலையை நிரஸித்தாப்போலே, எனக்கு விரோதியான இந்த்ரியங்களை நிரஸித்தருளவேணு மென்கிறார். இவ்வதிகாரிக்கு இந்த்ரிய வஶ்யதையாவது - விஷயாந்தர ப்ராவண்யம் முதலாய் கைங்கர்ய ஸ்பர்சியான அஹங்கார மமகாரம் முடிவாயிறே யிருப்பது.

(கடிகொளித்யாதி) "பொய்கைவைகு தாமரை" என்ன வமையுமிறே இவனதிகரித்த கார்யத்துக்கு, பொழிலையும் பொய்கையையும் வர்ணிக்கைக்குக் கருத்தென்னென்னில்; அநாவ்ருஷ்டியாலே ஜகத்தெல்லாம் நோவுபட்டு ஓரிடத்திலுமொரு புஷ்பமின்றிக்கே தட்டித்திரியாநிற்க, இவனுக்கு முற்படக் கண்ணிலே படுமதிறே சோலை; அந்தச் சோலைதான் தளிரும் முறியும் செருந்துமாய் நிற்கையாலே, கீழேயொரு பொய்கையு முண்டென்று தோற்றிற்று. (கடிகொள் பூம்பொழில்) பரிமள ப்ரசுரமாய் பூவை யுடைத்தான பொழில். "அச்சோலையை நோக்கிப்போக" என்று புக்கவாறே, பரிமளம் வந்து க்ராணவிஷயமாய், அங்கே புஷ்பமுண்டென்று தோற்றிற்று.

(காமருபொய்கை) ஆகர்ஷகமான பொய்கை - ஆகர்ஷகமா யிருக்கையாவது- அகாதமாய், "துஷ்ட ஸத்வங்களு முண்டாயிருக்குமோ"

என்று விவேகியாதே மேல்விழும்படியாயிருக்கை. (வைகு தாமரை) அநாவ்ருஷ்டியாலே தாமரைப்பூக்கள் எங்குமொக்கக் குடிவாங்கி பார்வதாக்ரத்திலே ஒரு பொய்கையிலே வந்து தங்குமாய்த்து. (வாங்கிய வேழம்) தன் மிடுக்காலும் அபிநிவேசத்தாலுமாக, வைத்தது வாங்கினாப்போலே வாங்கிற்று.

(முடியும்வண்ண மித்யாதி) இவ்வாதரத்தோடே புக்குத் தாமரைப்பூவைப் பறித்தவளவிலே, "ஓரானைக்கால் காணவல்லோமே" என்று பார்த்துக்கொடு கிடக்கிறமுதலை ஆனைக்காலைப் பற்றிற்று. (வேழம் முடியும்வண்ணம்) ஆனையை முடிக்கவேணும் என்றன்றே அது பற்றிற்று; தன்னுடைய சாபவிமோசநத்துக்காக விறே. இவர் பொறுக்கமாட்டாமையாலே சொல்லுகிற பாசுரமிறே இது.

(ஓர்முதலை) அத்விதீயமான முதலை. இதுக்கு முன்பு ஸ்வோஜ்ஜீவநத்துக்காக அநுகூலனை வந்து பற்றிற்றொரு முதலையல்லவிறே. (முழுவலி)தன்னில மல்லாமையாலே ஆனைக்கு மிடுக்குக்குறைந்தது; தன்னிலமாகையாலே முதலைக்கு மிடுக்கு மிக்கிருக்கை. (பற்ற) (௧) "చరణౌ గాఢం నిపీడ్య - சரணௌ காடம் நிபீட்ய" என்னுமாபோலே - தன்னுடைய அபிமதம் தலைக்கட்டுகைக்காக அதின் காலை உறைக்கப் பற்றுகை. கரணாந்தரமில்லையாகையாலே உள்ளத்தைக் கொண்டு பற்றுமித்தனையிறே யுள்ளது.

(மற்றது) பின்னை அந்த ஆனையானது. (௨) "గజ ఆకర్షతే తీరే గ్రాహ ఆకర్షతే జలే - கஜஆகர்ஷதே தீரே க்ராஹ ஆகர்ஷதே ஜலே" என்கிறபடியே - அநேககாலம் ‡(முதலை) நீர்க்கிழுக்க, ‡(ஆனை)கரைக்கிழுக்க, நோவுபட்டு மிடுக்கற்றது. அஹங்காரமிறே பல (బల) ஹாநிக்கடி; அத்தைப் பொகட்டு ஈஶ்வரனைப்பற்றின வாறே பல(బల)வானாமிறே. (நின்சரண் நினைப்ப) இப்படி நோவுபடாநிற்க இவன் நினையாதொழிந்தது - "ஒரு நீர்ப்புழுவுக்காக ஸர்வேஶ்வரனை அழைக்கவோ, நாமே வெல்லுகிறோம்" என்றிருந்தான்; இவனிப்படி நெடுநாள் நோவுபடுகிறபடி அறியாதிருக்கிறானன்றே; "இவனுடைய அஹங்கார ஸ்பர்சமற்றால் முகங்காட்டுகிறோம்" என்றிருந்தானத்தனையிறே. (சரண்நினைப்ப) இவன் மிடுக்கற்று, (௩) "మనసా చిన్తయద్ధరిమ్ - மநஸா சிந்தயத்தரிம்" என்கிறபடியே - திருவடிகளை நினைக்க. தான், "நெடுநாள் நோவுபடாநிற்க முகங்காட்

---

(௧) ரா-அயோ-௩௧-௨. (௨) விஷ்ணுதர்மம்-௯௮. (௩) விஷ்ணுதர்-௯௮.

‡ குண்டலிதத்வயம் க்வாசித்கம்.

டா தொழுவதே!'' என்று கிலாய்க்க ப்ராப்தமிறே; அது செய்ததில்லை. [𑌪𑌰𑌮𑌾𑌪𑌦𑌮𑌾𑌪𑌨𑍍𑌨𑌃 - பரமாபதமாபந்ந:] ஆபத்துக்கு உத்கர்ஷமாவது ஸர்வேஶ்வரன் வந்து உதவும்படியாயிருக்கை;- அடிக்கழஞ்சு பெற்றிருக்கை. [𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌃 𑌪𑌰𑌾𑌯𑌣𑌃 - நாராயண பராயண:] ப்ரஹ்மாதிகளைப்போலே ப்ரயோஜநாந்தரத்துக்காகச் சரணம் புகுகை யன்றிக்கே இவன் றன்னையே ப்ரயோஜநமாகப் பற்றுகை. நெடுநாள் வ்யாபரித்த சரீரமானது மிடுக்கற்றது. (௧) ''நாராயணா! ஓ! மணிவண்ணா!'' என்கிற வாகிந்த்ரிய வ்யாபாரமும் ஓவி, (௨) ''𑌵𑌾𑌙𑍍𑌮𑌨𑌸𑌿 𑌸𑌂𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 - வாங்மநஸி ஸம்பத்யதே'' என்கிறபடியே - நெஞ்சாலே நினைக்கும்படியாய்த்து.

(கொடியவாய்விலங்கு) முதலை, ஆனையின் காலையன்றோ பற்றிற்று; புண்படுகிறது தம் திருவுள்ளமிறே. ஒரு வைஷ்ணவனுக்கு வந்த ஆபத்துத் தனக்கு வந்ததாக நினையாதவன்று, வைஷ்ணவத்வமில்லை என்றிருக்க வடுக்கும்; புத்ராதிகளுக்கு வந்த விரோதம் தனக்கு வந்ததாக நினையாதபோது தேஹாபிமாநத்துக்குக் கொத்தையாமாபோலே. (உயிர்மலங்க) தேஹமாதல், இந்த்ரியமாதலன்றிக்கே, ப்ராணஸ்த்தாநமகப்பட மலங்க. (கொண்டசீற்றம்) (௩) ''𑌸𑌚𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌸𑌾𑌰𑌕𑌾𑌤𑍍𑌮𑌾 - ஸசநித்யம் ப்ரசார்காத்மா'' என்கையாலே ஆஶ்ரயத்தி லின்றிக்கே, (௪) ''𑌕𑍍𑌰𑍋𑌧𑌮𑌾𑌹𑌾𑌰𑌯𑌤𑍍 - க்ரோதமாஹாரயத்'' என்கிறபடியே- கார்யகாலத்திலே ஏறிட்டுக்கொண்ட சீற்றம்.

(௫) [𑌤𑌤𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿, 𑌕𑍋𑌪𑌸𑍍𑌯 𑌵𑌶𑌮𑍇𑌯𑌿𑌵𑌾𑌨𑍍 - ததஇத்யாதி, கோபஸ்ய வசமேயிவாந்] சரீரம் புண்பட்டால் சரீரி பேசாதிரானே; வந்தேறியான தேஹஸம்பந்தத்தைப்பற்றி சேதநன் பின்னே போமாபோலே. இவன் கர்மமிட்ட வழக்காமாபோலே அவன் அநுக்ரஹமிட்ட வழக்காய் அதின்பின்னே போகாநிற்கும். (ஒன்றுண்டு) தரித்ரனானவன் தநிகனை அடையுமாபோலே, ''சீற்றமுண்டு'' என்றாய்த்து இவர் பற்றுகிறது. ஆஶ்ரயிப்பார்க்கு உறுப்பான குணங்களிறே ஸௌசீல்யாதிகள்; விரோதி நிரஸநத்துக்குப் பரிகாரமிறே சீற்றம். (உன்னடியனேனும் வந்தடியிணை யடைந்தேன்) ஸ்வரூபஜ்ஞாநம் பிறந்தவாறே ஸ்வரூபாநுரூபமான உபாயத்தைப் பரிக்ரஹிக்கு மித்தனையிறே.

---

(௧) சிறிய திரு-௫௦. (௨) சாந்தோ-௬-௮-௬. (௩) ரா-அயோ-௧-௧௦.
(௪) ரா-ஆர-௨௪-௩௪. (௫) ரா-யு-௫௯-௧௩௬.

(அணிபொழி லித்யாதி) (௧) "𑌤𑍍𑌵𑌰𑌾𑌯𑍈 𑌨𑌮𑌃 - த்வராயை நம:" என்கிறபடியே - மடுவின்கரை தேடிவர வேண்டாதே, நானகப்பட்ட மடுவிலே யன்றோ வந்து சாய்ந்தருளுகிறது. அங்கு முதலையொன்று; இங்கு ஐந்து. (௨) "𑌦𑌿𑌵𑍍𑌯𑌂 𑌵𑌰𑍍𑌷𑌸𑌹𑌸𑍍𑌰𑌕𑌮𑍍 - திவ்யம் வர்ஷஸஹஸ்ரகம்" என்கிறபடியே - காலம் அளவுபட்டிருக்கும் அங்கு; இங்கு, காலம் அநாதி. அங்கு, பொய்கை அளவுபட்டிருக்கும்; இங்கு, * ஸம்ஸாரார்ணவம். ... ... (௩)

அரு.—மூன்ரும்பாட்டு. (கடியித்யாதி) விரோதி நிரஸநத்துக்கு நிகர்ஷம் முன்னிடவேண்டா தொழிவா னென்னென்ன வருளிச்செய்கிருர் (விஷயீகார மித்யாதி);விரோதி நிரஸநம் உபாயபூதன் கார்யமாகையாலே வேண்டாவென்றபடி. இப்பாட்டில் இந்த்ரியவஶ்யதையை நிவர்த்திப்பிக்க வேணுமென்கைக்கு நியாமக மென்னென்ன வருளிச்செய்கிருர் (இவ்வதிகாரிக்கித்யாதி); அர்ச்சாவதாரத்தில் பூவிடவேணுமென்கிற ஶ்ரீ கஜேந்த்ராழ்வானுக்கு விரோதி முதலையாகையாலே, இவ்விபூதியில் கைங்கர்யத்தைப் பண்ணு மதிகாரிக்கு ப்ரஸக்தமான விரோதி இதுவே யிறே என்று கருத்து.

பறித்த என்னுதே, "வாங்கி" என்றதுக்கு வாஸனை (தன்னித்யாதி.)

வேழத்தை - தன்சாபம் முடியும்வண்ணம் ஓராநின்றுள்ள முதலையென்ருக்கி யருளிச்செய்கிருர் (இவ்வாதரத்தோடே யித்யாதி). அர்த்தாந்தர மருளிச்செய்கிருர் (ஆனையித்யாதி).

அத்விதீயத்வந்தன்னை விவரியாநின்று கொண்டு, ஈடுபாடாகத் தாத்பர்ய மருளிச்செய்கிருர் (இதுக்கித்யாதி). இவ்வதிகாரியைப் பற்றி இவ்விந்த்ரியங்கள் (௩) * முடியானேயிற்கரணங்கள்போலே உஜ்ஜீவிக்குமென்று கருத்து. அபிமதம் பெறவேண்டினுல் கையாலே பற்றவேண்டாவோ வென்ன வருளிச்செய்கிருர் (கரணாந்தர மித்யாதி).

"நினைப்ப" என்று இத்தை ஆஶ்சர்யமாகச் சொல்லுகிற தென்னென்ன வருளிச்செய்கிருர் (தான் நெடுநாளித்யாதி). எடுத்த ஶ்லோக சேஷத்துக்கு அர்த்தமருளிச்செய்கிருர் (பரமாபத மித்யாதி). "மநஸா சிந்தயத்" என்றதுக்குத் தாத்பர்ய மருளிச்செய்கிருர் (நெடுநாளித்யாதி).

விலங்கை "கொடிய" என்று விசேஷித்தத்தால் பலி(ஃலி)த்தவர்த்த மருளிச்செய்கிருர் (முதலை யித்யாதி). (தம் திருவுள்ளம்) ஆழ்வார் திருவுள்ள மென்றபடி.

---

(௧) ர-ஸ்த-உ-இஎ. (௨) விஷ்ணுதர்-சுஅ. (௩) தி-வாய்-௩-அ.

சீற்றம்வந்தேறி என்றதுக்கு ப்ரமாணாந்தரம் (தத இத்யாதி). « తతో రామో మహాతేజా రావణేన కృతవ్రణమ్। దృష్ట్వా ప్లవగశార్దూలం కోపస్య వశమేయివాన్-ததோ ராமோ மஹாதேஜா ராவணேந க்ருதவ்ரணம்। த்ருஷ்ட்வா ப்லவகசார்த்தூலம் கோபஸ்ய வசமேயிவாந்" என்கிறபடியே - திருவடிக்குப் பட்ட புண்ணால் பெருமாளுக்குப்பிறந்த கோபத்துக்கு உபபத்தி யருளிச்செய்கிறார் (சரீரமித்யாதி). திருவடியைச் சரீரமென்றெண்ணிக் கோபிக்கக் கூடுமோ வென்ன வருளிச்செய்கிறார் (வந்தேறியித்யாதி). தேஹாத்மாபிமாநி யாகையால் இவன் தேஹத்தின் பின்னே போனால் அவன் போக வேணுமோ வென்ன வருளிச்செய்கிறார் (இவனித்யாதி).

இப்பாட்டுக்கு உட்கருத்தை யருளிச்செய்கிறார் (அங்கித்யாதி). (ங)

மூ.—நஞ்சு சோர்வதோர் வெஞ்சின வரவம்
வெருவிவந்து நின்சரணெனச் சரணாய்
நெஞ்சிற்கொண்டு நின்னஞ்சிறைப் பறவைக்
கடைக்கலம் கொடுத்தருள் செய்ததறிந்து
வெஞ்சொலாளர்கள் நமன்றமர் கடியர்
கொடியசெய்வன வுள வதற்கடியேன்
அஞ்சிவந்து நின்னடியிணையடைந்தேன்
அணிபொழில் திருவரங்கத்தம்மானே. (ச)

பதம்.	உரை.	பதம்.	உரை.
வெம்	க்ரூரமான	நஞ்சு	விஷத்தை
சொலாளர்கள்	சொற்களை யுடையரான	சோர்வது	உமிழாகின்றதாய்,
		ஓர்	அத்விதீயமாய்
நமன் தமர்	யமதூதர்கள்	வெம்	அதிக்ரூரமான
கடியர்	பயங்கரமான வேஷத்தை யுடையராய்க்கொண்டு	சினம்	கோபத்தை யுடையதான
		அரவம்	ஸுமுகனென்னும் பாம்பானது
கொடிய	(மரணகாலத்தில்) அதிக்ரூரமாக	வெருவி	(தன்னைக் கொல்ல வந்த பெரிய திருவடிக்கு) பயந்து
செய்வன	செய்கிற வ்யாபாரங்கள்		
உள	(பல) உண்டு;	வந்து	உன்னிடத்தில் வந்து
அடியேன்	தாஸபூதனான நான்	நின் சரண் எனா	நீ எனக்கு ரக்ஷகனாக வேணுமென்று சொல்லி,
அதற்கு	அந்த வ்யாபாரங்களுக்கு		
அஞ்சி	பயந்து,		

சரணாய்	(அதுக்கு) ரக்ஷகனாய்க் கொண்டு,
நெஞ்சில்கொண்டு	(அதின் சொல்லைத்) திருவுள்ளம்பற்றி,
நின்	உனக்கு சேஷபூதனாய்
அம்சிறை	அழகிய இறகுகளையுடையனான [இல்
பறவைக்கு	பெரிய திருவடியிடத்
அடைக்கலம்	(அப்பாம்பை) ரக்ஷ்ய வஸ்துவாக
கொடுத்து	ஒப்பித்து
அருள்செய்தது	க்ருபைபண்ணி ரக்ஷித்த விதத்தை
அறிந்து	உணர்ந்து,
வந்து	என் அபராதத்தை முன்னிட்டுக்கொண்டு வந்து

நின் அடியிணை யடைந்தேன் அணிபொழில் திருவரங்கத்தம்மானே!. (ச)

வ்யா.—நாலாம்பாட்டு. விஷயீகாரம் சொல்லி, விஷயீகார கார்யமான கைங்கர்யம் சொல்லி, அதுக்கு இடைச்சுவரான தேஹஸம்பந்தத்தை யறுத்துத் தரவேணும் என்கிறதாய் - இரண்டு பாட்டாலே; அதில் தேஹஸம்பந்தம் கிடக்கச்செய்தே அநுபவ விரோதியான பாபைகதேசபலமான இந்த்ரிய வஶ்யதையைப் பரிஹரித்துத் தரவேணுமென்றார் - கீழிற்பாட்டிலே; இதில், சரீரஸம்பந்தமற்றால் ஸர்வ பாபபலமாய் அநுபவ விரோதியாய்க்கொண்டு வரும் யமவஶ்யதையைத் தவிர்க்கவேணு மென்கிறார்.

(நஞ்சித்யாதி) ஸுமுகனுக்குப் பெரிய திருவடியால் வந்த பயத்தைத் த[illegible]த்துக்கொடுத்தாப்போலே, எனக்கு யமவஶ்யதையால் வந்த பயத்தை யறுத்து, அவனையிட்டே (க) ‘‘𑌪𑌰𑌿𑌹𑌰 - பரிஹர’’ என்னும்படி பண்ணித்தரவேணுமென்கிறார். சரணம் புகுவார், தந்தாமுடைய நிகர்ஷத்தை முன்னிட்டுக்கொண்டிறே சரணம்புகுவது. அந்நிகர்ஷந்தான், ஆகிஞ்சந்ய ரூபமாயும் அபராத ரூபமாயுமிறே இருப்பது. அதாகிறது - நன்மையில்லை யென்கையும், தீமையுண்டென்கையும். அது தன்னை அநுஸந்தித்தாரிறே அடைவே (உ) ‘‘𑌨𑌧𑌰𑍍𑌮𑌨𑌿𑌷𑍍𑌠𑍋-நதர்மநிஷ்டோஸ்மி’’ (௩) ‘‘𑌨𑌨𑌿𑌨𑍍𑌦𑌿𑌤𑌂𑌕𑌰𑍍𑌮-நநிந்திதம் கர்ம’’ என்று. (ச) ‘‘𑌜𑍍𑌞𑌾𑌨𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌚 𑌭𑌜𑌨𑌾 - ஜ்ஞாநக்ரியாச பஜநா’’ இத்யாதிகளும். ஆகிஞ்சந்யத்தை முன்னிட்டது - கீழ்; இதில் - அபராதத்தை முன்னிடுகிறது.

‘‘நஞ்சு, அரவம்’’ என்ன வமைந்திருக்க, (நஞ்சு சோர்வதோர் வெஞ்சினவரவம்) என்கிற தென்னென்றால்; (ரு) ‘‘வாயவனை யல்லது

(க) வி-பு-௩-எ-கச. (உ) ஸ்தோ-ர-உஉ. (௩) ஸ்தோ-ர-உ௩.
(ச)
(ரு) க-திரு-கக.

வாழ்த்தாது" என்றும், (௧) "𑌸𑌾 𑌜𑌿𑌹𑍍𑌵𑌾 - ஸாஜிஹ்வா" என்றும் - அவனைச்சொல்லி உஜ்ஜீவிக்கக்கடவ வாயைக்கொண்டு, பிறருடைய நாசத்துக்குப் பரிகாரமான நஞ்சையுமிழ்ந்து கொண்டாய்த்து வருகிறது; இவ்வாக்கைக்கொண்டு கிடீர் "சரணம்" என்றதென்கைக்காக. இதில் பலித்த தென்னென்னில்; சரணாகதிக்கு அர்ஹரல்லாதாரில்லை என்கைக்காக. (வெஞ்சினம்) அத்விதீயமான சினம். ஹ்ருதயத்திலே கிடந்தபோது பாதக (𑌬𑌾𑌧𑌕)மாகாதிறே. சினமுண்டானாலிறே உமிழுவது. "சீற்றமுண்டு" என்கிறதுக்கு எதிர்த்தட்டாகை. (அரவம்) கீழ்ச்சொன்னவை பூஷணமாம்படியான ஜந்மம். (௨) "𑌸𑌰𑍍𑌪𑌜𑌾𑌤𑌿𑌰𑌿𑌯𑌂 𑌕𑍍𑌰𑍂𑌰𑌾 - ஸர்பஜாதிரியம் க்ரூரா".

(வெருவிவந்து) சத்ருப(𑌭)ய பீ(𑌭𑍀)தனாய்க் கிடீர்வந்தது. (நின்சரணென) நீ எனக்குப் புகலாகவேணும் என்ன. அதுதான் உக்திமாத்ரம். (சரணாய்) பெரியதிருவடிக்கு ப(𑌭)க்ஷ்யமாக ப்ராப்தமாயிருக்க, அத்தையும் தவிர்த்தான். "பண்ணின சரணாகதிதானேது" என்று நெகிழாதே, "மித்ரபாவமே யமையாதோ!" என்று ரக்ஷகனாய்.

(நெஞ்சிற்கொண்டு) "இத்தனை தண்ணியனா யிருக்கிறவனுக்கு நாமல்லது வேறு புகலிடமில்லை" என்று நெஞ்சிலே கொண்டு. அதிகார பூர்த்தியும் சரணாகதி பூர்த்தியுமன்றே பல (𑌫𑌲) ப்ரதமாவது; சரண்யனுடைய நினைவேயிறே. இங்ஙனல்லாதவன்று, ஶ்ரீ பரதாழ்வான் ப்ரபத்தியும் பலிக்க வேணுமே.

(நின்னித்யாதி) பெரிய திருவடிகையிலே காட்டிக்கொடுத்து அவனையிட்டு ரக்ஷிப்பித்தாய். ஈஶ்வர ஹ்ருதயத்துக் கொரு ப்ரியமிறே யிது. (௩) "𑌨 𑌕𑍍𑌷𑌮𑌾𑌮𑌿 - நக்ஷமாமி" (௪) "𑌨 𑌤𑍍𑌯𑌜𑍇𑌯𑌂 - நத்யஜேயம்" என்கிற இவ்விரண்டும் சேரவிடவேணுமே இவனுக்கு. சரணாகதரைக் கைவிடவொண்ணாது; ஆஶ்ரிதவிஷயத்தில் அபராதம் பொறுக்கவொண்ணாது; தன்னை ப(𑌭)க்ஷிக்கவந்த திருவடியை எதிரிடுவதும் செய்யாதே, வேறோரிடத்தில் போவதும் செய்யாதே, தன்னைச் சரணம்புக்க ஸுமுகன் பண்ணிற்றேதேனு மபராதமுண்டோ? *நக்ஷமாமி யாவதென்னென்னில்; ஈஶ்வர ஹ்ருதயமென்றொன்றுண்டு என்றாராய்ந்து பார்த்தால், ஜகத்தையடைய ஆஶ்ரிதார்த்தமென்றாய்த்தி

---

(௧)

(௨)

(௩) வராஹபுரா.

(௪) ரா-யு-௧௮-௩.

ருப்பது; அப்படியிருக்க, பெரியதிருவடிக்குத் தான் நியதாஹாரனா யிருக்கச்செய்தே "அது தலைக்கட்டாதே போருவதே!" என்று திருவுள்ளம் சிவீலென்றிருக்குமிறே. வாலி, "நீரென்னைக் கொன்றதென்" என்ன; "ப்ராத்ருபார்யாபஹாரம் பண்ணினாய்" என்று அவனுக்குக் குற்றமாகச் சொன்னவர் தாமே, அக்குற்றம் மஹாராஜர் பக்கலுண்டா யிருக்க, "அது சொன்னாருண்டாகில் கண்டவிடமெங்கும் கழுமலை யாக்குவேன்" என்றாரிறே.

"நக்ஷமாமி" "நத்யஜேயம்" என்கிற இரண்டும் சேருகிறபடி யென்னென்றால்; நம்மைச் சரணம்புகுந்த இவன் நம்கீழே கிடக்கிறானென்றிருக்கை யன்றிக்கே, பெரிய திருவடிகையிலே காட்டிக்கொடுத்து அவனை யிட்டிறே ரக்ஷித்தது. தானேயிட்டுக்கொண்டு ரக்ஷித்தாலும் அவன் துணுக்குத் துணுக்கென்கை போகாதிறே; "தானே ரக்ஷிக்கவல்லனாயிருக்க நம் கையிலே காட்டித்தருவதே!" என்று, இவனைக் கைக்கொண்டபோதே அவன் பசியும் தீர்ந்தது. இனி இருவர்க்கும் அந்யோந்யம் ரக்ஷ்யரக்ஷக பாவ (భావ)மிறே யுள்ளது; பாத்ய (బాధ్య) பாதக (బాధక) ஸம்பந்தம் போய்த்தே. முன்பு ஸஹஜ சாத்ரவ முண்டேயாகிலும், பகவதாஶ்ரயணம் பண்ணினால் ஒரு நீராய்விடு மித்தனையிறே.

(நின்னஞ்சிறைப் பறவை) தன்கையிலே காட்டிக்கொடுத்தால் ரக்ஷிக்க வேண்டுகிறது சேஷியினுடைய நினைவே நடக்கவேண்டுகை யாலே யிறே. சேஷபூத ரிருவர்க்கும் வந்த விரோதத்துக்கு சேஷி யுடைய முகமிறே வாடுவது. (க) "రామమేవానుపశ్యన్తో నాభ్యహింసన్ పరస్పరమ్ - ராமமேவாநுபஶ்யந்தோ நாப்யஹிம்ஸந் பரஸ்பரம்" என்னக்கடவதிறே. (அடைக்கலம் கொடுத்தருள்செய்த தறிந்து) உணர்ந்து நோக்கும்படி பண்ணி. (அருள்) (உ) "அவன் செய்யும் சேமம்" என்கிறபடியே ஒருநாளும் பிரியாதபடியாய்த்துச் செய்துகொடுத்தது.

அவன் சத்ருபீ(భీ)தனாய்வந்து சரணம்புக, அவனை நோக்கினோம்; நீரார்க்கு பயப்பட்டு நம்மைச்சரணம் புகுகிறீரென்ன (வெஞ்சொலாளர்கள்) அவர்கள்செய்யும் செயல்கள் பொறுக்கலாம்; அவர்கள் பாசுரம் கிடீர் பொறுக்கவரிது. (நமன்றமர்) நாலுமூன்று சாஸநம் மறுக்கும்படி அவனுக் கந்தரங்கரானவர்கள். (கடியர்) வேஷம் பொறுக்கப்

(க) ரா-யு-க௬க-க௦உ. (உ) தி-வாய்-எ-ரு-க௦.

போகாது. (கொடிய செய்வனவுள) ஆஶ்ரயாநுரூபமாக வன்றிக்கே, பாபாநுரூபமாக நலியாநிற்பர்கள். (உள) பாபத்துக் கவதியுண்டாகிலிறே இவர்கள் செய்லுக்கவதியுண்டாவது.

(அதற்கு) யமபடருடைய கொடுந்தொழில்களுக்கு. (அடியேனஞ்சிவந்து) சேஷபூதனுகைக்கும் யமாதிகளுக் கஞ்சுகைக்கு மென்ன சேர்த்தியுண்டு. (க) "భయం భయానాం - பயம் பயாநாம்" இத்யாதி. (நின்னடியிணை யடைந்தேன்) யமன்றனஞ்சி (உ) "పరిహర-பரிஹர" என்னும்படியான உன திருவடிகளை ஆஶ்ரயித்தேன்.

(அணிபொழி லித்யாதி) அநுபவ விரோதிகளைப்போக்கி ஆஶ்ரிதரை அநுபவிப்பிக்கைக்காக வன்றோ இங்குவந்து சாய்ந்தருளிற்று

அரு.—நாலாம்பாட்டு. (நஞ்சித்யாதி) பகவத்விஷயீகார பல(ஃல)மான கைங்கர்யந் தானிரண்டு-இவ்விபூதியில் கைங்கர்யம், அவ்விபூதியில் கைங்கர்யம்; அதில், இவ்விபூதியில் கைங்கர்யத்துக் கிடைச்சுவரான இந்த்ரிய வஶ்யதையைச் சொல்லுகிற மூன்றும்பாட்டை ப்ரதாநமாக்கி பேடிகாஸங்கதி காட்டினர்-கீழ்ப்பாட்டால்; அவ்விபூதியில் கைங்கர்யத்துக் கிடைச்சுவரான தேஹஸம்பந்தத்தை யறுத்துத் தரச்சொன்ன நாலாம்பாட்டை ப்ரதாநமாக்கி பேடிகாஸங்கதி விசேஷத்தை யருளிச்செய்கிறார் (விஷயீகாரமித்யாதி). (தேஹஸம்பந்தத்தை) என்றது - தேஹஸம்பந்த மூலமான பாபத்தை யென்றபடி.

பாட்டுக்கெல்லாம் தொகுத்த தாத்பர்யம் (ஸுமுகனுக்கித்யாதி). இப்போது, "நஞ்சு சோர்வதோர்" இத்யாதி விசேஷணம் ஸுமுகனுடைய விபூதி விரோதித்வம் தோற்றுகைக்காக வென்று கருத்து. அன்றிக்கே, "நஞ்சு சோர்வதோர்" இத்யாதி விசேஷணத்தாலே பலித்த ஸ்வநிகர்ஷாநுஸந்தாநம் செய்தருளுகிறாரென்று திருவுள்ளம் பற்றி, மூன்றுபாட்டிலும் விஷயீகாரமும் கைங்கர்யமும் விரோதிநிவ்ருத்தியும் ப்ரார்த்தித்திருக்கவும், இரங்காமைக்கடி, தம்முடைய அபராதமாக வேணுமென்றெண்ணி, மீளவு மருளை ப்ரார்த்திக்கிறாரென்று ஸங்கத்யந்தரம் சொல்லுகிறார் (சரணமித்யாதி); இங்ஙன் ஸங்கத்யந்தர மென்றுவிடில், "விரோதிநிரஸநத்துக்கு நிகர்ஷம் முன்னிடவேண்டுவதில்லை" என்று கீழ்ப்பாட்டிலவதாரிகையிற் சொன்னது சேராதிறே. (இத்யாதிகளும்) என்றது - ஆழ்வானருளிச்செய்த ஶ்லோகங்களு மென்றபடி; உண்டிறே என்று சேஷம். மீளவும் ஆகிஞ்சந்யத்தை முன்னிட வேண்டாவோ வென்ன வருளிச்செய்கிறார் (ஆகிஞ்சந்யத்தை யித்யாதி).

(க) வி-பு-க-கஎ-௩௬. (உ) வி-பு-௩-எ-க௯.

“சோர்வது” என்றதினர்த்தம் (உமிழ்ந்துகொண்டு) என்றது. முந்தின ஸங்கதிக்குச் சேர “நஞ்சு” இத்யாதிக்கு ப்ரஸ்நபூர்வகம் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இதிலித்யாதி); தம்முடைய நிகர்ஷம் முன்னிடுகைக்கென்று கருத்து. “வெஞ்சினம்” என்று இத்தைச் சொல்லுவானென், “நஞ்சசோர்வது” என்றபோதே ஸித்தமன்றோ வென்ன வருளிச்செய்கிறார் (ஹ்ருதயத்திலே யித்யாதி). “வெம்” என்று விசேஷித்ததுக்குத் தாத்பர்யம் (சீற்ற மித்யாதி); ரக்ஷணோபயோகியன்றிக்கே க்ரூரமென்று கருத்து.

“சரணென நெஞ்சிற்கொண்டு” இத்யாதி அமைந்திருக்க, “சரணாய்” என்றதுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (பெரிய வித்யாதி).

வெருவி வந்ததும் சரணென்றதுமானவற்றை நெஞ்சிற்கொண்டென்னவொண்ணாதோ, “நஞ்சு” இத்யாதியால் பலித்த நிகர்ஷத்தை “நெஞ்சிற்கொண்டு” என்பானென்னென்ன வருளிச்செய்கிறார் (அதிகாரி இத்யாதி வாக்யத்வயத்தாலே).

பெரிய திருவடிகையில் சாட்டிக்கொடுப்பானென்னென்ன (ஈஸ்வரேத்யாதி). அவனைக்கொண்டு ரக்ஷிப்பிக்கை ப்ரியமாகைக்கு ஹேதுவேதென்ன வருளிச்செய்கிறார் (நக்ஷமாமி யித்யாதி). அநாஸ்ரிதனை ஸுமுகன் செய்ததை அபராதமாகக்கொண்டு பெரிய திருவடியுடைய கார்யத்தை அநபராதமாக நினைத்தும் ரக்ஷிக்கையாலே ஆஸ்ரிதர் குற்றம்பாரானென்கை பலிக்கையால், அதுக்கொரு ஸம்வாதமருளிச்செய்கிறார் (வாலிஇத்யாதி). (கழுமலை) என்றது - வெட்டிப்பொகட்ட விடத்தில் தின்னவந்து மலைமலையாகக் கழுக்களிருக்கும்படி யென்கை.

தான் ரக்ஷியாமையாலே *நக்ஷமாமிக்கும் சேரும்; அவனைக் கொண்டாகிலும் ரக்ஷிக்கையாலே *நத்யஜேயத்துக்கும் சேருமென்றபடி. அவன் நினைவைப்பின் சென்று ரக்ஷியாவிட்டால் விரோதமென்னென்ன வருளிச்செய்கிறார் (தானேறிட்டித்யாதி). திருவடி ரக்ஷித்ததுக்கடி யென்னென்ன வருளிச்செய்கிறார் (தானே யித்யாதி). … … … (௪)

மூ.—மாக மா நிலம் முழுதும் வந்திறைஞ்சும்
மலரடிக்கண்ட மாமறையாளன்
தோகை மாமயிலன்னவரின்பம்
துற்றிலாமையிலத்த விங்கொழிந்து
போகம் நீயெய்திப் பின்னும் நம்மிடைக்கே
போதுவாயென்ற பொன்னருளெனக்கும்
ஆகவேண்டுமென் றடியிணை யடைந்தேன்
அணிபொழில் திருவரங்கத் தம்மானே. (௫)

பதம்.	உரை.
மா	பரந்த
கம்.	பரமாகாசத்திலுள்ள நித்யஸூரிகளும்
மா	விசாலமான
நிலம்.	பூமியோடுகூடின அண்டாந்தர்வர்த்திகளும்
முழுதும்	எல்லாரும்
வந்து	திரண்டுவந்து
இறைஞ்சும்	ஆஶ்ரயியாநின்ற
மலர்	புஷ்பம்போன்ற
அடி	(உன்) திருவடிகளை
கண்ட	ஸாக்ஷாத்கரித்த
மா	மஹத்வமுடைய
மறையாளன்	கோவிந்தஸ்வாமி யென்னும் ப்ராஹ்மணனைக் குறித்து,
அத்த	அப்பா! (தபஸ்ஸு பண்ணும்காலத்தில்)
நீ	நீ,
தோகை	தோகையை யுடைய
மா	சிறந்த

பதம்.	உரை.
மயிலன்னவர்	மயிலோடொத்த மயிர்முடியை யுடைய ஸ்த்ரீகள் கலவியிலுண்டான
இன்பம்	ஸுகத்தை
துற்று இலாமையில்	அநுபவியாமையால்,
இங்குஒழிந்து	(சிலகாலம்) இங்கேயிருந்து
போகம்	ஸ்த்ரீஸம்போக ஸுகத்தை
எய்தி	அநுபவித்து,
பின்னும்	அதுக்குமேலே
நம்மிடைக்கே	நம்மருகே
போதுவாய்	வரக்கடவாய்
என்ற	என்றருளிச்செய்த
பொன்	ஶ்லாக்க்யமான(ஆஶ்ரித ஹ்ருதயாநுஸாரியான)
அருள்	க்ருபையானது
எனக்கும்	என்விஷயத்திலும்
ஆகவேண்டுமென்று	உண்டாகவேணுமென்று

அடியிணை யடைந்தேன் அணிபொழில் திருவரங்கத்தம்மானே!(ரு)

வ்யா. — அஞ்சாம்பாட்டு. (மாகமித்யாதி) விஷயீகாரத்தைச் சொல்லி, கைங்கர்யத்தைச் சொல்லி, கைங்கர்யத்தினுடைய உபயாகாரமான விரோதிகளைப் போக்கித் தந்தருளவேணும் என்றது- கீழ்; இதில், கோவிந்தஸ்வாமியுடைய கருத்தறிந்து கார்யம் செய்தாப்போலே என்னுடைய கருத்தறிந்து கார்யம் செய்யவேணுமென்கிறார். கீழ்நின்ற நிலைக்கு இவர்க்குக் கருத்தாவது - இந்த்ரிய வஶ்யதைக்கும் யமவஶ்யதைக்கு மடியான தேஹஸம்பந்தத்தை அறுத்துத் தரவேணுமென்கை. (க) "மாணமாஞல்" என்கிறபடியே தன்னடையே சரீரவிஶ்லேஷம் ஸித்திக்குமாகில் அபேக்ஷிக்கிறதென்னென்னில்; க்ரமப்ராப்தி பற்றாத த்வராதிரேகத்தாலே.

(மாக மித்யாதி) கோவிந்தஸ்வாமி யென்பானொரு ப்ராஹ்மணன், இதிஹாஸபுராண ஶ்ரவணத்தாலே, க்ருஷ்ணனுடைய பால்ய

(க) தி-வாய்-கூ-க௦-ரு.

சேஷ்டிதங்களையும் ராஸக்ரீடாதிகளையும் ஸாக்ஷாத்கர்த்துகாமனாய், "முன்பு (க) 'காணவாராய்' என்றெண்ணியிருப்பார்க்கு (உ) '𑌪𑌰𑌿𑌤𑍍𑌰𑌾𑌣𑌾𑌯 𑌸𑌾𑌧𑍂𑌨𑌾𑌮𑍍 - பரித்ராணாய ஸாதூநாம்' என்கிறபடியே காட்டிக்கொடுத்துப் போருமவனன்றோ, நமக்கு மவ்வாசையுண்டானால் ஸித்தியாமையில்லை, ததர்த்த(𑌦𑍃𑌢)மாக அர்த்திப்போம்" என்று சரீரத்தை ஒறுத்து தபஸ்ஸுபண்ண; இவன் நினைவின்படியே க்ருஷ்ணாவதாரத்திற் படிகளை யடைய ஸ்ருஷ்டித்துக்காட்டி அநுபவிப்பித்து, "உனக்கு வேண்டுவதென்?" என்று கேட்டருள; "கூடப்போந்து இப்படி தேவரை அநுபவிக்குமித்தனை" என்ன; நீ தபஸ்ஸுபண்ணுகிறபோது விஷயவிதூரனாய் அந்நபாநாதிகளையும் கழித்து உடம்பையும் நாரும் நரம்புமாக்கிக் கொடுபோந்தாய், இங்கே இருந்து நெகிழ்ந்த போகங்களையும் கழித்துவா" என்று அவன்கருத்தறிந் தருளிச்செய்தாப்போலே, என்கருத்தறிந்து கார்யம் செய்யவேணுமென்கிறார்.

இவ்வர்த்தம் சாப்தமன்றிக்கே யிருக்க இவருக்கிது கருத்தாகச் சொல்லுகிறது-ப்ரகரண பலத்தாலும், அர்த்தக்ரமத்தாலும். (ங) "நாசமானபாசம்" என்றும், (ச) "போந்தேன்" என்றும் சொல்லுகிற இவர்க்கு இது கருத்தாக வேணுமிறே.

(மாகமித்யாதி) உபய விபூதியிலுள்ளாரும் வந்தாஶ்ரயிக்கும்படியான திருவடிகளைக் கண்ட. இவ்வாஶ்ரயணம், தர்மிப்ரயுக்தமல்ல, க்ருஷ்ணாவதார ப்ரயுக்தம். பரமபதநிலயரான ஸூரிகளாஶ்ரயிக்கும்படி யென்னென்றால்; (ரு) "𑌆𑌚𑍍𑌛𑌾𑌦𑍍𑌯𑌾𑌨𑍁𑌯𑌯𑍌 𑌶𑍇𑌷𑌃 𑌫𑌣𑍈𑌰𑌾𑌨𑌕𑌦𑍁𑌨𑍍𑌦𑍁𑌭𑌿𑌮𑍍 - ஆச்சாத்யாநுயயௌ சேஷః பணைராநக துந்துபிம்" என்றும், (சு) "வினதை சிறுவன் சிறகென்னும் மேலாப்பின் கீழ்வருவானை" என்றும் சொல்லாநின்றதிறே. திவ்யாயுதங்களும்கூட கர்ப்ப(𑌗𑌰𑍍𑌭) வாஸம் பண்ணியிறே பிறந்தது. (மாநிலம்) இடையரோடு, அவர்கள்தான் வஸிஷ்டாதிக ளென்னும்படியான பசுக்களோடு, கன்றுகளோடு, பீஷ்மாதிகளோடு வாசியற ஆஶ்ரயித்ததிறே.

(முழுதும்) உபரிதந லோகங்களிலுள்ளாரும். மத்யராத்ரத்திலே பாலமுதுசெய்து சாய்ந்தருளப் புகுகிறவளவிலே, இந்த்ரன் திரு

(க) தி-வாய்-அ-டு-உ. (உ) கீதை-ச-அ. (ங) க-ங-அ.
(ச) ஸ-ங-ச. (ரு) வி-பு-ரு-ங-கஎ. (சு) நா-தி-சக-ங.

வாசலிலே வந்துநின்று, புறப்பட்ட தாஸிகளுக்கு "நான் வந்தேனென்று விண்ணப்பம் செய்யவேணும்" என்று உள்ளேபுகுந்த இந்த்ரன், "நரகன் என்னுடைய சதுர்த்தந்தியையும் தரவேணுமென்று நெருக்காநின்றான்" என்ன, "கையைத்தா" என்று எழுந்திருந்து ஸத்யபாமைப் பிராட்டியோடுங் கூடப் பெரியதிருவடி தோளிலே ஏறி எழுந்தருளி நரகவதம் பண்ணினானென்னாநின்றதிறே. (௧) "పాదేన కమలాభేన - பாதேந கமலாபேந" இத்யாதிகளாலே ப்ரஹ்ம ருத்ரார்சநம் சொல்லாநின்றதிறே. (௨) "బ్రహ్మాణమీశం కమలాసనస్థమ్ - ப்ரஹ்மாணமீசம் கமலாஸநஸ்த்தம்" என்று திருமேனியிலே காட்டுவதும் செய்தானிறே.

(மலரடி) நிரதிசய போக்யமான திருவடிகள். பசுக்களின்பின்னே போவது, தேர்த்தட்டிலே நிற்பது, தூது நடப்பதாகிற வளவிலே கிடீர்! ஸர்வ ஸமாஶ்ரயணீயனாய்த்து. (கண்ட) எல்லாருமொக்க இருந்தவிடத்தே சென்று ஆஶ்ரயிக்க வேண்டும்படியான திருவடிகளை யாய்த்துத் தானேவர இவன் கண்டது. (மாமறையாளன்) சாஸ்த்ரத்தாலே யாதல் உபதேசத்தாலே யாதலன்றிக்கே, கண்ணாலே காணப்பெற்ற வைதிகாக்ரேஸரன்.

(தோகையித்யாதி) கண்டவளவிலே "கூடப் போருமித்தனை" என்ன; "அது பின்னைசெய்கிறாய்" என்ன; "அதுக்கடியென்" என்ன; "இழந்த போகங்களை புஜிக்க வேணுங்காண்" என்ன; "அதுதான் வேண்டுகிறதென்" என்ன; "நீ தபஸ்ஸு பண்ணுகிறபோது இதர விஷயங்களிலே ஸங்கம் கிடக்கச்செய்தே அவற்றைச் செறுத்து புஜியாதே போந்தாய்காண்" என்றான். மோக்ஷப்ரதனான ஸர்வேஶ்வரன்தன்னை யொழியச்செல்லாமையை யுடையராய், கூடப்போவோமென்பாரளவில் "போதரே" என்னு மித்தனை போக்கி, விட்டுப்போவானொருத்தனல்லன். அவன்பக்கலிலே அதி ப்ரவணனாயிருக்குமவன், அவனை யொழிய விஷய ப்ரவணமாக்கும் ஸம்ஸாரத்திலிருப்பை இசையான். ஆனால் இவனை "இரு" என்கைக்கும், இவன் இருப்பை இசைகைக்கு மொரு கருத்துண்டாகவேணும், அதாவதென்னென்னில்; ஈஶ்வரன் நினைத்தால் விஷயப்ரவணரையும் இவ்வாஸநை யறுத்துக்கொடுபோக சக்தனென்னு மிடமும், எத்தனையே

---

(௧)

(௨) கீதை-௧௧-௧௫.

னும் பகவத்ப்ரவணரையும் தேஹஸம்பந்தத்தின் வழியே கொடுபோய் விநாசத்தை பலி(ஃலி)ப்பிக்கு மென்னுமிடமும் வெளியிட்டது. ஸாதுக்களுக்கடைய உபமாநபூமியாயிருக்கிற ஶ்ரீப்ரஹ்லாதாழ்வானிறே எதிரம்பு கோத்தான். இதுக்கு நேரே உதாஹரணம்-ஶ்ரீமாலாகார ரளவிலே செய்ததிறே;- மாலாகாரர் க்ருஹத்திலே புக்கு, பூத்தொடுக்கிறவனை "அய்யே! நீ எங்களுக்குப் பூவிடவல்லையே!" என்ன; அவனும் இவ்வடிவு கண்டபோதே "கம்ஸன் வெட்டிவைத்தானாகில் வெட்டிவைக்கிறான், இம்மாலைகளை இங்கே சாத்துவோம்" என்று சாத்த; ப்ரீதனாய், "இவனை (க) *சூட்டு நன்மாலைப்படியே ஒரு தேசவிசேஷத்தே கொடுபோய்ப் பூவிடுவித்துக்கொள்வோமோ? இங்கே வைப்போமோ?" என்று விமர்சித்து, "கம்ஸனை மதியாதே நம்மை ஆதரித்த இவனை ஐஹிகபோகங்களை புஜிப்பித்துப் பின்னை அவ்வருகே கொடுபோகிறோம்" என்று வைத்தானிறே.

(உ) [భుక్త్వాచ విపులాన్ భోగాన్- புக்த்வாச விபுலாந் போகாந்]கம்ஸனிட்ட சோற்றளவன்று காண் நான் தருவது. [త్వమన్తే - த்வமந்தே] இவன் கொடுக்கிற போகங்கள் தான் அளவுபட்டவையல்லாமையாலும், போக்தாவானவன் ஓரளவிலே மீளுமவனல்லாமையாலும், இதுக்கொரு முடிவில்லையிறே; (ங) "నజాతు కామః కామానా ముపభోగేన శామ్యతి । హవిషా కృష్ణవర్త్మేవ భూయ ఏవాఽభివర్ధతే- நஜாதுகாமஃ காமாநாமுபபோகேந சாம்யதி। ஹவிஷா க்ருஷ்ணவர்த்மேவ பூய ஏவாபிவர்த்ததே" (ச) "యత్పృథివ్యాం వ్రీహియవంహిరణ్యం పశవస్స్త్రియః । ఏకస్యాఽపి నపర్యాప్త మితి మత్వా శమం వ్రజేత్ -யத் ப்ருதிவ்யாம் வ்ரீஹி யவம் ஹிரண்யம் பசவஸ்ஸ்த்ரியஃ। ஏகஸ்யாபி நபர்யாப்த மிதிமத்வா ஶமம் வ்ரஜேத்" என்கிறபடியே - இவற்றினுடைய ஸ்வபாவத்தை அநுஸந்தித்தால் பிரியலாம்படி யன்றிக்கே யாய்த்திருப்பது. இங்ஙனே இருக்கச்செய்தேயும், பகவத் ப்ரவணனாயிருக்கு மவனுக்கு நினைத்தபோது கால்வாங்கலா யிருக்கும். ஸௌபரி, மத்ஸ்யதர்ஶநத்திலே ஐம்பது வடிவுகொடு புஜித்து, தானே ஓரளவிலே அருவருத்து மீண்டானிறே. கர்மமும் ஜ்ஞாநமும் இரண்டுங்கூட நடக்கிறதிறே. கர்மவாஸனை, விஷயங்களிலே மூட்டும்; ஜ்ஞாநம் அருவருத்து மீளப்ப

(க) தி-வி-உக. (உ) வி-பு-ரு-ககூ-உங. (ங) பாரதம்-ஆதிப-எகூ-கஉ.
(ச) பாரதம்-ஆதிப-எகூ-கங.

ண்ணும். ஔபாதிக கர்மத்தை ஸ்வாபாவிக ஜ்ஞாநம் மேலிடுமிறே. ["𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑌾𑌃 𑌮𑌮𑌾𑌽𑌨𑍁 𑌸𑍍𑌮𑌰𑌣𑌂𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 - மத்ப்ரஸாததஃ மமாநு ஸ்மரணம் ப்ராப்ய"] உபாஸகனுக்கு நம்ப்ரஸாதத்தாலே அந்திம ஸ்ம்ருதி யுண்டாமாபோலே, நீயும் நம்முடைய அந்திமஸ்ம்ருதியைப் பெற்றேன்னுதல்; நீ நினைக்கமாட்டாத குறைதீர நாமே நினைக்கக்கடவோம். ஸ்வீகாராத்யவஸாய மிறே அத்தலைக்கு வேண்டுவது.

(தோகைமாமயிலன்னவ ரின்பம்) தோகையை யுடைத்தான ஸௌந்தரமான மயில்போலே இருக்கிற ஸ்த்ரீகள். இத்தால் - தூரஸ்தரையும் ஆசர்ஷிக்கும்படியான மயிர்முடியையும் நடையையும் சொல்லுகிறது. இப்படி அநுபவித்தால் அது தன்னிலொன்றும் காணவொண்ணாதே ஸ்நாநோபகரணங்களைக் கொண்டு மீளும்படியிறே இருப்பது. (அன்னவரின்பம்) ஆராய்ந்தால் அநுபாவ்ய மொன்றுமில்லை. "தோகை மாமயிலன்னவரின்பம்" என்று ஒன்றாக ஆக்ஷேபித்துச் சொல்லுகிறார். (௧) "தாயே தந்தையென்றும் தாரமே கிளைமக்களென்றும் நோயே பட்டொழிந்தேன்" என்றவர் வார்த்தையிறே; முரிக்குக் கிழக்கென்னிலும் இவர்நாவீறுதான் இங்ஙனல்லதிராமையாலே யாதல். (துற்றிலாமையில்) கலவிரஸத்தை யநுபவியாமையால்.

(அத்த) தான் நியமித்தபடியே அவன் செய்கைக்காக, அப்பனே! என்று அநுநயித்துச் சொல்லுகிறார். (இங்கொழிந்து) இந்நிலத்திலே சிலநாளிருந்து. (போகம் நீயெய்தி) இழந்த போகங்களை யடைய புஜித்து. (நீயெய்தி) நினைத்தபோது ‡கால்வாங்கவல்ல அளவுடைய நீயல்லையோ இதிலதிகரிக்கிறாய். நீ தபஸ்ஸு பண்ணுகிற நாளில் விட்டவிஷயங்கள் இப்போது உனக்கு ப்ரதிபந்தகங்களாக வற்றோ? (பின்னும் நம்மிடைக்கே போதுவாய்) நினைத்தபோது மீட்க வல்ல தன் வைலக்ஷண்யம் தோற்றச் சொல்லுகிறார். நேரே வகுத்த விஷயமான நம்பக்கலிலே வரக்கடவை. (என்ற பொன்னருள்) ஸ்ப்ருஹணீயமானவருள். (எனக்கு மாகவேண்டுமென்றடியிணை யடைந்தேன்) அவன் கருத்தறிந்து கார்யம் செய்தாப்போலே, என் கருத்தறிந்து கார்யம் செய்யவேணும்.

---

(௧) ௧-௯-௧.

‡ (பா) மீட்கவல்ல.

(அணிபொழிலித்யாதி) ஆஸ்ரிதாநுரூபமாக அபேக்ஷிதங்களாராய்ந்து செய்கைக்காக வன்றோ இங்குவந்து சாய்ந்தருளிற்று. ஐஸ்வர்யம் வேணுமென்பார்க்கு அத்தைக் கொடுக்கவும்; தேஹத்தைப் பூண்கட்டிக்கொடுப்பார்க்கு அத்தைச்செய்யவும், தேஹஸம்பந்தத்தை அறுத்துத் தரவேணுமென்பார்க்கு அத்தைச்செய்யவு மன்றோ இங்குவந்து சாய்ந்தருளிற்று. ... ... (௫)

அரு.—அஞ்சாம்பாட்டு. (மாகமித்யாதி) கோவிந்தஸ்வாமியை த்ருஷ்டபோகங்களிலே மூட்டிப் பின்பு மோக்ஷம் கொடுத்தாப்போலே தம்மை த்ருஷ்ட போகங்களிலே மூட்டச்சொல்லுகிறாரோ வென்ன; அன்றென்கிறார் (கீழ்நின்ற வித்யாதி).

ஸங்கதி யருளிச்செய்தாராய், கோவிந்தஸ்வாமி வ்ருத்தாந்தத்தை விவரியா நின்றுகொண்டு தாத்பர்ய மருளிச்செய்கிறார் (கோவிந்தேத்யாதி); திருமலையிலே வர்த்திக்கிற கோவிந்தஸ்வாமி, மோக்ஷார்த்தமாகவு மன்றிக்கே, விஷயங்களிலே அருசிபிறந்து மன்றிக்கே, கேவலம் "க்ருஷ்ணனுடைய சேஷ்டிதங்களைக் காணவேணும்" என்று தபஸ்ஸு பண்ணுகையாலே, விஷயங்களிலே ருசி கிடந்ததாய், அத்தையறிந்து "அநுபவித்துவா" என்று வைத்தானென்று கருத்து.

சாப்தமானவர்த்தம் த்ருஷ்டாந்த பல(ப³ல)த்தாலே த்ருஷ்டபலா(ஃபலா)பேக்ஷயா யிருக்க, அதுக்கு ப்ரதிகோடியாக; தேஹஸம்பந்தத்தை அறுத்துத்தரவேணுமென்கை கருத்தாகக் கூடுமோ வென்ன வருளிச்செய்கிறார் (இவ்வர்த்தமித்யாதி). (ப்ரகரணபலம்) என்றது-விரோதிநிவ்ருத்தி சொல்லுகிறப்ரகரணபல மென்றபடி. (அர்த்தக்ரமம்) என்றது - பாபபல(ஃபல)மான இந்த்ரிய வஶ்யதையும் யமவஶ்யதையும் நிவ்ருத்தமாக வேணுமென்று ப்ரார்த்தித்த வநந்தரம் ப்ரார்த்திக்கத் தக்கது ப்ராப்தி ப்ரதிபந்தகமான தேஹஸம்பந்த நிவ்ருத்தியே சொல்லத்தக்கதென்கிற அர்த்தக்ரமம் என்றபடி.

(தர்மிப்ரயுக்தமல்ல) என்றது-(௧) *மண்ணோர்க்கும் விண்ணோர்க்கும் கண்ணனை திருவேங்கடமுடையானைப் பற்றியல்ல வென்றபடி. (ஆநகதுந்துபிம்) வஸுதேவனை.

(சதுர்த்தந்தியையும்) என்ற சகாரம்-அதிதி (அதி³தி)குண்டலங்களையும் வருணசத்ர(ச்ச²த்ர)த்தையும் கொண்டுபோனானென்னுமத்தை ஸூசிப்பிக்கிறது.

கண்ணனைக்கண்ட என்ன வமைந்திருக்க, அடிகளைச் சொன்னதுக்குத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (பசுக்களி னித்யாதி). "வந்து" என்ற

---

(௧) தி-வாய்-௧-௮-௩.

பதத்தைக் கடாக்ஷித்துத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (எல்லாரு மித்யாதி). "மா" என்றதுக்குக் கருத்தருளிச்செய்கிறார் (சாஸ்த்ரேத்யாதி).

உக்திப்ரத்யுக்தி ரூபேண தாத்பர்ய மருளிச்செய்கிறார் (கண்டவித்யாதி). மலரடியைக் கண்டவனை இருக்கச்சொல்லக்கூடுமோ, இவன்றானிருப்பனோ என்னும் சங்கையைக் கிளப்பிப் பரிஹரிக்கிறார் (மோக்ஷத்யாதி, வெளியிட்டது இத்யந்தம்). அப்ரதிஹத ஸ்வதந்த்ரனானவன் நசையறுத்துக் கொண்டுபோக வல்லனாகிலும், தேஹ ஸம்பந்தத்தால் இவனுக்குப் பிறந்த நசையைப் பின்சென்று நாலுநாளிருந்து வரட்டும் என்று வைத்தானென்று கருத்து.

பகவத்ப்ரவணரை தேஹம் தன்வழியே இழுத்தவிட முண்டோவென்ன வருளிச்செய்கிறார் (ஸாதுக்களுக் கித்யாதி). தேஹஸம்பந்தம் பகவத் ப்ரவணரையும் தன்வழி இழுத்துக்கொண்டதுக்கு உதாஹரணங்காட்டி, விஷய ப்ரவணனையும் தன்னைக்காட்டி இதரவிஷய ப்ராவண்யத்தை அறுத்துக்கொண்டு போக சக்தனென்னு மதுக்கு உதாஹரணங்காட்டுகிறார் (இதுக்கித்யாதி). ஶ்ரீமாலாகாரரை விஷய ப்ராவண்யத்தைத் தவிர்த்ததுக்கு உதாஹரணமானால், த்ருஷ்டபோகங்களைக் கொடுப்பானென்னென்ன வருளிச்செய்கிறார் (மாலாகார ரித்யாதி). இவ்விரண்டையும் அபேக்ஷியாமலிருந்தாலும் ஔதார்யத்தா லிரண்டையும் கொடுத்தானென்று கருத்து.

ஐஹிகபோகத்தை புஜிப்பித்தான் என்கிறதுக்கு ப்ரமாண மெடுத்து வ்யாக்யானம் செய்தருளுகிறார் (புக்த்வேத்யாதி). "𑌵𑌿𑌪𑍁𑌲𑌾𑌨𑍍 - விபுலாந்" என்று வைத்தும் "புக்த்வா" என்று காலநியமமும் பண்ணியிருக்க, "அந்தே" என்கிறதுக்குக் கருத்து - ஆசாந்தே (𑌆𑌶𑌾𑌨𑍍𑌤𑍇) என்றாக்கி, அதுக்குக் கருத்தருளிச்செய்கிறார் (இவனித்யாதி). ஆசைக்கு முடிவில்லையோ, இப்படி சொல்லுவானென்னென்ன வருளிச்செய்கிறார் (நஜாதுகாம இத்யாதி). இப்படி ஆசைக்கு முடிவில்லாவிட்டால், இனி "அந்தே" என்கைக்கு முடிவுதானெங்ஙனேயென்ன வருளிச்செய்கிறார் (யதித்யாதி). ப்ரமாணத்வயத்துக்கும் அடைவே கருத்தருளிச்செய்கிறார் (இவற்றினுடைய வித்யாதி). (கால்வாங்கலாயிருக்கும்) என்றது - பகவத்வைலக்ஷண்யத்தாலும் இவற்றினுடைய அல்பாஸ்த்திரத்வாதி தோஷ துஷ்டதையாலும் கால்வாங்கலாமென்கை. கால்வாங்கின விடமுண்டோவென்ன வருளிச்செய்கிறார் (ஸௌபரியித்யாதி). ஜ்ஞாநாதிகனான ஸௌபரி, விஷயங்களிலே விழுகைக்கும் மீளுகைக்கும் ஹேதுவென்னென்ன வருளிச்செய்கிறார் (கர்மேத்யாதி). இரண்டும் ஹேதுவாகை ஒத்திருக்க, ஜ்ஞாநத்துக்கு ஆதிக்யமேதென்ன (ஔபாதிகேத்யாதி). "த்வமந்தே" என்றதின் சேஷத்தை யெடுத்துத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (மத்ப்ரஸாதத இத்யாதி).

(கடவோம்) என்றவநந்தரம், என்னுதல் என்று சேஷம். அந்திமஸ்ம்ருதி வேண்டாவோ வென்ன வருளிச்செய்கிறார் (ஸ்வீகாரேத்யாதி).

ஆகர்ஷகத்வ மொழிய வேறு பசையில்லையோ வென்ன வருளிச்செய்கிறார் (இப்படி யித்யாதி). விரக்தரானவர் இப்படி வர்ணிப்பானென்னென்ன வருளிச்செய்கிறார் (தோகையித்யாதி). (ஆக்ஷேபித்து) நிந்தித்து. அதுக்கு நியாமகமேதென்ன (தாயே யித்யாதி). அன்றிக்கே கவிலக்ஷணத்தாலும் வர்ணிக்கிறாரென்கிறார் (முரிக்கித்யாதி). (முரி)-கரை. (அதுக்குக் கிழக்கு) கிழக்குப்பட்ட ஜலம். (என்னிலும்) நிஷ்ப்ரயோஜநத்தைச் சொல்லிலும்.

விஷயங்கள் ப்ரதிபந்தகமாகாதோ என்று அவனுக்குக் கருத்தாக, “நம் “என்றத்தைக் கடாக்ஷித் தருளிச்செய்கிறார் (நினைத்தவித்யாதி).(ரு)

மூ.—மன்னு நான்மறை மாமுனிபெற்ற
மைந்தனை மதியாத வெங்கூற்றன்
தன்னையஞ்சி நின்சரணெனச் சரணாய்
தகவில் காலனை யுக முனிந்தொழியாப்
பின்னையென்றும் நின் திருவடிப்பிரியா
வண்ணமெண்ணிய பேரருளெனக்கும்
அன்னதாகுமென் றடியிணையடைந்தேன்
அணிபொழில் திருவரங்கத்தம்மானே. (சு)

பதம்.	உரை.
மன்னு	நித்யமாய் [ன
நால்	நாலுவகைப்பட்டதா
மறை	வேதங்களை யோதுமவனாய்
மா	ஸ்லாக்யமான(அநந்யப்ரயோஜநமான)
முனி	த்யாநயோகத்தையுடையவனானருஷியானவன்,
பெற்ற	தான்பெற்ற
மைந்தனை	மார்க்கண்டேயனென்னும் பிள்ளையை
மதியாத	(பாகவத புத்ரனென்று) கணிசியாதவனாய் (வந்து கிட்டின)

பதம்.	உரை.
வெம்	அதிக்ரூரனான
கூற்றன்தன்னை	யமனை(க்கண்டு)
அஞ்சி	பயந்து,
நின்சரண்என	நீயே (எனக்கு) அபயமென்றுசொல்ல
சரணாய்	(அவனுக்கு) ரக்ஷகனாய்க் கொண்டு,
தகவுஇல்	தயையில்லாத
காலனை	யமனை
உக	(அவன்) மங்கும்படி
முனிந்து	கோபித்து, [தே,
ஒழியா	அவ்வளவிலே விடா
பின்னை	அதுக்குமேலே
என்றும்	எக்காலும்

நின் திருவடி	உன் திருவடிகளை	எனக்கும்	என்விஷயத்திலும்
பிரியாவண்ணம்	விஶ்லேஷியாமலிருக்கும்படி	அன்னதாகும்	அப்படி யுண்டாகவேணும்
எண்ணிய	ஸங்கல்பித்த	என்று	என்று நினைந்து
பேர் அருள்	(உன்னுடைய) பெரிய க்ருபையானது		

அடியிணை யடைந்தேன் அணி பொழில் திருவரங்கத்தம்மானே! ௬

வ்யா.— ஆறும்பாட்டு. கோவிந்தஸ்வாமி கருத்தறிந்து அவனுடைய கார்யம்செய்தாப்போலே என்கருத்தறிந்து என்னுடைய அபிமதம் செய்யவேணுமென்றார்-கீழ்; மார்க்கண்டேயன் ம்ருத்யுபயபீத (𑌭𑌯𑌭𑍀𑌤)னாய் சரணம்புக, அவனுக்கு ம்ருத்யுவைநிரஸித்து அந்த பய (𑌭𑌯)நிவ்ருத்தியைப்பண்ணிக்கொடுத்த வளவன்றிக்கே, ஒருகாலமும் உன்திருவடிகளைப் பிரியாத்படியானபேற்றை அவனுக்குப் பண்ணிக்கொடுத்தாப்போலே, என் ஸம்ஸாரபயத்தைப் பரிஹரித்து உன் திருவடிகளை நான் பிரியாதபடியானபேற்றைப் பண்ணித்தந்து, அது நானர்த்திக்க இரப்புக்குக்காரியம் செய்ததாய் காலன்கொண்டு மோதிரமிடுமாபோலே பண்ணப்பெறவொண்ணாது, என் ஸ்வரூபாநுரூபமான பேறுகிறது - நீ தரப் பெறுமது, அது வேணுமென்கிறார்.

(மன்னித்யாதி) "முனிபெற்ற" என்னவமையும், "மன்னு நான் மறைமாமுனி" என்றதுக்குக் கருத்தென்னென்னில்; இப்படிப்பட்ட ஆபிஜாத்யத்தை மதியாதே கிடீர்! வந்து கிட்டிற்றென்கை. நித்யமாய் நாலுவகைப்பட்ட வேதாத்யயநபரனாய்; அதில் சொல்லுகிறபடியே பகவதுபாஸநபரனாய்ப் போருகிறவன். அவைதிகமாக உக்த்யுபபத்திகளாலே உபாஸிப்பாருமுண்டிறே. அங்ஙனன்றிக்கே, (௧) "𑌵𑍇𑌦𑍈𑌶𑍍𑌚 𑌸𑌰𑍍𑌵𑍈𑌰𑌹𑌮𑍇𑌵 𑌵𑍇𑌦𑍍𑌯𑌃-வேதைஶ்ச ஸர்வைரஹமேவ வேத்ய:" என்கிற வஸ்து உபாஸ்யமென்றறிந்து, உபாஸநபரனாய்ப் போருகிறவன். மஹாத்மதயாவது - ப்ரயோஜநாந்தரவிதுர (𑌵𑌿𑌧𑍁𑌰)மாக (௨) "𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌮𑍍 - வாஸுதேவஸ்ஸர்வம்" என்கிறபடியே - "எல்லாமவனே" என்று உபாஸிக்கை.

நான்மறையிலே மன்னிப்போருகிறவன். உபாஸகனுக்கு அத்யயநம், (௩) "𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯 𑌜𑍍𑌞𑌾𑌨 𑌯𑌜𑍍𑌞𑌾𑌶𑍍𑌚 - ஸ்வாத்யாய ஜ்ஞாந யஜ்ஞாஶ்ச" என்கிறபடியே உருவ அநுவர்த்திக்குமிறே. (௪) "𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯…

---

(௧) கீதை-௧௫-௧௫. (௨) கீதை-௭-௧௯. (௩) கீதை-௪-௨௮. (௪)

ద్యోగమాసీత యోగాత్స్వాధ్యాయ మామనేత్ । స్వాధ్యాయయోగ సమ్పత్త్యా పర మాత్మా ప్రకాశతే- ஸ்வாத்யாயாத் யோகமாஸீத யோகாத் ஸ்வாத்யாயமாமநேத்। ஸ்வாத்யாய யோகஸம்பத்த்யா பரமாத்மா ப்ரகாசதே'' என்கிறபடியே - வேதவிஹிதமானபடியே யோகாரூடனாகக் கடவனாய், ''யோகத்திலே ஸாக்ஷாத்கரிக்கிறவஸ்து கர்மாநுரூபமாக அந்யதாவாகத்தோற்றுகிறதோ, அன்றிக்கே யதாவாகவோ!'' என்று அறிகைக்காகப் பின்னையும் அத்யயநபரனாகை. ஆசார்யன் சிஷ்யனைப்பார்த்து (௧) '' యతో వా ఇమాని భూతాని - யதோவா இமாநி பூதாநி '' இத்யாதிகளை உபதேசித்து, ''இதில் சொல்லுகிறபடியே உபாஸ்யவஸ்து ப்ரகாசிக்குந்தனையும்போய் தபஸ்ஸுபண்ணு'' என்ன; அவனும் தபஸ்ஸு பண்ண; (௨) ''అన్నం బ్రహ్మేతి వ్యజానాత్ - அந்நம் ப்ரஹ்மேதி வ்யஜாநாத்'' என்கிறபடியே - ''அந்நமோ ப்ரஹ்மம்'' என்ன; ''அதுவும் போதாது, இன்னமும் தபஸ்ஸுபண்ணு'' என்ன; *ஆநந்தமயனளவும் தபஸ்ஸுபண்ணிவர, ''அதுகாண் ப்ரஹ்மம்'' என்று விட்டானிறே. (முனிபெற்ற) ஜ்ஞாநவிபாகதசையிலே பிறந்தவன்.

(மதியாத) பகவத்ஸம்பந்த முடையராயிருக்குமவர்கள்பங்க்தியிலுமகப்பட (௩) ''పరిహర - பரிஹர'' என்னவேண்டியிருக்க, வைஷ்ணவஸம்பந்த முடையார்பக்கல் கிட்டவொண்ணாதிறே; அப்படியிருக்க, மதியாதே வந்துகிட்டினான். (௪) [నాఽస్యాఽవర పురుషాః క్షీయన్తే- நாஸ்யாऽவரபுருஷா: க்ஷீயந்தே] பாகவதனுக்கு வித்யையாலும் ஜந்மத்தாலுமாக ஸந்தாநத்வயமுண்டாய்ப் போரக்கடவதிறே; இரண்டு திறத்தார்க்கும் க்ஷயமில்லை யென்கிறது. அணுவாய் நித்யமான ஆத்மாவுக்கு க்ஷயமாகிறது - ஜ்ஞாநஸங்கோசம்; அதுவாராது. இதினுடைய உபப்ரும்ஹணமிறே (௫)''కులం తారయతే-குலம் தாரயதே''. இத்தை அநுவர்த்திக்குமவர்களும் (௬) ''எமரேழெழுபிறப்பும்'' என்னாநின்றார்களிறே.

(வெங்கூற்றம்) இவனுடைய உத்கர்ஷம் பாராதே தங்களையே பார்த்து, க்ரௌர்யத்தை முன்னிட்டுக்கொண்டாய்த்து வந்தது. (வெங்கூற்றந்தன்னை யஞ்சி நின்சரணென) ம்ருத்யு பய பீத (భయభీత)னாய்க் கொண்டு ''நீயே எனக்குப் புகலாகவேணும்'' என்று. (நின்சரணென)

---

(௧) தைத்-ப்ரு-௧. (௨) தைத்-ப்ரு-௨. (௩) வி-பு-௩-௭-௧௪.
(௪) சாந்தோ-௪-௧௩-௨. (௫) (௬) தி-வாய்-௨-௭-௧.

(க) ‘‘𑌮𑌮𑌾𑌸𑍍𑌤𑌿 𑌚𑌕𑍍𑌰 𑌪𑍍𑌰𑌤𑌿𑌹𑌤 𑌵𑍀𑌰𑍍𑌯𑌬𑌲𑌸𑍍𑌯-மமாஸ்தி சக்ர ப்ரதிஹத வீர்யபலஸ்ய’’ என்று யமாதிகளஞ்சும்படியான பரிகரத்தையுடைய நீ புகலாக வேணும். [𑌵𑌸𑌤𑌿 𑌮𑌨𑌸𑌿 𑌯𑌸𑍍𑌯 𑌸𑍋𑌽𑌵𑍍𑌯𑌯𑌾𑌤𑍍𑌮𑌾-வஸதி மநஸியஸ்ய ஸோவ்யயாத்மா] இவன் வைமுக்க்யம்பண்ணிப் போருமன்றும் விடபாட்டாதே நித்யாந்தர்யாமியாய்க்கொண்டு போருமவன். [𑌪𑍁𑌰𑍁𑌷𑌵𑌰𑌸𑍍𑌯 - புருஷவரஸ்ய] அவனே உபாயமென்றிருக்கை. [𑌨𑌤𑌸𑍍𑌯 𑌦𑍃𑌷𑍍𑌟𑌿𑌪𑌾𑌤𑍇 𑌤𑌵𑌗𑌤𑌿𑌃 - நதஸ்ய த்ருஷ்டிபாதேதவகதி:] அப்படியிருக்குமவனுடைய கண்வட்டத்திலும் நீ ஸஞ்சரியாதேகொள். (உ) ‘‘𑌵𑍍𑌰𑌜 𑌪𑌰𑌿𑌹𑍃𑌤𑍍𑌯 𑌯𑌥𑌾𑌗𑍍𑌨𑌿 𑌮𑌾𑌜𑍍𑌯𑌸𑌿𑌕𑍍𑌤𑌮𑍍 - வ்ராஜ பரிஹ்ருத்ய யதாக்நி மாஜ்யஸிக்தம்’’ என்னும்படியே அழலுடையராயிறே யிருப்பது. [அத(𑌧)வா மமாஸ்திசக்ர ப்ரதிஹத வீர்யப(𑌬)லஸ்ய] அவனுடைய பெருமையைப்பார்த்தால் ‡எனக்கும் கிட்டவொண்ணாதபடியாயன்றோ இருப்பது. அதுக்கடி (ங) ‘‘𑌅𑌵𑍍𑌯𑌾𑌹𑌤𑌾𑌨𑌿 𑌕𑍃𑌷𑍍𑌣𑌸𑍍𑌯 𑌚𑌕𑍍𑌰𑌾𑌦𑍀𑌨𑍍𑌯𑌾𑌯𑍁𑌧𑌾𑌨𑌿 𑌤𑌮𑍍। 𑌰𑌕𑍍𑌷𑌨𑍍𑌤𑌿 𑌸𑌕𑌲𑌾𑌪𑌦𑍍𑌭𑍍𑌯𑍋 𑌯𑍇𑌨 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌰𑍁𑌪𑌾𑌸𑌿𑌤𑌃 - அவ்யாஹதாநி க்ருஷ்ணஸ்ய சக்ராதீந்யாயுதாநி தம்। ரக்ஷந்தி ஸகலாபத்ப்யோ யேந விஷ்ணுருபாஸித:’’ என்கிறபடியே - திவ்யாயுதங்களுக்கஞ்சினபடி. (ச) [கொடுமைசெய்யும் கூற்றமுமென்கோலாடி குறுகப்பெறா தடவரைத்தோள் சக்கரபாணீ சார்ங்கவிற்சேவகனே] கிட்டினாகில் திருவாழியாலே தலையையறுத்தல் தூரத்திலேயாகில் நெட்டம்பாலே உருட்டுதல் செய்யுமவன். சரீரியன்றோவென்ன, [𑌸𑍋𑌽𑌨𑍍𑌯 𑌲𑍋𑌕𑍍𑌯𑌃-ஸோர்ய லோக்ய:] அவனித்தேசத்திலே நடையாடுவானொருத்தனல்லன்காண். (ரு) ‘‘நேமிப்பிரான்றமர் போந்தார்’’ என்னக்கடவதிறே. (சரணாய்) சரண்யரல்லாதாரைப் பற்றினானோ?

(மன்னித்யாதி) ஆபிஜாத்யத்தால்வந்த உத்கர்ஷத்தைச்சொல்லி அவன் சரணம்புக்கானென்றது - இங்கு; ‘‘ஏழையேதலன்’’ என்றும் ‘‘வாதமாமகன்’’ என்றும் ‘‘நஞ்சுசோர்வதோர்’’ என்றும் நிகர்ஷத்தைச்சொல்லிற்று - கீழ்; இரண்டுக்கும் சேர்த்தியென்னென்னில்; உத்கர்ஷாபகர்ஷங்களிரண்டும் சரணாகதிக்கு அப்ரயோஜகமென்கை. வேல்வெட்டிநம்பியார்க்குப் பிள்ளையருளிச்செய்தவார்த்தை.

(தகவில்காலனை) இரங்கவேண்டும் தசையிலும் இரக்கமற்றிருக்கை. இவனுடைய பாபத்தையும் தன்னுடைய நியாமகத்வத்தையுமே

---

‡ (பா) எனக்கு இங்கு குடிகிடக்க வொண்ணாதபடி யன்றோ.

(க) வி-பு-ங-எ-ஙஅ. (உ) வி-பு-ரு-எ-கஅ. (ங) விஷ்ணுதர்-ஈஅ.

(ச) பெரி-திரு-ரு-ச-ச (ரு) தி-வாய்-ரு-உ-கூ.

யாய்த்துப்பார்ப்பது. (உகமுனிந்து) அவன்முனிவனளவிலே நினைத்தத்தை அவன்றன்னோடே போக்கினான் "நாளையும் வைஷ்ணவ பரிகரமாயிருப்பாரை நலியவொண்ணாது" என்று உருமாய்த்துவிட்டான்: (ஒழியா) "இவனை நலிந்த ம்ருத்யுவை யழியச்செய்து இவனைப் பரிஹரித்தோமாகிலமையாதோ" என்றுவிடாதே.

(பின்னையித்யாதி) ஸம்ஸாரஸம்பந்தத்தையறுத்துத்திருவடிகளை ஒருநாளும் பிரியாதபடியான பேற்றைப் பண்ணிக்கொடுத்தாய். (நின்திருவடிப்பிரியா) ஸம்ஸாரஸம்பந்தமறுகை கேவலனுக்குமொக்குமிறே. அங்ஙனன்றிக்கே, திருவடிகளைக் கிட்டும்படியான பேற்றையாய்த்துப் பண்ணிக்கொடுத்தது. (எண்ணியவித்யாதி) க்ருபையையன்றிக்கே, ஔதார்யத்தைப் பற்றச் சொல்லுகிறது. இவன் ப்ரயோஜநாந்தரத்துக்கு வந்து கிட்டினாலும் *ஸகலபலப்ரதனாகையாலே விலக்காத ஸமயம் பெற்றால் விடானிறே. ஆஶ்ரயிக்குமவனுக்கும் ஔதார்யகுண மநுஸந்தேயம். (க) "மஹோததே-அபாரகாருண்ய" இத்யாதி.

(எனக்கும்) அவனைப்போலே ஜந்மநிபந்தநமான ஏற்றமின்றிக்கேயிருக்கிற எனக்கும். அதாகிறது - (உ) "பாவமேசெய்து பாவியானேன்" (ங) "எப்பாவம் பலவுமிவையேசெய்து" என்று சொல்லுமவரிறே. (அன்னதாகுமென்றடியிணை யடைந்தேன்) அவன்நினைவின்றிக்கே யிருக்கச்செய்தே, "நாம்கொடுத்தா லிவன்விலக்கான்" என்னுமிதுவே பற்றாசாக உன்னைப்பிரியாத பேற்றைப்பண்ணி அவனுக்குக் கொடுத்தாப்போலே, உன்விருப்பத்தாலே நானும் அப்பேறு பெறவேணுமென்று சரணம் புகுந்தேன்.

(அணிபொழிலித்யாதி) ப்ரயோஜநாந்தரங்களுக்கு வந்தாஶ்ரயித்தவர்களுக்கும் விலக்காமையுண்டாகில், ஸ்வரூபாநுரூபமான ப்ரயோஜநத்தைக் கொடுக்கைக்காகவன்றோ இங்கு வந்து கண்வளர்ந்தருளுகிறது. ... ... (சு)

அரு.—ஆறும்பாட்டு. (மன்னித்யாதி) கீழ்ப்பாட்டில்-என் கருத்தறிந்து என்னுடைய தேஹஸம்பந்தத்தை அறுத்துத் தரவேணும் என்றாராய், அது தானும் தமக்காகச் செய்தானாகில் (ச) "தனக்கேயாக வெனைக் கொள்ளு

(க) கத்யத்ரயம். (உ) க-கூ-கூ. (ங) க-கூ-ரு.
(ச) தி-வாய்-உ-கூ-ச

தீர்த்த” என்கிற பேற்றோடே விரோதிக்கு மாகையால், எனக்காகத் தகுக்கையாகிற விரோதியைக் கழிக்கவேணு மென்கிறாரென்னும் ஸங்கதியை ஸ்ப்புரிப்பிக்கிறார் (கோவிந்தேத்யாதி). “பேரருள்” என்றதைக் கடாக்ஷித்து அருளிச்செய்கிறார் (நானர்த்திக்க வித்யாதி).

—வேதம் சொல்லுகிறபடியே உபாஸிக்கிறவன் என்பானேன், வேதஹீநமான உபாஸநமுண்டோ வென்ன வருளிச்செய்கிறார் (அவைதிகேத்யாதி).

யோஜநாந்தரம் (நான்மறையிலே யித்யாதி). மன்னுதல் - புநஃ புநஃ பரிசயமன்றோ, மாமுனியானவனுக்கும் மறையிலே மன்னவேணுமோ வென்ன வருளிச்செய்கிறார் (உபாஸகனுக் கித்யாதி). ப்ரமாணாந்தரம் (ஸ்வாத்யாயாதித்யாதி). தபஸ்ஸாலே ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரம்பெற்ற விடமுண்டோ வென்ன வருளிச்செய்கிறார் (ஆசார்யனித்யாதி). (ஆசார்யன்). வருணன். (சிஷ்யனை) ப்ருகுவை.

பெற்றமைந்தனாகை மதிக்கைக்கு ஹேதுவென்று விவக்ஷித்து, கைமுதிகந்யாயத்தாலே ஸாதிக்கிறார் (பகவதித்யாதி). (பங்க்தி) ஸந்தாநம். பகவத்ஸம்பந்த மாத்ரமுண்டானவன் ஸந்ததியி லிப்படி யிருக்க, பாகவத ஸம்பந்தம் நேரே யுண்டானவனிடத்திலே கேட்கவேண்டாவிறே என்று கருத்து. வைஷ்ணவ ஸம்பந்தமுடையார் பக்கல் யமன் அஞ்சுகைக்குக் காரணம் காட்டுகிறார் (நாஸ்யாவரேத்யாதி). “அவரபுருஷாஃ” என்று ஜந்ம ஸம்பந்த முடையாருமாக வேணுமோ வென்ன வருளிச்செய்கிறார் (இதினித்யாதி). பூமியில் நீர் நிற்கப் பண்ணினவனுக்கு மூவேழுதலைமுறையும் உத்தரிப்பிக்கையைச் சொன்னால் பாகவதனுக்குக் கைமுதிகந்யாயஸித்தமாய் வருகையால் உபப்ரும்ஹண மென்று கருத்து.

யமன் அஞ்சுமென்னுமதுக்கு எடுத்த ஶ்லோகத்துக்கு வ்யாக்யாநம் பு[illegible]கைக்கு அடியெடுக்கிறார் (வஸதீத்யாதி). “వసతిమనసియస్య సోఽవ్యయాత్మా పురుషవరస్య నతస్య దృష్టిపాతే। తవ గతిరథవా మమాఽస్తి చక్రప్రతిహతవీర్యబలస్య సోఽన్యలోక్యః-வஸதிமநஸியஸ்ய ஸோவ்யயாத்மா புருஷவரஸ்ய நதஸ்ய த்ருஷ்டிபாதே। தவ கதிரதவா மமாஸ்தி சக்ரப்ரதிஹத வீர்ய பலஸ்ய ஸோந்யலோக்யஃ”. (சரீரியன்றோ வென்ன) என்றது - பாகவதனும் சரீரத்தோடே யன்றோ விருப்பது, அவன் பாபம்பண்ணினால் நாமாராய வேண்டாவோ என்று தூதன் சொல்லவென்கை. எத்தேசத்தா னென்ன வருளிச்செய்கிறார் (நேமிப்பிரானித்யாதி).

“முனிந்து” என்றது போராதோ, “உக-உக்கிப்போம்படி” என்பானென்னென்ன அருளிச்செய்கிறார் (நாளையுமித்யாதி).

“அருள்” என்னாதே “பொன்னருள்” என்றதுக்குக் கருத்தருளிச் செய்கிறார் (க்ருபையை யித்யாதி). … … … … (௬)

மூ.—ஓதுவாய்மையுமுவனியப்பிறப்பும்
உனக்கு முன் தந்த வந்தணனொருவன்
காதலென் மகன் புகலிடம் காணேன்
கண்டு நீ தருவா யெனக்கென்று
கோதில்வாய்மையினா னுன்னை வேண்டிய
குறைமுடித்தவன் சிறுவனைக்கொடுத்தாய்
ஆதலால் வந்துன்னடியிணையடைந்தேன்
அணிபொழில் திருவாங்கத்தம்மானே. (௭)

பதம்.	உரை.
ஓது	அத்யயநம் பண்ணப்படுகிற [த்தையும்
வாய்மையும்	வசநரூபமான வேத
உவனியம்	உபநயநத்தாலே உண்டாகிற
பிறப்பும்	(த்விஜத்வமாகிற) ஜந்
உனக்கு	உனக்கு [மத்தையும்
முன்	முதலிலே
தந்த	கொடுத்த [ய்
ஒருவன்	அத்விதீய (வித்வா)னா
கோது இல்	பழுதுபோகாத
வாய்மையினான்	வசநத்தை யுடையனான
அந்தணன்	ஸாந்தீபிநியென்னும் ப்ராஹ்மணன்,
காதல்	என்னுடைய ப்ரீதிக்கு விஷயமான
என்மகன்	என்பிள்ளை
புகல் இடம்	போனவிடத்தை
காணேன்	அறிகிறிலேன்.
நீ	ஸர்வஜ்ஞனாய் ஸர்வசக்தனான நீ
கண்டு	(அவனிருக்குமிடம்) அறிந்து
எனக்கு	என்னிடத்தில் (கொண்டுவந்து)
தருவாய்	கொடுக்கவேணும்
என்று	என்றுசொல்லி
உன்னை	உன்னைக்குறித்து
வேண்டிய	கேட்டுக்கொண்ட
குறை	(அவனுடைய) குறையை(மநஸ்ஸங்கோசத்தை) [றி)
முடித்து	போக்கி (நிறைவேற்
அவன் சிறுவனை	அவனுடைய பிள்ளையை
கொடுத்தாய்	யமலோகத்தில் நின்றும் கொண்டுவந்து கொடுத்தாய்,
ஆதலால்	இப்படி ஸர்வசக்தியாகையாலே,

வந்துன்னடியிணையடைந்தேன் அணிபொழில் திருவரங்கத்தம்மானே! (௭)

வ்யா.—ஏழாம்பாட்டு. (ஓதித்யாதி) விஷயீகாரத்தைச்சொல்லி, கைங்கர்யத்தைச்சொல்லி, அதுக்கு விரோதியாய்வருமதில் இந்த்ரிய வஶ்யதையைத் தவிர்த்துத் தரவேணுமென்று சொல்லி, அதுக்கடியானபாபமடியாகவந்த யமவஶ்யதையைப்பரிஹரிக்கவேணுமென்று சொல்லி, அதுக்கடியான ப்ராக்ருதிஸம்பந்தத்தை யறுத்துத்தரவேணுமென்றுசொல்லி, கருத்தறிந்து செய்யுமளவன்றிக்கே உன்பரிவாலே செய்யவேணுமென்று நின்றது - கீழ்; இதுக்கவ்வருகு அபேக்ஷிக்கலாவதில்லாமையாலே மேலிற்பாட்டுக்களுக்கு உதயமில்லை. ஆனால் மேல் செய்கிறதென்னென்னில்; “ஆழ்வீர்! சேஷியும் சேஷபூதனுமானால் சேஷிசெய்தபடிகண்டு (௧) “𑌤𑌤𑍍𑌤𑌸𑍍𑌯 𑌸𑌦𑍃𑌶𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 - தத்தஸ்ய ஸத்ருஶம் பவேத்” என்று சேஷபூதனிருக்குமத்தனையல்லது இத்தனை த்வரிக்கக் கடவதல்லகாணும்” என்ன; தன்னைப்பார்த்தால், தன்சரீராவஸாநத்தில் தான் பேறுண்டோ? உன் ஸர்வசக்தித்வத்தாலே த்வரிக்கிறேனித்தனையன்றோ; அவனுடைய போக்யதை போலே ஸர்வசக்தித்வமும் த்வரிப்பிக்குமிறே; ஸாந்தீபிநீபுத்ரனைக் கடல்கொள்ள மீட்டுக்கொடுத்த அகடிதகடநா ஸாமர்த்த்யத்தையும் விஞ்சியிருப்பதொன்றிறே ஸம்ஸாரார்ணவத்திலே அகப்பட்டு நோவுபடுகிற என்னையும்மீட்டு உன்திருவடிகளைத் தருகையாகிறது; தேவரீருடைய ஸர்வசக்தித்வத்தாலே அத்தைச் செய்தருளவேணுமென்கிறார்.

(ஓதுவாய்மையும்) வாய்மை - வாகிந்த்ரிய வ்யாபாரம். அதாகிறது - வசநம். ஒருவசநத்திலர்த்தத்தை நினைத்துப் பாசுரமிடுகிறார் மர்யாதா ஸ்த்தாபநார்த்தமாக. அந்தர்யாமி ப்ராஹ்மணம் திருவுள்ளத்திலே அநுவர்த்தியா நிற்கச்செய்தேயும், (௨) “உடல்மிசை யுயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன் சுடர்மிகுசுருதியுள்” என்றாரிறே. சப்தோச்சாரணம் பண்ணுவதில்லை; அர்த்தத்திலொன்றும் விடுவதில்லை. (ஓதுவாய்மை) என்கிறது - (௩) “𑌪𑍂𑌰𑍍𑌵𑍇 𑌪𑍂𑌰𑍍𑌵𑍇𑌭𑍍𑌯𑍋 𑌵𑌚 𑌏𑌤𑌦𑍂𑌚𑍁𑌃 - பூர்வே பூர்வேப்யோ வச ஏததூசு:”என்கிறத்தைப்புஸ்தக நிரீக்ஷணம் பண்ணுதல், செவியேறாக வருகையாதலன்றிக்கே, ஆசார்யோச்சாரணாநந்தரமாக அநூச்சாரணம் பண்ணிப்போருகை. சப்தராசிக்ரஹணத்துக்கு உச்சாரணாநூச்சாரணாபேக்ஷை என்னென்னில்; அப்படி

---

(௧) ரா-ஸு-௩௯-௩௦. (௨) தி-வாய்-௧-௧-௭. (௩)

யல்லது அர்த்தப்ரகாசமில்லாமையால். (௧) "అర్థం తమ్-அர்த்தம் தம்" இத்யாதிப்படியே - அக்நிஸாக்ஷிகமாகக் கைப்பிடித்த ஸ்த்ரீயானவள் தன்னுடைய பர்த்தாவுக்குத்தன்னை ஆமூலசூடமாகக் காட்டுமாபோலே, ஸதாசார்யோபதேச ஜ்ஞாநபூர்வகமாகக் கைப்பிடித்தவனுக்காய்த்து வித்யை தன்னையுள்ளபடி காட்டுவது.

(உவனியப்பிறப்பும்) ப்ராஹ்மணனுக்கு ஜந்மம் இரண்டிறே. பக்ஷிக்கு முண்டிறே த்விஜத்வம். பக்ஷியினுடைய பூர்வாவஸ்த்தை போலே இவனுடைய யோநிஜந்மம்; இரண்டாம் ஜந்மத்திலேயிறே நீட்டி முடக்கவல்லது. கம்ஸவதாநந்தரமாகவிறே த்விஜத்வம்; பின்பு செய்ததும் யாதவர்களோடு ஸாஜாத்யமுண்டாகைக்காகவிறே. உக்ரஸேநனை அபிஷேகம்பண்ணி, ஸ்வதர்மாரூடனாக்கி, ராஜ்யமுமடிபட்டபின்பு, "அவந்தீபுரத்திலே ஸாந்தீபிநிபக்கலிலேபோய் உபநயநாதி ஸம்ஸ்க்ருதராவோம்" என்று அவனைச்சென்றுகிட்டி, "முன்பே கர்க்க(ర్గ)ன்வந்து ஜாதகர்ம நாமகரணாதிகளடையப் பண்ணினான், உத்தரதந்த்ர மநுஷ்ட்டிப்பிக்கவேணும்" என்ன; மேலுள்ளதெல்லாம் செய்தானிறே.

(உனக்கு) (௨) "యోవై వేదాంశ్చ ప్రహిణోతి తస్మై - யோவை வேதாம்ஶ்ச ப்ரஹிணோதி தஸ்மை" என்கிறபடியே - ப்ரஹ்மாவை ஸ்ருஷ்டித்து அவனுக்கு வேதத்தைக்கொடுத்த உனக்கன்றோ தந்தது. (௩) "అనేన జీవేనాత్మనానుప్రవిశ్య - அநேந ஜீவேநாத்மநாநுப்ரவிஶ்ய" என்கிற வாக்யத்திற்படியே - ஜீவத்வாரா அசித்திலே அநுப்ரவேசித்து, நாமரூபவிபாகம்பண்ணினான் தானேயிறே; (௪) "నామ రూపఞ్చ భూతానామ్ - நாம ரூபஞ்ச பூதாநாம்" இத்யாதி. த்வாபராந்தத்திலேயிறேயிது; இவரிப்போது பெரியபெருமாளைப்பார்த்துச் சொல்லுகையாலே அவருமிவருமொருவரென்றபடி. (அந்தணன்) அத்யயநம் பண்ணுவிக்கைக்கதிகாரி. (ஒருவன்) அத்விதீயன். வித்யாஸ்த்தலங்களுக்கடையத் தானே யாம்படி சமைந்தவன். அத்யயநத்திலே அந்தர்ப்பூதமே அல்லாத வித்யாஸ்த்தலங்களும். (௫) "శిక్షాయామ్-ஶிக்ஷாயாம்" இத்யாதி. தநுர்வேதமும் ஆயுர்வேதமு மகப்பட அங்கேயிறே அதிகரித்தது. முற்பட த்வயத்தைக்கேட்டு இதிஹாஸபுராணங்களையு மதி

---

(௧)

(௨) ஶ்வேதாஶ்வ-௬.

(௩) சாந்தோ-௬-௩.

(௪) மநு-

(௫) ர-ம்த-௨-௧௮.

கரித்து, பரபக்ஷப்ரதிக்ஷேபத்துக்குடலாக ந்யாயமீமாம்ஸைகளை மதிகரித்து, போதுபோக்கும் அருளிச்செயலிலேயாம்படி பிள்ளையைப் போலே அதிகரிப்பிக்க வல்லவனையிறே "ஒருத்தன்" என்பது.

இப்படி அப்யஸிப்பித்தவளவிலே, க்ரஹணவேளையில் ஜ்ஞாநத்தையும் அதிகரிக்கிற சக்தியோகத்தையும் கண்டு, "தக்ஷிணையாக இவனை எத்தை வேண்டிக்கொள்வோம்" என்று, "என் புத்ரன் கடலிலே புக்கான், அவனெங்கேபோனானென்றறிகிலேன், ஆராய்ந்து அவனை உருவழியாதபடி கொடுவந்து தரவேணும்" என்ன; கையில் வில்லை வாங்கிக் கடற்கரையிலே சென்றபோதே அஞ்சி, வருணன் முகங்காட்ட; "ஆசார்யபுத்ரனிங்கே புக்கான், காட்டித்தா" என்ன; அவனும் போக்கற்றவாறே, "பஞ்சஜநன் பக்ஷித்தான்" என்ன; முனநாளுண்ட சோற்றை வாங்கவொண்ணாதிறே; கடலில் நீர் நீங்கிக்கொடுக்க சங்க(ஸ்வ)ரூபியான அவனை யகற்றினவளவிலே, ஸ்ரீபாஞ்சஜந்யாழ்வான் வந்து ஆவேசிக்க; திருப்பவளத்தேவைத்து முழக்கிக்கொடு யமபுரத்தேற வெழுந்தருள; அவனும், அர்க்க்யாதிகளைக்கொடுத்து "எழுந்தருளிற்றென்!" என்ன, "ஆசார்யபுத்ரனிங்கே வந்தான், அவனைக்காட்டித்தா" என்ன; அவனும், நரகவிசேஷத்தில்நின்றும் அவனைக் கொடுவந்து காட்ட; "என்புத்ரன்" என்று அவன் ப்ரத்யபிஜ்ஞை பண்ணும்படி அவனைக்கொடுவந்து காட்டிக்கொடுத்தானிறே.

(காதலென்மகன்)காதல்தான் வடிவுகொண்டதென்னும்படியான புத்ரன். (புகலிடம்காணேன்) நரகத்திலேயோ?, கர்ப்பஸ்த்தனோ? எங்கே புக்கான், என்றறிகிறிலேன். (கண்டுநீதருவாய்) ஸர்வசக்தியான நீ ஆராய்ந்து தரவேணும். வித்யாக்ரஹணதா(𑌧)ரணத்திலே கண்டானிறே சக்திமத்தையை.

(கோதில்வாய்மையினான்)"காதலென்மகன்" என்ற இவனையிறே "கோதில் வாய்மையினான்" என்கிறது, அதுக்குக் கருத்தென்னென்னில்; "𑌗𑌰𑍁𑌵𑌚𑌨 𑌮𑌲𑌙𑍍𑌘𑌨𑍀𑌯𑌮𑍍 - குருவசந மலங்கநீயம்" என்கிற க்ருஷ்ணாபிப்ராயத்தாலே; இருவரும் பிரிந்திருக்கிறவளவிலே (௧) "𑌦𑍃𑌷𑍍𑌟𑌾 𑌸𑍀𑌤𑌾 - த்ருஷ்டா ஸீதா" என்கிற திருவடியளவில் சொல்லும்வார்த்தையையிறே இவனளவிலே சொல்லுகிறது. (உனைவேண்டிய)சிஷ்ய

---

(௧) ரா-பா-௧-௭௮.

னென்றிறே அவனுக்கு ப்ரதிபத்தி; மோக்ஷப்ரதனென்றன்றே. அபி ஜந வித்யா வ்ருத்தங்களால் வருமதன்றே மோக்ஷ ருசி; நைர்த்தோஷ்ய மடியாக பகவத்ப்ரஸாதத்தாலே வரவேணுமே; அது உண்டாகிலிறே இத்தை அபேக்ஷிப்பது. (குறைமுடித்து) "என்பிள்ளையைக் கொடு வந்து காட்டித்தரவேணும்" என்ன; "அப்படியே செய்கிறோம்" என்ற போதே அற்றதிறே அவன்குறை.

(அவன் சிறுவனைக்கொடுத்தாய்) மோந்துபார்த்தாலும் குடற்றுடக்குத் தோன்றும்படியிறே கொடுத்தது. (க) [மாதவத்தோனித்யாதி, உருவுருவே கொடுத்தான்] "இப்போது கொடுக்கிற வடிவுதான் பழைய வடிவுதான்" என்னும்படியாய்த்துக் கொடுத்தது. [தக்கணையா] சிஷ்யத்வ ஸித்திக்காக. [உருவுருவே] (உ) "அஸந்நேவ - அஸந்நேவ" என்னும்படியான வஸ்துவுக்கு சேஷத்வஜ்ஞானத்தைப் பிறப்பித்து உருவுண்டாக்கி, சேஷத்வாநுரூபமான வ்ருத்திவிசேஷத்தைக்கொடுக்கை.

(ஆதலால் வந்துன்னடியிணை யடைந்தேன்) "சரீராவஸாநத்தில் பேறு தப்பாதிறே, நீர் ஸர்வசக்தியானபின்பு அவ்வளவுதாழுறியிருக்கிறதென்?" என்னும் த்வரையாலே சரணம்புகுந்தேன். (அணிபொழிலித்யாதி) கடல்கொண்ட வஸ்துவைமீட்டு உருவுருவே கொடுத்தாப்லே, ஸம்ஸாரார்ணவம் கொண்டவென்னைமீட்டு வ்ருத்திபர்யந்தமாக்கித்தருகைக்கன்றோ தேவரீரிங்குவந்து சாய்ந்தருளிற்று... ... (எ)

அரு.—ஏழாம்பாட்டு. (ஓதித்யாதி) கீழ் ஆறுபாட்டுக்கும் மேல் இரண்டு பாட்டுக்கும் ஆக்ஷேபஸமாதாந முகேந ஸங்கதியை யருளிச்செய்கிறார் (விஷயீகாரத்தை யித்யாதி) "இத்தனையன்றோ" என்ற வநந்தரம், என்று மேலிரண்டு பாட்டாற் சொல்லுகிறார் என்று சேஷம்

ஓதப்படுகிற வசநம் என்று சொல்லுகிறதென், அந்த ஸ்ருதிவசநந்தன்னைச் சொல்லவொண்ணாதோவென்ன வருளிச்செய்கிறார் (ஒருவசநத்தி லித்யாதி). "ஓதுவாய்மை என்கிறது" என்ற பதத்துக்கு, "பண்ணிப் போருகை" என்றத்தோடன்வயம். (வசஃ என்கிறத்தை) என்றது-எடுத்த வசநத்தில் "வசஃ" என்கிற பதத்தால் சொல்லுகிற வேதத்தை என்றபடி. சப்த முபதேசமாகக் கொள்ளாவிட்டால் அர்த்தம் ப்ரகாசியாதென்னுமத்தை ப்ரமாண பூர்வகமாக வருளிச்செய்கிறார் (அர்த்தமித்யாதி). "[illegible]

(க) பெரி-திரு-ச-அ-க.

(உ) தை-ஆந-சு.

హృదయా వేశ్యా సదేశ్యా త్రయీ। యస్మిన్నవ్యభిచారిణి స్వహృదయం పాతివ్రతం ధత్తే లక్ష్మణ లక్ష్మణాయ మునయే తస్మై నమస్కుర్మహే-அர்த்தம் நம் தமகர்த்த ரூப மபிதஸ்ஸந்தர்ஶ்ய முக்த்தைர்ஹ்ருதா நித்யம் தைரபி துர்க்ரஹ ஸ்வஹ்ருதயா வேஶ்யா ஸதேஶ்யா த்ரயீ। யஸ்மிந்நவ்யபிசாரிணி ஸ்வஹ்ருதயம் ஸந்தர்ஶ்ய பாதிவ்ரதம் தத்தே லக்ஷ்மண லக்ஷ்மணாய முநயே தஸ்மை நமஸ்குர்மஹே" என்கிற இந்தஶ்லோகத்துக்குத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (அக்நீத்யாதி).

(நீட்டி முடக்குகை) ஸ்பர்சநீயமாதிகளோடே வர்த்திக்கை.

நாமரூபாதிகளை உண்டாக்கின உனக்கன்றோ ஜாதகர்மாதி நாமரூபங்களை யுண்டாக்கிற்று என்று ஈடுபாடாக வருளிச்செய்கிறார் (அநேநேத்யாதி).

(அகற்றின) கொன்ற.

(கர்ப்பஸ்த்தனோ) என்றது - வேறே ஜந்மமெடுக்கப் புக்கானோ வென்கை.

(அதுக்கு) என்றது - புத்ரேஷணா யுக்தனாய் ஸ்வார்த்தபரனானவனை "கோதில் வாய்மையினான்" என்கிறதுக்கு, என்கை "கோதில் வாய்மையினாயொடும்" என்ற பதத்தை இங்கும் ப்ரயோகித்ததுக்கு வித்தராயருளுகிறார் (இருவரு மித்யாதி). மோக்ஷத்தைக் கேளாதே பிள்ளையைக் கேட்பானென்னென்ன வருளிச்செய்கிறார் (சிஷ்யனித்யாதி). கிஞ்ச, ருசிதானும் இல்லையென்று விவக்ஷித்து, வேதாத்யயந பரனுக்கு ருசிபிறவாமே போவானென்னென்ன வருளிச்செய்கிறார் (அபிஜநேத்யாதி)

"உரு.உரு" என்றதுக்கு ஸ்வாபதேச மருளிச்செய்கிறார் (அஸங்கேவேத்யாதி). ... ... (எ)

மூ.—வேதவாய்மொழி யந்தணனொருவன்
எந்தை நின் சரணென்னுடை மனைவி
காதல்மக்களைப் பயத்தலும் காணாள்
கடியதோர்தெய்வம்கொண்டொளிக்குமென்றழைப்ப
ஏதலார்முன்னே இன்னருளவர்க்குச்
செய்துன்மக்கள் மற்றிவரென்று கொடுத்தாய்
ஆதலால் வந்துன்னடியிணை யடைந்தேன்
அணிபொழில் திருவரங்கத்தம்மானே. (அ)

பதம்.	உரை.
வேதம்	வேதங்களை
வாய்	வாயினால்
மொழி	(எப்போதும்) பாராயணம் பண்ணுகின்ற
ஒருவன்	அத்விதியனான
அந்தணன்	ஜ்ஞானசக்தியையுடைய வைதிகனானவன்,
எந்தை	எனக்குப் பிதாவான
நின்	நீயே
சரண்	(எனக்கு) உபாயமாக வேணும், (அதாவது,)
என்னுடை	என்னுடைய
மனைவி	பெண்டாட்டியானவள்
காதல்	(தனக்கு) ப்ரியமான
மக்களை	பிள்ளைகளை
பயத்தலும்	பெற்றபோதே
காணாள்	காண்கிறிலள்,
கடியது	க்ரூரமான
ஓர்தெய்வம்	ஏதோ ஒரு தேவதையானது
கொண்டு	எடுத்துக்கொண்டு போய்
ஒளிக்கும்	மறைத்து வையாநின்றது
என்று அழைப்ப	என்று விண்ணப்பம் செய்ய,
அவர்க்கு	அந்த வைதிகன் விஷயத்தில்
ஏதலார்முன்னே	சத்ருக்கள் முன்பே
இன்	(நீ) இனிதாக (ஸ்வயம் ப்ரயோஜநமாக)
அருள்செய்து	க்ருபைபண்ணி,
மற்று	அதுக்குமேலே,
உன்மக்கள்	உன்னுடைய பிள்ளைகள்
இவர் என்று	நானழைத்துக்கொண்டுவந்த இவர்கள்தானென்று சொல்லி
கொடுத்தாய்	தந்தருளினாய்;
ஆதலால்	இப்படி நீ ஸர்வசக்தியாகையாலே

வந்துன்னடியிணை யடைந்தேன் அணிபொழில் திருவரங்கத்தம்மானே! (அ)

வ்யா.—எட்டாம்பாட்டு. (வேதவாயித்யாதி). வைதிகபுத்ரேதிஹாஸத்தை முன்னிட்டுக்கொண்டு சரணம் புகுகிறார். இப்பாட்டிலும் சொல்லுகிறது - கீழ்ச்சொன்ன ஸர்வசக்தி யோகத்தை; ஆனால் வாசியென்னென்னில்; தேசகால விப்ரகர்ஷம் கிடக்கச்செய்தே கார்யம்செய்த சக்திமத்தையைச் சொல்லுகிறது.

(வேதவாய்மொழி யந்தணனொருவன்) அந்தணனொருவன் என்னாதே, கீழ்ச்சொன்ன விசேஷணத்துக்குத்தாத்பர்யமென்னென்னில்; ஈஸ்வரனுக்குத் தீரக்கழிய இவன் கார்யம் செய்யவேண்டும்படியான இவன் வஸ்துதை சொல்லுகிறது. வேதத்தை விஷயீகரித்த வாகிந்த்ரிய வ்யாபாரத்தை யுடையவன். வேதபாராயணபரன். இத்தால்-இஸ்ஸ்வரூப ஜ்ஞானமுடையவனென்கை. வேத தாத்பர்யார்த்தத்தை நிர்ண

யித்து அதுக்கு வாசகமானபாராயணத்தைப் பண்ணுமவன். (அந்தணனொருவன்) (௧) "அறவனை யாழிப்படையந்தணனை" என்னுமாபோலே- சுத்தி யோகத்தைச் சொல்லுகிறது. ஆத்மாவுக்கு சுத்தியாவது - (௨) "𑌨𑌹𑌿 𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨 𑌸𑌦𑍃𑌶𑌂 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌮𑌿𑌹 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 - நஹிஜ்ஞாநேந ஸத்ருசம் பவித்ரமிஹ வித்யதே" என்னுமாபோலே ப்ரணவோக்த ஜ்ஞாந சுத்தியிறே; தபஸ் தீர்த்தயாத்ராஸேவாதிகளன்றே. நீர் அந்தணனென்றது-சாந்த (𑌶𑌾𑌨𑍍𑌤)ஸனென்றபடி; இங்கு வைதிகனென்றபடி. சாந்தஸராவார் - ப்ரயோஜநார்த்தமாக ஒதுவது ஒத்துச்சொல்லுவதாமவர்கள்; வைதிகராவார்- (௩) "𑌵𑍈𑌦𑌿𑌕𑌃 𑌕𑌃-வைதிகஃ கஃ" என்கிறபடியே வேததாத்பர்ய மறியுமவர்கள். சுத்திக்கு அத்விதீயன். ஸ்வரூபஜ்ஞாநத்தை விஶதீகரிக்கிறது- இரண்டு பதத்தாலும்.

(எந்தை) எனக்கு உத்பாதகன். மாதாபிதாக்களைப்போலே தோற்றிமாய்ந்துபோகையன்றிக்கே, (௪) "𑌅𑌵𑍍𑌯𑌯𑌃𑌪𑌿𑌤𑌾- அவ்யயஃபிதா" என்கிறபடியே அழியாத பிதா என்றபடி. அடியிலே இத்தை உண்டாக்கி ஸ்வரூப ஜ்ஞாநத்தைப் பிறப்பித்த உபகாரகன் என்றுமாய்த்து அநுஸந்திப்பது இவன் (நின்சரண்) நீயே எனக்கு உபாயமாகவேணும்; அநந்ய ஸாதநனாய் அநந்ய ப்ரயோஜநனா யிருப்பானொருவன்.

"நாமே ஆஶ்ரயணீயர்" என்றும் "நாமே உபாயம்" என்றும் அத்யவஸித்தாயாகில் உனக்கினி குறையென்னென்ன; எனக்கொரு குறையில்லை; (என்னுடைமனைவி) என்னுடையக்ருஹிணி. என்னோடு ஸஹதர்மசாரிணி யானவள்; (௫) "𑌪𑌿𑌤𑌰𑌂 𑌮𑌾𑌤𑌰𑌂 𑌦𑌾𑌰𑌾𑌨𑍍 - பிதரம் மாதரம் தாராந்" என்று த்யாஜ்யையானவளல்லள். அவள்கண்ணில் கண்ணநீரைக் கண்டால் ஆந்ருசம்ஸ்யத்தாலே கார்யம் செய்யவேண்டும்படி யிருக்கிறவள். (காதல்மக்களை) பிள்ளைகள் பக்கலிலே ஸ்நிக்த்தை(𑌸𑍍𑌨𑌿𑌗𑍍𑌧)யாய்ப் போரும். (பயத்தலும் காணாள்) செய்வதெல்லாம் செய்து பத்துமாஸம் வயிற்றிலே தரித்துப்பெற்றவளவிலே காணப்பெறுகிறிலள். அதுக்கடி யென்னென்னில், (கடியதோர் தெய்வங்கொண்டொளிக்கும்) இப்படி யிருப்பதொரு தேவதையை, இதுக்கு முன்பு நான் கண்டறியேன். யமனும் உடல் கிடக்கவிறே கொண்டுபோவது; பெற்று முகத்திலே விழிப்பதுக்கு முன்னே, பார்த்துக்

---

(௧) தி-வாய்-௧-௭-௧. (௨) கீதை-௪-௩௮. (௩) ஸ்தோ-ர-௧௧.
(௪) ஸஹஸ்ரநா-உபோத்காதே-௧௦ (௫) கத்யத்ரயோபாத்தம்.

கொண்டு நின்று கொண்டு போவாரைப்போலே வடிவோடே கொண்டு போய் ஒளியாநின்றது. க்ருஷ்ணனுடைய வடிவழகைக் காணவேணுமென்று நாய்ச்சிமார் செய்ததிறே. (அழைப்ப) இப்படி விண்ணப்பஞ்செய்ய.

அதாவது - க்ருஷ்ணன் ஒரு யாகவிசேஷத்திலே தீக்ஷித்து உறுப்புத்தோலும் போர்த்துக்கொடு நிற்கிற நிலையிலே, இவன்சென்று "என் பார்யையானவள் மூன்று ப்ரஜைகளைப் பெற்றாள், பெற்றபோதே முகத்திலும் விழியாதபடி தைவம் கொண்டுபோகாநின்றது, அவளிப்போது ஆஸந்ந ப்ரஸவை, இப்ப்ரஜையை நோக்கித் தரவேணும்" என்ன; "அப்படியே செய்கிறோம், என்று எழுந்தருளப் புக்கவளவிலே, தீக்ஷிதரான தேவரீர் எழுந்தருளவேணுமோ, நான்போய் பரிஹரித்துப் போருகிறேன்" என்று அர்ஜுநன் சொல்ல; "அப்படியே செய்யலாகாதோ" என்று ஸ்மிதம்பண்ணி அருளிச்செய்ய; அவனும், கர்ப(X6ழ)க்ருஹத்தைச் சுற்றும் சரக்கூடமாகக் கட்ட; அதுக்கு மேலே, ப்ரஜையினுடைய அழுகைக்குரல் கேட்டவாறே, ப்ராஹ்மணன், "க்ருஷ்ணன்வந்து நோக்கப்புக நீ ஒருக்ஷத்ரியாதமன், அடைகொடு பாழ்போக்கினாய்" என்று அர்ஜுநன் முன்மடியைக்கொத்துப் பிடித்து க்ருஷ்ணன் பாடே இழுத்துக்கொண்டுவர; பின்னையும், வைதிகனையும் அர்ஜுநனையும் தேரிலே எற்றிக்கொடுபோய் காரணத்தளவிலே நிறுத்திப்பரமபதத்திலே சென்று, பிள்ளைகளை நால்வரையும் மீட்டு, பூசின சாந்தும் மஞ்சளும் காதில் தோடுமான வடிவோடே கொடுவந்து காட்டிக்கொடுத்தான். காலக்ருதபரிணாமமில்லாத தேசமாகையாலே அவ்வடிவோடே கொடுவந்து காட்டிக்கொடுத்தானாய்த்து.

(எதலார்முன்னே) "ப்ரஜைகள்தான் போய் நெடுங்காலமுண்டாம், இன்னவிடத்திலே புக்கார்கள் என்று தெரியாதாம், இப்படியிருக்க, க்ருஷ்ணனைக்கொண்டு மீட்டுக்கொள்ளப் புகுகிறானாம்" என்று சொல்லுமவர்கள் முன்னேகிடீர்! மீட்டுக்கொடுத்தது. (எதலார்) ஆழ்வார் வார்த்தை யிருக்கிறபடி. ப்ரத்யாஸந்ந சத்ருக்கள் அதாவது (க) "*𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌫𑌲𑌂 𑌪𑍍𑌰𑌯𑍋𑌕𑍍𑌤𑌰𑌿-சாஸ்த்ரபலம் ப்ரயோக்தரி யன்றோ, தன் கையிலொரு முதலில்லையாம், வேறொருவராலே பெறவிருக்கிறானாய்" என்றிறே தங்களுக்கென்ன முதலுடையார்கள் சொல்லுவது. (இன்

(க) மீமாம்ஸகவசநம்.

னருளித்யாதி) தன்பேறாக வாய்த்துச் செய்தது. இரங்கி என்றபடி. (உன்மக்கள் மற்றிவரென்று கொடுத்தாய்) "உன்மக்க ளிவர்களே" என்று தேறும் படியாக அவ்வவப்படியே கொடுவந்து கொடுத்தாய்.

(ஆதலால் வந்துன்னடியிணை யடைந்தேன்) இப்படிப்பட்ட உன்னுடைய அதிசயித சக்தியை அநுஸந்தித்துச் சரணம் புகுந்தேன். "அங்குள்ளாரை இங்கே மீட்டுக்கொடுவந்து கொடுத்தமையுண்டு, உமக் கங்ஙனிருப்பதொன்றுண்டோ" என்ன; அதிலு மரியதொன்றன்றோ இங்குள்ளாரை அங்கேறக் கொடுபோகை. அது செய்யலாம், தன்னினைவாலே செய்யுமதாகையாலே; இத்தலையை இசைவித்து அத்தலையேறக் கொடுபோகையன்றோ வரிது.

(அணிபொழி லித்யாதி) இங்குள்ளாரை அக்கரைப்படுத்துகைக் கன்றோ இங்குவந்து சாய்ந்தருளிற்று. தேஹாத்மாபிமாநியாய் விஷயப்ரவணனாய் (௧) "𑌅𑌨𑌨𑍍𑌤𑌕𑍍𑌲𑍇𑌶𑌭𑌾𑌜𑌨𑌮𑍍 - அநந்த க்லேச பாஜநம்" என்கிற ஸம்ஸாரத்திலே அழுந்துகிற என்னை, ஸ்வரூபஜ்ஞாநத்தைப் பிறப்பித்து உன்பக்கலிலே ப்ராவண்யத்தை யுண்டாக்கி (௨) *அந்தமில் பேரின்பத் தடியரோடே வைக்கைக்காகவன்றோ தேவரீரிங்குவந்து கண்வளர்ந்தருளுகிறது.... ... ... (௮)

அரு.—எட்டாம்பாட்டு. (வேதவாயித்யாதி) (இவன் வஸ்துவை) என்றது - வேதார்த்த ஜ்ஞாநத்தாலே பகவத்ஸ்வரூபத்தை உள்ளபடி யறிகையாகிற ஸத்தை என்றபடி. "மொழி" என்றதினர்த்தம் (வ்யாபாரத்தை) என்றது. வேதயதீதி வேதஃ என்கிற வ்யுத்பத்தியை உட்கொண்டு இப்பத ப்ரயோகத்துக்குக் கருத்தருளிச்செய்கிறார் (இஸ்ஸ்வரூபேத்யாதி). (இஸ்ஸ்வரூபம்) என்றது-ஸ்வஸ்வரூபமென்றபடி. விவரணம் (வேதேத்யாதி). (ப்ரணவோக்த ஜ்ஞாநம்) என்றது - சேஷத்வ ஜ்ஞாநமென்கை. (சாநத்ஸன்) தாமஸன். "வேதவாய்மொழி" என்றத்தாலும் - ஸ்வரூபஜ்ஞாநத்தைச் சொல்லி, "அந்தணனொருவன்" என்றத்தாலும் - அதுவேயானால் புநருக்தமன்றோ வென்ன வருளிச்செய்கிறார் (ஸ்வரூபேத்யாதி). (இத்தை) வேதத்தை. "வேதவாய்மொழி" இத்யாதியால் - சேஷத்வஜ்ஞாநத்தில் அத்விதீயன் என்கையால், அநந்யப்ரயோஜநதை பலிக்குமென்று விவரிக்கிறார் (அநந்யேத்யாதி).

(௩) "மாயன் மணிவண்ணன் தாள்பணியும் மக்களைப் பெறுவர்கள்" என்றும் (௪) "நெடுங்காலமும் கண்ணன் நீண்மலர்ப் பாதம் பரவிப்பெற்

---

(௧) ஜி-ஸ்தோ-௪.
(௨) தி-வாய்-௧௦-௯-௧௧.
(௩) பெரி-திரு-௧-௮-௧௧.
(௪) தி-வி-௩௭.

ற'' என்றும். சொல்லுகிறபடியே - அநந்ய ப்ரயோஜநதைக்கு ஹாநிவாராமே நோற்றுப்பெற்றவன் என்று விவக்ஷித் தருளிச்செய்கிறார் (செய்வதித்யாதி). இங்ஙனன்றாகில் "த்யாஜ்யையயானவ ளல்லன்" என்ன வொண்ணாதிறே. கடியதோர் தெய்வந்தானேதென்ன வருளிச்செய்கிறார் (க்ருஷ்ணனுடைய வித்யாதி).

(காரணத்தளவிலே) ப்ரக்ருதியளவிலே.

(ஆழ்வார் வார்த்தை) என்றதுக்கு - ஸ்வயத்நபரரை "ஏதலர்" என்கிறாரென்று கருத்து.

விவரணம் (தேஹேத்யாதி). ... ..., ... (௮)

மூ.—துளங்கு நீண்முடி யரசர்தம் குரிசில்
தொண்டை மன்னவன் திண்டிற லொருவற்கு
'உளங்கொளன்பினோ டின்னருள் சுரந்து
அங்கொடுநாழிகை யேழுடனிருப்ப
வளங்கொள் மந்திரம் மற்றவற் கருளிச்
செய்தவாறடியே னறிந்துலக
மளந்த பொன்னடியே யடைந்துய்ந்தேன்
அணிபொழில் திருவரங்கத்தம்மானே. (௯)

பதம்.	உரை.	பதம்.	உரை.
துளங்கு	விளங்காநின்றதாய்	சுரந்து	பண்ணி;
நீள்	ஆதிராஜ்ய ஸூசகமான {னாய்,	மற்று	பின்னையும்
முடி	கிரீடத்தையுடைய	அவற்கு	அந்த ராஜாவுக்கு
அரசர்தம்	ராஜாக்களுக்கு	அங்கு	அந்த ராஜ்யபரிபாலநத்தில் [ற
குரிசில்	ராஜாவாய்,	ஓடு	வ்யர்த்தமாகக் கழிகி
திண்	த்ருடமான	நாழிகை	காலங்களிலே
திறல்	பலத்தையுடையனாய்	ஏழு நாழிகையோடு	ஏழர்த்தத்தோடே கூடிய நாழிகையோடு
ஒருவன்	(அத்தாலே) அத்விதீயனான		
தொண்டைமன்னவற்கு	தொண்டைமான் சக்ரவர்த்தி விஷயத்தில், [கிடக்கிற	இருப்ப	இருக்கும்படியாக (ஏழர்த்தம் நெஞ்சில் படும்படியாக)
உளம்கொள்	(தன்)திருவுள்ளத்தில்	வளம்கொள்	ஸர்வாதிகாரமான ஔதார்யத்தையுடைத்தான
அன்பினோடு	ப்ரீதியோடு கூட		
இன் அருள்	ஸ்வயம்ப்ரயோஜநமான க்ருபையை	மந்திரம்	திருமந்த்ரத்தை

அருளிச்செய்த ஆறு	உபதேசித்த ப்ரகாரத்தை
அடியேன்	சேஷபூதனான நான்
அறிந்து	ஆராய்ந்து,
உலகம்	லோகங்களை
அளந்த	அளந்து வசமாக்கிக் கொண்ட
பொன்	ஸ்ப்ருஹணீயமான
அடியே	(உன்) திருவடிகளையே
அடைந்து	சரணமாகப் பற்றி
உய்ந்தேன்	உஜ்ஜீவித்தேன்

அணிபொழில் திருவரங்கத்தம்மானே! (கூ)

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (துளங்கித்யாதி) கீழிரண்டு பாட்டாலே - அவனுடைய சக்தியோகத்தைச் சொல்லி, உபாயபூர்த்தியைச் சொல்லிற்றுய்கின்றது. இப்பாட்டுக்கு உதயமென்னென்னில்; "ஸம்ஸாரத்தினுடைய தண்மையையும் நம்முடைய அதிசயித சக்தித்வத்தையுமநுஸந்தித்து த்வரிக்கையாகிற இது ஔபாதிகங்காணும், நாம் செய்தபடி கண்டிருக்குமது காணும் உமக்கு ஸ்வரூபம்" என்ன; உன்னை யல்லதறியாத தொண்டைமான் சக்ரவர்த்திக்கு ஸ்வரூபஜ்ஞாநத்தை யுண்டாக்கினுப்போலே, எனக்கும் ஸ்வரூபஜ்ஞாநத்தை யுண்டாக்கவேணுமென்று சரணம் புகுகிறுர்.

கீழே (க) "நான் கண்டுகொண்டேன் நாராயணு வென்னும் நாமம்" என்று திருமந்த்ரத்தை ஸார்த்த(𑌸𑌾𑌰𑍍𑌥)மாக லபித்து, (உ) "உற்றதுமுன்னடியார்க்கடிமை" என்று ததீய சேஷத்வ பர்யந்தமாக அநுஸந்தித்தார், அதின் முன்பு ஸ்வரூபஜ்ஞாநம் பிறந்ததில்லையோவென்னில், தந்தாமுக்குப் பிறக்கும் ஜ்ஞாநம் விஸ்வஸநீயமன்றென்று காணுமிருக்க வடுப்பது. ஸ்ரீநாரத பகவானையிட்டு ஸ்ரீபுண்டரீகனுக்கு (ங) "𑌕𑌿𑌂 𑌤𑌤𑍍𑌰-கிந்தத்ர" என்றும் (ச) "𑌨 𑌰𑌾𑌜𑍍𑌯𑌾𑌨𑌿- நராஜ்ஜாதாநி" என்றும் திருமந்த்ரத்தை ஸார்த்தமாக உபதேசிப்பித்து, ப்ராப்திவேளையிலே "உனக்கு வேண்டுவதென்?" என்று ஈஸ்வரன் கேட்க, (ரு) "𑌕𑍍𑌵𑌾𑌹𑌮𑌤𑍍𑌯𑌨𑍍𑌤 𑌦𑍁𑌰𑍍𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃- க்வாஹமத்யந்த தூர்ப்புத்திః" என்றுனிறே. ஸர்வாபிமதஸாதநமிறே சரணுகதியாகிறது.

(துளங்கு) மழுங்குதலின்றிக்கே பளபளத்திருக்கை. இத்தால்-தேஜஸ்ஸைச் சொல்லுகிறதன்று, அந்யோந்யம் விரோதம் வாராதபடி நாட்டையாண்ட தேஜஸ்ஸைச் சொல்லுகிறது. (நீள்முடி) ஒக்கமல்ல, ராஜ்யத்திற் பரப்பையிட்டுச் சொல்லுகிறது. (அரசர்தம்

(க) க-க-க. (உ) அ-க௦-ங. (ங) இதிஹாஸஸமுச்சயம்-ஙஉ.
(ச) (ரு)

குரிசில்) ராஜா. மநுஷ்யர்களுக்கு ராஜா என்னுமாபோலே ராஜாக்களுக்கு ராஜா. (க) "𑌰𑌾𑌜𑌾𑌧𑌿𑌰𑌾𑌜 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌮𑍍- ராஜாதிராஜ ஸ்ஸர்வேஷாம்" நாட்டில் பரப்பாலே "இத்தேசத்துக்கு அபிஷிக்தன்" என்று தெரியாதிறே; அதுக்காக.

(தொண்டைமன்னவன்) தொண்டைமண்டலத்திலே அபிஷேகம் பண்ணியிருந்த காலத்து, நாடெங்குமொக்கத் தனக்காக்கிக்கொண்டது. அதுக்கடி சொல்லுகிறது (திண்டிறலொருவற்கு) (உ) "𑌵𑍀𑌰𑌭𑍋𑌗𑍍𑌯𑌾 𑌵𑌸𑍁𑌨𑍍𑌧𑌰𑌾 - வீரபோக்யா வஸுந்தரா" என்னுமாபோலே தன்மிடுக்காலே எங்குமொக்க எறிந்துகொண்டு மிடுக்குக்கு அத்விதீயனாயிருக்கிறவனுக்கு. (ங) "மருவலர்த முடல்துணிய வாள்வீசும் பரகாலன்" என்றவிவர் மதித்த மிடுக்கிறே. "ஸ்வரூபஜ்ஞாநம் பிறக்கவேணும்" என்று சரணம் புகுகிறதுக்கு நிதர்சநமாகச் சொல்லுகிறதாகில், துர்மாநத்துக்கு ஹேதுக்களானவற்றைச் சொல்லுகிறதென்னென்னில்; ஸ்வரூபஜ்ஞாநமுண்டானால் இவ்விசேஷணங்கள் அநுகூலரக்ஷணத்துக்கும் ப்ரதிகூல நிரஸநத்துக்கும் ஏகாந்தமா யிருக்கையாலே ஸ்வரூபாய வாமிறே யென்று.

(உளங்கொளன்பினோடு) ஹிதோபதேசத்துக்காகப் பண்ணின அன்பாகையாலே திருவுள்ளத்தைப் பற்றியிருக்குமிறே. (இன்னருள்) தன் பேறானவருள். (ச) "𑌉𑌦𑌾𑌰𑌾𑌃 - உதாராः" என்று ப்ரயோஜநாந்தரபரராளவிலு மிருக்கச்செய்தே, (ச) "𑌜𑍍𑌞𑌾𑌨𑍀 𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑍈𑌵-ஜ்ஞாநீத்வாத்மைவ" என்கிற விசேஷணமுண்டிறே. (சுரந்து) முலைக்கடுப்புத் தீரத் தரையிலே பீச்சுவாரோபாதி. (அங்கொடுநாழிகை) ராஜ்யதா(ரு)ரோடேகூட வ்யர்த்தமே கழிகிற காலத்திலே. (எழுடனிருப்ப) எழர்த்தத்தைப்பற்ற எழுகாலமென்கிறதிறே.

(வளங்கொள் மந்திரம்) அழகாதல், ஸஞ்சாரித்வமாதல். வளமாகிறது - ஸகலபலப்ரதனான ஈஶ்வரனைப்போலே எல்லார்பக்கலிலும் ஸஞ்சரிக்கை. கர்மாதிகளுக்கு உபகாரகமாய் ப்ரபந்நனுக்கு ஸ்வரூபஜ்ஞாநத்தை யுண்டாக்கி அக்கரைப்படுத்துமிறே. (மற்றவற்கருளிச்செய்தவாறு) அவனுக்குத் திருமந்த்ரத்தை உபதேசித்து ததீய சேஷத்வத்தை யுண்டாக்கினபடி. குறும்பறுத்த நம்பியோ

(க)

(உ) விஷ்ணுதர்மம்.

(ங) ங-ரு-க௦.

(ச) கீதை-எ-கஅ.

டே சேர்த்துவிட்டபடியைச் சொல்லுகிறது;-"பதிவ்ரதையோடுண்டான ஏகாந்தத்தி லநுபவத்தைத் திரளிலே வெளியிடுவாரைப்போலே, தானும் நானுமறிய வநுபவித்தவித்தை இங்ஙனே வெளியிடுவதே! திருவேங்கடமுடையான் அலைவலையாகாதே!" என்[illegible]ரிறே. (அடியேனறிந்து) இவருடைய *ஞானிருக்கிறபடி.

(உலகமளந்த) விமுகர்தலையிலு மகப்படவிருந்த திருவடிகள். (பொன்னடி) ஸர்வைஸ் ஸ்ப்ருஹணீயம். அதாகிறது - ஸ்வர்ண ஸ்வபாவத்தாலே பொற்கிண்டியில் தண்ணீர் வஸிஷ்ட்ட சண்டாள விபாகமற விநியோகங் கொள்ளலாமிறே. (அடைந்துய்ந்தேன்) "ஸ்வரூபஜ்ஞாநத்தைப் பிறப்பிக்கவேணும்" என்று சரணம்புக்கு உஜ்ஜீவித்தேன்.

(அணிபொழி லித்யாதி) திருவேங்கட முடையானளவிலே பிறந்தவர்த்தத்தைச் சொல்லி, பெரியபெருமாள் திருவடிகளிலே சரணம்புகுகிறார். திருமலையில் நிலையிலே ஒரு உத்யோகமுண்டென்று தோற்றுமிறே; பின்பு போந்து சாய்ந்தவிடம் அதிறே.

"மாழைமான் மடநோக்கி" என்று துடங்கி, "உலகமளந்த பொன்னடியே யடைந்துய்ந்தேன்" என்று தலைக்கட்டுகையாலே, ஒன்பதுபாட்டிலும் ஏகார்த்தத்தைப் பற்றவே சரணாகதியா யிருக்கிறது. ... ... (௯)

---

௮௫ —ஒன்பதாம்பாட்டு. (துளங்கித்யாதி)(ஔபாதிகர்காணும்) என்றது - உம்முடைய அடிக் கொதிப்பாலே ஸ்வாநந்தா([illegible])ர்த்தமாய் விழுகையால் ஸ்வரூபத்துக்குச்சேராது காணுமென்றபடி. (ஸ்வரூபஜ்ஞாநத்தை) என்றது - பாகவத பர்யந்தமான ஸ்வரூபஜ்ஞாநத்தை என்றபடி.

முன்பு பிறந்த ஜ்ஞாநத்தை இல்லையென்று பின்னையும் அபேக்ஷித்த பேறுண்டோவென்ன (ஸ்ரீ நாரதபகவானை யித்யாதி). சரணாகதி ஜ்ஞாநப்ரதமுமாயிருக்குமோ வென்ன வருளிச்செய்கிறார் (ஸர்வாபிமதேத்யாதி).

(குரிசில்) ராஜத்வத்தையுடைய. இவ்வளவு போராதோ வென்ன வருளிச்செய்கிறார் (நாட்டிலித்யாதி).

மேலுக்கவதாரிகை. (அதுக்கித்யாதி). (எதிர்ந்துகொண்டு) வாள்வீசிக்கொண்டு.

தன்பேறு என்கைக்கு ஜ்ஞாபகமேதென்ன (உதாரா இத்யாதி). இத்தால் - ராஜ்யப்ரதா([illegible])நம் பண்ணினதும் தன் பேறாகச் செய்தானென்ற

தாய்த்து. "ஓடு" என்றது குறுகிக் கிடக்கிறதாய், ஓடுகிற - கழிகிற என்று விவக்ஷித்துத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (ராஜ்யேத்யாதி).

“மற்றவற்கு - அங்கொடு நாழிகைகளில் ஏழுநாழிகையோ டிருப்ப வளங்கொள் மந்திரம் அருளிச்செய்தவாறு" என்று அந்வயம் விவக்ஷித்துத், தாத்பர்ய மருளிச்செய்கிறார் (ஏழித்யாதி). அதாவது -(௧) “దేహాసక్తాత్మబుద్ధిర్యదిభవతి పదం సాధువిద్యాత్తృతీయం స్వాతన్త్ర్యాన్ధో యదిస్యాత్ప్రథమ మితర శేషత్వ ధీశ్చేద్ద్వితీయమ్ । ఆత్మత్రాణోన్ముఖశ్చేన్నమ ఇతిచపదం బాన్ధవాభాసలోలశ్శబ్దం నారాయణాఖ్యం విషయచపలధీశ్చేచ్చతుర్థీం ప్రపన్నః-தேஹாஸக்தாத்ம புத்திர்யதிபவதி பதம் ஸாதுவித்யாத்த்ருதீயம் ஸ்வாதந்த்ர்யாந்தோ யதிஸ்யாத் ப்ரதமமிதர சேஷத்வதீஶ்சேத் த்விதீயம் । ஆத்மத்ராணோந்முக ஶ்சேந்நம இதிச பதம் பாந்தவாபாஸ லோலஶ் ஶப்தம் நாராயணாக்க்யம் விஷய சபலதீஶ்சேச் சதுர்த்தீம் ப்ரபந்ந:" என்று பட்டரருளிச்செய்தபடியே - தேஹாத்மாபிமான நிவ்ருத்தியும், ஸ்வாதந்த்ர்ய நிவ்ருத்தியும், அந்ய சேஷத்வ நிவ்ருத்தியும், ஸ்வயத்ந நிவ்ருத்தியும், அபந்துஷு பந்துத்வ ப்ரதிபத்திநிவ்ருத்தியும், விஷய நிவ்ருத்தியும் ஆகிற ஆறும், * நமஸ்ஸிலார்த்தமான பாகவதசேஷத்வமாகிற அர்த்தமொன்றும் ஆகிற ஏழர்த்தத்தோடே நடக்குங்காலத்தில் இருக்கும்படி யென்கை·

(அழகு) என்றது - போக்யதையைப் பற்ற. நம்பியோடே சேர்ந்ததுக்கு ஸூசகமென்னென்ன வருளிச்செய்கிறார் (பதிவ்ரதை யித்யாதி). (அலைவலை) பகுஜல்பர்கள் என்றபடி. ஸ்வரூபஜ்ஞானத்தை நீயுண்டாக்க வேணும் என்று ப்ரார்த்திக்கிறவர், "அடியேன்" என்கிற தென்னென்ன வருளிச்செய்கிறார் (இவருடைய வித்யாதி). வ்யவஹார ப்ராசுர்யமென்று கருத்து.

(ஏகார்த்தத்தை) என்றது-பிராட்டி புருஷகாரமாகச் சரணம் புகுகிற த்வயத்தோ டுண்டான ஏகார்த்தத்தை யென்கை. ... ... (௯)

மூ.—மாட மாளிகை சூழ் திருமங்கை
மன்னனொன்னலர் தங்களை வெல்லும்
ஆடல்மா வலவன் கலிகன்றி
அணிபொழில் திருவரங்கத்தம்மானை
நீடு தொல்புகழாழி வல்லானை
எந்தையை நெடுமாலை நினைந்த
பாடல் பத்திவை பாடுமின் தொண்டீர்
பாட நும் மிடைப் பாவம் நில்லாவே. (௧௦)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

---

(௧) அஷ்டஶ்லோகி-௪.

பதம்.	உரை.	பதம்.	உரை.
மாடம்	மண்டபங்களாலும்	புகழ்	கீர்த்தியையுடைய
மாளிகை	க்ருஹங்களாலும்	ஆழி	திருவாழியை
சூழ்	சூழப்பட்ட	வல்லானை	ஆளுமவனாய்,
திருமங்கை	திருமங்கைக்கு	எந்தையை	எனக்குஸ்வாமியாய்,
மன்னன்	ராஜாவாய்,	நெடு	எல்லையில்லாத
ஒன்னலர் தங்களை	சத்ருக்களை	மாலை	ஆஸ்ரித வ்யாமோஹத்தை யுடையனான அழகிய மணவாளனை
வெல்லும்	ஜயிக்குமவராய்,	நினைந்த	அநுபவித்து அதிலுண்டான
ஆடல் மா	ஆடல்மா வென்னும் பெயருடைத்தான ஆடாநின்றுள்ள குதிரையை	இவை பத்து பாடல்	இப்பத்துப் பாசுரங்களையும்,
வலவன்	நடத்த வல்லவராய்,	தொண்டீர்	பாகவதர்களே!
கலிகன்றி	பாபநிவர்த்தகரான ஆழ்வார்,	பாடுமின்	சொல்லுங்கள்,
அணி	அலங்காரமான	பாட	(இவற்றைச்) சொல்லவே
பொழில்	சோலைகளையுடைய	நும்மிடை	உங்களிடத்தில்
திருவரங்கத்து	திருவரங்க மென்னும் திவ்யதேசத்துக்கு	பாவம்	ப்ராப்ய விரோதியான பாபங்கள்
அம்மானை	ஸ்வாமியாய்,	நில்லா	நசித்துவிடுங்கள்.(௧௦)
நீடு	அபரிச்சிந்நமாய்		
தொல்	அநாதியான		

வ்யா.—பத்தாம்பாட்டு. (மாடமாளிகையித்யாதி). இவருடைய பாவ (𑌭𑌾𑌵)வ்ருத்தி யில்லையேயாகிலும், இவருடைய பாசுரத்தைச் சொல்லவே ப்ராப்தி ப்ரதிபந்தகங்கள் போமென்கிறது.

(மாடமித்யாதி) தமக்கிந்த நன்மையெல்லாம் இவ்வூரிற்பிறப்பாலே வந்ததென்கிறார். இத்தால்-பிறந்தகத்திலேற்றம் சொன்னபடி. "ஆப்தன் சொன்னான்" என்னவேணுமிறே லோகபரிக்ரஹத்துக்கு, (௧) "𑌵𑌾𑌲𑍍𑌮𑍀𑌕𑌿𑌰𑍍𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌋𑌷𑌿𑌃 - வால்மீகிர்பகவாந் ருஷி:" (௨) "𑌸𑌹𑍋𑌵𑌾𑌚 𑌵𑍍𑌯𑌾𑌸𑌃 𑌪𑌾𑌰𑌾𑌶𑌰𑍍𑌯𑌃- ஸஹோவாச வ்யாஸ: பாராசர்ய:" (௩) "குருகூர்ச் சடகோபன்" என்னுமாபோலே. (ஒன்னலரித்யாதி) எதிரிகள், திருமங்கையாழ்வார் அழகுசெண்டேறப் புறப்பட்டவாறே, முழுக்காயாகத் தன்னிலே அவியுமத்தனை. இவர்க்கு சத்ருக்களாகிறார் - ப்ரமாண

---

(௧) ரா-பா-௩-௩அ. (௨) தை- (௩) தி-வாய்-௩-௧௦-௧௧.

தூஷகரான பாஹ்யரும், ப்ரமேயதூஷகரான குத்ருஷ்டிகளுமிறே; இவர்களை வெல்லுகையாவது - (௧) "𑌜𑌿𑌤𑌬𑌾𑌹𑍍𑌯 - ஜிதபாஹ்ய" இத்யாதிப்படியே பாஹ்யருடைய ப்ரதிமையையிட்டுத் திருமதிளுள்ளிட்டவை செய்தும்; ஆகமிகர் பரதேவதையாகச் சொல்லுகிற ருத்ரனுடைய பரத்வத்தை யறுத்து அதுதன்னையுமெடுத்துப் போகட்டாரிறே. (கலிகன்றி) பாபப்ரதிபடர். பகவத்ப்ரபாவங்களை மதித்து சொன்ன பாசுரங்களிறே.

கவிபாட்டுண்ட விஷயமிருக்கிறபடி சொல்லுகிறார்மேல் (அணிபொழில் திருவரங்கத்தம்மானை) என்று. "'மாடமாளிகைசூழ் திருமங்கைமன்னன்' என்றவாறே * அணிபொழில் திருவரங்கம் எங்கே புக்கொளித்தது?" என்றருளிச்செய்தார் பட்டர். (நீடுதொல் புகழாழி வல்லானை) (நீடு - புகழ்) அநுகூலரக்ஷணத்தில் வந்தால் திருவுள்ளத்தையும் முன்னோடி நடத்துகை; (௨) "அறமுயலாழி" என்னக்கடவதிறே. (தொல்புகழ்) இதுதான் ஆகந்துகமல்ல. (ஆழிவல்லானை) திருவாழியை ஸ்வ வசமாக்கிக் கார்யங்கொள்ளவல்லன் என்னுமிதுபோலே காணும் ஏற்றம். (எந்தையை) பரிகாரமுண்டானாலும் பிறர்காரியம் செய்யவேண்டுவதில்லையிறே ப்ராப்தியில்லையாகில்; கார்யம் செய்கைக்கீடான ப்ராப்திசொல்லுகிறது. ப்ராப்தனானாலும் ப்ரயோஜநமில்லையிறே வ்யாமுக்தனன்றாகில்; அதுக்காக(நெடுமாலை) என்கிறது. இத்தால்-ஆஶ்ரயணத்துக்கு ஏகாந்தமான ஸ்வபாவங்கள்சொல்லுகிறது.

(கிளைந்தபாடல்) தந்நிஷ்ட்டரானவர் பாசுரம். அநுபவம் வழிந்து புறப்பட்ட பாசுரமான- சொற்கள். (பத்திமை) முகமறிவார் முத்தைச்சேரக்கோத்துக் கையிலேயிட்டுக் காணுமாபோலே. (பாடுமின் தொண்டீர்) பகவத்விஷயத்தில் சபலராயிருப்பார்! ஹர்ஷப்ரகர்ஷத்தாலே சொல்லுங்கோள். (பாட நும்மிடைப்பாவம் நில்லாவே) பால்குடிக்க நோய்தீருமாபோலே இவருடைய பாசுரத்தைச்சொல்ல ப்ராப்திப்ரதிபந்தகங்கள் தன்னடையே விட்டுப்போம்; (௩) * 𑌸𑌰𑍍𑌵𑌪𑌾𑌪𑍇𑌭𑍍𑌯𑍋 𑌮𑍋𑌕𑍍𑌷𑌯𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 - ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமிபோலே. "நீடுதொல் புகழாழிவல்லானை" என்று * அஹம் சப்தத்தில் சக்தியைப்பற்றச் சொல்லுகிறது. ... ... (௧௰)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

---

(௧) ஸ்ரீ-ஸ்த-௧-௩௬. (௨) தி-வாய்-௨-௧௰-௫. (௩) கீதை-௧௮-௬௬.

அரு.—பத்தாம்பாட்டு. (மாடமித்யாதி) நினைத்துப்பாட என்று விசேஷியாமல் "பாட" என்றதைக் கடாக்ஷித்துத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (இவருடைய வித்யாதி).

தம்முடைய ஏற்றம் சொல்லுவானென்னென்ன வருளிச்செய்கிறார் (ஆப்தனித்யாதி). ஆடாகின்றுள்ள மாவுக்கு வலவன் என்றதுக்குத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (எதிரிகளித்யாதி). „జితబాహ్యజినాది మణిప్రతిమా అపి వైదికయన్నివ రఙ్గపురే। మణిమణ్డప వప్రగణాన్విదధే పరకాలకవిః ప్రణమేమహి తాన్ - ஜிதபாஹ்ய ஜிநாதி மணிப்ரதிமா அபி வைதிகயந்நிவ ரங்கபுரே। மணிமண்டப வப்ரகணாந் விததே பரகாலகவிஃ ப்ரணமேமஹி தாந்".

திருமங்கைக்கு "மாடமாளிகை" என்று விசேஷண மிடுவானென், திருவரங்கத்துக்குப் பொழிலை விசேஷணமாக்குவானென்னென்ன வருளிச்செய்கிறார் (மாடமித்யாதி). (க) "வண்டினமுரலும் சோலை" என்கிற சோலை வாய்ப்பிலே ஈடுபட்டருளிச் செய்தாரென்று கருத்து. ... (க௦)

ஜீயர் திருவடிகளே சரணம்.

அஞ்சாம்பத்தில் எட்டாந்திருமொழி முடிந்தது.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

அஞ்சாம்பத்து ஒன்பதாந்திருமொழி

கையிலங்கு ப்ரவேசம்.

வ்யா.— பெரியபெருமாள் திருவடிகளிலே ப்ரபத்திபண்ணினார் - கீழிற்றிருமொழியிலே; இப்ப்ரபத்திக்கு பலா(ఫల)வ்யபிசாரமுண்டாயிருக்குமிறே; ஆனாலும், ஈஶ்வரனுக்கு ஸ்வாதந்த்ர்யமென்று ஒன்றுண்டே; கோவிந்தஸ்வாமிக்கு பகவத்ப்ராவண்ய முண்டாயிருக்கச்செய்தேயும், "க்ஷுத்ரவிஷயங்களை அநுபவித்துப் பின்னைநம்பக்கல் வா" என்று விட்டதொன்றுண்டிறே; அப்படியே, உகந்தருளின நிலங்களிலேயாய்த்து வாஸனை; ஆனபின்பு, "உம்முடைய அபிநிவேசாநுரூபமாக எங்கும் புக்கநுபவித்துப் பின்பு நம்பக்கலிலே வாரும்" என்றுவிட, அநந்தரம் திருப்பேரிலேபோய்ப் புக்கநுபவித்து இனிய

(க) தி-மா-கச.

ராய்ப்பேசுகிறார். கோவிந்தஸ்வாமிக்கு க்ஷேத்ரவிஷயங்களிலுண்டான ருசியோபாதியும் போருமாய்த்து இவர்க்கு உகந்தருளின நிலங்களிலே. ... ... *

அரு.—*கையிலங்கு ப்ரவேசம். கீழ்த்திருமொழியில் அஞ்சாம்பாட்டிலும் ஆறாம்பாட்டிலும்-என் கருத்தறிந்து தேஹஸம்பந்தத்தைப் போக்க வேணுமென்றும், அது செய்யுமிடத்தில் உன் பேறாகச் செய்யவேணுமென்றும் ப்ரார்த்தித்திருக்க, சக்திமானானவனங்ஙன் செய்யாமல் போவானென்னென்னும் சங்கையிலே; நம்பேறாக உம் கருத்தறிந்து செய்யவேணுமென்றீராகில், அடி துடங்கி உகந்தருளின நிலங்களில் ப்ராவண்யமுடையராய் நமக்கு முகங்கொடுத்துக்கொண்டு இங்கே சிலநாளடிமை கொள்ளுகை பேறாயிருந்தது என்று திருப்பேரிலே மூட்டினானென்னும் பரிஹாரத்தை யருளிச்செய்துகொண்டு ஸங்கதி யருளிச்செய்கிறார்(பெரியபெருமாளித்யாதி). தன்பேறாகவைக்கையாகிற ஸ்வாதந்த்ர்யத்தின்மேலே ஆஶ்ரிதன் நினைவின்படி செய்கையாகிற பாரதந்த்ர்யமுமொரு ஹேது யுண்டென்கிறார் (கோவிந்தேத்யாதி). ... ... *

மூ.—கையிலங்காழி சங்கன் கருமுகில் திருநிறத்தன்
பொய்யிலன் மெய்யன் தன்தாளடைவரே லடிமையாக்கும்
செய்யலர் கமலமோங்கு செறிபொழில் தென்திருப்பேர்
பையரவணையான் நாமம் பரவி நானுய்ந்தவாறே. (க)

பதம்.	உரை	பதம்.	உரை.
கை	திருக்கையிலே	மெய்யன்	(ஆஶ்ரிதர்க்கு) அவற்றை ப்ரகாசிப்பிக்குமவனாய்,
இலங்கு	விளங்காநின்ற		
ஆழி	திருவாழியையும்		
சங்கன்	ஶ்ரீபாஞ்சஜந்யத்தையுமுடையனாய்,	தன் தாள்	தன் திருவடிகளை
		அடைவரேல்	ஆஶ்ரயித்தார்களாகில்
கரு	இருண்டிருக்கிற	அடிமை ஆக்கும்	(அவர்களைத்தனக்கு) சேஷமாக்கிக் கொள்ளுமவனாய்,
முகில்	மேகம்போன்ற		
திரு	அழகிய	செய்	கழனிகளில்
நிறத்தன்	வர்ணத்தையுடையனாய்,	அலர்	விகஸியாநின்ற
பொய் இலன்	(சாஸ்த்ர ப்ரதிபாதிதமான ஸ்வவைலக்ஷண்யங்களில்) பொய்யில்லாதவனாய்(அப்படிப்பட்ட வைலக்ஷண்யங்களை யுடையனாய்),	கமலம்	தாமரைமலர்களுடைய
		ஓங்கு	ஓக்கத்தையும்
		செறி	நெருங்கியிருக்கிற
		பொழில்	சோலைகளையுமுடைய
		தென்	ஸுந்தரமான
		திருப்பேர்	திருப்பேரென்னும் திவ்ய தேசத்தில்

பை	பரந்த படங்களையுடைய	நாமம்	திருநாமங்களை
அரவு	திருவனந்தாழ்வானை	பரவி	சொல்லி
அணையான்	படுக்கையாக வுடையனான ஸர்வேஶ்வரனுடைய	நான்	நான்
		உய்ந்தஆறு	உஜ்ஜீவித்த ப்ரகாரம்
		ஏ	என்ன ஆஶ்சர்யம்!(௧)

வ்யா.—முதற்பாட்டு. (கையிலங்காழி சங்கன் கருமுகில் திருநிறத்தன்) என்னவுமாம்; அன்றிக்கே, (கையிலங்காழி சங்கம் கருமுகில் திருநிறத்தன்) என்றாகவுமாம். வெறும்புறத்திலே ஆலத்திவழிக்கவேண்டும்படியான கையிலே விளங்காநின்றுள்ள திருவாழியையும் ஸ்ரீ பாஞ்சஜந்யத்தையு முடையவன். (கருமுகில் திருநிறத்தன்)(௨) "ஆழி போல்மின்னி" என்கிறபடியே மேகத்திலே மின்னினாப்போலே யாய்த்து திவ்யாயுதங்களோடே சேர்ந்தவடிவிருப்பது. (பொய்யிலன்) இதரவிஸஜாதீயமான விக்ரஹந்தொடக்கமான வைலக்ஷண்யங்களில் ஓர்த்தவாதசங்கையில்லை. (மெய்யன்) இவையடைய, (௨) "[illegible]-பக்தாநாம்" என்கிறபடியே-ஆஶ்ரிதார்த்தமாக்கி வைக்குமது உண்மையாயிருக்கும். (தன்தானித்யாதி) (௩) "𑌦𑍇𑌹𑌿𑌮𑍇 𑌦𑌦𑌾𑌮𑌿 𑌤𑍇 - தேஹிமே ததாமிதே" என்று ஒரோப்ரயோஜநத்தைக்கொண்டு அகலுகையன்றிக்கே, தன்திருவடிகளுக்கு அஸாதாரணராய் வந்து கிட்டுவர்களாகில், ப்ரயோஜநங்களைக் கொடுத்து அகலவிடாதே நித்யகைங்கர்யத்தைக் கொடுக்கும்.

(செய்யலர்) செய்களானவை நெல்வித்தத் தாமரையாய்த்து விளைவது. செய்களிலே அலராநின்றுள்ள தாமரைகளிலோக்கத்தையும், செறிந்தபொழிலையு முடைத்தாயிருக்கிற தென்திருப்பேரிலே, நிரந்தரபகவதநுபவத்தாலுண்டான ஹர்ஷத்தாலே விகஸிதமான பணங்களையுடைய திருவனந்தாழ்வானைப் படுக்கையாகவுடைய ஸர்வேஶ்வரன் திருநாமத்தை. (பரவிநானுய்ந்தவாறே) ஒருதேசவிசேஷத்திலே போனால் (௪) "𑌅𑌹𑌮𑌨𑍍𑌨𑌮𑌹𑌮𑌨𑍍𑌨𑌮𑍍 - அஹமந்ந மஹமந்நம்" என்றும் (௫) "𑌸𑌹 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌾 - ஸஹப்ரஹ்மணா" என்றும் களித்துச்சொல்லக்கடவ பாசுரத்தை இங்கேவந்து சொல்லி ஒருவன் வாழ்ந்து போம்படியே!. ... ... (௧)

---

(௧) தி-பா-௪. (௨) ஜி-ஸ்தோ-௫. (௩) யஜு-கா-௧-அ-அ.
(௪) தை-ப்ரு-௧௦-௬. (௫) தை-ஆந-௧-௨,

அரு.—முதற்பாட்டு. (கையித்யாதி) கையிலே இலங்காநின்றுள்ள ஆழியென்ன, சங்கமென்ன, இவற்றை யுடையவன். சங்கன் என்று வ்யஸ்தபதமாகவும், கையிலே இலங்காநின்றுள்ள ஆழியென்ன,சங்கமென்ன, கருமுகில்போன்ற திருநிறமென்ன, இவற்றை யுடையவனென்று ஸமஸ்தபதமாகவும் பாடபேதத்தைக்காட்டி, அடைவே அர்த்த மருளிச்செய்கிறார் (கையிலங்கு இத்யாதி வாக்ய பஞ்சகத்தாலே).

(ப்ரஹ்மணாவென்றும்) என்ற வநந்தரம், "சொல்லுகிறபடியே தன்னுடைய போக்யத்வத்தையும் போக்த்ருத்வத்தையு மநுஸந்தித்து" என்று சேஷம்.... ... ... (க)

மூ.—வங்கமார் கடல்களேழும் மலையும் வானகமும் மற்றும்
அங்கண் மாஞாலமெல்லா மமுதுசெய்துமிழ்ந்த வெந்தை
திங்கள் மாமுகிலணவு செறிபொழில் தென்திருப்பேர்
எங்கள் மாலிறைவன் நாமமேத்தி நானுய்ந்தவாறே. (உ)

பதம்.	உரை.
வங்கம்	மரக்கலங்களால்
ஆர்	நிறைந்த
ஏழ்கடல்களும்	ஸப்தஸமுத்ரங்களும்,
மலையும்	ஸப்தகுல பர்வதங்களும்
வானகமும்	ஆகாசமும்,
மற்றும்	அதுக்குமேலே
அம்கண்	அழகிய இடமுடைத்தான
மாஞாலம்	பரந்த பூமியும்(ஆகிய)
எல்லாம்	இவை யெல்லாவற்றையும்
அமுதுசெய்து	(ப்ரளயகாலத்தில்) விழுங்கி
உமிழ்ந்த	(ஸ்ருஷ்டிகாலத்தில்) வெளிப்படுத்தின

பதம்.	உரை.
எந்தை	என்ஸ்வாமியாய்,
திங்கள்	சந்த்ரமண்டலத்தையும்
மாமுகில்	பெரிய மேகமண்டலத்தையும்
அணவு	அளாவியிருக்கிற
செறிபொழில் தென் திருப்பேர்,	
எங்கள்	ஆஶ்ரிதரான எங்கள் விஷயத்தில்
மால்	வ்யாமோஹத்தை யுடையனான
இறைவன்	ஸர்வேஶ்வரனுடைய
நாமம்	திருநாமங்களை
ஏத்தி	ஸ்துதித்து
நான் உய்ந்தஆறு ஏ! (உ)	

வ்யா.— இரண்டாம்பாட்டு. (வங்கமித்யாதி) மரக்கலங்களைக் கடலுக்குச் சிறப்பாக இட்டுச் சொல்லக்கடவது. மரக்கலங்களால் மிக்கிருந்துள்ள கடல்களேழும், பூமிக்கு ஆணியடித்தாப்போலே யிருக்கிற மலைகளும்,அவற்றுக்கு அவகாசப்ரதாநம்பண்ணுகிற ஆகாசமும், மற்றும், இவற்றை வேலியாக உடைத்தாயிருக்கிற பூமிப்பரப்பை

யடைய வயிற்றிலே ப்ரளயாபத்திலே எடுத்துவைத்து, "உள்ளே கிடந்து தளரவொண்ணாது" என்று, நிதியைவிழுங்கி உமிழ்ந்து பார்ப்பாரைப்போலே வெளிநாடு காணஉமிழ்ந்த என்ஸ்வாமி.

(திங்கள்) சந்த்ரபதத்தளவும் மேகபதத்தளவும் செல்ல ஓங்கியிருப்பதாய், செறிந்தபொழிலை யுடைத்தாயிருக்கிற தென்திருப்பேரிலே. (எங்கள்மாலிறைவன் நாமமேத்தி நானுய்ந்தவாறே) நம்போல்வாரான ஆஶ்ரிதர்பக்கலிலே வ்யாமுக்தனாய், வ்யாமோஹமில்லையேயாகிலும் விடவொண்ணாத ப்ராப்தியையுடையனான அவனுடைய திருநாமத்தை ஏத்தி. (நானுய்ந்தவாறே) (௧) "𑌅𑌸𑌨𑍍𑌨𑍇𑌵-அஸந்நேவ" என்கிறபடியே அஸத்கல்பனாய்ப்போன நானுஜ்ஜீவிக்கும்படியே! (௨)

அரு.—இரண்டாம்பாட்டு. (வங்கமித்யாதி) கீழ்ப்பாட்டில் - தன்தாளடைவார்க்குச் செய்த உபக்ருதியை அநுபவித்தவர், அவ்வளவன்றியே தாளடையாதார்க்கும் ஆபத்ஸகனாயிருக்குமென்று அநுபவிக்கிறாரென்று ஸங்கதி.

கீழ்ப்பாட்டில் "நான்" என்றதுக்கு - "தாளடைவர்" என்ற பதத்தைக் கடாக்ஷித்து அவ்விபூதியிலுள்ளாரைப்போலிருந்த நானென்றாராய், இதில் "ஞாலம்" என்ற பதத்தைக் கடாக்ஷித்து இங்குள்ளாரோடொரு கோவையான நானென்றாக்கி அர்த்தமருளிச்செய்கிறார் (அஸந்நேவேத்யாதி). ... ... (௨)

மூ.—ஒருவனை யுந்திப் பூமேலோங்குவித்தாகந்தன்னால்
ஒருவனைச் சாபம் நீக்கி யும்பராளென்று விட்டான்
பெருவரை மதிள்கள் சூழ்ந்த பெருநகரரவணைமேல்
கருவரை வண்ணன் தென்பேர் கருதி நானுய்ந்தவாறே. (௩)

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஒருவனை	அத்விதீயனான ப்ரஹ்மாவை	சாபம்	(அவனுடைய) சாபத்தை
உந்திப்பூமேல்	திருநாபிகமலத்தில்	நீக்கி	போக்கி,
ஓங்குவித்து	உண்டாக்கியும்,	உம்பர்ஆள்	("நீ முன்போலவே) மேலுலகங்களையாளக் கடவாய்"
ஒருவனை	மற்றொருவனான ருத்ரனை	என்றுவிட்டான்	என்று விடைகொடுத்தவனுமாய்,
ஆகம்தன்னால்	தன் திருமார்பிலுள்ள ஸ்வேத பிந்துவினால் (ஸ்வேத பிந்துவை அவன் கையோட்டில் தெறித்து)	பெருவரை	பெரிய மலைகள்போன்ற
		மதிள்கள்	ப்ராகாரங்களாலே
		சூழ்ந்த	சூழப்பட்ட
		பெருநகர்	விசாலமான திருப்பேர்நகரில்

---

(௧) தை-ஆந-௬-௧.

அரவு அணை மேல்	அநந்த சயநத்தின்மேலே
கருவரை	நீலவர்ணமான பர்வதத்தினுடைய
வண்ணன்	வர்ணத்தை யுடையனுமான ஸர்வேஶ்வரனை,
தென்பேர்	அவனெழுந்தருளியிருக்கும் தென்திருப்பேரில் (புக்கு)
கருதி	(அவனை அநுபவிக்க) ஆசைப்பட்டு
	நான் உய்ந்த ஆறு ஏ! (௩)

வ்யா.—மூன்றாம்பாட்டு. (ஒருவனையித்யாதி) தன்னையெண்ணினால் பின்னையொருவரை எண்ணவொண்ணாதபடி யிருப்பானாய், சதுர்த்தசபுவநத்துக்கும் நிர்வாஹகனாயிருக்கிற ப்ரஹ்மாவைத் திருநாபீகமலத்திலேயுண்டாக்கி, திருமார்வில் ஸ்வேதஜலத்தாலே ருத்ரனுக்கு வந்த சாபத்தைப்போக்கி. (உம்பராளென்று விட்டான்) தேவஜாதிக்கெல்லாம் நியந்தாவான மேன்மையிலொன்றும் குறையாதபடி நடத்து என்று விட்டானாய்த்து. உபரிதநலோகங்களை ஆளு என்று விட்டான்.

(பெருவரையித்யாதி) பெருவரையென்னலாம்படியான மதிள்களாலே சூழப்பட்டு, (௧) * கலங்காப்பெருநகரத்தோடொக்கச் சொல்லலாம்படியான பெருநகரிலே திருவநந்தாழ்வான் மேலே ஓரஞ்ஜநகிரிபோலே சாய்ந்தருளினவன். (தென்பேர்கருதி) “அங்கேபுக்கநுபவிக்கவேணும்” என்று மநோரதித்த நானுஜ்ஜீவித்துப் போம்படியே!. (தன்பேர்கருதி) அவ்வடிவழகுக்கு வாசகமான திருநாமத்தைச்சொல்லி ஒருவனுஜ்ஜீவிக்கும்படியே!. ... ... (௩)

அநு.—மூன்றாம்பாட்டு. (ஒருவனித்யாதி) கீழ்ப்பாட்டில் ஞாலத்துக்கெல்லா மாபத்திலே யுதவுகையைச் சொன்னாராய், அதிலு மேற்றமாக (௨) “𑌈𑌶𑍍𑌵𑌰𑍋𑌽𑌹𑌮𑍍 - ஈஶ்வரோஹம்” என்பார்க்கு முட்பட உபக்ருதி பண்ணுமவனென்று அநுபவிக்கிறாரென்று ஸங்கதி.

சப்தார்த்தம் (உபரி யித்யாதி). அர்த்தாந்தரமாதல்.

“பேர்” என்றது- திருப்பதியாக்கி, ஒரு பாடத்துக்கு அர்த்த மருளிச்செய்து, பாடாந்தரத்துக்கு அர்த்த மருளிச்செய்கிறார் (அவ்வடி வித்யாதி). ... ... (௩)

மூ.—ஊனமர் தலை யொன்றேந்தி யுலகெல்லாம் திரியு மீசன்
ஈனமர் சாபம் நீக்கா யென்ன வொண் புனலை யீந்தான்

---

(௧)

(௨) கீதை-௧௬-௧௪.

தேனமர்பொழில்கள் சூழ்ந்த செறிவயல் தென்திருப்பேர்
வானவர்தலைவன் நாமம் வாழ்த்தி நானுய்ந்தவாறே. (௪)

பதம்.	உரை.
ஊன் அமர்	மாம்ஸம் நிறைந்த
ஒன்றுதலை	ஒரு ப்ரஹ்ம கபாலத்தை [ண்டு
ஏந்தி	கையில் தரித்துக்கொ
உலகுஎல்லாம்	ஸமஸ்த லோகங்களிலும்
திரியும்	(பி(ஃ) க்ஷார்த்தமாக) ஸஞ்சரியாநின்ற
ஈசன்	ருத்ரனானவன்,
ஈன் அமர்	“தண்மையை யுடைத்தான [தை
சாபம்	(என்றுடைய) சாபத்
நீக்காய்	(நீ) போக்கவேணும்”
என்ன	என்று சொல்ல,
ஒண்புனலை	(உன் திருமார்பிலுண்டான) அழகிய(சாபத்தைப்போக்கவல்ல) ஸ்வேத ஜலத்தை
ஈந்தாய்	கொடுத்தவனாய் (அக்கபாலத்தில் தெறித்தவனாய்),
தேன் அமர்	வண்டுகள் நிறைந்த
பொழில்கள்	சோலைகளாலே
சூழ்ந்த	சூழப்பட்டதாய்
செறி	நெருங்கிய [ன
வயல்	கழனிகளை யுடையதா
தென்	திருப்பேர்,
வானவர்	நித்யஸூரிகளுக்கு [ய
தலைவன்	ஸ்வாமியானவனுடை
நாமம்	திருநாமங்களை (ச்சொலி)
வாழ்த்தி	ஸ்துதித்து
நான்உய்ந்த ஆறு ஏ!	

(௪)

வ்யா.—நாலாம்பாட்டு. (ஊனமரித்யாதி) மாம்ஸப்ரசுரமாயிருக்கிற தலையோட்டைத்தரித்து, கூறுசெய்த ஊரில் கையும் கைத்தளையுமாய்த் திரிவாரைப்போலே, மதிப்போடே திரிந்த பூமியெல்லாம் தட்டித்திரியும்படியான ருத்ரன், “அவத்யாவஹமாய்த் தண்மையை விளைக்கக்கடவதாயிருக்கிற சாபத்தைப்போக்கவேணும்” என்று திருவடிகளிலே விழுந்து சரணம்புக; திருமார்வில் ஸ்வேதஜலத்தைக்கொடுத்துவிட்டான்.

(தேனித்யாதி) வண்டுகள் மிக்கிருக்கிற பொழிலாலே சூழப்படுவதாய், செறிந்த வயலையுடைத்தான தென்திருப்பேரிலே. (வானவரித்யாதி) பாலைக்குடித்து நோயைப் போக்குவாரைப்போலே *அயர்வறு மமரர்களதிபதி திருநாமத்தைச்சொல்லி ஒருவன் வாழ்ந்துபோம்படியே!. விநாசத்தை பலி(ஃப)ப்பிக்கிலும் விடவொண்ணாத திருநாமமாய்த்து. ... ... (௪)

அரு.—நாலாம்பாட்டு. (ஊனமரித்யாதி) *ஆகந்தன்றொருவனைச் சாபம் தீர்த்தப்ரகாரத்தை ஸப்ரகாரமாக வருளிச்செய்கிறாரென்று ஸங்கதி.

“ஈனமர்” என்றதினர்த்தம் (தண்மையை யித்யாதி).

"உய்ந்தவாறே!" என்கையாலே - உய்யாவிட்டாலும் "தலைவன் நாமம்" என்கையால் போக்யதை விடவொண்ணாதபடியா யிருக்குமென்று விவக்ஷித் தருளிச்செய்கிறார் (விநாசத்தை யித்யாதி) ... ... (௪)

மூ.—வக்கரன் வாய்முன் கீண்ட மாயனேயென்று வானோர்
புக்கரண் தந்தருளா யென்ன பொன்னாகத்தானை
நக்கரி யுருவமாகி நகங்கிளர்ந்திடந்துகந்த
சக்கரச்செல்வன் தென்பேர் தலைவன்றாளடைந்துய்ந்தேனே.

பதம்.	உரை.	பதம்.	உரை.
வக்கரன்	"தந்த வக்ரனுடைய	அரிஉருவமாகி	நரஸிம்ஹ ரூபியாய்க்
வாய்	வாயை	நக்கு	சிரித்து [கொண்டு
முன்	முற்காலத்தில்	கிளர்ந்து	வ்ருத்தியடைந்து
கீண்ட	கிழித்துப்பொகட்ட	நகம்	நகங்களினால்
மாயனே	ஆஶ்சர்ய பூதனே!"	இடந்து	கிழித்துப் பொகட்டு
என்று	என்றுசொல்லிக்கொ	உகந்த	ஸந்தோஷித்தவனாய்
வானோர்	தேவதைகள் [ண்டு	சக்கரம்	ஸுதர்சநத்தினால்
புக்கு	திரண்டுவந்து [யை	செல்வன்	ஶ்ரீமானாய்
அரண் தந்தருளாய்!	(" எங்களுக்கு) ரக்ஷை கொடுத்தருள வேணும்"	தென்பேர்	தென் திருப்பேருக்கு
என்ன	என்று ப்ரார்த்திக்க,	தலைவன்	ஸ்வாமியானவனுடை
பொன்னாகத்தானை	(அவர்களுக்கு விரோதியான) ஹிரண்யனை	தாள்	திருவடிகளை [ய
		அடைந்து	ஆஶ்ரயித்து
		உய்ந்தேன்	உஜ்ஜீவித்தேன். (௫)

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (வக்கரனித்யாதி) தேவர்களெல்லாரையும் நெருக்கி நலிந்துதிரிந்தானாய்த்து தந்தவக்ரனென்பானொருஅஸுரன்; அவன்வாயை முன்பொருகாலத்திலே அநாயாஸேந கிழித்துப் பொகட்ட ஆஶ்சர்ய சக்தியுக்தனே! என்று. (வானோர்) தேவர்களடங்கலும் திரண்டு "எங்களுக்கொருபுகல் தந்தருளவேணும்" என்ன. (பொன்னாகத்தானை) ஹிரண்யனை, நரஸிம்ஹவேஷத்தைக்கொண்டு, நக்கு - சிரித்து, பெரியகிளர்த்தியோடே திருவுகிராலே பிளந்து, "ப்ரஹ்லாதன்விரோதி போகப்பெற்றோம்" என்று உகந்த. (சக்கரச்செல்வன்) ஹிரண்யனுடல் திருவுகிருக்குப் போந்ததில்லை; பின்னை, திருவாழி, அழகுக்குப் பத்திரம் கட்டுவாரைப்போலே யாய்த்து. (தென்பேரித்யாதி) தென்திருப்பேரிலே நித்யவாஸம்பண்ணுகிற ஸர்வாதிகனான ஸர்வேஶ்வரனைக் கிட்டி உஜ்ஜீவிக்கும்படியே! ... (௫)

அரு.—அஞ்சாம்பாட்டு. (வக்கரனித்யாதி) கீழிரண்டுபாட்டிலும் ப்ரதாநரான இருவர்க்கு முபகரித்தபடி சொன்னாராய், இதில், தேவர்க்கு

உபகரித்தவன் ஒரு அர்ப்ப(மர்ப்)கனுக்கு முதவினானென்று கொண்டாடி யநுபவிக்கிறாரென்று ஸங்கதி.

சக்கரம் செல்வத்துக்கு உடலாய்த்தென்கிறார் (ஹிரண்ய னித்யாதி). (பத்திரம்) கத்தி. ... ... (௫)

மூ.—விலங்கலால் கடலடைத்து விளங்கிழைபொருட்டு வில்லால்
இலங்கை மாநகர்க்கிறைவ னிருபது புயந்துணித்தான்
நலங்கொள் நான்மறை வல்லார்களோத்தொலி யேத்தக் கேட்டு
மலங்குபாய்வயல் திருப்பேர் மருவி நான் வாழ்ந்த வாறே. (௬)

பதம்.	உரை.
விளங்கு	ப்ரகாசியாநின்ற
இழைபொருட்டு	ஆபரணங்களை யுடைய பிராட்டிக்காக
விலங்கலால்	மலைகளினால்
கடல்	ஸமுத்ரத்தை
அடைத்து	அணைசெய்து,
மா இலங்கை நகர்க்கு	பெரிய லங்காநகரத்துக்கு
இறைவன்	ஸ்வாமியான ராவணனுடைய
இருபதுபுயம்	இருபது தோள்களை
வில்லால்	(தன்) வில்லைவளைத்து
துணித்தான்	சேதித்தவனை,
நலம்கொள்	ஸதாசாரங்களை யுடையராய்
நால்மறை	நாலுவேதங்களையும்
வல்லார்கள்	அப்யஸிக்க வல்லரான ப்ராஹ்மணர்களுடைய
ஏத்த	உச்சமாக உச்சரிக்கப்பட்ட
ஓத்துஒலி	வேதகோஷத்தை
கேட்டு	கேட்டு
மலங்கு	மத்ஸ்யங்களானவை
பாய்	துள்ளி அப்புறம் போகாநின்ற
வயல்	கழனிகளையுடைய
திருப்பேர்,	
மருவி	(ஸேவிக்க) ஆசைப்பட்டு
நான்	நான்
வாழ்ந்த	உஜ்ஜீவித்த
ஆறு ஏ!	

(௬)

வ்யா.—ஆறாம்பாட்டு. (விலங்கல்) நீரிலே ஆழக்கடவதான மலைகளாலே கடலையடைத்து, விளங்காநின்றுள்ள ஆபரணத்தாலே அலங்க்ருதையான பிராட்டியுடைய ஒப்பனையிலே தோற்று, க்ஷத்ரியத்வத்துக்கு ஏகாந்தமான வில்லாலே, "ப்ரஹ்மாஸ்த்ரத்துக்கு மழியாத லங்கையன்றோ எனக்குப் படைவீடு, நானிவ்வூருக்கு நிர்வாஹகனன்றோ" என்று அபிமாநித்திருக்கிற ராவணனுடைய, அவ்வூர்க்குக் கணையம்போலே யிருக்கிற தோள்களைத் துணித்தானாய்த்து.

(நலங்கொள்) நிர்த்தோஷமாய் நாலுவகைப்பட்டிருந்துள்ள வேதங்களையு மதிகரித்திருக்கிற ப்ராஹ்மணரென்னுதல்; ஆசாரத்தால்

மிக்கு, நாலுவகைப்பட்டிருக்கிற வேதங்களும் கைவந்திருக்கிற ப்ராஹ்மணரென்னுதல். (ஓத்தொலி யேத்தக்கேட்டு) அவர்கள் உச்சமாக உச்சரிக்கிற த்வநியைக்கேட்டு, "நம்மைக்குறித்துண்டான ஆரவாரம்" என்று மலங்குகள் பாயாநின்றுள்ள வயலை யுடைத்தான திருப்பேரை மருவி நான் வாழ்ந்தவாறே. ... ... (௬)

அரு.—ஆறாம்பாட்டு. (விலங்கலித்யாதி) கீழ் ஓரர்ப்பகனுக்கு உதவினான், அவ்வளவன்றிக்கே, ஒரு பெண்பிள்ளைக்காக அகடிதங்களைச் செய்தானென் றநுபவிக்கிறாரென்று ஸங்கதி.

(கணையம்) உழலைத்தடி - ரக்ஷகமென்கை.
(மலங்கு) மத்ஸ்யவிசேஷம். ... ... (௬)

மூ.—வெண்ணெய் தானமுதுசெய்ய வெகுண்டு மத்தாய்ச்சியோச்சிக்
கண்ணியார் குறுங்கயிற்றால் கட்ட வெட்டென்றிருந்தான்
திண்ண மாமதில்கள் சூழ்ந்த தென்திருப்பேருள் வேலை
வண்ணனார்நாம நாளும் வாய்மொழிந்துய்ந்தவாறே. (௭)

பதம்.	உரை.
தான்	யசோதை தபஸ்ஸு பண்ணிப்பெற்ற தான்
வெண்ணெய்	நவநீதத்தை [வில்
அமுதுசெய்ய	அமுதுசெய்தவள
ஆய்ச்சி	தாயான யசோதை
வெகுண்டு	கோபித்து
மத்து	தயிர்கடைகிறமத்தை
ஓச்சி	வீசியெறிந்து
கண்ணி	முடிகளினால்
ஆர்	பூர்ணமாய்
குறு	சிறிதான
கயிற்றால்	தாம்பினால்
கட்ட	பந்திக்க [து
வெட்டென்று	(அதுக்கு) ஸம்மதித்

பதம்.	உரை.
இருந்தான்	இருந்தவனாய்,
திண்ணம்	த்ருடமாய்
மா	பெரிதான
மதில்கள்	ப்ராகாரங்களாலே
சூழ்ந்த	சூழப்பட்ட
தென்	திருப்பேருள்,
வேலை	ஸமுத்ரம்போன்ற
வண்ணனார்	வர்ணத்தை யுடையனானவனுடைய
நாமம்	திருநாமங்களை
நாளும்	ப்ரதிதினமும்
வாய்மொழிந்து	சொல்லி
உய்ந்த ஆறு ஏ! (௭)	

வ்யா. — ஏழாம்பாட்டு. (வெண்ணெயித்யாதி) "கவ்யும் பாழ்போகவொண்ணாது, இத்தை உபஜீவிக்கைக்கொரு பிள்ளைவேணும்" என்றாய்த்து இவள் நோன்பு நோற்றுப்பெற்றது. ஆனாலும், அது ஸாத்மியாதபடி அமுதுசெய்யப்புக்கால் ஸம்வதியார்களே; அவர்கள்

மறைக்க மறைக்க இவனுக்கு அதிலே ஆதரம் மிகுமே, தன் தாரக ([illegible]) மிழக்கமாட்டானே. அவர்கள் தங்களுடம்பு நோவக்கடைந்து உறிகளிலே சேமித்துவைத்த வெண்ணெயை அமுதுசெய்ய. (வெகுண்டு) சீறி, யசோதைப் பிராட்டியானவள் மத்தைக்கொண்டு அடிக்கக் கோலி, பல பிணைகளையுடைத்தாய்க் குறளாயிருந்துள்ள தாம்பாலே கட்ட; தாம்பை நெடுகப்பண்ண வொண்ணாதே, திருமேனியிலே இடங்காணு மித்தனையிறே; அப்படிக்கட்ட. (வெட்டென்றிருந்தான்) "சாமாணியனென்று இடுமீடெல்லா மிடவமையும்" என்றிருப்பாரைப்போலே, வேறொரு ஹேதுவைச்சொல்லி யன்றியே இது சொல்லியே நம்மைக் கட்டுவதே! என்று இசைந்திருந்தானாய்த்து.

(திண்ணமித்யாதி) அரணாகப் போரும்படியான மதிள்களாலே சூழ்ந்த தென் திருப்பேருள். (வேலையித்யாதி) கடல்போலே ஶ்ரமஹரமான வடிவை யுடையரானவருடைய. அவ்வடி வழகுக்கு வாசகமான திருநாமங்களைச் சொல்லி ஒருவ னுஜ்ஜீவிக்கும்படியே! ... (எ)

அரு.—ஏழாம்பாட்டு. (வெண்ணெ யித்யாதி) *நாரீணா முத்தமைக்காக அகடிதங்களைச் செய்த வளவன்றிக்கே, இடைப்பெண்களுக் கெளியனாய்க் கட்டவு மடிக்கவு மானானென் றநுபவிக்கிறாரென்று ஸங்கதி.

"தான்" என்றதுக்குக் கருத்தை யருளிச்செய்கிறார் (கவ்யமித்யாதி, மாட்டானே) என்னுமளவும். "ஓச்சி" என்றதினர்த்தம் (அடிக்கக்கோலி) என்றது. ... ... (எ)

மூ—அம்பொனாருலகமேழு மறிய வாய்ப்பாடி தன்னுள்
கொம்பனார்பின்னை கோலம் கூடுதற் கேறு கொன்றான்
செம்பொனார்மதிள்கள் சூழ்ந்த தென்திருப்பேருள் மேவும்
எம்பிரான்நாம நாளுமேத்தி நானுய்ந்தவாறே. ... (அ)

பதம்.	உரை.	பதம்	உரை.
அம்	அழகிய	கொம்பு	வஞ்சிக்கொம்பு போன்ற சரீரத்தையுடைய
பொனார்	ஸ்வர்ணத்தோடொத்த(ஶ்லாக்க்யமான)		
உலகம்ஏழும்	ஸப்தலோகங்களும்	பின்னை	நப்பின்னைப் பிராட்டியினுடைய
அறிய	அறியும்படியாக,		
ஆய்ப்பாடி தன்னுள்	திருவாய்ப்பாடியிலுள்ள	கோலம்	அழகோடு
		கூடுதற்கு	சேர்கைக்காக

ஏறு	ருஷபங்களை	மேவும்	பொருந்தியிருக்கிற
சொன்றான்	கொன்றவனாய்,	எம்பிரான்	நம் ஸ்வாமியுடைய
செம்	சிவந்த	நாமம் நாளும் ஏத்திநான் உய்ந்த	
பொனார்	பொன்னோடொத்த[ள் மதிள்கள்சூழ்ந்த தென் திருப்பேரு	ஆறு, ஏ!	(அ)

வ்யா.—எட்டாம்பாட்டு. (அம்பொனித்யாதி) ஓரிடைச்சேரி மாத்ரமன்றிக்கே, ஶ்லாக்யமான ஏழுலகங்களுமறிய, திருவாய்ப்பாடியிலே, வஞ்சிக்கொம்புபோலே யிருக்கிற வடிவையுடைய நப்பின்னைப் பிராட்டியுடைய ஒப்பனையோடே சேருகைக்காக, ருஷபங்களேழையும் நிரஸித்தான். தர்ஶநீயமான மதிள்களாலே சூழப்பட்ட திருப்பேரிலே நித்யவாஸம் பண்ணுகிற எனக்கு உபகாரகரானவருடைய திருநாமத்தை ஏத்தி நானுய்ந்தவாறே! ... ... (அ)

அரு.—எட்டாம்பாட்டு. (அம்பொனித்யாதி) ஓரிடைச்சிக்குப் பிள்ளையாய்க் கட்டுண்ட வளவன்றிக்கே, ஒரிடைச்சிக்காகத் தன்னைப் பேணாதே கருமாரி பாய்வாரைப்போலே எருதுகளின் கொம்பிலே பாய்ந்து கொன்று வேறொரு கொம்பைக் கைப்பற்றினானென்றநுபவிக்கிறாரென்று ஸங்கதி.

அழகிய பொன்போ லுலகமென்று சப்தார்த்தமாய், தாத்பர்ய மருளிச்செய்கிறார் (ஓரித்யாதி) ... ... (அ)

மூ.—நால்வகை வேத மைந்து வேள்வி யாறங்கம் வல்லார்
மேலை வானவரில் மிக்க வேதியராதிகாலம்
சேலுகள் வயல் திருப்பேர்ச் செங்கண் ‡மாலோடும் வாழ்வார்
சீலமா தவத்தர் சிந்தையாளியென் சிந்தையானே. (௯)

பதம்.	உரை.	பதம்.	உரை. [ய்,
நால்வகை	நாலுவிதமான	வேதியர்	ப்ராஹ்மணோத்தமரா
வேதம்	வேதங்களிலும்	ஆதிகாலம்	ஸ்ருஷ்டிகாலம் துட
ஐவேள்வி	பஞ்சமஹாயஜ்ஞங்களிலும்	சேல்	கயல்கள் [ங்கி,
ஆறுஅங்கம்	வ்யாகரணம் முதலிய ஆறுஅங்கங்களி	உகள்	துள்ளாநின்ற
வல்லார்	ஸமர்த்தராய் [லும்	வயல்	கழனிகளையுடைய
மேலை	மேலுலகத்திலுள்ள[ல்	திருப்பேர்	திருப்பேரில்
வானவரில்	தேவதைகளிற்காட்	செம்	சிவந்த
மிக்க	அதிசயித்தவராய்,	கண்	நேத்ரங்களையுடைய
		மாலோடும்	ஸர்வேஶ்வரனோடு கூட

---

‡ "மாலொடும்," "மாலோடும்" என்று இரண்டுபாடமும் காண்கிறது யதாஸம்ப்ரதாய மநுஸந்தேயம். ஆத்யம், லக்ஷணாநுரூபம்.

வாழ்வார்	நித்யவாஸம் பண்ணுமவராய்	ஆளி	தனக்கு வாஸஸ்த்தாநமாகக் கொண்டு ஆளுமவன்
சீலம்	ஸௌசீல்யத்தையும்		
மா	ஶ்லாக்க்யமான	என்	என்னுடைய
தவத்தர்	தபஸ்ஸையுமுடையரானவர்களுடைய	சிந்தையான்	ஹ்ருதயத்தில் நித்யவாஸம் பண்ணுகிறான். (௯)
சிந்தை	ஹ்ருதயத்தை		

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (நால்வகை) நாலுவகைப்பட்ட வேதம், பஞ்சமஹாயஜ்ஞங்கள், அங்கங்களாறும், இவற்றில் வந்தால் ப்ரஹ்மாதிகளிலுங் காட்டில் கைவந்திருக்கிற ப்ராஹ்மணரானவர்கள். ஸ்ருஷ்டிகாலந்துடங்கி ஸர்வேஶ்வரனோடொக்கக் குடியேறி ஜீவித்துப் போருகிறவர்களாய்த்து. சீலகுணப்ரசுரராய் மிக்க தபஸ்ஸையுடையரா யிருக்கிற ப்ராஹ்மணர் ஹ்ருதயத்தைத் தனக்காக்கிக்கொண்டிருக்கிறவன் என்னுடைய ஹ்ருதயஸ்த்தனானான். ... (௯)

அநு.—ஒன்பதாம்பாட்டு. கீழ்ப்பாட்டிற் சொன்ன பெண்பித்தனுமவன் கிடீர்! ஸகல வித்யாதிகரானவர்க்கு உபாஸ்யன், அவன் அவர்களைச் சிந்தைவிடாதாப்போலே தம் திருவுள்ளத்தில் குடியிருந்தானென்று களிக்கிறாரென்று ஸங்கதி.

(என்னுடைய ஹ்ருதயஸ்த்த னானான்) என்றத்தாலே - கீழ்ச்சொன்ன ஸௌசீல்யத்திலும் மிக்க சீலமென்று கருத்து. ... ... (௯)

மூ.—வண்டறை பொழில் திருப்பேர் வரியரவணையிற் பள்ளி
கொண்டுறைகின்ற மாலைக் கொடிமதிள் மாட மங்கை
திண்டிறல் தோள் கலியன் செஞ்சொலால் மொழிந்தமாலை
கொண்டிவை பாடியாடக் கூடுவர் நீள்விசும்பே. ... (௧௦)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

* * *

பதம்.	உரை.	பதம்.	உரை.
வண்டு	வண்டுகள்	அணையில்	படுக்கையில்
அறை	சப்தியாநின்ற	பள்ளிகொண்டு	சயநித்து
பொழில்	சோலைகளையுடைய	உறைகின்ற	நித்யவாஸம் பண்ணுகிற
திருப்பேர்	திருப்பேரென்னும் திவ்யதேசத்தில்	மாலை	ஸர்வேஶ்வரன் விஷயமாக,
வரி	மச்சங்களையுடைய		
அரவு	ஆதிசேஷனாகிற		

கொடி	கொடிகள்கட்டின	சொலால்	தமிழினால்
மதிள்	ப்ராகாரங்களையும்	மொழிந்த	அருளிச்செய்த
மாடம்	க்ருஹங்களையுமுடைய	இவை மாலை	இந்தப்பாசுரங்களை
மங்கை	திருமங்கைக்கு நிர்வா	கொண்டு	அப்யஸித்து
	ஹகராய்,	பாடி	காநம்பண்ணி[னாகில்
திண்	த்ருடமான	ஆட	நர்த்தநம் செய்தார்க
திறல்	பலமுடைய	நீள்	விசாலமான
தோள்	புஜங்களையுடையரான	விசும்பு	பரமபதத்தை
கலியன்	ஆழ்வார் [ரமான)	கூடுவர்	சேரப்பெறுவர்கள்.
செம்	அழகிய {ஸர்வாதிகா		

வ்யா.—பத்தாம்பாட்டு. (வண்டறையித்யாதி) வண்டுகள் மதுபாந மத்தமாய்க்கொண்டு த்வநியாநின்றுள்ள பொழிலை யுடைத்தான திருப்பேரில், வரிகளையுடையனான திருவநந்தாழ்வானைப் படுக்கையாகக் கொண்டு கண்வளர்ந்தருளுகிற ஸர்வேஶ்வரனைக் கவிபாடிற்று. கொடியோடு கூடின மதிள்களையும் மாடங்களையு முடைத்தான திருமங்கைக்கு நிர்வாஹகராய், திண்ணிய திறலையுடைத்தான தோளையுடையரான ஆழ்வார். (செஞ்சொலால் மொழிந்தமாலை) அதிக்ருதாதிகாரமான வேதார்த்தத்தை ஸர்வாதிகாரமான சொல்லாலே அருளிச்செய்தாராய்த்து. இவற்றைக்கொண்டு பாடுவ தாடுவதாக இவ்வநுபவத்துக்கு மேலே நித்யாநுபவம் பண்ணப்பெறுவர். ... (௧௦)

பெரியவாச்சான் பிள்ளை திருவடிகளே சரணம்.

அரு.—பத்தாம்பாட்டு. (வண்டித்யாதி). "செவ்வியசொல்" என்றதுக்குத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (அதிக்ருதேத்யாதி). ... (௫௦)

ஜீயர் திருவடிகளே சரணம்.

அஞ்சாம்பத்தில் ஒன்பதாந்திருமொழி முடிந்தது.

ஆழ்வார்திருவடிகளே சரணம்.

அஞ்சாம்பத்து பத்தாந்திருமொழி
தீதறுப்ரவேசம்.

வ்யா.—(௧)"தானுகந்த ஊரெல்லாம் தன் தாள்பாடி" என்றிறே இவர்பாரிப்பு. (உ) "𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍 𑌕𑌾𑌮𑌾𑌨𑍍-ஸர்வாந் காமாந்" என்னக் கடவ

---

(௧) தி-நெ-௬.

(உ.) தை-ஆந-௧-௨.

திறே. ஸர்வாந்தராத்மாவாய், ‡ஸர்வாபத்துக்களையும் போக்கி உதவுமவனாய், ஆஶ்ரிதர்க்கு அபுநராவ்ருத்தி லக்ஷணமான மோக்ஷத்தைக் கொடுக்கும் ஸ்வபாவனான ஸர்வேஶ்வரன் திருநந்திபுரவிண்ணகரிலே வந்து ஸந்நிஹிதனானான், அங்கேபோ யநுபவிப்போமென்று திருவுள்ளத்தோடே கூட்டுகிறார். … … … … *

அரு.—தீதறுப்ரவேசம்.—திருப்பேர்நகரானை அநுபவித்தது அமையாதோ, திருநந்திபுரவிண்ணகரத்தை நண்ணுவானென்னென்ன வருளிச்செய்கிறார் (தானாகர்த வித்யாதி). அப்படி எல்லா மபேக்ஷிதமா யிருக்குமோ வென்ன; த்ருஷ்டாந்ததயா ப்ரமாணம் காட்டுகிறார் (ஸர்வாநித்யாதி). எல்லாப்பாட்டுக்களிலும் பலித்த வர்த்தத்தை யருளிச்செய்கிறார் (ஸர்வாந்தராத்மாவா யித்யாதி).… … … … … *

மூ.—தீதறுநிலத்தொடெரி காலினொடு நீர் கெழு விசும்புமவையாய்
மாசறு மனத்தினொடுறக்க மொடிறக்கை யவையாயபெருமான்
தாய்செறவுளைந்து தயிருண்டு குடமாடு தடமார்வர் தகைசேர்
நாதனுறைகின்ற நகர் நந்திபுரவிண்ணகரம் நண்ணுமனமே. (௧)

பதம்.	உரை.	பதம்.	உரை.
தீதுஅறு	நிர்த்துஷ்டமான	செற	கோபிக்க
நிலத்தொடு	பூமியோடுகூடின	உளைந்து	அதுக்குப்பயந்துஅக
எரி	அக்நியும்		ம்குழைந்தும் [ரை
காலினொடு	காற்றோடுகூடிய	தயிர்	(அதுக்குமுன்னே)தயி
நீர்	ஜலமும்	உண்டு	அமுதுசெய்து [ய்,
கெழு	ஸம்ருத்தமான(இவற்	குடம்ஆடு	குடக்கூத்தாடினவனா
	றுக்கெல்லாம் இட	தடம்	பரந்த [னாய்
	ம் கொடுக்கும	மார்வர்	திருமார்பையுடைய
விசும்பும்	ஆகாசமும் [தான)	தகைசேர்	ஸ்வாபாவிகமான கல்
அவையாய்	ஆகிய பஞ்சபூதங்களு		யாணகுணபூர்ண
	க்கும்அந்தராத்மா		னான
மாசுஅறு	குற்றமற்ற [வாய்,	நாதன்	ஸ்வாமியானவன்
மனத்தினொடு	மநஸ்ஸோடும்	உறைகின்ற	நித்யவாஸம்பண்ணு
உறக்கமொடு	ஸுஷுப்தி ஸ்வப்நங்		கிற
	களோடும் கூடின	நந்திபுர விண்	நந்திபுர விண்ணகர
இறக்கை	மரணம்	ணகரம்	மென்ற திருநாமத்
அவையாய	ஆகிய அவற்றுக்கும்		தையுடைய
	நிர்வாஹகனான	நகர்	திவ்யதேசத்தை
பெருமான்	ஸர்வேஶ்வரனாய்,	மனமே	ஓ மநஸ்ஸே!
தாய்	தாயான யசோதை	நண்ணு	கிட்டப்பாராய். (௧)

---

‡ (பா) ஸர்வபாபங்களையும்.

வ்யா.—முதற்பாட்டு. (தீதறுவித்யாதி) சேதநர்க்கு போக(𑌭𑍋𑌗) மோக்ஷங்களை விளைத்துக்கொள்ளலா யிருக்கையாலே குற்றமற்றிருக்கிற ப்ருதிவ்யாதி பூதபஞ்சகத்துக்கு மந்தராத்மாவாய், நிர்த்தோஷமான மநஸ்ஸோடேகூட ஸ்வப்ந ஸுஷுப்திகள் மரணம் என்று சொல்லப்படுகிற இவற்றுக்கு நிர்வாஹகனா யிருக்கிற ஸர்வேஶ்வரன்.

அந்தராத்மதயா நின்று ரக்ஷகனாம்படி சொல்லிற்று - கீழ்; கண்ணுக் கிலக்காம்படி வந்தவதரித்து ரக்ஷகனாம்படி சொல்லுகிறது மேல். (தாயித்யாதி) தாயான யசோதைப் பிராட்டி சீறித் தாம்பெடுக்க, அதுக்கு முன்னே படுமது சொல்லுகிறது. எல்லாம் செய்தாலும் அவன் தாரகத்தை விட்டிரானே. (தயிருண்டு)ஸ்வாநுபவத்தாலே த்ருப்தனாயிருக்கக்கடவவயன் அநுகூல ஸ்பர்ஶமுள்ள வெண்ணெயை புஜிக்கப் பெறுகையாலே ஹ்ருஷ்டனாய், அந்த ஹர்ஷமெல்லாம் தோற்றும்படி அதுக்குப் போக்கு வீடாகக் குடக்கூத்தாடி, அந்த பௌஷ்கல்யந்தான் வடிவிலே தோற்ற இருக்கிறவர். (தகைசேர்நாதன்) (க) ““𑌤𑍍𑌰𑍈𑌲𑍋𑌕𑍍𑌯 𑌮𑌪𑌿 𑌨𑌾𑌥𑍇𑌨 𑌯𑍇𑌨 𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌨𑌾𑌥𑌵𑌤𑍍𑌤𑌰𑌮𑍍-த்ரைலோக்யமபி நாதோ யேந ஸ்யாந் நாதவத்தாம்” என்கிறபடியே - ஒதுங்குவாரளவுபட்டு இத்தோள்நிழலே மிக்கிருக்கிற ஸர்வேஶ்வரன், அவதாரங்கள்போலே தீர்த்தம் ப்ரஸாதியாதே நித்யவாஸம் பண்ணுகிற.... ... (க)

அரு.—முதற்பாட்டு. (தீதித்யாதி) அல்பாஸ்த்திரத்வாதி தோஷங்களிருக்க “தீதறு” என்னலாமோ வென்ன வருளிச்செய்கிறார் (சேதநர்க்கித்யாதி). உறக்கம் சொன்னபோதே ஸ்வப்நம் அர்த்தஸித்தமென்றருளிச்செய்கிறார் (ஸ்வப்ந ஸுஷுப்திகள்) என்று.

“தடமார்வர்தகை” என்றத்தைப் பற்ற வருளிச்செய்கிறார் (த்ரைலோக்யமபி இத்யாதி). “தகை” என்று-ஸ்வபாவமாய், அத்தால் கல்யாண குணங்கள் சேர்ந்த நாதனென்று கருத்து. ... ... (க)

மூ.—

உய்யும்வகையுண்டு சொனசெய்யி லுலகேழு மொழியாமைமுனநாள்
மெய்யினளவே யமுது செய்யவல வையனவன் மேவுநகர்தான்
மைய வரிவண்டு மதுவுண்டு கிளையோடு மலர்கிண்டி யதன்மேல்
நைவளநவிற்று பொழில் நந்தி புரவிண்ணகரம் நண்ணு மனமே. (உ)

(க) ரா-அயோ-உ-க௩.

பதம்.	உரை.
சொனசெய்யில்	சொன்னத்தைச்செய் [யப்புகில்
உய்யும்வகை	உஜ்ஜீவநோபாயமானது
உண்டு	உண்டு, (அதேதென்னில்,)
உலகுஏழும்	ஸப்தலோகங்களையும்
ஒழியாமை	ஒன்றும் தவறுதபடி
முனநாள்	முற் (ப்ரளய)காலத்தில்
மெய்யினளவே	திருமேனி யளவிலே (அதிக பரிமாணம் தோன்றுதபடி)
அமுதுசெய்யவல	அமுதுசெய்யவல்ல
ஐயன்	நிருப்பாதிகபந்துவான
அவன்	அந்த ஸர்வேஶ்வரன்
மேவும்	நித்யவாஸம் பண்ணு
நகர்தான்	திவ்யதேசமாய், [கிற
மைய	நீலவர்ணமாய் [தான
வரி	ரேகைகளையுடைய
வண்டு	வண்டுகளானவை
மது	தேனை
இளையோடு	புத்ரபௌத்ராதி பந்துக்களோடேகூட
உண்டு	பாநம்பண்ணி
மலர்	பூக்களை
கிண்டி	கோதி,
அதன்மேல்	அதுக்குமேலே
நைவளம்	குறிஞ்சிராகத்தை
நவிற்று	பாடாநின்றுள்ள
பொழில்	சோலைகளையுடையதான

நந்திபுரவிண்ணகரம் நண்ணு மனமே! (௨)

வ்யா.—இரண்டாம்பாட்டு. (உய்யுமித்யாதி) நான் சொன்னவற்றைச் செய்யப்பார்க்கில், நமக்கினி உஜ்ஜீவிக்கைக்கு உபாயமுண்டு. "முடிந்துபோ மித்தனையன்றோ" என்றிருக்கவேண்டா. ஸகலலோகங்களிலு மொன்றும் பிறிகதிர் படாதபடி, முன்பொருநாள் ப்ரளயம் தேடிவந்தால் "எங்குற்று"என்று இளைத்துக்காட்டலாம்படி திருமேனியளவிலே யமுதுசெய்யவல்ல நிருபாதிக பந்துவான ஸர்வேஶ்வரன் நித்யவாஸம் பண்ணுகிறதேசம்.

ஶ்யாமமான நிறத்தையும் வரியையுமுடைத்தாயிருக்கிற வண்டுகள், தன் பந்துவர்க்கத்தோடே கூட மதுபாநத்தைப் பண்ணி, கழுத்தே கட்டளையாக மதுபாநம்பண்ணின படியாலே கால்வாங்கிப் போகமாட்டாமை அவ்விடத்திலே யிருந்து பூக்களைக்கோதி, அதின்மேலே யிருந்து "நைவளம்" என்கிற பண்ணைப்பாடாநின்றுள்ள பொழிலை யுடைத்தான. ... ... (௨)

அரு.—இரண்டாம்பாட்டு. (உய்யுமித்யாதி) கீழ் அந்தராத்மதையை யநுஸந்தித்தாராய், இதில் - ஆபத்ஸகத்வத்தை அநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

“மனமே - சொனசெய்யில் - உய்யும்வகையுண்டு” என்றந்வயித்து அர்த்த மருளிச்செய்கிறார் (நானித்யாதி). இத்தால் பலித்த வர்த்த மருளிச்செய்கிறார் (முடிந்தித்யாதி).

“இளையோடு” என்றதினர்த்தம் (பந்துவர்க்கத்தோடே) என்றது. “இண்டி” என்றதினர்த்தம் (கோதி) என்றது. ... ... (௨)

மூ.—உம்பருலகேழு கடலேழு மலையேழு மொழியாமை முனநாள்
தம்பொன் வயிறாரளவு முண்டவை யுமிழ்ந்த தடமார்வர் தகைசேர்
வம்புமலர்கின்ற பொழில் பைம்பொன் வரு தும்பி மணி கங்குல் வயல்சூழ்
நம்பனுறைகின்ற நகர் நந்திபுரவிண்ணகரம் நண்ணு மனமே. (௩)

பதம்.	உரை.
உம்பர்உலகு	மேலுள்ள ஸப்தலோ
ஏழும்	கங்களையும் [ம்
கடல்ஏழும்	ஏழு ஸமுத்ரங்களையு
மலைஏழும்	ஸப்தகுல பர்வதங்க ளையும்
ஒழியாமை	(இவற்றில் ஒன்றும்) தவறிப்போகாத் படி [திலே
முனநாள்	முற் (ப்ரளய) காலத்
தம்	தம்முடைய
பொன்	ஶ்லாக்யமான
வயிறு	திருவுதரமானது
ஆரளவும்	நிறையுமளவும்
உண்டு	அமுதுசெய்து,
அவை	அவற்றை
உமிழ்ந்த	(ஸ்ருஷ்டிகாலத்தில்) வெளிப்படுத்தின
தடம்	பரந்த
பதம்	உரை. [ருய்
மார்வர்	திருமார்வை யுடைய
தகைசேர்	பெருமையுடையனாய்
நம்பன்	விஶ்வஸநீயனான அவ உறைகின்றநகர், [ன்
வம்பு	பூக்களானவை
மலர்கின்ற	விகஸியாநின்ற
பொழில்	சோலைகளிலே
பை பொன்	அழகிய பொன்போ ன்றதாய்
வரு	வாராநின்ற
மணி தும்பி	ஶ்லாக்யமான தும்பி களையுடைத்தாய் [யுடைய)
கங்குல்	இருண்ட (பயிர்களை
வயல்சூழ்	கழனிகளாலே சூழப் பட்ட

நந்திபுரவிண்ணகரம் நண்ணு மனமே! (௩)

வ்யா. — மூன்றாம்பாட்டு. (உம்பரித்யாதி) உபரிதநலோகங்களேழும், கடல்களேழும் மலைகளேழும், இவற்றிலொன்றும் பிறிகதிர் படாதபடி, முன்பொருநாள், தம்முடைய ஶ்லாக்யமான வயிறு நிறையு மளவுமுண்டு, “உள்ளே கிடந்து தளரவொண்ணாது” என்று உமிழ்ந்து, இது தன்பேறு என்னுமிடம் வடிவிலே தோற்றவிருக்கிறவர். தகை - பெருமை.

(வம்பு) பூவாநின்றுள்ள மலரை யுடைத்தான பொழில்; அது தன்னில் பொன்படு மாபோலே காணும் ஸஞ்சரியாநின்றுள்ள தும்பிகள். மணி - அழகு. எப்போது மொக்கக் கருவுடைந்த பயிரேயாயிருக்கையாலே இருண்டிருந்துள்ள வயலாலே சூழப்பட்டு. (நம்பனுறைகின்ற நகர்) ஏதேனும் தசையிலும் விஶ்வஸநீயனாயிருக்கிறவன் நித்யவாஸம் பண்ணுகிற.... ... ... (௩)

அரு.—மூன்றாம்பாட்டு. (உம்பரித்யாதி) கீழ்ச்சொன்ன ஆபத்ஸகத்வத்தை ஸப்ரகாரமாக வருளிச்செய்கிறாரென்று ஸங்கதி.

வம்பு- அகாலபுஷ்பம். பைம்பொன்- நல்ல நிறமுடைய பொன்போலிருப்பனவாய், வாராநின்றுள்ள, தும்பிமணி - வண்டுகளி லவாந்தர ஜாதியான தும்பி ஶ்ரேஷ்ட்டங்களென்றுக்தி அர்த்த மருளிச்செய்கிறார் (அது தன்னிலித்யாதி). ... ... (௩)

மூ.—

பிறையினொளியெயிறிலக முறுகியெதிர் பொருதுமெனவந்தவசுரர்
இறைகளவை நெறுநெறென வெறியவவர் வயிறழலநின்றபெருமான்
சிறைகொள்மயில் குயில்பயில மலர்களுக வளிமுரலவடிகொணெடுமா
நறைசெய்பொழில் மழைதவழுநந்திபுரவிண்ணகரம் நண்ணுமனமே.

பதம்.	உரை.	பதம்.	உரை.
பிறையின்	பாலசந்த்ரனுடைய	வயிறு அழல	(பயந்து)வயிறெரியும்
ஒளி	காந்தியையுடைய		படியாக [நின்ற
எயிறு	பற்களானவை	நின்ற	(யுத்தத்தில்எதிரிட்டு)
இலக	விளங்காநிற்க,	பெருமான்	ஸர்வேஶ்வரனுடைய
முறுகி	மேலிட்டுவந்து		தாய், [டைய
எதிர்	எதிரேநின்று [வோம்	சிறைகொள்	சிறந்த இறகுகளையு
பொருதும்	யுத்தம் பண்ணக்கட	மயில்	மயில்களும்
எனவந்த	என்றுவந்த.	குயில்	குயில்களும்
அசுரர்	அஸுரர்களுடைய	பயில	நெருங்கி வர்த்திக்கு
அவை	அப்படிப்பட்ட		மதாய், (அதனால்)
இறைகள்	சரீரங்கள்	மலர்கள்	பூக்கள்
நெறுநெறுஎ	நெறுநெறு வென்று	உக	உதிருமதாய்
ன	முறியும்படியாக	அளி	வண்டுகள்
எறிய	(இவன்) முஷ்டிபிடி	முரல	சப்திக்குமதாய்,
	த்துவீச (அதனால்)	அடிகொள்	பரந்த மூலப்ரதேசங்
அவர்	அவ்வஸுரர்கள்		களை யுடைத்தாய்

நெடு	உயர்ந்திருக்கிற	மழை	மேகங்களானவை
மா	மாமரங்களிலே யுண்டான	தவழும்	ஸஞ்சரியாநின்றுள்ளதுமான
நறைசெய்	தேனையுடைத்தான		நந்திபுரவிண்ணகரம் நண்ணு
பொழில்	சோலைகளிலே		மனமே! (௪)

வ்யா.—நாலாம்பாட்டு. (பிறையித்யாதி) பிறைபோலே இலகாநின்றுள்ள எயிறானது விளங்கும்படியாக மிகைத்துக்கொண்டு ஆபிமுக்யம்பண்ணி "எதிரே பொருமித்தனை" என்றுவந்த அஸுரர்களுடைய சரீரமானது ஸந்திகளிலே நெறுநெறென்று முறியும்படியாகவும்; (வெறியவவர்) "வெறுவியவவர்" என்னலாம்படி, கையிலாயுதங்களை (௧) ‹‹చచాల చాపఞ్చ ముమోచ - சசால சாபஞ்ச முமோச›› என்கிறபடியே பொகட்டு, ஹ்ருதயங்களிலே பயாக்நி கொளுந்தும்படியாகவும் நின்ற ஸர்வேஶ்வரன். அதவா, நெறுநெறென விட, எறிதல் - இடுதல். முஷ்டி ப்ரஹாரமென்றுமாம்.

(சிறையித்யாதி) (சிறகையுடைத்தாயிருக்கிற மயில்கள், குயில்கள், இவை நெருங்க, அத்தாலே பூக்கள்உதிர, வண்டுகளானவை ஆளத்திவைக்க, பரந்த தாளையுடைத்தாய் ஓங்கியிருந்துள்ள மாக்களில் தேனையுடைத்தான பொழிலிலே மேகங்கள்வந்து ஸஞ்சரியாநின்றுள்ள. (௪)

அரு.—நாலாம்பாட்டு. (பிறையித்யாதி) கீழிரண்டு பாட்டாலும்-ப்ரணயாபத்ஸகத்வத்தை யநுஸந்தித்தாராய், இனி இரண்டுபாட்டாலே-விரோதிநிரஸநப்ரயுக்தமான ஆபத்ஸகத்வத்தை யநுஸந்திக்கிறாராய், அதில் ராவணனுடைய ப்ரதம யுத்த ப்ரகாரத்தை யருளிச்செய்கிறாரென்று ஸங்கதி.

"முறுகி" என்றதினர்த்தம் (மிகைத்துக்கொண்டு) என்றது. "இறைகளவை" என்றதினர்த்தம் (சரீரமித்யாதி). ‹‹வெறியவவர்›› என்றது - ‡பயத்தாலே கண் வெளிச் செறிந்தவர்களென்கை.

"நறைசெய்" என்றதினர்த்தம் (தேனையுடைத்தான) என்றது. (௪)

மூ.—மூளவெரிசிந்திமுனிவெய்தி யமர்செய்து மென வந்தவசுரர்
தோளுமவர் தாளும் முடியோடு பொடியாக நொடியாமள வெய்தான்
வாளும்வரிவில்லும் வளையாழி கதை சங்கமிவையங்கையுடையான்
நாளுமுறைகின்ற நகர் நந்தி புரவிண்ணகரம் நண்ணு மனமே. (௫)

---

(௧) ரா-யு-௫௯-௧௪௧. † இது ஸந்திக்தம்.

பதம்.	உரை.
மூள	புகை மூடும்படியாக
எரி	அக்நியை
சிந்தி	சிதற விழவிட்டு
முனிவு எய்து	கோபித்து
அமர்செய்தும்	யுத்தம்பண்ணக் கடவோம்
எனவந்த	என்று எண்ணிவந்த
அசுரர்	அஸுரர்களுடைய
தோளும்	புஜங்களும்
அவர்தாளும்	அவர்களுடைய கால்களும்
முடியொடு	தலைகளோடு கூட
பொடியாக	சூர்ணமாம்படி
நொடியாமளவு	நொடி நேரத்தில்
எய்தான்	அடித்தவனாய்,
வாளும்	நந்தகமும்
வரி	அழகிய
வில்லும்	சார்ங்கமும்
வளை	வளைந்த வாய்களையுடைய
ஆழி	ஸுதர்சநமும்
கதை	கௌமோதகியும்
சங்கம்	பாஞ்சஜந்யமும்
இவை	ஆகிய இந்த பஞ்சாயுதங்களையும்
அம் கை	அழகிய திருக்கைகளிலே
உடையான்	தரித்தவனான அவன்
நாளும்	ப்ரதிதிநமும்

உறைகின்றநகர் நந்திபுர விண்ணகரம் நண்ணுமனமே! (௫)

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (மூளவித்யாதி) புகையும்படி அதுக்கடியான அக்நியைச் சிந்திச் சீறிப் "பூசல் பொருமித்தனை" என்று வந்த அஸுரவர்க்கத்தினுடைய தாளைக் குறையா, தோளைக்குறையா, முடியைத்தள்ளா, ஒரு க்ஷணகாலத்திலே எய்தவன். அப்படி இன்னமும், யுத்தத்துக்குப் பரிகரமான வாளும், தர்ஶநீயமான வில்லும், வளைந்த வாயை யுடைத்தான திருவாழியும், கதையும், ஸ்ரீபாஞ்சஜந்யமும், இவற்றை அழகிய திருக்கையிலே யுடையவன், அவதாரங்கள் போலே "இப்போது ஸந்நிதியில்லை" என்னவேண்டாதபடி நித்யவாஸம் பண்ணுகிறதேசம். ... ... (௫)

அரு. — அஞ்சாம்பாட்டு. "చచాల చాపఞ్చ ముమోచ వీరః- சசாலசாபஞ்ச முமோசவீரஃ" என்று சொல்லுகிறபடியே கெட்டோடின படியைக் கீழ்ப்பாட்டில் சொல்லிற்றாய், மீளவும் கோபாக்நி மூண்டுவர கிரஸித்த படியை அநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

"அமர்" என்றதினர்த்தம் (பூசல்) என்றது.

"நாளும்" என்றதுக்கர்த்த மருளிச்செய்கிறார் (அவதாரங்களித்யாதி).

மூ.—தம்பியொடுதாமொருவர் தன்துணைவிகாதல் துணையாகமுனநாள்
வெம்பி யெரி கானக மூலாவு மவர் தாமினிது மேவு நகர்தான்
கொம்புகுதிகொண்டு குயில்கூவ மயிலாலு மெழிலார் புறவுசேர்
நம்பியுறைகின்ற நகர் நந்திபுர விண்ணகரம் நண்ணுமனமே.(௬)

பதம்.	உரை
ஒருவர்	அத்விதீய(ஸௌகுமார)ரான
தாம்	தாம்
தம்பியொடு	தம்பியான இளையபெருமாளோடு கூட்
காதல்	தனக்கு ப்ரீதிவிஷயையாய்
தன் துணைவி	தனக்கு ஸஹாயபூதை (பார்யை) யான பிராட்டியை
துணையா	ஸஹாயமாய்க்கொண்டு
முனநாள்	முன்பு (ராமாவதாரத்தில்)
வெம்பி	அத்யுஷ்ணமாய்க்கொண்டு
எரி	அழல்வீசாநின்ற
கானகம்	காட்டிலே
உலாவுமவர்	ஸஞ்சரித்த சக்ரவர்த்தித் திருமகன்
இனிது	(பிராட்டியோடே கூடி) உகப்புடனே
மேவு	நித்யவாஸம் பண்ணாநின்ற
நகர்தான்	திவ்ய தேசமானது,
குயில்	குயில்களானவை
கொம்பு	கிளைகளில்நின்றும்
குதிகொண்டு	குதித்து
கூவ	சப்திக்க, (அதைக்கேட்டு)
மயில்	மயில்களானவை
ஆலும்	நர்த்தநம் பண்ணாநிற்பதாய்
எழில் ஆர்	அழகுடைத்தான
புறவுசேர்	பர்யந்த ப்ரதேசங்களையுடைத்தாய்
நம்பி	(கல்யாணகுண) பூர்ணனான ஸர்வேஶ்வரன்
உறைகின்ற நகர்	நித்யவாஸம் பண்ணுகிற திவ்யதேசமாயிருக்கும், (அப்படிப்பட்ட)

நந்திபுர விண்ணகரம் நண்ணு மனமே! (௬)

வ்யா.—ஆறும்பாட்டு. (தம்பியித்யாதி) ஸௌகுமார்யத்துக்கு அத்விதீயரான தாம், தம்பியோடே—கூட வெம்பி எரி கானகத்திலே உலாவினராய்த்து. அங்கு ஆலம்பந மென்னென்னில், (தன் துணைவி) பிராட்டியோடேகூடப் போகை நிலவெம்மை தோற்றிற்றில்லையாய்த்து. (௧) "தன்னுவெயில் வறுத்த வெம்பால்மேல் பஞ்சடியால்" என்று-அவள் தனக்கிருக்குமாபோலே. நெருங்கின வெய்யிலை வறுநிற்குமாய்த்து வெவ்விய பரற்களானவை; அவற்றின்மேலே. [பஞ்சடியால்] பூவிலே அடியிடிலும் கொப்பளிக்கும்படியான திருவடிகளாலே. [மன்னனிராமன் பின்] அந்நில வெம்மைக்கு நீரும் நிழலு மிருக்கிறபடி.

(வெம்பி யெரி கானக முலாவுமவர்) வெம்மையை யுடைத்தாய் நிலந்தன்னையே விறகாகப் பற்றியெரிகிற காட்டிலே உலாவினவர், அப்பிராட்டியோடே புணர்ந்து வர்த்திக்கிற தேசமாய்த்து. (கொம்பு)

---

(௧) பெரியதிருமடல்-௫௦.

கொம்புகளில் நின்றும் குதித்து, குயில்களானவை, மூக்தர் ஸாமகாநர் பண்ணுமாபோலே கூவ, மயில்களானவை ஆட, அழகுமிக்கிருக்கிற பர்யந்தங்களை யுடைத்தாயிருந்துள்ள. (நம்பியுறைகின்ற நகர்) ஸமஸ்தகல்யாண குணாத்மகன் வர்த்திக்கிற தேசம். ... (௬)

அரு.—ஆறும்பாட்டு. (தம்பியொடித்யாதி) கீழிரண்டு பாட்டாலே சொன்ன ராவணவதத்துக் கடியாகக் காட்டிலே யடியிட்டபடியை அநுஸந்தித்த முகத்தாலே, தம்மைப் பேணாதே விரோதிகளை யழித்தபடி யாகையால் வந்த ஆபத்ஸகத்வத்தை அருளிச்செய்கிறாரென்று ஸங்கதி.

பிராட்டி துணையானபடி எப்படியென்ன; இவளுக்குத் தாம் துணையானாப்போலே தமக்கு மவள் துணையாகப் போனாரென்று விவக்ஷித்து, அதுக்கு ப்ரமாணம் காட்டுகிறார் (துன்னு இத்யாதி). "வெம்பரல்" என்கையாலே அதுக்குக் கருத்தருளிச் செய்கிறார் (நெருங்கின வித்யாதி.)

மூ.—தந்தைமனமுந்துதுயர் நந்தவிருள்வந்தவிறல் நந்தன்மதலை
எந்தையிவ னென்றமரர் கந்தமலர்கொண்டுதொழநின்றநகர்தான்
மந்தமுழவோசை மழையாகவெழுகார் மயில்களாடுபொழில்சூழ்
நந்திபணிசெய்தநகர் நந்திபுரவிண்ணகரம் நண்ணுமனமே. (௭)

பதம்.	உரை.	பதம்.	உரை.
தந்தை	தகப்பனாரான நந்தகோபருடைய	என்று	என்று சொல்லிக்கொண்டு
மனம்	மநஸ்ஸை	அமரர்	தேவர்கள்
உந்து	தள்ளாநின்ற (சோரப்பண்ணாநின்ற)	கந்தம்	பரிமள ப்ரசுரமான
துயர்	(அநபத்யதா) சோகமானது	மலர்	(கல்பக) புஷ்பங்களை
நந்த	நசிக்கும்படியாக	கொண்டு	ஸம்பாதித்துக்கொண்டுவந்து
இருள்	அந்தகாரத்திலே (ஒருவர்க்கும்தெரியாதபடி)	தொழ	ஆஶ்ரயிக்கும்படியாக
வந்த	(மதுரையில் நின்றும்) வந்த	நின்ற	எழுந்தருளியிருக்கிற
விறல்	மிடுக்கனாய்	நகர்தான்,	
நந்தன்.	நந்தகோபருடைய	முழவு	வாத்யங்களினுடைய
மதலைஇவன்	பிள்ளையான இந்தக்ருஷ்ணன்	மந்தம்	மந்தமான
எந்தை	எமக்கு ஸ்வாமி	ஓசை	கோஷத்தை(க் கேட்டு)
		மழையாக	மேக (முழக்க) மென்று நினைத்து
		கார்	வர்ஷாகாலத்தில்
		எழு	கிளராநின்ற

மயில்கள்	மயில்களானவை [ற	பணிசெய்த	கைங்கர்யம் பண்ணி ன [ப்படிப்பட்ட)
ஆடு	நர்த்தநம்பண்ணுகின்	நகர்	நகரமாயிருக்கும், (அ நந்திபுரவிண்ணகரம் நண்ணு மனமே! (௭)
பொழில்சூழ்	சோலைகளாலேசூழப் பட்டதாய், [ரசன்		
நந்தி	நந்தியென்னுமோர		

வ்யா.—ஏழாம்பாட்டு. (தந்தையித்யாதி) ஸ்ரீநந்தகோபருடைய ஹ்ருதயத்தைத் தள்ளாநின்ற து:க்கமானது நசிக்கும்படியாக, ஆஸுரப்ரக்ருதிகள் கண்ணுக்குத் தோற்றாதபடி இருளிலே வந்த பெருமிடுக்கனான ஸ்ரீ நந்தகோபர் பிள்ளை. "பிறந்தது அங்கேயாகில், மீண்டும்போய் வளர்ந்த தங்கேயாகில், கம்ஸபயத்தாலே நாலுநாள் வளர்ந்த வித்தனையுங் கொண்டு, அறிவு குறைய நின்றார் சொல்லுகையன்றிக்கே அறிவில் தலைநின்ற நம்போல்வார் இங்ஙன் சொல்லுகிறவிதுக்கு ஹேதுவென்?" என்று ஜீயர் பட்டரைக்கேட்க; "நாமேயன்று காணும்; அவதாரகாலத்துக்கு முன்பே அறிவுடையரா யிருப்பாருமிப்படி சொன்னார்கள் காணும், (௧) '𑌅𑌯𑌂 𑌸 𑌕𑌥𑍍𑌯𑌤𑍇 𑌪𑍍𑌰𑌾𑌜𑍍𑌞𑍈𑌃' அயம் ஸ கத்யதே ப்ராஜ்ஞை:' இத்யாதிகளாலே; அவர்களுக்கு முலை சுரவாநின்றதாகில் இவன்றான் அஞ்சாநின்றானாகில் உமக்கிவ்வாராய்ச்சியென்றான்" என்றருளிச்செய்தார். "நமக்கு ஸ்வாமி இவன்" என்று, தேவர்கள் கல்பகவ்ருக்ஷத்திற் பூக்களைக்கொண்டு ஆஸ்ரயிக்கும்படி நின்ற நகர்தான்;

மந்தமான வாத்யகோஷத்தை மேகத்வநியென்று கருதி, அதுக்கீடாகக் கார்காலத்தில் மயில்களானவை ஆடாநின்றுள்ள பொழில்களாலே சூழப்பட்டிருப்பதாய். (நந்தி பணி செய்தநகர்) அந்யபரன் அநந்யபரனா யடிமைசெய்து வர்த்திக்கிறதேசம். அதாவது - நந்தியென்பானொருவன் அக்காலத்தில் அங்கே அநுகூலித்து வர்த்தித்தான்போலே. ... ... , ... (௭)

அநு.—ஏழாம்பாட்டு. (தந்தையித்யாதி) கீழ்விரோதிநிரஸநத்வாரகமான வளவன்றிக்கே, ஸ்ரீநந்த கோபருடைய அநபத்யதா து:க்கத்தைப் போக்கின வழியாலே வந்த ஆபத்ஸகத்வத்தை யநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

(து:க்கமானது) பிள்ளையில்லாத து:க்கமானது. பெற்றதுமன்றிக்கே தத்து([illegible])மன்றிக்கே ஔபாதிகமாக நாலுநாளிருந்தானாகில் அநபத்யதா

---

(௧)

து:க்கம்போமோ என்னும் சங்கையைப் பூர்வாசார்ய ஸம்வாத முகேந பரிஹரித்தருளுகிறார் (பிறந்ததித்யாதி). இத்தால்-பெற்றவர்களைப்போலே முலைசுரந்தும் இவனும் பரதந்த்ரனாயும்நடந்து மிருக்கையாலே அநபத்யதா து:க்கம் தீர்ந்த தாகலாமென்று கருத்து. (ஆராய்ச்சி) என்றது - சாஸ்த்ரீயமாய் தத்து(தத்து)க்கொள்ள வேணுமென்கிற விசாரம்.

தேவதாந்தர பரனான ராஜா அத்தைத் தவிர்ந்து பகவத்பரனாய் வர்த்தித்தானென்கிறார் (அந்யபர னித்யாதி). ... ... (௭)

மூ.—

எண்ணில்நினைவெய்தியினியில்லை யிறையென்றுமுனியாளர் திருவார்
பண்ணில் மலி கீதமொடு பாடியவராடலொடுகூட வெழிலார்
மண்ணிலிது போல நகரில்லை யென வானவர்கள் தாமலர்கள் தூய்
நண்ணியுறைகின்ற நகர் நந்திபுரவிண்ணகரம் நண்ணுமனமே. (௮)

பதம்.	உரை.	பதம்.	உரை.
எண்ணில்	ஆராயுமளவில்,	அவர்	அவர்களுடைய
நினைவுஎய்து	த்யாநத்தை யடைந்த (த்யாநவிஷயமான)	ஆடலொடுகூட	நர்த்தநத்தோடுகூட,
இறை	ஸ்வாமியானவன்	வானவர்கள்	தேவர்கள்
இனி	இவனைக்காட்டிலும்	தாம்	தாங்கள்
இல்லை	வேறொருவனில்லை	எழில்ஆர்	ஶ்லாக்யமான
என்று	என்று நிஶ்சயித்து	மண்ணில்	பூலோகத்தில்
முனியாளர்	உத்தமதபஸ்விகளான ஸநகாதிகள்	இதுபோல	இத்தோடொத்த
திருஆர்	அழகுமிக்க (ஶ்ராவ்யமான)	நகர்	திவ்யதேசமானது
பண்ணில்	ஸங்கீதத்தில்	இல்லைஎன	இல்லையென்று (ஸ்தோத்ரம் பண்ணி)
மலி	அதிசயித்திருக்கிற	மலர்கள்தூய்	புஷ்பங்களை ஸமர்ப்பித்து
கீதமொடு	காநத்தோடுகூட	நண்ணி	ஆஶ்ரயித்து
பாடி	ஸ்தோத்ரங்களைச் சொல்லி(நர்த்தநம் பண்ண)	உறைகின்ற நகர் நந்திபுரவிண்ணகரம் நண்ணு மனமே! (௮)	

வ்யா.—எட்டாம்பாட்டு. (எண்ணிலித்யாதி) ரஜஸ் தமஸ்ஸுக்களாலே அபிபூதராய் ஆராயாதே சிலர்காலிலே குனியில் குனியுமித்தனை போக்கி, எண்ணில்-ஆராயில், த்யாநத்துக்கு விஷயபூதனான ஈஸ்வரன் இவனையொழிய வேறொருவரில்லையென்று, ஸநகாதிகள் அழகு மிக்கிருந்துள்ள பண்ணில் மிக்க காநத்தோடேபாடி:

அவ்வவருடைய ஆடலோடேகூட. (எழிலாரித்யாதி) “பூமியில் பாரதவர்ஷமே உத்தேஶ்யம்; பண்ணின புண்யமானது சாலிலெடுத்த நீர்போலே க்ஷபித்தவாறே முகம் கீழ்ப்படத்தள்ளுகிற ஸ்வர்க்கமுமொருதேசமாய்த்ததோ? கோலின ப(ஃ)லங்களுக்கெல்லாம் ஸாதநாநுஷ்ட்டாநம் பண்ணலாம் பாரதவர்ஷத்தை யொழிய” என்றார்களிறே; அப்படியே, பூமிப்பரப்பில் ஶ்லாக்க்யமா யிருந்துள்ள இந்த நகரத்தோடொக்கக் கடவதில்லை என்று தேவர்கள் புஷ்பாத்யுபகரணங்களைக்கொண்டு ஆஶ்ரயித்து நித்யவாஸம் பண்ணுகிறதேசம். (அ)

அரு —எட்டாம்பாட்டு. (எண்ணிலித்யாதி) ஆக, கீழ் ஆறுபாட்டாலும்- ஆபத்ஸகத்வத்தை பஹுப்ரகாரமாக உபபாதித் தநுபவித்தாராய், இனி இரண்டுபாட்டாலே- மோக்ஷப்ரதத்வத்தை யநுபவிக்கக் கோலி, இதில் - ஸாதநாந்தர நிஷ்ட்டர்க்கு உபாஸ்யனாகையால் வந்த மோக்ஷப்ரதத்வத்தை யநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

“எண்ணில்” என்கிற யதி(ஃ) பதத்துக்கு ஹ்ருதய மருளிச்செய்கிறார் (ரஜஸ்தமஸ்ஸூக்களாலே யித்யாதி).

“பாரதவர்ஷமே உத்தேஶ்யம்” என்றத்தை உபபாதித்தருளுகிறார் (பண்ணின வித்யாதி). … … … … … … (அ)

மூ.—வங்கமலி பௌவமது மாமுகடினுச்சி புக மிக்க பெருநீர்
அங்கமழியா ரவனதாணை தலைசூடு மடியாரறிதியேல் [ல்
பொங்குபுனலுந்து மணிகங்குலிருள் சீறுமொளியெங்குமுளதா
நங்கள்பெருமானுறையும் நந்திபுரவிண்ணகரம் நண்ணுமனமே.

பதம்.	உரை.	பதம்.	உரை.
வங்கம்	மரக்கலங்களால்	அவனது	அந்த ஸர்வேஶ்வரனுடைய
மலி	ஸம்ருத்தமான	ஆணை	ஆஜ்ஞையை
அது	அந்த (பூமிக்கு ரக்ஷகமான)	தலைசூடும்	சிரஸாவஹியாநின்,
பௌவம்	ஸமுத்ரமானது	அடியார்	தாஸபூதர்
மா	உயர்ந்திருக்கிற [ய	அங்கம்அழியார்	சரீரநாசத்தை யடையார்கள்,
முகடின்	அண்டபித்தியினுடை	மனமே	ஓமநஸ்ஸே! [ல்,
உச்சி	சிரஸ்ஸளவும்	அறிதியேல்	(இதை) அறிவாயாகி
புக	வ்யாபிக்கும்படி	பொங்கு	பெருகாநின்ற
மிக்க	பொங்கிவாராநின்ற	புனல்	ஜலமானது
பெருநீர்	(ப்ரளயகால) மஹாஜலத்திலும்,	உந்து	ஒதுக்காநின்ற

மணி	ரத்நங்களில் நின்றும் புறப்பட்டதாய்
கங்குல்	ராத்ரியிலே யுண்டான
இருள்	அந்தகாரத்தை
சீறும்	கோபியாநின்ற (போக்காநின்ற)
ஒளி	காந்தியானது
எங்கும்	ஸர்வதேசத்திலும்
உளது	வ்யாபியாநின்றதாய்,
நங்கள்	நமது
பெருமான்	ஸ்வாமியானவன்
உறையும்	நித்யவாஸம் பண்ணு நிற்பதான

நந்திபுரவிண்ணகரம் நண்ணு மனமே! (௯)

வ்யா.— ஒன்பதாம்பாட்டு. (வங்கமித்யாதி) மரக்கலங்களால் மிக்கிருக்கிற கடலானது, பாடிகாப்பாரே களவுகாணுமாபோலே பூமிக்கு ரக்ஷகமாக இட்டுவைத்த இதுதானே அண்டபித்தியளவும் சென்று நூக்கும்படி மிக்கஜலத்தில், அவனுடைய வார்த்தையை சிரஸா வஹிக்கக்கடவ சேஷபூதரானவர்கள், ப்ரளயாபத்துக்கு ஹேதுவான கர்மமநுபவியார்கள்; (௧) “సర్గేపి నోపజాయన్తే ప్రళయే నవ్యథన్తిచ - ஸர்க்கேபி நோபஜாயந்தே ப்ரளயே நவ்யதந்திச” என்கிறபடியே. (அறிதியேல்) சைதந்யப்ரஸரத்வாரமாகில்.

(பொங்கித்யாதி) பெருகின நீரானது கொடுவந்து தள்ளுகிற ரத்நமானது ராத்ரியிலிருளைத் தன்கிரணங்கொண்டு தள்ளுகிற ஒளி எங்குமொக்கப் பரந்திருக்குமாய்த்து. (நங்கள் பெருமானுறையும்) பாரவஸ்த்தை நித்யஸூரிகளுக்காயிருக்கும்; வ்யூஹம் ப்ரஹ்ம ருத்ராதிகள் பரிபவத்தைப்போக்கவாயிருக்கும்; அவதாரங்கள், ஸ்ரீவஸுதேவர் சக்ரவர்த்திகள் தொடக்கமான பாக்யாதிகருக்காயிருக்கும்; பிற்பாடரான நம்போல்வார்க்காயிருக்குமிறே உகந்தருளின நிலங்கள். நித்யஸூரிகளு மிங்குவரும்போது குறைவாளராய் வரவேணும்; அந்த(ஸ்)ர்க்கு வைத்தசாலையில் விழித்தார்க்கு வரும்போது கண்ணை மறைத்து வரவேணுமிறே. ... ... (௯)

அரு.—ஒன்பதாம்பாட்டு. (வங்கமித்யாதி). கீழ்ப்பாட்டில்-உபாஸ்யஜ்ஞையால் வந்த மோக்ஷப்ரதத்வத்தை யருளிச்செய்து, ப்ரபத்தவ்யஜ்ஞையால் வந்த மோக்ஷ ப்ரதத்வத்தை யநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

ஆணை தலை சூடுமடியாராவார் - (௧) “வார்த்தை யறிபவர்” என்கிறபடியே ஸ்லோகார்த்த நிஷ்டரென்றிறே திருவுள்ளம்.

நமக்கானபடி எப்படி, அங்குள்ளாரு மிங்கு வருவர்களே யென்னவருளிச்செய்கிறார் (நித்யேத்யாதி). (குறைவாளராய்) என்றது - தங்கள்

---

(௧) கீதை-௧௪-௨.

(௧) தி-வாய்-௭-௫-௧௦.

வேஷத்தை மறைத்து மநுஷ்யாதி வேஷத்தைக் கொண்டென்கை. - வேஷம்மாறி வரவேணுமோ வென்ன வருளிச்செய்கிறார் (அந்தர்க்கித்யாதி).

மூ.—
நறைசெய்பொழில்மழைதவழும் நந்திபுரவிண்ணகரம்நண்ணியுறையு
உறைகொள்புகராழி சுரிசங்கமவையங்கையுடையானை யொளிசேர் [ம்
கறைவளரும் வேல்வல்ல கலியனொலிமாலையிவையைந்துமைந்தும்
முறையிலிவை பயில்வல்ல வடியவர்கள் கொடுவினைகள்முழுதகலுமே.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பதம்.	உரை.
நறைசெய்	தேனையுடைய
பொழில்	சோலைகளிலே
மழை	மேகங்களானவை
தவழும்	ஸஞ்சரியாநின்ற
நந்திபுர விண்ணகரம்	நந்திபுர் விண்ணகரமென்னும் திவ்யதேசத்தை
நண்ணி	கிட்டி
உறையும்	நித்யவாஸம் பண்ணாநின்றவனாய்
உறைகொள்	உறையிலே யிடப்பட்டதாய்
புகர்	தேஜஸ்ஸை யுடைத்தான
ஆழி	திருவாழியும்
சுரி	சுழியையுடைத்தான
சங்கம்	சங்கும் (ஆகிய)
அவை	அந்த திவ்யாயுதங்களை
அங்கை	அழகிய திருக்கையிலே
உடையானை	உடையனான ஸர்வேஸ்வரன்விஷயமாக
ஒளிசேர்	புகரையுடைத்தாய்
கறைவளரும்	ரக்தக்கறைமிக்கிருந்துள்ள
வேல்	வேலாயுதத்தை
வல்ல	ஆளவல்லரான
கலியன்	ஆழ்வார்
ஒலி	அருளிச்செய்த
இவை	இப்படி விலக்ஷணமாயுள்ள
மாலை	சப்தஸர்தர்ப்ப ரூபமான
இவை	இந்த
ஐந்தும் ஐந்தும்	பத்துப் பாசுரங்களையும்
முறையில்	க்ரமத்திலே (உத்தேஸ்யபுத்தியாலே)
பயில்வல	அப்யஸிக்கவல்ல
அடியவர்கள்	சேஷபூதர்களுடைய
கொடு	க்ரூரமான
வினைகள்	பாபங்கள்
முழுது	ஸம்பூர்ணமாக
அகலும்	நீங்கிப்போம். (௧௦)

வ்யா.—பத்தாம்பாட்டு. (நறைசெயித்யாதி) மதுமிக்கபொழிலிலே மேகங்கள் வந்து ஸஞ்சரிக்கிற ஸ்ரீநந்திபுரவிண்ணகரிலேகிட்டி நித்யவாஸம்பண்ணுவதும் செய்து, விரோதிநிரஸநத்துக்குத் திருமங்கையாழ்வார் கையில்வேலுண்டானபின்பு திருவாழிஉறையிட்டிருக்கும்காண்; உறைகொண்டிருப்பதாய் புகரையுடைத்தாயிருக்கிற திரு

வாழிதுடக்கமான· திவ்யாயுதங்களை அழகிய திருக்கையிலே யுடையவனைக் கவிபாடிற்று. (ஒளிசேர்கறைவளரும்) உறையில்கிடக்க அவஸரமில்லையாய்த்துத் திருமங்கையாழ்வார் வேலுக்கு; சத்ருநிரஸநம் பண்ணிக் கறைகழற்ற அவஸரமின்றிக்கேயிருக்கும்; இப்பத்தையும். (முறையிலிவைபயிலவல) "நண்ணுமனமே" என்று உத்தேஸ்யமாகச்சொன்ன தேசமாகையாலே இவ்விடம் நமக்காஸ்ரயணீய ஸ்த்தலம் என்னும் ப்ரதிபத்தியோடேகூட அப்யஸிக்கவல்ல அடியவர்களுடைய, க்ரூரமாய் அநுபவித்தாலல்லது நசிக்கக்கடவதன்றிக்கே யிருக்கிற பாபங்கள் ஸவாஸநமாகப்போம். ... . (க௦)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

* * *

அரு.—பத்தாம்பாட்டு. (நறைசெயித்யாதி) "உறைகொள்" என்று திருவாழிக்கு விசேஷண மிடுவா னென்னென்ன வருளிச்செய்கிறு: (விரோதி யித்யாதி). ... ... (க௦)

ஜீயர் திருவடிகளே சரணம்.

அஞ்சாம்பத்தில் பத்தாந்திருமொழி முடிந்தது.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஆரும்பத்துமுதல் திருமொழி

வண்டுணுப்ரவேசம்.

* * *

வ்யா.—இவர்க்கு உகந்தருளின நிலங்களிலுண்டான ருசியைப் பற்ற ஈஶ்வரன் இங்கேவைத்தான், சப்தாதிவிஷயங்களும் இந்நிலத்திலேயாயிருந்தது; நீர்மனிச்சரைக் கரையிலே நிறுத்தினால் பழைய வாஸனையாலே நீரிலேபோய்ப் புகுமாபோலே, உகந்தருளின நிலங்கள் இங்கேயுண்டானாலும் விஷயங்கள் பரிமாறுகிற விடத்திலுண்டான இருப்பு அவற்றிலே கைகழியப்போகைக்கும் உடலாயிருக்கையாலே, ஈஶ்வரனுக்கும் "இவர்க்கு இங்ஙனேயுமொருநினைவுண்டோ" என்று கைகழியவிடுகைக்கு உடலாயிருக்கையாலே, ஸாக்ஷாத்கரித்தல்லது நிற்கவொண்ணாதபடி பகவத்விஷயத்திலே தமக்குண்டான ருசியையும், விட்டல்லது நிற்கவொண்ணாதபடி ஸம்ஸாரத்திலே பிறந்த அருசியையும்,அவன் திருவுள்ளத்திலே படும்படி விண்ணப்பம்செய்கிறார். ஆத்மவஸ்து; பகவதர்ஹமல்லாமையன்றிறே அநாதிகாலம் ஸம்ஸரித்தது, அசித்ப்ரத்யாஸத்தியாலேயிறே; ஆனபின்பு, இத்தைத்தவிர்த்துக்கொள்ளவேணுமிறே. ... ... *

அரு.—வண்டுணூப்ரவேசம்.—கீழ்த்திருமொழியில்-"நந்திபுர விண்ணகரம் நண்ணுமனமே" என்று பலகாலும் சொல்லிவைத்தவர், "வேண்டேன் மனைவாழ்க்கையை" என்று ஒருகால் சொன்னப்போலே ஒன்பதின்கால் சொல்லிக் கூப்பிடுவானென்னென்ன வருளிச்செய்கிறார் (இவர்க்கித்யாதி).

மூ.— [மேல்

வண்டுணுநறுமலரிண்டைகொண்டு பண்டைநம்வினைகெடவென்றடி
தொண்டருமமரரும்பணியநின்றங்கண்டமோடகலிடமளந்தவனே
ஆண்டாயுன்னைக் காண்பதோரருளெனக் கருளுதியேல்
வேண்டேன்மனைவாழ்க்கையை விண்ணகர்மேயவனே. (க)

பதம்.	உரை.
அமரரும்	தேவர்களும்
தொண்டரும்	(மற்றும்) பக்தஜநங்களும்,
வண்டு	வண்டுகள்
உணும்	மதுபாநம் பண்ணுநிற்பதாய்
நறு	பரிமள ப்ரசுரமான
மலர்	பூக்களினால் கட்டப்பட்ட
இண்டை	மாலையை
கொண்டு	ஸம்பாதித்துக்கொண்(டுவந்து),
பண்டை	ப்ராசீநமான
நம்வினை	எங்கள் பாபங்களை
கெட	போக்கியருளவேணும்
என்று	என்று ப்ரார்த்தித்து
அடிமேல்	திருவடிகளின் மேலிட்டு
பணிய	ஆஶ்ரயிக்க, (அவர்களுக்காக)
நின்று	(மஹாபலியிடம்) இரப்பாளனாயிருந்து
அங்கு	அந்த யஜ்ஞவாடத்தில் நின்றே
அண்டமோடு	மேலுலகங்களோடு கூட

பதம்.	உரை
அகல்இடம்	பரந்தபூமியை
அளந்தவனே	(திருவடிகளால்) ஆக்ரமித்துக்கொண்டவனே!
ஆண்டாய்	(இதுக்கு முன்னமே) என்னை அடிமையாக்கிக்கொண்ட ஸ்வாமியே!
விண்ணகர்	திருவிண்ணகரென்னும் திவ்யதேசத்தில்
மேயவனே	பொருந்திநித்யவாஸம் பண்ணுமவனே!
உன்னை	உன்னை
காண்பது	(நான்) ஸேவிக்கும்படி
ஓர்அருள்	நிர்ஹேதுகமான க்ருபையை
எனக்கு	என் விஷயத்தில்
அருளுதியேல்	செய்வாயாகில் (செய்தருளவேணும்),
மனைவாழ்க்கையை	(இனி) ஸம்ஸாரத்திலிருப்பை
வேண்டேன்	(நான்) விரும்பேன்.

வாழ்க்கை-ஸுகம். (௧)

வ்யா.—முதற்பாட்டு. (வண்டுணும்) செவ்விப்பூமாலையைக்கொண்டு. (பண்டையித்யாதி) "முன்பு நாம்பண்ணிவைத்த பாபங்களையடையப்போக்கவேணும்" என்று திருவடிகளின்மேலே, (௧) "[illegible] - ஸங்கைஸ்ஸுராணாம்" என்கிறபடியே, தேவர்களும், மற்றும் திருவடிகளுக்கு நல்லராயிருப்பாரும் ஆஶ்ரயிக்க. (நின்று) அர்த்தித்துநின்று. பெற்ற அவ்விடந்தன்னிலே நின்றே அண்டங்களோடேகூட பூமிப்பரப்பை யளந்துகொண்டவனே!

(ஆண்டாய்) நான் இதரவிஷயங்களிலே ப்ரவணனாய் உன்பக்கலிலே வைமுக்க்யம் பண்ணிப்போரா நிற்கச்செய்தே, இவ்வளவும்வர என் ஸத்தையழியாமல் நோக்கிக்கொண்டு போந்தவனே! (உன்னையித்

---

(௧) மாங்க்ள்யஸ்தவம்.

யாதி)நீ அநாதிகாலம் ஸம்ஸாரத்தையை நோக்கிக்கொடுபோந்ததின்ப(ஃ)லம் நீயே பெறவேண்டியிருந்தாயாகில், என்பக்கலிலே க்ருபையைப்பண்ணியருளவேணும். (வேண்டேனித்யாதி) "இன்னமுமிவனுக்கு ஸம்ஸாரவாஸனை கழிந்ததில்லை" என்று இருக்கவேண்டா, எனக்குலோகயாத்ரையில் ருசியில்லாமையைத் திருவுள்ளம் பற்றவேணும். (க)

அரு. — முதற்பாட்டு. (வண்டித்யாதி). இந்த்ரன் கார்யம்செய்ய வந்தபடியாலே, "సఙ్ఘైస్సురాణామపి భూతలస్థైస్తథా మనుష్యైర్గగనేచరైః। స్తుతః క్రమాన్యః ప్రచకార సర్వదా మమాఽస్తు మాఙ్గళ్య వివృద్ధయే హరిః - ஸங்கைஸ்ஸுராணாமபி பூதலஸ்த்தைஸ்ததா மநுஷ்யைர்க்ககநேசரை:। ஸ்துத: க்ரமாந்ய: ப்ரசகார ஸர்வதாமமாஸ்து மாங்கள்ய விவ்ருத்தயே ஹரி:" என்கிறபடியே முற்றூற அமரரைச் சொல்லுகை உசிதமாகையால், "அமரரும், தொண்டரும்" என்று அந்வயித்தருளிச்செய்கிறார் (ஸங்கை ரித்யாதி).

"அருளுதியேல்"- அருளவேணுமென்று கூட்டி அர்த்த மருளிச்செய்கிறார் (நீ அநாதிகால மித்யாதி).... ... ... (க)

மூ.— [டவனே
அண்ணல்செய்தலைகடல்கடைந்ததனுள்கண்ணுதல் நஞ்சுண்ணக்கண்
விண்ணவரமுதுண வமுதில்வரும் பெண்ணமுதுண்ட வெம்பெருமா
ஆண்டா யுன்னைக் காண்பதோ ரருளெனக்கருளுதியேல் [னே
வேண்டேன்மனைவாழ்க்கையை விண்ணகர்மேயவனே. (உ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
அண்ணல்செய்து	(தேவர்கள்பக்கல்) ஔதார்யத்தைப் பண்ணி	கண்டவனே	பார்த்த(ஸங்கல்பித்த)ருளினவனே!
அலைகடல்	அலைமோதாநின்ற ஸமுத்ரத்தை	விண்ணவர்	தேவர்கள் [சிற்க,
கடைந்து	மதநம்பண்ணி,	அமுதுஉண	அம்ருதபாநம் பண்ண
அதனுள்	(அக்காலத்தில்) அந்த ஸமுத்ரத்தில் நின்றும் புறப்பட்ட	அமுதில்	(அந்த)அம்ருதத்தில் நின்றும்
நஞ்சு	விஷத்தை	வரும்	(ஸாரபூதையாய்க்கொண்டு) வாராநின்ற
நுதல்கண்	நெற்றிக்கண்ணனான ருத்ரன்	அமுது	போக்யபூதையான
உண்ண	விழுங்கும்படி	பெண்	பெரியபிராட்டியாரை
		உண்ட	(லபித்து) அநுபவியாநின்றவனை
		எம்பெருமானே	எங்களுக்கு உபகாரகனானவனே! (உ)

வ்யா.—இரண்டாம்பாட்டு. (அண்ணல்) ஒருகால்சொன்னத்தை ஒன்பதின்கால் சொல்லுகிறார் தம்முடைய இந்த ருசியை ஸ்த்திரமென்னு மிடத்தை அவன் திருவுள்ளத்தே படுத்துகைக்காக.

(அண்ணல்) ஔதார்யத்தைப்பண்ணி யென்னுதல், ஸ்வாமித்வத்தை நிர்வஹித்தென்னுதல்; பெரிய க்ஷோபத்தை யுடைத்தாயிருந்துள்ள கடலைக்கடைந்து. (அதனுள் - நஞ்சை - கண்ணுதல் - உண்ணக்கண்டவனே) அதிலுண்டான விஷத்தை புஜிந்து தேவர்கள் முடியாதே யிருக்கும்படியாகப் பார்த்தவனே! (விண்ணவரித்யாதி) தேவஜாதி அம்ருதத்தை புஜித்து உஜ்ஜீவிக்க, அந்த அம்ருதந்தான் கோதாம்படிவந்து தோற்றின பெரியபிராட்டியாரை லபித்து, அவ்வழியாலே ஆஸ்ரிதவர்க்கத்துக்கு உபகரித்தவனே! ஜநநிபக்கல் பண்ணுமுபகாரம் ப்ரஜைகளுக்கா யிருக்குமிறே.

(ஆண்டாயித்யாதி) அச்சேர்த்தியை நான் கண்டநுபவிக்கும்படி என்பக்கலிலே க்ருபையைப் பண்ணி யருளுவுதியாகில், அத்தேவஜாதி உன்னைக்கொண்டு பூண்கட்டிக்கொள்ளுகிற ஸம்ஸாரயாத்ரையை வேண்டேன். ... ... (௨)

அரு.—இரண்டாம்பாட்டு. (அண்ணலித்யாதி) கீழ்ப்பாட்டில் - இந்த்ரனுக்காக இரந்தாகிலும் அவன் வாழ்க்கையை நிலைநிறுத்தினாய், அங்ஙன் ஒரு ருசி எனக்கில்லை என்றார்; இதில் - தேவஜாதி யெல்லாம் சாகாமலிருக்கவேணுமென்ன, அதுக்காகக் கடல் கடைந்தாகிலும் அது தலைக்கட்டினாய், எனக்கு அங்ஙனிருப்பதொரு தேஹ சாபல்யமில்லை யென்கிறார் என்று ஸங்கதி. (இத்தருசியை) என்றது - "மனைவாழ்க்கை - வேண்டேன்" என்னும்படியான பகவத்விஷய ருசியை என்றபடி. ... ... (௨)

மூ.—

குழல்நிறவண்ணநின்கூறுகொண்ட தழல்நிறவண்ணன் நண்ணார்நகரம்
விழநனி மலை சிலைவளைவு செய்தங்கழல் நிற வம்பதுவானவனே
ஆண்டாயுன்னைக் காண்பதோரருளெனக் கருளுதியேல்
வேண்டேன்மனைவாழ்க்கையை விண்ணகர் மேயவனே. (௩)

பதம்.	உரை.	பதம்	உரை.
குழல்நிறம்	திருக்குழலின் வர்ணம்போன்ற (நீலமான)	வண்ண	திருமேனி நிறத்தையுடையவனே!
		நின்	உன் திருமேனியில்

கூறுகொண்ட	ஒருபார்ஶ்வத்தைத் தனக்கிருப்பிடமாகவுடையனாய்	விழ	நசிக்கும்படியாக,
		நணி	பெருத்து
		மலை	மலைபோன்றதான
தழல்நிறம்	அக்நிவர்ணம் போன்ற	சிலை	வில்லை
வண்ணன்	சரீரவர்ணத்தையுடையனான ருத்ரனை(க்கொண்டு),	வளைவுசெய்து	வளையும்படி செய்வித்து,
		அங்கு	அந்த வில்லிலே(தொடுக்கப்பட்டு)
நண்ணார்	சத்ருக்களான அஸுரர்களுடைய	அழல்நிறம்	அக்நிவர்ணமாய்
		அது	அப்படி அதிக்ரூரமான
நகரம்	பட்டணமான த்ரிபுரமானது	அம்பு ஆனவனே	பாணத்திலே ப்ரவேசித்து நின்றவனே!

வ்யா. — மூன்றாம்பாட்டு. (குழல்நிறவண்ண) திருக்குழலில் நிறத்தையுடைய திருமேனியின் நிறத்தையுடையவனே! (௧) ‘‘கூறாளும்’’ என்கிறபடியே - உன் திருமேனியிலே கூறுடையனாய், அக்நிகல்பமான நிறத்தையுடையவன். கண்ணுக்குக் குளிர்ந்திருக்கும் ஸர்வேஶ்வரன் திருமேனி; கண்கொண்டு பார்க்கவொண்ணாதபடி எரிந்திருக்கும் இவன்மேனி. ஆஸுர ப்ரக்ருதிகளுடைய த்ரிபுரமான படைவீடு நசிக்கும்படியாக, பெருத்து மேருகல்பமான வில்லை வளைத்து, (௨) ‘‘𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 - தஸ்மாத்’’ என்கிறபடியே - அதுக்குள்ளீடாய்ப்புக்கு நின்றானாய்த்து. இவ்வபதாநத்துக்கு ஹேதுவென்னென்ன; (௨) ‘‘𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌰𑌾𑌤𑍍𑌮𑌾 - விஷ்ணுராத்மா’’ என்றதிறே. (அங்கழல் நிறவம்பது) அம்புக்குக் கூர்மையாய்ப் போய்ப்புக்கு ப்ரதிபக்ஷத்தை யழியச்செய்து, ‘‘அந்த விஜயாபதாநத்தை அவன் செய்தான்’’ என்று விருதூதித்திரியும்படி பண்ணினவனே!

(ஆண்டாய்) ‘‘ஓரபதாநம் பண்ணினேன்’’ என்று விருதூதித் திரியும்படி பண்ணவேண்டா. (வேண்டேன்) ஸ்வரூப விரோதியைக் கழித்து ஸ்வரூபாநுரூபமான பேற்றைப் பண்ணித் தரவேணும். ... ... (௩)

அரு.—மூன்றாம்பாட்டு. (குழலித்யாதி) கீழ்ப்பாட்டில்-சிரகாலம் ஜீவித்திருக்க யத்நம்பண்ணினார்க்கு அத்தைத் தலைக்கட்டிக் கொடுத்தாய், எனக்கு அதுவேண்டா என்றாராய்; இதில் - ‘‘ஜீவித்திருந்தால் ‘இன்னான் இனியான்’ என்று நாலுபேர் கொண்டாடவேணும்’’ என்றிருப்பானொருத்

---

(௧) தி-வாய்-௪-௮-௧. (௨) பாரதம்-கர்ணபர்.

ரனுக்கும் அது தலைக்கட்டிக் கொடுத்தாய், எனக்கு அங்ஙனிருப்பதொரு புகழ் வேண்டுவதில்லை யென்கிறா ரென்று ஸங்கதி.

(நிறத்தை) என்றவனந்தரம், உபமாநமாக என்று சேஷம். "நனி" என்றதினர்த்தம் (பெருத்து) என்றது. "தழல் நிறவண்ணன்" - கொண்டு என்று அத்யாஹரித்து, "செய்து" என்றது-செய்வித்து என்றுக்தித் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (தஸ்மாதித்யாதி). ருத்ரன் செய்திருக்க, "ஸர்வேஶ்வரன் செய்வித்தான்" என்கைக்கு மூலமென்? என்னும் சங்கையைக் கிளப்பி, பரிஹாரமானபடியை விவரிக்கிறார் (இவ்வபதாநத்துக் கித்யாதி). ... . (௩)

மூ.—

நிலவொடு வெயில் நிலவிருசுடருமுலகமு முயிர்களு முண்டொருகால்
கலைதரு குழவியினுருவினையா யலைகடலாலிலை வளர்ந்தவனே
ஆண்டாயுன்னைக் காண்பதோ ரருளெனக் கருளுதியேல்
வேண்டேன் மனைவாழ்க்கையை விண்ணகர் மேயவனே. ... (௪)

பதம்.	உரை.	பதம்.	உரை.
நிலவொடு	நிலாவோடும்	உண்டு	விழுங்கி (வயிற்றிலே வைத்து),
வெயிலொடு	வெய்யிலோடும் (கூடி)		
நிலவு	உலாவாநின்ற	கலைதரு	அத்யல்பமான
இருசுடரும்	இரண்டு தேஜ:பதார்த்தங்களான சந்த்ரஸூர்யர்களையும்	குழவியின்	குழந்தையினுடைய
		உருவினையாய்	வடிவையுடையனாய்க் கொண்டு,
உலகமும்	லோகங்களையும்	அலை	அலைமோதாநின்ற
உயிர்களும்	(அங்குள்ள) ப்ரர்ணிகளையும்	கடல்	மஹாஸமுத்ரத்தில்
		ஆல் இலை	(ஓர்) ஆலந்தளிரில்
ஒருகால்	ஒருகாலத்திலே (ப்ரளயத்திலே)	வளர்ந்தவனே	கண்வளர்ந்தருளினவனே! (௪)

வ்யா.—நாலாம்பாட்டு. (நிலவொடு) நிலாவோடேகூட, வெய்யில், நிலவுகிற - ஸஞ்சரிக்கிற, சந்த்ரஸூர்யர்களுக்கு நிர்வாஹகனாய். வர்த்தியாநின்றுள்ள நிலாவையும் வெய்யிலையு முடைய இருசுடரென்னுதல். லோகங்களும், அவற்றிலுண்டான ப்ராணிகளும், ஆகிய இவற்றை ஒருகால் வயிற்றிலேவைத்து, கலாமாத்ரமா யிருந்துள்ள குழவியினுடைய வடிவை யுடையையாய், க்ஷோபத்தை யுடைத்தான கடலிலே ஒருபவனான ஆலந்தளிரிலே கண்வளர்ந்தருளுகிற அகடிதகடநா ஸாமர்த்யத்தையுடையவனே!

(ஆண்டாய்) என்பக்கல் அகடிதங்களை கடிப்பிக்க வேண்டா, உன்னைக் காண்பதொருவகை ‡அருளவமையும். (வேண்டேன்) என் தலையால் வரும் அம்சத்தில் கண்ணழிவில்லை. ... ... (௪)

அநு.—நாலாம்பாட்டு. (நிலவித்யாதி) ருத்ரன் தலையில் விஜயத்தை ஏறிட்டாப்போலே, எனக்கு அங்ஙனிருப்பதொரு புகழ்படைக்க வேண்டா, ஸ்வரூபவிரோதியைக் கழித்துத் தரவேணுமென்றீர்; நீர் நினைத்தபோதாகச் செய்யப்போமோ, சிரகால வாஸிதமன்றோ மனைவாழ்க்கை என்ன வருளிச்செய்கிறாரென்று ஸங்கதி.

நிலாவோடும் வெய்யிலோடும்கூட நிலவுகிற இருசுடர் என்றாக்கி ஒரு யோஜனை அருளிச்செய்து, நிலவுகிற நிலாவோடும் வெய்யிலோடும் கூடின இருசுடர் என்று அர்த்தாந்தர மருளிச்செய்கிறார் (வர்த்திக்கிற வித்யாதி).

மூ.—

பாரெழு கடலெழு மலையெழுமாய்ச்சீர் கெழுமிவ்வுலகேழு மெல்லாம்
ஆர்கெழுவயிற்றினி லடக்கிநின்றங் கோரெழுத் தோருருவானவனே
ஆண்டாயுன்னைக் காண்பதோரருளெனக் கருளுதியேல்
வேண்டேன் மனைவாழ்க்கையை விண்ணகர் மேயவனே. (௫)

பதம்.	உரை.	பதம்.	உரை.
பார்எழும்	ஸப்தத்வீபங்களான பூமிக்கும்	வயிற்றினில்	திருவுதரத்தில்
கடல்எழும்	ஸப்தஸமுத்ரங்களுக்கும்	அடக்கி	(வைத்து) அடக்கிக்கொண்டு
மலைஎழும்	ஸப்தகுலாசலங்களுக்கும்	அங்குநின்று	அவ்வாலந்தளிரிலேயிருந்தவனாய்;
ஆய்	நிர்வாஹகனாய்க் கொண்டு,	ஓர்	சப்தங்களில் ப்ரதானமான
சீர்கெழும்	அழகுமிக்க	எழுத்து	அகாரத்துக்கு
இவ்வுலகு ஏழும்	இந்த ஸப்தலோகங்களையும்	ஓர்உரு ஆனவனே	முக்யார்த்தமாய் நின்றவனே! (௫)
எல்லாம்	(மற்றும்) எல்லாவற்றையும்		
ஆர்கெழு	மிக அழகியதான		

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (பாரித்யாதி) பூமிகளேழும், கடல்களேழும், மலைகளேழுமான இவற்றுக்கு நிர்வாஹகனாய்; அழகுசெய்திருந்துள்ள இந்த லோகங்களேழு மடைய, அழகு மிக்கிருந்துள்ள வயிற்றிலே யடக்கிநின்றாய். இத்தால் - வாச்யங்களுக்கெல்லாம் தன் பக்கலிலே இருப்பாம்படி இவற்றுக்கு ஆதாரபூதனாய் நிற்கும்படி

---

‡ (பா) அருளவேணும்.

சொல்லிற்று. (ஒரெழுத் தோருருவானவனே) வாசக ஜாதத்துக்கெல்லாம் ப்ரதாநமாயிருக்கிற அகார சப்த வாச்யனானவனே!(ஆண்டாய்).

௫.—அஞ்சாம்பாட்டு. (பாரித்யாதி) கீழ்ச்சொன்ன அகடிதகடநாஸாமர்த்யந்தனக்கும் மூலமான காரணத்வத்தால் வந்த சக்தி விசேஷத்தை அநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

(வயிற்றிலே) என்றது - ஸங்கல்பத்திலே யென்றபடி. "உரு" அர்த்தம். ... ... (௫)

மூ.—கார்கெழுகடல்களும் மலைகளுமா யேர்கெழுமுலகமு மாகி முத
லார்களுமறிவரு நிலையினையாய்ச் சீர்கெழு நான்மறையானவனே
ஆண்டாயுன்னைக்காண்பதோ ருருளெனக் கருளுதியேல்
வேண்டேன் மனைவாழ்க்கையை விண்ணகர் மேயவனே. (௬)

பதம்.	உரை.
கார்கெழு	மேகங்கள்நிறைந்த
கடல்களும்	ஸமுத்ரங்களுக்கும்
மலைகளும்	பர்வதங்களுக்கும்
ஆய்	ஆதாரபூதனாய்,
ஏர்கெழும்	ஒழுங்குபட்டிருக்கிற
உலகமும்	லோகங்களுக்கும்
ஆகி	நிர்வாஹகனாய்,
முதலார்களும்	ப்ரதாநரான ப்ரஹ்மாதிகளுக்கும்
அறிவரும்	அறியப்போகாத
நிலையினையாய்	ஸ்வபாவத்தை யுடையவனாய்,
சீர்கெழு	ப்ராமாண்யமாகிற அழகுடைய
நால்மறை	நாலுவேதங்களுக்கும்
ஆனவனே	ப்ரதிபாத்ய னானவனே! (௬)

வ்யா.—ஆறாம்பாட்டு. (கார்) மேகங்கள் படிந்த ஸமுத்ரமும், பூமிக்கு ஆணியடித்தாப்போலே யிருக்கிற மலைகளும். இங்ஙன் பிரித்துச் சொல்லுகிறதென்? கட்டளைப்பட்டிருந்துள்ள லோகங்களுமாய். இத்தால் - ஜகதாதாரனாய், ஜகச்சரீரனாய் நிற்கும் நிலையைச் சொல்லுகிறது. (முதலார்களு மறிவரு நிலையினையாய்) சதுர்தச புவநேஶ்வரனான சதுர்முகன் துடக்கமான ப்ரதாநரானவர்களாலும் "இவ்வளவு" என்று பரிச்சேதிக்கவொண்ணாத ஸ்வபாவத்தை யுடையையாய், ப்ராமாண்யத்துக்குப் போரும்படி யதாபூதவாதியா யிருக்கிற நாலுவகைப்பட்ட வேதங்களாலே ப்ரதிபாத்யனா யிருக்கிறவனே!

(ஆண்டாய்) நீ ஜகதாதாரனாய் ஸர்வாதிகனா யிருப்புதி என்று ப்ரமாணங்களிலே கேட்டுப் போகையன்றிக்கே, உன்னுடைய அஸாதாரணாகாரத்தை நான் ஸாக்ஷாத்கரிக்கும்படி என்பக்கலிலே க்ருபை

யைப் பண்ணி யருளுவதியாகில், நானும் மெய்யே இத்தை அருவருத்தேன். … … … … … … (௬)

அநு —ஆறாம்பாட்டு. (காரித்யாதி) கீழ் - காரணத்வ ப்ரயுக்த சக்தி விசேஷத்தை அநுஸந்தித்தாராய், ஜகத்தெல்லாம் சரீரமாக நீ சரீரியாயிருப்பானொருவனன்றோ, எனக்கு வேண்டின புருஷார்த்தம் கொடுக்கைக்கு நீயே கடவாயென்கிறாரென்று ஸங்கதி.

“ஏர்” என்றதினர்த்தம் (கட்டளைப்பட்டு) என்றது. … (௬)

மூ.—

உருக்குறுநறுநெய்கொண்டாரழலி லிருக்குறுமந்தணர் சந்தியின்வாய்
பெருக்கமொடமரர்களமரநல்கு மிருக்கினிலின்னிசை யானவனே
ஆண்டாயுன்னைக்காண்பதோ ரருளெனக்கருளுதியேல்
வேண்டேன் மனைவாழ்க்கையை விண்ணகர் மேயவனே. (௭)

பதம்.	உரை.
அமரர்கள்	தேவர்கள்,
பெருக்கமொடு	ஸம்பத்தோடுகூட
அமர	(தங்களுக்கு) யாகோபகரணங்களைப் பொருந்தப்பண்ணுகைக்காக,
உருக்கு உறு	உருக்கப்பட்ட
நறு நெய்கொண்டு	நூதநமான நெய்யைக்கொண்டு
ஆர்அழலில்	அழகிய அக்நியிலே
சந்தியின்வாய்	ஸந்த்யாகாலங்களிலே
நல்கும்	(ஹவிஸ்ஸை) கொடாநின்றுள்ள
இருக்குஉறும்	வேதாத்யயநபரரான
அந்தணர்	ப்ராஹ்மணர்களுடைய (தநமான)
இருக்கினில்	வேதத்தில்
இன்	இனிமையான
இசை	ஸ்வரூப ப்ரணவத்துக்கு
ஆனவனே	வாச்யனானவனே!(௭)

வ்யா.—ஏழாம்பாட்டு- (உருக்குறு) உருக்கின நறுநெய்யைக் கொண்டு, அக்நியிலே, இருக்குறும் ப்ராஹ்மணர் ஸந்த்யைகள்தோறும். (பெருக்கமித்யாதி) (௧) “𑌪𑌰𑌸𑍍𑌪𑌰𑌂 𑌭𑌾𑌵𑌯𑌨𑍍𑌤𑌃 𑌶𑍍𑌰𑍇𑌯𑌃 𑌪𑌰𑌮𑌵𑌾𑌪𑍍𑌸𑍍𑌯𑌥- பரஸ்பரம் பாவயந்த ஶ்ஶ்ரேயஃ பரமவாப்ஸ்யத” என்கிறபடியே - பெருக்கத்தோடே கூட, தங்களுக்கு உபகரண ஸம்பத்தியுண்டாம்படி தேவர்கள் பண்ணுகைக்காக; அவர்களுக்கு தா(𑌧)ரகமான ஹவிஸ்ஸை அவர்களுக்குக் கொடாநின்றுள்ள ப்ராஹ்மணர்க்கு தநமான வேதத்தில் இன்னிசையுண்டு - ஸ்வரூபமான ப்ரணவம், அத்தாலே

---

(௧) கீதை-௩-௧௧.

ப்ரதிபாத்யனாயுள்ளவனே! (க) "𑌸𑌾 𑌹𑌿 𑌶𑍍𑌰𑍀𑌰𑌮𑍃𑌤𑌾 𑌸𑌤𑌾𑌮𑍍-ஸாஹிஶ்ரீரம்ருதாஸதாம்" என்று - வேத தநர் என்னக்கடவதிறே ப்ராஹ்மணரை; "𑌸𑍍𑌵𑌰𑌮𑍍 - ஸ்வரம்" என்று - ப்ரணவத்தைச் சொல்லக்கடவதிறே, (உ) "𑌯𑌦𑍍𑌵𑍇𑌦𑌾𑌦𑍌 𑌸𑍍𑌵𑌰𑌃 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌃 - யத்வேதாதௌ ஸ்வர: ப்ரோக்த:" என்று. ‡ப்ரணவம் பரஸ்வரூபத்தை ஒன்றையும் சொல்லுகிறதோ? ஆத்மஸ்வரூபத்தையும் சொல்லுகிறதோ?" என்றால், இரண்டையும் சொல்லாநின்றதிறே - (ங) "𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌯𑍁𑌞𑍍𑌜𑍀𑌤-ஆத்மாநம் யுஞ்ஜீத" என்றும், (ச) "𑌓𑌙𑍍𑌕𑌾𑌰𑍋 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃 - ஓங்காரோ பகவாந்விஷ்ணு:" என்றும். (எ)

அரு. — ஏழாம்பாட்டு (உருக்கித்யாதி) கீழ்ப்பாட்டில் - ஸகலஜகச்சரீரியாய் ஸகலவேத ப்ரதிபாத்யனான படியை யநுஸந்தித்து, நீயே என் மனோரதத்தைத் தலைக்கட்டவேணுமென்றார்; இதில்-ஸகல யஜ்ஞாராத்யனாய்க்கொண்டு, ஸகல வேதஸாரமான ப்ரணவ ப்ரதிபாத்யனான நீயே என்கார்யம் செய்யவேணுமென்கிறாரென்று ஸங்கதி.

"இருக்கு உறும்" என்றது - ருக்குக்களை உற்றிருக்கிறவென்றபடி. தேவர்கள் யாகோபகரண ஐஶ்வர்யாதிகளைக் கொடுக்கவும், ப்ராஹ்மணர் ஹவிஸ்ஸைக் கொடுக்கவுமாம்படி அந்யோந்யம் ப்ரீதியோடே கொடுக்கும்படியென்று அர்த்தமருளிச்செய்கிறார் (பரஸ்பரமித்யாதி). "இருக்குறும் அந்தணர் - இருக்கினில்" என்றந்வயித்தருளிச்செய்கிறார் (அவர்களுக்கித்யாதி). (ஹவிஸ்ஸை) என்றது அத்யாஹார்யம். வேதம் தநம் என்கைக்கு ப்ரமாணம் (ஸாஹீத்யாதி). "𑌋𑌚𑌃-𑌸𑌾𑌮𑌾𑌨𑌿-𑌯𑌜𑍂𑌂𑌷𑌿- 𑌸𑌾 𑌹𑌿 𑌶𑍍𑌰𑍀𑌰𑌮𑍃𑌤𑌾 𑌸𑌤𑌾𑌮𑍍 - ருச:-ஸாமாநி - யஜூம்ஷி-ஸாஹிஶ்ரீ ரம்ருதாஸதாம்" என்று கீழ் கூட்டிக்கொள்வது. "ஓமித்யாத்மாநம் யுஞ்ஜீத" என்றதுக்கு- ஆத்மாவை ஈஶ்வரன் திருவடிகளில் ஸமர்ப்பிக்கும்போது, "ஓம்" என்று மந்த்ரத்தைச் சொல்லும்போது ஆத்மவாசகமாக வேணுமிறே என்று கருத்து. [பெருக்கமொடமரர்கள் அமர நல்கும்படியாக - சந்தியின்வாய்-உருக்குறு நறுநெய்கொண்டு ஆரழலிலே, ஹவிஸ்ஸுக்களைக் கொடாநின்றுள்ள, இருக்குறு மந்தணருடைய இருக்கினில் இன்னிசையானவனே] என்றந்வயம். ... ... (எ)

மூ.—

காதல்செய்திளையவர் கலவிதரும் வேதனைவினையது வெருவுதலாம்
ஆதலினுனதடியணுகுவன் நான்போதலர் நெடுமுடிப் புண்ணியனே
ஆண்டாயுன்னைக் காண்பதோ ரருளெனக் கருளுதியேல்
வேண்டேன் மனைவாழ்க்கையை விண்ணகர் மேயவனே. (அ)

-)

(உ) தை-நா-ரா-க௦. (ங) தை-நா-ரா-ருக.

‡ (பா) ப்ரணவம் பரஸ்வரூபத்தையோ சொல்லுகிறது என்றால்.

பதம்.	உரை.	பதம்.	உரை.
போது அலர்	செவ்விய பூமாலையிலே அலங்கரிக்கப்பட்ட	அது	அப்படிப்பட்ட
நெடுமுடி	நீண்ட திருவபிஷேகத்தையுடைய	வினை	கர்மமானது (நினைக்கப் புகில்)
புண்ணியனே	பரிசுத்தனே!	வெருவுதல் ஆம்	(எனக்கு) பய(ப்ரத)மாகாநின்றது,
இளையவர்	யுவதிகள்	ஆதலில்	ஆகையாலே, (அது கழியும்படி)
காதல்செய்து	ப்ரீதிபண்ணி	உனது அடி	உன் திருவடிகளை
தரும்	கொடாநின்ற	நான்	நான்
வேதனை	துக்கரூபமான	அணுகுவன்	கிட்டி ஆஶ்ரயிக்கக் கடவேன். (அ)
சலவி	ஸம்ஶ்லேஷத்துக்கு ஹேதுவான		

வ்யா.—எட்டாம்பாட்டு. (காதல்) இளையவர் காதலைப் பண்ணிக்கொண்டு-ஸ்த்ரீகளானவர்கள் ஸங்கத்தை யுடையராய்க் கொண்டு, தருகிற துக்காத்மகமான ஸம்ஶ்லேஷத்துக்கு ஹேதுவாயிருக்கிற கர்மத்தை அநுஸந்திக்க வநுஸந்திக்க எனக்கு பயமாகாநின்றது; ஆனபின்பு, இப்படிப்பட்ட அபாயங்களைத் தப்புவிக்கும் உன் திருவடிகளைக் கிட்டுவன் நான். அந்த ஸம்ஶ்லேஷந்தான் துக்காத்மகமாயிறேயிருப்பது. அநுபவிக்கப் புக்கால் ஒருநாள்வரையில் பர்யாப்தனுக விரகின்றிக்கே, தன்னுடைய பும்ஸ்த்வத்தை அழியமாற வேண்டும்படியாய், இனித்தான் கண்டார்க்குக் கவிழ்தலை யிட்டுத் திரியவேண்டும்படியாய், மேல் நரகமாம்படி ஸ்வரூப ஹாநியை விளைக்கக்கடவதான ஸம்ஶ்லேஷத்துக்கு ஹேதுவான கர்மத்தை அநுஸந்திக்கிற இது அச்சத்துக்கு ஹேதுவாகாநின்றது; ஆனபின்பு, எங்கேனும் திரியிலும் யமாதிகள் †மேலே அடியிட்டுத் திரியும்படியான திருவடிகளை அணுகுவன் நான். (போதலர் நெடுமுடிப் புண்ணியனே) வைத்தவளையமும் நீயுமாயிருக்கிற இருப்பைக் காட்டி என்னுடைய இதர விஷயத்தில் ப்ராவண்யத்தைத் தவிர்த்த சுத்தியையுடையவனே! நாட்டார்க்கு இது பிறக்கிறதில்லையிறே. இவர்க்கே யிறே இது உண்டாய்த்து.

(ஆண்டாய்) உன்னை யொழிந்தவிஷயங்களில் ருசியைப் போக்கின நீயே, உன்னை நான் கண்ணாலே காணலாம்படி என் பக்கலிலே க்ருபையைப் பண்ணுவுதியாகில், எனக்கு இவற்றில் அருசியுண்டு

---

† (பா)தலையிலே.

அரு.—எட்டாம்பாட்டு. (காதலித்யாதி) கீழ்ப்பாட்டில்-ஸகலயஜ்ஞாராத்யனை நீயே எனக்கருளவேணுமென்றார்; இதில் - ஆழ்வார்! ஸகல யாகங்களைப் பண்ணி அந்தணர் ஸ்வர்க்காதி பலங்களை ப்ராபிக்க, நீரொருவரும் "வேண்டேன்" என்கிறது என் கொண்டென்ன வருளிச்செய்கிறீரென்று ஸங்கதி.

விவரணம் (ஸ்த்ரீகளித்யாதி). கீழ்- வாக்யார்த்த மருளிச்செய்து தாத்பர்யார்த்த மருளிச்செய்கிறார் (அந்த ஸம்ஶ்லேஷர்தா னித்யாதி).... (அ)

மூ.—

சாதலும்பிறத்தலு மென்றிவற்றைக் காதல்செய்யாதுனகழலடைந்தேன்
ஓதல்செய் நான்மறையாகி யும்பராதல்செய் மூவுருவானவனே
ஆண்டாயுன்னைக்காண்பதோ ரருளெனக் கருளுதியேல்
வேண்டேன் மனைவாழ்க்கையை விண்ணகர்மேயவனே. (௯)

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஓதல்செய்	அத்யயநம் பண்ணப்படாநின்ற	சாதலும்	மரணமும்
நால்மறையாகி	நாலு வேதங்களுக்கும் நிர்வாஹகனாய்	பிறத்தலும்	ஜநநமும்
உம்பராதல்	தேவர்களில் ப்ரதாநராக	என்று	என்று சொல்லப்படுகிற துஃக்க பரம்பரையை ஆராய்ந்து
செய்	பண்ணப்பட்ட	இவற்றை	இந்த ஜநநாதிகளை
மூவுருஆனவனே	ப்ரஹ்ம ருத்ரேந்த்ரர்களைச் சரீரமாக உடையவனே!	காதல்செய்யாது	விரும்பாதவனாய்க் கொண்டு
		உனகழல்	தேவரீர் திருவடிகளை
		அடைந்தேன்	ஆஶ்ரயித்தேன். (௯)

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (சாதல்) மரணஸமயத்திலே படும் வ்யஸநம், பின்பு நரகாநுபவம் பண்ணிப்படும் வ்யஸநம், பஞ்சாக்நி வித்யையில் சொல்லுகிறபடியே கர்ப்பரூபத்தாலே படக்கடவ வ்யஸநம், இவற்றை அநுஸந்தித்து ஜந்மாதிகளில் ஆசைபண்ணாதே, இவற்றைத் தவிர்த்தருளும் தேவர் திருவடிகளை வந்துகிட்டினேன். இவற்றை ஆதரிப்பாருண்டோ வென்னில்; "அநிஷ்டாவஹமான ஜநமாதிகளைக் கழித்துக்கொள்வான் பகவத்ஸமாஶ்ரயணம் பண்ணி" என்று சாஸ்த்ரங்கள் சொல்லாநிற்க, அது செய்யாதபோதே, இத்தை ஆதரித்தார்களா மித்தனையிறே. (ஓதல்) என்று மொக்க ஓதியே போரக்கடவதாகையாலே, நிர்த்தோஷமாயிருந்துள்ள வேதங்களை விபூதியாக வுடையையாய், தேவர்களுக்கெல்லாம் ப்ரதாநராய், அதிகாரி

புருஷர்களா யிருக்கிற ப்ரஹ்ம ருத்ராதிகளைச் சரீரதயா சேஷமாக உடையவனே!

(ஆண்டாய்) எனக்கு இங்ஙனே யிருப்பதோரு அதிகாரத்தைத் தந்து, காற்கட்டாமது எனக்கு வேண்டா. (வேண்டேன்) அவர்களதிகாரங்களில் எனக்கு ருசியில்லை. ... ... (௯)

அரு.—ஒன்பதாம்பாட்டு. (சாதலித்யாதி) நாட்டிலே இளையவர் கலவியே புருஷார்த்தமென்று ஊர்வசீ ஸாலோக்யத்துக்கு யத்நம்பண்ணாநிற்க, நீர் அதுக்கு வெருவுகைக்கு மூலமேதென்ன வருளிச்செய்கிறாரென்று ஸங்கதி.

"உம்பராதல்" உம்பராக - மேலாக், ப்ரதாநராக, செய்யப்பட்ட மூவுருவையும் சரீரமாக வுடையவனே யென்றருளிச் செய்தினார் (தேவர்களுக்கெல்லா மித்யாதி).... ... ... (௯)

மூ.—பூமரு பொழிலணி விண்ணகர்மேல்
காமரு சீர்க்கலிகன்றி சொன்ன
பாமரு தமிழிவை பாடவல்லார்
வாமன னடியிணை மருவுவரே. (௧௦)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

* * *

பதம்.	உரை.	பதம்.	உரை.
பூமரு	பூக்கள் பொருந்தின (எப்போதும்பூவா நின்ற)	பாமரு	அழகிய பாசுரங்கள் நிறைந்த
பொழில்	சோலைகளை	தமிழ் இவை	த்ராவிடரூபமான இந்தப் பத்துப்பாட்டையும்
அணி	அலங்காரமாக வுடைய	பாடவல்லார்	அப்யஸிக்க வல்லவர்கள்,
விண்ணகர் மேல்	திரு விண்ணகரென்னும் திவ்யதேச விஷயமாக,	வாமனன்	வாமநாவதாரம் பண்ணின ஸர்வேஶ்வரனுடைய
காமரு	ஆசைப்படத்தக்க	இணை அடி	ஒன்றோடொன்று சேர்ந்திருக்கிற திருவடிகளை
சீர்	ஸ்ரீவைஷ்ணவஸ்ரீயை யுடைய	மருவுவர்	கிட்டப்பெறுவர்கள்.
கலிகன்றி	ஆழ்வார்		
சொன்ன	அருளிச்செய்த		

வ்யா.—பத்தாம்பாட்டு. (பூமருவித்யாதி) பூமாறாத பொழிலாலே அலங்க்ருதமாயிருந்துள்ள திருவிண்ணகர்மேலே சொல்லிற்று.

நித்யவஸந்தமான திருவிண்ணகர்மேலே. (காமரு) காமரப்படுவதாய் - எல்லார்க்கும் ஸ்ப்ருஹை பண்ணவேண்டும்படியான வைஷ்ணவஸ்ரீ யையுடையரான ஆழ்வாரருளிச்செய்த, நல்ல ச(ஞ்)ந்தஸ்ஸுக்களை யுடைத்தான இவற்றை அப்யஸிக்கவல்லவர்கள். (வாமநனடி) இவர் "வேண்டேன்" என்றத்தைத் தவிர்ந்து, "அருளுதியேல்" என்றபேற்றைப்பெறுவர்.... ... ... (௯)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

அரு.—பத்தாம்பாட்டு. (பூவித்யாதி) தாத்பர்ய மருளிச்செய்கிறார் (நித்யேத்யாதி). (இவர்) ஆழ்வார். ... ... (௰)

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஆறும்பத்தில் முதல்திருமொழி முடிந்தது.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஆறும்பத்து இரண்டாந்திருமொழி

பொறுத்தேன் ப்ரவேசம்.

வ்யா.—ஸம்ஸாரத்தில் தமக்குண்டான அருசியை விண்ணப்பம்செய்தார்; விண்ணப்பம் செய்யச்செய்தேயும் கடுகவந்து அத்தைத் தவிர்த்துத் தன்னைக்கொடுத்துகொடு நிற்கக்கண்டிலர்; காணாமையாலே, "முன்பு அநாதிகாலம் அவற்றைவிரும்பித் தன்னைநெகிழ்ந்து போந்தோம், இப்போதும் அவ்வாஸநையைக்கொண்டு அவற்றை விரும்பித்தன்னை நெகிழ்ந்திருந்தோம்" என்று நினைத்திருந்தானாக வேணும்; பூர்வவ்ருத்தத்தை ஸ்மரிப்பித்து, அதில் எனக்கு ருசியில்லையென்னுமிடத்தை ஸர்வஜ்ஞன் திருவுள்ளத்திலே படுத்திக் கடுகக் கிட்டலாவதொரு ஸாதநத்தைப் பரிக்ரஹித்துக் கொடுநிற்கவேணுமென்று பார்த்து; அதுக்குறுப்பாக, அநாதிகாலம் தாம் ஸம்ஸரித்துப் போந்தபடியையும், அது தன்னில் ஜந்ம பரம்பரைகளிலே கைகழிந்தபடியையும், அர்த்தகாமங்களை விரும்பிப் போந்தபடியையும், இந்

ரிய வஶ்யனாய்ப் போந்தபடியையும், இப்போது மேல் வரக்கடவதான நரகாநுபவத்தை நினைத்து அஞ்சுகிறபடியையும் விண்ணப்பம்செய்து, "இவை என்னால் கழித்துக்கொள்ளலாவதன்றிக்கே யிருந்தது, என்னுடைய இக்குற்றங்களொன்றையும் பாராதே தேவரோடுண்டான நிருபாதிக ஸம்பந்தத்தையே பார்த்துப் பிராட்டி புருஷகாரமாக என்னை ஸ்வீகரித்தருளவேணும்" என்று திருவடிகளிலே விழுந்து சரணம் புகுகிறார். ... ... *

அநு.—பொறுத்தேன் ப்ரவேசம்.—கிழ்த்திருமொழியில் ஒருகால் சொன்னாப்போலே ஒன்பதின்கால் "மனைவாழ்க்கையை-வேண்டேன்" என்ற இவர், இத்திருமொழியில் பூர்வ வ்ருத்தத்தைச் சொல்லி சரணம் புகுருவானென்? என்னும் சங்கையிலே, அநாதிகாலம் மனைவாழ்க்கையிலே வாஸனைபண்ணி இப்போதாக "வேண்டேன்" என்றால் இது ஸஹ்ருதயோக்தியாமோ என்னும் நினைவாலே வைத்தானாகவேணுமென்று அவற்றையெல்லாம் தாமேசொல்லிச் சரணம்புகுகிறார் என்னும் ஸங்கதியைக் காட்டுகிறார் (ஸம்ஸாரத்தி லித்யாதி). ... ... *

மூ.—பொறுத்தேன் புன்சொல்நெஞ்சில் பொருளின்பமென விரண்டு
மிறுத்தேனைம்புலன்கட்கடனாயின வாயிலொட்டி
யறுத்தேனார்வச்செற்ற மவைதன்னை மனத்தகற்றி
வெறுத்தேன் நின்னடைந்தேன் திருவிண்ணகர் மேயவனே.(க)

பதம்.	உரை.
புன்சொல்	(பிறர்சொல்லும்) ஹீனோக்திகளை
நெஞ்சில்	மநஸ்ஸிலே
பொறுத்தேன்	ஸஹித்திருந்தேன்;
ஐம்புலன்கள்	பஞ்சேந்த்ரியங்களுக்கும்,
கடனாயின	கடன்போலே வைத([illegible])மாய் ப்ராப்தமான
பொருள்	அர்த்தம்
இன்பம்	காமம்
என இரண்டும்	என்று சொல்லப்படுகிற இரண்டையும்
இறுத்தேன்	கொடுத்தேன்;
ஆர்வம்	(அநுகூலரிடத்தில்) ப்ரீதி
செற்றம்	(ப்ரதிகூலரிடத்தில்) த்வேஷம்
அவைதன்னை	ஆகிய அவற்றை
வாயிலொட்டி	ப்ரதிஜ்ஞைபண்ணி
அறுத்தேன்	அநுஷ்டாநபர்யந்தமாக நிறைவேற்றினேன்;
மனத்து	(அந்த ப்ரேமத்வேஷங்களை) மநஸ்ஸிலே
அகற்றி	அகலப்பண்ணி (விஸ்தரிக்கச்செய்து)
வெறுத்தேன்	(பின்பு) ஜுகுப்ஸித்தேன்,
திருவிண்ணகர்	திருவிண்ணகரென்னும் திவ்யதேசத்தில்
மேயவனே	பொருந்தியிருக்கும் ஸர்வேஶ்வரனே!
நின் அடைந்தேன்	உன்னைச் சரணமாகவடைந்தேன். (க)

வ்யா.—முதற்பாட்டு. (பொறுத்தேன்) ஸம்ஸாரிகளை "பந்துக்கள்" என்று நினைத்திருந்தால், அவர்கள் தாங்கள் சத்ருக்களாயிருக்கச் செய்தேயும், அண்ணியாரைப்போலே வர்த்தித்து, இவன்பண்ணின உபகாரங்களைக் கொண்டு, உபகரியாதானாக வார்த்தை சொன்னால், "இவர்கள் வேறுசிலரை இவ்வார்த்தை சொல்லாநின்றார்களோ, நம்மை இவ்வார்த்தை சொல்லிற்று நம்மோடுண்டான உறவில் ஊற்றமன்றோ" என்று, அவர்கள் சொல்லும் புல்லியசொற்களை ஸஹித்துப் போந்தேனென்னுதல்; அன்றிக்கே, ஸமஸ்தகல்யாணகுணாத்மகனாய், புண்டரீகாக்ஷனாயிருக்கிற ஸர்வேஶ்வரனை ஸ்துதிக்கக்கடவ பாசுரங்களைக்கொண்டு, (க) "பாரிலோர்பற்றையை" என்கிறபடியே த்ருணஸமனாயிருக்கிற க்ஷுத்ரனை, (உ) "பனியிருங்குழல்கள்" என்றும் (ங) "சுந்தரத்தோள்" என்றும் சொல்லிக்கவிபாடும்படி, புல்லியசொற்களை நெஞ்சிலே தரித்துப் போந்தேனென்னுதல். சொல்லுக்குப்புன்மை, விஷயத்தைப்பற்ற வருமதிறே.

(பொருளித்யாதி)சிலரை பந்துக்களாக நினைத்திருந்தால், அவர்களுக்கு உபகரிக்கும்போது அர்த்தம்வேணுமே; பிறரைக்கவிபாடுவது அர்த்தத்துக்காகவிறே; ஆகையாலே, ஶ்ரோத்ராதிகளுக்கு ப்ராப்தமாயிருக்கிற அர்த்த காமங்கள் என்று சொல்லப்படுகிற இரண்டையும், கடமை இறுப்பாரைப்போலே அவற்றாலேபரி பூ(ஃபூ)தனாய்க் கொடுத்துப்போந்தேன்; இப்படி அர்த்தக்ரஹணம் பண்ணப்புக்கால், அதுக்கு ஸஹகரித்தவர்களுக்கு ஸ்நேஹித்து வாழ்விக்கக்கடவனென்றும்; அதுக்கு விரோதத்தைப்பண்ணினாரைச் செற்று முடிக்கக்கடவனென்றும் ப்ரதிஜ்ஞைபண்ணி, அந்தஸங்கல்பத்தை அநுஷ்டானபர்யந்தமாக்கித் தலைக்கட்டிப்போந்தேன்; பொருளின்பமென விரண்டுமிறுத்தேன்.

(அவைதன்னைமனத்தகற்றி) இப்படி நெடுநாள் வாஸனைபண்ணிப்போந்த இவற்றைக் கழித்துக்கொள்ளப்பார்த்து, அது என்னால் செய்து தலைக்கட்டப்போகாதாகையாலே, வெறுத்துவந்து உன் திருவடிகளைப் பற்றினேனென்னுதல்; அன்றிக்கே இவைதன்னை ஸங்கல்பிக்குமித்தனைபோக்கி இவனால் அநுஷ்டித்துத் தலைக்கட்டப் போகாதே; வாஸனையாலே அவைதான் நெஞ்சிலேபட்டுக்கிடக்குமே;

(க) தி-வாய்-ங-கூ-எ. (உ) தி-வாய்-கூ-கூ-ங. (ங) நா-தி-கூ-க.

அவற்றை ஹ்ருதயத்திலே விரிய விட்டுக்கூடுபூரித்து. "அவைதன்னை" என்று-ராக த்வேஷங்களை. (வெறுத்தேன்) அதுதான் பின்னை சோக மோஹங்களோடே தலைக்கட்டுமிறே; அத்தாலே வந்து தேவர் திருவடிகளிலே சரணம்புகுந்தேன். (திருவிண்ணகர்) இவன் இப்போது செய்கிற இவை விபாகத்தில் அநர்த்தத்தோடே தலைக்கட்டக்கடவது; அப்போதாக "சுக்கிடத்திட்டுண்டோ" என்பாரைப்போலே, நமக்குத்தஞ்சமாவாரார்? என்று ஆராயக்கடவன், அவ்வளவில் நாம் தூரஸ்த்தராகவொண்ணாது என்று, நான் விபரீதத்திலே கைவளருகிறநாளே தொடங்கி எண்ணித் திருவிண்ணகரிலேவந்து ஸந்நிஹிதனாகையாலே திருவடிகளிலே வந்து சரணம்புகுந்தேன் என்னுமளவுமாய்த்திறே இங்குவந்து நின்றது. ... ... (க)

அரு.—முதற்பாட்டு. (பொறுத்தேனித்யாதி) "புன்சொல் - நெஞ்சில்- பொறுத்தேன்" என்று அந்வயித்து, "நெஞ்சில்" என்று விசேஷித்ததுக்கு ஹேது பூர்வகம் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (ஸம்ஸாரிகளை யித்யாதி). லோகோக்தியன்றியே "சொல்" என்றது - கவிகளாய், அர்த்தாந்தர மருளிச்செய்கிறார் (அன்றிக்கே யித்யாதி).

இவ்வர்த்தத்வயத்துக்கும் சேரத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (சிலரை யித்யாதி). "ஐம்புலன்கட் கடனாயின - பொருளின்ப மென விரண்டும் இறுத்தேன்" என்று அந்வயித் தருளிச்செய்கிறார் (ஆகையாலே யித்யாதி). இத்தால் - பந்துக்களுக்காக இறுத்தேனென்று முந்தின வர்த்தத்துக்குத் தாத்பர்யமும், ஐம்புலன்கட்காக இறுத்தேனென்று இரண்டா மர்த்தத்துக்கு அநுகுணமாகத் தாத்பர்யமும் கண்டுகொள்வது. "ஆர்வச்செற்றத்தை - வாயிலொட்டி யறுத்தேன்" என்று அந்வயித்தருளிச்செய்கிறார் (இப்படி யித்யாதி).

"அவைதன்னை" என்றது - "பொருளின்பம்" என்றவற்றை யாதல், ஆர்வச்செற்றங்களைச் சொல்லுதல்; ஆக, இரண்டுயோஜனை யருளிச்செய்கிறார் (இப்படி நெடுநாளித்யாதி). "மனத்தகற்றி" என்றதுக்கு - பொருளின்பங்களை மனத்தில்நின்றும் அகலும்படி பண்ணியென்றாதல், ஆர்வச்செற்றங்களை மனத்திலே, அகல - விஸ்த்ருதமாகப் பண்ணி யென்றாதல் சொல்லலாமென்று கருத்து. (சுக்கிடத்திட்டுண்டோ) என்றது - ஒருசெட்டி அக்கரைக்குப் போகாநிற்க, ஓடக்காரன் காசுகேட்க, "நான் என்காலாலே நடந்து போகாநிற்கச்செய்தே உனக்குக் காசு ஏது" என்று போனாய், திரும்பிவரும்போது நட்டாற்றிலே வருகிறவளவிலே மார்மட்டுக் கழுத்துமட்டாக, அப்போது பயப்பட்டு "சுக்கிடுகிறேன், திட்டுண்டோ - திடருண்டோ" என்றானாம்; அத்தைச் சொல்லுகிறது. இத்தால் - இச்சே

தானும் ஏற்கவே விசாரியாமல் ஆபத்து வந்தவேளையிலே தேடுவன், அப்போதாகவொண்ணாது என்று திருவிண்ணகரில் ஏற்கவேவந்து நின்றான் என்றதாய்த்து. ... ... (௧)

மூ.—மறந்தேனுன்னை முன்னம் மறந்த மதியின் மனத்தால்
இறந்தேனெத்தனையு மதனாலிடும்பைக் குழியில்
பிறந்தேயெய்த்தொழிந்தேன் பெருமான் திருமார்பா
சிறந்தேன் நின்னடிக்கே திருவிண்ணகர் மேயவனே. (௨)

பதம்.	உரை.	பதம்.	உரை.
உன்னை	எப்போதும்நினைக்கத் தக்க உன்னை	பிறந்தே	இடைவிடாத ஜநந(மரண)ங்களை யுடையனாய்க்கொண்டு
முன்னம்	அநாதிகாலமாக [ன்,	எய்த்து	இளைத்து (சக்தியற்றவனாய்க் கொண்டு)
மறந்தேன்	நினையாதொழிந்தே (அதுக்குமேலே)	ஒழிந்தேன்	ஸ்வயத்நத்தில் நின்றும் நிவ்ருத்தனானே
மறந்த	நினையாதொழிந்தேனென்கிற	பெருமான்	ஸ்வாமியே! [ன்,
மதிஇல்	ஜ்ஞாந (அநுதாப)முமில்லாத [கையால்	திருமார்பா	புருஷகார பூதையான பிராட்டியைத் திருமார்பிலே யுடையவனே! (இப்போது)
மனத்தால்	மநஸ்ஸை யுடையேனு	நின்அடிக்கே	உன்திருவடிகளுக்கே (ஆட்பட)
எத்தனையும்	மிகவும்(அசித்தைக்காட்டிலும்)	சிறந்தேன்	தகுந்தவனானேன்;
இறந்தேன்	கைகழியப் போந்தேன்; (நிக்ருஷ்டனு		திருவிண்ணகர் மேயவனே! (௨)
அதனால்	ஆகையாலே[னேன்).		
இடும்பை	து:க்கரூபமான		
குழியில்	கர்ப்பத்தில்		

வ்யா.—இரண்டாம்பாட்டு. இத்தனையோ செய்தகுற்றமென்ன, (மறந்தேனுன்னைமுன்னம்) அந்தப்பொருளின்பங்களோபாதி உன்னையும் ஒருமூலையிலே ஆதரித்துக்கொடு போரப் பெற்றிலேன். அது செய்து போந்தாராகில் அப்போதைக்கிப்போது அவற்றுக்குப் பரிஹாரம் பண்ணினாராவரே. (மறந்தேன்) யாதொரு விஷயம்விடாதே நினைக்கவடுக்கும், அதொன்றையும் மறந்துபோந்தேன். மதுரையிலே நிர்வஹியாநிற்கச்செய்தே, ஒப்பிலாதபெருமாள் (௧) "𑌧𑍍𑌯𑍇𑌯𑍋 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌸𑍍𑌸𑌦𑌾 - த்யேயோ நாராயணஸ்ஸதா" என்கிறவிஷயத்தையாகாதே மறந்துபோந்தது" என்றார். அல்லாதவை செய்தபடிசெய்ய, உன்னை முந்

---

(௧)

துறமுன்னம் மறந்துகொடுநின்றேனென்னுதல்; அன்றிக்கே, அநாதி காலம் மறந்துபோந்தேனென்னுதல். இம்மறப்புப்போருகிறது நெடுநாளுண்டாகில், உன்னை முன்னம் மறந்திலேன் என்றன்றோ சொல்லவடுப்பது என்னில்; அதுவேண்டாவாய்த்து, "உன்னை" என்கிறவிடத்திலே ஸம்பந்தத்தை ஸ்மரித்தவராகையாலே; ஸம்பந்தம் ஸ்வாபாவிகமேயாகையாலே, முன்பு நெடுநாள் மறந்துபோரச்செய்தேயும் சில நாள் ஸ்மரித்து மறந்தாப்போலே யிருக்கத் தோற்றிற்று.

* கலங்காப் பெருநகாந்தன்னிலே யிருந்து மறக்கிறதன்றிறே, ஸம்ஸாரத்திலே யிருந்து மறக்கை குற்றமோவென்ன; அவ்வளவேயன்று, நான் சேதநனாகப்பெற்றிலேனென்கிறார். சேதநனாகில் "மறந்தோம்" என்னும் அநுதாபம் பிறக்கவேணுமிறே மறந்தால்; "மறந்தோம்" என்கைக்கு யோக்யதையில்லையிறே அசித்துக்கு; சித்துக்கு ஜ்ஞாத்ருத்வமாகிறது - ஜ்ஞாநகுணங்களுக்கு ஆஶ்ரயமாகையிறே; அக்குணங்கள் தன்பக்கல் காணாமையாலே அவற்றுக்கு ஆஶ்ரயமுண்டாகப்பெற்றதில்லை. மறந்தோமென்கிற மதியில்லாத நெஞ்சையுடையேனென்கையாலே - அநுதாபரூபஜ்ஞாநமும் பிறக்கைக்கு த்வாரம் மநஸ்ஸிறே; அதில்லாமையாலே (இறந்தேனெத்தனையும்) அசித்துக்கும் அவ்வருகேயானேன். முதலிலே நினைக்கைக்கும் யோக்யதையில்லையிறே அசித்துக்கு; சித்துக்கு யோக்யதையுண்டாயிருக்கச்செய்தேயும், நினையாமையாலே அசித்துக்கும் அவ்வருகே கை கழியப்போனேன். (க) "𑌅𑌸𑌨𑍍𑌨𑍇𑌵 - அஸந்நேவ" என்று ப்ரமாணங்களும் சொல்லலாம்படியானேன். உண்டாயிருக்கச் செய்தேயும், "இல்லை" என்று வ்யவஹரிக்கலாம்படி நசித்தேன்.

(அதனால்) (உ) "𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌤𑌰𑍁𑌸𑌂𑌭𑍂𑌤𑌿 𑌬𑍀𑌜𑌮𑍇𑌤𑌦𑍍𑌦𑍍𑌵𑌿𑌧𑌾 𑌸𑍍𑌥𑌿𑌤𑌮𑍍 - அவித்யாதருஸம்பூதி பீஜமேதத்த்விதா ஸ்த்திதம்" என்கிறபடியே - அநாத்மந்யாத்மபுத்தியும் அஸ்வே ஸ்வபுத்தியும் ஸம்ஸாரத்துக்கு பீஜமென்றிருப்பார்கள்; இவர், அநுதாபமில்லாமை ஸம்ஸாரபீஜமென்றிருக்கிறார். (இடும்பை) து:க்கம். து:க்கத்தை விளைக்கக்கடவதான கர்ப்பத்திலே போய்ப்புக்கு, சாவது பிறப்பதாய்க்கொண்டு க்லேசப்பட்டேபோந்தேன். (பிறந்தே) இப்படி சாவது பிறப்பதாய்ப்போராநின்றால், நடுவிலே காதாசித்கமாக பகவத் ஸமாஶ்ரயணம்பண்ணிலிறே அதொரு

(க) தை-ஆந-ரு-க. (உ) வி-பு-சு-எ-கக.

ஜந்மத்துக்கு ப்ரதிபந்தகமாக வற்றுவது; அப்படி புருஷகாரங்காட்டி மீண்டதில்லை. (எய்த்தொழிந்தேன்) இன்னும் பிறக்கைக்கடியான கர்மவாஸனை யுண்டேயாகிலும், பிறக்கைக்கு த்ரவ்யமில்லாதபடி யானேன்; - கர்மவாஸனை கிடந்து பிறக்கவேண்டினாலும் பிறக்கைக்கு க்ஷமனல்லேன். ‡ (ஒழிந்தேன்-நானே-எய்த்தேன்) இனி, உடையவர்களுக்கு எடுத்துக்கொள்ள நல்லகாலமென்கிறார்.

உடையவர்கள் எடுத்துக்கொள்ளுகிறார்கள் என்கிறது நீர்தாம் எது நினைத்தென்ன; (பெருமான்). உம்மை நினைத்துக் கைகழிந்தீராகில் செய்யலாவதுண்டோ வென்ன; (பெருமான்) எனக்கு நானேயோ உளேன்? நீயல்லையோ? சேஷித்வப்ராப்தியைப் பற்றச் சொல்லுகிறீராகில், சேஷிகளாவார்க்கு ஸ்வாதந்த்ர்ய முண்டாயிருக்குமே; ஸ்வதந்த்ரரான நம்மைச் சொல்லுகிறதென் நீரென்ன; (திருமார்வா) உன்னுடைய ஸ்வாதந்த்ர்யத்தை அழித்து ஸ்வீகரிப்பிக்கும் பிராட்டியன்றோ அருகேயிருக்கிறாள். (க) "నకశ్చిన్నాఽపరాధ్యతి - நகஶ்சிந்நா஽பராத்யதி" என்பாளன்றோ அருகே. (சிறந்தேன்) அவள் ஏதேனும் தப்புச் சொல்லிலும் விடேனென்னும் நீயும், உன் ஸ்வாதந்த்ர்யத்தை யழித்து உன்னையிட்டு ஸ்வீகரிப்பிக்குமவளும், இருவரும் இங்கே ஸந்நிதிபண்ணுகையாலே, தேவர் திருவடிகளுக்குத் தகுதியானேன். (திருவிண்ணகர்) *கலங்காப் பெருநகரம் இருப்பாயிருக்க, அவ்விடத்தை விட்டுப் பிராட்டியோடே கூட, எய்த்தாரை எடுக்கைக்காகத் திருவிண்ணகரிலே ஸந்நிஹிதனானாய். நான் எய்த்துக் கொடுநின்றேன்; எய்த்தார்க்கும், எய்த்தாரை எடுக்கவந்து நிற்கிறவர்களுக்கும் ஒரு சேர்த்தியில்லையோ?... ... ... (உ.)

அரு.—இரண்டாம்பாட்டு. (மறந்தேனித்யாதி) (உ) "మేరుమన్దరమాత్రోఽపి రాశిః పాపస్య కర్మణః। కేశవం వైద్యమాసాద్య దుర్వ్యాధిరివ నశ్యతి- மேருமந்தரமாத்ரோபி ராசிঃ பாபஸ்ய கர்மண:। கேசவம் வைத்யமாஸாத்ய துர்வ்யாதிரிவ நஶ்யதி" என்றிருக்க, நீரிங்ஙனே இத்தனை அஞ்சவேணுமோ என்னும் சங்காமுகேந ஸங்கதி ஸ்ப்புரிப்பிக்கிறார் (இத்தனையோவித்யாதி). இந்த பதத்துக்கு இப்படி அர்த்தம் சொன்னபேருண்டோ வென்ன வருளிச்செய்கிறார் (மதுரையிலே யித்யாதி).

மேலுக்கவதாரிகை (கலங்காவித்யாதி). சேதநனாலே அநுதாபம் வேணும் என்கைக்கு ஜ்ஞாபகமென்னென்ன வருளிச்செய்கிறார் (சேதந

(க) ரா-யு-ககசு-ருச. (உ) விஷ்ணுதர்மம்-எஅ. ‡ (பா) நான்.

னாகி லித்யாதிவாக்ய சதுஷ்டயத்தாலே); அசித்வ்யாவ்ருத்த னாகையாலே அநுதாபத்துக்கு யோக்யதை உண்டென்று கருத்து. மேலுக்கவதாரிகை (அநுதாபேத்யாதி). “மறந்த மதியின்மனம்” என்கையாலே - அநுதாபமில்லை யென்றாய், அசித்ஸாம்யம் சொல்லிற்று; சித்துக்கு ஸாம்யம் எவ்வாகாரத்தாலே யென்ன வருளிச்செய்கிறார் (சித்துக் கித்யாதி). “எத்தனையும் - இறந்தேன்” என்றது- மிகவும் இறந்தேனென்றாய் அசித்தைப்பற்ற ஆதிக்யஞ் சொல்லுகிறது.

“பிறந்தே” என்கிற அவதாரணத்தைப் பற்ற வருளிச்செய்கிறார் (இப்படி யித்யாதி). (காட்டி)புருஷகார முண்டேயென்று. “எய்த்தொழிந்தேன்” என்று முழுச்சொல்லாக்கி யருளிச்செய்கிறார் (இன்னுமித்யாதி). விவரணம் (கர்மேத்யாதி). இரண்டுசொல்லாக்கி அந்வயித்து “ஒழிந்தேன்” என்றதுக்கு ஸ்வயத்நத்தை விட்டேன் என்றாக்கி, அத்தாலே “எய்த்தேன்-தரைப்பட்டேன், போக்கற்றேன்” என்றாக்கி, இரண்டாலும் பலிதார்த்த மருளிச்செய்கிறார் (இனியித்யாதி). இத்தால் - ஆகிஞ்சந்யாநந்யகதித்வங்களுடைய னாகையாலே உனக்கு நல்ல ஸமயமென்று கருத்து.

இரண்டுபதமாக்கின பக்ஷத்துக்கு அநுகுணமாக ஓரவதாரிகை யருளிச்செய்து, முழுச்சொல்லான பக்ஷத்துக்குச் சேர “பெருமான்” என்றதுக்கு அவதாரிகை (உம்மையித்யாதி).... ... ... (௨)

மூ.—மானேய் நோக்கியர்தம் வயிற்றுக்குழியி லுழைக்கும்
ஊனேராக்கை தன்னை யுதவாமை யுணர்ந்துணர்ந்து
வானேமாநிலமே வந்துவந்தென் மனத்திருந்த
தேனே நின்னடைந்தேன் திருவிண்ணகர் மேயவனே. (௩)

பதம்	உரை.	பதம்.	உரை.
வானே	நித்யவிபூதி நிர்வாஹகனே!	நோக்கியர்தம்	கண்ணழகை யுடையரான ஸ்த்ரீகளுடைய
மா	பெரிய		
நிலமே	பூமியோடு கூடின லீலாவிபூதிக்கு நிர்வாஹகனானவனே!	வயிற்றுக்குழியில்	கர்ப்பத்திலிருந்து
வந்து	பரமபதத்தில் நின்றும்வந்து	உழைக்கும்	க்லேசப்படுமதாய்;
உவந்து	உகப்புடனே	ஊன்	மாம்ஸமயமாய்,
என்மனத்து	என் ஹ்ருதயத்தில்	ஏர்	புருஷார்த்தஸாதகமாகையாகிற அழகை யுடையதான
இருந்த	நித்யவாஸம் பண்ணுகின்ற		
தேனே	போக்யபூதனே!	ஆக்கைதன்னை	கேவல சரீரத்தையும்
மானெய்	மானோடொத்த		

உதவாமை	(அது என்னுடைய புருஷார்த்தத்துக்கு) ஸாதநமாகாமையையும்	உணர்ந்து உணர்ந்து	நன்றாக அறிந்து
		நின் அடைந்தேன்	உன்னையே ஸாதநமாகப் பற்றினேன்.

திருவிண்ணகர் மேயவனே! (௩)

வ்யா.—மூன்றாம்பாட்டு. (மானேய்) மானேய்ந்த நோக்கையுடையராயிருக்கிற ஸ்த்ரீகளுடைய. (வயிற்றுக்குழியி லுழைக்கும்) ஒரு தேசவிசேஷத்திலே போய் யமனுடைய தண்டலிலே உழைக்குமது கிடக்கச்செய்தே,கர்ப்பத்திலே புக்குப்படும் க்லேஶத்துக்கு அவதியில்லையாய்த் திருப்பது. தங்களுடைய பருவமும் மௌக்த்யமும் கிடக்கச்செய்தே, “ஒருப்ரஜை யுண்டாகவேணும்” என்று நோன்பு நோற்பர்களாய்த்து; இவனுடைய விநாசத்துக்காய்த்து யத்நிப்பது. (ஊனேயாக்கை) என்னவுமாம், (ஊனேராக்கை) என்னவுமாம். மாம்ஸப்ராசுரமான சரீரமென்றபடி; உள்ளும் புறம்பு மொக்க த்யாஜ்யமாயிருக்கை. இதுக்கு இரண்டாகார முண்டு; தன்னை விரும்பினாரைத் தானும் விரும்பி, தன்னை வேண்டாதாரைத் தானும் வேண்டாதது; ஆகையாலே, புருஷார்த்த ஸாதநமான ஆகாரம் கிடக்கச்செய்தே பந்தகமான ஆகாரமே யாய்த்து வித்திப்பது. (உதவாமை யறிந்தறிந்து) காண்கிற தேஹத்திலே விருப்பத்தைப் பண்ணி, இது தன்னையே ஆத்மாவாக அபிமாநித்து; ஆத்மாவையும், அதுக்கு சேஷியான ஈஶ்வரனையும் நெகிழ்ந்துபோந்தால், பின்னை பந்தகமேயாய்த்துத் தலைக்கட்டுவது. நல்வழி போகைக்கு உடலாமது கிடக்க, அநர்த்தத்தை விளைக்குமதாய் த்யாஜ்யமாயிருக்கு மென்னுமிடத்தை விசதமாக வறிந்து.

(வானேமாநிலமே) உபயவிபூதி யோகத்தால் வந்த உயர்த்தியும் கிடக்கச்செய்தே, என்னைப் பெறுகை தனக்குப் பெரும்பேறு என்னுமிடம் தோற்ற இராநின்றான். (வானே) என்கிறது - நித்யவிபூதியை; (மாநிலமே) என்கிறது - லீலாவிபூதியை; ஆக, உபயவிபூதி யுக்தனென்றபடி. விபூதித்வயத்தையும் தனக்கு ப்ரகாரமாக உடையனாயிருந்துவைத்து என்னைப் பெறுகை தனக்குத் தேட்டமாக வந்தானாய்த்து. (வந்து வந்து) முன்பு அநாதிகாலம் இவரைப் பெறுகைக் குறுப்பாக வந்து, இவர்பக்கல் முகம் பெறாமையாலே போனமை யடையத் தோற்றி யிருக்கிறது. *எதிர்சூழல் புக்கிறே அவன் திரிந்தது. அன்றிக்கே; (வந்து உவந்து) என்னவுமாம்; அதாகிறது- *கலங்காப் பெரு

நகரத்தை இருப்பிடமாக வுடையவன், தனக்கென்ன ஒரு குடியிருப்பில்லாதாரைப் போலே யிருக்க வந்து, த்ருப்தனானாய்த்து. (௧) *ఆవాసంత్వహమిచ్ఛామి ప్రదిష్ట మిహ కాననే - ஆவாஸந்த்வஹமிச்சாமி ப்ரதிஷ்ட மிஹகாநநே போலேயாய்த்து. (௨) [లోకనాథః పురాభూత్వా సుగ్రీవంనాథ మిచ్ఛతి - லோகநாதஃ புராபூத்வா ஸுக்ரீவம் நாதமிச்சதி] ஸுக்ரீவ மஹாராஜரை நாதராகப் பெறுகைக்கு யோக்யதை ஸம்பாதித்தபடி யாய்த்து லோகநாதரானது. [நாதமிச்சதி] இச்சைக்கு விதேயத்வமில்லை. பெறுவார், பெறாதொழிவார், முந்துற இச்சியாநின்றார். (௩) "స రామో వానరేంద్రస్య ప్రసాద మభికాంక్షతే- ஸ ராமோ வாநரேந்த்ரஸ்ய ப்ரஸாத மபிகாங்க்ஷதே". (என்மனத்திருந்த) இன்னும் வரத்தும் போக்குமுண்டு என்று தோற்றாதபடி ஸ்த்தாவர ப்ரதிஷ்டையாக இருந்தானாய்த்து. (தேனே) தம்மைப் பெறுகைக்கு அவன் வருவது போவதாய்த்திரிந்த படியை அநுஸந்தித்தவாறே தமக்கினிதாயிருக்கிறபடி; (௪) "నివేశితాత్మా-நிவேசிதாத்மா" (௫) "విష్ణోః పదే పరమే మధ్వ ఉత్సః- விஷ்ணோஃ பதே பரமே மத்வ உத்ஸஃ" என்கிறபடியே. (இன்னித்யாதி) அறுகாதப்பயணத்துக்குப் பொதிசோறு கொண்டுபோம் விஷயம் இங்கே ஸந்நிஹிதமாய்த்து. * ... ... (௩)

அரு.—மூன்றாம்பாட்டு. (மானித்யாதி) "எய்த்தொழிந்தேன்" என்று நீர் க்லேசிப்பானென், (௬) * ఈశ్వరాయనివేదితుమ్ - ஈஶ்வராய நிவேதிதும் அன்றோ உம்மை ஸ்ருஷ்டித்ததென்ன; அங்ஙனுதவாது என்கிறாரென்று ஸங்கதி.

நரகக்குழியிலும் ஏற்றமோ இது, "வயிற்றுக்குழியிலுழைக்கும்" என்று இத்தைப் போரப்பொலியச்சொல்லி க்லேசிக்கைக்கென்ன வருளிச்செய்கிறார் (ஒருவித்யாதி). "மானேய் நோக்கியர்தம்" என்று விசேஷித்ததுக்கு பாவ மருளிச்செய்கிறார் (தங்களுடைய வித்யாதி). முந்தின பாட்டுக் கர்த்த மருளிச்செய்கிறார் (மாம்ஸேத்யாதி). இத்தால் பலிதம் (உள்ளுமித்யாதி). இரண்டாம்பாட்டில், "ஏர்" என்று - அழகாய், இப்படி விசேஷித்ததுக்குக் கருத்தருளிச் செய்கிறார் (இதுக்கித்யாதி). "ஆக்கை தன்னை" என்றத்தையுங் கூட்டி "தன்னை" என்றத்தாலே மற்றொன்று உணராமை பலிக்கையால், உதவாமை உண்டாய்த்து என்று தாத்பர்ய மருளிச்செய்கிறார் (காண்கிறவித்யாதி). (பந்தகமே) என்றது- பந்தகமான,

---

(௧) ரா-ஆர-௫-௩௩. (௨) ரா-கி-௪-௧௮. (௩) ரா-கி-௪-௨௧.
(௪) ஸ்தோ-ர-௨௭. (௫) ரு-ஸ-[illegible]- (௬) விஷ்ணுதத்வம்.

ஆகாரமேயென்றபடி. (தலைக்கட்டுவது) என்ற வநந்தரம், ஆகையாலே என்று சேஷம்.

மேல்பதத்தைக் கடாக்ஷித்துத் தாத்பர்ய மருளிச்செய்கிறார்(உபயேத்யாதி). ஸாமாநாதிகரண்யத்தாலே நிர்த்தேசித்ததின் கருத்தை அநுவதித்துக்கொண்டு, மேலுக் கவதாரிகை யருளிச்செய்கிறார் (விபூதித்வயத்தையுமித்யாதி). "உவந்து" என்றத்தை விவரிக்கிறது (அதாகிற தித்யாதி). இப்படி இடம் தேடிவந்த விடமுண்டோ வென்ன வருளிச்செய்கிறார் (ஆவாஸமித்யாதி). உபயவிபூதி யுக்தன் இவனைப் பெறுகை பெருப்பேரு யிருந்த விடமுண்டோ வென்ன வருளிச்செய்கிறார் (லோகேத்யாதி). லோகநாதரானவர் இவரை நாதராக இச்சிக்கவேணுமோ வென்ன வருளிச்செய்கிறார் (ஸுக்ரீவேத்யாதி). (விதேயத்வமில்லை) என்றது - கார்யமாகாது என்கிற நியமமில்லை என்றபடி. பெருமாளுடைய இச்சையை நீரறிந்தபடி யென்னென்ன வருளிச்செய்கிறார் (ஸராம இத்யாதி). அபிகம்ய காங்க்ஷேத என்று கருத்து. ப்ரமாணாந்தரமாகவுமாம். ... ... (௫)

௬.—பிறிந்தேன் பெற்றமக்கள் பெண்டிரென்றிவர் பின்னுதவா
தறிந்தேன் நீபணித்தவருளென்னு மொள்வாளுருவி
எறிந்தேனைம்புலன்களிடர்தீர வெறிந்துவந்து
செறிந்தேன் நின்னடிக்கே திருவிண்ணகர் மேயவனே. (௬)

பதம்.	உரை.
பெற்ற	ஔரஸரான
மக்கள்	பிள்ளைகள்
பெண்டிர்	மனைவிகள் [ட
என்று	என்று சொல்லப்பட்
இவர்	இந்த பந்துக்கள் [கு
பின்	அந்த ([illegible])காலத்துக்
உதவாது	துணை யாகாமையை
அறிந்தேன்	தெரிந்து கொண்டேன், (பின்பு)
பிறிந்தேன்	(அவர்களை) விட்டுவிட்டேன்,
நீ	ஆபத்ஸகனான நீ
பணித்த	(அர்ஜுநனுக்கு) அருளிச்செய்த

பதம்.	உரை.
அருள்என்னும்	பகவதநுக்ரஹத்தையே ஸாதநமாக ப்ரதிபாதிக்கிற சரமஶ்லோகமாகிற
ஒள்	அழகிய
வாள்	கத்தியை [ழற்றி,
உருவி	உறையில் நின்றும் க
ஐம்புலன்கள்	சப்தாதி விஷயங்களாலும் அவற்றுக்கு ஸாதநங்களாலுமுண்டான
இடர்தீர	துயரம் நீங்கும்படி
எறிந்தேன்	வீசினேன்,
எறிந்து	(இப்படி அவற்றை) நிரஸித்து

வந்து உன்னிடத்தில் வந்து
நின் அடிக்கே உன் திருவடிகளிலே

செறிந்தேன் இடையறப் பொருந்தினேன்
திருவிண்ணகர் மேயவனே!(௪)

வ்யா.—நாலாம்பாட்டு. (பிறிந்தேன்) ஸம்ஸாரத்திலே சிலரை பந்துக்களாக நினைத்துத் தானுபகரித்துப் போருகிறது - தனக்குத் தானுதவாதவன்று இவன் செவியிலே திருநாமத்தைச் சொல்லுதல், இவனுக்கு நல்வழி போகைக்கு விரகுபார்த்தல் செய்கைக்காகவிறே; அதில் அவர்கள் செய்வது - (௧) "சோர்வினால் பொருள்வைத்ததுண்டாகில் சொல்லு சொல்லு" என்னாநிற்பர்களாய்த்து, இவன்றான், தனக்கு உணர்த்தி யுண்டானவன்றே தன்னுடைய ஸர்வஸ்வத்தையும் இவர்களிட்ட வழக்காக்கியாய்த்து வைப்பது. நீ மறந்து ஏதேனும் வைத்ததுண்டாகில் அத்தைச் சொல்லு என்னாநிற்பர்களாய்த்து; இவன்றனக்கும் அவர்களோபாதி புன்மை போருங்காணும். இவன் தன்னுடைய ஸர்வஸ்வத்தையும் அவர்களுக்கு ஆக்காநிற்கச் செய்தேயும், சிறிது இவன் பக்கலிலே உண்டென்று தோற்றவாய்த்து வர்த்திப்பது. [சுற்றுமிருந்து] யம்படர் ஒருதிரளும், இவர்களொரு திரளுமாய்த்திருப்பது. இவர்கள் அலையாநின்றால் அவன் செய்வதென்னென்னில்; [ஆர்வினவிலும்,] தன்னுடைமையை அடைய எழுதிக்கொடுத்து ஸ்வீகரித்த இளையாளைக் கொடுவந்து முன்னேநிறுத்திலும்; வாய்திறவானாய்த்து.

(பெற்றவித்யாதி). வயிற்றிலேபிறந்த புத்ரன், பார்யை, இவர்களிறே அண்ணிய உறவாய்ப் போருவார்; அவர்களும், இவன்பக்கல் முன்பு உபகாரம் கொள்ளும்நாள் கொண்டு, பின்பு இவனுக்கு உதவ வேண்டுமளவானவாறே போகாநிற்பர்கள். ஸ்வப்நத்தில் பதார்த்த தர்சநம் உணர்ந்தால் இன்றியே யிருக்குமாபோலே யாய்த்து இவர்களோட்டை ஸம்பந்தமும். (அறிந்தேன் - பிறிந்தேன்) ஜ்ஞாநம் பிறக்கைக்கு ஒருகாலமும், த்யஜிக்கைக்கு ஒருகாலமும் வேண்டுகிறதில்லை.

இவ்வருகுண்டான பந்துக்கள் நமக்கு உபகாரகரல்லர்கள். இனி ‡இவ்வளவுக்குத் தஞ்சமாவாரார்? என்று நெஞ்சிலேபட்டவாறே, "என்னையே தஞ்சமாக நினைத்திரு" என்று அருளிச்செய்ததொரு வார்த்தை யுண்டிறே; அது இப்போது வாரா உதவிற்று. (நீபணித்த) அ

---

(௧) பெரி-திரு-௪-௫-௩, ‡ (பா) அவ்வருகுக்கு.

வன் (௧) “𑌮𑌾𑌮𑍇𑌕𑌂 - மாமேகம்” என்றவார்த்தை யாய்த்து. (அருள்) என்கிறதென்னென்றால்; என்னுடைய ப்ரஸாதத்தையே உனக்கு உஜ்ஜீவந ஹேதுவாக அத்யவஸி என்றானிறே. (ஒள்வாள்) ஸம்சயங்களை யடையத் துணித்துப்போகட்டு, (௨) “𑌸𑍍𑌥𑌿𑌤𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 𑌗𑌤𑌸𑌨𑍍𑌦𑍇𑌹𑌃 𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑍇 - ஸ்திதோஸ்மி கதஸந்தேஹ: கரிஷ்யே” என்னப்பண்ண வற்றாயிருக்கை. (௩) “மருவலர்தமுடல் துணிய” என்றது - உபாய விஷயமாக உண்டாயிருக்கிறது. (ஐம்புலன்) ப்ராப்யாபாஸங்களாயும் ப்ராபகாபாஸங்களாயும் வருமவையடைய நினைக்கிறது - அஹங்கார மமகார கர்ப்பமான க்ரியாகலாபங்கள் கிட்டாதபடி யாகவும், தன் பக்கலிலே உத்தேஶ்யதா புத்தியைப் பிறப்பிக்கக் கடவதான விஷயங்கள் கிட்டாதபடி யாகவும். (செறிந்தேன்) இனி அவன்றானே “நானல்லேன்” என்னிலும் அன்னத்தின் மூக்காலும் பிரிக்க வொண்ணாதபடி செறிந்தேன். (நின்னித்யாதி) இவர்க்கு இப்புத்தி விசேஷத்தைப் பண்ணுவித்தது திருவிண்ணகரிலே வந்து ஸந்நிதிபண்ணியாய்த்து. அர்ஜுநனுடைய தேர்த்தட்டுப்போலே யாய்த்துத் திருவிண்ணகர். அர்ஜுநனுக் கருளிச்செய்த வார்த்தை அவனோடொத்த ஸம்பந்தமுடையாரெல்லார்க்கு மாமிறே. ... ... (௪)

அரு.—நாலாம்பாட்டு. (பிறிந்தேனித்யாதி) உமக்கு தர்மஸாதநமான தேஹம் உதவாமே போனால் உதவுகைக்கு பந்துவர்க்கமுண்டே, அவர்களாலே உஜ்ஜீவநம் ஸித்திக்கலாமே யென்ன; அது ஸித்தியாதாகையாலே விட்டேன் என்கிறார் என்று ஸங்கதி.

பந்துக்ருத்யமாவது-ஆபத்திலே உதவுமது, அது இல்லாமையாலே விட்டேனென்கைக்காக, பந்துக்ருத்யந்தன்னை யருளிச்செய்கிறார் (ஸம்ஸாரத்திலே யித்யாதி). இத்தால் - ஆத்மஹிதம் பண்ணுமவனே பந்துவென்றபடி. எல்லாம் இவர்களிட்ட வழக்காக்கினால் இவனைக் கேட்பாரென்னென்ன வருளிச்செய்கிறார் (இவன்றனக்கு மித்யாதி).

நீ பணித்தவார்த்தை என்னாமல், “அருள்” என்கிற தென்னென்று சங்காபிப்ராயம். அருளுக்கு ஒண்மை ஏதென்ன வருளிச்செய்கிறார் (ஸம்சயமித்யாதி). ஸம்சயமாவது-நீயோ புத்ராதிகளோ॥ ரக்ஷகர் என்கிற ஸம்சயம். அருளை “வாள்” என்று சொல்லுகிற,தென்னென்ன வருளிச்செய்கிறார் (மருவலர்தமித்யாதி). சத்ருக்களைத் தம்முடைய வாளாலே துணிக்கு

---

(௧) கீதை-௧௮-௬௬. (௨) கீதை-௧௮-௭௩. (௩) ௩-௯-௧௦.

மாபோலே உபாய ஸம்சயங்களையும் அவனருளாகிற வாளைக்கொண்டு துணிப்பரென்றபடி. "ஒள்வாளுருவி - ஐம்புலன்கள் இடர்தீர-எறிந்தேன்." என்று அந்வயம். "எறிந்துவந்து" என்றது - அநுவாதம். "ஐம்புலன்கள்" என்று - ப்ராப்யாபாஸங்களைச் சொல்லுகையாலே, ப்ராபகாபாஸங்களும் அர்த்தாத் வந்தது. (அன்னத்தின் மூக்காலும்) என்றது-பிரிக்கப்போகாத பாலையும் நீரையும் பிரிக்கும் அன்னத்தின் மூக்காலுமென்கை. இத்தால்-அன்னம்போன்ற பிராட்டியாலும் சிதகுரைத்துப் பிரிக்கப்போகாதென்கை ஸூசிதமாய்த்து. அன்று சொன்னவார்த்தை இவர்க்கு இன்றாகிறபடி எங்ஙனேயென்ன வருளிச்செய்கிறார் (அர்ஜுநனுக் கித்யாதி). (௪)

மூ.—பாண்டேன் வண்டறையும் குழலார்கள் பல்லாண்டிசைப்ப
ஆண்டார் வையமெல்லா மரசாகி முன்னாண்டவரே
மாண்டாரென்று வந்தாரந்தோ மனைவாழ்க்கை தன்னை
வேண்டேன் நின்னடைந்தேன் திருவிண்ணகர் மேயவனே. (௫)

பதம்.	உரை.
பாண்	பாடாநின்றனவாய்க் கொண்டு
தேன்	மதுபாநம் பண்ணாநின்றுள்ள
வண்டு	வண்டுகள்
அறையும்	சப்தியாநின்ற
குழலார்கள்	மயிர்முடியை யுடைய ஸ்த்ரீகள்
பல்லாண்டு இசைப்ப	உத்தரோத்தரம் மங்களங்களை ப்ரார்த்திக்க, (இவ்வுலகத்தார்) [ண்டு
அரசாகி	ராஜாக்களாய்க் கொ
வையம் எல்லாம்	ஸகலலோகங்களையும் [கள்
ஆண்டார்	ப்ரிபாலநம் செய்தார்
முன் ஆண்டவரே	(இப்படி) முன்பு ஆண்டுவந்த அவர்களே
மாண்டார்	மாண்டுபோனார்கள்,
என்று	என்றசொல்லுக்கு விஷயராய்க்கொண்டு (இப்படி)
வந்தார்	(அநாதிகாலமாக) வருகிறார்கள், (ஒருவர்க்கும்நிலையில்லை),
அந்தோ	ஐயோ! ஐஶ்வர்யம் அஸ்த்திரம், (ஆகையால்)
மனைவாழ்க்கைதன்னை	ஸம்ஸாரஸுகத்தை [கொண்டு
வேண்டேன்	விரும்பாதவனாய்க்
நின்னடைந்தேன் திருவிண்ணகர் மேயவனே!	

(௫)

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (பாண்டேன்) ஆனை, குதிரை, தேர், காலாள் கூட்டி, அவை கொண்டு ப்ரதிபக்ஷத்தை அழியச்செய்து, அவ்வழியாலே ஐஶ்வர்யத்தையும் தன்னதாக்கிக் கொள்ளவேண்டுமதன்றிக்கே ஸித்தமான ஐஶ்வர்யத்துக்கு மங்களாசாஸநம் பண்ணு

வார் தேட்டமாயிருக்கை.—இன்றாக ஒரு ஐஶ்வர்யம் ஸம்பாதிக்க வேண்டாதே, முன்பே உண்டானதுக்கு மங்களாசாஸநம் பண்ணுவார்தேட்டமாயிருக்கை. பாட்டையும் தேனையும் உடைத்தான வண்டுகள் மதுபாந மத்தமாய்க்கொண்டு த்வநியாநின்றுள்ள குழலையுடைய ஸ்த்ரீகளானவர்கள், மங்களாசாஸநம்பண்ண. (ஆண்டார்) ஒரு ப்ரதேசத்துக்குக் கடவனாகையன்றிக்கே, (௧) "ஒரு நாயகமாய்" என்கிறபடியே ஒரு முத்தின் குடையேயாம்படி பூமிப்பரப்பை யடங்கலும் நிர்வஹித்துப் போந்தவர்கள். முன்பு இப்படி நடத்திப் போந்தவர்கள் தாங்களே. (மாண்டாரென்று வந்தார்) முடிசூடினான் என்று ஒரு ஓலையிலே யிட்டால் "துஞ்சினான்" என்று வேறொரு ஓலையிட்டு வரக்காட்டுகைக்கு அவஸரமில்லாதபடி முடிந்து நிற்கையாலே, அவ்வோலையில் மறுபுறத்திலே துஞ்சினான் என்று இட்டுவருமாய்த்து. ஆண்டவன் ஆண்டேவந்தானென்று சொல்லப்படுவதில்லையாய்த்து. (என்றுவந்தார்)இப்படியாய்த்து முடியச்சொல்லிப்போருவது. "ஆண்டார், மாண்டார்" என்கிற சொல்லும் இடைபொத்திருக்குமாய்த்து. (௨) [𑌤𑌥𑌾 𑌦𑍇𑌹𑌾𑌨𑍍𑌤𑌰 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿𑌃-ததா தேஹாந்தர ப்ராப்தி꞉] உத்பத்தி விநாசங்களாகிறன ஆத்மாவுக்கு அவஸ்த்தாந்தராபத்தியிறே. (ஆண்டவரே மாண்டார்) இப்பரப்படங்கலும் தனக்கு நிலைநிற்குமென்று அவன் விசாரியாநிற்கச் செய்தே, ஆயுஸ்ஸு அடியற்று நிற்குமாய்த்து.

இவனுடைய பாரிப்பையும் அதினுடைய நிலைநில்லாமையையும் அநுஸந்தித்து, தயைபண்ணிப் பொறுக்கமாட்டாமையாலே, (அந்தோ!) என்கிறார். (௩) [𑌨𑌨𑍍𑌦𑌨𑍍𑌤𑍍𑌯𑍁𑌦𑌿𑌤 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿-நந்தந்த்யுதித இத்யாதி] அஸ்தமித்தவாறே, போகோபகரணங்களைக் கொண்டு அபிமதவிஷயங்களைப் பிறர் காணாதபடி புஜிக்கைக்குக் காலம்வந்ததென்று உகவாநிற்பர்கள்; உதித்தவாறே, அதுக்கு த்ரவ்யார்ஜநகாலம் வந்ததென்று ஹ்ருஷ்டராகா நிற்பர்கள். சாலிலெடுத்த நீர்போலே தங்கள் ஆயுஸ்ஸு கழிகிறபடியை யறிந்து, நடுவுபட்டநாளிலே அவ்வருகில் எளிவரவு வாராதபடி பரிஹரித்துக்கொள்ளவேணு மென்றிருப்பார் ஒருவருமில்லை. (மனைவாழ்க்கை) ஆள ஆசைப்படிலிறே மாளவேண்டுவது; ஐஶ்வர்யம் ப்ரத்யக்ஷம், நீராசைப் படுகிறது அதீந்த்ரிய மென்னவொண்ணாதபடி திருவிண்ணகரிலே வந்து நிற்கிறது; கைங்கர்ய ஸாம்.

---

(௧) தி-வாய்-௪-௧-௧. (௨) கீ-௨-௧௩. (௩) ரா-அயோ-௧௦௫-௨௪.

ராஜ்யத்தைத் தருகைக்கன்றோ இந்நிலைதான். நீயே சரண்யனாய் வந்து நிற்கப் பெற்ற எனக்கு அவர்களைக் கொண்டு கார்யமென்? என்கிறார். (ஆண்டார், மாண்டார்) என்கிற இவை இரண்டும் இரண்டு வ்யக்தியிலேயாகப்பெற்றதில்லை. பெருக்காறு அடிசுட்டாப்போலே பட்ட தர்மஹாநியைக் கண்டு ஐயோ என்கிறார். (மனைவாழ்க்கை தன்னை வேண்டேன்) ஆள ஆசைப்படிலிறே மாளாமையை ஆசைப்படுவது; இது ஸ்த்திரமாகிலும் வேண்டேன். ... ... (௫)

அரு.—அஞ்சாம்பாட்டு. (பாண்டேனித்யாதி) பந்துக்களுதவார் என்னாநின்றீர், குறைவற்ற ஐஶ்வர்யமுண்டானால் பந்துக்களெல்லாரும் வந்து உதவுவர்களே யென்ன; அது ஸ்த்திரமாகிலன்றோ இதுண்டாவது என்கிறார் என்று ஸங்கதி.

“அரசாகி, பாண்டேனித்யாதி, வையமெல்லாம், ஆண்டார்” என்று அந்வயம் திருவுள்ளம்பற்றி “ஆகி”என்ற அபூத தத்பாவனுக்குக் கருத்தருளிச்செய்கிறார் (ஆனையித்யாதி). (தேட்டமாயிருக்கை) என்றதுக்கு - (௧) “வாழாட்பட்டு நின்றீருள்ளீரேல்” என்ற பாசுரத்திலே நோக்கு. விவரணம் (இன்றாக வித்யாதி). சப்தார்த்தம் (பாட்டையுமித்யாதி). கீழ் “ஆண்டார்” என்றபதம் அமைந்திருக்க, “முன்னாண்டவரே” என்று அநுவதிக்கைக்கு ப்ரயோஜந மென்னென்ன வருளிச்செய்கிறார் (முடிசூடினா னித்யாதி). “సర్వంవాక్యం సావధారణమ్ - ஸர்வம் வாக்யம் ஸாவதாரணம்” என்கிற ந்யாயத்தாலே, “என்றேவந்தார்”என்று விவக்ஷித்து, ஆளுகைக்கு மாளுகை யுண்டானாப்போலே மாளுகைக்கு மாளுகை யில்லாமையாலே “மாண்டார்” என்கிற சொல் காலதத்வமுள்ளதனையும் நிற்குமென்று தாத்பர்ய மருளிச்செய்கிறார் (இப்படி யித்யாதி) அன்றிக்கே, “வந்தார்” என்கிற பஹுவசநத்தாலே - ஸர்வ ப்ரதேசத்திலும் இதுவே வார்த்தையாய்த்து என்கிறாராகவுமாம். இப்போது “முடிய” என்றது - தேசமெங்கு மென்றபடி. நித்யமான ஆத்மாவுக்கு மாளுகையாவ தென்னென்ன வருளிச்செய்கிறார் (தமேதத்யாதி).

இவரைப்போலே “அந்தோ!”என்று துஃக்கித்த பேருண்டோ வென்ன வருளிச்செய்கிறார் (நந்தந்தீத்யாதி). •ஆண்டவரே மாண்டார் என்று ஆயுஸ்ஸினுடைய அஸ்த்திரத்வத்தை யருளிச்செய்தாராய் கீழ், ஐஶ்வர்யத்தை “மாண்டார்” என்று அர்த்தாந்தர மருளிச்செய்கிறார் (ஆண்டார் மாண்டாரித்யாதி). அஸ்த்திரமான ஐஶ்வர்யத்தை உமக்கு ஸ்த்திரமாக்கினாலோ வென்ன வருளிச்செய்கிறார் (இதுவித்யாதி). ... ... (௬)

---

(௧) தி-பல்-௧-௩.

மூ.—கல்லா வைம்புலன்களவை கண்டவாறு செய்யகில்லேன்
மல்லா மல்லமருள் மல்லர் மாள மல்லடர்த்த
மல்லா மல்லலஞ்சீர் மதிள் நீரிலங்கை யழித்த
வில்லா நின்னடைந்தேன் திருவிண்ணகர் மேயவனே. (சு)

பதம்.	உரை.
கல்லா	கல்வியில்லாத (சாஸ்த்ரமார்க்கத்திலே நடவாத)
அவை	அதிக்ரூரமான
ஐம்புலன்கள்	பஞ்சேந்த்ரியங்களும்
கண்ட	சப்தாதிகளை அநுபவிப்பிக்கப்பார்த்த
ஆறு	ப்ரகாரத்தை
செய்யகில்லேன்	செய்கைக்கு யோக்யனாகிறிலேன்,
மல்லா	பலிஷ்டனே!
மல்அமருள்	மல்ல யுத்தத்தில்
மல்லர்	சாணூராதிகள்
மாள	முடியும்படி
மல்	(அவர்கள்) பலத்தை

பதம்.	உரை.
அடர்த்த	நெருக்கி அழித்த
மல்லா	அல்ப வ்யாபாரத்தை யுடையவனே!
மல்லல்	ஸம்ருத்தமாய்
அம்	அழகியதான
சீர்	ஸம்பத்தையும்
மதில்	ப்ராகாரங்களையும்
நீர்	(சுற்றும் துர்க்கமாக நின்ற) ஸமுத்ரத்தையு முடைய
இலங்கை	லங்காநகரத்தை
அழித்த	நாசம்செய்த
வில்லா	தநுஸ்ஸை யுடையவனே!

நின்னடைந்தேன் திருவிண்ணகர் மேயவனே! (சு)

வ்யா.—ஆறும்பாட்டு. (கல்லா) நீர்போய் கார்ஹஸ்த்யத்துக்கு எடுத்துப்போன இந்த்ரியங்களின் வழியே போய், அவை உகந்த விஷயங்களை உகந்து திரியமாட்டீரோ, இங்ஙனே என்செய்ய க்லேசப்படுகிறீரென்ன; அவை உன்னைக் காணவேணுமென்றும் கேட்கவேணுமென்றும் உடன்பட்டவன்றிறே எனக்குடலாய்த் தினவாவது, அவை இங்ஙனன்றிக்கே எல்லாம் கல்லா வைம்புலன்களாய்த்தே. ராவணனோடொக்குமாய்த்து. மூலையடியே போக்கி முடிக்கப்பார்க்குமித்தனை யல்லது நல்வழி போகவொட்டாதாய்த்து. அவை பார்த்து வைத்த வழிபோக க்ஷமனாகிறிலேன். அதாகிறது - சப்தாதி விஷயங்களை அநுபவிக்கையிறே; அதுக்கு நான் க்ஷமனாகிறிலேன், மேல்வரும் அநர்த்தத்தை அநுஸந்தித்தவாறே.

இந்த்ரியங்களானவை சிலரால் திரிய விடுவிக்கவொண்ணாதபடி மூலையடியே நடப்பன சில உண்டாகில் நம்மால் செய்யலாவதுண்டோவென்ன (மல்லா) இந்த்ரியவஶ்யதையைத் தவிர்க்கைக்கீடான

சக்தி உனக்கில்லையோ? இந்த்ரியங்களை நியமிக்கப்போகாதாகில் என் பக்கலிலே நெஞ்சை வை யென்றாயே. நம்சக்தி எங்கே வ்யாபரிக்கக் கண்டு நீர் இவ்வார்த்தை சொல்லுகிறதென்ன (மல்லமரித்யாதி) மல்லயுத்தத்திலே மல்லர் முடியும்படி அவர்கள் மிடுக்கையழித்த மல்தொழில் வல்லவனே!

(மல்லலித்யாதி) முன்கை மிடுக்காலே அழியச்செய்யவும் வல்லன்; செவ்வைப்பூசலிலே அழியச்செய்யவும் வல்லன். ஜநநி என்று வாசியறியாத ராவணனை அழியச்செய்த அருமையுண்டோ என்னுடைய இந்த்ரிய வஶ்யதையைத் தவிர்க்கைக்கு? நிரவதிக ஸம்பத்தையுடைத்தான ஶ்ரரணையும் ஐஶ்வர்யத்தையும் கண்டு, திருவடி, (க) [అహోవీర్య మహోధైర్య మహోసత్త్వ మహోద్యుతిః। అహోరాక్షసరాజస్య సర్వలక్షణయుక్తతా - அஹோவீர்ய மஹோதைர்ய மஹோஸத்வ மஹோத்யுதி:। அஹோராக்ஷஸ ராஜஸ்ய ஸர்வலக்ஷணயுக்ததா] (௨) [యదీదృశీ రాఘవ ధర్మపత్నీ - யதீத்ருஶீ ராகவ தர்மபத்நீ] ராவணன் தானும் ஸ்த்ரீகளுமாயிருக்கிற இருப்பைக்கண்டு, இவ்விருப்பைப் பெருமாளும் பிராட்டியும் சேரவிருக்க ஸம்வதித்தானாகில் இவ்வைஶ்வர்யம்‡குலையாதபடி யிருக்கலாய்த்துக் கிடீர். மதிளையும் அரணாகப் போரும்படியான கடலையு முடைய லங்கையை அழியச்செய்த வில்வலியையுடையவனே!

(நின்னித்யாதி) அந்த வில்கொண்டு வ்யாபரிக்க அங்கேவந்து முகங்காட்டப் பெற்றதில்லை என்ன; அந்த ப்ரதிபக்ஷத்தை யழியச்செய்து அங்ஙனே போனாயோ? போக்குக்காட்டி இங்கேயன்றோ வந்து புகுந்தது. ... ... (௬)

அரு.—ஆறும்பாட்டு (கல்லாவித்யாதி)(௩)“மான வெண்குடைக்கீழ்” என்றும், (௪) “பார்மிசை அரசராகி” என்றும், (௪) “குடைநிழல் பொலிவர்” என்றும் திருமொழி கற்றார்க்கு முட்பட பகவத்பாகவத கைங்கர்யத்துக்கு அடுத்த ஐஶ்வர்யத்தை அஸ்த்திரமாகிலும் புருஷார்த்தமாகச் சொல்லியிருந்தீரே, இப்போது அதின் அஸ்த்திரத்வத்தைச் சொல்லி “வேண்டேன்” என்பானென்னென்ன; (௫) *ఈశ్వరాయ నివేదితుమ్ - ஈஶ்வராய நிவேதிதுமான இந்த்ரியங்களைத் தங்களை ப்ராப்தவிஷயத்திலே யாக்கிக்கொண்டு (௬) “పతింవిశ్వస్య - பதிம்விஶ்வஸ்ய” என்கிற விஷயத்தில் கார்

(க) ரா-ஸு-௪௯-௧௭. (௨) ரா-ஸு-௯-௭௨. (௩) ௪-௩-௧௦-

(௪) ௪-௬-௧௦- (௫) விஷ்ணுதத்வம். (௬) தை-நாரா-௧௧.

‡ (பா) அவனைஶ்வர்யம்.

ஹஸ்த்யதர்மம் நடத்திக்கொண்டு வேண்டினபடி விநியோகம் கொள்ளுகிறார் என்றிருக்கமாட்டீரோ என்னும் ஈஶ்வராபிப்ராயத்தைக் காட்டிக்கொண்டு ஸங்கதியை ஸ்ப்புரிப்பிக்கிறார் (நீர்போயித்யாதி). அன்றிக்கே, ராஜபோகத்தை வேண்டீராகில் ஸாமாந்ய தர்மமான கார்ஹஸ்த்ய (𑌗𑌾𑌰𑍍𑌹𑌸𑍍𑌥𑍍𑌯) தர்மந்தன்னை அநுஷ்டிக்கமாட்டீரோ, அது நரகாவஹமன்றோ என்னுமபிப்ராயத்தைக் காட்டி ஸங்கதி ஸூசிப்பிக்கிறார் என்னவுமாம்.

(எடுத்துப்போன) படை எடுத்துப்போன. அதாவது - ததர்த்தமான வென்னை. (கல்லா வைம்புலன்களாய்த்தே) என்றது - கல்வியின்றிக்கே- சாஸ்த்ர மார்க்கத்திலே நடக்கையின்றிக்கே யிருக்கிற இந்த்ரியங்களென்றபடி.

மேலுக்கவதாரிகை (இந்த்ரியங்களித்யாதி). நாம் இந்த்ரிய வஶ்யதை தவிர்த்துத் தருகிறோமென்று சொன்னதுண்டோ நம்மை நீர் வளைக்கைக்கென்ன வருளிச்செய்கிறார் (இந்த்ரியங்களை யித்யாதி). அர்ஜுநனோடு சொன்னதில்லையே என்று கருத்து. சார்யார்த்தம் ஒருவார்த்தை சொன்னமட்டிலே அத்தைக்கொண்டு வளைக்கிறீரோ "நம்சக்தி" என்று கூட்டிக்கொள்வது. (மல்தொழில்) அல்ப வ்யாபாரம்.

ஸமபிவ்யாஹார தாத்பர்யம் (முன்கை யித்யாதி). உட்கருத்து (ஜநநி யித்யாதி). "மல்லல்" என்று - ஸம்ருத்தியாய், அழகிய சீர்என்று விசேஷித்ததுக்கு பாவம் (நிரவதி கேத்யாதி). ஶ்லோகார்த்தம் (ராவணனித்யாதி). … … … … … … … … (௬)

மூ.—வேறா யானிரந்தேன் வெகுளாது மனக்கொளெந்தாய்
ஆறா வெந்நரகத் தடியேனை யிடக்கருதிக்
கூறா வைவர் வந்து குமைக்கக் குடிவிட்டவரைத்
தேறா துன்னடைந்தேன் திருவிண்ணகர் மேயவனே. (௭)

பதம்.	உரை.
யான்	இந்நாள் விமுகனாகப் போந்த நான்
வேறா.	த்ரு(𑌤𑍃)ப்தனைக்காட்டிலும்வ்யாவ்ருத்தனாய்க்கொண்டு
இரந்தேன்	(உன்னை)யாசித்தேன்,
எந்தாய்	என்ஸ்வாமியே!
வெகுளாது	கோபியாமல்
மனக்கொள்	(அத்தைத்) திருவுள்ளம்பற்றவேணும்;
ஐவர்	(அதாவது) பஞ்சேந்த்ரியங்களும்,
ஆறா	ஓய்வில்லாத
வெம்	அதிக்ரூரமான
நரகத்து	ஸம்ஸாரமாகிற நரகத்திலே
அடியேனை	என்னை
இட	பொகட்டுவைக்கும்படி
கருதி	எண்ணி,
கூறா	(என்னைத் தங்களுக்கு) பாக(𑌭𑌾𑌗)மாகக் கொண்டு
வந்து	என்னைக்கிட்டி
குமைக்க	பாதி (𑌬𑌾𑌧)யாசிக்க,

குடிவிட்டவரை	(நீ என்னை நல்வழிப்படுத்துகைக்காக என்னிடத்தில்) வலிக்கப்பண்ணின அந்த இந்த்ரியங்களை	தேறாது	நம்பாமல்
		உன்	உன்னை
		அடைந்தேன் திருவிண்ணகர் மேயவனே! (௭)	

வ்யா.—ஏழாம்பாட்டு. (வேறாயானிரந்தேன்) இரந்த கார்யம் க்ரமத்தாலே செய்யலாம்படியா யிருப்பனவும் சில இரப்புக்களுண்டு, அப்போதே செய்து தலைக்கட்ட வேண்டும்படியா யிருப்பனவும் சில இரப்புக்களுண்டு; க்ரமத்தாலே கார்யஞ்செய்து தலைக்கட்டு மளவும் இவன் பொறுக்கும் என்று தோற்றி யிருந்தவிடத்திலே அந்த க்ரமமும் பொறுக்குமிறே; அப்போதே செய்யாவிடில் இவனைக் கிடையாதென்று தோற்றினவிடத்தில் அப்போதே செய்து தலைக்கட்ட வேண்டும்படியா யிருக்குமிறே; அதில்செய்தே அறவேண்டும்படி ஆர்த்தித்வத்தை யுடையேனாய்க்கொண்டு இரந்தேன் வேறாக என்றபடி. (யானிரந்தேன்) அத்தலை இத்தலையானபடியைத் திருவுள்ளம் பற்ற வேணும். நீ *எதிர்சூழல் புக்கு இரந்துதிரிய, நானத்தை மறுத்து வைமுக்க்யம்பண்ணித் திரிந்தகாலத்தின் நீட்சியும் திருவுள்ளம் பற்றுகையுண்டே. நீ இரக்க மறுத்துத்திரிந்த நானன்றோ இப்போது இரக்கிறேன்.

(வெருளாது) என்னுடைய பாசுரம் கேட்டால் தேவர் திருவுள்ளத்துக்கு சிவீல் என்னவேண்டும்படி யாயிருக்கும்; இன்று அநந்ய கதியாய் வந்து நிற்கிறவன், முன்பு "நாம் அநாதிகாலம் பிடிக்க மறுத்துப்போந்தவ னன்றோ" என்று, என்னுடைய பூர்வ வ்ருத்தத்தைப் பார்த்தால் தேவர் சீறவேண்டும்படியா யிருக்கும். நான் ஸர்வதோஷ யுக்தனாயிருந்தேன், நீ ஸர்வஜ்ஞனாயிருந்தாய், ஆனபின்பு, "நம்மையும் தன்னையும் பாராதே இவன் நிர்தோஷரைப்போலே நம்காலைப் பிடிப்பதே!" என்று சீறாதே. (மனக்கொள்) கார்யம் செய்யவேண்டுமளவிலே ஆனைக்குப்பாடுவாரைப்போலே அநாதரித்திருக்க வொண்ணாது; இத்தைத் திருவுள்ளம்பற்றி யருளவேணும். சீறாமைபோராது, இத்தைத் திருவுள்ளத்தே கொண்டருளவேணும். உம்மை ஸதோஷராகச் சொல்லிவைத்து, ஸ்வதந்த்ரனாயிருக்கிற என்னை "சீறாதே திருவுள்ளம் பற்றவேணும்" என்று நீர் சொல்லுகிறது என்னஹேது கொண்டென்ன; (எந்தாய்) என்னை ஒழித்துக்கொள்ள வொண்ணாத ப்ரா

ப்தியைக்கொண்டு பொறுக்கை யொழிய, செய்த குற்றத்தைக் கணக்கிட்டுக் கைவிடலாம்படியோ தேவரோடுண்டான ப்ராப்தியிருப்பது? (க) "𑌪𑌿𑌤𑍇𑌵 𑌪𑍁𑌤𑍍𑌰𑌸𑍍𑌯 - பிதேவ புத்ரஸ்ய" என்று நின்றதிறே.

பொறுப்பிக்கிற விடத்திலே வந்தவாறே, செய்தகுற்றத்தைப் பார்த்துச் சீறாதே, ப்ராப்தியைப் பார்த்துக் கைக்கொள்ள வேண்டும்படி உமக்கு இப்போது வந்ததென்னென்ன, (ஆறாவெந்நரகம்) இந்த்ரியங்களினுடைய நினைவு சாலப் பொல்லாதாயிருந்தது. செய்த பாபம் அகஞ்சுரிப்பட்ட வளவிலே விட்டடிக்கவும் கூடுமிறே. யமனுடைய தண்டல் அங்ஙனோரளவல்ல, மாறாத நரகமாய்த்து ஸம்ஸாரம். (அடியேனை) கோமுற்றவர் படுக்கைப்பற்றிலே நலியக்கோலுமாபோலே. (உ) "𑌅𑌹𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 - அஹம் ஸர்வம் கரிஷ்யாமி" என்னுமாபோலே அங்குத்தைக்கு எல்லா வடிமையும்செய்து வர்த்திக்கைக்கீடான ப்ராப்தியுடைய என்னை, அஹங்கார மமகாரங்களுக்குக் குடிமைசெய்யும் ஸம்ஸாரத்திலே போகத் தள்ளுவதாக நினையாநின்றது.

(கூறாவைவர்வந்து குமைக்க) இது ஐவர்க்குப் பொதுவிறே என்று இருக்கிறனவில்லை; அஹமஹமிகயா பற்றி நலியாநின்றன. (ஐவர்) சைதந்ய ப்ரஸரத்வார மாத்ரமிறே என்றிருக்கிறிலர். சேதனரென்றே யிருக்கிறாராய்த்து பாத(𑌬𑌾𑌧)கத்வத்தி லுறைப்பாலே. (ஐவர்குமைக்க) ஒரு துர்பலனை ப்ரபலராயிருப்பார் ஐந்து சேவகர் ஐந்து திக்கிலே வலித்துக் கலங்கப்பண்ணி நெருக்குமாபோலே. (குடிவிட்டவரை) நீ குடிபுகுர விட்டவர்களை. அதுக்கடி - இத்தைக்கொண்டு நம் காலிலே குனிந்து அவ்வழியாலே நம்மைப் பெறவேண்டாவோ என்னும் கருத்தாலே இத்தைத் தந்தாய்நீ, அது உன் நினைவையொழிய மற்றைப்படியே உன்பக்கல் நின்றும் அகற்றி விஷயங்களிலே மூட்டி முடிக்குமவையா யிராநின்றன.

(தேறாது) உன் நினைவின்படியே நடக்குமவை யன்றிக்கே யொழிகையாலே, அவற்றை விஶ்வஸிக்கப் போருகிறதில்லை. (உன்னித்யாதி) விஶ்வஸநீயனான நீ ஸந்நிஹிதனாயிருக்க, பயாவஹமான பதார்த்தங்களுக்குக் குடிமைசெய்து திரியவேணுமோ? ... (எ)

(க) கீ-கக-சச. (உ) ரா-அயோ-ருக-உரு.

அநு.—ஏழாம்பாட்டு. (வேருவித்யாதி). கல்லா வைம்புலன்கள் உம்மை நலிகிறபடி யென்னென்ன; அவற்றின் கொடுமையை யருளிச்செய்கிறார் என்று ஸங்கதி.

(வேருக) வ்யாவ்ருத்தமாக, அதாவது-த்ரு(ஷ)ப்தனன்றிக்கே ஆர்த்தனாய் என்று சப்தார்த்தம் விவக்ஷித்துத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (இரந்த கார்யமித்யாதி). "யான்" என்றதுக்குத் தாத்பர்யம் (அத்தலையித்யாதி). விவரணம் (நீயித்யாதி).

"வெருளுகை" சீறுதலாய், இதுக்கு ஹேது இரண்டு; அதாவது - அவன் தேடிவர வைமுக்க்யம் பண்ணினதும், ஸ்வதோஷம் பாராமல் கிட்டினதும்; முந்தினத்தை யருளிச்செய்கிறார் (என்னுடைய வித்யாதி). இரண்டாவது (நான் ஸர்வதோஷ யுக்தனித்யாதி). (ஆனைக்குப்பு) சதுரங்கம்.

(அகஞ்சுரிப்படுகை) குன்றுகை. (கோமுற்றவர்) மணியகாரர். (படுக்கைப்பற்று) அந்தஃபுரத்துக்கு விட்ட சீமை.

ஈச்வரன்மேல் குற்றமாக நீர் குடிவிட்டவர்கள் என்னப்போமோ வென்ன வருளிச்செய்கிறார் (அதுக்கித்யாதி). (இத்தை) கரணங்களை. (எ)

மூ.—தீவாய் வல்வினையாருடனின்று சிறந்தவர்போல்
மேவா வெந்நரகத் திடருற்று விரைந்துவந்தார்
மூவா வானவர்தம் முதல்வா மதிகோள் விடுத்த
தேவா நின்னடைந்தேன் திருவிண்ணகர் மேயவனே. (அ)

பதம்.	உரை.
தீவாய்	தீயை வாயில்நின்றுமுமிழாநின்ற (அதிக்ரூர பலப்ரதங்களாய்)
வல்	அதிக்ரூரங்களான (ஒன்றாலும்போக்கவரிதான)
வினையார்	பாபங்கள்
சிறந்தவர்போல்	கிட்டின பந்துக்களைப்போல்
உடன்நின்று	(என்னோடு) பிரியாமல் கலந்து நின்று,
மேவா	(ஆத்மஸ்வரூபத்துக்குச்) சேராத
வெம்	அதிக்ரூரமான
நரகத்து	நரகத்தில்
இடர்உற்று	(என்னை) இட்டுவைக்கையிலே முயன்று
விரைந்து	அதிவேகத்துடன்
வந்தார்	(பலப்ரதாநோந்முகங்களாக) வந்தன;
மூவா	மூப்புமுதலிய விகாரங்களற்ற
வானவர்தம்	நித்யஸூரிகளுக்கு
முதல்வா	நிர்வாஹகனே!
மதி	சந்த்ரனுடைய
கோள்	க்ஷயரோகத்தை
விடுத்த	போக்கின
தேவா	தேவனே!

நின்னடைந்தேன் திருவிண்ணகர் மேயவனே! (அ)

வ்யா.—எட்டாம்பாட்டு. (தீவாய்) அநலாஸ்யராய்த்து. நெருப்பை உமிழாநின்றுள்ள வாயையுடைய. (வல்) ப்ராயஶ்சித்தத்தால் பரிஹரிக்கப் படுமவையல்ல; (க) "𑌅𑌵𑌶𑍍𑌯𑌮𑌨𑍁𑌭𑍋𑌕𑍍𑌤𑌵𑍍𑌯𑌮𑍍-அவஶ்ய மநுபோக்தவ்யம்" என்கிறபடியே-அநுபவித்தாலல்லது போக்கி நசியாதவையாய்த்து. (உடனின்று) நிருபாதிக பந்துக்களைப்போலே விடாதே நின்று கலந்து; (உ) "கலந்து நலியும் கடுந்துயர்" என்னக்கடவதிறே. (சிறந்தவர்போல்) ஒருகாலும் விடாத ப்ராதாக்கள், மற்றையாரைப் போலே.

(மேவாவெந்நரகத்து) (ங) "𑌆𑌨𑌨𑍍𑌦𑌮𑌯𑌃 - ஆநந்தமய:" என்கிற வஸ்துவை அநுபவிக்கைக்கு யோக்யமான வஸ்துவுக்குப் பொருந்தாதபடியிருக்கிற நரகத்திலே தள்ளுவதாக வந்தன. இங்குள்ள து:க்கங்களை அநுபவித்தால், பின்னைப்போ யநுபவிக்கும் நரகமிறே அது; இப்போது "நரகம்" என்கிறது - இந்நரகந்தன்னையே. (விரைந்துவந்தார்) இத்தால்- இக்காலத்திலொரு ஸுக்ருதம் நுழைகைக்கு அவகாசமின்றிக்கே போந்தபடியைச் சொல்லுகிறது. கர்மத்துக்கு ப்ரவாஹாநாதித்வ முண்டிறே.

இது நீர்பண்ணின கர்மத்தினுடைய பலமன்றோ? தாந்தாம் பண்ணின கர்மபலம் தந்தாமுக்கே அநுபவிக்கவேண்டாவோ? இப்போதாகச் செய்யலாவதுண்டோ வென்ன, (மூவாவானவர்) அகர்மவஶ்யராய் உன்னை அநுபவிக்கும்படி பண்ணிவைத்தாயே. ஒரு விபூதியாக எப்போது மொக்க பஞ்சவிம்சதி வார்ஷிகரா யிருப்பர்கள். புஜிபாநிற்கச் செய்தே, "இது நமக்குக் குலைகிறதோ?" என்றிருக்க வேண்டாவாய்த்து. (முதல்வா) அவர்களை அகர்மவஶ்யராக்கி, அவர்களுக்கு அநுபவிக்கைக்கு உன்னைக் கொடுத்து, அவ்வழியாலே அவர்கள் ஸத்தையை நிர்வஹித்துக்கொண்டு போராநின்றாயே. (ச) "விண்ணுளார் பெருமானேயோ" என்றாப்போலே யாய்த்து.-ப்ராதாக்களிலே ஒருவன் முடிசூடி வாழாநிற்க ஒருவன் சிறைப்பட்டுக் கிடந்தாப்போலே தோற்றாநின்றதாய்த்து. (ரு)[𑌹𑌾 𑌰𑌾𑌮 𑌹𑌾 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣-ஹா ராம ஹா லக்ஷ்மண] இப்படிப்பட்ட அவர்க்கும் "இது மாயாம்ருகம் கிடீர்" என்று உணர்த்தி நோக்கும் இளையபெருமாளே! என்னும். [𑌹𑌾 𑌸𑍁𑌮𑌿𑌤𑍍𑌰𑍇 - ஹா

(க)
(உ) பெரி-திருவ-சுகு.
(ங) தை-ஆ-இ-உ.
(ச) தி-வாய்-எ-க-தி.
(ரு) ரா-ஸு-உ அ-அ.

ஸௌமித்ரே] அவர் தமக்கும், (க) “సృష్టస్త్వం వనవాసాయ-ప్రమాదం మా ర్షీః - ஸ்ருஷ்டஸ்த்வம் வநவாஸாய - ப்ரமாதம் மாகார்ஷீ:” என்ற ஸௌமித்ரியாரைச் சொல்லும்.

அப்பரிமாற்றமுள்ளது அவ்விபூதியிலே காணும், இங்கில்லை என்று அவனுக்குச் சொல்லவொண்ணாதபடி (மதிகோள் விடுத்த தேவா) ஸ்வரூபலாபம் பெறவேணு மென்றிருப்பார்க்கு அத்தைப் பண்ணிக்கொடுப்பது, இஶ்ஶரீரத்தில் வைகல்யம் போகவேணு மென்றிருப்பார்க்கு அத்தைப் பண்ணிக்கொடுப்பது. (தேவா) ஆருடம்பில் க்ஷயந்தான் தீர்ந்ததாயிருக்கிறது. (நின்னித்யாதி) என்னுடைய க்ஷயத்தைப் போக்குகைக்காக நீவந்து ஸந்நிஹிதனாயிருக்க, நான் பிறர்க்குக் குடிமைசெய்து திரியவோ? ... ... (அ)

அரு.—எட்டாம்பாட்டு. (தீவாயித்யாதி) நம்காலில் குனிந்து வாழுகைக்கு நாமே குடிவிட்டவர் என்றறிந்தீராகில், அவை மற்றப்படியாய் நரகத்திலே இடக்கருதுகைக்குக் காரண மென்னென்னும் சங்கையிலே, வல்வினையார்கிடீர் அவற்றுக்கு மூலபல மென்கிறார் என்று ஸங்கதி.

பூர்வார்த்தத்துக்கெல்லாம் தொகுத்த பாவத்தை “விரைந்து” என்றத்தைக் கடாக்ஷித்தருளிச்செய்கிறார் (அநலாஸ்யராய்த்து) என்று. சோம்பலில்லாமல் நெருப்பைச் சொரிந்துகொண்டு பிடிக்கவந்தார்களென்று கருத்து. (நிருபாதிக பந்துக்கள்) பெருமாளும் பிராட்டியும். சிறந்தவர்-தகுதியானவரென்றாய், அருளிச்செய்கிறார் (ஒருகாலுமித்யாதி).

“வெம்” என்றதுக்குத் தாத்பர்யம் (இங்குள்ள வித்யாதி). (அது) யமதண்டநம். (இந்நரகம்) ஸம்ஸாரம். “விரைந்து” என்று - வேகம் சொன்னால் ஸ்த்தாயியானதுக் கொழிய வேகம் சொல்லவொண்ணாதே யென்ன வருளிச்செய்கிறார் (கர்மத்துக்கித்யாதி); ஜலகண ஸமுதாயத்தில் வேகம்போலே பாபஸமுதாயத்தில் நைரந்தர்யத்தைச் சொல்லுகிறதென்று கருத்து.

மூவாமை - ஷட்பாவ விகாரங்களுக்கும் உபலக்ஷணமாய், கர்மக்ருதமான விகாரமில்லாமையைச் சொல்லிற்றாய், இப்படி விசேஷித்தது - தம்மையும் அப்படி பண்ணவேணுமென்னும் கருத்தாலே என்று விவக்ஷித்து அருளிச்செய்கிறார் (அகர்மேத்யாதி). அன்றிக்கே, மூவாமை - முற்றாமையாய், அது பகவதநுபவத்தில் முற்றினமையாய், அத்தால் பலித்த தாத்பர்ய மருளிச்செய்கிறார் (புஜியாநிற்க வித்யாதி). கீழ்ச்சொன்ன தாத்பர்ய த்வயத்துக் கநுகுணமாகக் கருத்தருளிச்செய்கிறார் (அவர்களையித்

(க) ரா-அயோ-சC-ரு.

யாதி). தாத்பர்யாந்தர மருளிச்செய்கிறார் (விண்ணுளாரித்யாதி). விவரணம் (ப்ராதாக்களிலே யித்யாதி). இத்தால் - வெறுப்புத் தோற்றச் சொன்னாரென்று கருத்து. மூன்றாம் தாத்பர்யம் விவக்ஷித்து த்ருஷ்டாந்தம் காட்டுகிறார் (ஹாராமேத்யாதி). ஸம்பந்தமுடையார் பேரைச்சொல்லி விஷாதப் பட்டாப்போலே விஷாதப் படுகிறாரென்று தாத்பர்யம்.

மேலுக்கவதாரிகை (அப்பரிமாற்ற மித்யாதி). மதி- சந்த்ரனுடைய, கோள் - க்ஷயத்தை, போக்கினாய் என்று சப்தார்த்தமாய், இத்தை இப்போது சொல்லுகிறவர்க்கு, மதியினுடைய - ஸ்வரூப ஜ்ஞாநத்தினுடைய, க்ஷயத்தை விடுத்தமையும் ஸூசிதமென்று விவக்ஷித்தருளிச் செய்கிறார் (ஸ்வரூபலாப மித்யாதி). (கொடுப்பது) என்ற வசநாந்தரம், இரண்டும் உனக்குத் துல்யம் என்று சேஷம். ... ... (அ)

மூ.—போதார் தாமரையாள் புலவிக்குல வானவர்தம்
கோதா கோதில் செங்கோல் குடைமன்னரிடை நடந்த
தூதா தூமொழியாய் சுடர்போலென் மனத்திருந்த
வேதா நின்னடைந்தேன் திருவிண்ணகர் மேயவனே. (கூ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
போதுஆர்	காலத்திலே யலர்ந்த (செவ்வி யழியாத)	மன்னர்	துர்யோதநாதிகளான ராஜாக்களுடைய
தாமரையாள்	தாமரைப்பூவை வாஸஸ்தானமாக உடைய பெரியபிராட்டியாருடையவும்	இடை	ஸபாமத்யத்திலே
		நடந்ததூதா	தூதுபோனவனே!
		தூமொழியாய்	பரிசுத்தமான (பாண்டவபக்ஷபாதியான) சொற்களை யுடையவனே!
புலவி	பூமிப்பிராட்டி யுடையவும் [யுடைய		
குலம்	தொண்டக் குலத்தை		
வானவர்தம்	நித்ய ஸூரிகளுடையவும்	சுடர்போல்	விளக்குப்போலே உஜ்ஜ்வலனாய்க்கொண்டு
கோதா	ஸந்தோஷத்துக்கு விஷயமானவனே!	என்மனத்து	என் ஹ்ருதயத்தில்
கோதுஇல்	ப்ரதிஹதியாகிற தோஷமில்லாத [ராய்	இருந்த	வாஸம்பண்ணா நின்றவனே!
செங்கோல்	ஆஜ்ஞையை யுடைய	வேதா	வேதப்ரதிபாத்யனே!
குடை	முத்துக்குடையை யுடையரான	நின்னடைந்தேன் திருவிண்ணகர் மேயவனே!	(கூ)

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. பிராட்டிமாரும் நித்யஸூரிகளும் புருஷகாரமாகச் சரணம் புகுகிறார்.

(போதார் தாமரையாள்) காலத்திலே யலர்ந்த செவ்விப்பூவை இருப்பிடமாக வுடையவளென்னுதல்; அன்றிக்கே, செவ்விப்பூவை யுடைத்தான தாமரையை வாஸஸ்த்தாநமாக உடையவளென்னுதல், போதுஎன்று - காலமாதல், புஷ்பத்தைச் சொல்லிற்றுதல். (புலவி) என்று - ஸ்ரீ பூமிப்பிராட்டிக்குத் திருநாமமாகவுமாம்; அன்றிக்கே, போதார் தாமரையாள் புலவி யிடத்தில் குலவானவர்தம் கோதா என்றுகவுமாம்; அப்போது, ஸர்வேஶ்வரனுக்கும் பிராட்டிக்கும் ஸம்ஶ்லேஷவர்த்தகமான விஶ்லேஷங்களுண்டானல், அப்போது(க) ''[illegible] - ரரக்ஷ தர்மேண'' என்கிறபடியே - இளையபெருமாள் ஆஶ்வஸிப்பிக்குமாபோலே, அவ்வூடலைத் தீர்த்து ஆஶ்வஸிப்பிக்கிற நித்யஸூரிகளுடைய கௌதூஹலத்துக்கு விஷயபூதனானவனே!.

(குலவானவர்) பகவதநுபவ வ்யபிசாரமில்லாதவர்கள். (உ)“வடிவுடைவானோர்’’என்னுமாபோலே ‡(யாய்த்து). பெரியபிராட்டியாரோடுண்டான ஊடல் இடையாட்டத்தில் அத்தைப் பரிஹரித்து ஆஶ்வஸிப்பிக்கிற நித்யஸூரிகளுடைய கொண்டாட்டத்துக்கு விஷயபூதனானவனே! “கோதுகுலம்” என்கிறவிடத்திலே “கோதா” என்கிறது. அங்ஙனன்றிக்கே, (புலவிக்குலவானவர்) என்று - நித்யஸூரிகளுக்கு விசேஷணமாய், அந்தப் பக்ஷத்தில், †பிராட்டியுடைய பின்பு கூடாதபடி பிரித்தபிரிவை யாய்த்துப் புலவியென்கிறது. அத்தாலே- நித்யவாஸம் பண்ணுகிற்கச் செய்தேயும், இதுக்கு முன்பு ஒருகாலமும் அநுபவித்தறியாதாரைப் போலே உண்டாகிற அத்ருப்தியைப் பற்ற அவர்களைச் சொல்லிற்றுகவுமாம். இப்படி ஸர்வாதிகனான ஸர்வேஶ்வரனாயிருந்து வைத்து, ஆஶ்ரிதார்த்தமாகத் தன்னை யழியமாறித் தூதுபோனபடியைச் சொல்லுகிறது.

(கோதில் செங்கோல் குடைமன்னர்) என்று - துர்யோதநாதிகளைச் சொல்லுகிறதென்றும், பாண்டவர்களைச் சொல்லுகிறதென்றும் அருளிச்செய்வர். பாண்டவர்களுடைய சத்ரசாமராதிகளடையப் பறித்துக்கொண்டு, ஒருவரால் ப்ரதிஹதி பண்ணவொண்ணாத ஆஜ்ஞையை யுடையராய்க் கொண்டு, முத்தின்குடை நிழல்கீழே யிருந்து பூமிப்பரப்புக்கெல்லாம் தாங்களே ராஜாக்களாய் நிர்வஹித்துக்கொண்டு போருகிற துர்யோதநாதிகள் நடுவே, கழுத்திலே ஓலையைக் கட்டிக்

(க) ரா-கிஷ்-க-கஉ-அ. (உ) தி-வாய்-எ-உ-கo. ‡ குண்டலிதம்க்வாசிதகம்.
† இந்தவாச்யம் அகந்விதம்.

கொடு தூதுபோனவனே! அன்றிக்கே, க்ருஷ்ணனுடைய அபிப்ராயத்தாலே, (கோதில் செங்கோல் குடைமன்னர்) என்று - பாண்டவர்களையே சொல்லுகிறதாகவுமாம்.

(தூமொழியாய்) பாண்டவர்களும் நீங்களும் செய்யப்பார்த்தது என்? என்று கேட்க; "அவர்களுக்கு தர்மமும் தர்மபலமான ஸ்வர்க்கமுமுண்டு; அவர்கள் ஐவர், நாங்கள் நூற்றுவர்; ஆகையாலே பூமிப் பரப்படைய எங்களுக்கே இடம்போரு மித்தனை, நாங்கள் ஒரு ஸூச்யக்ரமும் கொடுப்பதில்லை" என்று அவன் வார்த்தைசொல்ல; "உன்னபிப்ராயம் இதுவானபின்பு, உண்பன உண்டு உடுப்பன உடுத்துப் பூசுவன பூசி எல்லாவழியாலும் ஆஶ்வஸித்து ஒருப்பட்டிருக்கிற ராஜாவானவன் ஜயத்திலே த்வரியாநின்றான்" என்று ஆஶ்ரித விஷயத்திலுண்டான ஓரம் தோற்றச் சொன்னவார்த்தை யாகையாலே, மறுக்கவொண்ணாதபடி உஜ்ஜ்வலனாய்க் கொண்டு என் ஹ்ருதயத்திலே ப்ரகாசித்தவனே! (வேதா) இப்படி ப்ரகாசிக்கிறவன்றான் ஆரென்னில்; வேதைக ஸமதிகம்யன்.

(நின்னித்யாதி) ஓலைப்புறத்திலே கேட்டுப்போகை யன்றிக்கே, கண்ணாலே காணலாம்படி திருவிண்ணகரிலே வந்து ஸந்நிதி பண்ணின உன் திருவடிகளிலே சரணம் புகுந்தேனென்கிறார். ... (௯)

அரு.—ஒன்பதாம்பாட்டு. (போதாரித்யாதி) எத்தனைசொன்னாலும் அவன் இவர் நினைவின்படி செய்யாதே ஈஶ்வரத்வப் பிடாரடித்திருக்கையாலே புருஷகாரத்தை முன்னிடுகிறார் என்னும் ஸங்கதியை ஸூசிப்பிக்கிறார் (பிராட்டிமாரு மித்யாதி).

(புலவியிடத்தில்) புலவியிலே. ஸம்ஶ்லேஷார்த்தமான பிரிவிலே என்கை. (பூதனானவனே) என்ற வநந்தரம், என்றபடி என்று சேஷம்.

குலவானவர் - தொண்டக்குலத்திலே வானவர் என்றாய், அருளிச்செய்கிறார் (பகவதித்யாதி). "குலவானவர் கோதா" என்று இவர் இவர்களை கடக(घटक)ராகச் சொன்னாப்போலே கண்டதுண்டோ வென்ன வருளிச்செய்கிறார் (வடிவுடை யித்யாதி). *கங்குலும் பகலில் கடகராக வெண்ணி, "வடிவுடைவானோர் தலைவனே" என்றாரிறே என்று கருத்து. இப்பாசுரத்தில் விவக்ஷிதமான ப்ரமேயத்தை இவ்விடத்துக்கு அநுகுணமாகக் காட்டிக்கொடுக்கிறார் (பெரியவித்யாதி). இத்தால் - பிராட்டி தசையை ப்ராப்தரான ஆழ்வார், தம்மிடத்திலே ஈஶ்வரனுக்குண்டான ஊடலைத்தீர்த்துச் சேர்க்கவேணும் என்னும் கருத்தாலே இப்படி ஸம்போ

இத்தார் என்றதாய்த்து. போதார் தாமரையாளென்ன, புலவியென்ன, குலவானவரென்ன, இவர்களுடைய கௌதூஹலத்துக்கு விஷயபூதனே! என்றும், தாமரையாளுடைய புலவியிலேயும் சேர்க்கும் குலவானவரென்றும், இரண்டுயோஜனை அருளிச்செய்தாராய், தாமரையாளுடைய புலவி போலேயான புலவியுடைய குலவானவரென்று மூன்றும்யோஜனை யருளிச்செய்கிறார் (அங்ஙனன்றிக்கே யித்யாதி).

"கோதில்" என்றதினர்த்தம் (ஒருவராலித்யாதி). (ராஜா) தர்மபுத்ரன். (ஜயத்திலே) ஜய ஹேதுவான யுத்தத்திலே. ... ... (௯)

மூ.—தேனார் பூம்புறவில் திருவிண்ணகர் மேயவனை
வானாரும் மதிள்சூழ் வயல் மங்கையர்கோன் மருவார்
ஊனார் வேற்கலிய னொலிசெய் தமிழ்மாலை வல்லார்
கோனாய் வானவர்தம் கொடி மாநகர் கூடுவரே. (௧௦)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

* * *

பதம்.	உரை.
தேன் ஆர்	தேன்மிக்க
பூ	பூக்களையுடைய
புறவில்	பர்யந்த ப்ரதேசங்களை யுடைத்தான
திருவிண்ணகர்	திருவிண்ணகரென்னும் திவ்யதேசத்திலே
மேயவனை	பொருந்தி வர்த்திக்கிற ஸர்வேஶ்வரன் விஷயமாக,
வான் ஆரும்	ஆகாசத்தை யளாவியிருக்கிற
மதிள்	ப்ராகாரங்களாலும்
வயல்	கழனிகளாலும்
சூழ்	சூழப்பட்ட
மங்கையர்	திருமங்கையிலுள்ளார்க்கு
கோன்	ஸ்வாமியாய்,
மருவார்	சத்ருக்களுடைய
ஊன் ஆர்	சரீரங்களிலே புகக்கடவதான
வேல்	வேலாயுதத்தையுடையரான
கலியன்	ஆழ்வார்
ஒலிசெய்	அருளிச்செய்த
தமிழ்மாலை	த்ராவிடரூபமான இப்பத்துப்பாசுரங்களையும்
வல்லார்	அப்யஸிக்க வல்லவர்கள்
கோனாய்	ஸ்வாமியாய்(ஸ்வதந்த்ரராய்)க்கொண்டு,
வானவர்தம்	நித்யஸூரிகள் வாஸம்பண்ணுகிற
கொடி	கொடிகளாலே அலங்கரிக்கப்பட்ட
மா	ஶ்லாக்யமான
நகர்	ஶ்ரீ வைகுண்டத்தை
கூடுவர்	சேரப்பெறுவர்கள்.

வ்யா.—பத்தாம்பாட்டு. (தேனாரித்யாதி) தேன்மிக்கிருந்துள்ள பூக்களையுடைய பர்யந்தத்தை யுடைத்தான திருவிண்ணகரிலே நித்ய

வாஸம்பண்ணுகிறவனை. தேன் என்று - வண்டைச் சொல்லிற்றாகவுமாம். (வானாரும் மதிள்சூழ் வயல்மங்கையர் கோன்) ஆகாசாவகாசமிடமடையும்படியான ஓக்கத்தை யுடைய மதிளாலே சூழப்பட்டிருப்பதாய், வயலையுடைத்தான திருமங்கைக்கு நிர்வாஹகரான ஆழ்வார். (மருவாரித்யாதி) திருமங்கையாழ்வார் கையில் வேலுக்கு இரை சத்ருசரீரங்களாய்த்து. சத்ரு சரீரங்களிலே குளித்த வேலையுடையரான ஆழ்வாரருளிச்செய்த இப்பத்தும் வல்லார். (கோனாயித்யாதி) அங்கேபோய் சிலர்க்குப் பரதந்த்ரரா யிருக்கை யன்றிக்கே, (௧) "ஆண்மின்கள்வானகம்" என்கிறபடியே தாங்கள் அங்குத்தைக்கு நிர்வாஹகராய்க்கொண்டு ஸ்ரீ வைகுண்டத்தை ப்ராபிக்கப் பெறுவர். (௧௦)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

அரு.—பத்தாம்பாட்டு. (தேனாரித்யாதி) (சிலர்க்குப் பரதந்த்ரராயிருக்கை யன்றிக்கே) என்றது - இந்த்ரன் முதலானார் இங்குநின்றும் போனாரைத் தமக்குப் பரதந்த்ரரென்றிருக்குமாபோலே, அங்கும் நித்யஸூரிகள் அங்ஙன் நினைத்திரார்கள் என்றபடி. ... ... (௧௦)

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஆறாம்பத்தில் இரண்டாந்திருமொழி முடிந்தது.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஆறாம்பத்து மூன்றாந்திருமொழி

துறப்பேன் ப்ரவேசம்.

வ்யா.—(௨) *வண்டுணு நறுமலரிலே- "வேண்டேன் மனைவாழ்க்கையை விண்ணகர் மேயவனே" என்று தாம் பலகாலும் விண்ணப்பம் செய்தவார்த்தை ஸஹ்ருதயமென்று அப்பன் திருவுள்ளத்திலே படும்படியாக, (௩) * பொறுத்தேனிலே - அம்மனைவாழ்க்கையிலே

---

(௧) தி-வாய்-௧௦-௯-௬. (௨) ௬-௧. (௩) ௬-௨.

அந்வயித்து அவற்றால் தாம் மறுபாடுருவ க்லேசப்பட்ட படிகளையும், தத்தேதுக்களையும் விண்ணப்பம் செய்து, இவ்வநிஷ்டமான வாழ்க்கையைத் தவிர்த்து எனக்கு இஷ்டமான உன் தாளிணைக்கீழ் வாழ்ச்சியை நான் பெறும்படி பண்ணித் தந்தருளவேணு மென்று திருவடிகளிலே சரணம் புகுகிறேன் என்றார்.

ஸர்வேஶ்வரனுக்கு ஒரு ஸ்வபாவமுண்டு; - அநாதிகாலம் ஸம்ஸரித்துப்போந்தானொருவன் ஸம்ஸாரத்தில் விரக்தி பிறந்து, இவை வேண்டேன் என்று இதில் தோஷங்களைச் சொல்லிக் காட்டுவது, இத்தைத் தவிர்த்துத் தரவேணு மென்று சரணம் புகுவதானாலும், திரியவும் பூர்வ வாஸநைகளாலே அவற்றிலே சில பாசம் கிடக்க வடுக்குமென்று, அவற்றில் தன்னா லாராயுமளவும் ஆராய்ந்து, தனக்கேற அவற்றில் கடையறப்பாசங்கள் விட்டார்க்கன்றிக் கார்யம் செய்யான்; ஆகையாலே "பொறுத்தேன்" என்று தொடங்கிக் கீழிவர்சொன்னவார்த்தைகளைத் தனித்தனியே ஆராய்ந்து, இவற்றில் அறவிடாதே "எத்தை இன்னமும் அநுஸந்திக்கப் பார்த்தீர்?" என்றாப்போலே கேட்க; அவற்றில் தமக்கு அவிருத்தமாய் விடாதேயொழிய நினைத்தவற்றையும், விருத்தமாய் விட நினைத்தவற்றையும் விண்ணப்பம்செய்து, (க) "குலவானவர்தம் கோதா" என்று கீழ்ச்சொன்ன தேசவிசேஷ ப்ராப்தியில் தமக்குள்ள த்வரையையும் அறிவித்துத் தலைக்கட்டுகிறார். *பொறுத்தேனில் முதற்பாட்டில் "பொருளின்பம்" என்றவற்றில் ப்ரதாநமான இன்பத்தில் நீர் நின்ற எல்லையென்னென்ன; சொல்லுகிறார். *

அரு — துறப்பேன் ப்ரவேசம். சரணம்புகுந்தால் கார்யம் செய்யாதிருப்பா னென்னென்ன வருளிச்செய்கிறார் (ஸர்வேஶ்வரனுக் கித்யாதி). ஸ்வபாவமாவது- கோவிந்தஸ்வாமிக்குக் கருத்தறிந்து விஷயாநுபவத்திலே மூட்டிவிட்டாப்போலே இவரையும் உகந்தருளின நிலங்களில் வாஸநையாலே யுண்டான ருசியறிந்துவைத்து அதிலே மூட்டிவிடுகை. இத்தை விவரிக்கிறார் (அநாதீத்யாதி). (தனக்கேற) என்றது - விஷயாந்தரங்களில் பாசம் ஸவாஸநமாகப் போகைக்கு அடையாளந்தன்னையும், இவ்விபூதியிலே அநுபவிக்கக் கொடுத்தாலும் விஷமிஶ்ரபோஜந மென்றாப்போலே விடும்படியான பாகம் பிறந்தமை தன் திருவுள்ளத்தில் படுகை. (உ) "மருளொழி நீ மடநெஞ்சே" என்றாரிறே ஆழ்வாரென்று கருத்து. (அறவிடாதே) என்றது - மிகவும் விடாதே என்கை. இத்தால் - திருப்பேர் நகரிலும்

(க) ௬-௨-௯. (உ) திவாய்-௧௦-௬-௧.

திருநந்திபுரத்திலும் மண்டியிருக்குமவர், "மனைவாழ்க்கையை - வேண்டேன்" என்று அத்தனைசொல்லிச் சரணமடைந்து தேசவிசேஷத்திலே போகவேணுமென்றாலும், உகந்தருளின நிலங்களில் ஆசை பின்னாட்டுமென்று கருதி, கீழ்த்திருமொழியில் சொன்ன விபூதியில் பிறக்கும் இன்பமெல்லாம் வேண்டாவோ? என்று ப்ரஸ்நம் பண்ண, அதில் உன்னை மறவாதிருக்கை யாகிற இன்பத்தை மறந்தே னல்லேன் என்று கொண்டு, இதினுடைய அநித்யதைக்காக அவ்விபூதியில் த்வரை எனக்குப் பிறந்ததென்கிறாரென்று ஸங்கதி சொல்லிற்றாய்த்து. ... ... (*)

மூ.—துறப்பே னல்லே னின்பம் துறவாது நின்னுருவம்
மறப்பே னல்லே னென்றும் மறவாது யானுலகில்
பிறப்பேனாக வெண்ணேன் பிறவாமைப் பெற்றது நின்
திறத்தேனா தன்மையால் திருவிண்ணகரானே. (௧)

பதம்.	உரை.	பதம்.	உரை.
திருவிண்ணகரானே	திருவிண்ணகரென்னும் திவ்யதேசத்தில் ஸந்நிஹிதனானவனே!	மறவாது	மறவாமையாலே,
இன்பம்	உன்னுடைய அநுபவத்தினாலுண்டான ஸுகத்தை	யான்	நான்
துறப்பேனல்லேன்	விடுகிறிலேன்,	உலகில்	ஸம்ஸாரத்தில்
துறவாது	(அந்த ஸுகத்தை) விடாமையாவது	பிறப்பேனாக எண்ணேன்	(இனி) பிறப்பேனென்று நினைக்கமாட்டேன்,
நின்உருவம்	உன்வடிவழகை	பிறவாமை	(அந்த) ஜந்மம்கழிந்தமையையும்,
என்றும்	ஸர்வகாலமும்	நின்	உன்னுடைய
மறப்பேனல்லேன்	மறக்கமாட்டேன் (என்றபடி).	திறத்தேன் ஆ தன்மையால்	பக்ஷத்திலே(உனக்கு சேஷபூதனாக) ஆனபடியால்
		பெற்றது	லபிக்கப்பெற்றேன்.

வ்யா.—முதற்பாட்டு. (துறப்பேனல்லேனின்பம்) விஷயாநுபவ ஸுகத்தைத் துறக்குமித்தனை யொழிய, நின் திறத்தேனாயிருக்கிற ப்ராதாநஸுகத்தை விடுவேனல்லேன். சப்தாதிவிஷயங்களை விட்டீரேயானால் இன்பத்தை இங்குத் துறவாதொழியும் விரகென்னென்ன, (துறவாதித்யாதி) ஸுகத்தைத் துறவாமையாவது - உன்னுடைய வடிவை மறவாதிருக்கை. (௧) "மறந்தேனுன்னை முன்னம்"

---

(௧) ௬-௨-௨.

என்று கீழுள்ளகாலம் மறந்தேனேயாகிலும், இனி மேலுள்ள காலம் மறவாதே யொழியப்பார்த்தேன்.

இத்தால் பலித்த தென்னென்ன; மறந்தே னுன்னை முன்னம், அது ஹேதுவாகப் பிறந்தே யெய்த்தொழிந்தேன் என்றேன்; இனி, உன்னை மறவாதே நினைக்கப்பார்த்தால், பிறவாமையன்றோ இதுக்குப் பலம். (என்று மித்யாதி) அம்மறவாமையால் பெற்றது - ஸம்ஸாரத்தில் பிறப்பேன் என்னும் மநோரதமும் தவிர்ந்தேன்.

அழகிது, தைலதாராவதவிச்சிந்நஸ்ம்ருதி உமக்குண்டாகையாலே நமக்கு இனி ஜந்மம் வாராது என்று நினைத்திருக்கிறீரன்றோவென்ன, (பிறவாமை யித்யாதி) அந்தப் பிறவாமையை நான் லபித்தது, உன் அபிமாநத்துக்குள்ளே யடங்கி "நீயே நிர்வாஹகன்" என்றிருக்கையாலே இத்தனையல்லது, நானநுஷ்டித்த தொன்றாலல்ல. (திருவிண்ணகரானே) உன் திறத்தேனாகப் பெற்றது தானும் நீ இங்கே ஸந்நிஹிதனாகை.

(துறப்பேனல்லே னின்பம்) ஸுகத்தை ஸந்யஸிப்பேனல்லேன். (துறவாது நின்னுருவம் மறப்பேனல்லேன்) ஸுகத்தைத் துறவாமையாவது-உன்னுடைய வடிவை மறவாதே யிருக்கை. (என்றும் மறவாது யானுலகில் பிறப்பேனாக வெண்ணேன்) மறவாமையால்பெற்றது பிறவாமை. (நின் திறத்தே னாதன்மையால் - பிறவாமைப் பெற்றது - திருவிண்ணகரானே) உன் திறத்தேனாகப் பெற்றது நீ ஸந்நிஹிதனாகை. ... ... (௧)

அரு.—முதற்பாட்டு. (துறப்பேனித்யாதி) (௧)"பொருளின்பமெனவிரண்டுமிறந்தேன்" என்று க்லேசித்தவர், இங்கே "துறப்பேனல்லேன் இன்பம்" என்னக்கூடுமோவென்ன வருளிச்செய்கிறார் (விஷயேத்யாதி). மேலுக்கவதாரிகை (சப்தாதீத்யாதி). (இன்பத்தை) ப்ரதாநஸுகத்தை. இவ்விபூதியில் பகவதநுபவஸுகம் விஷயாந்தராநுபவத்தோடே கலசியிருக்குமே என்று கருத்து. நீர்தானே "மறந்தேன்" என்றீரே யென்ன வருளிச்செய்கிறார் (மறந்தேனித்யாதி).

அநாதிகாலம் மறந்தவர் இனி மறவாதிருக்கப்பார்த்தால் என்ன பலம், மீளவும் மறக்கவுங்கூடுமே இவ்விபூதியில் பிறவியாலே என்னும் ப்ரஸ்நத்துக்கு ப்ரதிவசநரூபேண மேலுக்கவதாரிகை யருளிச்செய்கிறார் (இத்தாலித்யாதி).

---

(௧) ௬-௨-௧-

மறவாமையால் பிறவாமை என்றுவைத்து, "நின்திறத்தேனாதன்மையால்" என்றால் இது சேரும்படி யென்னென்ன; பால்குடிக்க நோய் தீருமாபோலே விஷய ஸ்வபாவத்தால் போச்சு இத்தனையொழிய மறவாமையை உபாயமாக நினைக்கவில்லை என்னும் கருத்தாலே யருளிச்செய்கிறார் (அந்தப்பிறவாமையை யித்யாதி). "நின்திறத்தேன்" என்றதுதான் உம்மால் வந்ததோவென்ன வருளிச்செய்கிறார் (உன்திறத்தே னித்யாதி).

கீழ்ப்பாட்டுக்கெல்லாம் தாத்பர்ய மருளிச்செய்து, புத்திஸ்த்தமாகைக்காக பதாரூடமாகக் காட்டுகிறார் (துறப்பேனித்யாதி). இன்பம் - துறப்பேனல்லேன், துறவாமையாலே, நின்னுருவம் மறப்பேனல்லேன், என்னும் மறவாமையால் யானுலகில் பிறப்பேனாக வெண்ணேணன், பிறவாமை- நின்திறத்தேனா தன்மையால், நின்திறத்தேனானது திருவிண்ணகரானாகையால் என்றந்வயம்... ... ... (௧)

மூ.—துறந்தேனார்வச் செற்றச்சுற்றம் துறந்தமையால்
சிறந்தேன் நின்னடிக்கே யடிமை திருமாலே
அறந்தானாய்த் திரிவாயுன்னை யென்மனத்தகத்தே
திறம்பாமல் கொண்டேன் திருவிண்ணகரானே. (௨)

பதம்.	உரை.
திருவிண்ணகரானே!	
திருமாலே	ஶ்ரியஃபதியே!
அறம்தானாய்	ஸாக்ஷாத் தர்மமாய்க் கொண்டு
திரிவாய்	(பலம்கொடுக்க ஸமயம் பார்த்துத்) திரியுமவனே!
சுற்றம்	(ஸம்ஸாரிகளுடன்) உறவையும்
ஆர்வம்	ப்ரீதியையும்
செற்றம்	த்வேஷத்தையும்
துறந்தேன்	விட்டேன்;

பதம்.	உரை.
துறந்தமையால்	விட்டபடியால்,
நின் அடிக்கே	உன் திருவடிகளிலே
அடிமை	கைங்கர்யம் செய்கைக்கு
சிறந்தேன்	யோக்யனானேன்;
உன்னை	இப்படியான உன்னை
என்மனத்தகத்தே	என் ஹ்ருதயத்துக்குள்ளே
திறம்பாமல்	தவறாமல் (விச்சேதமில்லாமல்)
கொண்டேன்	வைத்துக்கொண்டேன். (௨)

வ்யா.—இரண்டாம்பாட்டு. (துறந்தேனித்யாதி) "உனக்குப் புறம்பே சில பற்றுண்டு" என்று தேவர்க்குப் பழியிட்டு விடவொண்ணாதபடி யானேன்; (௧) "𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑌾 𑌮𑌯𑌾𑌲𑌙𑍍𑌕𑌾 - பரித்யக்தா மயாலங்கா" என்னுமாபோலே. அநாதிகால வாஸநையாலே விஷயங்களிலே

---

(௧) ரா-யு-௧௯-௫.

ஸ்ம்ருதி பிறந்து அதடியாக ஸ்நேஹம்பிறந்து, பின்பு அவ்விஷயத்தைப் பெறில் ஜீவித்தல் இல்லையாகில் முடியுமளவாய், அது கிடையாதொழிந்தவாறே, “இவனிறே இதுக்கு நிரோதகன்” என்று கண்டார் மேலெல்லாம் கோபம்பிறந்து, யுக்தாऽயுக்த நிரூபணக்ஷமனன்றிக்கே, தோற்றினபடி நடந்து திரியக்கடவனாய்; இவைதான் இத்தனைக்கும் அடி - புறம்பே சிலரை உறவுமுறை என்றிருக்கையிறே; அது தவிர்ந்தேன். பண்ணின ஸங்கம் தவிரவே, அதடியாக வரும் த்வேஷம் போமிறே. இவை இரண்டும் போமிறே புறம்பே சிலரை உறவுமுறை என்றிருக்குமது தவிரவே.

(துறந்தமை யித்யாதி) புறம்பே சிலரை உறவுமுறை என்றிருக்கையிறே - இழவு வருகைக்கடி, அது தவிர்ந்தால், இப்போதாக உறவு ஸம்பாதிக்க வேண்டுவதில்லையிறே. இவன்பக்கல் ஸம்பந்தம் ஸ்வாபாவிகமே. பாஹ்யவிஷயங்களை விட்டபோதே தொடங்கி திருவிடையாட்டமிறே. ராவணபவநத்தை விட்டு ஆகாசஸ்த்தனானபோதே ஶ்ரீமானானானிறே. அப்ராப்த விஷயங்களை விட்டவநந்தரம் ப்ராப்த விஷயத்தினுடைய சரமாவதியிலே நின்றேன்; ப்ராப்தி பலமான கைங்கர்யத்துக்கு யோக்யனானேன்.

நாம் ஸர்வஜ்ஞராயிருந்தோம், நீர் அநாதிகாலம் புறம்பே சிலரை உறவுமுறை என்று இருந்தவராயிருந்தீர், இப்படி யிருக்க, இப்போது சிறந்தபடி எங்ஙனே யென்னில், (திருமாலே) ஶ்ரிய:பதி யாகையினாலே. இவன்றான் அகலநின்று பண்ணின குற்றத்தைக் கணக்கிட்டுக் கைவிடு மத்தனையோ? உம்மோடுண்டான குடல் துடக்கைப் பார்த்துக்கொள்ளு மத்தனையன்றோ? என்று ஆறவிடுவார் அருகே யுண்டாகையாலே, இவனுக்கு கர்ம பாரதந்த்ர்யம் ஔபாதிகமாய், ஈஶ்வர பாரதந்த்ர்யம் ஸ்வாபாவிகமா யிருக்குமிறே. (க) ‘‘[illegible] நகஶ்சிந்நாऽபராத்யதி’’ என்பார் அருகே யுண்டானால், கிட்டுகைக்கு ஒரு குறையுண்டோ. பிராட்டியோட்டை ஸம்பந்தமும் ஒரு தலைதுலுக்குபாத்ரமாய், அவன்றான் ப்ரஜைகள் பக்கலிருக்கு மிருப்பைச் சொல்லுகிறது. (உ) ‘‘என்னடியாரது செய்யார்’’ என்று அவளோடு மன்றாடும் ஏற்றமுண்டிறே அவனுக்கு. பொறுக்கைக்கு ஒரு ஸாமக்ரி மாத்ரமாய், பொறுப்பிப்பார் வேறே சிலரா யிருக்கையன்றிக்கே,

---

(க) ரா-யு-௧௧௬-௪௪. (உ) பெரி-திரு-௪-௯-௨.

பொறைதானா யிருக்கை. இத்தால் - இதர தர்ம வ்யாவ்ருத்தி சொல்லுகிறது. கேவல தர்ம்மாகிறது தான், அசேதநமுமாய், செய்தபோதே நசித்துவிடுமிறே; ஆகையால், இவன்செய்த தறியாதே, பலம் பெறுகைக்கு வேறே ஒருவனைக் காற்கட்ட வேண்டும்படியா யிருக்குமிறே. அவன்றன்னையே பற்றிப் பெறுமிடத்து இவற்றைவிட்டே பெறவேண்டி யிருக்குமிறே; ஆகையாலிறே ஸாதந நைரபேக்ஷ்யம் சொல்லுகிறது. கூறுசெய்வான் ஒன்று கொடுக்கும்போது ராஜாநுஜ்ஞை வேணும்; ராஜா ஒன்று கொடுக்கும்போது கூறுசெய்வான் வேண்டாவிறே.

(அறம்தானாய்) (௧) "కృష్ణం ధర్మం సనాతనమ్ - க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம்" (௨) "లోకానాం త్వమ్-லோகநாம் த்வம்" (௩) "రామో విగ్రహవాన్ - ராமோ விக்ரஹவாந்" (௪) "సాక్షాద్రామా ద్వినిర్వృత్తః-ஸாக்ஷாத் ராமாத் விநிர்வ்ருத்தஃ." (திருமாலே அறந்தானாய்த் திரிவாய்) (௫) "நிறங்கரியன் செய்ய நெடுமலராள் மார்வன் அறம்பெரியன்" என்னுமாபோலே. [ஆரதறிவார்] அவன்படி இதுவாயிருக்க, உடம்பை ஒறுத்துக் கார்யம் பாராநிற்பர்கள். (திரிவாய்) பலம் கொடுக்கைக்கு அவஸரம் பார்த்துத்திரியும் தர்மமாய்த்து.

(உன்னை யென்மனத்தகத்தே திறம்பாமல் கொண்டேன்) உன்னுடைய தடுமாற்றத்தைத் தவிர்த்தேன். லக்ஷ்மீபதியாயிருந்த உன்னை, பிராட்டி புருஷகாரமாகவும், என்னுடைய அநந்யகதித்வத்தையும் முன்னிட்டு, என்னுடைய ஹ்ருதயத்திலே இனி நீ கால்வாங்கில் காதக (ఘాతక)ரோபாதி யாம்படியாக வைத்துக்கொண்டேன். நீயே வந்து புகுருகிறவிடத்தில் நான் விலக்கிற்றிலேன் என்றபடி. அநந்யகதியைவிடில் நிர்க்க்ரு(ఘృ)ணனும்; பிராட்டிக்கு அநபிமதம் செய்யில் ப்ரணயியன்றிக்கே யொழியும். ஆக, ஸ்வரூபமும், ப்ரணயித்வமும், இரண்டும் இழவாம். நீர் கொள்ளவல்லீரானபடி என்னென்ன (திருவிண்ணகரானே) நீ ஸௌலபனாகையாலே. நீ திருவிண்ணகரிலேவந்து ஸந்நிஹிதனானபடியாலே. ... ... (௨)

௮௫.—இரண்டாம்பாட்டு. (துறந்தேனித்யாதி). கீழ்ப்பாட்டில் விஷயாந்தரத்தில் இன்பத்தைவிட்ட மாத்ரமொழிய ப்ராப்தமான இன்பத்தை

---

(௧) பா-ஆர-௮௮-௨௯. (௨) (௩) ரா-ஆர-௩௭-௧௩.
(௪) ரா-அயோ-௨-௨௬. (௫) ௨-திருவ-௫௨.

"துறப்பேனல்லேன்" என்றீர்; இது இன்பமாகத் தோற்றும்போது புறம்பு பற்ற வேணுங்காணும், அதில் "ஆர்வச்செற்றமவை தன்னை வெறுத்தேன்" என்றது விஸ்ம்ருதமோ? என்றுகேட்க அருளிச்செய்கிறாரென்றுஸங்கதி.

ஆர்வமென்ன-ராகமென்ன, செற்றமென்ன-த்வேஷமென்ன, இவற்றுக்குடலான சுற்றத்தைத் துறந்தேன் என்று சப்தார்த்தமாய், ப்ரஸக்திபூர்வகம் தாத்பர்யமருளிச்செய்கிறார் (உனக்கித்யாதி). பந்துக்களடியாக ராகத்வேஷமுண்டாமென்னுமத்தை (௧) "𑌸𑌙𑍍𑌗𑌾𑌤𑍍𑌸𑌞𑍍𑌜𑌾𑌯𑌤𑍇 𑌕𑌾𑌮𑌃 - ஸங்காத் ஸஞ்ஜாயதே காம:" என்கிற ஸ்லோகத்தை உட்கொண்டருளிச்செய்கிறார் (அநாதீத்யாதி). தவிர்ந்த க்ரமமெப்படியென்ன வருளிச்செய்கிறார் (பண்ணினவித்யாதி).

"அடியேன்" என்றத்தாலே பாகவத பர்யந்தமாக விவக்ஷித்தருளிச்செய்கிறார் (அப்ராப்தேத்யாதி).

(இப்போது) என்றவநந்தரம், "துறந்து" என்று கூட்டுவது. கர்மமடியான குற்றத்தைப் பாராமல் ஸம்பந்தமடியாக ரக்ஷிக்கைக்கு, கர்மத்தைப் பற்ற ஸம்பந்தத்துக்கேற்ற மேதென்ன வருளிச்செய்கிறார் (இவனுக்கித்யாதி). "திரு" என்றபதத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்து, "மால்" என்றதுக்கு - ஆஸ்ரிதவ்யாமுக்தனென்று அர்த்தம் விவக்ஷித்து, அதுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (பிராட்டியித்யாதி). (தலைதுலுக்கு) தலையசைக்கை. ஸம்மதியாகுமென்கை. ஏற்றமெங்ஙனேயென்ன வருளிச்செய்கிறார் (பொறுக்கைக்கித்யாதி). (ஸாமக்ரி) ஸஹகாரி. பிராட்டி ஸஹகாரிமாத்ரமென்றபடி. (பொறைதானுயிருக்கை) பொறுப்பானுயிருக்கை. பிராட்டியில் வ்யாவ்ருத்தி மாத்ரமன்றிக்கே ஸாதநாந்தர வ்யாவ்ருத்தியும் பலித்ததென்று விவக்ஷித்து, பரக்க உபபாதிக்கிறார் (இத்தாலித்யாதி).

அறமாய் என்னாதே, "அறந்தானாய்" என்றத்தாலே - ஸநாதநத்வாதிகள் விவக்ஷிதமென்று ப்ரமாணங்கள் காட்டுகிறார் (க்ருஷ்ணமித்யாதி). "𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌦𑍍𑌰𑌾𑌮𑌾𑌦𑍍𑌵𑌿𑌨𑌿𑌰𑍍𑌵𑍃𑌤𑍍𑌤𑍋 𑌧𑌰𑍍𑌮𑌶𑍍𑌚𑌾𑌪𑌿 𑌶𑍍𑌰𑌿𑌯𑌾𑌸𑌹 - ஸாக்ஷாத் ராமாத் விநிர்வ்ருத்தோ தர்மஸ்சாபி ஸ்ரியாஸஹ" என்றதுக்கு - பிராட்டியோடே கூட ஸாக்ஷாத்தர்மமான ஸித்தோபாயம் பெருமாளாலே நிறைவேற்றப்பட்டதென்று; அத்தாலே அவரே ஸாக்ஷாத் தர்மமானாரென்று கருத்து.

நீர்தான் அவற்றைக் கண்டீரோ வென்ன வருளிச்செய்கிறார் (நீயேயித்யாதி). வரில் பொகடோம் என்றிருந்தீராகில் நாம் அகன்றுபோகிறோம் என்ன வருளிச்செய்கிறார் (அநந்யகதியை யித்யாதி). யத்வா, தானே வந்து புகுரவேண்டுவானென்னென்ன வருளிச்செய்கிறார் (அநந்யேத்யாதி). விலக்காமைதான் உமக்குப் பிறந்தது "நீர்கொள்ள வல்லீரானபடி" என்று கூட்டிக்கொள்வது. ... ... (௨)

---

(௧) கீ-௨-௬௨.

மூ.—மானேய் நோக்கு நல்லார் மதிபோல் முகத்துலவும்
ஊனேய் கண்வாளிக் குடைந்தோட்டந் துன்னடைந்தேன்
கோனே குறுங்குடியுள் குழகா திரு நறையூர்த்
தேனே வருபுனல் சூழ் திருவிண்ணகரானே. (௩)

பதம்.	உரை.	பதம்.	உரை.
கோனே	ஸ்வாமியே!	நல்லார்	விலக்ஷணை (ஸுந்தரி)களான ஸ்த்ரீகளுடைய
குறுங்குடியுள்	திருக்குறுங்குடியிலே	மதிபோல்	சந்த்ரனோடொத்த
குழகா	ஸந்நிஹிதனானவனே!	முகத்து	முகத்தில்
திருநறையூர்	திருநறையூரிலே எழுந்தருளி யிருக்கிற	உலவும்	உலாவாநின்ற
தேனே	போக்யபூதனே!	ஊன்ஏய்	மாம்ஸப்ரசுரமான
வரு	பெருகிவாராநின்ற	கண்	கண்களாகிற
புனல்	ஜலத்தினால்	வாளிக்கு	பாணத்துக்கு
சூழ்	வ்யாப்தமான	உடைந்து	தளர்ந்து
திருவிண்ணகரானே!		ஓட்டந்து	ஓடிவந்து
மான்ஏய்	மானோடொத்த [ராய்	உன் அடைந் தேன்	உன்னைச்சரணமடைந்தேன். (௩)
நோக்கு	பார்வையை யுடைய		

வ்யா.—மூன்றாம்பாட்டு. (மானித்யாதி) தப்பவொண்ணாதத்தைத் தப்பித் திருவடிகளிலே வந்து சரணம்புகுந்தேன், என்பக்கல் தயையைப்பண்ணி யருளவேணுமென்கிறார். (மானேய்நோக்கு நல்லார்) மானோடொத்த நோக்கையுடையராய், மற்ற வடிவழகுக் குறுப்பான நன்மைகளையுடைய ஸ்த்ரீகளுடைய, தர்சநீயமாய் தங்கள் பக்கலிலே சேர்த்துக்கொள்ளுகைக்குப் பரிகரமான முகத்திலே ஸஞ்சரியாநின்றுள்ள மாம்ஸப்ரசுரமான கண்ணாகிற அம்புக்கு ஈடுபட்டு ஓடிவந்து உன் திருவடிகளிலே சரணம்புகுந்தேன். கண்களாலே, கார்யப்பாடில்லாதாரைப் போலே நோக்கி இவனைத் தப்பாமல் அகப்படுத்தி, இவன் ஆழங்கால்பட்ட வநந்தரம். தங்களைக்கொண்டு பேரநின்று இவனை நோவுபடுத்தாநிற்பர்களிறே; அத்தைத்தப்பித் திருவடிகளிலே வந்து சரணம்புகுந்தேன்.

(கோனே) அத்தைத்தப்பித் திருவடிகளிலே வந்து ஒதுங்கினவிடம், தாய்நிழலிலே ஒதுங்குவாரைப்போலே ப்ராப்தவிஷயமாயிருந்தது. (குறுங்குடியுள் குழகா) பரமபதம் கலவிருக்கையா யிருக்க, இவரோடே கலந்து சேர்த்துக்கொள்ளுகைக்காகத் திருக்குறுங்

குடியிலே வந்து ஸந்நிஹிதனானேன். (திருநறையூர்த்தேனே) ப்ரஜை யினுடைய ஆர்த்திக்கு உதவுகைக்காக மாதாபிதாக்கள் சேரவிருக்கு மாபோலே, தமக்காகத் திருநறையூரிலே வந்துநிற்கிற நிலையை அநு ஸந்தித்தவாறே இனிதாகா நின்றது. பட்டர் “திருநறையூர்ப் பெருக் குக்குச் சினையாறு படுகிறது கிடாய்!” என்றருளிச் செய்வர். (வரு புனலித்யாதி) காட்சியிலே ஸகல தாபங்களும் ஆறும்படியான ஜல ஸம்ருத்தியையுடைய திருவிண்ணகரிலே நீ வந்து ஸந்நிஹிதனாகை யாலே, அந்நோக்குக்குத் தப்பித் திருவடிகளிலேவந்து கிட்டப்பெற் றேன். ... ... (௩)

அநு. — மூன்றும்பாட்டு. (மானேயித்யாதி) கீழ்ப்பாட்டில் - ராக த்வேஷ ஹேதுவான சுற்றம் துறந்தேன் என்றீர், (க)“𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌂𑌸 𑌮𑌪𑌿𑌕𑌰𑍍𑌷 𑌤𑌿- வித்வாம்ஸமபி கர்ஷதி” என்னும்படியான கண்ணழகுகண்டு நிலைதப்பின லன்றோ சுற்றம் துறந்தீராவீர் என்ன வருளிச்செய்கிறாரென்று ஸங்கதி.

பூர்வார்த்தத்துக்கெல்லாம் தொகுத்த பாவ மருளிச்செய்கிறார் (தப்ப வித்யாதி). உடைந்ததுக்கு ஹேதுவைக் காட்டிக்கொண்டு விவரிக்கிறார் (கண்களாலே யித்யாதி).

“குழகா” என்றதினர்த்தம் (இவரோடே யித்யாதி)- ... (௩)

மூ.—சாந்தேந்து மென்முலையார் தடந்தோள் புணரின்பவெள்ளத்
தாழ்ந்தே னருநரகத் தழுந்தும் பயன்படைத்தேன்
போந்தேன் புண்ணியனே உன்னையெய்தி யென்தீவினைகள்
தீர்ந்தேன் நின்னடைந்தேன் திருவிண்ணகரானே. (௪)

பதம்.	உரை.	பதம்.	உரை.
திருவிண்ணகரானே!		வெள்ளத்து	ஸமுத்ரத்தில்
புண்ணியனே	(என்னுடைய) ஸுக்ருதமானவனே!	ஆழ்ந்தேன்	(இந்நாள்வரையில்) மூழ்கினேன்,
சாந்து	குங்குமங்களை	அரு	க்ரூரமான
ஏந்தும்	தரியாநின்ற	நரகத்து	ஸம்ஸாரமாகிற நரகத்தில்
மெல்	ம்ருதுவான	அழுந்தும்	நித்யமாக அழுந்திக் கிடக்கிற
முலையார்	முலைகளையுடையரான ஸ்த்ரீகளுடைய	பயன்	ப்ரயோஜநத்தை
தடம்	விசாலமான	படைத்தேன்	பெற்றேன், (இப்படியிருக்க)
தோள்	புஜங்களோடுண்டான	போந்தேன்	(அகாரணமாக உன் திருவடிகளை) உபாயமாகக் கிட்டினேன்,
புணர்	ஸம்ஶ்லேஷத்தில் பிறந்த		
இன்பம்	ஸுகமாகிற		

(க)

உன்னைஎய்தி	உன்னைக்கிட்டி	தீர்ந்தேன்	தீரப்பெற்றேன்,(பின்
என்	என்னுடைய	நின் அடைந்	உன்னைப்ராபித் [4)
தீவினைகள்	கொடியபாபங்கள்	தேன்	தேன். (௪)

வ்யா.—நாலாம்பாட்டு. (சாந்தேந்துமித்யாதி) (க) "தடமுலைச் செய்யசாந்து" என்னக்கடவதிறே. குங்குமத்தைச் சொன்னபடி. "விஷயங்களைவிட்டு இவ்வருகே போந்த இவர், வீதராகர்க்கும் ஸ்ப்ருஹை பிறக்கும்படி சொல்லுவானென்?" என்று பட்டர்க்கு விண்ணப்பம்செய்ய; "முரிக்குக் கிழக்கு என்னும்போதும் இங்ஙனல்லது இராது காண் திருமங்கையாழ்வார் நாவீறு" என்று அருளிச்செய்தார். கிடாம்பியம்மாள், சிறியாண்டான் பெருமாள் பணித்தானாகப் பலகாலும் சொல்லும்; "நான்சொல்லுகிற வாச்ய வாசகங்களேயன்றோ பட்டரும் வ்யவஹரிக்கிறது என்றிருக்கவொண்ணாது, அங்குத்தைக்கு ஏற்றமுண்டு;- முன்னேநின்ற தூணை நான் 'தூண்' என்றவாறே சிராய்த்தோற்றும்; அவர்சொன்னவாறே தளிரும் முறியுமாய்த்தோற்றும்" என்று.

(மென்முலையார்) விரஹம்பொறுத முலையையுடைய ஸ்த்ரீகளுடைய. (தடந்தோளித்யாதி) முலைகளாகிற மலைகளோடே, தோளாகிற பாசங்களாலே நெருக்கிக்கட்டி, கடலிலே புகத்தள்ளுவாரைப் போலே அவர்களுடைய தோள்களோடே அணைகையாலுண்டான ஆநந்த ஸாகரத்திலே தரைகாணவொண்ணாதபடி அவகாஹித்தேன்; உன்னுடைய க்ருபைக்கும் அவிஷயமானேன். (உ) "𑌆𑌨𑌨𑍍𑌦𑌮𑌯𑌃 - ஆநந்தமய:" என்கிற விஷயத்தை உள்ளபடி கண்ட இவர், இப்போது இங்கே இன்பவெள்ளம் என்கிறது - இவ்வளவும் வரக்காற்கட்டின படியைக்கொண்டு. (ந) *அநந்தக்லேஶ பா(௪)ஜநமான இத்தை "இன்பவெள்ளம்" என்கிறது - நெடுநாள் துவக்கினபடியைக் கண்டிறே.

இத்தாலும் பலித்தது ஒரு பலமுண்டு (அருநரகத்தித்யாதி) காலமெல்லாம் இடைவிடாதே அவனுடைய கல்யாண குணங்களை அநுபவிக்கைக்கு இட்டுப்பிறந்த நான், காலமெல்லாம் நித்ய ஸம்ஸாரியாய்ப்போகையாகிற ப்ரயோஜநத்தைப் பெற்றேன். "விஷயப்ராவண்யம் ஸம்ஸாரபீஜம்" என்றிருக்கிறார்.

(க) இ-௭-௨. (உ) தை-ஆ-இ-௨. (ந) ஸ்ரீ-ஸ்தோ-௧-௪.

(போந்தேன்) ஒரு கர்மத்தை அநுஷ்டித்து அத்தாலே க்ஷீண பாபனாய், அநந்தரம் ஜ்ஞாநம்பிறந்து அத்தாலே "இது தீது, இது நன்று" என்கிற இனிமையாலே கிட்டுகையன்றிக்கே, நினைவின்றிக்கே யிருக்க ஸ்ரீமதுரையிலே உறங்குகிறவர்கள் ஸ்ரீமத் த்வாரகையிலே விழித்தாப்போலே திருவடிகளிலே வந்து கிட்டிக் கொடு நிற்கக்கண்டேன். இந்நாள்வரை போந்தவிடத்து ஒரு ஸுக்ருதமும் பண்ணிற்றிலீராகில் இப்போது நம்மைவந்து கிட்டினபடி எங்ஙனே யென்னில், (புண்ணியனே) எனக்கு உன்னைக் கிட்டுகைக்கு மூலஸுக்ருதமும் நீயே என்கிறார். (உன்னை யெய்தி) ஸர்வாதிகனான உன்னைக் கிட்டி, என்னுடைய ப்ராப்தி ப்ரதிபந்தகமான பாபங்களை யடையப் போக்கினேன்.

நம்மைக்கிட்டின விரகுதானென்னென்னில் (திருவிண்ணகரானே) ராவணனாலே நெருக்குண்டு புகலிடமற்ற ஸ்ரீ விபீஷணாழ்வானுக்குப் புகலாகக் கடவதாகக் கடற்கரை வெளியிலே எடுத்துவிட்டு நின்றாப்போலே, ஸம்ஸாரத்திலே விஷயங்களாலே நெருக்குண்டு நோவுபடுகிற எனக்குப் புகலாகத் திருவிண்ணகரிலே வந்து ஸந்நிஹிதனாகையாலே, அத்தைத் தப்பித் திருவடிகளிலே வந்துபுகுந்தேன். (௪)

அரு.—நாலாம்பாட்டு. (சார்ந்தித்யாதி) கீழ்ப்பாட்டில் கண்வலைக்குத் தப்பி ஓடிவந்தேன் என்றீர், அது ஸுகப்ரா(த்ரு)ந்தி ஜாகமாயிருக்க, ஓடிவருகைக்கு மூலஸுக்ருதம் ஒன்றுண்டாக வேணுமே, அதாவதென்? என்று கேட்க, அருளிச்செய்கிறாரென்று ஸங்கதி.

நாவீறுடையார் வார்த்தைதான் வீதராகர்க்கும் ஸ்ப்ருஹை பண்ணும்படியா யிருக்குமென்னு மிடத்துக்கு ஸம்வாதமாக ஓரைதிஹ்யம் காட்டுகிறார் (கிடாம்பியம்மாளித்யாதி).

ஸ்ரீமத் த்வாரகையிலே விழிக்கையாவது- காலயவநன், ஜராஸந்தன், ஸ்ரீ மதுரையை அடைமதிள் படுத்த, அப்போது விஸ்வகர்மாவை அழைப்பித்து ஸ்ரீமத் த்வாரகையை யுண்டாக்கி மதுரையிலுள்ளாரை நித்ரையோடே ராத்ரியோடே கொடுபோய் வைக்கை என்கை. ... (௪)

மூ.—மற்றோர் தெய்வ மெண்ணே னுன்னை யென்மனத்து வைத்துப்
பெற்றேன் பெற்றதுவும் பிறவாமை யெம்பெருமான்
வற்றா நீள் கடல் சூழிலங்கை யிராவணனைச்
செற்றாய் கொற்றவனே திருவிண்ணகரானே. (௫)

பதம்.	உரை.
வற்றா	மாறாத
நீர்	ஜலத்தையுடைய
கடல்	ஸமுத்ரத்தினால்
சூழ்	சுற்றப்பட்ட
இலங்கை	லங்கைக்கு அரசனான
இராவணனை	ராவணாஸுரனை
செற்றாய்	அழியச்செய்தவனே!
கொற்றவனே	ராஜனே!
திருவிண்ணகரானே!	
மற்று ஓர்தெய்வம்	வேறொரு தேவதையை
எண்ணேன்	ஆஶ்ரயணீயமாக நினைக்கமாட்டேன்,
எம்பெருமான்	ஸ்வாமியே!
உன்னை	ஸர்வாதிகனான உன்னை
என்மனத்து	என்மநஸ்ஸில்
வைத்து	இருத்தி
பெற்றேன்	(ஓரலப்யத்தை) லபித்தேன்,
பெற்றதுவும்	லபித்ததுதானேதென்னில்,
பிறவாமை	(ஸம்ஸாரத்தில்) ஜந்மமில்லாமையாம்.

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (மற்றோரித்யாதி) மநோரத ஸமயத்திலும் வேறோராஶ்ரயணீய வஸ்து உண்டாக நினையேன். (உன்னை என்மனத்து வைத்து) ஸர்வாதிகனாயிருக்கிற உன்னை, விலக்காமை மாத்ரத்தாலே என்னுடைய ஹ்ருதயத்திலே வைத்து, ஓரலப்ய லாபம் பெற்றேன். அப்பேறுதானேதென்னில், (பெற்றதுவும் பிறவாமையெம்பெருமான்) இதர தேவதைகளை ஆஶ்ரயிக்கைக்கு யோக்யமான ஜந்மமும்கூடக் கழியப்பெற்றேன். அதுக்கு யோக்யதையே துடங்கி யின்றிக்கே யிருந்தபடி.

(வற்றாவித்யாதி) ஒருவராலழிக்க வொண்ணாத அரணை முறித்துப்புக்கு, "நான் இவ்வூருக்கு நிர்வாஹகனல்லேனோ?" என்று அபிமானித்திருக்கிற ராவணனைக் கிழங்கெடுத்தவனே! அரியன செய்யுமிடத்தில் வருத்தமறச்செய்ய வல்லவனன்றோ நீ. (கொற்றவனே) பெருமிடுக்கனான ராவணனை அழியச்செய்த வருத்தமுண்டோ என்னுடைய ப்ரதிபந்தகத்தைப் போக்கிச் சேரவிட்டுக்கொள்ளுகைக்கு? நாம் லங்கையை யழியச்செய்தது கடற்கரை வெளியிலே எடுத்துவிட்டுநின்று, உம்முடைய ப்ரதிபந்தகத்தைப் போக்கிற்று எங்கே வந்து நின்று என்ன, (திருவிண்ணகரானே) எனக்காகவந்து நிற்கிற இடம் திருவிண்ணகர் என்கிறார். ... ... (௫)

அரு. — அஞ்சாம்பாட்டு. (மற்றித்யாதி) விஷயாந்தர வைராக்யமேயன்றிக்கே தேவதாந்தர வைராக்யமுமெனக்குண்டாக்கினாயென்கிறாரென்று ஸங்கதி.

“எம்பெருமான்” என்றத்தைக் கடாக்ஷித் தருளிச்செய்கிறார் (ஸர்வேத்யாதி).

லங்கையை இப்படி விசேஷித்ததுக்கு பாவ மருளிச்செய்கிறார் (அரியன வித்யாதி). “கொற்றவனே” என்று ராஜாவேஎன்று ஸம்போதிக்கையாலே ஒருவழியாலும் (௧) “த்விதாபஜ்யேயம் - நநமேயம்” என்ற ராவணனை வாத்ஸல்யத்தாலே கொல்லமாட்டாதே யிருந்து; நீராமையால் கொல்ல வேண்டினாப்போலே இங்கே செய்யவேணுமோ? நானிசைந்தேனே என்று தாத்பர்யம் விவக்ஷித் தருளிச்செய்கிறார் (பெருவித்யாதி). ... (௫)

மூ.—மையொண் கருங்கடலும் நிலனு மணிவரையும்
செய்யசுடரிரண்டு மிவையாய நின்னை நெஞ்சில்
உய்யும் வகையுணர்ந்தே னுண்மையா லினி யாதும் மற்றோர்
தெய்வம் பிறிதறியேன் திருவிண்ணகரானே. (௬)

பதம்.	உரை.	பதம்.	உரை.
திருவிண்ணகரானே!		இவை	ஆகிய இவற்றை [ன்
மை	அஞ்சநம்போல்	ஆய	சேஷமாகஉடையனா
ஒண்	அழகியதாய்	நின்னை	உன்னை [யாக),
கரு	கருநிறமுடைத்தான	உண்மையால்	யதார்த்தமாக(சேஷி
கடலும்	ஸமுத்ரமும்	உய்யும்வகை	(நான்) உஜ்ஜீவிக்கும்
நிலனும்	பூமியும்	நெஞ்சில்	மநஸ்ஸினால் [படி
		உணர்ந்தேன்	அறிந்தேன்;
அணி	பெருமைபொருந்திய	இனி	இப்படியானபின்பு,
வரையும்	பர்வதங்களும்	மற்று	இதுக்குமேலே
செய்ய	ப்ரகாசமாகிறஅழகையுடைய	பிறிது ஓர்	உன்னைக் காட்டிலும் வேறானதொரு
இரண்டு சுடரும்	இரண்டு தேஜ:பதார்த்தங்களான சந்த்ரஸூர்யர்களும்	யாதும்	எவ்விதமான வஸ்துவையும் [யாக
		தெய்வம்	ஆஶ்ரயணீய தேவதை
		அறியேன்	நினைக்கமாட்டேன்.

வ்யா.—ஆறாம்பாட்டு. (மையித்யாதி) ஸர்வேஶ்வரனுடைய திருமேனிக்குப் போலியாய் அஞ்ஜநம்போலே தர்ஶநீயமாயிருந்துள்ள ஸமுத்ரமும், அது வேலியாக உள்ளேகிடக்கிற பூமியும், அந்தப்பூமிக்கு ஆணியடித்தாப்போலே யிருக்கிற குலபர்வதங்களும், இப்படிப்பட்ட இதுக்கு இரண்டு விளக்கேற்றினாப்போலே யிருக்கிற சந்த்ரஸூர்யர்களும். (இவையாய) இப்படி ஜகதாகாரனா யிருக்கிற உன்னை.

---

(௧) ரா-யு-௩௬-௧௧.

(நெஞ்சிலித்யாதி) நெஞ்சாலே (௧) "𑌅𑌸𑌨𑍍𑌨𑍇𑌵-அஸந்நேவ" என்கிறபடியே அஸத்கல்பனாய் உருமாய்ந்துபோன நான் இப்போது உஜ்ஜீவிக்கும்படி தேவரை அநுவர்த்தித்தேன், "இவ்வாத்மாவுக்கு நீயே சேஷி, உன்னைக் குறித்து இவ்வாத்மவஸ்து அத்யந்த சேஷம்" என்கிற முறையாலே.

(இனி யாதும் மற்றோரித்யாதி) தத்வமிருந்தபடி யல்லது ப்ரதிபத்தி பண்ணக்கடவதல்லாத படியான பின்பு, வேறு சிலரை ஆஶ்ரயணீயராக நினைத்திரேன். (திருவிண்ணகரானே) இப்படி திருவிண்ணகரிலே வந்து ஸந்நிஹிதனான உன்னையொழிய பரதத்வமுமறியேன்.

அந.—ஆறும்பாட்டு. (மையித்யாதி) தேவதாந்தரங்களை நீரென்னுமைக்கு மூலமென்னென்ன; உனக்கு சரீரதயா சேஷமாயிருக்க அதறியாதே (௨) "𑌈𑌶𑍍𑌵𑌰𑍋𑌽𑌹𑌮𑍍-ஈஶ்வரோऽஹம்" என்கிற ப்ரா([illegible])ந்தரை எண்ண விரகுண்டோ வென்கிறாரென்று ஸங்கதி.

"உண்மையால்" என்றதுக் கர்த்தம் (இவ்வாத்மாவுக் இத்யாதி);
*இனிக்கு அர்த்தம் (தத்வமித்யாதி).... ... ... (௬)

மூ.—வேறே கூறுவதுண்டடியேன் விரித்துரைக்கு
மாறே நீபணியா தடை நின் திருமனத்து
கூறேன் நெஞ்சுதன்னால் குணங்கொண்டு மற்றோர்தெய்வம்
தேறே னுன்னையல்லால் திருவிண்ணகரானே. (௭)

பதம்.	உரை.
	திருவிண்ணகரானே!
அடியேன்	சேஷபூதனான நான்
வேறே	வ்யாவ்ருத்தமாக
கூறுவதுஉண்டு	சொல்லுவதொருவார்த்தையுண்டு,
விரித்து	விஸ்தாரமாக
உரைக்குமாறு	(நான்) சொல்லும்படி
நீ	நீ
பணியாது	அருளிச்செய்யாமல்
நின் திருமனத்து	உன் திருவுள்ளத்தில்
அடை	(அடியேன் விண்ணப்பத்தைக்) கொண்டருளவேணும்,
உன்னையல்லால்	உன்னையொழிய
மற்றுஓர் தெய்வம்	வேறொரு தேவதையை
கூறேன்	வாயிட்டுச்சொல்லேன்,
குணம்கொண்டு	(அவர்களிடத்தில்) குணவிசேஷத்தைக் கண்டாகிலும்
நெஞ்சுதன்னால்	மாநஸ்ஸினால் (அவர்களை)
தேறேன்	(ஆஶ்ரயணீயராக) விஶ்வஸியேன். (௭)

---

(௧) தை-ஆ-௬-௧. (௨) கீதை-௧௬-௧௪.

வ்யா.—ஏழாம்பாட்டு. (வேறேயித்யாதி) இது ஓரோலக்க வார்த்தையாக வன்றிக்கே, ப(ஃ)லத்தோடே வ்யாப்தமாகவேண்டும்படி திருவுள்ளத்திலே பட விண்ணப்பம்செய்கிறேன்; (௧) "𑌵𑌿𑌶𑍇𑌷𑍇𑌣 𑌤𑍁 𑌸𑍁𑌗𑍍𑌰𑍀𑌵𑍋 𑌹𑌨𑍂𑌮𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌮𑍁𑌕𑍍𑌤𑌵𑌾𑌨𑍍-விஶேஷணது ஸுக்ரீவோ ஹநூமத்யர்த்த முக்தவாந்" என்னுமாபோலே-முதலிகளெல்லாரையும் எல்லாத்திக்கிலும் விடாநிற்கச் செய்தே மஹாராஜர் திருவடியைப்பார்த்து அடையாளமும் சொல்லித் திருவாழிமோதிரமும் கொடுத்து விசேஷித்துவிட்டாப்போலே. (அடியேன் - கூறுவதுண்டு) சேஷபூதன் சேஷிசெய்தபடி செய்யக் கண்டிருக்கையிறே முறை; அப்படி ஆறியிருக்கவொண்ணாதே, என்னுடைய ஆற்றாமையாலே ஒருவார்த்தை விண்ணப்பம் செய்கிறேன்.

(விரித்துரைக்குமித்யாதி) என்னுடைய வார்த்தை அர்ஜுநனுடைய ப்ரஶ்நம்போலே யாகவொண்ணாது; (௨) "𑌭𑌗𑌵𑌾𑌨𑍁𑌵𑌾𑌚- பகவாநுவாச" என்று தலைக்கட்டவேணும். (௩) "𑌕𑌰𑍍𑌮𑌣𑍍𑌯𑍇𑌵𑌾𑌽𑌧𑌿𑌕𑌾𑌰𑌸𑍍𑌤𑍇-கர்மண்யே வாZதிகாரஸ்தே" என்று சிலவற்றைப்பரக்கச்சொல்லவொண்ணாது, (௪) "𑌸𑍍𑌥𑌿𑌤𑍋𑌽-ஸ்த்திதோZஸ்மி" என்னுமிடம் ப(ஃ)லிக்கச்சொல்லவேணும். நான் பரக்கச் சிலவார்த்தைகளை விண்ணப்பம் செய்யும்ப்ரகார மருளிச்செய்யாதபடி திருவுள்ளம் பற்றவேணும்.

(கூறேனித்யாதி) நான் ஓரநந்யகதி என்கிறார் - இதர தேவதைகளை வாயால்பேசேன்; அவ்வளவேயன்றிக்கே, நெஞ்சால் அவற்றுக்கு ஓராதிக்யமுண்டாக நினையேன்; ஆபாத ப்ரதீதியில் அவற்றுக்கு ஒருத்கர்ஷமுண்டாய்த்தோற்றிற்றாகிலும்; அத்தை விஶ்வஸியேன். (உன்னையல்லால் திருவிண்ணகரானே) ஸர்வாதிகனாயிருக்கிற நீ திருவிண்ணகரிலேவந்து ஸந்நிஹிதனாய், நீயே ஆஶ்ரயணீயனென்று அறிவித்த பின்பு, இனி உனக்கு விபூதிபூதரானார் பக்கல் பாத்வ ப்ரதிபத்தி பண்ணேன். ... ... (எ)

அநு.—ஏழாம்பாட்டு. (வேறேயித்யாதி) தேவதாந்தரத்தை யறியாதவராயும் விஷயாந்தரங்களில் ஸங்கமற்றவராயும் பந்துக்களைவிட்டும் இவ்விபூதியிலிருந்து அநுபவிக்கும்படியான திருவிண்ணகரிலே இருக்கும்படி கண்டும் இருந்தீராகில், அநுபவித்துக்கொண்டு ஸுகமே இருமென்ன;

---

(௧) ரா-கிஷ்-௪௪-௧. (௨) கீ-௧௮-௨. (௩) கீ-௨-௪௭.
(௪) கீ-௧௮-௭௩.

அது அங்ஙனேயாகிலும் இன்னமொரு வார்த்தையுண்டென்று திருவுள்ளம் பற்றும்படி யருளிச்செய்கிறாரென்று ஸங்கதி.

“வேறே” என்றதுக்குக் கருத்தருளிச்செய்கிறார் (இதோரித்யாதி). விசேஷித்துச் சொல்லுவாருண்டோ வென்ன வருளிச்செய்கிறார் (விசேஷேணேத்யாதி). இத்தை விவரிக்கிறார் (முதலிகளித்யாதி). (பார்த்து) என்ற வநந்தரம், “விசேஷித்து வார்த்தை சொல்ல, பெருமாள்” என்று கூட்டுவது. “அடியேன்” என்றதுக்குத் தாத்பர்யம் (சேஷபூத னித்யாதி).

விரித்துரைக்குமாறு - நான் விஸ்த்ருதமாகச் சொல்லும்படியாக, நீ பணியாது - தேவரீரருளிச்செய்யாதே, நின் திருமனத்து அடை - திருவுள்ளத்திலே வைத்துக்கொள்ள வேணுமென்று சப்தார்த்தமாய், அத்தால் ஸங்க்ரஹமாக மறுமாற்றம் சொல்லவேணுமென்றதாய், பரக்கச்சொன்னதுண்டோ இப்படி நீர் சொல்லுகைக்கு என்ன வருளிச்செய்கிறார் (என்னுடைய வித்யாதி). “பகவாநுவாச” என்றால், மீளவும் “𑌅𑌰𑍍𑌜𑍁𑌨𑌉𑌵𑌾𑌚 - அர்ஜுநஉவாச” என்னுமது வாராதபடி சரமஶ்லோகம் சொன்னால் “ஸ்த்திதோஸ்மி” என்றாப்போலே அருளிச்செய்யவேணுமென்றதாய்த்து. விவரணம் (கர்மண்யேவேத்யாதி). வாக்யார்த்தம் (நாணித்யாதி).

(௧) “𑌶𑌾𑌧𑌿 𑌮𑌾𑌂 𑌤𑍍𑌵𑌾𑌂 𑌪𑍍𑌰𑌪𑌨𑍍𑌨𑌮𑍍- சாதி மாம் த்வாம் ப்ரபந்நம்” என்ற அர்ஜுநனுக்கு விஶ்வரூபத்தைக்காட்டி, நாம் சரமஶ்லோகார்த்தம் சொன்னபின்பும், ஆபாத ப்ரதீதியாலே தேவதாந்தரங்களில் மினுக்கங்களைக் கண்டு மீண்டுபோனானிறே, உமக்கு எத்தனையானாலும் அந்தரங்கமான உத்தரம் சொல்லப்போமோ? என்னும் ப்ரஶ்நத்திலே, முக்காலைக்கும் எனக்கு தேவதாந்தர விஷயத்தில் ஸங்க லேசமில்லை யென்கிறாரென்று ஸங்கதி திருவுள்ளம்பற்றி, வாக்யார்த்தங்களை அருளிச்செய்கிறார் (இதரேத்யாதி). ... ... (௭)

மூ.—முளிந்தீய்ந்த வெங்கடத்து மூரிப்பெருங்களிற்றால்
விளிந்தீய்ந்த மாமரம்போல் வீழ்ந்தாரை நினையாதே
அளிந்தோர்ந்த சிந்தை நின்பாலடியேற்கு வானுலகம்
தெளிந்தேயென்றெய்துவது திருவிண்ணகரானே. (௮)

பதம்.	உரை.	பதம்	உரை.
முளிந்(து) தீய்ந்து	(தானே) உலர்ந்து எரிந்துபோன (மரங்களையுடைய)	கடத்து	காட்டிலேயுள்ளதாய்,
		மூரி	பலிஷ்டமான
		பெரும்	பெரிய
வெம்	அதிக்ரூரமான	களிற்றால்	யானையினால்

---

(௧) கீ-௨-௭.

விளிந்தீய்ந்த	தள்ளப்பட்டதான	**ஓர்ந்த**	அநவரத பாவனையை யுடைய
மா	பெரிய	**சிந்தை**	மநஸ்ஸையுடையனான
மரம்போல்	மரத்தைப்போல	**அடியேற்கு**	அடியேனுக்கு
வீழ்ந்தாரை	நசித்துப்போனவரை	**வானுலகம்**	பரமபதத்தை
நினையாதே	மநோரதியாமல்	**என்று**	எப்போது [ருய்.
நின்பால்	உன் விஷயத்தில்.	**எய்துவது**	கொடுக்கப் பார்க்கி
தெளிந்து	த்ருடாத்யவஸாயத்தை யுடையனாய்		திருவிண்ணகரானே! (௮)
அளிந்து	ஸ்நேஹத்தை யுடையனாய்		

வ்யா.—எட்டாம்பாட்டு. (முளிந்தீய்ந்தவித்யாதி) நிலத்துக்கடைத்த வாகை, வெண்டு என்கிறுப்போலே சொல்லுகிற சிறு மரங்களானவை, நிலவெம்மையாலே உலர்ந்து தீய்ந்துபோகிற பாலைநிலத்தில். (மூரிப் பெருங்களிற்றால்) அதன் நிலத்திலுள்ள தொன்றுகையாலே வளர்ந்து அப்ரதிஹதமாக ஸஞ்சரியாநின்றுள்ள ஆனையாலே தள்ளுண்டு விழுந்த பெருமரம்போலே.

(வீழ்ந்தாரை நினையாதே) சில பதார்த்தங்கள் தோற்றி முடியும்; சிலர் நெடுநாளிருந்து கர்மக்ஷயத்தாலே முடிவர்கள். க்ஷுத்ரபதார்த்தங்களுக்கு உத்பத்தியோடே விநாசமாயிருக்கும்; இந்த்ராதிகள்‡ (ப்ரஹ்மாதிகள்) நெடுநாள் ஜீவித்துப் பின்னை முடிவர்கள்; இதாய்த்து ஸம்ஸாரஸ்வபாவம். ஆக, இங்கேயிருந்து, "இன்னார் இன்னதனை நாள் ஜீவித்து முடிந்தார்க்ள், இன்னவை தோற்று நசித்தன" என்று இத்தை மநோரதியாதே.

(அளிந்தோர்ந்த வித்யாதி) உன்பக்கலிலே, தெளிவையுடையேனாய், ஸ்நேஹத்தை யுடையேனாய், அநவரதமுண்டான அவதாநத்தை யுடைத்தான மநோரதத்தையுடைய அநந்யகதியான எனக்கு, அபுநராவ்ருத்தி லக்ஷணமான மோக்ஷத்தை என்று தருவது? (திருவிண்ணகரானே) அவ்வருகு படுத்துகைக்காக வந்திருக்கிற உனக்கு, தருமந்நாள் இந்நாளென்று தெரியுமிறே.

வெட்டிதான நிலத்திலே வலியதொரு பதார்த்தத்தாலே தள்ளுண்டு விழுந்துபோகிற மாமரம்போலே, ஸம்ஸாரத்திலே இருந்து ஜீவித்து முடிந்துபோனவரை மநோரதியாதே, தேவர்பக்கலிலே ஸ்நேஹித்து அவதாநத்தைப் பண்ணி அநவரதம் மநோரதிக்கும்படியான

---

‡ குண்டலிதம் க்வாசித்கம்.

தெளிவையுடைய எனக்கு, புநராவ்ருத்தியில்லாத மோக்ஷத்தைத் தரப் பார்த்தது என்று? அத்தைத் தருகைக்காக வந்துநிற்கிற நீ. (௮)

அரு.—எட்டாம்பாட்டு. (முளிந்தீய்ந்தவித்யாதி) நீர் தேவதாந்தரங்களில் குணங்கொண்டு தேறாமைக்கு ஹேதுவேதென்றும், நீர் தாம் கூறுவதென்னென்றும் கேட்க, அருளிச்செய்கிறாரென்று ஸங்கதி.

“முளிந்தீய்ந்த” என்றது-† இடைக்குறைத்தலாயிருக்கிறதென்று விவக்ஷித்து, தானே உலர்ந்து தீய்ந்துபோன, வெம்- வெவ்வியதான, கடத்து - காட்டிடத்து என்றாய், அருளிச்செய்கிறார் (நிலத்துக் கித்யாதி). (வெண்டு) குழல்மூங்கில். மூரி - மிடுக்காய், அதினர்த்தம் (அப்ரதிஹதமாக) என்றது.

(மநோரதியாதே) என்றது - பாலைநிலத்திலே சிறு மரங்களும் பெரிய மரங்களும் தீய்ந்தும் முறிந்தும் போமாபோலே, ஸம்ஸாரத்தில் கர்மதாரதம்யத்தாலே உடனே நலிந்துபோகிற மனிசரைப்பற்ற நெடுநாள் ஜீவித்து முடிகிற தேவர்களுடைய ஆயுஸ்ஸு நல்லதென்று, அதுக்கடியான ஸுக்ருதம்பண்ணி நாமும் ஸுகிக்கவேணுமென்று நினையாதே என்கை. இத்தால் - அந்த தேவதைகளிடத்தில் பெறத்தக்கது தமக்கு வேண்டுவதில்லை என்றதாய், அத்தாலே அவர்களை எண்ணேன் என்றதாய்த்து.

புத்தி ஸௌகர்யார்த்தமாக பாட்டடியே பிடித்து அர்த்தமருளிச்செய்கிறார் (வெட்டிதான வித்யாதி). (நிற்கிறநீ) என்றவநந்தரம், அருளிச்செய்யவேணும் என்று சேஷம். முளிந்தீய்ந்த வித்யாதி, நினையாதே- தெளிந்தே - அளிந்தோர்ந்த சிந்தை நின்பாலுடைய அடியேற்கு, வானுலகம் - எய்துவது - என்று என்றந்வயம். ... ... (௮)

மூ.—சொல்லாய்திருமார்பா உனக்காகித் தொண்டுபட்ட
நல்லேனை வினைகள் நலியாமை நம்பு நம்பீ
மல்லார் குடமாடி மதுசூதனே யுலகில்
செல்லா நல்லிசையாய் திருவிண்ணகரானே. (௯)

பதம்.	உரை.	பதம்.	உரை.
மல்ஆர்	மிக்க பலிஷ்டனாய்	செல்லா	நடையாடாத (அபூர்வமான)
குடம்ஆடி	குடக்கூத்தாடினவனாய்	நல் இசையாய்	விலக்ஷணமான கீர்த்தியையுடையவனே!
மதுசூதனே	மதுவென்பவனை நிரஸித்தவனே!	நம்பீ	பூர்ணனே!
உலகில்	லோகத்தில்		திருவிண்ணகரானே!

---

† (பா) கடைக்குறைத்தலாய்.

திருமார்பா	பெரிய பிராட்டியை வக்ஷஸ்த்தலத்திலுடையவனே!	தொண்டுபட்ட	அடிமைபூண்ட
சொல்லாய்	எனக்குப் பதிலுரைக்கவேணும்;	நல்லேனை	விலக்ஷணனான என்னை
உனக்காகி	உன்விஷயத்தில்	வினைகள்	பாபங்கள்
		நலியாமை	உபத்ரவியாமற் படிக்கு
		நம்பு	விஶ்வஸித்து அங்கீகரித்தருளவேணும்.

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (சொல்லாயித்யாதி) தேவர் இதுக்கொரு போக்கடி சொல்லவேணும். லக்ஷ்மீபதியாயிருக்கிற நீ எனக்கொன்று சொல்லாதொழியவொண்ணாது. "இவன்தான் பண்ணின பாபபலந்தான் அநுபவிக்கிறான்" என்று நீ ஆறியிருக்கைக்கு நானொரு ப்ரஹ்மசாரி எம்பெருமானையோ பற்றிற்று? (உனக்காகியித்யாதி) ஶ்ரிய:பதியான உன் திருவடிகளில் நித்ய கைங்கர்யத்திலே அந்வயிக்கும்படியான வைலக்ஷண்யத்தையுடைய என்னை. எனக்கு அதிதூரத்திலே வர்த்திக்கிற கர்மங்கள் என்னை நெருக்காதபடி நீ அங்கீகரித்தருள வேணும் (நம்பீ) லக்ஷ்மீஸம்பந்தமும் மிகையாம்படியன்றோ தேவருடைய பூர்த்தி. (க) "தாமரையாளாகிலும் சிதகுரைக்குமேல் என்னடியார் அது செய்யார்" என்று அவளோடு மன்றாடும்படியான கல்யாண குணங்களால் பூர்ணனன்றோ நீ.

(மல்லார்குடமாடி) மிடுக்கால்மிக்கு, மன்றிலே குடக்கூத்தாடி, உன்வடிவழகை ஸர்வஸ்வதாநம் பண்ணினவனே! ஸ்வைரஸஞ்சாரம் பண்ணாநின்றால் ஒருவரால் திரிய†விடுகை அரிதாயிருக்கை. அன்றிக்கே, (மல்லாகுடமாடி) என்று பாடமாகில், செருக்கனே! செருக்குக்குப் போக்குவிட்டுக் குடக்கூத்தாடினவனே! என்கிறது. (மதுசூதனே) அஸுரவர்க்கத்தைப் பக்கவேரோடே வாங்கினவனே! (உலகில்செல்லா நல்லிசையாய்) லோகத்தில் பரிமாறாத புகழையுடையவனே! (திருவிண்ணகரானே) பராவஸ்த்தையில் குணம் பரிச்சிந்நம்போலே. ஸம்ஸாரிகளைவிட்டு நித்யஸூரிகளுக்கு முகம்கொடுத்துக் கொண்டிருக்கிறவனாகையாலே அங்கு குணம் பரிச்சிந்நமாய்த்து இருப்பது; திருவிண்ணகரிலேவந்து ஸம்ஸாரிகளுக்கு முகங்கொடுத்தபின்பாய்த்து குணம் அபரிசிந்நமாய்த்தது. (௯)

(க) பெரி-திரு-௪-௯-௨.

† (பா) விடுவிக்க.

அரு.—ஒன்பதாம்பாட்டு. (சொல்லாயித்யாதி). உகந்தருளின நிலங்களிலே பேராசையாலே "துறப்பேனல்லே னின்பம்" என்றார், "வானுலகம்-என்றெய்துவது" என்றும் பதறுகிறார், இவர்க்கு ஒன்றும்சொல்லி முடியாது என்றாற்போலே பெரியபிராட்டியாரும் தானுமாய் ஸ்மிதம் பண்ணியிருக்க; இதறியாமல் இன்னும் கைவிட நினைத்தானோ என்னும் அதிசங்கையாலே அச்சேர்த்தியிலே "எனக்கோரவதி சொல்லித் தீரவேணும்" என்கிறாரென்று ஸங்கதி.

"நம்பு" என்றதுக்கு லக்ஷணயா அர்த்த மருளிச்செய்கிறார் (அங்கீகரித்தருளவேணும்) என்று.

"ஆர்" என்றதினர்த்தம் (மிக்கு) என்றது. "மல்" என்று - ஐஶ்வர்யமாய், அத்தால் - செருக்கு பலிக்கும் என்றருளிச்செய்கிறார் (அன்றிக்கே ஷித்யாதி). உலகில் - பரமபதத்தில், செல்லாத - நடையாடாத, நல்லிசையாய் - நல்ல யஶஸ்ஸை-ஸௌலப்யாதிகளால் வந்த யஶஸ்ஸை உடையையாய் என்று விவக்ஷித்தருளிச்செய்கிறார் (லோகத்தி லித்யாதி). .. (௯)

மூ.—தாரார் மலர்க்கமலத் தடஞ்சூழ்ந்த தண்புறவில்
சீரார் நெடு மறுகில் திருவிண்ணகரானைக்
காரார் புயல் தடக்கைக் கலியனொலிமாலை
ஆராரிவை வல்லா ரவர்க் கல்லல் நில்லாவே. (௧௦)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பதம்.	உரை.
தார் ஆர்	இதழ்களையுடைய
மலர்	பூக்களை யுடைத்தான
கமலம்	தாமரைகளை யுடைய
தடம்	தடாகங்களினாலே
சூழ்ந்த	சூழப்பட்ட
தண்	குளிர்ந்த
புறவில்	பர்யந்த ப்ரதேசங்களையுடையதாய்
சீர் ஆர்	செல்வம்மிக்க
நெடு	நீண்ட
மறுகில்	வீதிகளையுடையதான
திருவிண்ணகரானை	திருவிண்ணகரிலே எழுந்தருளியிருக்கிற அப்பன் விஷயமாக,
கார்	மழைகாலத்தில்
ஆர்	ஜலத்தினால் நிறைந்த
புயல்	மேகம்போன்ற ஔதார்யத்தை யுடையதாய்
தடம்	பரந்திருக்கிற
கை	ஹஸ்தங்களையுடைய
கலியன்	ஆழ்வார்
ஒலி	அருளிச்செய்த
மாலை	பாசுரரூபமான
இவை	இவற்றை
ஆரார்	யவரேயாகிலும்
வல்லார்	அப்யஸித்தார்களாகில்
அவர்க்கு	அவர்களுக்கு
அல்லல்	பாபமானது
நில்லா	நில்லாது (நசித்துவிடும். (௧௦)

வ்யா.—பத்தாம்பாட்டு. (தாராரித்யாதி) தாரென்கிறது - இதழை. இதழ்மிக்க பூவையுடைத்தான தாமரைகளையுடைய தடாகங்களாலே சூழப்பட்ட. அன்றிக்கே, தாரென்று - ஒளியாய், ஒளியையுடைத்தான பூவையுடைய வென்னுதல். ஊரில் பர்யந்தமடங்கலும் தாமரைத்தடாகங்களாலே அலங்க்ருதமா யாய்த்திருப்பது. (சீராரித்யாதி) ஐஶ்வர்ய ப்ரகாசகமாய், நெடிதான வீதிகளையுடைய திருவிண்ணகரிலே வந்து நித்யவாஸம் பண்ணுகிறவனைக் கவிபாடிற்று.

(காராரித்யாதி) கார்காலத்தில், கழுத்தே கட்டளையாக நீரைப்பருகின மேகம்போலே கொடுத்துவளர்ந்த கையையுடைய ஆழ்வார். ஒலியுடைத்தாம்படி அருளிச்செய்த தமிழ்த்தொடையை வல்லார், (க) "𑌅𑌹𑌂 𑌵𑌕𑍍𑌤𑌾 𑌭𑌵𑌾𑌨𑍍 𑌶𑍍𑌰𑍋𑌤𑌾 𑌵𑌾𑌚𑍍𑌯𑍋 𑌯𑍋𑌗𑍋 𑌵𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑌿𑌦𑌃- அஹம் வக்தா பவாந் ஶ்ரோதா வாச்யோ யோகோ விமுக்திதঃ" என்கிறபடியே இதுகற்பார்க்கும் இந்நன்மைகள் வேணுமோவென்னில் (ஆராரித்யாதி) ஜந்ம வ்ருத்தாதிகள் ஏதேனுமொருபடியாக வமையும், இத்தை அதிகரிக்கைக்கடியான ருசியில் கண்ணழிவற்றிருக்குமத்தனையே வேண்டுவது. அவர்களுக்கு பகவத்ப்ராப்தி ப்ரதிபந்தகமானவை போகவேணுமென்று ‡(இவர்கள்) இரக்கவேண்டா, அவைதானே "நமக்கிவ்விட மிருப்பல்ல" என்று கால்வாங்கிப்போம். ... ... (௧௦)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

* * *

அரு.—பத்தாம்பாட்டு. (தாராரித்யாதி) "மறுகு" என்றதினர்த்தம் (வீதிகளை) என்றது.

வக்த்ரு வைலக்ஷண்யமும் ப்ரமேய வைலக்ஷண்யமும் [illegible]ப்போலே ஶ்ரோத்ருவைலக்ஷண்யமும் வேணுமோ வென்னும் சங்கையை அநுவதிக்கிறார் (அஹமித்யாதி). ... ... (௧௦)

ஜீயர் திருவடிகளே சரணம்.

* * *

ஆறாம்பத்தில் மூன்றாந்திருமொழி முடிந்தது.

(க) ‡ குண்டலிதம் அதிகம்.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஆறாம்பத்து நாலாந்திருமொழி

கண்ணுஞ்சுழன்றுப்ரவேசம்.

வ்யா.—(௧) "வினைகள் நலியாமை நம்புநம்பீ" என்றார்; அவனுமப்படிசெய்வானாக ஒருப்பட்டிருக்க, அத்தனைக்ரமம் பார்த்திருக்கவொண்ணாதபடி ஆற்றாமை விஞ்சிற்று; சேஷபூதன் சேஷி செய்தபடி செய்யக்கண்டிருக்குமதொழியக் காற்கட்டி நிர்ப்பந்திக்கக் கடவனல்லனிறே; அம்முறைபார்த்து நிற்கவொண்ணாதபடி ஆற்றாமை கரைபுரளுகையாலே "இனிச் செய்யுமதென்?" என்று பார்த்து, "சரீர விஸ்லேஷத்தளவு மிருந்து அர்ச்சிராதிமார்க்கத்தாலே ஒரு தேசவிசேஷத்திலே கொடுபோய்த் தன்னைத் தந்தநுபவிப்பிக்குமளவும் செல்ல அவன் வைத்த தண்ணீர்ப்பந்தலிலே ஒதுங்குவோம்" என்று பார்த்தார்; அதாகிறது - (௨) "𑌅𑌤𑍍𑌰𑍈𑌵 𑌶𑍍𑌰𑍀𑌰𑌙𑍍𑌗𑍇 𑌸𑍁𑌖𑌮𑌾𑌸𑍍𑌵-அத்ரைவ ஸ்ரீரங்கே ஸுகமாஸ்வ" என்கிறபடியே அத்தோடு போலியாகச் சொல்லலா யிருக்கிற உகந்தருளின நிலங்களிலே அநுபவிக்கையிறே; ப்ரஜையினுடைய ஆர்த்திக்கு உதவுகைக்காக மாதாபிதாக்கள் சேரவிருக்குமாபோலே, ஸர்வேஸ்வரனும் பிராட்டியுங்கூட வந்து ஸந்நிதி பண்ணுகிற திருநறையூரிலே புக்கநுபவிக்கப் பார்த்தார்; அத்தையொழிய வேறே சிலவற்றை அநுபவிக்குமிடத்தில், அதுக்குப் பரிகரம் சரீரமே, அதுதான் பரிணாமியாகையாலே ஒருநா ளிருந்தபடி இராதே க்ஷணந்தோறும் வேறுபடாநிற்குமிறே, அந்தச் சரீரந்தன்னைக் கொண்டநுவிக்குமிடத்தில் அதுக்கு விஷயம் ஸ்த்ரீகளே, அவர்களாகிறார்-இவன்பக்கலேதேனும் சில உபாதியைப்பற்ற சிலநாள் ஸ்நேஹித்து அது போனவாறே அவனை அநாதரித்து உபேக்ஷாவாத(வாத)த்தைப் பண்ணிப் பரிபவிக்குமவர்களா யிருந்தார்களே, ஆனபின்பு, அவர்களைவிட்டு, ஸர்வாவஸ்த்தையிலும் சென்று பற்றலாம்படி ஸுலபனாய், தான் ஸந்நிஹிதனுமாய்க் கொண்டு ஸர்வேஸ்வரன் திருநறையூரிலே வந்து ஸந்நிஹிதனானான், மோக்ஷார்த்தமாக யத்நித்த நீ அதில் தோள் மாறுமளவும் செல்ல அத்தோடு போலியாகச் சொல்லலாயிருக்கிற திருநறையூரிலேபுக்கு ஆஸ்ரயிப்போம்வா என்று திருவுள்ளத்தோடே கூட்டுகிறார். ... *

---

(௧) ௬-௩-௰. (௨) சரணாகதிகத்யம்.

அரு.—கண்ணும்சுழன்று ப்ரவேசம்.—"வானுலகம்-என்றெய்துவது?" என்று கேட்க, (௧) "'மரணமானால் வைகுந்தம்' என்கிறபடியே செய்வோம்" என்றிருக்கையாலே, அவ்வளவும் திருநறையூரை அநுபவிக்க ஒருப்படுகிறாரென்று ஸங்கதியை யருளிச்செய்கிறார் (வினைகளித்யாதி); (௨) "துறப்பேனல்லேனின்பம்" என்றவருக்கு இவராகையாலும், தனக்கும் "இவரை இங்கேவைத்து சிலநாள் கைங்கர்யம் கொண்டருளவேணும்" என்னும் அபிப்ராயத்தாலும்; இப்படி க்ரமமாகச் செய்யத் திருவுள்ளம் பற்றினானென்று கருத்து. ஆற்றாமை விஞ்சினால் நிர்ப்பந்தித்துத் திருவாணையிடலாக வொண்ணாதோ வென்ன வருளிச்செய்கிறார் (சேஷபூத னித்யாதி). (அத்தோடு) பரமபதத்தோடு. அதில், கீழே (௩) "திருநறையூர்த் தேனே" என்று ப்ரஸ்துதமான திருநறையூரெம்பெருமானை ஆஶ்ரயிக்கிறாரென் றருளிச்செய்கிறார் (ப்ரஜையினுடைய வித்யாதி). சரீராவஸாநத்திலே பேறு தப்பாதாகில் விஷயாநுபவத்தாலே காலத்தைக் கழிக்கவொண்ணாதோ? உகந்தருளின நிலங்களிலே புகுவானென்னென்ன வருளிச்செய்கிறார் (அத்தையித்யாதி). … … … … … … … *

மூ.—கண்ணும்சுழன்று பீளையோடீளை வந்தேங்கினால்
பண்ணின்மொழியார் பைய நடமி னென்னாதமுன்
விண்ணும் மலையும் வேதமும் வேள்வியு மாயினான்
நண்ணு நறையூர் நாம் தொழுது மெழுநெஞ்சமே. (௧)

பதம்.	உரை.	பதம்.	உரை.
பீளையோடு	நேத்ரமலத்தோடு கூட	மலையும்	பர்வதங்களையும்
கண்ணும்	கண்களும்	ஆயினான்	தனக்கு ப்ரகாரமாக வுடையனாய்
சுழன்று	சுழலமிட்டு (அதுக்கு மேலே)	வேதமுமாயினான்	வேதப்ரதிபாத்யனாய்
ஈளைவந்து	கோழைமேலிட்டு	வேள்வியுமாயினான்	கர்மாராத்யனு மான ஸர்வேஶ்வரன்
ஏங்கினால்	தளர்ந்தால், (அப்பொழுது)	நண்ணும்	விரும்பி நித்யவாஸம் பண்ணுகிற
பண் இன்	பண்ணைக்காட்டிலுமினிதான	நறையூர்	திருநறையூரை
மொழியார்	சொல்லையுடைய ஸ்த்ரீகள்,	நெஞ்சமே	ஓ! மநஸ்ஸே!
பைய	"மெள்ள	நாம்	நாம்
நடமின்	நடந்துபோம்"	தொழுதும்	ஆஶ்ரயிப்போம
என்னாதமுன்	என்று சொல்வதற்கு முன்னே,	எழு	உத்யோகப்படு. (௧)
விண்ணும்	ஆகாசத்தையும்		

---

(௧) தி-வாய்-௯-௧0-௫. (௨) ௬-௩-௧. (௩) ௬-௩-௫.

வ்யா.—முதற்பாட்டு. (கண்ணும்சுழன்றித்யாதி) யௌவநம் என்றொரு கைம்முதல்கொண்டு நாலுநாள் மூலையடியே தோற்றின படி நடக்குமதுவும் போய், ஒன்றைப்பார்க்கப் புக்கால் இலக்கில் தையாதபடி மாம்ஸப்ரசுரமான கண்சுழன்று, ஆற்றுப்பெருக்கில் ருஜீஷாம்சம் ஓரிடத்திலே திரளுமாபோலே பீளைசேர்ந்து, அதுக்கு மேலே ஈளை கைக்கொண்டு, பின்னை சொல்லப்புக்க வார்த்தை முடியத்தலைக்கட்ட மாட்டாதபடி இளைத்தால்; பண்ணிலினிய பேச்சையுடையவர்கள் "மெள்ள நடக்கலாகாதோ!" என்று ஸ்த்ரீகள் அநாதரிப்பதற்கு முன்பே.

(விண்ணுமித்யாதி) காரணமான பூதபஞ்சகத்திலும் முற்பட உண்டான ஆகாசமும், பிற்படஉண்டான ப்ருதிவீகார்யமான பர்வதமும். ஆகாசத்தைச் சொன்னவிடம், ‡காரண பதார்த்தங்களுக்கும் உபலக்ஷணமாகச் சொல்லிற்று; ப்ருதிவீகார்யமான பர்வதத்தைச் சொன்னவிடம், கார்யவர்க்கத்துக் கடைய உபலக்ஷணம்; ஆக, இரண்டாலும் - ஜகதாகாரனாயிருக்கு மிருப்பைச சொல்லுகிறது. (வேதமும்) இப்படி ஜகதாகாரனாக வேதப்ரதிபாத்யனானவன். (க) "𑌸𑌰𑍍𑌵𑌂 𑌖𑌲𑍍𑌵𑌿𑌦𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 - ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம" என்றிறே சொல்லுகிறது. (வேள்வியும்) அந்த வேதோக்தமான ஸர்வகர்ம ஸமாராத்யனானவன், ஸம்ஸாரிகளுடைய ரக்ஷணத்துக்கு உறுப்பாகக் கிட்டி வர்த்திக்கிற திருநறையூரை நாமாஶ்ரயிப்போம், ஒருப்படு என்று. திருவுள்ளத்தோடே கூட்டுகிறார். ... ... (க)

அரு.—முதற்பாட்டு (கண்ணித்யாதி) (உ) * 𑌸𑌰𑍍𑌵𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌾𑌂 𑌪𑍍𑌰𑌧𑌾𑌨- ஸர்வேந்த்ரியாணாம் ப்ரதாநமான கண்ணும் என்றர்த்தம் விவக்ஷித்து, சில விஷயங்களில் த்ருஷ்டிபந்தம் முந்துறவேணுமே, அதுக்குடலாகாதபடியாம் என்று தாத்பர்ய மருளிச்செய்கிறார் (யௌவநேத்யாதி). (ருஜீஷாம்சம்) அஸாராம்சம். ஈளை - இரப்பு. "எழு" என்றதினர்த்தம் (ஒருப்படு) என்றது. ... ... (க)

மூ.—கொங்குண் குழலார் கூடியிருந்து சிரித்து நீர்
இங்கென்னிருமி யெம்பால் வந்ததென்றிகழாதமுன்
திங்களெரிகால் செஞ்சுடராயவன் தேசுடை
நங்கள் நறையூர் நாம் தொழுது மெழுநெஞ்சமே. (உ)

(க) சாந்தோ-ங-கச-க. (உ) ‡ காரணபதார்த்தங்களுக் கெல்லாம்.

பதம்.	உரை.
கொங்குண்	பரிமளப்ரசுரமான
குழலார்	கேசங்களையுடைய ஸ்த்ரீகள்
கூடியிருந்து	கூட்டமாகக் கூடியிருந்து
சிரித்து	பரிஹாஸம்பண்ணி,
நீர்	"நீர்
இருமி	இருமிக்கொண்டு
இங்கு	இவ்விடத்தில்
எம்பால்வந்து	எங்களிடத்தில்வந்தது
என்	எதுக்காக?"
என்று	என்று
இகழாதமுன்	அநாதரிப்பதற்கு முன்னே

பதம்.	உரை.
திங்கள்	சந்த்ரனையும்
எரி	அக்நியையும்
கால்	காற்றையும்
செம்	சிவந்த
சுடர்	ஸூர்யனையும்
ஆயவன்	ப்ரகாரமாக வுடையவன் வர்த்திக்கிறதாய்
தேசுஉடை	உஜ்ஜ்வலமானதாய்
நங்கள்	நமக்கு ப்ராப்யமான
நறையூர்	நாம் தொழுது மெழு நெஞ்சமே! (௨)

வ்யா.—இரண்டாம்பாட்டு. (கொங்குண் குழலார்) கொங்கு மதுவென்றுமாம்; அன்றிக்கே, பரிமளமாகவுமாம். மிக்க பரிமளத்தையுடைத்தான குழலையுடைய ஸ்த்ரீகள். முன்பு இவன்பக்கல் அர்த்தமும் யௌவநமு முண்டானபோது ஒருவர்க்கொருவர் சீறுபாறுஎன்று சேராதிருந்தவர்கள், அவை போனவாறே இவனை க்ஷேபிக்கைக் குறுப்பாகத் திரளவிருந்து சிரித்து. (நீரிங்கென்) உம்மை யறியீரோ, எங்களை யறியீரோ, நீர் இங்குஎன் செய்வதாக வந்தது? நீர் வருமிடமோ இவ்விடம்? என்று சொல்லுகிற அநாதரோக்திகள் செவிப்படுவதற்கு முன்னே. (திங்களித்யாதி) ஜகத்துக்கு உபகாரகமான பதார்த்தங்களை யுண்டாக்கின ரக்ஷகனான ஸர்வேஶ்வரன் பரிக்ரஹித்த தேசமாகையாலே உஜ்ஜ்வலமாகா நின்றுள்ள. (நங்கள் நறையூர் நாம்தொழுது மெழு நெஞ்சமே) அவன் நமக்காக வந்துநிற்கிற தேசத்திலே நாமும் புக்கு ஆஶ்ரயிப்போம். ... ... (௨)

அரு.—இரண்டாம்பாட்டு. (கொங்கித்யாதி) கீழ்ப்பாட்டில் "பையநடமின்" என்றவிது (௧) "போகுநம்பீ" என்றாப்போலே போக்ய ([illegible]) மாயிராதோ வென்ன வருளிச்செய்கிறாரென்று ஸங்கதி.

கொங்குபதத்துக்கு அர்த்தத்வயத்தையு மருளிச்செய்கிறார் (கொங்கித்யாதி). "கூடி" என்றதுக்குத் தாத்பர்யம் (முன்பித்யாதி). "நீர், என்" என்றதுக்கு அர்த்தம் (உம்மையித்யாதி). "என் - வந்தது" என்று கூட்டி

---

(௧) தி-வாய்-௬-௨-௨.

யருளிச்செய்கிறார் (நீரிங்கென்னித்யாதி). * இங்குக்கு அர்த்தம் (நீர்வருமித்யாதி). ... ... (௨)

மூ.—கொங்கார் குழலார் கூடியிருந்து சிரித்தெம்மை
எங்கோலமையா என்னினிக்காண்ப தென்னாதமுன்
செங்கோல் வலவன் தான்பணிந்தேத்தித் திகழுமூர்
நங்கோன் நறையூர் நாம்தொழுது மெழு நெஞ்சமே. (௩)

பதம்.	உரை.
கொங்குஆர்	பரிமளப்ரசுரமான
குழலார்	மயிர்முடியை யுடையரான ஸ்த்ரீகள்
கூடி இருந்து	திரளவிருந்து
சிரித்து.	பரிஹாஸம்பண்ணி,
ஐயா	"கிழவரே! [ன்பு
இனி	இப்படி நீர் மூத்தபி
எம்மை	எங்களையும்
எம்கோலம்	எங்களுடையஅலங்காரத்தையும் (அழகையும்) [தீர்"
என்காண்பது	எதுக்காகப் பார்க்கி
என்னாதமுன்	என்று சொல்வதற்கு முன்னே,
செங்கோல்	ஆஜ்ஞையை
வலவன்தான்	நடத்த வல்லவனாய் துரபிமாநியான சோழன் (அவ்வபிமாநம் கழிந்து)
பணிந்து	(எம்பெருமானை) ஆஶ்ரயித்து
ஏத்தி	ஸ்தோத்ரம்பண்ணி (அபீஷ்டம்பெற்று)
திகழும்	விளங்காநின்ற
ஊர்	திவ்யதேசமாய்,
நம்கோன்	நம்முடையஸ்வாமியானவனெழுந்தருளியிருக்கிற
	நறையூர் நாம்தொழுது மெழு நெஞ்சமே! (௩)

வ்யா.—மூன்றாம்பாட்டு. (கொங்காரித்யாதி) பரிமளத்தால் மிக்க குழலையுடையரான ஸ்த்ரீகளானவர்கள் திரளவிருந்து சிரித்து. (எங்கோலமித்யாதி) உம்முடையபாக([illegible])மொன்றையும் புத்திபண்ணுகிறிலீரோ, எங்களுடைய ஒப்பனையை நீர் இனி எத்தைக்காண்பது? என்று இங்ஙனே பண்ணுகிற க்ஷேபோக்திகள் செவிப்படுவதற்கு முன்பே. (செங்கோலித்யாதி) துரபிமாநியான க்ஷத்ரியனானவன் பக்நா([illegible])பிமாநியாய்த் திருவடிகளிலே விழுந்து ஸ்தோத்ராதிகளைப் பண்ணி ஆஶ்ரயித்து த்ருஷ்டத்தில் தனக்கு வேண்டுமவற்றைப் பெற்று உஜ்ஜ்வலனாகிற ஊர். (நங்கோன் நறையூர்) தளர்ந்தார் தாவளமாய்த்து. எல்லார்க்கும் தந்தாமுடைய அபேக்ஷிதங்கள் பெற்றுப்போகலாம்படி அவன் வந்து நித்யவாஸம்பண்ணுகிற தேசத்தை நாம்போய் ஆஶ்ரயிப்போம். ... ... (௩)

அநு.—மூன்றாம்பாட்டு. (கொங்காரித்யாதி) கீழ்ப்பாட்டிலே இகழ்ந்தாராகச் சொன்னாலும் (௧)‘‘ஸூத்ரா ப்ரஜ்ஞாயதே-ஆஜைகா தருண்யதே’’ என்கிறபடியே கண்ணைத்திறந்து பார்த்தாகிலும் போவோமென்று ஒருப்படுமே, அப்போது அவர்கள் சொல்லும்படியை அருளிச்செய்கிறாரென்று ஸங்கதி.

எம்மையும் எம் கோலத்தையும், இனி என்காண்பது - கண்டு ப்ரயோஜனமென்னென்றாய், அருளிச்செய்கிறார் (உம்முடைய வித்யாதி). (பாகம்) என்றது - “ஐயா”! என்னும்படியான - †முற்றுதல். தாவளம் - ரக்ஷகன். ... ... (௩)

மூ.—கொம்பு மரவமும் வல்லியும் வென்ற நுண்ணேரிடை
வம்புண் குழலார் வாசலடைத் திகழாதமுன்
செம்பொன் கமுகினந்தான் கனியும் செழும் சோலைசூழ்
நம்பன் நறையூர் நாம் தொழுது மெழு நெஞ்சமே. (௪)

பதம்.	உரை.	பதம்.	உரை.
கொம்பும்	வஞ்சிக்கொம்பையும்	இகழாதமுன்	அவமானம் செய்வதற்கு முன்னே
அரவும்	ஸர்ப்பத்தையும்	கமுகு இனந்தான்	திரள்திரளாக இருக்கிற பாக்குமரங்கள் [ற
வல்லியும்	கொடியையும்	செம்பொன்	சிவந்த பொன்போன்
வென்ற	ஜயித்ததாய் (அவற்றிலும் மிக்க ஒசிவையும்) [உடையதாய்	கனியும்	பழங்களையுண்டாக்குமதாய் [தான
நுண்	ஸூக்ஷ்மதையை(யும்)	செழும்	வளமையை யுடைய
ஏர்	அழகியதான	சோலைசூழ்	சோலைகளாலே சூழப்பட்டதாய்
இடை	மத்யப்ரதேசத்தை யுடையராய்	நம்பன்	விச்வஸநீயனான ஸர்வேச்வரன் நித்ய வாஸம்பண்ணுகிற
வம்பு உண்	பரிமள ப்ரசுரமான	நறையூர்	நாம்தொழுது மெழு நெஞ்சமே! (௪)
குழலார்	மயிர்முடியை யுடையரான பெண்கள்		
வாசல் அடைத்து	(இவனை வெளியிலே தள்ளி) வாசற்கதவைச்சாத்தி		

வ்யா. — நாலாம்பாட்டு. (கொம்புமித்யாதி) வஞ்சிக்கொம்பையும் அரவையும் வல்லிக்கொடியையும் மற்றுள்ள வற்றையும் ‡தோற்பிக்கவற்றான இடையையுடையராய், பரிமளிதமான குழலையுடைய

---

(௧) † மூப்பு. ‡ (பா) தோற்பித்த அறநேரிய.

ஸ்த்ரீகளானவர்கள். (வாசலித்யாதி) முற்காலம் இவனைவிரும்பி, பின்பு வெறுவியனானவாறே, புறம்பே தள்ளிக் கதவடைப்பர்கள்; இவன்றான் பின்னையும் சாபலத்தாலே போகாதே புறம்பே நிற்கும்; லஜ்ஜித்து இவன் அங்குநின்றும் கால்வாங்கிப் போகைக்காக, இவனுக்கு போக(ழ்⁶X)யோக்யதை யில்லாமையைச் சொல்லிப் பரிபவிப்பர்கள்; இப்படிப்பட்டவர்கள் பரிபவோக்தி செவிப்படுவதற்கு முன்னே. (செம்பொனித்யாதி) அங்குள்ளவை †யடைய எப்போதும் பக்வபலமா யிருக்குமாய்த்து. கமுகுகளானவை செம்பொன் போலே யிருக்கிற, கனிகளையுண்டாக்குகிற பொழிலாலே சூழப்பட்டிருக்கும். முக்தப்ராப்ய பூமி யென்னுமிடம் தோற்றியிருக்கும். (நம்பன்) ஸர்வாவஸ்த்தையிலும் பற்றலாம்படி விஶ்வஸநீயனானவன் வர்த்திக்கிற திருநறையூரை நாமாஶ்ரயிப்போம். ... ... (௪)

அரு.—நாலாம்பாட்டு (கொம்புமித்யாதி) "எங்கோலம் என்காண்பது" என்னச்செய்தேயும், இடையிலே துவக்குண்டு, போகவும்மாட்டாதே து(டு)ருக்திகளாலே கிட்டவும்மாட்டாதே இடையிலே கிடக்க, கதவடைக்கும்படி சொல்லிவிடுவாகளென்கிறாரென்று ஸங்கதி.

மூன்று த்ருஷ்டாந்தங்களைச் சொல்லியும் போராதே "நுண்" என்றதுக்கு அர்த்த மருளிச்செய்கிறார் (மற்றுள்ளவற்றையும்) என்று. சகார தாத்பர்யமாகவுமாம். (வெறுவியன்) தரித்ரன் வாசலடைத்தபின் இகழப்ரஸக்தி என்னென்ன; குழலில் பரிமளத்தை நச்சிப்போகானே, அத்தாலே என்று விவக்ஷித்தருளிச்செய்கிறார் (இவன்றானித்யாதி). கமுகினந்தான்-க்ரமுக ஸமுதாயந்தான். "செம்பொன் - கனியும்" என்று அந்வயித்தருளிச்செய்கிறார் (கமுகித்யாதி). "செழும்" என்றதின் தாத்பர்யம் (முக்தப்ராப்யேத்யாதி). ... ... (௪)

மூ.—விலங்கும் கயலும் வேலு மொண் காவியும் வென்றகண்
சலங்கொண்ட சொல்லார் தாங்கள் சிரித்திகழாதமுன்
மலங்கும் வராலும் வாளையும் பாய் வயல் சூழ்தரு
நலங்கொள் நறையூர்நாம் தொழுது மெழு நெஞ்சமே. (௫)

பதம்.	உரை.	பதம்.	உரை.
விலங்கும்	(முக்த்த(X)மான) மானையும்	வேலும்	(கூர்மையான) வேலையும்
கயலும்	(துள்ளாநின்ற) கயல் மத்ஸ்யத்தையும்	ஒள்	அழகிய (சிவந்த)[யும்
		காவியும்	செங்கழுநீர்ப் பூவை

---

† (பா) அடங்க.

வென்ற	ஜயித்த
கண்	கண்களையுடையராய்
சலம்கொண்ட சொல்லார் தாங்கள்	(முன்பு ஆசரித்துப் போந்து,) இப்போதாகக் கபடோக்திகளை யுடையரான பெண்கள்
சிரித்து	பரிஹாஸம்பண்ணி
இகழாதமுன்	அநாதரிப்பதற்கு முன்னே,
மலங்கும்	மலங்கென்னும் மத்ஸ்யமும்
வராலும்	வராலென்ற மீனும்
வாளையும்	வாளையென்ற மீனும் (களித்து)
பாய்	துள்ளாநின்ற
வயல்	கழனிகளாலே
சூழ்தரு	சூழப்பட்டதாய்
நலம்கொள்	அபீஷ்ட ப்ரதத்வமாகிற நன்மையையுடையதான

நறையூர் நாம்தொழுது மெழு நெஞ்சமே! (௫)

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (விலங்குமித்யாதி) கண்ணினுடைய மௌக்த்யத்துக்கு மானும், துள்ளுதலுக்குக் கயலும், கூர்மைக்கு வேலும், சிவப்புக்குக் காவியும் போலேயாய், பின்னையும் இவற்றைத் தோற்பித்த கண்ணையுடையராய், ஒருகாலும் அநுகூலவாதம் பண்ணக்கடவரன்றிக்கே ச(ஷ்)லோக்திகளைப்‡ பண்ணக்கடவரான ஸ்த்ரீகள் அபஹஸித்து அநாதரிப்பதற்கு முன்னே. (மலங்குமித்யாதி) அங்குண்டான திர்யக்குக்களு மகப்பட "இன்னது பெற்றிலோம்" என்னும் சோகமின்றிக்கே அபிமதலாபத்தாலே களித்து வர்த்திக்கிற தேசமாய்த்து. ஆக, இன்னது பெற்றிலோம் என்னும் சோகமின்றிக்கே உத்தேஶ்யத்தைப் பெற்றுக் களித்து வர்த்திக்கலான நன்மையையுடைய தேசத்தை நாமாஶ்ரயிப்போம். ... ... (௫)

அரு.—அஞ்சாம்பாட்டு. (விலங்கித்யாதி) கீழ்ப்பாட்டில் வாசலடைத்திருந்து பரிபவிக்கச் செய்தேயும் கண்ணினழகைச் சொல்லித் தம் தோல்வி சொல்லி அவர்களைக் கொண்டாடாநிற்குமே, அப்படி கொண்டாடினாலும் நெஞ்சு நெகிழாதவரா யிருப்பர்களென்று சொல்லுகிறாரென்று ஸங்கதி.

தன்னிடத்தில் முன்புண்டான அநுராகத்தைச் சொல்லிக் கூப்பிடுகிறாளாகையாலே "காவி" என்று - செங்கழுநீருக்குப் பேராய் பலித்த வர்த்தமருளிச்செய்கிறார் (சிவப்புக்கித்யாதி). மலங்கு-மத்ஸ்யவிசேஷம்,... (௫)

மூ.—மின்னேரிடையார் வேட்கையை மாற்றியிருந்து
என்னீரிருமி யெம்பால் வந்ததென் றிகழாதமுன்
தொன்னீரிலங்கை மலங்க விலங்கெரியூட்டினான்
நன்னீர்நறையூர் நாம்தொழுது மெழு நெஞ்சமே. (௬)

---

‡ (பா) பருஷோக்திகளை.

பதம்.	உரை.
மின்ஏர்	மின்னோடொத்த (அதிஸூக்ஷ்மமான)
இடையார்	இடையையுடைய ஸ்த்ரீகள்
வேட்கையை	(முன்பு தன்னிடத்திலுண்டான) ப்ரீதியை [கொண்டு,
மாற்றியிருந்து	தவிர்ந்தவர்களாய்க்
நீர்	"மூப்பரான நீர்
இருமி	இருமிக்கொண்டு
என்பால்வந்தது	என்னிடத்திற்கு வந்தது [துக்காக"
என்	எந்த ப்ரயோஜநத்
என்று	என்றுசொல்லி

பதம்.	உரை.
இகழாதமுன்	பழிப்பதற்குமுன்னே,
தொல்நீர்	பழையதான ஸமுத்ரத்தினால் சூழப்பட்ட
இலங்கை	லங்கையை [யாக
மலங்க	வ்யாகுலப் படும்படி
விலங்கு	திருவடியைக் கொண்டு [டையதாய்
எரியூட்டினான்	தீமூட்டி விட்டவனா
நல்நீர்	நன்றான (தாபஹரமான) ஜலஸம்ருத்தியை யுடையதான

நறையூர் நாம்தொழுது மெழு நெஞ்சமே! (௬)

வ்யா. — ஆறாம்பாட்டு. (மின்னேரித்யாதி) மின்னோடொத்த இடையையுடையரான ஸ்த்ரீகளானவர்கள், இவன்பக்கல் அபிநிவிஷ்டைகளா யிருக்கு மிருப்பைத்தவிர்ந்து, நீ எங்கள்பக்கல் வருகைக்குக் கொடுவந்த பரிசிலோ? இது, இருமிக்கொண்டு எங்கள்பக்கல் என்றிய வந்தீர் என்று இங்ஙனே அநாதரோக்திகளைப் பண்ணுவதற்கு முன்னே. (தொன்னீரித்யாதி) கடலை அகழாக வுடைத்தான லங்கை ஒருவர்கூறை எழுவருடுக்கும்படி விலங்காலே எரியூட்டினா னென்னவுமாம். அன்றிக்கே, இலங்கெரி யூட்டினான் என்னவுமாம். விலங்கு என்றபோது திருவடியாலே என்கிறது; இலங்கு என்றபோது, முன்பு சோறுவேவப்பண்ணுகைக்கு வேண்டுமளவு புக்கு வெளுத்திருந்தது, பெருமாள் தோளை அண்டைகொண்டு அத்தாலே வயிறுநிறைய புஜித்துத் தன்னிறம்பெற்று உஜ்ஜ்வலமான படியைச்சொல்லுகிறது. (நன்னீரித்யாதி) ஸகலதாபமு மாறும்படியான ஜலஸம்ருத்தியை யுடைத்தான திருநறையூரை நாம் புக்கு ஆஶ்ரயிப்போம். பொருந்தாத ராவணனை அழியச்செய்து விபீஷணனுக்குப் புகலாய் நின்ற சக்ரவர்த்தித் திருமகனைப்போலே, நம்முடைய விரோதியை வாஸநையோடே போக்குகைக் கீடான பெருமிடுக்கனானவன் வந்து வர்த்திக்கிற திருநறையூரிலே போய்ப் புகுவோம். (௬)

அரு.—ஆறாம்பாட்டு. (மின்னேரித்யாதி) கீழ்ப்பாட்டிலே - "சலங்கொண்டசொல்லார்" என்று சொல்லப்போமோ, ஒருகாலல்லா ஒருகாலாகி

னும் ஸங்கம்பிறவாதோ? என்று புறத்திண்ணையிலே கிடக்கும் முன்புத்தையில் தன்னிடத்தில் உபஹாரம் கொண்டபோதையில அபிநிவேசத்தை நினைத்து என்று கருத்தாக, அந்த அபிநிவேசம் மாற்றிப் பரிபவிப்பர்களென்கிறு ரென்று ஸயசதி.

(பரிசில்) உபஹாரம். (இது) இருமல். ... ... (௬)

மூ.—வில்லேர்நுதலார் வேட்கையை மாற்றிச் சிரித்திவன்
பொல்லான் திரைந்தானென்னும் புறனுரை கேட்பதன்முன்
சொல்லார் மறைநான்கோதி யுலகில் நிலாயவர்
நல்லார் நறையூர் நாம்தொழுது மெழு நெஞ்சமே. (௭)

பதம்.	உரை.
வில்ஏர்	த(ஞ)னுஸ்ஸோடொத்த (த(ஞ)னுராகாரமாகவளைந்திருக்கிற)
நுதலார்	நெற்றியையுடையபெண்கள்
வேட்கையை	(முன்பு தன்னிடத்திலுண்டான) அபிநிவேசத்தை
மாற்றி	தவிர்ந்து
சிரித்து	பரிஹாஸம்பண்ணி,
இவன்	“இந்தக்கிழவன் லன்)
பொல்லான்	துஷ்டன் (ஸ்த்ரீலோ
திரைந்தான்	ஒடிந்த (சிதிலமான) சரீரத்தை யுடையவன்”
என்னும்	என்றுசொல்லுகிற
புறன்உரை	ஆதரமற்றசொல்
கேட்பதன்முன்	செவிப்படுவதற்கு முன்னே,
சொல்ஆர்	சொற்செவ்வியை யுடைத்தான(பதக்ரமாதிநியதமான)
நான்குமறை ஓதி	நாலு வேதங்களையும் அத்யயநம்பண்ணி(அவற்றை)
உலகில்	லோகத்தில்
நிலாயவர்	வ்யாபிக்கச்செய்யுமவராய் (ஸ்த்தாபிக்குமவராய்)
நல்லார்	விலக்ஷணமான ஆசாரத்தை யுடையரானப்ராஹ்மணர் வஸிக்கிற

நறையூர் நாம்தொழுது மெழு நெஞ்சமே! (௭)

வ்யா. — ஏழாம்பாட்டு. (வில்லேரித்யாதி) வில்லோடொத்த நுதலையுடைய ஸ்த்ரீகளானவர்கள், இவனைப் பெருவிடில் பிழையாதாரைப்போலே ஆசைப்பட்டார்களா யிருக்கு மிருப்பைத் தவிர்ந்து, அது தவிர்ந்தாலும், அது தன்னை மறைத்திருக்கை யன்றிக்கே சிரித்து. (பொல்லானித்யாதி) முன்பு இவனுடைய வடிவழகையும் அதினுடைய ஏகரூபதையையும் சொல்லிக்கொண்டாடிப் போந்தவர்கள், “இவன்பொல்லான், திரைந்தான்” என்று அவர்களுடைய புல்லிய

சொல்லு செவிப்படுவதற்குமுன்னே. (சொல்லாரித்யாதி) பதத்தில் வர்ணக்ரமநியதத்வம்போலே யாய்த்து வாக்யத்தில் பதக்ரமநியதத்வ மிருக்கும்படி. (ஓதி) பூர்வ பூர்வோச்சாரண க்ரமத்தைப் பற்ற உத்தரோத்தரோச் சார்யமாணத்வமாகிற க்ரமத்திலே அப்யஸித்து;இதுதான் காதாசித்கமா யிருக்கையன்றிக்கே, (உலகில் நிலாயவர்) வேதத்துக்கு ஸ்த்தாபகராய்ப் போருமிதுவே ஸ்வபாவமாகவுடையராயிருக்கை. வேதத்தில் வாஸனைபோய் ஆசாரத்தில் ஏதேனும் வைகல்யமுண்டாயிருக்கை யன்றிக்கே, ஆசாரப்ரதாநரானவர்கள் வர்த்திக்கிற தேசத்தை நாமும்போய் ஆஶ்ரயிப்போம். ... ... (எ)

அரு.—ஏழாம்பாட்டு. (வில்லேரித்யாதி) கீழ்ப்பாட்டில் - புறத்திண்ணையில் கிடக்க, வருவார்க்கு விரோதியாக இருக்கவொண்ணாது என்று, போனானே என்று வாசல்திறந்து எட்டிப்பார்க்க, தன்மேல் அபிநிவேசத்தாலே பார்த்தார்களாகக்கொண்டு நுதலிலழகிலே ஈடுபட, அத்தைக்கண்டு, தங்கள் வைரஸ்யமெல்லாம் தோற்றப் பொல்லாங்கையெல்லாம் வர்ணித்துப் புறம்பாக்கி வார்த்தை சொல்லுவர்களென்று சொல்லுகிறாரென்று ஸங்கதி.

"நிலாயவர்" என்றதினர்த்தம் (ஸ்த்தாபகராய்) என்றது. ... (எ)

மூ.—வாளொண்கண் நல்லார்தாங்கள் மதனனென்றார் தம்மைக்
கேண்மின்களீளையோடேங்கு கிழவனென்னாதமுன்
வேள்வும் விழவும் வீதியிலென்று மருதவூர்
நாளுநறையூர் நாம் தொழுது மெழு நெஞ்சமே. (அ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
வாள்	வாளாயுதம்போல் அதிதீக்ஷ்ணமாய்	ஈளையோடு	"கோழையோடு கூட
ஒள்	அழகியதான	எங்கு	தளராநின்ற [(இருமி)
கண்	கண்களையுடையராய்	கிழவன்	(இந்தக்) கிழவனை
நல்லார்	ஸௌந்தரிகளான ஸ்த்ரீகள்	கேண்மின்கள்	(எங்கே வந்தானென்று) கேளுங்கள்"
தாங்கள்	(இப்போது இகழ்கிற) தாங்களே	என்னாதமுன்	என்று (தம்மருகிற் பெண்களைப்பார்த்துச்)சொல்வதற்கு முன்னே,
மதனன்	(இவன்) மன்மதன்	வேள்வும்	யாகாதியான ஆராதநமும்
என்றார்தம்மை	என்று (முன்பு) சொன்ன புருஷர்களையே (பார்த்து),	விழவும்	உத்ஸவமும்

வீதியில்	வீதிகளில்	நாளும்	ப்ரதிதினமும்
என்றும்	ஸர்வகாலமும்		நாம்தொழுது மெழு நெஞ்சமே! (௮)
அறாதவூர்	மாறாதவூரான நறையூர்,		

வ்யா. — எட்டாம்பாட்டு. (வாளொண்கணித்யாதி) ஓராளுமொரு நோக்கும் நேராய் மற்றும் கண்ணழகுக்கு வேண்டும் நன்மைகளையுடையரான ஸ்த்ரீகளானவர்கள், தாங்கள் முன்பு இவன்பக்கல் யௌவநமும் த்ரவ்யமுமுண்டான வன்று "இவன் காமன்" என்று கொண்டாடிப் போந்தவர்கள், அருகிருந்தாரைப் பார்த்து "கேண்மின்கள், ஈளையோடேங்கு கிழவன்" என்பதற்கு முன்னே யென்னுதல்; (ஈளையோடேங்கு கிழவன் - உங்கள் - கேள்) முன்பு, "என்னுடையவன்" என்று ஆதரித்தவர்கள், இப்போது ஒருவர்க்கொருவர் "உங்களுடைய கேள், உங்களுடைய கேள்" என்னாநிற்பர்கள். (வேள்வும் விழவுமித்யாதி) நித்யோத்ஸவமும் வைதிக ஸமாராதநமும் என்றும் மாறாத ஊர். (நாளுமித்யாதி) பரமபதத்திலே போய் நித்யாநுபவம் பண்ணுமளவும் செல்ல, இப்ப்ரக்ருதியோடே, அத்தோடு போலியான திருநறையூரிலே புக்கநுபவிப்போம். ... ... (௮)

அரு.—எட்டாம்பாட்டு. (வாளித்யாதி) "இவன் பொல்லான்" என்றவாறே, அவர்களைக்குறித்து, நீங்கள்தானே என்னைக் கண்ணாலே அகப்படுத்தி என்னை மந்மதனாகக் கொண்டாடியிருக்க இப்போது இங்ஙனே சொல்லுவீர்களோ? என்று அந்யாயப்பட, இவன் முகம் பாராதே அருகிருந்த தன் பருவத்தோடொத்த பெண்பிள்ளைகளைப் பார்த்து இவனுக்குத் தங்களிடத்தில் நைராஸ்யம் பிறக்கும்படி இவன் செவிப்படச் சொல்லுகிறார்களென்கிறாரென்று ஸங்கதி. ... ... (௮)

மூ.—கனிசேர்ந்திலங்கு நல்வாயவர் காதன்மை விட்டிட
குனிசேர்ந்துடலம் கோலில் தளர்ந்திளையாதமுன்
பனிசேர்விசும்பில் பான்மதிகோள் விடுத்தானிடம்
நனிசேர் நறையூர் நாம்தொழுது மெழு நெஞ்சமே. (௯)

பதம்.	உரை.	பதம்.	உரை.
கனிசேர்ந்து	கோவைப்பழத்தோடொத்து	வாயவர்	அதரத்தையுடையரான பெண்கள்
இலங்கு	விளங்காநின்ற	காதன்மை	(தன்னிடத்தில்) ஆசையை
நல்	அழகிய		

விட்ட	தவிர்ந்திருக்க, (அதுக்குமேலே)
குனிசேர்ந்து	கூனையுடைத்தான
உடலம்	சரீரமானது
தளர்ந்து	சிதிலமாய்,
கோலில்	(தனக்குத் துணையாகப் பற்றின) கோலிலே (கோலைப்பிடிக்கவும் திறமையற்றவனாய்)
இளையாதமுன்	தளருவதற்கு முன்னே,
விசும்பில்	ஆகாசத்தில் ஸஞ்சரியாநின்றவனாய்
பனிசேர்	குளிர்ந்தகிரணங்களையுடையனாய்
பால்மதி	பால்போல் விளங்காநின்ற சந்த்ரனுடைய
கோள்	க்ஷயரோகத்தை
விடுத்தான்	போக்கின ஸர்வேஶ்வரனுடைய
இடம்	ஸ்தாநமாய்
நனிசேர்	பெருமைபொருந்திய
நறையூர்	நாம்தொழுது மெழு நெஞ்சமே! (௯)

வ்யா. — ஒன்பதாம்பாட்டு. (கனியித்யாதி) கோவைப்பழம் போலேயாய் விளங்காநின்றுள்ள அதரத்தையுடைய ஸ்த்ரீகள், இவன் பக்கல் தாங்கள் பண்ணிவைக்கும் †ஸ்நேஹத்தைத் தவிர்த்து. (குனிசேர்ந்தித்யாதி) முன்பு இறுமாந்திறே யிருப்பது; இப்போது வளைவு தானே ஸ்வபாவமாய், நிமிர்ந்து வ்யாபரிக்க வொண்ணாதபடியா யிருக்குமாய்த்து. அநந்தரம், ஒருகோலை அபாஶ்ரயமாகப் பற்றும்; அத்தைத் தரிக்கப் பிடிக்கமாட்டாமையாலே அது தனக்கு அபாஶ்ரயமாகமாட்டாது, தானதுக்கு அபாஶ்ரயமாக மாட்டாதே இப்படி இளைப்பதற்கு முன்னே. (பனிசேரித்யாதி) ஆகாசப்பரப்புக்கடைய தானே ப்ரகாசகனாயிருக்கிற சந்த்ரனுக்கு வந்தக்ஷயத்தைப் போக்கினவன் வந்து வர்த்திக்கிற தேசம். (நனியித்யாதி) பிராட்டிக்காகப் பரிக்ரஹித்தான் என்கிற பெருமையையுடைய திருநறையூரை, அவள் பரிகரபூதரான நாம்போய் ஆஶ்ரயிப்போம். நனி-பெருமை... (௯)

அநு.—ஒன்பதாம்பாட்டு. (கனியித்யாதி) கீழ்ப்பாட்டில் இவன்முகம் பாராதே பரஸ்பரம் சொல்லிப் பரிஹஸிக்க, வாயில் ப்ழுப்புக்குத் தோற்றுக் கிட்டப்போவதாக ஒருப்பட்டு எழுந்திருக்க, அதிலே கால்நடை தாராமையாலே கோலைக் கைப்பற்றி நாலாநிற்கு மத்தனைபோக்கி அடியிட்டுக் கிட்டவும்மாட்டாதே, அத்தோடே இவனும் சரமகாலம் என்று அஞ்சும்படியாய் விடுமித்தனை யாகையாலே, லோகஸ்த்திதி இதுவான பின்பு, அத்தையெல்லா மெண்ணி, நறையூரிலேபோய் ஸுகமேயிருப்போமென்கிறாரென்று ஸங்கதி.

---

† (பா) ஸங்கத்தை.

“விசும்பில்-பனிசேர்-பான்மதி” என்றந்வயமாய், “விசும்பு” என்று விசேஷித்ததுக்குக் கருத்தருளிச் செய்கிறார் (ஆகாசேத்யாதி). ... (௯)

மூ.—பிறைசேர் நுதலார் பேணுதல் நம்மை யிலாதமுன்
நறைசேர் பொழில் சூழ் நறையூர் தொழுநெஞ்சமே யென்ற
கறையார் நெடுவேல் மங்கையர்கோன் கலிகன்றிசொல்
மறவாதுரைப்பவர் வானவர்க் கின்னரசாவரே. (௧௦)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பதம்.	உரை.
பிறைசேர்	(சந்த்ரனுடைய)பிறையோடொத்த
நுதலார்	நெற்றியை யுடையரான பெண்கள்
நம்மை	நம்விஷயத்தில்
பேணுதல் இலாதமுன்	ஆதரத்தைத்தவிர்ந்து (இகழ்வதற்கு) முன்னே, [நின்ற
நறைசேர்	தேன்வெள்ள மிடா
பொழில்சூழ்	சோலைகளாலேசூழப்பட்ட
நறையூர்	திருநறையூரென்னும் திவ்யதேசத்தை
நெஞ்சமே	ஓ! மநஸ்ஸே!
தொழு	ஆஶ்ரயிக்கப்பாராய்
என்ற	என்றருளிச் செய்தவராய்,
கறைஆர்	கறைமிக்கதாய்
நெடுவேல்	நீண்டிருந்துள்ள வேலையுடையராய்,
மங்கையர்	திருமங்கையி லுள்ளா
கோன்	ஸ்வாமியான [ர்க்கு
கலிகன்றி	ஆழ்வாருடைய
சொல்	ஸ்ரீஸூக்தியான இப்பத்துப் பாசுரத்தையும் [கொண்டு
மறவாது	பராக்கில்லாதவராய்க்
உரைப்பவர்	அப்ப்ய(ஸ்ய)ஸிக்கு மவர்கள்
வானவர்க்கு	நித்யஸூரிகள் வஸிக்கும் தேசத்துக்கு
இன் அரசு	அழகிய (அப்ரதிஹதரான) ராஜாவாக
ஆவர்	ஆகப்பெறுவர்கள்.

வ்யா.— பத்தாம்பாட்டு. (பிறைசேரித்யாதி) பிறையொத்த நுதலையுடையரான ஸ்த்ரீகளானவர்கள், நம்பக்கல் பேணுதல் தவிருவதற்கு முன்னே. (நறைசேர்)மதுமிக்க பொழிலாலே சூழப்பட்ட திருநறையூரிலே புக்கு ஆஶ்ரயிப்போமென்று தம் திருவுள்ளத்தோடே கூடி. (கறையாரித்யாதி) ப்ரதிபக்ஷத்தை யழியச்செய்து கறை கழற்ற அவஸரமில்லாதபடி யிருக்கிற நெடுவேலைக் கையிலேயுடையராய் திருமங்கையிலுள்ளார்க்கு நிர்வாஹகரான ஆழ்வாரருளிச்செய்த.(மறவாது) ஸ்த்ரீகளும் கண்ணுக்கிலக்காய் யௌவநமுமுண்டான போ

த்தாக இத்தைமறவாதே அப்ப்யஸிக்கவல்லவர்கள், என்றுமொக்க பஞ்சவிம்சதி வார்ஷிகரான நித்யஸூரிகளுடைய தேசத்துக்கு நியாமகராகப் பெறுவர். என்று மொக்க ஏகரூபராயிருக்குமவர்களிறே அவர்கள், அவன் ஸாம்யாபத்தி கொடுத்துவைக்கையாலே. ... (௧௦)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

அரு.—பத்தாம்பாட்டு. (பிறையித்யாதி) மறக்கப்ரஸக்தி ஏதென்னவருளிச்செய்கிறார் (ஸ்த்ரீகளுமித்யாதி). இத்திருமொழியில் ப்ரமேயத்துக்குச் சேர விசேஷிக்கிறார் (என்றுமொக்க வித்யாதி). ... (௧௦)

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஆறாம்பத்தில் நாலாந்திருமொழி முடிந்தது.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஆறாம்பத்து அஞ்சாந்திருமொழி

கலங்க முந்நீர் ப்ரவேசம்.

வ்யா.—ஸ்த்ரீகளுடைய பரிபவத்துக்குப் பரிஹாரமாகத் திருநறையூரிலே புக்கு ஒதுங்குகையன்றிக்கே, அங்கேபோய்ப் புகவே, அம்ருதமதநம் துடக்கமான அபதாநங்களைப் பண்ணி தேவஜாதிக்கு உபகாரகனாய், ஆஸ்ரிதர்க்கு உதவும் ஸ்வபாவனாய், உதவுமிடத்துப் பிராட்டிமாரோடு ஆஸ்ரிதரோடு வாசியற உதவும் ஸ்வபாவனானவன் வந்து நிற்கையாலே, அவ்வருகே யுள்ளவையெல்லாம் அவன்றானே தலைக்கட்டித் தரும், அவன்வந்து நித்யவாஸம் பண்ணுகிற தேசமாகையாலே முக்தப்ராப்யமான பூமியோடு போலியான தேசமென்று அத்தேசத்தைப் பேசி அநுபவிக்கிறார். ... ... *

அரு. — கலங்கமுந்நீர் ப்ரவேசம்.—கீழ்த்திருமொழியில் - திருவுள்ளத்தைக்குறித்து விஷயாநுபவத்துக் குறுப்பாகாத கோழைத்தனத்தாலேவந்த பரிபவங்களையெல்லாம் சொல்லித் திருநறையூரைத் தொழுவோ

மென்னவே, திருவுள்ளமானது, இவ்விபூதியிலே நாமிருந்து திருநறையூரைப்பற்றி யிருந்தோமாகில் சரீரம் பரிணாமி த்ரவ்யமாகையாலே நாமிந்தபகவத்விஷயத்துக்கும் ஆளாகாதே போய்விடுவோமே, ஆகையாலே, என்றும் பஞ்சவிம்சதிவார்ஷிகரானாரோடு ஒரு கோவையாயிருந்தன்றோ அநுபவிக்க ஆசைப்படுவதென்று, சரீராவஸாநத்தளவும் ஆறியிருக்கப்போமோ? என்று த்வரிக்க; நாம் ஸ்த்ரீகளுடைய பரிபவ பரிஹாரார்த்தமாக வன்றிக்கே கேவலம் ஸ்வரூபாநுகுணமாக ஆஶ்ரயிக்கவே ஆஶ்ரயண விரோதி தடங்கிப் போய் நித்யகைங்கர்யார்த்தமான அவ்வருகுள்ளவை யெல்லாம் தானே தலைக்கட்டும், பதறாதேகொள்என்று, அதுக்கீடாக ஈஶ்வரன் குணவிசேஷங்களை அநுஸந்தித்துக்கொண்டு திருநறையூரை அநுபவிக்கிறாரென்று ஸங்கதியை யருளிச்செய்கிறார் (ஸ்த்ரீகளுடைய வித்யாதி).... .. .. *

மூ.—கலங்க முந்நீர் கடைந்தமுதங் கொண்டிமையோர்
துளங்கல் தீர நல்கு சோதிச் சுடராய
வலங்கையாழி யிடங்கைச்சங்க முடையானூர்
நலங்கொள் வாய்மை யந்தணர்வாழும் நறையூரே. (க)

பதம்.	உரை.	பதம்.	உரை.
முந்நீர்	ஸமுத்ரத்தை [ம்படி	சங்கம்	பாஞ்சஜந்யத்தையும்
கலங்க	க்ஷோப (ம்)முண்டா	உடையான்	உடையவனுமான ஸர்வேஶ்வரனுடைய
கடைந்து	மத(ந)நம்பண்ணி,	ஊர்	திவ்யதேசமானது,
அமுதம்கொண்டு	(அதில் நின்றும்) அம்ருதத்தையெடுத்து,	நலம்கொள்	ஸத்யமாகிற நன்மையையுடைய
இமையோர்	தேவர்களுடைய	வாய்மை	வாகிந்த்ரிய வ்யாபாரமான சொற்களையுடையரான
துளங்கல்	கலக்கமா (ஆபத்தா)	அந்தணர்	ப்ராஹ்மணர் [கி
தீர	போம்படியாக [வது	வாழும்	நித்யவாஸம் பண்ணு
நல்கு	(அவர்களுக்குக்)கொடாநின்றவனாய்	நறையூர்	திருநறையூரென்னும் திவ்யதேசமாயிருக்கும். (க)
சோதி சுடர் ஆய	(அத்தாலே) அத்யுஜ்ஜ்வலனாய்,		
வலங்கை	வலது கையில்		
ஆழி	ஸுதர்சநத்தையும்		
இடங்கை	இடது கையில்		

வ்யா.—முதற்பாட்டு. (கலங்கவித்யாதி) ஜலராசியானது கீழ்மண்கொண்டு மேல்மண்ணெறியும்படி கடைந்து, அம்ருதத்தைவாங்கி, அஸுரவர்க்கத்தாலே நோவுபடுகிற தேவஜாதிக்குக் கொடுத்து, இப்ப

டிசெய்தது அந்தஃபுரத்துக்காதல், அந்தஃபுர பரிகரத்துக் காதலன்றிக்கே, இது பெற்றவநந்தரம் (க)"[illegible]-ஈஶ்வரோऽஹம்" என்றிருக்கும் தேவர்களுக்காக வாய்த்து. இவற்றின் நேர்த்தியடையத் தன்னதாய், அம்ருதபாநம் பண்ணுகையிலே அவர்களுக்கு அந்வயமாம்படி கொடுத்து, அவர்கள் புஜிக்கப்பெற்றது தன் பேறென்னுமிடம் வடிவில் புகரிலே தோற்றவிருக்கிறவன். (வலங்கையித்யாதி) அம்ருதத்தை புஜிக்கிற இவர்களுடைய விரோதியைப் போக்குகைக்குக் கையிலே திவ்யாயுதங்களைத் தரித்துக்கொண்டிருக்கிறவன் வர்த்திக்கிற தேசம். (நலங்கொளித்யாதி) யதாபூதவாதியான வேதம் கைப்பட்டிருக்கிறவர்களென்னுதல்; யதாபூதவாதிகளான ப்ராஹ்மணர் வர்த்திக்கிற ஊரென்னுதல். ... ... (க)

அரு.—முதற்பாட்டு. (கலங்கவித்யாதி) "அமுதங்கொண்டு - நல்கு" என்றபோதே "இமையோர்க்கு" என்கை ஸித்தமாயிருக்க, "இமையோர்" என்கையாலே-அஹங்காரிகளுக்கும் அரியனசெய்து கார்யம்செய்தவன் பரதந்த்ரரான நமக்குச்செய்யானோ? என்னுமிடம் தோற்றுமென்று உட்கருத் தருளிச்செய்கிறார் (இப்படி யித்யாதி). வாய்மை - வாக்வ்யாபாரமாய், வேதமாதல், கேவல வசநமாதல், ஆக இரண்டுயோஜனை யருளிச்செய்கிறார் (யதாபூதேத்யாதி). ... ... (க)

மூ.—முனையார் சீயமாகி யவுணன் முரண் மார்வம்
புனை வாளுகிரால் போழ்பட வீர்ந்த புனிதனூர்
சினையார் தேமாம் செந்தளிர் கோதிக் குயில்கூவும்
நனையார் சோலைசூழ்ந்தழகாய நறையூரே. (உ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
முனை	யுத்தத்திலே	போழ்பட	இருகூறும்படி
ஆர்	பொருத்தமுடைய	ஈர்ந்த	பிளந்த
சீயமாகி	நரஸிம்ஹமாய்க் கொண்டு	புனிதன் ஊர்,	பரிசுத்தனுடைய
அவுணன்	ஹிரண்யாஸுரனுடைய	குயில்	குயில்களானவை
முரண்	பலிஷ்ட்டமான	சினை ஆர்	கருவடைந்த (தழைத்திருந்துள்ள)
மார்வம்	மார்பை,		
புனை	சேர்ந்திருக்கிற	தேமாம்	தேமாமரங்களுடைய
வாள்	ஒளியையுடைய	செம்தளிர்	சிவந்த தளிர்களை
உகிரால்	நகங்களினால்	கோதி	கொந்தி

(க) கீ-கசு-கச.

கூவும்	கூவாநின்றதாய்,	சூழ்ந்த	சூழப்பட்டு
நனைஆர்	அப்போதலர்ந்த பூக்கள் நிறைந்ததான	அழகாய	தர்ஶநீயமாயிருந்துள்ள
சோலை	பொழில்களாலே	நறையூர்	(௨)

வ்யா.—இரண்டாம்பாட்டு. (முனையாரித்யாதி) பூசலென்னப் பணைக்கும் நாஸிம்ஹமாய், முனையில் அநபிபவநீயனான ஹிரண்யனுடைய வரபலத்தாலே பூண்கட்டின திண்ணியமார்வை, அழகுக்குச் சேர்ந்தாப்போலே, ஒளியையுடைத்தாய் தர்ஶநீயமாயிருக்கிற திருவுகிராலே இரண்டு கூறும்படி கீண்டு பொகட்டு, ஆஶ்ரிதனுக்கு ப்ரதிஜ்ஞாஸமகாலத்திலே உதவினானென்கிற சுத்தியையுடையவன் வர்த்திக்கிறதேசம். ஆளிட்டந்தி தொழுகையன்றிக்கே தானே கைதொட்டுப் போக்கினசுத்தியை யுடையவன். (சினையாரித்யாதி) தழைத்திருந்துள்ள தேமாக்களிலே மதுபாநத்தைப்பண்ணின குயில்களானவை, ரஸாந்தரத்தை யிட்டு அத்தை மாற்றுகைக்காக அதினுடைய தளிர்களைக்கோதி,முக்தர்ஸாமகாநம் பண்ணுமாபோலேயிருந்து கூவாநிற்கும். (நனையாரித்யாதி). செவ்விப்பூமாறாதே என்றும் நித்யவஸந்தமான பொழிலாலே சூழப்பட்டு தர்ஶநீயமான திருநறையூர். நனை - பூமொட்டு. ... ... (௨)

அரு—இரண்டாம்பாட்டு (முனையாரித்யாதி) கீழ்ப்பாட்டில்- காதாசித்கமாக அஹங்கரிக்கும் தேவப்ரக்ருதிகளானவர்களுக்கு உதவினமை யருளிச்செய்து, அதிலுங் காட்டில்கொண்டாடும்படி கேவலம் ஆஸுரப்ரக்ருதி வயிற்றிலே பிறந்தவன்தன் பேர் சொன்னமாத்ரத்திலே ஸமயத்திலே இரண்டுபடியாலே வந்து உதவினான்என்கிற குணத்தை யருளிச்செய்கிறாரென்று ஸங்கதி.

“முனையார்” என்றத்தை * அவுணபதத்திலும் அநுஷங்கித் தருளிச்செய்கிறார் (பூசலித்யாதி). புனை - தொடையாய், சேர்ந்திருக்கிற, வாள் - காந்தியாதல், அழகாதல் சப்தார்த்தமாக்கி யருளிச்செய்கிறார் (அழகுக்கித்யாதி). அழகுக்கு என்றது - உபலக்ஷணமாய், ஒளிக்கும் அழகுக்கும் என்றபடி. ஒளி- காந்தி. தர்ஶநீயம் - அழகாயிருக்கை. “புனிதன்” என்றதுக்கு இரண்டு தாத்பர்ய மருளிச்செய்கிறார் (ஆஶ்ரிதனுக்கித்யாதி). (௨)

மூ.—ஆனைப் புரவித் தேரொடு காலாளணிகொண்ட
சேனைத் தொகையைச் சாடி யிலங்கை செற்றானார்
மீனைத்தழுவி வீழ்ந்தெழும் மள்ளர்க் கலமர்ந்து
நானப்புதலி லாமை யொளிக்கும் நறையூரே (௩)

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஆனை	யானைகளும்	வீழ்ந்து	(பின்பு அதினால் தள்ளுண்டவர்களாய்க்) கீழேவிழுந்து
புரவி	குதிரைகளும்	எழும்	(பின்னும் அதைப்பிடிக்க வாசையினால்)எழுந்திராநின்ற
தேரொடு	ரதங்களோடுகூட	மள்ளர்க்கு	உழவர்களுக்கு
காலாள்	காலாள்களுமாக	அலமர்ந்து	பயந்து
அணிகொண்ட	விந்யாஸ விசேஷத்தையுடைத்தான	நானம்	மஞ்சளினுடைய
சேனைத்தொகையை	ஸேநாஸமூஹத்தை	புதவில்	தூற்றில்
சாடி	துகைத்து (அழித்து)	ஆமை	ஆமையானது
இலங்கை	லங்காநகரத்தை	ஒளிக்கும்	மறையாநின்ற
செற்றான் ஊர்,	அழித்தவனுடைய	நறையூர்.	(௩)
மீனை	மத்ஸ்யத்தை		
தழுவி	(பிடிப்பதற்காக இரண்டு கைகளாலும்) அணைத்து,		

வ்யா.—மூன்றாம்பாட்டு. (ஆனையித்யாதி) ராவணனுடைய படையெழுச்சியை அந்தக்ரமத்திலே பேசுகிறார். மலைகள் நடந்தாப்போலே யானைகளைப் புறப்படவிட்டு, அநந்தரம் குதிரைகளைவிட்டு, அநந்தரம் தேர்களாலே அலங்கரித்து, இவை இந்தனைக்கும் காவலாகக் காலாளைப் புறப்படவிட்டு. இப்படிப்பட்ட ஸேநாஸமூஹத்தைத் துகைத்துக் கழித்து லங்கையை அழியச்செய்த தசரதாத்மஜன் வர்த்திக்கிறவூர். (மீனையித்யாதி) நிலப்பண்பாலே சில மலைகள்போலே யாய்த்து மத்ஸ்யங்கள் வளர்ந்திருக்கும்படி; அத்தைப்பிடிக்கிறவர்கள், இரண்டுகையாலுமாகத் தழுவுவர்கள்; அவை பின்னையும் இவனைத்தள்ளா உதறிப்போம்; அதிலேவிழுந்த இவன் திரியவும் சாபலத்தாலே பிடிக்கக் கணிசிக்கும்; இத்தைக்கண்ட ஆமையானது தானஞ்சி வரம்பிலேநின்ற மஞ்சள் பற்றையிலே புக்கு மறையும். நானம்-மஞ்சள். அன்றியே கருமுகையும் பிச்சியுமாய் நின்ற செடியிலேபுக்கு மறையும். மள்ளர் என்று - உழவர். ... ... (௩)

அநு.—மூன்றாம்பாட்டு. (ஆனையித்யாதி) கீழ்ப்பாட்டில் - ஆச்ரிதனுக்கு உதவினமை யருளிச்செய்தார்; இப்பாட்டில் - உதவினதும் பிராட்டிக்கு உதவினாப்போலே இடீர் என்கைக்காக, பிராட்டிக் குதவினபடியை யருளிச்செய்கிறாரென்று ஸங்கதி.

"சேனை" என்றபோதே, ஆனைமுதலானவை இராதோ, விசேஷிப்

பானென்னென்ன வருளிச்செய்கிறார் (ராவணனித்யாதி). க்ரமந்தன்னைக் காட்டுகிறார் (மலைகளித்யாதி). "சாடி" என்றதினர்த்தம் (துகைத்து) என்றது. "அல்மார்ந்து" என்றதினர்த்தம் (அஞ்சி) என்றது. "புதலில்" என்றதினர்த்தம் (பற்றையிலே) என்றது; தூற்றிலேஎன்கை. ... (௩)

மூ.—உறியார் வெண்ணெயுண் டுரலோடும் கட்டுண்டு
வெறியார் கூந்தல் பின்னை பொருட்டான் வென்றானூர்
பொறியார் மஞ்ஞை பூம்பொழில் தோறும் நடமாட
நறுநாண்மலர்மேல் வண்டிசைபாடும் நறையூரே. (௪)

பதம்.	உரை.	பதம்.	உரை.
உறி	உறிகளிலே	பொறிஆர்	புள்ளிகளை யுடைத்தான (நாநாவர்ணமான)
ஆர்	நிறைய சேமித்துவைத்த		
வெண்ணெய்	நவநீதத்தை		
உண்டு	அமுதுசெய்தும்,	மஞ்ஞை	மயில்களானவை
உரலோடு	உரலோடுசேர்த்து	பூபொழில் தோறும்	பூக்களை யுடைத்தான சோலைகளெங்கும்
கட்டுண்டும்	(யசோதையினால்) கட்டப்பட்டும்,	நடமாட	கூத்தாடா நிற்பதாய்,
வெறிஆர்	பரிமள ப்ரசுரமான	வண்டு	வண்டுகளானவை
கூந்தல்	குழற்கற்றையை யுடைய	நறு	பரிமள ப்ரசுரமாய்
		நாள்	அப்போதலர்ந்த
பின்னைபொருட்டு	நப்பின்னைப் பிராட்டிக்காக	மலர்மேல்	தாமரைப்பூக்களிலே
ஆன்	(ஏழு) ருஷபங்களை	இசைபாடும்	(அவற்றினுடைய நர்த்தநத்துக்கு ஒத்ததான) காநத்தைப்பாடாநிற்கும்
வென்றானூர்,	ஜயித்து அழித்தவனுடைய	நறையூர்.	

(௪)

வ்யா.—நாலாம்பாட்டு. (உறியாரித்யாதி). உறியிலே கள்ளக்கயிறு உருவிச் சேமித்துவைத்த வெண்ணெயை "தெய்வம் கொண்டதோ?" என்னும்படியாய்த்து அமுதுசெய்தது; "இது இவனை யொழியப்போகாது" என்று உரலோடே சேர்த்துக்கட்டுவர்கள்; அநுகூலஸ்பர்ஶமுள்ள த்ரவ்ய மொழியச்செல்லாமையாலே கட்டுண்டிருக்கும்; இரண்டுக்கும் †வாசியற்றிருக்கிறபடி. (வெறியாரித்யாதி) பரிமளம் மிக்குள்ள திருக்குழலையுடைய நப்பின்னைப் பிராட்டிக்காக ருஷபங்களேழையும் அழியச்செய்தவன் வர்த்திக்கிறதேசம். (பொறியாரித்யாதி) பரப்பு மாறப்பூத்த பொழில்களின்மேலே நாநாவர்ணமான மயில்களானவை ஆலியாநிற்கும். (நறுநாணித்யாதி) செவ்வித்

---

† "அத்தோடு இவ்வோடு" என்று சிலகோசங்கள்.

"Forwarded Free of Cost, & with the Compliments of the Department of Education, Government of India, New Delhi

தாமரைப்பூவிலே மதுபானார்த்தமாக இழிந்த வண்டுகளானவை, அவற்றினுடைய காலுக்கு இசையப் பாடாநிற்கும். ... ... (௪)

அநு.—நாலாம்பாட்டு (உறியித்யாதி) கீழ் மூன்றுபாட்டிலும் - இஷ்டப்ராவண்யமும் அநிஷ்ட நிவ்ருத்தியும் அருளிச்செய்தாராய், இப்பாட்டில், அதுக்கநுகுணமான ஆஶ்ரிதகரஸ்பர்ஶமல்லாமல் செல்லாதபடியான ஸௌசீல்யத்தை அநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

உறியானது, ஆர் - பூர்ணமாக, முன்புபோலிருக்கும்படியாக என்னாக்கியருளிச்செய்கிறார் (உறியிலே யித்யாதி). "உண்டு" என்று இரண்டிடத்தில் போக்ய(भोग्य)தையைச் சொன்னதுக்குத் தாத்பர்யம் (அநுகூலேத்யாதி). (வாசியற்றிருக்கிறபடி) என்றது-வெண்ணெயுண்கையோடு கட்டுண்கையோடு வாசியில்லை என்கை. (ஆலியாநிற்கும்) கூத்தாடாநிற்கும்.

மூ.—விடையேழ் வென்று மென்றோளாய்ச்சிக் கன்பனாய்
நடையால் நின்ற மருதம் சாய்த்த நாதனூர்
பெடையோடன்னம் பெய்வளையார் தம் பின்சென்று
நடையோடியலி நாணி யொளிக்கும் நறையூரே. (௫)

பதம்.	உரை.
ஏழ்விடை	ஏழுவ்ருஷபங்களையும்
வென்று	ஸம்ஹரித்து,
மென்தோள்	ம்ருதுவான புஜங்களையுடைய [திறத்தில்
ஆய்ச்சிக்கு	நப்பின்னைப்பிராட்டி
அன்பனாய்	அன்பையுடையனு
நின்ற	வழியிலேநின்ற[மாய்,
மருதம்	மருதமரத்தை [லே
நடையால்	தவழ்கிற நடையினா
சாய்த்த	விழத் தள்ளினவனு
நாதன்	ரக்ஷகனுடைய [மான
ஊர்,	
அன்னம்	ஹம்ஸங்களானவை

பதம்.	உரை.
பெடையோடு	(தன்) பேடையோடு
பெய்	செறிந்த [கூடி
வளையார்தம்	வளைகளையணிந்த பெண்களுடைய
பின்சென்று	பின்னேபோய்
நடையோடு	(அவர்கள்) நடையை அநுஸரித்து
இயலி	ஸஞ்சரித்து,(அப்படி நடக்கப் போகாமையாலே)
நாணி	லஜ்ஜித்து
ஒளிக்கும்	மறையாநின்ற
நறையூர்.	(௫)

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (விடையித்யாதி) ம்ருதுஸ்வபாவமான தோளழகையுடைய நப்பின்னைப் பிராட்டிக்காக ருஷபங்களேழையு மழியச்செய்தானாய்த்து அவளுடைய பக்கல் ப்ரேமத்தாலே. (நடையித்யாதி) தவழுகிற நடையாலே அஸுராவேசத்தாலே போராதேநின்ற மருதுகளை வேரோடே பறிந்துவிழும்படி சாய்த்த ஸர்வ

நாயகன் வர்த்திக்கிறதேசம். (பெடையித்யாதி) அன்னமானது பேடையோடேகூட, அங்குத்தை ஸ்த்ரீகளுடைய நடையழகைக் கண்டு, தானுமப்படியே நடக்கைக்காகப் பின்செல்லும்; அந்நடையழகு தனக்கு வாராமையாலே லஜ்ஜித்து அருகே ஒதுங்காநிற்கும். … … … … … … … (௫)

அரு. — அஞ்சாம்பாட்டு (விடையித்யாதி). நப்பின்னைக்காக ஆன்வென்றதுக்கு ஹேதுகதநமுகேந, உரலோடு கட்டுண்டபின்பு மருதுகளை முறித்தானாகையாலே, ஆஶ்ரிதர் கயிற்றாலே கட்டுண்டிருக்கச்செய்தேயும் விரோதி நிரஸநம் செய்தானென்கைக்காக அத்தை யநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

“ பெய்வளையார்தம் - நடையோடியலி - பின்சென்று - நாணி ” என்று அந்வயமாய், “இயலி” என்றது - இசலி என்றாய், தாத்பர்யமருளிச்செய்கிறார் (அன்னமித்யாதி). … … … … (௫)

மூ·—பகுவாய் வன்பேய் கொங்கை சுவைத்தாரு யிருண்டு
புகுவாய் நின்ற போதகம் வீழப் பொருதானூர்
நெகுவாய் நெய்தல் பூமது மாந்திக் கமலத்தின்
நகுவாய் மலர்மேலன்ன முறங்கும் நறையூரே. (௬)

பதம்.	உரை.
பகுவாய்	பெரியவாயையுடையளாய்
வன்	க்ரூர ஹ்ருதயத்தையுடையளான
பேய்	பேயான பூதனையுடைய
கொங்கை	ஸ்தநத்தை
சுவைத்து	உண்டு
ஆர் உயிர்	அருமையான (அவளுடைய) ப்ராணனை
உண்டு	க்ரஸித்தும்,
புகுவாய்	(உள்ளே) ப்ரவேசிக்கத்தக்க வழியிலே
நின்ற	இருந்த
போதகம்	குவலயாபீடமானது

பதம்.	உரை.
வீழ	நசித்துவிழும்படி
பொருதான்	யுத்தம்பண்ணினவனுமானவனுடைய
ஊர்,	
நெகுவாய்	அலர்ந்தவாயையுடைய
நெய்தல்பூ	கருநெய்தல் பூக்களிலே
மது	தேனை
மாந்தி	பாநம்பண்ணி,
நகுவாய்	விகஸியாநின்ற வாயையுடைய
கமலத்தின்	தாமரையினுடைய
மலர்மேல்	பூக்களிலே
அன்னம்	ஹம்ஸங்களானவை
உறங்கும்	கண்வளராநின்ற
நறையூர்.	

(௬)

வ்யா.—ஆறாம்பாட்டு. (பகுவாயித்யாதி) வடிவில் பெருமைக்குத் தகுதியான பெரியவாயையுடையளாய், இவன் கிட்டிவரச்செய்

தேயு மிரங்காதபடியான நெஞ்சில் வன்மையை யுடையளா யிருக்கிற பூத்னையினுடைய முலையையுண்டு, அவ்வழியாலே அவளுடைய ப்ராணனைமுடித்து. (புகுவாயித்யாதி) புகுகிறவழியிலே நிறுத்தினானாய்த்து குவலயாபீடத்தை; - ப்ரயாதத்தாலே விளைந்ததாய், தான் மாதுலனைக் கண்ணநீரை விழவிட்டு து:க்கங்கொண்டாடுவானாக, மலை முறிந்து விழுந்தாப்போலே அது விழும்படி பொருத ஆண் பிள்ளை வர்த்திக்கிறதேசம். (நெகுவாயித்யாதி) கட்டவிழுகிற நெய்தற்பூவிலே மதுபாநத்தைப் பண்ணிக் கழியவலர்ந்த தாமரைப்பூவைப் படுக்கையாகக் கொண்டு அதிலேபோய்ச் சாயுமாய்த்து. (௯)

அரு.—ஆரும்பாட்டு. (பகுவாயித்யாதி) கீழ் மரங்களை முறித்தவளவன்றிக்கே திருவாய்ப்பாடியிலும் திரு மதுரையிலும் முந்துறச்செய்த அதிமாநுஷ சேஷ்டிதங்களை அநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

இத்தால், சைசவதசையோடு கௌமாரதசையோடு வாசியில்லை இவனுடைய விரோதி நிரஸநசீலதை யென்கை. பகு-ப(ப)ஹு, அதாவது-பெருமையாய், இவன் ஸ்வாபாவிகாகாரத்தைப் பற்றவென்று திருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிறார் (வடிவிலித்யாதி). நகுகை - சிரிக்கையாய், அலருகையாய், அருளிச்செய்கிறார் (கட்டவிழுகிறவித்யாதி). "மாந்தி" என்றதினர்த்தம் (பாநத்தைப் பண்ணி) என்றது. ... ... (௯)

மூ.—முந்துநூலும் முப்புரிநூலும் முன்னீந்த
அந்தணாளன் பிள்ளையை யந்நான்றளித்தானூர்
பொந்தில்வாழும் பிள்ளைக்காகிப் புள்ளோடி
நந்துவாரும் பைம்புனல் வாவி நறையூரே. (௭)

பதம்	உரை.	பதம்	உரை.
முந்து	பழையதான (அபௌருஷேயமான)	ஊர்,	
நூலும்	வேத சாஸ்த்ரத்தையும்	புள்	பக்ஷிகளானவை
முப்புரிநூலும்	யஜ்ஞோபவீதத்தையும்	பொந்தில்	மரத்தின் பொந்துகளில்
முன் ஈந்த	முன்னேகொடுத்த	வாழும்	வஸியாநின்ற
அந்தணாளன்	ஸாந்தீபநியினுடைய	பிள்ளைக்காகி	குட்டிகளின் ஆஹாரத்துக்காக
பிள்ளையை	புத்ரனை	ஓடி	நெடுந்தூரம்சென்று
அந்நான்று	கடல்கொண்ட அக்காலத்தில்	நந்து	நத்தைகளை
அளித்தான்	மீட்டுக்கொடுத்தவனுடைய	வாரும்	திரட்டாநின்றதாய்
		பை புனல்	தெளிந்தநீரையுடைய
		வாவி	தடாகங்களையுடையதான
		நறையூர்.	

(௭)

வ்யா.—ஏழாம்பாட்டு. (முந்துநூலித்யாதி) முன்பே பழக அபௌருஷேயமாய்ப் போருகிற 'வேதாக்ஷரராசியையும் வேதாத்யயநத்துக்கு அதிகாரத்தை யுண்டாக்கிக்கொடுக்கிற உபநயநாதி ஸம்ஸ்காரத்தையும் பண்ணிக்கொடுத்த, அந்தணனுண்டு - ஸாந்தீபநி, ‡(அவனுடைய)புத்ரனைக் கடல்கொள்ள,அவனை மீட்டுக்கொடுத்தவன் வர்த்திக்கிறதேசம். இழந்தாரிழவுகள் தீர்க்குமவன் வர்த்திக்கிறதேசம். (பொந்தில்வாழுமித்யாதி) மரத்தின் பொதும்பிலே வர்த்திக்கிற பிள்ளைக்கு ப(ஃ)க்ஷ்யம்தேடிப் புள்ளானது கழியப்போய்ச் சங்குகளை வாருமாய்த்து அதுக் களவானவற்றைத் தேடிக்கொடுக்கிறதேமென்று. நந்துஎன்று - நத்தைக்குப்பேர். ... ... (எ)

அரு.—ஏழாம்பாட்டு. (முந்தித்யாதி) திருமதுரையில் புகுந்து ஆனையைவென்ற வளவேயோ? செத்தவனை உடம்போடே கொடுத்த அகடிதகட(ஃம்)நாஸமர்த்தன் என்று ஸர்வசக்தித்வத்தை அநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

(ஸாந்தீபநி) என்ற வநந்தரம், அவன், என்று கூட்டுவது. அந்நான்று - அக்காலத்திலே என்றாய், பலித மருளிச்செய்கிறார் (கடலித்யாதி).

மூ.—வெள்ளைப் புரவித் தேர்விசயற்காய் விறல் வியூகம்
விள்ளச் சிந்துக் கோன்விழ ஊர்ந்த விமலனூர்
கொள்ளைக் கொழு மீனுண் குருகோடிப் பெடையோடும்
நள்ளக் கமலத் தேறலுகுக்கும் நறையூரே. (அ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
வெள்ளைபுரவி	வெள்ளைக்குதிரைகள் பூட்டின	கொள்ளை	ஸம்ருத்தமாய்
தேர்	தேரையுடைய	கொழு	வளர்த்தியையுடைய
விசயற்காய்	அர்ஜுநனுக்காக,	மீன்	மத்ஸ்யங்களை
விறல்	பலிஷ்ட்டமான	உண்	புஜியாநின்ற
வியூகம்	ஸேநாஸமூஹமானது	குருகு	நாரையானது
விள்ள	சிந்நபிந்நமாம்படி யாகவும்	ஓடி	சென்று
சிந்துக்கோன்	ஸிந்து தேசாதிபதியான ஜயத்ரதன்	பெடையோடும்	(தன்) பேடையோடு கூட
விழ	நசிக்கும்படி யாகவும்	நள்ளம்	செறிந்த (இதழையுடைய)
ஊர்ந்த	(தேரை) நடத்தின	கமலம்	தாமரைப்பூவில்
விமலன்	பரிசுத்தனுடைய	தேறல்	தேனை
ஊர்,		உகுக்கும்	பாநம்பண்ணாநின்ற
		நறையூர்.	

(அ)

---

‡ குண்டலிதபதம் அரும்பதத்துக்குச் சேராது.

வ்யா—எட்டாம்பாட்டு. (வெள்ளைப்புரவி யித்யாதி) வெள்ளைக் குதிரைபூண்ட தேரையுடைய, விசயனுக்காய் - அர்ஜுநனுக்காக, பெரிய மிடுக்கையுடைத்தான கையு மணியுமாக வகுத்துக் கொடுவருகிற ஸேநாஸமூஹமானது முடிந்து போம்படியாகவும், ஜயத்ரதன் தலை அறுப்புண்ணும்படியாகவும், ஆஶ்ரிதனுடைய ப்ரதிஜ்ஞாஸமகாலத்திலேவந்து உதவின ஓரத்தை யுடையவன் வர்த்திக்கிறதேசம். (கொள்ளைக்கொழுமீனித்யாதி) அதுதான் ஸம்ருத்தமாய்ப் பெரிய வளர்த்தியை யுடைத்தாயிருக்கிற மத்ஸ்யத்தை புஜித்த குருகு பேடையோடேகூடச் செருக்குக்குப் போக்குவிட்டுப்போய், செறிந்த இதழையுடைத்தாயிருக்கிற தாமரைப்பூவிலே நிறைந்திருக்கிற தேனை உகுக்குமாய்த்து. ... ... (௮)

அரு.—எட்டாம்பாட்டு. (வெள்ளையித்யாதி) கீழ் - ஸர்வசக்தித்வத்தை அருளிச்செய்து, இப்படி சக்தனானவன் ஆஶ்ரிதனுக்குக் கையாளான ஸௌலப்யத்தை அநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

“வியூகம்” வ்யூஹமாய், அருளிச்செய்கிறார் (கையுமித்யாதி). “விள்ள” என்றதினர்த்தம் (முடிந்து) என்றது. “சிந்து” - ஸிந்து தேசத்துக்கு, “கோன்” ராஜாஎன்றாய், அதினர்த்தம் (ஜயத்ரதன்)என்றது. (அதுதான்) அந்தக் குருகுதான். ... ... (௮)

மூ.—பாரையூரும் பாரந்தீரப் பார்த்தன்றன்
தேரையூரும் தேவதேவன் சேருமூர்
தாரையூரும் தண்டளிர் வேலி புடைசூழ
நாரையூரும் நல்வயல்சூழ்ந்த நறையூரே. (௯)

பதம்.	உரை.	பதம்.	உரை.
பாரை	பூமியிலே	தண் தளிர்	குளிர்ந்த தளிர்களையுடையதுமான
ஊரும்	நடமாடாநின்ற	வேலி	(அரணாக இட்ட) வேலியாலே [தாய்,
பாரம்	பா(ரு)ரமானது	புடைசூழ	சுற்றும் சூழப்பட்ட
தீர	கழியும்படியாக	நாரை ஊரும்	நாரைகள்ஸஞ்சரியாநின்ற [லே
பார்த்தன்தன்	அர்ஜுநனுடைய [ற	நல்வயல்	அழகிய கழனிகளா
தேரை ஊரும்	ரதத்தைநடத்தாநின்	சூழ்ந்த	சூழப்பட்டதுமான
தேவதேவன்	தேவாதிதேவன்		நறையூர். (௯)
சேரும்	சேர்ந்து நித்யவாஸம் பண்ணாநின்ற ஊர்,		
தாரை ஊரும்	(தேனின்)தா(ரு)ரை வழியாநின்றதாய்,		

வ்யா. — ஒன்பதாம்பாட்டு. (பாரையூரு மித்யாதி) பொறுக்கமாட்டாதபடியா யிருக்கிற பூமியினுடைய பா(𑌭)ரமானது போம்படியாக, அர்ஜுநனுடைய தேரை நடத்தி,(௧) “𑌤𑌮𑍀𑌶𑍍𑌵𑌰𑌾𑌣𑌾𑌂 𑌪𑌰𑌮𑌂 𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌮𑍍 - தமீஶ்வராணாம் பரமம் மஹேஶ்வரம்” என்கிற தன் மேன்மை கிடக்கச்செய்தே, ஆஶ்ரிதனுக்காகத் தாழநின்று ஸாரத்யம் பண்ணினவன் வந்து வர்த்திக்கிறதேசம். (தாரையூரு மித்யாதி) பூவைத் தோற்பிக்கும்படியான தளிரையுடைத்தான வேலியாலே சூழப்பட்டதென்னுதல்; தாரை யென்று நினைக்கிறது-தா(𑌧)ரையாய், அத்தாலே - தேனொழுகாநின்றுள்ள வேலி என்னவுமாம். (நாரையூருமித்யாதி) நாரைகளினுடைய ஸஞ்சாரத்தை யுடைத்தாய் அழகிய வயலாலே சூழப்பட்ட திருநறையூர். ... ... (௯)

அரு.—ஒன்பதாம்பாட்டு (பாரையித்யாதி) கீழ்ப்பாட்டில் - ஜயத்ரதவதம் சொன்னாராய், அநந்தரத்தில் நடந்ததாய் க்ருஷ்ணாவதாரத்துக்கு ப்ரதாந ப்ரயோஜநமான பூபா(𑌭𑍂𑌭)ர நிரஸநத்தை யருளிச்செய்கிறாரென்று ஸங்கதி.

பாரை - பாரிலே, ஊராநிற்கிற, பாரம் - ஸ்வாமித்ரோஹிகளான பாரம் தீர என்றாய், தாத்பர்ய மருளிச்செய்கிறார் (பொறுக்கவித்யாதி). தாரை-பூவை, ஊரும்- தள்ளும் என்றும், தாரை-தா(𑌧)ரை, ஊரும்-ஒழுகுமென்றும் இரண்டர்த்த மருளிச்செய்கிறார் (பூவைய்யித்யாதி). ... (௯)

மூ.—தாமத்துளப நீண்முடி மாயன் தான்நின்ற
நாமத்திரள் மாமாளிகை சூழ்ந்த நறையூர்மேல்
காமக்கதிர்வேல் வல்லான் கலிய னொலிமாலை
சேமத்துணையாம் செப்புமவர்க்குத் திருமாலே. (௧௦)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பதம்.	உரை.	பதம்.	உரை.
துளபம்	திருத்துழாயினாலே கட்டப்பட்ட	நின்ற	நித்யவாஸம் பண்ணும்தாய்;
தாமம்	மாலையினா லலங்கரிக்கப்பட்டும்	நாமம்	ப்ரஸித்தமாய்
நீண்	நீண்டுமிருக்கிற	திரள்	நெருங்கியிருக்கிற
முடி	கிரீடத்தையுடைய	மா மாளிகை	பெரிய க்ருஹங்களினாலே
மாயன்	ஆஶ்சர்யபூதனான ஸர்வேஶ்வரன்	சூழ்ந்த	வ்யாப்தமானதாக,
		நறையூர்மேல்	திருநறையூர் விஷய

---

(௧) ஶ்வேதாஶ்வ-௬.

பதம்.	உரை.
காமம் கதிர்	மிக்க ஒளியையுடைய
வேல்	வேலாயுதத்தை
வல்லான்	பிடிக்கவல்லரான
கலியன்	ஆழ்வார்
ஒலி	அருளிச்செய்த
மாலை	சப்த ஸந்தர்ப்பமான இப்பத்துப் பாசுரங்களையும்
செப்புமவர்க்கு	அப்ப்யஸிக்குமவர்களுக்கு
திருமால்	ஸ்ரிய:பதியானவன்
சேமம்	எப்போதும் ரக்ஷகனான
துணை ஆம்	ஸஹாயபூதனுக ஆவான். (க0)

வ்யா. — பத்தாம்பாட்டு. (தாமத்துளபமித்யாதி) திருத்துழாய் மாலையாலே அலங்க்ருதமாய், ஆதிராஜ்ய ஸூசகமான திருவபிஷேகத்தை யுடையனாய், ஆஸ்சர்யமான குணசேஷ்டிதங்களை யுடையனானவன் வந்து வர்த்திக்கிறதேசம். (நாமந்திரளித்யாதி) "இன்னமாளிகை" "இன்னமாளிகை" என்கிற ப்ரஸித்தியையுடைத்தான், நெருங்கின ஒக்கத்தை யுடைத்தான மாளிகைகளாலே சூழப்பட்ட திருநறையூரிலே அருளிச்செய்தது. (காமக்கதிரித்யாதி) அழகிய புகரை யுடைத்தான. காமம் என்று - ப்ரகாமமாய், அத்தால் நினைக்கிறது - மிகுதியாய், மிக்க புகரையுடைய வேலைக் கையிலே யுடைய திருமங்கையாழ்வார் ஒலியுடைத்தாகச் சொன்னமாலை செப்பவல்லார்க்கு. (திருமால்- சேமத்துணையாம்) இவனை அடைகொடு பாழ்போக்குகையன்றிக்கே, இவனுடைய ரக்ஷணத்தை முடியத் தலைக்கட்டிக் கொடுக்கும்படியான துணையாம். (க0)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

அரு. — பத்தாம்பாட்டு. (தாமமித்யாதி) துணையாம் என்ன வமைந்திருக்க, "சேமம்" என்று விசேஷிப்பானென்னென்ன வருளிச்செய்கிறார் (இவனை யித்யாதி). அதாவது - பாணஸுராதிகள் கையிலே உபஹாரங்களைக்கொண்டு, "துணையாகிறேன்" என்று சொல்லி, முதுகுகாட்டி விட்டோடி, கரம் கழியவிட்ட கபாலியைப்போலன்றிக்கே, ஆஸ்ரிதனை நழுவவிடாதவனென்கை. ... (க0)

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஆறும்பத்தில் அஞ்சாந்திருமொழி முடிந்தது.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஆறாம்பத்து ஆறாந்திருமொழி

அம்பரம்ப்ரவேசம்.

* * *

வ்யா. — ஆஶ்ரித விரோதி நிரஸநசீலனானவன் வந்து நிற்கிற தேசம் திருநறையூரென்று அநுஸந்தித்தார்; நமக்கு அந்தஸ்நேஹமுமின்றிக்கே, தாந்த(ட ந்)ருமன்றிக்கே யிருக்கிற நாம் ஆஶ்ரயிக்கும்படி எங்ஙனே! என்கிற, திருவுள்ளத்தைக்குறித்து, தான் துர்மாநியுமாய் ஸ்நேஹமு மின்றிக்கே யிருக்கிற ராஜாதான், ஶ்ரீ மார்க்கண்டேய பகவானைப்போலே தேவதாந்தர பஜநம்பண்ணி அங்கு தன்னுடைய அபிமதம் தலைக்கட்டிக்கொள்ளப் பெறாமையாலே இங்கேவந்து பக்நா(ஃ ஈ௨)பிமாநனைத் திருவடிகளிலே விழுந்தாஶ்ரயித்து ஐஹிகாமுஷ்மிகங்களிரண்டையும் பெற்றுப்போனான்; ஆனபின்பு திருநறையூரை ஆஶ்ரயியென்று திருவுள்ளத்தைக் குறித்தருளிச்செய்து பரோபதேச ப்ரவ்ருத்தராகிறார். நம்பி ஒரு வாள்கொடுத்தருள, அத்தைக்கொண்டு பூமியையடையத் தன் காலின்கீழே இட்டுக்கொண்டானென்றொரு ப்ரஸித்தி யுண்டாய்த்து. ... ... *

அரு.—அம்பரத்தின்ப்ரவேசம்.—கீழ் திருவுள்ளத்தைக் குறித்தருளிச்செய்தவர் இப்போது கேவல பரோபதேசம் பண்ணுகைக்கு ஸங்கதி காணாமையாலே, பரோபதேச முகத்தாலே திருவுள்ளத்துக் கருளிச்செய்கிறாரென்று ஸங்கதி யருளிச்செய்கிறார் (ஆஶ்ரிதேத்யாதி). .. *

மூ.—அம்பரமும் பெருநிலனும் திசைகளெட்டும்
அலைகடலும் குலவரையு முண்டகண்டன்
கொம்பமரும் வடமரத்தி னிலைமேல் பள்ளி
கூடினான் திருவடியே கூடகிற்பீர்
வம்பவிழும் செண்பகத்தின் வாசமுண்டு
மணிவண்டு வகுளத்தின் மலர்மேல்வைகு
செம்பியன்கோச் செங்கணான் சேர்ந்த கோயில்
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே. (௧)

பதம்.	உரை.
அம்பரமும்	ஆகாசத்தையும்
பெரு	பரந்த
நிலனும்	பூமியையும்
எட்டுத்திசைகளும்	எட்டுத் திக்குக்களையும்
அலை	அலைமோதாநின்ற
கடலும்	ஸமுத்ரத்தையும்
குலவரையும்	குலபர்வதங்களையும்
உண்ட	அமுதுசெய்த
கண்டன்	கண்ட(ஹ)த்தை யுடையனாய்,
அமரும்	ஸம்ருத்தமான
கொம்பு	கிளைகளையுடைய
வடமரத்தின்	ஆலமரத்தினுடைய
இலைமேல்	தளிரின்மேலே(ப்ரளயகாலத்தில்)
பள்ளி கூடினான்	கண்வளர்ந்தருளினவனான ஸர்வேஶ்வரனுடைய
திருவடி	ஶ்ரீபாதங்களை
கூடகிற்பீர்	பெறவேணுமென்றிருப்பவர்களே!
மணி	அழகிய
வண்டு	வண்டுகளானவை
வம்பு	பரிமளத்தை
அவிழும்	புறப்பட விடாநின்ற
செண்பகத்தின்	செண்பகப்பூவி லுண்டான
வாசம்	பரிமளத்தை
உண்டு	அநுபவித்து(பின்பு)
வகுளத்தின் மலர்மேல்	மகிழம்பூவின்மேலே
வைகு	தங்காநிற்பதாய்,
செம்கணான்	சிவந்தகண்களையுடையனாய்
செம்பியன்	செம்பியனென்ற பெயரையுடையனான
கோ	(சோழ) ராஜா
சேர்ந்த	வாஸம்பண்ணுமதாய்,
மணி	ரத்நங்களிழைத்த
மாடம்	க்ருஹங்களை யுடையதான
திருநறையூர் கோயில்	திருநறையூரென்னும் திவ்யதேசத்தை
சேர்மின்கள்	அடைந்து நித்யவாஸம் பண்ணுங்கள்.

வ்யா.—முதற்பாட்டு. (அம்பரமுமித்யாதி). ஆகாசத்தையும், பரப்பையுடைத்தான பூமியையும், திக்குக்களெட்டும், க்ஷோபத்தையுடைத்தான கடலையும், பூமிக்காணி யடித்தாப்போலே யிருக்கிற குலபர்வதங்களையும் அமுதுசெய்த கண்ட(ஹ)த்தையுடையவன். (கொம்பமரு மித்யாதி) தழைத்த கொம்பையுடைத்தான ஆலமரத்தி னிலையிலே கண்வளர்ந்தருளின அக(ஹ)டித கடநா ஸாமர்த்த்யத்தையுடையவன் திருவடிகளைப் பெறவேண்டியிருப்பீர்! (வம்பவிழு மித்யாதி) பரிமளத்தைப் புறப்படவிடுகிற செண்பகத்தி லுண்டான பரிமளத்தை புஜித்து, அத்தாலே நரைதிரைமாறி, அச்செண்பகத்தி லுண்டான வெக்கையை மாற்றுமாய்த்து மகிழம்பூவிலே படிந்து. செம்பியன்கோச் செங்கணானென்று - அவன்றனக்குப் பேர். இத்தால்

சொல்லிற்றாய்த்தென் னென்னில்; அவனுடைய அகடிதகட(கட)நா ஸாமர்த்யத்தோடே இந்த வண்டுகள் மகிழம்பூவிலே படிந்த இத்தோடு வாசியற உத்தேஶ்யமா யிருக்கிறதாய்த்திவர்க்கு அவ்வூரி லுள்ளதாகையாலே. ... ...(க)

அரு.—முதற்பாட்டு. (அம்பரமித்யாதி) "மணி" என்று - அழகாய், அதினர்த்தம் (நரைதிரைமாறி) என்றது; கிழத்தனம் தீர்ந்தென்றபடி. செம்பியன்கோ - சோழராஜா. செங்கணான் - சிவந்த கண்ணையுடைய. செண்பகத்தில் போன வண்டு மரித்துப் போமித்தனை போக்கி நரைதிரை மாறி வரக்கூடுமோ என்னும் சங்கையிலே, வண்டுகளாவார் - அவ்வூரிலவர்களாய், அவர்கள் வர்ஜ்ஜநீயமான ப்ராக்ருத போக(க)ங்களை புஜித்தும் ஸ்வரூபநாசம் பிறவாதே பகவத் போகத்தாலே அத்தால் வந்த வெக்கையை யாற்றி யிருப்பார்களென்னும் ஸ்வாபதேசத்திலே கருத்தாக்கி, ஆனால் அது இவர்க்கு உத்தேஶ்யமோஎன்னும் சங்கையைப் பரிஹரிக்கிறார் (இத்தாலித்யாதி). (இந்த வண்டுகள்) செண்பகத்தில் படிந்த வண்டுகள். (இத்தால்) திவ்யதேசவாஸத்தாலே, நம்பெருமாள் (க) "செய்தாரேல் நன்று செய்தார்" என்றிருக்கு மவராகையாலே, அவர்களுக்கு ஸ்வரூபநாசம் வாராமையால் இவர்க்கு உத்தேஶ்யராகத் தட்டில்லை என்கை. (க)

மூ.—கொழுங்கயலாய் நெடுவெள்ளங் கொண்ட காலம்
குலவரையின் மீதோடி யண்டத்தப்பால்
எழுந்தினிது விளையாடு மீசனெந்தை
இணையடிக் கீழினிதிருப்பீ ரினவண்டாலும்
உழும்செறுவில் மணிகொணர்ந்து கரைமேல் சிந்தி
உலகெல்லாம் சந்தநமு மகிலும் கொள்ள
செழும்பொன்னி வளம் கொடுக்கும் சோழன் சேர்ந்த
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே. (உ)

பதம்.	உரை.
நெடு	பெருகிவாராநின்ற
வெள்ளம்	ப்ரளயார்ணவ மானது
கொண்ட	(மூழ்த்தின) (பூமியை) ஆக்ரமித்த
காலம்	காலத்தில்
கொழு	பருத்த (ப(ப)லிஷ்டமான)
கயலாய்	மத்ஸ்ய ரூபியாய்க் கொண்டு

பதம்.	உரை.
குலவரையின்	குலபர்வதங்களுடைய
மீது ஓடி	மேலேபோய் ஸஞ்சரித்து,
அப்பால்	அதுக்குமேலே.
அண்டத்து	அண்டபித்தியளவும்
எழுந்து	கிளம்பி (துள்ளி)
இனிது	ஸுகமாக

(க) பெரி-திரு-௪-௯-௨.

விளையாடும்	ஸ்வைரஸஞ்சாரம் பண்ணாநின்ற
ஈசன்	ஸ்வதந்த்ரனாய்
எந்தை	எம்ஸ்வாமியானவனுடைய
இணை	ஒன்றோடொன்று ஸத்ருசமான
அடிக்கீழ்	திருவடிகளின்கீழே
இனிது	ஸுகமாக
இருப்பீர்	இருக்க விருப்பமுள்ளவர்களே!
இனம்	கூட்டமாகத் திரண்ட
வண்டு	வண்டுகளானவை
ஆலும்	நர்த்தநம் பண்ணாநிற்பதாய்,
செழு	அழகிய
பொன்னி	திருக்காவேரியானது,
உழும்	உழாநின்ற
செறுவில்	கழனிகளுடைய
கரைமேல்	வரம்புகளின்மேலே
மணி	ரத்நங்களை
கொணர்ந்து	திரட்டிக்கொண்டுவந்து
சிந்தி	சிதறத்தள்ளியும்,
உலகெல்லாம்	ஸகல ஜநங்களும்
சந்தனமும்	சந்தநமரங்களையும்
அகிலும்	அகில் கட்டைகளையும்
கொள்ள	எடுத்துக்கொள்ளும்படியாக
வளம்	ஸம்ருத்தியை
கொடுக்கும்	தருமதுமாய்,
சோழன்	சோழநாட்டரசன்
சேர்ந்தகோயில்	திருநறையூர். (௨)

வ்யா.—இரண்டாம்பாட்டு. (கொழுங்கயலித்யாதி) மிக்க ஜலமானது பூமியையடையக்கொண்ட காலம்; கொழுவிதான - த்ருடமான கயலாய், குலவரைக்குமேலே போய் அண்டபித்தி யளவும் செல்லத்† துள்ளி ஸ்வைரமாக லீலாரஸமநுபவிக்கும் ஸ்வதந்த்ரன். (எந்தையித்யாதி) வகுத்த ஸ்வாமியானவன் திருவடிகளை யாஶ்ரயித்து ஆநந்த நிர்ப்பரராயிருக்க வேண்டியிருப்பீர்! இனவண்டு - திரண்ட வண்டுகளானவை, ஸஸம்ப்ரம ந்ருத்தம்பண்ணா நிற்பதாய், உழுகிற செய்களில் வரம்பிலே மணிகளைக்கொடுவந்து சிதறாநிற்பதாய், லோக மடங்கலும் அகிலையும் சந்தநத்தையும் கொள்ளை கொள்ளும்படியாக, தர்ஶநீயமான பொன்னியானது ஸம்ருத்திகளைக் கொடுவந்து கொடுக்கிற திருநறையூரென்று ஊருக்கு விசேஷணமாதல்; அன்றிக்கே, சோழன்றனக்கு விசேஷணமாதல். அவனுடைய விலாஸ சேஷ்டிதத்தோடு, காவிரியினுடைய ஸ்வைர ஸஞ்சாரத்தோடு வாசியற இவர்க்கு உத்தேஶ்யமாயிருக்கிறது காணும் அங்குள்ளதாகையாலே.

அரு.—இரண்டாம்பாட்டு. (கொழுங்கயலித்யாதி) கீழ்ப்பாட்டில் ப்ரளயத்திலே வடதளத்திலே கண்வளர்ந்ததை அநுஸந்தித்தாராய், இதில் - அந்த ப்ரளய ஜலத்திலே துள்ளி விளையாடும் மத்ஸ்யாவதாரத்தை அநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

---

† (பா.) துளம்பி.

(சோழன்றனக்கு) என்றது - சோழமண்டலத்தை யுடைய ராஜாவுக்கென்றபடி. (அவனுடைய) மத்ஸ்யாவதாரத்தினுடைய. ... (௨)

மூ.—பவ்வநீருடையாடை யாகச் சுற்றிப்
பாரகலம் திருவடியாப் பவனம் மெய்யா
செவ்வி மாதிரமெட்டும் தோளா வண்டம்
திருமுடியா நின்றான்பால் செல்லகிற்பீர்
கவ்வைமா களிறுந்தி விண்ணியேற்றக்
கழல் மன்னர் மணிமுடிமேல் காகமேறத்
தெய்வவாள் வலங்கொண்ட சோழன் சேர்ந்த
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே. (௩)

பதம்.	உரை.	பதம்.	உரை.
சுற்றி	(பூமியைச்) சூழ்ந்திருக்கிற	செல்லகிற்பீர்	கிட்டவேண்டியிருப்பவர்களே! [தாய்
பவ்வம்	ஸமுத்ரத்தினுடைய	கவ்வை	ஆரவாரத்தையுடைய
நீர்	ஜலமானது. [க்க	மா	பெரிதான
உடை	உடுத்திக்கொள்ளத்த	களிறு	யானைகளை [து)
ஆடையாக	திருப்பீதாம்பர மாகவும்,	உந்தி	தள்ளி (அழியச்செய்
		விண்ணி	யுத்தத்திலே
பார் அகலம்	பூமிப்பரப்பெல்லாம்	ஏற்ற	எதிர்த்துவந்த [ரான
திருவடியா	திருவடியாகவும், [து	கழல்	வீரக்கழலை யுடைய
பவனம்	வாயு(ஸமூஹ)மான	மன்னர்	ராஜாக்களுடைய
மெய்யா	திருமேனியாகவும்,	மணி	மணிமய கிரீடங்களணிந்த
செவ்வி	அழகிய	முடிமேல்	தலைகளின்மேலே
எட்டுமாதிரமும்	எட்டுத்திக்குக்களும்	காகம்	காக்கைகளானவை
தோளா	புஜங்களாகவும்	ஏற	ஏறி(மாம்ஸத்தை புஜிக்கும்படியாக)
அண்டம்	அண்டபித்தியானது	தெய்வம்	ஶ்லாக்க்யமான
திருமுடியா	திருவபிஷேகமாகவும் (ஆகும்படி ஜகத்ரூபியாய்) [ரனை	வாள்	வாளாயுதத்தை
		வலம்	வலது (கையில்)
நின்றான்பால்	இருக்கிற ஸர்வேஶ்வ	கொண்ட	பிடித்தவனான

சோழன்சேர்ந்த திருநறையூர். (௩)

வ்யா.—மூன்றாம்பாட்டு. (பவ்வநீரித்யாதி) கடலில் நீரானது திருப்பீதாம்பரமாய், பூமிப்பரப்படைய திருவடிகளாய், வாயுஸ்கந்த (ஸ்டூ-ஸ்)மானது திருமேனியாகவும், அழகிய திக்குக்களெட்டும் திருத்

தோள்களாகவும், அண்ட பித்தியானது திருவபிஷேகமாகவும், இப்படி ஜகதாகாரனாயிருக்கிற ஸர்வேஶ்வரன் திருவடிகளைக் கிட்டவேண்டியிருப்பீர். (கவ்வையித்யாதி) பெரியமிடுக்கை யுடைத்தாய்க் கதறிக்கொடுவருகிற ஆனையைத் தள்ளி. (விண்ணியித்யாதி) விண்ணி என்று - யுத்தத்துக்கும், படை வீட்டுக்கும் பேர். யுத்தத்தில் வந்தெதிர்ப்பாராய் வீரக்கழலை யுடையரா யிருக்கிற ராஜாக்கள் முடிகளிலே காகமானது படியும்படியாக, ஆயுதத்தைக்கொண்டு வ்யாபரித்தானாய்த்து. அவன் ஜகதாகாரனாய் நிற்கிற நிலையோடு, இவன் யுத்தத்தில் பராக்ரமித்தத்தோடு வாசியற இவர்க்கு உத்தேஶ்யமா யிருக்கிறது காணும் அவ்வூரை ஆஶ்ரயித்து வந்த ஸம்பத்தாகையாலே.

அரு.—மூன்றாம்பாட்டு. (பவ்வமித்யாதி) ஒரு பெரியமீனாகத் துள்ளி விளையாடின வளவன்றிக்கே, பெருப் பெருத்தவை யெல்லாம் திருமேனியாம்படி யிருப்பானொருவனென்றநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

(ஸ்கந்தம்) ஸமூஹம். கவ்வை - ஆரவாரமாய், கதறுகையைச் சொல்லுகிறது.... ... ... (௩)

மூ.—பைங்கணாளரியுருவாய் வெருவ நோக்கிப்
பருவரத்தோ ளிரணியனைப் பற்றி வாங்கி
அங்கை வாளுகிர் நுதியாலவனதாகம்
அங்குருதி பொங்குவித்தா னடிக்கீழ் நிற்பீர்
வெங்கண் மா களிறுந்தி விண்ணியேற்ற
விறல்மன்னர் திறலழிய வெம்மாவுய்த்த
செங்கணான் கோச் சோழன் சேர்ந்த கோயில்
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே. (௪)

பதம்.	உரை.	பதம்.	உரை.
பை	பசுமையான	இரணியனை	ஹிரண்யாஸுரனை
கண்	திருக்கண்களையுடைய	பற்றி	பிடித்து
ஆளரி உரு	நரஸிம்ஹ ரூபியாய்க்	வாங்கி	இழுத்து [லுள்ள
வாய்	கொண்டு,	அம்கை	அழகிய திருக்கையி
வெருவ	(சத்ருக்கள்) பயப்படு ம்படியாக	வாள்	ஒளியையுடைய [னால்
		உகிர் நுதியால்	நகங்களின் நுனியி
நோக்கி	பார்த்து,	அவனது	அந்த ஹிரண்யனுடை
வர	வர(பல)த்தாலே	ஆகம்	சரீரத்தில் நின்றும் [ய
பரு	பெருத்த	அம் குருதி	அழகிய ரக்தத்தை
தோள்	புஜங்களையுடைய	பொங்குவித்தான்	வெள்ளமிடச் செய்த வனுடைய

அடிக்கீழ்	திருவடிகளின் கீழே	விறல்	மிடுக்கரான
இருப்பீர்	இருக்க ஆசையுற்றவர்களே! [ய	மன்னர்	அரசர்களுடைய
		திறல்	பலமானது
வெங்கண்	சிவந்த கண்களையுடை	அழிய	அழியும்படியாக
மா களிறு	பெரிய யானைகளை	வெம்	கடுநடையுடைய
உந்தி	தள்ளி (கிரஸித்து)	மா	குதிரைகளை
வெண்ணி	யுத்தத்திலே	உய்த்த	நடத்தாநின்ற
ஏற்ற	எதிர்த்துவந்த	செங்கணான்கோச் சோழன் சேர்ந்த கோயில் திருநறையூர். (௪)	

வ்யா. — நாலாம்பாட்டு. (பைங்கணித்யாதி) ஜாத்யுசிதமான கண்ணில் பசுமையை யுடைத்தாயிருக்கிற நரஸிம்ஹமாய், பார்த்த பார்வையிலே அஞ்சும்படியாக நோக்கி, வரபலத்தாலே திண்ணிதான தோளையுடைய ஹிரண்யன் பக்கலிலே பிற்காலியாதே சென்று கிட்டி மடியைப் பிடித்திழுத்து. (அங்கையித்யாதி) வெறும் புறத்திலே அழகியதாய், ஒளியை யுடைத்தாயிருக்கிற திருவுகிரில் ஏகதேசத்தாலே ஹிரண்யன் சரீரமானது ருதிரவெள்ளம் கொழிக்கும்படியாகப் பண்ணினவன் திருவடிகளைப் பெறவேண்டி யிருப்பீர்! (வெங்கணித்யாதி) வெவ்விய கண்ணை யுடைத்தாயிருக்கிற ஆனையைத்தள்ளி, யுத்தத்திலே வந்தெதிர்ந்த ராஜாக்களுடைய திறலழியும்படியாக, வெம்மாவுய்த்த - குதிரையை நடத்தினவன் வர்த்திக்கிறதேசம். அவன் ஆஶ்ரித விரோதிகளைப் போக்கினத்தோடு இவன் யுத்தத்தில் வ்யாபரித்தத்தோடு வாசியற உத்தேஶ்யமா யிருக்கிறது காணும் இவர்க்கு. ... ... (௪)

அரு.—நாலாம்பாட்டு. (பைங்கணித்யாதி) கீழ் - ஜகதாகாரதையை யநுஸந்தித்தார்; அதுக்கு உபயுக்தமாக எங்கும் வ்யாபித்தபடிக்கு ஜ்ஞாபகமான நரஸிம்ஹாவதாரத்தை அநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி. "ஏற்ற" என்றதினர்த்தம் (எதிர்ந்த) என்றது. ... (௪)

மூ.—அன்றுலக மூன்றினையு மளந்து வேறோ
ரரியுருவா யிரணியன தாகம் கீண்டு
வென்றவனை விண்ணுலகில் செலவுய்த்தாற்கு
விருந்தாவீர் மேலெழுந்து விலங்கல் பாய்ந்து

பொன்சிதறி மணிகொணர்ந்து கரைமேல் சிந்திப்
புலம்பரந்து நிலம்பரக்கும் பொன்னிநாடன்
தென் தமிழன் வடபுலக்கோன் சோழன் சேர்ந்த
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே. (௫)

பதம்.	உரை.
அன்று	வாமநாவதார காலத்தில்
உலகமூன்றினையும்	(த்ரிவிக்ரமனாய்) மூன்று லோகங்களையும்
அளந்து	ஆக்ரமித்தும்,
வேறு ...	விலக்ஷணமாய்
ஓர்	(பராக்ரமத்தில்) அத்விதீயமான
அரி உருவாய்	நரஸிம்ஹ ரூபியாய்க் கொண்டு
இரணியனது	ஹிரண்யனுடைய
ஆகம்	சரீரத்தை
கீண்டு	இருகூறுக்ப் பிளந்து
வென்று	ஜயித்து
அவனை	அந்த ஹிரண்யனை
விண்ணுலகில்	வீரஸ்வர்க்கத்தில்
செல உய்த்தாற்கு	செல்ல நடத்தினவனுமான ஸர்வேஶ்வரனுக்கு
விருந்தாவீர்	அதிதிகளாக வேண்டுமவர்களே!
மேல் எழுந்து	கிளர்த்தியையுடைத்தாய்
விலங்கல்	மலைகளை
பாய்ந்து	உடைத்துக்கொண்டு தாண்டிவந்து

பதம்.	உரை.
பொன்	ஸுவர்ணங்களை
சிதறி	(சுற்றும்) இறைத்து (அதுக்குமேலே)
மணிகொணர்ந்து	ரத்நங்களைத் திரட்டிக்கொண்டுவந்து
கரைமேல்	கரைகளிலே
சிந்தி	சிதறிக்கொண்டு
புலம்	வெளி நிலங்களிலெங்கும்
பரந்து	வ்யாபித்து (இப்படி)
நிலம்	பூமியெங்கும்
பரக்கும்	பரவாநின்ற
பொன்னி	திருக்காவேரிப்ரவஹியாநின்ற
நாடன்	நாட்டையுடையனாய்
தென்தமிழன்	தென்திக்கிலுள்ள தமிழ்நாட்டுக்கரசனாய்
வடபுலம்	வடநாட்டுக்கும்
கோன்	ராஜாவாய்
சோழன்	(மத்யதேசமான) சோழநாட்டுக்கும் அதிபதியானவன்

சேர்ந்த திருநறையூர். (௫)

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (அன்றுலகமித்யாதி) த்ரைலோக்யத்தையும் தன் காற்கீழே யிட்டுக்கொண்டு, நாட்டில் நடையாடாததொரு நரஸிம்ஹமாய், ஹிரண்யனுடைய சரீரத்தைக் கிழித்து வென்று. (விண்ணுலகித்யாதி) "ஸ்வஹஸ்தவத(4)த்தாலே வீரஸ்வர்க்கம் பெற்றான்" என்னக் கடவதிறே. (விருந்தாவீர்) அவனுக்கு அதிதி

வர்க்கமாய்ப் புக்கு அந்வயிப்பீர்! (மேலெழுந்தித்யாதி) கிளர்ந்துகொண்டு, நடுவே தகைந்துகொண்டு கிடக்கிற மலைகளை முறித்து, அந்த மலைகளிலும் ஸஹ்யத்திலு முண்டான பொன்களையும் மணிகளையும் கரையிலே கொடுவந்து சிந்துமாய்த்து. (புலமித்யாதி) வெளிநிலமுள்ள இடமெங்கும் பரந்து, பூமிப்பரப்படங்கலும் தானே கைக்கொள்ளுமாய்த்து. பொன்னிநாடன் பொன்னி நாட்டை யுடையவன். (தென்தமிழனித்யாதி)† ஆக, மூன்று ராஜ்யத்தையும் தானே ஆண்டானாய்த்து. அவன் பூமியை யடைய அளந்து கொண்டத்தோடு இவன் பூமியை யடையத்தானே நெருக்கி ஆண்டத்தோடு வாசியற உத்தேஶ்யமாயிருக்கிறதுகாணுமிவர்க்கு அவனை ஆஶ்ரயித்துவந்த ஸம்பத்தாகையாலே. ... ... (௫)

அரு.—அஞ்சாம்பாட்டு. (அன்றித்யாதி) கீழ் வ்யாப்திக்கு ப்ரத்யபிஜ்ஞாபகமாக த்ரிவிக்ரமாபதாநமாகையாலே இத்தையுங் கூட்டிக்கொண்டு நரஸிம்ஹாவதாரம் பின்னாட்டி அநுபவிக்கிறாரென்று ஸங்கதி.

(அதிதிவர்க்கமாய்) என்றத்தாலே - ப்ரியராவீர் என்கை. (மூன்று ராஜ்யம்) என்றது-பாண்டியதேசம் - சோழமண்டலம் ‡என்கை.... (௫)

மூ.—தன்னாலே தன்னுருவம் பயந்த தானாய்த்
தயங்கொளிசேர் மூவுலகும் தானாய் வானாய்
தன்னாலே தன்னுருவில் மூர்த்திமூன்றாய்
தானாய னாயினான் சரணென்றுய்வீர்
மின்னாடு வேலேந்து விளைந்த வேளை
விண்ணேறத் தனிவேலுய்த் துலகமாண்ட
தென்னாடன் குடகொங்கன் சோழன் சேர்ந்த
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே. (௬)

பதம்.	உரை.
தன்னாலே	ஸ்வேச்சையாலே
தன்உருவம்	தன் திவ்ய விக்ரஹத்தை
பயந்த	ஸ்ருஷ்டித்த
தானாய்	திவ்யாத்ம ஸ்வரூபத்தை யுடையனாய்,

---

† "தென்தமிழன் - தென்மண்டலத்தில் ராஜா; வடபுலக்கோன் - வடதேசத்தில் ராஜா; புலம் - பூமியாய், தேசபரம். சோழன் - சோழமண்டலத்தில் ராஜா. ஆக, மூன்றுதேசம்" என்ற அரும்பதாந்தரம்.

‡ இங்கு ஒரு தேசவாசகபதம் லேகக ப்ரமாதத்தினால் விட்டுப்போச்சுது.

தயங்கு ஒளி சேர்	மிக்க ஒளியை யுடைத்தான [யும்	உய்வீர்	உஜ்ஜீவிப்பவர்களே!
		மின் ஆடு	ஒளிநடையாடாநின்ற
மூவுலகும்	மூன்று லோகங்களை	வேல் ஏந்து	வேலைத்தரித்த
தானாய்	தனக்கு நிர்வாஹ்யமாக வுடையனாய்,	விளைந்தவேளை	விளைந்த வேளென்பவனை
வானாய்	பரமபதத்துக்கு நிர்வாஹகனாய்,	விண் ஏற	வீரஸ்வர்க்கத்தை யடையும்படியாக
தன்னாலே	தன் ஸங்கல்பத்தாலே	தனி	ஒருகால்
தன்உருவில்	தன் ஸ்வரூபத்தில் நின்றும்	வேல்	வேலாயுதத்தை
		உய்த்து	ப்ரயோகித்து
மூன்றுமூர்த்தியாய்	ப்ரஹ்மவிஷ்ணு ருத்ர ரூபியானத்ரிமூர்த்திகளை யுண்டாக்கினவனாய், [யனாய்)	உலகம்ஆண்ட	லோகங்களைப் பரிபாலநம் செய்தவனாய், [ஜாவாய்,
		தென் நாடன்	தென்தேசத்துக்கு ரா
தான்	தானே (அகர்மவஸ்	குடகொங்கன்	மேற்குதேசத்திலுள்ள கொங்கு நாட்டுக்கு அரசனான
ஆயனாயினான்	க்ருஷ்ணனு மானவ [னை		
சரண் என்று உபாயமாக எண்ணி		சோழன்சேர்ந்த திருநறையூர். (௬)	

வ்யா. — ஆறும்பாட்டு. (தன்னாலே தன்னுருவமித்யாதி) (௧) "𑌅𑌨𑌨𑍍𑌯𑌾𑌧𑌿𑌪𑌤𑌿𑌃" என்கிறபடியே தன்னுடைய ஸ்வரூபாதிகளை ஸ்வாதீநமாக வுடையனாகையாலே இதர விஸஜாதீயனா யுள்ளவன். தன்னுடைய ஸ்வரூபஸ்த்தித்யாதிகள் தானிட்ட வழக்காம்படி யிருக்குமவனாய்த்து ஈஶ்வரனானவன். (தயங்கொளியித்யாதி) க்ருதகம் அக்ருதகம் க்ருதகாக்ருதகம் என்று மூன்றுவகையாகச் சொல்லப்படுகிற லீலாவிபூதி யடையத்தானிட்ட வழக்காக வுடையனாய்; தன்னதென்னுமத்தாலே, மிக்க ஒளியை யுடைத்தாய்க்கொண்டு அசைந்து வருகிற-பளபளத்து வருகிற, மூவுலகு மென்னுதல்; அன்றிக்கே, தயங்கொளிசேர் மூர்த்தியென்று - வடிவுக்கு விசேஷணமாதல். (தன்னாலே யித்யாதி) அந்த லீலாவிபூதியினுடைய ஸ்ருஷ்ட்யாதிகளுக்கு அநுரூபமான மூன்று வடிவையுடையனாய், ஸ்வேந ரூபேண நின்று பாலநத்தைப் பண்ணியும், ப்ரஹ்ம ருத்ராதிகளுக்கு அந்தராத்மாவாய் நின்று ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களை நடத்தியும், இப்படி மூன்று கார்யத்துக்கு மீடான மூன்று வடிவையு முடையனாய். (தானாயவித்யாதி) இப்படிப்பட்ட தான், லீலாவிபூதியிலே தன்னுடைய விபூதி பூதரிலே சிலர் "இவனென்னக்கு மகன்" என்றபிமாநிக்கும்

---

(௧)

௧௪௨

படி க்ருஷ்ணனாய்வந்தவதரித்தவன் நமக்குப் புகலென்று உஜ்ஜீவிக்க வேண்டி யிருப்பீர்! (க) “𑌮𑌾𑌮𑍇𑌕𑌂-மாமேகம்” என்றவன் திருவடிகளையே பற்றி உஜ்ஜீவிக்கப் பார்ப்பீர்! (மின்னுடுயித்யாதி) ஒளிவர்த்தியாநின்றுள்ள வேலைக் கையிலேயுடைய விளைந்த வேளாகிற குறும்பனை வீரஸ்வர்க்கத்தேறப் போம்படி ஏகப்ரயோகத்திலே வேலை நடத்தி, ஜகத்தை யுடையத் தானிட்ட வழக்காம்படி நிர்வஹித்த ராஜாவானவன் கிட்டி ஆஶ்ரயித்த திருநறையூர். (தென்னாட னித்யாதி) பாண்டியநாட்டையும் மேல்கொங்கையும் கொண்ட சோழன் சேர்ந்த. ஸர்வேஶ்வரனுடைய ஜகதாகாரதையோடு இவன் மூன்று ராஜ்யத்தையும் நிர்வஹித்ததோடு வாசியற உத்தேஶ்யமா யிருக்கிறதாய்த்து அவ்வூரை ஆஶ்ரயித்து வந்ததாகையாலே. ... (௬)

அரு.—ஆறாம்பாட்டு. (தன்னுலே யித்யாதி) கீழ் - மூன்று லோகத்தையும் காற்கீழிட்டுக்கொண்டபடி சொல்லி, அத்தாலே மூன்று லோகமும் தன்னுளன் என்னும்படி வ்யாப்தி புதுக்கணித்தமை அநுஸந்தித்திருக்கக்காலி, உபய விபூதி நிர்வாஹகன் க்ருஷ்ணன் என்று நின்றுகொண்டு அவனை யநுபவிக்கிறாரென்று ஸங்கதி.

விவரணம் (தன்னுடைய வித்யாதி). (உடையனாய்) என்றவநந்தரம், “வானாய் - நித்ய விபூதியை யுடையனாய்” என்று சேஷம். தாத்பர்யமருளிச்செய்து, சப்தார்த்தம் (தன்னதென்னு மித்யாதி). “குடக்கு” என்றது-குடதிசையாய், அதினர்த்தம் (மேல்) என்றது. (௬)

மூ.—முலைத்தடத்த நஞ்சுண்டு துஞ்சப் பேய்ச்சி
முதுதுவரைக் குலபதியாக் காலிப்பின்னே
இலைத்தடத்த குழலூதி யாயர்மாதர்
இனவளை கொண்டானடிக் கீழெய்த கிற்பீர்
மலைத்தடத்த மணிகொணர்ந்து வையமுய்ய
வளங்கொடுக்கும் வருபுனலம் பொன்னிநாடன்
சிலைத்தடக்கைக் குலச்சோழன் சேர்ந்த கோயில்
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே. (௭)

பதம்.	உரை.	பதம்	உரை.
பேய்ச்சி	பூதனையானவள்	தடம்	பெருத்த
துஞ்ச	முடியும்படியாக	முலை	(அவள்) முலையிலுள்ள
		நஞ்சு	விஷத்தை

(க) கீதை-௧௮-௬௬. ௧௧௨௮-வது பக்கத்தில் அரும்பதத்தில் “வ்யாப்திக்கு ப்ரத்யபிஜ்ஞாபகமாக” இத்யாதிபங்க்தி; “வ்யாப்திக்கு ப்ரத்யபிஜ்ஞாபகம் த்ரிவிக்ரமாவதாரமுமாகையாலே” என்றிருக்கவேணும்.

உண்டு	அமுது செய்தவனாய்,
முது	ப்ராசீநமான
துவரை	த்வாரகைக்கு
குலபதியாய்	நிர்வாஹகனாய்,
காலிப்பின்னே	பசுக்களின் பின்னே
தடம்	பெரிய
இலைக்குழல்	இலையாலே செய்யப்பட்ட குழலை
ஊதி	ஊதிக்கொண்டு போனவனாய்,
ஆயர் மாதர்	இடைப்பெண்களுடைய
வளை இனம்	வளைமுதலிய ஆபரணங்களை
கொண்டான்	(லீலார்த்தமாக) அபஹரித்தவனுடைய
அடிக்கீழ்	திருவடிகளின் கீழே
எய்தகிற்பீர்	கிட்டி ஆஶ்ரயிக்க விரும்புமவர்களே!

மலைத்தடத்த	மலைகளின் தாழ்வரைகளிலேயுண்டான
மணிகொணர்ந்து	மணிகளைத் திரட்டிக்கொண்டுவந்து
வையம் உய்ய	லோகமெல்லாமுஜ்ஜீவிக்கும்படி
வளம் கொடுக்கும்	ஸம்ருத்தியைக் கொடாநின்றுள்ள தாய்,
வரு	பெருகிவாராநின்ற
புனல்	ஜலத்தையுடையதாய்
அம்	ஸுந்தரமான
பொன்னி	திருக்காவேரியையுடைய
நாடன்	நாட்டுக்கு அதிபதியாய்,
சிலை	வில்லை
தடம் கை	பரந்த கையிலே ஏந்தினவனாய்,
குலம்	க்ஷத்ரிய வம்ஶ்யனான
சோழன் சேர்ந்த கோயில். (௭)	

வ்யா.—ஏழாம்பாட்டு. (முலைத்தடத்த வித்யாதி) பூதனை முடியும்படி அவளுடைய வடிவுக்குத் தக்க பெரியமுலையை யுண்டு, (முதுதுவரை யித்யாதி) ஶ்ரீமத் த்வாரகைக்கு நிர்வாஹகனாய், பசுக்களின் பின்னே பெருக்க இலைக்குழலை ஊதிக்கொடுபோய் அவற்றை மேய்த்து, மீண்டு திருவாய்ப்பாடியிலே புகுந்து, இடைப்பெண்களுடைய வளைதுடக்கமானவற்றைக் கொண்டவன் திருவடிகளை ஆஶ்ரயித்து உஜ்ஜீவிக்கவேண்டியிருப்பீர்! (மலைத்தடத்த மணியித்யாதி) மலைத் தாழ்வரைகளிலுண்டான ரத்நங்களைக் கொடுவந்து பூமியுடைய உஜ்ஜீவிக்கும்படி ஸம்ருத்தியைத் தள்ளாநின்றுள்ள, ஜலஸம்ருத்தியையுடைத்தாய் தர்ஶநீயமான பொன்னிநாட்டையுடையவன்; (சிலைத்தடக்கை யித்யாதி) பெரிய ஆண்பிள்ளையானவன் அவ்வாண்பிள்ளைத்தனத்தை நிர்வஹித்துக் கொடுக்கைக்காக ஆஶ்ரயிக்கிற தேசம். ...(௭)

அரு.—ஏழாம்பாட்டு. (முலையித்யாதி) கீழ்ப்பாட்டில் - ஆயன் ப்ரஸ்துதனாகையாலே, அவனுடைய சேஷ்டிதங்களை அநுபவிக்கிறாரென்று ஸங்கதி.

“பேய்ச்சி - துஞ்ச - தடம் - முலைத்ததான நஞ்சையுண்டு” என்று அந்வயித் தருளிச்செய்கிறார் (பூதனை யித்யாதி). முதுமை- பழமையாய், ப்ரதித்வாரகையை வ்யாவர்த்திக்கிற தென்று விவக்ஷித் தருளிச்செய்கிறார் (ஸ்ரீமதித்யாதி). ... ... (எ)

மூ.—முருக்கிலங்கு கனித்துவர்வாய் பின்னை கேள்வன்
மன்னெல்லாம் முன்னவியச் சென்று வென்றிச்
செருக்களத்துத் திறலழியச் செற்றவேந்தன்
சிரந்துணித்தான் திருவடி நும் சென்னி வைப்பீர்
இருக்கிலங்கு திருமொழி வாயெண்டோ ளீசற்கு
எழில்மாட மெழுபது செய்துலக மாண்ட
திருக்குலத்து வளச்சோழன் சேர்ந்த கோயில்
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே. ... (அ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
முருக்கு	முருக்கம்பூப்போலே	நும்சென்னி	உங்கள் தலைகளிலே
இலங்கு	விளங்காநிற்பதாய்	வைப்பீர்	வைத்துக்கொள்ள ஆ
கனி	கோவைப்பழம்		சையுற்றவர்களே!
	போலே	இருக்கு	ருக்குக்களாலே
துவர்	சிவந்திருப்பதான	இலங்கு	விளங்காநின்ற
வாய்	அதரத்தையுடைய	திருமொழி	சிறந்த சொல்லான பு
பின்னை	நப்பின்னைப் பிராட்		ருஷஸூக்தத்தை
கேள்வன்	வல்லபனாய், [டிக்கு	வாய்	வாயிலே யுடையனாய்
முன்	முற் (பரசுராமாவதா		(ஸதா(ஸ) ஜபியா
	ர) காலத்தில்		நின்ற) [யனான
மன்எல்லாம்	ராஜாக்களெல்லாரும்	எண்தோள்	எட்டு புஜங்களையுடை
அவிய	நசிக்கும்படியாக	ஈசற்கு	ருத்ரனுக்கு
வென்றி	ஜயப்ரதமான	எழில்	அழகுபூண்ட
செருக்களத்து	யுத்தரங்கத்தில்	எழுபதுமாடம்	எழுபது ஆலயங்களை
சென்று	போய்		[ணி
செற்ற	சத்ருவான [னுடைய	செய்து	ப்ரதிஷ்டை பண்
வேந்தன்	கார்த்த வீர்யார்ஜுந	உலகம் ஆண்ட	லோகத்தைப் பரிபா
திறல்	பலத்தை		லநம் பண்ணினவ
அழிய	அழியச்செய்து		னாய், [ந்தவனாய்,
சிரம்	(அவன்) தலையை	திருக்குலத்து	உயர்ந்தகுலத்தில்பிற
துணித்தான்	வெட்டினவனுமான	வளம்	ஸம்ருத்தியை யுடைய
	வனுடைய		னான
திருவடி	ஸ்ரீபாதங்களை .	சோழன் சேர்ந்த கோயில்.	(அ)

வ்யா. — எட்டாம்பாட்டு. (முருக்கிலங்கித்யாதி) முருக்கம் பூப்போலேயும் விளங்காநின்றுள்ள கனிபோலேயுமிருக்கிற அதரத்தையுடைய நப்பின்னைப் பிராட்டிக்கு வல்லபன். (மன்னெல்லாமித்யாதி) ராஜலோகமடங்க வழிபோக்கிலே முடியும்படி யுத்தபூமியிலே சென்று கிட்டி.(செற்றவேந்தன் சிரம்துணித்தான்)இந்த ப்ராதிகூல்யத்துக்கு ஹேதுபூதனான ஸஹஸ்ர பாஹ்வர்ஜுநனுடைய மிடுக்கெல்லாம் போய் அவன் முடிந்துபோம்படிக் கீடாகத் தலைகளைத் துணித்த ஸர்வேஶ்வரன் திருவடிகளை உங்கள் தலைமேலே வைக்க வேண்டியிருப்பீர்! (இருக்கிலங்கித்யாதி)வேதத்தில் ஶ்ரீபுருஷ ஸூக்தாதிகளை உச்சரியா நின்றுள்ள வாயையுடையராய் எட்டுத் தோள்களையு முடையராயிருக்கிற தேவர்க்கு; தர்சநீயமான மாடங்களை எழுபதும் சமைத்துப், பின்னையும் தன்னுடைய அபிமதம் கிடையாமையாலே அவ்வபிமத ஸித்த்யர்த்தமாக அவன் வந்தாஶ்ரயிக்கிற தேசம். ரத்நாதிகளைக் கொழித்துக்கொடுவருகிற ஆற்றுவரவோடு, க்ருஷ்ணன் இடைப்பெண்களுடைய துகில்களையும் வளைகளையும் வாரிக்கொடு வருகிற வரவோடு வாசியற உத்தேஶ்யமா யிருக்கிறபடி சொல்லிற்று கீழ்ப்பாட்டில்; இப்பாட்டில் நப்பின்னைப்பிராட்டிக்கு வல்லபனாயிருக்கிற இருப்போடு, ஆஶ்ரித விரோதிகளை அழியச்செய்த செயலோடு வாசியற உத்தேஶ்யமா யிருக்கிறபடி சொல்லுகிறது. (௮)

அரு. — எட்டாம்பாட்டு. (முருக்கித்யாதி) கீழ்ப்பாட்டுக்கும் ஸங்கதியை மேலே இப்பாட்டிலே தாமே யருளிச்செய்கிறார்.

“மன்னெல்லாம்” என்ற பதத்தாலே - ஜாதியாகப் பகை தோற்றுகையாலே, க்ருஷ்ணாவதார விஷயமன்றென்று ஶ்ரீ பரசுராமாவதாராபதானமாக வருளிச்செய்கிறார் (ராஜேத்யாதி). செற்ற - த்வேஷியான, வேந்தனுடைய திறலழிய என்று சப்தார்த்தமா யருளிச்செய்கிறார் (இந்த வித்யாதி). தலைகள் - ராஜாக்களுடையவும் தலைகள். (தேவர்க்கு) என்றது ருத்ரனுக்கு என்றபடி. ராஜாவினுடைய அப்பொழுதையில் பூஜ்யதாபுத்தி ஸ்ப்புரிக்கைக்காக பஹுவசந ப்ரயோகமென்று கருத்து. திருக்குலத்து - க்ஷத்ரியகுல மாகையால் வந்த ஆபிஜாத்ய முடையனானவன். ஸம்பந்நனான சோழனென்றபடி. ... ... (௮)

மூ.—தாராளன் தண்ணரங்க வாளன் பூமேல்
தனியாளன் முனியாள ரேத்தநின்ற
பேராளனாயிரம் பேருடைய வாளன்
பின்னைக்கு மணவாளன் பெருமை கேட்பீர்

பாராளரவ ரிவரென்றழுந்தை யேற்றப்
படைமன்ன ருடல்துணியப் பரிமாவுய்த்த
தேராளன் கோச்சோழன் சேர்ந்த கோயில்
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே. (கூ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
தார் ஆளன்	திருமாலையினால் அலங்க்ருதனாய்	பின்னைக்கு	நப்பின்னைப் பிராட்டிக்கு
தண்	ஶ்ரமஹரமான	மணவாளன்	நாயகனானவனுடைய
அரங்கவாளன்	திருவரங்கத்தில் நித்யவாஸம் செய்யுமவனாய்,	பெருமை	அதிசயத்தை
		கேட்பீர்	கேட்க விரும்புமவர்களே!
பூமேல்	தாமரைப்பூமேல் வாஸம் செய்யாநின்ற	அவர் இவர் என்று	இன்னாரின்னாரென்று ப்ரஸித்தராய்
		பார் ஆளர்	பூமிக்கு நிர்வாஹகரான ராஜாக்கள்
தனியாளன்	(ஸ்த்ரீத்வத்தில்) அத்விதீயையான பிராட்டிக்கு வல்லபனாய்,	அழுந்தை	திருவழுந்தூரிலே (வந்து)
		ஏற்ற	எதிர்க்க,
முனியாளர்	ருஷிகளான ஸநகாதிகள்	படை	(அந்த) யுத்தத்திலே
ஏத்தநின்ற	ஸ்தோத்ரம் பண்ணும்படியாக வெழுந்தருளியிருக்கிற	மன்னர்	(அந்த) ராஜாக்களுடைய
		உடல்	சரீரமானது
		துணிய	துண்டு துண்டாம்படி
பேராளன்	பெருமையையுடையனாய்	பரிமா	குதிரைகள்
		உய்த்த	கட்டப்பட்ட
ஆயிரம்பேர் உடையவாளன்	ஆயிரம் திருநாமத்தையுடையனாய்,	தேராளன்	தேரை நடத்தினவனாய்
		கோ	ராஜாவான
		சோழன் சேர்ந்த கோயில். (கூ)	

வ்யா.— ஒன்பதாம்பாட்டு. (தாராளனித்யாதி) உபயவிபூதியினுடைய ரக்ஷணத்துக்குத் தனியாலே யிட்டிருக்கிறவன். (தண்ணரங்கவாளன்) ஜகத்ரக்ஷணத்துக் குறுப்பாகக் கோயிலே வாஸஸ்த்தாநமாகக்கொண்டிருக்கிறவன். (பூமேலித்யாதி) தாமரைப்பூவை யிருப்பிடமாக வுடையளாய், அத்விதீயமான ஸ்த்ரீத்வத்தையுடைய பெரியபிராட்டியார்க்கு வல்லபன். (முனியாளரித்யாதி) கேவலம் ப்ரஹ்மபாவ (ஞாந)நையே யாயிருக்கிற ஸநகாதிகள் ஏத்துகையால்வந்த பெருமையை யுடையவன். (ஆயிரமித்யாதி) அநுபவிப்பார்க்கு இழிந்தவிடமெங்கும் துறையாம்படியாக ஆயிரம் திருநாமங்களை யுடைய

வன். (பின்னைக் கித்யாதி) நப்பின்னைப் பிராட்டிக்கு வல்லபனானவனுடைய பெருமையைக் கேட்கவேண்டி யிருப்பீர்! (பாராள ரித்யாதி) பூமிப்பரப்புக்கடைய நிர்வாஹகராய், இன்னார் இன்னார் என்று ப்ரஸித்தரா யிருக்கிற ராஜாக்கள் ஸபரிகரராய்க் கொண்டு திருவழுந்தூரிலே வந்து எதிரிட, அவர்களுடைய உடல் துணியும்படிக் கீடாக. (பரிமாவுய்த்த தேராளன்) குதிரைபூண்ட தேரை யுடையவன். (௯)

அரு.—ஒன்பதாம் பாட்டு. (தாராள னித்யாதி) கீழே சில விபவங்களை அநுஸந்தித்தவர், ப்ரீத்யதிசயத்தாலே பரத்வாதி பஞ்சாவஸ்த்தைகளையும் ஸாதாரண ஸூசகங்களாலே அநுபவிக்கிறாரென்று ஸங்கதி யாதல்; அன்றிக்கே, "மரிக்கிலங்கு கனித்துவர்வாய் பின்னை கேள்வன்" என்ற க்ருஷ்ணாவதாரத்தையே ஸ்வாபாவிகாகாரத்தாலே கொண்டாடுகிறாரென்று ஸங்கதி யாதல்.

பஞ்சாவஸ்த்தையில் என்ற பக்ஷத்திலே, "முனியாளர்" இத்யாதியாலே வ்யூஹம் ஸூசிதம்; ஸநகாதிகளுக்கிறே முகம்கொடுப்பது; "ஆயிரம்பேர்" இத்யாதியாலே ஸர்வ சப்த வாச்யத்வத்தாலே ஸூசிதம் அந்தர்யாமித்வம் என்று கண்டுகொள்வது. ... ... (௯)

மூ.—செம்மொழிவாய் நால்வேத வாணர் வாழும்
திருநறையூர் மணிமாடச் செங்கண்மாலைப்
பொய்ம்மொழி யொன்றில்லாத மெய்ம்மையாளன்
புலமங்கைக் குலவேந்தன் புலமையார்ந்த
அம்மொழிவாய்க் கலிகன்றி யின்பப்பாடல்
பாடுவார் வியனுலகில் நமனார்பாடி
வெம்மொழி கேட்டஞ்சாதே மெய்ம்மை சொல்லில்
விண்ணவர்க்கு விருந்தாகும் பெருந் தக்கோரே. (௧௦)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

* * *

பதம்.	உரை.	பதம்.	உரை.
செம்மொழி	யாதார்த்த்ய மாகிற செம்மையையுடை	வாழும்	நித்யவாஸம் பண்ணுகின்றதாய்,
வாய்	சொற்களையுடையராய்	மணிமாடம்	மணிமயமான மாடங்களை யுடையதான
நால்வேத வாணர்	நாலுவேதங்களையும் வல்லரான ப்ராஹ்மணர்	திருநறையூர்	திருநறையூரென்னும் திவ்யதேசத்தில்

செங்கண்மாலை	சிவந்தகண்களையுடைய ஸர்வேஸ்வரன் விஷயமாக,
பொய்ம்மொழி	அஸத்ய வசநமானது
ஒன்றுஇல்லாத	சிறிதும் கலசாத
மெய்ம்மையாளன்	ஸத்ய வசநத்தை யுடையராய்,
புலம்	தர்சநீயமான
மங்கைக்குலம்	திருமங்கையி லுள்ளவர்களுக்கு
வேந்தன்	ராஜாவாய்,
புலமைஆர்ந்த	ஜ்ஞாநபூர்த்தியை யுடையதாய்
அம்மொழி	அப்படிப்பட்ட சொற்களையுடைய
வாய்	திருமுகத்தை யுடையரான
கலிகன்றி	ஆழ்வாருடைய
இன்பம்	அநுபவ ஜநிதப்ரீதியிலுண்டான
பாடல்	(இந்தப்) பாசுரங்களை
வியன்	பெருமைபொருந்திய
உலகில்	லோகத்தில்
பாடுவார்	அப்யஸிக்குமவர்கள்,
நமனார்	யமனுடைய
பாடி	தூதர்சொல்லுகிற
வெம்மொழி	க்ரூரமானசொற்களை
கேட்டு	கேட்டுக்கொண்டு
அஞ்சாதே	பயப்படாதவர்களாய்
மெய்ம்மை	(மேல்வரப்போகிற பலத்தின்)உண்மையை
சொல்லில்	சொன்னால் (அந்த பலம்,)
விண்ணவர்க்கு	நித்யஸூரிகளுக்கு
விருந்துஆகும்	ஆதரணீயரான
பெருந்தக்கோர்	பெரிய ஜ்ஞாநாதிகராவர்கள். (க0)

வ்யா.—பத்தாம்பாட்டு. (செம்மொழியித்யாதி) யதாபூதவாதிகளாய்† வேதத்துக்கு வ்யாஸபதம்செலுத்த வல்லராயிருக்கிற ப்ராஹ்மணர் வர்த்திக்கிற, தர்சநீயமான மாடங்களையுடைய திருநறையூரிலே வர்த்திக்கிற புண்டரீகாக்ஷனை ஸர்வேஸ்வரனைக் கவிபாடிற்று. (பொய்ம்மொழி யித்யாதி) அவ்வேதசப்தம்போலே யிருக்கிற சப்தத்தையுடையவர். (புலமங்கையித்யாதி) தர்சநீயமான திருமங்கைக்கு நிர்வாஹகரான திருமங்கையாழ்வார், அறிவு நிறைவெல்லாம் பேச்சிலே தோற்றும்படியான, அப்படிப்பட்ட பேச்சையுடைய ஆழ்வாருடைய, இன்பப்பாடலுண்டு - அநுபவத்துக்குப் போக்குவிட்டுச் சொன்ன பாசுரம், அத்தை (வியனுலகில் பாடுவார்) புறம்பே உண்டுடுத்துப் போதுபோக்குகிற ஸம்ஸார விபூதியிலே வ்யாவ்ருத்தராய்க்கொண்டு அதிகரிப்பார், யமபடருடைய க்ரூரமான சப்தம் கேட்டஞ்சாதே. (மெய்ம்மைசொல்லில்) மேல் பெறும்பேறிருந்தபடி சொல்லில், பரமபதத்திலேபோய், (க) "பதியினில் பாங்கினில்" என்கிற

(க) தி-வாய்-க0-௯-க0. † (பா) யதாபூதவாதியான வேதத்துக்கு.

படியே - நித்யஸூரிகள் எதிரேவந்து தந்தாமிருப்பிடங்களிலே கொண்டு புக்கு உயரவைத்துத் தாங்கள் தாழவிருந்து ஸ்ரீபாதம் விளக்கிக் கொண்டாடும்படியான பெருமையை யுடையராவர்கள். (கப)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

அரு.—பத்தாம்பாட்டு. (செம்மொழியித்யாதி) "மெய்ம்மை" என்றது ஸத்யவசநமா யிருக்கவும், "பொய்ம்மொழி யொன்றில்லாத" என்கையால் பலித (ஃபலித) மருளிச்செய்கிறார் (அவ்வேதசப்த மித்யாதி); பொய்யும் கலந்த மெய்யன்றென்கை. புலப்படும் மங்கை என்றாய் அருளிச்செய்கிறார் (தர்சநீயமான) என்று. "விருந்தாகும்" என்றதுக்குத் தாத்பர்யம் (பதியினியித்யாதி). ... ... (கo)

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஆறாம்பத்தில் ஆறாந்திருமொழி முடிந்தது.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஆறாம்பத்து ஏழாந்திருமொழி

ஆளும்ப்ரவேசம்.

வ்யா.—ராஜ்யலாபத்துக்காக ஆஸ்ரயிக்கையன்றிக்கே ஸ்வரூபாநுரூபமான வ்ருத்தியைக் கொண்டானென்னை, ஆனபின்பு, ஆபந்நரானார்க்கெல்லாம் புகல் அவனல்லதில்லை, இப்படி இருந்தபின்பு, எல்லாரும் அத்தேசத்திலே போய்ப்புக்கு அவனை அநுபவிக்கப்பாருங்கோளென்கிறார். புநஸ்ச, நான்சொன்ன ஹிதத்தில் நாட்டார்க்கு அபேக்ஷையில்லையேயாகிலும், எனக்கு ஸ்வரூபாநுரூபமான கைங்கர்யத்திலே ருசியைப் பிறப்பித்து அதுக்கு விரோதியையும் போக்கின அவனல்லது ஆபந்நரானார்க்குப் புகலில்லை, ஆனபின்பு அவன் நித்யவாஸம் பண்ணுகிற தேசமே ஆஸ்ரயணீயஸ்த்தலமென்கிறார். *

அரு.—ஆளும்ப்ரவேசம். கீழ்த்திருமொழியிலே - திருவுள்ளத்தைக் குறித்துச் சொல்லுகிற வ்யாஜேந பரோபதேச ப்ரவ்ருத்தரானபடியாலே, அவர்கள் இவ்வாழ்வாரைக் குறித்து "தேவரீர் சோழன் பணிந்தத்தை

யே பலகாலு மருளிச்செய்தீர், அவன் த்ருஷ்டார்த்தியன்றே, ஸம்ஸார பயபீதர்க்கு ஆஶ்ரயித்து அநுபவிக்கக்கூடுமோ?" என்னும் கருத்தாலே, கேவல பரோபதேசத்திலே ப்ரவ்ருத்தராகிறாரென்றும்; தம் திருவுள்ளமானது நான் கேட்டதுக்கு நம்மைக்குறித்தருளிச் செய்யாதே ஸாமாந்யமாக பரோபதேசம் பண்ணுகைக்கு அவர்கள்வந்து புகுகிறார்களோ? என்ன; மீளவும் தம் திருவுள்ளத்துக்கே அருளிச்செய்கிறாரென்றும் இரண்டு ஸங்கதி யருளிச்செய்கிறார் (ராஜ்யேத்யாதி). இப்பாட்டுக்களிலே உபயஸங்கதிக்கு மநுகுணமாக, "ஆஶ்ரயணீயன்" என்று க்ரியையை அத்யாஹரிப்பது என்று திருவுள்ளம். ... ... *

மூ.—

ஆளும்பணியு மடியேனைக் கொண்டான் விண்ட நிசாசரரைத்
தோளும்தலையும் துணிவெய்த சுடுவெஞ்சிலைவாய்ச் சரந்துரந்தான்
வேளும் சேயு மனையாரும் வேற்கணாரும் பயில் வீதி
நாளும் விழவி னொலி யோவா நறையூர்நின்ற நம்பியே. (க)

பதம்.	உரை.	பதம்.	உரை.
விண்ட	ப்ரதிகூலரான	பயில்	வாஸம் பண்ணுகின்ற
நிசாசரரை	ராக்ஷஸர்களை	வீதி	தெருக்களில்
தோளும்	புஜங்களும்	நாளும்	நித்யோத்ஸவமும்
தலையும்	தலைகளும்	விழவின்	நைமித்திகோத்ஸவங்களுடைய
துணிவுஎய்த	துண்டு துண்டாம்படியாகச் செய்து, (பின்னும்)	ஒலி	ஆரவாரமும்
		ஓவா	மாறாமலிருக்கிற
சுடு	கொளுத்தாநின்ற	நறையூர்	திருநறையூரில்
வெம்	அதிக்ரூரமான	நின்ற	எழுந்தருளியிருக்கிற
சிலைவாய்	தநுஸ்ஸில்நின்றும்	நம்பி	பூர்ணனான ஸர்வேஶ்வரன், [என்னை
சரம்	பாணங்களை		
துரந்தான்	ப்ரயோகித்தவனாய்,	அடியேனை	ஸ்வதஃ தாஸபூதனான
வேளும்	மந்மதனோடும் [ம்	ஆளும்	தாஸபூதனென்கிற புத்தியை யுடையேனாம்படி பண்ணி
சேயும்	குமாரஸ்வாமியோடு		
அனையாரும்	ஸத்ருசரான அழகிய புருஷர்களும்	பணியும்	கைங்கர்யத்தையும்
வேல்	வேல்போன்ற	கொண்டான்	ஸ்வீகரித்தான்(ஆகையால்)
கணாரும்	கண்களையுடைய ஸ்த்ரீகளும்		அவனே ஆஶ்ரயணீயன். (க)

வ்யா.—முதற்பாட்டு. (ஆளுமித்யாதி) தன் திருவடிகளுக்கு அர்ஹமான வஸ்து †தனக்குரித்தென்றிராதபடி ஆளாக ஸ்வீகரித்து,

---

† (பா) தனக்கரிதென்றிராதபடி.

அந்த ஆளானதினுடைய பல(ఫల)ரூபமான கைங்கர்யத்தையும் கொண்டான். (அடியேனை ஆளும்பணியும் கொண்டான்) முதல் தன்னிலே யோக்யமான வஸ்துவையும், அயோக்யதையயேயாய், தன்னை ஸ்வதந்த்ரனாக புத்திபண்ணி வைக்கையன்றிக்கே, பரசேஷமென்னும் புத்தியைப் பிறப்பித்தானென்கையும், அந்த சேஷத்வத்தினுடைய பல(ఫల)மான தாஸ்யத்திலே ருசியைப் பிறப்பித்தானென்கையும். (விண்டவித்யாதி) இவ்வடிமையில் பொருந்தாதபடியான ஜந்மத்தையுடைய துஷ்ப்ரக்ருதிகளை அழியச்செய்யும்படி சொல்லுகிறது. இவர்களுக்கு இன்னும் இதிலே ருசி பிறக்கக்கூடுமோ? என்று ஆந்தனையும் அவஸரம்பார்த்து நின்று (௧) "ద్విధా భజ్యేయ మప్యేవం న నమేయన్తు కస్యచిత్ - த்விதா பஜ்யேய மப்யேவம் ந நமேயந்து கஸ்யசித்" என்று அவர்கள் பொருந்தாமையிலே நிலைநின்றால், பின்னைக் கண்பாராதே அழியச்செய்யும். தோளைக் கழிப்பது, தாளைமுறிப்பது, தலையை அறுப்பதாய்க்கொண்டு சிறிதுபோது காலயாபநம் பண்ணி, பின்னை அம்பிலே அழிக்கைக்காக, காணவே எதிரிகள் குடல் குழம்பும்படியான வில்லில்நின்றும், (௨) "దీప్తపావక సఙ్కాశైః - தீப்தபாவக ஸங்காசை:" என்கிறபடியே-தொடுத்துவிடுகிறபோது அம்பாய், சத்ருசரீரங்களிலே அக்நியாய் ப்ரவேசிக்கும் அம்புகளை நடத்தினான்.

(வேளும் சேயுமித்யாதி) அத்தேசத்திலே வர்த்திப்பாரெல்லாம் போ(భో)க்தாக்களும் போக்யை(భోగ్య)களுமான ஸ்த்ரீகளுமேயாய்த்து. வடிவழகுக்குக் காமவேளையும் ஸுப்ரஹ்மண்யனையும் போலேயிருக்கும் புருஷர்களும், அவர்கள் தங்களையும் ஒருநோக்காலே அநந்யார்ஹராம்படி பண்ணவல்ல ஸ்த்ரீகளும் வர்த்தியாநின்றுள்ள. (நாளும் விழவினொலியோவா) (௩) "திங்களும் நாளும் விழாவறாத" என்கிறபடியே-நாள் திருநாளும் திங்கள் திருநாளும் மாறாதேயிருக்கிற திருநறையூரிலே நித்யவாஸம்பண்ணுகிற நம்பி-ஆளும் பணியுமடியேனைக் கொண்டான். ... ... (௧)

அரு. — முதற்பாட்டு. (ஆளுமித்யாதி) கீழ்ச்சொன்னத்தை விவரிக்கிறார் (முதலித்யாதி). இத்தால் - ஆட்கொள்ளுகைக்கும் பணிகொள்ளுகைக்கும் பேதம் சொல்லிற்றாய்த்து; தாத்பர்யார்த்தமாகவுமாம். ஆளாக

---

(௧) ரா-யு-௩௬-௧௧.
(௨) ரா-யு-௧௬-௨௨
(௩) தி-வா-௭-௩-௩.

அபிமாநித்துப் பணியைக்கொண்ட தன்றிக்கே ஜ்ஞாநவிசேஷங்களை யுண்டாக்கினானென்று கருத்து. ... ... (௧)

மூ.—

முனியாய்வந்து மூவெழுகால் முடிசேர் மன்னருடல்துணியத்
தனிவாய் மழுவின் படையாண்ட தாரார் தோளான் வார்புறவில்
பனிசேர்முல்லை பல்லரும்பப்பான லொருபால் கண்காட்ட
நனிசேர் கமல முகங்காட்டும் நறையூர் நின்ற நம்பியே. (௨)

பதம்.	உரை.
முனியாய்	பரசுராமாழ்வானாய்
வந்து	வந்தவதரித்து,
மூவெழுகால்	இருபத்தொரு கால்
முடிசேர்	கிரீடங்களை யுடையரா
மன்னர்	ராஜாக்களுடைய [ன
உடல்	சரீரமானது
துணிய	துணியும்படியாக
தனி	அஸத்ருசமான
வாய்	முகத்தை (நுனியை) யுடைய
மழு	மழுவென்கிற
படை	ஆயுதத்தை [வனாய்;
ஆண்ட	நிர்வஹித்த (உடைய)
தார் ஆர்	மாலையினால் அலங்க்ருதமான [ய்,
தோளான்	புஜங்களை யுடையனா
வார்	நீண்ட (விசாலமான)
புறவில்	பர்யந்த ப்ரதேசங்களில் [யிருக்கிற
பனிசேர்	குளிர்ந்து அழகியதா

பதம்.	உரை.
முல்லை	முல்லைப்பூவானது
பல்	(அவ்வூரில் ஸ்த்ரீகளுடைய) பற்களைப் போல்
அரும்ப	மொட்டுவிடாநிற்க,
பானல்	பானலென்னும்பூ
ஒருபால்	ஒருவகை
கண்காட்ட	(அவர்கள்) கண்களைக்காண்பியாநிற்க,
நனிசேர்	பெருமையை யுடைய
கமலம்	தாமரைப்பூவானது
முகம்காட்டும்	முகத்தைக் காட்டாநிற்பதான
நறையூர்நின்ற	திருநறையூரில் நித்யவாஸம் பண்ணுகிறவனை [யன்).
நம்பி	நம்பியே (ஆஶ்ரயணீ

முல்லை முதலியவை ஸ்த்ரீகளுடைய பற்கள் முதலியவற்றைப்போல் விளங்குகின்றன வென்றபடி. (௨)

வ்யா.—இரண்டாம்பாட்டு. (முனியாயித்யாதி) ஆந்ருசம்ஸ்யவ்ரதப்ரதாநனான ருஷியாய்வந்து. அவ்வாந்ருசம்ஸ்ய வ்ரதர்க்கும் வைதஹிம்ஸையில் கைகூச வொண்ணாதிறே. (மூவெழுகாலித்யாதி) இருபத்தொருபடிகால் க்ஷத்ரிய வம்சத்தை அறுத்துத் தூயும்படி அத்விதீயமான வாயை யுடைத்தான மழுவை ஆயுதமாக நிர்வஹித்த. (தாரார்தோளான்) ஜகத்ரக்ஷணத்துக்குத் தனிமாலை யிட்டுக்கொண்டிருக்கிறவன். (வார்புறவி லித்யாதி) நீண்ட புறவில் - பரந்த பர்யந்

தத்தில், தர்சநீயமான முல்லையானது, அங்குத்தை ஸ்த்ரீகளுடைய தந்தபங்க்தியைக் காட்ட, நெய்தலில் அவாந்தர ஜாதியான பானலானது, கண்களைக்காட்ட. (நனிசேர் வயலுள் முத்தலைக்கும்) கடல்போலே பரந்த வயலிலே முத்தானது அலையாநின்றுள்ள. அன்றிக்கே, ரீதிபேதம் பிறவாமைக்காக, (கமலம்) என்றதாகில், அவ்விரண்டுக்கும் ஆஶ்ரயமான முகத்தை, பெருத்த தாமரையானது காட்டும்.

அநு.—இரண்டாம்பாட்டு. (முனியாயித்யாதி) நிசாசரரை வென்றவளவன்றிக்கே, ராஜாக்கள் சிறிதும் அதிமாத்ரமாகக் கைவிஞ்சினால் கொல்லவல்லனென்று ஸ்ரீ பரசுராமனை அநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

ஆந்ருசம்ஸ்யத்துக்கு ஹிம்ஸை கூடுமோவென்ன வருளிச்செய்கிறார் (அவ்வாந்ருசம்ஸ்யேத்யாதி). "நனிசேர் கமலமுகங் காட்டும்" என்று பாடாந்தரமென்று அர்த்த மருளிச்செய்கிறார் (அன்றிக்கே யித்யாதி). (௨)

மூ.—

தெள்ளார் கடல்வாய் விடவாயச் சின வாளரவில் துயிலமர்ந்து
துள்ளாவருமான் வீழ வாளி துரந்தானிரந்தான் மாவலிமண்
புள்ளார் புறவில் பூங்காவி புலன்கொள் மாதர் கண்காட்ட
நள்ளார் கமலமுகங்காட்டும் நறையூர் நின்ற நம்பியே. (௩)

பதம்.	உரை.	பதம்	உரை.
தெள் ஆர்	தெளிவை யுடைத்தான (ஸ்வச்சமான)	துரந்தான்	ப்ரயோகித்தவனாய்,
கடல்வாய்	திருப்பாற் கடலில்	மாவலி	மஹாபலியிடத்தில்
விடவாய	விஷத்தை யுமிழாநின்ற வாயையுடையனாய்,	மண்	பூமியை
சினம்	(ப்ரதிபக்ஷத்தின்மேல்) கோபத்தையுடையனாய்,	இரந்தான்	யாசித்தவனாய்,
வாள்	ஒளியையுடையனான	புள் ஆர்	பக்ஷிகள் நிறைந்த
அரவில்	திருவனந்தாழ்வான் மேலே	புறவில்	பர்யந்தங்களில்
துயில் அமர்ந்து	கண்வளர்ந்தருளி, (அநந்தரம்)	பூ காவி	அழகிய செங்கழுநீர்ப் பூவானது
துள்ளாவரு	துள்ளிக்கொண்டு வாராநின்ற	புலன்கொள்	தர்சநீயமான ஆபரணங்களணிந்த
மான்வீழ	மாயா ம்ருகம் நசிக்கும்படியாக	மாதர்	ஸ்த்ரீகளுடைய
வாளி	பாணத்தை	கண்	நேத்ரங்களை
		காட்ட	காட்டாநிற்பதாய்,
		நள் ஆர்	(இதழ்) செறிவை யுடைய
		கமலம்	தாமரையானது
		முகம்காட்டும் நறையூர் நின்ற நம்பியே.	(௩)

வ்யா.—மூன்றாம்பாட்டு. (தெள்ளாரித்யாதி) தெண்மையார்ந்து திரைகொழித் தெறட்டாநின்ற கடலிலே; செந்தெங்குக்கு முள்கட்டினாப்போலே வஸ்துவின் நீர்மைக்குத் தக்கபடி ப்ரதிபக்ஷத்தின் மேலே விஷத்தை உமிழாநின்றுள்ள வாயையுடையனாய், அவர்கள்மேலே மிக்க சினத்தை யுடையனுமாய், நிரந்தர பகவதநுபவத்தால் வந்த ஒளியையுடையனுமா யிருந்துள்ள திருவநந்தாழ்வானைப் படுக்கையாகக் கொண்டு, அவன்மேலே சாய்ந்து, ராவணாதி கண்டகர் வந்து தோற்றினவாறே அப்படுக்கையை விட்டுப் போந்து அவதரித்து, அங்கே இங்கே துள்ளிவருகிற மாயாம்ருகமானது இலக்குப்பட்டு விழும்படி அம்பை நடத்தினவன். (இரந்தானித்யாதி) அவ்வம்பு கையிலே யிருக்கச்செய்தே, ஓர் இயற்றி யில்லாதாரைப்போலே, மஹாபலி பக்கலிலே சென்று மண்ணை இரந்தான். ஸாமத்துக்குச் செல்லாத விடத்திலே யாய்த்து பேதத்தி லிழிவது. (புள்ளாரித்யாதி) அன்னம் தொடக்கமான பக்ஷிகளாலே நெருங்கி யிருந்துள்ள பர்யந்தத்திலே, தர்சநீயமான செங்கழுநீரானது, ஆபரணங்களாலே அலங்க்ருதைகளா யிருந்துள்ள ஸ்த்ரீகள் கண்ணைக்காட்ட, செறிந்த இதழையுடைய தாமரைப் பூவானது அக்கண்களுக்கு ஆஶ்ரயமான முகத்தைக் காட்டாநின்றுள்ள திருநறையூர். ... ... (௩)

அரு.—மூன்றாம்பாட்டு. (தெள்ளாரித்யாதி) கீழ்ப்பாட்டில் ஶ்ரீ பரசுராமாழ்வானை அநுபவித்தவர், இரண்டிடத்திலு முண்டான ராமாவதாரத்திலும் ஶ்ரீ வாமநாவதாரத்திலும் திருவுள்ளமோடி, இவற்றுக்கெல்லாம் நாற்றங்காலான க்ஷீராப்தி நாதனை அநுபவிக்கிறாரென்று ஸங்கதி.

(தெண்மை) தெளிவு. சடல் பதவாஸனை (திரையித்யாதி). (செந்தெங்கு) செவ்விளநீர் மரம். (நீர்மைக்கு) *'ரிபூணாமபிவத்ஸலர்' என்னும்படியான வாத்ஸல்யத்துக்கு. (இயற்றி) அதிசயம். புலன்என்று - இந்த்ரியமாய், அத்தால் - அதுக்கு விஷயங்களான ஆபரணங்களைச் சொல்லுகிறது. ... ... (௩)

மூ.—

ஒளியா வெண்ணெயுண்டா னென்றுரலோ டாய்ச்சியொண் கயிற்றால்
விளியா வார்க்க வாப்புண்டு விம்மியழுதான் மென்மலர்மேல்
களியாவண்டு கள்ளுண்ணக் காமர்தென்ற லலர்தூற்ற
நளிர்வாய் முல்லை முறுவலிக்கும் நறையூர் நின்ற நம்பியே. (௪)

பதம்.	உரை.
ஒளியா	ஒளித்துநின்று
வெண்ணெய்	வெண்ணெயை
உண்டான் என்று	விழுங்கினானென்று
ஆய்ச்சி	யசோதையானவள்
விளியா	கோபித்து
ஒள்	அழகிய
கயிற்றால்	தாம்பினால்
உரலோடு	உரலோடுசேர்த்து
ஆர்க்க	கட்ட [கொண்டு
ஆப்புண்டு	கட்டுண்டவனாய்க்
விம்மி	ஏங்கி
அழுதான்	அழுதவனாய்
மெல்	ம்ருதுவான
மலர்மேல்	பூக்களிலே
வண்டு	வண்டுகளானவை
களியா	உகப்புடனே

பதம்.	உரை.
கள்	தேனை (நிஷித்த த்ரவ்யபக்ஷை)
உண்ண	பாநம்பண்ண,
காமர்	அழகிய
தென்றல்	தென்றல் காற்றானது
அலர் தூற்ற	புஷ்பங்களை இறையாநிற்க (அவ்வண்டுகளுக்குப் பழிசொல்லாநிற்க),
நளிர்	பெருமை பொருந்திய
வாய்	முகத்தையுடைய
முல்லை	முல்லைப்பூவானது
முறுவலிக்கும்	அலராநிற்பதான (மந்தஸ்மிதம் பண்ணுகின்றதான)

நறையூர் நின்ற நம்பியே. (௪)

வ்யா.—நாலாம்பாட்டு. (ஒளியாவெண்ணெ யித்யாதி) மறைய நின்று சேமித்து வைத்த வெண்ணெயை “தைவங்கொண்டது” என்னும்படியாக அமுதுசெய்து. அன்றிக்கே, மறைக்க வரிதான வெண்ணெயை அமுதுசெய்தான் என்று யசோதைப் பிராட்டியானவள் சீறி உரலோடே சேர்த்துத் திருமேனியிலே அழுந்தும்படியாகக் கயிற்றாலே நெருக்கிக்கட்ட. அன்றிக்கே, திருமேனியை ஸ்பர்சிக்கப் பெற்றது என்று “ஒண்கயிறு” என்றாராகவுமாம். (ஆப்புண்டு) அநுகூல ஸ்பர்சமுள்ள த்ரவ்யமொழியச் செல்லாமையாலே அப்படி கட்டுண்டு. நாகபாசாதிகளை யிட்டுக் கட்டிலிறே அறுத்துக் கொடு போக வல்லனாவது; அன்றிக்கே துர்யோதநாதிகள் கட்டிலாதல்; அநுகூலர் கட்டினால் போகமாட்டான்; (௧) “𑌯𑌦𑌿 𑌶𑌕𑍍𑌨𑍋𑌷𑌿 - யதிசக்நோஷி” என்றாரிறே. வங்கிபுரத்து நம்பி, பலகாலும் “திருவாராதநக்ரம மருளிச்செய்யவேணும்” என்று போருமாய், அவஸரஹாநியாலே அருளிச்செய்யாதே போந்தாராய், திருமலையிலே எழுந்தருளியிருக்கச்செய்தே, ஆழ்வானுக்கும் நம்பி ஸ்ரீஹநுமத்தாஸர்க்கும் அது தன்னை அருளிச்செய்தாராய்ச், சமைகிறவளவிலே நம்பிதோற்ற,

---

(௧) வி-பு-௫-௬-௧௫.

திருவுள்ளம் துணுக்கென்றஞ்சி, அப்போ தருளிச்செய்தவார்த்தை;- “என்றுமுள்ள இவ்ஸம்சயந்தீரப் பெற்றோமாகிறது - நியாமகனந்நியாம்யங்களிலே சிலர்க்கஞ்சிக் கட்டுண்டு அடியுண்டு அழுது நின்றான் என்றால் இது கூடுமோ என்றிருந்தோம், இரண்டு இழவுக்கும் நம்முடைய ஹ்ருதயம் அஞ்சி நொந்தபடியால் அதுவும் கூடும்” என்று. (விம்மியழுதான்) அகவாயி லோட்டத்துக்கு ஓரெல்லையில்லை யிறே. அதெல்லாம் தோற்றும்படி அதுக்குப் போக்குவிட்டு அழுதபடி. வாய்விட்டழ வொண்ணாதபடி “வாய், வாய்” என்னுமே.

(மென்மலரித்யாதி) கண்டவிடமெங்கும் பரப்புமாறப் பூத்துக் கிடக்குமிறே; அதிலே மதுபாநார்த்தமாகக் கிட்டின வண்டுகள், அத்தைக் கிட்டப்பெற்ற ஹர்ஷத்தாலே களித்து, நிஷித்த ஸேவை பண்ணுவாரைப்போலே மதுபாநத்தைப் பண்ணிற்றின. அத்தைக் கண்ட ஸ்ப்ருஹணீயமான தென்றல், நாட்டிலே பழியைத் தூற்றிற்று; அத்தைக்கண்ட முல்லை, புகுந்த ப்ரமாதத்தை அநுஸந்தித்து, அது தானப்படி செய்கிறது, இது தானிப்படி செய்யக்கடவதோ? என்று வாய்விட்டுச் சிரிக்கமாட்டாமை ஸ்மிதம் பண்ணிற்று. ... (௪)

அநு.—காலம்பாட்டு. (ஒளியாவித்யாதி) கீழே-க்ஷீரார்ணவ சாயித்வத்தை அநுஸந்தித்தாராய், (௧) “ఏషనారాయణ శ్రీమాన్ క్షీరార్ణవ నికేతనః। నాగపర్యఙ్క- ముత్సృజ్య హ్యాగతో మధురాం పురీమ్ - ஏஷநாராயண ஸ்ஸ்ரீமாந் க்ஷீரார்ணவநிகேதந:। நாகபர்யங்க முத்ஸ்ருஜ்யஹ்யாகதோ மதுராம் புரீம்” என்கிறபடியே - க்ருஷ்ணனாய்ப் பிறந்து நியாம்யனுகுணத்தில் தாம் ஆப்புண்டபடியை யருளிச்செய்கிறாரென்று ஸங்கதி.

“விளியா” என்றதினர்த்தம் (ஓறி) என்றது. அழுந்தும்படி நேரிதாயிருக்கை - ஒண்மை என்று கீழருளிச்செய்து, அர்த்தாந்தர மருளிச்செய்கிறார் (அன்றிக்கே யித்யாதி). நியாமகன் நியாம்யர்க்கஞ்சினமைக்கு ஒரு ஸம்வாத மருளிச்செய்கிறார் (வங்கிபுரத் தித்யாதி). (திருமலையிலே) என்றதுக்கு முன்னே, எம்பெருமானார் என்று கூட்டுவது; (௨) “గురోర్నామ న కీర్తయేత్ - குரோர்நாம ந கீர்த்தயேத்” என்கிற கூச்சத்தாலே அருளிச்செய்யாதொழிந்தது. (இரண்டிழவுக்கும்) என்றது - அவரபேக்ஷித்தபோது சொல்லக் கூடாமையாலும், இப்போது தானு மிவர்களோடே கூடச் சொல்லக்கூடாமையாலு முண்டான இழவுக்குமென்கை. (அதுவும்) க்ருஷ்ணனஞ்சினதுவும். இத்தால் - நியாமகரான எம்பெருமானார், நியாம்யரான வங்கிபுரத்து நம்பியைக்கண்டு, துணுக்கென்றபோதே

---

(௧) ஹரிவம்சம். (௨)

யசோதைப் பிராட்டிக்கும் க்ருஷ்ணன் துணுக்கென்னக் கூடுமென்றபடி.

"களியா" என்றதினர்த்தம் (களித்து) என்றது. வண்டு மதுபாநம் பண்ணுகிறத்தையும் தென்றல் வீசுகிறத்தையும் முல்லை அலருகிறத்தையும் கடாக்ஷித்து அருளிச்செய்யுமிடத்தில், "கள்" என்றது - தேனேயாகிலும், "அலர்தூற்ற" என்றதுக்கு-பூக்களை இறைக்கை சப்தார்த்தமாகிலும், முறுவலிக்கைக்கு விகாஸமே சப்தார்த்தமானாலும் இவற்றுக்கு ப்ரஸித்தியால் தோற்றும் த்வந்யர்த்தங்களை யருளிச்செய்கிறார் (கண்டவிடமெங்கு மித்யாதி). (அதுதான்) அந்த வண்டுதான். (இதுதான்)இந்தக் காற்றுத்தான்.

மூ.—

வில்லார்விழவில் வடமதுரை விரும்பி விரும்பா மல்லடர்த்துக்
கல்லார் திரடோள் கஞ்சனைக்காய்ந்தான் பாய்ந்தான் காளியன்மேல்
சொல்லார் சுருதி முறையோதிச் சோமுச்செய்யும் தொழிலினோர்
நல்லார் மறையோர் பலர்வாழும் நறையூர்நின்ற நம்பியே. (௫)

பதம்.	உரை.
வடமதுரை	வடதிக்கிலுள்ள ஸ்ரீ மதுரையில்
வில்ஆர்	வில்லை யுடைத்தான
விழவில்	தநுர்யாகத்திலே
விரும்பி	(போக) ஆசைப்பட்டு (அங்கே)
விரும்பா	(தன்னை) உகவாத
மல்	சாணூராதி மல்லர்களை [பு)
அடர்த்து	பொடியாக்கி, (பின்
கல் ஆர்	கல்லோடொத்த (த்ருடமான) தாய்
திரள்	திரண்டிருக்கிற [ன
தோள்	புஜங்களை யுடையனு
கஞ்சனை	கம்ஸனை
காய்ந்தான்	சீறிக்கொன்றவனாய்,
காளியன்மேல்	காளியன் தலைமேலே
பாய்ந்தான்	குதித்தவனாய்,

பதம்.	உரை.
சொல்ஆர்	(நிர்த்துஷ்டமான) சொற்களை யுடை
சுருதி	வேதங்களை [யதான
முறை	க்ரமத்திலே
ஓதி	அத்யயநம்பண்ணி,
சோமு	ஸோமயாகம் முதலியவற்றை|
செய்யும்	அநுஷ்டியாநின்ற
தொழிலினோர்	கர்மட(𑌠)ராய்
நல்லார்	விலக்ஷணரான (அநந்ய ப்ரயோஜநரான) [ர்கள்
பலர் மறையோர்	அநேகம் ப்ராஹ்மண [நின்ற
வாழும்	நித்யவாஸம் பண்ணு
	நறையூர் நின்ற நம்பியே. (௫)

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (வில்லாரித்யாதி) கம்ஸன் மாதுலனாய், "வில்விழவு" என்றொரு வ்யாஜத்தையிட்டு அழைப்பித்து, வாசலிலே ஆனையைநிறுத்தி, அது கொன்றதென்று கண்ணநீர் விழவிட்டு

துஃக்கங்கொண்டாடி யிருப்பானாகக் கோல; அத்தை அறியாதானா யிருக்கை யன்றிக்கே, அடியேதுடங்கி அவன் பண்ணிப்போருகிற ப்ராதிகூல்யத்தை அறியச்செய்தேயும், அத்தை மதியாதே, “வில்விழவுக்கு” என்று அவ்விடத்தை உகந்து புகுந்தானாய்த்து. (விரும்பாமல் லடர்த்து) உகவாத மல்லவர்க்கத்தை அழியச்செய்து. (கல்லாரித்யாதி) திண்ணிய தோளுடைய கம்ஸன் கோலின கோலுதலை அவன்றன்னோடேபோம்படி பண்ணி அவனைமுடித்து. (காளியன் மேல் பாய்ந்தான்) கம்ஸன் முதுகில் பாய்ந்தாப்போலே, காளியன் தலையில் பாய்ந்தபடி.

(சொல்லாரித்யாதி) புருஷ புத்த்யதீந மல்லாமையாலே நிர்த்தோஷமாயிருக்கிற ஶ்ருதிகளைப் பதநியமங்களோடே அதிகரித்து; கேவலாத்யயநம் பண்ணுகையன்றிக்கே அதினுடைய அநுஷ்ட்டாநத்தளவும் போருமவர்கள்; அதுதான் காதாசித்கமாயிருக்கை யன்றிக்கே அதுதானே யாத்ரையாயிருக்குமவர்கள்; அது தன்னை ஒரு பல (ஃல)த்துக்காக அநுஷ்ட்டிக்கையன்றிக்கே அநந்ய ப்ரயோஜநராய் அநுஷ்ட்டிக்கும்படியான வைலக்ஷண்யத்தை யுடையவர்கள். ...(௫)

அரு. — அஞ்சாம்பாட்டு. (வில்லித்யாதி) கீழ்ப்பாட்டில் - ஆஶ்ரித பவ்யனா யிருந்தபடியை அநுஸந்தித்தாராய், ஆஶ்ரித விரோதிகள்மேல் தானேபோய் வெல்லவல்லனென்று க்ருஷ்ணாவதாரத்திலே தானே ஆழங்கால் படுகிறாரென்று ஸங்கதி.

“முறை” என்றதினர்த்தம் (பதநியமேத்யாதி). (சோமு) ஸோமயாகமாய், அதுதான் உபலக்ஷணமென்றருளிச்செய்கிறார் (கேவலேத்யாதி). “செய்யும்” என்ற வர்த்தமாநார்த்தம் (அதுதானித்யாதி). “தொழிலினோர்” என்று நிரூபகமாகச் சொன்னதுக்குத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (அதுதன்னை யித்யாதி) ... ... (௫)

மூ.—

வள்ளி கொழுநன் முதலாய மக்களோடு முக்கணான் [தான்]
வெள்கியோட விறல்வாணன் வியன் தோள் வனத்தைத் துணித்துகந்
பள்ளி கமலத்திடைப்பட்ட பகுவாயலவன் முகம் நோக்கி
நள்ளி யூடும் வயல் சூழ்ந்த நறையூர் நின்ற நம்பியே. (௬)

பதம்.	உரை.	பதம்.	உரை.
வள்ளி	வள்ளியென்ற சண்டாள ஸ்த்ரீக்கு	கொழுநன்	வல்லபனான ஸுப்ரஹ்மண்யனை

முதலாய	ப்ரதாநனாக வுடைய
மக்களோடு	புத்ரர்களோடு கூட
முக்கணான்	த்ரிணேத்ரனான ருத்ரன் (தோற்று)
வெள்கி	வெட்கப்பட்டு
ஓட	ஓடிப்போக,
விறல்	மிடுக்கனான
வாணன்	பாணாஸுரனுடைய
வியன்	பெருத்திருந்துள்ள
தோள் வனம்	புஜங்களாகிற பெரும் காட்டை
துணித்து	சே (ச்)தித்து
உகந்தான்	ஸந்தோஷித்தவனாய்,
கமலத்து இடை	தாமரைப்பூவின் நடுவே [ய்)
பள்ளி	படுக்கைக்கு(ப் போ
பட்ட	(அங்கே) அகப்பட்டுக் கிடந்த [தான
பகுவாய்	பெரியவாயையுடைய
அலவன்	ஆண் நண்டினுடைய (புஷ்பதூளி படி
முகம்	முகத்தை [ந்த)
நோக்கி	பார்த்து
நள்ளி	பெண் நண்டானது
ஊடும்	ப்ரணயகலஹம் பண்ணாநின்ற
வயல்	கழனிகளாலே.
சூழ்ந்த	சூழப்பட்ட

நறையூர்நின்ற நம்பியே. (௬)

வ்யா.—ஆறும்பாட்டு. (வள்ளிகொழுந னித்யாதி) "வள்ளி" என்று- ஒரு சண்டாள ஸ்த்ரீக்குப்பேர்; அவளுடைய கொழுநனாய்த்து - ஸுப்ரஹ்மண்யன்; அவன் துடக்கமான புத்ராதிகளோடே கூட, (௧) "𑌅𑌵𑌿𑌨𑍀𑌤𑌭𑍃𑌤𑍍𑌯𑌵𑌰𑍍𑌗𑌃 - அவிநீதப்ருத்யவர்க்கஃ" என்னுமித்தனையிறே இங்கு. (௨) [முண்டன் நீறன் இத்யாதி] தலையைச்சிரைந்து சாம்பலைப்பூசி யிருப்பானொருவனும், அவனுடைய புத்ரர்களும், ஜ்வரங்களும், பிடாரியும், அக்நியும்,இவையடைய முதுகுகாட்டி ஓட; அத்தைக்கண்டு, † "ஸ்த்ரீப்ரதாநரானவர்களோடே யாகாதே நாம்பொர விழுந்தது" என்று லஜ்ஜித்து. [வாணனுக் கிரங்கினான்] "ஆஶ்ரயணீய ரல்லாதாரை ஆஶ்ரயித்துவந்தானத்தனை" என்று அவனுடைய தசையை யநுஸந்தித்து க்ருபை பண்ணினானாய்த்து. (முக்கணான் வெள்கியோட) ருத்ரன்தான் நோக்குவதாக ஏறிட்டுக்கொடுவந்து வாணனைக் காட்டிக்கொடுத்து, பரிகரத்தோடே லஜ்ஜித்தோட, பெருமிடுக்கனான வாணனுடைய பாஹுவநத்தை சேதித்து ஹ்ருஷ்டனானான். தேவதாந்தர பஜநத்துக்குப் பரிகரமான தோள்களைத் துணித்தான். ஒருகையாலே அஞ்ஜலிபண்ணினால் கையைத் தெறிப்பதாகச் சொல்லாநின்றதிறே.

---

(௧) (௨) தி-ச-வி-௭௧. † (பா) ஸ்த்ரீப்ராயரான.

(பள்ளி கமலமித்யாதி) "பட்ட ராருளிச்செய்யக் குறிப்பாகக் கேட்டிருப்பதொரு பாட்டு" என்றருளிச்செய்வர்;—"பகுவாயலவன் கமலத்திடைப் பள்ளிபட்டது, நள்ளியானது கர்ப்பதாரணத்தாலே கேதி(ஷீ)த்திருக்க, 'அதுக்கு இனியது இடவேணும்' என்று, மதுவுக்காகப் போந்த அலவனானது தாமரைப்பூவிலே வந்திழியக் கொள்ள, போது அஸ்தமிக்கையாலே, உடம்பைக்கொண்டு அங்கே யிங்கே புரண்டு ராத்ரி அதிலே தங்கி, அதில் தாதும் சுண்ணமும் உடம்பிலே நிழலிட்டுத் தோற்ற, போது விடிந்தவாறே வந்தது; இது போனபோதே துடங்கி, கதவைத்திறந்து வரவு பார்த்துக்கொடுநின்ற நள்ளியானது, இத்தைக்கண்டு, ராத்ரி தங்கினபடியாலும் உடம்பில் சுவடிருந்தபடியாலும் 'இது வெறுமனல்ல' என்று முகம்மாறிக் கதவையடைத்து உள்ளேபோய்ப் புக்கது." இத்தை பட்டர் அருளிச்செய்த வனந்தரம், பிள்ளை திருநறையூரரையர் "ஆராய்ந்து குற்றம் நிரம்பினால் பின்னை யன்றோ தண்டிப்பது" என்ன; "என்செய்வோம்! கேள்வியில்லாதபடி பெண்ணரசு நாடாய்த்து" என் றருளிச்செய்வர். (௯)

அரு.—ஆரும்பாட்டு. (வள்ளியித்யாதி) கீழ்ப்பாட்டில் - ஆஸுரப்ரக்ருதிகளான கம்ஸ காளியங்களை வென்றபடி சொல்லி, அவ்வளவன்றிக்கே, தேவஜாதியனான ருத்ரனையும் எதிர்த்தால் முதுகுகாட்டும்படி பண்ணினான் என்று அதி மாநுஷ சேஷ்டிதங்களை யநுபவிக்கிறாரென்று ஸங்கதி.

"மக்களோடு" என்ற த்ருதீயை - ப்ராதாந்யத்திலேயாய், மக்களை ப்ரதாநராகச் சொன்னதுக்குத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (அவிநீதேத்யாதி). எடுத்த ஸம்வாதத்துக்கு அர்த்த மருளிச்செய்கிறார் (தலையை யித்யாதி). "மோடி" என்றத்தைப்பற்ற (ஸ்த்ரீ ப்ரதாநரானவர்களோடே) என்றது இரங்கக்காரண மென்னென்ன வருளிச்செய்கிறார் (ஆஶ்ரயணீயரித்யாதி). தேவதாந்தர பஜநம் பண்ணினால் கையைத் தெறிக்கவேணுமோ வென்ன; பகவத்விஷயத்திலும் ஏக ஹஸ்தத்தாலே அஞ்ஜலிபண்ணினால் தெறிக்கவேணுமென்று சொல்லாநிற்க இதர விஷயத்தில் அஞ்ஜலிபண்ணினால் கேட்கவேணுமோ? என்று விவக்ஷித் தருளிச்செய்கிறார் (ஒரு கையாலே யித்யாதி).

குறிப்பாகக் கேட்டிருந்தபடி ஏதென்ன வருளிச்செய்கிறார் (பகுவாயித்யாதி). பகு - விஸ்த்ருதமான, வாயையுடைய, அலவன்-புருஷ நண்டு. நள்ளி - பெண்நண்டு. போது - ஸூர்யன். பரஸ்பரம் ப்ரியத்தையே நடத்து மிவற்றுக்குப் பிரிவுவர ஹேது வேறின்றியிலே யிருக்கையாலே அதுக்கு உசிதமான ஹேதுவை யருளிச்செய்கிறார் (கர்ப்பேத்யாதி).

நீலோத்பலத்திலிருந்த நள்ளிஎன்று கருதி, போது விடிந்து அதுவந்தால் இது முகுளிதமாய் (அத்தாலே கதவையடைத்து) என்றது. (பெண்ணரசு நாடாய்த்தே!) என்றது -நாய்ச்சியார் கோயில் பற்றுகையாலே, நள்ளிக்கு செவிகை விஞ்சியிருக்குமே யென்கை. .. .. (௬)

மூ.—மிடையா வந்த வேல்மன்னர் வீய விசயன் தேர் கடவிக்
குடையா வரை யொன்றெடுத் தாயர் கோவாய்நின்றான் கூராழிப்
படையான் வேத நான்கைந்து வேள்வி யங்க மாறிசை யேழ்
நடையாவல்ல வந்தணர் வாழ் நறையூர் நின்ற நம்பியே. (எ.)

8135

பதம்.	உரை.
மிடையா	நெருங்கி (கூட்டமாகக்கூடி)
வந்த	(யுத்தத்துக்கு) வந்த
வேல்	வேலாயுதத்தையுடைய
மன்னர்	ராஜாக்கள்
வீய	நசிக்கும்படி
விசயன்	அர்ஜுநனுடைய
தேர்	தேரை
கடவி	நடத்தினவனும்,
ஒன்றுவரை	கைப்பட்டதொருமலையை
குடையாவெடுத்து	குடையாகத் தூக்கி (கோகுலத்தை ரக்ஷித்து)
ஆயர் கோவாய்	(அத்தாலே) இடையர்க்கு ஸ்வாமியாக
நின்றான்	ஆனவனும்,
கூர் ஆழி	கூர்மைமிக்க திருவாழியை
படையான்	ஆயுதமாக வுடையவனும்,
நான்குவேதம்	நாலுவேதங்களையும்
ஐந்து வேள்வி	பஞ்சமஹா யஜ்ஞங்களையும்
ஆறு அங்கம்	சிக்ஷைமுதலிய ஆறங்கங்களையும்
ஏழ்இசை	ஸப்தஸ்வரங்களையும்
நடையாவல்ல	எப்போதும் நடத்த வல்லரான
அந்தணர்	ப்ராஹ்மணர்
வாழ்	நித்யவாஸம் பண்ணுகின்ற

நறையூர்நின்ற நம்பியே. (எ)

வ்யா.—ஏழாம்பாட்டு. (மிடையாவித்யாதி) துர்வர்க்கமடைய அப்பக்ஷத்தைத் திரண்டுவந்ததாய்த்து. பூமிப்பரப்படங்கலும் நெளியும்படி நெருங்கி ஸாயுதராய் வந்த ராஜாக்கள் முடிய, கையில் ஆயுதங்கொண்டு வ்யாபரிக்க ஓரவகாசமறும்படி அர்ஜுநனுடைய தேரை நடத்தி, இந்த்ரனுடைய கல்வர்ஷத்தைப் பரிஹரிக்கைக்காக கைக்கெட்டிற்றொருமலையை வர்ஷத்துக்குப் பரிஹாரமான குடையாக எடுத்து. ஒருமலையை யெடுத்தானா யிருக்கையன்றிக்கே அநாயாஸமாயிருந்தபடி. (ஆயர்கோ)அந்த இந்த்ரன் தானேவந்து கோவிந்தாபி(ஷி)ஷேகம் பண்ணும்படி இடையர்க்கும் பசுக்களுக்கும் நிர்வாஹகனாய் நின்றான். (கூராழிப் படையான்) கையிலே திருவாழியு மிருக்கச்

செய்தேயாய்த்து மலையை யெடுத்தது. "பசியிலே நலிந்தோமாகில் தானே தவிருகிறான், அவ்வளவும் நாம் நம்பரிகரத்தை நோக்குவோம்" என்று பார்த்தான்.

(வேதநான்கித்யாதி) இவையே யாத்ரையாம்படி கைவந்திருக்கிற ப்ராஹ்மணர் வர்த்திக்கிற. தங்களை நோக்குகைக்காகத் தங்களுடைய வித்யாவ்ருத்தங்களாலே அவன்றன்னையும் நோக்க வல்லவர்களாய்த்து.

அரு.—ஏழாம்பாட்டு. (மிடையாவித்யாதி). கீழ்ப்பாட்டில் - படையெடுத்துப்போய் வாணன் தோள்துணித்து முக்கண்ணனை முதுகுகாட்டின செயலைச் சொல்லிற்றாய், அவ்வளவன்றிக்கே, துர்வர்க்கமடைய எதிரிட்டவளவிலும் கையி லாயுதமின்றிக்கே வென்ற சதிரையும் மலையையெடுத்து இந்த்ரனைவென்ற படியையு மநுபவிக்கிறாரென்று ஸங்கதி.

தாத்பர்ய மருளிச்செய்து, சப்தார்த்த மருளிச்செய்கிறார் (பூமியித்யாதி). "ஒன்று" என்ற விசேஷணத்தாலே தோற்றின லகு(லஷு);தையை விவக்ஷித்துத் தாத்பர்யாந்தர மருளிச்செய்கிறார் (ஒருவித்யாதி). "(௧) *கருதுமிடம் பொருதுவருகிற திருவாழியாழ்வான் அழகுக்குடலா யிருக்கப் போமோ? மலை சுமக்கப்பண்ணி" என்னும் ப்ரஶ்நத்திலே உத்தரமாகத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (பசியிலே யித்யாதி). (நலிந்தோம்) அவனாலே நலிவுபட்டோம். (பரிகரம்) திருவாழி. (நோக்குகை) இந்த்ரன் மேல் போகாமல் பிடிக்கை. (௨) "வாழாள்பட்டு" என்கிறவிடத்திற்போலேயான வாழ்ச்சி என்று விவக்ஷித்து, "வாழ்" என்றதுக்குத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (தங்களை யித்யாதி). (தங்களை நோக்குகை) தங்கள் சேஷத்வ ஸ்வரூபத்தை நோக்குகை. (அவன்றன்னையும் நோக்குகை) மங்களாசாஸநத்தால் நோக்குகை. ... ... (௭)

மூ.—பந்தார்விரலாள் பாஞ்சாலி கூந்தல்முடிக்கப் பாரதத்துக்
கந்தார்களிற்றுக் கழல்மன்னர் கலங்கச் சங்கம் வாய்வைத்தான்
செந்தாமரைமே லயனோடு சிவனுமனைய பெருமையோர்
நந்தா வண்கை மறையோர்வாழ் நறையூர் நின்ற நம்பியே. (௮)

பதம்.	உரை.	பதம்.	உரை.
பந்து ஆர்	பந்தை (லீலார்த்தமாக) உடைய	பாஞ்சாலி	த்ரௌபதியானவள்
		கூந்தல்	(தன்) தலைமயிரை
விரலாள்	கை விரல்களை யுடையளான	முடிக்க	முடித்துக் கொள்ளுகைக்காக,

---

(௧) தி-வாய்-௧௦-௬-௮. (௨) தி-பல்-௩.

பாரதத்து	பாரதயுத்தத்திலே
கந்து ஆர்	(மதஜலத்தின்) கந்த(𑌗𑌨𑍍𑌧)த்தாலே பூர்ணமான
களிறு	யானைகளின் மேலே ஏறி வாராநின்ற
கழல்	வீரக்கழலை யுடையரான
மன்னர்	(துர்யோதநாதிகளான) ராஜாக்கள்
கலங்க	மதிமயங்கும்படி
சங்கம்	ஸ்ரீ பாஞ்சஜந்யத்தை
வாய்வைத்தான்	திருப்பவளத்திலே வைத்து ஊதினவனாய்,
செந்தாமரை மேல்	சிவந்த (திருநாபி)கமலத்தின்மேலே யுண்டான
அயனோடு	ப்ரஹ்மாவோடும்
சிவனும் அனைய	ருத்ரனோடுமொத்த
பெருமையோர்	ஸாமர்த்த்யத்தை யுடையராய்
நந்தா	அழியாத
வண்	ஔதார்யத்தையுடைய
கை	கைகளையுடையரான
மறையோர்	ப்ராஹ்மணர்

வாழ்நறையூர்நின்ற நம்பியே.

வ்யா.—எட்டாம்பாட்டு. (பந்தாரித்யாதி) பந்துகொண்டு லீலாவிநோதம் பண்ணுமதொழிய, பரிபவத்துக்கு யோக்யையல்லாத த்ரௌபதி பரிபூ(𑌭𑍂)தையாய்க் குழலைவிரித்து, “இது, என்னுடைய சத்ருக்களை யழியச்செய்து அவர்கள் தலைமேலே யிருந்தல்லது முடிப்பதில்லை” என்று ப்ரதிஜ்ஞைபண்ண; (பாரதத்தித்யாதி) ராஜாக்கள் தூசியேறின யுத்தத்திலே, கம்பத்தைமுறித்துக்கொண்டு திரிகிற மத்த கஜங்களை மேற்கொள்ளவல்லரான வீரக்கழலை யுடைய ராஜாக்கள் முழுக்காயாக அவியும்படி ஸ்ரீபாஞ்சஜந்யத்தை வாயிலேவைத்தூதினனாய்த்து.

(செந்தாமரை யித்யாதி) தனித்தனியே ஸ்ருஷ்டி ஸம்ஹாரத்துக்கு க்ஷமராய், ப்ரஹ்ம ருத்ரர்களிற்காட்டில் ஏற்றமான ஔதார்யத்தை யுடையரான ப்ராஹ்மணர் நித்யவாஸம் பண்ணுகிற. (அ)

அரு. — எட்டாம்பாட்டு. (பந்தாரித்யாதி) கீழ்ப்பாட்டில் சொன்ன பாரத ஸமரத்துக்குக் காரண மென்னென்ன வருளிச்செய்துகொண்டு, யுத்தாரம்ப ஸம்ப்ரமத்தை அநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

கந்து - கந்தமாய், மதகந்த(𑌗𑌨𑍍𑌧)த்தாலே பூர்ணமான களிறென்றாய், அதுக்குத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (கம்பத்தை யித்யாதி).

நந்தாத - நசியாமலிருக்கிற என்றாய், அருளிச்செய்கிறார். (ஏற்றமான) என்று. ... ... (அ)

மூ.—ஆறும்பிறையு மரவமு மடம்பும் சடைமே லணிந்துடலம்
நீறும் பூசி யேறூருமிறையோன் சென்று குறை யிரப்ப
மாறொன்றில்லா வாசநீர் வரை மார்வகலத் தளித்துகந்தான்
நாறும் பொழில் சூழ்ந் தழகாய நறையூர் நின்ற நம்பியே. (௯)

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஆறும்	கங்கையையும்	இரப்ப	(போக்கும்படி) யாசிக்க, (அப்போது)
பிறையும்	சந்த்ரகலையையும்		
அரவமும்	ஸர்ப்பத்தையும்	வரை	மலைபோன்ற
அடம்பும்	அடப்பம்பூவையும்	அகலம்	பரந்த
சடைமேல்	ஜடையின்மேலே	மார்வத்து	(தன்) திருமார்பிலுண்டான
அணிந்து	தரித்து,		
உடலம்	சரீரத்தில்	ஒன்று மாறு இல்லா	ஒரு ப்ரதியில்லாத (அஸத்ருசமான)
நீறு	சாம்பலையும்		
பூசியும்	பூசிக்கொண்டு	வாசநீர்	பரிமளம்மிக்கஸ்வேத [ஜலத்தை
ஏறு ஊரும்	ருஷபத்தை நடத்தா நின்ற [ருத்ரன்	அளித்து	கொடுத்து
		உகந்தான்	ஸந்தோஷித்தவனாய்,
இறையோன்	ஈஶ்வராபிமாநியான	நாறும்	பரிமள ப்ரசுரமான
சென்று	கிட்டி	பொழில்	சோலைகளாலே
குறை	(தன்னுடையப்ரஹ்மஹத்யை யாகிற) குறையை	சூழ்ந்து	சூழப்பட்டு
		அழகாய	தர்சநீயமாயிருக்கிற
			நறையூர்நின்ற நம்பியே. (௯)

வ்யா. — ஒன்பதாம்பாட்டு. (ஆறும்பிறையு மித்யாதி) "என்னுடைய ரக்ஷணம் நானே பண்ணிக்கொள்ள வல்லேன்" என்று துர்மாநத்தைப் பண்ணி, அதுக்கீடான †அடையாளங்களை யுடையனுமிருக்கிற தன் ஜடையில் ஏகதேசத்திலே கங்கையைத்தரித்து, போக (𑌭𑍋𑌗𑍍𑌯) ப்ரதாநனென்று தோற்ற சந்த்ரனைத்தரித்து, ஸர்ப்பத்தையும் †அடப்பம்பூவையும் ஜடையிலே அணிந்து, உடம்பிலே பஸ்மத்தையுமணிந்து, ருஷபத்தை நிர்வஹியாநின்றுள்ள, இறையோனுண்டு - ஈஶ்வராபிமாநியானவன், லோககுருவுமாய்த் தனக்குப்பிதாவுமாயிருக்கிற ப்ரஹ்மாவினுடைய தலையைச்சேதித்து அத்தாலே பாதகியாய்க்கொண்டு ஸர்வேஶ்வரன் திருவடிகளிலே தன்குறையை அறிவிக்க. (மாறித்யாதி) (க) "𑌸𑌰𑍍𑌵𑌗𑌨𑍍𑌧𑌃 - ஸர்வகந்த:" என்கிற திருமேனியில்

(க) சாந்தோ-௩-௧௪-௪.

† (பா) அதுதோற்றும்படி. ‡ "அடம்பப்பூ" என்றும் காண்கிறது.

ஸ்வேதஜலத்தைக் கொடுத்து, “மதிப்பனாய்த் திரிகிற இவனுடைய குறைதீரப் பெற்றோம்” என்று அத்தாலே தானுகந்தானாய்த்து.

(நாறும்பொழில்) (௧) “𑌸𑌰𑍍𑌵𑌗𑌨𑍍𑌧𑌃-ஸர்வகந்த:” என்கிற வஸ்துவையும் அவ்வவற்றான பரிமளத்தையுடைத்தான பொழிலாலே சூழப்பட்டு தர்சநீயமாயிருக்கிற திருநறையூர். ... ... (௯)

அரு —ஒன்பதாம்பாட்டு. (ஆறுமித்யாதி) கீழ்ப்பாட்டிலே “கோவிந்தா” என்றவள் குழல்முடிக்க மஹாபாரதத்தை நடத்தினானென்றதிலும் ஏற்றமாம்படி, துரபி(ரி)மாநியாய் தம: ப்ரசுரனான காபாலிக்கும் உதவினானென்று குணாதிக்யத்தை அநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

(அடப்பம்பூ) என்றது - கடம்பமரத்தில் விசேஷமான மரத்திற் பூவென்றபடி. ... ... (௯)

மூ.—நன்மையுடைய மறையோர் வாழ் நறையூர் நின்றநம்பியைக்
கன்னிமதிள்சூழ் வயல்மங்கை கலியனொலிசெய் தமிழ்மாலை
பன்னி யுலகில் பாடுவார் பாடுசாரா பழவினைகள்
மன்னி யுலக மாண்டு போய் வானோர்வணங்க வாழ்வாரே. (௧௦)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பதம்.	உரை.	பதம்.	உரை.
நன்மைஉடைய	அநந்யப்ரயோஜநதையாகிற நன்மையையுடைய	தமிழ்மாலை	தமிழ்த்தொடையான இப்பத்துப் பாசுரங்களை
மறையோர்	ப்ராஹ்மணர்	பன்னி	பரிசீலித்து
வாழ்	வர்த்தியாநின்ற	உலகில்	(இந்த) லோகத்தில்
நறையூர்நின்ற	திருநறையூரிலெழுந்தருளியிருக்கிற	பாடுவார்பாடு	பாடுவர்களுடைய ஸமீபத்திலும்
நம்பியை	நம்பிவிஷயமாக,	பழவினைகள்	ப்ராசீந கர்மங்கள்
கன்னி	அழிவில்லாத	சாரா	அணையமாட்டா; (அதுக்குமேலே)
மதிள்	ப்ராகாரங்களாலும்	மன்னி	(அவர்கள்) நெடுநாளிருந்து
வயல்	கழனிகளாலும்		
சூழ்	சூழப்பட்டிருக்கிற	உலகம்	இந்த லோகத்தை
மங்கை	திருமங்கைக்கு நிர்வாஹகரான	ஆண்டு	பரிபாலநம் பண்ணி
கலியன்	ஆழ்வார்	போய்	(அநந்தரம் பரமபதத்துக்குப்) போய்
ஒலிசெய்	அருளிச்செய்த		

---

(௧) சாந்தோ-௩-௧௪-௪.

வானோர்	(அங்கு) நித்யஸூரிகள்	வாழ்வார்	பகவதநுபவம் பண்ணப்பெறுவர்கள்.
வணங்க	ஆதரிக்கும்படியாக		

வ்யா.—பத்தாம்பாட்டு. (நன்மையித்யாதி) அநந்யப்ரயோஜநரான ப்ராஹ்மணர் வர்த்திக்கிற திருநறையூரிலேவந்து நித்யவாஸம் பண்ணுகிற கல்யாணகுண பூர்ணனானவனை. (கன்னியித்யாதி) அரணாகப்போரும்படியான மதிளாலே சூழப்பட்ட திருமங்கைக்கு ராஜாவானஆழ்வார் ஒலியுடைத்தாம்படி யருளிச்செய்த தமிழ்த்தொடையை லோகத்திலே ஆராய்ந்து சொல்லுமவர்களுடைய அருகு பாபங்களானவை கிட்டாது. பாபங்கள்வரப் போக்கவேணுமென்று அர்த்திக்கும்படி யிருக்கையன்றிக்கே, "இவ்விடம் நமக்கு இருப்பிடமன்று" என்று ப்ராக்தநமான பாபங்கள்தானே விட்டுப்போம். (மன்னியுலகமாண்டு) ஸம்ஸாரத்திலே நெடுநாளிருந்து ஐஹிகபோக(𑌭𑍋𑌗)ங்களையும் புஜித்து, பின்னை பரமபதத்தேபோய் நித்யஸூரிகள் ஆதரிக்க நித்யாநுபவம் பண்ணப்பெறுவர்கள். ... ... (க0)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

* * *

அரு.—பத்தாம்பாட்டு. (நன்மையித்யாதி) கன்னி - அழிவில்லாமையாய், அத்தால் பலிதத்தை யருளிச்செய்கிறார் (அரணித்யாதி). "வினைகள் சாரா" என்றுஅவற்றின்மேலே ஸ்வாதந்த்ர்யத்தை ஆரோபித்துச் சொன்னதுக்குக் கருத் தருளிச்செய்கிறார் (பாபங்களித்யாதி). ... (க0)

* * *

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஆறாம்பத்தில் ஏழாந்திருமொழி முடிந்தது.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஆறாம்பத்து எட்டாந்திருமொழி

மான்கொண்ட ப்ரவேசம்.

வ்யா.—இந்த்ராதிதேவதைகள் தன்னைக்கொண்டு ஒருகார்யமின்றிக்கே ப்ரயோஜநாந்தரங்களை அபேக்ஷிக்க, அவர்களுக்காகத் தன்னைப் பேணாதே இரப்பாளனாக்கியும், கடல் கடைந்தும், இப்படி அபேக்ஷித

ஸம்விதானம்பண்ணுமவனை நான் உத்தேஶ்யனாகப்பற்றி, அவன் வந்துநித்யவாஸம் பண்ணுகிற திருநறையூரிலே நான் சென்றுகாணப் பெற்றேன், அத்தேசமே உத்தேஶ்யமென்கிறார். ... ... *

அவ. — மான்கொண்ட ப்ரவேசம்.—கீழெல்லாம் திருவுள்ளத்தைக் குறித்து உபதேசிக்க, அத்தால் பிறந்த அநுபவப்ரகர்ஷத்தாலே, ஸந்நிஹிதமாகைக்காக அவன் இங்கே நித்யவாஸம்பண்ண, அவனைத்திருநறையூரிலே காணப்பெற்றேனென்று களிக்கிறாரென்னும் ஸங்கதியை ஸூசிப்பிக்கிறார் (இந்த்ராதீத்யாதி). .. .. *

மூ.—மான்கொண்டதோல் மார்வில் மாணியாய் மாவலிமண்
தான்கொண்டு தாளாலளந்த பெருமானைத்
தேன்கொண்ட சாரல் திருவேங்கடத்தானை
நான் சென்றுநாடி நறையூரில் கண்டேனே. (௧)

பதம்.	உரை.	பதம்.	உரை.
மான்கொண்ட	மானுடையதானத்தை	அளந்த	ஆக்ரமித்த
தோல்	தோலை (க்ருஷ்ணாஜிந	பெருமானை	ஸர்வ சேஷியாய்,
மார்வில்	மார்விலே த(ஹ)ரித்த	தேன்கொண்ட	தேனையுடைத்தான
மாணியாய்	(வாமந) ப்ரஹ்மசாரியாய்க் கொண்டு	சாரல்	தாழ்வரைகளையுடைய
மாவலி	மஹாபலியிடத்தில் நின்றும்	திருவேங்கடத்தானை	திருவேங்கட மலையிலே எழுந்தருளியிருக்கிறவனை
மண்	பூமியை	நான்	இந்நாள் விமுகனாகப் போந்த நான்
தான்	(அதுக்கு) ஸ்வாமியானதான்	நாடிச்சென்று	தேடிக்கொண்டுபோய்
கொண்டு	(தானம் வாங்கித்) தன்னதாக்கிக்கொண்டு	நறையூரில்	திருநறையூரில்
தாளால்	(பின்பு) திருவடிகளாலே	கண்டேன்	காணப்பெற்றேன்.

வ்யா.—முதற்பாட்டு. (மான்கொண்ட வித்யாதி) மானுடைத்தானதோலை மார்விலேயுடைய மாணியாய், தன்னுடைய விநீதவேஷத்தைக் காட்டி அவன் நெஞ்சை நெகிழ்த்து, பின்னையாய்த்து பூமியை வாங்கிற்று. (மாணியாய்) "பூர்வஜந்மமும் இரந்தேயோ ஜீவித்தது" என்று தோற்றவிருக்கை. "கொண்டல்லது போகேன்" என்று இரப்பிலே தகணேறினபடி. (மாவலிமண்ணித்யாதி) கிடந்தானைகண்டேறின மஹாபலியதான பூமியைத் தான் அவன்பக்கலிலே இரந்து பெற்றானாயிருக்கை. அவனதல்லாதத்தை அவனதாக்கி, உடைய தான்

தன்னதல்லாதது ஒன்று அவன் பக்கலிலே பெற்றானாயிருக்கை. "நமக்கேதேனுமாகப் பெறுமித்தனையே யன்றோ வேண்டுவது" என்றிருந்தான். (தாளாலித்யாதி) கையிலே நீர் விழுந்த அநந்தரம் அவன் மறு மநஸ்ஸு படுவதுக்குமுன்னே, எல்லைநடந்து கொண்டானாய்த்து. பிராட்டி திருமுலைத்தடத்திலும் கண்ணிலும் வைத்துக்கொள்ளுகைக்கு அர்த்திக்கும்படி ஸுகுமாரமான திருவடிகளாலேயாய்த்து காடு மேடையு மளந்து கொண்டது. (பெருமானை) ஸர்வசேஷியாய் ஸர்வாதிகனாயிருக்கிறவன் இப்படி தன்னைத் தாழவிட்ட விடத்திலும் தாழ்ந்தது தோற்றாமையிறே தாழவிடவல்லனாய்த்து.

(தேன்கொண்ட வித்யாதி) தேன்மிக்க பர்யந்தத்தை யுடைத்தான திருமலையிலே வந்துநிற்கிறவனை. தாளாலளந்தபோது தப்பினார்க்கும் இழக்கவேண்டாதபடி திருமலையிலேவந்து நின்றானாய்த்து. (நான் சென்றுநாடி) அவன் நாடித்திரிகிறபோது வைமுக்யம்பண்ணி இறாய்த்துத்திரிந்த நான், தேடிச்சென்று.(நறையூரில்) அறுகாதப்பயணம்போய் பரமபதத்திலே காண்கையன்றிக்கே, விடாய்த்த விடத்திலே தண்ணீர்குடிக்கப் பெறுவாரைப்போலே திருநறையூரிலே காணப்பெற்றேன். ... ... (௧)

அரு.—முதற்பாட்டு. (மாணித்யாதி) (மாணுடைத்தான) மாணுடைய தான. விசேஷணப(ப)லத்தாலே ப்ரஹ்மசர்யம் ஸித்தித்திருக்கவும், "மாணி" என்றதுக்குக் கருத்தருளிச் செய்கிறார் (பூர்வஜந்மமித்யாதி). "தான் கொண்டு" என்றதுக்குத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (கிடந்தானை யித்யாதி). விவரணம் (அவனதல்லாதத்தை யித்யாதி). "கொண்டு" என்றது - இரந்துகொண்டு என்றாய், இரக்கவேணுமோ வென்ன வருளிச்செய்கிறார் (நமக்கித்யாதி). "தாளால்" என்று விசேஷித்தது ஈடுபாட்டிலே யாக்கி யருளிச்செய்கிறார் (பிராட்டி யித்யாதி). ... ... (௧)

மூ.—முந்நீரை முன்னாள் கடைந்தானை மூழ்த்தநாள்
அந்நீரை மீனாயமைத்த பெருமானைத்
தென்னாலிமேய திருமாலை யெம்மானை
நன்னீர்வயல்சூழ் நறையூரில் கண்டேனே. (௨)

பதம்.	உரை.	பதம்.	உரை.
முந்நீரை	ஆற்றுநீர் ஊற்றுநீர்	பெருமானை	ஸ்வாமியாய்
	வர்ஷஜலமென்று	தென்ஆலி	தர்சநீயமான திருவா
	மூன்றுவகைப்பட்		லியிலே [நின்ற
	டநீரையுடைத்தா	மேய	நித்யவாஸம் பண்ணு
	ன ஸமுத்ரத்தை	திருமாலை	பெரிய பிராட்டியா
முன்னாள்	முற்காலத்தில் [னாய்		ரோடு கூடின ஸர்
கடைந்தானை	மதநம் பண்ணினவ		வாதிகனாய்
மூழ்த்தநாள்	(அந்தஸமுத்ரமேலோ	எம்மானை	எனக்கு சேஷியுமா
	கங்களை)க்ரஸித்த		னவனை,
	ப்ரளயகாலத்தி	நல்நீர்	ஸம்ருத்தியாகிற நன்
	லே [கொண்டு		மையையுடைய ஜ
மீனாய்	மத்ஸ்ய ரூபியாய்க்		லத்தை யுடைத்
அந்நீரை	அந்த ஸமுத்ரத்தை		தான [பட்ட
அமைத்த	(தன் கீழ்வயிற்றில்)	வயல்சூழ்	கழனிகளாலே சூழப்
	அடக்கிக்கொண்ட		நறையூரில் கண்டேனே. (௨)

வ்யா —இரண்டாம்பாட்டு. (முந்நீரித்யாதி) மூன்று வகைப்பட்ட நீர்திரண்ட கடலை க்ருதயுகத்திலே கடைந்தவனை. தேவர்கள் அஸுரர்கள் கையிலேயகப்பட்டுக் கிடக்கப் புக்கவாறே, அவர்களை ஜீவிப்பிக்கைக்காகக் கடலை நெருக்கிக் கடைந்தானாய்த்து. (மூழ்த்தநாள்) லோகத்தை ப்ரளயங்கொண்டகாலத்து. (அந்நீரை) அந்நீர்தானே, பாடிகாப்பாரே களவு காணுமாபோலே ஜகத்தையடையக் கோக்க, ஒரு மத்ஸ்யமாய் அத்தைத் தன்னுடைய செலுவில் ஏகதேசத்திலே அடக்கினாய்த்து. கடல் கடைகைக்கு தேவர்களையும் அஸுரர்களையும் கூட்டித் தானான மேன்மைகுறையாதே நிற்க வேண்டிற்று; ஜகத்துக்காக வந்தப்ரளயத்தைப் பரிஹரிக்கிற விடத்தில் அங்ஙனொரு ஸஹாயமுமின்றிக்கே தானும்தன்னைக் குறையவிட்டு நிற்கிறவளவிலே யாய்த்து; ஒன்று செய்யுமிடத்தில் அநேகம்பேரைக்கூட்டிக்கொண்டு செய்யவும் வல்லனாய், தனியேயும் செய்யவல்லனாயிருக்கிற பெருமானை. ஸர்வாதிகனுடைய செயலிறே.

தேவர்களுக்குக் கடல்கடைந்தாப் போலேயும், ஜகத்துக்கு ப்ரளயத்தைப் பரிஹரித்தாப் போலேயும், என்னுடைய ஸம்ஸாரப்ரளயத்தைப் பரிஹரிக்கைக்காகப் பிராட்டியோடுங்கூடத் திருவாலியிலே நிற்கிற ஸர்வேஶ்வரனை. அன்றிக்கே, தேவர்களோடு லௌகிகரோடு என்னோடு வாசியற அபேக்ஷிதம் செய்யும்படியான ஸர்வேஶ்வரனை; ப்ராப்தியுடையவனை. (நன்னீரித்யாதி) கெட்ட நீரன்றிக்கே மிகுந்

குறைவற்று வேண்டுமளவான நீரையுடைத்தான வயலாலே சூழப்பட்ட திருநறையூர். ... ... (௨)

அந —இரண்டாம்பாட்டு. (முந்நீரித்யாதி) இந்த்ரனுக்காக இரந்து கார்யம்செய்த அபதாநத்தை யநுஸந்தித்தார்; இதில், அந்த இந்த்ராதிகளுக்காக அமுதமளிக்கவேண்டி உடம்புநோவக் கடல் கடைந்தபடியும் அதிலும் ஆஶ்சர்யாவஹமாக, மீனாய் ப்ரளயாபத்ரக்ஷகனானபடியும் அநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

(அந்நீர்தானே) பூமிக்கு அரணாகவைத்த ஸமுத்ரந்தானே; இதுக்கு "கோக்க" என்றதோடு அந்வயம். அமைக்கையாவது - ஜலத்தையெல்லாம் கீழ்வயிற்றிலே அடக்கி லோகத்தை முதுகிலேவைத்து ரக்ஷிக்கையென்று விவக்ஷித்து அருளிச்செய்கிறார் (ஒருவித்யாதி). (செலுவில்) கீழ்வயிற்றுப் பார்ஶ்வத்தில். பெருமையாவதென்னென்ன; அத்தைக் கீழே கடாக்ஷித்துத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (கடலித்யாதி வாக்யத்ரயத்தாலே)

"எம்மானை - திருமாலை - தென்னாலிமேயானை" என்று அந்வயம் திருவுள்ளம்பற்றித் தாத்பர்யமருளிச்செய்கிறார் (தேவர்களுக்கித்யாதி). "எம்மானை" என்றது - ஸர்வேஶ்வரனென்றாய், அதுக்குத் தாத்பர்யாந்தரமருளிச்செய்கிறார் (அன்றிக்கே யித்யாதி). பலிதம் (ப்ராப்தியித்யாதி). (௨)

மூ.—தூவாய புள்ளூர்ந்து வந்து துறை வேழம்
மூவாமை நல்கி முதலை துணித்தானைத்
தேவாதிதேவனைச் செங்கமலக் கண்ணானை
நாவாயுளானை நறையூரில் கண்டேனே. (௩)

பதம்.	உரை.	பதம்.	உரை.
தூ ஆய	நிர்த்துஷ்டமான	தேவாதிதேவனை	நித்யஸூரிகளுக்குத் தலைவனாய்,
புள்	பெரிய திருவடியை	செம்கமலம்	செந்தாமரைப் பூப்போன்ற
ஊர்ந்து	நடத்திக்கொண்டு	கண்ணானை	திருக்கண்களையுடையனாய்,
துறை	(மடுவின்) கரையிலே	நாவாய்	திருநாவா யென்னும் திவ்யதேசத்தில்
வந்து	சென்று	உளானை	எழுந்தருளியிருக்குமவனை
வேழம்	ஶ்ரீ கஜேந்த்ராழ்வான்		நறையூரில் கண்டேனே. (௩)
மூவாமை	நலிவுபடாதபடி		
நல்கி	க்ருபைபண்ணியருளி,		
முதலை	(அவனுக்கு சத்ருவான) முதலையை		
துணித்தானை	இருதுண்டமாக்கினவனாய்,		

வ்யா.—மூன்றாம்பாட்டு. (தூவாய வித்யாதி) ஸர்வேஶ்வரன் திருவடியை மேற்கொண்டு தன்திருவடிகளாலேதாக்கி நடத்தப்புக்கால், அந்த ஸ்பர்ச ஸுகத்தாலே திமிர்த்து, “எங்களம்மை நாயனாருடைய ஸ்பர்ஶ ஸுகமிருந்தபடியென்!” என்று ஏத்தும் வாயையுடையவாதல்; அன்றிக்கே, நிர்த்தோஷமான சப்தத்தை வடிவாகவுடையவென்னுதல்; (௧)“𑌵𑍇𑌦𑌾𑌤𑍍𑌮𑌾-வேதாத்மா” என்னக்கடவதிறே. (புள்ளூர்ந்து வந்து துறை) அவனுடைய ஸ்வாபாவிகவேக(³)ம் போராமை நடத்திக்கொண்டு, அவனிடர்பட்ட பொய்கைக் கரையிலேவந்து. (வேழம் மூவாமைநல்கி) அது முடியாதபடி அதின்பக்கலிலே ஓரத்தைப்பண்ணினானாய்த்து. அதாவது-பூவில் செவ்விமாறுவதற்கு முன்னே திருவடிகளிலே இடுவித்துக் கொண்டானாய்த்து. (முதலையித்யாதி) தானும் மூவாமை பெற்றானாய்த்து; அவன் ஆபந்நனானபின்பு அரைக்ஷணம் தாழ்த்தானாகில் தன்குணங்களை இழந்து போனானுமிறே; இடர்பட்ட பொய்கையிலேபோய்ப்புக்குப்பெரிய அவதா(⁴)நத்தோடே இரண்டையும் கூடக் கரையிலே கொடுபோய்வைத்து, ஆனைக்கு இடரின்றிக்கே முதலைக்கே இடராம்படி பண்ணினானாய்த்து. “ராஜபுத்ரர்களைப் பிணைத்தால் கைக்கூட்டனுக்கும் பாலும் சோறும் இடக்கடவது காண்” என்றருளிச் செய்தார்பட்டர். (துணித்தானை) பீஷ்மாதிகள்மேலே கிளருமாபோலே, எதிரிகள் பக்கல் சீறுமாபோலே, நீர்ப்புழு என்று பாராதே சீறினானாய்த்து ஆஶ்ரிதவிரோதி என்னுமாகாரத்தாலே கனத்துத் தோற்றுகையாலே.

ஆனை இடர்பட்ட மடுவின்கரையிலே பெரிய சீற்றத்தோடே தன்னைப்பேணாதே வந்து விழுந்தவன்றானாரென்னில்; (தேவாதிதேவனை) *அயர்வறுமமரர்களதிபதியாய்த்து. (செங்கமலக்கண்ணனை) புண்டரீகாக்ஷனான ஸர்வேஶ்வரனை. (நாவாயுளானை) பரமபதம் கலவிருக்கையாயிருக்க, என்னுடைய ரக்ஷணத்துக்காகத் திருநாவாயிலே வந்து நித்யவாஸம் பண்ணுகிறவனை. அந்தத்திருநாவாய் தான் பரமபதத்தோபாதியாம்படி அடுத்தணித்தாகத் திருநறையூரிலே காணப்பெற்றேன். ... ... (௩)

அரு.—மூன்றாம்பாட்டு. (தூவாயவித்யாதி) ப்ரயோஜநாந்தரபரர்க்கும், மேல்வரும் நோயறியாதே லோகத்துக்கும் உபகரித்தபடியையருளிச் செய்தார் கீழ்; அநந்யப்ரயோஜநராய்ப் பூவிடப்பெறாத இழவுதீரப்பெரிய

---

(௧) சதுஶ்ஶ்லோகீ-௧.

·திருவடிமேற் கொண்டுவந்த ரோக்கினபடியை அநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

ஏறிவந்து என்னாதே "ஊர்ந்து" என்றதுக்குத் தாத்பர்யம் (அவனுடைய வித்யாதி). (ஓரத்தை) பக்ஷபாதத்தை. முதலை துணித்தபின் தேவாதிதேவனானான் என்று விவக்ஷித்து, அதுக்குத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (தானுமித்யாதி). மூவாமை - குணமிழக்கை யென்று விவரிக்கிறார் (அவனித்யாதி). †(கையிலான்) அசக்தனென்றபடி. முதலையை விடுவிக்கவொண்ணாதோ, துணிப்பானென்னென்ன; அதுக்கு இஷ்டமான சாபவிமோசநத்துக்கு உடலாகையாலே செய்தானென்று ஸம்வாதம் காட்டுகிறார் (ராஜபுத்ரர்களை யித்யாதி). முடித்தானை என்னாதே, பாரிப்புத்தோற்ற "துணித்தானை" என்பானென்னென்ன வருளிச்செய்கிறார் (பீஷ்மேத்யாதி). அதுக்கு நியாமகம் (ஆஸ்ரிதேத்யாதி).

மேலுக் கவதாரிகை (ஆனையித்யாதி). ... ... (௩)

மூ.—ஓடாவரியா யிரணியனை யூனிடந்த
சேடார்பொழில் சூழ் திருநீர்மலையானை
வாடாமலர்த்துழாய் மாலை முடியானை
நாடோறும் நாடி நறையூரில் கண்டேனே. (௪)

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஓடா	(சத்ருமுன்பே) பிற்காலியாத	வாடா	செவ்வியழியாத
அரியாய்	நரஸிம்ஹமாய்க்கொண்டு	மலர்	புஷ்பத்தையுடைய
இரணியன்	ஹிரண்யனுடைய	துழாய்	திருத்துழாயினால்கட்டப்பட்ட
ஊனை	சரீரத்தை	மாலை	மாலையை
இடந்த	கிழித்துப் பொகட்டவனாய்,	முடியானை	திருவபிஷேகத்திலணிந்தவனானவனை
சேடுஆர்	இளமைமிக்க	நாள்தோறும்	ப்ரதிதிநமும்
பொழில்	சோலைகளாலே	நாடி	தேடித்திரிந்து
சூழ்	வ்யாப்தமான		
திருநீர் மலையானை	திருநீர்மலையிலே எழுந்தருளி யிருக்குமவனாய்,		

நறையூரில் கண்டேனே. (௪)

வ்யா.—நாலாம்பாட்டு. (ஓடாவித்யாதி) ஹிரண்யனுடைய முருட்டுடலைக்கண்டால் பிற்காலியாத நரஸிம்ஹமாயென்னுதல்; அன்றிக்கே, நாட்டில்நடையாடாத நரஸிம்ஹமாய். வரப(ப)லத்தாலே பூண்கட்டின ஹிரண்யனுடைய முருட்டுடலைப்பிளந்து, "இன்னும் இங்ஙனே யிருந்துள்ள விரோதிகள் ஆஸ்ரிதர்க்கு அடர்த்துவரில் செய்வதென்!" என்று, அவற்றைப் போக்குகைக்காக, இளமை மிக்க பொழில் சூழ்ந்திருந்துள்ள திருநீர் மலையிலே ஸந்நிஹிதனானவனை.

---

† "கையிலான்" என்னும் பதம் வ்யாக்யானத்தில் காணவில்லை.

ஜகத்ரக்ஷணத்துக்கு முடிகவித்து மாலையிட்டுக் கொண்டிருக்கிறவனை, நாடோறும் நித்யஸூரிகளுடைய ஆசையே யாத்ரையாக உடையனாய்க்கொண்டு இங்கே காணப்பெற்றேன். ... ... (௪)

அந —நாலாம்பாட்டு. (ஓடாவித்யாதி) ஆனைக்கு உதவப்புள்ளூர்ந்து வந்த படியை அருளிச்செய்தார் - கீழ்ப்பாட்டில்; அங்ஙனே தேசாந்தரத்தில் வரவேண்டாதே நினைத்தவிடந் தன்னிலே ஸந்நிஹிதனாய் ஆஶ்ரிதனுக்கு உதவினமையை அநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

"சேடு" என்றதினர்த்தம் (இளமை) என்றது. ... ... (௪)

மூ.—கல்லார் மதில் சூழ் கடியிலங்கைக் காரரக்கன்
வல்லாகம் கீள வரி வெஞ்சரம் துரந்த
வில்லானைச் செல்வ விபீடணற்கு வேறாக
நல்லானை நாடி நறையூரில் கண்டேனே. (௫)

பதம்.	உரை.	பதம்.	உரை.
கல்ஆர்	கல்லினால் கட்டப்	வரி	அழகியதாய்
	பட்ட	வெம்	அக்நிகல்பமான
மதில்	ப்ராகாரங்களாலே	சரம்	பாணத்தை
சூழ்	சூழப்பட்டும்	துரந்த	ப்ரயோகித்த [ய்,
கடி	(அகழ்முதலிய) கட்டு	வில்லானை	தநுஸ்ஸை யுடையனா
	டையதுமான	செல்வம்	ஸ்ரீமானான [டத்தில்
இலங்கை	லங்கைக்கரசனாய்	விபீடணற்கு	ஸ்ரீ விபீஷணாழ்வானி
கார்	தண்ணியனான	வேறாக	விலக்ஷணமாக
அரக்கன்	ராவணாஸுரனுடைய	நல்லானை	ஸ்நேஹத்தையுடைய
வல்ஆகம்	பலிஷ்டமான சரீர		னானவனை
	மானது	நாடி நறையூரில் கண்டேனே. (௫)	
கீள	பிளக்கும்படியாக		

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (கல்லாரித்யாதி) கல்லார் மதிள்சூழ்ந்து-அரண்மிக்கிருந்துள்ள லங்கையில் கறுத்த நிறத்தையுடையனான ராவணனென்னுதல்; அன்றிக்கே தண்ணியனென்னுதல். 'கறுப்பு - தண்மைக்கும், நிறத்துக்கும் இரண்டுக்கும் பேரிறே. (வல்லாகம்) ப்ரஹ்மாஸ்த்ராதிகளுக்குப் சிளையாதபடி வரப(ப)லத்தாலே திண்ணியனான உடல் கிழியும்படிக் கீடாக, தர்சநீயமாய் (௧) "𑌦𑍀𑌪𑍍𑌤𑌪𑌾𑌵𑌕 𑌸𑌙𑍍𑌕𑌾𑌶𑍈𑌃-தீப்தபாவக ஸங்காஶை:" என்கிறபடியே தொடுத்துவிடும்போது

---

(௧) ரா-யு-௧௬-௨௨.

அம்பாய், சத்ருக்கள் சரீரங்களிலே அக்நியாய் ப்ரவேசிக்கும் அம்பை நடத்தின வில்வலியை யுடையவனை.

(செல்வவிபீடணற்கு) ராவணப(𑌭)வநத்தை விட்டு ஆகாசஸ்த்தனானபோதே (க) "𑌅𑌨𑍍𑌤𑌰𑌿𑌕𑍍𑌷𑌗𑌤𑌃𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌨𑍍 - அந்தரிக்ஷ கதஸ்ஸ்ரீமாந்" என்கிறபடியே ராமஸம்பந்தத்தால் வந்த ஐஸ்வர்யம் குடிகொண்டதாய்த்து. (வேறாக நல்லானை) "வருகிற விபீஷணன் புகுரக்கடவனல்லன்" என்று மஹாராஜருள்ளிட்டார் நிரோதிக்க; "அவனைக் கைக்கொள்கை தவிரோம்" என்று பெருமாளும் நிர்ப்பந்திக்க; 'ஆகில் கிஷ்கிந்தையில் பரிகரமிங்ஙனே விடைகொள்ளுகிறது" என்ன; "வேணுமாகில் அது செய்கிறது, இது ஒருபடியாலும் தவிரோம்" என்று அவன் பக்கலிலே விசேஷித்து ஸங்கத்தைப் பண்ணினவனை. (நாடி நறையூரில் கண்டேன்) நான் அவனைத்தேடித் திருநறையூரிலே காணப்பெற்றேன். ... ... (௫)

அரு. — அஞ்சாம்பாட்டு. (கல்லாரித்யாதி) தமப்பன் பகையாகப் பிள்ளைக்கு உதவினபடி சொல்லிற்று - கீழ்; தமயன் பகையாக உதவினபடியை அநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

கடி - கட்டாய், துர்க்க (𑌦𑍁𑌰𑍍𑌗)ச்சவரணையைச் சொல்லுகிறதென்று விவக்ஷித்து, "கல்" இத்யாதியாலே விசேஷித்ததுக்குத் தாத்பர்ய மருளிச் செய்கிறார் (கல்லித்யாதி). லக்ஷணயா தண்மை சொல்லுமென்கிறார் (கறுப்பித்யாதி).

"வேறாக" என்பானென்னென்ன வருளிச்செய்கிறார் (வருகிற வித்யாதி). (உ) "𑌨 𑌤𑍍𑌯𑌜𑍇𑌯𑌂 𑌕𑌥𑌞𑍍𑌚𑌨 - நத்யஜேயம் கதஞ்சந" என்றத்தை உட்கொண்டருளிச்செய்கிறார் (ஆகிலித்யாதி). ... ... (௫)

மூ.—உம்பருலகோடுயிரெல்லா முந்தியில்
வம்பு மலர்மேல் படைத்தானை மாயோனை
அம்பன்ன கண்ணாளசோதைதன் சிங்கத்தை
நம்பனைநாடி நறையூரில் கண்டேனே. ... (௬)

பதம்.	உரை.	பதம்.	உரை.
உம்பர் உலகோடு	தேவலோகத்தோடு கூட	உந்தியில்	(தன்) திருநாபியிலுள்ள
உயிரெல்லாம்	ஸகல ப்ராணிகளையும்	வம்பு	பரிமள ப்ரசுரமான

(க) ரா-யு-கசு-கஎ. (உ) ரா-யு-கஅ-௩.

மலர்மேல்	கமலப் பூவின்மேலே	அசோதை	யசோதையுடைய
படைத்தானை	ஸ்ருஷ்டித்த [னாய்	தன்	[ள்ளையாய்
மாயோனை	ஆஸ்சர்ய சக்தியுக்த	சிங்கத்தை	ஸிம்ஹம்போன்ற பி
அம்பன்ன	அம்போடொத்த [ன்	நம்பனை	விஸ்வஸநீயனு மான வனை
கண்ணாள்	கண்களை யுடையளா		

நாடி நறையூரில் கண்டேனே. (௬)

வ்யா. — ஆரும்பாட்டு. (உம்பருலகித்யாதி) ப்ரஹ்மாதிகள் குடியிருப்போடே கூட மற்றுமுள்ள மநுஷ்யாதிகளையு மடையத் தன் திருவுந்தியிலே செவ்விப்பூவின்மேலே தன்னுடைய ஸங்கல்பத்தாலே யுண்டாக்கின ஆஸ்சர்யபூதனான ஸர்வேஸ்வரனை.

தன் ஸங்கல்பத்தாலே எல்லாவற்றையு முண்டாக்குமவன்றான் மெய்யே வந்தவதரித்தானாய்த்து. (அம்பன்ன கண்ணாளித்யாதி) பிள்ளையுறங்கா வில்லிதாஸர் "பிள்ளைக்குத் தாய்வழியாகாதே கண்" என்றருளிச்செய்வர். (நம்பனை) தன்னை யணுகினவர்க்குத் தன் கையிலே ஸமர்ப்பிக்கலாம்படி விஸ்வஸநீயனானவனை. (நாடி நறையூரில்) ஸம்ஸாரத்திலே யிருக்கச்செய்தே அவனை விஸ்வஸித்து பற்றப்பெற்றேன். ... ... (௬)

அரு.—ஆரும்பாட்டு. (உம்பரித்யாதி) கீழ்ப்பாட்டுக்களில் - பிள்ளைக்கும் தம்பிக்கும் தாமே உதவினவளவு சொல்லிற்று; அவ்வளவன்றியே, சதுர்த்தசபுவநஸ்ரஷ்டாவுக்கு உத்பாதகனாயிருந்தவன் தன்மேன்மை பாராதே ஓரிடைச்சிக்கு மகனாயிருந்தபடியால் வந்து உதவின ஆஸ்ரித பாரதந்த்ர்யம் சொல்லுகிறாரென்று ஸங்கதி.

சதுர்முகனை மலர்மேல் படைத்தத்தாலே "ஸ்ருஜ்யங்களெல்லாம் மலர்மேல் படைத்தான்" என்று விவக்ஷித்தருளிச்செய்கிறார் (ப்ரஹ்மாதிகளித்யாதி).

மேலுக்கவதாரிகை (தன்னித்யாதி). (க) "ధన్యో మాతృ ముఖస్సుతః- தக்யோ மாத்ரு முகஸ்ஸுதஃ" என்றத்தை யுட்கொண்டு அசோதையின் கண்ணழகை அருளிச்செய்ததுக்கு உட்கருத்தை ஸம்வாதமுகேந வருளிச்செய்கிறார் (பிள்ளையித்யாதி). ... ... (௬)

மூ.—கட்டேறு நீள் சோலைக் காண்டவத்தைத் தீமூட்டி
விட்டானை மெய்யமமர்ந்த பெருமானை
மட்டேறு கற்பகத்தை மாதர்க்காய் வண்டுவரை
நட்டானை நாடி நறையூரில் கண்டேனே. (எ)

(க)

பதம்	உரை.
கட்டு ஏறு	காவல்மிக்கிருந்ததாய்
நீள்சோலை	பரந்தபொழிலையுடையதான
காண்டவத்தை	காண்டவவநத்தை
தீ	அக்நிக்கு (ஆஹாரமாக)
மூட்டிவிட்டானை	அநுமதிபண்ணி ஏவிவிட்டவனாய்
மெய்யம்	திருமெய்யத்தில்
அமர்ந்த	பொருந்தி வர்த்திக்கிற

பதம்.	உரை.
பெருமானை	ஸர்வாதிகனாய்,
மட்டு ஏறு	தேன்மிக்கிருந்துள்ள
கற்பகத்தை	கல்பக வ்ருக்ஷத்தை
மாதர்க்காய்	ஸத்யபாமைக்காக
வண்துவரை	அழகிய த்வாரகாபுரியில் (ஸத்யபாமையகத்தில்)
நட்டானை	ஸ்த்தாபித்தவனுமானவனை

நாடி நறையூரில் கண்டேனே. (எ)

வ்யா.—ஏழாம்பாட்டு. (கட்டேறு நீள்சோலை) இந்த்ரனுடைய காவற்காடென்கிற மதிப்பாலே மிக்க அரணை யுடைத்தாயிருக்கிற. (காண்டவத்தைத் தீமூட்டி விட்டானை) அர்ஜுநனும் தானுமாய் யமுநாதீரத்திலே பூம்பந்து இறட்டு விளையாடாநிற்க, அக்நி ஒரு ப்ராஹ்மணவேஷத்தைக்கொண்டுவந்து நிற்க, "நீ இந்த்ரனுடைய காவற்காட்டை புஜி" என்று விட்டான். (மூட்டிவிட்டானை) துஷ்ட ம்ருகங்களின்மேலே விட்டானாய், தான் கிட்டுகைக்கு ப(ஃ)யப்படுமாபோலே, ப்ரவேசிப்பிக்கையிலுண்டான அருமை சொன்னபடி. (மெய்யமமர்ந்த பெருமானை) "இன்னும் ஆரேனும் அர்த்தித்து வரில் செய்வதென்!" என்று திருமெய்யத்திலே வந்து ஸந்நிஹிதனானவனை.

(மட்டேறித்யாதி) பரிமளம் மிக்குவாரா நின்றுள்ள கல்பகவ்ருக்ஷத்தை. (மாதர்க்காய்) ஸ்ரீ ஸத்யபாமைப் பிராட்டிபக்கல் தாதர்த்ய(ஃ)த்தை முடிய நடத்தினபடி. (வண்டுவரை நட்டானை) இந்த்ரனுக்கு நரகாஸுரனோடே விரோதம் விளைய, அவனுக்காக எடுத்துவிட்டு, அவனை யழித்து மீண்டுவந்து ஸ்வர்க்கத்தைக் குடியேற்றுகிறவளவிலே, இந்த்ராணியானவள், கல்பகவ்ருக்ஷத்தின் பூ வர, "உங்களுக்கிது பொருதிறே, உடம்பு வேர்க்குமிறே, தரையிலல்லது கால்பாவாதே" என்று இங்ஙனே தன்னுடைய தேவத்வத்தையும் இவளுடைய மநுஷ்யத்வத்தையும் சொல்லி க்ஷேபித்துச் சூடினாள்; அவளும், க்ருஷ்ணன் தோளைப்பற்றி "இத்தை என் புழைக்கடையிலே நடவேணும்" என்ன; அத்தைப் பிடுங்கிக் கொடுபோந்து ஸ்ரீமத்த்வாரகையிலே நட்டு, பின்னையாய்த்து திருமஞ்ஜநம் பண்ணிற்று. "தான் சொப்பனக் குடியேறுவதற்கு முன்னே தன்னைக் குடியிருத்தின

வன், தன் புழைக்கடையிலே ஒரு குப்பைமேனியைப் "பிடுங்கினானென்று வஜ்ரத்தைக்கொண்டு துடருவதே!'' என்று பிள்ளை யமுதனார் பணிக்கும்படி, என்னுடைய அபேக்ஷிதம் செய்கைக்காகத் திருநறையூரிலே வந்து நின்றவனைக் காணப்பெற்றேன். ... (எ)

அரு.—ஏழாம்பாட்டு. (கட்டேறித்யாதி) கீழ்ப்பாட்டில் - யசோதை தன்மையை ப்ரஸ்தாவித்தாராய், அவனுடைய அதிமாநுஷ சேஷ்டிதங்களையும் அவதார ப்ரதா(ஞா)நப்ரயோஜநத்தையும் இரண்டுபாட்டாலு மருளிச்செய்கிறாரென்று ஸங்கதி.

அக்நிதானே மூளமாட்டானோ, மூட்டிவிட வேண்டுவானென்னென்ன வருளிச்செய்கிறார் (துஷ்டேத்யாதி). (தான்) என்றது - அக்நிதானென்றபடி.

(சொப்பன) நன்றாக. ... ... (எ)

மூ.—மண்ணின் மீபாரங் கெடுப்பான் மறமன்னர்
பண்ணின்மேல் வந்த படையெல்லாம் பாரதத்து
விண்ணின் மீதேற விசயன் தேரூர்ந்தானை
நண்ணி நான் நாடி நறையூரில் கண்டேனே. (அ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
மண்ணின்மீ	பூமியின்மேலே (அஸுர வர்க்கத்தினால்) உண்டான	வந்த	எதிர்த்துவந்த
		படை எல்லாம்	எல்லாச்சேனையையும்
பாரம்	பா(ஞா)ரத்தை	விண்ணின்மீது	வீரஸ்வர்க்கத்தில்
கெடுப்பான்	அழிக்கைக்காக,	ஏற	போய்ச் சேரும்படியாக
மறம்	கோபத்தையுடையரான	பாரதத்து	பாரதயுத்தத்தில்
		விசயன்	அர்ஜுநனுடைய
மன்னர்	ராஜாக்களுடைய	தேரூர்ந்தானை	தேரைநடத்தினவனை
பண்ணின் மேல்	ஸேநாவிந்யாஸத்தோடு கூடி	நண்ணி	ஆசைப்பட்டு
		நான்நாடி நறையூரில் கண்டேனே.	

வ்யா.—எட்டாம்பாட்டு. (மண்ணின் மீபாரமித்யாதி) எல்லாவற்றையும் பொறுக்கக்கடவ பூமி, "பொறுக்கப்போகிறதில்லை'' என்ன; அதினுடைய பா(ஞா)ரத்தைப் போக்குகைக்காக, மறத்தையுடைய கர்ண துர்யோதநாதிகள் கையு மணியும் வகுத்து மேலிட்டுவந்த பரிகரமடைய மீளவும் அவ்வூரில் போகாதே வீரஸ்வர்க்கத்தை ப்ராபிக்கும்படி, அர்ஜுநனுடைய தேரை நடத்தினவனை. (நண்ணி நான்

நாடி.) ஆசையுடையேனைப் பெற்ற; அவ்வாசைக்கு அநுரூபமாகத் திருநறையூரிலே காணப்பெற்றேன். ... ... (௮)

அரு—எட்டாம்பாட்டு. (மண்ணித்யாதி) (௪) †“నకిఞ్చిత్పర్వతాభారం నాభారం సప్తసాగరమ్। స్వామిద్రోహ మిదంభారం భారం విశ్వాసపాతకమ్ - நகிஞ்சித் பர்வதாபாரம் நாபாரம் ஸப்தஸாகரம் । ஸ்வாமித்ரோஹ மிதம் பாரம் பாரம் விஸ்வாஸபாதகம்” என்கிறத்தை உட்கொண்டருளிச்செய்கிறார் (எல்லாவற்றையு மித்யாதி). மண்ணின்மேலே யுத்தப்பண்போடே என்று சப்தார்த்தமா யருளிச்செய்கிறார் (கையுமணியும் வருத்து) என்று.

மூ — பொங்கேறு நீள் சோதிப் பொன்னாழி தன்னோடும்
சங்கேறு கோலத்தடக்கைப் பெருமானைக்
கொங்கேறு சோலைக் குடந்தைக் கிடந்தானை
நங்கோனை நாடி நறையூரில் கண்டேனே. (௯)

பதம்.	உரை.	பதம்.	உரை.
பொங்குஏறு	மென்மேலும் ஸம்ருத்	தடம் கை	பரந்திருந்துள்ள திரு
	தி அதிசயித்து		க்கைகளையுடைய
	வாராநின்ற	பெருமானை	ஸர்வேஸ்வரனாய்,
நீள் சோதி	அபரிச்சிந்நமான	கொங்கு ஏறு	தேன் மிகுத்திருக்கிற
	தேஜஸ்ஸையு	சோலை	பொழில்சூழ்ந்த
பொன்	ஸுந்தரமான [டைய	குடந்தை	திருக்குடந்தையில்
ஆழிதன்னோ	ஸுதர்சநாழ்வானோடு	கிடந்தானை	கண்வளர்ந்தருளும்அவ
டும்	கூட [து		னாய், [வனை
சங்கு	ஸ்ரீ பாஞ்சஜந்யமான	நம்கோனை	நமக்கு ஸ்வாமியான
ஏறு	குடிகொண்டிருக்கிற	நாடி நறையூரில் கண்டேனே. (௯)	
கோலம்	அழகியதாய்		

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (பொங்கேறு நீள் சோதியித்யாதி) மிகைத்து ஆற்றுப் பெருக்குபோலே ஏறிவாராநின்றுள்ள நிரவதிக தேஜஸ்ஸையுடைத்தாய் ஸ்ப்ருஹணீயமாயிருக்கிற திருவாழியோடே கூட, ஸ்ரீபாஞ்சஜந்யத்துக்கும் குடியிருப்பான அழகிய திருத்தோள்களையுடைய ஸர்வேஸ்வரன். ஆழ்வார்களை யொழியவே வெறும்புறத்திலே ஆலத்திவழிக்க வேண்டும்படியாய்த்து திருத்தோள்களழகிருக்கும்படி. ஆபரணத்துக்கும் ஆபரணம்போலே.

(கொங்கேறு சோலையித்யாதி) பரிமளமாதல், தேனாதல், பரமபதத்திலிருப்பு நித்யஸூரிகளுக்காயிருக்குமாபோலே நமக்குஸ்வாமி

---

(௪) † இந்தஸ்லோகத்தை ப்ரத்யந்தரங்களைக்கொண்டு சுத்தமாக்கிக்கொள்ளவேணும்.

யானவனை, நடக்காகவந்து நிற்கிற திருநறையூரிலே காணப்பெற்றேன். ... ... (௯)

அநு.—ஒன்பதாம்பாட்டு. (பொங்கித்யாதி) (௧) "சோடாதென்கோவலன்" என்கிறபடியே - ஆழ்வார்க்கு க்ருஷ்ணாவதாரமாக அநுஸந்திக்கலாம்படி யிருந்தபடியாலே, கீழ் ப்ரஸ்துதமான க்ருஷ்ணாவதாரத்தை அநுஸந்தித்தவுடனே ஆராவமுதமூற அநுபவிக்கிறாரென்று ஸங்கதி.

"நங்கோனை" என்றதுக்குத் தாத்பர்யம் (பரமபதத்தி லித்யாதி). (௯)

மூ.—மன்னுமதுரை வசுதேவர் வாழ்முதலை
நன்னறையூர் நின்றநம்பியை வம்பவிழ் தார்க்
கன்னவிலும் தோளான் கலியனொலி வல்லார்
பொன்னுலகில் வானவர்க்குப் புத்தேளிராகுவரே. (௧௦)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பதம்.	உரை.
மன்னு	பகவத்ஸம்பந்தம் மாருதே பொருந்தியிருக்கிற
மதுரை	ஸ்ரீ மதுரையில்
வசுதேவர்	வஸுதேவருடைய
வாழ்	ஜீவநமாகிற வாழ்ச்சிக்கு
முதலை	காரணபூதனாய்,
நல் நறையூர்	விலக்ஷணமான திருநறையூரிலே
நின்ற	எழுந்தருளியிருக்கிற
நம்பியை	கல்யாணகுணபூர்ணனவன் விஷயமாக,
வம்புஅவிழ் தார்	பரிமள மலராகின்ற மாலையையுடையராய்
கல்நவிலும்	கல்லென்றுசொல்லப்படுகிற (த்ருடமான)
தோளான்	புஜங்களையுடைய
கலியன்	ஆழ்வார் [ரான
ஒலி	அருளிச்செய்த இப்பத்துப் பாசுரங்களை [கள்
வல்லார்	அப்யஸிக்க வல்லவர்
பொன் உலகில்	அழகியதான பரமபதத்தில் (போய்)
வானவர்க்கு.	(அங்குள்ள)நித்யஸூரிகளுக்கு [ராக)
புத்தேளிர்	தேவர்களாக (பூஜ்ய
ஆகுவர்	ஆகப்பெறுவர்கள்.

வ்யா.—பத்தாம்பாட்டு. (மன்னுமதுரை யித்யாதி) ஸித்தாஶ்ரமமாய் ஸ்ரீவாமநனிருந்து தபஸ்ஸுபண்ணி, ஸ்ரீ சத்ருக்நாழ்வான் வன்னியமறுத்துப் படைவீடுசெய்து, ஸர்வேஶ்வரன் தானுகந்து வந்தவத

ரித்து, ஆனைபடும் அடவிபோலே பசவத்ஸம்பந்தம் மாறுததேசம். (வசுதேவரித்யாதி) ஸ்ரீவஸுதேவருடைய ஸத்தைக்கு நிமித்தபூதனாயுள்ளவனை. இவனைக்கண்டு அத்தாலே உளராயாய்த்துத் திரிவது. (நன்னறையூரித்யாதி) ஸ்ரீமதுரையிற்காட்டிலும் மிக்க நன்மையையுடைத்தான திருநறையூரிலே நிற்கிற கல்யாணகுண பூர்ணனை.

(வம்பவிழ்தாரித்யாதி) செவ்விமாலையையும் அதுக்காஶ்ரயமாய் கல்லென்றுசொல்லப்படும் திண்ணிய தோளையுமுடையரான திருமங்கையாழ்வார் ஒலியுடைத்தாம்படி யருளிச்செய்த தமிழ்த்தொடை வல்லவர்கள், பரமபதத்திலே அங்குள்ள நித்யஸூரிகளுக்குத் தைவங்களாவர்கள். (க) "வைகுந்தன் தமரெமர்" என்றிறே அவர்கள் சொல்லுவது; அவர்களுக்கு ஆஶ்ரயணீய ராவர்கள். ... (௧௦)

பேரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

அநு.—பத்தாம்பாட்டு. (மன்னித்யாதி) மன்னுதல் - பொருந்துதலாய், பகவானால் பொருத்தமுடைமையை யருளிச்செய்கிறார் (ஸித்தேத்யாதி).

(படுகை) உண்டாகை. வாழ்ச்சிக் குறுப்பானபிள்ளை யென்றாய், தாத்பர்ய மருளிச்செய்கிறார் (ஸ்ரீ வஸுதேவரித்யாதி).

"புத்தேளிர்" என்றதினர்த்தம் (தைவங்களாவர்கள்) என்றது. (௧௦)

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஆறும்பத்தில் எட்டாந்திருமொழி முடிந்தது.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஆறும்பத்து ஒன்பதாந்திருமொழி

பெடையடர்த்தப்ரவேசம்.

வ்யா.—"நான் சென்றுநாடி நறையூரில் கண்டேன்" என்று ஆஶ்ரயணீயவஸ்துவை ஒரு தேசவிசேஷத்தில் போய்க்காண்கை யன்றிக்கே ஸம்ஸாரபூமியிலே திருநறையூரிலே காணப்பெறுங்கையால் வந்த அலப்ய(ஞ்ஜ)லாபத்தாலே ஹ்ருஷ்டரானார்; "அவனைக்காணப்பெற்ற

(க) தி-வாய்-க௦-௯-௯.

பின்பு அவன் ஸ்வரூபத்துக்கும் நம் ஸ்வரூபத்துக்கும் அநுரூபமான வ்ருத்தி விசேஷத்தைப் பண்ணப்பார் கிடாய் நெஞ்சே!'' என்று திருவுள்ளத்தைக் குறித்தருளிச்செய்கிறார். திருநறையூரில் திர்யக்குக்களுமகப்படப் பேடைப்ரதாநமாயாய்த்திருப்பது; ஆகையாலே அங்கு நிற்கிறநம்பிக்கும் பிராட்டி ப்ராதாந்யமுண்டாகக்கடவதே; ஆகையாலே ஆஶ்ரயணீயதை குறைவற்ற தேசமாய்த்து. க்ஷணந்தோறும் ஸுகுமாரராயிருக்குமவர்கள் முகத்திலே நீர் எறிட்டுக்கொள்ளுமா போலே ப்ராப்தியளவும் ப்ரபத்தி பண்ணுநிற்பராய்த்து. (க)*ஸக்ருதே(दे)வவுக்கு "ஸஹமைஸவ" என்று ஆழ்வான் நிர்வஹிப்பதொரு பொருளுண்டிறே; "ஒரு ஜந்மமாக ப்ரபத்தி பண்ணுமது சாலவும் அஸக்ருத்தாயிருந்ததோ? பெறுகிற பேற்றைப் பார்த்தால்'' என்றருளிச்செய்தார் எம்பார். பக(भग)வல்லாப மொழியப் புறம்பு த(ध)ரிக்க வல்லரல்லர், இதொழிய வேறேயுமொரு உபாயமுண்டென்றிருக்குமவரல்லர்; வேறேயுமொரு உபாயமுண்டென்றிருக்கும்படியன்றிறே இதிலுண்டான நிலே. ... ... *

அரு. — பெடையடர்த்த ப்ரவேசம்.—(அநுரூபமான வ்ருத்தி விசேஷத்தை) என்றது- அநந்யபோக்ய(भोग्य)த்வாநுகுணமான ப்ரபத்தியை என்றபடி. "பெடையடர்த்த'' இத்யாதியாலே ஸ்த்ரீ ப்ராதாந்யத்தையிட்டு விசேஷித்ததுக்கு உட்கருத்தை யருளிச்செய்கிறார் (திருநறையூரிலேயித்யாதி). (உ) *ஏழையேதலனிலே ப்ராப்திக்காக பூர்ணப்ரபத்தி பண்ணினபின்பு, எம்பெருமான் தம்முடைய ஸ்வாதந்த்ர்யத்தாலும் இவருடைய உகந்தருளின நிலங்களில் ப்ராவண்யத்தாலும் இங்கே இன்னும் வைத்துக்கொண்டு அநுபவிக்கத்தேட, அப்படி யநுபவித்துக்கொண்டுவருகிற இவர், ப்ரபத்திக்குக் குறைவற்ற தேசமான மட்டிலே மீளவும் சரணமடைவானென்னென்ன; அந்த ப்ரபத்திதானும் பரமபோக்ய(भोग्य)மாகையாலே விடமாட்டாமல் பண்ணுகிறாரென்று பரிஹாரமருளிச்செய்கிறார் (க்ஷணந்தோறுமித்யாதி). ஆர்த்த்யதிசயத்தாலே இவ்வாழ்வார் கீழே பலவிடங்களிலும் ப்ரபத்தி பண்ணினாராய்த்து; இப்போது போக்யதையாலும் விடமாட்டாதே பலகாலும் ப்ரபத்தி பண்ணுகிறாராய்த்து. ஆனால் "ஸக்ருதேவ இத்யாதி வசநத்துக்கு விரோதியாதோ?'' என்னும் ப்ரஸங்கத்திலே, விளம்ப நிஷேதபரமாமித்தனையொழிய இவ்வதிகாரிக்கு ஆவ்ருத்தி நிஷேதமன்றென்றும், ஆவ்ருத்தி நிஷேதபரமானாலும் பக்தி (भक्ति)க்கு வேண்டினப்போலே அநேகஜந்மாவ்ருத்தி வேண்டாமை யாகலாமென்றும் பரிஹா

(க) ரா-யு-கஅ-ஙங.   (உ) ரு-அ.

ரித்த புடைகளுண்டென்று அருளிச்செய்கிறார் (ஸக்ருதேவவுக்தித்யாதி வாக்ய த்வயத்தாலே). (அஸக்ருத்தாயிருந்ததோ) ஸக்ருத் தென்னலாயிருக்குமன்றோ ப்ரபத்தி என்றபடி. (க) "ஜந்மாந்தர ஸஹஸ்ரேஷு-ஜந்மாந்தரஸஹஸ்ரேஷு" இத்யாதி இதுக்கு வேண்டாவிறே. திருநறையூரில் கண்ட மட்டிலே அங்கே நினைத்தபடி அநுபவிக்கக்கோலி, ததர்த்தமாக மீளவும் ப்ரபத்தியை யொழிய அறியாமையாலே ப்ரபத்தி பண்ணுகிறாரென்று யோஜநாந்தர மருளிச்செய்கிறார் (பகவதித்யாதி வாக்யத்ரயத்தாலே). ... *

மூ.—பெடையடர்த்த மடவன்னம் பிரியாது மலர்க்கமலம்
மடலெடுத்து மதுநுகரும் வயலுடுத்த திருநறையூர்
முடையடர்த்த சிரமேந்தி மூவுலகும் பலிதிரிவோன்
இடர்கெடுத்த திருவாளனிணை யடியே யடைநெஞ்சே. (க)

பதம்.	உரை.	பதம்.	உரை.
பெடை	பேடையினாலே	முடைஅடர்த்த	துர்க்கந்தம் மிக்க
அடர்த்த	ப்ரணய கலஹத்தில் நெருக்கப்பட்டதாய் (அத்தாலே)	சிரம்	ப்ரஹ்ம கபாலத்தை
மடம்	(அப்பேடைக்கு) பவ்யப்பட்டதான	ஏந்தி	கையில்கொண்டு
அன்னம்	ஹம்ஸ பக்ஷியானது	மூவுலகும்	மூன்று லோகங்களிலும்
பிரியாது	(அப்பேடையோடு) விஶ்லேஷியாமல் (எப்போதும்கூடியிருந்து),	பலி	பி(ஃ)க்ஷார்த்தமாக
		திரிவோன்	ஸஞ்சரியாகின்றருத்ரனுடைய
		இடர்	சாபத்தை
கமலமலர்	தாமரைப்பூவில்	கெடுத்த	போக்கின
மடல்எடுத்து	இதழ்களைக்கழற்றிப்பொகட்டு	திருவாளன்	ஶ்ரிய:பதியானவனுடைய
மது	தேனை		
நுகரும்	பானம்பண்ணுகின்ற	இணை	ஒன்றோடொன்று ஸத்ருசமான
வயல்	கழனிகளாலே		
உடுத்த	சூழப்பட்ட		
திருநறையூர்	திருநறையூரிலெழுந்தருளியிருப்பவனாய்,	அடி	திருவடிகளை
		நெஞ்சே	ஓமநஸ்ஸே!
		அடை	ஆஶ்ரயிக்கப்பார்.

வ்யா:—முதற்பாட்டு. (பெடையடர்த்த மடவன்னம்) பூவிலே ஸஞ்சரிக்கையாலே பேடைக்குச் சேவலின்பக்கலிலே எப்போதுமொக்க அதிசங்கை வர்த்தியாநிற்குமாய்த்து. பேடையாலே அடர்க்கப்பட்ட மடவன்னமானது. மடவன்னம்போய், அத்தலையித்தலையானபடி;-பல் காட்டுவது, காலைப்பிடிப்பது, இரப்பதாகாநிற்கும்.

(க) லக்வத்ரிஸ்ம்ருதி-

(பிரியாது) ஒருக்ஷணம் இத்தைவிட்டுப் புறம்புபோகாதே. "இதுக்கு இனியது கொடுவந்து இடவேணும்" என்று மதுபானார்த்தமாகவும் போகாதே. (மலர்க்கமலம் மடலெடுத்து) வேறொருபூவிற்போயன்றிக்கே அந்தப்பூத் தன்னிலேயிருந்து, மது நிரம்பின பூவில்நின்றும், மடலை வாங்கித்தான் ஸேவிப்பது, பேடையை ஸேவிப்பிப்பதாகாநிற்கும்.

இதுவாய்த்து இவ்வூரில் வயலிருக்கும்படி. உள்ளுநிற்கிறவன் எத்தனையேனும் அபிமாநிகளுக்கும் புகலாம்படி யிருக்குமவன். (முடையித்யாதி) லோககுருவுமாய் தனக்குப் பிதாவுமாயிருந்தவனுடைய தலையையறுத்து அத்தாலே பாதகியாய், முடைமிக்கிருந்துள்ள - துர்க்கந்தம் மிக்கிருந்துள்ள, ப்ரஹ்மசிரஸ்ஸைத் தரித்து, கூறுசெய்த ஊரிலே கையும் கைத்தலையுமாய்த் திரியும் கூறுசெய்வானைப்போலே, ஈஶ்வராபிமாநியாய் தான் செலுத்திப்போந்த பூமிப்பரப்பெங்கும் பிக்ஷைபுக்குத் திரிந்தானாய்த்து. (இடர்கெடுத்த திருவாளன்) "அருமந்தானொரு மதிப்பன் இப்படி எளிவரவு படுவதே!" என்று திருவுள்ளம் புண்பட்டு, அவனுடைய சாபத்தைப் போக்கினானாய்த்து. அதுக்கடியென்னென்னில், (திருவாளன்)(௧)"𑌤𑌤𑍍𑌰 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌃 𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌨𑍍 - தத்ர நாராயண ஶ்ரீமாந்" என்கிறபடியே ஶ்ரியஃபதியாகையாலே. அவனுடைய (இணையடியே யடைநெஞ்சே) அபிமாநிகளும் ஆபந்நரானவன்று பற்றும் திருவடிகளை நீ பற்றப்பார். ... (௧)

அரு.—முதற்பாட்டு. (பெடையித்யாதி) ஸ்த்ரீதர்மமன்றோ மடப்பமென்ன வருளிச்செய்கிறார் (பேடையித்யாதி). (மடவன்னம் போய்) என்றது - மடவன்னமாயிருக்கைபோய் என்றபடி. இப்படிபவ்யமான சேவல் பிரிய ப்ரஸக்தி ஏதென்ன வருளிச்செய்கிறார் (இதுக்கித்யாதி). பிரியாதேறுகரும் என்கையாலே போக்த்ரு (𑌭𑍋𑌕𑍍𑌤𑍃) ஸாஹித்யத்தை விவக்ஷித்துத், தாத்பர்ய மருளிச்செய்கிறார் (வேறொரு வித்யாதி).

மேலுக்கவதாரிகை (இதுவாய்த்தித்யாதி). இத்தால் - புருஷவஶ்யதையும் ஸ்வயமேவ வத்ஸலனாயிருக்குமென்றும் சொல்லிற்றாய்த்து. (ஆய்த்து) என்றவனந்தரம், ருத்ரன்என்று சேஷம். ... ... (௧)

மூ.—கழியாரும் கனசங்கம் கலந்தெங்கும் நிறைந்தேறி
வழியார முத்தீன்று வளங்கொடுக்கும் திருநறையூர்
பழியாரும் விறலரக்கன் பருமுடிகளவை சிதற
அழலாரும் சரந்துரந்தா னடியிணையேயடைநெஞ்சே. (௨)

---

(௧)

பதம்.	உரை.
கழி	உவர்க்கழிகள்
ஆரும்	நிறையும்படியாக
கனம்	பெருமைபொருந்திய
சங்கம்	சங்குகளானவை
எங்கும்	எல்லாவிடங்களிலும்
கலந்து	வந்துசேர்ந்து
நிறைந்து	வரிசை வரிசையாக விருந்து
ஏறி	(பின்பு அக்கழிகளில் நின்றும்) மேலே வந்து
வழிஆர	வீதிகள் நிறையும்படி
முத்து	முத்துக்களை
ஈன்று	சுரந்து
வளம்கொடுக்கும்	(இப்படி) ஸம்ருத்தியைக்கொடாநின்ற
திருநறையூர்,	
பழிஆரும்	மிக்க அபவாதத்தையுடையனாய்
விறல்	மிடுக்கனான
அரக்கன்	ராவணாஸுரனுடைய
பரு	பெருத்த
அவைமுடிகள்	அந்த (பத்துத்) தலைகளும்
சிதற	அறுந்து விழும்படியாக
அழல் ஆரும்	நெருப்புப்போன்ற
சரம்	பாணங்களை
துரந்தான்	ப்ரயோகித்தவனுடைய

அடிஇணையே அடைநெஞ்சே! (௨)

வ்யா.—இரண்டாம்பாட்டு. (கழியாருமித்யாதி) ஸமுத்ரத்தில் நின்றும் சங்குகளானவை கழிநிறையும்படியாக வந்து புகுருமாய்த்து உப்புநீரில் நின்றும் ரஸித்த ஜலத்துக்காக. (கனசங்கம் கலந்தெங்கும் நிறைந்தேறி) கர்ப்ப கேத(खे)த்தாலே ஐப்பசித் திருநாளுக்கு ப்ராணிகள் ஸர்வதோ தி(द)க்கமாக வந்து புகுருமாபோலே, எங்குமொக்கக் கலந்து ஒழுகுமாறுதேவந்து புகுந்து. (வழியார முத்தீன்று) ஊரேற்றின தார்மிகர் அவகாச முண்டாம்படி குறுந்தெருவும் நெடுந்தெருவு முண்டாக்கினார்கள்; இவை ஸஞ்சாரயோக்யதை யில்லாதபடி வழிகளிலே முத்தை மலையாகச் சுரவாநிற்கு மாய்த்து.

(பழியாரும்) ஜநநி என்று வாசிபார்க்க மாட்டாமையாலே மிக்க பழியைத் தரித்திருப்பானாய், முன்கை மிடுக்காலே தோன்றினபடி நடந்து திரிகிற ராவணனுடைய தலைகள் சிதறும்படியாக, எதிரிகளை அம்பாய் நலிகையன்றிக்கே நெருப்பாகச் சுடுகிற அம்புகளை நடத்தினவனுடைய. ... ... (௨)

அரு.—இரண்டாம்பாட்டு (கழியாரு மித்யாதி) கீழ்ப்பாட்டில் - தலையறுத்துத் திரிந்தபாதகியையும் அருள்செய்தபடி சொல்லிற்று; அப்படிப் பட்ட குணதி(धि)கனுங்கூட ஸர்வதா (दा) (க) "நகமேயம்" என்றால் தலையறுத்து விடுமாகையாலே "நகமேயம்" என்னப்பாரார்தே, அடைநெஞ்சே

(க) ரா-யு-௩௬-௧௧.

என்கிறாரென்று ஸங்கதி.

"நிறைந்து" என்றதினர்த்தம் (ஒழுகுமாறுதே) என்றது. ... (௨)

மூ.—சுளைகொண்ட பலங்கனிகள் தேன்பாயக் கதலிகளின்
திளைகொண்ட பழம் கெழுமி திகழ் சோலைத் திருநறையூர்
வளைகொண்ட வண்ணத்தன் பின்தோன்றல் மூவுலகோடு
அளைவெண்ணெயுண்டான் றனடியிணையே யடைநெஞ்சே. (௩)

பதம்.	உரை.
சுளைகொண்ட	சுளைகளையுடைத்தான
பலங்கனிகள்	பலாப்பழங்களில் நின்றும்
தேன்பாய	தேன் வெள்ளமிடாநிற்பதாய்,
கதலிகளின்	வாழைமரங்களில்
திளைகொண்ட	பருத்திருந் துள்ள
பழம்	பழங்களானவை
கெழுமி	நெருங்கி
திகழ்	விளங்காநின்றதான
சோலை	சோலைகளையுடைய
	திருநறையூர்,
வளைகொண்ட	சங்கு வர்ணம்போன்ற

பதம்.	உரை.
வண்ணத்தன்	வர்ணத்தையுடைய பலராமனுக்கு
பின்தோன்றல்	பின்பு (தம்பியாக) அவதரித்தவனாய்,
மூவுலகோடு	மூன்று லோகங்களோடுகூட
அளை	கடையப்பட்ட தயிரையும்
வெண்ணெய்	வெண்ணெயையும்
உண்டான்தன்	அமுது செய்தவனுடைய
	அடியிணையே அடைநெஞ்சே!

வ்யா.—மூன்றாம்பாட்டு. (சுளைகொண்ட வித்யாதி) சுளைமிக்கிருந்துள்ள பலாப்பழமானது தேனொழுக, வாழைகளில் பருத்த பழங்களானவை நெருங்கி விளங்காநின்றுள்ள சோலையாலே சூழப்பட்ட திருநறையூர்.

(வளைகொண்ட வண்ணத்தன்) நம்பி மூத்தபிரானுக்குப் பின் பிறந்தவன். (மூவுலகித்யாதி) பூமிப்பரப்போடே கூட, தயிரையும் வெண்ணெயையும் அமுதுசெய்தவனுடைய திருவடிகளை அடை.

அநு.—மூன்றாம்பாட்டு. (சுளையித்யாதி) ஸர்வாத்மனா "நமேயம்" என்பாரைத் தலையறுப்பானாயிருந்தவனென்றார் - கீழ்ப்பாட்டில்; அநுகூலர் விஷயத்திலே கரஸ்பர்சமுள்ள த்ரவ்யமல்லது செல்லாதானாயிருப்பானாகையாலே அவனை அடையென்கிறாரென்று ஸங்கதி.

"திளை" என்றதின் பலிதார்த்தம் (பருத்த) என்றது.

"அளை" என்றது - அளையப்பட்டது என்றாய், அதினர்த்தம் (தயிரையும்) என்றது. ... ... (௩)

மூ.—துன்றொளித் துகில்படலம் துன்னி யெங்கும் மாளிகைமேல்
நின்றார வான் மூடும் நீள்செல்வத் திருநறையூர்
மன்றாரக் குடமாடி வரையெடுத்து மழை தடுத்த
குன்றாரும் திரடோளன் குரைகழலே யடைநெஞ்சே. (௪)

பதம்.	உரை.	பதம்.	உரை.
துன்று	நெருங்கி யிருக்கும்படி		திருநறையூர்,
ஒளி	வரிசையாகக் கட்டப்பட்ட	மன்று ஆர	வெளிநிலமெங்கும்
துகில்படலம்	வஸ்த்ரங்களினால் செய்த கொடிகளின் ஸமூஹமானவை	குடம் ஆடி	குடக்கூத்தாடியும்
மாளிகைமேல்	க்ருஹங்களின் மேலே	வரை எடுத்து	கோவர்த்தந மலையை யெடுத்து
எங்கும	எல்லாவிடங்களிலும்	மழை தடுத்த	மழையைப் பரிஹரித்த
துன்னி	நிபிடமாய்	குன்று ஆரும்	மலையோடொத்ததாய்
ஆரநின்று	பரம்பியிருந்து	திரள்	திரண்டிருந்துள்ள
வான்	ஆகாசத்தை	தோளன்	புஜங்களை யுடையவனுமானவனுடைய
மூடும்	மறையாநின்றதாய்	குரை	சப்தியாநின்ற வீரக்கழலையுடைய
நீள்	அபரிச்சின்னமான	கழல்	திருவடிகளை
செல்வம்	ஸம்பத்தை யுடையதான	அடைநெஞ்சே!	(௪)

வ்யா.—நாலாம்பாட்டு. (துன்றொளி) நெருங்கி ஒழுங்காயிருந்துள்ள துகில்களாலே சமைந்த கொடிகளானவை, மாளிகைகளெங்குமாகப் பரம்பி நெருங்கி, ஆகாசம் தோற்றாதபடி மறைக்கிற நிரவதிக ஸம்பத்தையுடைய திருநறையூர்.

(மன்றாரவித்யாதி) மன்றில் பரப்படையப் பாழ்தீரும்படி குடக்கூத்தாடி. (வரையெடுத்து) இந்த்ரன் வர்ஷிப்பிக்க மலையையெடுத்து வர்ஷத்தைப் பரிஹரித்த. (குன்றாரும் திரடோளன்) மலையாலே மலையை யெடுத்தாப்போலே திரண்ட தோளையுடையவன். *

அரு. — நாலாம்பாட்டு. (துன்றித்யாதி) ஆஶ்ரித கரஸ்பர்சமுள்ள த்ரவ்யமல்லது செல்லாதவனென்றார் - கீழ்ப்பாட்டில்; அவ்வாஶ்ரிதரிலே விரோதமுண்டானால் தான் மலையெடுத்தாகிலும் விரோதத்தைப் பரிஹரித்தவன்கிடாய், அடை, என்கிறாரென்று ஸங்கதி.

"ஒளி" என்றதினர்த்தம் (ஒழுங்கு) என்றது. துகில்களுடைய, படலத்தாலே - ஸமூஹத்தாலே என்று உட்கொண்டு அருளிச்செய்கிறார்

(அகில்களாலே) என்று.

ஆர்தல் - பொருந்துதலாய், குன்றொடொத்த என்று விவக்ஷித்துத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (மலையாலே யித்யாதி) ... ... (௪)

மூ.—அகில்குறடும் சந்தனமுமம் பொன்னுமணி முத்தும்
மிகக்கொணர்ந்து திரையுந்தும் வியன் பொன்னித்திருநறையூர்
பகல் கரந்த சுடராழிப் படையா னிவ்வுலகேழும்
புகக் கரந்த திருவயிற்றன் பொன்னடியே யடைநெஞ்சே. (௫)

பதம்.	உரை.	பதம்.	உரை.
அகில்குறடும்]	தேவதாருக்கட்டைகளையும் [யும்	கரந்த	மறைத்த
		சுடர்	உஜ்ஜ்வலமான
சந்தனமும்	சந்தநக் கட்டைகளை	ஆழி	சக்ரத்தை [ய்,
அம்பொன்னும்	அழகிய ஸுவர்ணங்களையும் [யும்	படையான்	ஆயுதமாக வுடையனு
அணிமுத்தும்	அழகிய முத்துக்களை	இவ்வுலகு ஏழும்	இந்த ஸப்தலோகங்களையும்
மிக கொணர்ந்து	அதிகமாகத் திரட்டிக்கொண்டுவந்து	புக	உள்ளே ப்ரவேசிக்கச்செய்து
திரை	அலைகளானவை	கரந்த	(ஒருவரு மறியாதபடி) ஒளித்த
உந்தும்	தள்ளாநின்ற		
வியன்	ஆஶ்சர்யகரமான,	திருவயிற்றன்	திருவுதரத்தை யுடையவனு மானவனுடைய
பொன்னி	திருக்காவேரியை யுடைய		
	திருநறையூர்,	பொன்	ஸௌந்தரமான
பகல்	(பாரதயுத்தத்தில்) ஸூர்யனை		அடியே அடைநெஞ்சே! (௫)

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (அகிலித்யாதி) அகிற்குறடும், சந்தனமும், அம்பொன்னும், அழகிய முத்தையும், போ(ஃ)க்தாக்களவல்லாதபடி கனக்கக் கொடுவந்து தள்ளாநின்றுள்ள ஆஶ்சர்யமான பொன்னியை யுடைய திருநறையூர்.

(பகற்கரந்த சுடராழிப் படையான்) நிரவதிக தேஜஸ்ஸாலே தேஜ:பதார்த்தத்தை மறைத்தானாய்த்து. ஆதித்யனுடைய தேஜஸ்ஸு கண்ணாலே முகக்கலாம்; திருவாழி யாழ்வானுடைய தேஜஸ்ஸு கண்கொண்டு முகக்கவொண்ணாதபடி யிருக்கையாலே இருண்டு காட்டிற்றாய்த்து. (இவ்வுலகேழும்) லோகங்களேழையும் வயிற்றிலே வைத்து, ப்ரளயம் தேடிவந்தால் "இங்குண்டோ" என்று பண்டையிலு மிளைத்துக்காட்டும் திருவயிற்றை யுடையவன். (பொன்னடியே

யடை) தன்னைப்பற்றினாரை உள்ளேயிட்டுத் தன்னை ப்ரளயத்துக்கு இலக்காக்கி நோக்குமவன் திருவடிகளிலே அடையப்பார். ... (௫)

அ௫— அஞ்சாம்பாட்டு. (அகிலித்யாதி) கீழ்ப்பாட்டிலே - ஒரு ஊருக்காக வந்த வர்ஷப்ரளயத்தைப் போக்கினபடி சொல்லிற்றாய், இதில் - லோகத்துக்காகவந்த ப்ரளயத்துக்கு உட்படாதபடி வயிற்றிலே வைத்திருந்தவனென்கிறாரென்று ஸங்கதி.

“வியன்” என்றதினர்த்தம் (ஆஶ்சர்யமான) என்றது.

“பகல்” என்றதினர்த்தம் (ஆதித்யன்) என்றது. தேஜஃ பதார்த்தத்தைக்கொண்டு மறைக்கும்போது இருள்வருவானென்னென்ன வருளிச்செய்கிறார் (ஆதித்யனுடைய வித்யாதி). பொன் - ஸ்ப்ருஹணீயதையாய், அதுக்கு ஹேதுவை யருளிச்செய்கிறார் (தன்னையித்யாதி). ... ... (௫)

மூ.—பொன்முத்து மரியுகிரும் புழைக்கைம் மா கரிக்கோடும்
மின்னத்தண்டிரை யுந்தும் வியன்பொன்னித் திருநறையூர்
மின்னொத்த நுண்மருங்குல் மெல்லியலைத் திருமார்பில்
மன்னத்தான் வைத்துகந்தான் மலரடியே யடைநெஞ்சே. (௬)

பதம்.	உரை.
பொன்	பொன்னையும்
முத்தும்	முத்துகளையும்
அரி	ஸிம்ஹத்தினுடைய
உகிரும்	நகங்களையும்
புழை	த்வாரத்தையுடைய
கை	துதிக்கையையுடைய
மா	பெரிய [தான
கரி	ஆனையினுடைய
கோடும்	கொம்புகளையும்,
மின்ன	(மேற்கே) மின்னல் கண்டவளவிலே
தண்	குளிர்ந்த ஜலத்தினுடைய
திரை	அலைகளானவை
உந்தும்	(திரட்டிக்கொண்டுவந்து) ஒதுக்காநின்ற

வியன்பொன்னித் திருநறையூர்,

பதம்.	உரை.
மின் ஒத்த	மின்னோடுஸத்ருசமாய்
நுண்	அதிஸூக்ஷ்மமான [ய்
மருங்குல்	இடையையுடையளா
மெல் இயலை	ஸௌகுமார்யத்தை ஸ்வபாவமாக வுடையளான பெரியபிராட்டியை
திருமார்பில்	அழகிய மார்பிலே
மன்ன	பொருந்தும்படியாக
தான்	தானே [டு
வைத்து	ஸ்தாபித்துக்கொண்
உகந்தான்	ஸந்தோஷித்தவனுடைய
மலர்	புஷ்பம்போல் ஸுகுமாரமான

அடியே அடைநெஞ்சே! (௬)

வ்யா.—ஆறும்பாட்டு. (பொன்முத்தும்) ஸிம்ஹங்கள் ஆனைகளோடேகூடப் பொருது அதின் மஸ்தகத்தைக் கிழித்து அது உதிர்த்த முத்துக்களையும், மலைகளிலுண்டான பொன்னையும், ஸிம்ஹங்களுடைய உகிரையும், ஆனைக்கொம்புகளையும், ஆற்றுத்தலையிலே மேற்கே மின்ன, தண் திரைகளானது - நீர்வரவானது, கொடுபோந்து தள்ளாநிற்குமாய்த்து.

(மின்னொத்தவித்யாதி) மின்போலே நுண்ணிய இடையையுடையளாய், ஸௌகுமார்யத்துக்குத் தானும் ஒப்பாகாதபடியிருக்கிற பெரிய பிராட்டியாரை, திருமார்வில். (மன்ன)நாம் சென்று திருவடிகளைக் கிட்டினால் அவன் நம்முடைய தோஷங்களைக் கணக்கிடுவானோ வென்னில்(க) ““నకశ్చిన్నా ఽపరాధ్యతి - நகஶ்சிந்நா ऽபராத்யதி” என்று அத்தைப் பொறுப்பிக்கும் பிராட்டியை உகந்து எப்போதும் திருமார்விலே வைத்துக்கொண்டிருக்கிறவனுடைய ஸௌகுமாரமான திருவடிகளை அடை. மதுப்பில் அர்த்தத்தைச் சொல்லுகிறது. ... (சு)

அரு.—ஆறும்பாட்டு. (பொன்னித்யாதி) கீழெல்லாம் ஆபத்ஸகத்வாதிகளைச் சொல்லும் புடையாலே நாராயண சப்தார்த்தத்தை அநுஸந்தித்தாராய், இதில் ஶ்ரீமத்பதார்த்தாநுஸந்தாநம் செய்தருளுகிறாரென்று ஸங்கதி.

முத்துக்களுக்கு ப்ரஸக்தி யருளிச்செய்கிறார் (ஸிம்ஹங்களித்யாதி). “புழை” என்று - துளையாய், அப்படிப்பட்ட கையையுடைத்தாய், மாமஹத்தான, கரியென்று சப்தார்த்தம் திருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிறார் (ஆனையித்யாதி). ... ... (சு)

மூ.—சீர்தழைத்த கதிர்ச்செந்நெல் செங்கமலத் திடையிடையின்
பார்தழைத்துக் கரும்போங்கிப் பயன்விளைக்கும் திருநறையூர்
கார்தழைத்த திருவுருவன் கண்ணபிரான் விண்ணவர்கோன்
தார்தழைத்த துழாய்முடியன் தளிரடியே யடைநெஞ்சே. (எ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
தழைத்த	ஸம்ருத்தமான	செங்கமலம்	செந்தாமரையினுடை-
சீர்	அழகையுடைய [ன	இடை இடையில்	நடுநடுவே [யவும்
கதிர்	கதிர்களை யுடையதா		
செந்நெல்	செந்நெல் பயிரினு	பார்	க்ரமமாக
	டையவும் (அதினி	தழைத்த	வளராநின்ற
	டையில் முளைத்த)	கரும்பு	கரும்பானது

(க) ரா-யு-ககசு-சச,

ஓங்கி	உயரவெழுந்து
பயன்	பலங்களை
விளைக்கும்	கொடாநின்ற
திருநறையூர்,	
தழைத்த	(ஆகாசமெங்கும்)படிந்திருக்கிற
கார்	மேகம்போன்ற
திருஉருவன்	அழகிய ரூபத்தை யுடையனாய்,
பிரான்	உபகாரகனாய்,
விண்ணவர்	தேவர்களுக்கு
கோன்	ஸ்வாமியாய்,
தழைத்த	ஸம்ருத்தமான
தார்	பூந்தாரையுடைய
துழாய்	திருத்துழாய் சூடின
முடியன்	திருவபிஷேகத்தை யுடையவனுமான
கண்ணன்	க்ருஷ்ணனுடைய
தளிர்	தளிர்போன்ற

அடியே அடைநெஞ்சே! (௭)

வ்யா.—ஏழாம்பாட்டு. (சீர்தழைத்த கதிர்) அழகுமிக்க கதிரையுடைய செந்நெல் - வைத்த கண்மாறாதே கண்டுகொண்டிருக்கவேண்டும்படி தர்சநீயமான கதிரையுடைய செந்நெல், அப்படியிருக்கிற தாமரை. (பார்தழைத்துக் கரும்போங்கி) முதல் தன்னிலே கரும்பிடு நிலத்திலே யாய்த்து செந்நெலை நடுவது; அதுக்குக் களையாக இடையிலே தாமரையெழும்; முன்பு வெட்டிப்போகட்ட கருப்பங்கட்டை பழைய வாஸநை கொண்டெழும்; அது பலிக்க வேணுமென்று அபிஸந்திபண்ணி க்ருஷிபண்ணின செந்நெலுக்கு முன்னே பல(ஃல)த்தைக் கொடுக்கும்.

(கார்தழைத்த வித்யாதி) கழுத்தே கட்டளையாக நீரைப்பருகி, ஆகாசாவகாசம் இடமடையும்படியான வடிவை யுடைத்தாய்த் துளித்துக்கொடுவந்து தோற்றுகிற மேகம்போன்ற வடிவழகையுடையவன். (கண்ணபிரான்) உபகாரசீலனான க்ருஷ்ணன். (விண்ணவர்கோன்) *அயர்வறு மமரர்களதிபதி. (தார்தழைத்த துழாய் முடியன்) உபயவிபூதி நாயகனென்னுமிடந் தோற்ற வைத்த வளயத்தை யுடையவன். … … … … … … (௭)

அநு.—ஏழாம்பாட்டு. (சீரித்யாதி) கீழ்ப்பாட்டில் - ஸ்ரீமத் பதார்த்தத்தை அநுஸந்தித்தாராய், * ச(ஞ)ரண சப்தத்தாலே உபலக்ஷிதமான விக்ரஹ வைலக்ஷண்யத்தை யநுஸந்தித்து, அப்படியாலே, நித்யரோடு அடியாரோடு வாசியற உஜ்ஜீவித்து, அத்தால் க்ருதார்த்தனாய்த் தனிமாலை யிட்டிருக்கு மவனடியை அடையென்கிறாரென்று ஸங்கதி.

“சீர்தழைத்த” என்றது - *செந்நெல் பதத்துக்கும் *கமலப்பதத்துக்கும் விசேஷணமென்றருளிச்செய்கிறார் (அப்படி யித்யாதி). … (௭)

மூ.—குலையார்ந்த பழுக்காயும் பசுங்காயும் பாளைமுத்தும்
தலையார்ந்த விளங்கமுகின் தடஞ்சோலைத் திருநறையூர்
மலையார்ந்த கோலம்சேர் மணிமாடம் மிகமன்னி
நிலையார நின்றான்றன் நீள்கழலே யடைநெஞ்சே. (௮)

பதம்.	உரை.
குலைஆர்ந்த	குலைகளிலே நிறைந்து
பழுக்காயும்	பழுத்திருந்துள்ள கா ய்களும்
பசுங்காயும்	பழுக்கப்போகிற கா ய்களும் [டான
பாளை	பாளைகளிலே யுண்
முத்தும்	முத்துக்களும்
தலை	(இளம்) குலைகளும்(ஆ கிய இவைகளினால்)
ஆர்ந்த	நிறைந்திருக்கிற
இளம் கமுகி ன்	இளம்பருவமான பா க்கு மரங்களை யு டையதாய்
தடம்	விசாலமான
சோலை	சோலைகளை யுடைய திருநறையூர், [தான
மலைஆர்ந்த	மலைபோன்றதாய்,
கோலம்சேர்	அழகியதாய் [விளே
மணிமாடம்	மணிமயமான கோயி
மிக மன்னி	மிகவும் மனப்பொருத் தமுடையவனாய்
நிலைஆர	நிலையையுடையனாக (ஸ்த்திரமாக)
நின்றான்தன்	எழுந்தருளி யிருக்கு மவனுடைய [க்க
நீள்	போக்ய(𑌭𑍋𑌗𑍍𑌯)தையி
கழல்	திருவடிகளை

அடைநெஞ்சே! (௮

வ்யா.—எட்டாம்பாட்டு. (குலையார்ந்த வித்யாதி). குலைமிக்கிருந்துள்ள பழுக்காயும், (பசுங்காயும் பாளைமுத்தும்) ப்ரதமாவஸ்த்தையும் சரமாவஸ்த்தையும் ஒருகாலே கண்டு அநுபவிக்கலாம்படியிருக்குமாய்த்து. (தலையார்ந்த விளங்கமுகு) தலைநிறைந்திருந்துள்ள.

(மலையார்ந்த கோலம்) மலைபோலே தர்சநீயமான திருமணிமாடக் கோயிலினுள்ளே, அவதாரம்போலே தீர்த்தம் ப்ரஸாதியாதே நிலையார நின்றானாய்த்து. நிற்கிறபோதை அழகைக்கண்டு, “இவனிருத்தல் சாய்ந்தருளுதல் செய்து இவ்வழகை இழக்கவரில் செய்வதென்” என்று துணுக்குத் துணுக்கென்ன வேண்டும்படியா யிருக்கும். மலையொத்த ஓக்கத்தை யுடைத்தாய், அழகையுடைய மணிமாடங்கள் மிகவுடைய திருநறையூரிலே மன்னி நிலையாரநின்றான்.

அரு.—எட்டாம்பாட்டு. (குலையித்யாதி) கீழ்ப்பாட்டிலே - (௧) “𑌮𑌾𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌵𑍍𑌰𑌜 - மாம் சரணம்வ்ரஜ” என்று நின்றநிலையை அநுஸந்தித்தாராய்

---

(௧) கீ-௧௮-௬௬.

அதிலும் வ்யாவ்ருத்தமான நிலையென்று சரணத்வத்துக்கு உடலானபடியை அநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

பசுங்காயும் பழுக்காயும் என்னவேண்டி யிருக்க, “பழுக்காயும் பசுங்காயும்” என்பா னென்னென்ன வருளிச்செய்கிறார் (ப்ரதமேத்யாதி). (தலை) கீழ்ச்சொன்ன குலைகள்.

கீழே தாத்பர்ய மருளிச்செய்து, சப்தார்த்தம் காட்டுகிறார் (மலையொந்த வித்யாதி). ... ... (அ)

மூ.—

மறையாரும் பெருவேள்விக் கொழும்புகைபோய் வளர்ந்தெங்கும்
நிறையார வான்மூடும் நீள்செல்வத் திருநறையூர்
பிறையாரும் சடையானும் பிரமனு முன் தொழுதேத்த
இறையாகி நின்றான் றன்னிணையடியே யடைநெஞ்சே. (௯)

பதம்.	உரை.
மறைஆரும்	வேதப்ரதிபாத்யமான
பெருவேள்வி	மஹாயஜ்ஞங்களிலுண்டான
கொழும்புகை	ஸம்ருத்தமான புகையானது
வளர்ந்துபோய்	மேலே கிளம்பிப் போய்
எங்கும்	எல்லாவிடங்களிலும்
நிறைஆர	நிறைந்திருந்து
வான்	ஆகாசத்தை
மூடும்	மறையாநின்றதாய்
நீள் செல்வம்	நிரவதிக ஸம்பத்தையுடையதான
திருநறையூர்,	[த்தான
பிறைஆரும்	சந்த்ரகலையையுடை
சடையானும்	ஜடையையுடையருத்ரனும்
பிரமனும்	ப்ரஹ்மாவும்
முன்	முன்னேநின்று
தொழுது	ஆஸ்ரயித்து
ஏத்த	ஸ்தோத்ரம்பண்ண
இறையாகி	ஸர்வாதிகனாய்க்கொண்டு
நின்றான்தன்	நின்றவனுடைய
இணையடியே	அடைநெஞ்சே! (௯)

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (மறையாருமித்யாதி) வேதோக்தமான மஹாயஜ்ஞங்களை அநபி(4) ஸம்ஹிதப(2)லமாக அநுஷ்டியாநின்றுள்ள ப்ராஹ்மணருடைய ஹோமத்திலுண்டான கொழுவிய புகையானது பரப்புள்ள விடமெங்கும்போய், ஆகாசாவகாசத்தை மறைக்கையாலே ஆகாசம் தோற்றாதபடியிருக்கிற நிரவதிக ஸம்பத்தையுடைத்தான.

(பிறையாரும்) ஸாதநவேஷம் தோற்றும்படி ஜடையையும் போக(4)ப்ராதாந்யம் தோற்ற சந்த்ரனையும் தரித்துக்கொண்டிருக்கிற

ருத்ரனும், அவனுக்கு ஜநகனான சதுர்முகனும், ஸ்தோத்ராதிகளைப் பண்ணி ஆஶ்ரயிக்க. (இறையாகி நின்றான்) லோகத்துக்கு ஆஶ்ரயணீயரா யிருப்பார்க்கும் ஆஶ்ரயணீயனா யிருக்கையாலே ஸர்வாதிகன்; அவன் திருவடிகளையே ஆஶ்ரயிக்கப்பார். ... ... (௯)

அநு. — ஒன்பதாம்பாட்டு. (மறையித்யாதி) கீழ்ப்பாட்டில் - "நிலையாரநின்றான்" என்று அநுஸந்தித்தார்; அந்நிலையிலே வந்து, ஆஶ்ரயணீயரென்று ப்ரமிக்கத்தக்க ப்ரஹ்ம ருத்ரர்களும் வந்தாஶ்ரயியாநின்றார்களாகையாலே, வேறு ஆஶ்ரயணீயரில்லை யென்று நெஞ்சுக்கு அறுதியிடுகிறாரென்று ஸங்கதி.

எங்கும் நிறைந்து, ஆர - பொருந்த என்று சப்தார்த்தமாய், பலிதார்த்த மருளிச் செய்கிறார் (பரப்பித்யாதி). ... ... (௯)

மூ'—திண்களகமதிள் புடைசூழ் திருநறையூர் நின்றானை
வண்களக நிலவெறிக்கும் வயல்மங்கை நகராளன்
பண்களகம் பயின்ற சீர்ப்பாட லிவைபத்தும் வல்லார்
விண்களகத் திமையவராய் வீற்றிருந்து வாழ்வாரே. (௧௦)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

* * *

பதம்.	உரை.	பதம்.	உரை.
திண்	த்ருடமாய்	ஆளன்	ஸ்வாமியான ஆழ்வார்
களகம்	சந்தநப்பூச்சை யுடைத்தான	பண்கள்	காநங்களில்
மதிள்	ப்ராகாரங்களினால்	அகம்	உள்ளேயிருக்கிற(ஸாரமான) காநத்தி
புடை	சுற்றும்	பயின்ற	அருளிச்செய்த [லே
சூழ்	சூழப்பட்ட	சீர்	அழகிய
திருநறையூர்	திருநறையூரில்	இவைபத்துப் பாடலும்	இப்பத்துப் பாசுரங்களையும்
நின்றானை	எழுந்தருளி யிருக்கும் ஸர்வேஶ்வரன் வி	வல்லார்	அப்யஸிக்குமவர்கள்
வண்	அழகிய [ஷயமாக	விண்கள்	ஸ்வர்க்காதி மேலுலகங்களில்
களகம்	ஹம்ஸங்களாகிற		
நிலவு	நிலாவினால்	அகத்து	ஶ்ரேஷ்டமான பரமபதத்தில் (போய்)
எறிக்கும்	ப்ரகாஶியாநின்ற [ன		
வயல்	கழனிகளையுடைத்தா		
மங்கைநகர்	திருமங்கையென்னும் நகரத்துக்கு	இமையவராய்	நித்யஸூரிகளுடன் கலந்தவர்களாய்

வீற்றிருந்து வேறுபாடுதோற்ற விருந்து	வாழ்வார் பகவதநுபவம் பண்ணிஸுகிப்பர்கள்.

வ்யா.—பத்தாம்பாட்டு. (திண்களக மதிள்புடை) திண்ணியதாய், சாந்திட்ட மதிள்களாலே சூழப்பட்டிருந்துள்ள திருநறையூரிலே நிற்கிற ஸர்வேஶ்வரனை. வஸ்துவின் சீர்மைக்குத்தக்க அரண் போருமாய்த்து. அழகியதான அன்னங்களினுடைய ஸஞ்சாரத்தையாதல், அன்றிக்கே, செந்நெற்கதிர்களினுடைய ஒளியாதல். களகமென்று - அன்னத்துக்குப் பேராய், அவையாகிற நிலவையுடைத்தான வயலாலே சூழப்பட்ட திருமங்கையிலுள்ளார்க்கு நிர்வாஹகரான திருமங்கையாழ்வார். (பண்களகம்) பண்களினுடைய அகமான பண்ணிலே சொன்ன இப்பாடல் பத்தும் வல்லார். (விண்களகத்திமையவராய்) போக ([illegible])பூமிகளில் ப்ரதாநமான பரமபதத்திலேபோய் நித்யஸூரிகளோடே ஒரு கோவையாய், அவனை நித்யாநுபவம் பண்ணப்பெறுவர்கள். ... ... (௧௦)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

* * *

அரு.—பத்தாம்பாட்டு. (திண்ணித்யாதி) "களகம்" என்றதினர்த்தம் (சாந்து) என்றது. "அகம்" என்று - உள்ளுக்குப்பேராய், பண்களில் ரஸமான பண்ணுடைய என்றாய், அருளிச்செய்கிறார் (பண்களினித்யாதி). விண்களில் - ஸ்வர்க்காதிகளில், அகம் - ஸாரமாய், அத்தால் ப்ரதாநவிடத்து என்றாய் அருளிச்செய்கிறார் (போகேத்யாதி).... ... ... (௧௦)

ஜீயர் திருவடிகளே சரணம்.

* * *

ஆறாம்பத்தில் ஒன்பதாந்திருமொழி முடிந்தது.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஆறாம்பத்துபத்தாந்திருமொழி

கிடந்தநம்பி ப்ரவேசம்.

வ்யா. — திருவுள்ளத்தைக்குறித்து "திருவடிகளிலே சரணம் புகு" என்றார்; சரணம்புகுகைக் கீடாக இங்கெல்லாம் சரண்யதை குறைவற்றதோவென்ன; "அவனுடைய திருநாமம் கேட்டறிவதில்லையோ?" என்கிறார். ஆஶ்ரித ஸுலபனாய், அதிமாநுஷசேஷ்டிதங்களை யுடையனாய், விரோதி நிரஸநசீலனாய், உபயவிபூதி யுக்தனாயிருக்கிற இருப்புக்கு வாசகமான †திருநாமத்தோடே, ஶ்ரிய:பதித்வத்தையும் சேர்த்து அநுபவிக்கிறார். ... ... *

அரு. — கிடந்த நம்பியின் ப்ரவேசம் — கீழ்த்திருமொழிக்கும் இதுக்கும் ஸங்கதியை யருளிச்செய்கிறார் (திருவுள்ளத்தை யித்யாதி). அஜ்ஞரைப்போலேயும் அசக்தரைப்போலேயு மிருக்கும் இந்தத் திருநறையூர் நம்பியிடத்தில் சரண்யதை குறைவறச்சொல்லாநின்றீர், இதுக்கு ப்ரமாணமென்னென்னும் ப்ரஶ்நத்திலே, ப்ரதமத்திலே (௧) "நான் கண்டுகொண்டேன் நாராயணாவென்னும் நாமம்" என்ற திருநாமத்தை மறந்தாயோ என்று அத்தை ஸ்மரிப்பிக்கிறாரென்று கருத்து. இத்திருமொழியில் ப்ரமேயத்தைச் சேரப் பிடித்தருளிச் செய்கிறார் (ஆஶ்ரிதேத்யாதி). ஒன்பதாம்பாட்டைக் கடாக்ஷித்தருளிச்செய்கிறார் (உபயேத்யாதி). ... *

மூ—கிடந்தநம்பி குடந்தைமேவிக் கேழலாயுலகை
இடந்தநம்பி யெங்கள் நம்பி யெறிஞரரணழியக்
கடந்தநம்பி கடியாரிலங்கை யுலகை யீரடியால்
நடந்தநம்பி நாமம்சொல்லில் நமோநாராயணமே. ... (௧)

பதம்.	உரை.	பதம்.	உரை.
குடந்தை	திருக்குடந்தையிலே	உலகை	லோகங்களை
மேவி	பொருந்தி	இடந்த	(அண்டபித்தியில் நின்றும்) குத்தியெடுத்த
கிடந்த	பள்ளிகொண்டிருக்கிற		
நம்பி	(அழகினால்) பூர்ணனாய்,	நம்பி	(ஸாமர்த்த்யத்தினால்) பூர்ணனாய்,
கேழலாய்	வராஹ ரூபியாய்க் கொண்டு		

---

† (பா) திருமந்த்ரத்தோடே. (௧) ௧-௧-௧-

எங்கள்	ஸம்ஸாரிகளான எங்களுக்கு	நம்பி	(வீர்யத்தினால்)பூர்ணனாய்,
நம்பி	(குறையைத்தீர்க்க வல்ல)பூர்ணனாய்,	உலகை	லோகங்களை
எறிஞர்	சத்ருக்களுடைய	ஈரடியால்	இரண்டடியாலே
அரண்	கோட்டையானது	நடந்த	அளந்துகொண்ட
அழிய	அழியும்படியாக	நம்பி	(அத்புதகர்மத்தால்) பூர்ணனான ஸர்வேஶ்வரனுடைய
கடியார்	க்ரூரமான ராக்ஷஸர்களுடைய	நாமம்	திருநாமத்தை
இலங்கை	லங்கையை	சொல்லில்	சொல்லப்புகில்(அது)
கடந்த	ஆக்ரமித்த (அழியச்செய்த)	நமோநாராயணமே	நமோ நாராயண மென்றிருக்கும். (க)

வ்யா.—முதற்பாட்டு. (கிடந்தநம்பி யித்யாதி) பரமபதத்திற் காட்டிலும் திருப்பாற்கடலிற் காட்டிலும் திருக்குடந்தையிலே பொருந்திச் சாய்ந்தருளினபோதை அழகை, "நிற்றல் இருத்தல்செய்து இழக்கவரில் செய்வதென்?" என்று அஞ்சவேண்டாதபடி கண்வளர்ந்தருளுகிறபோதை அழகாலே பூர்ணனானவன்; அண்டபித்தியிலே சேர்ந்த பூமியை இடந்தெடுத்துக் கொண்டேறி, அதுக்கடியான ஸாமர்த்த்யத்தால் குறைவற்றவன். (எங்கள்நம்பி) ஸம்ஸாரிகளாய்க் குறைவே நிரூபகமாம்படி யிருக்கிற நம்முடைய குறைவு தீர்க்கைக் கடியான பௌஷ்கல்யத்தை யுடையவன்.

(எறிஞரித்யாதி) சத்ருக்களிட்ட அரணழியும்படி க்ரூரரான ராக்ஷஸர் திரண்ட லங்கையை யழியச்செய்து, அத்தால்வந்த வீரஸ்ரீயால் குறைவற்றவன். பரப்புடைத்தான பூமியையடைய இரண்டடியாலே அளந்த அத்புதகர்மத்தால் குறைவற்றவன்; அவனுடைய பேர்சொல்லில், நமோநாராயணமே. ... ... (க)

அரு — முதற்பாட்டு. (கிடந்தவித்யாதி) "குடந்தைமேவி - கிடந்த நம்பி" என்றந்வயித்துத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (பரமேத்யாதி). (பௌஷ்கல்யத்தை) குணபௌஷ்கல்யத்தை.

"எறிஞராணழிய - கடியாரிலங்கை - கடந்தநம்பி" என்றந்வயித்து அர்த்த மருளிச்செய்கிறார் (சத்ருக்க ளித்யாதி). ... ... (க)

மூ.—விடந்தானுடைய வரவம் வெருவச் செருவில் முனநாள் முன்
தடந்தாமரைநீர்ப் பொய்கைபுக்கு மிக்க தாடாளன்
இடந்தான் வையம் கேழலாகி யுலகை யீரடியால்
நடந்தானுடைய நாமம் சொல்லில் நமோநாராயணமே. (உ)

பதம்.	உரை.
விடம்உடைய	விஷத்தையுடைய
அரவம்	காளியனென்னும்ஸர்பமானது
வெருவ	பயப்படும்படி,
முனநாள்	முற் (க்ருஷ்ணவதார) காலத்தில்
செருவில்	யுத்தத்திலே [ன்னே,
முன்	இடைப்பிள்ளைகள் மு
தடம்	ப்ரந்திருந் துள்ள
தாமரை	தாமரைப் பூக்களையும்
நீர்	ஜலத்தையு முடைத்தான
பொய்கை	மடுவிலே [துறத்தி)
புக்கு	ப்ரவேசித்து (அவனைத்
மிக்க	மேன்மைபெற்ற

பதம்.	உரை.
தாளாளன்	திருவடிகளை யுடையனாய், [கொண்டு
கேழலாகி	மஹா வராஹமாய்க்
வையம்	லோகத்தை
இடந்தான்	(பாதாளத்தில் நின்றும்) குத்தியெடுத்தவனாய்
உலகை	(வாமநாவதாரத்தில்) லோகங்களை
ஈரடியால்	இரண்டடியினாலே
நடந்தானுடைய	அளந்துகொண்டவனுடைய

நாமம்சொல்லில் நமோநாராயணமே. (௨)

வ்யா.—இரண்டாம்பாட்டு. (விடந்தானுடைய வித்யாதி) கீழ்ச்சொன்னவை திரியட்டும் பின்னுட்டினபடி. விஷத்தையுடைய காளியன் அஞ்சும்படியாக, யுத்தத்திலே முன்பொருநாளிலே, (௧)* தன்னேராயிரம் பிள்ளைகளுக்குமுன்னே, பரப்புமாறப்பூத்த தாமரைகளையும், நினைத்த வகைகளெல்லாம் விநியோகம்கொள்ளலாம்படியான ஜலஸம்ருத்தியையுமுடைய பொய்கையிலே போய்ப்புக்கு அவனைத்துறத்தின ஏற்றத்தையுடையவன். (தாளாளன்) திருவடிகளையுடையவன்.

நீருக்கும் சேற்றுக்குமிளையாத வடிவைக்கொண்டு ப்ரளயங்கதை (க்ஷ்மா) யானபூமியை எடுத்துக்கொண்டேறினான். லோகத்தை இரண்டடியாலே அளந்துகொண்டவனுடைய நாமம். ... (௨)

அரு.—இரண்டாம்பாட்டு. (விடந்தானித்யாதி) கீழ்ப்பாட்டிற்சொன்ன விரோதி நிரஸநசீலதையை முகாந்தரேண உபபாதித்துக்கொண்டு, கீழ்ச்சொன்ன ஸாமர்த்த்யத்தையும் அத்புத கர்மத்தையும் மீள வநுஸந்திக்கிறார் ஈடுபாட்டாலே என்னும் ஸங்கதி தாமே தர்சிப்பிக்கிறார் (ஊழித்யாதி). "முனநாள்" என்றத்தோடு "முன்" என்றது புநருக்தமாகாமை, புர:ப்ரதேசமாக்கி யருளிச்செய்கிறார் (தன்னேரித்யாதி). ... ... (௨)

---

(௧) பெரி-திரு-௩-௧-௧.

மூ.—பூணாதனலும் தறுகண்வேழம் மறுக வளைமருப்பைப்
பேணான்வாங்கி யமுதம்கொண்ட பெருமான் திருமார்வன்
பாணுவண்டு முரலும் கூந்தலாய்ச்சி தயிர்வெண்ணெய்
நாணாதுண்டான் நாமம்சொல்லில் நமோநாராயணமே. (௩)

பதம்.	உரை.	பதம்.	உரை.
பூணாத	(கட்டுத்தறியிலேசேர்க்கிலும்) சேராததாய்க்கொண்டு	கொண்ட	(க்ஷீராப்தியில் நின்றும்)கடைந்தெடுத்தவனுமான
அனலும்	நெருப்பையுமிழாநின்ற(பெருமூச்சையுடையதாய்),	பெருமான்	ஸர்வேஸ்வரனாய்,
தறு	வட்டமான	திருமார்வன்	பிராட்டியை மார்பிலேயுடையவனாய்,
கண்	கண்களை யுடையதான	பாணு	பாட்டையுடைத்தான
வேழம்	குவலயாபீடமென்னும் யானையானது	வண்டு	வண்டுகளானவை
மறுக	வ்யாகுலப் படும்படியாக	முரலும்	சப்தியாநின்ற
பேணான்	(அதை) மதியாதே	கூந்தல்	மயிர்முடியையுடைய
வளை	(அதினுடைய) வளைந்திருக்கிற	ஆய்ச்சி	யசோதை(சேமித்து வைத்த)
மருப்பை	கொம்பை	தயிர்	தயிரையும்
வாங்கி	பறித்தும்,	வெண்ணெய்	வெண்ணெயையும்
அமுதம்	அம்ருதத்தை	நாணாது	(அவளை) மதியாமல்
		உண்டான்	அமுதுசெய்தவனுமானவனுடைய

நாமம்சொல்லில் நமோநாராயணமே. (௩)

வ்யா.—மூன்றாம்பாட்டு. (பூணாதனலும் தறுகண்) தறியோடே சேரக்கடவதன்றிக்கே, சேர்க்க நினைத்தார் பக்கலிலே நெருப்பையுமிழும்படியாய், ஜாதிப்ரயுக்தமான வட்டணித்த கண்ணையுடைத்தாயிருக்கிற குவலயாபீடமானது கலங்கும்படி, அதினுடைய வளைந்த குவடுகளை, பெரிய ப(௩)லத்தையுடையதொரு பதார்த்தமென்று பாராதே அநாதரித்து, வைத்தது வாங்குவாரைப்போலே பறித்தான்; அதுக்குமேலே, கடலைக்கடைந்து அம்ருதத்தை வாங்கி, அது புஜித்தார்க்கு வரக்கடவ ப்ரீதி தனக்குண்டாம்படி யிருந்தான். அதுக்கடி யென்னென்னில்; ஸர்வேஸ்வரனாகையாலே. (திருமார்வன்) (௧)“ஸ்ரீ

---

(௧). வி-பு-௧-௬-௨௦௫.

ஶ° 𑌸𑌰𑍍𑌵𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌮𑍍-பஶ்யதாம் ஸர்வதேவாநாம்” என்கிறபடியே - பிராட்டியைத் திருமார்விலே யுடையனாயிருக்கிறவன்.

(பாணுவண்டித்யாதி) சிக்ஷாப(ப)லத்தாலே மதுபானமத்தமாய், பாடும்போது பண்ணிலே ஆளத்தியையாநின்றுள்ள வண்டுகளையுடைத்தான மயிர்முடியையுடைய. (ஆய்ச்சிதயிர்) யசோதைப்பிராட்டி வைத்த தயிரையும் வெண்ணெயையும் களவுகண்டு அமுதுசெய்யப் புக்கால், அவள் கண்டுபிடித்துக் கட்டுவது அடிப்பதாக நிற்குமிறே; அப்போது “வெண்ணெயைக் களவுகண்டோமென்றால் வருவதோரெளிவரவுண்டோ?” என்றிருக்குமாய்த்து. ... ... (௨)

அரு. — மூன்றாம்பாட்டு. (பூணித்யாதி) முதற்பாட்டில் விவக்ஷிதமான விரோதி நிரஸநசீலதையும் அத்புத சாரித்ரத்வத்தையும் ஆஶ்ரித ஸௌலபத்வத்தையும் ப்ரகாராந்தரேண அநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

அனலுகை-ஜ்வலிக்கையாய், அருளிச்செய்கிறார் (சேர்க்கவித்யாதி). பேணான் - பேணாதே - மதியாதே என்றாய், அருளிச்செய்கிறார் (பெரியவித்யாதி). ஈந்த என்னாதே, “கொண்ட” என்றதுக்குத் தாத்பர்யமருளிச் செய்கிறார் (அதுக்கித்யாதி). பெண்ணமுதமுண்டதும் ஒரு அத்புத சாரித்ரமென்று விவக்ஷித்தருளிச்செய்கிறா (பஶ்யதாமித்யாதி).... (௨)

மூ.—கல்லார்மதிள்சூழ் கச்சிநகருள் நச்சிப் பாடகத்துள்
எல்லாவுலகும் வணங்கவிருந்த வம்மானிலங்கைக்கோன்
வல்லாளாகம் வில்லால் முனிந்தவெந்தை விபீடணற்கு
நல்லானுடைய நாமம் சொல்லில் நமோநாராயணமே. (௩)

பதம்.	உரை.	பதம்.	உரை.
கல்ஆர்	கல்லாலே கட்டப்பட்	அம்மான்	ஸர்வேஶ்வரனாய்,
மதிள்	ப்ராகாரங்கள் [ட	இலங்கை கோன்	லங்கைக்கு ராஜாவான ராவணனுடைய
சூழ்	சூழ்ந்த [ஸத்தை)		
கச்சிநகருள்	காஞ்சீநகரத்தில் (வா		
நச்சி	ஆசைப்பட்டு	வல்ஆள்	அதி பலிஷ்டமான
எல்லாஉலகும்	ஸகல ப்ராணிகளும்	ஆகம்	சரீரத்தை
		வில்லால்	தநுஸ்ஸினாலே
வணங்க	ஆஶ்ரயிக்கும்படி	முனிந்த	கோபித்து அழித்த
பாடகத்துள்	(அங்கே) திருப்பாடகமென்னும் திவ்யதேசத்தில்	எந்தை	என் ஸ்வாமியாய்,
		விபீடணற்கு	ஶ்ரீ விபீஷணாழ்வான் விஷயத்தில்
இருந்த	எழுந்தருளியிருக்கிற		

நல்லானுடைய	ப்ரீதியாகிற நன்மையையுடையனானவனுடைய	நாமம்சொல்லில் நமோநாராயணமே.	(௪)

வ்யா.—நாலாம்பாட்டு. (கல்லார் மதிளித்யாதி) அரணாகப்போரும்படியான மதிளையுடைத்தான திருக்கச்சியை ஆசைப்பட்டுத் திருப்பாடகத்திலே ஸர்வலோகமும் வந்து ஆஶ்ரயிக்கும்படி யிருக்கிற ஸர்வேஶ்வரன்.

(இலங்கையித்யாதி) "இவ்வூர்க்கு நான் நியாமகனல்லேனோ" என்று துர்மாநத்தையுடைய ராவணனுடைய வல்லாண்மையுடைய சரீரத்தை வில்லாலே வேண்டோமென்ற என்னையன். (விபீடணற்கு நல்லான்) தமையன் பக்கல் த்வேஷம் மிக்கிருக்குமாபோலேயாய்த்து இவன் பக்கல் ராக(X)ம்மிக்கிருக்கும்படி. முதலிகளெல்லார்பக்கல் பண்ணும் பரிவை இவனொருவன் பக்கலிலும் பண்ணினவனுடைய நாமம் சொல்லில். (நமோநாராயணமே) வாத்ஸல்யத்துக்கும் வாசகமிறே.

அநு.—நாலாம்பாட்டு. (கல்லாரித்யாதி) முதற்பாட்டில் சொன்ன ஆஶ்ரித ஸௌலப்யத்தை பங்க்யந்தரேண (𑌭𑌙𑍍𑌗𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑍇𑌣) அருளிச்செய்து கொண்டு, அங்குச்சொன்ன விரோதி நிரஸநத்தை விசேஷித்தருளிச்செய்கிறாரென்று ஸங்கதி.

ராகம் மிக்கிருக்கும் ப்ரகாரமெங்ஙனே யென்ன; (௧) "𑌮𑌿𑌤𑍍𑌰𑌭𑌾𑌵𑍇𑌨-மித்ரபாவேந" என்கிற ஶ்லோகத்தை யுட்கொண்டருளிச் செய்கிறார் (முதலிகளித்யாதி). (௧) "𑌦𑍋𑌷𑍋 𑌯𑌦𑍍𑌯𑌪𑌿 𑌤𑌸𑍍𑌯𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 - தோஷோயத்யபி தஸ்ய ஸ்யாத்" என்றது திருநாமத்தில் தோற்றிலிறே அவனுடைய நாமமென்னலாவது; அதெங்ஙனே யென்ன வருளிச்செய்கிறார் (வாத்ஸல்யத்துக்குமித்யாதி). ... ... (௪)

மூ.—குடையாவரையால் நிரைமுன்காத்த பெருமான் மருவாத
விடைதானேழும் வென்றான் கோவல்நின்றான் தென்னிலங்கை
அடையாவரக்கர் வீயப்பொருது மேவி வெங்கூற்றம்
நடையாவுண்ணக் கண்டான் நாமம் நமோநாராயணமே. (௫)

பதம்.	உரை.	பதம்.	உரை.
முன்	முற்காலத்தில் [ட	நிரை	பசுக்கூட்டங்களை
குடையா	குடையாகக்கொண்	காத்த	ரக்ஷித்த
வரையால்	கோவர்த்தந மலையினால்	பெருமான்	ஸ்வாமியாய்,[சேராத
		மருவாத	(ஒன்றோடொன்று)

---

(௧). ரா-யு-௧௮-௫.

ஏழ்விடையும்	ஏழு ருஷபங்களையும்
வென்றான்	(கொன்று) ஜயித்தவனாய்,
கோவல்	(இப்போது) திருக்கோவலூரில்
நின்றான்	எழுந்தருளி யிருக்குமவனாய்,
தென் இலங்கை	தெற்கேயுள்ளலங்கையில்வஸிப்பவராய்
அடையா	தன்னை ஆஸ்ரயியாதவர்களான
அரக்கர்	ராக்ஷஸர்கள்
வீய	நசிக்கும்படி
பொருது	(அவர்களோடு) யுத்தம்பண்ணி,
வெங்கூற்றம்	க்ரூரஸ்வபாவனான ம்ருத்யுவானவன்
மேவி	(பயப்படாமல்) பொருந்தியிருந்து
நடையா	இதுவேயாத்ரையாக
உண்ணக்கண்டான்	(அவ்வரக்கரை) புஜிக்கும்படி ஸங்கல்பித்தவனுமானவனுடைய

நாமம் நமோநாராயணமே. (௫)

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (குடையாவரை யித்யாதி) வரையைக்கொண்டு நிரையைக் காக்கிறான். மலையெடுத்தானாய் சுமையாயிருக்கை யன்றிக்கே, வர்ஷத்துக்கு ஒரு குடையெடுப்பாரோ பாதியாய்த்து. (பெருமான்) பசுக்களையும் இடையரையும்நோக்கி அவர்களுக்கு நிர்வாஹகனாய் நின்றநிலை. (மருவாத) அஸுராவேசத்தாலே ஒன்றோடொன்று பொருந்தாத ம்ருத்யுஸத்ருசமான ருஷபங்களை யழியச்செய்தான். (கோவலித்யாதி) அதொரு காலவிசேஷத்திலேயாய், பிற்பட்டோம்! என்னவேண்டாதபடி திருக்கோவலூரிலே வந்து ஸந்நிஹிதனானான்.

(தென்னிலங்கை) லங்கையிலுள்ள ராக்ஷஸர் “ஒருவழியாலும் உன்னோடு பொருந்தோம்” என்ன; பின்னை, அவர்களை முடியும்படி பொருதானாய்த்து. (மேவிவெங்கூற்றம்) பண்டு ம்ருத்யு, ராக்ஷஸரைக்கிட்ட அஞ்சியாய்த்திருப்பது; இப்போது, பெருமாள்தோளை அண்டைகொண்டு அத்தாலே பொருந்தி புஜியாநிற்குமாய்த்து. (நடையா) இதுவே ஸ்வபாவமாம்படி பண்ணினவனுடைய நாமம் சொல்லில் நமோநாராயணமே. ... ... (௫)

அரு.—அஞ்சாம்பாட்டு. (குடையித்யாதி) முதற்பாட்டிற் சொன்ன ஸாமர்த்த்யத்தையும் ஸௌலப்யத்தையும் வேறொருபடியாலே அநுஸந்தியாநின்றுகொண்டு, விரோதி நிரஸநத்தையே விடாமல் அநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

விடையென்றதே "தான்" என்றதுக்குத் தாத்பர்யம் (ம்ருத்யுவித்யாதி).

அடையாதேயிருக்கிற அரக்கரென்றதுக்குக் கருத்தருளிச்செய்கிறார் (ஒரு வித்யாதி).... ... ... (௫)

மூ.—கானவெண்கும் குரங்கும் முசுவும் படையாவடலரக்கர்
மானமழித்துநின்ற வென்றியம்மா னெனக்கென்றும்
தேனும் பாலு மமுதுமாய திருமால் திருநாமம்
நானும் சொன்னேன் நமருமுரைமின் நமோநாராயணமே. (௬)

பதம்.	உரை.	பதம்.	உரை.
கானம்	காட்டிலே வஸியாநின்ற	எனக்கு	எனக்கு
எண்கும்	கரடிகளையும்	என்றும்	ஸர்வகாலமும்
குரங்கும்	குரங்குகளையும்	தேனும்	தேன்போலவும்
முசுவும்	கோ(கோ)லாங்கூலமென்னும் குரங்குகளையும்	பாலும்	பால்போலவும்
படையா	ஸேனையாகக்கொண்டு	அமுதம்	அம்ருதம்போலவும்
அடல்	பலிஷ்டரான	ஆய	போக்யபூதனானவனுமான
அரக்கர்	ராக்ஷஸர்களுடைய	திருமால்	ஶ்ரிய:பதியினுடைய
மானம்	கர்வத்தை	திருநாமம்	திருநாமமான
அழித்துநின்ற	அழியச்செய்த	நமோநாராயணம்	நமோநாராயணமென் பதை [நானும்
வென்றி	ஜயசீலனான	நானும்	விஷயாந்தர ஸக்தனான
அம்மான்	ஸ்வாமியாய்,	சொன்னேன்	சொன்னேன்;
		நமரும்	நம்முடையவர்களும்
		உரைமின்	சொல்லுங்கோள்.(௬)

வ்யா.—ஆறும்பாட்டு. (கானவெண்கு மித்யாதி) இந்த்ராதி தேவதைகள் முதுகிட்டுப் போமதொழிய எதிர்நிற்கமாட்டாதபடி பண்ணும் மிடுக்கையுடையனான ராவணனுடைய துர்மாநத்தைப் போக்குமிடத்தில், இடக்கை வலக்கை வாசியறியாதே என்றும் காட்டிலே வர்த்திக்குமதொழியப் பூசல்கண்டறியாத, எண்கும் - கரடியும், குரங்கையும், முசுவையும் ஸேனையாகக்கொண்டு, திக்பாலாதிகளை அழியச்செய்த மிடுக்கையுடைய ராவணனுடைய துர்மாநத்தைப் போக்கின ஸர்வாதிகன்.

(எனக்கென்று மித்யாதி) எனக்கு ஸர்வவித போக்ய(போக்ய)முமான ஶ்ரிய:பதியுடைய திருநாமத்தை. மிது(து)நமான வேஷமே

காணும் இவர்க்கு ரஸிப்பது;(௧) "𑌰𑌮𑌮𑌾𑌣𑌾 𑌵𑌨𑍇 𑌤𑍍𑌰𑌯𑌃-ரமமாணா வநே த்ரய:" என்னுமாபோலே. (நானும் சொன்னேன்) இதர விஷயங்களினுடைய பேரையே சொல்லிப்போந்த நானுமன்றோ, சொன்னேன். †இனி இதுகண்டால் எல்லார்க்கும் சொல்லத் தட்டில்லையிறே; என்னோடு ஸம்பந்தமுடையாரெல்லாரும் இத்தையே சொல்லிப்போருங்கோள். (நமோநாராயணமே) நமக்கு வகுத்தத்தைச் சொல்லிப் போருங்கோள். ஆழ்வார்கள் கோஷ்டியில் இதொழிய வேறொரு திருநாமமுண்டாக நினைத்திருப்பாரில்லை; உண்டாகில், ஆயிரம் என்று திரளச் சொல்லுமித்தனை; (௨) "பேராயிரம் கொண்டதோர் பீடுடையன்" (௩) "𑌦𑍇𑌵𑍋 𑌨𑌾𑌮 𑌸𑌹𑌸𑍍𑌰𑌵𑌾𑌨𑍍 - தேவோநாமஸஹஸ்ரவாந்" பல பசுவுடையன் என்னுமாபோலே. ஸ்ருதி வேறொரு திருநாம முண்டாகச்சொல்லுமன்றாய்த்து இவர்கள் வேறொரு திருநாமமுண்டாகச் சொல்லுவது. அந்தர்யாமி ப்ராஹ்மணத்தோடு காரணவாக்யங்களோடு வாசியற இத்தையிறே சொல்லுவது. இதொழிந்தவை ஜ்ஞாநசக்த்யாதிகளைப்போலே. இது ஜ்ஞாநாநந்தா(𑌽)ऽமலத்வாதிகள்போலே ஸ்வரூப நிரூபகமாயிருக்கும். ... ... (௬)

அரு. — ஆறும்பாட்டு. (காணமித்யாதி) முதற்பாட்டிற் சொன்ன விரோதி நிரஸநத்தை ஸப்ரகாரமாக அநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

"காணம்" என்று விசேஷித்ததுக்குத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (இந்த்ராதீத்யாதி).

மிதுநமான வேஷத்தை ரஸித்தாருண்டோவென்ன வருளிச்செய்கிறார் (ரமமாணா இத்யாதி). இருவரும் அந்யோந்யம்கண்டு ஆநந்தித்தாப்போலே, இருவர் சேர்த்தியையும் கண்டு ஆநந்தித்தாரென்று கருத்து. இப்படி யருளிச்செய்ததுக்கு பலிதார்த்த மருளிச்செய்கிறார் (இனி யித்யாதி). "நமரும்" என்ற ச(𑌚)காரம்- அநுக்த ஸமுச்சயமாக்கி, (எல்லாரும்) என்றது. "நாராயணமே" என்றுஇத்தை அவதா(𑌧)ரணமாகச் சொல்லுவானென்னென்ன வருளிச்செய்கிறார் (ஆழ்வார்களித்யாதி). "மாதவன்" இத்யாதிகளைச் சொன்னதுண்டாயிருக்க, இல்லையென்பானென்னென்ன வருளிச்செய்கிறார் (உண்டாகிலித்யாதி). அவற்றையும் பலவிடங்களிலருளிச்செய்தாலும் அதெல்லா மொருதட்டும், இதொருதட்டுமாகச் சொன்னார்களென்று கருத்து. அப்படியிருக்கச் செய்தவிடமென்

---

† (பா) இனி அதுகண்டால் எல்லார்க்கும் இடக்கடவதிறே.

(௧) ரா-பா-௧-௩௧.

(௨) தி-வாய்-௬-௩-௧.

(௩) பார-ஸபா-௯௮-௧௧.

கேயென்ன (பேரித்யாதி); "பேராயிரம்" என்று சொல்லியிருக்கவும் உடனே "நாராயணன்" என்று விரும்பினாரிறே என்று கருத்து. *பேராயிரத்தாலே *பீடுடையனாகைக்கு ப்ரமாணம் (தேவோநாமேத்யாதி). *நாமஸஹஸ்ரவானாகையாலே தேவனென்றுகருத்து. அதிசய ஹேதுவானபடி எங்ஙனேயென்ன (பலவித்யாதி). ஆழ்வார்களிப்படி விரும்புகைக்குக் காரணமென்னென்ன(ஶ்ருதியித்யாதி).ஶ்ருதிதானப்படி விரும்பிற்றோவென்ன (அந்தர்யாமி யித்யாதி). ஶ்ருதியும் ஆழ்வார்களும் விரும்புகைக்கு இதுக்கு ஏற்றமென்னென்ன வருளிச்செய்கிறார் (இதொழிந்தவை யித்யாதி).... ... ... (௬)

மூ.—நின்ற வரையும் கிடந்த கடலும் திசையு மிருநிலனும்
ஒன்றுமொழியா வண்ணமெண்ணி நின்றவம்மானார்
குன்று குடையாவெடுத்த வடிகளுடைய திருநாமம்
நன்றுகாண்மின் தொண்டீர்சொன்னேன் நமோநாராயணமே.

பதம்.	உரை.	பதம்.	உரை.
நின்ற	ஸ்த்திரமாகநின்ற	அம்மானார்	ஸர்வாதிகனாய்,
வரையும்	பர்வதங்களும்	குன்று	மலையை
கிடந்த	ஒரேஇடத்தில் கிடக்கிற	குடையா	குடையாக
கடலும்	ஸமுத்ரமும்	எடுத்த	உத்த(ட்)ரித்த
திசையும்	திக்குக்களும்	அடிகளுடைய	ஸ்வாமியுமானவனுடைய
இரு நிலனும்	பரந்தபூமியும் (ஆகிய இவை)	திருநாமம்	நமோநாராயணம்,
ஒன்றும்	சிறிதேனும்	தொண்டீர்	ஓ! பக்தஜநங்களே!
ஒழியாவண்ணம்	பாழாகாதபடி	நன்று	இனிதாக (உங்களுக்கு)
எண்ணி	ஸங்கல்பித்து (மேன்மேலும்)	சொன்னேன்	உரைத்தேன்இடி
நின்ற	(ஸ்ருஷ்டித்துக்கொண்டு) இருக்கிற	காண்மின்	கோள். (௭)

வ்யா.—ஏழாம்பாட்டு. (நின்றவரை யித்யாதி) பூமிக்கு ஆணியடித்தாப்போலே பேராதேநிற்கிற குலபர்வதங்களையும், ஈஶ்வரஸங்கல்பத்தளவும் செல்ல கரையை அதிக்ரமியாதே கிடந்தவிடத்திலே கிடக்கிறகடலும், பராபரவிபாகம் பண்ணுகைக் கீடாயிருக்கிற திக்குக்களும், ப்ராணிகளுக்கு ஸஞ்சார யோக்யதை யுடைத்தாம்படி பரப்புடைத்தான பூமியும், இப்படிப்பட்ட பதார்த்தங்கள் ஒன்றும் குறையவொண்ணாதென்று தன்ஸங்கல்பத்தாலே இவற்றை உண்டாக்கிக் கொடுநிற்கிற ஸர்வேஶ்வரன்.

(குன்றுகுடையா வித்யாதி) வர்ஷத்தாலே நோவுபடுகிற பசுக்க

ளுக்கும் இடையர்க்கும் ஒரு நோவு வாராதபடி மலையைக் குடையாகக்கொண்டு நோக்கின ஸ்வாமியுடைய திருநாமம். (நன்று காண்மின்) காரணபூதனானவன் பேர் சொல்லுகை ப்ராப்தமிறே. ப்ராப்தம் செய்யப் பார்த்திலிகோளாகில் இனியதுதான் வேணுமே. (தொண்டீர் சொன்னேன்) பகவத்விஷயத்தில் கைங்கர்ய ருசியுடையாரெல்லார்க்கும் சொன்னேன். இது செய்யாதார் கேளாதாராமித்தனை. (நமோநாராயணமே) ஸஹஸ்ராக்ஷரீமாலா மந்த்ரமாயிருக்கிறதுமல்ல. ... ... (எ)

அநு.—ஏழாம்பாட்டு. (நின்ற வித்யாதி) முதற்பாட்டில் ப்ரஸ்துதமான ஆபத்ரக்ஷண ஸாமர்த்த்யத்தைப் பின்னாட்டி யநுஸந்திக்கிற இவர், இதுக்கு ஹேதுத்வேந காரணத்வத்தையு மநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

(பராபரவிபாகம் பண்ணுகை) என்றது - மேற்கே நிற்கிறவன் பரனென்றும், கிழக்கே நிற்கிறவன் அபரனென்றும் பிரிக்கை யென்கை.

“நன்று” என்றது-இனியதென்றாய், அதுக்கு உபபத்தியுடனே கருத்தருளிச்செய்கிறார் (காரணேத்யாதி). “தொண்டீர்” என்று விசேஷிப்பானென், எல்லார்க்கும் சொல்லவொண்ணாதோ வென்ன வருளிச்செய்கிறார் (இதித்யாதி). கைங்கர்ய ருசியில்லாவிடில் திருநாமத்தைத் தாம் சொன்னாலும் கேளார்கள் என்று விசேஷித்தார் என்று கருத்து. (எ)

மூ.—கடுங்கால் மாரி கல்லேபொழிய அல்லேயெமக்கென்று
படுங்கால் நீயே சரணென்றாயரஞ்ச வஞ்சாமுன்
நெடுங்கால்குன்றம் குடையொன்றேந்தி நிரையைச் சிரமத்தால்
நடுங்காவண்ணம் காத்தான் நாமம் நமோநாராயணமே. (அ)

பதம்.	உரை.
கடு	க்ரூரமான
கால்	காற்றோடுகூடிய
மாரி	மேகமானது
கல்	கல்லை
பொழிய	வர்ஷிக்க,
எமக்கு	“நமக்கு (இது)
அல்லே	காளராத்ரியே யாயிருந்தது”
என்று	என்று
படுங்கால்	நெஞ்சில்பட்ட காலத்தில்,
ஆயர்	இடையர் (அப்பொழுது)
நீயே	“ஸர்வரக்ஷகனான நீயே கரு௦

பதம்.	உரை.
சரண்	(எங்களுக்கு) ரக்ஷகன்”
என்று	என்று சொல்லி
அஞ்ச	(அம்மழைக்கு) பயப்பட,
அஞ்சாமுன்	அந்த பயம்கார்யகரமாவதற்கு முன்னமே
நெடும்கால்	பெரியனவாய் சுற்றுமுள்ள மலைகளோடு கூடிய
குன்றம்	கோவர்த்தந மலையை

ஒன்றுகுடை	ஒரு (அபூர்வமான) குடையாக	நடுங்காவண்ணம்	நோவுபடாதபடி
ஏந்தி	தரித்து	காத்தான்	ரக்ஷித்தவனுடைய நாமம் நமோநாராயணமே. (அ)
நிரையை	பசுக்கூட்டங்களை		
சிரமத்தால்	ஶ்ரமத்தினால்		

வ்யா.—எட்டாம்பாட்டு. (கடுங்கால் மாரியித்யாதி) வெட்டிய காற்றையுடைத்தான மாரியானது கல்லை வர்ஷிக்க. (அல்லே எமக்கு) "நமக்கு இது ப்ரளயத்தில் செல்லுகிற ராத்ரியாகாதே!" என்று அவர்கள் நெஞ்சிலே பட்டவளவிலே, "நாங்கள் எங்கள் கார்யத்துக்குக் கடவோமல்லோம், நீ எங்களுக்கு ரக்ஷகனாகவேணும்" என்று இடையரஞ்ச; அந்த அச்சத்தினுடைய கார்யம் பலிப்பதுக்கு முன்னே, நெடியகாலையுடைத்தான மலையைத்தரித்து-பர்யந்தபர்வதங்களையுடைத்தான மலையைத்தரித்து, பண்ணின உபகாரமறியாத பசுக்களை ஶ்ரமத்தாலே நோவுபடாதபடியாக ரக்ஷித்தான். தான் அறிந்த ஆபத்தும் விலக்காமையுமிறே வேண்டுவது ரக்ஷிக்கைக்கு; ஸ்வாபாவிக ஸம்பந்தத்தில் கண்ணழிவில்லையே. ... ... (அ)

அரு —எட்டாம்பாட்டு. (கடுங்காலித்யாதி) கீழ்ப்பாட்டில் ஆபத்ரக்ஷணமே பின்னாட்டிற்றென்று ஸங்கதி.

"படுங்கால்" என்றதுக்கு, நெஞ்சிலேஎன்று கூட்டி யருளிச்செய்கிறார் (நமக்கித்யாதி). கால்என்றது - காலத்திலென்றபடி. (௧) "పాదాః ప్రత్యన్త పర్వతాః - பாதாஃ ப்ரத்யந்தபர்வதாஃ" என்றத்தை உட்கொண்டு "கால்" என்றத்தை விவரிக்கிறார் (பர்யந்தேத்யாதி). அவர்களைச் சிரமத்தால் காத்தானென்ன வேண்டியிருக்க, "நிரையை" என்பானென்னென்ன வருளிச்செய்கிறார் (தானித்யாதி). இத்தால் - அவர்கள் "சரண்" என்றத்தோடு, பசுக்கள் வெறுமனே யிருந்தத்தோடு வாசியற ரக்ஷித்தானென்கைக்காக இப்படி யருளிச்செய்கிறாரென்று கருத்து. இதுக்கு ஹேது வருளிச்செய்கிறார் (ஸ்வாபாவிகேத்யாதி). ... . (அ)

மூ.—பொங்கு புணரிக்கடல் சூழாடை நிலமாமகள் மலர்மா
மங்கை பிரமன் சிவனிந்திரன் வானவர் நாயகராய
எங்களடிகளிமையோர் தலைவருடைய திருநாமம்
நங்கள்வினைகள் தவிர வுரைமின் நமோநாராயணமே. (௯)

பதம்.	உரை.	பதம்.	உரை.
பொங்கு	கிளர்த்தியையுடைய	கடல் சூழ்	ஸமுத்ரத்தினால் சூழப்பட்டவளாய்
புணரி	அலைகளையுடைத்தான		

---

(௧) அமரகோ-௨-௪௮.

ஆடை	(அதையே) அரைநூல் மாலையாக உடையளான	நாயகராய்	நிர்வாஹகனாய்,
நிலமாமகள்	பூமிப்பிராட்டிக்கும்	எங்கள்	எங்களுக்கு
மலர்	கமலப்பூமேல் வஸிக்கிற	அடிகள்	ஸ்வாமியாய்,
மாமங்கை	பெரியபிராட்டிக்கும்	இமையோர்	நித்யஸூரிகளுக்கு
பிரமன்	ப்ரஹ்மாவுக்கும்	தலைவருடைய	ப்ரதாநனானவனுமானவனுடைய
சிவன்	ருத்ரனுக்கும்	திருநாமம்	நமோநாராயணம்,
இந்திரன்	இந்த்ரனுக்கும்	நங்கள்	நம்முடைய
வானவர்	(மற்றுமுள்ள) தேவர்களுக்கும்	வினைகள்	பாபங்கள்
		தவிர	தீரும்படியாக
		உரைமின்	சொல்லுங்கோள். (௯)

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (பொங்குபுணரி யித்யாதி) பலகாலும் இத்தை ஆதரியாநின்றீர், இதுக்கு அர்த்தமென்னென்ன; இன்னதென்கிறார். கிளர்ந்ததிரையை யுடைத்தாயிருக்கிற கடலாலே சூழப்பட்ட மேகலையை யுடையளாயிருக்கிற ஸ்ரீபூமிப்பிராட்டி. (மலர் மா மங்கை) தாமரைப்பூவை இருப்பிடமாகவுடைய பெரியபிராட்டியார். (பிரமனித்யாதி) ப்ரஹ்மா ருத்ரன் இந்த்ரன் துடக்கமான தேவர்களுக்கெல்லாம் நியாமகனாயுள்ளான்.

(எங்களுடையவடிகள்) (௧)"𑌅𑌸𑍍𑌮𑌤𑍍𑌸𑍍𑌵𑌾𑌮𑌿𑌨𑍍 - அஸ்மத்ஸ்வாமிந்" என்னுமாபோலே. (இமையோரித்யாதி). கீழே - ப்ரஹ்மாதிகளைச் சொல்லிநிற்கையாலே, இமையோர் என்கிறவிடம் நித்யஸூரிகளாய், * அயர்வறுமமரர்களதிபதியுடைய திருநாமம். ஆக, உபயவிபூதியுக்தனென்றபடி. உபயவிபூதியோகத்தைச் சொல்லுகையிறே இதுக்கர்த்தம். ஆக, குறைவற்றாரோடு குறைவற்றாராக ப்ரமித்திருக்கிறாரோடு, குறைவாளரோடு வாசியற எல்லார்க்குமொக்க நிர்வாஹகனாயிருக்கை. (நங்கள் வினைகள்) நீங்கள் அநாதிகாலம் புத்திபூர்வகமாகப் பண்ணினபாபம் தீரும்படி சொல்லப் பாருங்கோள். எண்ணாயிரத்துத் திருவாய்க்குலத்தாழ்வான், நஞ்ஜீயரை, "ப்ரபத்தியாகிறது, புத்திபூர்வம் பண்ணினபாபத்துக்கும் பரிஹாரமாகவற்றோ? ப்ராமாதிகத்துக்கேயோ?" என்ன; "அதினுடைய ப்ரபாவத்தைப்பார்த்தால் புத்திபூர்வத்துக்கும் பரிஹாரமாகவற்று, ஜ்ஞாநம் நடையாடினவிடத்தில் அநுதாபமின்றிக்கேயிராதிறே, ஆகையாலே இவன்

---

(௧) சரணாகதிகத்யம்.

பக்கல் ப்ராமாதிகமல்லது கூடாது, பூர்வாக(ஷு)த்தைப் போக்குகிற இது புத்திபூர்வத்துக்குப் பரிஹாரமாகாது என்னவொண்ணாதே அதில் புத்தி பூர்வமொழிய இல்லாமையாலே.” (நமோநாராயணமே) வினையைப் பண்ணுவதானாலும் சொல்லவடுப்பது இது. ... (௯)

அநு.—ஒன்பதாம்பாட்டு. (பொங்கித்யாதி) “வினைகள்” என்று ஸாமாந்யமாயிருக்க, அநாதிபுத்தி பூர்வகங்களென்று ஒதுக்குவானென்னென்ன; ஸம்வாதமுகேந, முன்பெல்லாம் புத்தி பூர்வகங்களும் பின்பெல்லாம் ப்ராமாதிகங்களொழியக் கிடையாதே யென்றருளிச்செய்கிறார்(எண்ணாயிரத் தித்யாதி); ஜ்ஞாநம் பிறந்தவனுக்கு புத்தி பூர்வத்துக்கு ப்ரஸக்தியில்லை, ப்ரஸக்தமானாலும் அர்த்தாத் பூர்வ ப்ரபதநஸ்மரணம் வாராதிராது, வந்தால் அது தீய்ந்து ப்ராமாதிகமாயே விடும்; ஆகையாலே, ப்ராமாதிகங்கள் அஶ்லிஷ்டங்களாய்ப் போகையாலே, “வினைகள் தவிர” என்னும்போது - அநாதி புத்தி பூர்வகங்களைச் சொல்லுமென்றதாய்த்து. இப்போதும் புத்தி பூர்வகத்தைப் போக்குமென்றதுக்கு நியாமகமென்னென்ன வருளிச்செய்கிறார் (அதிலித்யாதி). (அதில்) பூர்வாக(ஷு)த்தில். (௯)

மூ.—வாவித்தடம் சூழ் மணிமுத்தாற்று நறையூர் நெடுமாலை
நாவில்பரவி நெஞ்சில்கொண்டு நம்பிநாமத்தைக்
காவித்தடங்கண் மடவார்கேள்வன் கலியனொலிமாலை
மேவிச்சொல்ல வல்லார்பாவம் நில்லா வீயுமே. (௧௦)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பதம்.	உரை.
வாவி	குளங்களினாலும்
தடம்	பொய்கைகளினாலும்
சூழ்	சூழப்பட்டதாய்,
மணி	ரத்நங்களையும்
முத்து	முத்துக்களையுமுடைய
ஆற்று	திருக்காவேரியை யுடையதான
நறையூர்	திருநறையூரி லெழுந்தருளியிருக்கிற
நெடுமாலை	ஸர்வாதிகன் விஷயமாக,
காவி	கருநெய்தல்போன்ற
தடம்	விசாலமான

பதம்.	உரை.
கண்	நேத்ரங்களை யுடையரான
மடவார்	ஸ்த்ரீகளுக்கு [ருந்த
கேள்வன்	(முன்பு) நாயகராயி
கலியன்	ஆழ்வார், [னுடைய
நம்பி	திருநறையூர் நம்பியி
நாமத்தை	திருநாமத்தை
நாவில்	நாவினால்
பரவி	ஸ்துதித்தும்
நெஞ்சில்	மநஸ்ஸினால்
கொண்டு	அநுஸந்தித்தும்
ஒலி	அருளிச்செய்த
மாலை	தமிழ்த் தொடையான இப்பத்துப் பாசுரங்களையும்

மேவி	(இதிலே) பொருந்தியிருந்து (அபிநிவேசத்துடன்)	பாவம்	பாபமானது
		நில்லா	நிலைநில்லாது;
சொல்லவல்லார்	சொல்ல வல்லவர்களுடைய	வீயும்	உருமாய்ந்துவிடும்.

(௧௦)

வ்யா.—பத்தாம்பாட்டு. (வாவித்தடம் சூழித்யாதி) பொய்கைகளையும் அளவுபட்ட நீர்நிலங்களையு முடைத்தாயிருந்துள்ள திருநறையூரிலே வந்துநிற்கிற ஸர்வாதிகனான ஸர்வேஶ்வரனை. நம்பியுடைய திருநாமத்தை நாவாலேபாவி நெஞ்சாலே அநுஸந்தித்து. (காவித்யாதி) முன்பு எனக்கு ஏற்றமாக நினைத்திருப்பது இது; இப்போது எனக்குப்பிறந்த செவ்வியும் கண்டிகோளே. இப்போது மநோவாக்காயங்கள் மூன்றுக்கும் இதுவே விஷயமானபடி கண்டிகோளே. (மேவிச் சொல்ல வல்லார்) இதிலே பொருந்தி இத்தைச்சொல்ல வல்லவர்களுடைய பாபம் இவர்கள் பக்கல் நில்லா. இவர்களைவிட்டுப் போய், பின்னையும்தான் நிற்கையன்றிக்கே நசிக்கும். (க)“𑌦𑍍𑌵𑌿𑌷𑌨𑍍𑌤𑌃 𑌪𑌾𑌪𑌕𑍃𑌤𑍍𑌯𑌾𑌂 - த்விஷந்தஃ பாபக்ருத்யாம்” என்கைக்கு முதலில்லை. (௧௦)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

* * *

அரு. — பத்தாம்பாட்டு. (வாவியித்யாதி) (எனக்கேற்றம்) அவர்களுக்கு நாயகனென்கை. (செவ்வி) பகவதநுபவமே யாத்ரையாயிருக்கை. கண்டிகோளே என்கையாலே - காயிகம். ... ... (௧௦)

ஜீயர் திருவடிகளே சரணம்.

* * *

ஆறும்பத்தில் பத்தாந்திருமொழி முடிந்தது.

ஆறும்பத்து ஸம்பூர்ணம்.

(க) சாட்ட்யாயந சாகை.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஏழாம்பத்து முதல் திருமொழி

கறவா ப்ரவேசம்.

வ்யா.—(கறவாவித்யாதி). கீழே ஸம்பந்த ஜ்ஞாநம்பிறக்கையாலே கைங்கர்யலாபத்துக்குக் கூப்பிட்டார்; நீரிங்ஙனே கிடந்து படுகிறதென், உமக்கு எல்லாம் பெறுகைக்கு உறுப்பாகவன்றோ நாமிவ்வோவிடங்களிலே நிற்கிறதென்று உகந்தருளின நிலங்களில் நிலையைக் காட்ட, இவரும் எல்லாம் பெற்றாராய், க்ருதார்த்தராகிறார்.

அரு.—கறவாமட நாகின்ப்ரவேசம்.—(கீழே) என்றது- (க) *பெடையடர்த்தவிலும் - *(உ) கிடந்தநம்பியிலும், என்றபடி. (கூப்பிட்டார்) என்றது - இத்திருமொழியில் முதலிரண்டு பாட்டால் கூப்பிட்டாரென்கை. (உகந்தருளின நிலங்களிலே) என்றதுக்கு முன்னே, மூன்றாம்பாட்டிலே என்று கூட்டுவது. ஆகக் கீழிரண்டு திருமொழிகளிலும், திருமந்த்ரத்தை யநுஸந்தித்துத் திருவடிகளிலே சரணம் புகுருகையாலே, கைங்கர்ய ப்ரார்த்தனை தலையெடுத்து, கூப்பிட்ட கூப்பீடுக்கு ஸமாதாநம்பண்ண, ஸமாஹிதராகிறாரென்று ஸங்கதி சொல்லிற்றாய்த்து. ... ... *

மூ.—கறவாமடநாகு தன் கன்றுள்ளினாற்போல்
மறவாதடியேனுன்னையே யழைக்கின்றேன்
நறவார்பொழில்சூழ் நறையூர்நின்றநம்பி
பிறவாமையெனைப்பணி யெந்தைபிரானே. (க)

பதம்.	உரை.
கறவா	பால்கறக்கப்பெறாத
மடம்	ப(ஞ்)வ்யமான
நாகு	பசுவை
தன்கன்று	தன்னுடைய கன்றானது
உள்ளினாற்போல்	நினைக்குமாபோலே
அடியேன்	உனக்கு சேஷபூதனான நான்
மறவாது	விஸ்ம்ருதியில்லாமல்
உன்னையே	ஸ்வாமியான உன்னையே எப்போதும் (சொல்லி)
அழைக்கின்றேன்.	கூப்பிடாநின்றேன்;

பதம்.	உரை.
நறவு ஆர்	தேன்மிக்கிருந்துள்ள
பொழில்சூழ்	சோலைகள் சூழ்ந்த
நறையூர்	திருநறையூரில்
நின்ற	எழுந்தருளியிருக்கிற
நம்பி	கல்யாணகுண பூர்ணனே!
எந்தை	எனக்குப் பிதாவாய்
பிரானே	உபகாரகனானவனே!
எனை	என்னை
பிறவாமை	(இனிஸம்ஸாரத்தில்) பிறவாதபடி
பணி	செய்தருளவேணும்.

(க) சு-கூ. (உ) சு-க0.

அவ.—அநுபவ விரோதியான ஸம்ஸார ஸம்பந்தத்தைக் கழித்தருள வேணுமென்கிறார். ... ... *

வ்யா.—முதற்பாட்டு. (கறவாவித்யாதி) கறக்கப்பெறாத நாகினுடைய! கன்று தன்தாயை நினைக்குமாபோலே. கறவாமடநாகானது, தன்கன்றையுள்ளினாற்போலே, என்று சொல்லநினைத்து, அர்த்தத்துக்குச் சேராமையாலே மிடிபட்டார் பிள்ளையமுதனார்; அதுதான் - அபக்ஷதர்மமாமிறே; ஆகையாலே, பட்டருளிச்செய்யும்படி - கறவாமடநாகை, தன்கன்றுள்ளினாற்போலே என்று. கறக்கப்பெறாமையாலே, முலைக்கடுப்பால் வந்த நோவுண்டிறே அதுக்கு; அத்தாலே, அவனுடைய ஆற்றாமையெல்லாம் தோற்றுமிறே. (தன்கன்றுள்ளினாற்போல்) என்கையாலே, முலையுண்ணப் பெறாமையால் வந்த நாக்கொட்டுதல் தோற்றுமிறே; அத்தாலே, இத்தலையிலாற்றாமை யெல்லாம் தோற்றுமிறே. கறக்கப்பெறாத நாகினுடைய் கன்று, தன்தாயை நினைக்குமாபோலே. (மறவாது) மறக்கைக்கு ஸம்பாவனையுள்ள ஸம்ஸாரத்தே யிருந்தே மறவாதே அநந்யார்ஹனான நான், ஸ்வாமியான உன்னையே சொல்லிக் கூப்பிடாநின்றேன்.

(நறவாரித்யாதி) தேன்மிக்கிருந்துள்ள பொழிலாலே சூழப்பட்ட நறையூரிலே வந்துநிற்கிற கல்யாணகுண பூர்ணனானவனே! (பிறவாமை) பிறக்கை மறப்போடே வ்யாப்தமாயாய்த் திருப்பது. அந்த மறப்பு வருகைக்கீடான பிறப்பு பிறவாமையை நான் பெறும்படி பண்ணி யருளவேணும். (எந்தைபிரானே) கடவ நீயே என்னுடைய விரோதியைப் போக்காவிட்டால், வேறுசிலர் கடவாருண்டோ? நீயே நினைத்துக் கார்யம் செய்யில் உளேனாய், இல்லையாகில் இல்லையாம்படி அநந்ய கதியாயிருக்கிற நான், ஸ்வாமியான உன்னையே நினைத்துக் கூப்பிடாநின்றேன். என்னுடைய விரோதியை நீயே போக்காவிட்டால், வேறுசிலர் போக்குவாருண்டோ? ... (க)

அரு. — முதற்பாட்டுக்கவதாரிகை யருளிச்செய்கிறார் (அநுய்வேத்யாதி).

சப்தார்த்தத்தைக் காட்டுகிறார் (கறக்கவித்யாதி). (தாயை) என்றது - அர்த்தஸித்தார்த்தம். யதாஶ்ருதத்தில் விரோதத்தைக் காட்டிக்கொண்டு, உக்தார்த்தத்துக்கு ஸம்வாதம் காட்டுகிறார் (கறவா வித்யாதி வாக்ய சதுஷ்டயத்தாலே). (அபக்ஷதர்மம்) என்றது - ஆழ்வாருக்கு மெம்

பெருமானுக்கும் தாயாகையும் கன்றாகையும் கூடாதென்கை. இரண்டு தலைக்கும் ஆற்றாமை வேண்டுகையாலே, அதுக்கு உறுப்பாக, "கறவா" என்றும், "தன்" என்றும் விசேஷித்தா ரென்றருளிச்செய்கிறார் (கறக்க வித்யாதி வாக்ய சதுஷ்டயத்தாலே). "மறவாது" என்றதுக்கு நினைத்துக் கொண்டே என்று சப்தார்த்தம் ஸ்ப்புரிக்கும்படி, கீழ்ச்சொன்ன சப்தார்த்தந்தன்னை மீளவு மருளிச்செய்து அந்வயிக்கிறார் (கறக்கப் பெறாதவித்யாதி). நினைத்துக்கொண்டே என்று சொல்லவொண்ணாதோ? "மறவாது" என்றதுக்கு ப்ரயோஜந மென்னென்ன வருளிச்செய்கிறார் (மறக்கைக்கித்யாதி).

பாட்டுக்கெல்லாம் தொகுத்த தாத்பர்ய மருளிச்செய்கிறார் (நீயே யித்யாதி). ... ... (௨)

மூ.—வற்றா முது நீரொடு மால்வரை யேழும்
துற்றாக முன் துற்றிய தொல்புகழோனே
அற்றே னடியேனுன்னையே யழைக்கின்றேன்
பெற்றே னருள் தந்திடு மெந்தை பிரானே. (௨)

பதம்.	உரை.
வற்றா	வடியாத
முதுநீரொடு	ஸமுத்ரத்தோடுகூட
மால்	பெரிய [ளையும்
வரைஏழும்	ஸப்தகுல பர்வதங்க
முன்	முன்னே
துற்றாக	ஒருபிடியாக
துற்றிய	(வாரி) விழுங்கின
தொல்	அநாதியான [னே
புகழோனே	கீர்த்தியை யுடையவ
எந்தைபிரானே!	

பதம்.	உரை.
அற்றேன்	உனக்கே அநந்யார்ஹனாய்த் தீர்ந்த,
அடியேன் உன்னையே அழைக்கின்றேன்,	
பெற்றேன்	இப்பெரும்பேற்றை லபித்தேன்,
அருள்	(தேவரீருடைய) க்ருபையை
தந்திடும்	(என்விஷயத்தில்) பண்ணியருள வேணும். (௨)

வ்யா.—இரண்டாம்பாட்டு. (வற்றாமுது நீரித்யாதி) இதுதான் மிகையன்றோ, ப்ரளயங்கொண்ட பூமியை நீ எடுத்தது ஆர்கூப்பிட நீ யறிந்த ஆபத்தும் விலக்காமையுமன்றோ வேண்டுவது உனக்கு ரக்ஷிக்கைக்கு. ப்ரளயம்கொண்ட பூமி ஆழ்ந்த வித்தனையல்லது, "என்னை எடுக்கவேணும்" என்றதோ? (வற்றாமுதுநீர்)வற்றாத ஜலத்தையுடைத்தான ஸமுத்ரஜலத்தோடே கூட குலபர்வதங்களேழையும், அதுக்காஸ்ரயமான பூமியையும், ஓரவதாந ([illegible])மாக அமுதுசெய்து, இப்

படி பழையதாக நீ ஆர்ஜித்தகுணங்களை, நான் கூப்பிட அரைக்ஷணம் தாழ்த்து இழக்கவிறே புகுகிறாய்.

ப்ரளயத்திலகப்பட்ட பூமியிற் காட்டில், இவர்க்குண்டான வாசி- அவன் பக்கலிலே வ்யவஸிதனாகையும், ஸ்வரூபத்தை யுணருகையும், அநந்யகதிகளாகக் கூப்பிடுகையும். (பெற்றேன்) ஆபந்நனான போதாக என்னுடைய ரக்ஷணத்துக்கு, நான் நாலடி யிடத்தேடாதே உன்னையே சொல்லிக் கூப்பிடுகையாகிற இப்பேறுபெற்றேன். (அருள் தந்திடும்) இனி உன்னுடைய அருளுக்குத் தண்ணீர்த்துரும்பில்லையிறே. நாம் எல்லாம் செய்வோமாக விருக்கச்செய்தே, நீ ஒட்டுகிறிலை யென்னவேண்டாவே. நான் கைவாங்கினேன். அருள்தந்திடு எனக்கு என் குலநாதனே! ... ... (௨)

அந —இரண்டாம்பாட்டு. (வற்றாவித்யாதி) ஸங்கதியைக்காட்டி யருளுகிறார் (இதுதானித்யாதி வாக்ய சதுஷ்டயத்தாலே). (இதுதான்) கீழில் பாட்டில் கூப்பிடுகைதான். "ஏழும்" என்ற ச(்ஞ)காரார்த்தம் (பூமியையும்) என்றது. "துற்று" என்றதினர்த்தம்- (அவதாரம்). (அவதாரமாக)- ஒருபிடியாக வென்றபடி.

இப்படி அவனுக்குத் தம்முடைய கூப்பீடு மிகையென்றிருந்தாராகில், மீளவும் "உன்னையே யழைக்கின்றேன்" என்கிற தென்னென்ன; அருளிச்செய்கிறார் (ப்ரளயத்திலித்யாதி). வாசிதானென்னென்ன (அவனித்யாதி). "அற்றேன்" என்றதினர்த்தம் (வ்யவஸிதனாகையும்) என்றது. ததேகோபாயத்வாத்யவஸாயத்தை யுடையனாகையு மென்றபடி. அத்யாஹ்ருதமான இப்பதத்துக்குத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (ஆபந்நனான வித்யாதி). "பெற்றேன்" என்றத்தை - ஸாதநமாக்கி அருள்தரச் சொல்லக்கூடுமோவென்ன; அருளுகிறார் (இனியித்யாதி). விவரணம் (நாமித்யாதி). (௨)

மூ.—தாரேன் பிறர்க்குன் னருளென்னிடை வைத்தாய்
ஆரேன துவே பருகிக் களிக்கின்றேன்
காரேய் கடலே மலையே திருக்கோட்டி
ஊரே உகந்தாயை உகந்தேனடியேனே. (௩)

பதம்.	உரை.	பதம்.	உரை.
உன் அருள்	உன்னுடைய க்ருபையை	அடியேன்	அடியேனிடத்தில்[லே)
என்னிடை	என் விஷயத்தில்	உகந்து	ப்ரீதிபண்ணி (அதினா
வைத்தாய்	பண்ணியருளினாய்,	கார்ஏய்	மேகங்கள் படிந்திருக்கிற
பிறர்க்கு	அயலார்க்கு	கடலே	திருப்பாற்கடலையும்
தாரேன்	(அவ்வருளைக்) கொடுக்கமாட்டேன்,	மலையே	திருமலையையும்

திருக்கோட்டியூரே	திருக்கோட்டியூரையுமே	பருகி	அநுபவித்து
உகந்தாய்	(வாஸார்த்தமாக) ப்ரீதிபண்ணியருளினாய்;	ஆரேன்	த்ருப்தியடையாதவனாய்க்கொண்டு,
அதையே	அந்த அருளையே	களிக்கின்றேன்	(அவ்வருளையேபருகி) ஸந்தோஷியாநின்றேன். (௩)

வ்யா. — மூன்றாம்பாட்டு. (தாரேன் பிறர்க்கித்யாதி) வேறொருவர்க்குக் கொடேன். தேவருடைய ப்ராஸாதத்தை வேறொருவர்க்கு விட்டுக்கொடேன். இவர்கொடாதேயொழிகையாவது என்னென்றால்,† விஷயஸூசகமான உக்தியிருக்கிறபடி. உன்னுடைய கண்ணழிவற்ற க்ருபையை என்பக்கலிலே வைத்தாய். (ஆரேனதுவே பருகி) உன்னுடைய க்ருபையை புஜித்து பர்யாப்தனாயிருக்கையன்றிக்கே, மேன்மேலென அபிநிவிஷ்டனாய்க்கொண்டு உன்னுடைய க்ருபையை புஜித்து அத்தால் வந்த ஹர்ஷத்தாலே செருக்கி யயாதிகள் தலையிலே அடியிட்டுத் திரியும்படியானேன்.

(காரேயித்யாதி) என்னை உகந்துவந்த உன்னை, நானுகந்து. மேகங்களாலே நெருங்கியிருந்துள்ள. (கடலே மலையே திருக்கோட்டியூரே யுகந்தாயை) ஸௌபரி, பலவடிவுகொண்டாப்போலே அநேகம் வடிவுகொண்டு, அவ்வோவிடங்கள்தோறும் இனி இதுக்கு அவ்வருகில்லை என்னும்படி வர்த்தியாநின்றான்.... ... ... (௩)

அரு.—மூன்றாம்பாட்டு. (தாரேனித்யாதி) "அருள் தந்திடும்" என்னவே திருப்பாற்கடலுள் கிடந்ததும், திருமலையில் நின்றதும், திருக்கோட்டியூரில் வந்ததும் உமக்காக வன்றோவென்ன; அத்தால்வந்தஹர்ஷத்தாலே களித்து, இனி எமக்கொழிய பிறர்க்கிந்தவருளைக் கொடேனென்று ஹ்ருஷ்டராகிறார் என்று ஸங்கதி.

ப்ரயோஜநாந்தரபரரும் வந்து வணங்கும்படியான ஸர்வ ஸௌஹார்த்தத்தாலே எங்குமிருக்க, இவர் கொடாதொழிகை யாவதென் என்னும் ப்ரஶ்நத்தை அநுவதித்துப் பரிஹரிக்கிறார் (இவரித்யாதி). (விஷயஸூசகமான) என்றது - நானே விஷயமுன்னருளுக்கு; வேறு விஷயம் கிடையாதென்னு மர்த்தத்தைச் சொன்னவென்கை. "அதுவே பருகி ஆரேன்" என்றும், "அதுவே பருகிக் களிக்கின்றேன்" என்றும் உபயத்ர அந்வயித்தருளிச்செய்கிறார் (உன்னுடையவித்யாதி).

"உகந்து, உகந்தாயை" என்று, அடியேனுக்கு உகந்து வர்த்திக்கிறா

---

† (பா) ஹர்ஷஸூசமான.

யென்று அந்வயித்துத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (என்னை யித்யாதி). "கடலே" "மலையே" "ஊரே" என்ற அவதா(தா)ரணங்களுக்குக் கருத்தருளிச்செய்கிறார் (ஸௌபரி இத்யாதி). ... ... (௩)

மூ—புள்வாய்பிளந்த புனிதா வென்றழைக்க
உள்ளே நின்றென்னுள்ளம் குளிருமொருவா
கள்வா கடல்மல்லைக் கிடந்த கரும்பே
வள்ளாலுன்னை யெங்ஙனம் நான் மறக்கேனே. (௪)

பதம்.	உரை.	பதம்.	உரை.
புள் வாய்	பக்ஷியாகிய ப(ப)காஸுரனுடைய வாயை	கள்வா	அறியவொண்ணாத (ஸ்வபாவத்தையுடைய)வனே!
பிளந்த	கிழித்துப்போகட்ட	கடல்மல்லை	திருக்கடல் மல்லையில்
புனிதா	பரிசுத்தனே!	கிடந்த	பள்ளிகொண்டிருக்கிற
என்று அழைக்க	என்று (நான்) கூப்பிடாநிற்க,	கரும்பே	போக்யபூதனே!
உள்ளேநின்று	என் ஹ்ருதயத்திலேயிருந்து	வள்ளால்	உதாரனான
என்உள்ளம்	என்மநஸ்ஸு	உன்னை	உன்னை
குளிரும்	குளிரும்(தாபமாறும்)படியாயிருக்கிற	நான்	நான்
ஒருவா	அத்விதீயனே!	எங்ஙனம்	எந்த உபாயத்தினால்
		மறக்கேன்	மறக்க சக்தனாகிறேன்? (ஒருநாளும் மறவேன்). (௪)

வ்யா.—நாலாம்பாட்டு. (புள்வாய்பிளந்த) பகாஸுரனுடைய வாயைக் கிழித்து, ஆஶ்ரிதவிரோதியை, ஆளிட்டு அந்திதொழாதே, தானே கைதொட்டுப் போக்கினானென்னும் சுத்தியை யுடையனாயிருக்கிறபடி. (புள்வாய்பிளந்த புனிதா) என்றாய்த்து இவர் கூப்பிட்டது. பின்னை அவன் செய்ததென்னென்னில்; (உள்ளேநின்று) புறப்பட்டுவந்து தோற்ற இவர்க்குப் பற்றாதென்று பார்த்து, ஹ்ருதயத்திலேநின்று, கமர் பிளந்திடமெங்கும் வவ்வலிடும்படி பண்ணினானாய்த்து.

(கள்வா) ஆஶ்ரிதவிஷயத்தில் இவன் செய்யுமவை பரிச்சேதிக்கப் போகாதாய்த்து. (கடல்மல்லைக்கிடந்த கரும்பே) திருக்கடல் மல்லையிலே வந்து சாய்ந்தருளின பரமரஸிகனே! "கரும்பே" என்கிறது - கைதொட்டு நெருக்குதலால் வரும் செவ்வியழிகை யின்றிக்

கேயிருக்கை. (வள்ளால்) (க) "𑌤𑌸𑍍𑌯𑍈𑌷 𑌆𑌤𑍍𑌮𑌾 𑌵𑌿𑌵𑍃𑌣𑍁𑌤𑍇 𑌤𑌨𑍂𑌂𑌸𑍍𑌵𑌾𑌮𑍍 - தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தநூம் ஸ்வாம்" என்கிறபடியே, தன்னுடைய வடிவழகை முற்றூட்டாக ஸர்வஸ்வதாநம் பண்ணினபடி. (உன்னை எங்ஙனம் நான் மறக்கேனே) மஹோபகாரகனாயிருக்கிற உன்னை, உன்னாலே உபகாரம் கொண்டிருக்கிற நான், எத்தைச்சொல்லி மறப்பது ... ... (ச)

அநு —நாலாம்பாட்டு. (புள்ளித்யாதி) கீழ்ப்பாட்டில்-உகப்பு தலை மண்டையிட்டபடி சொல்லிற்று; அது தெருட்டி மறக்கத்தேட, மறவாதபடி உள்ளே புகுந்து வலிக்கையாலே மறக்க விரகில்லை என்கிறார் என்று ஸங்கதி.

மேலுக்கவதாரிகை (புள்வாயித்யாதி) (புறப்பட்டு) புறம்பே யிருந்து என்றபடி.

(ரஸிகன்) என்றது - ரஸ: அஸ்யாஸ் தீதி என்கிற மதுப்பின் மேலே க(ந்)ப்ரத்யயமாய் ரஸவானென்றபடி. பாலே என்றதே, "கரும்பே" என்றதுக்குத்தாத்பர்ய மருளிச்செய்கிறார் (கரும்பித்யாதி). கைபட்டால் தின்னப்போமே பாலாகிலென்று கருத்து.... ... ... (ச)

மூ.—வில்லேர்நுதல் வேல் நெடுங்கண்ணியும் நீயும்
கல்லார் கடுங்கானம் திரிந்த களிறே
நல்லாய் நரநாரணனே யெங்கள்நம்பி
சொல்லாயுன்னை யான்வணங்கித் தொழுமாறே. (ரு)

பதம்.	உரை.	பதம்.	உரை.
கல்ஆர்	கற்கள் நிறைந்ததாய்	திரிந்த	ஸஞ்சரித்த
கடும்	(துஷ்ட ம்ருகங்களினால்) அதிக்ரூரமாயிருக்கிற	களிறே	மத்தகஜமே!
கானம்	காட்டிலே,	நல்லாய்	ஆஸ்ரிதவாத்ஸல்யமாகிற நன்மையுடையவனே!
வில்லேர்	தநுஸ்ஸோடொத்த	நரநாரணனே	(ப்ரஜைகளுக்காக) நரநாராயணாவதாரம் பண்ணினவனே!
நுதல்	நெற்றியையும்		
வேல்	வேல்போன்றதாய்		
நெடு	நீண்டுமிருக்கிற		
கண்ணியும்	கண்களையுமுடையவளான பிராட்டியும்	எங்கள்	எங்களுடைய (குறை) தீரும்படியான)
நீயும்	அவளுக்கு வல்லபனான நீயுமாக	நம்பி	பூர்ணனே!
		உன்னை	ஸர்வஸ்வாமியான உன்னை

(க) கடோப-க-உ-உக.

யான்	சேஷபூதனான நான்	தொழும்ஆறு	ஆஸ்ரயிக்கும் ப்ரகாரத்தை
வணங்கி	திருவடிகளிலே விழுந்து	சொல்லாய்	அருளிச்செய்ய வேணும். (௫)

வ்யா. — அஞ்சாம்பாட்டு. (வில்லேர்நுதலித்யாதி) வில்லோடொத்த நுதலையும், வேலோடொத்த கண்களையுடையளுமாய், உனக்குங்கூட ஆகர்ஷகமான ஸௌகுமார்யத்தை யுடைய பெரியபிராட்டியாரும், அவள் தானும் கூடத் துணுக்குத் துணுக்கென்னும்படியான ஸௌகுமார்யத்தையுடைய நீயும், துஷ்டஸத்வ ப்ரசுரமாய், ஸஞ்சாரயோக்யதையில்லாத காட்டிலே, ஒருகளித்த ஆனை, பிடியோடேகூட ஸ்வைரமாக ஸஞ்சரிக்குமாபோலே; (க) * ஆள்பார்த்துழிதருவானாய்க்கொண்டு திரிந்தவன்.

(நல்லாய்) ப்ரஜைகள் விஷயத்தில், அவர்கள் தங்களில் காட்டிலும் வத்ஸலனாயிருக்குமவனே!. (நரநாரணனே) ஸ்தநந்தய ப்ரஜைக்காகக் குடிநீர் குடிக்கும் தாயைப்போலே, இவர்களுக்காகத் தபஸ்ஸு பண்ணுமவனே! (எங்கள் நம்பி) குறைவாளரான எங்கள் குறையை †நிரப்புகைக்கீடான பௌஷ்கல்யத்தை யுடையவனே! (சொல்லாய்) “உன்னுடைய கைங்கர்யத்துக்கு விரோதிகளை நானே போக்கித்தருகிறேன், அஞ்சாதே கொள்,” என்று (௨) “𑌮𑌾 𑌶𑌚𑌃- மாசுச:” என்றாப்போலே ஒருவார்த்தை யருளிச்செய்யவேணும். (௩) “𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑍇𑌭𑍍𑌯𑌃 𑌅𑌭𑌯𑌂𑌦𑌦𑌾𑌮𑌿-ஸர்வபூதேப்ய: அபயம் ததாமி” என்றாப்போலேயிருப்பதொரு வார்த்தை அருளிச்செய்யவேணும். ... ... (௫)

அரு. — அஞ்சாம்பாட்டு (வில்லேரித்யாதி) கீழ்ப்பாட்டில் மறக்கவிரகில்லாதபடி அநுபவித்தபடி யருளிச்செய்தார்; அவ்வநுபவ ஜநிதப்ரீதியால் கைங்கர்யம் பண்ணும் விரகை எனக்கருளிச் செய்யவேணுமென்று ப்ரார்த்திக்கிறாரிங்கென்று ஸங்கதி.

“கடும்” என்றதுக்குத் தாத்பர்யம் (துஷ்ட ஸத்வப்ரசுரமாய்) என்றது. “கல்லார்” என்றதுக்குத் தாத்பர்யம் (ஸஞ்சாரேத்யாதி).

(அவர்கள் தங்களில் காட்டில்) ப்ரஜைகளுடைய மாதாபிதாக்களைக் காட்டில் என்றபடி. (தபஸ்ஸாவது) சிஷ்யாசார்யக்ரம மநுஷ்டிக்கை.

மூ.—பனியேய் பரங்குன்றின் பவளத்திரளே
முனியே திருமூழிக்களத்து விளக்கே

(க) ௪-திரு-௯௦. (௨) கீ-௧௮-௬௬. (௩) ரா-யு-௧௮-௩௩.
† (பா) போக்குகைக்கீடான.

இனியாய தொண்டரோம் பருகின்னமுதாய
கனியே உன்னைக்கண்டு கொண்டுய்ந்தொழிந்தேனே. (சு)

பதம்.	உரை.
பனியேய்	பனியினால்ப்ரசுரமாய்
பரம்	ஸ்ரேஷ்ட்டமா யிருந்துள்ள
குன்றின்	ஹிமவத் பர்வதத்திலுள்ள திருப்பிரிதியிலெழுந்தருளியிருக்கிற
பவளம் திரளே	பவளக்கொடியின் திரள்போல் ஸுந்தரனானவனே!
முனியே	(ஆஸ்ரிதருடைய ஹிதத்தைச்)சிந்திக்குமவனே!
திருமூழிக்களத்து	திருமூழிக்களமென்னும் திவ்யதேசத்திலெழுந்தருளியிருக்கிற

பதம்.	உரை.
விளக்கே	ஸ்வயம்ப்ரகாசனே!
இனியாய	போக்யபூதனே!
தொண்டரோம்	அடிமைபூண்ட நாங்கள்
பருகு	பாநம்பண்ணுகைக்கு யோக்யமாய்
இன் அமுதாய	மதுரமான அம்ருதம்போன்றவனே!
கனியே	பழுத்த பழம்போன்றவனே,
உன்னை	இப்படிப்பட்ட உன்னை
கண்டுகொண்டு	ஸாக்ஷாத்கரித்து
உய்ந்தொழிந்தேன்	உஜ்ஜீவிக்கப்பெற்றேன். (சு)

வயா.—ஆறும்பாட்டு. (பனியேய்பரங்குன்றித்யாதி) பனி மிக்கிருந்துள்ள ஹிமவானில் திருப்பிரிதியிலே, ஸர்வைஸ்ஸ்ப்ருஹணீயனாய்க்கொண்டு ஸந்நிஹிதனானவனே! (முனியே) இச்சேதநர் அறியாதிருக்கச் செய்தே எப்போதுமொக்க இவர்களுக்கு ஹிதத்தை அநுஸந்திக்குமவனே; (திருமூழிக்களத்து விளக்கே) திருமூழிக்களத்திலே வந்து உன்னுடைய ஸ்வரூப ரூப குணங்களுக்கு நீயே ப்ரகாசகனாய்க்கொண்டு நிற்கிறவனே!

(இனியாய்)இனிமைக்கு ப்ரகாசத்தைப் பண்ணுகையன்றிக்கே, இனிமை தானாயிருக்கை. (தொண்டரோம்பருகு) என்று, தேவர்கள் பருகும் அம்ருதம்போலன்றிக்கே, கைங்கர்ய ருசியுடையராயிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்கள் பருகும் அம்ருதமாய், அப்போதே எடுத்து நுகரலாம்படி கனிபோலே யிருக்கிறவனே! (உன்னைக் கண்டுகொண்டு) காணப்பெறுமையாலே (க) "𑌅𑌸𑌨𑍍𑌨𑍇𑌵- அஸந்நேவ" என்கிறபடியே உருமாய்ந்த நான் கண்டு உஜ்ஜீவிக்கப் பெற்றேன். ... ... (சு)

(க) தை-ஆ-சு-க.

அரு.—ஆறாம்பாட்டு. (பனியித்யாதி) "சொல்லாய்" என்னாநின்றீர், வடதிசைக்கு ‡அளவான திருப்பிரிதி துடக்கமாகவந்து நிற்க, (௧) "𑌶𑍍𑌰𑍀𑌰𑌙𑍍𑌗𑌾𑌗𑍍𑌰 𑌇𑌤𑌸𑍍𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌃 - ஶ்ரீரங்காக்ர இதஸ்ஸ்திதி:" என்னுமாபோலே பலவிடங்களி லிருப்பது அடிமைகொள்ளவே யன்றோவென்ன; அப்படியாமென்று சொல்லி ஹ்ருஷ்டராகிறார் என்று ஸங்கதி.

†பனியென்று சொல்லும்படியாய், ஶ்ரேஷ்ட்டமான பர்வதமென்றருளிச்செய்கிறார் (பனியித்யாதி). (சேதனர்) என்றவனந்தரம் "ஹிதத்தை" என்று சேஷம். ... ... (௬)

மூ.—கதியேலில்லை நின்னருளல்லதெனக்கு
நிதியே திருநீர்மலை நித்திலத்தொத்தே
பதியே பரவித்தொழும் தொண்டர் தமக்குக்
கதியே உன்னைக்கண்டு கொண்டுய்ந்தொழிந்தேனே. (௭)

பதம்.	உரை.	பதம்.	உரை.
நின்அருள் அல்லது	உன்னுடைய க்ருபையொழிய	தொத்தே	மாலைபோன்றவனே!
எனக்கு	எனக்கு	பதியே	(ஆஶ்ரிதர்க்கு)இருப்பிடமானவனே!
கதியேல்	(வேறு) உபாயமோவென்றால்	பரவி	ஸ்தோத்ரம்பண்ணி
இல்லை	கிடையாது;	தொழும்	ஆஶ்ரயியாநின்ற
நிதியே	நிதிபோல் அநுபாவ்யனானவனே!	தொண்டர் தமக்கு	அடியார்க்கு
திருநீர்மலை	திருநீர்மலையிலே	கதியே	ப்ராப்யனானவனே!
நித்திலம்	முத்தினுடைய	உன்னைக் கண்டுகொண்டு உய்ந்தொழிந்தேன். (௭)	

வ்யா.—ஏழாம்பாட்டு. (கதியேலில்லை) கதியாகிலும் உன்னுடைய ப்ரஸாதமொழிய எனக்கு வேறொன்றில்லை. (கதி) என்றது - புகலென்றபடி. ப்ராப்யமாகிலும் உன் திருவடிகளை யொழிய வேறொன்றில்லை. நான் அநந்யகதி. (நிதியே) வைப்பானதநமே! (திருநீர்மலை) திருநீர்மலையிலே வந்து, முத்துமாலையை உடம்பிலே அள்ளி எறட்டுக்கொள்ளுமாபோலே குளிர உடம்பிலே எறட்டு அணைத்துக்கொள்ளலாம்படி யிருக்கிறவனே!

(பதியே) ஆஶ்ரிதர்க்கு வாஸஸ்த்தாநமாயுள்ளவனே! (பரவித்தொழும்) அடைவுகெட ஏத்தித்தொழும் ஶ்ரீவைஷ்ணவர்களுக்கு ப்ராப்யனாயுள்ளவனே! அன்றிக்கே, (பதியே பரவித்தொழுந் தொண்டர்)

---

(௧) ‡ அளவான-எல்லையான.

† இவ்வரும்பதத்துக்கு "பனியே" என்று பாடமிருக்கலாம்.

என்று, என்னோடு ஸகோத்ரிகளாய், (க) "நானுகந்த ஊரெல்லாம்" என்கிறபடியே, உகந்தருளின நிலமெல்லாம் புக்கு அநுபவிக்குமவர்களுக்கு ப்ராப்யனாயுள்ளவனே! (உன்னைக்கண்டுகொண்டு) நீ உகந்தருளின நிலங்களிலே வந்து ஸந்நிஹிதனாகையாலே, உன்னைக்கண்டுகொண்டு உஜ்ஜீவிக்கப்பெற்றேன். ... ... (எ)

அரு.—ஏழாம்பாட்டு. (கதியித்யாதி) கீழ்ப்பாட்டில் பிறந்த போக்ய ([illegible])தாநுஸந்தாநத்தாலே யுண்டான உகப்பின்மிகுதியாலே, நீயே எனக்கு ப்ராப்யமும் ப்ராபகமுமாகப் பெற்றேன் என்று க்ருதார்த்ததாநுஸந்தாநம் பண்ணுகிறாரென்று ஸங்கதி.

"கதி" பதத்துக்கு ப்ராபகத்வ விவக்ஷயா கீழருளிச்செய்து, ப்ராப்யத்வ விவக்ஷயா வருளிச்செய்கிறார் (ப்ராப்யேத்யாதி). "நித்திலம்" என்றது - பனிஸ்த்தலமென்றாய், அதினர்த்தம் (முத்து) என்றது. "தொத்து" என்றதினர்த்தம் (மாலை) என்றது.

பதியே-திருப்பதிகளையே; பரவித்தொழும் தொண்டரென்று, யோஜநாந்தரம் (அன்றிக்கே யித்யாதி). ... . (எ)

மூ.—அத்தாவரியே யென்றுன்னை யழைக்கப்
பித்தாவென்று பேசுகின்றார் பிறரென்னை
முத்தே மணி மாணிக்கமே முளைக்கின்ற
வித்தே உன்னை யெங்ஙனம் நான் விடுகேனே. (அ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
அத்தா	ஸ்வாமியே!	மணி	ஶ்லாக்யமான
அரியே	விரோதி நிரஸநசீலனே!	மாணிக்கமே	மாணிக்கம்போல் ஸுலபனே!
என்று	என்றுசொல்லி		
உன்னை	உன்னை	முளைக்கின்ற	(ப(ஃ)ல பர்யந்தமாம்படி) முளையாநின்ற
அழைக்க	(நான்) கூப்பிட,		
பிறர்	அயலார்		
என்னை	இப்படி கூப்பிடுகிறவென்னை	வித்தே	விதைபோன்றவனே!
		உன்னை	ஏவம்விதனான உன்னை
பித்தாஎன்று	பித்தனே (ப்ராந்தனே)! என்று	நான்	உன் ஸ்வபாவமறிந்த நான்
பேசுகின்றார்	சொல்லுகிறார்கள்;	எங்ஙனம்	எவ்விதமாக
முத்தே	முத்துப்போல் குளிர்ந்தவனே!	விடுகேன்	விட சக்தனாவேன்?

வ்யா.— எட்டாம்பாட்டு. (அத்தாவரியே யித்யாதி) என்ஸ்வாமியே! என்னுடைய விரோதியைப் போக்கினவனே! என்று உன்னை

(க) திருநெ-௬.

நான் சொல்லிக்கூப்பிட. (பித்தாவென்று) அத்தாவென்று அஸங்கத பாஷணம் பண்ணிக் கூப்பிடாநின்றான்; இவன் பித்தனாயிராநின்றான், என்னாநின்றார்கள், "இவர்கள் அஸங்கதபாஷணம் பண்ணாநின்றார்கள், பிச்சராயிராநின்றார்கள்" என்று நான் நினைத்திருக்குமவர்கள் என்னை.

பிறரென்னைப் பேசாநின்றார்களென்று கைவிடலாம்படி யிருக்கிறாயல்லையே நீ. (முத்தே) முத்துப்போலே ஶ்ரமத்தைப் போக்குமவனே! பெருவிலையனான மாணிக்கம்போலே யிருக்கிறவனே! ப(ஃ)லத்தோடு வ்யபிசரியாதவனே! உன்னை எத்தைச்சொல்லி நான் விடுவது. … … … … … … (௮)

அரு.—எட்டாம்பாட்டு. (அத்தாவித்யாதி) ஒருகால் சொன்னத்தையே ஒன்பதின்கால்சொல்லிக்கொண்டு நீர். தேன்குடிக்கும் நரிபோலே கண்டு களித்திராகில் உம்மை இந்தநாளிலேயே †ஓரேதத்தைச் சொல்லி *ஆதரத்தைக்கட்ட ‡மட்டிலே விட்டோடவேண்டி வரும்; இதுக்கு இத்தனைகளிக்கவேணுமோ வென்ன; பேசினார்களாகிலும் விடும்படியாயோ உன்படி என்கிறாரென்று ஸங்கதி.

"மாத்ராதிகளிருக்க ஈஶ்வரனே ரக்ஷகனென்கிறாரிறே, பித்தர்" என்பரென்று விவக்ஷித்தருளிச் செய்கிறார் (அஸங்கதேத்யாதி). எம்பெருமானே ரக்ஷகன், மாத்ராதிகள் ரக்ஷகரல்லரென்கிற தமக்கு ப்ரதிகோடித்வ விவக்ஷயா "பிறர்" என்றதுக்கு அர்த்த மருளிச்செய்கிறார் (இவர்களித்யாதி). "என்னை" என்றதுக்கு "என்னாநின்றார்கள்" என்றத்தோடந்வயம்.

மேலுக்கவதாரிகை (பிறரித்யாதி). மணி-அழகாய், அழகான மாணிக்கமென்கிறார் (பெருவிலையனித்யாதி). முளையாதவித்து நிஷ்ப்பலமாகையாலே, முளைக்கின்ற வித்து ஸபலமாமென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார் (பலத்தோடித்யாதி). … … … … … … (௮)

மூ.— தூயாய் சுடர் மாமதிபோலுயிர்க் கெல்லாம்
தாயாயளிக்கின்ற தண்டாமரைக்கண்ணா
ஆயா வலைநீருலகேழு முன்னுண்ட
வாயா உன்னை எங்ஙனம் நான் மறக்கேனே. (௯)

பதம்.	உரை.	பதம்.	உரை.
தூயாய்	பரிசுத்தனே!	தாயாய்	மாதாவாய்நின்று
சுடர்	(குளிர்ந்த) கிரணங்களையுடைய	அளிக்கின்ற	க்ருபைபண்ணியருளுகிற
		தண்	குளிர்ந்த
மா மதிபோல்	பூர்ணசந்த்ரன்போல்	தாமரைக்கண்ணா	செந்தாமரை போன்ற திருக்கண்களையுடையவனே!
உயிர்க்கெல்லாம்	ஸகலப்ராணிகளுக்கும்		

---

† ஏதம்-தோஷம். * ஆதரத்தைச் சட்டுதல்-துவக்கப்பண்ணுதல்.
‡ மட்டிலே-அவ்வளவிலே.

ஆயா	க்ருஷ்ணனாக அவதரித்தவனே!	உண்டவாயா	விழுங்கியவாயையுடையவனே!
அலை	திரைக்கிளப்பத்தையுடைய	உன்னை	இப்படி ஆபத்ஸகனான உன்னை
நீர்	ஸமுத்ரத்தினால் சூழப்பட்ட	நான்	உபகாரமறிந்த நான்
உலகுஏழும்	ஸப்தலோகங்களையும்	எங்ஙனம்	எவ்விதமாக
முன்	ப்ரளயகாலத்தில்	மறக்கேன்	மறக்கக்ஷமனாகிறேன் (௯)

வ்யா. —ஒன்பதாம்பாட்டு. (தூயாயித்யாதி) (௧) ‹‹𑌸𑍁𑌹𑍃𑌦𑌂 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 - ஸுஹ்ருதம் ஸர்வபூதாநாம்'' என்கிறபடியே, ஸர்வபூத ஸுஹ்ருத்தாய் ஆநுகூல்யம் பண்ணினாரோடு, ப்ராதிகூல்யம் பண்ணினாரோடு வாசியற எல்லார்க்கு மொக்க நன்மையைப் பண்ணுகையால் வந்த பாவ(𑌭𑌾𑌵)சுத்தியையுடையவனே! ஸகலதாபங்களுமாறும்படி சீதமான கிரணங்களையுடைய பூர்ணசந்த்ரனைப்போலே, ஸர்வப்ராணிகளையும் தாயாய்க்கொண்டளிக்கின்ற குளிர்ந்த திருக்கண்களையுடையவனே! என்று திருக்கண்களுக்கு விசேஷணமாதல்; அன்றிக்கே, சுடர்மாமதிபோல் உயிர்க்கெல்லாம் தாயாய் அளிப்பாயுமாய், அவ்வாத்ஸல்யமெல்லாம் தோற்றும்படியிருக்கிற திருக்கண்களையுடையவனே! என்னுதல்.

(ஆயா) இப்படி யிருந்துவைத்து, உன்னுடைய விபூதிபூதரிலே, சிலர் “இவன் என்புத்ரன்” என்று அபி(𑌭𑌿)மாநிக்கலாம்படி க்ருஷ்ணனாய் வந்தவதரித்தவனே! (அலைநீருலகேழும்) ஆபத்து கரைபுரண்டால் வரையாதே எல்லாரையு மொக்க ரக்ஷிக்கும் ஸ்வபாவனானவனே! திரைக்கிளர்த்தியையுடைய கடல் சூழ்ந்தபூமியை அமுதுசெய்த திருப்பவளத்தை யுடையவனே! இப்படி ஆபத்ஸகனான உன்னை எங்ஙனே மறக்கும்படி. ... ... (௯)

அரு. —ஒன்பதாம்பாட்டு. (தூயாயித்யாதி) ப்ரத்யக்ஷமாக மாதாபித்ராதிகள் ரக்ஷகரென்று கண்டார் பல்கூடி ஏசத்துடங்கில்; ஶாஸ்த்ரகம்ய(𑌗𑌮𑍍𑌯)னான என்னுடைய ரக்ஷகத்வத்தை மறக்கவேண்டிவரும் கிடீர்; ஆகையாலே விடவேண்டிவரும், ஆக உம்முடைய களிப்பு ப்ரயோஜநவத்தன்றே யென்ன; நீ ஸர்வப்ரகாரத்தாலும் ஸர்வவிதோபகாரகனாய், சில பாக்யாதி(𑌭𑌾𑌗𑍍𑌯𑌾𑌦𑌿)கர்க்குக் கண்ணுக்கும் விஷயமாக நிற்கிறாய், மாத்ராதி

---

(௧) கீ-௫-௨௯.

களைக்காட்டில் அணித்தாய் உதவுகிறாய், ஆகையால் உன்னை ஒருகாலும் விட வேண்டா வென்கிறார் என்று ஸங்கதி.

“உயிர்க்கெல்லாம்” என்ற பதத்திலே நோக்காகத் தூய்மையை யருளிச்செய்கிறார் (ஸுஹ்ருத மித்யாதி).

தாத்பர்ய மருளிச்செய்து சப்தார்த்த மருளிச்செய்கிறார் (திரையித்யாதி). ... ... (௯)

மூ. —வண்டார் பொழில்சூழ் நறையூர் நம்பிக்கென்றும்
தொண்டாய்க் கலியனொலிசெய் தமிழ்மாலை
தொண்டீரிவை பாடுமின்பாடி நின்றாட
உண்டே விசும்பு உந்தமக்கில்லை துயரே. (௧௦)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பதம்.	உரை.	பதம்.	உரை.
தொண்டீர்	பக்தஜநங்களே!	இவை	இப்பத்துப் பாட்டையும்
வண்டு ஆர்	வண்டுகள் நிறைந்த	பாடுமின்	பாடுங்கோள்;
பொழில்சூழ்	சோலைகள்சூழ்ந்த	பாடிநின்று	(அப்படி) காநம்பண்ணி
நறையூர் நம்பிக்கு	திருநறையூர் நம்பியிடத்தில்	ஆட	நர்த்தநம்பண்ணவே,
என்றும்	எப்போதும்	உந்தமக்கு	உங்களுக்கு
தொண்டாய்	அடிமைபூண்ட	துயர்	துக்கம்
கலியன்	ஆழ்வார்	இல்லை	நசித்துவிடும்;
ஒலிசெய்	அருளிச்செய்த	விசும்பு	பரமபதமானது
தமிழ்மாலை	தமிழ்த்தொடையான	உண்டு	கிடைக்கும். (௧௦)

வ்யா. —பத்தாம்பாட்டு. (வண்டாரித்யாதி) மதுவெள்ளத்தாலே, வண்டுகளானவை பரிமளம்போலே படிகிற பொழில்களையுடைத்தான திருநறையூரிலே நிற்கிற கல்யாணகுண பரிபூர்ணனைக் கவிபாடிற்று. (தொண்டாயித்யாதி) அவன் திருவடிகளில் நித்யகைங்கர்யத்திலே அதிகரித்த திருமங்கையாழ்வார், ஒலியுடைத்தாம்படி யருளிச்செய்த தமிழ்த்தொடை. என்னைப்போலே நீங்களுமிவ்விஷயத்திலே ருசியையுடையிகோளாய் பாடுவதாடுவதாகவே, பரமபதம் தன்னடையே ஸித்திக்கும்படியாம். அதுக்கு விரோதியான பாபம் தன்னடையே போம். ... ... (௧௦)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

அரு'—பத்தாம்பாட்டு. (வண்டாரித்யாதி) உந்தமக்கு - விசும்புண்டு - துயரில்லை என்றந்வயம் திருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிறார் (என்னைப் போலே யித்யாதி). ... ... (௧௦)

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஏழாம்பத்தில் முதல்திருமொழி முடிந்தது.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஏழாம்பத்து இரண்டாந்திருமொழி

புள்ளாய்ப்ரவேசம்.

வ்யா.—(புள்ளாய்) கீழ் ஸம்பந்தஜ்ஞாநம் விளைந்தபடி சொல்லிற்று; பின்பு தாம் நினைத்த பரிமாற்றம் பெருமையாலே, (௧) "பிறவாமை எனைப்பணி" என்று அபேக்ஷித்தார்; "நீரிப்பாடுபடுவதென்? உமக்காகவன்றோ நாம் உகந்தருளின இடங்களிலே வந்து நிற்கிறது" என்ன; எல்லாம் பெற்றாராய் ஸமாஹிதரானார். "இதுவே பேறுமிழவுமாகைக்கு நம்தலையால் ஏதேனுமுண்டோ?" என்று ஆராய்ந்து பார்த்தார், இத்தலையிலொன்றுமின்றிக்கே, அவனெதிர்சூழல் புக்குப் பண்ணின க்ருஷி இப்படி பலித்த பலமாயிருந்தது, (௨) "ஊனேராக்கை தன்னை யுழந்தோம்பி வைத்தமையால் நானே யெய்தப்பெற்றேன்" இத்த்யாஜ்யமான சரீரத்தைக்கொண்டே பேற்றுக்குடலாம்படி பண்ணியருளினான் என்கிறார். ... ... *

அரு.—(புள்ளாய்ப்ரவேசம்) "கீழ்" என்றது - (௩) "கிடந்த நம்பி" என்கிற திருமொழியிலே என்றபடி. (இதுவே பேறுமிழவும்) என்றது - பகவதநுபவமே பேறும், இதில்லாமையே இழவும் என்றபடி. (இப்படி பலித்தபலமாயிருந்தது) என்றதுக்கு, இத்திருமொழியில் உயிர்ப்பாட்டைக்காட்டி அதுக்குத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (ஊனேரித்யாதி).

மூ:—புள்ளாயேனமுமாய் புகுந்தென்னை யுள்ளங்கொண்ட
கள்வா வென்றலுமென்கண்கள்நீர்கள் சோர்தருமால்

---

(௧) ௭-௧-௧. (௨) ௭.௨-௯. (௩) ௬-௧௦-

உள்ளே நின்றுருகி நெஞ்சமுன்னை யுள்ளியக்கால்
நள்ளேனுன்னையல்லால் நறையூர் நின்ற நம்பீயோ. (க)

பதம்.	உரை
நறையூர்	திருநறையூரென்னும் திவ்யதேசத்தில்
நின்ற	எழுந்தருளியிருக்கிற
நம்பி	பூர்ணனே!
புகுந்து	(என்னுள் அந்தர்யாமியாய்) ப்ரவேசித்து
புள்ளாய்	(ஹம்ஸ) பக்ஷியாயும்
ஏனமுமாய்	வராஹமாயும் (அவதரித்த செயல்களைக்காட்டி)
என்	விஷயாந்தர ப்ரவணனான என்னுடைய
உள்ளத்தை	மநஸ்ஸை
கொண்ட	தனக்கு வசமாக்கிக்கொண்ட
கள்வா	வஞ்சகனே!
என்றாலும்	என்றுசொல்லும்போ[தும்
என் கண்கள்	என்னுடைய நேத்ரங்களானவை
நீர்கள்	ஆநந்தபா(ஷ்)ஷ்பத்தை
சோர்தரும்	பெருக்காநின்றன;
ஆல்	ஆஶ்சர்யம்!
நெஞ்சம்	(என்) மநஸ்ஸானது
உன்னை	என்னுடைய உஜ்ஜீவநத்தில் வ்யாபரித்த உன்னை
உள்ளியக்கால்	அநுஸந்திக்கப் புக்கால்
உள்ளேநின்று	(என்) ஹ்ருதயத்திலேயிருந்து
உருகி	நீராகக் கருகி(ப்போகாநின்றது),
உன்னையல்லால்	(இனி) உன்னைத்தவிர வேறொரு விஷயங்களை)
நள்ளேன்	ஆசைப்படேன்.

“ஓ” என்பது - ப்ரீத்யதிசய த்யோதகமான அவ்யயம். (க)

வ்யா.—முதற்பாட்டு. (புள்ளாயித்யாதி) என்னுடைய து:க்க நிவ்ருத்திக்கு நான் பட்டது பட அமையாதோ? நானும் பிறவாத பிறவிகளையன்றோ நீ வந்து பிறந்தது. அன்னமாயும் வராஹமாயுமான செயலைக் காட்டி, என் ஹ்ருதயத்தைக் கொண்டானாய்த்து. (க) “మనఏవ మనుష్యాణాం కారణం బన్ధమోక్షయోః - மநஏவ மநுஷ்யாணாம் காரணம் பந்தமோக்ஷயோ:” என்று பந்தஹேதுவானது தன்னையே மோக்ஷஹேதுவாம்படி பண்ணியருளினான். (கள்வாவித்யாதி) இவர், “நெஞ்சிலே புகுராநின்றானென்றறியில், ஒட்டார்” என்று தெரியாதபடியாகப் புகுந்தபடி. இவ்வுபகாரத்தை அநுஸந்தித்துப் பேசப் புக்கவாறே, கண்ணானது நீர் பாயாநின்றது. (என்கண்கள்) ஸ்த்ரீ

(க) வி-பு-சு-எ-உஅ.

களைநினைந்து அழுதுபோந்த என்னுடைய கண்கள்.

உன்னை அநுஸந்திக்கப் புக்கவாறே, நெஞ்சானது உள்ளேநின்றுருகி உடைகுலைப்படாநின்றது. (நள்ளேன்) இனி வேறே நூறாயிரம் இதரவிஷயங்கள் முகங்காட்டினாலும், அவற்றோடு செறியேன். (நறையூர்) நான் நோவுபடுகிற ஸம்ஸாரத்திலே, நீயே முற்பாடனாய் வந்து நின்ற பின்பு அவற்றோடு பொருந்துமோ? ப்ரீத்யதிசயத்தாலே "ஓ" என்கிறார். ... ... (க)

அரு.—முதற்பாட்டு. (புள்ளித்யாதி) (நான்பட்டது படவமையாதோ) என்றது - நான் மநுஷ்யனாய்ப்பிறந்து பட்டாப்போலே, நாட்டில் பிறந்து மாயங்கள் செய்து படாதன பட்டது போராதோ வென்றபடி. (நானும் பிறவாத) ஹேயனான நானும் பிறக்க விரும்பாத, ஜுகுப்ஸிதமான வென்கை. "உள்ளங்கொண்டகள்வா" என்று ஸம்போதிக்கைக் கடியான மாநஸாநுஸந்தாந விசேஷத்தை யருளிச்செய்கிறார் (அன்னமாயு மித்யாதி வாக்யத்வயத்தாலே). (அருளினான்) என்றவநந்தரம், என்றநுஸந்திப்பது என்று கூட்டுவது. புள்ளாய் ஏனமுமாயுள்ள செயலைக் காட்டி உள்ளங் கொண்டானாகில், "கள்வா" என்பானென்னென்ன வருளிச்செய்கிறார் (இவரித்யாதி). (புகுந்தபடி) என்றதுக்கு, (க) "யமாத்மா ந வேத- யமாத்மா ந வேத" என்று அந்தர்யாமியாய்ப் புகுந்ததைக் களவாகச் சொல்லுகிறாரென்று கருத்து.

அந்தர்யாமியாய்ப் புகுந்து-புள்ளாய் ஏனமுமாய் - என்னுள்ளங்கொண்ட கள்வா என்று சப்தார்த்தம்.

(உள்ளேநின்று உருகி நெஞ்சமுன்னை யுள்ளியக்கால்) [நெஞ்சம்-உள்ளே நின்றுருகி, அத்தால் உன்னையல்லால், மற்றொன்றை நள்ளேன்] என்றந்வயம் விவக்ஷித்துத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (உன்னையித்யாதி). நான் உள்ளே புகுரில் இரும்புபோல் வலியதான நெஞ்சு பதம்செய்து, அவ்வபதாநங்களைக் காட்டி ஆநந்தாஶ்ருக்களைப் ப்ரவஹிப்பித்து, நெஞ்சை எத்தனை உருக்கினாலும், பள்ளமடையான விஷயங்கள் ப்ரபலங்களாகையாலே தன்னடையே, செறியப்பண்ணுவோ வென்னும் பகவதபிப்ராயத்தாலே (நறையூர்நின்றநம்பி) என்கிறாரென்னுமிடம் தோற்ற வருளிச்செய்கிறார் (நானித்யாதி). ... ... (க)

மூ.—ஓடாவாளரியினுருவாய் மருவி யென்றன்
மாடே வந்தடியேன் மனங்கொள்ள வல்ல மைந்தா
பாடேன் தொண்டர் தம்மைக்கவிதைப் பனுவல் கொண்டு
நாடேனுன்னை யல்லால் நறையூர் நின்றநம்பீயோ. (உ)

(க) ப்ரு-ங-எ-உஉ.

பதம்.	உரை.
	நறையூர்நின்ற நம்பி!
ஓடா	(நாட்டில்) நடையாடாத
ஆள்அரியின்	நரஸிம்ஹத்தினுடைய
உருவாய்	வடிவையுடையனாய்க் கொண்டு
என்றன்மாடே	என்னிடத்தில்
வந்து	ஸந்நிஹிதனாய்
மருவி	(என்னோடு) கலந்திருந்து
அடியேன்	சேஷபூதனான என்னுடைய
மனம்	மநஸ்ஸை
கொள்ளவல்ல	ஸ்வாதீநமாக்கிக் கொள்ளத்தகுந்த

பதம்.	உரை.
மைந்தா	ஸமர்த்தனே!
பனுவல்	சாஸ்த்ர ஸித்தமான (லக்ஷணங்களையுடைய)
கவிதைகொண்டு	கவிகளாலே
தொண்டர்தம்மை	விஷயாந்தர ப்ரவணரான நீசரை
பாடேன்	(இனி) ஸ்தோத்ரம்பண்ணமாட்டேன்,
உன்னையல்லால்	உன்னைத்தவிர (வேறொருவரை)க்கவிபாட)
நாடேன்	(மநஸ்ஸில்) விசாரிக்கவும் மாட்டேன்.

வ்யா·—இரண்டாம்பாட்டு. (ஓடாவித்யாதி) "புள்ளாயேனமுமாய்ப்புகுந்து" என்றார் கீழே, தாழ்ந்த ஜந்மத்திலே வேணுமாகில் பிறக்கிறாய்; நாட்டார் பிறக்கும் பிறவிகளைப் பிறக்கலாகாதோ?

நாட்டில் நடையாடாதபடியான நரஸிம்ஹரூபத்தையுடையையாய். (மருவி) நரஸிம்ஹவேஷபரிக்ரஹம் பண்ணினவன்று துடங்கி, இவருடைய ஹ்ருதயத்திலேகாணும் கிட்டுவது. (என்றன்மாடே வந்து) நீ பராவஸ்த்தனாயாகில், என்பாடு வந்து கிட்டலாமோ? (அடியேன்மனங் கொள்ளவல்லமைந்தா) ஸ்ரீ ப்ரஹ்லாதாழ்வான் நெஞ்சை உனக்காக்கிக் கொண்டாயென்கிறவிது - உனக்கொரு மிடுக்கோ? என்னை உனக்காக்கிக்கொண்ட உனக்கு.

அதுசெய்தோமிறே, மேலே நீர் செய்யப்பார்த்ததென்னென்ன, (பாடேனித்யாதி) சாஸ்த்ரோக்தங்களான லக்ஷணங்களிலே குறைவற்றிருக்கிற கவிகளைக்கொண்டு நீசரைப் பாடுவது தவிர்ந்தேன். "கவிதைப்பனுவல்" என்றது - பனுவல் கவிதை என்றபடியாய், "பனுவல்" என்று - நூலாய், சாஸ்த்ரமென்றபடியாய், ஶாஸ்த்ரோக்தமான லக்ஷணங்களில் குறையற்ற கவியென்றபடி. (நாடேனுன்னையல்லால்) இவனைப் பாடுவோமோ என்று விசாரிக்குமதுவும் தவிர்ந்தேன். (நறையூர் நின்றநம்பியோ) நீ என்னுடைய ஸர்வேந்த்

ரியங்களுக்கும் உன்னை விஷயமாக்கிவைக்க, நான்உன்னைவிட்டுப் புறம்பே கவிபாடுகைக்கு ப்ராப்தியுண்டோ? ... ... (௨)

அரு —இரண்டாம்பாட்டு. (ஓடாவித்யாதி) கீழ்ப்பாட்டுக்கும் இப்பாட்டுக்கும் ஸங்கதி யென்னென்ன; தாமே யருளிச்செய்கிறார் (புள்ளாயித்யாதி). "ஆகாதோ" என்றவநந்தரம் (என்கிறார்) என்று சேஷம்.

(நாட்டில் நடையாடாத) என்றது - *நரங்கலந்த சிங்கமாய் இந்த நாட்டிலென்கை. "ஆளரி" என்று ஆஶ்சர்யத்துக்கு ஹேதுவாகத் தோற்றுகையாலே தாத்பர்ய மருளிச்செய்கிறார் (நரஸிம்ஹேத்யாதி). (கிட்டுவது) என்ற வநந்தரம், கேட்டமாயிருப்பது என்று சேஷம். "உனக்கொருமிடுக்கோ" என்றவிடத்தில் "உனக்கு" என்றதின் விவரணம் (என்னையுனக்காக்கி யித்யாதி).

மேலுக்கவதாரிகை (அதுசெய்தோமிறே யித்யாதி). (இவனை) என்றது - கீழ்ச்சொன்ன நீசனை யென்றபடி. ... ... (௨)

மூ.—எம்மானுமெம்மனையு மென்னைப் பெற்றொழிந்ததற்பின்
அம்மானுமம்மனையு மடியேனுக்காகி நின்ற
நன்மான வொண் சுடரே நறையூர் நின்றநம்பீ உன்
மைம்மான் வண்ணமல்லால் மகிழ்ந்தேத்தமாட்டேனே. (௩)

பதம்.	உரை.
நறையூர்நின்ற நம்பி!	
எம்மானும்	என்தகப்பனும்
எம்மனையும்	என்தாயும்
என்னைபெற்று	என்னை ப்ரஸவித்து (உண்டாக்கி) பின்பு)
ஒழிந்ததற்பின்	(போக ([illegible]) விரோதியென்று) பொகட்டுப்போன வநந்தரம்,
அடியேனுக்கு	ஸ்வதஸ்ஸித்தமான தாஸ்யத்தையுடைய எனக்கு
அம்மானும்	தகப்பனும்
அம்மனையுமாகி	தாயுமாக

பதம்.	உரை.
நின்ற	ஸந்நிஹிதனாய் நின்றவனே!
நல்	விலக்ஷணமாய்
மானம்	பேரளவுடைத்தாய்
ஒள்	அழகியதான
சுடரே	தேஜஸ்ஸை யுடையவனே!
உன்	உன்னுடைய
மை மானம்	மையளவான (அஞ்சநம்போன்ற)
வண்ணமல்லால்	திருமேனியை யல்லது (மற்ற திருப்திகளை)
மகிழ்ந்து	ப்ரீதிபண்ணி
ஏத்தமாட்டேன்	ஸ்தோத்ரம்பண்ணமாட்டேன். (௩)

வ்யா. —மூன்றாம்பாட்டு. (எம்மானுமித்யாதி) நாட்டாருபகரிக்குமளவிலே உபகரித்தாயாகிலன்றோ உன்னை மறக்கலாவது தாயளவிலே உபகரித்தான், தமப்பனளவிலே உபகரித்தான் என்னவொண்ணாதே, அவர்கள் கைவிட்டவளவிலே, முகங்காட்டின உன்னை.

மாதாபிதாக்கள் ராகாந்த(𑌰𑌾𑌗𑌾𑌨𑍍𑌧)ராய், ப்ரஜையை உத்பாதித்துப் பின்பு "யௌவநவிரோதி" என்று காற்கடைக்கொள்ளுமவர்கள். ஜந்மந்தோறும் பழகிப்போந்த வாஸனையாலே, "அம்மே" என்றும், "அப்பா" என்றுமிறே இவன் சொல்லிப்போருவது; அதில் "அம்மே" என்றபோதாகப் பெண் குரலாலே "ஏன்" என்னும்; "அப்பா" என்றபோதாக ஆண்குரலாலே "ஏன்" என்றும்; இவனறிந்த வழியாலேயாய்த்து முகங்கொடுப்பது. (அடியேனுக்கு) அந்த மாதாபிதாக்களவல்லாதபடி ஸ்வதஸ்ஸித்தமான முறையையுடையனெனக்கு அம்மானுமம்மனையுமாகிநின்ற.

(நன்மான வொண் சுடரே) விலக்ஷணமாய் அளவிறந்த ஒள்ளிய சுடரையுடையவனே! அப்படியிருப்பது பரமபதத்திலேயன்றோவென்ன; திருநறையூரிலேவந்து ஸந்நிஹிதனான கல்யாணகுணபரிபூர்ணனே! (உன்மைம்மானவண்ணம்) அஞ்ஜநம்போலே ஶ்ரமஹரமான வடிவையுடைய உன்னையல்லது புறம்பே சிலரை, எத்தனை வேணுமென்று ப்ரேரித்தாலும் ப்ரீதிபுரஸ்ஸரமாக ஏத்துகிறதில்லை. இப்போது புறம்பாக நினைக்கிறது, புறம்புற்றை திருப்பதிகளை. (மைம்மானவண்ணம்) மையளவான வண்ணம். மையொத்தவண்ணம்.

அரு —மூன்றாம்பாட்டு. (எம்மானுமித்யாதி) "தொண்டர்தம்மை பாடேன்" என்றீர், அவர்கள் உமக்கு விசேஷமாக உபகாரங்களைப் பண்ணினால் அவர்களை அதுக்காக ஏத்தவேண்டிவாராதோவென்ன; உபகாரங்களில் தலையான உபகாரங்களைப் பண்ணும் தாய் தமப்பனளவன்றியே, மஹோபகாரகனான உன்னை விட்டு, இனி மற்றொரு எம்பெருமான்களைத்தான் மகிழ்ந்தேத்துவனோவென்கிறாரென்று ஸங்கதியை உட்கொண்டு அத்தை ஸூசிப்பிக்கிறார் (நாட்டாரித்யாதி வாக்யத்வயத்தாலே). (உன்னை) என்றவநந்தரம், என்கிறார் என்றுசேஷம்.

வாக்யதாத்பர்யமருளிச்செய்கிறார் (மாதாபிதாக்களித்யாதி).

"மான" என்றதுக்கு, பேரளவுடைத்தான என்று சப்தார்த்தமாய், (அளவிறந்த) என்கிறது. †("புலற்றேன்" என்னாதே "நாடேன்") என்ற பதவாஸனை (ப்ரேரித்தாலும்) என்றது. தன்னையல்லது அறியாத இவரை அந்யவிஷயஸ்துதியிலே மூட்டுவனோவென்ன வருளிச்செய்கிறார் (இப்போதித்யாதி.) ... ... (௩)

---

‡ குண்டலிதம் ஆலோசநீயம். தத்ஸ்தாநத்தில் "ஏத்தேன்" என்னாதே "மாட்டேன்" என்றிருக்கலாம்.

மூ.—சிறியாயோர் பிள்ளையுமா யுலகுண்டோ ராலிலைமேல்
உறைவாயென்னெஞ்சினுள்ளே யுறைவாயுறைந்தது தான்
அறியாதிருந்தறியே னடியேனணி வண்டு கிண்டும்
நறைவாரும் பொழில்சூழ் நறையூர் நின்றநம்பியோ. (௪)

பதம்.	உரை.
அணி	அழகியதான
வண்டு	வண்டுகளானவை
கிண்டு	அமைந்திருக்கும்படி
நறை	தேனானது
வாரும்	ப்ரவஹியாநின்ற
பொழில்	சோலைகளாலே
சூழ்	சூழப்பட்ட
	நறையூர் நின்றநம்பீ!
சிறியாய்	இளம்பருவத்தையுடையனாய்
ஓர்	அத்விதீயனாயிருக்கிற
பிள்ளையுமாய்	பாலனுமாய்க்கொண்டு
உலகு உண்டு	லோகங்களைவிழுங்கி

பதம்.	உரை.
ஓர்	ஒரு இளமைமிக்க
ஆலிலைமேல்	வடதளத்தின் மேலே
உறைவாய்	பொருந்தி யிருக்குமவனே!
என் நெஞ்சினுள்ளே	என் ஹ்ருதயத்துக்குள்ளே
உறைவாய்	பொருந்தியிருக்குமவனே!
உறைந்தது தான்	(இப்படி நீ) பொருந்தி யிருப்பதை
அறியாது	தெரிந்துகொள்ளாமல்
அடியேன்	நான்
இருந்தறியேன்	இருந்திலேன். (௪)

வ்யா.—நாலாம்பாட்டு. (சிறியாயோர் பிள்ளையித்யாதி). (௧) "பாலனாயேழுலகுண்டு" என்கிறபடியே, யசோதாஸ்தநந்தயமும் நிரம்பின பருவமென்னும்படியான பருவத்தையுடையையாய், அப்பருவத்திலே ஸகலலோகங்களையும் வயிற்றிலே வைத்து, ஒரு பவனா ஆலந்தளிரிலே கண்வளர்ந்தருளின அகடிதகடநாஸாமர்த்த்யத்தையுடையையாய்! அப்படி சேராச்சேர்த்தியாக என்னுடைய ஹ்ருதயத்திலே வந்து புகுந்து, அவ்வாலந்தளிரினளவன்றிக்கே, பரமபதத்திற்போலே இடம் பெறவிருந்து, என்னை உனக்காக்கிக்கொண்ட இம்மஹோபகாரத்தை அறியாதே, நான் க்ருதக்க்நனாயிருக்கிறேனல்லேன். அவ்விடையாட்டமு மறிந்தேயிருக்கிறேன்.

உனக்கொரு உறைவிடமில்லாமைதான் செய்தாயோ நீ. தர்ஶநீயமான வண்டுகளானவை மேன்மேலெனப் படிகைக்கு மேற்பட வேறொன்றில் கால் வாங்காதபடி மிக்க தேனையுடைத்தான பொழிலாலே சூழப்பட்ட திருநறையூரை வாஸஸ்த்தாநமாக உடையவனே!

---

(௧) தி-வாய்-௩-௨-௧.

உனக்கு அஸங்குசிதமாக வர்த்திக்கைக்கு ஒருஸ்த்தாநமில்லையோ இத்தேசத்தையுடைய உனக்கு. ... ... (௪)

அரு.—நாலாம்பாட்டு. (சிறியாயித்யாதி) தான் ப்ரேரித்தாலும் இனி மற்றொரு திருப்பதியையும் ஏத்தமாட்டேனென்கைக்கு ஹேதுவென்னென்ன; என்னெஞ்சினுள்ளே வந்து உறைகையால் அத்தை மறவாமையாலேயென்று ஸங்கதியாகவுமாம்; அன்றிக்கே, நான்எத்தனைஉபகாரசீலனானாலும் என்னப்ரயோஜநம், நாட்டில் ஒருவரும் அத்தைநினைப்பாரில்லாதேயன்றோ இருக்கிறது; நீருமங்ஙனேயானாலோவென்ன; நீஎன்னெஞ்சிலிருக்க, எனக்கு மறந்து க்ருதக்நனாக விரகுண்டோஎன்கிறாரென்று ஸங்கதியாகவுமாம்.

“பிள்ளை” என்ற பதத்தால்தானே சிறுமை தோற்றியிருக்க “சிறியாய்” என்றதுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (பாலனாயித்யாதி). “பிள்ளையும்” என்ற சகாரம் விரோதேயாய், உலகுண்கைக்கும் பிள்ளையாகைக்குமுண்டான சேராச்சேர்த்தியை, நெஞ்சினுள்ளே உறைகைக்கு த்ருஷ்டாந்தமென்னுமிடம் தோற்றவருளிச்செய்கிறார் (அப்படியித்யாதி). நெஞ்சிலென்னாதே, “உள்ளே” என்கையாலே பலித்தவர்த்தமருளிச்செய்கிறார் (அவ்வாலந்தளிரித்யாதி).

“அணிவண்டு” இத்யாதிக்குத்தாத்பர்யம் (உனக்கொருஇத்யாதி). கிண்டுகை-கெழுமுகையாய், படியும்படி, வாரும்-ப்ரவஹிக்குமென்று சப்தார்த்தமாய் பலிதார்த்தம் (மிக்கதேனை) என்றது. நறையூரை, “பொழில்சூழ்” என்று விசேஷித்ததுக்குத்தாத்பர்ய மருளிசசெய்கிறார் (உனக்கித்யாதி). “உனக்கு” என்றது-ஸங்குசிதமானஎன் நெஞ்சிலிருந்த உனக்கென்றபடி.

மூ.—நீண்டாயை வானவர்கள் நினைந்தேத்திக் காண்பரிதால்
ஆண்டாயென்றாதரிக்கப்படுவாய்க்கு நானடிமை [டேன்
பூண்டேனென் நெஞ்சினுள்ளே புகுந்தாயைப் போகலொட்
நாண்டானுனக்கொழிந்தேன் நறையூர் நின்ற நம்பீயோ. (௫)

பதம்.	உரை.
நறையூர் நின்றநம்பீ!	
நீண்டாயை	அபரிச்சிந்நனை உன்னை
வானவர்கள்	ப்ரஹ்மாதிதேவர்கள்
நினைந்து	த்யானித்து
ஏத்தி	ஸ்தோத்ரம்பண்ணி
காண்பது	ஸாக்ஷாத்கரிப்பது
அரிது	துர்லபம்;

பதம்.	உரை.
ஆல்	ஆஶ்சர்யம்;
ஆண்டாய் என்று	(எங்கள்) ஸ்வாமியே! என்று
ஆதரிக்கப்படுவாய்க்கு	(தேவதைகளால்) ப்ரீதிபண்ணப்படுமுன் விஷயத்தில்
நான்	நான்
அடிமைபூண்டேன்	சேஷவ்ருத்தியை வஹித்தேன்;

என் நெஞ்சினுள்ளே	என் மநஸ்ஸில்	போகலொட்டேன்	புறப்புபோக ஸம்மதியேன்.
புகுந்தாயை	ப்ரவேசித்த உன்னை	நாண்தான்	லஜ்ஜையைத்தான்
		உனக்கு	உனக்காக
		ஒழிந்தேன்	விட்டுவிட்டேன். (ரு)

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (நீண்டாயை யித்யாதி) உன்னுடைய ஸ்வரூப ரூப குண விபூதிகளைச் சிலர் பேசவென்று புக்கால், எல்லாம் பேசித் தலைக்கட்டவொண்ணாதபடி அபரிச்சேத்யனாயுள்ள உன்னை, ப்ரஹ்மாதிகள் நெஞ்சாலேகூட அநுஸந்தித்து ஸ்தோத்ராதிகளைப்பண்ணி கண்ணாலே காணவேணுமென்று ஆசைப்பட்டால், காணவரியையாய்! (ஆண்டாய்) என்னுமனே! என்று ஆதரிக்கப்படுகிற உனக்கு. ப்ரஹ்மாதிகளுடைய பாகாமிருக்கிறபடி.

இப்படியிருக்கிற உனக்கு, (க) “𑌅𑌹𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿-அஹம் ஸாவம் கரிஷ்பாமி” என்று உன் திருவடிகளிலே ஸகலசேஷவ்ருத்திகளிலுமதிகரித்தேன். என்னையும் அடிமையிலே மூட்டுகைக்காக என்னுடைய ஹ்ருதயத்திலே புகுந்த உன்னைப்போகவொட்டுவேனோ? “வந்தகார்யம் தலைக்கட்டினோமாகில் இனி வேறே ஓரிருப்பிடம் தேடிப்போக வமையாதோ” என்று போக நினைத்தான், நான்போகவொட்டுவேனோ? “அடியேன்” “அடியேன்”என்னாநின்றீர்; சேஷபூதராவர் சேஷி செய்தபடி செய்யக்கண்டிருக்குமவர்களன்றோ? “ஒட்டேன்” என்று நிர்ப்பந்திக்கை உம்முடைய ஸ்வரூபத்துக்குப் போருமோவென்ன; (நாண்டானுனக்கொழிந்தேன்) மடலெடுக்க நினைப்பார், “இது ஆம்” “இது ஆகாது” என்று கார்யம்பார்த்தோசெய்வது! (நறையூர் நின்றநம்பியோ) நீயோசால நாணுடையையாயிருக்கிறாய்? நீ முந்துற மடலெடுத்துப் பின்னையன்றோ மடலெடுப்பித்தது. அவன் மடலெடுக்கையாகிறது - முற்பாடனாய் வருகிற்கையிறே. ... ... (௫)

அரு — அஞ்சாம்பாட்டு. (நீண்டாயையித்யாதி) கீழ்ப்பாட்டில் க்ருதஜ்ஞதாநுஸந்தாநத்தாலே அடிமையிலே ஒருப்படவே, இவராசையைவளர்க்க நாலடி போகப்புக்கவாறே வளைக்கிறாரென்றுஸங்கதி.

இன்னபடியால் நீண்டாயையென்றமையால் அருளிச்செய்கிறார்(உன்னுடையவித்யாதி)-வானவர்கள், நீண்டாயை-நீண்டிருக்கிறஉன்னை, பிலேந்தேத்திக் காண்பது அரிது என்கை. அரிது - துர்க்கடம். (ஆல்) ஆஶ்சர்யம். வானவர்கள்ஆண்டாய்என்று ஆதரிக்கப்படுகிற உனக்கு நானடிமை

(க) ரா-அ-௩௧-௨௫.

பூண்டேனென்று சப்தார்த்தமுட்கொண்டு தாத்பர்யமருளிச்செய்கிறார் (ப்ரஹ்மாதீத்யாதி). (காணவரிலையாய்) என்றதுக்கு (இப்படியிருக்கிற) என்றவாக்யத்தோடு ஸம்பந்தம். "அடிமைபூண்டேன்" என்னவமைந்திருக்க, "நான்" என்று விசேஷித்தத்தாலே, வ்யதிரிக்தராலே ஆதரிக்கப்படுகையன்றோ தோற்றுகிறது; அதுக்கு கர்த்ருபதம் எங்கேயென்ன; கீழ் "வானவர்கள்" என்றபதத்தை இங்கே அநுஷங்கித்துக்கொள்வது என்று திருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிறார் (ப்ரஹ்மாதிகளித்யாதி).

இவர், "போகவொட்டேன்" என்கைக்கு அவன் இவரை விட்டுப்போக ப்ரஸங்கித்தானன்றேயென்ன வருளிச்செய்கிறார் (வந்தகார்யமித்யாதி) (வந்த கார்யம்) - அடிமையில் மூட்டுகை. ஆக அடிமையிலாசை வளர்க்கவேணுமென்று நாலடி போக ஒருப்பட்டானென்று கருத்து. (ஒட்டுவேனோ) என்கிறவநந்தரம், என்கிறார் என்று சேஷம். இரண்டாம்பாட்டு தொடங்கி முக்காலும் "அடியேன்" என்றத்தையெல்லாமநுவதிக்கிறாராய், "ஒட்டேன்" என்றதின்மேலே ப்ரணயத்தாலுண்டான சிவட்குத்தோற்ற, மேலுக்கவதாரிகையருளிச்செயகிறார் (அடியேனித்யாதி). ஆனால், நாணற்றாரோடு உம்மைக் கூட்டுவோமே என்னும் சங்கையிலே. (நறையூர்நின்றநம்பீ) என்கிறாரென்று விவக்ஷித்துத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (நீயோவித்யாதி). ... ... (௫)

மூ. —எந்தாதை தாதை யப்பாலெழுவர் பழவடிமை
வந்தாரென்நெஞ்சினுள்ளே வந்தாயைப் போகவொட்டேன்
அந்தோ வென்னாருயிரே யரசே யருளெனக்கு
நந்தாமைத் தந்த வெந்தாய் நறையூர் நின்ற நம்பீயோ. (௬)

பதம்.	உரை.
என் ஆர் உயிரே	எனக்கு ஸத்தாநிர்வாஹகனான ப்ராணனே!
அரசே	என்னையாளுமவனே!
எனக்கு	என்விஷயத்தில்
அருள்	க்ருபையை
நந்தாமை	நசியாமல் (விச்சேதியாமல்)
தந்த	கொடுத்த (பண்ணின)
எந்தாய்	என்ஸ்வாமியே!
நறையூர் நின்றநம்பீ!	
எந்தாதை	நானும் என்தகப்பனும்
தாதை	அவன் தகப்பனும்
அப்பால்	அவனுக்குமுன்புண்டான

பதம்.	உரை.
எழுவர்	ஸப்தபுருஷர்களும் (ஆகிய பத்துத்தலைமுறையாக)
பழவடிமை	பழைய (ஸ்வதஸ்ஸித்தமான) தாஸ்யத்தை
வந்தார்	(செய்துகொண்டு வந்தார்கள்)
என் நெஞ்சினுள்ளே	என்மநஸ்ஸில்
வந்தாயை	வந்துபுகுந்த உன்னை
போகவொட்டேன்	போகஸம்மதியேன்
அந்தோ	ஐயோ; (௬)

வ்யா.—ஆறாம்பாட்டு. (எந்தாதை யித்யாதி). நான், என்னுடைய தமப்பன், அவனுடைய ஜநகன், இவர்களோடேகூட, அவ்வருகே எழுவர். (க) "𑌸𑌪𑍍𑌤 𑌸𑌪𑍍𑌤𑌚 𑌸𑌪𑍍𑌤𑌚-ஸப்த ஸப்தச ஸப்தச" என்னக்கடவதிறே. ஒருவனுக்குண்டான நன்மை அசல் காக்குமிடத்தில் (உ) * ஏழ்படிகால் செல்லுமிறே. இத்தால், குலமாக அநந்யார்ஹர்களென்றபடி. நானபேக்ஷியாதிருக்க, நீயே என்னுடைய ஹ்ருதயத்திலே வந்து புகுந்த உன்னைப் போகவொட்டுவேனோ? கைப்பட்ட நிதியை உதறுவாருண்டோ?

(அந்தோவித்யாதி) இவர் "ஒட்டேன்" என்னச்செய்தே, பின்னையும் போவானாக நினைத்தான்; அய்யோ! இவ்வஸ்துவை இழந்தாய் கிடாய் என்கிறார். உன்னையொழிய ஜீவியாதபடி என் ஸத்தையை நிர்வஹித்துக்கொண்டு போருகிறவனே! (அரசே) என்னை வன்னிய மறுத்து ஆண்டவனே! (அருளெனக்கு நந்தாமைத்தந்தவெந்தாய்) "நீ போகாதேகொள்" என்று காலைக்கட்டி வளைக்கலாம்படி என்பக்கலிலே அருளைப்பண்ணின என்னப்பனே! திருநறையூரிலே வந்து நின்றாய்த்து இவர்க்கு அருளிற்று. ... ... (சு)

அரு.—ஆறாம்பாட்டு. (எந்தாதையித்யாதி) திருநறையூரில் வந்தது நாணில்லாமையாலே என்னாநின்றீர்; நீர் நாணில்லாதவராகா நின்றீர், நாணற்றாரிருவரும் ஸ்வதந்த்ரராகில், நான் போகத்தட்டென்னென்ன; நீ என்குலநாதனான பின்பு, உன்னைப்போகவொட்டுவேனோவென்று காலைக்கட்டுகிறாரென்று ஸங்கதி.

(எந்தாதை) என்கையாலே, அர்த்தஸித்தமாக (நான்) என்றுகூட்டுகிறார். (அவ்வருகே) என்றது-இவர்களுக்கவ்வருகான கொள்பாட்டனைச் சொல்லுகிறது. (எழுவர்) மூவர்க்கும்மேலெழுவர். ஆக. (ங) "𑌦𑌶𑌪𑍂𑌰𑍍𑌵𑌾𑌨𑍍-தசபூர்வாந்" என்ற பதின்மரையும் சொல்லிற்றாய், இதுஉபலக்ஷணமாய் "𑌦𑌶𑌾𑌵𑌰𑌾𑌨𑍍- தசாவராந்" என்ற பதின்மரையும் சொல்லுமென்று விவக்ஷித்து, இதுக்குத்ருஷ்டாந்ததயா, கந்யாதாநபல (𑌫𑌲) தயா சொன்ன வசநத்தைக்காட்டுகிறார் (ஸப்தேத்யாதி). இவ்வர்த்தத்துக்கு நேரே பெரியாழ்வார் திவ்யஸூக்தியையும்ப்ரமாணமாகவருளிச்செய்கிறார்(ஒருவனுக்கித்யாதி). இப்படி இவ்வாழ்வாரருளிச்செய்ததும், கேசவன்றமரிற்படியே. ஸம்பந்தி ஸம்பந்திகளுங்கூட நம்மளவு "தசபூர்வாந் தசாவராந்" என்கிறபடியே உஜ்ஜீவித்தமை பலிதமென்னுமிடம் தோற்றவருளிச்செய்கிறார் (இத்தாலித்யாதி).

(க) பார- (உ) தி-பல்-சு. (ங) போதாயந.

கீழிற்பாட்டிலும் “போகவொட்டேன்” என்று நிர்ப்பந்திக்கவே இவரைப் பாரதந்த்ர்யத்திலேதானே நிறுத்தவேணுமென்று இவர்வார்த்தையை, ஆணைக்குப்பாடுவாரைப்போலே அநாதரித்திருக்க, (அந்தோ) இத்யாதியருளிச்செய்கிறாரென்று தாத்பர்யமருளிச்செய்கிறார் (இவரித்யாதி). ... ... (௬)

மூ.—மன்னஞ்ச வாயிரந்தோள் மழுவில் துணித்த மைந்தா
என்னெஞ்சத்துள்ளிருந் திங்கினிப்போய் பிறரொருவர்
வன்னெஞ்சம் புக்கிருக்கவொட்டேன் வளைத்துவைத்தேன்
நன்னெஞ்சவன்ன மன்னும் நறையூர் நின்ற நம்பீயோ. (௭)

பதம்.	உரை.
நல்	த(௩)யாபூர்ணமான
நெஞ்சம்	மநஸ்ஸையுடையளாய்
அன்னம்	ஹம்ஸம்போன்ற நடையழகையுடையளான பெரிய பிராட்டியார்
மன்னும்	நித்யவாஸம் பண்ணுகிற நறையூர் நின்றநம்பீ!
மன்	ராஜாக்கள்
அஞ்ச	பயப்படும்படி
ஆயிரம் தோள்	(கார்த்த வீர்யார்ஜுநனுடைய) ஆயிரம் புஜங்களையும்
மழுவில்	பரசுவினாலே
துணித்த	வெட்டிப்பொகட்ட
மைந்தா	பலிஷ்ட்டனே!
என் நெஞ்சத்துள்	(இதுவரையில்) என் மநஸ்ஸுக்குள்ளே

பதம்.	உரை.
இருந்து	அநவரத வாஸம்பண்ணி,
இனி	இதுக்குமேலே
இங்கு போய்	இங்குநின்றும் புறம்பே சென்று
பிறர் ஒருவர்	அயலாரான ஒருத்தருடைய
வல்	(உன் விஶ்லேஷத்தில் இளகாத) வன்மையையுடைய
நெஞ்சம்	மநஸ்ஸை
புக்கு இருக்க	ப்ரவேஶித்து அங்கே பொருந்தியிருக்கும்படி
ஒட்டேன்	ஸம்மதியேன்,
வளைத்து வைத்தேன்	(நீ போகாதபடி) தடையிட்டுவைத்தேன். (௭)

வ்யா.—ஏழாம்பாட்டு. (மன்னஞ்சவித்யாதி)இவருடைய ஹ்ருதயத்திலே புகுந்திருந்த ஈஶ்வரன் போக்கைநினைத்தான், போகவொட்டேனென்கிறார், ஒட்டேனாவதென், நம்மோடே மலைந்து விலசகப்போமோ உமக்கு, இருபத்தொருபடிகால் க்ஷத்ரியவம்ஶத்தை அறுத்துப்பொகட்ட பெருமிடுக்கரல்லோமோ நாமென்ன; அதில் தட்டில்லை, ஆனாலும்அவ்வோப்ரக்ருதிகளுக்கு அநுரூபமாகவன்றோ நீபரிமாறுவதென்கிறார்.

ராஜலோகமடைய அஞ்சும்படி அவர்களுக்கடியான ஸஹஸ்ர பாஹுவர்ஜுநனுடைய தோள்களாயிரத்தையும் மழுவாலே துணித்த மிடுக்கனே! நீ தொடங்கின கார்யத்துக்கு ஒரு ப்ரதிஹதி யுண்டாமென்றவனுமல்லேன், உன்னுடைய மிடுக்கை இசையாதவனுமல்லேன், ஆனாலும் அவ்வோருடைய ஸ்வபாவங்களையறிந்தன்றோ பரிமாறுவது. (என்னெஞ்சத்துள்ளிருந்து) உன்னையொழிய அறியாதபடியிருக்கிற என்னுடைய நெஞ்சிலேவந்து புகுந்திருந்து, இனி இங்குநின்றும் போயிருக்கவுமாய், போகவுமாயிருப்பார் நெஞ்சில் போயிருக்கவொட்டேன்.

ஒட்டேனென்றாலும் நாம் தவிரோமென்றால், (வளர்த்து வைத்தேன்) நீ போகில் நான் முடிவனென்கிறார். இத்தலை இழக்கவருமளவிலே, இட்டஅடி பேர்க்கமாட்டான். நீர் வளர்க்கிறது என்ன மிடுக்குக்கொண்டென்ன; (நன் நெஞ்சவன்னமன்னும் நறையூர் நின்றநம்பீயோ) நீர் குற்றங்கண்டு கைவிடப்பார்க்குமன்றும் (க) “𑌨 𑌕𑌶𑍍𑌚𑌿𑌨𑍍𑌨𑌾𑌪𑌰𑌾𑌧𑍍𑌯𑌤𑌿 - நகஶ்சிந்நாபராத்யதி” என்னுமவளன்றோ அருகே இருக்கிறாள். ... ... (எ)

அரு.—ஏழாம்பாட்டு. (மன்னஞ்சவித்யாதி) ஸங்கதியருளிச்செய்கிறார் (இவருடையவித்யாதி).

(சப்தார்த்தம்) :(ராஜலோக மித்யாதி). உட்கருத்தருளிச்செய்கிறார் (நீயித்யாதி). மேலுக்கவதாரிகைஎன்னவுமாம். (ஸ்வபாவம்) என்றது - அவனையொழியத் தரிக்கமாட்டாமை.

“அத்வேஷமே அமைந்திருக்க,நான் போகாதிருப்பேனோ” என்னும் பா(𑌭)வத்தாலே மேலுக்கவதாரிகையருளிச்செய்கிறார்(ஒட்டேனித்யாதி). (நல்நெஞ்சவன்னம்) நன்றான நெஞ்சையுடைய அன்னம்போன்ற நடையழகையுடையளான பிராட்டி. “மன்னும்” என்னுமதுக்கு சப்தார்த்தமாகவருளிச்செய்கிறார் (நீர் இத்யாதி). ... ... (எ)

மூ.—எப்போதும் பொன்மலரிட்டிமையோர் தொழுது தங்கள்
கைப்போது கொண்டிறைஞ்சிக் கழல்மேல் வணங்க நின்றாய்
இப்போதென்னெஞ்சினுள்ளே புகுந்தாயைப் போகலொட்டேன்
நற்போது வண்டுகிண்டும் நறையூர்நின்ற நம்பீயோ. (அ)

(க) ரா-யு-கக௬-௪௩.

பதம்.	உரை.
நல்	ஸௌந்தரமான
போது	பூக்களிலே
வண்டு	வண்டுகளானவை
கிண்டும்	படிந்திருக்கிற (போக்யமான)
நறையூர் நின்றநம்பீ!	
எப்போதும்	ஸர்வகாலமும்
பொன்	அழகிய
மலர்	புஷ்பங்களை
இட்டு	ஸமர்ப்பித்து
இமையோர்	நித்யஸூரிகள்
தொழுது	ஆஶ்ரயித்து,
தங்கள்	தங்களுடைய
கைபோது கொண்டு	புஷ்பம்போன்ற கைகளாலே
இறைஞ்சி	அஞ்சலித்து
கழல்மேல்	திருவடிகளில் (விழுந்து)
வணங்க	ஆஶ்ரயிக்கும்படி
நின்றாய்	எழுந்தருளியிருக்குமவனே!
இப்போது	நான் உன்னுடைய போக்யதையை யறிந்த இப்போது;
என் நெஞ்சினுள்ளே புகுந்தாயைப் போகவொட்டேன். (அ)	

வ்யா.—எட்டாம்பாட்டு. (எப்போதுமித்யாதி) நாம் முன்பு வந்து புகுந்தது? ஒருகுறையுண்டாயோ? இப்போது போக நினைக்கைக்கு? (க) "𑌸𑌦𑌾𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿-ஸதாபஶ்யந்தி" என்கிறபடியே எப்போதுமொக்க ஸ்ப்ருஹணீயமான புஷ்பங்களைக்கொண்டு நித்யஸூரிகளானவர்கள் தொழுது, தங்கள் கைகளாகிற புஷ்பங்களைக்கொண்டு, அஞ்சலியைப் பண்ணிக்கொண்டு திருவடிகளிலே விழுந்து, ஆஶ்ரயிக்கும்படியிருந்தாய்.

(இப்போதென் நெஞ்சினுள்ளே) உன்னுடைய இவ்வரவுக்கு பூர்வக்ஷணத்தில் எனக்கொரு ஸ்ம்ருதியில்லை. (புகுந்தாயை) என்பக்கல் ஓரபேக்ஷாமாத்ரமுங்கூட வின்றிக்கேயிருக்க, நீயே வந்து புகுந்து உன்னுடைய போக்ய(𑌭𑍋𑌗𑍍𑌯)தையை அறிவித்தபின்பு, இனி உன்னைப்போகவொட்டுவேனோ? (நற்போதுவண்டுகிண்டும்)விலக்ஷணமான புஷ்பங்களிலே வண்டுகளானவை (உ)"குடைந்துவண்டுண்ணும்"என்கிறபடியே, உள்ளேயுள்ளே அவகாஹிக்கு மத்தனைபோக்கி வேறொன்றில் போகவொண்ணாதபடி போக்யமான தேசத்தை வாஸஸ்தானமாக உடையவனே! அவ்வூரிலவகாஹித்தார்க்கு வேறேயுமோரிடம் தேடிப்போகலாம்படியோ - அவ்வூரில் போக்யதையிருப்பது.

அரு.—எட்டாம்பாட்டு (எப்போதுமித்யாதி) நீர் பிராட்டி சலிகை கொண்டு வளைக்கைக்குக் காரணமென்? முற்கோலிவந்தோமென்றதல்;

(க) ஸாம-உத்தர-கஅ-உ-௬. (உ) தி-வாய்-க-எ-கக.

நமக்கொரு குறை தீர்ந்தோமென்றாதல் உண்டாகில் சொல்லிக்காணுமென்ன; அதுக்கு உத்தரமருளிச்செய்கிறாரென்று ஸங்கதி.

இப்பாட்டுக்கெல்லாம் தொகுத்த பாவம் (நாமித்யாதி). "நாம்" என்றது - பூஜ்யோக்தியாய், ஆழ்வாரே ஈஶ்வரனைப்பார்த்துச் சொல்லும் வார்த்தை. நான் முன்பாக வந்திருக்க, பின்பு நீ புகுந்ததுண்டாயோ நீ போக நினைக்க? உனக்கொரு குறையுண்டாய் என்றால் தீரப்பெற்றானாய்த்தான் போகநினைக்கிறாயோ? இரண்டுமில்லை, நீயே நான் நினையாதிருக்க வந்து புகுந்து, உன் போக்யதையையு மறிவிப்பித்தாய், நீயோ பரிபூர்ணன்; என்றாலொன்றும் வேண்டுவதில்லை, நான் போக்யதையாலே போகவொட்டாமை, பிராட்டியை அண்டைகொண்டு வளைத்தேனத்தனையென்று கருத்து. (நினைக்கைக்கு) என்றவநந்தரம் "என்கிறார்" என்று சேஷம். சப்தார்த்தம் (ஊதேத்யாதி).

நம்பியுடைய போக்யதையிலே தாமவகாஹித்ததுக்கு த்ருஷ்டாந்தமாக வண்டை யருளிச்செய்தாரென்னுமிடம் தோற்றக் கருத்தருளிச்செய்கிறார் (அவ்வூரித்யாதி). ... ... (அ)

மூ.—ஊனேராக்கைதன்னை யுழந்தோம்பி வைத்தமையால்
யானாயென்றனக்காயடியேன் மனம் புகுந்த
தேனே தீன்கரும்பின் தெளிவே என் சிந்தைதன்னால்
நானே யெய்தப்பெற்றேன் நறையூர்நின்றநம்பியோ. (கூ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
யானாய்	எனக்கு அந்தராத்மாவாய்	நறையூர் நின்றநம்பீ!	
என்றனக்காய்	எனக்கு விதேயனாய்க்கொண்டு	ஊன் ஏர்	மாம்ஸப்ரசுரமான
அடியேன்	அடியேனுடைய	ஆக்கைதன்னை	சரீரத்தை
மனம்	மநஸ்ஸிலே	உழந்து	ஶ்ரமப்பட்டு
புகுந்த	ப்ரவேசித்த	ஓம்பிவைத்தமையால்	வளர்த்து வைத்தபடியாலே
தேனே	தேன்போல் போக்யபூதனே!	என்	என்னுடைய
தீன்	மதுரமான	சிந்தைதன்னால்	மநஸ்ஸினால்
கரும்பின்	கருப்பஞ்சாற்றினுடைய	நானே	(வளர்த்த) நானே
தெளிவே	ஸாரம்போல் இனியனானவனே!	எய்தப்பெற்றேன்	(உன்னை) ப்ராபிக்கப்பெற்றேன். (கூ)

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (ஊனேராக்கையித்யாதி) ஈஶ்வரன் அநேகாவதாரங்களைப் பண்ணி, ஸ்வயம் வரித்துக்கொடு வந்த ஸ்வீகாரத்தினுடைய பலம் பெற்றேனென்கிறார்.

மாம்ஸப்ரசுரமான சரீரத்தை, வழியல்லாவழியே த்ரவ்யார்ஜநம் பண்ணி, அதுகொண்டு இத்தைப் பேணிவைத்த ப்ரயோஜநம் இன்று பெற்றேன். (யானாய்) “நாமும் நாமாய் இவருமிவராய் இவரோடே கலக்குமிடத்தில் இவராணையிட்டு விலக்குவர், ஆனபின்பு, இவர் என்கிற சொல்லுக்குள்ளே நம்மை அடக்கிக் கலப்போம்” என்று பார்த்து, நானாகிற சொல்லுக்குள்ளே தன்னை அடக்கிக்கொடுவந்து புகுந்தான். (என்றனக்காய்) ஸர்வாதிகனான தன்னை எனக்காக ஒக்கி.

(அடியேன்) தன்னைத் தமக்காக்கித் தம்முடைய ஹ்ருதயத்திலே வந்து புகுந்து கலந்தபடியை அநுஸந்திக்க அநுஸந்திக்கத் தமக்கு இனிதாகாநின்றது. (தேனே) எனக்கு ஸர்வவிதபோக்யமுமாயுள்ளவனே! (என்சிந்தையித்யாதி) வேறேயொரு சரீரபரிக்ரஹம்பண்ணி அதுகொண்டு பெறவிருக்கையன்றிகே, ஊனேராக்கைதன்னை உழந்தோம்பி வைத்தநான், இந்த சரீரந்தன்னையேகொண்டு ப்ராபிக்கப் பெற்றேன். அதுசெய்தபடிதானெங்ஙனேயென்ன, (நறையூர்நின்ற) நீ வர நிற்கையாலே நானே இப்பேறு பெற்றேன். ... (௯)

அரு.—ஒன்பதாம்பாட்டு. (ஊனேரித்யாதி) கீழ்ப்பாட்டில் ஆழ்வார், தன்னுடைய போக்யதையிலே துவக்குண்டு, “வளைத்தேன்” என்கையாலே பரமப்ரீதனாய், ஸுஸ்த்திரனாயிருக்க, அந்த ஹர்ஷப்ரகர்ஷத்தாலே, இச்சரீரத்தோடே இப்பேறு பெற்றேனென்கிறார் என்னும் ஸங்கதியை, கீழெட்டு பாட்டையும் கடாக்ஷித்துக்கொண்டருளிச்செய்கிறார் (ஈஶ்வரனித்யாதி).

“உழந்தோம்பி” என்றதுக்கு - ப்ரயாஸப்பட்டு வளர்த்து என்றர்த்தமாய், “வைத்தமையால் நானேயெய்தப்பெற்றேன்” என்றத்தோடே அந்வயித்து அருளிச்செய்கிறார் (வழியித்யாதி). “முதற்பாட்டில், ‘புகுந்தென்னையுள்ளங்கொண்ட கள்வா’ என்ற அந்தர்யாமித்வத்தை அநுவதிக்கிறார் ‘யானாய்’ என்று” என்று விவக்ஷித்தருளிச்செய்கிறார் (நாமும்) இத்யாதி. விவரணம் (இவரித்யாதி). “இவராய்” என்றது - இவரேயாய் என்றபடி. வருகைக்குக்காரணமென்னென்ன அருளிச்செய்கிறார் (இவரோடேயித்யாதி). “‘புள்ளாயேனமுமாய்’ இத்யாதிகளையெல்லா மநுவதிக்கிறார், ‘என்றனக்காய்’ என்றத்தாலே” என்று வி[illegible]த்தருளிச்செய்கிறார் (ஸர்வாதிகனித்யாதி). (ஒக்கி) ஆக்கி.

“நெஞ்சில் புகுந்தபின்பு போக்யமாய், போகவொட்டேன்’ என்கைக்கு மூலமான போக்யதையெல்லாமருளிச்செய்கிறார் (அடியேனித்யாதி) என்றத்தாலே” என்று விவக்ஷித்துத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (தன்னையித்யாதி).

மூ.—நன்னீர் வயல் புடைசூழ் நறையூர் நின்ற நம்பியைக்
கன்னீர் மால்வரைத்தோள் கலிகன்றி மங்கையர்கோன்
சொன்னீர் சொல்மாலை சொல்லுவார்கள் சூழ் விசும்பில்
நன்னீர்மையால் மகிழ்ந்து நெடுங்காலம் வாழ்வாரே. (௧௦)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

* * *

பதம்.	உரை.
நல்நீர்	அழகிய ஜலத்தை யுடைய
வயல்	கழனிகளாலே
புடை	பர்யந்தங்களிலே
சூழ்	சுற்றப்பட்ட
நறையூர்	திருநறையூரென்னும் திவ்யதேசத்தில்
நின்ற	எழுந்தருளி யிருக்கிற
நம்பியை	பூர்ணன் விஷயமாக,
கல்	ஒலியாநின்ற
நீர்	மலையருவிகளையுடைய
மால்	பெரிய
வரை	மலையோடொத்த
தோள்	புஜங்களையுடையராய்
கலி	சத்ருக்களை
கன்றி	கோபியாநின்றவராய்
மங்கையர்	திருமங்கையிலுள்ளார்க்கு
கோன்	ஸ்வாமியான ஆழ்வார் அருளிச்செய்ததாய்,

பதம்.	உரை.
சொல்	கொண்டாட்டச் சொல்லையே
நீர்	ஸ்வபாவமாக உடையதாய்
சொல்மாலை	சப்த ஸந்தர்ப்ப ரூபமான இப்பத்துப் பாசுரங்களை
சொல்லுவார்கள்	அநுஸந்திக்குமவர்கள்,
சூழ்	பரந்த (போக[illegible] ப்ரசுரமான)
விசும்பில்	பரமபதத்தில்,
நல்	ஸ்வரூபாநுரூபமான
நீர்மையால்	ஸ்வபாவத்தாலே
மகிழ்ந்து	ஆநந்தித்து
நெடு	அபரிச்சிந்நமான
காலம்	காலத்தளவும்
வாழ்வார்	ஸுகிப்பர்கள். (௧௦)

வ்யா.—பத்தாம்பாட்டு. (நன்னீரித்யாதி) அழகிய ஜலஸம்ருத்தியை யுடைத்தான வயலானது பர்யந்தமெங்கும் சூழ்ந்திருக்கின்ற திருநறையூரை வாஸஸ்தாநமாக உடைய கல்யாணகுண பரிபூர்ணனையாய்த்துக் கவிபாடிற்று. (கன்னீர்மால்வரைத்தோள்) கல்லென்று-த்வநிக்குப்பேர். மிக்க த்வநிகளையுடைத்தான அருவிகளையுடைத்தாயிருக்கிற பெரிய மலைபோன்ற தோள்மிடுக்கையுடையராய், ப்ரதிபக்ஷநிரஸநஸ்வபாவரான திருமங்கையிலுள்ளார்க்கு நிர்வாஹகரான ஆழ்வார் கவிபாடினவர். (சொன்னீர் சொன்மாலை) இத்தை அநுஸந்தித்தார்க்கு, "இதொரு சப்தமே!" என்று கொண்டாடுமிதுவே ஸ்வபாவமாம்படியிருக்கிற சொல்தொடையைச் சொல்லுமவர்கள்

இத்தைச் சொல்லுகையே போருமாய்த்துப்ரயோஜநம், அதுக்கு மேலே, போக([illegible])பூமிகளில் மேலாயிருக்கிற பரமபதத்தேபோய், இவ்வாத்மாவினுடைய ஸ்வரூபாநுரூபமான முறையாலே நிரதிசய ஸ்வரூபாநந்திகளாய், பின்னை ஒருநாளும் புநராவ்ருத்தியில்லாத பேற்றைப்பெறுவர்கள். ... ... (௧௦)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

அரு — பத்தாம்பாட்டு. (மன்னீரித்யாதி) திருமங்கையிலுள்ளார்க்கு நிர்வாஹகராகைக்கு ஹேதுவாகத் தோளை வர்ணிக்கிறதுக்கு த்ருஷ்டாந்தமாக, மலைக்கு மிகவும் பெருமை சொல்லவேண்டி, அருவிகளின் மிகுதி சொல்லுகிறாரென்று திருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிறார் (மிக்கவித்யாதி). எல்லாராலும் சொல்லும்படியான நீர்மையையுடைய சொல்மாலையையென்று சப்தார்த்தமாயருளிச்செய்கிறார் (இதொருவித்யாதி). ... (௧௦)

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஏழாம்பத்தில் இரண்டாங் முடிந்தது.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஏழாம்பத்து மூன்றாந்திருமொழி

சினவில் ப்ரவேசம்.

வ்யா. —(சினவில்) (௧) "நானேயெய்தப்பெற்றேன்" என்றார் கீழ்; அந்த பேறுதன்னையே பேசுகிறாரிதில்.

அரு. —சினவில்ப்ரவேசம். (பேறுதன்னை) என்றவநந்தரம் "ப்ரீத்யதிசயத்தாலே தம்மிலேதாமே" என்று சேஷம். ... ... *

மூ. —சினவிற்செங்கணரக்கருயிர்மாளச்
செற்றவில்லியென்றுகற்றவர்தந்தம்
மனமுட்கொண்டென்றுமெப்போதும்
நின்றேத்தும் மாமுனியை மரமேழெய்த மைந்தனை

---

(௧) எ-உ-௧.

நனவிற் சென்றார்க்கும் நண்ணற் கரியானை
நானடியேன் நறையூர் நின்ற நம்பியைக்
கனவிற் கண்டேனின்று கண்டமையாலென்
கண்ணிணைகள் களிப்பக் களித்தேனே. (க)

பதம்.	உரை.
சினம்	கோபத்துக்கு
இல்	இருப்பிடமாய்,
செம்கண்	சிவந்தகண்களையுடையரான
அரக்கர்	ராக்ஷஸருடைய
உயிர்	ப்ராணன்கள்
மாள	முடியும்படி
செற்ற	சீறின
வில்லி என்று	தநுஸ்ஸை யுடையவனே! என்று
கற்றவர்	அறிவுடையார்
தம்தம்	தங்கள்தங்களுடைய
மனமுள்	மநஸ்ஸுக்குள்ளே
கொண்டு	த்யாநித்துக்கொண்டு
என்றும்	ஸர்வகாலமும் [ம்
எப்போதும்	ஸர்வாவஸ்த்தையிலு
நின்று	ஒருபடிப்பட்டிருந்து
ஏத்தும்	ஸ்தோத்ரம்பண்ணப்பட்டவனாய்,
மா	பெரிய
முனியை	ஆஶ்ரித விஷயத்தில் ப்ரத்யுபகார சிந்தையை யுடையனாய், [ம்
ஏழ்மரம்	மராமரங்களேழையு

பதம்.	உரை.
எய்த	அடித்த
மைந்தனை	மிடுக்கனாய்,
நனவில்	தெளிவிலே
சென்றார்க்கும்	நடக்குமவரான ஜ்ஞாநாதிகர்க்கும்
நண்ணற்கு	கிட்டுகைக்கு (ஸாக்ஷாத்கரிக்கைக்கு)
அரியானை	துர்லபனாய்,
நறையூர்நின்ற	திருநறையூரிலே எழுந்தருளி யிருக்கும்
நம்பியை	பூர்ணனை, [வனான
அடியேன்	ஶேஷபூதனான
நான்	நான்,
கனவில்	மாநஸாநுபவத்தில்
கண்டேன்	அநுபவித்தேன்,
இன்று	இப்பொழுது
கண்டமையால்	பாஹ்ய ஸாக்ஷாத்காரம்பிறந்தபடியால்
என்கண் இணைகள்	என்னுடைய இரண்டுகண்களும்
களிப்ப	ஸந்தோஷிக்க (அதினால்)
களித்தேன்	(நானும்) ஸந்தோஷிக்கப்பெற்றேன்.

வ்யா.—முதற்பாட்டு. (சினவிலித்யாதி) மிக்க சினத்தையுடையராய், சேதநர்விஷயமாக நிர்நிபந்தநமான த்வேஷத்தையுடையராய், அந்த த்வேஷப்ராசுர்யம் தோற்றும்படி யிருக்கிற கண்ணில் சிவப்பையுடையராயிருக்கிற ராக்ஷஸருடையப்ராணன்கள் முடியும்படி பிடித்த

வில்வலியை யுடையவனே! மாதாவானவள் "ப்ரஜை" என்று பாராதே, ஹிம்ஸிக்குமாபோலே; (க) "𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌂 𑌦𑌾𑌨𑌵𑌾𑌨𑌾𑌞𑍍𑌚 𑌸𑌾𑌮𑌾𑌨𑍍𑌯𑌮𑌧𑌿𑌦𑍈𑌵𑌤𑌮𑍍- தேவாநாம் தாநவாநாஞ்ச ஸாமாந்யமதிதைவதம்" என்கிற பொதுவைப் பாராதே அழித்துவிட்டானாய்த்து. இவர்களிருக்கில் ஜகதுபஸம்ஹாரமாமென்று, விபூதி குடி கிடக்கைக்காக அழித்தானாய்த்து. (கற்றவரித்யாதி) அறிவுடையரான யோகிகளானவர்கள் தம் ஹ்ருதயத்திலேகொண்டு எல்லாக்காலத்திலும் எல்லா அவஸ்த்தையிலும் ஒருபடிப்பட நின்றேத்த, அவர்களுக்கு எல்லாம் செய்தும் பின்னையும் ஒன்றும் செய்யாதானாய், பெருந்தனிசுபட்டாப்போலே "இவர்களுக்குச் செய்யலாவதென்?" என்று இவற்றை அநுஸந்திக்குமவனை. (மரமேழித்யாதி) இப்படிப்பட்ட தன்படி அறியாதார்க்கும் மழுவேந்தி விஶ்வஸிப்பித்துக் கார்யம் செய்தமிடுக்கனை.

(நனவிலித்யாதி) "கனவில்" என்றதுக்கு எதிராய், ஜாகரூகாவஸ்த்தையைக் காட்டுகிறது. நனவு - தெளிவு. எத்தனையேனுமதிசயித ஜ்ஞாநராயிருப்பார்க்கும் நேர்கொடு நேர் சென்று கிட்டிக் காண வரியனாயிருக்கிறவனை. (நானடியேன்) இவர்களைப்போல ஸ்வயத்நத்தாலன்றிக்கே, அவன் காட்டின வழியாலே காணப்பெற்ற அடியேனான நான், திருநறையூரிலே நித்யவாஸம்பண்ணுகிற கல்யாணகுண பூர்ணனை. மநஸ்ஸு ஸஹகரிக்க, அத்தாலே கண்ணால் காணும் காட்சியன்றிக்கே, அந்த நெஞ்சுதானே முழுமிடறுசெய்து பூர்ணமாக நெறிபட அநுபவிக்கப் பெற்றேன். இன்றிப்படி காணப்பெறுகையாலே (கண்ணிணைகள் களிப்பக்களித்தேனே) "நெஞ்சே அநுபவித்து, கண்கள் அநுபவிக்கப் பெற்றதில்லை" என்கிற குறை கிடவாமை, கண்கள் கண்டநுபவிக்க, அவற்றுக்கு ஆஶ்ரயபூதனாயிருக்கிற நானும் (உ) "என் கண்கள் களிப்பக் களிதாகிய சிந்தையனாய்க் களிக்கின்றேன்" என்கிறபடியே, களிக்கப்பெற்றேன். ... ... (க)

அரு.—முதற்பாட்டு. (சினவிலித்யாதி) சினத்துக்கு இல் என்று பதபேதமாய், பலிதம் (மிக்கசினத்தை) என்று. விவரணம் (சேதநரித்யாதி). ஸர்வஸம்ஹர்த்தாயிருப்பான், ஒருவனுயிரை மாளப் பண்ணுவானென்னென்ன வருளிச்செய்கிறார் (மாதாவித்யாதி). (ஹிம்ஸிக்குமாபோலே) பிடித்து சிக்ஷிக்குமாபோலே. ஆனால் இவர்களையும் சிக்ஷிக்கவொண்ணாதோ, கொல்லவேணுமோவென்ன; (இவர்களித்யாதி). எத்தும்படியிருக்

(க) ஜித-க-உ.

(உ) தி-வாய்-க0-அ-ச.

கும் மாமுனியை என்று சப்தார்த்தமாய் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அறிவுடையித்யாதி). (தனிசு) கடன். (இவற்றை) ஏத்தும்படிகளை.

“நனவு” என்றதுக்கு முக்க்யார்த்தத்தைச் சொல்லி, பலிதார்த்தம் (நனவு-தெளிவு) என்று. “கனவில்கண்டேன்” என்றதுக்கு அர்த்தமருளிச்செய்கிறார் (மநஸ்ஸித்யாதி). “என்சிந்தைதன்னால் நானே யெய்தப்பெற்றேன்” என்றத்தைப் பேசுகிறதாகையாலே. அது நிரந்தர மாநஸாநுபவமாகையாலே, “கனவு” என்றபதம் ஸ்வப்நத்தைச் சொன்னதன்றிக்கே, லக்ஷணயா மாநஸாநுபவத்தையே சொல்லுகிறதென்று திருவுள்ளம். (கெதிபட) என்றது - சக்ஷுர்விஷயமாக என்றபடி. ... ... (௧)

மூ.—தாயை நினைந்த கன்றேயொக்க வென்னையும்
தன்னையே நினைக்கச்செய்து தானெனக்
காய் நினைந்தருள் செய்யுமப்பனை
அன்றிவ் வையகமுண்டு மிழ்ந்திட்ட
வாயனை மகரக்குழைக்காதனை
மைந்தனை மதிட்கோவலிடைகழி
யாயினை அமரர்க்கரியேற்றையென்
னன்பனையன்றியாதரியேனே. (௨)

பதம்.	உரை.
தாயை	(தன்) தாயை
நினைந்த	ஸ்மரியாநின்ற
கன்றேயொக்க	கன்றுபோலே,
என்னையும்	உபகாரம்பெற்ற என்னையும் [பே
தன்னையே	உபகாரகனான தன்னை
நினைக்கச்செய்து	த்யாநிக்கும்படி பண்ணி, (அதுக்குமேலே)
தான்	ஸர்வஜ்ஞனான தானே
எனக்காய்	அஜ்ஞனான எனக்காக (என்ஹிதத்தை)
நினைந்து	அநுஸந்தித்து
அருள்செய்யும்	க்ருபை பண்ணாநின்ற
அப்பனை	நிருபாதிக பந்துவாய்,
அன்று	அந்த ஆபத்காலத்தில்

பதம்.	உரை.
இவ்வையகம்	இந்தலோகத்தை
உண்டு	விழுங்கி, (பின்பு)
உமிழ்ந்திட்ட	வெளிப்புறப்படவிட்ட
வாயனை	திருப்பவளத்தையுடையனாய்,
மகரக்குழை	மகர குண்டலங்களையுடைய
காதனை	திருச்செவிகளையுடையனாய்,
மைந்தனை	நித்யயுவாவாய், [ய
மதிள்	ப்ராகாரங்களையுடை
கோவல்	திருக்கோவலூரில்
இடைகழி	திருவிடைகழியில்
ஆயினை	(முதலாழ்வார்கள் நடுவே) ஆன (நின்ற) வனாய்,

அமரர்க்கு	நித்யஸூரிகள் நடுவே	என் அன்பனை	என்னிடத்தில் ப்ரீதியுக்தனானவனைத்தவிர வேறொருவனிடத்தில்
அரி	ஸிம்ஹம்போலவும்	அன்றி	
ஏற்றை	வ்ருஷபம் போலவும் மேனாணித்தவனாய்,	ஆதரியேன்	ப்ரீதி பண்ணமாட்டேன்.

வ்யா.—இரண்டாம்பாட்டு. (தாயித்யாதி) தாயைநினைந்த கன்றைப் போலே, நானும் தன்னையே நினைக்கும்படிக் கீடாகப் பண்ணினான். அந்த கன்று தாயை நினைக்கிறது, வேறொரு கார்யத்துக்கன்றிறே, முன்னாள் முலைகொடுத்த உபகார ஸ்ம்ருதியாலேயிறே; அப்படியே நானும் உபகார ஸ்ம்ருதியாலே தன்னை நினைக்கும்படி பண்ணினான். (தானெனக்காய் நினைந்து) "எல்லாம் செய்தாலும் இவனுடைய நினைவுக்கு வைகல்யமுண்டாகக்கூடும், இவன் தலையில் இவ்வருந்தேவையிடுகிறதென்" என்று (க) "𑌅𑌹𑌂 𑌸𑍍𑌮𑌰𑌾𑌮𑌿 - அஹம் ஸ்மராமி" என்கிறபடியே, நான் நினைக்கமாட்டாக்குறைதீர, எனக்காகத் தான்நினைத்து. (அருள்செய்யுமப்பனை) என்பக்கலொரு ஹேதுவின்றிக்கேயிருக்க, தன்னுடைய நிரவதிகமான ப்ரஸாதத்தை ஒருதலைத்து முழுக்கப் பண்ணின நிருபாதிக பந்துவை.

(அன்றிவ்வையகமுண்டுமிழ்ந்திட்டவாயனை) ஆபந்நரானவன்று, எல்லாரையுமொக்க வரையாதே நோக்கும் ஸ்வபாவனானவனை. வயிற்றிலே வைத்தும் புறப்படவிட்டும் நோக்கின திருப்பவளத்தையுடையவனை. (மகரக்குழைக்காதனை) ப்ரளயத்திலே தள்ளிலும் விடவொண்ணாத வடிவழகையுடையவனை. (மைந்தனை) நித்யமான யௌவநத்தையுடையவனை. (மதிள் கோவலிடைகழியாயனை) உகந்தார் நடுவே புகுந்து நெருக்குமவனை. (அமரர்க்கரியேற்றை) உகப்பார்திரளின்நடுவே புகுந்து நெருக்குமிதுவே ஸ்வபாவமாகவுடையவனை. இப்படி பூர்ணனாயிருந்துவைத்து, என்பக்கலிலே அன்பைப் பண்ணினவனை. (அன்றியாதரியேனே) அவன் என்பக்கலிலே அன்பைப்பண்ணி மேல்விழாநிற்க, நான் அவனையொழிய வேறுசிலரை ஆதரிப்பனோ? (உ)

அரு.—இரண்டாம்பாட்டு. (தாயித்யாதி) (உ) "ஊனேராக்கைதன்னை யுழந்தோம்பிவைத்த நாமேயன்றோ எய்தப்பெற்றோம்" என்று களித்தோம்; பூர்வவாஸனையாலே மீண்டு மற்றொன்றை ஆதரிக்கவேண்டிற்றில் செய்வதென்னென்று தம்மிலே தாமே அதிசங்கைபண்ணி, "அது நம்மால் வந்ததாகிலன்றோ நாமதிசங்கைபண்ணுவது, அவனே நினைக்கப் பண்ணி

(க) வராஹசரமம்-கருரு

(உ) எ-உ-க.

ளுறுகில் நானினி வேறொன்றை ஆதரியேன்'' என்று ஸமாஹிதராகிறார் என்று ஸங்கதி.

(உபகாரஸ்ம்ருதி) என்றது - ஸ்ருஷ்ட்யவதாராதிகளைப் பண்ணுகை. உகந்தார் - முதலாழ்வார்கள். அமரர்க்கு நடுவே அரிபோலவும் ஏறுபோலவும் மேனாணித்திருக்கிறவனை யென்றாய், இப்பதத்தைக்கடாக்ஷித்துத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (உகப்பாரித்யாதி). ... ... (௨)

மூ.—வந்தநாள் வந்தென்நெஞ்சிடம் கொண்டான்
மற்றோர் நெஞ்சறியானடியேனுடைச்
சிந்தையாய் வந்து தென்புலர்க்கென்னைச்
சேர்கொடானிது சிக்கெனப்பெற்றேன்
கொந்துலாம் பொழில்சூழ்க் குடந்தைத்தலைக்
கோவினைக் குடமாடியகூத்தனை
எந்தையை யெந்தை தந்தைதம்மானை
எம்பிரானை யெத்தால் மறக்கேனே. (௩)

பதம்.	உரை.
வந்தநாள்	என்னைமுதலிலே ஸ்வீகரிக்கைக்காகத் தானே வந்தநாளிலே
வந்து	என்னைக்கிட்டி
என்னெஞ்சு	என்மநஸ்ஸை
இடம்கொண்டான்	இருப்பிடமாக அங்கீகரித்தான்,
மற்றுஓர்நெஞ்சு	வேறொருத்தருடைய நெஞ்சையும்
அறியான்	தனக்கிருப்பிடமாக அறிகிறிலன்,
அடியேனுடை	என்னுடைய
சிந்தையாய்வந்து	மநோரதத்தை யுடையனாய் (நான் ப்ரார்த்திக்க வேண்டிய நித்ய கைங்கர்யத்தைத் தானே கொடுக்கக்கருதி) வந்து
தென்புலர்க்கு	தென்திக்கிலுள்ள யமதூதர் கையில்

பதம்.	உரை.
என்னை	தானேவந்து ஸ்வீகரித்த என்னை
சேர்கொடான்	அகப்படும்படி பண்ணமாட்டான்,
இது	இத்தை
சிக்கென	த்ருடமாக
பெற்றேன்	லபித்தேன்; (ஆகையால்,)
கொந்து	பூங்கொத்துக்கள்
உலா	உலாவாநின்ற (நிறைந்திருக்கிற)
பொழில்	சோலைகளினாலே
சூழ்	வ்யாப்தமான
குடந்தைத்தலை	திருக்குடந்தையிலே பள்ளி கொண்டிருக்கிற
கோவினை	ஸ்வாமியாய்,
குடம் ஆடிய	குடக்கூத்தாடின
கூத்தனை	ஆஸ்சர்ய சேஷ்டிதங்களையுடையனாய்,
எந்தையை	எனக்குப்பிதாவாய்,

எந்தை	என்பிதாவுக்கு	எம்பிரானை	எனக்கு உபகாரகனானவனை
தந்தை	பிதாவானபாட்டனார் முதலான என்குலத்துக்கு	எத்தால்	எந்த காரணத்தைச் சொல்லி
தம்மானை	ஸ்வாமியாய்,	மறக்கேன்	மறப்பேன்? (ங)

வ்யா.—மூன்ரும்பாட்டு. (வந்தநாளித்யாதி) ப்ரதமஸ்வீகாரத்துக்கு முன்பு தாமிட்டது ஒரு பச்சையுண்டாய், அதுக்கு உபகரித்தானுகிலிறே இந்நாளென்னலாவது, அங்ஙனென்றில்லாமையாலே, ப்ரதமஸ்வீகாரத்தை "வந்தநாள்" என்னுமித்தனையாய்த்துச் சொல்லலாவது. (என்நெஞ்சிடங் கொண்டான்) (க) "𑌆𑌵𑌾𑌸𑌂𑌤𑍍𑌵𑌹𑌮𑌿𑌚𑍍𑌛𑌾𑌮𑌿- ஆவாஸந்த்வஹமிச்சாமி" என்கிறபடியே, என்னுடைய ஹ்ருதயத்தைத் தனக்கிடமாகக்கொண்டான். (மற்ருேர் நெஞ்சறியான்) திருவடி திருவநந்தாழ்வான் துடக்கமானார் பக்கலிலும்போவானாயிருக்கிறிலன். (உ) "அநந்தன்பாலும் கருடன்பாலுமைதுநொய்தாக வைத்து" என்றும், (ங) "இடவகைகளிகழ்ந்திட்டு" என்றும்; (ச) "கல்லும் கனைகடலும்வைகுந்தவானாடும் புல்லென்ருெழிந்தனகொல்" என்றும் சொல்லுகிறபடியே, இவருடைய திருவுள்ளமொழிய வேருேரிடமுண்டாக நினைத்திருக்கிறிலன். பின்னை அவ்வோவிடங்களில் இவனில்லையோவென்னில்; ஸௌபரி, பலவடிவுகொண்டு, அநுபவித்தாப்போலே, "இதுக்கவ்வருகில்லை" என்னலாம்படி அவன் முகங்கொடுத்துக் கொண்டிருந்தபடி. (அடியேனுடைய யித்யாதி) (ரு) "வழுவிலா வடிமை செய்யவேண்டும்" என்கிற என்னுடைய மநோரதத்தைத் தானுடையனாய்க்கொண்டு வந்து, யமபடர்கையில் என்னைக் காட்டிக்கொடுப்பானாயிருக்கிறிலன். (இதுசிக்கெனப்பெற்றேன்) என் ஸங்கல்பமடியாக வந்ததாகிலிறே, இதுக்கு ஒரு குலைத்தலுள்ளது, அவனடியாக வருகையாலே ஒருநாளும் குலையாதபடி பெற்றேன்.

(கொந்துலாமித்யாதி) பூங்கொத்துக்களை யுடைத்தாய், நித்ய வஸந்தமாயிருந்துள்ள பொழிலாலே சூழப்பட்ட திருக்குடந்தையிலே சாய்ந்தருளி, தன்னுடைய சேஷித்வத்தை உதறிப்படுத்தவனை. (குடமாடிய) மன்றிலே குடக்கூத்தாடி வடிவழகை இடையர்க்கு முத்தூட்டாக்கினவனை. (எந்தையை) எனக்கு ஜநகனானவனை; என்

(க) ரா-ஆர-கூ-ஙங. (உ) பெரி-திரு-ரு-ச-அ. (ங) பெரி-திரு-ரு-ச-க0.
(ச) பெரியதிருவ-கூஅ. (ரு) தி-வாய்-ங-ங-க.

னுடைய மூலநாதனானவனை. (எம்பிரானை) தன்னுடைய ஸ்வரூபரூப குணவிபூதிகளை எனக்குப்ப்ரகாசிப்பித்த மஹோபகாரகனை,(எத்தால்மறக்கேனே) பண்ணின உபகாரம்அளவுபட்டு மறக்கவோ? நானிட்ட பச்சையை நினைந்து ஆறியிருக்கவோ? எவ்வழியால் மறப்பது?. (௩)

அரு.—மூன்றாம்பாட்டு. (வந்தநாளித்யாதி) எம்பெருமான் அநாதியாக ஸ்ருஷ்ட்யவதாராதிகளைப்பண்ணி, தன்னைநினைக்கும்படி யத்நித்துக்கொண்டிருக்கச்செய்தேயும், அவனைநினையாதே வேறொன்றை ஆதரித்து, அத்தால் யமபடர்கையிலே அகப்பட்டுத் திரிந்தகாலையே, "ஆதரியேன்" என்று நிர்ணயிக்கும் விரகு எங்ஙனேஎன்று விசாரித்து, தன்னைமறவாதபடி தானேவந்து போக்கின்றி நிற்கக்கண்டபின்பு, நமக்கு நிர்ணயிக்கக் குறையென்னென்று ஸமாஹிதராகிறாரென்று ஸங்கதி.

"வந்து - நெஞ்சிடம் கொண்டான்" என்னவமைந்திருக்க, "வந்தநாள்" என்றதுக்குத் தாத்பர்யமருளிச் செய்கிறார் (ப்ரதமேத்யாதி). கேவலம் "வந்து" என்றால், பச்சையிடவந்தான் என்றாகிலும் தோற்றுமென்று விசேஷிக்கிறாரென்று கருத்து. "கொண்டான்" என்றதுக்கு வாஸநை (ஆவாஸமித்யாதி). "ஓர்" என்றுநெஞ்சை விசேஷித்ததுக்குக் கருத்து (திருவடியித்யாதி).... .. .. (௩)

மூ.—உரங்களாலியன்ற மன்னர்மாளப்
பாரதத்தொரு தேரைவர்க்காய்ச்சென்று
இரங்கியூர்ந்தவர்க்கின்னருள்செய்யும்
எம்பிரானை வம்பார்புனல்காவிரி
அரங்கமாளி யென்னாளி விண்ணாளி
ஆழிசூழிலங்கை மலங்கச்சென்று
சரங்களாண்ட தண்டாமரைக் கண்ணனுக்
கன்றி என்மனம்தாழ்ந்து நில்லாதே. (௪)

பதம்.	உரை.	பதம்.	உரை.
உரங்களாலே	மிடுக்கினாலே	இரங்கி	(அவர்கள்விஷயமாக) மனம்தளர்ந்து
இயன்ற	(ராஜ்யத்தை) நடத்தாநின்ற	ஒருதேர்	ஒருதேரை
மன்னர்	துர்யோதநாதி ராஜாக்கள்	ஊர்ந்து	நடத்தி
மாள	நசிக்கும்படியாக	அவர்க்கு	அந்த பஞ்சபாண்டவர் விஷயத்தில்
பாரதத்து	பாரதயுத்தத்தில்	இன்	இனிய (ஸ்வயம் ப்ரயோஜநமான)
ஐவர்க்காய்	பஞ்சபாண்டவர்களுக்காக		
சென்று	போய்,	அருள்	க்ருபையை

செய்யும்	பண்ணுகின்ற	மலங்க	வ்யாகுலப்படும்படி
எம்பிரானை	உபகாரகனாய்;	சென்று	கிட்டி
வம்பு	புதிதான	சரங்கள்	பாணங்களை
புனல்	ஜலத்தினாலே	ஆண்ட	ப்ரயோகித்த
ஆர்	நிறைந்த	தண்	குளிர்ந்த
காவிரி	திருக்காவேரியையுடைய	தாமரை	தாமரைபோன்ற
அரங்கம் ஆளி	திருவரங்கத்தைப்பரிபாலநம்செய்யுமவனாய்,	கண்ணனுக்கு அன்றி	கண்களையுடையவனைவிட்டு மற்றொருவர் விஷயத்தில்
என் ஆளி	என்னை ஆளுமவனாய்;	என் மனம்	என்மாஸ்ஸானது
விண் ஆளி	பரமபதத்துக்குநிர்வாஹகனாய்,	தாழ்ந்து	நைச்யத்தை வஹித்து (உருக்கமுற்று)
ஆழிசூழ்	ஸமுத்ரத்தினால் சுற்றப்பட்ட	நில்லாது	இருக்கமாட்டாது. ௪
இலங்கை	லங்காபுரியானது		

வ்யா.—நாலாம்பாட்டு. (உரங்களாலித்யாதி) தர்மப்ரதாநராய் நடத்துகையன்றிக்கே, அஸுராவேசத்தாலே வந்த முன்கைமிடுக்கையுடையராய், மிடுக்காலே நடத்திக்கொடுபோருகிற ராஜாக்களுண்டு-துர்யோதநாதிகள், அவர்கள் முடியும்படிக்கீடாக பாரதஸமரத்திலே, வந்த ப்ரதிபக்ஷத்துக்கெல்லாம், ஒருதேரை எதிராகவிட்டு, தான் பாண்டவர்களுக்காகத் தன்னை அழிவுக்கிட்டுச் சென்று. (இரங்கி) "அய்யோ! இவர்கள் பால்யத்திலே பித்ருஹீநரானார்கள், அரக்கு மாளிகையிலே அகப்பட்டார்கள், நீரிலேகழுவிலே அகப்பட்டார்கள்" என்று அவர்கள்பக்கல் க்ருபையைப்பண்ணி அவர்களுக்காகத் தேரைநடத்தி, அவர்களபேக்ஷிக்க அவர்களுக்கு ஒருகார்யம் செய்தானாயிருக்கையன்றிக்கே, தன்னைப்பெறுக அருளைப்பண்ணின, ஆஶ்ரித விஷயத்தில்பண்ணுமோரத்துக்கு எல்லைகாணவொண்ணாதபடி யிருக்கிற மஹோபகாரகனை.

(வம்பாரித்யாதி) ப்ரவாஹம் மாறாமையாலே நித்யாபூர்வமான ஜலஸம்ருத்தியை யுடைத்தாயிருக்கிற காவிரியையுடைய கோயிலை நிர்வாஹ்யமாக உடையவனை. (என்னாளி) எனக்கு நிர்வாஹகனை. (விண்ணாளி) நித்யவிபூதியுக்தனை. (ஆழ்சூழிலங்கைமலங்கச்சென்று) கடல்சூழ்ந்த அரணையுடைத்தாயிருக்கிற லங்கை ஒருவர்கூறை எழுவருடுக்கும்படியாக எடுத்துவிட்டு அம்புகளை நடத்தின புண்டரீகாக்ஷனை ஸர்வேஶ்வரனுக்கல்லது. (என்மனம்தாழ்ந்து நில்லாதே)

ஆஶ்ரிதர்க்காக ஸாரத்யம்பண்ணியும், மார்விலே அம்பேற்றும் உபகரிக்குமவனுக்கல்லது, வேறுசிலர் விஷயமாக என்னுடைய ஹ்ருதயத்திலே தாழ்ச்சி பிறவாது. ... ... (௪)

அரு —காலாம்பாட்டு. (உரங்களித்யாதி) நான் மறக்கிறேனென்றாலும், என் நெஞ்சானது அவனுக்கே தாழ்ந்திருக்குமென்கிறாரென்று ஸங்கதி.

“உரங்களால்” என்று விசேஷிப்பானென்னென்ன வருளிச்செய்கிறார் (தர்மேத்யாதி). “ஒரு” என்றதுக்குத் தாத்பர்யம்(வந்தவித்யாதி). (நீரிலே கழுவிலேயகப்பட்டார்கள் என்றுக்ருபையைப் பண்ணுகையாவது) - துர்யோதநன் தானும் பாண்டவர்களுமாக ஜலக்ரீடைக்கு உத்யோகித்து, அவ்வளவிலே ஜலத்திலே கூச்சுக்களை நட்டுவைக்க, இவர்களறியார்களென்று, க்ருஷ்ணன் அந்தக் கழுக்களைத் தப்புவித்தருளுகை. அருளுக்கு இனிமைதன்னை யருளிச்செய்கிறார் (அவர்களித்யாதி). “செய்யும்” என்று வர்த்தமாந நிர்தேசபலிதம் (ஆஶ்ரிதேத்யாதி).

வம்பு - நூதனமான, புனல்ஆர்ந்த அரங்கமென்றருளிச் செய்கிறார் (ப்ரவாஹமித்யாதி). மலங்குதல் - “அராஜகமாய்த்து” என்று கலங்குதலாய், அதினர்த்தம் (ஒருவரித்யாதி). ஒருவன் ஒருவன் கூறையைப் பறிக்க, அவன்கையில்நின்றும் மற்றொருவன் பறிக்க, இப்படி அராஜகமாய்ப்போகையென்கை (எம்பிரானை) என்றவிடத்தில்ஐகாரம் சாரிகையாய், எல்லாப்பதங்களும் “தாமரைக் கண்ணனுக்கு” என்றதுக்கு விசேஷணமென்று விவக்ஷித்துத் தாத்பர்யமருளிச் செய்கிறார் (ஆஶ்ரிதர்க்காகவித்யாதி). ... ... (௪)

மூ.—ஆங்குவெந்நரகத்தழுந்தும் போதஞ்சே
லென்றடியேனை யங்கேவந்து
தாங்குதாமரையன்ன பொன்னாரடி
யெம்பிரானை யும்பர்க் கணியாய்நின்ற
வேங்கடத்தரியைப் பரிகீறியை
வெண்ணெயுண்டுரலினிடை யாப்புண்ட
தீங்கரும்பினைத் தேனை நன்பாலினை
யன்றியென்மனம் சிந்தைசெய்யாதே. (௫)

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஆங்கு	அந்த பாதாளாதிகளிலேயுள்ள	அழுந்தும் போது	மக்நனாய் (நோவுப்படுகிறகாலத்தில்), [அ
வெம்நரகத்து	க்ரூரமான நரகங்களில்	அங்கேவந்து	அந்தவிடங்களில் வந்

அஞ்சேலென்று	பயப்பட வேண்டாமென்று
அடியேனை	உனக்கு சேஷபூதனான என்னை
தாங்கு	ரக்ஷியாநின்றவனாய்
தாமரையன்ன	தாமரைப்பூவோடொத்ததாய்
பொன் ஆர்	ஸ்ப்ருஹணீயதை மிக்கிருந்துள்ள [ளை
அடி	திருவடிகளையுடைய
எம்பிரானை	என்ஸ்வாமியாய்,
உம்பர்க்கு	நித்யஸூரிகளுக்கு
அணியாய்நின்ற	அலங்காரபூதனாயிருக்குமவனாய்,
வேங்கடத்து	திருவேங்கட மலையிலெழுந்தருளியிருக்கிற
அரியை	ஸிம்ஹமாய்,
பரி	குதிரையாய்வந்த கேசியை
கீறியை	வாயைக் கிழித்தவனாய்,
வெண்ணெய் உண்டு	வெண்ணெயை (க்களவிலே) அமுதுசெய்து
உரல் இடை	உரலின்நடுவிலே(உரலொடு தன் இடுப்பிலே)
ஆப்புண்ட	கட்டுண்டவனாய்,
தீங்கரும்பினை	இனிய கருப்பஞ்சாற்றொடொத்தவனாய்,
தேனை	தேன்போல் போக்யபூதனாய்,
நல்பாலினை அன்றி	மதுரமான பால்போன்றவனான புருஷோத்தமனைத்தவிர மற்றொருவரை
என்மனம்	என்னுடைய மனஸ்ஸானது
சிந்தைசெய்யாது	நினையாது. (௫)

வ்யா.— அஞ்சாம்பாட்டு. (ஆங்குவெந்நரகமித்யாதி) பாபம் பண்ணுகிற ஸமயத்திலே வந்துகிட்டி, அவற்றில்நின்றும் திரியவிடுவிக்கையன்றிக்கே, அவை செய்தற்று, அத்ருஷ்டரூபேண ப(ஃ)லாநுபவம்பண்ணும் து:க்காநுபவ பூமிகளிலே-கொடிதான நரகத்திலே நோவுபடுமளவிலே. (அஞ்சேலென்று) "இவன், தான் பண்ணின பாபத்துக்கு பலாநுபவம் தானே பண்ணுகிறானாகில், நமக்கென்?" என்றிருக்கையன்றிக்கே, "நாமுளோமாக நீ பாபங்களுக்குக் குடிமகனாகவேணுமோ? நீ அஞ்சாதேகொள்" என்று அங்கேசென்று. (தாங்கு) ரக்ஷிக்குமது, செவ்வித் தாமரைப்பூப்போலே ஸ்ப்ருஹணீயமான திருவடிகளைக்கொண்டாய்த்து. விகாஸம் செவ்வி குளிர்ச்சி நாற்றம் இவற்றுக்குத் தாமரையை ஒருபோலியாகச் சொல்லலாம்படியாய், அவ்வளவல்லாதபடி அதிஸுகுமாரமாய், ஸ்ப்ருஹணீயமான திருவடிகளையுடைய என்னையனை.

(உம்பர்க்கணியித்யாதி) திருமலையில் நிற்கிறநிலை, நித்யஸூரிகளுக்கு ஆபரணம்போலேயிருக்கிறதாய்த்து. (அரியை) உகப்பார்க்கு ஆபரணமாயிருக்குமாபோலே, உகவாதார்க்கு அப்ரத்ருஷ்யனாயிருக்குமாய்த்து. (பரிகீறியை) கேசியுடைய வாயைக்கிழித்தவனை.

(வெண்ணெயித்யாதி) ஆஶ்ரிதஸ்பர்சமுள்ள த்ரவ்யமொழியச் செல்லாமை பிறந்து, அது நேர்கொடு நேர்கிடையாமை, களவுகண்டு புஜிக்கப்புக்கு, அதுதன்னை முடியச்செய்து தலைக்கட்டமாட்டாமை வாயது கையதாக அகப்பட்டு, உரலோடே சேர்த்துக்கட்டுண்டு, அடியுண்டு, அடிக்கிறாய்த்து, உடம்புவெளுத்துப் பயர்த்துப், பேகணித்து, நின்றநிலையை அநுஸந்திக்க வநுஸந்திக்க இவர்க்கு இவ்விருப்புத்தானேயாய்த்து ஸர்வவித போக்யமுமாயிருக்கிறது. (க)"𑌸𑌰𑍍𑌵𑌗𑌨𑍍𑌧𑌃- ஸர்வரஸ:" என்கிறபடியே இனிதாகாநின்றது. (நன்பாலினை) இப்படி ஸர்வவித போக்யமுமாயிருக்கிறவனையொழிய என்னுடைய நெஞ்சு வேறுசிலரை அநவரதபாவனை பண்ணாது. ... ... (ரு)

அரு —அஞ்சாம்பாட்டு. (ஆங்கைத்யாதி) கீழ்ச்சொன்ன ஸாரதியின் படியை அண்டைகொண்ட ப்ரீத்யதிசயத்தாலே, மற்றும் சில அபதாநங்களை அருளிச்செய்து, தன்னெஞ்சு நிரந்தராநுபவம் பண்ணும்படியை அநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

(உ)"𑌸𑌰𑍍𑌵𑌪𑌾𑌪𑍇𑌭𑍍𑌯𑍋 𑌮𑍋𑌕𑍍𑌷𑌯𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿-ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்றவனுடைய திருவடிகளாகையாலே பாபநிவர்த்தகத்வம் அவற்றுக்கேயாக விவக்ஷித்தருளிச் செய்கிறாரென்று தாத்பர்யமருளிச் செய்கிறார் (பாபமித்யாதி). (அத்ருஷ்டரூபேண) பகவந்நிக்ரஹரூபேண. திருவடிகள் *திண் கழலாகையாலே, தன்னைப் பற்றினார்மேல் அநுக்ரஹத்தை உண்டாக்குமென்று கருத்து. ... ... (ரு)

மூ. —எட்டனைப் பொழுதாகிலுமென்று
மென்மனத்தகலா திருக்கும் புகழ்
தட்டவர்த்த பொன்னே யலர்கோங்கின்
தாழ்பொழில் திருமாலிருஞ்சோலையங்
கட்டியைக் கரும்பீன்ற வின்சாற்றைக்
காதலால் மறைநான்கு முன்னோதிய
பட்டனைப் பரவைத்துயிலேற்றை யென்
பண்பனையன்றிப் பாடல்செய்யேனே. (சு)

பதம்.	உரை.	பதம்	உரை.
என்றும்	ஸர்வகாலமும்	என்மனத்து	என்மநஸ்ஸில் நின்றும்
எட்டனைப் பொழுதாகிலும்	ஒருநொடிப்பொழுதுங்கூட	அகலாது	பிரியாமல்
		இருக்கும்	எழுந்தருளியிருக்கையாலுண்டான

(க) சாந்தோ-ங-கச-ச.
(உ) கீதை-கஅ-சுசு.

புகழ்	கீர்த்தியை யுடையனு [ய்,	கரும்பு	கருப்புதண்டமானது
தட்டு	மிகவும்	ஈன்ற	(தானே) பெருக்காநி
அலர்த்த	விகஸிப்பிக்கப் பட்டதாய்	இன்	இனிதான [ன்ற
பொன்னேய்	பொன்னோடொத்து ஸ்ப்ருஹணீயமான	சாற்றை	ரஸம்போன்றவனாய்
அலர்	புஷ்பங்களை யுடையதான [டைய	காதலால்	ஆசையுடன்
கோங்கின்	கோங்கு மரங்களினு	மறைநான்கும்	நாலுவேதங்களையும்
தாழ்	தழைத்திருக்கிற	முன்	பூர்வம் க்ருஷ்ணாவதாரத்தில்
பொழில்	சோலைகளை யுடைத்தான	ஓதிய	அத்யயநம்பண்ணின
திருமாலிருஞ் சோலை	திருமாலிருஞ்சோலை மலையி லெழுந்தருளியிருக்கிறவனாய்,	பட்டனை	பண்டிதனாய்,
அம்	மதுரமான	பரவை	க்ஷீராப்தியில்
கட்டியை	கற்கண்டுபோல்போக்யபூதனாய்,	துயில்	கண்வளராநின்ற
		ஏற்றை	ஶ்ரேஷ்டனாய்,
		என்பண்பனை யன்றி	எனக்கு ஸுலபனானவனையொழிய வேறொருவனை
		பாடல்செய்யேன்	பாடமாட்டேன். (௬)

வ்யா.—ஆறும்பாட்டு. (எட்டனை யித்யாதி) வ்யதிரிக்தர்பக்கலிலே அல்பமுத்கர்ஷங்கண்டு, நான் பேசுவதாக ஒருப்பட்டாலும் என்னுடைய வாகிந்த்ரியமானது அதுக்குட்படாது.

அத்யல்பகாலமும் என்றுமொக்க என்னுடைய நெஞ்சை அகலாதிருக்கையால் வந்த புகழையுடையனாய்; பிராட்டி (க) "அகலகில்லேனிறையும்" என்றுசொல்லவிருக்கிற இருப்பிற்காட்டிலும் ஏற்றமாக நினைத்திராநின்றானாய்த்து. என்று மெட்டனைப்பொழுது மகலாதிருக்குமென்றபடி. (தட்டலர்த்த) இதழ் விரியாநிற்பதாய், பொன்போலேயிருக்கிற அலரையுடைத்தான கோங்கினுடைய வென்னுதல், இதழ் மிகும்படி அலரப்பண்ணப்பட்டு, பொன்போலே யிருக்கிற அலரையுடைத்தான கோங்கினுடைய தழைத்த பொழிலையுடைய திருமலையிலே அநுபவயோக்யமாய்க்கொண்டு நிற்கிறவனை.

கைதொட்டு நெருக்குகையால் வரும் செவ்விக் கேடின்றிக்கே, அக்கரும்பினுடைய ரஸாம்சமாயுள்ளவனை. (காதலாலித்யாதி) இதுக்கு முன்பு ஒத்துப்போகாதவன் அபிநிவிஷ்டனாய் ஓதுமாபோலே, ஸாங்

(க) தி-வாய்-௬-௰-௰.

தீபஸியோடே ஸாதரமாக நாலுவேதத்தையும் அப்யஸித்த பண்டிதனை, இவ்வவதாரத்துக்கு நாற்றங்காலாய்க்கொண்டு, திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளின நீர்மையுடையவனை யல்லது பாடல் செய்யேன். ... ... (௬)

அரு.— ஆறும்பாட்டு. (எட்டனையித்யாதி) "பண்பனையன்றிப்பாடல் செய்யேனே" என்றத்தைக் கடாக்ஷித்து ஸங்கதியருளிச்செய்கிறார் (வ்யதிரிக்த ரித்யாதி).

(வாகிந்த்ரியமானது) என்றவநந்தரம், "நெஞ்சைப்போலே" என்று சேஷம். (உட்படாது) என்றவநந்தரம், ஆகையாலே பாடல் செய்யேனென்று சேஷம்.

"எட்டனைப்பொழுதாகிலும்" என்றது - எள்ளத்தனையு மென்றபடியாய், அத்தையருளிச்செய்கிறார் (அத்யல்பகாலமுமித்யாதி). "எட்டனை," "என்றும்," என்னும் த்விருக்தியாலே, ஆதராதிசயம் தோற்றுமென்று, தாத்பர்யமருளிச் செய்கிறார் (பிரீட்டியித்யாதி). "என்றும்," என்றது ஸ்தூலகாலமாகையாலே, ததந்தர்க்கதமான ஸூக்ஷ்மகாலம் பிற்படச் சொல்லவேண்டி அந்வயம் காட்டுகிறார் (என்றுமித்யாதி). அலர்ந்த என்கிறமெல்லொத்து "அலர்த்த" என்றுவல்லொத்தாய்க்கிடக்கிறதாய், அர்த்தமருளிச்செய்து, "அலர்த்த" என்கிறபடி தானே, ஸூர்ய கிரணாதிகளால் விகஸிப்பிக்கப்பட்ட என்னலாமென்றருளிச்செய்கிறார் (இதழ்மிகுமித்யாதி). "தட்டு" என்கிறபதம் அலரப்பண்ணுகையில் கர்த்தாவாக வேண்டுகையாலே சொல்லிற்று; "அலர்த்தப்பட்ட" என்னும்போது, அலருகை தளவிகாஸந்தானே யாகையாலே, "தட்டு" என்றபதம் மிகுதியைச் சொல்லுமென்று திருவுள்ளம்.

கரும்பின்சாற்றை என்னாதே, "ஈன்ற" என்றதுக்குபாவம் (கைதொட்டித்யாதி). (ஒத்துப்போகாத) அத்யயநம் வாராத. ... ... (௬)

மூ.—பண்ணினின்மொழி யாழ்நரம்பில்பெற்ற
பாலையாகி யிங்கே புகுந்தென்
கண்ணும்நெஞ்சும் வாயுமிடங்கொண்டான்
கொண்டபின் மறையோர்மனந்தன்னுள்
விண்ணுளார்பெருமானை யெம்மானை
வீங்குநீர் மகரந்திளைக்கும் கடல்
வண்ணன்மாமணி வண்ணனெம்மண்ணல்
வண்ணமேயன்றி வாயுரையாதே. (௭)

பதம்	உரை.	பதம்.	உரை.
பண்ணின்	கானங்களிலே	விண்ணுளார்	நித்யஸூரிகளுக்கு
இன்	ஶ்ராவ்யமான	பெருமான்	ஸ்வாமியாய்,
மொழி	சொல்லை யுடைத்தான	எம்மான்	எனக்கு நிர்வாஹகனாய்
யாழ்	வீணையினுடைய	வீங்கு	வ்ருத்தியடையாநின்ற
நரம்பில்	தந்திகளில்	நீர்	ஜலத்தை யுடையதாய்
பெற்ற	உண்டான	மகரம்	மீன்களானவை
பாலையாகி	பாலைஎன்னும் ராகம் போல் மிகஇனியனாய்க்கொண்டு	திளைக்கும்	துள்ளி விளையாடாநின்ற
இங்கே	இந்த என்நெஞ்சில்	கடல்	ஸமுத்ரம் போன்ற
புகுந்து	வந்து ப்ரவேசித்து	வண்ணன்	வர்ணத்தை யுடையனாய்,
என் கண்ணும்	என் கண்களையும்	மா	ஶ்லாக்யமான
நெஞ்சும்	மநஸ்ஸையும்	மணி	நீலமணியினுடைய
வாயும்	வாக்கையும்	வண்ணன்	வர்ண (ஸ்வபாவ)த்தையுடையனாய்,
இடம் கொண்டான்	இருப்பிடமாக அங்கிகரித்தான்;	எம் அண்ணல்	எனக்கு ஸ்வாமியானவனுடைய
கொண்டபின்	இப்படி அங்கிகரித்த பின்பு,	வண்ணமே	வர்ணத்தையொழிய
மறையோர்	வைதிகப்ராஹ்மணருடைய	அன்றி	வேறொன்றை
மனம்	மநஸ்ஸை	வாய்	என்வாக்கானது
தன் உள்	தனக்கு வாஸஸ்தாநமாகவுடையனாய்,	உரையாதே	சொல்லாது. (எ)

வ்யா.—எழாம்பாட்டு. (பண்ணினின் மொழியாழித்யாதி) என்னுடைய மநோவாக்காயங்கள் அவனையல்லதறியாதென்கிறார்.

(பண்ணினித்யாதி) பண்வர்க்கத்திலே இனிய பேச்சையுடைய யாழ் நரம்பிலே யாழிலே பிறக்கப்பட்ட பாலையாகிறபண்ணாய், அப்பண்போலே போக்யனாய்க்கொண்டு வந்து புகுந்து. (என்கண்ணும் நெஞ்சும் வாயுமிடங்கொண்டான்) கண்ணுக்கு வேறொன்றைக் காணவொண்ணாதபடி தானே விஷயமானான்; வாக்குக்குவேறே சிலரைப் பேசுகைக்கு விஷயமல்லாதபடி தானே விஷயமானான்; நெஞ்சுக்கு வேறே சிலரை நினைக்க அவகாசமில்லாதபடி தானே விஷயமானான். ஆக ஸர்வேந்த்ரியங்களுக்கும் தன்னையே விஷயமாக்கினான்.

(மறையோரித்யாதி) ப்ராஹ்மணருடைய ஹ்ருதயங்களைத் தனக்கு வாஸஸ்தாநமாக வுடையனாய், *அயர் வறுமமரர்களதிபதி

யாயுள்ளவனை. (எம்மானை) எனக்கு ஸ்வாமியாயுள்ளவனை. (வீங்கு நீரித்யாதி) ஸம்ருத்தமான ஜலத்தையுடைத்தாய், ஜலச(ர) ரஸத்வங்கள் தன்னில்கூடி விளையாடாநிற்கிற கடல்போலேயிருக்கிற நிறத்தை யுடையனாய், பெருவிலையனான நீலமணிபோலே யிருக்கிற நிறத்தை யுடையனானவனை. இந்நிறத்தைக்காட்டி, என்னை அநந்யார்ஹனாக்கிக் கொண்டவனுடைய நிறத்தையொழிய என்னுடைய வாகிந்த்ரிய மானது, வேறொன்றைப் பேசாது. ... ... (எ)

அரு —ஏழாம்பாட்டு. (பண்ணித்யாதி) ஸமுதாயேந கரணத்ரயத்துக்கும் அவனே விஷயமானானென்கிறாரென்று ஸங்கதி யருளிச்செய்கிறார் (என்னுடைய வித்யாதி).

லோகத்தில் மநோ வாக் காயங்களென்கிற ப்ரஸித்தியைப்பற்ற, "கண்"பதம் காயலாக்ஷணிகமென்றுகருத்து. இத்தால்பலித்தவர்த்தத்தை யருளிச்செய்கிறார் (ஆகவித்யாதி). (பேசாது) என்றவநந்தரம், "கண்ணானது காணாது, நெஞ்சானது நினையாது" என்றுகூட்டுவது. "கொண்டபின்" என்று மூன்றுக்கும் தானே விஷயமாக்குகையை ஹேதுவாக வருளிச் செய்கையாலே இங்ஙனே கூட்டவடுப்பது. ... ... (எ)

மூ.—இனியெப்பாவம் வந்தெய்தும் சொல்லீர்
எமக்கிம்மையேயருள் பெற்றமையாலடும்
துனியைத்தீர்த்தின்பமே தருகின்றதோர்
தோற்றத்தொன்னெறியை வையந்தொழப்படும்
முனியை வானவரால் வணங்கப்படும்
முத்தினைப் பத்தர்தாம் நுகர்கின்றதோர்
கனியைக் காதல் செய்தென்னுள்ளங்கொண்ட
கள்வனை யின்று கண்டுகொண்டேனே. (அ)

பதம்.	உரை	பதம்.	உரை.
இம்மையே	இந்த லோக(ஜந்ம)த்திலேயே	எப்பாவம்	(பூர்வோத்தராகங்களில்) எவ்விதமான பாவம்
அருள்	(எம்பெருமானுடைய) க்ருபையை	வந்து எய்தும்	வந்து கிட்டப்பெறும்?
பெற்றமையால்	ப்ராபித்தபடியாலே,	சொல்லீர்	சொல்லுங்கோள்;
இனி	இதுக்குமேலே	அடும்	(ஆத்மாவை) உருமாயப் பண்ணுகின்றதாய்
எமக்கு	நம்மை		

துனியை	ப்ராப்தி ப்ரதிபந்தகமானகர்மங்களை
தீர்த்து	போக்கி
இன்பம்	ஸுகத்தையே
தருகின்றது	கொடாநின்றவனாய்,
ஓர்	அத்விதீயமாய்
தோற்றம்	அழகியதாய்
தொல்	பழையதான
நெறியை	உபாயபூதனாய்,
வையம்	லோகத்தாராலே
தொழப்படும்	ஆஶ்ரயிக்கப்படாநின்றவனாய்
முனியை	(அவ்வவர்களுக்கு அளிக்கவல்ல ப்ரயோஜநத்தை) மநநம்பண்ணுமவனாய்,
வானவரால்	நித்யஸூரிகளினால்
வணங்கப்படும்	ஆஶ்ரயிக்கப்படுமவனாய்,
முத்தினை	முத்துப்போல் குளிர்ந்த(ஶ்ரமஹரமான) வடிவையுடையனாய்
பத்தர்தாம்	முமுக்ஷுக்களான உபாஸகராலே
நுகர்கின்றது	புஜிக்க (அநுபவிக்க) ப்படாநின்றுள்ள
ஓர்	அத்விதீய மதுரமான
கனியை	பழம் போன்றவனாய்,
காதல் செய்து	ஆசையுற்று
என் உள்ளம்	என் மநஸ்ஸை
கொண்ட	அபஹரித்த
கள்வனை	சோரனானவனை
இன்று	இப்பொழுது
கண்டுகொண்டேன்	ஸாக்ஷாத்கரித்தேன். (அ)

வ்யா.—எட்டாம்பாட்டு. (இனியெப்பாவமித்யாதி) அவனுடைய நிக்ரஹபலமான பாபங்கள் என்னைக்கிட்டவற்றோ (க) "𑌅𑌵𑌶𑍍𑌯𑌮𑌨𑍁𑌭𑍋𑌕𑍍𑌤𑌵𑍍𑌯𑌮𑍍- அவஶ்யமநுபோக்தவ்யம்" என்கிற வசநத்தைக்கொண்டு, அநுபவித்தாலல்லது நசியேனென்றுகொண்டு சிலவை நிற்றல், ப்ராரப்தங்காண் என்றுசிலவை நிற்றல்செய்யவற்றோ? "இனி" என்கிறது எத்தைக்கொண்டென்ன; (இம்மையேயருள் பெற்றமையால்) இஹலோகத்திலே பகவத்ப்ரஸாதத்தைப் பெற்றபடியாலே, இனியெப்பாவம் வந்தெய்தும் சொல்லீர். (அடுந்துனியை) (உ) "𑌅𑌚𑍍𑌛𑍇𑌦𑍍𑌯𑍋𑌽𑌯𑌮𑌦𑌾𑌹𑍍𑌯𑍋𑌽𑌯𑌮𑍍-அச்சேத்யோய மதாஹ்யோயம்" என்று சொல்லப்படுகிற ஆத்மவஸ்துவை, (ங) "𑌅𑌸𑌙𑍍𑌗𑍇𑌨𑍈𑌵- அஸங்கேநவ" என்னலாம்படி முடிக்கிற துனி உண்டு - ப்ராப்திப்ரதிபந்தகமான கர்மங்கள், அவற்றை ஸவாஸநமாகப் போக்கி, (ச) "𑌏𑌷 𑌹𑍍𑌯𑍇𑌵𑌾𑌽𑌽𑌨𑌨𑍍𑌦𑌯𑌾𑌤𑌿 - ஏஷஹ்யேவாநந்தயாதி" என்கிறபடியே, நிரதிசயாநந்தியாம்படி பண்ணுகிற, (தோற்றத்தொன்னெறியை) தோற்றம்-அழகு. தொன்மை-பெருமை. அழகிய மஹாபத(த்)ம் என்பர். இதரோபாய பரிக்ரஹம் பண்ணின

(க)

(உ) கீ-உ-உச.

(ங) தை-ஆ-ரு-க.

(ச) தை-ஆ-எ-க.

ர்க்கும் தன்னையே பற்றவேண்டும்படியாய், தன்னைப் பற்றினார்க்கு வேறொன்றைப்பற்றவேண்டாதபடி ப்ரதாநமாய், நிலைநின்ற உபாயமாயுள்ளவனை. (க)“அறஞ்சுவராகிநின்ற” இப்போதாக எடுக்கவேண்டா, பண்டேஎடுத்து நிற்கிறதாய்த்து. (உ) “𑌸𑌨𑌾𑌤𑌨𑌂- ஸநாதநம்” என்கிறபடியே. அத்தையிறே அவன் (ந) “𑌮𑌾𑌂-மாம்” என்றது.

(வையம்தொழப்படும்) பூமியிலுள்ளார், இருந்ததேகுடியாக ஆஶ்ரயிக்கப்படுமவனாய், சேதநருடைய ஸ்வரூபபேதத்தோபாதியும் போருமிறே ருசிபேதமும்; அவ்வோ ருசிக்கநுகுணமான பேறுகளைப் பண்ணுகைக்கு மநநம் பண்ணிக்கொண்டிருக்குமவனை, ஒன்றிலோரபேக்ஷையில்லாத நித்யஸூரிகளாலே ஆஶ்ரயிக்கப்படுமவனாய், அவர்களுடைய ஶ்ரமத்தைப்போக்குமவனை. (பத்தர்தாம்) ஸம்ஸாரத்தில் முமுக்ஷுக்களுண்டு - தன்பக்கல் ருசியுடையராயிருப்பார், அவர்களுக்குக் கண்டபோதே அநுபவிக்கலாம்படி பக்வபல(ஃல)மாயுள்ளவனை. அவையொன்றுமின்றிக்கே யிருக்கிற என்பக்கலிலே தான் ஆசையுடையனாய், என்னை ஸர்வஸ்வாபஹாரம் பண்ணினவனை. நான் அநாதிகாலம்பண்ணிப்போந்த ஆத்மாபஹாரத்தை அரைக்ஷணத்திலே பண்ணினவனை, இன்று நினைவின்றிக்கேயிருக்கக் காணப்பெற்றேன். ... ... (அ)

அரு.—எட்டாம்பாட்டு. (இனியித்யாதி) ஆழ்வீர்! இங்ஙனே நீர் மிகவும் களியாநின்றீர், இந்த்ரிய ஸமுதாயாத்மகமான சரீரம், கர்மாதீநமாய் வந்ததன்றோ, கர்மாநுகுணமாக அவைபோய்விடாவோவென்ன; பாபமானது-பகவந்நிக்ரஹரூபேண இருப்பதொன்றன்றோ? அநுக்ரஹம்பெற்றால், அவையுண்டோவென்று மடிபிடிக்கிறாரென்று ஸங்கதி.

(𑌅𑌵𑌶𑍍𑌯𑌮𑌨𑍁𑌭𑍋𑌕𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 - அவஶ்யமநுபோக்தவ்யம்) என்றது - ப்ராரப்தேதரபூர்வ பாபமானவற்றில் கழியுண்ணாதகொடுவினைகளை. ஸித்தோபாயத்துக்கு அழகு ஏதென்ன வருளிச்செய்கிறார் (இதரேத்யாதி). தொன்மைக்கு ப்ரமாணங்களருளிச் செய்கிறார் (அறமித்யாதி). ... (அ)

மூ.—என்செய்கேனடியேனுரையீரிதற்கென்று
மென்மனத்தே யிருக்கும்புகழ்
தஞ்சையாளியைப் பொன்பெயரோன்
நெஞ்சமன்றிடந்தவனைத் தழலேபுரை

(க) திருமா-கூ. (உ) பார-ஆர-அஅ. (ந) கீ-கஅ-கூகூ.

விஞ்சவாளரக்கன்நகர் பாழ்படச்
சூழ்கடல்சிறைவைத்திமையோர் தொழும்
பொன்செய்மால்வரையை மணிக்குன்றினை
யன்றியென்மனம்போற்றி யென்னாதே. (கூ)

பதம்.	உரை.
அடியேன்	பரதந்த்ரனான நான்
இதற்கு	அவன் பண்ணின இந்த உபகாரத்துக்கு
என்செய்கேன்	என்ன ப்ரத்யுபகாரம் பண்ணுவேன்?
உரையீர்	சொல்லுங்கள்;
என்றும்	ஸர்வகாலமும்
என் மனத்தே	என் ஹ்ருதயத்திலேயே
இருக்கும்	வாஸம் பண்ணுகையாலுண்டான
புகழ்	கீர்த்தியை யடைந்தவனாய்,
தஞ்சை ஆளியை	தஞ்சைமாமணிக்கோயிலுக்கு நிர்வாஹகனாய்,
பொன் பெயரோன்	ஹிரண்யனுடைய
நெஞ்சம்	மார்பை
அன்று	அக்காலத்திலே
இடந்தவனை	கிழித்துப்பொகட்டவனாய்,
தழலே புரை	நெருப்புபோல் கிட்டவொண்ணாதவனாய்,
விஞ்ச	அதிசயித பராக்ரமத்தையுடையனாய்
வாள்	வாளாயுதத்தையுடையனான
அரக்கன்	ராவணாஸுரனுடைய
நகர்	பட்டணமானது
பாழ்பட	(ஆள்) பாழாகப்போம்படி
சூழ்	(அவ்வூரை) சுற்றிக்கொண்டிருக்கிற
கடல்	ஸமுத்ரத்தை
சிறைவைத்து	அணைகட்டினவனாய்
இமையோர்	தேவர்களால்
தொழும்	ஆஸ்ரயிக்கப்படுமவனாய்,
பொன் செய்	ஸ்ப்ருஹணீயமாய்
மால்	பெரிதான
வரையை	பர்வதம் போன்றவனாய்,
மணி	நீலமணி மயமான
குன்றினையன்றி	மலைபோலே குளிர்ந்த வடிவையுடையனானவனையொழியவேறொருவனை
என்மனம்	என் நெஞ்சானது
போற்றி என்னாது	வாழக்கடவாய்என்றும் மங்களாசாஸநம் பண்ணமாட்டாது.

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (என்செய்கேன்)உபகாரம் பண்ணுமவிருக்கப் பெறுகிறதில்லை, உபகரிக்கலாவதொன்றும் காண்கிறிலேன், எத்தைச்செய்வேன்? (அடியேன்) எனக்கென்ன ஒரு கைம்முதலில்லாதபடி ஸ்வரூபமே பிடித்து பரதந்த்ரனான நான் எத்தைச்செய்வேன். (உரையீர்) மத்யஸ்த்தராய் கரைமேலே நிற்கிற நீங்கள் இதுக்

கொரு போக்கடி சொல்லவல்லிகோள். (என்றும்) என்றுமொக்க என்னுடையஹ்ருதயத்தை விடாதிருக்கையாலேவந்த புகழையுடையனாய். இங்கு புகுருகைக்குடலாகத் தஞ்சாவூரிலே நின்றவனை. (பொன்பெயரோனித்யாதி). எனக்குப் பண்டே உபகரித்து நின்றவனை. (தழலேயித்யாதி) சிலராய் வந்து கிட்டவொண்ணாதபடி நெருப்பை உமிழாநிற்பானாய், அநபிபவநீயனாய், அவஸரப்ரதீக்ஷனாய், ஒளியை யுடைத்தாயிருப்பதொரு வாளை தேவதைபக்கலிலே பெற்றுடையனாயிருக்கிற ராக்ஷஸனுடைய நகரியானது பாழ்படும்படி லங்கைக்கு அகழான கடலை அணைசெய்தவனை.

இமையோருண்டு -. ப்ரஹ்மாதிகள், எங்கள் குடியிருப்புப் பெற்றோமென்று (க) "भवान्नारायणो देवः - பவாந்நாராயணோதேவ:" என்றாப்போலே ஸ்தோத்ரம்பண்ண, அத்தாலே புகர்பெற்ற வடிவையுடையனாய் நின்றவனை. "இவர்கள் கார்யம்செய்து தலைக்கட்டப்பெற்றோமிறே" என்று, அத்தாலே குளிர்ந்த நிறத்தையுடையனாய் நின்றபடி. இப்படிப்பட்ட இவனையல்லது "போற்றி" என்று என்னுடைய ஹ்ருதயமானது மங்களாசாஸநம் பண்ணாது. (உ) * பாழாளாகப்படை பொருதானுக்கல்லது என்னுடைய ஹ்ருதயமானது பல்லாண்டு பாடாது. நித்யஸூரிகள் பெறும்பேற்றைப்பெற்றேன் ஸம்ஸாரியான நான். பரதந்த்ரனாயிருக்கையாலே, ப்ரத்யுபகாரம் பண்ணலாவது காண்கிறிலேன், எத்தைச்செய்வேன். சொல்லிகோளென்கிறார். ... ... (௯)

அரு.— ஒன்பதாம்பாட்டு. (என்செய்கேனித்யாதி) கீழ்ப்பாட்டில், அவனநுக்ரஹித்தானாகையாலே, நிக்ரஹரூபமான பாபம் வந்தெய்தாது என்னாநின்றீர், உம்மை இப்படி அநுக்ரஹிக்கைக்கு, உம்மால் பெறப்புகுகிற உபகாரமென்னென்ன; நான் அவன்பண்ணின உபகாரங்களை அநுஸந்தித்து உபகாரஸ்ம்ருதியாலே ப்ரத்யுபகாரம் பண்ணத் தேடினாலும் பண்ணவிரகுண்டோவென்கிறாரென்று ஸங்கதி.

"அடியேன், இதற்கு - அவன்பண்ணின அநுக்ரஹ விசேஷத்துக்கு, என்செய்கேன்" என்றந்வயம் திருவுள்ளம்பற்றித் தாத்பர்யமருளிச்செய்கிறார் (உபகாரமித்யாதி). ப்ரஹ்லாதனுக்கு உபகரித்ததே தம்மதாக வருளிச்செய்கிறார் (எனக்கித்யாதி). சிறைவைக்கை - போகவொட்டாமல் தடுக்கை; அத்தால் பலிதம் (அணைசெய்தவனை) என்றது.

(க) ரா-யு-௧௨௦-௧௩.

(உ) தி-பல்-௩.

“மணிக்குன்றினை” என்றதுக்குத் தாத்பர்யம் (இவர்களித்யாதி). பாட்டுக்கெல்லாம் தொகுத்தபாவம் (நித்யஸூரிகளித்யாதி).

மூ.—தோடுவிண்டலர் பூம்பொழில் மங்கையர்
தோன்றல் வாள்கலியன் திருவாலி
நாடன் நன்னறையூர்நின்ற நம்பிதன்
நல்ல மாமலர்ச்சேவடி சென்னிச்
சூடியும் தொழுதுமெழுந்தாடியும்
தொண்டர்கட்கவன்சொன்ன சொன்மாலை
பாடல்பத்திவை பாடுமின் தொண்டீர்
பாட நும்மிடைப் பாவம் நில்லாவே. (௧௦)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பதம்.	உரை.	பதம்.	உரை.
தோடு	இதழ்களானவை	சே	அழகியதான (ஆஶ்ரிதாநாஶ்ரிதவிபாகமற ஸர்வஸுலபமான)
விண்டு	ஸந்திபந்தங்கள் விட்டு	அடி	திருவடிகளை
அலர்	விகஸியாநின்ற	சென்னி	தம் திருமுடியில்
பூ	புஷ்பங்களையுடைத்தான	சூடியும்	தரித்துக்கொண்டும்
பொழில்	சோலைகள் சூழ்ந்த	தொழுதும்	ஆஶ்ரயித்தும்
மங்கையர்	திருமங்கையிலுள்ளார்க்கு	எழுந்து	எழுந்திருந்து
தோன்றல்	ப்ரதாநராய்,	ஆடியும்	நர்த்தநம்பண்ணியும்
வாள்	வாளாலே	தொண்டர்கட்கு	ஆஶ்ரிதர் உஜ்ஜீவிக்கைக்காக
கலியன்	சத்ருக்களை நிரஸிக்குமவராய்,	சொன்ன	அருளிச்செய்த
திருவாலிநாடன்	திருவாலிநாட்டுக்கு நிர்வாஹகரான	சொல்மாலை	சப்தஸந்தர்ப்ப விசேஷமான
அவன்	அந்த ஆழ்வார்,	இவை பத்து பாடல்	இந்த பத்துப்பாட்டுக்களையும்
நல்	விலக்ஷணமான	தொண்டீர்	பகவத்விஷயத்தில் ருசியுடையவர்களே
நறையூர்	திருநறையூரிலே	பாடுமின்	காநம்பண்ணுங்கோள்,
நின்ற	எழுந்தருளியிருக்கிற	பாட	காநம்பண்ணவே
நம்பிதன்	ஸகல கல்யாணகுண பூர்ணனுடைய	நும்மிடை	உங்களிடத்தில்
நல்ல	அழகியதாய்	பாவம்	பாபமானது
மா	பெரிதான	நில்லா	தங்காது. (௧௦)
மலர்	புஷ்பம்போல் அதிஸுகுமாரமாய்		

கருள

வ்யா.—பத்தாம்பாட்டு. (தோடுவிண்டலரித்யாதி) இதழ் விண்டலருகிற பூவையுடைத்தான பொழிலாலே சூழப்பட்ட திருமங்கையிலுள்ளார்க்கு ப்ரதாநராயுள்ள ஆழ்வார். (வாள்கலியன்) பகவத்ப்ராப்திக்கு ப்ரபத்திபோலேயாய்த்து, ப்ரதிபக்ஷநிரஸநத்துக்குக் கையில்வாள். (திருவாலிநாடன்) இதுவே போருமாய்த்து ஏற்றம். (நன்னறையூர்) திருநறையூரிலே வந்து நிற்கையாலே கல்யாணகுணங்களால் பரிபூர்ணனானவன்.

நிரதிசயபோக்யமாய், குணாऽகுணநிரூபணம்பண்ணாத திருவடிகளைத் திருமுடிக்கு வளையமாக வைத்தும். (தொழுதும்) (௧) "𑌨𑌮𑌃 𑌪𑍁𑌰𑌸𑍍𑌤𑌾𑌤𑍍-நம꞉ புரஸ்தாத்" என்கிறபடியே தொழுதும், தொழப்பெற்ற ஹர்ஷத்தாலே இச்சரீரமிருந்தவிடத்திலிராதே ஆடியும். (தொண்டர்கட்கு) தாமறிந்ததாக அநுபவித்து விடுகையன்றிக்கே, பின்புள்ளார்க்கும் அநுபவயோக்யமாம்படி (௨) "தொண்டர்க்கமுதுண்ண" என்கிறபடியே ஶ்ரீவைஷ்ணவர்களுக்கெல்லாம் விருந்திட்டாராய்த்து. (பாடல்பத்து) அதுதான் ஸபாதலக்ஷக்ரந்தமாய், புக்கவிடமும் புறப்பட்டவிடமும் தெரியாதேயிருக்கையன்றிக்கே பாடல்பத்தும், பகவத்விஷயத்தில் ருசியுடையாரித்தைப் பாடப்பாருங்கோள். (பாடநும்மிடையித்யாதி) கரும்பு தின்னக் கூலியிறே, பாடுகைதானே ப்ரயோஜநமாகப் போந்திருக்க, அதுக்குமேலே ப்ராப்திப்ரதிபந்தகமான பாபங்கள், "நமக்கு இவ்விடம் ஆஶ்ரயமல்ல" என்று, தன்னடையே விட்டுப்போம். ... ... (௧௦)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

அரு.—பத்தாம்பாட்டு. (தோடித்யாதி) "தோன்றல்" என்றதினர்த்தம் (ப்ரதாநராயுள்ள) என்றது.

"சேவடி" செவ்வையானவடி என்று அருளிச்செய்கிறார் (குணாகுணேத்யாதி). (வளையமாகவைத்து) தரித்து என்றபடி. ... ... (௧௦)

ஜீயர் திருவடிகளே சரணம்.

எழாம்பத்தில் மூன்றாந்திருமொழி முடிந்தது.

---

(௧) கீதை-௧௧-௪௦.

(௨) தி-வாய்-௯-௪-௯.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஏழாம்பத்து நாலாம்திருமொழி

கண்சோரப்ரவேசம்.

வ்யா. —(கண்சோரவெங்குருதி) இது திருமங்கையாழ்வாருடைய (க) நெடுமாற்கடிமை. பாகவத சேஷத்வத்தைச் சொல்லுகிற திருமொழியாய்த்து. பெரியநம்பி, ஜந்ம வ்ருத்தாதிகளால் குறைய நின்றொருவர் திருநாட்டுக்கு நடந்தாராய், அவரை அநுகமநம் பண்ணி, தீர்த்தமாடாதே வந்தெழுந்தருளியிருக்க, இத்தை எம்பெருமானார் கேட்டருளி, பெரியநம்பிபாடே வந்து, "மர்யாதை கிடக்கக் கார்யம் செய்யவேண்டாவோ?" என்ன; (க) "பயிலும் சுடரொளி (உ) *நெடுமாற்கடிமை, கடலோசையோபாதியோ? சிறிது குறையவாகிலும் ஆசரிக்கவேண்டாவோ?" என்றருளிச்செய்தார். பிள்ளை அழகியமணவாளரரையர், கரையேபோகாநிற்க, "உள்ளேமாமதலைப் பிரானைத்திருவடிதொழுதுபோனலோ" என்ன; "ஆர்தான் † திருமங்கையாழ்வாருடைய பசைந்தவளையத்திலே கால்வைக்கவல்லார்" என்றருளிச்செய்தார்.

திருநறையூரிலே புக்கு, நம்பியழகை அநுஸந்தித்து, அங்கு நின்றும் போந்து, திருச்சேறையிலே வந்து, மாமதலைப்பிரானுடைய மௌக்த்யத்தையநுஸந்தித்து, அம்மௌக்த்யத்துக்குப் போலியான க்ருஷ்ணவதாரத்தை அநுஸந்தித்து, அவ்வழியாலே அவதாரங்களெல்லாவற்றையுமநுஸந்தித்து, அவையெல்லாவற்றுக்கு மடியாகத் திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளுகிறபடியை அநுஸந்தித்து, இப்படி அவன் படிகளை அநுஸந்தித்து, (ங) "గుణైర్దాస్యముపాగతః-குணைர்தாஸ்யமுபாகத:" என்று தோற்று எழுதிக்கொடுத்திருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்கள் நமக்கு உத்தேஶ்யரென்று இங்ஙனே பாகவத சேஷத்வத்தை அநுஸந்தித்துப் பேசியநுபவிக்கிறார். இத்தால், அநந்யார்ஹ சேஷத்வத்தைச் சொல்லிற்றாகிறது. அதாகிறது - ததீய சேஷத்வ பர்யந்தமானதிறே. ஒன்றிரண்டுக்ரயம்சென்றால் மீளாதிறே.

(க) தி-வாய்-ங-எ. (உ) தி-வாய்-அ-கo. (ங) ரா-கி-ச-கஉ.

† (பா) திருமங்கையாழ்வார்வசைந்த.

அநு.—கண்சோர வெங்குருதிப்ரவேசம்—கீழ் (க)*கண்ணுதலாளவுணரிலே பாகவதசேஷத்வத்தைஅநுஸந்தித்தாரேயென்ன வருளிச்செய்கிறார் (இதுஇத்யாதி). ஆழ்வார் (உ) *பயிலும்சுடரொளி அருளிச்செய்தாப்போலே, அங்கேயுமநுஸந்தித்தாரேயாகிலும், (ங) "நெடுமாற்கடிமை போலே இங்கேயுமநுஸந்தித்தாரென்று கருத்து. ஆழ்வார்தாம் இருசால்மட்டு அநுஸந்திப்பானென்? இவர்தாமவரைப்போலே இருகால்மட்டு அநுஸந்திப்பானென்? ப்ரமேயபேதம் வேண்டாவோவென்ன வருளிச்செய்கிறார் (பாகவதேத்யாதி). *பயிலும்சுடரொளியில், பாகவதவிஷயத்தில் சேஷித்வாநுஸந்தாநம்பண்ணி, *நெடுமாற்கடிமையில், போக்யத்வாநுஸந்தாநம்பண்ணினவோபாதி, இவரும் கீழே *கண்ணுதலாளவுணரிலே போக்யத்வேந அநுஸந்தித்தாராகையாலே இங்கே சேஷித்வாநுஸந்தாநம் பண்ணுகிறாரென்று கருத்து, *நெடுமாற்கடிமையென்று, இருகால்மட்டு அருளிச்செய்தமாத்ரத்துக்கு த்ருஷ்டாந்தம். பாகவத சேஷத்வமுத்தேஸ்யமென்னுமதுக்கு ஸம்வாதம் (பெரியநம்பி யித்யாதி). (சிறிது குறையவாகிலும்) என்றது-(ச) "அவரெங்கள் குலதெய்வமே" என்று குலதெய்வத்தோடொக்க பூஜிக்கவேண்டியிருக்கும்; ஸ்பர்சமாத்ரமாகிலும் வேண்டாவோவென்கை. இவர்தாம் பாகவத சேஷத்வத்திலே உற்றிருப்பரென்னுமதுக்கு ஜ்ஞாபகமேதென்ன வருளிச்செய்கிறார் (பிள்ளையித்யாதி).

கீழ்த்திருமொழிகளோடு இதுக்கு ஸங்கதிகதநமுகத்தாலே ப்ரமேயத்தை யருளிச்செய்கிறார் (திருநறையூரிலித்யாதி). பலிதார்த்தமருளிச்செய்கிறார் (இத்தாலித்யாதி). ஸ்வரூபப்ரகாசகமான ப்ரணவத்தில் உகாரார்த்தம் சேர்ந்திருக்கிறதென்று கருத்து. ... ... *

மூ.—

கண்சோர வெங்குருதி வந்திழிய வெந்தழல்போல் கூந்தலாளை
மண்சேர முலையுண்ட மாமதலாய் வானவர்தம்கோவே யென்று
விண்சேருமிளந்திங்களகடுரிஞ்சு மணிமாடமல்கு செல்வத் [லாரே.
தண்சேறை யெம்பெருமான் தாள்தொழுவார் காண்மினென்தலைமே

பதம்.	உரை.	பதம்.	உரை.
வெம்	க்ரூரமான பார்வையையுடைய	குருதி	ரக்தமானது
கண்	கண்ணானது	வந்து	வெள்ளமிட்டுக் கொண்டுவந்து
சோர	சுழலமிட்டுத் தளரும்படியாகவும்	இழிய	சரீரத்தில் நின்றும் தரையில் குதிக்கும்படியாகவும்
வெம்	உஷ்ணமான		

(க) உ-சு. (உ) தி-வாய்-ங-எ. (ங) தி-வாய்-அ-கo. (ச) உ-கூ-ச.

வெம்	வெப்பத்தை யுடைத்தான
தழல்போல்	நெருப்புப்போலே சிவந்திருக்கிற
கூந்தலாளை	மயிரையுடைய பூதனையை
மண்சேர	(ப்ரேதமாய்) பூமியிலே விழும்படி
முலைஉண்ட	ஸ்தநபாநம் பண்ணின
மா	அத்யந்தம்
மதலாய்	இளம்பருவத்தை யுடையனானவனே!
வானவர்தம்	நித்யஸூரிகளுக்கு
கோவே	ஸ்வாமியே!
என்று	என்று ஸ்தோத்ரம்பண்ணி,
விண்சேரும்	ஆகாசத்தையடைந்திருக்கிற
இளந்திங்கள்	பாலசந்த்ரனுடைய
அகடு	கீழ்வயிற்றை
உரிஞ்சு	பிளவாநின்ற
மணிமாடம்	ரத்நமயமான க்ருஹங்களாலே
மல்கும்	ஸம்ருத்தமான
செல்வம்	ஸம்பத்தையுடையதாய்
தண்	குளிர்ந்து ஶ்ரமஹரமான
சேறை	திருச்சேறையிலெழுந்தருளியிருக்கிற
எம்பெருமான்	ஸ்வாமியினுடைய
தாள்	திருவடிகளை
தொழுவார்	ஆஶ்ரயிக்குமவர்கள்
என்தலைமேலார் காண்மீன்	என்சிரஸ்ஸில் திருவடிகளை வைத்து உலாவுமவர் காணுங்கோள். (க)

வ்யா.—முதற்பாட்டு. (கண்சோரவித்யாதி) பூதனையானவள், யசோதைப்பிராட்டி வடிவைக்கொடுவந்து கிட்ட, அவளை முடித்தானாய்த்து. க்ரூரமாக நோக்கிக்கொடுவந்த கண்கள்சோர. (வெங்குருதி) முலைப்பால்வழியே உதிரவெள்ளமானது கொழித்திழிய.(வெந்தழல்) ப்ராணன் போனவாறே, ஆக்கனான ஒப்பனையும் போமிறே. நெருப்புப்போலே சிவந்த மயிர்முடியையுடையளான பூதனை பிணமாய் பூமியிலே விழச்செய்தேயும், பின்னையும் முலை யுண்ணும்படி யாய்த்து மௌக்த்யம். (வானவரித்யாதி) பூதனை, தாய்வடிவைக் கொண்டுவந்து முலை கொடுக்க, பேயென்று பாராதே முலையுண்டவன்றானாரென்னில்; நித்யஸூரிகள் பரிய விருக்கிறவனாய்த்து.

ஸ்வர்க்கத்திலே ஸுகப்ரதாநனாய் வர்த்திக்கிற சந்த்ரனுடைய கீழ் வயிற்றைப் போழும்படியான ஓக்கத்தையுடைத்தாய், மணிமயமான மாடங்களால் வந்த நிரவதிக ஸம்பத்தையுடைத்தாயிருக்கிற திருச்சேறையிலேயிருக்கிற ஸ்வாமி. (தாள் தொழுவாரித்யாதி) "திருத்துழாய் போலேயும் கௌஸ்துபம் போலேயும் உம்முடைய ஸ்பர்சம் நமக்கினிதாயிராநின்றது, உம்முடைய தலையைக்கொடுவாரும் நம்மு

டைய காலைவைக்க" என்ன; இங்கு உமக்கொழிபாது, வகுத்தவர்கள் காலுக்கு இடம் போருமித்தனை. ... ... (௧)

அரு.—முதற்பாட்டு. (கண்சோரவித்யாதி) வெந்தழல்போல்கூந்தலாளைப் பிள்ளைகண்டால் அஞ்சு மொழியமுலையுண்ணக்கூடுமோவென்னவருளிச்செய்கிறார் (பூதனை யித்யாதி). மேலில்பதங்களில் "வெம்" என்ற பதத்தை இங்கும் அநுஷங்கித்துத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (க்ரூரமித்யாதி). (ஆக்கனை) ஆக்கப்பட்ட. "மதலை" என்று-பிள்ளையாய், மௌக்த்யம்தோற்ற, "மா" என்றுஅத்தைவிசேஷிக்கைக்குக் கருத்தெங்ஙனென்னவருளிச்செய்கிறார் (நெருப்பித்யாதி).

"உரிஞ்சு" என்றதினர்த்தம்(போழும்படியான)என்றது. மறுபாடுருவும்படியென்கை. "காண்மின்" என்று நிஷ்கர்ஷித்துச் சொல்லுகைக்கு உட்கருத்தையருளிச்செய்கிறார் (திருத்துழாயித்யாதி). "இத்தனை" என்றவநந்தரம், "என்றுசொல்லுவன்கிடீகோள்" என்றுசேஷம். ... ... (௧)

மூ.—

அம்புருவ வரி நெடுங்கணலர்மகளை வரையகலத்தமர்ந்து மல்லல்
கொம்புருவவிளங்கனிமேலிளங்கன்றுகொண்டெறிந்தகூத்தர்போலாம்
வம்பலரும் தண்சோலை வண்சேறை வானுந்து கோயில்மேய [றாரே.
எம்பெருமான் தாள்தொழுவாரெப்பொழுதுமென்மனத்தே யிருக்கின்

பதம்.	உரை.	பதம்.	உரை.
அம்புருவ	அழகியபுருவத்தையும்	எறிந்த	வீசிப்போகட்ட
வரி	ரேகைகளையுடையதாய்	கூத்தர்	நடையழகையுடையராய்,
நெடு	நீண்டிருக்கிற	வம்பு	பரிமளமானது
கண்	கண்களையுமுடையளாய்,	அலரும்	பரம்பாநின்ற
அலர்மகளை	தாமரைப்பூவிலவதரித்தவளான பிராட்டியை	தண்சோலை	குளிர்ந்த சோலைகளையுடைய
வரை	மலைபோன்ற	வண்சேறை	அழகிய திருச்சேறையில்
அகலத்து	திருமார்வில்	வான்உந்து	ஆகாசத்தைத் தள்ளாநின்ற (உயர்த்தியையுடைய)
அமர்ந்து	பொருந்தச்செய்து,		
மல்லல்	தழைத்திருக்கிற	கோயில்	திவ்யாலயத்தில்
கொம்பு	கிளைகளை	மேய	நித்யவாஸம்பண்ணுகின்றவனான
உருவ	வடிவாகவுடைய		
விளங்கனிமேல்	(அஸுராவிஷ்டமான) விளாமரத்தின் பழத்தின்மேலே	எம்பெருமான்தாள் தொழுவார்,	
இளங்கன்றுகொண்டு	இளம்பருவமான வத்ஸாஸுரனைக்குறுந்தடியாகக்கொண்டு	எப்பொழுதும்	ஸர்வகாலமும்
		என்மனத்தே	என் ஹ்ருதயத்திலேயே
		இருக்கின்றார்	வாஸம்செய்கிறார்கள்.

வ்யா. —இரண்டாம்பாட்டு. (அம்புருவவித்யாதி). அழகிய புருவத்தையுடையளாய், செவ்வரியையும், கருவரியையுமுடைத்தாய், ஈஶ்வரனுக்குக் காலமெல்லாமநுபவியா நின்றாலும் உண்டறுக்க வொண்ணாதபடியான பரந்த திருக்கண்களையுடையளாய், தாமரைப் பூவை இருப்பிடமாகவுடையளாயிருக்கிற பிராட்டியை, மலைபோலே யிருக்கிற திருமார்விலேவைத்து. (மல்லல் கொம்புருவவித்யாதி) இப்படி பிராட்டிக்கு இருப்பிடமென்று பாராதே, தழைத்த கொம்புகளை யுடைத்தாயிருக்கிற விளாவாகிற அஸுரனை, கன்றாய் வந்த அஸுரனைக்கொண்டு, இலக்கைக்குறித்து எறிகைக்காக இட்ட நாலடியும் நடைச்சக்ரவத்துப் பிடிக்கவேண்டும்படியா யிருந்தாய்த்து. மல்லல் - பெருமை.

(வம்பலருமித்யாதி) நித்யவஸந்தமாய், ஶ்ரமஹரமானபொழிலை யுடைத்தாயிருக்கிற திருச்சேறையிலே, ஸ்பர்த்தையாலே ஆகாசத்தைத் தள்ளுகிறாப்போலேயிருக்கிற கோயிலிலே வந்து நித்யவாஸம் பண்ணுகிறவனுடைய திருவடிகளைத் தொழுவார். (எப்பொழுதுமென் மனத்தேயிருக்கின்றாரே) (௧) "𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌵𑍍𑌯𑌃 - நிதித்யாஸிதவ்ய:" என்கிற விஷயத்துக்கு இடங்காண்கிறிலேன். ... ... (௨)

அரு. —இரண்டாம்பாட்டு. (அம்புருவவித்யாதி) தலைமேலே அவர்களாகிலும், உம்முடையநெஞ்சு, பகவத்விஷயத்தையன்றிச்சிந்தியாதென்னாநின்றீரே, அங்கே அவனே புகுந்தாலோவென்ன; அங்குமவனுக்கு இடம் காணேனென்கிறாரென்று ஸங்கதி.

"அமர்ந்து" என்றதை அமர்த்திஎன்றாக்கி யருளிச்செய்கிறார் (அழகிய வித்யாதி). "எப்பொழுதும்" என்றதுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (நிதித்யாஸிதவ்ய இத்யாதி). ... ... (௨)

மூ. —

மீதோடிவாளெயிறுமின்னிலக முன்விலகுமுருவினளைக்
காதோடு கொடி மூக்கன்றுடனறுத்த கைத்தலத்தா வென்று நின்று
தாதோடு வண்டலம்பும் தண்சேறையெம்பெருமான் தாளையேத்திப்
போதோடு புனல்தூவும்புண்ணியரே விண்ணவரில் பொலிகின்றாரே.

---

(௧) ப்ருஹ-௪-௬-௫.

பதம்.	உரை.
மீதுஓடி	ஊர்த்வமுகமாகவளர்ந்து
வாள்	ஒளியை யுடைத்தாயிருக்கிற
எயிறு	கோரைப்பல்லானது
மின் இலக	மின்னல்போலே ப்ரகாசியாநிற்க,
முன்	எதிரில்(நிற்கப்போகாமல்அங்கு)நின்றும்
விலகும்	ஒதுங்கிப் போகவேண்டும்படியான
உருவினளை	(பயங்கர) ரூபத்தையுடைய சூர்ப்பணகையை
காதோடு	செவியுடன்கூட
கொடிமூக்கு	கொடிபோன்ற நாஸிகையை
அன்று	அந்தராமாவதாரத்தில்
உடன்	அந்த க்ஷணத்திலேயே
அறுத்த	சேதித்துவிட்ட
கைத்தலத்தா	திருக்கைகளையுடையவனே!
என்று	என்று இவ்வண்ணமாக,
நின்று	ஒருபடிப்பட்டுநின்று,
தாதோடு	பூந்தாதுகளோடே (கூடியிருக்கிற)
வண்டு	வண்டுகளானவை
அலம்பும்	சப்தியாநின்ற
தண்சேறைஎம்பெருமான்	
தாளை	திருவடிகளை
ஏத்தி	ஸ்தோத்ரம் பண்ணி,
போதோடு	புஷ்பங்களோடேகூட
புனல்	ஜலத்தை
தூவும்	பரிமாறுநின்ற
புண்ணியர்	பாக்யசாலிகள்
விண்ணவரில்	நித்யஸூரிகளிற்காட்டிலும்
பொலிகின்றார்	ஸம்ருத்தராகிறார்கள் (அதிசயித்திருக்கிறார்கள்). (௩)

வ்யா. —மூன்றாம்பாட்டு. (மீதோடியித்யாதி) மேலெங்கும் பரந்து, ஒளியையுடைத்தாயிருக்கிற எயிறானது ஒளிவிட. (மின்னிலக) மின்போலேவிளங்க. (முன்விலகும்) மின்னின்எதிர் விழிக்கவொண்ணாதாப்போலே துணுக்கென்னவேண்டும்படியான வடிவையுடையவளை, அன்றிக்கே, (மீதித்யாதி) மேலேபரந்து, ஒளியையுடைய எயிறானது மின்போலே விளங்க. (முன்விலகும்) முன்னே ஸஞ்சரிக்கிற வடிவையுடையவளை என்றுமாம். (காதோடு கொடிமூக்கு) பிராட்டியோடு போலியாகப் ‡பண்ணிக்கொடுவந்த அவயவங்களைப்போக்கின திருக்கைகளையுடையவனே! (க) "𑌰𑌾𑌮𑌸𑍍𑌯 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍋 𑌬𑌾𑌹𑍁𑌃- ராமஸ்ய தக்ஷிணோ பாஹு:" என்னக்கடவதிறே.

(தாதோடித்யாதி) தாதோடே வண்டுகளானவை மதுபானம் பண்ணி அலையாநின்றுள்ள திருச்சேறையிலே எழுந்தருளியிருக்

(க) ரா-ஆர-௩௪-௧௫. ‡ (பா) பேணிக்கொண்டுவந்த.

ஒறவன் திருவடிகளை ஏத்தி. (போதோடு புனல்தூவும்புண்ணியரே) புஷ்பங்களோடேகூட ஜலத்தைக் கொண்டு ஆஶ்ரயிக்கிற பாக்யாதிகரே. (௧) * சூட்டுநன்மாலைகள் தூயனவேந்தி ஆஶ்ரயிக்கிற நித்யஸூரிகளில் ஸம்ருத்தராகிறார்- அங்கேயிருந்து ஆஶ்ரயிக்கிறவர்கள், இங்கேயிருந்தபடியே ஆஶ்ரயிக்கிறவர்களோடு ஒவ்வாரிறே. ... (௨)

அநு.—மூன்றாம்பாட்டு. (மீதோடியித்யாதி) ஆழ்வீர்! நீரிவ்விபூதியிலிருக்கும் ஶ்ரீவைஷ்ணவர்களை உமக்கு சிரஸா வாஹ்யராகவும், மநஸா த்யேயராகவும் அருளிச்செய்யாநின்றீர்; ப்ரகருதிமண்டலத்திலிருப்பார் அத்தனை ஶ்லாக்யரோ? அஸ்ப்ருஷ்டஸம்ஸாரகந்த(ர்ஞ)ராஞரன்றோ உத்தேஶ்யர் என்ன வருளிச்செய்கிறாரென்று ஸங்கதி.

“முன்விலகும்” என்றதுக்கு முன் நிற்கவொண்ணாதே விலகவேண்டும்படியான வடிவையுடையவளென்றும், முன்னே ஸஞ்சரிக்கிற வடிவையுடையவளென்றும் இரண்டர்த்த மருளிச்செய்கிறார் (மின்னித்யாதி). முற்பட்டயோஜனையில், விரூபையாய்வருகையாலே பிற்காலிக்கவேண்டும்படியான வடிவுடையவளென்று அவளுடைய ஸ்வாபாவிக வேஷத்தைச் சொன்னாராய், இரண்டாம்யோஜனையில், காமரூபிணியாகையாலே அபிரூபையாய் ஏறிட்டுக்கொண்ட வடிவையுடையவளென்றாராகையால் இத்தைப்பற்ற வருளிச்செய்கிறார் (பிராட்டியித்யாதி). இளையபெருமாளன்றோ மூக்கரிந்ததென்ன வருளிச்செய்கிறார் (ராமஸ்ய இத்யாதி).

(அறையாநின்றுள்ள) சப்தியாநின்றுள்ள. ... ... (௩)

மூ.—

தேராளும் வாளரக்கன்தென்னிலங்கை வெஞ்சமத்துப்பொன்றிவீழப்
போராளும்சிலையதனால்பொருகணைகள்போக்குவித்தாயென்றுநாளும்
தாராளும் வரைமார்பன் தண்சேறை யெம்பெருமானும்பராளும்
பேராளன்பேரோதும்பெரியோரை யொருகாலும்பிரிகிலேனே. (௪)

பதம்.	உரை.	பதம்.	உரை.
தேர் ஆளும்	தேர்களை நடத்தவல்லனாய்	வெம் சமத்து	க்ரூரமானயுத்தத்தில்
வாள்	வாளாயுதத்தை யுடையனான	பொன்றிவீழ	சிதிலமாய் அழிந்து போம்படியாக,
அரக்கன்	ராவணாஸுரனுடைய	போர் ஆளும்	யுத்தத்தை நடத்த வல்ல
தென் இலங்கை	ஶ்லாக்யமான லங்கையானது	சிலையதனால்	தநுஸ்ஸினாலே

---

(௧) தி-வி-௨௧.

கரு-அ

பொரு	(தானே) சண்டை செய்யாநின்ற
கணைகள்	பாணங்களை
போக்குவித்தாய்	ப்ரயோகித்தவனே!
என்று	என்றுசொல்லி,
நாளும்	தினந்தோறும்,
தார் ஆளும்	திருத்துழாய் மாலையையுடைய
வரைமார்வன்	மலைபோன்றதிருமார்வையுடையனாய்,
உம்பர் ஆளும்	மேலுலகங்களைப்பரிபாலகம் பண்ணுகிற
பேராளன்	பெருமையுடைய (ஸர்வாதிக)னான தண்சேறை எம்பெருமான்
பேர்	திருநாமங்களை
ஓதும்	கீர்த்தியாநின்ற
பெரியோரை	மஹாத்மாக்களை
ஒருகாலும்	ஒருக்ஷணமும்
பிரிகிலேன்	பிரியமாட்டேன். (ச)

வ்யா.—நாலாம்பாட்டு. (தேராளுமித்யாதி) ஆனை குதிரை காலாளுக்கு அவதியில்லாமையாலே, தேருக்கேயாய்த்து மெய்க்காட்டுப்பட்டோலை கொள்ளுவது. (வாளரக்கன்) அவையும் மிகையாம்படி, ப்ரதிபக்ஷநிரஸநத்துக்குக் கையில் வாளேயமையும். (தென்னிலங்கை) தேவதைகளுக்கு ப்ரவேசிக்க வரிதான ஊரைப் பூசலிலே சிதிலமாய்ப்போம்படி பண்ணி. (போராளுமித்யாதி) யுத்தத்தை நடத்தாநின்றுள்ள வில்லாலே (பொருகணைகள் போக்குவித்தாய்) (க) "दीप्तपावकसङ्काशैः - தீப்தபாவகஸங்காசை:" என்கிறபடியே, தொடுத்துவிடுகிறபோது அம்பாய், எதிரிகள்மேலே நெருப்பை எரித்துக்கொடுபோய் தைக்கிற அம்பை நடத்தினவனே! என்று.

(தாராளுமித்யாதி) (உ) "தாழுமருவிபோல் தார்கிடப்பச்சூழும்" என்கிறபடியே, ஜகத்ரக்ஷணத்துக்குத் தனிமாலையிட்டுக்கொண்டிருக்கிறவன். (தண்சேறை) ரக்ஷணத்துக்குப் பாங்கான கலவிருக்கையையுடையவன். (உம்பரித்யாதி) உபரிதந லோகங்களை நடத்துகிற ஸர்வாதிகன். (பேரோதும்) வாயாலே திருநாமம்சொல்லாவிடில் தரியாத ஸ்வபாவத்தையுடையராய்க்கொண்டு ஸங்கீர்த்தநம் பண்ணுகிற பெரியோருண்டு - அவன்றனுமகப்பட (ங) "महात्मानः - மஹாத்மாநः" என்னும்படியிருக்கிற மஹாப்ரபாவர்களை. (ஒருகாலும் பிரிகிலேனே) க்ஷணகாலம் பிரிய, காலமெல்லாமிடைவிடாமலநுபவிக்கலாமென்னிலும் பிரிய க்ஷமனல்லேன். ... ...(ச)

அரு.— நாலாம்பாட்டு. (தேராளுமித்யாதி) கீழ்ப்பாட்டில் (ச) "விண்ணுளாரிலும் சீரியர்" என்று அநுஸந்தித்தார்; அந்த ஏற்றத்தால் இவர்களி

(க) ரா-யு-கசு-உஉ. (உ) ங-திரு-ருகூ. (ங) கீ-கூ-கங. (ச) தி-வி-எகூ.

டத்தில் தமக்குப் பிறந்த பரமபக்தியைப் பேசுகிறாரென்று ஸங்கதி.

“ஒதன்” என்றது-ஶ்ரைஷ்ட்யமாய் அருளிச்செய்கிறார் (தேவதைகளுக்கித்யாதி).

(தாழுமருவி) தாழ்ந்துவருமருவி. “ஓதும்” என்ற வர்த்தமானார்த்தமருளிச்செய்கிறார் (வாயாலேயித்யாதி). ... ... (௪)

மூ. —

வந்திக்கும் மற்றவர்க்கும் மாசுடம்பில் வல்லமணர்தமக்குமல்லேன்
முந்திச்சென்றரியுருவாயிரணியனை முரணழித்த முதல்வற்கல்லால்
சந்தப்பூ மலர்ச்சோலைத் தண்சேறை யெம்பெருமான்தாளை நாளும்
சிந்திப்பார்க்கென் னுள்ளம் தேனூறி யெப்பொழுதும் தித்திக்குமே,

பதம்.	உரை.	பதம்:	உரை.
அரிஉருவாய்	ந்ருஸிம்ஹமாய்க்கொண்டு	மற்றவர்க்கும்	ஜைநவ்யதிரிக்தரான பௌத்தர்க்கும்
முந்தி	முன்னே	அல்லேன்	கூட்டனல்லேன்;
சென்று	போய்	சந்தப்பூ	சந்தநபுஷ்பங்களான
இரணியனை	ஹிரண்யாஸுரனுடைய	மலர்	விகஸியாநின்றவை
முரண்	பலத்தை	சோலை	பொழில்கள்சூழ்ந்த
அழித்த	அழியச்செய்த	தண்சேறைஎம்பெருமான்தாளை,	
முதல்வற்குஅல்லால்	ஜகத்காரணபூதனுக்கொழிய,	நாளும்	தினந்தோறும்
வல்	வலிந்து வாதம் பண்ணுகின்றவர்களாய்	சிந்திப்பார்க்கு	த்யாநம் பண்ணுமவர்கள் விஷயத்தில்
உடம்பில்	சரீரத்தில்	என் உள்ளம்	என்மநஸ்ஸானது
மாசு	அழுக்கையுடையவர்களான	தேனூறி	தேனிலே நனைந்து (தேன்வெள்ளமிடாநின்றுகொண்டு)
அமணர்தமக்கும்	ஜைநர்க்கும்,	எப்பொழுதும்	ஸர்வகாலமும்
வந்திக்கும்	தங்கள்தேவதைகளை வந்தநம் பண்ணுகின்ற	தித்திக்கும்	மதுரமாயிராநின்றது.

வ்யா. — அஞ்சாம்பாட்டு, (வந்திக்குமித்யாதி) பௌத்தர்களுக்கும், “வந்தே” என்றாப்போலே சொல்லுவர்கள்போலே காணும். (மாசுடம்பில்) அழுக்குக்கழற்றாதிருக்குமிதுதானே தர்மமென்றிருக்கிற அமணர்க்கும் கூட்டல்லேன். (முந்தியித்யாதி) சிறுக்கனுடைய ப்ரதிஜ்ஞாஸமகாலத்திலே முன்னேசென்று, ஹிரண்யனுடைய மிடுக்கைப்போக்கின ஜகத்காரணபூதனான ஸர்வேஶ்வரனுக்கல்லது, பாஹ்யகுத்ருஷ்டிகளுக்குக் கூட்டல்லேன்.

(சந்தவித்யாதி) நீர்தாம் இதறிந்தபடி யெங்ஙனேயென்ன; ஸ்ரீவைஷ்ணவர்களென்றவாறே, என்னுடைய ஹ்ருதயத்துக்கு இனிதாயிரா நின்றதே; அப்படியிருக்கும்போது, நான் அவனுக்கு அநந்யார்ஹனேனாகவேண்டாவோ? பாஹ்ய குத்ருஷ்டிகள் பக்கலிலே ருசியுடையராயிருப்பார்க்கு, பாகவதர்கள் பக்கலிலே ருசியுண்டாமோ? (சந்தப்பூவித்யாதி) சந்தநப்பூமலரையுடைத்தான சோலையையுடைத்தாய், ஸ்ரமஹரமாயிருக்கிற திருச்சேறையில் நாயனாருடைய திருவடிகளை, நாள்தோறும் போக(்ய) ரூபமாக அநுஸந்திப்பார்க்கு, என்னுடைய ஹ்ருதயமானது தேனூறி எப்பொழுது மினிதாகாநின்றது; இது - வெறுமனேயோ?. ... ...(௫)

அரு.—அஞ்சாம்பாட்டு. (வந்திக்குமித்யாதி) "ஒருகாலும் பிரிகிலேன்" என்று மிகவுமாதரியாநின்றீர்; பாஹ்ய குத்ருஷ்டிகளும் சிலஸித்தாந்தங்களைப் பண்ணிக்கொண்டு, ஸ்வமதநிஷ்டரைக் கொண்டாடிக்கொண்டு இராநின்றார்களே என்ன; நீங்கள் நரஸிம்ஹத்தின் வாசியறிந்து விஸ்வஸித்து, ததீயரே உத்தேஸ்யரென்கிற ப்ரதிபத்தியைப் பண்ணுதிருந்திகோளாகில், நான் அங்ஙனிருப்பனல்லேனென்று - ஸ்வவ்யாவ்ருத்தியைப் பேசுகிறாரென்று ஸங்கதி.

அமணர்க்கு மற்றவர்-பௌத்தரென்று விவக்ஷித்து, அவர்கள் தங்கள் தேவதைகளை வந்திக்கிறாராகையாலே இப்படி விசேஷிக்கைக்கு உட்கருத்தை யருளிச்செய்கிறார் (வந்தேயித்யாதி). "தமக்கும்" என்ற சகாரம், அநுக்தஸமுச்சயமாக்கி யருளிச்செய்கிறார் (குத்ருஷ்.டி) என்று.

நாங்களும் நரஸிம்ஹாவதாராபதாந ஸ்ரவணம் பண்ணியிருந்தாலும், எங்களுக்கு அவனையல்லது அறியாமை பிறந்ததில்லை, நீர் இவ்விசேஷமறிந்தது எவ்வழியாலே என்னும் ப்ரஸ்நத்தை அநுவதித்துக்கொண்டு தாத்பர்யத்தை யருளிச்செய்கிறார் (நீர்தாமித்யாதி). ... ... (௬)

மூ.—

பண்டேனமாயுலகை யன்றிடந்த பண்பாளாவென்று நின்று [ன்
தொண்டானேன் திருவடியே துணையல்லால் துணையிலேன்சொல்லுகின்றே
வண்டேர்ந்து மலர்ப்புறவில் வண்சேறை யெம்பெருமானடியார்தம்மைக்
கண்டேனுக்கிதுகாணீரென்நெஞ்சும் கண்ணிணையும் களிக்குமாறே. (௬)

பதம்.	உரை.	பதம்.	உரை.
பண்டு	பூர்வம் [கொண்டு,	உலகை	அண்டபித்தியிலொட்டிக்கிடந்தஜகத்தை
ஏனமாய்	மஹா வராஹமாய்க்		
அன்று	அப்போது	இடந்த	குத்தியெடுத்த

பண்பாளா	ஸுசீலனே!
என்றுநின்று	என்று ஸ்த்திரசித்தனாய்ச்சொல்லி
தொண்டு ஆனேன்	(தேவரீர்க்கு) அடிமைப்பட்டேன்,
திருவடியே	(தேவரீர்) திருவடிகளே
துணை	(எனக்கு) ரக்ஷகம்,
அல்லால்	அதையொழிய
துணை இலேன்	வேறு ரக்ஷகவஸ்துவை யுடையனல்லேன்;
சொல்லுகின்றேன்	(இதை) உறுதியாகச் சொல்லுகிறேன்.
வண்டு	வண்டுகளை
ஏந்தும்	தரியாநின்ற
மலர்	பூக்களையுடைத்தான
புறவில்	பர்யந்த ப்ரதேசங்களையுடைய
வண்	அழகியதான
சேறை எம்பெருமான்	
அடியார்தம்மை	அடியார்களை
கண்டேனுக்கு	பார்த்தஎனக்கு,
இது	இவ்விதமாக
கண் இணையும்	இரண்டுகண்களும்
என்நெஞ்சும்	என்மநஸ்ஸும்
களிக்கும்ஆறு	ஸந்தோஷிக்கும் ப்ரகாரத்தை
காணீர்	பாருங்கள். (௬)

வ்யா. —ஆறும்பாட்டு. (பண்டேனமாயித்யாதி) முன்பு வராஹ கல்பத்தினுடைய ஆதியிலே மஹாவராஹமாய், அண்டபித்தியிலே சேர்ந்த பூமியை எடுத்துக்கொண்டு ஏறின நீர்மையையுடையவனே! என்று மாறாதே சொல்லி, அந்நீர்மையிலே தோற்று, தேவர் திருவடிகளுக்கு அடிமையானேன். (திருவடியேதுணை) தேவர் திருவடிகளே எனக்குத்தஞ்சம்; வேறோருபாஶ்ரயத்தை யுடையேனல்லேன். (சொல்லுகின்றேன்) இது சபதம்பண்ணித்தரலாம்.

இப்படி நீர் அத்யவஸித்துச்சொல்லுகிறது என்கொண்டென்ன; (வண்டேந்துமித்யாதி) வண்டுகள் மாறாத பசுமலரையுடைத்தான பர்யந்தத்தையுடைத்தான வண்சேறை யெம்பெருமானடியார்தம்மைக் கண்டமாத்ரத்திலே கண்டிகோளே என்னுடைய நெஞ்சும் கண்ணிணையும் களிக்கிறபடி; ஆனபின்பு, அத்யவஸிக்கையில் ஒருகுறையுண்டோ? ... ... (௬)

அரு.— ஆறும்பாட்டு. (பண்டித்யாதி) ஶ்ரீவைஷ்ணவர்களை நினைத்த ட்டிலே தேவர்திருவுள்ளம் எப்பொழுதும் தேனூறித் தித்திக்கைக்கு மூலமென்னென்ன; எம்பெருமானுடைய ஆபத்ரக்ஷணாதி சேஷ்டிதங்களிலகப்பட்டு, அவன் திருவடியே துணையென்றிருந்தபடியால் என்கிறாரென்று ஸங்கதி.

“ஏனம்பண்டு” என்றந்வயித்து, க்ரமேண அர்த்தமருளிச்செய்கிறார் (முன்பித்யாதி). “சொல்லுகின்றேன்” என்றதுக்கு, இப்படி எம்பெருமா

னோடே சொல்லுகின்றேனென்று அர்த்தம் திருவுள்ளம்பற்றி, ஶ்ரோதாக்களைக் குறித்தருளிச்செய்யும் பா(ஞா)வத்தை யருளிச்செய்கிறார்(இது வித்யாதி). "ஆம்" என்றவநந்தரம், "ஏ" என்று சேஷம். இவ்வளவால், ஏழ்ப்பாட்டில் எப்பொழுதும் தேனாறுகைக்கு மூலம் சொல்லிற்றாய்த்து.

மூ.—

பைவிரியும் வரியரவில் படுகடலுள் துயிலமர்ந்த பண்பாவென்றும்
மைவிரியும்மணிவரைபோல்மாயவனேயென்றென்றும்வண்டார்நீலம்
செய்விரியும்தண்சேறை யெம்பெருமான்திருவடியைச் சிந்தித்தேற்கென்
ஐயறிவுங்கொண்டானுக்காளானார்க்காளாமென்னன்புதானே. (௭)

பதம்.	உரை.
பை	படங்கள்
விரியும்	விகஸியாநின்ற
வரி	மச்சங்களையுடைய
அரவில்	திருவனந்தாழ்வான் மேலே,
படு	ரத்நங்களுண்டாகாநின்ற
கடலுள்	திருப்பாற்கடலிலே
துயில்அமர்ந்த	கண்வளராநின்ற
பண்பா	ஸௌலபனே!
என்றும்	என்றுசொல்லியும்,
மைவிரியும்	இருள்பரம்பாநின்ற
மணிவரை போல்	இந்த்ரநீலமணிமயமான பர்வதம்போன்ற திருமேனியையுடைய
மாயவனே	ஆஸ்சர்யபூதனே!
என்றும்	என்றுசொல்லியும்,
என்று	இப்படி பலகாலும் சொல்லி,
வண்டு	வண்டுகள்
ஆர்	நிறைந்திருக்கிற
நீலம்	கருநெய்தல்கள்
செய்	கழனிகளிலே
விரியும்	மலராநின்ற
தண்சேறை	யெம்பெருமான்திருவடியை
சிந்தித்தேற்கு	த்யாநம்பண்ணாநின்ற
என்	என்னுடைய
ஐ அறியும்	பஞ்சேந்த்ரியங்களாலுண்டான ஐந்துவிதமான ஜ்ஞாநங்களையும்
கொண்டானுக்கு	தன்விஷயமாக்கிக்கொண்டவனுக்கு
ஆள் ஆனார்க்கு	அடிமைப்பட்ட பாகவதர்விஷயத்தில்
என் அன்பு	என்னுடைய ப்ரீதியானது
ஆள் ஆகும்	அடிமைப்படும். (௭)

வ்யா. —ஏழாம்பாட்டு. (பைவிரியுமித்யாதி) "பை" என்று ப (ஃ) ணம். நிரந்தரபகவதநுபவத்தாலே விகஸிதமான பணங்களையுடையனாய், ஸர்வேஶ்வரனுக்கு வைத்த கண் மாறாதே கண்டுகொண்டிருக்கவேண்டும்படி தர்ஶநீயமான வரிகளையுடையனாய், சைத்யஸௌரப்ய மார்த்தவங்களை ப்ரக்ருதியாகவுடையனாயிருக்கிற திருவனந்தாழ்வான்மேலே. (படுகடலுள்) படுகடலிலே-ரத்நாதிகள்படுகிறகடலிலே

யென்னுதல்; ஆழத்தையுடைத்தான கடலிலேயென்னுதல். (துயிலமர்ந்தபண்பாவென்றும்)வீசிவில்லிட்டெழுப்பினுமெழுப்பவொண்ணாதபடி கண்வளர்ந்தருளுகிற நீர்மையை யுடையவனே! என்றும். (மைவிரியுமித்யாதி) மைபரம்பாநின்றுள்ள அஞ்ஜநகிரிபோலே யிருக்கிற வடிவையுடைய ஆஶ்சர்யபூதனே! யென்றும்.

(வண்டாரித்யாதி) வண்டுகள் மாறாத நீலபானது செய்களில், பரப்புமாற மலர்ந்து கிடக்குமாய்த்து. (தண்சேறையெம்பெருமான்) ஶ்ரமஹரமான திருச்சேறையிலே நிற்கிற நாயனாருடைய ஶ்லாக்யமான வடிவழகை அநுஸந்தித்தேற்கு. (என்னையறிவுங்கொண்டானுக்கு) ஶ்ரோத்ராதிகளைந்தாலுமுண்டான வெளிச்சிறப்பைத் தன்பக்கலிலே ஆக்கிக்கொண்டான். அது தனக்குத் தான் விஷயமானானென்றபடி. ஐயறிவுங்கொண்டானுக்காளான வளவிலே நிற்கிறதில்லை; அவனுக்காளானாரளவிலே ஆளாகாநின்றது என்னன்பானது. (௭)

அரு.— ஏழாம்பாட்டு. (பைவிரியித்யாதி) பாகவதரைக் கண்டமாத்ரத்திலே களிக்கும்படியிருக்கையாலே அவனுக்குத் தாம் தொண்டானமையை அநுஸந்தித்தார் கீழ்ப்பாட்டில்; இதில், அவனுக்குத்தொண்டானத்தாலுண்டான ப்ரீதி, பிடறி பிடித்துத்தள்ள, ஆளானார்க்காளானமையை அநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி. அதாவது, தண்சேறையெம்பெருமான் திருவடியைச் சிந்திக்கை - அவர்களுக்கு முகமலர்த்திக் குறுப்பாயிருக்கை. இங்ஙனன்றாகில், அவனையறிவுங் கொண்டிருக்க, வேறு ஆளாகை கூடாதிறே.

(வீசிவில்விடுகை)ஸன்றித்தணியிடுகை. (அநுஸந்தித்தேற்கு) என்றவநந்தரம், "இழுக்கு என்?" என்று மூல வ்யாக்யாநங்களில் கூட்டிக்கொள்வது. ... ... (௭)

மூ.—

உண்ணாது வெங்கூற்றமோவாத பாவங்கள் சேரா மேலை [னைப்
விண்ணோரும் மண்ணோரும் வந்திறைஞ்சும் மென்தளிர்போலடியினா
பண்ணாரவண்டியம்பும் பைம்பொழில்சூழ் தண்சேறையம்மான்றன்னைக்
கண்ணாரக்கண்டுருகி கையாரத் தொழுவாரைக் கருதுங்காலே. (௮)

பதம்.	உரை.	பதம்.	உரை.
மேலை	ப்ரக்ருதிமண்டலத்துக்கு மேலேயுள்ள	மண்ணோரும்	பூமியோடு கூடிய லீலாவிபூதியிலுள்ளவர்களும்
விண்ணோரும்	பரமபதவாஸிகளான நித்ய ஸூரிகளும்	வந்து	கிட்டி [ன
		இறைஞ்சும்	ஆஶ்ரயிக்கும்படியா

மெல்	ம்ருதுவான
தளிர்போல்	பல்லவம் போன்ற (ஸுகுமாரமான)
அடியிணையை	திருவடிகளை யுடையனாய்,
பண்ஆர	ராகம்பொருந்தியிருக்கும்படி
வண்டு	வண்டுகளானவை
இயம்பும்	பாடாநின்ற
பைபொழில்	பரந்தசோலைகளாலே
சூழ்	வ்யாப்தமான
தண்சேறை அம்மான்தன்னை,	
கண்ஆர	கண்கள்நிறையும்படி
கண்டு	ஸேவித்து
உருகி	மனம்நெகிழ்ந்து
கைஆர	கைகள் நிறையும்படி (கைகளின் குறை தீரும்படி)
தொழுவாரை	ஆஶ்ரயிக்கும் பாகவதர்களை
கருதுங்கால்	நினைக்குமளவில், (அவர்களை),
வெம்	க்ரூரமான செயலையுடைய
கூற்றம்	யமதேவதையானது,
உண்ணாது	புஜியாது (உபத்ரவித்து நசிப்பிக்கமாட்டாது);
ஓவாத	இடைவிடாமல் பாதி(ஃ)க்கிற
பாவங்கள்	பாபங்களானவை
சேரா	(தங்களுடைய ப(ஃ)லாநுபவம்செய்விக்கைக்காக) கிட்டமாட்டா. (அ)

வ்யா· —எட்டாம்பாட்டு. (உண்ணாதித்யாதி) பாகவதர்களை நெஞ்சாலேநினைக்க, ம்ருத்யுவால்வரும் பயம் போம், பாபங்களுடைய நலிவால்வரும் பயத்துக்கு மஞ்சவேண்டாவென்கிறது. (உண்ணாது வெங்கூற்றம்) க்ரூரமான செயலையுடைய ம்ருத்யு, தன்னுடைய ஆஸ்யத்திலே விழுந்தாலும் கிழிழிச்ச பயப்படும். (ஓவாதபாவங்கள் சேரா) ஒருக்ஷணகாலமும்இடைவிடாதே நெருங்கப்பண்ணின பாபங்கள், ப(ஃ) லாநுபவத்துக்காக வந்து கிட்டா. இவை இப்படிவந்து கிட்டாமைக்கடி யென்னென்னில்; உபயவிபூதியுக்தனான ஸர்வேஶ்வரனைத் தங்கள்ஸர்வகரணங்களாலு மநுபவிக்குமவர்கள் பக்கலிலே யன்றோ இவர்கள் ப்ரவணராய்த்து; உபயவிபூதியிலுள்ளாரும் வந்து ஆஶ்ரயிக்கிற ஸுகுமாரமான திருவடிகளையுடையவனை.

(பண்ணாரவித்யாதி) பண் பேராதபடி, வண்டுகள் த்வநியாநின்றுள்ள பரந்தபொழிலையுடைய தண்சேறையம்மான்தன்னை, கண்களினுடைய விடாய் தீரக்கண்டு, அந்த ப்ரீதியாலே இறைஞ்சி. உருகி, என்றுபாடமாகவுமாம். கைகளின் விடாய் தீரும்படி தொழுவாரை நினைக்குங்கால், உண்ணாதுவெங்கூற்றம், ஓவாதபாவங்கள்சேரா. (அ)

அரு. —எட்டாம்பாட்டு. (உண்ணாதித்யாதி) பாகவதமுகவிகாஸமே ப்ரயோஜநமாகஎம்பெருமானை நினைத்திருக்கவொட்டுமோ? விரோதிகனத்திருக்கும் தேசமன்றோவென்ன வருளிச்செய்கிறார் என்று ஸங்கதி திருவுள்ளம்பற்றி தொகுத்துத் தாத்பர்யமருளிச் செய்கிறார் (பாகவதர்களித்யாதி).

ஒட்டாது என்னாதே, "உண்ணாது" என்றதுக்குக் கருத்தருளிச்செய்கிறார் (தன்னுடையவித்யாதி). "ஓவாத" என்றுவைத்து "சேரா" என்கிறதென்னென்ன வருளிச்செய்கிறார் (ஒருவித்யாதி). ஶ்ரோத்ருசங்காநுவாத பூர்வகமாக வ்யாக்க்யாதா,தாமேபரிஹரிக்கிறவழியாலே தாத்பர்யமருளிச் செய்கிறார் (இவையித்யாதி). வாக்யார்த்தமருளிச்செய்கிறார் (உபயவிபூதியிலுள்ளாருமித்யாதி).

"ஆர" என்றதின் தாத்பர்யம் (பேராத) என்றது; பொருந்தியிருக்கிறபடி. ... ... (௮)

மூ.—

கள்ளத்தேன்பொய்யகத்தேனாதலால்போதொருகால்கவலையென்னும்
வெள்ளத்தேற்கென்கொலோ விளைவயலுள் கருநீலங்களைஞர் தாளால்
தள்ளத்தேன் மணநாறும் தண்சேறை யெம்பெருமான்தாளை நாளும்
உள்ளத்தே வைப்பாருக்கிது காணீரென்னுள்ளமுருகுமாறே. (௯)

பதம்.	உரை.
விளை	பயிரையுடைத்தான
வயலுள்	கழனிகளில் (முளைத்திருக்கிற)
கருநீலம்	கரிநெய்தலை
களைஞர்	களைபிடுங்குகிற உழவர்
தாளால்	(தங்கள்) கால்களாலே
தள்ள	ஒதுக்கித்தள்ள,
தேன்	(அதில் நின்றுமொழுகின)தேனினுடைய
மணம்நாறும்	பரிமளம் வீசாநின்ற
தண்சேறை	எம்பெருமான்தாளை
நாளும்	ப்ரதிதிநமும்
உள்ளத்தே	மநஸ்ஸிலே
வைப்பாருக்கு	இருத்தி த்யாநம் பண்ணும் பாகவதர் விஷயத்தில்
என் உள்ளம்	என் மநஸ்ஸு
உருகுமாறு	(ஸ்நேஹித்து) சிதிலமாகும்ப்ரகாரத்தை
காணீர்	பாருங்கள்,
இது	இந்த மஹாபா (ப்) லமானது
கள்ளத்தேன்	ஆத்மாபஹாரியாகிற சோரனும்
பொய்யகத்தேன் ஆதலால்	வஞ்சகமான நெஞ்சையுடையனுமானபடியால்
போது ஒருகால்	ஒரு நொடிப்பொழுதும் (இடைவிடாமல்)
கவலைஎன்னும்	து:க்கமென்கிற
வெள்ளத்தேற்கு	மஹா ஸமுத்ரத்தில் அழுந்திக்கிடக்கிற எனக்கு
என்கொலோ	எவ்விதமாகக்கிடைத்ததோ? அறிகிலேன்

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (கள்ளத்தேனித்யாதி) எனக்கு இது தானுண்டானபடி எங்ஙனே என்கிறார்.

(கள்ளத்தேன்) (க) "கிந்தேந நக்ருதம் பாபம்-சோரேணாத்மாபஹாரிணா" என்கிறபடியே, அநாதிகாலம் ஆத்மாபஹாரம் பண்ணிப் போந்தேன், அதுதன்னையும் தெரியாதபடி (உ) "உன்னையும் வஞ்சிக்கும்" என்கிறபடியே, என்னந்தராத்மா அறிகிறதென்று மறைத்துப் போந்தேன். இப்படி செய்கையாலே ஒருக்ஷணமுமிடைவிடாதே, மறப்பாகிற ஸாகரத்திலே அழுந்திப்போந்தேன், துஃக்கஸாகரமென்றுஞ்சொல்லுவர்கள். (என்கொலோ) இப்படியிருக்கிறஎனக்கு இப்பேறுண்டானபடி எங்ஙனேயோ! ஆத்மஸமர்பணம் பண்ணி மெய்யான ஸ்நேஹத்தையுடையராய், அவனை அநவரதபா ([illegible]) வனை பண்ணிக்கொண்டு போருவார் பெறும்பேற்றை, நான்பெற்றபடி எங்ஙனேயோ!

(விளைவயலித்யாதி) விளைவயலிலே களையாக முளைத்த நீலத்தைக் க்ர்ஷகரானவர்கள் காலாலேதள்ள, அவ்வசைவாலே நிரம்பியிருக்கிற தேன் வெள்ளமிட்டு, அதினுடையபரிமளமேயாயிருக்கிற தண்சேறையெம்பெருமான் திருவடிகளை என்று மொக்கஹ்ருதயத்திலே வைக்குமவர்களுக்கு, என்னுடையஹ்ருதயம் அழிகிறபடிகண்டிகோளே; இப்பேறு எனக்கு வந்தபடிஎங்ஙனேயோ! (கூ)

அரு.—ஒன்பதாம்பாட்டு. (கள்ளத்தேனித்யாதி) "உண்ணாது" இத்யாதிப்படியே, ஸஜாதீயதாபுத்தி பண்ணி அபசாரப்படும்படியாயிருக்கிற இப்பாகவதவிஷயத்திலே உமக்கு இப்படிநிரவதிகமான ப்ரேமம்விளைந்ததுக்கு அடி சொல்லிக்காணீரென்ன; அடி தேடித்தம்மிடத்திலொன்றும் காணாமே தாமே ஆஸ்சர்யப்படுகிறாரென்றுஸங்கதி. அன்றிக்கே, பாகவதர்களை நினைக்க, விரோதிகழியுமென்றுநின்றீர் நீர், நினைக்கவொட்டாதேயிருக்கும் விரோதி போகாமையன்றோ நாங்களிப்படி பாகவதரை நினைத்தால் நெஞ்சுருகாமலிருப்பது; அது உமக்குப் போய் இதுண்டானவழியென்னென்ன; "எம்பெருமானுண்டாக்கினான்" என்னில்; எங்களுக்கு உண்டாக்கவொண்ணாதோ வென்பர்கள், என்றாலுண்டாய்த்து என்னமாட்டார் ஸத்ருசஹேதுஉண்டாகக் காண்கிறிலராகையாலே, எங்ஙனேயோவென்று பூர்வவ்ருத்தத்தையும் சொல்லிக்கொண்டு விஸ்மயப்படுகிறாரென்றாகவுமாம்; இந்தஸங்கதிகளை ஸ்ப்புரிப்பிக்கிறார் (எனக்கித்யாதி).

(க) பார.உத்யோ-சுக-ஙச: (உ) தி-வாய்-ரு-க-ங.

...அநாதிகாலம் இப்படியிருந்தீரேயாகிலும், இப்போது இசைந்து கவி பாடினீரேயென்ன; "கள்ளத்தேன் பொய்யகத்தேன்" என்கிறாரென்று விவக்ஷித்து, அந்த அபஹாரத்தை மெய்யாக்கிவிட்டேனென்று அர்த்தமாயருளிச்செய்கிறார் (அதுதன்னையித்யாதி). "கவலை" என்னதுக்கு, மறப்பென்று அர்த்தமருளிச்செய்து, அர்த்தாந்தரமருளிச்செய்கிறார் (துஃக்கேத்யாதி). ... ... (௯)

மூ.—

பூமாண்சேர்கருங்குழலார்போல்நடந்துவயல்நின்றபெடையோடன்ன
தேமாவினின்னிழலில் கண்டுயிலும் தண்சேறையம்மான்தன்னை ம்]
வாமான்றேர்பரகாலன் கலிகன்றி யொலிமாலைகொண்டு தொண்டீர்
தூமாண் சேர் பொன்னடிமேல் சூட்டுமின் நும் துணைக்கையால்
தொழுது நின்றே.(௧௦)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பதம்.	உரை.
அன்னம்	ஹம்ஸமானது,
பூ	புஷ்பங்களிலுண்டான
மாண்	அழகோடு
சேர்	கூடியிருக்கிற
கருங்குழலார்போல்	இருண்டமயிர் முடியையுடைய ஸ்த்ரீகளைப்போலே
வயல் நின்ற	கழனிகளிலே ஸஞ்சரிக்கிற
பெடையோடும்	பேடையோடுகூட
நடந்து	உலாவி (பின்பு)
தேமாவின்	தேமாமரத்தினுடைய
இன்னிழலில்	(இனிய குளிர்ந்த) நிழலில்
கண் துயிலும்	உறங்காநின்ற
தண்சேறை அம்மான் தன்னை	குளிர்ந்த (ஶ்ரமஹரமான திருச்சேறையிலெம்பெருமான் விஷயமாக,
வா	(ஓடி) வாராநின்ற
மா	குதிரைகள் கட்டின

பதம்.	உரை.
தேர்	தேரையுடையராய்க்கொண்டு
பரகாலன்	சத்ருக்களைவெல்லுமவரான
கலிகன்றி	ஆழ்வார்
ஒலி	அருளிச்செய்த
மாலை	சப்தஸந்தர்ப்பரூபமான இப்பத்துப்பாசுரத்தையும்
கொண்டு	ஸம்பாதித்து (அநுஸந்தித்து)க்கொண்டு
தொண்டீர்	ஓ பக்தஜநங்களே!
தூ	பரிசுத்தமாய்
மாண்சேர்	அழகுபொருந்தியதாய்
பொன்	ஸ்ப்ருஹணீயமான
அடிமேல்	(அவன்) திருவடிகள் மேலே,
நும்	உங்களுடைய
துணைகையால்	ஒன்றோடொன்று சேர்ந்த (அஞ்ஜலிபந்தமான) கைகளினால்
தொழுது நின்று	ஆஶ்ரயித்துக் கொண்டு இருந்து
சூட்டுமின்	சூட்டுங்கள் (தரியுங்கள்.)

வ்யா. —பத்தாம்பாட்டு. (பூமாண்சேரித்யாதி) பூக்களையுடைத்தாகையால்வந்த அழகையுடைத்தாய், இருட்சியையுடைத்தானகுழலையுடைய ஸ்த்ரீகள்போலே நடக்கவேணுமென்றுகணிசித்த அன்னங்களானவை, தனியேநடக்கில் வாயாதென்று பார்த்து, வயலில்நின்ற பெடையோடொக்க நடக்குமாய்த்து. அப்படி செய்தவிடத்திலும் வாயாமையாலே லஜ்ஜித்து, தேமாவினுடைய இனியநிழலிலே போய் உறங்காநிற்கும். (வாமான்றேரித்யாதி) தாவிவருகிற மாவையுடைய தேரை, அர்ஜுநனுடைய தேரைநடத்தி ப்ரதிபக்ஷத்தை யழிக்கும் க்ருஷ்ணனைப்போலே, நடத்தி சத்ருக்களை அழியச்செய்கிற ஆழ்வார், ஒலியையுடைத்தாம்படி அருளிச்செய்த தமிழ்த் தொடையைக்கொண்டு, பகவத்விஷயத்தில் ருசியுடையீர், ஹேயப்ரத்யநீகமாய், தர்சநீயமாயிருந்துள்ள திருவடிகளிலே சூட்டுங்கோள். அதுசெய்யும்போது, அஞ்ஜலியைப் பண்ணுநின்ற கையையுடையராய்க்கொண்டு தொழுது இம்மாலையைச் சூட்டுங்கோள். ... ... (க௦)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

அரு' —பத்தாம்பாட்டு. (பூமாணித்யாதி) மாண்பு - அழகு. காயாம் பூவால்வந்த அழகும், அதுக்குப் பரபாக([illegible])மான கருங்குழலுமாய் கேசவனுக்குத் தகுதியான ஸ்த்ரீகளையிட்டுத் திருப்பதிக்குச் சிறப்புசொல்லுகை மாமதலைப்பிரானை க்ருஷ்ணனுக்கு உகப்பாகையாலே அன்னங்களை லக்ஷ ([illegible]) கரித்ததுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (பூக்களையித்யாதி). (வாயாமையாலே) என்றது - பும்ஸ்த்வத்தாலமர்ந்த கமநமே பின்னாட் [illegible] லவென்கை. "மா"என்று-குதிரையாய், "மாத்தேர்"என்கிறத்தை (மெல்லொற்றாக்கி "மான்றேர்" என்றாய், குந்தமென்றத்தை "குன்றம்" என்கிறாப்போபாதி "மான்றேர்" என்று கிடக்கிறதென்று திருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிறார் (தாவியித்யாதி). தேரால்பரகாலனுண்மையை ஸத்ருஷ்டாந்தமருளிச்செய்கிறார் (அர்ஜுநேத்யாதி). ... ... (க௦)

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஏழாம்பத்தில் நாலாந்திருமொழி முடிந்தது.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஏழாம்பத்து அஞ்சாந்திருமொழி

தந்தைகால் ப்ரவேசம்.

வ்யா. —கீழே பாகவதசேஷத்வத்தை யநுஸந்தித்தார், அதுபகவத்விஷயத்துக்குஉத்தம்ப(ஷ்)கமாயிருக்குமிறே, ஆகையாலே, அபேக்ஷைபிறந்தது; பிறந்த அபேக்ஷைதான், "வரில்பொகடேன், கெடில் தேடேன்" என்று ஆறியிருக்குமளவன்றிக்கே, "இப்போதே பெற வேணும்" என்னுமளவாயிருந்தது; அப்போதேபெறாமையால்பிறந்த ஆற்றாமை, ஒருபிராட்டிதசையைப்பிறப்பிக்க, அத்தாலே அவனோடே காதாசித்கமாக ஸம்ச்லேஷத்தை யுடையளாயிருப்பாளொருத்தி, நம்மோடே நித்யஸம்ச்லேஷத்தைப் பிறப்பிக்கைக்காகதிருவழுந்தூரிலே வந்து ஸந்நிஹிதனானானென்று ‡ (அவள் பாசுரத்தாலே அங்குத்தைப் படிகளை) அநுஸந்திக்கிறார். ... ... *

அநு. — தந்தை காலின்ப்ரவேசம். — கீழ்த்திருமொழியில் பாகவத சேஷத்வத்தில் எல்லையளவும் போகையாலே, அவர்களுக்கு உகப்பாக பகவத்விஷயத்தில் அறிவுமிழந்திருந்தபடி சொல்லிற்று, அத்தாலே மீளவும் பகவத்விஷயத்திலே போந்தாரென்று ஸங்கதி யருளிச்செய்கிறார் (கீழேயித்யாதி). (பிராட்டிதசையைப் பிறப்பிக்க) என்றது-(க) "மாலைப் புகுந்து" (உ) "என்னைம் புலனும்" என்கிற பாட்டுக்களைப்பற்ற. ... *

மூ. —தந்தைகாலில் பெருவிலங்கு தாளவிழ நல்லிருட்கண்வந்த
எந்தை பெருமானார் மருவிநின்ற வூர்போலும்
முந்தி வானம் மழைபொழியும் மூவாவுருவில் மறையாளர்
அந்தி மூன்றுமனலோம்பும் அணியார் வீதி யழுந்தூரே. (க)

பதக்.	உரை.	பத.	உரை.
வானம்	மேகமானது	உருவில்	வடிவையுடையராய்
முந்தி	(யாகத்துக்கு) முன்னமே (அதின் ப(ஷ்)லமாக) [யாக	மறையாளர்	வேதங்களுக்குநிர்வாஹகரான ப்ராஹ்மணோத்தமர்
மழைபொழியும்	மழைபெய்யும்படியாக,	அந்தி மூன்றும்	மூன்று ஸந்த்யாகாலங்களிலும்
மூவா	கிழத்தனமில்லாத யௌவநப் பருவமுடைய	அனல்	அக்நியிலே [ற
		ஓம்பும்	ஹோமம் பண்ணுகின்

---

‡ குண்டலிதம் ப்ராசீநகோசேஷநாஸ்தி.

(க) பெ-தி-ச-ரு-எ. (உ) பெ-தி-எ-தி-க.

அணி ஆர்	அழகு மிக்க [ன
வீதி	வீதிகளையுடைத்தா
அழுந்தூர்	திருவழுந்தூரென்னும் திவ்யதேசமானது,
தந்தை	தகப்பனான வஸுதேவனுடைய
காலில்	காலிலே
பெருவிலங்கு	நெடுநாளாகப் பூட்டப்பட்ட விலங்கினுடைய
தாள்	பூட்டானது
அவிழ	தானேவிட்டுப்போம்படியாக,
நள்	நெருங்கியிருக்கிற
இருள் கண்	அந்தகாரத்திலே
வந்த	க்ஷீராப்தியில் நின்றும்வந்து திருவவதரித்தருளினராய்
எந்தை	நான் என்தகப்பன் என்குலத்துக்கு
பெருமானார்	ஸ்வாமியானவர்
மருவி	விருப்பத்துடன்
நின்ற	நித்யவாஸம் பண்ணுநின்ற
ஊர்போலும்	பரமபதம்போலே நித்யாதரணீயமாயிருந்தது. (௧)

வ்யா. —முதற்பாட்டு. (தந்தை காலித்யாதி) ஆபத்திலேவந்து உதவி, அவற்றைப்போக்கும் ஸ்வபாவனாய்த்து. ஶ்ரீவஸுதேவர் காலிலுண்டான பெருவிலங்குண்டு - எட்டுகர்ப்ப ([illegible]) த்துக்கு அவ்வருகே இட்ட விலங்கு; அது தன்னடையே விட்டுப்போம்படியாக. இவன் வந்தவதரித்த வநந்தரம், திருவாய்ப்பாடியேறக்கொண்டுபோக வல்லாரானாரிறே. (நல்லிருட்கண்) கம்ஸன் காவலாகவைத்த துஷ்ப்ரக்ருதிகள் கண்படாதபடி செறிந்த இருளிலேவந்து தோன்றின என்னுடைய குலநாதனானவர். (வந்த) ஶ்ரீவஸுதேவர்க்கன்றியே, தமக்கோதான் வந்து உதவிற்று. (மருவிநின்ற) அவ்வவதாரம்போலே தீர்த்தம் ப்ரஸாதியாதே, அந்தவஸுதேவர் போல்வாரெல்லார்க்கும் உதவுகைக்காக வந்து நித்யவாஸம்-பண்ணுகிற தேசம்போலும். அவன்நின்றதேசமிறே உத்தேஶ்யமாவது. ப்ராப்யபூதனான அவன் வந்துநிற்கையாலே, நமக்கு ப்ராப்யபூமிதான் போலேயிருந்தது என்று ஆதராதிசயம்தோற்றச்சொல்லுகிறது. இதுவே அல்லாதபாட்டுக்களிலவற்றுக்கும் பொருள்.

(முந்திவானமித்யாதி) வானமானது முந்தி மழையைப்பொழியுமாய்த்து. இவர்களுடைய அபிஸந்தியொழியவேயும், அவாந்தரபலங்கள் முற்பட்டிருக்குமாய்த்து. (மூவாவுருவில் மறையாளர்) அங்குள்ளாரடங்கலும் தருணாக்நிஹோத்ரிகளாய்த்து இருப்பது. ஶாஸ்த்ரோக்தமான க்ரமத்திலே உபநயநாதி ஸம்ஸ்காரமேதுடங்கி, ப்ரு

ப்தமான காலத்திலே யாகாதிகளைப்பண்ணியிருப்பார் சிலராய்த்து. (அந்தி மூன்று மனலோம்பும்) ஒரு ப(ஃ)லாபிஸந்தியைப் பண்ணிச் செய்கிறார்களன்றே; நித்யாநுஷ்டாநத்துக்குக் கொள்ளுவதொரு ப(ஃ)லமில்லையிறே; ஆகையாலே இதுவே யாத்ரையாய், தர்ஸநீயமான வீதியையுடைத்தான தேசம். ... ... (சு)

அரு. —முதற்பாட்டு. (தந்தையித்யாதி) விலங்குக்குப்பெருமை நாளினுடைய நெடுமையைப்பற்ற என்றருளிச்செய்கிறார் (ஸ்ரீவஸுதேவரித்யாதி). பிறந்தபின்பும், விலங்கோடே யிருந்தாரோவென்ன வருளிச்செய்கிறார் (இவன் வந்தித்யாதி). அவனிருக்கிறவனைச் சொல்லுவானென்னென்ன வருளிச்செய்கிறார் (அவனித்யாதி). ஆனால் ‘‘போலும்’’ என்பானென்னென்ன வருளிச்செய்கிறார் (ப்ராப்யேத்யாதி).

அனலோம்புகைக்கு மழைபொழிகையோ ப(ஃ) லமென்னவருளிச்செய்கிறார் (இவர்களுடைய வித்யாதி). ‘‘முந்தி’’ என்று விசேஷித்தத்தாலே பலித்தவர்த்தமென்னவுமாம். மூவாமை-பால்யமாய், அப்படிப்பட்ட பருவமுடையவரென்று விசேஷித்ததுக்குத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் அங்குள்ளாரித்யாதி). அந்திகளிலே ப்ராதர்மத்ய ஸாயம் ஸந்த்யைகளில் மூன்றிலும், ஓம்பும்-ஹோமம்பண்ணா நிற்பர்களென்று சப்தார்த்தமாய், தாத்பர்யமருளிச் செய்கிறார் (ஒருப(ஃ)லாபிஸந்தியை யித்யாதி). ‘‘யாத்ரையாய்’’ என்றவநந்தரம், ‘‘இருப்பார்கள்’’ என்றுசேஷம். .. ... (க)

மூ. —பாரித்தெழுந்த படைமன்னர் தம்மை மாளப் பாரதத்துத்
தேரில் பாகனாயூர்ந்த தேவதேவனூர்போலும்
நீரில் பணைத்த நெடு வாளைக்கஞ்சிப்போன குருகினங்கள்
ஆரல் கவுளோடருகணையு மணியார் வயல்சூழழுந்தூரே. (உ)

பதம்.	உரை.
நீரில்	ஜலத்தில்
பணைத்த	ஸந்தோஷாதிசயத்தினால் அபிவ்ருத்த (அபிவ்ருத்த) மாகாநின்ற (துள்ளி விளையாடாநின்ற)
நெடு	பெரிய
வாளைக்கு	மத்ஸ்யத்துக்கு
அஞ்சி	பயந்து
போன	ஓடிப்போன
குருகு இனங்கள்	குருகென்றும் பறவைக்கணங்கள்
ஆரல்	ஆரலென்னும் சிறுமீனை
கவுளோடு	கதுப்பிலேகொண்டு
அருகு	(பின்னும்) அப்பெரிய மீனின் ஸமீபத்திலே
அணையும்	வந்து சேராநின்றதாய்
அணி ஆர்	அழகுமிக்கிருந்துள்ள
வயல் சூழ்	கழனிகளாலே சூழப்பட்டதான
அழுந்தூர்,	

பாரித்து	(க்ருஷ்ணனை ஜயிக்க வேணுமென்று) மனோரதித்து
எழுந்த	உத்யோகித்து வந்த
படை	ஆயுதங்களை யுடையரான
மன்னர்தம்மை	துர்யோதநாதி ராஜாக்களை
மாள	நசிப்பிக்கைக்காக
பாரதத்து	பார்தயுத்தத்திலே
தேரில்	(அர்ஜுநனுடைய) ரதத்திலே
பாகனாய்	ஸாரதியாய் நின்று
ஊர்ந்த	தேரை நடத்தின
தேவதேவன்	த்யஸூரிகளில் தலைவனான ஸர்வேஶ்வரனுடைய
ஊர்போலும்.	

(உ)

வ்யா. —இரண்டாம்பாட்டு. (பாரித்தித்யாதி) "இன்று ஸாரதியைப் பிடிக்கக்கடவோம்"என்றுஒருப்பட்டுவந்த. வெறுங்கையோடே க்ருஹந்திலே போய்ப்புக்கவாறே பொய்யாஸநமிட்டு வஞ்சிக்கத் தேடினார்களிறே. (படைமன்னர் தம்மைமாள) ஸாயுதரான ராஜாக்கள் ஆயுதத்தைப் பிடித்துக்கொண்டு முடிந்து தேர்காலிலே துகையுண்டுகிடக்க. (தம்மைமாள) அவகர்ள் தாங்கள் கோலிவந்தத்தை, அவர்கள் தங்களோடேபோக்கி. (தேரில் ாகனாயூர்ந்த) தேரிலே ரதியாய்நின்று ஊர்ந்தானாகில், அத்தால்வரும் விஜயமும் தம்தலையிலே கிடக்குமிறே. ப்ரதிபக்ஷமழியவும் வேணும், அர்ஜுநன் தலையிலே விஜயம் கிடக்கவும்வேணுமென்று, அதுக்காக ஸாரதியாய்க்கொண்டு தேரைநடத்தினானாய்த்து. ஆழ்வானுக்கு மூலம்வாசித்துப் போந்தார் சிலரிலே, ஒருவருக்கு க்ரந்தம்பார்க்கவேண்டி, ஆழ்வானோடே திருமுடிக்குறையிலே யிருந்து பாராநிற்கச்செய்தே, அரயன்வந்தானாய், அவ்வளவிலே, அவர்கையில் க்ரந்தத்தை, ஆழ்வான் தான் வாங்கிப் படித்துக் கொண்டிருந்தானாம். (தேவதேவனார்போலும்) தன்னை யாராக நினைத்தான்; அஸ்ப்ருஷ்ட ஸம்ஸாரகந்த ([illegible]) ர்க்கும் அவ்வருகாயிருக்கிறதான், ஸம்ஸாரிகளிலே ஒருவனுக்குத் தாழ்வுசெய்வதே.

(நீரில்பணைத்த நெடுவாளைக்கஞ்சிப்போன குருகினங்கள்) குருகுகளானவை, திரள் திரளாக மத்ஸ்ய([illegible]) க்ரஹணத்துக்காக நீர்நிலங்களில்வந்து இழிந்து, தனக்கு வாய்க்கடங்குவது ஒன்றைக்ரஹித்து, தன்கதுப்பிலே யிருக்கச்செய்தே, வேறேயொரு பெரிய மத்ஸ்யம்யாத்ருச்சிகமாகத் தன்செருக்குக்குப் போக்குவிட்டு, மேலே எழப்பாயும், அத்தால் வந்தஹர்ஷத்தாலே பணைத்துக்கொடுக்கும், அத்தைக் கண்ட இது தன்சாபலத்தாலே "ஆமிஷம்" என்று கணிசித்து வந்து

கிட்டும், இதின் வடிவில் பெருமையைக்கண்டு, "இது நீர்நிலையிலே கிடக்கிறதொன்று, பறக்கவும்மாட்டாதே யிருக்கிறதொன்று" என்றறியமாட்டாதே வெருவியோடினது, பின்னையு மிதனருகே வந்து கிட்டா நிற்கும். (அணியார் வயல்சூழழுந்தூரே) பாரத ஸமரத்தில் பீஷ்மாதிகள் " அதிரதர் மஹாரதர் என்றிங்ஙனே ஆண்பிள்ளைகளாகப் பேர்பெற்று ஜீவித்திருந்தோம், இப்போதாகப் பூசல் கோழைகளாக வொண்ணாது" என்று ஸாரதிபக்கலிலே வந்துகிட்டுவது, "தேர்காலிலே உழக்குண்டுபோக வொண்ணாது" என்று அகலுவதாய்க்கொண்டு அவர்கள் படுவுற்றைப் படாநின்றன வாய்த்துக்குருகினங்களும். (௨)

அரு.—இரண்டாம்பாட்டு.(பாரித்தித்யாதி) கீழ்ப்பாட்டில், வந்தவதரித்தமையை அநுஸந்தித்தார்; அவ்வவதாரத்துக்கு ப்ரதாநப்ரயோஜநமான பூபா(ஃபூஃபா)ராவதரணப்ரகாரத்தை அநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

ரதியையொழிய, ஸாரதியைபோ எதிர்ப்பதென்ன வருளிச் செய்கிறார் (வெறுங்கையித்யாதி). தூதுவந்தபோது அப்படி பாரித்துவர, பூசல் தலையில் சொல்லவேணுமோவென்று கருத்து. தன் விஜயத்தைப் பிறர் தலையில் ஏறிட்டபடி கண்டவிடமுண்டோ வென்ன வருளிச் செய்கிறார் (ஆழ்வானித்யாதி). (மூலம் வாசித்து) படிப்பித்து என்றபடி.

ஆரல் - சிறுமீனாய், அத்தை கவுளோடேகதுப்பிலே கொண்டு என்று சப்தார்த்தமாய், தாத்பர்யமருளிச்செய்கிறார் (குருகித்யாதி). திருப்பதியை இப்படி வர்ணித்தது த்ருஷ்டாந்ததயா என்னுமிடம் தோற்ற உட்கருத்தை யருளிச்செய்கிறார் (பாரதேத்யாதி). (௨)

மூ. —

செம்பொன் மதிள்சூழ்தென்னிலங்கைக்கிறைவன்சிரங்களையிரண்டும்
உம்பர் வாளிக்கிலக்காக வுதிர்த்த வுரவோனூர்போலும்
கொம்பிலார்ந்த மாதவிமேல் கோதிமேய்ந்த வண்டினங்கள்
அம்பராவும்கண் மடவாரைம்பாலணையு மழுந்தூரே. (௩)

பதம்.	உரை.	பதம்.	உரை.
கொம்பில்	கிளைகளிலே	அம்புஅராவும்	பாணம்போலே (காமிகளை) பாதி (ஃபாதி) யாநின்ற
ஆர்ந்த	நிறைந்திருக்கிற	கண்	கண்களையுடையரான
மாதவிமேல்	குருக்கத்தி மரத்தின் மேலே [ளைக்)கிறி	மடவார்	ஸ்த்ரீகளுடைய
கோதி	மூக்காலே (தளிர்க	ஐம்பால்	ஐந்து குணங்களையுடைய மயிர் முடிகளில்
மேய்ந்த	இரைதேடாநின்ற		
வண்டு இனங்கள்	வண்டுக்கூட்டங்கள்,		

அணையும்	(சென்று)சேராநின்ற அழுந்தூர்,
செம்பொன்	சிவந்த பொன்போலே அழகியதான
மதிள்சூழ்	ப்ராகாரங்களாலே சூழப்பட்டு
தென்	தர்சநீயமாயிருக்கிற
இலங்கைக்கு	லங்காநகரத்துக்கு
இறைவன்	ஸ்வாமியான ராவணனுடைய
ஐஇரண்டு சிரங்களையும்	பத்துத் தலைகளையும்
உம்பர்வாளிக்கு	ப்ரஹ்மாஸ்த்ரத்துக்கு
இலக்காக	லக்ஷ்யமாகப்பண்ணி
உதிர்த்த	அறுத்து விழவிட்ட
உரவோன்	பலிஷ்ட்டரான சக்ரவர்த்தித் திருமகனுடைய

ஊர்போலும். (௩)

வ்யா.—மூன்றாம்பாட்டு. (செம்பொனித்யாதி) "அரணையுடைத்தான ஊரிலேயன்றோ விருக்கிறது, அவ்வூருக்குக் கடவோம் நாமன்றோ" என்று துர்மாநம் பண்ணியிருக்கிற ராவணனுடைய தலைகள் பத்தையும், ப்ரஹ்மாஸ்த்ரத்துக்கிலக்காக்கி உதிர்த்துப் பொகட்ட உரவோனூர்போலும். இந்த்ராதிகளுடைய வஜ்ரத்துக்கு அழியாத பையல்தலைகளை, மனிச்சுக்கு ஏகாந்தமான மிடுக்காலே அழித்தானாய்த்து.

(கொம்பிலார்ந்த வித்யாதி) கொம்புகள் செறிந்திருந்துள்ள குருக்கத்தியின்மேலே. (கோதிமேய்ந்த வண்டினங்கள்) தன்செருக்காலே தளிரையும் பூக்களையும் கோதி, அவற்றில் நின்றும் மதுபாநம் பண்ணின வண்டினங்கள், "அதிற்காட்டில் போக்யதையும் இருட்சியுமாயிருப்பதொரு ப்ரதேசம் தேடிப்போய், இராத்தங்கவேணும்" என்று பார்த்து, (அம்பராவுமித்யாதி) அம்பை இளைப்பிக்கிற கண்ணையுடையராய், ஆத்மகுணோபேதைகளாயிருந்துள்ள ஸ்த்ரீகளுடைய மயிர் முடியிலேபோய் சேராநிற்கும். "ஐம்பால்" என்று அஞ்சு வகையாக மயிர்முடியைச் சொல்லுகிறது. ... ... (௩)

அ௩—மூன்றாம்பாட்டு. (செம்பொனித்யாதி) கீழ்ப்பாட்டில், மஹாபாரத வ்ருத்தாந்தத்தை அநுஸந்தித்தாராய், அதிலும் ஶ்ரேஷ்ட்டமான ஶ்ரீராமாயணத்தில் வ்ருத்தாந்தத்தை அநுஸந்திக்கிறார் இதில் என்று ஸங்கதி; அன்றிக்கே, ஸாரதியாய்வென்றபடி சொன்னவளவிலே ரதியாய் வென்றபடியும் ஸ்ம்ருதமாய் அருளிச்செய்கிறாரென்று ஸங்கதியாகவுமாம்.

‡ "உம்பர்வாளிக்கு" என்று விசேஷித்ததுக்குக்கருத்தென்னென்னவருளிச் செய்கிறார். (இந்த்ராதித்யாதி). குண்ட்டிதமான என்றத்தைக்

---

‡ இங்கு மூன்றுபங்க்திகள் அநந்விதங்கள். கோசாந்தரங்களைக்கொண்டு பரிஷ்கரிக்கவேணும்.

கொண்டே என்றது ரதத்தின் கார்யமென்று கருத்து.

மேலுக்கவதாரிகை(அகிலித்யாதி).(ஐந்துவகை)என்றது-கந்த(गन्ध)ம், மது, மார்தவம், ஸ்நிக்ததை, இருட்சி, ஆகிற ஐந்துவகையென்கை. (௫)

மூ.—

வெள்ளத்துள்ளோராலிலைமேல் மேவி யடியேன் மனம் புகுந்தென்
உள்ளத்துள்ளும் கண்ணுள்ளும் நின்றார் நின்ற ஊர்போலும்
புள்ளுப் பிள்ளைக்கிரைதேடிப் போன காதற்பெடையோடும்
அள்ளற்செறுவில் கயல் நாடுமணியார் வயல் சூழழுந்தூரே. (௪)

பதம்.	உரை.	பதம்.	உரை.
காதல்,	ப்ரேமம் மிக்கிருந்துள்ள	ஆலிலைமேல்	வடதளத்தின்மேலே
பெடையோடும்	பேடையோடு கூட (ச்சேர்ந்து)	மேவி	பொருந்தியிருந்து, (பின்பு)
பிள்ளைக்கு	குட்டிக்காக	அடியேன்	தாஸபூதனான என்னுடைய
இரைதேடி	ஆஹாரத்தை ஆராய்ந்துகொண்டு	மனம்	மாநஸ்ஸிலே
		புகுந்து	ப்ரவேசித்து
போன	போகாநின்ற	என் உள்ளத்துள்ளும்	என் ஹ்ருதயத்திலும்
புள்ளு	பக்ஷியானது,		
அள்ளல்	சேற்றையுடைத்தான	கண்ணுள்ளும்	கண்களிலும் (விஷயமாய்க்கொண்டு)
செறுவில்	விளைநிலங்களிலே		
கயல்	மீன்களை	நின்றார்	(எப்போதும்) எழுந்தருளியிருக்குமவர்
நாடும்	தேடாநின்ற		
அணிஆர்வயல்சூழ் அழுந்தூர்,			
வெள்ளத்துள்	ப்ரளயார்ணவத்தில்	நின்ற	நித்யவாஸம் பண்ணாநின்ற
ஓர்	ஒரு	ஊர்போலும்.	

வ்யா.—நாலாம்பாட்டு. (வெள்ளத்துள்ளித்யாதி) ப்ரளயத்திலே ஒருபவனான ஆலந்தளிரிலே கண்வளர்ந்தருளி. (அடியேன் மனம் புகுந்து) "இவன் ப்ரளயத்திலே கண்வளர்ந்தருளாநின்றான், பரிகைக்கு ஒரு யசோதாதிகளுமின்றிக்கே இராநின்றது, என்வருகிறதோ?" என்று ஆராய்ச்சி பிறக்கும்படி பண்ணி, அதுண்டானவாறே. அதுவே ஹேதுவாக ஹ்ருதயத்திலே வந்துபுகுந்து, "மாநஸாநுபவமேயாய் கண்ணுக்கு விஷயமாகப் பெற்றிலோம்" என்கிற விஷாதம் கிடவாதபடி கண்ணுக்கும் தானே விஷயமாய், ஹ்ருதயமும் வேறொன்றிலே போகாதபடி தானே விஷயமானவன். (நின்றவூர்போலும்)

கண்ணுக்கு விஷயமாக்கிக்கொண்டு வந்துநிற்கிற தேசம்போலும்.

(புள்ளுப்பிள்ளைக்கித்யாதி) குட்டிக்கு இரைதேடிப்போகிற புள்ளானது, தனியேபோகாதே காதலையிட்டு நிரூபிக்க வேண்டும்பெடையோடேபோய். (அள்ளல் செறுவில் கயல்நாடும்) சேறென்றால் இழுய்க்கக்கடவவை, அங்குள்ள போக்யதையின் மிகுதியாலே அத்தை மதியாதே ஸஞ்சரியாநிற்கும். இத்தால் சொல்லிற்றாய்த்து - ப்ரளயமென்றுபாராதே ஜகத்ரக்ஷணத்துக்காக மஹாவராஹமானது இறங்குமாபோலே யிராநின்றதாய்த்து. ... ... (௪)

அரு.— நாலாம்பாட்டு. (வெள்ளத்துள்ளித்யாதி) கீழ்ப்பாட்டிலே "உரவோன்" என்று மிடுக்கை அநுஸந்தித்தார்; இது பருவம் நிரம்பி விஶ்வாமித்ராதிகளாலே ஸுசிக்ஷித வித்யாஸம்பத்தையு முடைத்தாயிருந்ததென்று திருவுள்ளம்பற்றி, முக்த([illegible]) சிசுவாய் ப்ரளயத்தில் இளந்தளிரிலிருந்த மிடுக்கைச்சிந்திக்க, அந்த பாவநா ப்ரகர்ஷத்தாலே, ப்ரத்யக்ஷ ஸமாநாகாரமா யநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

அள்ளல்-சேறுடைத்தான. செறுவில்-விளைநிலத்தில் என்று சப்தார்த்தமாய் தாத்பர்யமருளிச் செய்கிறார் (சேறென்றாலித்யாதி). (௪)

மூ.—பகலுமிரவுந்தானேயாய்ப் பாரும் விண்ணும் தானேயாய்
நிகரில் சுடராயிருளாகி நின்றார் நின்ற வூர்போலும்
துகிலின் கொடியும் தேர்த்துகளும் துன்னி மாதர் கூந்தல்வாய்
அகிலின் புகையால் முகிலேய்க்குமணியார் வீதி யழுந்தூரே (௫)

பதம்.	உரை.	பதம்.	உரை.
துகிலின்	வஸ்த்ரங்களினால் கட்டப்பட்டதாய்	முகிலேய்க்கும்	மேகத்தோடொத்திருக்கிற
துன்னி	நெருங்கி யிருந்துள்ள		
கொடியும்	த்வஜங்களும்	அணியார்வீதி அழுந்தூர்,	
தேர்	தேர்நடத்தும்போதுண்டான	பகலும்	பகலையும்
		இரவும்	ராத்ரியையும்
துகளும்	தூ(தூ)ளியும் (இவற்றோடு கூடின)	தானேயாய்	தனக்கு விபூதியாகவுடையனாய்,
மாதர்	ஸ்த்ரீகளுடைய	பாரும்.	பூமியையும்
கூந்தல்வாய்	மயிர்முடிகளிலே (பரிமளத்துக்காக இடாநின்ற)	விண்ணும்	ஆகாசத்தையும்
		தானேயாய்	தனக்கு விபூதியாகவுடையனாய்,
அகிலின் புகையால்	அகில்கட்டையின் தூபத்தினால்	நிகர் இல்	ஒப்பில்லாத

சுடராய்	தேஜஃபதார்த்தங்களையும்	ஆகி	விபூதியாக வுடையனாய்க்கொண்டு
இருள்	அந்தகாரத்தையும்	நின்றார் நின்ற வூர்போலும். (௫)	

வ்யா. —அஞ்சாம்பாட்டு. (பகலுமிரவு மித்யாதி) "பகல்" என்றும், "இரவு" என்றும் சொல்லப்படுகிற இவற்றைத்தனக்கு விபூதியாகவுடையனாய். (பாரும் விண்ணும் தானேயாய்) பூம்யந்தரிக்ஷங்களைத் தனக்கு விபூதியாகவுடையனாய். (நிகரில் சுடராயிருளாகி நின்றார்) தமஃப்ரகாசங்களை விபூதியாகவுடையனாய், இப்படி ஜகதாகாரனானவன், அஸாதாரணவிக்ரஹத்தைக் கண்டு அநுபவிக்கலாம்படி வந்துநிற்கிற வூர்போலும்.

(துகிலின் கொடியித்யாதி) நெருங்கக் கட்டின துகில்களாலுண்டானகொடியும், தேர்கள் ஒன்றோடொன்று தாக்கிக்கிளப்பப்பட்ட தூளியும், மிகுதியையுடைத்தாய், அவ்வூரில் ஸ்த்ரீகளுடைய குழலுக்கு வாசங்கொளுத்துகைக்காக அகிலைப்புகைப்பார்கள்; அதுமேகம் போலேயாய், வர்ஷாவைக்காட்டாநின்றது. வர்ஷாவில் வந்தால், ஒரு காற்றும் தூளியும் மேகமும் மூன்றும் கூடியிறேயிருப்பது; ஆதில் கட்டின கொடிகளால் வந்த காற்றுண்டாயிருந்தது. தேர்காலாலே கிளப்பப்பட்ட தூளியுண்டாயிருந்தது; அவர்கள் குழலுக்குப் புகைக்கிற அகில் புகையானது மேகமாயிருந்தது; ஆக இம்மூன்றும் கூடி நித்ய வர்ஷாவைக் காட்டாநின்றது; ருதுவிசேஷங்கள்தோறு முண்டான பதார்த்தங்களை அநுபவிக்க வொட்டுகிறனவில்லை. ... (௫)

அரு.—அஞ்சாம்பாட்டு. (பகலுமித்யாதி) கீழ்ப்பாட்டில், வடதளசாயியின்படியை அநுஸந்தித்து அஞ்சின இவரை "நீர் அஞ்சவேண்டாகாணும், எனக்கிதெல்லாம் விபூதிகாணும்" என்ன, அநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

"துன்னி" என்ற பதம் நெருங்கி என்றபடி. அத்தை, துகில், தேர், புகை இம்மூன்றுக்கும் விசேஷணமாக்கி யருளிச்செய்கிறார் (நெருங்கவித்யாதி). "முகில்" என்ற பதம், வர்ஷாகாலபர மென்றருளிச் செய்கிறார் (வர்ஷாவில்) என்று. "எய்க்கை" ஸத்ருசமாகையாய், அத்தை உபபாதிக்கிறார் (அதில் கட்டினவித்யாதி). (௫)

மூ.—எடிலங்கு தாமரைபோல் செவ்வாய் முறுவல் செய்தருளி
மாடுவந்தென் மனம் புகுந்து நின்றார் நின்ற வூர்போலும்
நீடு மாடத்தனிச்சூலம் போழ்கக் கொண்டல் துளிதூவ
ஆடலரவத்தார்ப்போவா அணியார் வீதி யழுந்தூரே. (௬)

பதம்.	உரை.
நீடு	உயர்ந்திருக்கிற
மாடம்	க்ருஹங்களிலுண்டான
தனி	அத்விதீயமான
சூலம்	சிகரமானது
போழ்க	(மேகத்தின் வயிற்றை)கிண்டுபிளக்க
கொண்டல்	(அதினால்) மேகமானது
துளிதூவ	(மழை)த்துளிகளை இறையாநிற்பதாய்,
ஆடல்	ஆடாநின்ற ஸ்த்ரீகளுடைய
அரவத்து	ஆரவாரத்தினாலுண்டான
ஆர்ப்பு	பேரொலியானது
ஓவா	இடைவிடாமலிருக்கிற
அணியார்வீதி அழுந்தூர்	
ஏடுஇலங்கு	இதழ்களினால்(நிறைந்து) விளங்காநின்ற
தாமரைபோல்	தாமரஸபுஷ்பம்போலே இராநின்ற
செவ்வாய்	சிவந்த திருப்பவளத்தினால்
முறுவல்செய்தருளி	(முதலிலே) மந்தஸ்மிதம் பண்ணி
மாடுவந்து	(அநந்தரம் என்)ஸமீபத்திலே வந்து
என்மனம்	(பின்பு) என்ஹ்ருதயத்தில்
புகுந்து	ப்ரவேசித்து
நின்றார்	அங்கே ஸ்தாவரமாயெழுந்தருளியிருக்கிறவர்
நின்றவூர்போலும். (௬)	

வ்யா.—ஆறாம்பாட்டு. (ஏடிலங்கித்யாதி) இதழ் விளங்காநின்றுள்ள தாமரைபோலே ஸ்மிதம்பண்ணியருளி. என்னைப் பெறுகையில் வந்த அலப்யலாபம் தன்னதென்னுமிடம் தோற்ற ஸ்மிதம் பண்ணி, அத்தாலே தான் செய்தது விலக்காதபடியான தசையை எனக்குப் பிறப்பித்து, என்னருகேவந்து நின்று, அதுஸாத்மித்தவாறே ஹ்ருதயத்திலே வந்து புகுந்து, "இனி இவர்க்கொரு போக்கில்லை" என்று தோற்ற நிற்கிறவர், கண்ணுக்கிலக்காம்படி வந்து நிற்கிறதேசம் போலும்.

(நீடுமாடமித்யாதி) ஓங்கின மாடங்களிலுண்டான தனிச்சூலமானது, மேகங்களினுடைய கீழ்வயிற்றைப்போழ, அவைவர்ஷத்தையுண்டாக்கும். இத்தால் மாடங்களினுடைய ஓக்கம் சொன்னபடி. (ஆடலரவத்தார்ப்போவா) ஸ்த்ரீகள் ஆடுகிறபோதை ஆரவாரத்தாலுண்டான கோஷம் மாறாதே செல்லுகிற. (அணியார்வீதி) அது மாறாமையால் வந்த அழகையுடைய வீதியென்றபடி. ... ... (௬)

அரு.—ஆறாம்பாட்டு. (ஏடிலங்கித்யாதி). கீழ்ப்பாட்டில், இவர் அச்சம் தீரும்படி ஜகதாகாரதையைக்காட்டி, அத்தாலிப்போது ஸத்தைபெற்

ரூப்போலே இருந்த இவரைப்பெற்ற ஹர்ஷத்தாலே, தான் ஹர்ஷம் தோற்றக்கிட்டவந்து நின்றபடியை அநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

(தனிச்சூலமானது) அத்விதீயமான மகுடமானது. (சு)

மூ. —

மாலைப்புகுந்து மலரணைமேல் வைகியடியேன் மனம்புகுந்தென்
நீலக்கண்கள் பனிமல்க நின்றார் நின்ற ஊர்போலும்
வேலைக்கடல்போல் நெடுவீதி விண்டோய் சுதை வெண்மணிமாடத்து
ஆலைப்புகையாலழல் கதிரை மறைக்கும் வீதி யழுந்தூரே. (எ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
வேலை	கரையையுடைத்தான	மலர் அணை மேல்	பூம்படுக்கையில்
கடல் போல்	ஸமுத்ரம்போலே கம்பீரமாயும்	வைகி	தங்கி
நெடு	நீண்டுமிருக்கிற	அடியேன்	(பின்பு) என்னுடைய
வீதி	வீதிகளிலேயுண்டாய்	மனம்	ஹ்ருதயத்தில்
விண்	ஆகாசத்திலேசென்று	புகுந்து	ப்ரவேசித்து(அநந்தரம் பிரிவை ப்ரஸங்கித்தவளவிலே)
தோய்	படிந்திருப்பதாய்,		
சுதை	சுண்ணும்பிட்டு		
வெண்	வெளுத்திருப்பதாய்	என்	என்னுடைய
மணி	மணிமயமாயிருக்கிற	நீலம்	கருநெய்தல் போன்ற
மாடத்து	க்ருஹங்களிலே	கண்கள்	கண்களில்நின்றும்
அழல்	உஷ்ணமாயிருக்கிற	பனி	நீரானது
கதிரை	(ஸூர்ய)கிரணங்களை	மல்க	பெருகாநிற்க
ஆலைப்புகையால்	கரும்பாலையில் நின்றுமுண்டான தூமத்தினால்	நின்றார்	(அதைக்கண்டு அப்புறம் போகமாட்டாமல்) இங்கே யெழுந்தருளியிருக்குமவர்
மறைக்கும்	மறையாநின்ற		
வீதி அழுந்தூர்			
மாலை	ஸாயங்காலத்தில்		நின்றவூர்போலும். (எ)
புகுந்து	ப்ரவேசித்து		

வ்யா. —எழாம்பாட்டு. (மாலைப்புகுந்து) போக [illegible] யோக்யமான காலத்திலேவந்து புகுந்து பூம்படுக்கையிலேதங்கி, அநந்தரம் அங்கு நின்றும்போந்து. (அடியேன் மனம் புகுந்து) அநந்யார்ஹையான என்னுடைய ஹ்ருதயத்திலே வந்துபுகுந்து, பிரிவைப்ரஸங்கித்து, என்னுடைய கண்ணும் கண்ணீருமான ஆற்றாமையைக்கண்டு பின்னேகால்வாங்கிப் போகமாட்டாதே நின்றவர் நித்யவாஸம் பண்ணுகிற தேசம்போலும்.

(வேலைமித்யாதி) கரையையுடைத்தான கடல் போலேயாய்த்து திருவீதிகளுடையபெருமையிருக்கும்படி. (விண்டோய்சுதை)ஸ்வர்க்கத்தளவும் ஓங்கியிருப்பதாய், சாந்திட்டு, அத்தாலே வெளுத்திருப்பதாய், மணிமயமான மாடத்திலுண்டான ஆதித்யனுடைய உஷ்ணமான கிரணங்களை, ஆலையிலுண்டான புகையானது வந்து வீதியை மறையாநிற்கும். இத்தால் ஊருக்கும் வயலுக்குமுண்டான அண்ணிமை சொல்லுகிறது. ... ... (எ)

அரு.—ஏழாம்பாட்டு. (மாலையித்யாதி)கீழ்ப்பாட்டில் ஸ்மிதம்பண்ணிக்கொண்டு கிட்டிநின்றபடியை அநுஸந்தித்தார், கிட்டிவந்தவர் படுக்கை ஏறி அநுபவித்து, அது ஸாத்மிக்கைக்காகப் பிரிவை ப்ரஸங்கித்திருக்கும்படியை அநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

(உண்டான) என்றது - ஔந்நத்யத்தாலே மாடத்திலே ஸஞ்சரிக்கிறவென்றபடி. புகையானது கிரணங்களையும் வீதியையும் மறைக்குமென்று ச(ஞ்)காராத்யாஹார பூர்வகம் அந்வயித்துக்கொள்வது. ... ... (எ)

மூ.—வஞ்சி மருங்குலிடை நோவ மணந்துநின்ற கனவகத்தென்
நெஞ்சு நிறையக் கைகூப்பி நின்றார் நின்ற ஊர்போலும்
பஞ்சியன்ன மெல்லடி நற்பாவைமார்க ளாடகத்தின்
அஞ்சிலம்பி னார்ப்போவா அணியார் வீதி யழுந்தூரே. (அ)

பதம்.	உரை.
பஞ்சியன்ன	பஞ்சுபோலே
மெல் அடி	ம்ருதுவான பாதங்களையுடைய
நல்பாவைமார்கள்	விலக்ஷணரான ஸ்த்ரீகள் பூண்ட
ஆடகத்தின்	ஸுவர்ணத்தினால் செய்யப்பட்ட
அம் சிலம்பின்	அழகிய தண்டைச்சிலம்பினுடைய
ஆர்ப்பு	பேரொலியானது
ஓவா	இடைவிடாமலிருக்கிற
அணியார்வீதி அழுந்தூர்,	
வஞ்சிமருங்குல்	வஞ்சிக்கொடியோடொத்த

பதம்.	உரை.
இடை	(என்) மத்யப்ரதேசமானது [யாக
நோவ	தளர்ந்துமெலியும்படி
மணந்துநின்ற	(என்னோடு) சேர்ந்திருக்கிற
கனவகத்து	ஸ்வப்நகல்பமான ஸம்ஶ்லேஷதசை
என் நெஞ்சு	என்மநஸ்ஸிலே [யில்,
நிறைய	ஒரு குறையும் தோற்றாதபடி பரிபூர்ணமாக
கைகூப்பி	(தான் செய்த அபராதத்தை சமிப்பிக்கைக்காக) அஞ்சலி பண்ணிக்கொண்டு

நின்றார் நின்ற ஊர்போலும். (அ)

வ்யா. —எட்டாம்பாட்டு. (வஞ்சிமருங்குல்) வஞ்சியின் படியை யுடைத்தான இடையானது நோவக்கலந்துநின்ற ஸ்வப்நகல்பமான ஸம்ஶ்லேஷத்தில். (என்நெஞ்சமித்யாதி) "இன்ன பரிமாற்றம் பெற்றிலோம்" என்கிற அத்ருப்தி நெஞ்சில் கிடவாதபடியாக வாய்த்து, நெஞ்சிலே குறைவறப் புகுந்து நின்றபடி.

(பஞ்சியன்ன) செம்பஞ்சுபோலே ம்ருதுவான காலையுடையராய், நிருபாதிகமான ஸ்த்ரீத்வத்தை யுடையரானவர்களுடைய பொன்னாலே சமைக்கப்பட்ட அழகிய சிலம்பிலுண்டான ஆரவாரமானது மாறாதேயிருக்கிற. ... ... (அ)

அரு.—எட்டாம்பாட்டு.(வஞ்சியித்யாதி) கீழ்ப்பாட்டிலே, பிரிவை ப்ரஸங்கிக்கக் கண்ணும் கண்ணீருமாயிருந்தபடியை அநுஸந்தித்தார்; அங்குமிங்கும் தங்கித்தங்கி வருவாரைப்போலே தானே ஹ்ருஷ்டனாய் வந்த இவன், பிரிவை ப்ரஸங்கிப்பானென்னென்னும் ப்ரஶ்நத்திலே, அதுதான் என்னிடையாட்டத்தின் குற்றங்காண் என்கிறாரென்று ஸங்கதி.

இடை நோவ மணந்த குற்றம்தீரக் கைகூப்பினான், அதுவெல்லா மென்நெஞ்சிலே நிரந்தரத்யாந விஷயமாய்த்து என்னும் தாத்பர்யத்தை யருளிச் செய்கிறார் (இன்ன பரிமாற்றமித்யாதி). (இன்ன பரிமாற்றம்) தாழ்ந்த பரிமாற்றம். (அ)

மூ.—என்னைம்புலனுமெழிலுங்கொண்டிங்கேநெருநலெழுந்தருளிப்
பொன்னங்கலைகள் மெலிவெய்தப் போன புனிதனூர்போலும்
மன்னுமுதுநீரரவிந்தமலர்மேல் வரிவண்டிசைபாட
அன்னம் பெடையோடுடனாடு மணியார் வயல்சூழழுந்தூரே.

பதம்.	உரை.	பதம்.	உரை.
மன்னும்	மத்ஸ்யாதிகள் நெருங்கி வர்த்திக்கிற	அன்னம்	ஹம்ஸபக்ஷியானது
முதுநீர்	பழையதான தடாகத்திலே யுண்டான	பெடையோடு	(தன்)பேடையோடு
அரவிந்தமலர் மேல்	தாமரைப் பூவின்மேலே	உடன்	கூடினதாய்க்கொண்டு
வரிவண்டு	ரேகைகளை யுடைய வண்டுகளானவை	ஆடும்	நர்த்தநம் பண்ணாநின்ற
இசைபாட	காநம்பண்ணாநிற்கச் செய்தே	அணியார் வயல்சூழழுந்தூர்,	
		நெருநல்	நென்னேற்று
		இங்கே	நானிருக்கு மிவ்விடத்தில்
		எழுந்தருளி	வந்து
		என் ஐம்புலனும்	என்னுடைய பஞ்சேந்த்ரிய ஜ்ஞாநத்தையும்

ககூக

எழிலும்	அழகையும்	மெலிவுஎய்த	தளர்ந்து விழும்படியாக
கொண்டு	அபஹரித்துக்கொண்டு	போன	விஸ்லேஷித்துப்போன
பொன்	ஸ்ப்ருஹணீயமாய்	புனிதர்	பரிசுத்தருடைய
அம்	அழகியதான		ஊர்போலும். (௯)
கலைகள்	(என்) வஸ்த்ரங்களும்		

வ்யா. —ஒன்பதாம்பாட்டு. (என்னைம்புலனுமித்யாதி) என்னுடைய ஶ்ரோத்ராதிகளால் வந்த வெளிச்சிறப்பையும், ஸமுதாய சோபையையும் கொண்டு, நினைவின்றிக்கேயிருக்க, இங்கே நேற்றெழுந்தருளி அரையில் பரியட்டமானது தொங்காதபடிக்கீடாகப் பண்ணிப்போன புனிதரூர்போலும். இத்தலையிலுள்ளத்தை ஸர்வஸ்வாபஹாரம்பண்ணி, தன்பக்கலுள்ளதொன்றும் தொங்காதபடி பண்ணிப்போன சுத்தியையுடையவர் வர்த்திக்கிறதேசம்போலும்.

(மன்னுமுதுநீர்) ஜலசாஸத்வங்கள் மன்னியிருக்கிற. (முதுநீர்) பழையதாய் மாறாத ஜலத்தையுடைய பொய்கைகளிலுண்டான தாமரைப் பூக்களின்மேலேமதுபாநம் பண்ணின தர்ஶநீயமான நிறத்தையுடைத்தான வண்டினங்களானவை, செருக்குக்குப் போக்குவிட்டு இசைபாட, அதினுடைய பாட்டுக்குச்சேர அன்னமானது, பேடையோடொக்க ஆடாநிற்கும். ... ... (௯)

அரு.—ஒன்பதாம் பாட்டு. (என்னித்யாதி) கீழ்ப்பாட்டில், இடைகோவ மணந்தபடி சொல்லிற்று; அந்த ஸம்ஶ்லேஷம் ஸாத்மிக்கவேணுமென்று நாலடிபேரவே, தமக்குப் பிரிந்துபிறந்த க்லேசத்தாலே அல்பம் வெறுப்பு தோற்ற, அவன் ஸங்கிஹித தேசத்தைக் கொண்டாடுகிருரென்று ஸங்கதி.

(சுத்தியையுடைய) என்றது-தான், என்னுடைய விஶ்லேஷத்தாலே நிறம் முதலானவற்றை இழவாதே வீதராகரைப்போலே பவித்ரதை தோற்றவிருக்கிருனென்னும் வெறுப்புக்கு ஸூசகமென்று திருவுள்ளம்.(௯)

மூ.—நெல்லிற்குவளை கண்காட்ட நீரிற்குமுதம் வாய்காட்ட
அல்லிக்கமலமுகம் காட்டும் கழனியழுந்தூர் நின்றானை
வல்லிப்பொதும்பில் குயில்கூவும் மங்கைவேந்தன் பரகாலன்
சொல்லிற்பொலிந்ததமிழ்மாலைசொல்லப்பாவம்நில்லாவே. (௧௦)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பதம்.	உரை.
நெல்லில்	நெற்பயிரின் நடுவே முளைத்த
குவளை	கருநெய்தலானது
கண்	(அவ்வூர்பெண்களுடைய) கண்களை
காட்ட	தர்சிபிக்க,
நீரில்	ஜலத்திலே முளைத்த
குமுதம்	அரக்காம்பலானது
வாய்காட்ட	(அவர்களுடைய) வாயை தர்சிப்பிக்க,
அல்லி	இதழை யுடைத்தான
கமலம்	தாமரைப்பூவானது
முகம்	(அவர்கள்) முகத்தை
காட்டும்	ப்ரகாசிப்பியாநின்ற (அவர்கள் முகம் போலே விளங்காநின்ற)
கழனி	விளைநிலங்களை யுடைத்தான
அழுந்தூர்	திருவழுந்தூரிலே
நின்றானை	எழுந்தருளி யிருக்குமவன் விஷயமாக,

பதம்.	உரை.
வல்லி	கொடிகளுடைய
பொதும்பில்	புதறுகளிலே
குயில்	கோகிலங்களானவை
கூவும்	கூவாநின்ற
மங்கை	திருமங்கைக்கு
வேந்தன்	ராஜாவாய்
பரகாலன்	சத்ருக்களுக்குக் காலன்போலே இராநின்ற ஆழ்வாருடைய
சொல்லில்	நல்ல சப்தங்களினால்
பொலிந்த	நிறைந்திருக்கிற
தமிழ்	தமிழ்பாஷையி லுண்டான
மாலை	சப்த ஸந்தர்ப்ப ரூபமான இப்பத்துப் பாட்டையும்
சொல்ல	அப்யஸிக்கவே
பாவம்	பாவங்களானவை
நில்லா	(அவர்களிடத்தில்) தங்கமாட்டாது. (௧௦)

வ்யா.—பத்தாம்பாட்டு. (நெல்லிலித்யாதி) நெல்லுக்குக்களையாக முளைத்த குவளைகளானவை, அவ்வூரில் ஸ்த்ரீகளுடைய கண்ணைக் காட்டி நீர் நிலங்களிலுண்டான அரக்காம்பலானவை, அவர்களுடைய அதரத்தைக்காட்ட: (அல்லிக்கமலம்) மிக்க இதழையுடைத்தான தாமரைப் பூக்களானவை, அவர்களுடைய முகத்தைக்காட்டாநின்றுள்ள. (கழனியழுந்தூர் நின்றானை) வயலுக்கும் ஊருக்கும் வாசிதெரிவிக்க வொண்ணாதாய்த்து.

(வல்லிப்பொதும்பிலித்யாதி) பூங்கொடிகளானவை நெருங்கியிருக்கிற முழஞ்சுகளிலே, குயில்களானவை, முக்தர் ஸாமகாநம் பண்ணுமாபோலே கூவாநிற்கிற திருமங்கையிலுள்ளார்க்கு ராஜாவாயுள்ளார், ப்ரதிபக்ஷநிரஸந சீலராயுள்ளார். (சொல்லில் பொலிந்த) சொல்களால் ஸம்ருத்தமாயுள்ள தமிழ்த்தொடையைவாயாலே சொல்ல (பாவம் நில்லாவே) பாபத்தை யுண்டாக்குவதானாலும்தவிர வொண்

ஞாநதைச்சொல்லப் பாவங்கள் தன்னடையேபோம். ... ... (௧௦)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

அரு.—பத்தாம்பாட்டு. (நெல்லில் குவளையித்யாதி). "மாலை" என்றத்தால் தோற்றின போக்ய([illegible])தையைப்பற்ற தாத்பர்ய மருளிச் செய்கிறார் (பாபத்தையித்யாதி). (௧௦)

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஏழாம்பத்தில் அஞ்சாந்திருமொழி முடிந்தது.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஏழாம்பத்து ஆறாந்திருமொழி

ஸிங்கமதாய்ப்ரவேசம்.

வ்யா.—(ஸிங்கம்தாயித்யாதி) "போனபுனிதர்" என்றுஇன்னாதானார்; "நாம் எங்கேனும்போனோமோ? உமக்காகவன்றோ இவ்வோவிடங்களில் வந்துநிற்கிறது" என்று உகந்தருளின கோயில்களில் நிலையைக்காட்டினான்; "இனித்தான் சிறுக்கனுடையப்ரதிஜ்ஞாஸமகாலத்திலேவந்து உதவினவனென்று நம்மை யறிந்திலீரோ? உமக்கு நினைத்த வகையெல்லாம் பரிமாறுகைக்காக இங்கேவந்து நின்றோம்; உம்முடைய விரோதியைப்போக்கி, உம்மை அடிமைகொள்ளுகைக்காக வந்து நின்றோம்" என்று திருவழுந்தூரிலே நிற்கிற நிலையைக்காட்டக் கண்டு த்ருப்தராயநுபவிக்கிறார். (௧) "𑌤𑌦𑍇𑌵 𑌕𑍋𑌪𑌾𑌯 𑌯𑌤𑌃 𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌾𑌯𑌚 𑌜𑌾𑌯𑌤𑍇- ததேவ கோபாய யத: ப்ரஸாதாயச ஜாயதே" என்கிறபடியே, இந்நிலைதானே இவர்க்கு இழவுக்குமுடலாய், பேற்றுக்குமுடலாயாய்த்திருப்பது. ஆகையாலே தமக்கு இப்போது ஸமாதாநமாய் விட்டது. ... ... *

அரு.—ஸிங்கமதாயின் ப்ரவேசம். கீழ்த்திருமொழியில் "போனபுனிதர்" என்றவர் இங்கே "கண்டுகொண்டேன்" என்று களிக்கக் காரணமென்னென்ன; அவன் ஆஶ்ரிதன்சொல்வழியே செய்வானானமையை அறிவிப்பிக்க ஹ்ருஷ்டராகிறாரென்று ஸங்கதி யருளிச் செய்கிறார் (போனபுனிதரித்யாதி.) ... ... (*)

---

(௧) வி-பு-௨-௯-௪௮:

மூ.—சிங்கமதாயவுணன் திறலாகம் முன்கீண்டுகந்த
சங்கமிடத்தானைத் தழலாழி வலத்தானைச்
செங்கமலத்தயனனையார் தென்னழுந்தையில் மன்னிநின்ற
அங்கமலக்கண்ணனை யடியேன் கண்டுகொண்டேனே. (௧)

பதம்.	உரை.
சிங்கமதாய்	நரஸிம்ஹரூபியாய்க் கொண்டு
அவுணன்	ஹிரண்யாஸுரனுடைய
திறல்	பலிஷ்ட்டமான
ஆகம்	சரீரத்தை
முன்	ப்ரஹ்லாதன் ப்ரதிஜ்ஞைபண்ணின காலத்தில்
கீண்டு	கிழித்துப் பொகட்டு
உகந்த	ஸந்தோஷித்தவனாய்,
சங்கம்	ஸ்ரீபாஞ்சஜந்யத்தை
இடத்தானை	இடது திருக்கையிலுடையவனாய்,
தழல்	ஜ்வலியாநின்ற
ஆழி	ஶ்ரீஸுதர்சநத்தை
வலத்தானை	வலது திருக்கையிலேந்தினவனாய்,
செம்	அழகியதான
கமலத்து	திருநாபிகமலத்தில் பிறந்த
அயன் அனையார்	ப்ரஹ்மாவோடொத்த ப்ராஹ்மணர்கள் (வர்த்திக்கிற)
தென்	ஸுந்தரமான
அழுந்தையில்	திருவழுந்தூரிலே
மன்னி	பொருந்தி
நின்ற	நித்யவாஸம் பண்ணுகிறவனாய்,
அம்கமலம்	அழகியகமலமலர்போன்ற
கண்ணன்தன்னை	திருக்கண்களையுடையவனை
அடியேன்	அநந்யார்ஹ சேஷபூதனான நான்
கண்டுகொண்டேன்	காணப்பெற்றேன். (௧)

வ்யா.—முதற்பாட்டு (சிங்கமதாய்) நரஸிம்ஹவேஷத்தையுடையனாய், அவுணனுண்டு - ஹிரண்யன், அவனுடைய மிடுக்கையுடைத்தான சரீரத்தை, சிறுக்கனுடைய ப்ரதிஜ்ஞைக்கு முற்பாடனாய்க் கொண்டுவந்து கிழித்து, அவனுடைய விரோதிபோகப்பெற்றத்தால் வந்தஉகப்பும்தன்னதானபடி. விரோதியைப்போக்குவானும் தானாய், அத்தால் உகப்பானும் தானாயிருக்கிறபடி. சிறுப்ரஜை பால்குடித்தால் உகப்பாள்தாயிறே. (சங்கமிடத்தானை) கையில் திவ்யாயுதம்கொண்டு கார்யங்கொள்ள அறிந்திலனாய்த்து.

(செங்கமலமித்யாதி) ஸ்ருஷ்டிகார்யத்துக்குக்கடவனான ப்ரஹ்மாவோடொத்திருக்கிற ப்ராஹ்மணர்தான திருவழுந்தூரிலே நித்யவாஸம்பண்ணுகிற புண்டரீகாக்ஷனான ஸர்வேஶ்வரனை. (அடியேன் கண்டுகொண்டேனே) அவ்வூரிலுள்ளாருடைய ஜந்மமுமின்றிக்கே,

ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானுடைய படியுமின்றிக்கே யிருக்கிற நான் கண்டநுபவிக்கப்பெற்றேன். ... ... (க)

அநு. — முதற்பாட்டு. (சிங்கமித்யாதி) (முற்பாடனைக்கொண்டு) என்றது-முற்பாடனென்னலாம் படியாய்க்கொண்டு என்றபடி. இத்தால் ஸமஸமய ஸமுத்பூதத்வத்தைச் சொன்னபடி. விவரணம் (விரோதியை யித்யாதி). "இடத்தானை" என்றும் "வலத்தானை" என்றும் சொல்லுவானென்? "சங்குசக்கரத்தான்" என்றாப்போலே சொன்னால் அர்த்தஸித்தமன்றோ வென்ன வருளிச்செய்கிறார் (கையிலித்யாதி). கார்யங்கொள்ள வறியாமையால், அவையிருந்த விடந்தன்னிலே யிருந்தன வென்னுமது தோற்றவருளிச் செய்தபடி.

(ப்ரஹ்லாதாழ்வானுடைய படியாவது) பக்த்யதிசயம். (க)

மூ. —கோவானார் மடியக் கொலையார் மழுக்கொண்டருளும்
மூவா வானவனை முழுநீர் வண்ணனை யடியார்க்கு
ஆவாவென்றிரங்கித் தென்னழுந்தையில் மன்னிநின்ற
தேவாதிதேவனை யான் கண்டுகொண்டு திளைத்தேனே. (உ)

பதம்.	உரை.
கோவானார்	ராஜாக்களென்று பேர்பெற்றவர்களெல்லாரும்
மடிய	முடியும்படியாக
கொலையார்	ஸம்ஹார க்ரியையை ஸ்வபாவமாக உடைத்தான
மழு	மழுவென்னு மாயுதத்தை
கொண்டருளும்	(கையில்) எந்தினவனாய்,
மூவா	கிழத்தனம் (முதலான விகாரங்கள்) இல்லாத
வானவனை	பரமபதநாதனாய்,
முழுநீர்	நிறைந்தஜலத்தை யுடைத்தான ஸமுத்ரத்தினுடைய
வண்ணனை	வர்ணத்தை யுடையவனாய்,
அடியார்க்கு	அநந்யார்ஹசேஷபூதரானவர் விஷயத்தில்
ஆ ஆ என்று	ஐயோ! ஐயோ! என்று
இரங்கி	க்ருபைபண்ணி
தென் அழுந்தையில் மன்னிநின்ற	
தேவாதிதேவனை	நித்யஸூரி நிர்வாஹகனானவனை,
யான்	நான்
கண்டுகொண்டு	கண்ணாலே ஸேவித்து
திளைத்தேன்	கலக்கமற்று களித்தேன். (உ)

வ்யா. — இரண்டாம்பாட்டு. (கோவானார்மடிய) ஓரோப்ரதேசங்களுக்கு நிர்வாஹகராய், க்ஷத்ரியரென்று பேர் பெற்றாரெல்லா

ரும் முடியும்படிக்கீடாக. (கொலையார் மழுக்கொண்டருளும்) இருபத்தொருபடிகால் க்ஷத்ரியகுலத்தை அறுத்துப்பொகடச்செய்தேயும், வேறோராயுதம் வேண்டாதபடியிருக்கிற மழுவைக் கொண்டருளின ஏகரூபமான விக்ரஹத்தையுடையவனை. (முழுநீர்வண்ணனை) ஜலராசியான கடல்போன்ற நிறத்தையுடையவனை.

(அடியார்க்காவாவென்றிரங்கி) அஸாதாரண பரிகரத்துக்கு அய்யோவென்று க்ருபையைப்பண்ணி திருவழுந்தூரிலே வந்துநிற்கிற. (தேவாதி தேவனை) *அயர்வறுமமரர்களதிபதியை, நான் கண்ணாலே காணப்பெற்று க்ஷோப(ப)மடையத் தீர்ந்து களிக்கப்பெற்றேன். (௨)

அநு.—இரண்டாம்பாட்டு. (கோவானாரித்யாதி) கீழே துஷ்ப்ரக்ருதியான ஓர் அவுணனை நிரஸித்தமையை யருளிச்செய்தார்; அவ்வளவன்றியே மூவெழுகாலும் துஷ்டசிக்ஷை பண்ணினபடியை அருளிச்செய்கிறாரென்று ஸங்கதி.

(மூவராவனவன்) மூப்பில்லாத வைகுண்ட்டநாதனென்றாய், ப்லிதார்த்தம் (ஏகரூபமான வித்யாதி). … … … … (௨)

மூ.—உடையானை யொலிநீருலகங்கள் படைத்தானை
விடையானோட வன்று விறலாழி விசைத்தானை
அடையார் தென்னிலங்கை யழித்தானை யணியழுந்தூர்
உடையானை யடியேனடைந்துய்ந்து போனேனே. (௩)

பதம்.	உரை.
உடையானை	ஸர்வஸ்வாமியாய்
ஒலிநீர்	கோ(கோ)ஷியாநின்றஜலத்தையுடைத்தான ஸமுத்ரத்தினால் சூழப்பட்ட
உலகங்கள்	லோகங்களை
படைத்தானை	ஸ்ருஷ்டித்தவனாய்
விடையான்	எருதை (வாஹநமாக) உடையனான ருத்ரன்
ஓட	தோற்று ஓடும்படி
அன்று	அந்த பா(பா)ணாஸுர யுத்த ஸமயத்தில்
விறல்	மிடுக்கையுடைய
ஆழி	ஸ்ரீஸுதர்சநத்தை
விசைத்தானை	சலிப்பித்தவனாய்
அடையார்	சத்ருக்கள் நிறைந்திருக்கிற
தென் இலங்கை	தென்திசையிலுள்ள லங்கையை
அழித்தானை	நாசம் செய்தவனாய்
அணி	பூமிக்கு ஆபரணமாயிருக்கிற
அழுந்தூர்	திருவழுந்தூரை
உடையானை	இருப்பிடமாகஉடை யனானவனை
அடியேன்	நான்
அடைந்து	ஆஶ்ரயித்து
உய்ந்துபோனேன்	உஜ்ஜீவித்தேன். (௩)

வ்யா.—மூன்றாம்பாட்டு. (உடையானையித்யாதி) ஸ்வவ்யதிரிக்த ஸமஸ்த சேதநர்க்கும் நிருபாதிக சேஷியாயுள்ளவனை. (ஒலிநீருலகங்கள் படைத்தானை) ஸர்வமும் உபஸம்ஹ்ருதமாய்க்கிடக்க, கடல்சூழ்ந்தபூமியை ஸ்ருஷ்டித்தகாரணபூதனை. (விடையானித்யாதி) நாட்டுக்கு ரக்ஷகராக நிறுத்தினவர்கள் தாங்களே, அஸுரர்களோடேகூட பாத (𑌬𑌾𑌧) கராய்வருமன்றும் நோக்குமவனை. ருத்ரன்கெட்டோட, இவன்பண்ணின வ்யாபாரமென்னென்னில்; மிடுக்கை யுடைய திருவாழியை விதிர்த்தானித்தனை. (விடையானோட)அவன்றான் (௧)"𑌪𑌾𑌰𑌵𑌶𑍍𑌯𑌂 𑌸𑌮𑌾𑌯𑌾𑌤𑌃- பாரவஶ்யம் ஸமாயாத:" என்று பரவசனாய்க்கிடந்தும், தெளிந்தும், (௨) "𑌕𑍃𑌷𑍍𑌣 𑌕𑍃𑌷𑍍𑌣 𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍋! - க்ருஷ்ண க்ருஷ்ண மஹாபாஹோ!" என்னுமிறே சொல்லுவது.

(அடையாரித்யாதி) ப்ராதிகூல்யமேயாய், அதிலே நிலைநின்றாரை அழியச்செய்யுமவனை. (அணியழுந்தூருடையானை) நித்யவிபூ[illegible]யுக்தனான ஸம்பத்துக்குமேலே யொன்றுகாணும், திருவழுந்தூருக்கடவனானது. கீழே உபயவிபூதியோகத்தையும்சொல்லி, அணியழுந்தூருடையானென்னும்போது, அதுக்குமேலே ஒருஸம்பத்தாக வேணுமிறே இது. (அடியேனித்யாதி) அநந்யகதியான நான் கிட்டப்பெற்று, (௩) "𑌅𑌸𑌨𑍍𑌨𑍇𑌵-அஸந்நேவ" என்னும் நிலைதவிர்ந்து உஜ்ஜீவித்து க்ருதார்த்தனாகப் பெற்றேன். ... ... (௩)

அரு.—மூன்றாம்பாட்டு. (உடையானையித்யாதி) கீழே ஆஶ்ரித விரோதிகளை அழியச்செய்தபடி சொல்லிற்று; அவ்விரோதிகளுக்கு ஸஹாயபூதரையும் பின்விடப்பண்ணி விஜயியாயிருக்கும் படியையு மநுபவித்து ஹ்ருஷ்டராகிறாரிங்கென்று ஸங்கதி.

(வருமன்றும்) என்ற வநந்தரம், "அவர்களை யோட்டி பூமியை" என்று சேஷம்.

(கீழே) என்றது—"உடையானை" என்ற பதத்திலேயென்றபடி.(௩)

மூ.—குன்றால் மாரிதடுத்தவனைக் குலவேழமன்று
பொன்றாமை யதனுக்கருள் செய்த போரேற்றை
அன்றாவின் நறுநெய்யமர்ந்துண்ண வணியழுந்தூர்
நின்றானை யடியேன் கண்டுகொண்டு நிறைந்தேனே. (௪)

---

(௧) (௨) வி-பு-௫-௩௩-௪. (௩) தை-ஆ-௬-௧.

பதம்.	உரை.
குன்றால்	கோவர்த்தநபர்வதத்தினால்
மாரி	கல்மழையை
தடுத்தவனை	பரிஹரித்தவனாய்,
குலம்	நல்லஜாதியிற் பிறந்த
வேழம்	ஸ்ரீகஜேந்த்ரமானது
பொன்றாமை	முடிந்து போகாதபடி
அன்று	அக்காலத்தில்
அதனுக்கு	அவ்வானைக்கு
அருள்செய்த	க்ருபை பண்ணியருளினவனாய்,
போர் ஏற்றை	யுத்தத்தில் செருக்கனானவனாய்,

பதம்.	உரை.
அன்று	அந்த க்ருஷ்ணாவதாரத்தில்
ஆவின்	பசுவினுடைய
நறு நெய்	புதிதான (அப்பொழுது காய்ச்சிவைத்த) நெய்யை
அமர்ந்து	மனம்பொருந்தி (ஆஸக்தியுக்தனாய்)
உண்ண	அமுது செய்தவனாய்,
அணி அழுந்தூர்நின்றானை,	
அடியேன் கண்டுகொண்டு	
நிறைந்தேன்	பூர்ணனானேன். (௪)

வ்யா.—நாலாம்பாட்டு. (குன்றால் மாரிதடுத்தவனை) தலைக்காவலாக வைத்த இந்த்ரன் தான் பாத(ஸாத)கனாக, நோக்கினபடி சொல்[illegible]கிறது.

அவன் பசிக்ராஹத்தாலே வர்ஷத்தைப்பண்ண, அதுக்கு எதிராகக்கிடந்ததொரு மலையையெடுத்துப் பரிஹரித்தவனை. (குலவேழமித்யாதி) நல்ல ஆகரத்திலேபிறந்து, மதமுதிதமாய், செருக்கி, மூலையடியேதிரிகிற யானையானது, விழுக்காடறியாதே பொய்கையிலே வந்து புகுந்த முதலையின்கையிலே அகப்பட்டு, அது முடிந்துபோகாமே, அதின்பக்கலிலே நிர்ஹேதுக க்ருபையைப்பண்ணின. (போரேற்றை) அவ்வவஸ்த்தையை அறிந்து பரிஹரிக்கவல்ல ஆண்புலியை.

(அன்றாவின் நறுநெய்யமர்ந்துண்ண வணியழுந்தூர் நின்றானை) அன்று பசுவின்நெய்யை அமர்ந்து அமுதுசெய்த திருவழுந்தூர் நின்றானை. திருவாய்ப்பாடியிலே நின்றபடியாய்த்து இங்குநிற்கிறது. (அடியேனித்யாதி) கண்ணாலே காணப்பெற்று, அபூர்ணனான நான் பூர்ணனாகப்பெற்றேன். ... ... (௪)

அரு.—நாலாம்பாட்டு. (குன்றாலித்யாதி) கீழ்ப்பாட்டில், ருத்ரன் தான் எதிர்க்க வென்றபடி சொல்லிற்று; இதில் இந்த்ரன் தானே எதிரிட அவனை வென்றபடி சொல்லுகிறது என்று ஸங்கதி. இத்தைஸ்புரிப்பிக்கிறார் (தலைக்காவலித்யாதி). இத்தால்தானே அதிகாரி புருஷர்களாக வைத்தவர்களே ஆஶ்ரித விரோதிகளானார்களாகில் அவர்களையும் வெல்ல

வல்லானென்னும் மஹாகுணம் சொல்லிற்றாய்த் தென்று திருவுள்ளம்-

பாத(ஸாத)கனானால் தலையறுக்க வொண்ணாதோ வென்ன வருளிச்செய்கிறார் (அவனித்யாதி). (அதுக்கு) அவ்வளவான குற்றத்துக்கு.

“உண்ண” என்றத்தை, “உண்ட” என்றாக்கி அர்த்தமருளிச்செய்கிறார் (அன்றித்யாதி). ... ... (௪)

மூ.—கஞ்சனைக் காய்ந்தானைக் கண்ணமங்கையுள் நின்றானை
வஞ்சநப்பேய் முலையூடுயிர் வாய்மடுத்துண்டானைச்
செஞ்சொல் நான்மறையோர் தென்னழுந்தையில் மன்னிநின்ற
அஞ்சநக்குன்றந்தன்னை யடியேன் கண்டுகொண்டேனே. (௫)

பதம்.	உரை.
கஞ்சனை	கம்ஸனை
காய்ந்தானை	கோபித்தவனாய்
கண்ணமங்கையுள்	திருக்கண்ணமங்கையென்னும் திவ்யதேசத்தில்
நின்றானை	எழுந்தருளியிருக்குமவனாய்,
வஞ்சநம்	கபடத்தையுடையளான
பேய்	பூதனையுடைய
முலையூடு	முலைவழியே
உயிர்	(அவன்) ப்ராணனையும்
வாய்மடுத்து	வாயிலே யிட்டுக்கொண்டு
உண்டானை	(முலையை) அமுதுசெய்தவனாய்,
செம்சொல்	(மெய்ப்பொருளான) அழகையுடைய சொற்கள்நிறைந்த
நால்மறையோர்	நாலு வேதங்களையும் மத்யயநம் பண்ணின ப்ராஹ்மணருடைய
தென்அழுந்தையில்மன்னிநின்ற,	
அஞ்சனக்குன்றம் தன்னை	மைமலைபோன்றவடிவழகை யுடையவனை
அடியேன்கண்டுகொண்டேனே(௫),	

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (கஞ்சனைக்காய்ந்தானை) கம்ஸனுடைய நினைவை அவன்றன்னோடேபோம்படி முனிந்தவனை. (கண்ணமங்கையுள் நின்றானை) இன்னுமிங்ஙனே யிருந்துள்ள விரோதிகளைப் போக்கிரக்ஷிக்கைக்காகத் திருக்கண்ணமங்கையிலே நின்றானை. (வஞ்சநமித்யாதி) வஞ்சநத்தை யுடையளான பூதனையுடைய முலைவழியிலே ப்ராணன்களும் வற்றிவரும்படி முலையை அமுதுசெய்தவனை.

(செஞ்சொல்நால்மறையோர்) யதாபூதவாதியானவேதம் கைவந்திருக்கிற ப்ராஹ்மணரதான திருவழுந்தூரிலே நிற்கிற ஶ்ரமஹரமான வடிவையுடையனாய்க்கொண்டு, . தாபத்ரயம் போம்படி நின்ற

வனை, தாபத்ரயத்தாலும் தப்தனாயிருக்கிற நான்கண்டு, என்னுடைய தாபத்ரயங்கள் தீரப்பெற்றேன். ... ... (௫)

அரு.—அஞ்சாம்பாட்டு. (கஞ்சனையித்யாதி) கீழ்ப்பாட்டிலே, பசியாலே பாத(बाध)கனானவனை உபாயேநவென்றபடி சொல்லிற்று. அங்ஙனன்றிக்கே நேராகச் சலத்தோடிருப்பாரைத் தானும் ச(छ)லமுடையனாய், வஞ்சனை செய்வாரைத் தானும் வஞ்சநம்பண்ணிக் கொல்லுவானென்று சொல்லக் கணிசிக்கிறாரிங்கென்று ஸங்கதி.

நிர்ஹேதுகமாகக் காய்கை துர்க்குணமாகையாலே, காய்ந்த கஞ்சனைக் காய்ந்தானையென்றநுஷங்கித்து அருளிச் செய்கிறார். (கம்ஸனுடைய வித்யாதி). ... ... (௫)

௬.—பெரியானை யமரர் தலைவற்கும் பிரமனுக்கும்
உரியானை உகந்தானவனுக்கு முணர்வதனுக்
கரியானை அழுந்தூர் மறையோர்களடிபணியும்
கரியானை அடியேன் கண்டுகொண்டு களித்தேனே. (௬)

பதம்	உரை.	பதம்.	உரை.
பெரியானை	ஸர்வாதிகனாய்,	அழுந்தூர்	திருவழுந்தூரிலுள்ள
அமரர்தலைவற்கும்	தேவர்களுக்குநிர்வாஹகனான இந்த்ரனுக்கும்	மறையோர்கள்	ப்ராஹ்மணோத்தமர்கள்
பிரமனுக்கும்	ப்ரஹ்மாவுக்கும்	அடிபணியும்	திருவடிகளிலே(விழுந்து) ஆஶ்ரயிக்கும்படியானவனாய்,
யானைஉரி	யானைத்தோலை	கரியானை	நீலவர்ணத்தையுடையனானவனை
உகந்தானவனுக்கும்	உகந்(து உடுத்)த ருத்ரனுக்கும்	அடியேன் கண்டு கொண்டு	
உணர்வதனுக்கு	அறிகைக்குங்கூட	களித்தேன்	ஸந்தோஷிக்கப்பெற்றேன். (௬)
அரியானை	துர்லபனாய்,		

வ்யா.—ஆறாம்பாட்டு. (பெரியானை) ஸர்வஸ்மாத்பரனானவனை. (அமரர்தலைவற்கும்) தேவர்களுக்கெல்லாம் நிர்வாஹகனாயிருக்கிற இந்த்ரனுக்கும். (பிரமனுக்கும்) ப்ரஹ்மாவுக்கும். (உரியானையுகந்தானவனுக்கும்) யானையுரியை உகந்த ருத்ரனுக்கும். (உணர்வதனுக்கரியானை) இவர்களுக்கு நெஞ்சால் நினைக்கவுங்கூட அரியனாயிருந்துள்ளவனை.

(அழுந்தூரித்யாதி) திருவழுந்தூரிலுண்டான ப்ராஹ்மணரானவர்கள் திருவடிகளிலே ஆஶ்ரயிக்கும்படியாகநிற்கிற ஶ்ரமஹரமான

வடிவையுடையவனை. (அடியேன் கண்டுகொண்டுகளித்தேனே) அநங்யார்ஹனனை நான் கண்டுகொண்டு களிக்கப்பெற்றேன். ... ... (சு)

அரு —ஆறாம்பாட்டு. (பெரியானையித்யாதி) கீழ்ப்பாட்டில் காய்ந்தவரைக் காயுமவனாயும் வஞ்சிப்பாரை வஞ்சிக்குமவனாயுமிருக்குமென்றார்; அப்படியே தங்களைப் பெரியோராக எண்ணியிருப்பார்க்குத் தான் மிகவும் பெரியோனாய், அவர்களுக்கரியனாயிருப்பானென்றநுஸந்தித்து, இப்படிப்பட்டவனுக்கு அடியேனாய்க்களித்தேனென்கிறாரென்றுஸங்கதி.

(ஆனையுரிவை) என்றது-ஆனையுடைய, உரிவை-தோலையென்றபடி. (சு)

மூ. —திருவாழ் மார்வன்றன்னைத் திசைமண்ணீரெரிமுதலா
உருவாய்நின்றவனை யொலிசேரும் மாருதத்தை
அருவாய்நின்றவனைத் தென்னழுந்தையில் மன்னிநின்ற
கருவார்கற்பகத்தைக் கண்டுகொண்டு களித்தேனே. (எ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
திரு	பெரிய பிராட்டியார்	ஒலிசேரும்	சப்தகுணத்தோடு
வாழ்	நித்யவாஸம் பண்ணுகின்ற	மாருதத்தை	கூடியவாயு(முதலான வ்யக்தபஞ்சபூதங்களையும் சரீரமாக உடையவனாய்)
மார்வன் தன்னை	திருமார்பையுடையவனை,	அருவாய்நின்றவனை	(அவற்றுக்கு) அந்தராத்மாவாய்க்கொண்டு) அரூபியாயிருக்குமவனாய்,
திசை	திக்குக்களுக்கும்	தென் அழுந்தையில் மன்னிநின்ற,	
மண்	பூமி	கருஆர்	கர்ப்பத்தை (வேர்ப்பற்றை) உடைத்தான
நீர்	ஜலம்	கற்பகத்தை	கல்பவ்ருக்ஷம் போன்றவனானவனை
எரி	அக்நி (கால் ஆகாசம் ஆகியஇவற்றுக்கு)	கண்டுகொண்டு களித்தேன். (எ)	
முதலாய்	காரணபூதனாய்க்கொண்டு		
உருவாய்	(இப்பஞ்சபூதங்களையும்) சரீரமாக உடையனாய்க்கொண்டு		
நின்றவனை	எழுந்தருளியிருக்குமவனாய்,		

வ்யா. —ஏழாம்பாட்டு. (திருவாழ்மார்வனித்யாதி) ஸ்வவ்யதிரிக்தருடைய ஐஶ்வர்யத்துக்கு நிதாநபூதையான பிராட்டி (க) "அகலகில்லேன்" என்றுவிரும்பி வர்த்திக்கும்படியான மார்வுபடைத்தவனை. (உ) „ఈశేశితవ్య వైషమ్య నిమ్నోన్నత మిదంజగత్ । నమశ్శ్రీరఙ్గనాయక్యై

(க) தி-வாய்-சு-க0-க0. (உ) ர-ஸ்த-க-எ.

ஸூர்யோ வஹ்நி தேவா:-ஈஶேஶிதவ்ய வைஷம்ய நிம்நோந்நதமிதஞ்ஜகத்। ஸம:ஶ்ரீரங்க ஶாயச்ஸயை யத்ப்ரூவிப்ரம.பேததஃ" என்னக்கடவதிறே. "திசை" திக்குக்கள். (மண்ணித்யாதி) காரணமான பூதபஞ்சகத்துக்கும் நிர்வாஹகனாய், அவற்றைத்தனக்கு சரீரதயா சேஷமாகவுடையவனை. (ஒலிசேரும்மாருதத்தை) தனக்கடைத்தஸ்பர்சத்தையும், ஆகாச குணமான சப்தத்தையும் உடைத்தாயிருக்கிற காற்றைத்தனக்கு ப்ரகாரமாகவுடையனானவனை.

இப்படிகாரணமான பதார்த்தங்களைக்கொண்டு தேவாதிகார்யங்களையடைய உண்டாக்கி (௧) "ததநுப்ரவிஶ்ய - ததநுப்ரவிஸ்ய" என்கிறபடியே ஜீவத்வாரா அவற்றிலே அநுப்ரவேசித்து பின்னை அவற்றைச் சொல்லும் சொல்லு தன்னளவும் வரும்படி இவற்றுக்கடங்க காரணபூதனாய் நிற்கிறவனை. திருவழுந்தூரிலே நித்யவாஸம் பண்ணுகிற. (கருவார் கற்பகத்தை) அடியுடைத்தான கல்பகமாய்த்து. ஸ்வர்க்கத்திலே நிராலம்பநமாக நிற்கிறதன்றிக்கே, பூமியிலே வேர்ப்பற்றுண்டானகற்பகத்தைக் கண்டுகொண்டு, என்ஸர்வாபேக்ஷிதங்களும்பெற்று த்ருஷ்டனானேன். ... ... (௭)

அரு.—எழாம்பாட்டு. (திருவாழித்யாதி) கீழ்ப்பாட்டில் சொன்ன பெரியோனானமைக்கு ஹேதுக்களை அருளிச்செய்கிறாரென்று ஸங்கதி.

எல்லாருடைய ஐஶ்வர்யத்துக்கு நிதாநமென்னைக்கு ப்ரமாணமருளுகிறார் (ஈஶேத்யாதி). "மண்ணிரெரி" என்று காற்றுக்கும் ஆகாசத்துக்கு முபலக்ஷணமென்று திருவுள்ளம்பற்றி, இவற்றுக்கு முதலாகையால், நிர்வாஹகனாகையால், இவற்றை, உருவாய் திருமேனியாக வுடையனாய் நின்றவனை என்று சப்தார்த்தமாய் தாத்பர்யமருளுகிறார் (காரணமானவித்யாதி). இத்தால் காரணபூதங்களைச்சொல்லிற்று. "ஒலிசேர்" என்று விசேஷித்தத்தால் ஸூசிதமான ஆகாசத்தையும் மாருதத்தையும் சொன்னது வ்யக்தகுணங்களான பூதபஞ்சகத்துக்கு முபலக்ஷணமென்று திருவுள்ளம்பற்றி தாத்பர்யமருளிச் செய்கிறார் (தனக்கித்யாதி).

அருவாய்நிற்கை அரூபியாய் நிற்கையாய், ஜீவத்வாரா அநுப்ரவேசிக்கிறத்தைச் சொல்லுகிறதென்கிறார் (இப்படியித்யாதி). "கரு" என்று கர்ப்பமாய், அத்தாலே (வேர்ப்பற்று) என்றபடி. கருவில் பொருந்தின கற்பகமென்று விசேஷித்ததுக்குக் கருத்தருளிச் செய்கிறார் (ஸ்வர்க்கேத்யாதி). ... ... (௮)

---

(௧) தை-ஆ-௬.

மூ.—நிலையாளாக வென்னை யுகந்தானை நிலமகள்தன்
முலையாள் வித்தகனை முது நான்மறை வீதிதொறும் [நின்ற
அலையாரும் கடல்போல் முழங்கும் தென்னழுந்தையில்மன்னி
கலையார் சொற்பொருளைக் கண்டுகொண்டு களித்தேனே. (௮)

பதம்.	உரை.	பதம்.	உரை.
என்னை	என்னை	வீதிதொறும்	வீதிகள்தோறும்
நிலை ஆளாக	நித்யகைங்கர்ய நிரதனாகப்(பண்ணி)	அலை ஆரும்	அலைகளினால் பூர்ணமான
உகந்தானை	ஸந்தோஷித்தவனாய்,	கடல்போல்	ஸமுத்ரம்போலே
நிலமகள்தன்	பூமிப் பிராட்டியினுடைய	முழங்கும்	கோஷியாநின்ற
		தென்அழுந்தையில் மன்னிநின்ற	
முலையாள்	முலையை ஆளவல்ல	கலை ஆர்	சாஸ்த்ரங்களிலேயுண்டான
வித்தகனை	ஆஶ்சர்யபூதனாய்,		
முது	பழையதான (அநாதியான) [வை	சொல்	வசநங்களுக்கு [னை
நால்மறை	நாலு வேதங்களான	பொருளை	ப்ரதிபாத்யனாயுள்ளவ.
		கண்டுகொண்டு களித்தேன். (௮)	

வ்யா.—எட்டாம்பாட்டு. (நிலையாளாகவென்னையுகந்தானை) (௧) "దేహి మే దదామి తే- தேஹிமே ததாமிதே" என்னும்படி ஏற்றுக்கொண்டுபோகாமே, நித்யகைங்கர்யத்திலே என்னை அந்வயிக்கும்படி உகந்தானை. தபஸ்ஸாலும் ஸமாதியாலும் பெறுவதொன்றல்ல காணும், அவனுகப்பாலேபெறில் பெறுமித்தனையல்லது, பெறவரியது காணும். (நிலமகளித்யாதி) ஸ்ரீபூமிப்பிராட்டியுடைய திருமுலைத்தடத்துக்கு, ஆனைக்குக் குதிரை வைக்கவல்ல ஆஶ்சர்யபூதனை.

(முதுநான்மறை) முதுநான்மறையுண்டு - பாசிபூத்தவேதம், அது திருவீதிகள்தோறும், திரைக்கிளப்பத்தையுடைய கடல் போலே கோஷியாநின்றுள்ள, தென்னழுந்தையில் மன்னிநின்ற. (கலையார் சொற்பொருளை) ஸகலகலைகளாலும், புருஷார்த்தமாக ப்ரதிபாதிக்கப்பட்டவனைக் கண்டுகொண்டு, என் ஸர்வாபேக்ஷிதங்களும் பெற்று ஹ்ருஷ்டனானேன். ... ... (௮)

அரு.—எட்டாம்பாட்டு. (நிலையித்யாதி) கீழ்ப்பாட்டிலே, ஸ்ரிய:பதித்வத்தையும், ஸர்வாந்தர்யாமித்வத்தையும், பெருமைக்கீடாக அநுஸந்தித்தார்; அவ்விரண்டாலும் தம்மை ஆட்கொள்ள வல்லானானானாகையாலே, அவனேப்ராபகனென்று களிக்கிறாரென்று ஸங்கதி.

---

(௧)

செய்தானை என்னாதே, "உகந்தானை" என்றதுக்குக் கருத்தென்னென்னவருளிச் செய்கிறார் (தபஸ்ஸாலு மித்யாதி). நிலமகள்முலை என்னாதே "தன்" என்றத்தாலே ஸ்வத்வமான அம்சத்தை அருளிச்செய்கிறார் (ஆனைக்கித்யாதி). இத்தாலே போக்ய ([illegible]) தாப்ரகர்ஷம் சொன்னபடி.

"நிலையாளாக" இத்யாதியால் ப்ராபகத்வம் ஸித்தமாகையாலே "சொற்பொருள்" என்றதுக்கு ப்ராப்யத்வவிவக்ஷயா வருளிச்செய்கிறா (ஸகலேத்யாதி). ... ... (அ)

மூ.—பேரானைக் குடந்தைப்பெருமானை இலங்கொளிசேர்
வாரார் வனமுலையாள் மலர்மங்கை நாயகனை
ஆராவின்னமுதைத் தென்னழுந்தையில் மன்னிநின்ற
காரார் கருமுகிலைக் கண்டுகொண்டு களித்தேனே. (௯)

பதம்.	உரை.	பதம்.	உரை.
பேரானை	திருப்பேர்நகரிலே ஸந்நிஹிதனாய்,	நாயகனை	வல்லபனாய்,
குடந்தைப்பெருமானை	திருக்குடந்தையிலெழுந்தருளியிருக்கிறஸர்வசேஷியாய்,	ஆரா	அநுபவிக்க அநுபவிக்க த்ருப்தி பிறவாதபடி
இலங்கு	விளங்காநின்ற	இன்	போக்யமான
ஒளிசேர்	காந்தியோடு கூடின	அமுதை	அம்ருதம்போன்றவனாய்
வார்ஆர்	கச்சையுடைத்தாய்	தென் அழுந்தையில் மன்னிநின்ற,	
வனமுலையாள்	அழகிய ஸ்தநங்களையுடையளான	கார்ஆர்	மழைகாலத்திலே
மலர்மங்கை	கமலவாஸிநியான பெரிய பிராட்டியார்க்கு	கருமுகிலை	இருண்ட மேகம்போல் ச்ரமஹரமானவனை
		கண்டுகொண்டு களித்தேன். (௯)	

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (பேரானை) திருப்பேரிலே ஸந்நிஹிதனானவனை. (குடந்தைப்பெருமானை) திருக்குடந்தையிலேவந்து, கண்வளர்ந்து தன்னுடைய சேஷித்வத்தை உதறிப்படுத்தவனை. (இலங்கொளியித்யாதி) நித்யமான யௌவநத்தையுடைய பெரியபிராட்டியாருக்கு வல்லபனானவனை.

(ஆராவின்னமுதை) அவ்விருவருமானசேர்த்தி இவர்க்குஇனிதாயிருக்கிறபடி. (தென்னழுந்தையித்யாதி) திருவழுந்தூரிலே நித்யவாஸம்பண்ணுகிற கார்காலத்தில் மேகம்போலே ச்ரமஹரமான

வடிவழகையுடையவனை, (கண்டுகொண்டு களித்தேனே) கண்கள் குளிரக்காணப் பெற்று த்ருப்தனானேன். ... ... (௯)

அந —ஒன்பதாம்பாட்டு. (பேராளையித்யாதி) இப்பாட்டில், நித்ய கைங்கர்யங்கொள்ள வந்தானென்று அநுஸந்தித்தார்; அக்கைங்கர்யத்துக்கு விஷயம் இருவருமாகையாலே, அச்சேர்த்தியில் தமக்குப் பிறந்த நிரதிசய போக்ய([illegible])தையை அநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி. அன்றிக்கே, மேழ ப்ராப்யனென்றார்; ப்ராப்யனானபடி தான் பல இடங்களிலேயும் வந்திருந்தமையாலே என்று, அத்தை உபபாதிக்கிறாரிங்கென்றுமாம்.

"உதறிப்படுக்கை" ப்ரகாசிப்பிக்கை. ... ... (௯)

மூ. —திறல் முருகனனையார் தென்னழுந்தையில் மன்னிநின்ற
அறமுதல்வனவனை யணியாலியர்கோன் மருவார்
கறைநெடுவேல் வலவன் கலிகன்றி சொல் ஐயிரண்டும்
முறை வழுவாமை வல்லார் முழுதாள்வர் வானுலகே. (௧௦)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பதம்.	உரை.
திறல்	பலத்தில்
முருகன்அனையார்	ஸுப்ரஹ்மண்யனோடொத்தவர்கள் நித்யவாஸம் பண்ணுகிற
தென்	ஸுந்தரமான
அழுந்தையில்	திருவழுந்தூரில்
மன்னிநின்ற	பொருந்தி நித்யவாஸம் பண்ணுநின்றவனாய்,
அறம் முதல்வனவனை	ஸகல தர்மங்களுக்கும் காரணபூதனுயுள்ளவன் விஷயமாக,
அணி	ஸம்ஸாரத்துக்கு ஆபரண பூதமான
ஆலியர்	திருவாலியிலுள்ளார்க்கு

பதம்.	உரை.
கோன்	ஸ்வாமியாய்,
மருவார்	சத்ருக்களுடைய
கறை	ரக்தக்கறையையுடையதாய்
நெடு	நீண்டிருக்கிற
வேல்	வேலாயுதத்தை
வலவன்	ஆள வல்லவரான
கலி கன்றி	ஆழ்வாரருளிச்செய்த
சொல்	ஸ்ரீஸூக்தியான
ஐ இரண்டும்	பத்துப் பாசுரங்களையும்.
முறைவழுவாமை	க்ரமம் தப்பாமல்
வல்லார்	சொல்ல வல்லவர்கள்
வான் உலகு	பரமபதத்தை
முழுது	ஸம்பூர்ணமாக
ஆள்வர்	பரிபாலநம் பண்ணப் பெறுவர்கள். (௧௦)

வ்யா. —பத்தாம்பாட்டு. (திறல் முருகனித்யாதி) மிடுக்கில் வந்தால், தேவஸேநாபதியான ஸுப்ரஹ்மண்யனில் குறைந்தாரில்லை

யாய்த்து அவ்வூரிலுள்ளாரில். (அறமுதல்வனவனை) தர்மத்தினுடைய வேர்ப்பற்றானவனை. ஸ்வஜநரக்ஷணம், ஜீவலோகரக்ஷணம், ஆஶ்ரிதரக்ஷணம், என்று சொல்லப்படுகிற தர்மங்களுக்கு வேர்ப்பற்றானவனை.

(அணியாலியரித்யாதி) ஸம்ஸாரத்துக்கு ஆபரணமான திருவாலியிலுள்ளார்க்கு நியாமகராயுள்ளார். (மருவாரித்யாதி) சத்ருநிரஸநத்தால்வந்த கறைகழற்ற அவஸரமில்லாதபடியிருப்பதாய், நெடியதான வேலைக்கையிலேயுடையரான ஆழ்வார் ஒலியையுடைத்தாம்படி அருளிச்செய்த இப்பத்தையும், அடைவில் தப்பாதபடி அநுஸந்திக்க வல்லவர்கள், (௧) "ஆண்மின்கள் வானகம்" என்கிறபடியே த்ரிபாத்விபூதியடையத் தாங்களிட்ட வழக்காகப் பெறுவர்கள். ... ... (௧௦)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

அரு —பத்தாம்பாட்டு· (திறலித்யாதி) முருகனை, "திறல்" என்று விசேஷித்ததுக்குத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (மிடுக்கித்யாதி). ... (௧௦)

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஏழாம்பத்தில் ஆறாந்திருமொழி முடிந்தது.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஏழாம்பத்து ஏழாந்திருமொழி

திருவுக்கும் ப்ரவேசம்.

வ்யா. —(திருவுக்கும் திருவாகிய வித்யாதி) "அடியேன் கண்டு கொண்டு களித்தேன்" என்றார்கீழ்; அதுதானேயாய் நிற்கப்பெறாதே, பாத (பா) கமான இந்த்ரியங்கள் விடாதே அணித்தாய்நின்று நலிகிறபடியை அநுஸந்தித்து அஞ்சி, நம்மாழ்வார் (௨) *உண்ணிலாவியில்பட்ட க்லேசத்தை யடையப்பட்டு, இதுக்குப்போக்கடி அவன் திருவடிகளிலே விழுந்து சரணம்புகுகைக்கு மேற்பட இல்லையென்று அத்யவஸித்து, புருஷகாரபூ(பூ)தையான பிராட்டிமுன்னாகத்தம்முடைய அநந்யகதித்வத்தைச் சொல்லிக்கொண்டு சரணம்புகுகிறார். *

---

(௧) தி-வாய்-௧௦-௯-௪.

(௨) தி-வாய்-௭-௧.

அரு.—திருவுக்கும் திருவின் ப்ரவேசம். கீழே ஸகலேந்த்ரியங்களும் பகவத் விஷயத்திலே ப்ரவணங்களாகப் பெற்றமையாலே மிகவும் களித்த இவர்க்கு, இந்த்ரியங்களுக்கு பயப்பட்டுச் சரணம் புகுகிற ப்ரஸக்தி ஏதென்னும் சங்கையிலே, "ஆராவின்னமுதை" என்று அபரிச்சிந்ந போக்யதையை அநுபவித்தவராகையாலே, யதா(தா)மநோரதம் பரிபூர்ணமாக அநுபவிக்கக்கோலி, அது பெறாமையாலே, இதுக்கு மூலம்-கர்மக்ருதமான இந்த்ரியங்களன்றோ ; இன்னும் பூர்வவாஸநாப(ப)லத்தாலே கொடுபோய் விஷயங்களிலே மூட்டில் செய்வதென்னென்று அதிசங்கையாலே மிகவுமஞ்சி, சரணம் புகுகிறாரென்று ஸங்கதியையருளிச் செய்கிறார் (அடியேனித்யாதி). ... ... *

மூ.—திருவுக்கும் திருவாகிய செல்வா
தெய்வத்துக்கரசே செய்யகண்ணா
உருவச்செஞ்சுடராழி வல்லானே
உலகுண்டவொருவா திருமார்பா
ஒருவற்காற்றி யுய்யும்வகை யென்றால்
உடனின்றைவரென்னுள் புகுந்தொழியா
தருவித் தின்றிட வஞ்சி நின்னடைந்தேன்
அழுந்தூர்மேல்திசைநின்ற வம்மானே. (க)

பதம்.	உரை.
திருவாகிய	(எல்லாருக்கும்) ஸம்பத்கரையான
திருவுக்கும்	பிராட்டிக்கும்
செல்வா	ஸம்பத்ரூபனே!
தெய்வத்துக்கு	நித்யஸூரிகளுக்கு
அரசே	அதிபதியே!
செய்யகண்ணா	சிவந்து அழகிய திருக்கண்களையுடையவனே! [யதாய்
உருவம்	அழகிய வடிவையுடை
செஞ்சுடர்	நிரவதிக தேஜோரூபமான
ஆழிவல்லானே	திருவாழியைக்கையிலே யுடையவனே!
உலகுண்ட	ஸமஸ்த, லோகங்களையும் விழுங்கிய
ஒருவா	அத்விதீயனே!
திருமார்பா	பிராட்டியை திருமார்பிலே யுடையவனே!
அழுந்தூர்	திருவழுந்தூரில்
மேல்திசை	மேல்பாகத்தில்
நின்ற	எழுந்தருளியிருக்கிற
அம்மானே	ஸ்வாமியானவனே!
ஒருவற்கு	ஒரு இந்த்ரியத்துக்கு
ஆற்றி	அபேக்ஷித்ததைப் பண்ணி
உய்யும்வகை	உஜ்ஜீவிக்கும்வகை
என்றால்	என்றால்,
ஐவர்	பஞ்சேந்த்ரியங்கள்
உடன்நின்று	ஸமீபத்திலிருந்து
என்னுள்புகுந்து	என்பக்கலிலே வந்து புகுந்து

ஒழியாது	ஒருக்ஷணமும் கால் வாங்காமல்	அஞ்சி	(அவற்றுக்கு) அஞ்சி
அருவி	அலைத்து	நின்	உன் (திருவடிகளிலே)
தின்றிட	நெருக்க [வந்து	அடைந்தேன்	சரணம்புகுந்தேன்.(க)

வ்யா.—முதற்பாட்டு. (திருவுக்கும் திருவாகிய செல்வா) ஸ்வவ்யதிரிக்தருடைய ஸம்பத்துக்கு நிதாநபூ(பூ)தையான பிராட்டிக்கு ஸம்பத்தானவனே! (தெய்வத்துக்கரசே) * அயர்வறுமமரர்களதிபதியே! புண்டரீகாக்ஷனான ஸர்வேஶ்வரனே! விரோதி நிரஸநத்துக்குப் பரிகரமாய், அழகிய வடிவையுடைத்தாய், நிரவதிக தேஜோரூபமான திருவாழியை கையிலேயுடைய ஸர்வேஶ்வரனே! லக்ஷ்மீபதியென்னுதல், நித்யஸூரிகளுக்கெல்லாம் நிர்வாஹகனென்னுதல், கைசலியாமல் திருவாழியைப் பிடிக்கவல்லவனென்னுதல், இவையிறேஸர்வாதிகத்வத்துக்கு லக்ஷணம். (உலகுண்டஒருவா) குணாகுணிநிரூபணம் பண்ணாதே, தளர்ந்தார் தாவளமானவனே! (திருமார்வா) உன்னைத் தளர்ந்தார் தாவளமாக்குமவளைத் திருமார்விலே யுடையவனே!

(ஒருவற்கித்யாதி) ஏகவிஷயத்தில் சேஷத்வம் குலைந்தது கிடாய். ஒருவற்கு ஆடல்கொடுத்து உஜ்ஜீவிக்கும்படியாயிருக்கிறதில்லை. (உடனின்று) ரக்ஷகனான உன்னிற்காட்டிலும் பாத (த) கவர்க்கம் அணித்தாய்நின்று நலியாநின்றன. (க) "உண்ணிலாவிய" என்னுமாபோலே, ஒருவரிருவரன்றிக்கே சேதநஸமாதியாலே நலியாநின்றுள்ள ஐந்திந்த்ரியங்கள் என்பக்கலிலே வந்துபுகுந்து என்னைநெருக்கி, ஒருக்ஷணமும் கால்வாங்குகிறனவில்லை. (அருவித்தின்றிட) "என்னுடைய விஷயத்தைக்காட்டு, என்னுடைய விஷயத்தைக்காட்டு" என்று, இவைதனித்தனியே, அலைத்துநெருக்க அவற்றுக்கு அஞ்சி வந்து, ஸர்வஸ்வாமியான உன் திருவடிகளிலே, சரணம் புகுந்தேன். (அழுந்தூர் மேல்திசைநின்ற வம்மானே) ரக்ஷணத்தில் அதிகரித்த உனக்கு அத்தைமுடிய நடத்தவேண்டாவோ? (க)

அரு.—முதற்பாட்டு. (திருவித்யாதி) திருவாகிய-எல்லார்க்கும் ஸம்பத்கரையான, திருவுக்கும், "செல்வா" ஸம்பத்ரூபனே என்று அர்த்தவிவக்ஷயாவருளிச் செய்கிறார் (ஸ்வவ்யதிரிக்தேத்யாதி). "உருவம்" என்றது - உருவையுடைத்தான என்றது. அத்தால் வடிவாதல், அழகாதலாகலாமென்று யோஜநாத்வயத்தையும் தந்த்ரேணவருளிச் செய்கிறார் (விரோ

(க) தி-வாய்-எ-க.

திஇத்யாதி). (நிர்வாஹகனென்னுதல்) என்ற வநந்தரம் "புண்டரீகாக்ஷனென்னுதல்" என்று சேஷம். ஸர்வேஶ்வரத்வத்துக்கு உபயுக்தமாக ஶ்ரியஃபதித்வத்தைக் கீழருளிச்செய்தாராய், புருஷகாரத்வம் தோற்ற இங்கே அநுஸந்திக்கிறா ரென்னுமிடம் தோற்ற பா(ஞு)வமருளிச்செய்கிறார் (உன்னையித்யாதி).

மேலே "ஐவர்" என்கிறத்தைக் கடாக்ஷித்து வாக்யதாத்பர்யமருளிச் செய்கிறார் (ஏகேத்யாதி). (ஏகவிஷயத்தில்) நீயாகிற ஒருவிஷயத்தில். சப்தார்த்தம் (ஒருவற்கித்யாதி). "ஒருவற்கு" ஓரிந்த்ரியத்துக்கு "ஆற்றி" அபேக்ஷிதத்தைக் கொடுத்து, ஆறப்பண்ணி, இதினர்த்தம் (ஆடல்கொடுத்து) என்றது. (உஜ்ஜீவிக்கும்படி) ப்ராப்தவிஷயத்திலே மூட்டும்படி. (அணித்தாய்) என்றதுக்கு, கர்மவஶ்யனாகையாலே, கர்மக்ருதங்களானவை சேர்ந்திருக்குமென்று கருத்து ; அன்றிக்கே, நீ இந்த அவஸரம் பார்த்துப் புகுந்தாய் ; இவை ஸஹஜங்களென்றாகவுமாம். ... (க)

மூ.—பந்தார் மெல்விரல் நல்வளைத்தோளி
பாவைபூமகள் தன்னொடுமுடனே
வந்தாயென்மனத்தே மன்னிநின்றாய்
மால்வண்ணா மழைபோலொளிவண்ணா
சந்தோகா பௌழியா தைத்திரியா
சாமவேதியனே நெடுமாலே
அந்தோ நின்னடியன்றி மற்றறியேன்
அழுந்தூர் மேல்திசை நின்றவம்மானே. (உ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
பந்து ஆர்	(எப்போதும்) பந்தையுடைத்தாய்	என்மனத்தே	என் ஹ்ருதயத்திலே
மெல்	ம்ருதுவான [ய்	மன்னி	பொருந்தி
விரல்	விரற்களையுடையளா	நின்றாய்	எழுந்தருளி யிருக்குமவனே!
நல்வளை	அழகிய வளைகளையுடையளாய், [ய்	மால் வண்ணா	கறுத்ததிரு நிறத்தையுடையவனே
தோளி	புஜங்களையுடையளா	மழைபோல்	மேகத்தோடொத்த (குளிர்ந்த)
பாவை	(ரூபாதிக) ஸ்த்ரீத்வத்தை யுடையளுமான	ஒளி	காந்தியையும்
பூமகள்தன்னொடும்	பெரிய பிராட்டியாரோடு [ண்டே	வண்ணா	வர்ணத்தையு முடையவனே !
உடனே	கூடினவனாய்க் கொ	சந்தோகா	சாந்தோக்யோபநிஷதர்த்தத்தையறிந்தவனே !
வந்தாய்	எழுந்தருளினவனே!		

பௌழியா	ப்ருஹதாரண்யகோபநிஷதர்த்தத்தை யறிந்தவனே!
தைத்திரியா	தைத்திரீயோபநிஷதர்த்தத்தை யறிந்தவனே!
சாமவேதியனே	ஸாமவேதார்த்தமறிந்தவனே!
நெடு	(அவ்வேதங்களில்ப்ரதிபாதிக்கப்பட்ட) மேன்மையையுடைய
மாலே	ஸர்வாதிகனே! அழுந்தூர்மேல் திசைநின்ற அம்மானே!
நின்	உன்னுடைய
அடியன்றி	திருவடிகளையொழிய
மற்று	வேறொரு புகலை
அறியேன்	அறியமாட்டேன்
அந்தோ	ஐயோ!(என்றுஅவன் தம் நெஞ்சில் வந்தமைக்கு ஆஶ்சர்யப்படுகிறார்). (௨)

வ்யா.—இரண்டாம்பாட்டு. (பந்தாரித்யாதி) ஸர்வேஶ்வரனோடு கலக்கும்போது மகப்பட, ஒருக்ஷணமும் விடாதே, பந்தையுடையளாய், அப்பந்துமுட்படப் பொருத விரல்களையுடையளுமாய். (நல்வளைத்தோளி) தர்ஶநீயமான வளைகளை யுடைய திருத்தோள்களை யுடையளுமாய், நிருபாதிகமான ஸ்த்ரீவத்தையுடையளாய், தாமரைப்பூவை இருப்பிடமாகவுடையபெரியபிராட்டியாரோடுகூடவந்தாய். (க)“அரவிந்தப்பாவையும் தானும்” என்கிறபடியே ஸபரிகரனாய்க் கொண்டாய்த்து வந்துபுகுந்தது. (என்மனத்தே மன்னிநின்றாய்) இவ்வரவாலே நெஞ்சை நெகிழப்பண்ணி விலக்காமையுண்டானவாறே, (௨)“𑌆𑌵𑌾𑌸𑌂 𑌤𑍍𑌵𑌹𑌮𑌿𑌚𑍍𑌛𑌾𑌮𑌿- ஆவாஸந்த்யஹமிச்சாமி” என்கிறபடியேவந்து புகுந்தானாய்த்து. (மால்வண்ணா) கறுத்த திருநிறத்தை யுடையவனே! (மழைபோலொளிவண்ணா) கறுத்திருக்கையன்றிக்கே, மேகம்போலே குளிர்ந்த வடிவையுடையவனே.

(சந்தோகாவித்யாதி) ஆர்த்தரக்ஷணத்துக்கீடான ஸர்வஜ்ஞத்வத்தை யுடையவனே. இத்தால் வேதார்த்ததத்வஜ்ஞாந முடையவனே என்றபடி. (நெடுமாலே) அவ்வேதங்களாலேசொல்லப்படுகிற ஆதிக்யத்தையுடைய ஸர்வாதிகனே. (அந்தோவித்யாதி) வேறேயும் சில ரக்ஷகருண்டாய், “அவர்கள் ரக்ஷிக்கிறார்கள்” என்று உனக்கு ஆறியிருக்க வொண்ணாதுகிடாய்; அநந்யகதியான நான் உன்திருவடிகளொழிய வேறொரு புகலுடையேனல்லேன். (அழுந்தூர் மேல்திசை

(க) பெரி-திரு-௩-௨-௧௦.

(௨) ரா-ஆ-௫-௩௩.

நின்ற வம்மானே) அநந்யகதிகளை நோக்குகைக்கன்றோ தேவரீர் இங்கே வந்து நிற்கிறது. ... ... (௨)

அநு.—இரண்டாம்பாட்டு. (பந்தாரித்யாதி) கீழ்ப்பாட்டிலே, ஆஸ்ரயண ஸௌகர்ய பாதக குணங்களை அநுஸந்தித்து, உத்தம்பி(ஷு)கையான பிராட்டியை முன்னிட்டுச் சரணம் புக்கார்; இதில், கார்யாபாதக குணங்களை அநுஸந்தித்து, தம்முடைய ஆகிஞ்சந்யத்தை இருவருமான சேர்த்தியிலே விண்ணப்பம் செய்கிறாரென்று ஸங்கதி.

நெடுமையால் ஆதிக்யம் சொல்லி "மால்" என்றும் பெருமையைச் சொன்னால், புருஷோத்தமன்றோ வென்னவருளிச் செய்கிறார் (அவ்வேதங்களாலே யித்யாதி). ... ... (௨)

மூ.—நெய்யாராழியும் சங்கமுமேந்தும்
நீண்டதோளுடையாயடியேனைச்
செய்யாதவுலகத்திடைச்செய்தாய்
சிறுமைக்கும் பெருமைக்குமுள்புகுந்து
பொய்யாலைவரென் மெய்குடியேறிப்
போற்றிவாழ்வதற்கஞ்சி நின்னடைந்தேன்
ஐயாநின்னடியன்றி மற்றறியேன்
அழுந்தூர் மேல்திசைநின்றவம்மானே. (௩)

பதம்.	உரை.
ஐயா	கிருபாதிக பந்துவே!
அழுந்தூர்மேல் திசைநின்ற அம்மானே!	
நெய்ஆர்	கூர்மை மிக்கிருந்துள்ள
ஆழியும்	ஸுதர்சநத்தையும்
சங்கமும்	ஸ்ரீபாஞ்சஜந்யத்தையும்
ஏந்தும்	தரியாநின்ற
நீண்ட	தீர்க்கமான
தோள்	புஜங்களை
உடையாய்	உடையவனே!
உலகத்திடை	(இந்த)லோகத்திலே
செய்யாத	(மற்றொருவர் விஷயத்தில்)பண்ணப்படாத (உன்விஷயமான ருசி விஸ்வாஸாதிகளை)

பதம்.	உரை.
செய்தாய்	உண்டுபண்ணினவனே!
சிறுமைக்கும்	க்ஷுத்ரவிஷயங்களை அநுபவிக்கைக்கும்
பெருமைக்கும்	பெரியவிஷயங்களை அநுபவிக்கைக்குமாக
பொய்யால்	வஞ்சனையினாலே (காணுமறியாதபடி)
உள்புகுந்து	என்னுள்ளே ப்ரவேசித்து
என் மெய்	என்னுடைய சரீரத்திலே
குடியேறி	(ஸ்வஸ்தாநத்திற் போய்) நித்யவாஸம் பண்ணிக்கொண்டிருக்கிற

ஐவர்	பஞ்சேந்த்ரியங்களை
போற்றி	ஸ்துதிபண்ணி அநுவர்த்தித்து
வாழ்வதற்கு	வாழ்கைக்கு
அஞ்சி	பயந்து
நின்	உன் திருவடிகளை
அடைந்தேன்	(புகலாகப்) பற்றினேன். (௩)

வ்யா.—மூன்றாம்பாட்டு. (நெய்யாரித்யாதி) கடைந்து பற்றற நெய்யிட்டிருக்கிற திவ்யாயுதங்களையுடையவனே. நெய்-கூர்மை, ஆர்தல்-மிகுதி, கூர்மை மிக்கதிருவாழி. அவற்றுக்குத் தகுதியான திருத்தோள்களையுடையவனே! (அடியேனை) தேவர்க்கு யோக்யனாயிருக்கிற என்னை. (உலகத்திடைச்செய்யாதவற்றைச் செய்தாய்) லோகத்திலே செய்யாதவற்றையெல்லாம் செய்தாய். உன் திருவடிகளில் கைங்கர்யத்தை நினையாத லோகத்திலே வைத்தாய்.

(சிறுமைக்கும் பெருமைக்கு முள்புகுந்து) க்ஷுத்ரவிஷயங்களை லபிக்கைக்கும், கிட்டவரிய விஷயங்களை லபிக்கைக்குமாக. க்ருத்ரிமரூபத்தாலே "நான்" என்கிற சொல்லுக்குள்ளே அடங்கும்படி என் சரீரத்திலேவந்து குடிபுகுந்தனவாய்த்து. (போற்றிவாழ்வதற்கஞ்சி) அவற்றை ஆராதித்துப் பின்சென்று வர்த்திக்குமதற்கஞ்சி. (நின்னடைந்தேன்) நிருபாதிகசேஷியான உன்னைக்கிட்டினேன். (ஐயா) நிருபாதிக பந்துவே! உன்திருவடிகளையொழிய வேறொரு புகலுடையேனல்லேன். (அழுந்தூர்மேல்) நிருபாதிக பந்த (ப³ந்த⁴) ம்தோற்றவந்து நிற்கிறவனே. ... ... (௩)

அரு.—மூன்றாம்பாட்டு. (நெய்யாரித்யாதி) கீழ், கார்யாபாதககுணங்களில் ஸர்வஜ்ஞதையை அநுஸந்தித்தார்; அவற்றில் சக்திமத்வத்தையும் ப்ராப்தியையு மநுஸந்திக்கிறாரிங்கு என்று ஸங்கதி.

அர்த்தாந்தரம் (நெய்யித்யாதி). அந்வயம் காட்டுகிறார் (உலகத்திடையித்யாதி). செய்யாதவற்றைச் செய்கையாவது என்னென்ன வருளிச் செய்கிறார் (உன்னித்யாதி). (லோகத்திலே) என்றவநந்தரம், "கைங்கர்ய ருசியுண்டாக்கி இந்த்ரியங்களுக் கஞ்சும்படி" என்று சேஷம்.

(குடியேறி) என்றவநந்தரம், "வர்த்திக்கிற" என்று மூலத்தில் அத்யாஹாரம் திருவுள்ளம்பற்றியருளிச் செய்கிறார் (க்ஷுத்ரேத்யாதி) (௩)

மூ.—பரனேபஞ்சவன் பௌழியன் சோழன்
பார்மன்னர் மன்னர்தாம் பணிந்தேத்தும்
வரனே மாதவனே மதுசூதா மற்றோர்
நற்றுணை நின்னலாலிலேன்காண்

நரனே நாரணனே திருநறையூர் நம்பீ
எம்பெருமா னும்பராளும்
அரனே ஆதிவராஹமுன்னாய்
அழுந்தூர்மேல் திசைநின்றவம்மானே. (௪)

பதம்.	உரை.
பரனே	ஸர்வாதிகனே!
பஞ்சவன்	பஞ்சவனென்றும்
பௌழியன்	பௌழியனென்றும்,
சோழன்	சோழனென்றும் ப்ரஸித்தராய்
மன்னர்	ஸகலைஶ்வர்யஸம்பூர்ணராய்
ப்பார்	(அவ்வவ) தேசங்களுக்கு
மன்னர்	ராஜாக்களாயுள்ளவர்கள்;
தாம்	தாங்களே (தங்களுடைய அபீஷ்டஸித்திக்காக)
பணிந்து	ஆஶ்ரயித்து
ஏத்தும்	ஸ்தோத்ரம்பண்ணும்படியாக எழுந்தருளியிருக்கிற.
வரனே	ஆஶ்ரயணீயனே!
மாதவனே	ஶ்ரிய:பதியே
மதுஸூதா	மதுவென்னும் அஸுரனை நிரஸித்தவனே!
நரனே நாரணனே	(ஆஶ்ரிதரைப் பெறுகைக்காக) நரனும் நாராயணனுமவதரித்தவனே!

பதம்.	உரை.
திருநறையூர்	திருநறையூரிலே எழுந்தருளியிருக்கிற
நம்பி	பூர்ணனே!
எம்பெருமான்	எனக்கு நிருபாதிகசேஷியானவனே!
உம்பர்	தேவதைகளை
ஆளும்	(தனக்குக் கீழ்ப்படுத்தி) பரிபாலநம் பண்ணவல்லனான
அரனே	ருத்ரனுக்கு அந்தர்யாமியாயுள்ளவனே!
முன்	ஆதிகாலத்தில்
ஆதிவராஹமானாய்	ஜகத்காரணபூதமான மஹாவராஹமாயவதரித்தவனே,
அழுந்தூர்மேல் திசைநின்ற அம்மானே!	
நின் அலால்	உன்னையொழிய
நல்	பரார்த்தைகப்ரயோஜநமான
மற்றுஓர்	வேறொரு
துணை	ரக்ஷகனை
இலேன்	உடையேனல்லேன்.

வ்யா. —நாலாம்பாட்டு. (பரனே) ஸர்வஸ்மாத்பரனானவனே, (பஞ்சவனித்யாதி) "பஞ்சவன்" என்றும் "பவுழியன்" என்றும் சோழர்கள்பேர், ஓரோராஜ்யங்களுக்குக் கடவராய், ஐஶ்வர்யப்ரதாநராயிருக்கிற ராஜாக்கள், தந்தாமுடைய அபிமதார்த்தமாக வந்தாஶ்ரயித்து, அவைபெற்றுப்போம்படிக்கீடாக நிற்கிறபரனே! அவர்களுக்கு

ஆஶ்ரயணீயனாயுள்ளவனே. (மாதவனே) அவர்களுடைய அபிமதங்களைத் தலைக்கட்டிக் கொடுப்பிக்கும் புருஷகாரத்தையுடையவனே. (மதுசூதா) அவர்களுடைய விரோதியைப் போக்குகைக்கீடான விரோதி நிரஸநசீலனானவனே. (மற்றோர் நற்றுணை) தன்னை அழிய மாறியும் அடைந்தாரை நோக்கும் துணை உன்னையொழிய வேறொருவரை யுடையேனல்லேன்.

(நரனே நாரணனே) ஆஶ்ரிதார்த்தமாக அவர்கள் உன்னைப் பெறுகைக்குப் பண்ணும் தபஸ்ஸை, நீ அவர்களைப் பெறுகைக்காகப் பண்ணுமவனே. (திருநறையூர் நம்பி) திருநறையூரிலே வந்து நிற்கிற கல்யாணகுண பரிபூர்ணனே. (எம்பெருமான்) அங்கே பிராட்டியும் நீயுமாய் நிற்கிற நிலையைக்காட்டி என்னை அநந்யார்ஹனாக்கினவனே. (உம்பராளுமரனே) மேலுண்டான தேவதைகளை நிர்வஹிக்கிற ருத்ரனுக்கு அந்தராத்மாவாய்நின்று அவர்களை நிர்வஹிக்கிறவனே. (௧) "రుద్రం సమాశ్రితా దేవా రుద్రో బ్రహ్మాణమాశ్రితః । బ్రహ్మా మామాశ్రితో రాజన్ నాహం కంచిదుపాశ్రితః - ருத்ரம் ஸமாஶ்ரிதா தேவா ருத்ரோ ப்ரஹ்மாணமாஶ்ரித: । ப்ரஹ்மா மாமாஶ்ரிதோ ராஜந் நாஹம் கஞ்சிதுபாஶ்ரித:" என்னாநின்றதிறே. (ஆதிவராஹ முன்னாய்) ஒருவனுக்குள்ளீடாய் நின்று ரக்ஷிக்கையன்றிக்கே, வராஹ கல்பத்தினுடைய ஆதியிலே மஹாவராஹமாய்வந்து அவதரித்து கண்ணுக்கிலக்காய் நின்று நோக்கினவனே. (அழுந்தூர்மேல்) அது தன்னைப் பழங்கதையாக்கி, இப்போது திருவழுந்தூரிலே வந்து நிற்கிறவனே. ... ... (௪)

அரு.—நாலாம்பாட்டு. (பரனித்யாதி) கீழ்ப்பாட்டில், தம்மை லோகத்தாரில் வ்யாவ்ருத்தராக வைத்த உபகாரஸ்ம்ருதி பண்ணியருளினார்; அவ்வுபகாரஸ்ம்ருதியடியாக வாயார ஏத்தியருளுகிறா ரென்று ஸங்கதி.

"நரனே" என்றத்தையும் "வராஹம்" என்றத்தையும் கடாக்ஷித்து (தன்னை யழிய மாறி) என்றது.

அரனை "உம்பராளும்" என்று விசேஷித்ததுக்கு ப்ரமாணம் (ருத்ரமித்யாதி). (௪)

---

(௧) பாரத-ஆஶ்வமேதிக பர்வம்.

மூ.—விண்டான் விண்புக வெஞ்சமத்தரியாய்
பரியோன் மார்வகம் பற்றிப்பிளந்து
பண்டானுய்ய வோர்மால்வரையேந்தும்
பண்பாளா பரனே பவித்திரனே
கண்டேன் நான் கலியுகத்ததன் தன்மைக்
கருமமாவது மென்றனக்கறிந்தேன்
அண்டா நின்னடியன்றி மற்றறியேன்
அழுந்தூர் மேல்திசைநின்றவம்மானே. (௫)

பதம்.	உரை.
விண்டான்	தன்னோடு சேராத சத்ருவான ஹிரண்யன் (உயிர்மாண்டு)
விண்புக	வீரஸ்வர்க்கத்தில்ப்ரவேசிக்கும்படியாக
வெஞ்சமத்து	க்ரூரமான யுத்தத்திலே [கொண்டு
அரியாய்	நரஸிம்ஹரூபியாய்க்
பரியோன்	பருத்திருக்கிற ஹிரண்யனுடைய
மார்வகம்	மார்வை [த்து
பற்றி	(நகங்களாலே) பிடி
பிளந்து	கிழித்துப் பொகட்டவனே,
பண்டு	க்ருஷ்ணாவதாரத்தில்,
ஆன்	பசுக்கள்
உய்ய	பிழைக்கும்படி
மால்	பெரிய
ஓர்வரை	ஒருமலையை
ஏந்தும்	(குடையாக) தரியா நின்ற
பண்பாளா	ஸௌலப்யத்தையுடையவனே!
பரனே	மற்றரக்ஷகரெல்லாரிலுமுயர்ந்தவனே!
பவித்திரனே	(ஆஶ்ரிதரை)பரிசுத்தராக்கவல்லவனே.!
அண்டா	அண்டாதிபதியே!
அழுந்தூர்மேல் திசைநின்ற அம்மானே!	
நான்	நான்
கலியுகத்ததன்	கலியுகத்தினுடைய
தன்மை	ஸ்வபாவத்தை
கண்டேன்	அறிந்தேன்,
என்றனக்கு	எனக்கு
கருமமாவதும்	ஹிதரூபமான கர்மத்தையும்
அறிந்தேன்	நிஶ்சயித்துக் கொண்டேன்;(அதாவதேதென்னில்)
நின் அடியன்றி மற்றறியேன். (௫)	

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (விண்டானித்யாதி) ஹிரண்யாஸுரனானவன், வீரஸ்வர்க்கத்துக்கு ஏறிப்போம்படியாக. (வெஞ்சமத்து) கொடிய யுத்தத்திலே நரஸிம்ஹவேஷத்தையுடையனாய், அஹங்கார மமகாரங்களாலே தடித்த வடிவையுடையனானவனுடைய மார்வைச் சென்று பற்றி, இரண்டு பிளவாம்படிபண்ணி. (பண்டானுய்ய) இத்தால், அது சிறுக்கனறியச் செய்ததொரு செயலிறே; அங்ஙன் உப

காரஸ்ம்ருதியு மில்லாத பசுக்களுக்கும் இடையர்க்கும் உதவினபடியைச் சொல்லுகிறது. முன்பு பசுக்களும் இடையரும் பிழைக்கும்படி கைக்கெட்டிற்றொரு பெருமலையை எடுத்து ரக்ஷித்த நீர்மையை யுடையவனே. (பரனே) இப்ப்ரஜாரக்ஷண தர்மத்தில் உனக்கவ்வருகொருவருமில்லாதபடி இருக்கிறவனே. (பவித்திரனே) அசுத்தரையும் சுத்தராக்கும் சுத்தியை யுடையவனே.

(கண்டேன் நான்கலியுகத்ததன் தன்மை) இக்கலியுகத்தினுடைய ஸ்வபாவத்தை நானழகிதாகக் கண்டேன். உன்பக்கத்திலே வைமுக்க்ய(ஷூ)த்தை யுண்டாக்கி விஷயப்ராவண்யத்தைப் பிறப்பித்து முடிக்கும் ஸம்ஸாரஸ்வபாவத்தை நானழகிதாக அறிந்தேன். (கருமமாவதுமென்றனக் கறிந்தேன்) எனக்கு ஹிதமாவதுவும் உன்திருவடிகளை ஆஶ்ரயிக்குமதுவே என்றறிந்தேன். (அண்டா) அண்டத்துக்கு நிர்வாஹகனானவனே! அன்றிக்கே இடையர்க்கு நிர்வாஹகனானவனே, என்றுமாம். (அழுந்தூரித்யாதி) ஸ்ரீப்ரஹ்லாதனுக்கும் இடையர்க்கும் பசுக்களுக்கும் உதவினபடியே பிற்பாடர்க்கும் உதவுகைக்காகவன்றோ இங்கு வந்து நிற்கிறது. ... ... (௫)

அரு.—அஞ்சாம்பாட்டு. (விண்டானித்யாதி) கீழ்ப்பாட்டில், வாயாரப் புகழ்ந்து, ராஜாக்களுக்குக் கொடுத்துக்கொண்டிருக்கிற படியைச் சொல்லி, நீயே கதி என்றார்; எம்பெருமான், நீரிங்ஙனே நம்மைக்கொண்டாடுவது, அநந்யகதித்வத்தைப் பலகாலும் சொல்லுவது, ஆக இப்படிபடுகைக்கு மூலமென்னென்று கேட்க அருளிச்செய்கிறாரென்று ஸங்கதி.

“சமரம்” என்றத்தைக்கடைக்குறைத்தலாய், “சமம்” என்றுக்தியருளிச் செய்கிறார் (கொடியவித்யாதி). “ஆனுய்ய” என்றதுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இத்தாலித்யாதி). சப்தார்த்தம் (முன்பித்யாதி).

கீழ்வாக்யவிவரணம் (உன்பக்கலித்யாதி). ... ... (௫)

மூ.—தோயாவின் தயிர் நெய்யமுதுண்ணச்
சொன்னார் சொல்லி நகும் பரிசே பெற்ற
தாயாலாப்புண்டிருந்தழுதேங்கும்
தாடாளா தரையோர்க்கும் விண்ணோர்க்கும்
சேயாய் கிரேத திரேத துவாபார
கலியுகமிவை நான்குமுனாய்
ஆயா நின்னடியன்றி மற்றறியேன்
அழுந்தூர்மேல்திசைநின்ற வம்மானே. (௬

பதம்.	உரை.
சொன்னார்	வாய்வந்தபடி சொல்லவல்லவர்கள்
சொல்லி	நவநீத சௌர்யத்தை வெளிப்படையாகச்சொல்லி
நகும்	பரிஹஸியாநின்ற
பரிசே	ப்ரகாரமும் (மதிக்கவற்றோ? என்று பழிக்கஞ்சாதே)
தோயா	நன்றாகத்தோயாதே
இன்தயிர்	மதுரமான தயிரையும்
நெய்	நெய்யையும்
அமுதுண்ண	அமுது செய்யாநிற்க (அப்பொழுது)
பெற்றதாயால்	பெற்றதாய்போல் ப்ரியகரையான யசோதையினால்
ஆப்புண்டு	கட்டுண்டு
இருந்து	போகமாட்டாதே நின்று
அழுத	அழுது (அதிலும்)

பதம்.	உரை.
ஏங்கும்	வாய்விடமாட்டாதே விக்கிவிக்கி அழாநின்ற
தாடாளா	பெரியோனே!
தரையோர்க்கும்	பூமியிலுள்ளார்க்கும்
விண்ணோர்க்கும்	மேலுலகத்திலுள்ளார்க்கும்
சேயாய்	கிட்டவரியனே
முன்	முன்னமே
கிரேததிரேத துவாபரகலியுகம்	க்ருதயுகம் த்ரேதாயுகம் த்வாபரயுகம் கலியுகம் என்று சொல்லப்படுகிற
இவைநான்குக்கும் ஆனாய்	இந்நாலு யுகங்களுக்கும் நிர்வாஹகனானவனே!
ஆயா	இடையனான க்ருஷ்ணனே!

அழுந்தூர் மேல் திசைநின்ற அம்மானே!
நின் அடியன்றி மற்று அறியேன். (௬)

வ்யா. —ஆறும்பாட்டு. (தோயாவின்தயிரித்யாதி) அறத் தோயாத இனிய-தயிரையும், நெய்யையும் பொருந்தி அமுதுசெய்ய. (சொன்னாரித்யாதி) வாய்க்குப் போந்தார் போந்தபடி சொல்லுகிற பழிக்கஞ்சாதே, "மழலைத்தயிரும் நெய்யும் புஜித்தோமாகில், இதுக்கு வருவதொன்றுண்டோ?" என்றும், "ஒன்றையிட்டுப்பழிசொல்லுகிறார்களன்றோ" என்றும் நாட்டார் சொல்லுகிற பழிக்கு லஜ்ஜியாதே இருந்தானாய்த்து. (பெற்ற தாயாலாப்புண்டு) யசோதைப் பிராட்டியாலே கட்டுண்டு. (அழுத)ப்ரதிக்ரியை அற்றுப் போகமாட்டாதே நின்ற வேண்டப்பாட்டை யுடையவனே.

(தரையோர்)பூம்யந்தரிக்ஷங்களிலுள்ளார் ஸ்வயத்நத்தாலே காணப்பார்க்குமன்று அவர்களுக்கு தூரஸ்தனானவனே! நீரிங்ஙனே பதறுகிறதென்? காலம்வந்து கார்யம் செய்யவேண்டாவோவென்ன; (கிரே

ததிரோத) (க) "𑌕𑌲𑍌 𑌕𑍃𑌤𑌯𑍁𑌗𑌂 𑌤𑌸𑍍𑌯-கலௌ க்ருதயுகம் தஸ்ய" என்னவொண்ணாதோ உனக்கு, காலம் நீ இட்டவழக்கன்றோ? உன் திருவடிகளையொழிய வேறொன்றை யறியேன். (அழுந்தூர்மேல்) அந்த க்ருஷ்ணாவதாரத்தில் பிற்பாடர்க்கும் இழவாமைக்கன்றோ நீ இங்கு வந்து நிற்கிறது. ... ... (௬)

அரு.—ஆறும்பாட்டு. (தோயாவித்யாதி) கீழ்ப்பாட்டிலே, "கலியுகத்தன் தன்மையறிந்தேன்" என்றுநின்றீர், உமக்குறுப்பாக, இனி கலியுகத்தை அழிக்கச் சொல்லுகிறீரோவென்ன அருளிச் செய்கிறாரென்று ஸங்கதி.

† கலியுகத்தை உண்டாக்கமாட்டாயோ என்று கருத்து. [சொன்னார் சொல்லி நகும்பரிசே தோயா வின்தயிர் நெய்யமுதுண்ண பெற்ற தாயாலாப்புண்டு] என்றந்வயமாய் தாத்பர்யமருளிச்செய்கிறார் (மழலையித்யாதி). "தரையோர்" என்கிற விடத்தில் "𑌧𑌰𑌾" என்கிற சப்தம் "தரை" என்றாய் பூமியைச் சொல்லுகிறதென்று அருளிச்செய்கிறார் (பூம்யந்தரிக்ஷேத்யாதி). ... ... (௬)

மூ.—கறுத்துக் கஞ்சனை யஞ்ச முனிந்தாய்
கார்வண்ணா கடல்போலொளிவண்ணா
இறுத்திட்டான் விடையேழும் முன் வென்றாய்
எந்தாயந்தர மேழுமுணாய்
பொறுத்துக்கொண்டிருந்தால் பொறுக்கொணாப்
போகமே நுகர்வான் புகுந்தைவர்
அறுத்துத்தின்றிடவஞ்சி நின்னடைந்தேன்
அழுந்தூர்மேற்றிசை நின்ற வம்மானே. ... (௭)

பதம்.	உரை.	பதம்.	உரை.
கஞ்சனை	கம்ஸனை	ஒளி	நீலமானகாந்தியையும்
கறுத்து	கோபித்து	வண்ணா	ரக்ஷகத்வஸ்வபா(𑌭𑌾)வத்தையு முடையவனே!
அஞ்ச	அவன் பயப்படும்படி	விடை	ப்லிஷ்ட்டமான
முனிந்தாய்	(அவனை நிரஸித்தருளினவனே!	ஆன் ஏழும்	ஏழு வ்ருஷபங்களையும்
கார்வண்ணா	மேகம்போல் குளிர்ந்த வடிவையுடையவனே!	முன்	க்ருஷ்ணாவதாரத்தில்
கடல்போல்	ஸமுத்ரம் போன்ற	இறுத்திட்டு	(உடலை) முறித்து

(க) விஷ்ணுதர்ம-௧௦௯-௯௭. † "கலியுகத்தில் க்ருதயுகத்தை உண்டாக்கமாட்டாயோ" என்று இருக்கலாம்.

வென்றாய்	(கொன்று) ஜயித்தவனே!
எந்தாய்	என்ஸ்வாமியே!
அந்தரமேழும்	மேலுலகங்களேழுக்கும்
முன்	ஆதிகாலம் தொடங்கி
ஆனாய்	நிர்வாஹகனானவனே!
அழுந்தூர் மேல் திசைநின்ற அம்மானே,	
ஐவர்	பஞ்சேந்த்ரியங்களும் (பண்ணும்)
பொறுத்துக் கொண்டிருந்தால்	(உபத்ரவங்களை) ஸஹித்துக்கொண்டிருக்கப்பார்த்தாலும்
பொறுக்கொணா	ஸஹிக்கப்போகாமல்,
போகமே	விஷயபோகங்களையே
நுகர்வான்	அநுபவிப்பிக்கைக்காக
புகுந்து	என்னுள்ப்ரவேசித்து
அறுத்து	பாதி(ஙாதி)த்து
நின்றிட	(ஸ்வரூபத்தை) அழியப்பண்ணாநிற்க,
அஞ்சி	(அதற்கு) பயந்து
நின் அடைந்தேன். (எ)	

வ்யா.—ஏழாம்பாட்டு. (கறுத்துக்கஞ்சனை) எல்லாரும் ரக்ஷை பெற்று ஜீவிக்கவேணு மென்றிருக்கிற இவன் பக்கலிலே துரபிஸந்தியைப் பண்ணினனாய்த்து கம்ஸன்; அவன்பண்ணின அபிஸந்தி அவன்றன்னோடே போம்படிகோபித்து, கம்ஸனானவன் பீ(பீ)தனாம்படி முனிந்தாய், சீறினாய். (கார்வண்ணா) கண்டார்க்கு ஶ்ரமஹரமானவடிவையுடையவனே. (கடல்போலொளிவண்ணா) கடல்போலே ஸர்வபதார்த்தங்களுக்கும் ரக்ஷகனுமாய் அத்தோடொத்த நிறத்தையுமுடையவனே! (இறுத்திட்டான் விடையேழு முன்வென்றாய்) அஸுராவேசத்தாலே ம்ருத்யுபோலே வந்த ருஷபங்களேழினுடைய கொம்பையும் முறித்து அவற்றை ஜயித்தாய் (எந்தாய்) அச்செயலைக்காட்டி என்னை எழுதிக்கொண்டாய். (அந்தரமேழு மானாய்) உபரிதநலோகங்களேழையு முடையனானவனே.

(பொறுத்துக்கொண்டிருந்தால்) இவற்றால்வந்த நலிவை ஆற்றியிருப்போமென்றால் ஆற்றவொண்ணாதபடியாக போக(ங்க)ங்களை புஜிக்கவேணுமென்று ஐவர்நெருக்கி புஜிப்பிக்க, அவர்களுக்கஞ்சி, உன் திருவடிகளிலே சரணம் புகுந்தேன். ... ... (எ)

அரு—ஏழாம்பாட்டு. (கறுத்தித்யாதி) காலம் நீ இட்டவழக்கன்றோ என்று, உம்மைப்பெரிய இதயுகத்தின்படியே என்னையமைந்து உகக்கப்பண்ணச் சொல்லாநின்றீர், இதுக்கு நான் செய்யவேண்டுவதென், இந்த்ரியங்களை விஷயங்களில் நின்றும் மீட்டு, என்னையே நீர் உகக்கலாகாதோ வென்ன; அவை என்னால் அடக்கவரிது, உன்னாலடக்கவேணு மென்கிறாரென்று ஸங்கதி.

(ஒளியையும் வண்ணத்தையுமுடையவனே) என்றவற்றை வ்யுத்க்ரமேண வருளிச்செய்கிறார் (கடல்போலேயித்யாதி). ... ... (எ)

மூ. — நெடியானே கடியார்கலி நம்பீ
நின்னையே நினைந்திங்கிருப்பேனைக்
கடியார் காளையரைவர் புகுந்து
காவல் செய்தவக்காவலைப் பிழைத்துக்
குடிபோந்துன்னடிக்கீழ் வந்து புகுந்தேன்
கூறைசோறிவை தந்தெனக்கருளி
அடியேனைப்பணியாண்டு கொளெந்தாய்
அழுந்தூர் மேல்திசைநின்ற வம்மானே. (அ)

பதம்.	உரை.
நெடியானே	ஸர்வாதிகனே!
கடி	(பூமிக்கு) அரணாகச் சமைந்திருக்கிற
ஆர் கலி	ஸமுத்ரத்தில் (கண் வளர்ந்தருளுகிற)
நம்பி	பூர்ணனே!
எந்தாய்	என்ஸ்வாமியே!
அழுந்தூர்மேல் திசை நின்ற அம்மானே!	
நின்னையே	உன்னையே
நினைந்து	த்யானித்துக்கொண்டு
இங்கு	இந்தலீலா விபூதியில்
இருப்பேனை	இருக்கிற என்னை,
கடி ஆர்	பலத்தையுடைத்தாய்
காளையர்	(பரபீடகத்தில் பின் வாங்காத) இளம் பருவத்தை யுடையதான
ஐவர்	பஞ்சேந்த்ரியங்களும்
புகுந்து	என்னுள்ப்ரவேசித்து
காவல்செய்த	(என்னை உன்னிடத்தில் போகாதபடி) சிறைவைத்த
அக்காவலை	அந்தகடினமான சிறையை
பிழைத்து	தப்பி வந்து, [ழே
உன அடிக்கீழ்	உன்திருவடிகளின் கீ
குடிபோந்து	குடியிருக்கக்கருதி
வந்து	கிட்டி
புகுந்தேன்	அந்தர்ப்பவித்தேன்,
எனக்கு	(விஷயாந்தரங்களைவிட்டுவந்த) எனக்கு
கூறை	வஸ்த்ரமும்
சோறு	அந்நமுமாயுள்ள [களை
இவை	இந்த உன் திருவடி
அருளி	க்ருபைபண்ணி
தந்து	கொடுத்து,
அடியேனை	ஸ்வதஸ்ஸித்தமான தாஸ்யத்தையுடைய என்னை
பணி ஆண்டு கொள்	நித்ய கைங்கர்யத்தை பண்ணுவித்துக் கொண்டருளவேணும். (அ)

வ்யா. —எட்டாம்பாட்டு. . (நெடியானே) ஸர்வாதிகனான ஸர்வேச்வரனே. (கடியார் கலிநம்பி) பரிமளத்தை யுடைத்தாய், அரண்

பெற்றிருக்கிற, ஆர்கலியுண்டு - கடல், அதிலே சாய்ந்தருளின கல்யாணகுண பரிபூர்ணனே. (நின்னையே நினைந்திங்கிருப்பேனை) பரமபதத்தேயிருந்து, அங்குள்ளார் நினைக்கும் நினைவை இங்கேயிருந்து உன்னையே நினைந்திருக்கிற என்னை, நெஞ்சில் நன்மையின்றிக்கே பிறரை நலியநலிய இளகிப்பதியாநின்ற பருவத்தையுடைய ஐவர் வந்துபுகுந்து சிறைசெய்கிற. (அக்காவலைப் பிழைத்துக் குடிபோந்துன்னடிக்கீழ் வந்து புகுந்தேன்) (க) “𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌂𑌶𑍍𑌚 𑌦𑌾𑌰𑌾𑌂𑌶𑍍𑌚 𑌰𑌾𑌘𑌵𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌗𑌤𑌃 -த்யக்த்வா புத்ராம்ஶ்ச தாராம்ஶ்ச ராகவம் சரணங்கத:” என்கிறபடியே, அவற்றைத்தப்பி உன் திருவடிகளிலே சரணம் புகுந்தேன்

(கூறைசோறிவைதந்தெனக்கருளி) எனக்குக் கூறையும் சோறுமாயிருக்கிற இத்திருவடிகளைத் தந்தருளி. (உ) “தோட்டமில்லவள்” என்கிறபடியேயும், (ங) “எல்லாம்கண்ணன்” என்றும் சொல்லுகிறபடியே கூறைசோறாக நினைத்திருப்பது இவையாய்த்து இவர். (அடியேனைப் பணியாண்டு கொளெந்தாய்) வகுத்த ஸ்வாமியான நீ ராஜபுத்ரனாய்ப் பிறந்து முடியிழந்து போவாரைப்போலேயாகாமே அடியேனாயிருக்கிற என்னை நித்யகைங்கர்யத்தைக் கொண்டருளவேணும். (அழுந்தூரித்யாதி) ஸ்ரீவிபீஷணாழ்வானுக்கு வந்து புகுரலாம்படி கடற்கரை வெளியிலே வந்து நின்றாப்போலே, எனக்கு உறவுமுறையார் கைவிட்டவன்று வந்து கிட்டலாம்படி யன்றோ தேவரீர் இங்கே வந்து நிற்கிறது. ... ... (அ)

அரு.—எட்டாம்பாட்டு. (நெடியானே இத்யாதி) கீழ்ப்பாட்டில், “பொறுத்துக்கொண்டிருந்தால் பொறுக்கொணாப்போகமே நுகர்வான்” என்று அதுக்கஞ்சினேனென்றீர், “லோகத்திலே மஹாயோகிகளுமித்தனை அஞ்சினாரைக்கண்டதில்லையே, சரகர்கிலும் நின்று நினைத்தன்றோ இருப்பது; ஆகையாலே அவர்ஜ்ஜநீயமான அவற்றுக்குச் செய்துகொண்டாறியிரும்” என்று எம்பெருமானுக்குக் கருத்தாக அருளிச்செய்கிறாரென்று ஸங்கதி.

“கடி” என்று பரிமளமும், காடி(கு)க்யமும். அந்வயக்ரமேணவருளிச் செய்கிறார் (பரிமளத்தை இத்யாதி).

“இவை” என்றதினர்த்தம் (இத்திருவடிகளை) என்றபடி ... (அ)

(க) ரா-யு-கஎ-கரு. (உ) பெரி-திரு-௯-க-௯. (ங) தி-வாய்-சு-எ-க

மூ.— கோவாயைவரென்மெய் குடியேறிக்
கூறைசோறிவைதாவென்று குமைத்துப்
போகார் நானவரைப் பொறுக்ககிலேன்
புநிதா புட்கொடியாய் நெடுமாலே
தீவாய் நாகணையில் துயில்வானே
திருமாலே இனிச் செய்வதொன்றறியேன்
ஆவாவென்றடியேற் கிறையிரங்காய்
அழுந்தூர் மேல் திசைநின்றவம்மானே. (௯)

பதம்.	உரை.
புநிதா	பரிசுத்தனே !
புட்கொடியாய்	பெரியதிருவடியை த்வஜமாக வுடையவனே !
நெடுமாலே	(ஆஸ்ரிதரிடத்தில்) அத்யந்த வ்யாமோஹ முடையவனே!
தீவாய்	அனலையுமிழா நின்ற வாயையுடைய
நாகஅணையில்	திருவநந்தாழ்வானாகிற படுக்கையில்
துயில்வானே	கண்வளர்ந்தருளுமவனே !
திருமாலே	ஸ்ரிய:பதியே !
அழுந்தூர் மேல் திசைநின்ற அம்மானே !	
ஐவர்	பஞ்சேந்த்ரியங்களும்
கோவாய்	(எனக்கு) நிர்வாஹகர்களாய்க் கொண்டு (என்னை அடிமை கொண்டு)
என்மெய்	என்சரீரத்தில்
குடியேறி	குடியாக ஏறிவந்து
இவை	இந்த ஹேயங்களான
கூறை	வஸ்த்ரத்தையும்
சோறு	அந்நத்தையும்
தா என்று	கொடு என்று
குமைத்து	(என்னை) அடர்த்துக் கொண்டிருந்து
போகார்	இங்குநின்றும் போகின்றனவில்லை.
நான்	உனக்கடியேனான நான்,
அவரை	அவ்விந்த்ரியங்கள் செய்யும் உபத்ரவங்களை
பொறுக்ககிலேன்	ஸஹிக்கமாட்டுகிறிலேன் ;
இனி	உன்னையே புகலாக அடைந்தபின்பு
செய்வது	என் ஹிதத்துக்காகச் செய்ய வேண்டிய
ஒன்று	(மற்று) ஒரு க்ருத்யத்தையும் [யால்)
அறியேன்	அறிகிலேன், (ஆகை
அடியேற்கு	என்விஷயத்தில்
ஆ ஆ என்று	ஐயோ ஐயோ என்று
இறை	சிறிது
இரங்காய்	க்ருபைபண்ணியருள்.

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (கோவாயித்யாதி) நீ சேஷியாமது தவிர்ந்து, இவை எனக்கு நியாமகமாய்க்கொண்டுவந்து என் சரீரத்

திலே குடிபுகுந்தது. (கூறைசோறிவை) நான் கூறையும் சோறுமாக நினைத்திருக்குமவையொழிய வேறே சிலவற்றைத்தாவென்று என்னை நெருக்கி ஒருக்ஷணமும் கால்வாங்குகிறிலர்கள்; நான் அவர்களுடைய நலிவைப்பொறுக்கமாட்டுகிறிலேன். (புனிதா) என்விரோதியைப்போக்கி ரக்ஷிக்குமது உன்பேறாக நினைத்திருக்கும் சுத்தியோகத்தையுடையவனே! (புட்கொடியாய்)†இவை எல்லாவற்றுக்கும் கொடிகட்டியிருக்கிறவனே! (நெடுமாலே) ஆஶ்ரிதர்பக்கல் மிக்கவ்யாமோஹத்தையுடையவனே!

(நீவாய் நாகணையில் துயில்வானே) ஆஶ்ரித ஸம்ஶ்லேஷைகஸ்வபாவனே! உனக்கு என்வருகிறதோ என்றஞ்சவேண்டாதபடி சத்ருக்கள்மேலே நெருப்பை உமிழுகிற்திருவநந்தாழ்வான்மேலே சாய்ந்தருளினவனே! (திருமாலே) அப்படுக்கையிலே சாய்வது இருவருமான சேர்த்தியோடேயாய்த்து. (இனிச்செய்வதொன்றறியேன்) இனி நான் என்னுடைய ஹிதவிஷயமாகச் செய்வதொன்றறியேன். ‘‘அய்யோ’ அய்யோ’’ என்று அநந்யகதியான என்பக்கலிலே க்ருபை பண்ணியருளவேணும். (அழுந்தூர்மேல்) க்ருபை பண்ணுகைக்கு வந்து நிற்கிறஇடமன்றோ இவ்விடம். ... ... (கூ)

அநு.—ஒன்பதாம்பாட்டு. (கோவாயித்யாதி) கிழ்ப்பாட்டிலே, தமக்கடுத்த கூறை சோறிவை தரவேணுமென்று, தம் அபீஷ்டத்தை ப்ரார்த்தித்தார், இதில் இந்த்ரியங்கள் தங்களுக்கு அடுத்தவற்றைத்தரச்சொல்லி பாதி (बाधि)க்கிறன, அந்த பாதை (बाधा) யை நீக்கியருளவேணுமென்று அநிஷ்டநிவ்ருத்தியை ப்ரார்த்திக்கிறாரென்று ஸங்கதி.

‘‘கோவாய்’’ என்று இப்போது சொல்லுகைக்கு வேறுகோவுண்டோ வென்ன வருளிச்செய்கிறார் (நீ சேஷியித்யாதி). நீரும் ‘‘கூறைசோறிவை தந்தெனக்கருளி’’ என்றுநின்றீரே, இவை அவற்றை ப்ரார்த்தித்தால் ‘‘குமைத்து’’ என்று சொல்லுவானென்னென்ன வருளிச்செய்கிறார் (நான் கூறையுமித்யாதி).

பலிதார்த்தத்தை அருளிச்செய்து விசேஷண ப்ரயோஜநகத(थ)நமுகேந சப்தார்த்தமருளிச்செய்கிறார் (உனக்கென்வருகிறதோ வித்யாதி). ‘‘நான்அவரைப்பொறுக்ககிலேன்’’ என்றுநின்றீர், நீர்தானே அவற்றைப்போக்கும் விரகு பார்த்துக்கொள்ளவொண்ணாதோ வென்ன (இனிச்செய்வதொன்றறியேன்) என்கிறாரென்று மதுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இனிநானித்யாதி). ... ... (கூ)

---

† (பா) ரக்ஷணத்துக்கு.

மூ.— அன்னமன்னு பைம்பூம்பொழில்சூழ்ந்த
அழுந்தூர் மேல் திசைநின்ற வம்மானைக்
கன்னிமன்னு திண்டோள் கலிகன்றி
ஆலிநாடன் மங்கைக்குலவேந்தன்
சொன்னவிந்தமிழ் நன்மணிக்கோவை
தூயமாலை யிவை பத்தும்வல்லார்
மன்னி மன்னவராயுலகாண்டு மான
வெண்குடைக்கீழ் மகிழ்வாரே. (௧௦)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

* * *

பதம்.	உரை.
அன்னம்	ஹம்ஸங்களானவை
மன்னு	நித்யவாஸம் பண்ணுநிற்பதாய்
பை	பரந்த
பூ	பூக்களை யுடைத்தான
பொழில்	சோலைகளாலே
சூழ்ந்த	வ்யாப்தமாயிருக்கிற
அழுந்தூர்	திருவழுந்தூரில்
மேல்திசை	மேல்புறத்தில்
நின்ற	எழுந்தருளியிருக்கிற
அம்மானை	ஸ்வாமிவிஷயமாக[து
கன்னி	அழிவில்லாமை யான
மன்னு	பொருந்தியிருக்கிற(எப்போதுமழிவில்லாத)
திண்	பலத்தையுடைய
தோள்	புஜங்களையுடைய,
ஆலிநாடன்	திருவாலி நாட்டுக்கு நிர்வாஹகராய்,
மங்கை	திருமங்கையிலுள்ளார்க்கு
குலவேந்தன்	குலக்ரமமாக வந்த ராஜாவான
கலிகன்றி	ஆழ்வார் [டதாய்,
சொன்ன	அருளிச் செய்யப்பட்
இன்தமிழ்	அழகிய தமிழ்பாஷையிலுள்ளதாய்,
நல்	நிர்த்துஷ்டமான
மணி	ரத்நங்களுடைய
கோவை	மாலைபோலே அதிஶ்லாக்யமாய்,
தூய	கவியில் தோஷமற்று பரிசுத்தமா யிருப்பதாய்
மாலை	சப்தஸந்தர்ப்பரூபமாயிருக்கிற
இவைபத்தும்	இப்பத்துப்பாசுரங்களையும் [கள்
வல்லார்	அப்யஸிக்க வல்லவர்
மன்னவராய்	ராஜாக்களாய்க் கொண்டு
மன்னி	சி (ர) ரகாலமிருந்து
உலகுஆண்டு	லோகங்களைப் பரிபாலநம்பண்ணி
மானம்	பெரியதாய்
வெண்குடைக்கீழ்	வெளுத்து (புதிதாயிருக்கிற) குடையின் கீழே இருந்து
மகிழ்வார்	ஆநந்திப்பார்கள்(௧௦)

வயா.—பத்தாம்பாட்டு. (அன்னமன்னு மித்யாதி) அன்னங்கள் நித்யவாஸம்பண்ணுகிற பரந்தபூவையுடைத்தான பொழிலாலே சூழப்பட்ட. அன்னங்கள் ஒன்றோடொன்று ஊடினால், உடம்போடுடம்பு அணுகாதபடி கிடக்கைக்குவேண்டும் பரப்புபோந்திருக்குமாய்த்து பூவின்பெருமை. (அழுந்தூர் மேல்திசைநின்ற வம்மானை) திருவழுந்தூரில் மேல்பார்ஶ்வத்திலே நின்ற ஸர்வாதிகனான ஸர்வேஶ்வரனை. (கன்னிமன்னு திண்டோள்) ஒருநாளுமழியாத மிடுக்கையுடைத்தானதோள்களையுடைய ஆழ்வார், திருவாலிநாட்டுக்கு நிர்வாஹகராயுள்ளார், திருமங்கையிலுள்ளார்க்குப் பழையதாக ராஜாக்களாயுள்ளார். (சொன்ன வின்தமிழ்) சொன்ன இனியதமிழான இந்தநல்லரத்நமாலையை லக்ஷணங்களில் குறைவற்றிருக்கிற இப்பத்தையும் அப்யஸிக்க வல்லவர்கள். (மன்னிமன்னவராய்) சிரகாலம் ராஜாக்களாய். லோகங்களையடைய நிர்வஹித்துப் பெரிய முத்தின் குடைக்கீழேயிருந்து நிரவதிக ப்ரீதியுக்தராகப் பெறுவர். இந்த்ரியவஶ்யதையை அநுஸந்தித்து அஞ்சினவர், இத்தை ப(ஃ)லமாகச் சொல்லுவானென்னென்னில்; "இவர்க்கு அந்த ஐஶ்வர்யம், பாகவத சேஷமாக்குகைக்கு உடலாகையாலே, அதுவும் புருஷார்த்தத்திலே புக்குப்போய்த்துகாண்" என்று பட்டர் அருளிச்செய்தாராம். ... ... (௧௦)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

அரு.—பத்தாம்பாட்டு. (அன்னமித்யாதி) பூவை (பரந்த) என்று விசேஷித்ததுக்குக் கருத்தருளிச்செய்கிறார் (அன்னமித்யாதி). "மான" என்றதினர்த்தம் (பெரிய) என்றது. ... ... (௧௦)

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஏழாம்பத்து ஏழாந்திருமொழி முடிந்தது.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஏழாப்பத்து எட்டாந்திருமொழி
செங்கமலம் ப்ரவேசம்.

வ்யா.—(செங்கமலத் திருமகளும்) இந்த்ரிய வஶ்யதைக்கஞ்சி கூப்பிட்டார், நீர் இங்ஙனே கிடந்து கூப்பிடுகிறதென், பேரளவுடைய ப்ரஹ்மாதிகள் தங்கள் ஆபத்தை அறிவிப்பிக்கும்போது அக்கரையி

லேநின்று கூப்பிடுமதொழிய அவர்களுக்கும் கிட்டவொண்ணாதபடி யிருக்கக்கடவதாய், உமக்குப்பட்டகுறை அறிவிக்கலாம்படி பண்ணினோமாய் நின்றோமே, இவ்வளவும்வாநின்றநாம், இனிமேலுள்ளகார்யம்செய்வோமென்று உமக்குஆறியிருக்கக்குறையுண்டோ? உம்முடைய ஸர்வாபேக்ஷிதங்களும் செய்கைக்கன்றோ நாமிங்குவந்து நிற்கிறதென்று, அக்குற்றை நிலையைக்காட்டிக்கொடுக்க, அத்தை அநுஸந்தித்து த்ருப்தராய், பிறரைப்பார்த்து, "இவனல்லது ஆஸ்ரயணீயனில்லை, ஆனபின்பு எல்லாருமிவனை ஆஸ்ரயித்து உஜ்ஜீவித்துப்போகப் பாருங்கோள்" என்கிறார். ... ... *

அநு.—செங்கமலத்திருமகளும் ப்ரவேசம். கீழ்த்திருமொழியில், அதிசங்கையாலே குறைப்பட்டிருந்த இவ்வாழ்வார் இத்திருமொழியிலே பரோபதேசத்திலே புகுருகைக்கு ஸங்கதி யென்னென்ன வருளிச் செய்கிறார் (இந்த்ரியேத்யாதி). (பட்டகுறை) என்றது. அநாதியாக இந்த்ரியங்களிலகப்பட்ட குறை யென்கை. ... ... *

மூ.— செங்கமலத்திருமகளும் புவியும் செம்பொன்
திருவடியி னிணைவருட முனிவரேத்த
வங்கமலி தடங்கடலு ளனந்தனென்னும்
வரியரவினணைத் துயின்ற மாயோன் காண்மின்
எங்குமலி நிறைபுகழ் நால் வேதமைந்து
வேள்விகளும் கேள்விகளுமியன்ற தன்மை
அங்கமலத்தயனனையார் பயிலும் செல்வத்
தணியழுந்தூர் நின்றுகந்த வமரர்கோவே. (க)

பதம்.	உரை.	பதம்.	உரை.
எங்கும்	எல்லா வாக்யங்களிலும்	இயன்ற	அதிசயித்திருக்கிற
மலி	(ப்ராமாண்யம்) மிக்கிருப்பதாய்,	தன்மை	ஸ்வபாவத்தையுடையராய்,
நிறைபுகழ்	(அர்த்தால்) பூர்ணமானயசஸ்ஸையுடையதான	அம்கமலத்து	அழகிய திருநாபி கமலத்தைப் பிறப்பிடமாகவுடைய
நால்வேதம்	நாலு வேதங்களாலும்	அயன்அனையார்	ப்ரஹ்மாவோடொத்திருக்கிற ப்ராஹ்மணர்கள்
ஐந்து வேள்வி	பஞ்சமஹாயஜ்ஞங்களாலும்	பயிலும்	நித்யவாஸம் பண்ணுகையி லுண்டான
கேள்விகளும்	(மற்றும்) கேட்டறியவேண்டும் ஸ்(ஞ)வ ஸ்ருதி முதலானவற்றிலும்	செல்வத்து	ஸம்பத்தையுடைத்தாய்

அணி	லீலாவிபூதிக்கு ஆபரணமாயிருக்கிற
அழுந்தூர்	திருவழுந்தூரில்
உகந்துநின்ற	உகப்புடனே எழுந்தருளி யிருக்கிறவனாய்
அமரர்கோ	நித்யஸூரிகள் தலைவனான எம்பெருமானானவன்,
செம் கமலம்	அழகிய தாமரைப்பூவை இருப்பிடமாகவுடைய
திருமகளும்	பெரிய பிராட்டியாரும்
புவியும்	ஶ்ரீபூமிப்பிராட்டியும்
செம்பொன்	ஸுந்தரமாய் ஸ்ப்ருஹணீயமா யிருக்கிற
திருவடியின் இணை	திருவடிகளிரண்டையும்
வருட	பிடியாநிற்க,
முனிவர்	ஸநகாதிருஷிகள்
ஏத்த	ஸ்தோத்ரம் பண்ணாநிற்க,
வங்கம்	மரக்கலங்கள்
மலி	நிறைந்திருக்கிற
தடம்	விசாலமான
கடலுள்	ஸமுத்ரத்தில்
அநந்தன் என்னும்	அநந்தனென்று ப்ரஸித்தனாய்
வரி	ரேகைகளையுடையனான
அரவின் அணை	திருவநந்தாழ்வானாகிற படுக்கையின் மேலே
துயின்ற	கண்வளரா நின்ற
மாயோன் காண்மின்	ஸர்வேஶ்வரன் கிடீர். (௧)

வ்யா.—முதற்பாட்டு. (செங்கமலத்திருமகளும்) ஆஶ்ரிதருடைய ஸர்வாபராதங்களையும்பொறுப்பிக்கும் பெரியபிராட்டியாரும். (புவியும்) அப்பொறைக்கு உவாத்தான ஶ்ரீபூமிப் பிராட்டியும், ஸ்ப்ருஹணீயமாய் ஒன்றுக்கொன்று ஒப்பான திருவடிகளை வருட; ஸநகாதிகள் நின்று ஸ்துதிக்க. (வங்கமலிதடங்கடலுள்) மரக்கலங்களால் மிக்கிருக்கிற பெரியகடலிலே. (அநந்தனென்னும்) திருவநந்தாழ்வானென்று ப்ரஸித்தனாயிருக்கிறவன்மேலே. ஸர்வேஶ்வரனையும் "அநந்தன்" என்னக்கடவதிறே-த்ரிவித பரிச்சேதராஹித்யத்தாலே; அநந்தன் தன்னையும் விளாய்க்குலைக்கொள்ளவல்லனாயிருக்கையாலே அநந்தனென்று ப்ரஸித்தியை யுடையனான. (வரியரவினணைத்துயின்ற மாயோன் காண்மின்) குன்றிச்சூடுபோலே ஸர்வேஶ்வரனுக்கு வைத்த கண்மாறாதே கண்டுகொண்டிருக்கவேண்டும்படி தர்ஶநீயமான வரிகளையுடையனாய், ஶைத்ய ஸௌரப்யாதிகளை ப்ரக்ருதியாகவுடைய திருவநந்தாழ்வான்மேலே கண்வளர்ந்தருளின ஸர்வேஶ்வரன் கிடிகோளிங்குவந்து நிற்கிறவன்.

(எங்குமலிநிறைபுகழித்யாதி) வேதப்ராமாண்யம் ப்ராதேஶிகமாயிருக்கையன்றிக்கே, எங்குமொக்க மிகுகையால்வந்த நிறைந்த புக

ழையுடைத்தான நாலுவகைப்பட்ட வேதம், பஞ்சமஹாயஜ்ஞம், மற்றும் ஶ்ரவணத்தாலே அறியவேண்டியவற்றாலும் வந்த இயற்றியை ஸ்வபாவமாகவுடையராய். (அங்கமலத்தயனனையார்) தனித்தனியே ப்ரஹ்மாவைப்போலே ஸ்ருஷ்டிக்க க்ஷமராயிருக்கிற ப்ராஹ்மணர் நித்யவாஸம் பண்ணுகையால் வந்த நிரவதிக ஸம்பத்தையுடைய திருவழுந்தூரிலே வந்துநின்றருளின இதுதான் தனக்கு அலப்யலாபமாகக்கொண்டு நிற்கிறவன் * அயர்வறு மமரர்களதிபதியான ஸர்வேஶ்வரன் கிடீகோள்; அவனை ஆஶ்ரயித்து உஜ்ஜீவித்துப்போகப் பாருங்கோள் என்கிறார். ... ... (௧)

அரு — முதற்பாட்டு. (செங்கமலமித்யாதி) செம்மையுடைய கமலத் திருமகளென்று சப்தார்த்தமாக்கி தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஆஶ்ரிதருடைய வித்யாதி). த்ரிவிதபரிச்சேதராஹித்ய மிவனுக்குண்டோ? "அநந்தன்" என்னும் ப்ரஸித்தி வருகைக்கு என்ன வருளிச்செய்கிறார் (ஸர்வேஶ்வரனையுமித்யாதி). "வரி" என்று விசேஷித்ததுக்கு உட்கருத்தருளிச் செய்கிறார் (குன்றிச்சூடித்யாதி). (குன்றிச்சூடு) கு([illegible])ஞ்சாபீட([illegible])ம்.

(ப்ராதேஶிகமாயிருக்கையன்றிக்கே) என்றது-சிலவாக்யங்களில் ப்ராமாண்யமுண்டாய், சிலவாக்யங்களில் ப்ராமாண்யமின்றிக்கே யிருக்கையன்றிக்கே என்கை. அங்கங்களைத் திருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிறார் (மற்று மித்யாதி). "இயற்றி" என்றது-அதிசயமென்றபடி. "அமரர்கோவே-காண்மின்" என்றந்வயித்து அருளிச்செய்கிறார் (அயர்வித்யாதி).(௧)

மூ.— முன்னிவ்வுலகேழுமிருள்மண்டியுண்ண
முனிவரொடு தானவர்கள் திகைப்பவந்து
பன்னுகலைநால்வேதப் பொருளையெல்லாம்
பரிமுகமாயருளிய வெம்பரமன் காண்மின்
செந்நெல்மலிகதிர்க் கவரிவீசச்சங்க
மவைமுரலச் செங்கமல மலரையேறி
அன்னமலிபெடையோடு மமரும் செல்வத்
தணியழுந்தூர் நின்றுகந்த வமரர்கோவே. (௨)

பதம்.	உரை	பதம்.	உரை.
செம்நெல்	ஶ்லாக்யமான நெல் பயிரினுடைய	அவை	அங்கே ஸஞ்சரிக்கிற
மலி கதிர்	ஸம்ருத்தமான கதிர்களானவை	சங்கம்	சங்குகளானவை
கவரி வீச	சாமரங்கள் (போல்) வீசாநிற்க;	முரல	முழங்காநிற்க,
		செம்	ஸௌந்தரமான
		கமல மலரை	தாமரைப்பூவின் மேலே

ஏறி	ஏறி
அன்னம்	ஹம்ஸமானது
மலி	போக (भोग) ப்ரசுரமான [கூட
பெடையோடும்	(தன்) பெடையோடு
அமரும்	பொருந்திகண்வளரா [நின்ற
செல்வத்து அணியழுந்தூர் நின்றுகந்தஅமரர்கோவே!	
முன்	முற்காலத்தில்
இவ்வேழுலகும்	இந்தஸப்தலோகங்களையும் [னது
இருள்	அஜ்ஞாநாந்தகாரமா
மண்டி	அடர்ந்திருந்து
உண்ண	புஜிக்கையில்(தன்வசமாக்கிக் கொண்டு கலஹீகரிக்கையில்)

முனிவரொடு	ஸநகாதி ருஷிகளுடன் கூட
தாநவர்கள்	ராக்ஷஸர்களும்
திகைப்ப	ப்ரமப்பட்டு நிற்க (அவ்வளவில்)
வந்து	(தான் பரமபதத்தில் நின்றும்)வந்து,
பன்னு	விஸ்த்ருதமாயுள்ள
கலை	சாஸ்த்ரங்களையுடைத்தான [டைய
நால் வேதம்	நாலு வேதங்களினு
பொருளை எல்லாம்	அர்த்தங்களையெல்லாம் [ண்டு
பரிமுகமாய்	ஹயக்ரீவனாய்க் கொ
அருளிய	உபதேசித்தருளின
எம்பரமன்காண்மின்	நம்முடைய ஸர்வாதிகன் இவர். (உ)

வ்யா. —இரண்டாம்பாட்டு. (முன்னிவ்வுலகேழு மிருள்மண்டியுண்ண) பண்டு இவ்வுலகங்களேழையும் அந்தகாரமானது தான்கண்டபடியே பரந்து புஜிக்க. (முனிவரொடு தாநவர்கள் திகைப்ப) ஸாத்விகரோடு அஸாத்விகரோடு வாசியற அறிவுகெட்டுக் கலங்க வந்தவதரித்து, பரம்பின கலைகளையுடைத்தான நாலுவகைப்பட்ட வேதங்களினுடைய அர்த்தத்தையெல்லாம் ஹயக்ரீவமூர்த்தியாய் அருளிச்செய்த ஸர்வஸ்மாத்பரன் இவர்.

(செங்நெல்மலிகதிர்க் கவரிவீச) செங்நெலினுடைய கனத்த கதிரானது கவரி வீச. (சங்கமவைமுரல) அங்கே ஊருகிற சங்கங்களானவை த்வநிக்க. (செங்கமலமலரையேறி) செவ்விபெற அலர்ந்த தாமரைப்பூவைப்படுக்கையாகக்கொண்டு அதின்மேலேஏறி. (அன்னமலிபெடையோடுமமரும் செல்வத்து) அன்னமானது அப்பூம்படுக்கையிலே போக (भोग) ஸ்ரோதஸ்ஸில் தன்னைவிஞ்சின பெடையோடொக்கச் சாய்கிற நிரவதிக ஸம்பத்தையுடைய, அங்குத்தை திர்யக்குகளுமகப்பட போக (भोग) ப்ரதாநமாயாய்த்திருப்பது. (உ)

அநு.—இரண்டாம்பாட்டு. (முன்னித்யாதி) கீழ்ப்பாட்டில், திருப்பாற்கடலில் கிடந்தான் கிடீரென்றார்; அங்கு நின்றும்போந்து வேதப்ரதா([illegible])நம் பண்ணின மஹோபகாரகன் கிடீர் என்று உபதேசிக்கிறாரென்று ஸங்கதி.

(அந்தகாரமானது) என்றது - அஜ்ஞாநாந்தகாரமானது என்றபடி. இங்ஙனன்றாகில், வேதப்ரதாநத்தால் பாஹ்யாந்தகாரம் போகாதிறே. (கலங்க) என்ற வநந்தரம், "அதுதீர" என்று சேஷம்.

சங்கங்களை "அவை" என்று விசேஷிக்கையாலே செந்நெலிலே வர்த்திக்கிறவை என்று விவக்ஷித்து, ஜந்துக்களாகையாலே கூப்பிடும் என்று அத்தை கா([illegible])நஸ்த்தரேயாக்கி யருளிச்செய்கிறார் (அங்கேஊருகிற வித்யாதி). "அன்னம்" என்பதும் "பெடையோடும்" என்பதும் ஜாதாவேகவசநமாய், பல அன்னங்கள் பலபேடைகளோடு அமரும்என்று விவக்ஷித்து அத்தை அருளிச்செய்கிறார் (அங்குத்தை திர்யக்குக்களுமித்யாதி). ... ... (௨)

மூ. —

குலத்தலைய மதவேழம் பொய்கைபுக்குக்
கோள்முதலை பிடிக்கவதற் கனுங்கிநின்று
நிலத்திகழும் மலர்ச்சுடரேய் சோதியென்ன
நெஞ்சிடர் தீர்த்தருளிய வென் நிமலன்காண்மின்
மலைத்திகழ் சந்தகில் கநகம்மணியுங்கொண்டு
வந்துந்திவயல்கள் தோறும் மடைகள்பாய
அலைத்துவரும் பொன்னிவளம் பெருகும்செல்வத்
தணியழுந்தூர் நின்றுகந்த வமரர்கோவே. (௩)

பதம்.	உரை.
மலை	ஸஹ்யபர்வதத்தில்
திகழ்	விளங்காநின்ற
சந்து	சந்தநமரங்களையும்
அகில்	அகில்கட்டைகளையும்
கனகம்	ஸுவர்ணங்களையும்
மணியும்	ரத்நங்களையும்
கொண்டுவந்து	திரட்டிக்கொண்டு
உந்தி	தள்ளி [வந்து
வயல்கள்தோறும்	கழனிகளெங்கும்
மடைகள்	மடைகளிலே
பாய	பாயும்படியாக
அலைத்துவரும்	அலையெறிந்துகொண்டு வாராநின்ற
பொன்னி	திருக்காவேரியானது
வளம்	ஸம்ருத்தமாக
பெருகும்	ப்ரவஹியா நிற்கையிலுண்டான
செல்வத்து அணியழுந்தூர் நின்றுகந்த அமரர்கோ,	
குலம்	நல்லஜாதியில் பிறந்த (யானைகளுக்குள்ளே)

தலைய	ஶ்ரேஷ்ட்டமானதும்
மதம்	கொழுப்புடையதுமான
வேழம்	ஶ்ரீ கஜேந்த்ரமானது
பொய்கை	மடுவிலே
புக்கு	ப்ரவேசித்து (நிற்கையில், அங்கு)
கோள்	மிடுக்கையுடைத்தான
முதலை	முதலையானது [ழுக்க
பிடிக்க	(தன்காலைப்)பற்றி இ
அதற்கு	அந்தமுதலைக்கு
அனுங்கின்ற	பயப்பட்டிருந்து,
நில	சந்த்ரிகையை
திகழும்	சுற்றும்விளங்கப்பண்ணுகின்ற [தான
மலர்	விகாஸத்தையுடைத்
சுடர்	தேஜோரூபியான சந்த்ரனோடு
எய்	ஒத்திருக்கிற
சோதி	(குளிர்ந்த) தேஜஸ்ஸையுடையவனே!
என்ன	என்றுகூப்பிட, (அங்கே எழுந்தருளி)
நெஞ்சு	(அதின்)மநஸ்ஸிலுண்டான
இடர்	து:க்கத்தை [ய்
தீர்த்தருளிய	போக்கியருளினவனு
என்	(அதை) எனக்கு ப்ரகாசிப்பித்தவனாய்,
நிமலன்கண்டீர்	(அத்தால்) பரிசுத்தனானவன் கிடீர். (௩)

வ்யா. —மூன்றாம்பாட்டு. (குலத்தலையமதவேழம்) நல்ல ஆகரத்திலேபிறந்துதான் ஆனைகளுக்கெல்லாம் ப்ரதா(தா)நமாய், மதமுதிதமாய், மூலையடியே திரிகிற ஆனை விழுக்காடறியாதே தன்னிலமல்லாத வேற்றுநிலத்திலே புக்கு கொடிதானமுதலையின்கையிலே அகப்பட்ட தாய்த்து. (கோள்முதலைபிடிக்க) சாபோபஹதமாய் அதுக்குப் பரிஹாரமாக "எப்போதோ இது நம்கையிலே வந்தகப்படுவது" என்றிருக்கிற முதலையின்கையிலே புக்குப் பிடிபட. (அதற்கனுங்கின்று) அதற்கு வெருவி, முதலையினுடைய வ்யாபாரமேயாய் தன்னுடைய வ்யாபாரமற்றுநின்று. (நிலத்திகழு மலர்ச்சுடரேய் சோதியென்ன) நிலாவை பரப்பாநின்ற விகாஸத்தையுடைய சுடருண்டு சந்த்ரன், அவனோடொத்த தண்ணளியை யுடையையாய்க்கொண்டு வந்து தோற்றவேணுமென்ன; (நெஞ்சிடர் தீர்த்தருளிய என்நிமலன் காண்மின்) அதினுடைய கையில் பூச்செவ்வியாறுதபடி தன் திருவடிகளிலே இடுவித்துக்கொண்டு அதினுடைய ஹ்ருதயத்தில் வ்யஸநத்தைப்போக்கி யருளுகையாலே, ஆஶ்ரிதருடைய விரோதியைப் போக்கி, அவர்களுடைய அபேக்ஷிதஸம்விதாநம்பண்ணும் ஸ்வபா(ஞு)வனென்கிற சுத்தியை எனக்குப்ரகாசிப்பித்தவன் கிடீர்.

(மலைத்திகழ் சந்தகில் கநகமணியுங்கொண்டு) ஸஹ்யபர்வதத்திலே விளங்காநின்ற சந்தநத்தையும், அகிலையும், பொன்னையும், ரத்ந

ங்களையும் வாரிக்கொண்டுபோந்து. (வந்துந்திபித்யாதி) பா(ஈ)ரம் பொறுக்கமாட்டாமை சுமை பொகடுவாரைப்போலே தள்ளி, வயலென்று பேர்பெற்ற விடமெங்கும் மடைகள்தோறும் வந்து பாயாநிற்குமாய்த்துப் பொன்னியானது. இப்படி அலைத்துக்கொண்டு பெருகி வாராநின்ற காவிரியால் வந்த நிரவதிக ஸம்பத்தையுடைய. அவன் தான் ஆர்த்தரிருந்தவிடமெங்கும் வந்து ரக்ஷிக்குமாபோலே, இந்த ஆற்றுவரவும் அபேக்ஷிதமான இடமெங்கும் வந்து பாயாநிற்குமாய்த்து. ... ... (௩)

அந.—மூன்றாம்பாட்டு. (குலவித்யாதி) கீழ்ப்பாட்டில், அஜ்ஞானம் போம்படி வேதப்ரதானம் பண்ணினபடி சொல்லிற்று, இதில், அந்தவேதத்தில் ப்ரதிபாத்யமான கைங்கர்யத்தை விரோதிநிவ்ருத்தி பூர்வகமாகத் தானே கொண்டருளுமவனென்னுமதுக் குறிப்பாக, ஸ்ரீகஜேந்த்ரரக்ஷணத்தை உபதேசிக்கிறாரென்று ஸங்கதி.

“குல” என்றது-க்ருஹவாசியாய் அருளிச்செய்கிறார் (ஆகாரத்திலே) என்று. “பிடிக்க” என்கையாலே ஏற்கவே பிடிக்கக் கோலினமை தோற்றுகையாலே பலிதார்த்தமருளிச் செய்கிறார் (சாபோபஹதமாயித்யாதி) கொடுமையின்படிதன்னை எல்லையிலத்தனவு மருளிச்செய்தாரென்னவுமாம்.

பாட்டுக்கெல்லாம்பொருத்து பாவமருளிச்செய்கிறார்(அவன்தானித்யாதி).

மூ. — சிலம்புமுதல் கலனணிந்தோர் செங்கற்குன்றம்
திகழ்ந்ததெனத் திருவுருவம் பன்றியாகி
இலங்குபுவி மடந்தைதனை யிடந்துபுல்கி
எயிற்றிடைவைத்தருளிய வெம்மீசன் காண்மின்
புலம்புசிறை வண்டொலிப்பப் பூகந்தொக்கப்
பொழில்கள்தொறும் குயில்கூவ மயில்களால
அலம்புதிரைப் புனல்புடைசூழ்ந் தழகார்செல்வத்
தணியழுந்தூர் நின்றுகந்த வமரர்கோவே. (௪)

பதம்.	உரை.	பதம்.	உரை.
புலம்பு	அழகிதாக விளங்காநின்ற	பொழில்கள்தொறும்	சோலைகளெங்கும்
சிறை	இறகுகளையுடைய	குயில்	கோகிலங்களானவை
வண்டு	வண்டுகளானவை	கூவ	கூவாநிற்பதாய்,
ஒலிப்ப	த்வநியாநிற்பதாய்,	மயில்கள்	மயில்களானவை
பூகம்	பாக்குமரங்கள்	ஆல	கூத்தாடாநிற்பதாய்,
தொக்க	திரண்டிருக்கிற	அலம்பு	அலையாநின்ற

திரை	அலைகளையுடைத்தான
புனல்	ஜலமானது
புடை	பர்யந்தப்ரதேசங்களிலே
சூழ்ந்து	வ்யாப்தமாய்க் கொண்டு
அழகுஆர்	அழகுமிக்கிருக்கிற
செல்வத்தணியழுந்தூர் நின்றுகந்த அமரர்கோ,	
ஓர்	அத்விதீயமாய்
செம் கல்	சிவந்த ரத்நங்களையுடைத்தான
குன்றம்	மேருபர்வதமானது
திகழ்ந்ததென	விளங்குவதுபோலிராநின்றதாய்,
சிலம்புமுதல்	தண்டைச்சிலம்பு முதலான
கலன்	ஆபரணங்களை
அணிந்து	சாத்திக்கொண்டிருக்கிற
திருவுருவம்	அழகியவடிவையுடைய
பன்றியாகி	மஹாவராஹமாயவதரித்து,
இலங்கு	விளங்காநின்ற
புவிமடந்தைதனை	ஸ்ரீபூமிப்பிராட்டியை
இடந்து	(அண்டபித்தியில்நின்றும்) குத்தியெடுத்து
புல்கி	(அவளுடன்) ஸம்ஶ்லேஷித்து
எயிறு இடை	தந்தத்தினிடையிலே
வைத்தருளிய	வைத்துக்கொண்டு (ஏறி) அருளினவனாய்
எம்	(அதினால்) நமக்கெல்லாம்
ஈசன்காண்மின்	நிர்வாஹகனான ஸர்வேஶ்வரன்கிடீர்.(௪)

வ்யா.—நாலாம்பாட்டு. (சிலம்புமுதல் கலனணிந்து) சிலம்பு தொடக்கமான ஆபரணங்கள் பலவற்றையுமணிந்து ஒரு மேருவானது நின்று விளங்குமாபோலே, வராஹவேஷத்தையுடையனாய். (இலங்கு புவி) அண்டபி(த்)த்தியிலே புக்குச் சேர்ந்த பூமியை இடந்தெடுத்துக் கொண்டேறி, அந்தபூமிக்கும் அபிமாநிநியான ஸ்ரீபூமிப்பிராட்டியை அணைத்து, அந்தபூமிதன்னைத் திருவெயிற்றிலே ஒருநீலமணியழுத்தினாப்போலே வைத்தருளின அச்செயலைக்காட்டி, என்னை எழுதிக்கொண்டவன் கிடீர்.

(புலம்புசிறை வண்டொலிப்ப) அழகிய சிறகையுடைத்தான வண்டுகள் மதுபாநமத்தமாய் த்வநிக்க. (பூகந்தொக்கப் பொழில்கள்தோறும் குயில்கள்கூவ) கமுகுகள்திரண்ட சோலைகள்தோறும் குயில்களானவை, முக்தர் ஸாமகாநம்பண்ணுமாபோலேகூவ, (மயில்களால) அதினுடைய பாட்டுக்கிடாக மயில்கள் ஆலிக்க. (அலம்பு திரைப்புனல் புடைசூழ்ந்தழகார் செல்வத்து) அலைத்துக்கொடுவருகிற திரைகளையுடைத்தான ஜலமானது பர்யந்தமெங்கும் சூழ்கையால்வந்த நிரவதிகஸம்பத்தையுடைத்தாய் ஸம்ஸாரவிபூதிக்கு ஆபர

ணைப்போலேயிருக்கிற திருவழுந்தூரிலே. ... ... (ச)

அவ.—நாலாம்பாட்டு. (சிலம்பித்யாதி) கீழ்ப்பாட்டில், "நிலத்திகழு மலர்ச்சுடரேய் சோதி" என்று பெருமிடறு செய்து கூப்பிட வந்து உபகரித்தவனென்றீர்; ஸம்ஸார ப்ரளயங்கொண்டிருக்கிற எங்களுக்கு அவன் கூப்பிடக்கூடுமோவென்னு மதிசங்கையிலே, ப்ரளயத்திலகப்பட்டுக் கூப்பிடவறியாத பூமியை எடுத்தாப்போலே நம்மையுமெடுக்க வல்லவனிவர் என்று வராஹவ்ருத்தாந்தத்தை யருளிச்செய்கிறாரென்று ஸங்கதி.

"செம்" சிவந்த "கல்" ரத்நங்களையுடைய "குன்றம்" மேருவானது திகழ்ந்ததென்னும்படியாக. "சிலம்புமுதல் கலனணிந்து" இவ்வாபரண சோபையாலே மூட்டாக்கிட்டபடியாலே விளங்காநின்றுள்ள திருவுருவமுடைய வராஹமென்று விவக்ஷித்து அருளிச்செய்கிறார் (சிலம்பித்யாதி). "செங்கட்குன்றம்" என்று பாடமானபோது குன்றுக்கே விசேஷணமாய், அபூ(ஃபூ)தோபமையாக வ்யாக்யாநாந்தரமுண்டு, "குன்று" நீலாசலமென்று கருத்து. ... ... (ச)

மூ.— சினமேவு மடலரியி னுருவமாகித்
திறல்மேவு மிரணியன தாகங்கீண்டு
மனமேவும் வஞ்சனையால் வந்தபேய்ச்சி
மாளவுயிர் வவ்விய வெம்மாயோன்காண்மின்
இனமேவும் வரிவளைக்கை யேந்தும்கோவை
ஏய்வாய மரதகம்போல் கிளியினின்சொல்
அனமேவுநடைமடவார் பயிலும் செல்வத்
தணியழுந்தூர் நின்றுகந்தவமரர்கோவே. (ரு)

பதம்.	உரை.	பதம்.	உரை.
இனம் மேவும்	வரிசைவரிசையாகப் பொருந்தியிருப்ப	கிளியின்	கிளிகளினுடைய
வரி	அழகியதான [தாய்	இன்சொல்	மதுரமான சொல்லையுடையவர்களாய்,
வளைகை	வளைகளையுடைத்தான கைகளாலே	அனம் மேவும்	ஹம்ஸத்தோடு பொருந்தியிருக்கிற (ஸத்ருசமான)
ஏந்தும்	தாங்கப்பட்ட,	நடை	நடையழகையுடையவர்களான
கோவை	கோவைப் பழத்தோடொத்த	மடவார்	ஸ்த்ரீகள்
வாய்	அதரத்தையுடைத்தாய்,	பயிலும்	நித்யவாஸம் பண்ணுகின்ற
மரதகம்போல்	மரதகப்பச்சை போன்ற வர்ணத்தையுடைத்தான		

செல்வத்தணியழுந்தூர்	நின்றுகந்த அமரர்கோ,
மேவுஞ்சினம்	அதிசயிதமானகோபத்தையும்
அடல்	மிடுக்கையுமுடைய
அரியின்உருவமாகி	நரஸிம்ஹவேஷத்தையுடையனாய்க் கொண்டு, [ள்ள
திறல்மேவும்	ப(ப)லம் மிக்கிருந்து
இரணியனது	ஹிரண்யனுடைய
ஆகம்	சரீரத்தை
கீண்டு	பிளந்தவனும்
மனம் மேவும்	மநஸ்ஸிலேபொருந்தியிருக்கிற
வஞ்சனையால்	கபடத்தினாலே
வந்த	(கொல்ல) வந்த
பேய்ச்சி	பூதனையானவள்
மாள	முடியும்படியாக [னை
உயிர்	அவளுடைய ப்ராண [கொண்டு
வவ்விய	க்ர(ஃ)ஹித்தவனாய்க்
எம்	(அவ்வாஶ்சர்யத்தை) எனக்கு(ப்ரகாசிப்பித்தவனுமான)
மாயோன்கண்மின்	ஆஶ்சர்யபூ(பூ)தன் கிடீர். (௫)

வ்யா. —அஞ்சாம்பாட்டு. (சினமேவு மடலரியினுருவமாகி) சிறுக்கன்பக்கலிலே அவன் மிகைத்துவரப்புக்கவாறே அதுகண்டு பொறுக்கமாட்டாமை, சினத்தையிட்டுவகுத்தாப்போலேயாய், கிட்டவொண்ணாத நரஸிம்ஹவேஷத்தையுடையனாய். (திறல்மேவுமிரணியனதாகங்கீண்டு) நரஸிம்ஹத்துக்கும் பிற்காலியாத மிடுக்கையுடைய ஹிரண்யனுடைய உடலைக்கீண்டு. (மனமேவுமித்யாதி) இவனுடைய பருவத்தைக்கண்டால் "கெட்டேன், இவனை அழியச்செய்கையாவதென்" என்று நெஞ்சிலிரக்கம் பிறக்கையன்றிக்கே நெஞ்சிலே பொருந்தியிருக்கிற வஞ்சநத்தையுடையளாய்க்கொண்டு வந்த பூதனை முடியும்படி அவளுடைய முலைவழியே அவளுடைய ப்ராணன்களும் வற்றிவரும்படி முலையை அமுதுசெய்த ஆஶ்சர்யபூ(பூ)தன் கிடீர் இங்குவந்து நிற்கிறவன்.

(இனமேவுமித்யாதி) தர்ஶநீயமான வளையையுடைத்தான கைகளாலே ஏந்தப்பட்டு, இவர்கள் தங்களோடொத்துக் கோவைபோன்ற அதரத்தையுடைத்தாய், மரகதம்போன்ற நிறத்தையுடைத்தாயிருக்கிற கிளியினுடைய பேச்சுபோலே இனிதானபேச்சையுடையராய். கற்பிக்கிறவர்கள்பேச்சும் கிளியின் பேச்சும் வாசிதெரியாது. அன்னம்போன்ற நடையுடைய ஸ்த்ரீகள் நெருங்கி வர்த்திக்கையால் வந்த த்ரவிண ஸம்பத்தையுடைய. … … … … (௬)

அரு — அஞ்சாம்பாட்டு. (சிலைமேவுமித்யாதி) கீழ்ப்பாட்டுக்களில், அநுகூலனான ஸ்ரீ கஜேந்த்ர ரக்ஷணம்பண்ணி மஹிஷியான பூமிக்கு விரோதியான முறையாலே பூமியை உத்த(த்)ரித்தானென்றீரேயாகிலும், நாங்கள் அங்ஙனநுகூலிக்கவும் பெறாதே ஒரு ப்ரத்யாஸத்தியுமின்றிக்கே, விரோதியும் கனத்திருக்க ரக்ஷிக்கும்படி எங்ஙனேயென்ன விரோதிநிரஸநசீலனென்கிறாரிங்கென்று ஸங்கதி.

இரண்டு பேச்சுக்கும் இனிமை ஒத்திருக்குமோவென்னவருளிச்செய்கிறார் (கற்பிக்கிற வித்யாதி). ... ... (௫)

மூ. — வானவர் தம்துயர்தீரவந்துதோன்றி
மாணுருவாய் மூவடிமாவலியை வேண்டித்
தானமரவேழுலகு மளந்தவென்றித்
தனிமுதல்சக்கரப் படையென் தலைவன்காண்மின்
தேனமரும் பொழில் தழுவுமெழில்கொள்வீதிச்
செழுமாட மாளிகைகள் கூடந்தோறும்
ஆனதொல் சீர்மறையாளர் பயிலும்செல்வத்
தணியழுந்தூர் நின்றுகந்த வமரர்கோவே. (௬)

பதம்.	உரை.
தேன்	மதுவானது [நின்ற
அமரும்	மாறாதே ப்ரவஹியா
பொழில்	சோலைகளாலே
தழுவும்	சுற்றப்பட்டு
எழில்கொள்	அழகுமிக்கிருந்துள்ள
வீதி	வீதிகளிலும்
செழு	அழகிய
மாடம்	மண்டபங்களிலும்
மாளிகைகள்	அரண்மனைகளிலும்
கூடந்தோறும்	க்ருஹங்களிலும் [ராய்
ஆன	ஆத்மகுண ஸம்பந்ந
தொல்சீர்	பழையதான (அழிவற்ற) கீர்த்தியையுடையராய்
மறையாளர்	வேதாத்யயநபரரான ப்ராஹ்மணர்கள்
பயிலும்	நெருங்கி வர்த்திக்கிற
செல்வத்தணியழுந்தூர் நின்றுகந்த அமரர்கோ;	

பதம்.	உரை.
வானவர்தம்	தேவர்களுடைய
துயர்தீர	து:க்கம் போம்படியாக
தான்	(ஸர்வ வ்யாபியாய் அவாப்த ஸமஸ்த காமனான) தான்
மாணுருவாய்	வாமந வேஷத்தையுடையனாய்க் கொண்டு
வந்துதோன்றி	வந்தவதரித்து
மாவலியை	மஹாபலியினிடத்தில்
மூவடி	மூன்றடியை
வேண்டி.	யாசித்து (அதுபெற்றவாறே)
ஏழுலகும்	ஸப்தலோகங்களையும்
அமர	(தன் திருவடிக்கீழ்) அடங்கும்படியாக
அளந்த	ஆக்ரமித்தவனாய்,

வென்றி	ஜயசீலமாய்,	சக்கரம்	ஸுதர்சநத்தை
தனி	அத்விதீயமாய்	படை	ஆயுதமாகவுடையனாய்
முதல்	(ஆயுதங்களில்) ப்ரதா(ந)மான	என் தலைவன்	எனக்குஸ்வாமியான
		காண்மின்	ஸர்வேஸ்வரன்கிடீர்.

வ்யா. —ஆறாம்பாட்டு. (வானவர்தம் துயர்தீர) அநந்யப்ராணராய் அவனையல்லதறியாதே (௧) *தொடையொத்ததுளபமும் கூடையும் பொலிந்து தோன்றுமவர்களுக்காகவன்றிக்கே, கார்யம்செய்து தலைக்கட்டின வநந்தரம்,நான்ஈஸ்வரனென்னும்தேவர்களுக்கு அஸுரர்களால் வந்த துஃக்கம் போம்படி வந்தவதரித்து. (மாணுருவாய்) "அவன்பக்கலிலே பெருவிடில் ஜீவிக்கைஅரிது" என்று தோற்றும் இரப்பிலே தகணேறின வடிவையுடையனாய், தனக்கில்லாதது மூவடியாய், அதுடையான் மஹாபலியாய், அவன்கையிலே தான் நீரேற்றுப்பெற்று, அந்த திருவடிகளின்கீழே ஏழுவகைப்பட்ட லோகங்களுமடங்கும்படிக்கீடாக வளர்ந்து. (வென்றித்தனிமுதல் சக்கரப்படை) வெற்றியை யுடைத்தாய், அத்விதீயமாய் ஆயுதங்களுக் கெல்லாம ப்ரதா(ந)மாயிருக்கிற திருவாழியைப் பரிகரமாகவுடையனான என் ஸ்வாமிகிடிகோள் (௨) "త్రివిక్రమ క్రమాక్రాంత త్రైలోక్యస్స్ఫురదాయుధః- த்ரிவிக்ரம க்ரமாக்ராந்த்த்ரைலோக்யஸ்ஸ்ப்புரதாயுதஃ" என்கிறபடியேயிருக்கிற திவ்யாயுதங்களையுடையவன். (௩) "జితం భగవతా జగ- ஜிதம். பகவதா ஜகத்".

(தேனமரும் பொழில் தழுவுமெழில் கொள்வீதி) தேன்மாறாத பொழிலாலே தழுவப்பட்ட அழகையுடைத்தான வீதி. (செழுமாடமித்யாதி) அழகிய மாடங்கள், மாளிகைகள், கூடங்கள், மண்டபங்கள், மற்றுமவகாசமுள்ள இடமெங்கும். (ஆனதொல்சீர்) வித்யாவிநயங்களால் ஸம்பந்நரா † (ய்,பழையதான சீரையுமுடையரா)யிருக்கிற ப்ராஹ்மணர் நெருங்குகையால் வந்தநிரவதிகஸம்பத்தை யுடைய. ... ... (௬)

அநு. —ஆறாம்பாட்டு. (வானவரித்யாதி)கீழ்ப்பாட்டில், விரோதி நிரஸநசீலனென்றீர்; அவன் விரோதி நிரஸநசீலனேயாகிலும், எங்களுக்கு ப்ரயோஜநாந்தரங்களில் நசை அநுவர்த்திக்கையாலே எங்களைக் கைக்கொள்ளுமோவென்ன; ப்ரயோஜநாந்தரபரர்க்குங்கூட தன்னை இரப்பாளனாக்கிக்கார்யம் செய்யும்படியான ஸுசீலன்கிடிகோளென்கிறாரென்று ஸங்கதி.

---

(௧) தி-பள்-௰. (௨) வி-டு-ரு-ரு-௧௭. (௩) † குண்டலிதம் க்லாசித்தம்.

"வானவர்" என்னவமைந்திருக்க "தம்" என்றத்தாலே அவர்கள் தூரபிமாநம் தோற்றுமென்று விலக்ஷித்து வ்யாவர்த்த்யகதநபூர்வகம் தாத்பர்யமருளிச் செய்கிறார் (அநந்யேத்யாதி). வானவரென்று, வான்-ப்ராப்யமாகத் தோற்றுகையாலும், அதுபெறுகைக்கு ஸாதநமும் தாமே அநுஷ்டிக்க வல்லாரென்று முன்பிருக்கிற ஸ்வாதந்த்ர்யம் "தம்" என்றத்தாலும் ஸூசிதமாகையாலும், அநந்யப்ரயோஜநராய் அநந்ய ஸாதநரானவர்களை வ்யாவர்த்திக்கிறதென்று திருவுள்ளம். மாணாய் என்னாதே, "மாணுருவாய்" என்றத்தாலே, இரப்பிலே தகணைறினமைதோற்றுமென்று அருளிச்செய்கிறார் (அவனித்யாதி). "தான் மாணுருவாய் மூவடி மாவலியைவேண்டி" என்றந்வயித்து, தானே தன்னிலே ஸர்வஸ்வாமித்வம் தோற்றியிருக்கையாலே வேண்டக்கூடுமோவென்ன வருளிச்செய்கிறார் (தனக்கித்யாதி) மாணுருவானபோது சக்கரப்படையுண்டோவென்ன; "அளந்தபோது உண்டு" என்றுப்ரமாணமருளிச்செய்கிறார் (த்ரிவிக்ரம இத்யாதி). திருவடிகளின்கீழே அடங்கும்படி அளக்கக்கூடுமோவென்ன வருளிச்செய்கிறார் (ஜிதமித்யாதி). ... ... (௬)

மூ. — பந்தணைந்த மெல்விரலாள் சீதைக்காகிப்
பகலவன் மீதியங்காத விலங்கைவேந்தன்
அந்தமில்திண் கரம்சிரங்கள் புரண்டுவீழ
அடுகணையாலெய்து கந்தவம்மான் காண்மின்
செந்தமிழும் வடகலையும் திகழ்ந்தநாவர்
திசைமுகனேயனையவர்கள் செம்மைமிக்க
அந்தணர்த மாகுதியின் புகையார் செல்வத்
தணியழுந்தூர் நின்றுகந்த வமரர்கோவே. (௭)

பதம்.	உரை.	பதம்.	உரை.
செந்தமிழும்	அழகிய (ஸ்வார்த்தத்தை எளிதில் ப்ரகாசிப்பிக்க வல்ல) த்ராவிடவேதமும்	மிக்கசெம்மை	அதிசயிதமான வைலக்ஷண்யத்தை யுடையரான
வடகலையும்	ஸம்ஸ்க்ருத வேதமும்	அந்தணர்தம்	ப்ராஹ்மணருடைய
திகழ்ந்த நாவர்	விளங்காநின்ற நாவையுடையவர்களாய்	ஆகுதியின்	(யஜ்ஞத்தில்) ஆஹுதியிலேயுண்டான
திசைமுகனே அனையவர்கள்	ப்ரஹ்மாவோடொத்த(ப்ரபாவமுடையவர்களாய்.	புகை ஆர்	தூமம் நிறைந்திருக்கிற
		செல்வத்தணியழுந்தூர் நின்றுகந்த அமரர்கோ,	கிற
		பந்து அணைந்த	பந்தோடு கூடியிருக்

மெல்	ம்ருதுவான [ன
விரலாள்	விரல்களையுடையளா
சீதைக்காகி	ஸீதை நிமித்தமாக,
பகலவன்	ஸூர்யன்
மீது	மேலே
இயங்காத	ஸஞ்சரிக்கப்போகாத (உயர்ந்த அரணை
இலங்கை	லங்கைக்கு [யுடைய)
வேந்தன்	ராஜாவான ராவணனுடைய[ணிறந்த)
அந்தம் இல்	அவதியில்லாத (எண்

திண்	பலிஷ்ட்டமான
கரம்	கைகளும்
சிரங்கள்	தலைகளும் [க
புரண்டுவீழ	அறுந்துவிழும்படியா
அடுகணையால்	கொல்லவல்லபாணத்திறால்
எய்து உகந்த	அடித்து (க்கொன்று) ஸந்தோஷித்த
அம்மான்காண்மின்	ஸர்வேஶ்வரன் கிடீர். (௭)

வ்யா.—ஏழாம்பாட்டு. (பந்தணைந்த) ஸர்வேஶ்வரன் ஸந்நிதியிலும் பந்துகொண்டுபோதுபோக்க வேண்டும்படியாய், அந்த பந்து தொடவும் பொறாதபடியான விரலையுடைய பெரியபிராட்டியாரோடுண்டான ஸம்ஶ்லேஷத்துக்காக. பிரிவுக்கு ஹேதுபூ(பூ)தனாய், சந்த்ராதித்யர்கள் மேலே ஸஞ்சரிக்கப்பெறாத அரணையுடைத்தாயிருக்கிற லங்கைக்கு நிர்வாஹகனான ராவணனுடைய. (அந்தமிலித்யாதி) அறுக்கவறுக்க முளைக்கையாலே அவதியின்றிக்கே யிருப்பதாய், திண்ணியதாயுமிருக்கிற தோள்களும் தலைகளும் தெறித்துப்போய் விழ, ஒரு கொலையம்பாலே எய்து அவனையழித்து, "விரோதிபோகப் பெற்றோம், ஆஶ்ரிதரும் குடியிருப்புப் பெற்றார்கள்" என்று. அவர்களுக்குக்கடவ உகப்பைத்தானுகந்த ஸர்வேஶ்வரன் கிடீர்.

(செந்தமிழித்யாதி) (செந்தமிழும்) அர்த்தத்தை நேராகக்காட்ட வல்ல தமிழும். (வடகலையும்) ஸம்ஸ்க்ருதமும், இவையடைய விளங்குகிற நாவையுடையருமாய். (திசைமுகனே யனையவர்கள்) தனித்தனியே சதுர்முகனைப்போலே ஸ்ருஷ்டிக்ஷமராயிருக்கிற ப்ராஹ்மணர்வர்த்திக்கிற (செம்மையித்யாதி) இப்படிவைலக்ஷண்யம் விஞ்சியிருந்துள்ள ப்ராஹ்மணருடைய ஹோமதூமத்தையும் அழகிய செல்வத்தையுமுடைய அணியழுந்தூர். ... ... (௭)

அரு.—ஏழாம்பாட்டு. (பந்தணைந்தவித்யாதி) கீழ்ப்பாட்டில், ப்ரயோஜனாந்தர பரரிடத்தில் தன்னை இரப்பாளனாக்கியும் கார்யம் செய்யுமவன் என்னாநின்றீர்; இப்படி அவன் செய்யவேண்டுவானென்னென்னில்; அவன் பிராட்டியிடத்தில் அபி(பி)நிவிஷ்டனாய் கார்யம் செய்யுமாபோலே சேதநரெல்லாரிடத்திலும் அபிநிவிஷ்டனாயிருப்பன் கிடீரென்று உபதேசிக்கிறாரென்று ஸங்கதி.

ஸர்வேஸ்வரனுக்கு வ்யாமோஹத்தை யுண்டாக்குகைக்கு உபயுக்தமான மௌக்த்ய([illegible])மும், மார்தவமும் ஸூசிதமாகிற தென்றருளிச்செய்கிறார் (ஸர்வேஸ்வரனித்யாதி).

“ ஆர் ” என்று பொருந்துதலாய், இவர்களுக்குப் பொருந்தினதென்றாய், அத்தால்பலிதம் (அழகிய) என்றது. … … … … (எ)

மூ. — கும்பமிகு மதவேழம் குலையக் கொம்பு
பறித்து மழவிடை யடர்த்துக் குரவைகோத்து
வம்பவிழும் மலர்க்குழலாளாய்ச் சிவைத்த
தயிர் வெண்ணெயுண்டுகந்த மாயோன் காண்மின்
செம்பவளமரகத நன்முத்தம்காட்டத்
திகழ்பூகம் கதலிபலவளம் மிக்கெங்கும்
அம்பொன்மதிள் பொழில்சூழ்ந்தழகார்செல்வத்
தணியழுந்தூர் நின்றுகந்த வமரர்கோவே. (அ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
செம்பவளம்	(பாக்குமரங்களில் பழங்கள்) சிவந்த பவழத்தையும்	புடை	பர்யந்தங்களிலே
மரகதம்	(அவற்றின் காய்கள்) மரதகப் பச்சையையும்	சூழ்ந்து	சுற்றப்பட்டு
நல்முத்தம்	(பூக்கள்) நல்ல முத்துக்களையும்	அழகு ஆர்	அழகுமிக்கிருக்கிற
காட்ட	தர்சிப்பிக்கவற்றன	செல்வத்தணியழுந்தூர் நின்றுகந்த அமரர்கோ,	[யும்
பூகம்	கமுகுகளாலே	மிகு கும்பம்	பெருத்தமஸ்தகத்தை
திகழ்	விளங்காநின்றதாய்,	மதம்	மதத்தையுமுடைய
பல	அநேகமான	வேழம்	குவலயா பீடமானது
கதலி	வாழைகளுடைய	குலைய	அழியும்படியாக
வளம்	ஸம்ருத்தியானது	கொம்பு	(அதின்) தந்தங்களை
எங்கும்	எல்லாவிடங்களிலும்	பறித்து	பிடுங்கியும்,
மிக்கு	அதிசயித்திருப்பதாய்,	மழம்	இளம்பருவமான
அம்பொன்	மிகவும் ஸ்ப்ருஹணீயமான [தான	விடை	எருதுகளை
மதிள்	ப்ராகாரத்தையுடைத்	அடர்த்து	நெருக்கியும்,
பொழில்	சோலைகளாலே	குரவை	ராஸக்ரீடையிலே
		கோத்து	(பெண்களோடு) கை கோத்தும்,
		வம்பு	பரிமளமானது
		அவிழும்	பரவாநின்ற
		மலர்	பூக்களுடைய [ளான
		குழலாள்	மயிர்முடியையுடைய

ஆய்ச்சி	யசோதைப்பிராட்டி	உண்டு	அமுதுசெய்தும்
வைத்த	சேமித்துவைத்த	உகந்த	ஸந்தோஷித்த
தயிர்	தயிரையும்	மாயோன்கா	ஆஸ்சர்யபூ(பூ)தன்
வெண்ணெய்	நவநீதத்தையும்.	ண்மின்	கிடீர். (அ)

வ்யா.—எட்டாம்பாட்டு. (கும்பமிகு மதவேழம்) ஆனைகளோடும் மலைகளோடும் பொருது புண்பட்ட மஸ்தகத்தையுடைத்தாய், மதமுதிதமாயிருக்கிற குவலயாபீடமானது குட்டிச்சுவர்போலே தளர்ந்துவிழும்படி அதினுடையகொம்பை அநாயாஸேந பறித்து. (மழவிடையடர்த்து) பருவத்தால் இளைதாய், "காட்டுக்காட்டு" என்று ம்ருத்யுஸத்ருஸமாயிருக்கிற வ்ருஷபங்களேழையும் அழியச்செய்து. (குரவைகோத்து) பெண்களுடைய குரவைக்கூத்திலே தன்னையுமொருவனாக விட்டுக்கோத்து. (வம்பவிழுமித்யாதி) விரோதிவர்க்கத்தைத்தானே கைதொட்டுப்போக்கினவன். அநுகூலஸ்பர்சமுள்ள த்ரவ்யமொழியச் செல்லாமையாலே, பரிமள ப்ரசுரமான பூவையுடைத்தான குழலையுடைய யசோதைப் பிராட்டி வைத்த தயிரையும் வெண்ணெயையும் அமுதுசெய்து, அத்தாலே பெறுப்பேறு பெற்றானாகவிருக்கிற ஆஸ்சர்யபூ(பூ)தன் கிடீர்.

(செம்பவள மரதகநன்முத்தம் காட்ட) அங்குண்டான கமுகுகளில் பாளைகள் முத்தைக்காட்ட, பசுங்காயானது மரகதத்தைக் காட்ட, பழுங்காயானது பவளத்தைக்காட்ட, ஆக இப்படி மூன்றும் ஒருகாலே கண்டநுபவிக்கலாம்படி யிருப்பதாய், வாழைகளினுடைய மிகுதியால் வந்த அழகு குறைவற்று எங்குமொக்க ஸ்ப்ருஹணீயமாய், அரணாகப்போரும்படியான மதிளாலே சூழப்பட்ட பொழிலையுடைத்தாயிருக்கிற திருவழுந்தூர். ... ... (அ)

அரு.—எட்டாம்பாட்டு. (கும்பமித்யாதி) கீழ்ப்பாட்டில், சொன்ன பிராட்டியிடத்தில் போலே சேதநரிடத்தில் அபிநிவிஷ்டனாயிருக்கைக்கு மூலமென்னென்ன, ஆஸ்ரித கரஸ்பர்சமுள்ள த்ரவ்யத்தாலல்லது செல்லாதபடியானஸ்வபா(வ)வன்கிடீரென்கிறாரென்று ஸங்கதி.

கும்பத்துக்கு மிகுதி புத்த(த)வடுக்க னென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார் (ஆனையித்யாதி). (காட்டுக்காட்டு) என்று (பருவத்தால் இளைதாய்) என்று அந்வயித்துக்கொள்வது.

"பல-கதலி" என்று அந்வயம் திருவுள்ளம்பற்றி யருளிச் செய்கிறார் வாழைகளினுடைய மிகுதியாலே) என்று ... ... (அ)

மூ. — ஊடேறு கஞ்சனொடு மல்லும் வில்லும்
ஒண்கரியுமுருள் சகடுமுடையச்செற்ற
நீடேறுபெருவலித் தோளுடையவென்றி
நிலவுபுகழ் நேமியங்கை நெடியோன்காண்மின்
சேடேறு பொழில்தழுவு மெழில்கொள்வீதித்
திருவிழவில் மணியணிந்த திண்ணைதோறும்
ஆடேறு மலர்க் குழலார் பயிலும் செல்வத்
தணியழுந்தூர் நின்றுகந்த வமரர்கோவே. (கூ)

பதம்.	உரை.
சேடுஏறு	இளமையேறி(மிக்கு) இருக்கிற
பொழில்	சோலைகளாலே
தழுவும்	சுற்றும்வ்யாப்தமாய்க் கொண்டு [ருக்கிற
எழில்கொள்	அழகை யுடைத்தாயி
வீதி	திருவீதிகளில்
திருவிழவில்	உத்ஸவங்களிலே
மணி	ரத்நங்களாலே
அணிந்த	அலங்கரிக்கப்பட்ட
திண்ணைதோறும்	திண்ணைகளெங்கும்,
ஆடுஏறு	பரிமளம்ஏறி (மிக்கு) இருக்கிற
மலர்	புஷ்பங்களினாலலங்கரிக்கப்பட்ட
குழலார்	மயிர்முடியையுடைய பெண்கள்
பயிலும்	நெருங்கி வர்த்திக்கிற
செல்வத்தணியழுந்தூர் நின்றுகந்த அமரர் கோ,	
ஊடு ஏறு	(மஞ்சத்தினுடைய) மத்யத்திலே ஏறியிருக்கிற

பதம்	உரை.
கஞ்சனொடு	கம்ஸனோடுகூட
மல்லும்	சாணூராதிமல்லவர்க்கமும்
வில்லும்	தநுஸ்ஸும் [மான)
ஒண்	அழகிய (பலிஷ்ட்ட
கரியும்	குவலயாபீடமும்
உருள்	உருண்டு வாராநின்ற
சகடும்	சகடாஸுரனும்
உடைய	நொருக்குண்ணும்படி
செற்ற	(அவர்களை) அழித்தவனாய்
நீடுஏறு	மென்மேலும் அதிசயித்து வாராநின்ற
பெருவலி	மிக்கபலத்தையுடைய
தோள்உடைய	புஜங்களையுடையனாய்
வென்றி	ஜயமானது
நிலவு	(எப்போதும்) வர்த்தியாநிற்கையாலுண்டான
புகழ்	கீர்த்தியையுடைய
நேமி	திருவாழியை
அம்கை	அழகிய திருக்கையிலேந்தினவனான
நெடியோன் ஸர்வாதிகன்கிடீர் (கூ)	

வ்யா. —ஒன்பதாம்பாட்டு. (ஊடேறு கஞ்சனொடு) தன்பயத்தாலே உயரமஞ்சத்திலே போயேறி நிற்கிற கம்ஸனோடேகூட அவன் தனக்கு அரணாகநிறுத்தின மல்லவர்க்கமும். (வில்லும்) வில்விழவுக்

கென்று இட்டுவைத்த வில்லும். (ஒண்கரியும்) ஆனைநலிக்கதென்று மாதுலனைப் கண்ணநீரை விழவிட்டிருப்பதாகக் கோலின குவலயாபீடமும். (உருள்சகடும்) அஸுராவேசத்தாலே தொட்டில் பருவத்திலே மேலே வந்து விழக்கோலின சகடமும். (உடையச்செற்ற) இவற்றையெல்லாமொருகாலே அழியச் செய்தாப்போலே தோற்றுகிறதாய்த்து இவர்க்கு அநுஸந்தானத்தில் வைசத்ய(ஶத்ய)த்தாலே (நீட்டேழ் பெருவலித் தோளுடையவித்யாதி) நாள்செல்ல நாள்செல்ல மிடுக்கேறிவாராநிற்பதான தோளையுடையனைப், விஜயமானது எப்போது மொககவர்த்தியாநின்ற புகழையுடைத்தான திருவாழியைக் கையிலேயுடைய ஸர்வாதிகன் கிடீர்.

(சேடேறு பொழில்) இளமைமிக்குவருகிற பொழிலாலே தழுவப்பட்டு, அத்தாலே எழில்மிக்கிருக்கிற திருவீதியில் திருநாள்களில் ரத்நங்களாலே அழுத்தப்பட்ட திண்ணைகள்தோறும், ஆடுகைக்காக ஏறின புஷ்பாதிகளாலே அலங்க்ருதமான குழலையுடைய ஸ்த்ரீகளுடைய நெருக்கத்தால்வந்த நிரவதிக ஸம்பத்தையுடைய திருவழுந்தூரிலே. "ஆடு" என்று - பரிமளம். பரிமளம்மிக்க மலர்க்குழல். (௯)

அநு.—ஒன்பதாம்பாட்டு. (ஊடேறித்யாதி) கீழ்ப்பாட்டில் ஆஶ்ரிதகரஸ்பர்சமுள்ள த்ரவ்யத்தாலல்லது செல்லாதபடியான வ்யாமோஹம் சொல்லிற்று; அந்த வ்யாமோஹகார்யமான ஆஶ்ரிதவிரோதி நிரஸநம் பண்ணினமையைப் பலபடி உபதேசித்து கேமியைப்போலே உங்களையும் கைவிடானென்கிறாரென்று ஸங்கதி.

"ஊடு" என்று மத்த்ய(த்ஸ்ய)மாய், மஞ்சத்தின் மத்த்யமாக்கி யருளிச் செய்கிறார் (தன்னித்யாதி). ... ... (௯)

மூ. — பன்றியாய் மீனாகி யரியாய்ப்பாரைப்
படைத்துக்காத்துண்டு மிழ்ந்த பரமன்றனை
அன்றமரர்க்கதிபதியு மயனும்சேயும்
அடிபணியவணியழுந்தூர் நின்றகோவை
கன்றிநெடுவேல் வலவனாலிநாடன்
கலிகன்றி யொலிசெய்த வின்பப்பாடல்
ஒன்றினொடு நான்குமோரைந்தும் வல்லார்
ஒலிகடல் சூழுலகாளுமும்பர்தாமே. (௧௦)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பதம்.	உரை.
பன்றியாய்	மஹாவராஹமாயும்
மீனாய்	மத்ஸ்யமாயும்
அரியாய்	நரஸிம்ஹமாயும் அவதரித்து
பாரை	பூமியை
படைத்து	ஸ்ருஷ்டித்து
காத்து	ரக்ஷித்து
உண்டு	(ப்ரளயத்தில்) அமுது செய்து
உமிழ்ந்த	(ஸ்ருஷ்டி காலத்தில்) வெளிப் படுத்தின
பரமன்தன்னை	ஸர்வாதிகனாய்,
அன்று	அக்காலத்தில்
அமரர்க்கு	தேவர்களுக்கு
அதிபதியும்	ராஜாவான இந்த்ரனும்
அயனும்	ப்ரஹ்மாவும்
சேயும்	ருத்ரனும்
அடிபணிய	திருவடிகளிலே விழுந்தாஶ்ரயிக்கும் படியாக,
அணி	ஸம்ஸாரத்துக்கு ஆபரணமாயுள்ள
அழுந்தூர்	திருவழுந்தூரில்
நின்ற	உகப்புடனெழுந்தருளியிருக்கிற
கோவை	நித்யஸூரிகளுக்கு(நிர்வாஹகனான) ஸர்வேஶ்வரன் விஷயமாக,
கன்றி	கறையையுடைத்தாய்
நெடு	தீர்க்கமாயுள்ள
வேல்	வேலாயுதத்தை
வலவன்	பிடிக்கவல்லராய்,
ஆலிநாடன்	திருவாலி நாட்டுக்கு நிர்வாஹகரான
கலிகன்றி	ஆழ்வார்
ஒலிசெய்த	ஒலியுடைத்தாம்படி அருளிச் செய்ததாய்
இன்பம்	மதுரமாய்,
ஒன்றினோடு	ஒருபாசுரத்தோடு கூடின
நான்கும்	நாலுபாசுரங்களும்
ஓர் ஐந்தும்	(அதன்பின்) ஒரு ஐந்து பாசுரங்களும்
பாடல்	(ஆகியபத்து)பாசுரங்களும்
வல்லார்	அப்யஸிக்க வல்லவர்கள்,
ஒலி	கோ(ஷ)ஷியாநின்ற
கடல்சூழ்	ஸமுத்ரத்தாலே சூழப்பட்ட
உலகு	லோகங்களை
ஆளும்	பரிபாலநம் பண்ண வல்லரான
உம்பர்தாம்	தேவதைகளாவர்கள்

வ்யா. —பத்தாம்பாட்டு. (பன்றியாயித்யாதி) ஆஶ்ரிதரக்ஷணம் ஒரு தலையானால் தன்னைப்பேணாமையும் ரக்ஷிக்குமவனாய்த்து. (பாரையித்யாதி). பூமியை ஸ்ருஷ்டித்து, பன்றியா யித்யாதிகளாலே (காத்து) அத்தை ரக்ஷித்துத் திரியவும் ப்ரளயம்வர, வயிற்றிலேவைத்துத், திரிய வெளிநாடுகாணப் புறப்படவிட்டு, இப்படி ஸர்வவித ரக்ஷணங்களையும் பண்ணுமிடத்தில் தன்னை எண்ணினால் பின்னை ஒருவரையும் எண்ணவொண்ணாதிருக்கிற ஸர்வாதிகனை. (அன்றமரர்க்கித்யாதி) அபிமாநிகளான ப்ரஹ்மாதிகளும்வந்து

ஆஶ்ரயித்து. தந்தாமுடைய அபிமதங்கள் பெற்றுப் போம்படியாக வந்துநிற்கிற இடமாய்த்து தேவர்களுக்கெல்லாம் நியாமகனாயிருக்கிற இந்த்ரனும், இவ்வருகுள்ளாரிற் காட்டில் விஜாதீயமான ஜந்மத்தையுடைய ப்ரஹ்மாவும், அவன்மகனான ருத்ரனும். (அடிபணிய) திருவடிகளிலே விழுந்து ஆஶ்ரயிக்க, திருவழுந்தூரிலே நின்றருளின ஸர்வாதிகனானவனை. (கன்றிநெடுவேலித்யாதி) சத்ருநிரஸநம்பண்ணிக் கறைகழற்ற அவஸரமின்றிக்கே யிருப்பதாய், (க) "𑌮𑌹𑌾𑌧𑌨𑍁𑌃-மஹத்தநு:" என்னுமாபோலே, ஒருவரால்நியமித்து ஆளவொண்ணாதபடி நெடிதாயிருந்துள்ள வேலைக்கையிலேயுடையாராய் திருவாலிநாட்டையுடையராயிருந்துள்ள ஆழ்வார், ஒலியையுடைத்தாம்படி அருளிச்செய்த இனிய பாடலான இப்பத்தையும் வல்லார். "ஒன்றினொடு நான்குமோரைந்தும்" என்று தாம்சேர்த்து அநுபவித்த ப்ரகாரமிருக்கிறபடி. இவற்றை அப்யஸிக்க வல்லார்க்கு, ப்ரஹ்மாதிகளுடைய பதமுண்டாக முன்னந்தட்டில்லை. "திருமங்கையாழ்வார்தாம் பாகவத சேஷத்வமாக்குகைக்கு உடலாயிருக்கையாலே ஐஶ்வர்யத்தையும் ஆதரித்தருளினார்" என்றருளிச்செய்வர். (க௦)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

அரு. —பத்தாம்பாட்டு. (பன்றியாயித்யாதி). (தாம்சேர்த்தநுபவித்த ப்ரகாரம்) என்றது - முதற்பாட்டில், அநந்தாவதாரகந்தமான க்ஷீரார்ணவசாயியை ஒருபாட்டிலும், அங்கு நின்றும் திர்யக்காய் அவதரித்தபடியை "முன்னிவ்வுலகு" என்கிற இரண்டாம்பாட்டிலும், "சிலம்புமுதல்" என்கிற நாலாம்பாட்டிலும், "சினமேவும்" என்கிற அஞ்சாம்பாட்டிலும், "பன்றியாய்" என்கிற பத்தாம்பாட்டிலுமாக நாலுபாட்டிலும், ஒருப்ரகாரமாகவும், மற்றை அஞ்சுபாட்டிலும் கஜேந்த்ரரக்ஷணார்த்தமாகவும் வாமந ராம க்ருஷ்ண ரூபேணவும் வந்தவவற்றுக்கு ஒருசேர்த்தியும் திருவுள்ளத்திலொட்டி அநுபவித்தமை தோற்ற இங்ஙனருளிச்செய்தாரென்றபடி. ... ... (க௦)

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஏழாம்பத்தில் எட்டாந்திருமொழி முடிந்தது.

(க) ரா-யு-௬௦-கக.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஏழாம்பத்து ஒன்பதாந்திருமொழி

கள்ளம்மனம் ப்ரவேசம்.

வ்யா.—கீழ்த்திருமொழியிலே, அவனே கிடிகோள் ஆஶ்ரயணீயனென்றார்; ஆனால்நீர் எங்களைச் செய்யச்சொல்லுகிற தென்னென்ன; பாஹ்யகுத்ருஷ்டிகளுடைய வார்த்தையைக்கேட்டு அநர்த்தப்பட்டுப் போகாதே ஆஶ்ரயணீயனானவன் திருவடிகளை ஆஶ்ரயித்து உஜ்ஜீவித்துப்போகப் பாருங்கோளென்கிறார். ... ... *

அரு.—கள்ளம் மனம்ப்ரவேசம். (நீரெங்களைச் செய்யச் சொல்லுகிற தென்னென்ன) என்றது-எங்களுக்கும் வேறுசிலர் உபதேசிக்கக்கேட்டவையுண்டாயிருக்க நீரெங்களைச் செய்யச் சொல்லுகிற தென்னென்ன என்றபடி. *

மூ. — கள்ளம்மனம் விள்ளும்வகை கருதிக்கழல் தொழுவீர்
வெள்ளம் முதுபரவைத்திரை விரியக்கரையெங்கும்
தெள்ளும் மணிதிகழும் சிறுபுலியூர்ச் சலசயனத்
துள்ளும் எனதுள்ளத்துள்ளு முறைவாரையுள்ளீரே. (க)

பதம்.	உரை.	பதம்.	உரை.
கள்ளம்	ஆத்மாபஹாரமாகிற க்ருத்ரிமத்தையுடைய	மணி	ரத்நங்களானவை
மனம்	மனஸ்ஸானது	திகழும்	விளங்காநின்ற
விள்ளும்வகை	(அவ்வாத்மாபஹாரத்தில் நின்றும்) வேறுபடும் ப்ரகாரத்தை	சிறுபுலியூர்	சிறுபுலியூரென்னும் திருநாமத்தையுடைத்தாய்
கருதி	ஆசைப்பட்டு	சலசயனத்துள்ளும்	ஜலசாயியான எம்பெருமான் பள்ளிகொண்டிருக்கிற சலசயநமென்றும் திவ்யதேசத்திலுள்ளும்
கழல்	(ஸர்வேஶ்வரன்) திருவடிகளை		
தொழுவீர்	ஆஶ்ரயிக்க வேண்டியிருக்கிறவர்களே!		
முது	அநாதியான		
பரவை	ஸமுத்ரத்தினுண்டான	எனது	என்னுடைய
திரை	அலைகளினுண்டான	உள்ளத்துள்ளும்	ஹ்ருதயத்திலுள்ளும்
வெள்ளம்	ப்ரவாஹமானது		
கரை எங்கும்	தீரங்களிலே	உறைவாரை	நித்யவாஸம்பண்ணும் ஸர்வேஶ்வரனை
விரிய	பரவாநிற்க,		
தெள்ளும்	(அவ்வலைகளினாலே) கொழிக்கப்பட்ட	உள்ளீர்	த்யாநியுங்கோள் (க)

வ்யா. —முதற்பாட்டு. (கள்ளம்மனம் விள்ளும் வகைக்கருதி) (க) "𑌯𑌥𑌾𑌹𑌿 𑌚𑍋𑌰𑌸𑍍𑌸 𑌤𑌥𑌾𑌹𑌿 𑌬𑍁𑌦𑍍𑌧𑌃- யதாஹி சோரஸ் ஸததாஹி புத்த:" என்கிறபடியே, வேதார்த்தாபலாபம் பண்ணுவார் - சோரரிறே; அதுக்குமேலே அவனுடையதான ஆத்மாபஹாரம் பண்ணிப்போருகிறார் சிலரிறே. க்ருத்ரிமத்தைப்பண்ணி வர்த்திக்கிறஹ்ருதயம், அதில்நின்றும் வேறுபடும் ப்ரகாரத்தை மநோரதித்து, அவன் திருவடிகளை ஆஶ்ரயிக்க வேண்டியிருப்பீர்! (வெள்ளம் முதுபரவைத் திரைவிரிய) பழையதானகடல்திரைகளாலுண்டான வெள்ளமானது கரையெங்கும் போந்தேற.

(தெள்ளும் மணிதிகழும்) நினைவின்றிக்கேயிருக்கக் கடலேறி வடிந்தபடியாலே அங்குண்டான ரத்நாதிகள் விளங்காநின்றுள்ள. (சிறுபுலியூர்ச் சலசயனத்துள்ளுமென துள்ளத் துள்ளுமுறை வாரையுள்ளீரே) உகந்தருளின நிலங்களும் இவர் திருவுள்ளமும் ஒக்கவாய்த்து அவன் விரும்பியிருப்பது. இப்படியிருக்கையாலே ஆஶ்ரயிப்பார்க்கு ஆஶ்ரயணீயஸ்தாநம்இவைஇரண்டுமாய்த்து. "சலசயனன்" என்றது - ஜலசயநனென்றபடியாய், அது அவனுக்குத் திருநாமமாய், ஜலசயநன் வர்த்திக்கிறவிடம் சலசயநமென்று ஊருக்குப்பேராகிறது. ... ... (க)

அரு.— முதற்பாட்டு. (கள்ளமித்யாதி) மனத்துக்கு கள்ளமாவது - பௌத்தாதி மதத்தைப் பற்றி வர்த்திக்கை என்று விவக்ஷித்து, அவர்கள் கள்வரோ வென்னவருளிச்செய்கிறார் (யதாஹிசோர இத்யாதி).(சிலரிறே) என்றது-குத்ருஷ்டிகளை. சப்தார்த்தம் (க்ருத்ரிமத்தையித்யாதி). (க்ருத்ரிமத்தை) என்றது-வேதாபஹாரத்தையும், ஆத்மாபஹாரத்தையும். [முதுபரவைத்திரை-வெள்ளம்-கரைஎங்கும்-விரிய] என்றந்வயித்தருளிச் செய்கிறார் (பழையதானவித்யாதி).

கரையெங்கும் விரிய மணிதிகழும் என்னவமைந்திருக்க "தெள்ளும்" என்று விசேஷித்ததுக்குக் கருத்தருளிச் செய்கிறார் (நினைவித்யாதி). "நினைவு" என்றது-ரத்நஸம்பாதநார்த்தமான நினைவு என்றபடி. ஈடுபாடாகத்தாத்பர்ய மருளிச் செய்கிறார் (உகந்தருளின வித்யாதி). ஆறும்பாட்டில் "சலசயநம் தொழும்"என்று பகவத்பரமாகவிருக்கவேண்டியிருக்க இங்கு திவ்யதேசத்துக்குப் பேரானபடி எங்ஙனே யென்ன வருளிச் செய்கிறார் (சலசயனனென்றித்யாதி). மன்னக்களுழறி, சலசயநனென்று திருநாமமாய்த் தென்று திருவுள்ளம். (க)

(க)

மூ. — தெருவில்திரி சிறுநோன்பியர் செஞ்சோற்றொடுகஞ்சி
மருவிப் பிரிந்தவர் வாய்மொழி மதியாது வந்தடைவீர்
திருவில்பொலி மறையோர் சிறுபுலியூர்ச் சலசயனத்து
உருவக் குறளடிக ளடியுணர்மி னுணர்வீரே. (உ)

பதம்.	உரை.
தெருவில்	வீதிகள்தோறும்
திரி	ஸஞ்சரிப்பவராய்,
சிறு	அதிக்ஷுத்ரமான
நோன்பியர்	வ்ரதத்தையுடையராய், [அழகிதாக
செம்	(தயிர்முதலியவற்றால்)
சோற்றொடு	சோறோடுகூட
கஞ்சி	(குடிக்க வேண்டும்) கஞ்சியை (அந்நரஸத்தை) [து)
மருவி	ஆசைப்பட்டு (புஜித்
பிரிந்தவர்	ஸாத்விகர்களிடத்தில் நின்றும் வேறுபட்ட ஜைநாதிகள்
வாய்மொழி	வாயினால் சொல்லப்பட்ட சொல்லை
மதியாது	ஆதரியாமல்
வந்து	அவர்களைவிட்டுவந்து
அடைவீர்	ஆஶ்ரயிக்கப் பார்க்கிறவர்களே!
திருவில்	ஸம்பத்தினால்
பொலி	ஸம்ருத்தரான
மறையோர்	ப்ராஹ்மணர் வர்த்திக்கிற
சிறுபுலியூர்ச்சலசயனத்து,	[வ
உருவ	அழகியவடிவையுடை
குறள்	வாமநனான
அடிகள்	ஸ்வாமியினுடைய
அடி	திருவடிகளை
உணர்வீர்	த்யாநிக்கப் பார்த்தீர்களாகில்.
உணர்மின்	த்யாநியுங்கோள். (உ.)

வ்யா. —இரண்டாம்பாட்டு. (தெருவில்திரி சிறுநோன்பியர்) அஸதஸ்ய வேஷத்தையுடையராய்க்கொண்டு தெருவுகளிலே ஸஞ்சரிக்கிற அவைதிகமான வ்ருத்தத்தையுடையராய். (செஞ்சோற்றொடு கஞ்சி மருவிப்பிரிந்தவர் வாய்மொழி மதியாது வந்தடைவீர்) (க) “தண்டயிரினால்த் திரளைமிடற்றிடை நெருக்குவான்” என்றும், மனந்திரியாக்கஞ்சி என்றுமுண்டு அவர்கள்புஜித்து வாஸனைபண்ணிப் போருவது. ஆக இப்படி அவைதிகமான அநுஷ்டாநத்தையுடையராய், வைதிகமர்யாதையை அகன்று திரிகிறவர்களுடைய வாயில் வார்த்தையை அநாதரித்து வந்தாஶ்ரயிப்பீர்!

(திருவில்பொலி மறையோர்) ஐஶ்வர்யம் குறைவற்றிருக்கிற ப்ராஹ்மணர்வர்த்திக்கிற. (சிறுபுலியூர்ச் சலசயனத்து) அழகியதாய், கண்டார்க்குமேல் விழவேண்டும்படியான வடிவையுடைய ஸ்ரீவாமநனான ஸர்வேஶ்வரனுடைய திருவடிகளை ஸ்மரியுங்கோள், அநுஸந்

(க) உ-க-எ.

திக்கப்பார்க்கிறீங்கள். (உணர்வீர்) அநுஸந்தாநத்தை யுடையீர்! "தெருவில் திரிசிறுநோன்பியர்செஞ்சோற்றொடுகஞ்சிமருவிப்பிரிந்தவருடைய வாயில் வார்த்தையை அநாதரியுங்கோள். திருவில் பொலி மறையோர் சிறுபுலியூர்ச்சலசயனத்தை வந்தாஶ்ரயிக்கப் பாருங்கோள் உருவக்குறளடிகளடியைஉணருங்கோள்." என்றுக்ரியை.(௨)

அரு.—இரண்டாம்பாட்டு. (தெருவிலித்யாதி) கீழ்ப்பாட்டில், பௌத்தா(த³)திமதத்தைக் கள்ளமாகச் சொல்லுகிறபடி யென்னென்ன, அவர்கள் கள்ளத்தை வெளியிடுகிறாரென்று ஸங்கதி.

சிறுமை-நிகர்ஷமாய், அருளிச்செய்கிறார் (அவைதிகமான) என்று. அதாவது-பூப்ர(ப்⁴ரு)மணம், வ்ரதார்த்தமாகத் தரையில் புரளுகை முதலானவை. சோற்றுக்குச் செம்மையாவது-நன்மையாய், தயிர்த்திரளை என்று விவக்ஷித்தருளிச் செய்கிறார் (தண்டயிரித்யாதி). (மணற்றிரியாக்கஞ்சி) என்றது மநஸ்ஸு கலங்காதே, தா(தா⁴)ரணார்த்தமாகக் குடிக்கும் கஞ்சி.

மேலே ஒருக்ரியையாக வருளிச்செய்து, மூன்றுக்ரியையாக்கி அருளிச் செய்கிறார் (உணர்வீரித்யாதி). "மதியாது" என்றது-மதியாதிருங்கோள் என்றுயருளிச் செய்கிறார் (அநாதரியுங்கோள்) என்று. ... ... (௨)

மூ. — பறையும் வினைதொழுதுய்மின் நீர்பணியும்சிறுதொண்டீர்
அறையும்புனலொருபால் வயலொருபால் பொழிலொருபால்
சிறைவண்டினமறையும் சிறுபுலியூர்ச் சலசயனத்
துறையு மிறையடியல்ல தொன்றிறையு மறியேனே. (௩)

பதம்.	உரை.
வினை	பாபங்களானவை
பறையும்	பறந்துபோம்,
நீர்	நீங்கள்
தொழுது	(அவனை)ஆஶ்ரயித்து
உய்மின்	உஜ்ஜீவியுங்கள், [வே
சிறு	க்ஷுத்ர விஷயங்களி
தொண்டீர்	சபலரானவர்களே!
	(அதைவிட்டு)
பணியும்	(அவனை) ஆஶ்ரயிக்
	கப்பாருங்கள்;
ஒரு பால்	ஒருபக்கம்
புனல்	ஜலமானது
அறையும்	அலையெறியும்தாய்,
ஒருபால்	ஒருபக்கம் [ய்
வயல்	கழனிகளை யுடையதா

பதம்.	உரை.
ஒருபால்	ஒருபக்கம் [தாய்
பொழில்	சோலைகளையுடைய
சிறை	இறகுகளையுடைய
வண்டு இனம்	வண்டுக்கூட்டங்கள்
அறையும்	(எங்கும்)சப்தியாநிற்
	பதான
	சிறுபுலியூர்ச்சலசயனத்து [ற
உறையும்	பொருந்தி வர்த்திக்கி
இறை	ஸ்வாமியினுடைய
அடியல்லது	திருவடிகளையொழிய
ஒன்று	வேறொன்றை
இறையும்	சிறிதும்
அறியேன்	அறியமாட்டேன். (௩

வ்யா. —மூன்றாம்பாட்டு. கண்டிகோளே நாமிருக்கிறபடி, நீங்களும் இப்படியேயிருக்கப் பாருங்கோளென்கிறார்.

(பறையும்வினை) அநாதிகாலம்பண்ணின பாபங்களடங்கலும் பறந்துபோம். தொழுது உஜ்ஜீவியுங்கோள். (பணியும் சிறுதொண்டீர்) அப்ராப்த விஷயங்களிலே தொண்டுபட்டிருக்கிற நீங்கள் விழுந்தாஸ்ரயியுங்கோள். அங்ஙனன்றிக்கே, அந்தரங்க கிங்கராக வேண்டியிருப்பீர் ! (பணிமின்) ஆஸ்ரயியுங்கோளென்னுமாம்.

(அறையுமித்யாதி) அவ்வூர்தான், ஓரருகு நீர் வெள்ளமறையாநிற்கும், ஓரருகு பொழிலாயிருக்கும், ஓரருகு வயலாயிருக்கும். இவை மூன்றிடத்திலுமொக்க அறையாநின்றுள்ள சிறகையுடைத்தான வண்டுகளினுடைய ஸமூஹமானது அறைகிற சிறுபுலியூர்ச்சலசயனத்திலே நித்யவாஸம்பண்ணுகிற ஸர்வேஶ்வரனுடைய திருவடிகளையொழிய வேறொன்றைத்யாஜ்யதயாவாகிலும் அறிவதொன்றில்லை. (௩)

---

௮௫ —மூன்றாம்பாட்டு. (பறையுமித்யாதி) கள்ளமனத்தைவிட்டு இருந்தவருண்டோவென்னும் சங்கையிலே அருளிச்செய்கிறார் என்று ஸங்கதி திருவுள்ளம்பற்றி அவதாரிகையருளிச்செய்கிறார் (கண்டிகோளேயித்யாதி).

சிறுமை-நிகர்ஷமாய், தாத்பர்யமருளிச் செய்கிறார் (அப்ராப்தேத்யாதி). சிறுமை-ஸௌக்ஷ்மதயாய், அந்தரங்க கைங்கர்யம் செய்யவேண்டியிருப்பீர் என்று அர்த்தாந்தரம் (அங்ஙனன்றிக்கேயித்யாதி).

(அறையாநிற்கும்) அலைமோதாநிற்கும், "சிறை" என்று விசேஷித்ததுக்குக் கருத்தருளிச் செய்கிறார் (அறையாநின்றுள்ள) என்றது. அடித்துக்கொள்ளாநின்றுள்ள என்றபடி. (அறைகிற) என்றது - பாடுகிற என்றபடி. (இறையும்) அல்பாகாரத்தையும் என்று விவக்ஷித்தருளிச் செய்கிறார் (த்யாஜ்யதயாவாகிலும்) என்று. ... ... (௩)

மூ. — வானார் மதிபொதியும் சடைமழுவாளியொடொருபால்
தானாகிய தலைவன வனமரர்க்கதிபதியாம்
தேனார் பொழில்தழுவும் சிறுபுலியூர்ச் சலசயனத்
தானாயனதடியல்ல தொன்றறியேனடியேனே. (௪)

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஒருபால்	(திருமேனியின்) ஏக	ஆர்	நிறைந்திருக்கிற
	தேசத்தில் (வர்த்	மதி	சந்த்ரனவன்
	திக்குமவனாய்),	பொதியும்	அடங்கியிருக்கிற
வான்	ஆகாசத்திலே	சடை	ஜடையையுடையனாய்,

மழுவாளியொடு	மழுவை யுடையனான ருத்ரனோடுகூட	தேன் ஆர்	தேன் மிக்கிருந்துள்ள
அமரர்க்கு அதிபதி	தேவேந்த்ரனும்	பொழில்	சோலைகளாலே
தானாகிய	தான் என்கிற சொல்லுக்குள்ளே அடங்கும்படி அவர்களை விபூதியாக வுடையனான	தழுவும்	வ்யாப்தமான
		சிறுபுலியூர்ச்சலசயனத்து	
		ஆனாயனது	எழுந்தருளி யிருக்கும் க்ருஷ்ணனுடைய
தலைவனும்	ஸர்வாதிகனாய்,	அடியல்லது	திருவடிகளையொழிய
அவன்	அப்படி ஸுசீலனாக ப்ரஸித்தனாய்,	ஒன்று	மற்றொன்றையும்
		அடியேன்	தாஸபூதனான நான்
		அறியேன்	(ரக்ஷகமாக) அறியமாட்டேன். (௪)

வ்யா.—நாலாம்பாட்டு. (வானார்மதி) "தம்மை அவர்கள் ஆப்தராக நினைத்திருந்தபடியாலே தாம் சொல்லிற்றுக்கேட்பார்கள்" என்று பார்த்து, தம்படியை அவர்களுக்கு அறிவித்து "நீங்களும் என்னைப் போலே அவனைக்கொண்டு உங்கள் விரோதிகளைப்போக்கிக் கொள்ளப் பாருங்கோள்" என்கிறார்.

(வானார்மதி) பரந்த ஆகாசத்துக்கெல்லாம் தானே போரும்படியிருக்கிற சந்த்ரனை தன்ஜடையிலேகதேசத்திலே யடக்கி, தமப்பன், பிறரென்றுபாராதே கொல்லுகைக்குப் பரிகரமான மழுவையுடைய ருத்ரனுக்கு தன் திருமேனியிலே இடங்கொடுத்துக்கொடுநிற்கிற சீலத்தையுடையஸர்வாதிகன். (அவனமரர்க்கதிபதியாம்) தேவர்களுக்குநிர்வாஹகனான இந்த்ரனும, தானென்கிற சொல்லுக்குள்ளே அடங்கும்படியிருக்கிறவன்.

(தேனார்பொழிலித்யாதி) தேன்மாறாத பொழிலாலே அணையப்பட்டிருந்துள்ள. (சிறுபுலியூர்ச் சலசயனத்தானாயன்) க்ருஷ்ணாவதாரம் தீர்த்தம் ப்ரஸாதித்ததென்று வெறுக்கவேண்டாதபடி பிற்பாடர்க்கும் அநுபவிக்கலாம்படி, அவ்வவதாரத்தின்படியே வந்து சாய்ந்தவன். அவன் திருவடிகளல்லது வேறொன்றையுமறியேன்; அதுக்கடி அவனுக்கே சேஷபூதனாகையாலே. ... ... (௪)

அரு.—நாலாம்பாட்டு. (வானாரித்யாதி) உம்மைப்போலே நாங்கள் வேறொன்றையு மறியாதிருந்தபோது, உம்மைப்போலே எங்களையுமங்கீகரித்து விரோதியைப் போக்குவனோவென்ன; இவர்கள் ஸ்வநிகர்ஷாநுஸந்தாநத்தாலும், தம்முடைய வைலக்ஷண்யாநுஸந்தாநத்தாலும் பிறந்த

ஆப்ததாஜ்ஞாநத்தைக்கண்டு, அவனுடைய ஸௌசீல்யத்தை உபதேசித்து, என்னைப்போலே உங்களையும் அங்கீகரிப்பன், ஆனபின்பு அவனடியாக விரோதியைப் போக்கிக்கொள்ளப் பாருங்கோளென்கிறாரென்று இரண்டு பாட்டுக்கும் ஏகதாத்பர்யமாக அவதாரிகை அருளிச்செய்கிறார் (தம்மை அவர்களித்யாதி). (அவனைக்கொண்டு) என்றது - ஸுசீலனான அவனைக் கொண்டு என்றபடி.

[வானாரித்யாதி, தலைவன்-அமரர்க்கதிபதியாம்; அவன், தேனாரித்யாதி, ஆனாயன் ; அவனடியல்ல தொன்றறியேனடியேனே] என்றந்வயித்துக் கொள்வது. ... ...(௪)

மூ. — நந்தா நெடுநரகத்திடை நணுகாவகை நாளும்
எந்தா யெனவிமையோர் தொழுதேத்து மிடமெறிநீர்ச்
செந்தாமரை மலரும் சிறுபுலியூர்ச் சலசயனத்து
அந்தாமரை யடியா யுனதடியேற் கருள்புரியே. (௫)

பதம்.	உரை.	பதம்.	உரை.
இமையோர்	தேவர்கள்	தாமரைஅடியாய்	தாமரை மலர்போன்ற திருவடிகளை யுடையவனே!
நாளும்	தினந்தோறும்		
எந்தாயென	என்ஸ்வாமியே! என்று சொல்லி	நந்தா	நசியாததாய்
தொழுது	ஆஸ்ரயித்து [நின்ற	நெடு	தீர்க்கமாயுள்ள
ஏத்தும்	ஸ்தோத்ரம் பண்ணா	நரகத்திடை	நரகத்தோடொத்த ஸம்ஸாரத்தின் நடுவே [(பிறவாதபடி)
இடம்	தேசமாய்,		
எறிநீர்	அலைமோதாநின்ற நீர் நிலைகளிலே [னது	நணுகாவகை	(இனி) கிட்டாதபடி
செந்தாமரை	செந்தாமரைப் பூவா	உனது அடியேற்கு	உன்னுடையதாஸபூதனான என்விஷயத்தில்
மலரும்	விகஸியாநின்ற		
சிறுபுலியூர்ச் சலசயனத்து			
அம்	அழகிய	அருள்புரி	க்ருபைப்பண்ணாய்.(௫)

வ்யா. —அஞ்சாம்பாட்டு. (நந்தா நெடுநரகத்திடை) ஒருகாலும் விட்டுப்பற்றக்கடவதல்லாத நெடுநரகமான ஸம்ஸாரத்துக்குள்ளே போய்ப்புகாதபடி. (நாளுமித்யாதி) ப்ரஹ்மாதிகள் காலமெல்லாம் நின்று "என்னாயனே" என்று தொழுது ஸ்தோத்ரம் பண்ணுகிற தேசம்.

(எறிநீரித்யாதி) மிக்கஜலத்தையுடைத்தான பொய்கைகளிலே, அந்த நீர்ச்செறிவாலே தாமரைகள் போய்அலருகிற சிறுபுலியூர்ச்சல

சயனத்திலே. (அந்தாமரையடியாய்) செவ்விப்பூப்போலேயிருக்கிற திருவடிகளையுடையவனே! (உனதடியேற்கருள்புரியே) அல்லாதார் செய்தபடிசெய்ய; அநந்யகதியான என்பக்கலிலே உன்னுடைய கண்ணழிவற்ற க்ருபையைப் பண்ணியருளவேணும். … … (௫)

அ௫. —அஞ்சாம்பாட்டு. (நந்தா நெடுநரகமித்யாதி) கீழ்நாலுபாட்டிலும் பரோபதேசம்பண்ண திருந்தினபேரும் திருந்தாத பேருமாயிருக்கையாலே ஸம்ஸாரத்திலே அவர்கள்படுகிறபாட்டை உபதேசிக்கக்கோலி, அது தமக்கு பயாவஹமாயிருக்கையாலே சடக்கென பரோபதேசத்தை விட்டு மேலஞ்சுபாட்டாலே எம்பெருமானைச்சரணம்புகுருகையை அர்த்திக்கிறாரென்று ஸங்கதி.

[இமையோர் - நாளும்] என்றந்வயித்து. அருளிச்செய்கிறார் (ப்ரஹ்மாதிகளித்யாதி).

“அம்” என்ற அழகாய், பலிதம் (செவ்விப்பூப்போலே யித்யாதி). கீழ்ஸங்கதி தன்னை ஸ்புரிப்பிக்கிறார் (அல்லாதாரித்யாதி). … … (௫)

மூ. — முழுநீலமு மலராம்பலு மரவிந்தமும் விரவிக்
கழுநீரொடு மடவாரவர் கண்வாய் முகமலரும்
செழுநீர் வயல்தழுவும் சிறுபுலியூர்ச் சலசயனம்
தொழுநீர்மை யதுடையாரடி தொழுவார் துயரிலரே. (௬)

பதம்.	உரை.	பதம்.	உரை.
முழுநீலமும்	(வர்ணாந்தரம் கலசாமல்) முழுக்க நீல வர்ணமாயிருக்கிற பூவும்	நீர்	ஜலமானது
அலர்	விகஸியாநின்ற	வயல்	கழனிகளை
ஆம்பலும்	அரக்காம்பலும்	தழுவும்	சூழ்ந்து கொண்டிருக்கிற
அரவிந்தமும்	தாமரைப்பூவும்	சிறுபுலியூர்	சிறுபுலியூரிலெழுந்தருளியிருக்கிற
கழுநீரொடு	செங்கழுநீரும்	சலசயனம்	ஜலசயநனென்கிற எம்பெருமானை
விரவி	சேர்ந்து	தொழுமது	ஆஶ்ரயிக்கையையே
மடவாரவர்	(அங்குள்ள) பெண்களுடைய	நீர்மையுடையார்	ஸ்வபாவமாகவுடையவர்களுடைய
கண்	கண்கள்போலவும்	அடி	ஸ்ரீபாதங்களை
வாய்	அதரம்போலவும்	தொழுவார்	ஆஶ்ரயிக்குமவர்கள்
முகம்	முகம்போலவும்	துயர் இலர்	துஃக்கத்தையடையார்கள். (௬)
அலரும்	விகஸியாநின்ற,		
செழு	ஸம்ருத்தமான		

வ்யா. —ஆறும்பாட்டு. (முழுநீலமும்) எங்குமொக்கக் கறுத்திருக்கிற நீலமும், அரக்காம்பலும், தாமரையும், செங்கழுநீரும்

இவைதன்னிலேகூடி அங்குண்டான ஸ்த்ரீகளுடைய கண்ணையும் வாயையும் முகத்தையும் காட்டாநிற்கிற.

(செழுநீர் வயல்தழுவும்) அழகிய ஜலமானது, வயலை அணைந்திருக்கிற சிறுபுலியூர்ச்சலசயனத்தைத்தொழுகையே ஸ்வபா(ஞா)வமாக வுடையாருடைய திருவடிகளைத் தொழுவார்க்கு துஃக்கங்களில்லா. அவைதன்னடையே விட்டுப்போம். ... ... (சா)

அநு.—ஆறாம்பாட்டு. (முழுநீலமித்யாதி) கீழ்ப்பாட்டிலே "அருள்புரியே" என்னச்செய்தேயும் சடக்கென அருள்புரியக்காணாமையாலே, அவனை விட்டு அடியாரளவும் போய் தேறிநிற்கிறாரென்று ஸங்கதி.

"விரவி" என்றதினர்த்தம் "கூடி" என்றது.

"சிறுபுலியூர்ச் சலசயனத்தை" என்றது – மன்னக்களுழறி வருகையாலே சிறுபுலியூர்ச் சலசயனனை யென்றபடி. அவனையன்றிக்கே அவனைத் தொழுவாரையிறே இங்குத்தாம்பற்றுகிறது; ஆகையாலே இங்ஙனே நிர்வஹிக்க வடுப்பது. ... ... (சா)

மூ. — சேயோங்கு தண்திருமாலிருஞ்சோலைமலை யுறையும்
மாயாவெனக்குரையா யிதுமறைநான்கினுளாயோ
தீயோம்புகை மறையோர் சிறுபுலியூர்ச் சலசயனத்
தாயோ வுனதடியார் மனத்தாயோ வறியேனே. (எ)

பதம்.	உரை.
சேய் ஓங்கு	மிகவும் உந்நதமாய்
தண்	குளிர்ந்திருக்கிற
திருமாலிருஞ் சோலைமலை	திருமாலிருஞ் சோலை மலையிலே
உறையும்	பொருந்தி வர்த்திக்கிற
மாயா	ஆஸ்சர்யபூ(ஞூ)தனே
நான்குமறையின்	நாலு வேதங்களினுடைய
உளாயோ	(உள்ளே) இருக்கிறாயோ ?
தீ	த்ரேதாக்நிகளை
ஓம்புகை	ஹோமத்தினால் வளர்க்கையையேஸ்வபா(ஞா)வமாக வுடைய

பதம்.	உரை.
மறையோர்	ப்ராஹ்மணர்கள் வர்த்திக்கிற
சிறுபுலியூர்ச் சலசயனத்து	
ஆயோ	இருக்கிறாயோ ?
உனது	உனக்கு
அடியார்	சேஷபூதரான பாகவதர்களுடைய
மனத்தாயோ	ஹ்ருதயத்திலே வஸிக்கிறாயோ ?
அறியேன்	அறிகிலேன் ;
இது	இந்த ப்ரஸ்நத்திற்கு உத்தரத்தை
எனக்கு	எனக்கு
உரையாய்	அருளிச் செய்ய வேணும். (எ)

வ்யா.—ஏழாம்பாட்டு. (சேயோங்கித்யாதி) "சேய்" என்று க்ஷேத்ரபாலகனுக்குப்பேராய், அவனவ்விடத்துக்காவலாகச் சொல்லிப்போருவதொன்றுண்டு அதாகிறது. அன்றிக்கே "சேய்" என்று தூரத்துக்கு வாசகமாயிருக்கையாலே மிகவும் ஓங்கின திருமலையிலே நிற்கிற ஆஶ்சர்யபூ(ஞூ)தனே. (எனக்குரையாயிது) எனக்கு இத்தை யருளிச்செய்யவேணும். (மறைநான்கினுளாயோ) எங்குமொக்க உன்னையே சொல்லாநின்றுள்ள வேதங்கள் நாலிலுமுள்ளாயோ?

எப்போதுமொக்க அக்நிகார்யத்தில் அவஹிதராய்ப்போருகிற ப்ராஹ்மணருடைய சிறுபுலியூர்ச் சலசயநத்திலுள்ளாயோ? உன் திருவடிகளிலே அஸாதாரணராயிருப்பார் ஹ்ருதயங்களிலே உள்ளாயோ? அடியேன் அறிகிறேனில்லை, எனக்கிது தெரிய அருளிச்செய்யவேணும்; இத்தால் சொல்லிற்றாய்த்து ஸௌபரி பலவடிவுகொண்டாப்போலே இவ்வோ இடங்கள்தோறும், இனி அவ்வருகில்லை என்னும்படி குறைவற வர்த்திக்கிறபடியைக் காட்டிக்கொடுத்தான். (எ)

அரு.—ஏழாம்பாட்டு. (சேயோங்கித்யாதி) கீழ்ப்பாட்டில் எம்பெருமானை விட்டு அவனடியாரைப்பற்றித் தேறியிருந்தார்; அத்தைக் கண்டு உகந்து குறைவற எங்குமிருக்கும்படிகளைக்காட்டக்கண்டு உகந்து ஆஶ்சர்யப்படுகிறாரென்று ஸங்கதி.

"சேய்" என்று ருத்ரபுத்ராதிகளுக்குப்பேராகையால், க்ஷேத்ரபாலகனும் ருத்ரபுத்ரனாகையாலே சொல்லுகிறதென்றருளிச் செய்கிறார் (சேயென்றித்யாதி).

சாஸ்த்ரைக ஸமதிகம்யங்களான அப்ராக்ருத திவ்யமங்கள விக்ரஹங்களையும், கண்ணால் கண்டநுபவிக்கலாம்படியான அர்ச்சாரூபங்களையும், நெஞ்சாலே அநுபவிக்கலாம்படி அந்தர்யாமியாயிருக்கும் வடிவுகளையும், ஒருகாலே காட்டினபடியாலே கண்டு ஆஶ்சர்யப்படுகிறாரென்று பாட்டுக்குத் தொகுத்த தாத்பர்யத்தை யருளிச்செய்கிறார் (இத்தாலித்யாதி). (எ)

மூ.— மையார்வரிநீல மலர்க்கண்ணார்மனம் விட்டிட்டு
உய்வானுனகழலே தொழுதெழுவேன் கிளிமடவார்
செவ்வாய்மொழி பயிலும் சிறுபுலியூர்ச்சலசயனத்து
ஐவாயரவணைமேலுறை யமலா வருளாயே. (அ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
கிளி	கிளிகளானவை	பயிலும்	அப்யஸியாநின்ற
மடவார்	ஸ்த்ரீகளுடைய[டான		சிறுபுலியூர்ச் சலசயனத்து
செவ்வாய்	சிவந்தவாயிலே யுண்	ஐவாய்	ஐந்து வாய்களையுடைய
மொழி	சொற்களை		

அரவுஅணைமேல்	திருவநந்தாழ்வானாகிற படுக்கையின் மேலே
உறை	பொருந்தி கண்வளர்ந்தருளுகிற
அமலா	பரிசுத்தனே!
மைஆர்	அஞ்ஜநத்தினால் நிறைந்து (அலங்கரிக்கப்பட்டதாய்,
வரி	ரேகைகளுடையதாய்
நீலமலர்	கருநெய்தல் போன்றதான
கண்ணார்	கண்களையுடைய ஸ்த்ரீகள் விஷயத்தில்
மனம்விட்டிட்டு	மாநஸ்ஸை (ஆசையை) விட்டு
உய்வான்	உஜ்ஜீவிக்கைக்காக
உனகழலே	உன் திருவடிகளையே
தொழுதுஎழுவேன்	ஆஶ்ரயித்துஉஜ்ஜீவிப்பேன்;
அருளாய்	(அப்படி) க்ருபை பண்ணவேணும். (அ)

வ்யா. —எட்டாம்பாட்டு. (மையார் வரிநீலம்) அஞ்ஜநத்தாலே குறைவறஅலங்க்ருதமாய், செவ்வரிகருவரிகளையுடைத்தாய், நீலமலர் போலேயிருக்கிற கண்களையுடைய ஸ்த்ரீகளை மநோரதித்திருக்குமிருப்பைவிட்டு உஜ்ஜீவிக்கைக்காக உன் திருவடிகளை. (தொழுதெழுவேன்) ஆஶ்ரயிப்பேன்.

(கிளிமடவார் செவ்வாய் மொழிபயிலும்) கிளிபோலேயிருக்கிற ஸ்த்ரீகளுடைய அக்கிளிபோன்ற பேச்சுநெருங்கியிருக்கிற சிறுபுலியூர்ச் சலசயனத்திலே அநுபவஜநிதப்ரீதிக்குப் போக்குவிடுகைக்குப் பலவாய்த்தலைகளையுடையனாய், சைத்யாதிகளை ப்ரக்ருதியாகவுடைய திருவநந்தாழ்வான்மேலே சாய்ந்தருளி ப்ரயோஜநநிரபேக்ஷமாக ரக்ஷணத்திலே ஒருப்பட்டிருக்கிறவனே! என்பக்கலிலே உன்னுடைய க்ருபையைப்பண்ணியருளவேணும். கிளியானது மடவாருடைய சிவந்தவாயில் பேச்சை அப்யஸிக்கிற என்னுமாம். கிளிமடவார் செவ்வாய்மொழி பயிலும் சிறுபுலியூர்ச் சலசயனத்து வாயரவணைமேலுறையமலா - மையார்வரி நீலமலர்க்கண்ணார் மனம் விட்டிட்டுய்வானுனகழலே தொழுதெழுவேன்; அருளாய். செவ்வாய் - நேராயிருக்கிற. ... ... (அ)

அரு.—எட்டாம்பாட்டு. (மையாரித்யாதி) கீழ்ப்பாட்டில்பலவடிவைக் காட்டினபடியாலேகண்டு ஆஶ்சர்யப்பட்டார்; இப்பாட்டில் இப்படி அநுபவத்துக்கு விச்சித்தி வரும்படியிருக்கும் நிலத்தில் தாமிருந்தபடியாலே, அது நித்யமாகச் செல்லுகைக்காக ப்ராப்யாபா(ध)ஸங்களில் நசையற்று சரணம்புக்கு க்ருபையை ப்ரார்த்திக்கிறாரென்று ஸங்கதி.

"அமலா" என்றதின் தாத்பர்யம் (ப்ரயோஜநேத்யாதி). முந்தின அர்த்தத்தில் சப்த(ब)நிர்வாஹத்தைக்காட்டுகிறார் (செவ்வாயித்யாதி). (அ)

மூ. — கருமா முகிலுருவா கனலுருவா புனலுருவா
பெருமால் வரையுருவா பிறவுருவா நினதுருவா
திருமாமகள் மருவும் சிறுபுலியூர்ச் சலசயனத்து
அருமா கடலமுதே யுனதடியே சரணமே. (௯)

பதம்.	உரை.
கரு மா	(ஆஶ்ரிதர்க்கு) நீலவர்ணமாய்ப் பெருத்திருக்கிற
முகில் உருவா	மேகம்போன்ற வடிவையுடையவனே
கனல் உருவா	(அநாஶ்ரிதர்க்கு) அக்நி போன்ற வடிவையுடையவனே!
புனல் உருவா	ஜலம் போல் ஸர்வஸௌலபமான வடிவையுடையவனே!
பெருமால்	மிகவும் பெருத்திருக்கிற
வரை உருவா	மலைபோன்ற (அபரிச்சிந்நமான) வடிவையுடையவனே!
பிற உருவா	மற்றுமுண்டான வடிவையுடையவனே!

பதம்.	உரை.
நினது உருவா	உனக்குஅஸாதாரணமாயுள்ள விக்ரஹத்தையுடையவனே!
திருமாமகள்	பெரிய பிராட்டியார்
மருவும்	நித்யவாஸம் பண்ணுகின்ற
சிறுபுலியூர்ச் சலசயனத்து	
அரு	பெறுதற்கரிதாய்
மாகடல்	பெரிய க்ஷீராப்தியிலே யுண்டான
அமுதே	அம்ருதம்போலே நிரதிசய போக்யபூதனானவனே!
உனது அடியே	உன் திருவடிகளே
சரணம்	(எனக்கு) ப்ராப்யமாயிருக்கும். (௯)

வ்யா. —ஒன்பதாம்பாட்டு. (கருமாமுகிலித்யாதி) ஆஶ்ரிதர்க்கு க்கண்ட காட்சியிலே ஸகலதாபமும் போம்படி ஶ்ரமஹரமான பெரியமேகம்போன்ற வடிவையுடையவனே. (கனலுருவா) அநாஶ்ரிதர்க்குக் கிட்டவொண்ணாதபடி அநபிபவநீயமான வடிவையுடையவனே. (புனலுருவா) ஸர்வஸௌலபமான வடிவையுடையவனே. (பெருமால்வரையுருவா) அபரிச்சேத்யமான வடிவையுடையவனே. (பிறவுருவா) இன்னமும் சொல்லிச்சொல்லாத வடிவுகளையுடையவனே! (நினதுருவா) இப்படி ஜகதாகாரமான வடிவுகளொழிய, அஸாதாரணமான வடிவுகளையுடையவனே.

(திருமாமகள் மருவும்) பெரியபிராட்டியார் நித்யவாஸம்பண்ணுகிற. (அருமாகடலமுதே) பெரிய கடலைக்கடைந்து அருமைப்பட்டுவாங்கின அம்ருதம்போலே நிரதிசய போக்யனாய்க்கொண்டு

பெரியபிராட்டியாரோடும்கூட சிறுபுலியூர்ச் சலசயனத்திலே சாய்ந்தருளினவனே! (உனதடியே சரணமே) ஶ்ரிய:பதியான உன் திருவடிகளொழிய எனக்கு வேறுபுகலில்லை-ப்ராப்யமில்லையென்கை. (௯)

அவ.—ஒன்பதாம்பாட்டு. (கருமாமுகிலித்யாதி) கீழ்ப்பாட்டில் ப்ராப்யாபாஸங்களை விட்டு சரணம்புகுந்தார்; அவன் காட்டின வடிவுகளையெல்லாம் அநுஸந்தித்துப்பிறந்த போக்யதாதிசயத்தைப்பேசி, ப்ராப்யத்தை நிஷ்கர்ஷிக்கிறாரென்று ஸங்கதி.

காட்சியிலே ஶ்ரமஹரதை மேகத்துக்கும் புனலுக்கும் ஒத்திருக்குமாகையாலே பௌநருக்த்யம் வாராமைக்காகத் தாத்பர்யமருளிச் செய்கிறார் (ஸர்வஸுலபேத்யாதி). "பெரு" என்றும், "மால்" என்றும் மீமிசைச்சொல்லாக வருளிச்செய்ததும் போராதே, "வரை" என்று த்ருஷ்டாந்தமிடுகையால் பலித்தவர்த்தமருளிச் செய்கிறார் (அபரிச்சேத்யமான வித்யாதி).

சரணபதம்-க்ருஹப்ரமாய், ப்ராப்யத்தைக் காட்டுமென்றருளிச் செய்கிறார் (ப்ராப்யமில்லை) என்று. … … … … … (௯)

மூ. — சீரார் நெடுமறுகில் சிறுபுலியூர்ச் சலசயனத்து
ஏரார் முகில்வண்ணன் றன்னை யிமையோர் பெருமானைக்
காரார்வயல் மங்கைக்கிறை கலியனொலிமாலை
பாராரிவை பரவித்தொழப் பாவம்பயிலாவே. (௧௦)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

* * *

பதம்.	உரை.	பதம்.	உரை.
சீர் ஆர்	ஐஶ்வர்யத்தை யுடைத்தாய்	ஏர் ஆர்	அழகுமிக்க
நெடு	நீண்டிருந்துள்ள	முகில்வண்ணன் தன்னை	மேகம்போன்ற வடிவையுடையனாய்,
மறுகில்	திருவீதிகளை யுடைத்தான	இமையோர் பெருமானை	நித்ய ஸூரிகளுக்குத் தலைவனாயுள்ள ஸர்வேஶ்வரன் விஷயமாக,
சிறுபுலியூர்	சிறுபுலியூரென்னும் திருநாமத்தையுடைத்தாய்,		
சலசயனத்து	ஜலசாயியானஎம்பெருமான் கண்வளர்ந்தருளுகிற சலசயனமென்னும் திவ்யதேசத்திலெழுந்தருளியிருக்கிற	கார் ஆர்	கருமைமிக்க
		வயல்	கழனிகளையுடைய
		மங்கைக்கு	திருமங்கையிலுள்ளார்க்கு
		இறை	ஸ்வாமியான
		கலியன்	ஆழ்வார்
		ஒலி	அருளிச்செய்த

இவை மாலை	இந்த சப்தஸந்தர்ப்ப ரூபமான பாசுரங்களை	பரவி	சொல்லி [வே
		தொழ	(அவனை) ஆஸ்ரயிக்க
		பாவம்	பாபமானது
பாரார்	பூமியிலுள்ளவர்கள்	பயிலா	கிட்டமாட்டாது.(௧௦)

வ்யா.—பத்தாம்பாட்டு. (சீராரித்யாதி) ஐஸ்வர்யத்தையுடையக் கோள்சொல்லித்தாராநின்ற பெரியதிருவீதிகளையுடைய சிறுபுலியூர்ச் சலசயனத்திலே அழகிய வடிவையுடைத்தான மேகம்போன்ற வடிவை யுடையனைக்கொண்டு கண்வளர்ந்தருளுகிறவனை. (இமையோர்பெருமானை) அங்குகண்வளர்ந்தருளுகிறவன் தானாரென்னில்; அயர்வறுமமரர்களதிபதியாய்த்து.

(காரார்வயல் மங்கைக்கிறை) நிரந்தரமேக ஸஞ்சாரத்தை யுடைத்தென்னுதல்; இருள்மிக்கிருந்துள்ள வயலையுடைத்தான திருமங்கைக்கு நிர்வாஹகரான ஆழ்வார், ஒலியையுடைத்தாம்படி அருளிச்செய்தமாலை. (பாராரிவை பரவித்தொழ பாவம்பயிலாவே) பாவம் வருகைக்கு யோக்யமான தேசத்திலே யிருக்கச்செய்தேயும் இவற்றை வாயாலேசொல்லி ஆஸ்ரயிக்க பாபங்கள் தானே "நமக்கிவ்விடமிருப்பல்ல" என்று விட்டுப்போம். ... ... (௧௦)

பேரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

அரு—பத்தாம்பாட்டு. (சீராரித்யாதி) "முறுகு" என்றதினர்த்தம் (திருவீதி) என்றது.

"பாரார்" என்று விசேஷித்ததுக்குக் கருத்தருளிச்செய்கிறார் (பாவமித்யாதி). ... ... (௧௦)

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஏழாம்பத்தில் ஒன்பதாந்திருமொழி முடிந்தது.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

பெரியதிருமொழி ஏழாம்பத்து பத்தாந் திருமொழி பெரும்புறக்கடல் ப்ரவேசம்.

வ்யா.—(பெரும்புறக்கடலித்யாதி) அவனல்லது ஆஸ்ரயணீயனில்லையென்று பிறர்க்கு உபதேசிக்கப் புக்கவர் "அருளாய்" என்றும், "உனதடியே சரணாமே" என்றும், தம்முடைய அபேக்ஷையின் மிகுதியைச் சொல்லித் தலைக்கட்டினார். இவர்க்கு இனிச்செய்யலா

வதென்னென்று பார்த்து வேறே ஓராஸநமாகவிருந்து தன்னுடைய ஸ்வரூப ரூப குணவிபூதிகளையடையக் காட்டிக்கொடுத்து “நம்மையொழிந்த வஸ்துக்களுடைய நமக்கு உபமாநமாயிருத்தல், ப்ரகாரமாயிருத்தல் செய்யும்படியிருக்கிறநாம், உமக்குக்கண்ணாலே கண்டநுபவிக்கலாம்படி வந்துநின்றோமாகில், நீர் என்பெறாதீராய்த்தான்கிடந்து கூப்பிடுகிறது, இனிமேலுள்ள கார்யமும் நாமேசெய்வுதோங் காணும்” என்று ஸமாதாநம்பண்ண, அப்படியே அநுஸந்தித்து த்ருப்தராகிறார். (க) [ఆరురోహ రథం హృష్టః శత్రుఘ్నసహితో బలీ- ஆருரோஹ ரதம் ஹ்ருஷ்டஶ் ஶத்ருக்நஸஹிதோ பலீ] பெரிய ஆசையுடனே வந்த ஸ்ரீபரதாழ்வானுக்கு நினைத்து வந்தகார்யத்தில் செய்ததொன்றுமில்லை; ஆகிலும் மீண்டுபோகிறபோது ஹ்ருஷ்டனாய்ப் போனானிறே; அப்படியேயாய்த்து இவர் விஷயத்தில் ஸமாதாநம் பண்ணினபடியும். ... ... *

அநு.—பெரும்புறக்கடல் ப்ரவேசம். கீழ்த்திருமொழியில் “அருள் புரியே” என்றும், “அருளாயே” என்றும், ப்ரார்த்தித்தவர், பரமப்ராப்யத்தைப் பெறாதே, இத்திருமொழியில், “கண்டுகொண்டேனே” என்று ஹ்ருஷ்டராகக்கூடுமோவென்ன ஸங்கதியருளிச்செய்கிறார் (அவனல்லதித்யாதி). (என்பெறாதீராய்) எத்தைப்பெறாதவராய் என்றபடி. இவருடைய அபேக்ஷிதம் செய்யாமல், வேறொன்றால் ஸமாதாநம் பண்ணினால் த்ருப்தராகக்கூடுமோ வென்னவருளிச்செய்கிறார் (ஆருரோஹேத்யாதி).

மூ.— பெரும்புறக்கடலை யடலேற்றினைப்
பெண்ணையாணை யெண்ணில்முநிவர்க்கருள்
தருந்தவத்தை முத்தின்திரட்கோவையைப்
பத்தராவியை நித்திலத்தொத்தினை
அரும்பினையலரை அடியேன்மனத்
தாசையை அமுதம்பொதியின்சுவைக்
கரும்பினைக்கனியைச் சென்றுநாடிக்
கண்ணமங்கையுள்கண்டுகொண்டேனே. (க)

பதம்.	உரை.	பதம்.	உரை.
புறம்.	எல்லா ஸமுத்ரத்துக்கும் வெளியிலேயிருக்கிற	ஏற்றினை	ருஷபம்போல் மேனாணித்தவனாய்,
பெரும் கடலை	அபரிச்சிந்நமான ஸமுத்ரம்போன்றவனாய்	பெண்ணை	ஸ்த்ரீபோல் ஆஸ்ரித பரதந்த்ரனாய்,
அடல்	மிடுக்கையுடைய	ஆணை	புருஷன்போல் ஸ்வதந்த்ரனாய்,

(க) ரா - அயோ-௧௧௩-௧.

எண் இல்	அஸங்க்யாதமான தபஸ்ஸையுடைய
முனிவர்க்கு	யோகிகளுக்கு
அருள் தரும்	தபஸ்ஸின் பலத்தைக் கொடாநின்ற
தவத்தை	தபோரூபியாய் (ஸர்வஜ்ஞனாய்),
திரள்	திரண்டிருக்கிற
முத்தின் கோவையை	முத்துமாலைபோல் இனியவனாய்
பத்தர்	பக்தஜநங்களுக்கு
ஆவியை	ப்ராணன்போல் தாரகனாய்,
நித்திலம்	முத்தினுடைய [னாய்,
தொத்தினை	குவியல்போல் ரக்ஷக
அரும்பினை	அரும்புபோல் கௌமாராவஸ்த்தையையுடையனாய்,
அலரை	மலர்ந்தபுஷ்பம்போல் யௌவநாவஸ்த்தையையுடையனாய்,
அடியேன்	தாஸபூதனான என்னுடைய
மனத்து	மநஸ்ஸிலுண்டான
ஆசையை	ஆசைக்கு விஷயமானவனாய்,
அமுதின்	அம்ருதத்தினுடைய
பொதி	திணிப்பாலே (அம்ருதத்தை நீராகப் பாச்சினாப்போலே) [க்கிற
இன்சுவை	நிரதிசயமதுரமாயிரு
கரும்பினை	கருப்பஞ்சாறுபோல் போக்யபூதனாய்,
கனியை	பழம் போலே அப்போதே அநுபவிக்கலாம்படியிருக்கிறவனான ஸர்வேஶ்வரனை [ய்
நாடிச்சென்று	தேடிக்கொண்டுபோ
கண்ணமங்கையுள்	திருக்கண்ணமங்கையென்னும் திவ்யதேசத்தில்
கண்டுகொண்டேன்	ஸாக்ஷாத்கரித்தேன்.

வ்யா. —முதற்பாட்டு. (பெரும்புறக்கடலை) ஸர்வபதார்த்தங்களையும் தன்னுள்ளே அடக்கிநோக்கும் கடல்போலே அபரிச்சேத்யனாயுள்ளவனை. எல்லாக்கடலுக்கும் புறம்பாய், தான்பெருத்திருக்கிற கடல்போன்றிருக்கிறவனை. (அடலேற்றினை) ஸ்வவ்யதிரிக்த ஸமஸ்தவஸ்துக்களையும் தன்னுள்ளே இட்டுநோக்கும்படி, இவற்றையுடையனாகையால் வந்த மேனாணிப்பையுடையவனை. (பெண்ணை) அப்படியிருந்தால் ஒருவர்க்கும் கிட்டவொண்ணாதபடியாயிருக்குமோவென்னில்; பரதந்த்ரனாயிருக்குமிருப்பைச்சொல்லுகிறது. வெறும் பாரதந்த்ர்யமேயாயிருக்குமித்தனையோவென்னில், (ஆணை) நிரங்குசமான ஸ்வாதந்த்ர்யத்தையுடையவனை. (எண்ணில் முனிவர்க்கருள் தருமதவத்தை) எண்ணிறந்த தபஸ்ஸையுடைய யோகிகளுக்கு, அந்த தப: ப (ஃ) லத்தைக்கொடுக்கும் தபஸ்ஸானவனை. (முத்தின்

திரள்கோவையை) கண்டபோதே ஶ்ரமமெல்லாம் ஆறும்படி உடம்பிலே ஏறிட்டுக்கொண்டநுபவிக்கலாம்படி முத்தினுடைய திரண்ட மாலைபோலே யிருக்கிறவனை. (பத்தராவியை) தன்பக்கல் பரிவையுடையார்க்குத் தன்னையொழிய ஜீவிக்கை அரிதாம்படியிருக்கிறவனை. (நித்திலத்தொத்தினை) மேன்மேலென நமக்குண்டென்று தேறியிருக்கலாம்படி முத்துக்குவைபோன்றிருக்கிறவனை. நித்திலம் முத்தும், அழகும். ஸௌந்தர்யத்தொத்தை.

(அரும்பினையலரை) இரண்டவஸ்த்தையும் ஒருகாலே சூழ்த்துக் கொடுக்கலாம்படியிருக்கிறவனை. (௧) "𑌯𑍁𑌵𑌾 𑌕𑍁𑌮𑌾𑌰𑌃 - யுவா குமாரஃ". (அடியேன் மனத்தாசையை) நான் நித்யாநுபவம் பண்ணாநிற்கச் செய்தேயும், இதுக்குமுன்பு அநுபவித்தறியாத தொன்றில் போலே பிறக்கிற ஆசையானவனை. (அமுதம் பொதியின் சுவைக்கரும்பினை) அம்ருதத்தை நீராகப்பாய்ச்சி வளர்த்தாப்போலே நிரதிசய போக்யபூதமான கரும்புபோலே இனியனாயிருக்கிறவனை. (கனியை) அப்போதே நுகரலாம்படி பக்வபலமாயிருக்கிறவனை. (சென்று நாடிக் கண்ணமங்கையுள் கண்டுகொண்டேனே) பசித்தவிடத்தே ஸுக போஜநம்பண்ணப் பெறுவாரைப்போலே அபேக்ஷைபிறந்த விடத்தே கண்டநுபவிக்கப் பெற்றேன். ... ... (௧)

அரு.—முதற்பாட்டு. தாத்பர்யமருளிச்செய்து சப்தார்த்தம்காட்டுகிறார் (எல்லாக்கடலுக்குமித்யாதி). (எல்லாக்கடலுக்கும்) ஸப்தஸாகரத்துக்கும். அபூ(ஃபூ)தோபமை என்று திருவுள்ளம். (முத்துக்குவை) முத்துக்குவியல். கீழ்முத்துமாலையைச் சொன்னது ப்ராப்யத்வாபிப்ராயேண இங்கு முத்துக்குவியலைச் சொன்னது ப்ராபகத்வாபிப்ராயேண; வித்து ஜீவிக்கையாயிருக்கையாலே ரக்ஷகமாமென்றபடி.

(சூழ்த்துக்கொடுக்கலாம்படி) என்றது - வ்யாபித்திருக்கலாம்படி என்றபடி. "இன்சுவை" என்று விசேஷித்ததின் கருத்து (நிரதிசய போக்யபூதமான) என்றது. ... ... (௧)

மூ.— மெய்ந்நலத்தவத்தை த்திவத்தைத்தரும்
மெய்யை பொய்யினைக் கையிலோர் சங்குடை
மைந்நிறக்கடலைக் கடல்வண்ணனைமாலை
ஆலிலைப்பள்ளிகொள் மாயனை

---

(௧) ருக்வே-அஷ்ட-௨-௮-௨௫.

நென்னலைப் பகலை யிற்றைநாளினை
நாளையாய்வரும் திங்களை யாண்டினைக்
கன்னலைக் கரும்பினிடைத் தேறலைக்
கண்ணமங்கையுள்கண்டு கொண்டேனே. (௨)

பதம்.	உரை.
மெய்	யதார்த்தமாய் (ஸ்வரூபாநு ரூபமாய்)
நலம்	அழகியதான (ப்ரீதிரூபாபந்நமான)
தவத்தை	பக்தியோக ரூபமான தபஸ்ஸுக்கு விஷயபூதனாய்,
திவத்தை	பரமபதத்தை
தரும்	கொடாநின்ற
மெய்யை	விஸ்வஸநீயமான ப்ரபத்திக்கு விஷயபூதனாய்,
பொய்யினை	(அநாஸ்ரிதர்க்கு ஒரு ப்ரகாரத்தாலும்) இல்லாதவனாய் (காணப் படாதவனாய்),
கையில்	திருக்கையிலேந்தின
ஓர் சங்குஉடை	ஒரு(அஸத்ருசமான) ஸ்ரீபாஞ்சஜந்யத்தையுடைத்தாய்
மை நிறம்	அஞ்ஜநத்தின் வர்ணத்தையுடைத்தான
கடலை	(விஜாதீயமான) ஸமுத்ரம் போன்றவனாய்,
கடல்வண்ணனை	ஸமுத்ரத்தின் (ரக்ஷகத்வ) ஸ்வபாவத்தையுடையனாய்,
மாலை	ஸர்வாதிகனாய்,
ஆலிலை	ஆலந்தளிரில்
பள்ளிகொள்	(ப்ரளயகாலத்தில்) கண்வளர்ந்தருளுகிற
மாயனை	ஆஸ்சர்யபூதனாய்,
நென்னலைபகலை	நேற்றுப்பகலிலே அநுபவிக்கப் பட்டவன் போல் அநுபூதஸுக ஸ்மரண மாத்ரத்திலே ஸுகப்ரதனாய்,
இற்றைநாளினை	இன்றையதிநம் அநுபவிக்க ப்படுமவன் போல் தத்கால ஸுகஜநகனாய்,
நாளையாய்	நாளையதிநத்தில் அநுபவிக்கப்படுமவன் போல் பவிஷ்யத்காலத்தில் ஆநந்தஜநகனாய்,
வரும்	(இப்ப்டி அநேக நாள்கள் கூடி) வாராநின்ற
திங்களை	மாஸங்கள் தோறும்,
ஆண்டினை	(அப்படியே அநேக மாஸங்கள் கூடின) வர்ஷங்கள்தோறும் ஆநந்திப்பிக்குமவனாய்,
கன்னலை	சர்க்கரைபோல் இனியனாய்,
கரும்பினிடை	கருப்பந்தடியிலே யுண்டான
தேறலை	ரஸம்போல் அப்போதே அநுபவிக்கலாம்படி யிருக்குமவனானவனை

கண்ணமங்கையுள் கண்டுகொண்டேன். (௨)

வ்யா.—இரண்டாம்பாட்டு. (மெய்ந்நலத்தவத்தை) ஸ்வரூபாநுரூபமாய், ஸ்நேஹரூபமாயிருக்கிற அபிமதஸாதநமான ப(ஃ)க்தியை. (திவத்தைத்தரும் மெய்யை) ப்ரபத்தியை. (பொய்யினை) இவ்விரண்டு மில்லாதார்க்குத் தன்படிகளொன்று மறியவொண்ணாதிருக்குமவனை. (கையிலோரித்யாதி) கீழ்ச்சொன்ன இரண்டுமுடையார்க்குக் காட்சிகொடுக்கும் வடிவையுடையவனை. கண்டத்தை எல்லாருடைய உள்ளேயிட்டுநோக்குங்கடல்போலன்றியே, ஓர்சங்குடைமைந்நிறக்கடலை. (கடல்வண்ணனை) ஸர்வபதார்த்தங்களையும் தன்னுள்ளே அடக்கி, சிறியதைப் பெரியது நலியாதபடி தன்திரைகளாகிற கையாலே நோக்கும் கடல்போலே யிருக்கும் ஸ்வபா(ஃ)வத்தையுடையவனை. (மாலை) ஸர்வாதிகனை. (ஆலிலையித்யாதி) அகடிதக(ஃ)டநா ஸாமர்த்த்யத்தை யுடையவனை. ஒருசிறுவடிவாலே ஸகலலோகங்களையு மடக்கி ஒருபவனான ஆலந்தளிரிலே கண்வளர்ந்தருளின ஆஸ்சர்ய பூ(ஃ)தனை.

(நென்னலைப்பகலை) அபிமதலாபமுண்டான பிற்றைநாளில் நிர்வ்ருதி போலே "நேற்றைப் பகலிலே அநுபவமிருந்தபடி என்" என்று ஸ்மரித்துத் தரிக்கலாம்படி யிருக்கிறவனை. (இற்றைநாளினை) அநுபூ(ஃ)யமான நாளானவனை. (நாளையாய்வரும் திங்களை) இவ்வநுபவத்துக்கு விச்சேதம் பிறவாமே, நாளையாயும் வரப்புகாநின்றதென்று அநுஸந்திக்கலாம்படியிருக்கிற நாளையாய், அதுதான் ஒருநாளுமேயாய்ப் போகாமே அப்படி என்றுமொக்கச் சொல்லலாம்படியான நாள்களையுடைய மாஸமானவனை. (ஆண்டினை) அப்படிப்பட்ட மாஸங்களையுடைய ஆண்டானவனை. இனி அவ்வாண்டுதன்னை அப்படியே இரட்டித்துக்கொள்ளுமத்தனை. (கன்னலை) நிரதிசயபோக்ய(ஃ)னானவனை. (கரும்பினிடைத்தேறலை) நெருக்கிக்கார்யங்கொள்ள வேண்டாதே, அப்போதே பருகலாம்படியிருக்கிற கரும்பில் ரஸாம்சமானவனை. கண்ணமங்கையுள். ... ... (௨)

அரு—இரண்டாமபாட்டு. (மெய்ந்நலமித்யாதி) "சென்று நாடிக் கண்ணமங்கையுள் கண்டுகொண்டேனே" என்று நின்றீர்; எவ்வழியாலே உமக்குக்காட்டக்கண்டுகொண்டீர் என்ன; "ப(ஃ)க்திப்ரபத்திகளுக்கெல்லாம் அவனே நிர்வாஹகனாகையாலே அவ்வழியாலே" என்று நின்றுகொண்டு நிரதிசயபோக்யதாப்ரகாரத்தைப்பேசி அநுபவிக்கிறாரென்று ஸங்கதி.

(அபிமதஸாதநமான) என்றது-போஜநத்துக்கு க்ஷுத்து போலே ப்ராப்யத்துக்கு அவஶ்யாபேக்ஷிதமான என்றபடி. இங்ஙனன்றாகில், ஸ்வரூபவிருத்தமான ப(ஃ)க்தி ஸ்வரூபாநுரூபமாகாதிறே. (ப்ரபத்தியை) என்றது-ப்ரபத்தவ்யனானவனை யென்றபடி. "ஓர் சங்கு" என்று விசேஷிக்கையாலே, பலசங்குடைய கடலை வ்யாவர்த்திக்கிறது. பலிதார்த்தமருளிச்செய்து சப்தார்த்தமருளிச் செய்கிறார் (ஒரு சிறுவித்யாதி).

ஆண்டொழிய பின்னையும் காலமில்லையோ வென்ன வருளிச் செய்கிறார் (இனியித்யாதி). (இரட்டிக்கை)மேலுமிப்படிபெருக்கிக்கொள்ளுகை. எல்லாக்காலத்துக்கும் இப்படி நிர்வாஹகனென்கை. ... ... (௨)

மூ. — எங்களுக்கருள் செய்கின்றவீசனை
வாசவார்குழலாள் மலைமங்கைதன்
பங்கனைப்பங்கில் வைத்துகந்தான்றன்னைப்
பான்மையைப் பனிமாமதியந்தவழ்
மங்குலைச்சுடரை வடமாமலையுச்சியை
நச்சிநாம் வணங்கப்படும்
கங்குலைப் பகலைச் சென்றுநாடிக்
கண்ணமங்கையுள் கண்டுகொண்டேனே. (௩)

பதம்.	உரை.
எங்களுக்கு	அநந்யகதிகளான எங்கள்விஷயத்தில்
அருள்செய்கின்ற	க்ருபைபண்ணுகின்ற
ஈசனை	ஸர்வேஶ்வரனாய்,
வாசம் வார்	பரிமளம்வீசாநின்ற
குழலாள்	மயிர்முடியை யுடையவளாய்
மலைமங்கை	இமயமலைக்குப்பெண்ணான பார்வதியை
தன்பங்கனை	தன்னுடைய பார்ஶ்வத்திலே யுடையனான ருத்ரனை
பங்கில்	தன் திருமேனியிலோர் பாகத்தில்
வைத்து	இருத்தி
உகந்தான்தன்னை	ஸந்தோஷித்தவனாய்,
பான்மையை	(இப்படிப்பட்ட நீர்மையை) ஸ்வபா(ஃ)வமாக வுடையனாய்,
பனி	குளிர்ந்தும்
மா	பரந்துமிருக்கிற
மதி	சந்த்ரனுடைய
அம்தவழ்	அழகியஸஞ்சாரத்தை யுடைத்தாயிருக்கிற
மங்குலை	ஆகாசத்துக்கு நிர்வாஹகனாய்
சுடரை	ஸூர்யனுக்கு அந்தர்யாமியாய்,
வட	வடதிசையிலுள்ள
மா	பெரிய
மலை	திருவேங்கட மலையினுடைய
உச்சியை	சிகரத்திலே (எழுந்தருளியிருக்குமவனாய்)

நச்சி	ஆசைப்பட்டு
நாம்	நம்மாலே
வணங்கப்படும்	ஆஶ்ரயிக்கப்படாநின்ற
கங்குலை	ராத்ரிக்கு நிர்வாஹகனாய்,
பகலை	பகற்காலத்துக்குக்கடவனானவனை

சென்றுநாடிக்கண்ணமங்கையுள் கண்டுகொண்டேன். (௩)

வ்யா. —மூன்றாம்பாட்டு. (எங்களுக்கருள் செய்கின்றவீசனை) அநந்யகதிகளான எங்கள்பக்கலிலே நிர்ஹேதுகக்ருபையைப் பண்ணுகிற ஸர்வேஶ்வரனை. (வாசவாரித்யாதி) எங்களைப்போலன்றியே, தானுமொருஸ்த்ரீயுமாய், ஈஶ்வராபிமாநம் கொண்டாடியிருக்கிற ருத்ரனை, தன் திருமேனியில் ஒருபார்ஶ்வத்திலேவைத்து அதுதன்னைத் தன்பேறாகவைத்து உகந்திருக்கிறசீலத்தையுடையவனை. (பான்மையை) இஶ்ஶீலந்தான் புழுக்குறித்து எழுத்தாமாபோலே ஒருகாலுண்டாய்ப்போமதன்றியே இதுவே ஸ்வபா(𑌭)வமாம்படி யிருக்கிறவனை.

(பனிமாமதியந்தவழ்மங்குலை) குளிர்ந்து நிறைந்திருக்கிற சந்த்ரனுடைய ஸஞ்சாரத்தையுடைய ஆகாசமானவனை. (சுடரை) நீர்க்களிப்பை அறுக்கைக்கீடான கிரணங்களையுடைய ஆதித்யனை. (வடமாமலையுச்சியை) இப்படி ஸாதாரணமான வடிவேயன்றியே அஸாதாரணமான விக்ரஹத்தோடே அத்திருமலையிலேகதேசமாய் நிற்கிறவனை. (நச்சிநாம் வணங்கப்படும் கங்குலை) நசையை யுடையோமாய்க்கொண்டு நம்மாலே ஆஶ்ரயிக்கப்படுகிற போக(𑌭𑍋𑌗)யோக்யமான காலமானவனை. (பகலை) அதுக்குறுப்பாக த்ரவ்யார்ஜநத்துக்கீடான காலமானவனை. சென்றுநாடி. ... ... (௩)

அரு.—மூன்றாம்பாட்டு. (எங்களுக்கித்யாதி) கீழ்ப்பாட்டில், “மெய்ந்நலத்தவத்தை” என்றும், “திவத்தைத்தரும்மெய்யை” என்றும் இவ்விரண்டும் வ்யாஜமாக்கி ரக்ஷிப்பானென்றீர்; உமக்கிரண்டு கோடியிலும் வைத்துக்கொண்டு எத்தாலே ரக்ஷித்தானென்ன; தன்னுடையநிர்ஹேதுக க்ருபையாலே என்றத்தை அநுஸந்தித்து அவன் சீலாதிகளையும் அநுபவிக்கிறாரென்று ஸங்கதி.

(ஸாதாரணம்) என்றது-ஜீவனுக்கும்தனக்கும்பொதுவானஎன்றபடி.

மூ. — பேய்முலைத்தல நஞ்சுண்டபிள்ளையைத்
தெள்ளியார் வணங்கப்படும் தேவனை
மாயனை மதிள்கோவலிடைகழி
மைந்தனையன்றி யந்தணர் சிந்தையு

ளீசனையிலங்கும் சுடர்ச்சோதியை
எந்தையை யெனக்கெய்ப்பினில் வைப்பினைக்
காசினை மணியைச் சென்றுநாடிக்
கண்ணமங்கையுள் கண்டு கொண்டேனே (௪)

பதம்.	உரை.
பேய்	பூதனையினுடைய
முலைத்தலம்	முலையின் ஸ்த்தலத்திலே யுண்டான
நஞ்சு	விஷத்தை
உண்ட	அமுதுசெய்த
பிள்ளையை	பாலனாய்,
தெள்ளியார்	ஜ்ஞாநாதிகராலே
வணங்கப்படும்	ஆஸ்ரயிக்கப்படாநின்றவனாய்,
தேவனை	(அத்தாலே) தீப்யமானனாய்,
மதிள்	ப்ராகாரங்களினால் சூழப்பட்ட
கோவல்	திருக்கோவலூரிலே
இடைகழி	திருவிடைகழியிலே (முதலாழ்வார்களுடனெழுந்தருளியிருக்கிற)
மைந்தனை	யுவாவாய்
அன்றி	அதுக்குமேலே
அந்தணர்	ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய
சிந்தையுள்	மநஸ்ஸிலே(இருந்து)
ஈசனை	(அவர்களை) நியமிக்கவல்லனாய்,
இலங்கும்	(அவர்கள் தோஷம் தட்டாதபடி) விளங்காநின்ற
சுடர்	உஜ்ஜ்வலமான
சோதியை	தேஜோரூபியாய்,
எந்தையை	எனக்கு ஸ்வாமியாய்
எனக்கு	எனக்கு
எய்ப்பினில்	தளர்த்திமேலிடும் காலத்தில்
வைப்பினை	நிதிபோல்ரக்ஷகனாய்,
காசினை	ஸுவர்ணம் போல் ஸ்ப்ருஹணீயனாய்,
மணியை	ரத்நம்போல் அதிஸ்லாக்யனா யுள்ளவனை

சென்றுநாடி கண்ணமங்கையுள் கண்டுகொண்டேன். (௪)

வ்யா. —நாலாம்பாட்டு. (பேய்முலையித்யாதி) பூதனையுடைய முலை ஸ்த்தலத்திலுண்டான விஷத்தை அமுதுசெய்து, விழுக்காடறியாத முக்த([illegible])னை. (தெள்ளியார் வணங்கப்படும்தேவனை) இப்படி முக்த([illegible])ரன்றியே அறிவுடையராயிருப்பாராலே ஆஸ்ரயிக்கப்படுவானாய், அத்தாலே தீப்யமானனானவனை. (மாயனை) ஆஸ்சர்யபூதனை. (மதிட்கோவலிடைகழிமைந்தனை) இடமில்லாதிடத்தே ஆஸ்ரிதரோடே புகுந்து நெருக்கின நித்ய யௌவநஸ்வபாவனை. (அன்றி யந்தணர் சிந்தையுளீசனை) அதுக்குமேலே ஆஸ்ரிதருடைய ஹ்ருதயத்திலே புகுந்து, அவர்களைத்தன்வழியே நியமித்துக்கொண்டிருக்கிறவனை.

(இலங்கும் சுடர்ச்சோதியை) இவர்களுடைய சரீரத்திலும், ஆத்மாவிலும்வர்த்தியாநிற்கச்செய்தே அவற்றைப்பற்றிவரும்தோஷங்கள் தன்பக்கலிலே தட்டாதபடியிருக்கிறவனை. (எந்தையை) இஸ்ஸ்வபா(भा)வத்தைக்காட்டி என்னையெழுதிக்கொண்டவனை. (எனக்கெய்ப்பினில் வைப்பினை) எனக்குக் கைம்முதலில்லாதவன்று அழித்துக் கெடுத்துஜீவிக்கலாம்படியானநிதியானவனை. (காசினை)பொன்போலே ஸ்ப்ருஹணீயனானவனை. (மணியை) அப்பொன்னை அழித்தும் ஸ்வீகரிக்கக்கடவ ரத்நம்போலே ஶ்லாக்க்யனானவனை. சென்றுநாடி. (௪)

அரு.—நாலாம்பாட்டு. (பேய்முலையித்யாதி) இப்படி நிர்ஹேதுகமாகக் கடாக்ஷித்தது உம்மைத்தானேயோ? மற்று யாரையாகிலும் இப்படி கடாக்ஷித்ததுண்டோவென்ன; முதலாழ்வார்களையும் கடாக்ஷித்தானென்னக்கேர்வி ஆயனாருடைய பிள்ளைச் சேவகம் துடங்கி அநுபவிக்கிறாரென்று ஸங்கதி.

(அதுக்கு மேலே) என்றது-முதலாழ்வார்களைக் கடாக்ஷித்ததுக்கு மேலே யென்றபடி. "அந்தணர்" என்ற பதம் - திருமழிசைப்பிரான், பட்டர்பிரான், தொண்டரடிப்பொடியாழ்வார் இவர்களைச்சொல்லிற்றாய், இவர்களைச்சொன்னது உபலக்ஷணமாக்கி,மாறன், குலசேகரன், பாணன் என்கிற மூவரையும் திருவுள்ளம்பற்றி (ஆஶ்ரிதருடைய) என்றருளிச்செய்தது.

(இஸ்ஸ்வபாவத்தை)என்றது-ஆழ்வார்கள் ஒன்பது திருநாமங்களையும் மயர்வறமதி நலமருளிக் கடாக்ஷித்த ஸ்வபா(भा)வத்தை யென்றபடி. (௪)

மூ — ஏற்றினையிமயத்துளெம்மீசனை
இம்மையைமறுமைக்கு மருந்தினை
ஆற்றலை யண்டத்தப் புறத்துய்த்திடு
மையனைக் கையிலாழி யொன்றேந்திய
கூற்றினைக் குரு மாமணிக்குன்றினை
நின்றவூர்நின்ற நித்திலத்தொத்தினைக்
காற்றினைப் புனலைச் சென்றுநாடிக்
கண்ணமங்கையுள்கண்டு கொண்டேனே. (௫)

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஏற்றினை	ருஷபம்போல் செருக்கனாய்,	எம்ஈசனை	நம்முடைய ஸ்வாமியாய்,
இமயத்துள்	ஹிமவானில் (திருப்பிரிதியில்) எழுந்தருளியிருக்கிற	இம்மையை	ஐஹிகபலப்ரதனாய்
		மறுமைக்கு	ஆமுஷ்மிக பலங்களுக்கு

மருந்தினை	ஔஷதம்போல் ஸாதநபூதனாய்
ஆற்றலை	மிடுக்கனாய்,
அண்டத்து அப்புறத்து	அண்டத்துக்கு வெளியிலே (பரமபதத்தளவும்)
உய்த்திடும்	(ஆஶ்ரிதரை) நடத்த வல்லவனை
ஐயனை	நிருபாதிக பந்துவாய்
கையில்	திருக்கையில்
ஒன்று ஆழி	அத்விதீயமான ஸுதர்சநாழ்வானை
ஏந்திய	தரித்துக்கொண்டு
கூற்றினை	ம்ருத்யு போலே (அநாஶ்ரிதர்க்கு) பயங்கரனாய்,
குரு	ஶ்லாக்யமாய்
மா மணி	நீலமணிமயமான
குன்றினை	மலைபோல் அதிஸுந்தரனாய்
நின்றவூர்	திருநின்றவூரில்
நின்ற	எழுந்தருளியிருக்கிற
நித்திலம் தொத்தினை	முத்துக்குவியல் போல்குளிர்ந்தவடிவையுடையனாய்,
காற்றினை	காற்றுபோல் ஸுககரனாய்
புனலை	ஜலம்போல் தாரகனாயுள்ளவனை

சென்றுநாடிகண்ணமங்கையுள்
கண்டுகொண்டேன். (௫)

வ்யா. — அஞ்சாம்பாட்டு (ஏற்றினை) ஸ்வாநந்தாநுபவத்தால் வந்த செருக்கையுடையவனை. (இமயத்துளெம்மீசனை) ஹிமவானில் திருப்பிரிதியிலிருக்கு மிருப்பைக்காட்டி என்னை வசீகரித்தவனை. (இம்மையை மறுமைக்கு மருந்தினை) ஐஹிகமாயும் ஆமுஷ்மிகமாயுமுள்ள ப(ஃ)லங்களுக்கு ஸாதநபூதனானவனை. (ஆற்றலை) ஒருவஸ்துவே எல்லாவற்றையும் தரவற்றோவென்னில்; அக்கண்ணழிவுசொல்லவொண்ணாதபடி ஸர்வசக்தியுக்தனானவனை. (அண்டத்தப் புறத்துய்த்திடுமையனை) இஸ்ஸர்வசக்தித்வம்கொண்டு கொள்ளவிருக்கிற கார்யமென்னென்னில்; இவற்றைப்பரமபதத்தளவும் செல்லநடத்துகை. அதுதானவனுக்கு வேண்டுகிறதென்னென்னில்; (ஐயனை) நிருபாதிக பந்து(ബന്ധു)வாகை.

(கையிலாழியொன்றேந்திய கூற்றினை) ஆதிவாஹிகர் கையிலே காட்டிக்கொடுத்துக் கொடுபோகாநின்றால், ஆரேனும் சிலர்விலக்கினருண்டாகில் இருதுண்டமாக்குகைக் கீடான பரிகரத்தையுடையனாய், சத்ருக்களுக்கு ம்ருத்யுபோலேயானவனை. (குருமாமணிக்குன்றினை) ஶ்லாக்யமானநீலரத்ந பர்வதம்போன்ற வடிவையுடையவனை. அங்கேகொடுபோனால் காட்சிகொடுக்கும்படியான வடிவிருக்கிறபடி. (நின்றவூர்நின்றநித்திலத்தொத்தினை) அவ்வளவும்போகப்பட்றாதார்க்குக் காட்சிகொடுக்கைக்காக திருநின்றவூரிலேநிற்கிற முத்துத்திரள்

போலே ஸ்ரமஹரமான வடிவையுடையவனை. (காற்றினை) ஸ்வஸ்பர்ஶத்தால் வரும் ஸுகமாயிருக்கிறவனை. (புனலை) தா (ஹ) ரகனானவனை சென்றுநாடி. ... ... (ரு)

அந.—அஞ்சாம்பாட்டு- (ஏற்றினையித்யாதி) கீழ்ப்பாட்டில் தம்மை விஷயீகரித்தமையை ஸத்ருஷ்டாந்தமாக அநுஸந்தித்தார். இப்படி ஆழ்வார்களையெல்லாம் விஷயீகரித்துப்பெற்ற மேனாணிப்புக்களெல்லாம் தோற்ற எழுந்தருளியிருக்கும் திருப்பிரிதி தொடங்கி அநுபவித்து ஹ்ருஷ்டரான வளவிலே அவனுடைய ஐஹிகாமுஷ்மிகாதி ப(ஃ)லப்ரதத்வம், மோக்ஷப்ரதத்வம் முதலானவற்றையு மநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

"மருந்து" என்பது தீர்க்குமதாகையாலே உபயவித ப(ஃ)லஸாதநபூதனென்றபோதே அவை இல்லாமையால் வரும் துக்கத்தைப்போக்குமவனென்று மென்று திருவுள்ளம்பற்றியருளிச் செய்கிறார் (ஐஹிகமாயுமித்யாதி) "இம்மையை" என்கிற விடத்தில் ஐகாரம் அவ்யயம்.

(அவ்வளவும் போக) சரீராவஸாந ஸமநந்தரத்தளவும் செல்ல (பற்றாதார்க்கு) பொறுக்கமாட்டாதார்க்கு. ... ... (ரு)

மூ. — துப்பனைத்துரங்கம் படச்சீறியதோன்றலைச்
சுடர்வான்கலன் பெய்ததோர்
செப்பினைத் திருமங்கைமணாளனைத்
தேவனைத் திகழும் பவளத்தொளி
யொப்பனை யுலகேழினை யூழியை
ஆழியேந்திய கையனை யந்தணர்
கற்பினைக் கழுநீர்மலரும் வயல்
கண்ணமங்கையுள் கண்டுகொண்டேனே. (சு)

பதம்.	உரை.	பதம்.	உரை.
துப்பனை	ஸமர்த்த (பலிஷ்ட்ட)னாய்,	பெய்தது	இட்டுவைக்கும் படியான
துரங்கம்	கேசியென்னு மஸுரனானவன்	ஓர்	விலக்ஷணமான
பட	அழியும்படியாக	செப்பினை	செப்பு (பாத்ரம்)போன்றவனாய்,
சீறிய	(அவனை) கோபித்தருளின	திருமங்கை	பெரிய பிராட்டியார்க்கு
தோன்றலை	ஸுந்தரனாய்,	மணாளனை	வல்லபனாய்,
சுடர்	உஜ்ஜ்வலமாய்	தேவனை	(அத்தால்) விளங்குமவனாய்,
வான்	பெருவிலையனான	திகழும்	ஒளிவிடாநின்ற
கலன்	ஆபரணங்களை		

பவளத்து	பவழத்தினுடைய
ஒளி ஒப்பானை	காந்தியோடொத்தவ (ஸ்ப்ருஹணீய)னாய்,
உலகுஏழினை	ஸப்தலோகங்களுக்கு நிர்வாஹகனாய்,
ஊழியை	காலத்துக்கு நிர்வாஹகனாய்,
ஆழி ஏந்திய	திருவாழியைத்தரியாநின்றவனாய்,
கையனை	திருக்கையையுடைய
அந்தணர்	ப்ராஹ்மணராலே
கற்பினை	ஓதப்படுமவனானவனை
கழுநீர்	செங்கழுநீர்ப் பூவா
மலரும்	அலராநின்ற [ஸதி
வயல்	கழனிகளையுடைய

கண்ணமங்கையுள் கண்டுகொண்டேன். (௬)

வ்யா.—ஆறும்பாட்டு. (துப்பனை) தான்நினைத்தவை செய்து தலைக்கட்டுகைக்கீடானஸாமர்த்த்யத்தையுடையவனை. (துரங்கம்படச் சிறியதோன்றலை) கேசியுடைய வாய்கிழியும்படி சிறியமுக்த[illegible]னை. (சுடர்வான்கலன் பெய்ததோர் செப்பினை) ஒளியையுடைத்தாய், பெருவிலையனாயிருந்துள்ள ஆபரணங்களை இட்டுவைக்கும் செப்பானவனை. "சுடர்வான்கலன்" ஆகிறது தானேதென்னில்; (திருமங்கைமணாளனைத் தேவனை) பிராட்டியும் தானுமான சேர்த்தியிலே யுண்டான ஒத்துமஞ்சளும், செம்பஞ்சிக்குழம்பும், மாளிகைச்சாந்தின் நாற்றமுமாய்க்கொண்டு திருமேனியில் புகர்தோன்றநின்றநிலை.

(திகழும் பவளத்தொளியொப்பனை) ஸர்வைஸ்ஸ்ப்ருஹணீயனானவனை. (உலகேழினை) போக்ய ([illegible]) போகோ ([illegible]) பகரண போக ([illegible]) ஸ்தாநங்களாயுள்ளவனை. (ஊழியை) காலமே சேஷித்தவன்று காலமாய்நின்றவனை. (ஆழியேந்தியகையனை) நித்யமான திவ்யாயுதங்களை ஏந்தும் திருக்கையை யுடையவனை. நித்யமான திவ்யமங்கள விக்ரஹத்தையுடையவனை யென்றபடி. (அந்தணர் கற்பினை) ப்ராஹ்மணருடைய மர்யாதைபோலே யிருக்கிற ஸங்கல்பத்தையுடையவனை, ப்ராஹ்மணராலே அத்யயநம் பண்ணப்படுகிறவனை யென்றுமாம். (கழுநீர்மலரும் வயல்) செங்கழுநீர் தொடக்கமான புஷ்பங்கள் அலராநின்றவயலையுடைத்தான. ... ... (௬)

அரு.—ஆறும்பாட்டு. (துப்பனையித்யாதி) மேல்சொன்ன ப(ஃ)லப்ரதத்வோபயுக்தமான ஸாமர்த்த்யத்தையும், தத்கார்யமான விரோதிநிரஸநத்தையும், அதுக்குடலான ஸ்ரிய:பதித்வத்தையும், இவையெல்லா மநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

“தோன்றல்” என்றது-அழகுக்குவாசகமாகையாலே,(ஸுந்த(ர)னை) என்றது; ஸுந்தரனையென்றபடி.

“ஏந்திய” என்றது- ஏந்துமென்றாய், அத்தால் பலித்தது (நித்யமான) என்றது. (மர்யாதைபோலே) என்றது-சாபாநுக்ரஹஸங்கல்பம்போலே யென்கை. “கற்பினை” என்றதுக்கு - கற்கப்படுமவனை யென்றர்த்தாந்தரமருளிச்செய்கிறார் (ப்ராஹ்மணராலேயித்யாதி). ... ... (௬)

மூ. — திருத்தனைத் திசைநான்முகன் தந்தையைத்
தேவதேவனை மூவரில்முன்னிய
விருத்தனை விளங்கும் சுடர்ச்சோதியை
விண்ணை மண்ணினைக் கண்ணுதல்கூடிய
அருத்தனை யரியைப் பரிகீறிய
அப்பனை யப்பிலா ரழலாய்நின்ற
கருத்தனைக் களிவண்டறையும்பொழில்
கண்ணமங்கையுள் கண்டுகொண்டேனே. (௭)

பதம்.	உரை.
திருத்தனை	(ஆநந்தத்தினால்) த்ருப்தனாய், (பரிபூர்ணனாய்),
திசை	திக்கிலுள்ளவர்களுக்கு நிர்வாஹகனான,
நான்முகன்	ப்ரஹ்மாவுக்கு
தந்தையை	பிதாவாய்,
தேவதேவனை	தேவர்களாலே ஆச்ரயிக்கப்படும் தேவனாய்,
மூவரில்	ப்ரஹ்ம விஷ்ணுருத்ரரான மூவர்களுக்குள் (மற்ற இருவர்க்கும்)
முன்னிய	ப்ரதா(ந)ந னான
விருத்தனை	நாயகனாய் (நியாமகனாய்)
விளங்கும்	ப்ரகாசியாநின்ற
சுடர்	உஜ்ஜ்வலமான
சோதியை	தேஜோமயமான திவ்யவிக்ரஹத்தை யுடையனாய்,
விண்ணை	ஸ்வர்க்கத்துக்கு நியாமகனாய்
மண்ணினை	பூமிக்கு நியாமகனாய்,
கண்ணுதல்	நெற்றிக் கண்ணனான ருத்ரனானவன்
கூடிய	சேர்ந்திருக்கிற
அருத்தனை	அர்த்த (ஶரீ) பா(க)த்தை யுடையவனாய்,
அரியை	ஸிம்ஹம்போல் மிடுக்கனாய்,
பரிகீறிய	கேசியைக் கிழித்துப் போகட்ட
அப்பனை	உபகாரகனாய்;
அப்பில் ஆர்	ஜலத்திலே இருக்கிற
அழலாய்நின்ற	படபாக்நி போல்(எல்லா பதார்த்தங்களுக்கும் லயஸ்தாநமா) யிருக்கிற

கருத்தனை	ஸர்வஸ்வாமியாயுள்ள ஸர்வேஶ்வரனை,
களி	மதித்திருக்கிற
வண்டு	வண்டுகளானவை
அறையும்	சப்தியாநின்ற
பொழில்	சோலைகளையுடைய

கண்ணமங்கையுள் கண்டுகொண்டேன். (எ)

வ்யா.—ஏழாம்பாட்டு. (திருத்தனை) ஸ்வாநந்தா([illegible])நுபவத்தாலே நித்யத்ருப்தனானவனை. (திசைநான்முகன் தந்தையை) இவ்வருகுள்ளாரில்காட்டில் அதிகனாயிருக்கிற சதுர்முகனுக்கு ஜநகனானவனை. (தேவதேவனை) அவனொருவனுக்குமன்றிக்கே, தேவர்களானாரெல்லாராலும் ஆஶ்ரயிக்கப்படுமவனை. (மூவரில்முன்னியவிருத்தனை) மூவருமான நிலையில் மற்றை இருவர்க்குத் தானே நியாமகனாய், தானானநிலையில் வந்தால் சேஷித்வத்தால்வந்த உறைப்புத்தோற்ற விருக்கிறவனை. (விருத்தனை) தலைமகனை. (விளங்கும் சுடர்ச்சோதியை) த்ரிமூர்த்திமத்யஸ்தனான நிலையொழிய அஸாதாரணமான திவ்யமங்கள விக்ரஹத்தை யுடையனானவனை. (விண்ணை) போக ([illegible]) பூமியான ஸ்வர்க்காதிகளானவனை. (மண்ணினை) அதுக்கு ஸாதநாநுஷ்டாநம்பண்ணும் கர்மபூமியானவனை.

(கண்ணுதல்கூடிய வருத்தனை) லலாடநேத்ரனான ருத்ரனை யுடைத்தான அர்த்த ([illegible]) பாக([illegible])த்தை யுடையவனை. (அருத்தன்) அர்த்த ([illegible]) பாகன். (அரியை) விரோதிகளைப் போக்குமவனை. (பரிகிறிய வப்பனை) விரோதிநிரஸநத்தை சீலமாகவுடைய உபகாரகனை (அப்பிலாரழலாய்நின்ற கருத்தனை) படபா([illegible])முகாக்நி ஜலாம்சமடையத் தன்பக்கலிலே வந்து சுவறும்படி யிருக்குமாபோலே ஸர்வபதார்த்தங்களும் தன்பக்கலிலேவந்து லயிக்கும்படியிருக்கிறசக்தியை யுடையவனை. களிவண்டறையும். ... ... (எ)

அரு.—ஏழாம்பாட்டு. (திருத்தனையித்யாதி) கீழ்ப்பாட்டில் ஸர்வப([illegible])லப்ரதத்வோபயுக்தமான ஸர்வசக்தித்வத்தை யநுஸந்தித்தார்; அதுக்குறுப்பாக விரோதிநிரஸநத்தைப் பலபடியாக அநுஸந்திக்கக்கோலி நிரபேக்ஷதையை யநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

(தலைமகனை) நாயகனை. மூவரிலித்யாதியான பதங்களில் குணங்களெல்லாம் ஸர்வஸமாஶ்ரயணீயத்வத்துக்குறுப்பாக வநுஸந்திக்கிறாரென்று திருவுள்ளம். ... ... (எ)

மூ. — வெஞ்சினக்களிற்றை விளங்காய்வீழக்
கன்றுவீசிய வீசனைபேய்மகள் துஞ்ச
நஞ்சு சுவைத்துண்டதோன்றலைத்
தோன்றல்வாளரக்கன் கெடத்தோன்றிய
நஞ்சினை யமுதத்தினை நாதனை
நச்சுவாருச்சிமேல் நிற்கும்நம்பியைக்
கஞ்சனைத்துஞ்ச வஞ்சித்த வஞ்சனைக்
கண்ணமங்கையுள் கண்டுகொண்டேனே (௮)

பதம்.	உரை.	பதம்.	உரை.
வெம்சினம்	அதிக்ரூரமான கோபத்தையுடைய	கெட	முடியும்படி
களிற்றை	யானைபோல் அழகியனாய்,	தோன்றிய	திருவவதரித்த
விளங்காய்	விளாம்பழமான அஸுரனானவன்	நஞ்சினை	விஷம்போன்றவனாய்
வீழ	விழுந்து முடியும்படி	அமுதத்தினை	(ஆஶ்ரிதர்க்கு) அம்ருதம்போல் போக்யபூதனாய்,
கன்று	கன்றாய்வந்த அஸுர	நாதனை	ஸர்வசேஷியாய்,
வீசிய	தூக்கியெறிந்த [னை	நச்சுவார்	(தன்னை) ஆசைப்படுமவர்களுடைய
ஈசனை	ஸ்வாமியாய்,	உச்சிமேல்	சிரஸ்ஸில்
பேய்மகள்	பூதனையானவள்	நிற்கும்	எழுந்தருளியிருக்கிற
துஞ்ச	முடியும்படி	நம்பியை	பூர்ணனாய்,
நஞ்சு	(அவள்முலையிலுள்ள) விஷத்தை	கஞ்சனை	கம்ஸனை
சுவைத்து	உரிஞ்சி	துஞ்ச	(அவன்) முடியும்படி
உண்ட	அமுதுசெய்த	வஞ்சித்த	மோசம் செய்த (கொன்ற)
தோன்றலை	பாலகனாய், [னை	வஞ்சனை	க்ருத்ரிமனாயுள்ளவனை
தோன்றல்	(சத்ருவாக)ப்ரஸித்த	கண்ணமங்கையுள் கண்டுகொண்டேன். (௮)	
வாள்அரக்கன்	வாளாயுதத்தையுடைய ராவணாஸுரன்		

வ்யா. —எட்டாம்பாட்டு. (வெஞ்சினக்களிற்றை) வெவ்விய சினத்தையுடையமத்தஹஸ்திபோலே தர்ஶநீயனானவனை. (விளங்காயித்யாதி) கன்றாயும் விளாவாயும் வந்த அஸுரர்களிருவரையும் தன்னைக்கொண்டு தன்னையே மாய்த்துத்தர தான்நினைத்தது தலைக்கட்டவல்லவனை (பேய்மகளித்யாதி) பூதனைமுடியும்படி அவளுடைய விஷத்தை போக்யமாகக் கொண்டமுதுசெய்த முக்தத(*)னை. (தோன்றலித்

யாதி) சத்ருவாக ஸர்வலோகங்களிலும் ப்ரஸித்தனாய் ஸாயுதனுமாயிருக்கிற ராவணன்முடியும்படி தோன்றின ம்ருத்யுவை.

(அமுதத்தினை) அவ்விருப்புத்தானே அநுகூலர்க்கு போக்யமாயிருக்கிறவனை. (நாதனை) நிருபாதிகசேஷியை. (நச்சுவாருச்சிமேல் நிற்கும் நம்பியை) தன் பக்கலாசையுடையார் தலைமேலே நிற்குமவனாய், அதுதான் பெருப்பேறாக நினைத்து பூர்ணனாயிருக்கிறவனை. (கஞ்சனையித்யாதி) கம்ஸனுடைய துரபிஸந்தியை அவன்தன்னோடே போக்கி உகவாதாரோடு செவ்வையழியப் பரிமாறுமவனை. கண்ணமங்கையுள். ... ... (௮)

அவ. —எட்டாம்பாட்டு. (வெஞ்சினக்களிறித்யாதி) கீழ்ப்பாட்டில் ஸர்வஸமாஶ்ரயணீயத்வத்தை யநுஸந்தித்தார்; அதுக்குறுப்பாக விரோதிநிரஸநத்தைப் பலபடியாக அநுஸந்திக்கக்கோலி அப்ரதிஹதத்வத்தை யநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

(நிருபாதிகசேஷியை) என்றது - விரோதிநிரஸநத்துக்கு உறுப்பான ப்ராப்தியைச் சொல்லுகிறது. (தன்பக்கலாசையுடையார்தலைமேலே) என்றது- விரோதிநிரஸநத்துக்காக த்தன்னிடத்தில் ஆசைப்பட்டவருடைய ஆசையின்தலைமேலென்றபடி. இத்தால் ஆற்றாமையுடைய ஸம்காலமே வந்துநிற்கிறவனென்று விரோதிநிரஸநத்தில் விளம்பராஹித்யம் ஸூசிதமாயிற்று. ... ... (௮)

மூ. — பண்ணினைப்பண்ணில் நின்றதோர் பான்மையைப
பாலுள் நெய்யினைமாலுருவாய் நின்ற
விண்ணினைவிளங்கும் சுடர்ச்சோதியை
வேள்வியை விளக்கினொளிதன்னை
மண்ணினைமலையை யலைநீரினைமாலை
மாம்தியை மறையோர்தங்கள்
கண்ணினைக் கண்களாரளவும்நின்று
கண்ணமங்கையுள் கண்டுகொண்டேனே. (௯)

பதம்.	உரை.	பதம்.	உரை.
பண்ணினை	பாட்டுப்போலினியனாய்	பான்மையை	ஸ்வபாவம் போலே நிரதிசய போக்ய பூதனாய்,
பண்ணில்	(அந்த)காநத்திலே		
நின்றது	ஸாரபூதமா யிருக்கிற	பாலுள்	பால்போலவும் அதினுள்ளேயிருக்கிற
ஓர்	அதிவிலக்ஷணமான		

நெய்யினை	நெய்போலு மிருக்குமவனாய்,
மால்உருவாய் நின்ற	அதிவிசாலமான ஸ்வரூபத்தை யுடைத்தாயிருக்கிற
விண்ணினை	பரமபதத்துக்கு நிர்வாஹகனாய்
விளங்கும் சுடர்	மிகவுமுஜ்ஜ்வலமாய்
சோதியை	தேஜோமயமான விக்ரஹத்தை யுடையவனாய்,
வேள்வியை	யாகங்களுக்கு நிர்வாஹகனாய்
விளக்கின்ஒளி தன்னை	தீபத்தின் தேஜஸ்ஸு போலே ஸ்வயம் ப்ரகாசனாய்,
மண்ணினை	பூமிபோல் ஸர்வாதார பூதனாய்,
மலையை	மலைபோல்அவிசால்யனாய்;
அலை நீரினை	அலைமோதா நின்ற ஜலம்போலே இஷ்ட விநியோகார்ஹனாய்,
மாலை	ஆஶ்ரிதவ்யா முக்தனாய்
மாமதியை	பெரிய ஜ்ஞாநத்தைக் கொடுக்குமவனாய்,
மறையோர் தங்கள்	வேதாத்யயநசீலரான ப்ராஹ்மணர்க்கு
கண்ணினை	நேத்ரம்போல் அர்த்தப்ரகாசகனா யிருக்கு மவனை,
கண்கள் ஆரளவும்	கண்கள்(விடாய் தீர்ந்து) நிறையுமளவும்
நின்று	ஒரு படிப்பட்டிருந்து
கண்ணமங்கையுள் கண்டுகொண்டேன். (௯)	

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (பண்ணினை) (௧) "𑌸 𑌹𑍃𑌦𑍍𑌯𑌸𑍍𑌸𑍍𑌵𑌾𑌦𑍂𑌨𑌾𑌂- யஆத்யஸ் ஸ்வாதூநாம்" என்கிறபடியே, பண்போலினியனானவனை. (பண்ணில்நின்ற தோர்பான்மையை) இன்னாரினையாரென்றன்றியே, எல்லாரையுமொக்க வருத்தக்கடவதாயிருக்கிற அந்த பண்ணினிசைபோலே நிரதிசயபோக்யனானவனை. (பாலுள் நெய்யினை) ஸாராம்சத்தோடு ருஜீஷாம்சத்தோடு வாசியற இரண்டிலுமுண்டான உபாதேயாம்சமானவனை. (மாலுருவாய்நின்ற விண்ணினை) "த்ரிபாத்விபூதி" என்னலாம்படியான பரப்பையுடைய நித்யவிபூதியுக்தனானவனை. விளங்கும் சுடர்ச்சோதியை) அங்கே நிரவதிகதேஜோரூபமான திவ்யமங்கள விக்ரஹத்தையுடையனாய் நிற்கிறவனை. (வேள்வியை அத்தேசத்தை ப்ராபிக்கைக்கு ஸாதநமான கர்மங்களாய் நிற்கிறவனை. (விளக்கினொளிதன்னை) ஸ்வாயத்தமான தேஜஸ்ஸை யுடையவனை.

(மண்ணினை) செய்தார் செய்தகுற்றங்களையடைய மறக்குமவனாய் குற்றம் செய்வார்க்கு தன்னைப்பற்றி நிற்கும்படி இடம்கொடுக்கு

---

(௧)

மவனை. (மலையை) இப்படிப்பட்ட தன்ஸ்வபாவத்தை ஒருவரால் சலிப்பிக்க அரிதாம்படியிருக்கிறவனை. (அலைநீரினை) நினைத்திடமெங்கும் ஏற்றிப்பாய்ச்சிக்கொள்ளலாம்படி யிருக்கிறவனை. (மாலை) ஆஶ்ரிதர்பக்கல வ்யாமோஹமே வடிவாயிருக்கிறவனை. (மாமதியை) (க) “𑌦𑌦𑌾𑌮𑌿 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌯𑍋𑌗𑌂 𑌤𑌂- ததாமி புத்தியோகம் தம்” என்கிறபடியே தன்னைப்ராபிக்கைக்கிடான புத்தியோகத்தைக் கொடுக்குமவனை. (மறையோர் தங்கள் கண்ணினை) வேதத்தை எங்குமொக்க அதிகரித்திருப்பார்க்கு, தன்னையொழிய பதார்த்ததர்ஶநம் பண்ணவொண்ணாதபடி அவர்களுக்கு “த்ருஷ்டிபூதனாயுள்ளவனை. (கண்களாரளவும் நின்று) காணப்பெருமையால் உருவினகண்களி னுருவுதல தீரும்படி நின்று கண்டநுபவிக்கப் பெற்றேன். ... ... (கூ)

அரு.—ஒன்பதாம்பாட்டு. (பண்ணினையித்யாதி) விரோதிநிரஸநத்துக்காக ஒப்பனையை 'நச்சுகிறதென்; அவ்வளவன்று, நிரதிசய போக்யனு யிருக்குமவனென்று கொண்டு ஸர்வப்ரகார வைலக்ஷண்யத்தை அநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

“ஓர்” என்றத்தால் ப்லித்த வைலக்ஷண்யத்தை யருளிச்செய்கிறார் (இன்னாரித்யாதி). (வருத்த) என்றது-ஈடுபடுத்த என்றபடி. “பண்ணினைப்பண்ணில் நின்றதோர் பான்மையை” என்று உபக்ரமிக்கையாலே “பாலிநெய்யினை” என்று பாலில் நெய்யினை யென்று விவக்ஷிதமென்று திருவுள்ளம் பற்றி, “பண்ணினை” என்றும், “பாலி நெய்யினை” என்றுமிவற்றையுமருளிச்செய்வானென், ஸாராம்சமான பண்ணிலிசையையும் பாலில் நெய்யையுமருளிச்செய்தால் அமையாதோ என்னுமதிசங்கையைப் பரிஹரிக்கிறார் (ஸாராம் சத்தோடித்யாதி). உத்கர்ஷாபகர்ஷங்கள் பரஸ்பரமுண்டாகிலும், எல்லாவற்றிலு முண்டான போக்யதாமாத்ரம் சொல்ல வேண்டுவதாகையாலே அங்ஙனருளிச் செய்தாரென்று கருத்து. பண் போலன்றிறே பாலும்நெய்யுமிருப்பது, அஸாராம்சமும் மிஶ்ரமாயிறே யிருப்பது, இவற்றோடே அபேத வ்யபதேசம் கூடுமோவென்ன வருளிச்செய்கிறாராகவுமாம்; இப்போது (வாசியற) என்றது. “வாசியற்றிருக்கிற” என்றாய், விவேகிக்கவொண்ணாதபடி ஒன்றாயிருக்கிற யென்றபடி. (இரண்டிலும்) பால்நெய் இரண்டிலு மென்றபடி. “மால்” என்று பெருமையாய், பேருருவுடைத்தாய் நின்ற நித்யமான விண்ணினை யென்றர்த்தமருளிச் செய்கிறார். (த்ரிபாத்விபூதித்யாதி). “சுடர்ச்சோதி” என்றத்தால் விக்ரஹத்தினுடைய தேஜோரூபத்வம் சொன்னபடியாலே, விக்ரஹத்தில் ப்ரபை([illegible])யைச்சொல்லிற்றாக்கியருளிச் செய்கிறார் (ஸ்வாயத்தேத்யாதி).

(க) கீ-க௦-க௦.

“மா” என்று விசேஷித்ததுக்குக் கருத்தருளிச் செய்கிறார் (ததாமி இத்யாதி). ... . (௯)

மூ. — கண்ணமங்கையுள் கண்டுகொண்டேனென்று
காதலால் கலிகன்றியுரைசெய்த
வண்ணவொண்டமிழொன்பதோடொன்றிவை
வல்லராயுரைப்பார் மதியந்தவழ்
விண்ணில் விண்ணவராய் மகிழ்வெய்துவர்
மெய்ம்மைசொல்லில் வெண்சங்கமொன்றேந்திய
கண்ணா! நின்றனக்கும் குறிப்பாகில்
கற்கலாம் கவியின் பொருள்தானே. (௧௦)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

* * *

பதம்.	உரை.
கண்ணமங்கையுள்	திருக்கண்ணமங்கையில்
கண்டுகொண்டேன்என்று	காணப்பெற்றேனென்று
கலிகன்றி	ஆழ்வார்
காதலால்	ப்ரீதியுடன்
உரைசெய்த	அருளிச் செய்ததாய்,
வண்ணம்	காநத்தின் ஸ்வபாவமான இசையையுடைத்தாய்,
ஒண்தமிழ்	அழகிய தமிழ்பாஷையிலேயுண்டான
ஒன்பதோடு ஒன்று	ஒன்பது பாசுரங்களோடுகூடிய ஒரு பாசுரமான [ளையும்
இவை	இப்பத்துப்பாசுரங்க
வல்லராய்	அப்யஸிக்க ஸமர்த்தராய்க்கொண்டு
உரைப்பார்	அநுஸந்திக்குமவர்கள்
மதி தவழ்	சந்த்ரன் ஸஞ்சரியாநின்ற

பதம்.	உரை.
அம்விண்ணில்	அழகிய (போகப்ரசுரமான) ஸ்வர்க்கத்தில் போய்
விண்ணவராய்	தேவர்களாயிருந்து
மகிழ்வு எய்துவர்	ஸந்தோஷிப்பர்கள்;
மெய்ம்மை சொல்லில்	இதினுடைய உண்மையான ப(ஃ)லத்தைச்சொல்லப்புகில்
வெண்சங்கம் ஒன்று	வெண்மையாய் அத்விதீயமாயிருக்கிற ஸ்ரீ பாஞ்சஜந்யத்
ஏந்திய	தரியாநின்ற [தை
கண்ண	ஸர்வாதிகனே!
குறிப்பாகில்	திருவுள்ளமானால்
கவியின்பொருள்	இப்பாசுரங்களினர்த்தங்களை [கும்கூட
நின்றனக்கும்	ஸர்வஜ்ஞனான உனக்
கற்கலாம்	அப்யஸிக்கத் தகுந்ததாயிருக்கும். (௧௦)

வ்யா.—பத்தாம்பாட்டு. (கண்ணமங்கையுள் கண்டு கொண்டேனென்று) ஒருதேச விசேஷத்திலேபோய் காணும் வஸ்துவை ஸம்ஸாரத்திலே திருக்கண்ணமங்கையிலே காணப்பெற்றேனென்று. (காதலால் கலிகன்றியுரைசெய்த) அபிநிவேசத்தாலே ஆழ்வாரருளிச்

செய்த. (வண்ண வொண்டமிழொன்பதோடொன்றிவை) இசையையுடைத்தாய் அழகிதாயிருக்கிற இவைபத்தையும். (வல்லாராயுரைப்பார்) அநுஸந்திப்பார்க்கு அடைவுபடச் சொல்லுகையாலுண்டான அருமையாலே வல்லராய் என்கிறார்.

(மதியந்தவழ் விண்ணில் விண்ணவராய் மகிழ்வெய்துவர்) உபரிதநலோகங்களில் போக (भोग) பூமிகளெல்லாம் புக்கு அங்குண்டான போக(भोग)ங்களை புஜிப்பர்கள். (மெய்மைசொல்லில்) அர்த்ததத்வமிருந்தபடி சொல்லில். (வெண்சங்கமித்யாதி) ஐஸ்வர்யஸூசகமான ஸ்ரீபாஞ்சஜந்யத்தைக் கையிலேயுடைய ஸர்வாதிகனே! உனக்கும் இதிலே ஆதரமுண்டாகில் எனக்கு சிஷ்யனாய் உனக்கும் அதிகரிக்க வேண்டும்படியாயிற்று இதினுள்ளீட்டின் கனமிருக்கிறபடி. (குறிப்பாகில்) திருவுள்ளமாகில். (கற்கலாம்) ஸ்வதஸ்ஸர்வஜ்ஞனாய் இறுமாந்திருந்தால் போகாது; என்னோடே அதிகரிக்கில் அறியலாம். ஒரு வஸிஷ்டனோடே ஸாந்தீபநியோடே தாழநின்று அதிகரிக்கக்கடவ அவனுக்குத் திருமங்கையாழ்வாரோடே அதிகரிக்கைத் தட்டுமோ? (கo)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

அரு.—பத்தாம்பாட்டு. (கண்ணமங்கையித்யாதி) "கண்டேன்" என்றதை "கண்டுகொண்டேன்" என்று ஒருகால் சொன்னாப்போலே, ஒன்பதின்கால் சொன்னதால் கரைபுரண்ட காதலாய் தோற்றுகையாலே இப்படியாகைக்கு ஹேதுவென்னென்ன வருளிச்செய்கிறார் (ஒருதேசவிசேஷேத்யாதி). (க) "सदा पश्यन्ति-ஸதாபஶ்யந்தி" என்னக்கடவ வஸ்துவை, இங்கேகண்டால் காதல்விளையக்குறையில்லையென்றுகருத்து. (அநுஸந்திப்பார்க்கு) என்றவநந்தரம் "போக்யதாதிசயத்தாலே" என்றுகூட்டுவது.

நிரதிசயபோக்யபூதனான எம்பெருமானுடைய போக்யதாப்ரகர்ஷத்தைப்ரதிபாதிக்கிற இத்திருமொழிக்கு க்ஷுத்ரமான ஸ்வர்க்காதி போகங்களை ப(फ)லமாகச் சொல்லக்கூடுமோ வென்னும் சங்கையிலே "மெய்மைசொல்லிலித்யாதி அருளிச்செய்கிறார்" என்று திருவுள்ளம்பற்றியருளிச்செய்கிறார் (அர்த்ததத்வமித்யாதி); அர்த்ததத்வம்) புருஷார்த்த தத்வம். லோகத்திலிந்தஸாரத்தை அறியத்தக்காரில்லாமையாலே, எம்பெருமானையே முன்னிட்டு இத்திருமொழியின் பொருளின் போக்ய(भोग्य)தை உனக்கும்கற்கும்படியிருக்குமென்கிற வழியாலே எல்லார்க்குமித்திருமொழியைக்கற்கை பரமபுருஷார்த்தமென்று ப(फ)லம் சொல்லிற்றாயிற்று என்று திருவுள்ளம். ... ... (கo)

ஜீயர் திருவடிகளே சரணம்.

பெரியதிருமொழி ஏழாம்பத்தில் பத்தாந்திருமொழி முற்றிற்று.

(க). ஸாம-உ, ந்தர-கஅ-உ-ச.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

பெரியதிருமொழி எட்டாம்பத்து முதல் திருமொழி

சிலையிலங்குப்ரவேசம்.

கீழ்த்திருமொழியிலே தன்னுடைய படிகளெல்லாம் காட்டிக் கொடுக்க, அநுபவித்து பாஹ்ய ஸம்ஸ்லேஷாபேக்ஷைபிறந்து, அது கிடையாத படியாலே ஒரு பிராட்டி தசையை ப(भ)ஜித்து பிராட்டியுடைய அவஸ்த்தையைப் பார்த்து திருத்தாயார், தன் பெண் பிள்ளையுடைய பாசுரமிருக்கிறபடியாலும், தன்பக்கல் விரக்தியாலும், ஆசைப்பட்ட விஷயத்தில் ப்ரேமத்தாலும், பிரிந்த விஷயத்தின் வைலக்ஷண்யத்துக்கு அநுரூபமாக எதிர்த்தலையை அழிக்க வல்ல குணங்கள் எவ்வளவாகவுடைத்தாயிருக்கும்; அவற்றிலே கால்தாழ்ந்தமைதோற்ற அவனுடைய ஸௌந்தர்யாதிகளையும், சீலாதிகளையும், ஆண்பிள்ளைத்தனத்தையும் 'வாய்வெருவாநின்றாள். என்ஹிதவசநமும் கேட்கிறிலள், தன் ஸ்த்ரீத்வமும் பார்க்கிறிலள், அவன் ஸ்வரூபமும் பார்க்கிறிலள், அதுதானும் பரத்வத்திலாதல் விபவத்திலாதலன்றிக்கே, அவ்விடங்களெல்லாவற்றிலும்சொல்லுகிற ஏற்றங்களெல்லாவற்றையு முடைத்தாயிருக்கிற திருக்கண்ணபுரத்திலே புக்கு அங்கேஎழுந்தருளியிருக்கிற சவரிப்பெருமாளை ஸாக்ஷாத்கரித்து அந்நீர்மையிலே அகப்பட்டாள்போலேயிராநின்றதென்று வினவவந்தவர்களைக் குறித்துச்சொல்லுகிற பாசுரமாயிருக்கிறது.

அரு.—சிலையிலங்குப்ரவேசம்.—கீழ்த் திருமொழியிலே, திருக்கண்ணமங்கையில் எம்பெருமானுடைய போக்ய(भोग्य)தையிலே ஈடுபட்டிருந்தவர் திருக்கண்ணபுரத்தானைப் பிரிந்த பிராட்டிபடியைத் திருத்தாயார்சொல்லுகிறபடியாகப் பேசுகைக்கு ஸங்கதியருளிச்செய்கிறார் (கீழித்யாதி). (கொடுக்க) என்றவநந்தரம், "அப்போது சவரிப்பெருமாள் படியும் கண்டு" என்று கூட்டுவது. (பஜித்து) என்றவநந்தரம் "பிரிந்திருக்கிற" என்றுகூட்டுவது. (ப்ரேமத்தாலும்) என்றவளவுக்கும் (தோற்ற) என்றத்தோடே ஸம்பந்தம்.

சில ஆசார்யர்கள் பக்கலிலே சென்று சில அர்த்தங்களைக் கேட்டு, சரீரபேதத்தளவன்றிக்கே, ஜீவர்களுக்கும் பரஸ்பரபேத (భేద) முண்டென்று அறிந்த ஏகதேசஜ்ஞாநமாத்ரத்திலே "ஸர்வேஶ்வரனுடைய ஜகத் வைசித்ரியிருந்தபடியென்" என்றுகொண்டு ஆஶ்சர்யப்பட்டு எல்லாமறிந்தாரைப்போலே பூர்ணனாய் ஶ்வேதகேதுவானவன் பிதாவினருகே வந்திருக்க, பிதாவும் இவன் வடிவில் வேறுபாடுகண்டு "ஜ்ஞாதவ்யாம்சம் இன்னும் அநேகமுண்டாயிருக்க, எல்லாமறிந்தாரைப்போலேயிராநின்றான், அவற்றையும் இவனுக்கு அறிவிக்கவேணும்" என்று பார்த்து, (௧) [స్తబ్ధోఽసి - ஸ்தப்தோஸி] பரிபூர்ணரைப்போலே எல்லாமறிந்தாயாயிராநின்றாய். [తమాదేశమప్రాక్ష్యః పరిపూర్ణ ఇవ లక్ష్యసే - தமாதேசமப்ராக்ஷ்யஃ பரிபூர்ண இவ லக்ஷ்யஸே] அந்த ஆதேசத்தைக் கேட்டாயோ? ஆதேஶஃ - ப்ரஶாஸநம். (௨) "ప్రశాసితారం సర్వేషామ్ - ப்ரஶாஸிதாரம் ஸர்வேஷாம்" என்று ஒன்றை அறியவே எல்லாவற்றையுமறிந்ததாய், ஸ்வவ்யதிரிக்த ஸமஸ்த வஸ்துக்களையும் ப்ரஶாஸிதாவாய் நியமிக்கக்கடவ ஸர்வேஶ்வரனையும் அறிந்தாயோ நீ என்ன; [కోన్వాదేశః - கோந்வாதேஶஃ] ஆதேஶமாவதென்னென்ன; அவன் வேதத்தில் பூர்வபாக (భాగ) த்திலே சிலவற்றையாதல், ந்யாயாதிகளிலே சிலவற்றையாதல் கேட்டவளவாய், வேதாந்தஜ்ஞாநமின்றிக்கே ஸர்வேஶ்வரனொருவனைக்கொண்டு "குலாலாதிகளுக்கு தண்டசக்ராதிகள்மாத்ரம் நிமித்தமும், ஸஹகாரியுமாமளவே ஈஶ்வரன்" என்கிற நையாயிகபக்ஷத்தினளவன்றிக்கே "உபாதாநமும் தானேயாய், (௩) 'బహుస్యామ్ - பஹு

பிள்ளையின்படி கண்டு இப்படி அநுபவித்தாருண்டோவென்ன; வேதாந்தங்களிலேயுமுண்டென்கிறார் (சிலஆசார்யர்களித்யாதி). (இவன்) என்றது - அருணபௌத்ரனான ஶ்வேதகேதுவை. (பிதா) என்றது - உத்தாலகனை. (ப்ரஶாஸநம்) என்றது - ப்ரக்ருத்யர்த்தமாய், ஶ்ருதியில் "தம்ஆதேசம்" என்ற க(ఘ)ஞந்தமான சப்தம் ப்ரஶாஸநம்பண்ணுமவனைச்சொல்லுமென்று கருத்து. ப்ரமாண பூர்வகம் தாத்பர்யமருளிச் செய்கிறார் (ப்ரஶாஸிதாரமித்யாதி). (வேதாந்தஜ்ஞாநமின்றிக்கே) என்றவநந்தரம், "இருக்க, இவனுக்குப் பிதாவானவன்" என்று சேஷம். (ஸர்வேஶ்வரனொருவனைக் கொண்டு) என்றது - ஶ்ரிய:பதியையுட்கொண்டு என்றபடி. இதுக்கு (என்றான்)

---

(௧) சாந்தோ.௬-௧-௩. (௨) (௩) தை-ஆ-௧.

ஸ்யாம்'என்கிறகார்யமும்ப்ரஹ்மமேயாய், 'சித([illegible]) சித்துக்களிரண்டும் விசேஷணம்'என்றுகொண்டு வேதாந்திகள் போனவழியையும் அறியவேண்டுங்காண்'' என்றான். அங்குஅவனறியாத அம்ஶம் அறிவிப்பிக்கைக்காக பிதாகேட்டான்; இங்கு தன் பெண்பிள்ளையுடைய படிகளாலும், பேச்சாலும் "இவள் ஸர்வாதிகனான ஸர்வேஶ்வரனை மறுபாடுருவ அறிந்தாள்'' என்று அத்தைத்தானறிந்தமை தோற்றச் சொல்லுகிறாள். ராஜேந்த்ர சோழனிலே ஒருப்ராஹ்மணன்மகன், புத்த ([illegible]) ரோடே ஸம்ப்ரதாயமுண்டாய், பூணநூலையும் குடுமியையும் அறுத்துப்பொகட்டான்; கூரத்தாழ்வான் அங்கே நடந்தவளவிலே, ஶிகா([illegible])யஜ்ஞோபவீதங்களைத் தரித்துக்கொண்டுவந்து புகுந்தான்; பிதாவானவன் "கூரத்தாழ்வானைச் சந்தித்தாயோ?'' என்றுகேட்டான்; புறம்புள்ளார், "நீ இதறிந்தபடி எங்ஙனே'' என்றுகேட்க, "ஆழ்வான் ஸந்நிதியில் தமோபி பூதரும் ஸத்வஸ்த([illegible]) ராவர்கள்காண்'' என்கின்றான். .... *

மூ,— சிலையிலங்குபொன்னாழி திண்படைத்
தண்டொண்சங்கமென்கின்றாளால்
மலையிலங்கு தோள்நான்கே மற்ற
வனுக்கெற்றேகாணென்கின்றாளால்
முலையிலங்கு பூம்பயலை முன்போட
அன்போடியிருக்கின்றாளால்
கலையிலங்கு மொழியாளர் கண்ணபுரத்
தம்மானைக் கண்டாள்கொலோ. (க)

பதம்.	உரை.	பதம்.	உரை.
சிலை	(என்பெண்ணானவள்)	திண்	பலிஷ்டமான
	திருச்சார்ங்கம்(என்	படை	திருவாள் (என்றும்)
இலங்கு	ப்ரகாசியாநின்ற [றும்)	தண்டு	க([illegible])தை (என்றும்)
பொன்	ஸ்ப்ருஹணீயமான	ஒண்	அழகியதான
ஆழி	திருவாழி (என்றும்)	சங்கம்	ஶ்ரீபாஞ்சஜந்யம்

என்றத்தோடே அந்வயம். உத்தாலகன் ஶ்வேதகேதுவுக்கு அறிவிக்க வன்றோ ஜ்ஞாநத்தை அநுபவித்தது; இங்கு திருத்தாயார் அறிவிக்கவிறே அநுபவித்தது; இதுத்ருஷ்டாந்தமாகக் கூடுமோ வென்ன வருளிச்செய்கிறார் (அங்கித்யாதி). அநுமித்த மாத்ரதிலே த்ருஷ்டாந்தமாகலாமென்று கருத்து. நேரான த்ருஷ்டாந்தந்தன்னை ஐதிஹ்யமுகேந.வருளிச்செய்கிறார் (ராஜேந்த்ர சோழனித்யாதி). ... ... (*)

என்கின்றாள்	என்றும் சொல்லாநின்றாள்;
ஆல்	கஷ்டம்;
அவனுக்கு	அந்த எம்பெருமானுக்கு
மற்று	மேலும் (ஆபரணமாய்)
மலை	மலைபோல்
இலங்கு	(அபே(த்)த்யமாய்) விளங்காநின்ற
நான்குதோளே	நாலு திருத்தோள்களுமுண்டு
	என்கின்றாளால்;
எற்றே	இதோர் ஆஶ்சர்யமிருந்தபடி,
காண்	(இதை) பாரீர்;
முலை	முலையிலே
இலங்கு	விளங்காநின்ற
பூ	அழகியதான
பயலை	(பிரிவினாலுண்டான) வைவர்ண்யமானது

முன்பு	முன்னே
ஓட	செல்ல (அதன்பின்னே)
அன்பு	அபி(ந்)நிவேசம்
ஓடி	செல்லும்படி
இருக்கின்றாள்	இருக்கின்றாள்;
கலை	சாஸ்த்ரங்கள்
இலங்கு	விளங்காநின்ற
மொழியாளர்	வார்த்தையையுடையவர்கள்(வர்த்திக்கிற)
கண்ணபுரத்து	திருக்கண்ணபுரத்திலெழுந்தருளியிருக்கிற
அம்மானை	ஸ்வாமியான சவரிராஜனை
கண்டாள்கொலோ	கண்ணாரக்கண்டு ஸேவித்தாளோ?
இதில் ''ஆல்''	என்பது - விஷாதத்யோதகம்.

அவ.—முதற்பாட்டு. தன்பெண்பிள்ளை சொல்லக்கேட்ட இது தனக்கு ரஸித்தபடியாலே அப்பாசுரத்தைத்தன் வாயாலேயும் ஒருகால் பேசி அநுபவிக்கப்பார்க்கிறாள்.

வ்யா.— (சிலையிலங்கித்யாதி) திவ்யாயுதங்களைத் தரித்தால் அவை ப்ரதிபக்ஷ நிரஸநத்துக்கு உறுப்பாயிருக்குமதுவே யன்றிக்கே, ஆபரணங்களுக்கும் அழகுக்கும் முதல் விரலாயாயிற்

அரு.—முதற்பாட்டு, (சிலையித்யாதி) ''என்கின்றாள்'' என்கிற வர்த்தமாநத்தாலே, பெண்பிள்ளை சொலவையும், வினவவந்தவர்கள் கேட்க ப்ரஸக்தியுண்டாயிருக்க திருத்தாயார் அநுவதிப்பானென்னென்ன வருளிச்செய்கிறார் (தன்பெண்பிள்ளையித்யாதி).

விரஹதசையில் வாய்வெருவும்போது ஸௌந்தர்யமன்றோ சொல்லவேண்டுவது, திவ்யாயுதங்களைச் சொல்லுவானென்னென்ன வருளிச்செய்கிறார் (திவ்யாயுதங்களையித்யாதி). (முதல் விரல்) முதலெண்ணலாயிருக்கை. ஆயுதத்வாகாரம் - புரஸ்பூர்த்திகரமாயிருக்க, ஆபரணத்வாகாரம் இவளுக்

திருப்பது. திவ்யாயுதங்களை "இவை-ஆபரணங்கள்" என்றறியுந்தனையும் உள்புக்காளாகையாலே "இவை ஆயுதம்" என்றிருக்குமளவன்றிக்கே பூஷணமென்றிராநின்றாள். ஆயுதமென்றிருப்பார்-எதிரிகள்; இங்ஙனேயிருக்கவிறே ப்ரணயிநியாமவள் இத்தைச் சொல்லிவாய் வெருவுகிறது. முன்பு இவனை அநுபவித்தவர்கள் காணவேணுமென்று ஆசைப்படும்போது (௧)"கூராராழி வெண்சங்கேந்திக் கொடியேன்பால்வாராய்" என்றிறே ஆசைப்படுவது.

திவ்யாயுதங்களானவை, காந்தனுடைய இடைச்சரி, கடைச்சரி, அறுகாழிபோலே ஆபரணகோடியிலேயுமாயிராநின்றது. (௨) "ஆழியொடும் பொன்னார் சார்ங்கமுடையவடிகளை யின்னாரென்றறியேன்" என்று வெடிவிளக்கெரித்துக்கொண்டிருந்து அநுபவித்து, காந்தன்போன வநந்தரம் "இன்னாரென்றறியேன்" என்கிறாளிறே. வ்ருத்தகீர்த்தநம் பண்ணுகிறபோது சொல்லுகிறவார்த்தையிறே. "ஆழியொடும் பொன்னார் சார்ங்கம்" என்று அடையாளம் சொல்லச்செய்தேயிறே, "இன்னாரென்றறியேன்" என்று கலங்குகிறது. பிரிந்திருந்து தூதுவிடுகிற விடத்திலும், (௩) "செருவொண் சக்கரம் சங்கு" என்றிறே அடையாளம் சொல்லிவிட்டது. "இன்னாரென்றறி

குத் தோற்றுகைக்கு நியாமகமேதென்ன வருளிச்செய்கிறார் (திவ்யாயுதேத்யாதிவாக்யத்ரயத்தாலே). இவளைப்போலே ஆபரணகோடியாக்கி ஆசைப்பட்டாருண்டோ வென்னவருளிச் செய்கிறார் (முன்பித்யாதி).

எத்தனை சொன்னாலும் கோடித்வய ஸாதாரணமானவற்றைச் சொல்லுவானென்; இடைச்சரி முதலானவை இல்லையோ வென்னவருளிச் செய்கிறார் (திவ்யேத்யாதி). "இடைச்சரிபோலே" என்கைக்கு ப்ரணயிநிகளாய் ஈடுபட்டதுண்டோவென்ன(ஆழியொடுமித்யாதி). ஆசையால் இடைச்சரியைப்போலே ப்ரணியிநிகளையும் ஈடுபடுத்தும்படியான ஆபரணத்வம் இவற்றுக்குண்டென்று கருத்து. திவ்யாயுதச் சேர்த்தியிலே ஈடுபட்டாளென்கைக்கு நியாமகமென்னென்ன வருளிச்செய்கிறார்) வ்ருத்தேத்யாதிவாக்யத்வயத்தாலே). திவ்யாயுதச்சேர்த்தியிலே ஈடுபட்டிருக்கைக்குநியாமகாந்தரமருளிச் செய்கிறார் (பிரிந்தித்யாதி). தூதுவிடும்போதும்இவற்றையே அடையாளமாகச்சொல்லுவானென்னென்னவருளிச்செய்கிறார்(இன்னாரித்யாதி).வ்ருத்தகீர்த்தநதசையில் ஈடுபட்டவளாகையாலே அத்தையே அடையாளமாகச்சொல்லித் தூதுவிட்

---

(௧) தி-வாய்-௯-௯-௧. (௨) தி-மொ-௰-௰-௰. (௩) தி-வாய்-௯-௧-௭.

யேன்'' என்று ஈடுபடுவதுதான் அழகிலேயிறே, அதுக்கு முன்பு திவ்யாயுதங்களாயிருக்குமே. ஸர்வேஸ்வரன்றனக்கு மங்களாசாஸநம் பண்ணப் புகுந்தவர்களும் (க) "சுடராழியும் பல்லாண்டு" "அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டு" என்று திவ்யாயுதங்களுக்கு மங்களாசாஸநம் பண்ணவேண்டியிறேயிருப்பது.

(சிலை) (உ) [శక్రచాపనిభే చాపే గృహీత్వా శత్రునాశనే-ஶக்ரசாபநிபே சாபே க்ருஹீத்வா சத்ருநாசநே] என்று எங்களைத் தோற்பிக்கைக்கும் பரிகரமாயிருந்தது; இந்த்ரதநுஸ்ஸுபோலே எங்களுக்கு தர்ஶநீயமுமாய், எங்களுக்கு ஶத்ருவான வாலியை நிரஸிக்கைக்குப் பரிகரமுமாயிருந்தது. அநுகூலர்க்கு வைத்தகண் வாங்காதே கண்டுகொண்டிருக்க வேண்டும்படியாய், ப்ரதிகூலர் பிடித்த பிடியிலே மண்ணுண்ணும்படி யாயிருக்கும். அதன்றிக்கே, [சாபே] வில்வலிக்கும்படியை நினைத்தால் (ங) "స్మరన్రాఘవబాణానాం వివ్యథే-ஸ்மரந்ராகவபாணாநாம் விவ்யதே" என்னும்படியா யிருக்கும். அழகுக்கு உறுப்பாயிருக்கும் அநுகூலர்க்கு. [ஸ்மரந் ராகவபாணாநாம்] பெருமாள் திருநாமத்தாலெழுத்துவெட்டின அக்ஷரங்களையும், திரு

டாளென்று கருத்து. ஆனால்இவளுக்கு ஒருகாலும் ஆயுதத்வாகாரம் நெஞ்சில் படாதோ வென்ன (அதுக்கித்யாதி). (அதுக்கு) - ஸம்ஶ்லேஷத்துக்கு. அதிசங்கைதீர்க்கைக்காக ஆயுதச் சேர்த்தியைக் காட்டச்செய்தேயும் அதுக்கும் பரியவேண்டும்படி அழகாயிருக்கையாலே, நாயகி ஈடுபடச்சொல்லவேணுமோ என்னும் பா (ஞ) வத்தாலே அருளிச்செய்கிறார் (ஸர்வேஶ்வரனுக்கித்யாதி).

மேலெல்லாம் ஆக்ஷேபஸமாதாநரூபேண ஸமுதாய தாத்பர்ய மருளிச்செய்து ப்ரதிபதம் தாத்பர்யமருளிச்செய்யக் கோலி ஆழி முதலானவையிருக்க, முந்துற "சிலை" என்று ஒரு விசேஷணமிடாமல் சொல்லுமதுக்கு நிரதிசயஸௌந்தர்யத்தில் ஈடுபாடென்று விவக்ஷித்து, இப்படி ஈடுபடுத்தின விடமுண்டோ வென்ன வருளிச் செய்கிறார் (சக்ரசாபேத்யாதி). எடுத்த ப்ரமாணத்துக்குத் தாத்பர்யமருளிச் செய்து வாக்யார்த்தமருளிச் செய்கிறார் (இந்த்ரேத்யாதி). கேவலம் வில்லும் கையுமாயிருக்கையே அழகாயிருக்கும்படியாக ஒரு தாத்பர்யமருளிச் செய்து, வில்லேறிட்டுப் பிடித்தபிடியாகத் தாத்பர்யாந்தர மருளிச்செய்கிறார் (அநுகூலர்க்கித்யாதி). ஸ்மரணமாத்ரத்தாலே வ்யதை(டு) வரக்கூடுமோ, கண்டாலன்றோ வ்யதை வருவது என்ன; ப்ரத்

(க) தி-பல்லா-க. (உ) ரா. (ங) ரா-யு-கூ0-ங.

ர்சரங்களினுடைய ஸந்நிவேசத்தையும் ஸ்மரியா நின்றுகொண்டு. [வ்யதே] அவரொருகால் முன்னேநின்றுபோகச் செய்தேயும் எப்போது மொக்கமுன்னே நிற்கக் கண்டாப்போலே வ்யதி(ஒ)த்தான். [ராக்ஷஸேஸ்வரஃ- வ்யதே] இவன் ஆண்டபரிகரமடங்கலும் வினைக்கு உடலாயிற்றதில்லை; எடுத்தெடுத்துக் குலைக்கிறபோது சுளைப்பிடாமிட்டு அமுக்குகைக்கு உடலாமித்தனை. (சிலை) ஒன்றையிட்டு விசேஷிக்க வேண்டாதே தன்னையே சொல்ல அமைந்திருக்கிற ஸ்ரீ சார்ங்கம்.

(இலங்குபொன்னாழி)மேகத்திலேமின்னினுப்போலே ஸ்யாமளமான திருமேனிக்குப் பரபாக (ஓ˚X)மாய்க்கொண்டு எல்லா ஆயுதங்களுக்கும் தலையாயிருக்கிற புகர்தோற்றும்படியாய் ஸ்ப்ருஹணீயமாயிருக்கிற திருவாழி. (திண்படை) எதிரிகள் வேலிட்டாலும் பிற்காலிக்கவேண்டாதபடி திண்மையையுடைத்தான திருவாள்; அன்றிக்கே எதிரிகள் மேலே அழுந்தப்படச் செய்தேயும் தனக்கொரு விகாரமின்றிக்கே யிருக்கிறவாள். (படை) என்று ஆயுதஸாமாந்யத்தைச்சொல்லக்கடவது; வாளையும் சொல்லக்கடவது. (தண்டு) அத்தோடொருகோவையானகதை. இப்படி ஒருவிசேஷணமிட்டுச் சொல்லவேண்டாதகதை(Xஐ)யென்னுதல்; இதுக்குச்சொன்னவிசேஷணம் தன்னையே சொல்லிற்றாம்படி யிருக்கிற தண்டென்னுதல்.

(ஒண்சங்கம்) (க) “கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ”

யக்ஷஸ்யாநாகாரமான ஸ்மரணம் அது என்றருளிச்செய்கிறார் (அவரொருகாலித்யாதி). (சுளைப்பிடாம்) கம்பளி.

“அத்தோடு” என்றதுக்கு விவரணம் (இதுக்கித்யாதி). இவ்விரண்டுக்கும் திண்மை சொன்னது-திண்மையால் தோற்றின ஆகாரஸௌஷ்டவத்திலே தாத்பர்யமென்று திருவுள்ளம். இங்ஙனன்றாகில் ஆபரணத்வஸமாதிக்குச் சேராதிறே.

சங்குக்கு ஒண்மை - பகவத்ப்ரத்யாஸத்தி விசேஷமென்று விவக்ஷித்து நாலுவகையாக அவற்றை யருளிச்செய்கிறார் (கருப்பூரமென்று துடங்கி, நிற்கவமையுமிறே) என்னுமளவும். அதாவது ரஸஜ்ஞதையும், ஸுகஜீவநமும், ஐஶ்வர்யச்செருக்கும், அந்தரங்கதையும். அதில் ரஸஜ்ஞதையைக் காட்டுகிறார் (கருப்பூரமித்யாதி வாக்யத்வயத்தாலே). (படியிறே) என்றவநந்தரம் “ரஸ

(க) நா-தி-எ-க.

என்று தேசிகராயிருந்துவைத்து, ரஸவிசேஷங்கள் இவர்களுக்கும் தன்னைக் கேட்டறிய வேண்டும்படியாயிருக்கிற ஸ்ரீபாஞ்சஜந்யம். ப்ரணயினிகளிறே வாக(x)ம்ருதத்துக்குதேசிகராயிருப்பார், அவர்களும் தன்னைக்கேட்டறியவேண்டும்படியிறே. (௧) [உண்பது சொல்லிலுலகளந்தான் வாயமுதம் கண்படை கொள்ளில் கடல் வண்ணன்கைத்தலத்தே] ஸ்த்ரீஜாதியாக ஸ்பர்த்தை (ᵒ)பண்ணும்படியாக பக(ϕx)வதநுபவத்தில் வாஸனை பண்ணிப்போரும் ஸ்ரீபாஞ்சஜந்யம். (௨) [மாதவன்றன்வாயமுதம் பொதுவாக வுண்பதனைப் புக்கு நீயுண்டக்கால் சிதையாரோவுன்னோடு] பகவத்ப்ரத்யாஸந்நையான அவள் அங்கீகாரங்கொண்டு ஜீவிக்கவிருக்கிறஸர்வஸாதாரணமான ஜீவநத்தை நீ ஒருவனுமே ஜீவித்தால், அவர்கள் உன்னோடு சீறு பாறென்னாரோ? [செல்வப்பெரும் சங்கே] உன்னுடைய ஐஶ்வர்யச் செருக்கிறே - இங்ஙன் முன்னடி தோற்ற வேண்டாதொழிகிறது. அல்லாத ஆயுதத்துக்கு விரோதிகளிருந்த விடத்தே சென்று நிரஸிக்கவேணும்; இவனுக்குள்ளே அணுகநிற்கவமையுமிறே. (௩) "பூங்கொள் திருமுகத்து மடுத்தூதியசங்கொலியும்" என்று உகப்பாரும் இச்சேர்த்தியைக் காணவேணுமென்றிறே ஆசைப்படுவது.

(என்கின்றாளால்) அப்பாசுரத்தைத் தானொருகால் அநுஸந்திக்கையாகிறது - அதுக்கு அவத்யத்தை விளைவிக்கையிறே என்றாளாயிற்று; தான்சொன்னது அவள் சொன்னதுபோலிராமையாலே.

ஜ்ஞை" என்றுசேஷம். ஸௌகஜீவநந்தன்னை யருளிச் செய்கிறார் (உண்பதித்யாதி). ஐஶ்வர்யச் செருக்கைக்காட்டுகிறார் (மாதவனித்யாதி). அந்தரங்கதையை உபபாதிக்கிறார் (அல்லாதவித்யாதி). இந்த ஒண்மை அநுகூலர்க்கு ஆசைப்படும்படி யிருக்குமென்னுமத்தை ஸப்ரமாணமாக வருளிச்செய்கிறார் (பூங்கொளித்யாதி).

"ஒண்சங்கு" என்று வாய்வெருவினாளென்னலாயிருக்க "என்கிறாள்" என்று - பெண்பிள்ளை சொன்னாளென்று சொல்லுகைக்கு உட்கருத்தருளிச் செய்கிறார் (அப்பாசுரத்தையித்யாதி). தான் சொன்னது அவத்யமாவானென்னென்ன வருளிச்செய்கிறார்(தானித்யாதி). அவளுடைய பா(ஶு)வபந்தம்தனக்கில்லையென்று கருத்து. "என்றாள்" என்னாதே "என்கின்றாள்" என்றவர்த்த

---

(௧) நா-தி-௭-௮. (௨) நா-தி-௭-௧. (௩) நா-தி-௯-௧.

ஒருகால் கண்டுவிட்டால் பின்னை ப்ராதிகூல்யத்தினெல்லையிலே நின்றாரோடு, ஆநுகூல்யத்தினெல்லையிலே நின்றாரோடு வாசியறத் துடிக்கும்படியாயிற்றிருப்பது. (என்கின்றாளால்) தலைமகளுக்கு திவ்யாயுதங்கள் ஆகர்ஷகமாயிருக்கிறாப்போலேயாயிற்று இவளுக்கு மிருக்கிறபடி. இவள் சொல்லுகிறதுதன்னையே தானும் சொல்லச்செய்தே, இவள் சொல்லக் கேட்டாப்போலிருக்கிறதில்லையாயிற்றுத் திருத்தாயார்க்கு. "(௧) [నాఽనృగ్వేదవినీతస్య- நாந்ருக்வேதவிநீதஸ்ய] அநுஷ்டேயார்த்தப்ரகாசகமான ருக்வேதம் சிக்ஷிதனானவனுக்கல்லது இப்படி வார்த்தைசொல்லவொண்ணாது. [నాఽయజుర్వేదధారిణః- நாயஜுர்வேததாரிண:] யஜுர்வேதம் பாட(ఠ)தாரணந்தானே அரிது; அத்தைத்தரித்தவனுக்கல்லது இவ்வார்த்தைசொல்லவொண்ணாது. [నాఽసామవేదవిదుషః-நாஸாமவேதவிதுஷ:] ஸாமவேதம் கா(గా)நவிசேஷங்களறிய அரிது, அதறிந்தவனுக்கல்லது இப்படிவார்த்தை சொல்லமுடியாது. [శక్యమేవం ప్రభాషితుమ్ -சக்யமேவம் ப்ரபாஷிதும்] இத்தை எல்லாவற்றையும் அதிகரித்தவனுக்கல்லது நம்முன்னே இப்படி வார்த்தைசொல்லலாமோ" என்றாரிறே பெருமாள். (என்கின்றாளால்) அடிதோறும் உளுக்கினமை தோற்றியிருக்கிறது. ஆருக்கு நிலமானதிலே இவள் வார்த்தை சொல்லுகிறது. (சிலையித்யாதி)(என்கின்றாளால்) பைசல்கைசு, நோய்முக்கைசு என்னுமாபோலே இவளை பாதி(బాధ)க்கைக்கு இதெல்லாம் வேணுமோ?.

இவையேயோ இவனுக்காபரணம், மற்றுமுண்டோவென்ன; (மலையிலங்குதோள்நான்கே மற்றவனுக்கு) மற்றுஅவனுக்காபரணம்

மாந தாத்பர்யமருளிச் செய்கிறார் (ஒருகாலித்யாதி). "ஆல்" என்றதுக்கு உட்கருத்தருளிச் செய்கிறார் (தலைமகளுக்கித்யாதி). இப்படி சொல்லி ஈடுபட்டாருண்டோவென்ன வருளிச்செய்கிறார் (நாந்ருக்வேதேத்யாதி). மேலே "என்கின்றாள்" என்றதே அமையாதோ, இங்கும் "என்கின்றாள்" என்பானென்னென்ன வருளிச்செய்கிறார் (அடிதோறுமித்யாதி). உளுக்கினபடி தன்னை விவரிக்கிறார் (ஆருக்கித்யாதி). நித்யஸூரிகளுக்கு விஷயமானவற்றை இவள் சொல்லுவதே என்றீடுபாடு. "ஆல்" என்றது - விஷாதத்திலேயாக்கி வெறுப்பாகத் தாத்பர்யாந்தரம் (பைசலித்யாதி). (பைசல்) குட்டி. (கைசு) சிறுங்கை. (முக்கைசு) மூன்றுசிறுங்கை.

---

(௧) ரா-கி-௩-௨௮.

ஆபரணத்துக்கு ஆபரணமாயிருப்பன தோள் நாலுமென்று நின்றாள்; திவ்யாயுதங்களை அநுஸந்தித்தஇது, அவ்வாயுதங்களின் வழியே அவற்றைத் தரித்திருக்கும் திருத்தோள்களளவும் கொண்டு போய் மூட்டிற்று. புறம்போரிடத்திலும் போகவேண்டாதபடியிறே விஷயந்தானிருப்பது. (க) [𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌷𑌣𑌭𑍂𑌷𑌾𑌰𑍍𑌹𑌾𑌃- ஸர்வபூஷண பூஷார்ஹா:] என்று ஆபரணங்களுக்கும் ஆபரணமாகைக்கு அர்ஹமாயிறே தோள்தானிருப்பது. ஆயுதங்களை ஆபரணமாகச் சொல்லிற்றிறே. ஆயுதங்கள் அபாஶ்ரயமுமாய், ஆகர்ஷகமு மாயிருக்குமா போலே தோள்களும் அபாஶ்ரயங்களுமாய் ஆகர்ஷகமுமாயிருக்கிறபடி. (மலையிலங்கு) மலைபோலே விளங்கா நிற்பதாய் கல்பகதருபணைத்தாப்போலேயிருப்பன நாலு திருத்தோள்களென்றுநின்றாள். மலைபோலே எதிரிகளால் பேதி (𑌭𑍇𑌦𑌿) க்கவொண்ணாதபடியிருக்கை. (மற்றவனுக்கு) ஆயுதங்களே போந்திருக்கச்செய்தே அழகுக்கு வேண்டுவது, அதுக்குமேலே நாலுதிருத்தோளையுமுடையனென்று நின்றாள். ‘‘மற்று’’ என்பது துல்யவிகல்பங்களையிறே.

கீழ் திவ்யாபரணங்களைச் சொல்லி, இங்கே ‘‘மற்று’’ என்கையாலே தோள்களும் ஆபரணமாயிருக்கவேணுமிறே. திவ்யாத்மகுணங்களிலும் திவ்யாத்மஸ்வரூபத்திலுங்காட்டில் அநுபா(𑌭)வ்யமா

மற்றும் ஆபரணங்களைச் சொல்லவேண்டினால் ஹாராதிகளைச் சொல்லாமை தோள்களைச் சொல்லுவானென்னென்ன வருளிச் செய்கிறார் (திவ்யேத்யாதி). அவை மூட்டிற்றென்பானென், தானே போய் அநுஸந்திக்கிறானென்ன வொண்ணாதோ வென்ன (புறம்பித்யாதி). ஆபரணங்களுக்கும் ஆபரணங்களானபடி யெங்ஙனே யென்ன (ஸர்வேத்யாதி). எடுத்த ப்ரமாணத்தில் பூஷணபதம் ஆயுதங்களுக்கு வாசகமன்றே யென்ன; கீழே ஆபரணத்வம் சொல்லப்பட்டதிறே யென்கிறார் (ஆயுதங்களையித்யாதி). ஆயுதகோடிகடிதத்வமும் ஆபரண கோடிகடிதத்வமும் இரண்டும் அவற்றுக்குண்டானவோபாதி, திருத்தோள்களுக்கும் இரண்டாகாரமுண்டோ ஆபரண கோடியாக ஒதுக்குகைக்கென்ன (ஆயுதங்களித்யாதி). அபாஶ்ரயமுமாய், விரோதிநிரஸநமுகத்தாலேபுகலாயிருக்கை. சப்தார்த்தம் (மலைபோலேயித்யாதி). ‘‘அவனுக்கு’’ என்று விசேஷித்ததுக்குத் தாத்பர்யம் (ஆயுதங்களேயித்யாதி).

‘‘நான்கே’’ என்ற அவதாரணத்துக்குத் தாத்பர்யம்(திவ்யாத்ம குணங்

(க) ரா-கிஷ்கி-ங-கச.

யிருப்பது திவ்யவிக்ரஹமிறே. ஶுபாஶ்ரய ப்ரகரணங்களில் த்யேயமாகச் சொல்லுகிறதும் அது தன்னையிறே. திவ்யவிக்ரஹத்துக்கும், திவ்யாத்ம குணங்களுக்குமுள்ளே ஒன்றை உபாஸ்யமென்று சொல்லிற்று. இத்தைவிட்டு அவ்வருகேபோகச் சொல்லுகிறதன்று; அவ்வருகேயும் அநுபாவ்யமுண்டென்கைக்காகச் சொன்னதத்தனை. அங்ஙனன்றாகில் (க) "𑌸𑌦𑌾 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 - ஸதாபஶ்யந்தி" என்னக்கூடாதிறே. தந்தாமுடைய தபஸ்ஸாலே க்ஷீணபாபரான ருஷிகளைப் போலன்றிக்கே, பகவத்ப்ரஸாதமடியாக ஜ்ஞாநம் பிறந்த ஆழ்வார்கள் திவ்யவிக்ரஹமல்லதறியார்களிறே. நிலாத்துக்குறிப்பகவர், பட்டரை ஶ்ரீவைகுண்டத்திலே சதுர்ப்புஜனாயிருக்கைக்கு ப்ரமாணமென்னென்றுகேட்க; அவர்சொல்லி வாய்மாறுவதற்குமுன்பே (உ) "𑌤𑌮𑌸𑌃 𑌪𑌰𑌮𑍋 𑌧𑌾𑌤𑌾 𑌶𑌙𑍍𑌖𑌚𑌕𑍍𑌰𑌗𑌦𑌾𑌧𑌰𑌃 - தமஸஃ பரமோதாதா சங்கசக்ரகதாதரஃ" என்றுநின்றதேயென்ன; போக்கடி காணாமையாலே கோபத்தாலே கண்சிவக்க, ப்ரமாணகதிகள் இவையாயிருந்தது, பொறுக்குமத்தனையிறே என்றருளிச்செய்தார்.

(எற்றே) என்கிறது- "மலையிலங்கு தோள்நான்கே" என்று, "இருந்தபடியென்" என்று தலைமகள்தான் ஆஶ்சர்யப்படுகிறாளாகவுமாம்; அதிமாத்ர ப்ராவண்யமாகாதென்று மீட்கப் பார்த்தவிடத்திலும் மீட்கவொண்ணாதபடி "இவ்விஷயத்திலே அவகாஹித்தபடியென்" என்று திருத்தாயார் ஆஶ்சர்யப்படுகிறாளாகவுமாம். என்னே காண் என்கிறாள் - இதோர் ஆஶ்சர்யமிருந்தபடியென்; நீங்களுமித்தைப் பாரிகொளென்று நின்றாள். (காணென்கின்றாளால்) நான் அதிமாத்ர ப்ராவண்யமாகாதென்ன, மூத்தார்க்குமூத்து, என்னுடைய ஹிதத்துக்காக இப்பேற்றை இழக்கிறதென்னென்று விலக்க

களிலுமித்யாதி-என்றருளிச்செய்தாரித்யந்தம்).

"எற்றேகாண்" என்றதுக்கு இரண்டர்த்தமருளிச் செய்கிறார் (எற்றேயென்கிறதித்யாதி). திருத்தாயார் ஆஶ்சர்யப்படுகிறபோது "என்கின்றாள்" என்றதுக்குப்பின்பு "எற்றேகாண்" என்றது அநுஸந்திப்பது. சப்தார்த்தம் (என்னேகாணித்யாதி). "காண்" என்றது- உபதேசபரமாகத் தாத்பர்யம் (நீங்களுமித்யாதி). "காண்" என்றது ஜாத்யபிப்ராயமாக வருளிச்செய்து, தாயின் விஷயமான உபதேசமாகக்கருத்து (நானித்யாதி). இங்கே "ஆல்"

(க) ஸாம-உத்தர-கஅ-உச. (உ) ரா-யு-ககசு-கடு.

ப்பார்க்கிற என்னையும் தன்படியாக்கப் பாராநின்றாள். நான் தன்னை என்படியாக்கநினைக்க, தான் என்னைத் தன்படியாக்கப் பாராநின்றாள். இவ்விஷயத்தில் ப்ராவண்யந்தான், திருத்தாயார்க்கு அபிமதமாயிருக்கச்செய்தே அதிமாத்ரப்ராவண்யமாகாதென்று நிஷேதிக்கிறாளித்தனையிறே. (என்கின்றாளால்) இத்திவ்யாயுதங்களைச் சொன்னபோதுபோலன்றாய்த்துத் திருத்தோள்களைச் சொன்னபோதிருக்கிறபடி. இவளுக்கு திவ்யாயுதங்கள் அழகுக்கு உடலாமளவேயிறே. அணைக்கைக்குப் பரிகரமிறே தோள்கள். (என்கின்றாளால்) நாமும் எல்லாமிவற்றைச் சொல்லுகிறோமிறே, இவள் சொல்லுகிறபோதிருக்கிறபடி பாரிகோள். நாமும்எல்லாம் சொல்லிக் குறியழியாதே இராநின்றோம்; திருத்தாயாரை, இவள் "காண்"என்னப்பெறுமோ என்ன; பெறும்; (௧)"குடத்தில் விளக்கே போல்கொம்பனார்காமம்புறப்படா, புறப்படில் ஆபுகுமாலையணிமலைமேல்பிடியேபோல நாடறியக்கவ்வைதரும்" இவள்அறிவுக்கு முன்பு மறைக்குமத்தனைபோக்கி, அறிந்தபின்பு மறைக்கைக் களவாமிறே.

(முலையிலங்கித்யாதி) இதர விஷயத்தில் ஸ்நேஹிக்கும் க்ரமமில்லையாகாதே பக(भग)வத்விஷயத்தில் தான்காட்டக்காணுமவர்களுக்கும், கதிர்பெருக்கி ஆர்ஜித்து கர்மத்தாலே க்ஷீணபாபராய் ஸ்நே

என்றதுக்கு பா(भा)வம்(நான் தன்னையித்யாதி).இத்தால் ஆஶ்சர்யத்தில் தாத்பர்யம் சொல்லிற்றாயிற்று. ஹர்ஷத்தில்தானே "ஆல்" என்கிறாளென்று விவக்ஷித்தருளிச் செய்கிறார் (இவ்விஷயத்திலித்யாதி). சிலையிலங்கித்யாதியில் ஓரடைவுபடச் சொன்னவள் இங்கே அவனுக்கு "மற்று மலையிலங்கு தோள் நான்கே" என்னாமல் அடைவுகெடக் குளிரச்சொன்னபடியைத்திருவுள்ளம்பற்றி யருளிச் செய்கிறார் (இத்திவ்யாயுதங்களை யித்யாதி). இப்படி அடைவுகெடச் சொல்லுகைக்கு மூலமென்னென்ன (இவளுக்கித்யாதி). "காண்" என்றது - திருத்தாயார் உபதேசிக்கிறதாகக்கருதி, "என்கின்றாள்" என்றதுக்குத் தாத்பர்யம் (நாமுமெல்லாமித்யாதி). "காண்" என்று திருத்தாயார்க்குப் பெண்பிள்ளை சொல்லுகை - காம்பீர்யஹாநியன்றோவென்று சங்கித்துப் பரிஹரிக்கிறார் (திருத்தாயாரையித்யாதி).

அன்பின்கார்யமான வைவர்ண்யம் முன்பாகவும், அன்பைப் பின்பாகவும் அருளிச்செய்தது - விஷயவைலக்ஷண்யத்தாலும், ஹேதுவிசேஷத்தாலும் கூடுமென்கிறார் (இதரேத்யாதி வாக்யத்வயத்தாலே). (கதிர்பெருக்கி)

---

(௧)

ஹித்தவர்களுக்கும் வாசியிருக்கும்படி இதுவாயிற்று. அவர்களுக்கு அப்படியால் வந்த ஸ்நேஹம் முற்பட்டிறேயிருப்பது. அதின்கார்யமிறே பயலைமை; அங்ஙனன்றியே, இது பயலைமை முற்பட்டு ஸ்நேஹம் பிற்பட்டிருக்கிறதாயிற்று. முலையிலே விளங்காநிற்பதாய், பூத்தபயலைமை யென்னவுமாம். "பீர்க்குபூத்தது" என்று-வைவர்ண்யத்தைச் சொல்லக்கடவதிறே. பீர்க்கம் பூவையிட்டுத் தமிழர் சொல்லுவர்களிறே. அன்றிக்கே " பூ " என்றுகொண்டு அழகாய், முலையிலே ·விளங்காநின்றுள்ள பயலைமையென்று முலைக்காபரணமான வைவர்ண்யமென்றுமாம். அதாவது-யௌவநத்தில் முத்தாஹாரம் துடக்கமானவை அல்லவாயிற்று; முலைக்காபரணம்வைவர்ண்யமாயிற்று. அபிமதனைப்பிரிந்து வைவர்ண்யத்தைத் தரியாவாகில் மரமுலையோபாதியாமித்தனையிறே. பிரிந்து வைவர்ண்யமாகாதேயிருந்தாளாகில் ஆணுக்கும் பெண்ணுக்கும் வாசியில்லையாம்; ஆகையால் இவளுடைய ப்ரணயத்வத்துக்கு நமஸ்காரமிறே.

(பயலைமுன்போடவன்போடியிருக்கின்றாளால்) நாட்டார்படியன்றிக்கே இராநின்றது இவள்படி. அன்புபட்டவிஷயத்தினுடைய அலாபத்தாலே பயலைமையுண்டாகக் கடவதாயிருக்க, பயலை வழி காட்ட, அத்தைப் பின் செல்லா நின்றது அன்பு. கார்யத்துக்குப் பூர்வவ்ருத்தியாயிருக்குமதிறே-காரணம்; இது அப்படிபுத்திபண்ணுகைக்கு அவகாசம் வைக்கிறதில்லை. இங்ஙனே சொல்லுவானென்; ஒருவிஷயத்திலே அன்புபட்டு அதினுடைய அலாபத்தாலே வருமதொன்றன்றோ பயலைமையென்னில்; அப்படியே இது திருத்தாயார்

என்றவநந்தரம் "ஶாஸ்த்ரஜந்ய ஜ்ஞாநத்தை" என்றுசேஷம். தாத்பர்யமருளிச்செய்து சப்தார்த்தம் காட்டுகிறார் (முலையிலேயித்யாதி). வைவர்ண்யம் முத்தாஹாரத்திலும் ஆகர்ஷகமோ ஆபரணமென்கைக்கென்ன (அபிமதனையித்யாதி). நாயகனுக்கு ஸ்வவிஷயப்ரீதி ஸூசகமாகையால்ஆகர்ஷகமென்று கருத்து. (மரமுலை) ஆண் பெண் வேஷத்திலே கட்டினமரமுலை.

"ஆல்" என்று ஆஶ்சர்யப்படுகைக்குபாவம்(நாட்டாரித்யாதி). கீழ்வாக்யவிவரணம் (அன்பித்யாதி). இது ஆஶ்சர்யமானவழியென்னென்ன (கார்யத்துக்கித்யாதி). ஶ்ரோதாக்களுடைய சங்காநுவாத பூர்வகம் வாஸ்தவாகாரத்தைப்பற்ற பரிஹாரமருளிச் செய்கிறார் (இங்ஙனேயித்யாதி - க்ரமத்திலே சொல்லுகிறாளென்னுமளவும்). வைவர்ண்யமுகத்தாலே அன்பு-முன்பு முண்

வார்த்தையாகையாலே, தான்கண்டநுபவித்தவடைவே சொல்லுகிறாள். அன்பு முற்பட்டு இது பிற்பட்டாலும் முற்படப்ரதிபத்திக்கு விஷயமாவது இதுவிறே. இவளுடம்பில் வைவர்ண்யமும் பேச்சும் கொண்டிறே இவள் விரஹத்தை நிஸ்சயிப்பது; இவளுக்கு முற்படப்ரதிபத்திக்கு விஷயம்இதுவாகையாலே தான்ப்ரதிபத்திபண்ணின க்ரமத்திலே சொல்லுகிறாள். விஷயவைலக்ஷண்யத்தாலே க்ரம விபர்யாஸமும் பிறக்குமிறே. (முலையிலங்கு பூம்பயலை) பர்வதத்திலும் எறும்போலேகாணும் வெள்ளம். அதாகிறது - இம்முலை கண்டார் வைவர்ண்யமடையக்கடவற்றை இதுதானடைந்ததென்கை. பிரிந்து நோவுபடும் லக்ஷணமிதுக்கில்லையென்கை.

நீ இதறிந்தபடி யென்னென்னில் (கலையிலங்கு மொழியாளரித்யாதி). இவ்வைவர்ண்யந்தான் ஹேத்வந்தரக்ருதமென்று புத்தி பண்ணவுமாமிறே; அதுசெய்யவொண்ணாதபடி இவள் இவ்விஷயத்

டென்று அநுமாநவிதயா அறியலாமானால் ஆஸ்சர்யப் படுவானென்னென்னில் அருளிச் செய்கிறார் (விஷயேத்யாதி). லோகத்தில் நாயக விஷயத்தில் நாயகிக்குச் சிலநாள் அன்புபிறந்து அது க்ரமேண முற்றினபின்பு வைவர்ண்யம் பிறக்கும் க்ரமம். விபர்யஸ்தமாய் பகவத்விஷயத்திலே கண்டவுடனே அதிமாத்ரப்ராவண்யமும், பிரிந்தவுடனே வைவர்ண்யமும் பிறக்கையாலே ஆஸ்சர்யப் படுகிறாளென்று கருத்து. "மெய்யிலங்கு" என்னவேண்டியிருக்க "முலை" என்று எகதேசத்தைச்சொன்னால் இவள் ப்ராவண்யத்துக்குக் குறை வாராதோவென்னில் (பர்வதேத்யாதி). அயோக்யஸ்தலத்திலும் உண்டாயிற்றென்கிறாரென்று கருத்து. இது அயோக்ய ஸ்தலமாவானென்னென்ன (அதாகிறதித்யாதி). அவனே வைவர்ண்யத்துக்கு யோக்யனாகைக்கு இவற்றுக்கேற்றமென்னென்ன(பிரிந்தித்யாதி). (லக்ஷணம்)வைலக்ஷண்யத்தில்குறை. (இவள்பிரிய, யோக்யதையில்லாத இவையும்வைவர்ண்யமடைந்தன) என்கையாலே இவள் ப்ராவண்யத்துக்குக் குறை தோற்றாதென்று கருத்து.

நீ இவளுடைய வைவர்ண்யத்தை முந்துற அறியாதவள், இவள் முலையில் வைவர்ண்யத்தைக் கண்டபடி யெங்ஙனே, அவள் மறைத்துக்கொள்ளாளோ? என்று வினவவந்தவருடைய சங்கையை அநுவதிக்கிறார் (நீ இத்யாதி). இதுக்கு உத்தரம் (இவ்வைவர்ண்யந்தானித்யாதி). பேச்சைக் கொண்டுகண்டாலும் அன்பின் கார்யமாகத் தோற்றாமையாலே எதோவென்

தில் அகப்பட்டமையை நிஶ்சயித்துத் தருகிறது - இவள்பாசுரமாயிற்று. அதாகிறது - அவனுடைய திவ்யாயுதங்களின்பேரையிறே சொல்லுகிறது. (கலையிலங்குமொழியாளர்) அவ்வூரிலுள்ளார் லோகயாத்ரைக்கு உறுப்பாக "உண்ண உடுக்க" என்று சொல்லும் வார்த்தையிலே "இன்னதனைஶாஸ்த்ரம் கற்றார்கள்" என்று கற்றஶாஸ்த்ரப்பரப்படங்கலும் தெரியும்படி வரிக்கொள்ளலாயிருக்கும். " கலை " என்கிறது- வித்யாஸ்த்தலங்களையடைய. மொழியிலே கலையிலங்கா நிற்கும். கலையிலங்கும்படியான பேச்சையுடையராயிருப்பர்கள்.

கண்ணுக்குத் தோற்றாததும் தங்கள் வார்த்தையிலே அறியும்படி யிருக்குமவர்கள் நெடுநாள்பெற்று வளர்த்த என்னோட்டை ஸம்பந்தமற்று, அவ்வூரில் ஸம்பந்தம் தோற்றியிராநின்றது இவள் வார்த்தையிருக்கிறபடி. (க) [ద్రష్టుంశక్యమయోధ్యాయాం నావిద్వాన్నచనాస్తికః। సర్వేసరాశ్చ నార్యశ్చ.ధర్మశీలాస్సుసంయతాః - த்ரஷ்டும் ஶக்யமயோத்த்யாயாம் நாவித்வாந் நசநாஸ்திகஃ। ஸர்வேநராஶ்ச நார்யஶ்ச தர்மஶீலாஸ்ஸுஸம்யதாஃ] அறுபதினாயிரம்ஆண்டு வன்னியமறுத்து நன்மைகளையுண்டாக்கிப் போந்த சக்ரவர்த்திக்கும் இரண்டு பொருளுண்டாக்கப் போச்சுதில்லை. ஓர் அவித்வானையாதல், வைதிகமான அர்த்தங்களை இல்லையென்பானொரு நாஸ்திகனையாதலுண்டாக்கப் போச்சுதில்லை. அப்படை வீட்டிலுள்ளார் "ராஜபுத்ரர்க

திருக்கலாமே "அன்போடியிருக்கின்றாள்" என்றறிந்தபடி யென்னென்ன; இதுக்கு மூலமென்னென்றாராய்ந்து வைவர்ண்யத்தையுங்கண்டு, இரண்டாலுமாகக் கண்ணமங்கைக்கு ஸந்நிஹிதமான திருக்கண்ணபுரத்தானையும் கண்டாளாக அறிந்தேனென்கிறாளென்று கருத்து. கலையாளரென்னாமல், இப்படி "இலங்கு மொழியாளர்" என்றதுக்குக் கருத்தருளிச்செய்கிறார் (அவ்ஆரிவித்யாதி). (வரிக்கொள்ளுகை) வரியடைவே எண்ணிக்கொள்ளுகை.

இப்போது திருக்கண்ணபுரத்தை இப்படி விசேஷித்ததுக்குத் தாத்பர்யம் (கண்ணுக்கித்யாதி வாக்யசதுஷ்டயத்தாலே). (இருக்கிறபடி) யென்றது - இருக்கிறபடியாலே யென்றபடி. அவர்கள்பேச்சைப்போலே இவள் பேச்சும் இதர விஷய வைராக்ய பூர்வகம் ததீயப்ராவண்யத்தை ஸூசிப்பிக்கிறதென்றுகருத்து.

(க) ரா-பா-சு-அ.

ளாரேனுமொருவர் முடி சூடவமையாதோ'' என்றிருக்குமவர்களல்லர், பெருமாளே முடிசூடாவிடில் (௧) [ఇహైవ నిధనం యామో మహాప్రస్థానమేవవా। రామేణ రహితానాఞ్చ కిమర్థం జీవితం హినః- இஹைவநிதநம்யாமோ மஹாப்ரஸ்த்தாநமேவவா। ராமேணரஹிதாநாஞ்ச கிமர்த்தம் ஜீவிதம்ஹிந:] என்று பெருமாள் அபிஷேகம் பண்ணாத படைவீட்டிலிருப்பதில்லை, விழுந்தவிடமே சுடுகாடாகப்போகவமையும் என்றிருப்பர் புருஷர்கள்; ஸ்த்ரீகளும் (௨) [రామమేవానుగచ్ఛధ్వమశ్రుతిం వాపిగచ్ఛత - ராமமேவாநுகச்சத்த்வமஶ்ருதிம் வாபிகச்சத] என்று பெருமாள் வழிமாறிப் போனாரென்று திறக்கவழைத்த பர்த்தாக்கள்முகம் பிளக்கத்தள்ளிக் கதவடைத்துக்கொள்ளுவர்கள். [ధర్మశీలాః- தர்மஶீலா:] ராமாநுவ்ருத்தியே பரமதர்ம மென்றிருக்குமவர்களிறே. [సుసంయతాః- ஸுஸம்யதா:] ஸ்வப்ரயோஜநத்திலே நெஞ்சு செல்லாதவர்களாயிற்று. அப்படியிருக்குமவர்களாயிற்று இவ்வூரிலுள்ளாரும்.

(கண்ணபுரத்தம்மானைக்கண்டாள் கொலோ) ஶ்ரீவைகுண்ட்டத்தில் ஸர்வஸ்மாத்பரனாயிருக்கும்; விபவங்களில் மநுஷ்யத்வே பரத்வமாயிருக்கும்; அங்ஙனன்றிக்கே அவதாரங்களிற்காட்டில் அர்ச்சாவதாரத்தில்பரத்வமுமகப்படஅறிந்தாளென்றுதோற்றியிராநின்றது. ஶ்ரீ வைகுண்ட்டத்தில் நித்யஸூரிகளுக்கு அநுபவிக்கக்கொடுத்துக்கொண்டிருக்குமதாயிருக்கும், விபவங்கள் காதாசித்கமாக ஒரு விதுரசபர்யாதிகளுக்குக் கொடுத்து விடுமதாயிருக்கும். பிற்பாடர்க்கும்இழக்கவேண்டாதபடி (௩)“பின்னானார் வணங்கும்சோதி திருமூழிக்களம்'' என்று எல்லார்க்கும் அநுபவிக்கக் கொடுத்துக்கொண்டிருக்கிறவிடமிறே அர்ச்சாவதாரம். ஒருவஸ்துவுக்கு குணத்தாலே உத்கர்ஷமானால் அவ்வேற்றமுள்ளதிங்கேயிறே. இங்கே உபாஸித்து அது விதேயமானவாறே அவ்வருகே ஒன்றை உபாஸித்து, அது விதேயமானவாறே அதுக்கு மவ்வருகே ஒன்றைஉபாஸி

“அம்மானை'' என்று அர்ச்சாவதாரே பரத்வம்தோற்றச் சொன்னதுக்குக் கருத்து (ஶ்ரீவைகுண்ட்டத்திலித்யாதி). குணபூர்த்தியுள்ளதிங்கேயாகில் ஶ்ரீவைகுண்ட்ட நாதனை ப்ராப்யனாகச் சொல்லுவானென்னென்ன (இங்கேயித்யாதி வாக்யத்வயத்தாலே). அர்ச்சாவதாரத்தில்குணபௌஷ்கல்யமெல்

---

(௧) ரா-அ-௪௭-௭. (௨) ரா-அ-௪௮-௨௭. (௩) திருநெ-௧௦.

த்து, அதுக்கவ்வருகே போகக்கடவதாக இங்ஙனேயுமொரு க்ரமம் சொல்லுவது உபாஸகர்க்கு; முதலிலே ஸர்வப(ஃ)ரந்யாஸம் பண்ணினவர்களுக்கு இங்கே எல்லாம் புஷ்கலமாயிருக்குமிறே. கடலருகே போகாநின்றால், “கண்ணால் கண்டவளவேயுள்ளது”என்றிருக்குமவனுக்கு அவ்வளவேயன்றிறேயுள்ளது; அப்படி இவன் ப்ரதிபத்தியில் குறைபோக்கி “இங்கே எல்லாம் குறைவற்றிருக்கும்” என்று நினைத்திருக்குமவனுக்கு புஷ்கலமாயிருக்குமிறே. “நாம் இவ்விசையணித்தாக உகந்தருளப் பண்ணினவிடம்” என்று இவன் குறையநினைக்கில் இழக்குமித்தனை. உகந்தருளின விடத்திலே உபாதாநத்ரவ்யத்தை நிரூபித்தானாகில் மாத்ருயோநி பரீக்ஷையோடொக்குமிறே.

(கண்ணபுரத்தம்மானை) உகந்தருளின தேசத்திலுண்டான ஏற்றமெல்லாம் தோற்றும்படி நிற்கிற ஸ்வாமியாயிற்று. (கண்டாள்கொலோ) ஶ்ராவணஜ்ஞாநமென்றுதோற்றியிருக்கிறதில்லை. கண்டவர்களுக்குத் தெரியுமாபோலே தெரியுமோ இவள் வார்த்தை கேட்டறிந்தநமக்கு. (கண்டாள்கொலோ) நெடுநாள் நோன்பு நோற்றுப்பெற்றதாயான முன்னே அறிந்த அம்சம் மறைக்கக்கடவதாயிருக்க, என்முன்னேஇப்படிவெளியிட்டுச்சொல்லும்போது அவ்விஷயத்திலே இப்படிஸக்ருத்தர்ஶந முண்டாயிற்றதாக வேணும். ஒருகால் கண்டால் பூர்வவாஸனையும் மறக்கும்படியான வைலக்ஷண்யமுள்ளது அவ்விஷயத்துக்கேயிறே. கலையிலங்கும்படியான பேச்சையுடையராயிருப்பார் அவ்வூரிலுள்ளார்; அப்படியே இவளுடைய பேச்சைக்கொண்டு இவள்திருக்கண்ணபுரத்திலேபுக்கு சவரிப்பெருமாளை ஸாக்ஷாத்கரித்தாளாகாதே என்று சொல்லலாயிராநின்றது. அகவாயிலோட்டமெல்லாம் வார்த்தையிலே தெரியுமிறே. திருத்தாயாராயும்பெண்பிள்ளையாயும்அநுபவிக்கிறார் ஆழ்வார்தாமேயிறே.

லாருக்கும் தோற்றாமைக்கு நியாமகம் (நாமித்யாதி). குறையநினைத்தால் இழக்கைக்கு உடலாவானென்னென்ன (உகந்தருளின வித்யாதி).

“கொலோ” என்று ஸம்ஶயிப்பானென்னென்ன (நெடுநாளித்யாதி). “அநுபவித்தாளோ” என்னாதே “கண்டாளோ” என்றதுக்குக்கருத்து (ஒருகாலித்யாதி). வர்த்தமாந தாத்பர்யம் (கலையித்யாதி). எத்தனைசொன்னாலும் பரபுத்தியப்ரத்யக்ஷமன்றே? எல்லாம்தெரியப்போமோவென்ன (திருத்தாயா

ஆறுகள் பெருகிப்போகாநின்றால், வாய்க்கால்களாலும் பெருவாய்க்கால்களாலும் வாய்த்தலைகளாலும் போனாலும் பின்னையும் கடலிலே புகும் அம்சம்விஞ்சியிருக்குமாபோலே, எல்லாருடையதசையும் தமக்கே பிறக்கிறது. இல்லையாகில் "கண்ணபுரத்தம்மானைக் கலியன்சொன்ன" என்றுதலைக்கட்டவொண்ணாதிறே. (சிலையித்யாதி) தன்பக்கலுள்ளதெல்லாம் விட்டாப்போலே, ஆசைப்பட்டவிஷயத்திலொன்றும் விடமாட்டுகிறிலளென்கிறாள். உகப்பாரையும் வாய்வெருவப்பண்ணும்; உகவாதாரையும் வாய்வெருவப்பண்ணும். (க) "சங்கென்னும் சக்கரமென்னும்". .... (க)

மூ.— செருவரைமுன்னாசறுத்த சிலையன்றோ
கைத்தலத்ததென்கின்றாளால்
பொருவரைமுன்போர்தொலைத்த பொன்னாழி
மற்றொருகை யென்கின்றாளால்
ஒருவரையும் நின்னொப்பாரொப்பிலா
வென்னப்பாவென்கின்றாளால்
கருவரைபோல் நின்றானைக்கண்ணபுரத்
தம்மானைக்கண்டாள்கொலோ. (உ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
செருவரை	யுத்தோந்முகர்களான எதிரிகளை	கைத்தலத்தது	திருக்கையில் இராநின்றது என்கின்றாளால்;
முன்	முன்பொருகாலத்தில்	பொரு	யுத்தம் செய்கிற
ஆசறுத்த	நிரஸித்த	வரை	மலைகளை
சிலையன்றோ	தநுஸ்ஸன்றோ	முன்பு	முன்னே

ரித்யாதி). ஒருவர்க்கே இரண்டவஸ்த்தையுமானால் "அதிமாத்ரப்ராவண்யமாகாது" என்கிற திருத்தாயாரானபடியாலே பகவத்ப்ராவண்யம் மட்டமாகாதோவென்ன (ஆறுகளித்யாதி). இப்படிகொள்ளாதே திருத்தாயாரை ஒரு பாகவதராக ஸ்வாபதேசம் சொன்னால் குற்றமென்னென்ன (இல்லையாகிலித்யாதி). பெண்பிள்ளையின் ப்ராவண்யமே விஞ்சியிருக்குமென்கைக்கு நியாமகமேதென்ன; முதலடியிலே காணலாமென்று அத்தையெடுத்துக் கருத்தருளிச் செய்கிறார் (சிலையித்யாதி). விடமாட்டாமையை ஸத்ருஷ்டாந்தம் உபபாதித்து ப்ரமாணம் காட்டுகிறார் (உகவாதாரையுமித்யாதி). (உகவாதார்) ராவணாதிகள். ... ... (க)

(க) தி-வாய்-ச-உ-க.

ஓர்	ஒருகாலத்தில்
துலைத்த	அழித்த
பொன்	அழகிதான
ஆழி	திருவாழியானது
மற்றொருகை	வேறொரு திருக்கையில் இராநின்றது
	என்கின்றாளால்;
ஒருவரையும்	ஒருவரும்
நின்	உனக்கு
ஒப்பார்	ஸத்ருஶராகார் (ஆகையால்)

ஒப்பிலா	உபமாந ரஹிதனான
என்னப்பா	எனக்குஸ்வாமியானவனே!
	என்கின்றாளால்;
கரு	கறுத்த
வரைபோல்	அஞ்ஜனகிரிபோலே
நின்றானை	(ஸுலபனாய் கண்ணுக்கிலக்காய்) நிற்கின்ற
கண்ணபுரத்தம்மானைக் கண்டாள்கொலோ.	(உ)

வ்யா.—இரண்டாம்பாட்டு. (செருவரை முன்னாசறுத்த சிலையன்றோ கைத்தலத்ததென்கின்றாளால்) ஒருநாள்கண்டுவிட்ட என்னை நித்யாநுபவம் பண்ணிவைக்க வேண்டாவோ? அது செய்யாதொழிகைக்கு ஹேது - கையிலது விரோதிநிரஸநத்துக்குப் பரிகரமல்லாமையோ வென்கிறாள். பிராட்டியோட்டை ஸம்ஶ்லேஷத்துக்கு ப்ரதிபந்தகரான ராவணாதிகளைநிரஸித்தஶ்ரீசார்ங்கமன்றோகையிலேயிருக்கிறது; அது என்னைக்கூட்டிக்கொள்ளுகைக்குப் பரிகரமாகாதோ? என்னுடைய ப்ராப்திப்ரதிபந்தகமேயோ.? இங்ஙனே ஒருவக்கிடந்துபோவது; என்னாநின்றாள். செருவருண்டு-செருச்செய்

அரு.—இரண்டாம்பாட்டு. (செருவித்யாதி) கீழ்ப்பாட்டிலே திவ்யாயுதங்களை ஆபரணங்களாக எண்ணி வாய்வெருவினபடி சொல்லிற்று. இப்படி பரமபோக்யனானவன் வாராமைகண்டு நம்பக்கல் ப்ரபலப்ரதிபந்தகங்களுண்டாகவேணுமென்று விசாரித்து இவற்றைப்போக்குகைக்குத்தன்கையில் ஒன்றும் காணாமையாலே அவன்கையிலே உண்டாகவேணுமென்று பார்த்தாள். "ஆபரணங்களாகத் தோற்றினவைதானே ஆயுதங்களுமாகவிருந்தன, இவை கையிலிருக்கவும் நான் கிட்டாதிருப்பானென்" என்று உடைகுலைப்படாநின்றாளென்கின்றாளென்று ஸங்கதி.

இதுதன்னைத் தாத்பர்யகதநமுகேந ஸூசிப்பிக்கிறார் (ஒருநாளித்யாதி). ஆயுதாந்தரங்களிருக்கமுந்துறசிலையின் விரோதிநிவர்த்தகத்வத்தைச்சொன்னது - பிராட்டிக்கு உதவினதாகையாலே என்னுமிடம் தோற்ற விவரிக்கிறார் (பிராட்டியித்யாதி). "இராக்கதரை" என்னாதே, "செருவரை" என்

வார். (க) [𑌯𑍁𑌧𑌿𑌰𑌾𑌮𑌵𑌧𑍍𑌯𑌮𑍍 -யுதிராமவத்த்யம்] யுத்தத்திலெதிரிட்டு வெல்லவொண்ணாது, அநுதபித்துக் கால்கட்டி வெல்லில் வெல்லுமத்தனை. (உ) "𑌦𑍍𑌵𑌿𑌧𑌾𑌭𑌜𑍍𑌯𑍇𑌯𑌮𑌪𑍍𑌯𑍇𑌵𑌂𑌨𑌨𑌮𑍇𑌯𑌮𑍍 - த்விதாபஜ்யேயமப்யேவம் நநமேயம்" என்று ப்ராதிகூல்யத்திலே-முதிர நின்றவர்கள்; அவர்களை. (ஆசறுத்த) யுத்தங்களை நிவர்த்திப்பித்த. "நமக்கோர் எதிருண்டாய்ப்போரப் பெறுவதுகாண்" என்று திரிந்த பையல்களை, வேறொரிடத்தில் "நாங்கள் எதிரிகள்" என்று நில்லாதபடி அவர்களை வாஸனையோடே போக்கின சிலையன்றோ கைத்தலத்தது. இதுதான் கடக்கவிருந்து எடுத்துக்கொண்டுவர வேண்டுவதாய் நான் ஆறியிருக்கிறேனோ? அதுகையிலேயிருக்க நான் இப்படிப்பட வேண்டுகிற ஹேதுவென்? அழகுக்கோ கையில் பிடித்திருக்கிறது; விரோதிகளை நிரஸிக்கைக்கன்றோ? என்னாநின்றாள். (ங) [𑌨𑌧𑌨𑍁𑌰𑍍𑌭𑍂𑌷𑌣𑌾𑌯𑌮𑍇-நதநுர்ப்பூஷணாயமே] என்றாரிறே இளையபெருமாள். ஆபாதப்ரதீதியில் "அழகுக்கு உடல்" என்றே இருக்கையாலே "வீரத்துக்கு உடலன்று" என்றிருந்தீரோ என்றாரிறே. பிள்ளை திருக்கண்ணபுரத்தரையர், விரோதிவர்க்கம் கூடிக்கொண்டு அறமிகைத்தவாறே "செருவரைமுன் ஆசறுத்தசிலையன்றோ கைத்தலத்தது" என்று விண்ணப்பம்செய்ய, ஒருக்ஷணத்திலே முடிக்கிறோமென்று அருளிச் செய்தார்.

(பொருவரையித்யாதி) "இக்கைக்கு வில்லானால் மற்றைக் கை ஒழிந்திருந்தது" என்று நான் ஆறியிருக்கிறேனோ? ப்ரணயிநிகளுடைய விரோதியைப்போக்கி நோக்குமதுவேயாய்த்தான் ஆறியிருக்கிறேனோ? நாட்டுக்காக வந்த நலிவைப் போக்கினதுவுமில்லையோவெனக்கு என்கின்றாள். சிறகெழுந்து பொருதுகொடு திரி

றதுக்கு ப்ரமாணபூர்வகம் தாத்பர்யம் (யுதிஇத்யாதி). "அன்றோ" என்ற ஸ்வரத்தால் ஸூசிதமான ஆபரணத்வாகாரத்தைத் திருவுள்ளம்பற்றி யருளிச் செய்கிறார் (அழகுக்கித்யாதி). "அன்றோ" என்ற மாத்ரத்திலே இவன் கார்யம் செய்யுமோவென்ன ஓரைதிஹ்யமருளிச்செய்கிறார் (பிள்ளையித்யாதி).

ப்ராட்டியைப்போலே ப்ரணயம் உனக்குண்டோவென்னும்சங்கையிலே "பொருவரை இத்யாதி" என்று திருவுள்ளம்பற்றி தாத்பர்யமருளிச் செய்கிறார் (ப்ரணயிநி இத்யாதி). (அறுகாழி) முத்ராமோதிரம். குவலயாபீட

(க) ரா-ஸு-ருக-சரு. (உ) ரா-யு-ஙசு-கக. (ங) ரா-அயோ-உங-உக.

கிற மலைகளைப் பண்டையுத்தத்திலே முடித்த அழகிய திருவாழியன்றோ மற்றைக்கையிலெடுத்திருக்கிறது. முன்பொருகாலத்திலே பர்வதங்களடையச் சிறகெழுந்து ஓரோப்ரதேசங்களிலே பறந்து வந்திருந்தவாறே அவ்வோவிடங்கள் நசிக்குமாய், அத்தை, பெருமாளுக்கு இளையபெருமாள் ப்ரதிபந்தகம் அறுத்துக் கொடுக்குமா போலே, இந்த்ரனுக்குத் தம்பியாய் உபேந்த்ர மூர்த்தியாய் வளர்ந்தருளுகிற காலத்திலே அவற்றின் பக்ஷங்களைத் திருவாழியையிட்டுச்சேதித்தானாகச் சொல்லக் கடவதிறே. (பொன்னாழி) அழகுக்குப் பரிகரமானத்தைக் கொண்டாயிற்றுத் திண்ணிய மலைகளினுடைய சிறகுகளை அறுத்தது. அன்றியே "பொருவரை" என்று குவலயாபீடமாய் அத்தைக்கதுப்பிலே மலங்கப் புடைத்தபோதை கையும்அறுகாழியுமாயிருந்தவிருப்பைச்சொல்லவுமாம். (க) "புகர்ச் செம்முகத்தகளிறட்ட பொன்னாழிக்கை யென்னம்மான்" என்னக்கடவதிறே. சிலருடைய நிர்ப்பந்தத்தாலே திருவாழியை மறைத்தானித்தனை போக்கி, கையில் திருவாழி ஒழிந்தன்றிறே யிருப்பது. (உ) "ఆత్మానంమానుషంమన్యే- ஆத்மாநம்மாநுஷம்மந்யே" என்று சூழ்த்துக்கொடுத்த அவதாரத்திலும் பெரியதிருவடிவந்து கார்யம் செய்து போனானிறே. இவன் மறைக்கப் பார்த்தாலும் (ங)"స్వయమారురోహ-ஸ்வயமாருரோஹ"என்றுவந்துஎறுநிற்குமிறே.

(ஒருவரையுமித்யாதி) மற்றேதேனுக்கும் ஒப்புண்டானாலும் வீரவாசிக்கு உன்னோடு ஒப்பாரில்லாதவனே!. கையிலே ஶ்ரீஶார்ங்கத்தையும் திருவாழியையும் தரித்தால் இவனே ஸர்வாதிகனென்று தோற்றியிருக்குமாயிற்று. உனக்கு ஒப்பொருவரில்லாமையாலே உபமாநரஹிதனானவனே!. (என்னப்பா)ஸர்வாதிகனாய் "அரியன்"

நிரஸநதசையிலே திருவாழியாழ்வானிருக்க ஸம்பாவனையுண்டோ வென்று யோஜநாந்தரம் (சிலரித்யாதி).

ஐகாரம் அவ்யயமாய், "நின்னொப்பாரொருவருமொப்பிலா" என்றந்வயித்து சில ஆகாரத்தில் ஒத்தாராகிலும், இவற்றில் ஒப்பிலா வென்றர்த்தமருளிச் செய்கிறார் (மற்றித்யாதி). "ஒருவரும் நின்னொப்பார் - உனக்கு ஸத்ருஶராகார்; ஆகையாலே ஸர்வப்ரகாரத்திலுமொப்பிலா" என்றர்த்தாந்தரத்தை தாத்பர்ய கதநமுகேந வருளிச்செய்கிறார் (கையிலித்யாதி வாக்யத்வயத்தாலே).

(க) தி-வாய்-அ-க0-சு. (உ)ரா-யு-கஉ0-கக. (ங)

என்று கைவாங்கவேண்டாதபடி நிருபாதிக ஸர்வவித பந்துவாயுள்ளவனே!. நாட்டில் கையில் ஆயுதம் பிடித்தவர்களையெல்லாம் உகவார்களிறே. எனக்கு நிருபாதிக பந்துவாயுள்ளவனே என்னா நின்றாள். கையும் திவ்யாயுதங்களுமாய், பண்ணின உபகாரம் இன்னவளவென்று பரிச்சேதிக்கலாயிருக்கிறதோ? நிருபாதிக பந்துவென்று தோற்றியன்றோ செயலிருக்கிறது.

(கருவரைபோல் நின்றானை) இக்கூப்பீடுமுன்பே தனக்குண்டென்னுமிடம் தோற்ற நின்றானாயிற்று. தன்னை உபகரிக்கைக்குத் தான் முற்பாடனாய் அவஸர ப்ரதீக்ஷனாய் வந்துநிற்கிறபடி. (கருவரை) அஞ்ஜநகிரிபோலேயாயிற்று கண்ணுக்கு விஷயமானபோது இருக்கிறபடி. (நின்றானை) வந்து காண்பார் தாழ்வேயாம்படி தன்னைக் குறைவறுத்துக்கொடுநிற்கிறவனை. (கண்ணபுரத்தம்மானை) கருவரைபோலே இருக்குமது ஶ்ரீவைகுண்ட்டத்திலுமுண்டிறே. அங்ஙனன்றிக்கே திருக்கண்ணபுரத்திலேவந்து ஸுலபனான ஸர்வேஶ்வரனை. (கண்டாள் கொலோ) ஶ்ரவணமாத்ரத்திலே பர்யவஸிக்கையன்றிக்கே அவ்வடிவிலே கண்வைத்தாள்போலேயிருந்தது. (கண்டாள்) அவன் அவஸரப்ரதீக்ஷனாய் நிற்கையேயன்றிக்கே இவளும் ஆபி ([illegible]) முக்க்யம் பண்ணப்பெற்றது. வடிவழகிலும் ஔதார்யம் தோற்ற நின்றநிலையிலும்போலே காணும் இவள் கண்விழித்தது. .... (உ)

மூ.— துன்னுமாமணி முடிமேல் துழாயலங்கல்
தோன்றுமாலென்கின்றாளால்
மின்னுமாமணி மகரகுண்டலங்கள்
வில்வீசுமென்கின்றாளால்
பொன்னின்மாமணியார மணியாகத்
திலங்குமாலென்கின்றாளால்
கன்னிமாமதிள்புடைசூழ் கண்ணபுரத்
தம்மானைக்கண்டாள்கொலோ. (ங)

"நின்றானை" என்கையாலே பரமபதத்திலிருந்து வந்து இவள் முன்னே நின்றமைதோற்றுகையாலே, இப்படி வருகைக்கு மூலம் இவளைப்பெறுமையாகையாலே, அத்தாலுண்டான கூப்பீடுண்டென்று தோற்றும் என்று விவக்ஷித்து அருளிச் செய்கிறார் (இக்கூப்பீடித்யாதி வாக்ய த்வயத்தாலே). (ஔதார்யம்) தன்னைக்கொடுக்கை. ... ... (உ)

பதம்.	உரை.
துன்னு	நெருங்கியிருப்பதாய்,
மா	ஶ்ரேஷ்ட்டமான
மணி	ரத்நங்களாலே (அலங்க்ருதமான)
முடிமேல்	திருவபிஷேகத்தின் மேலே (சாத்தின)
துழாயலங்கல்	திருத்துழாய் மாலையானது
தோன்றுமால்	தோன்றாநிற்கிறது என்கின்றாளால்;
மின்னு	ப்ரகாசிப்பதாய்
மா	ஶ்ரேஷ்ட்டமான
மணி	ரத்நங்கள் அழுத்திய
மகரகுண்டலங்கள்	திருமகரகுண்டலங்கள்
வில்	ஒளியை
வீசும்	வீசாநின்றதுகள் என்கின்றாளால்;

பதம்.	உரை.
பொன்னில்	பொன்னாலே செய்யப்பட்ட
மா	ஶ்ரேஷ்ட்டங்களான
மணி	ரத்நங்கள் அழுத்திய
ஆரம்	ஹாரமானது
அணி	(அவ்வாரந்தனக்கும்) ஆபரணமாயிருக்கிற
ஆகத்து	திருமார்வில்
இலங்குமால்	விளங்காநின்றது என்கின்றாளால்;
கன்னி	அழிவில்லாத
மா	ஒருவராலும் அழிக்கவொண்ணாத பெருமையையுடைய
மதிள்	திருமதிளாலே
புடை	பக்கங்களிலே
சூழ்	சூழப்பட்ட

கண்ணபுரத்தம்மானைக் கண்டாள்கொலோ. (௩)

அவ.— மூன்றாம்பாட்டு. இத்தனை அதிமாத்ர ப்ராவண்யமாகாதுகாண், எல்லாம் செய்தாலும் நாங்கள் சொல்லுகிற ஹிதவசநத்தை நீ கேட்கவேணுங்காணென்று நீங்கள் சொன்னால், அவனுடைய ஆபரணசோபை, கண்களுக்கு முற்படாநின்றது. உங்கள் வார்த்தை செவிப்படுகிற இத்தை நான்கேட்கவோ, கண்ணுக்கிலக்கான அவனழகிலே துவக்குண்ணவோ என்னாநின்றாள். ‡(சேஷித்வஸூசகமாயிருக்கவோ என்னாநின்றாள்).

அந.— மூன்றாம்பாட்டு. (துன்னுமாமணியித்யாதி) ஸங்கதி யருளிச்செய்கிறார் (இத்தனையித்யாதி). (இத்தனை) என்றது - “சிலையன்றே கைத்தலத்தது” என்று வெறுக்கும்படியான என்கை. “தோன்றுமால்” என்றும், “வில்வீசும்” என்றும், “அணியாகத்திலங்கும்” என்று மிருக்கையாலே கீழ்ப்பாட்டில் “சிலையன்றே கைத்தலத்தது” என்று வெறுக்க அஞ்சி அவன் முன்வந்தானாக பா (ஶ) வநாப்ரகர்ஷம் பிறந்திருக்கத் தாய் முதலானாரும் நிஷேதிக்க, நான் ஏதுக்காகவென்று விஷாதப்படுகிறாளென்றுகருத்து.

---

‡ குண்டலிதம் க்வாசித்கம்.

வ்யா.— (துன்னு) நெருங்கியிருப்பதாய், பெருவிலையனான ரத்நங்களாலே அலங்க்ருதமான திருவபிஷேகத்தின்மேலே சாத்தின திருத்துழாய்மாலையானது தோன்றாநிற்க, உங்கள்வார்த்தை செவிப்படுமோவென்றுநின்றாள். சேஷித்வஸூசகமா யிருக்குமிறே திருவபிஷேகமும் வைத்ததிருத்துழாயும். அர்ஜுநனுக்குப் பரபக்ஷத்தினுடைய கழுத்துத் தோற்றினாப்போலே வைத்தவளையமேயாயிற்று இவளுக்குத் தோற்றுகிறது. (மின்னுமித்யாதி) வளையத்தினின்றும் நெஞ்சைப் பறித்துக்கொண்டது திருமகரக்குழை. அவற்றால்வந்த அழகுக்குக்கைவிளக்குப்பிடித்துக்காட்டினாப்போலேயாயிற்றுத் திருமகர குண்டலங்களினுடைய புகர் இருக்கிறபடி. மின்னாநிற்பதாய் மஹார்க்கமான ரத்நங்கள் அழுத்தப்பட்ட திருமகர குண்டலங்களானவை அவற்றை உள்ளாக்கி தான் புறம்பே திருமேனி யடங்கலும் முட்டாக்கிடும்படி ப்ரகாசியாநின்றதென்றுநின்றாள்.

(பொன்னினித்யாதி) பொன்னாலே செய்யப்பட்ட ரத்நங்களழுத்தியிருந்துள்ள ஹாரமானது அவ்வாரந்தனக்கும் ஆரமாயிருக்கிறதிருமார்பிலேவிளங்காநின்றதென்றுநின்றாள். (அணியாகத்திலங்கும்) பிராட்டியெழுந்தருளியிருந்த திருமார்பிலே விளங்காநின்

தாய்வார்த்தை கேளாமை அழகாலேயோ ப்ராப்தியாலேயோவென்ன; (சேஷித்வேத்யாதி). அழகிலும் ப்ராப்ததையே ப்ரதாநஹேதுவென்று திருவுள்ளம். முந்துற இவை இரண்டும் தோற்ற வேண்டுவானென்னென்ன (அர்ஜுநேத்யாதி). (கழுத்து) அபாயஸ்த்தலமானகழுத்து. ப்ராப்தனென்று உனக்குத் தோற்றினால் (௧) "తత్తస్య సదృశం భవేత్ - தத்தஸ்ய ஸத்ருஶம் பவேத்" என்று ஆறியிருக்கவன்றோ அடுப்பதுவென்னுமதிசங்கையிலே "மின்னுமித்யாதி" என்று விவக்ஷித்துத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (வளையத்தில்நின்றுமித்யாதி). அழகு, ஆறியிருக்க வொட்டாதென்று கருத்து. மணிமுடியும் வளையமும் அழகுக்கே உடலென்று தாத்பர்யாந்தரம் விவக்ஷித்த போதைக்கு ஸங்கதியருளிச்செய்கிறார் (அவற்றாலித்யாதி). "வீசும்" என்றுபுகர்வ்யாபிக்குமென்றாய், அதின் தாத்பர்யம் (அவற்றையித்யாதி).

"அணி" என்றதினர்த்தம் (ஆரமாயிருக்கிற) என்றது; ஆபரணமாயென்றபடி. "அணி" கிட்டுகையாய், பிராட்டியாலே அணியப்பட்ட என்றர்த்தாந்தரம் (பிராட்டியித்யாதி). "அணி" அழகாய், மூன்றாமர்த்தம்

---

(௧) ரா-ஸு-௩௯-௩௦.

றது. ஆபரணம் மிகையானமார்பு. “வெறும்புறத்திலே ஆலத்தி வழிக்கும்படி ஆபரணத்துக்காபரணமான திருமார்பிலே, ஆபரணங்களும் ஸ்ரீகௌஸ்துபமும்விளங்காநின்றது”என்னாநின்றாள். (கன்னியித்யாதி) சேமித்துவைத்த வஸ்துவை இவள் ஒருத்தியுமேஅறிந்துகொண்டாள்போலே யிருந்தது. உள்ளிருக்கிற வஸ்துவின் சீர்மைக்குத் தக்கபடி அரணாகப்போரும்படியிருப்பதாய் ஒருவராலும் அழிக்க வொண்ணாதபடியான பெருமையையுடைய மதிளாலே சூழப்பட்ட திருக்கண்ணபுரத்திலே வந்து ஸந்நிஹிதனானவனைக் கண்டாள்போலே யிருந்தது. .... (௩)

மூ.— தாராயதண்துளபவண்டுழுத
வரைமார்பனென்கின்றாளால்
போரானைக்கொம்பொசித்தபுட்பாக
னென்னம்மானென்கின்றாளால்
ஆரானும் காண்மின்களம்பவளம்
வாயவனுக்கென்கின்றாளால்
கார்வானம்நின்றதிரும் கண்ணபுரத்
தம்மானைக்கண்டாள் கொலோ. (௪)

பதம்.	உரை.	பதம்.	உரை.
தார்	பூத்த	போர்	யுத்தோந்முகமான
ஆய	நல்லதான	ஆனை	(குவலயாபீடமென்கிற) யானையினுடைய
தண்	குளிர்ந்திருந்துள்ள	கொம்பு	தந்தங்களை
துளபம்	திருத்துழாய் மாலையிலே (படிந்த)	ஒசித்த	பறித்தவனாய்,
வண்டு	வண்டானது	புள்	பெரிய திருவடியின் மேல் ஏறி
உழுத	உழாநின்ற	பாகன்	நடத்தாநின்ற
வரை	மலைபோல் (த்ருடமான	என்	எனக்கு
மார்பன்	திருமார்பையுடையவன்	அம்மான்	ஸ்வாமியர்னவன்
என்கின்றாளால்;			

(ஆபரணமித்யாதி). அணிபதத்தில் மூன்றர்த்தத்தையும் அநுவதித்துக் கொண்டு பொன்னினாரமும் மாமணியுமென்றந்வயித்து அர்த்தாந்தரம் (வெறும்புறத்திலேயித்யாதி). (திருமார்பிலே) என்றது - திருஇருக்கும் மார்பிலே யென்றபடி. ... ... (௩)

	என்கின்றாளால்;
ஆரானும்	(எனக்கு ஹிதம் சொல்லி விலக்குகிற நீங்கள்) யாராகிலும்
காண்மின்கள்	பாருங்கோள்
அவனுக்கு	அந்த எம்பெருமானுக்கு
அம்	அழகிய
பவளம்	பவளம்போலே
வாய்	திருவதரமிரா நின்றது என்கின்றாளால்;
கார்	கறுத்த
வானம்	மேகமானது
நின்று	நித்யவாஸமாய் இருந்து
அதிரும்	கோஷிக்கும் படியான
கண்ணபுரத்தம்மானைக் கண்டாள் கொலோ. (ச)	

வ்யா.—நாலாம்பாட்டு. (தாராயவித்யாதி) பூத்துத்தழைத்துச் செவ்வியையுடைத்தாய் குளிர்ந்திருந்துள்ள திருத்துழாய்மாலையிலே படிந்த வண்டானது, அத்திருத்துழாயில் மதுவானது புறப்பட்டு வண்டலிட்டுக்கிடந்த வரைபோன்ற மார்பிலே உழாநின்றதென்னா நின்றாள். இம்முலைகளைக்கொடுபுக்கு நடலாம்படி சேறுசெய்து கிடக்குமாயிற்று மார்பு; ஆர் ஆசைப்பட்டுப்பெறாதேயிருக்கிறதை ஆர்பெறுகிறாளென்னாநின்றாள். (போரானையித்யாதி). யுத்தோந்முகமான குவலயாபீடத்தினுடைய கொம்பை அநாயாஸேநப் பறித்து, அச்செயலாலே என்னை அநந்யார்ஹையாக்கினவனென்னாநின்றாள். (க) "𑌸𑌖𑍍𑌯𑌃 𑌪𑌶𑍍𑌯𑌤 - ஸக்க்யஃ பஶ்யத" என்றவர்க

அரு.—நாலாம்பாட்டு. (தாராயவித்யாதி) கீழ்ப்பாட்டிலே உருவு வெளிப்பாட்டாலே கண்ணுக்குத் தோற்றுமோவென்று அவளை மீளவும் அலைக்க, அவர்களுக்கும் காட்டாநின்றாளென்று ஸங்கதி.

"தார்" பூவுடைத்தாய், "ஆய" நல்லதான, "தண்டுளபம்" என்று பிரித்தருளிச் செய்கிறார் (பூத்தித்யாதி). "வண்டுழுத" என்றத்தாலே தனக்கு ஸம்ஶ்லேஷத்துக்கு உபயுக்தமானவென்றொரு தாத்பர்யமருளிச் செய்து, வெறுப்பாகத் தாத்பர்யாந்தரம் (ஆரித்யாதி). களிறு தருபுணர்ச்சியிலே அகப்பட்டமை சொல்லுகிறாளென்று அருளிச் செய்கிறார் (யுத்தேத்யாதி). ஆனைகையில் நின்றும் தன்னைப் பிழைப்பித்த உபகாரத்துக்குத் தோற்று, ஸம்ஶ்லேஷிக்கை களிறுதருபுணர்ச்சியாகிலும், களிற்றின்கையில் அவனகப்படப்புகில் செய்வதென்னென்று தனக்கு ப்ராணஸம்ஶயம் வந்தத்தை நிவர்த்திப்பித்தபடிக்குத் தோற்றுப்புணர்ந்தாளாகையாலே இங்ஙன் சொல்லலாமென்றுகருத்து.

(க) வி-பு-ரு-உ௦-ருச.

ளிலே ஒருத்திபோலே காணுமிவள். பெரியதிருவடிமுதுகிலே யிருந்து, இருப்பைக்காட்டி என்னை எனக்கு உரியேனாகாதபடி பண்ணினவன்.

(ஆரானுங்காண்மின்கள்) ஹிதம் சொல்லி விலக்குகிறநீங்களும் பாருங்கோள். அழகிய பவளம்போலேயிருந்துள்ள திருவதரத்தைக் கண்டார்க்கு விட்டுப்போகலாயிருந்ததோ?. (கார்வான மித்யாதி) கார்காலத்திலே மேகமானது நின்று கோஷியாநிற்குமாயிற்று. (க) "ఓఘమేఘస్వనః - ஓகமேகஸ்வநஃ" என்கிறதுக்கு ஸ்மாரகமாயிருக்கை. "మేఘోదయః-மேகோதயஃ" என்னும்படியே எப்போதும் வர்ஷாவாய், ஆகாசம் அதிராநின்ற திருக்கண்ணபுரத்தம்மானை. (கண்டாள்கொலோ) உக்திமாத்ரத்தில் மீளாதே அவ் விஷயத்தைக்கண்டு அநுபவித்தாளென்றுதோற்றியிராநின்றது. (ச)

மூ.— அடித்தலமும் தாமரையே அங்கைகளும்
பங்கயமே யென்கின்றாளால்
முடித்தலமும் பொற்பூணுமென்னெஞ்சத்
துள்ளகலாதென்கின்றாளால்
வடித்தடங்கண் மலரவளோ வரையாகத்
துள்ளிருப்பாளென்கின்றாளால்
கடிக்கமலம் கள்ளுகுக்கும் கண்ணபுரத்
தம்மானைக் கண்டாள்கொலோ. (ரு)

பதம்.	உரை.
அடி	திருவடிகளுடைய
தலமும்	ப்ரதேசமும்
தாமரையே	தாமரைபோல் போக்ய (భోగ్య) மாய் இராநின்றது,
அம்	அழகிதான
கைகளும்	திருக்கைகளும்
பங்கயமே	தாமரைபோலிராநின்றதுகள்
	என்கின்றாளால்;
முடி	திருவபிஷேகத்தினுடைய
தலமும்	ப்ரதேசமும் (அதிலே சாத்தக்கடவதான)

திருக்கண்ணபுரத்தை "கார்வானம்நின்றதிரும்" என்று விசேஷித்தவளுக்கு உட்கருத்து, தன் பெண்பிள்ளை மேககம்பீரமான அவனுக்தியிலே ஈடுபடுமென்கையென்று விவக்ஷித்து அருளிச் செய்கிறார் (ஓகமேகஇத்யாதி). இதுக்கு முன்னே "அது" என்று கூட்டுவது. "அதிரும்" என்றவர்த்தமானார்த்தம் (மேகோதய இத்யாதி). ... ... (ச)

பொற்பூணும்	திருவாபரணமும் [ன
என்	என்னுடைய
நெஞ்சத்து	மனதினுடைய [றும்
உள்	உள்ப்ரதேசத்தினின்
அகலாது	பிரிகிறதில்லை
	என்கின்றாளால்;
வடி	கூர்மையாய்
தடம்	விசாலமான
கண்மலர்	மலர் போன்ற திருக்கண்களையுடைய
அவளோ	அந்த பெரியபிராட்டியாரன்றோ

வரை	மலைபோல்விசாலமான
ஆகத்து	(எம்பெருமான்) திருமார்வினுடைய
உள்	மத்த்யத்திலே
இருப்பாள்	வாஸம் செய்கிறாள்
	என்கின்றாளால் ;
கள்	மதுவை
உகுக்கும்	ப்ரவஹியாநிற்பதாய்
கடி	பரிமளிதமான [கிற
கமலம்	பங்கயங்கள் வர்த்திக்

கண்ணபுரத்தம்மானைக் கண்டாள் கொலோ. (ரு)

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (அடித்தலமித்யாதி) நம்முடைய உத்தேஶ்யமும் நிரதிசயபோக்யமாயிராநின்றது. (அங்கைகளும் பங்கயமே) அத்திருவடிகளிலே தோற்று விழுந்தவர்களை எடுத்தணைக்கும் கைகளும் தாமரைபோலே யிராநின்றது யென்னாநின்றாள். (முடித்தலமித்யாதி) அணைத்தபோதை ஸ்பர்ஶத்திலே துவக்குண்டு மேல்நோக்கிப் பார்த்தபோது இது ப்ராப்தவிஷயமென்று தோற்றும்படியிருக்கிற திருவபிஷேகமும், அதிலே சாத்தக்கடவ திருவாபரணமும் என்னெஞ்சைவிட்டுப் போகிறதில்லை யென்னாநின்றாள்; "எல்லாம் செய்தாலும் இத்தனை அதிமாத்ர ப்ரா

அரு.—அஞ்சாம்பாட்டு. (அடித்தலமித்யாதி) கீழ்ப்பாட்டில் "ஆரானுங் காண்மின்கள்" என்று காட்டச் செய்தேயும், அவர்களுக்கு உருவு வெளிப்பாடில்லாமையாலே, தங்கள் வார்த்தை இவள் நெஞ்சில் படும்படி சொல்லப்புக, இப்பெண்பிள்ளை அடி துடங்கி முடியளவும்கண்டு உங்களுக்குத்தோற்றாமையாலே இங்ஙனே சொல்லி அலைக்கிறீகோள், என்னெஞ்சில் அவன் வடிவு அகலவில்லை யென்கிறாளென்று ஸங்கதி.

"அடித்தலமும்" என்ற ச (𑌚) காரத்துக்குக் கருத்து (நம்முடையவித்யாதி). "கைகளும்" என்ற ச(𑌚)காரத்துக்கு ப்ராதாந்யமர்த்தமாய், அத்தையருளிச் செய்கிறார் (அத்திருவடிகளித்யாதி). "என்னெஞ்சத்துள்ளகலாது" என்றது நேரே உத்தரமாகையாலே கீழ்ப்பாட்டுக்கும் இதுக்குமுண்டான ஸங்கதிதன்னை இங்கே ஸூசிப்பிக்கிறார் (எல்லாமித்யாதி). கீழ் பதத்தோடு இப்பதத்துக்கு ஸங்கதி என்னவுமாம்.

வண்யமாகாதுகாண்''என்று நாங்கள்சொல்லுகிறஇத்தைநெஞ்சிலே கொள்ளவேணுங்காணென்பர்களே. நீங்கள் சொல்லுகிற வார்த்தை நெஞ்சிலே படுவது இவை என் நெஞ்சைவிட்டு அகலிலன்றோ.

(வடித்தடங்கணித்யாதி) மார்புக்காபரணம் - பிராட்டிபோலே காணும். சேர்ப்பாரும் அருகேயிருக்க, நான் எத்தைச்சொல்லி அகலுவது என்னாநின்றாள். எனக்குப் பற்றாசானார் இருக்க, நான் என்ன கண்ணழிவு சொல்லிக் கடக்கப்போவது. ஓராளும் ஒரு நோக்கும்நேராய், போ(भो)க்தாக்களளவன்றிக்கேயிருக்கிற கண்ணை யுடைய என் ஸ்வாமிநியன்றோ திருமார்விலே யிருக்கிறாள். அங்ஙனன்றியே அவன் ப்ரணயதாரையில் ஶ்ரோத்ரியனல்லனென்று நான் ஆறியிருக்கிறேனோ? போக்யதையில்லாமையோ? ப்ராப்தனல்லாமையோ? சேர்ப்பாரில்லாமையோ? நான் எத்தைச்சொல்லி அகலுவது. (கடிக்கமல மித்யாதி) பரிமள ப்ரசுரமாயிருந்துள்ள புஷ்பமானது மதுவை ப்ரவஹியாநிற்குமாயிற்று. மதுபானம்பண்ணவிருந்த வண்டுகளுக்கு ப்ரயோஜநமில்லாத படியாகவும், ஆஶ்ரயம் பொறாதபடியாலும், மதுவை உகாநிற்கும். அவ்வூரில் தாமரையில் படிந்த வண்டுகளால், அதில் மது வற்றப் பருகப்போகாதென்கை. (கண்ணபுரத்தம்மானைக் கண்டாள்கொலோ) அவ்வூரில் பதார்த்தங்கள் போ(भो)க்தாக்களளவல்லாதபடி போக்யதை விஞ்சியாயிற்றிருப்பது. அப்படி நிரதிசயபோக்யனான இவனை, இவள் அநுபவித்துச் சொல்லுகிறாள்போலே யிருந்தது. .... (௫)

மூ.— பேராயிரமுடைய பேராளன்
பேராளனென்கின்றாளால்

ஏரார்கனமகரகுண்டலத்த
னெண்டோளனென்கின்றாளால்

''பொற்பூண்''என்ற ஆபரணச்சேர்த்திக்குச்சேர ஒருதாத்பர்யம்(மார்வுக்கித்யாதி). தாத்பர்யாந்தரம் (சேர்ப்பாரித்யாதி வாக்யத்ரயமும்). மூன்றாம் தாத்பர்யம் (அங்ஙனன்றிக்கேயித்யாதி). இரண்டாம் தாத்பர்யமே முக்ய மென்னுமிடம் தோற்ற மூன்றடிக்கும் தொகுத்துத் தாத்பர்யம் (போக்யதையித்யாதி). கமலங்களில் மது பெருகின போதைக்கு வண்டுகளில்லையோவென்ன (மதுவித்யாதி). வண்டுகள் மதுபானம் பண்ணி த்ருப்தியடைகையாலே இதுக்கு வேண்டுவதில்லையென்று தோற்றும்படி ப்ரவஹிக்குமென்று கருத்து. ... ... (௫)

நீரார்மழைமுகிலே நீள்வரையே
யொக்குமாலென்கின்றாளால்
காரார் வயல்மருவும் கண்ணபுரத்
தம்மானைக் கண்டாள்கொலோ. (௬)

பதம்.	உரை.
ஆயிரம்	ஆயிரமான
பேர்	திருநாமங்களை
உடைய	உடையனானதாலுண்டான
பேராளன்	பெருமையையுடைய
பேராளன்	பெரியோன்
என்கின்றாளால்;	
ஏர்	அழகானது
ஆர்	நிறைந்திருந்துள்ள
கன	ரத்நங்களாலே சமைக்கப்பட்ட
மகரகுண்டலத்தன்	திருமகர குண்டலங்களையுடையனாய்,
எண்தோளன்	எட்டுத் திருத்தோள்களையுடையவன்
என்கின்றாளால்;	
நீர்	ஜலத்தினால்
ஆர்	நிறைந்த
மழைமுகிலே	காளமேகமும்,
நீள்	நீண்ட
வரையே	அஞ்ஜநமலையும்
ஒக்குமால்	ஸத்ருஶமாகா நின்ற எம்பெருமான்
என்கின்றாளால்;	
கார்	நைல்யத்தால்
ஆர்	நிறைந்த
வயல்	பயிர்களாலே
மருவும்	சூழப்பட்ட
கண்ணபுரத்தம்மானைக் கண்டாள்கொலோ. (௬)	

வ்யா.— ஆறாம்பாட்டு. (பேராயிரமித்யாதி) குணசேஷ்டிதங்களுக்கு வாசகமான ஆயிரம் திருநாமங்களையுடையவன். (பேராளன்) (௧) "దేవోనామసహస్రవాన్ - தேவோநாமஸஹஸ்ரவாந்" (௨) "பேராயிரங்கொண்டதோர் பீடுடையன்-நாராயணன்" (௩) "நாமம் பலசொல்லி நாராயணாவென்று" "பால்பசுவுடையவன்" என்னுமா

அரு.—ஆறாம்பாட்டு. (பேரித்யாதி) இப்பெண்பிள்ளை தங்கள் சொல் கேளாதேயிருந்தபடியாலே இனி என்னென்று விசாரித்து, "உன்னை இப்படி பிச்சேற்றினவன்பேர் சொல்லிக்காணாய்" என்று கேட்க, "நான் ஒருபேராகிலிறே சொல்லுவது" என்றுகொண்டு, முன்பநுபவித்த அம்சத்தையெல்லாம் வாய் வெருவாநின்றாளென்கிறாளென்று ஸங்கதி.

ஆயிரம்பேருடையனாகையாலே "பேராளன்" என்று விவக்ஷித்து பல ப்ரமாணங்கள் (தேவஇத்யாதி). இரண்டாம் பேராளனென்றதுக்கு ஸ்வா

---

(௧) பார-ஸபா-௩௮-௧௧. (௨) தி-வாய்-௯-௩-௧. (௩) ௩-திருவ-௮.

போலே (௧)"நாமம்பலவுமுடை நாரணன்" இந்த ஆயிரம்திருநாமங்களையுடையனாகையால்வந்த பெருமையையுடையவன். (பேராளன்) பெரியதிலே பெரியது கூடிற்றித்தனை. அத்திருநாமங்கள் தானும் அவன் பக்கலிலே புகுருகையாலே நிறம் பெற்றன என்னா நின்றாள். "பேராளன்" என்று அவன்-திருநாமாதிகளால் பரிச்சேதிக்கவொண்ணாதபடி அபரிச்சேத்யஸ்வபாவனானவனென்னுமாம். அன்றிக்கே, (பேராளன் பேராளன்) பெரியோன் பெரியோன் என்னாநின்றாள். (ஏராரித்யாதி) நாமத்வாரா சொல்லும் ஸ்வரூபமிருக்கிறபடி சொல்லுகிறது. முன்பு அநுபவித்த அழகுகள் பின் நாட்டுகிறபடி. அழகு நிறைந்திருந்துள்ள ரத்நங்களாலே சமைக்கப்பட்ட திருமகரகுண்டலங்களை யுடையனாய், அவைவந்து அலையெறியாநின்றுள்ள தோள்களெட்டையு முடையனென்னா நின்றாள். (எண்தோளன்) திருத்தோள்கள் நாலாயிருக்க ஶ்ரீபஞ்சாயுதங்களைத் தரித்தாப் போலேயும், நாலுதோளாயிருக்கச்செய்தே, ஆயிரந்தோள்போலே வ்யாபரித்துக்கடலைக்கடைந்தாப்போலேயும் நாலாயிருக்கச்செய்தே "எண்தோள்" என்கிறாளென்றபடி.

(நீரார் மழை முகிலித்யாதி) உபமாநம் கதிர்பெருக்கவேண்டியிருக்கிறபடி. கடலைக் கழுத்தேகட்டளையாகப் பருகின மேகம் போலவும், அஞ்ஜநகிரிபோலேயுமிருக்கிற வடிவையுடையவனென்னா நின்றாள். ஶ்ரமஹரதையும்அபரிச்சேத்யதையும் இரண்டையும் சொல்லுகிறது. (காரார் வயலித்யாதி) எங்குமொக்கப் பயிர்மாறாமையாலே கறுத்த நிறத்தையுடைத்தான வயலாலே சூழப்பட்ட கருவடைந்த பயிராகையாலே, எங்குமொக்கக் கறுத்தபடியே யிருக்குமாயிற்று. முக்தர் என்றுமொக்க பஞ்சவிம்ஶதி வார்ஷிகராயிரு

பாவிகமான பெருமையுடையவனென்றர்த்தமாய் இப்படி விசேஷித்ததுக்குக் கருத்தருளிச்செய்கிறார் (பெரியதிலித்யாதி). விவரணம் (அத்திருநாமங்களித்யாதி). சப்தார்த்தம்(பேராளன் என்று இத்யாதி). ஆதரத்தால்த்விருக்தியென்கிறார் (அன்றிக்கேயித்யாதி). "ஒக்குமால்"என்னுமளவுக்கும் தாத்பர்யமருளிச்செய்கிறார் (நாமேத்யாதி). தாத்பர்யாந்தரம் (முன்பித்யாதி). முன்பநுபவித்தபோது "தோள்நான்கே" என்றிருக்க, இங்கே "எண்தோள்" என்னக்கூடுமோ வென்னவருளிச்செய்கிறார் (திருத்தோள்களித்யாதி).

தாத்பர்யாந்தரம் (ஶ்ரமஹரதையுமித்யாதி). ... ... (௬)

---

(௧) ௧௦-௮-௪.

க்குமாபோலேயும், உள்ளிருக்கிறவன் நிறம்போலேயும், (௧) "கரு நெற்சூழ் கண்ணமங்கையுள் காண்டும்" என்னக்கடவதிறே. இப்படி என்றும் வயல்கறுத்துச்சினைகொண்டிருக்குமத்தனை. (கண்ணபுரமித்யாதி) அவ்வடிவில்கண்ணைவைத்தாள்போலேயிராநின்றது. (௬)

மூ.— செவ்வரத்தவுடையாடையதன்மேலோர்
சிவளிகைக் கச்சென்கின்றாளால்
அவ்வரத்தவடியிணையு மங்கைகளும்
பங்கயமே யென்கின்றாளால்
மைவளர்க்கும்மணியுருவம் மரதகமோ
மழைமுகிலோ வென்கின்றாளால்
கைவளர்க்குமழலாளர் கண்ணபுரத்
தம்மானைக்கண்டாள் கொலோ. (௭)

பதம்.	உரை.
செம்	சிவந்த
வரத்த	ஶ்ரேஷ்ட்டமாய்
உடை	தரிக்கப்பட்ட
ஆடை	திருப்பரியட்டமும்,
அதன்மேல்	அந்த பீதாம்பரத்தின் மேலே
ஓர்	அத்விதீயமான
சிவளிகைக்	பொன்னெழுதின
கச்சு	கச்சும்
	என்கின்றாளால்;
அவ்வரத்த	அப்படியே சிவந்த
அடியிணையும்	இரண்டு திருவடிக
அம்	அழகிய [ளும்]
கைகளும்	திருக்கைகளும்
பங்கயமே	தாமரையே
	என்கின்றாளால்;
மை	கருநிறத்தை
வளர்க்கும்	வளராநின்றுள்ள
மணி	நீலமணிபோன்ற
உருவும்	திருமேனியும்
மரதகமோ	மரதகமணியோ
மழைமுகிலோ	நீலமேகமோ
	என்கின்றாளால்;
கை	தன்கைகளால்
வளர்க்கும்	(ஹோமம் செய்து) வளர்க்கப்பட்ட
அழலாளர்	அக்நியை யுடையவர்கள் வர்த்திக்கிற
கண்ணபுரத்தம்மானைக் கண்டாள் கொலோ. (௭)	

வ்யா.—ஏழாம்பாட்டு. (செவ்வரத்தவுடையாடை) அவனுடைய உடைவாய்ப்பிலே தோற்றமை தோற்ற வாய்விடாநின்றாள்.

அநு.—ஏழாம்பாட்டு. (செவ்வரத்தவித்யாதி). கீழ்ப்பாட்டில் வடிவழகு பின்னாட்டின படியாலே மடி பிடித்து அத்தையே மீளவும் சொல்லாநின்றாளென்று ஸங்கதி.

---

(௧) ௧௦-௧-௧.

திருப்பீதாம்பரம்சாத்தினால் (க) "𑌕𑍌𑌶𑍇𑌯𑌪𑍁𑌷𑍍𑌪𑌿𑌤𑌕𑌟𑍀𑌤𑌟𑌃- கௌஶேய புஷ்பிதகடீதடம்" என்கிறபடியே, திருவரை பூத்தாப்போலேயாயிற்றிருப்பது. (செவ்வரத்தவுடையாடை) சிவப்பாலும் ரக்தத்தாலும் இரண்டாலும் சிவப்பையே சொல்லுகிறது. அந்த சொல்லே வரவுமாம். அத்தோடு பர்யாயமான சொல் இரட்டித்து வரவுமாம். அப்போது அதுக்கும் மீமிசையென்று பொருளாய், அர்த்தத்தினுடைய அதிசயத்தைக் காட்டக்கடவது. சிவந்த, வரத்த - ஶ்ரேஷ்ட்டமான என்னுமாம்; ஆக அறச்சிவந்தவாடைசாத்தும். அதுக்குமேலே "சிவளிகைக்கச்சு" என்று - கடடுங்கச்சு; பொன்னெழுதினகச்சு. அப்படியே சிவந்திருக்கிற திருவடிகளும், திருக்கைகளும் விகாஸாதிகளாலே தாமரையே.

(மைவளர்க்குமித்யாதி) கிட்டினதனையும் மையேயிருக்கிறவத்தனையாயிற்று. இருண்ட நிறத்தை வளராநின்றுள்ள நீலமணி போன்ற வென்கை. (உ) "மல்குநீலச் சுடர்தழைப்ப" என்கிறபடியே. (கைவளர்க்கும்) அவ்வூரிலொருவரும் தக்ஷிணைகொடுத்து ஹோமம் பண்ணுவிப்பாரில்லையாயிற்று. தன்கையால் வளர்க்கப்பட்ட அக்நியையுடையனாகையன்றோ அவன் பரியட்டமே பிடித்து அடைய இவளுக்குச்சிவந்து தோற்றுகிறது. (எ)

மூ.— கொற்றப்புள்ளொன்றேறிமன்றூடே
வருகின்றானென்கின்றாளால்

உடைவாய்ப்பேதென்ன (திருவித்யாதி). முதற்சொன்ன சொலவே வந்தாலன்றோ மீமிசையென்ன (அந்தவித்யாதி).

திருமேனிக்கு விசேஷணமாக வருளிச்செய்து மணிக்கு விசேஷணமாக வருளிச்செய்கிறார் (இருண்டவித்யாதி). மணியை இத்தனை சிக்ஷித்தாருண்டோ வென்ன (மல்கித்யாதி). (தக்ஷிணை) கைக்கூலி. அவர்கள் கூலி கொடுத்துப் பண்ணுவியாமல் தங்கள் கையாலே பண்ணுகிறார்களென்கைக்கு ஜ்ஞாபகமேதென்ன (தன்கையாலித்யாதி). இத்தால் இவர்கள் ஆளிட்டந்தி தொழாமல் தாங்களே செய்கையாலே உத்தரவேதியில் ப்ரஹ்மாவுக்கு ப்ரத்யக்ஷமானாப்போலே இவர்களுக்கும் அந்தர்யாமித்வேந வன்றிக்கே, ஸ்வயமேவ ஹவிர்ப்பாகம் கொள்ளுகையாலே எல்லாம் மிகவும் சிவந்து தோற்றுகிறதென்று தாத்பர்யம். ... ... (எ)

(க)

(உ) தி-வாய்-எ-சு-சு.

வெற்றிப்போரிந்திரர்க்கு மிந்திரனே
யொக்குமாலென்கின்றாளால்
பெற்றக்காலவனாகம் பெண்பிறந்தோ
முய்யோமோ வென்கின்றாளால்
கற்றநூல்மறையாளர் கண்ணபுரத்
தம்மானைக்கண்டாள்கொலோ. (அ)

பதம்.	உரை.
கொற்ற	(ஆஶ்ரிதருக்குஉபகரித்தத்தால் வந்த) ஜயமுடையவனாய்,
ஒன்று	அத்விதீயனான
புள்	பெரியதிருவடியின்
ஏறி	வீற்றிருந்து [மேலே
மன்று ஊடே	ஸர்வஸாதாரணஸ்தலத்திலே
வருகின்றான்	வாராநின்றான் என்கின்றாளால்;
வெற்றிப்போர்	கேவலயுத்தம் செய்வதாலேயே
இந்திரர்க்கும்	இந்த்ரன் என்று சொல்லும்படியான நஹுஷாதிகளுக்கும் [த்ரனோடு
இந்திரனே	இந்த்ரனானதேவேந்
ஒக்குமால்	ஸத்ருஶனாகும்படியானவன் என்கின்றாளால்; [டைய
அவன்	அந்த எம்பெருமானு
ஆகம்	திருமார்விலே
பெற்றக்கால்	அணையப்பெற்றால்
பெண்	பெண்ணாக
பிறந்தோம்	பிறந்தநாங்கள் [மோ
உய்யோமோ	உஜ்ஜீவிக்கமாட்டோ என்கின்றாளால்;
கற்ற	அப்யஸிக்கப்பட்ட
நூல்	ஶாஸ்த்ரங்களையும்
மறை	வேதங்களையும்
ஆளர்	உடையவர்கள் வர்த்திக்கிற
கண்ணபுரத்தம்மானைக் கண்டாள்கொலோ. (அ)	

அநு.—எட்டாம்பாட்டு. (கொற்றவித்யாதி) கீழே இவள் அவனடியைப் பிடித்தும், மடியைப்பற்றியும்படியை அநுபவித்ததைக்கேட்டவர்கள் இவளுக்கு இப்படி அநுபவம்செல்லாநின்றால் முலையில் பூம்பயலைபிறக்கும்படி விரஹவ்யஸநம் நடக்கைக்கடியென்னென்றுகேட்க, இவளுக்குக்கிட்டவந்து ஸம்ஶ்லேஷித்ததில்லாதே அதூரவிப்ரக்ருஷ்டமாய் வந்தாப்போலே தோற்றுகையாலே தன்னிடத்திலே வரவில் நிர்ணயம் பிறவாதே விரஹக்லேசத்தையடைந்தாளென்று அவள் வார்த்தையாலே அறிந்தாளாக அநுவதிக்கிறாளென்று ஸங்கதி.

அவ.—எட்டாம்பாட்டு. பிள்ளையமுதனார் இத்திருமொழிக்கு ப்ரவேசம் சொல்லாநிற்க, ராஜாக்கள் அந்தஃபுரக்கட்டிலே தெருவிலே பள்ளியந்துலாத்திலே ஏறி உலாவாநிற்பர்கள்காணென்றாப் போலே அநேகம்வாக்யசில்பங்களைப் பண்ணினார். அப்போது பாலயத்தாலே அவ்வடைவுகள் புத்திபண்ணப் பெற்றிலோம். அவற்றுக்கு இதில் பற்றாசேதென்று விசாரித்தோம். இதுவாகாதே என்று தெளிந்தோங்காணுமென்று இவ்வளவிலே பிள்ளை யருளிச் செய்தார்.

வ்யா.-(கொற்றப்புள்ளித்யாதி)ஸர்வஸாதாரணனானவன்விடாயர் இருந்தவிடங்களிலே சாய்கரகத்தைக் கொடுவந்து கொடுப்பாரைப் போலே, எல்லார்க்கும் உபகரிக்கும்அத்விதீயனானவன், வாஹநத்திலேஏறிஸர்வஸாதாரணஸ்த்தலத்திலே வாராநின்றான். "ஆர் இருஞ்சிக்கொள்ளப்புகுகிறார். ஆர் கையிலே பறியுண்ணப்புகுகிறான்" என்றறிகிலேனென்கின்றாள். வந்தபடி தெரியாமல் வந்து, தன் கண்ணுக்குள்ளே யிருக்கக்காணும் இவளுக்கு ஓடுகிறது. வரப்புக்கால் ப்ரதிபந்தகமில்லைகிடீரென்னா நின்றாள். (வெற்றிப்போரித்யாதி) வெறும்போரில் பூசலில் வந்தால் (க) "వీర్యే సాక్షాచ్ఛచీపతేః - வீர்யே ஸாக்ஷாச்சசீபதேஃ" என்னக்கடவதிறே. இந்த்ரனுக்கும் இந்த்ரனுண்டு மஹேந்த்ரன், வ்ருத்ரவதாதிகளாலே பட்டம்சூடினவன்; அவனோடொக்குமென்னாநின்றாள்.

பெரியதிருவடிமேலேறிவருவது - ராஜாக்கள் அந்தஃபுரத்துக்கு வருமாபோலே யிருக்கிறதென்று விவக்ஷித்து அரையர் இப்படி நிர்வஹித்தாரென்று ஸம்வாதத்துக்கு ஓரைதிஹ்யமருளிச் செய்கிறார் (பிள்ளையித்யாதி). (பள்ளியந்துலாம்) தண்டிகை. (வாக்யசில்பங்களை) வாக்யசாதுர்யங்களை.

"கொற்ற" என்றது-வெற்றியாய், அதுதானும் (உ) "దీనాన్ దానేన-జయతి- தீநாந் தாநேந - ஜயதி" என்றாப்போலே உபகரித்தத்தால் வந்த வெற்றியென்று விவக்ஷித்து ஸத்ருஷ்டாந்தமருளிச் செய்கிறார் (ஸர்வஸாதாரணேத்யாதி). "மன்றாடே" என்றவளுக்கு உட்கருத்து(ஆர் இருஞ்சியித்யாதி வாக்யத்வயத்தாலே). மேலுக்கவதாரிகை (வரப்புக்காலித்யாதி). வெற்றிப்போரே-கேவலயுத்தமே நிரூபகமாகவுடையரான இந்த்ரனென்று சொல்லும்படியான நஹுஷன் போல்வார்க்கும் இந்த்ரனான சசீபதியை ஒக்குமென்று சப்தார்த்தம் விவக்ஷித்தருளிச் செய்கிறார் (வெறுமித்யாதி வாக்ய சதுஷ்டயத்தாலே).

(க) ரா-அயோ-உ-௩0. (உ) ரா-அயோ-கஉ-உக.

(பெற்றக்காலித்யாதி) அவன்மார்விறே அணையப்பெற்றால் (௧) "𑌸𑍃𑌷𑍍𑌟𑌸𑍍𑌤𑍍𑌵𑌂 𑌵𑌨𑌵𑌾𑌸𑌾𑌯-ஸ்ருஷ்டஸ்த்வம் வநவாஸாய" என்று அவனோடே அணையப்பெறில் ஜீவித்தல், இல்லையாகில், (௨) "𑌅𑌸𑌨𑍍𑌨𑍇𑌵-அஸங்நேவ" என்று நஶிக்கும்படியாயிருக்கிறநாங்கள் உஜ்ஜீவிப்போமென்னாநின்றாள். அவ்வூரில் விழுவேடெடுத்துக்கொண்டறிதல்; புஸ்தகம் பார்த்தறிதல் செய்வாரில்லை; ஆசார்யோச்சாரணானுச்சாரண க்ரமத்தாலே கற்ற ஶாஸ்த்ரங்களையும் வேதங்களையுமுடையராயாயிற்றெல்லாருமிருப்பது. அவ்வூரில் அவனையே கண்டாளாகவேண்டாவோ?, வேதமயன்மேலே வருகிறபடியையும் (௩) "𑌯𑌮𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌮𑌾𑌹𑍁𑌃-யமிந்த்ரமாஹு:" இத்யாதிப்படியையும் சொல்லும்போது. .... (௮)

மூ.— வண்டமரும் வனமாலை மணிமுடிமேல்
மணநாறுமென்கின்றாளால்
உண்டிவர்பாலன்பெனக்கென்றொருகாலும்
பிரிகிலேனென்கின்றாளால்
பண்டிவரைக் கண்டறிவதெவ்வூரில்
யாமென்றே பயில்கின்றாளால்
கண்டவர்தம்மனம்வழங்கும் கண்ணபுரத்
தம்மானைக்கண்டாள்கொலோ. (௯)

பதம்.	உரை.	பதம்.	உரை.
வண்டு	வண்டுகளானவை	மணம்நாறும்	விசேஷமாய் பரிமளம் வீசாநின்றது என்கின்றாளால்;
அமரும்	படிந்து கிடக்கிற		
வநமாலை	திருத்துழாய் மாலையா		
மணி	மணிகளழுத்திய[னது	இவர்பால்	இவர் பக்கலிலே
முடிமேல்	திருவபிஷேகத்தின் மேலே	எனக்கு	எனக்கு
		அன்பு	ஆசையானது

"அவனாகம்-பெற்றக்கால்" என்றந்வயித்தருளிச்செய்கிறார் (அவனித்யாதி). (விழவேடெடுக்கை) க்ரந்தாபஹரணம்பண்ணுகை. (புஸ்தகம்) க்ரமாகதமான க்ரந்தம். இத்தால் ஓராசார்யன் ஸந்நிதியில் கல்லாமையைச் சொல்லுகிறது. வேதவான்களிருந்தவூரில் அவனைக் கண்டாளென்கைக்கு அடையாளமேதென்ன; இவள் வார்த்தையிலே அறியலாமென்கிறார் (அவ்வூரிலித்யாதி). "யமிந்த்ரமாஹு:" என்றது-ஸர்வேஶ்வரனையே இந்த்ரஸத்ருஶனாக வேதம் சொல்லுகிறதென்றபடி. ... ... (௮)

---

(௧) ரா-அயோ-௪0-௫. (௨) தை-ஆ-௬-௧. (௩)

உண்டு	இருக்கின்றது
என்று	என்று சொல்லி
ஒருகாலும்	ஒருகாலும்
பிரிகிலேன்	பிரியமாட்டுகிறிலேன் என்கின்றாளால்;
பண்டு	முன்பு
யாம்	நாம்
இவரை	இந்த எம்பெருமானை
எவ்வூரில்	எந்த திவ்யதேசத்தில்
கண்டு	கண்ணாரக்கண்டு
அறிவது	அறிந்தது
என்றே	என்கிறபடியே
பயில்கின்றாள்	வாய்வெருவாநின்றாள்;
ஆல்	கஷ்டம்
கண்டவர்	சவரிராஜனை, ஸேவித்தவர்கள்
தம்	தங்களுடைய
மனம்	மனதை
வழங்கும்	ஸர்வஸ்வதானமாய் கொடுக்கும்படி ஸுந்தரனை

கண்ணபுரத்தம்மானைக் கண்டாள் கொலோ. (௯)

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (வண்டமரும்) தன்னிலத்தில் நின்ற போது மணம் மட்டமாய், திருக்குழலிலே ஏறினவாறேஇரட்டிற்றாயிற்றிருப்பது. வண்டுகள் பரிமளம்போலேபடிந்துகிடக்குமாயிற்று. (உண்டிவர்) பண்டு உனக்கு இவ்விஷயத்திலே அன்புண்டென்று சொன்னால் இல்லாமை ஸாதிக்குமவள்தானே, இப்போது எனக்கு இவன்பக்கலிலே அன்புண்டென்னாநின்றாள். அத்தாலே பலித்ததென்னென்ன; ஒருகாலும் உங்களை அற ஸங்யஸித்துச் சொன்னேனென்கிறாள்.

(பண்டித்யாதி) முதல் நாள்கண்டால் ஸ்வாபாவிகமான ஸ்வாமித்வத்தாலும் முகத்தில் தண்ணளியாலுமாக, "முன்பே கண்டறியும் முகமாயிருந்ததீ, எவ்வூரில்தான் கண்டது" என்னும்படியிருக்

அரு.—ஒன்பதாம்பாட்டு. (வண்டித்யாதி) கீழ்ப்பாட்டில் "மன்றாடே வருகின்றான்" என்னச் செய்தே கிட்டவந்தானாகக்கொண்டு திருத்துழாய் மணம் அலையெறியும்படியைச் சொல்ல, இத்தைக்கேட்டவர் "இதென்" என்று கேட்க, நாணிலியேனுக்கு முன்பு அன்புண்டென்னா நின்றுகொண்டு அவனைக் கிட்டக்கண்டு அழகில் வைலக்ஷண்யத்தை நிர்ணயிக்கமாட்டாமல் ஆஶ்சர்யப்படுகிறாளென்று ஸங்கதி.

"அமரும்" என்றவர்த்தமாநார்த்தம் (வண்டுகளித்யாதி). * அவனையொருகாலும் பிரிகிலேனென்ற இவர் எல்லாரையும் விட்டமை பலித்ததென்றருளிச் செய்கிறார். (ஒருகாலுமித்யாதி).

கும்; சி(ப)ரபரிசயம்பிறந்தால் பின்பு "முன்போரிடத்திலும் இவனைக் கண்டறியோம்" என்னும்படியாயிருக்கும். நித்யா[உ]பூர்வமானவிஷயமென்றபடி. சொன்னவிரண்டர்த்தத்தையும் அது காட்டுமோவென்ன; "பயில்கின்றாளால் என்றது கண்டாயே, எற்றைக்கும் வார்த்தை இதுவேயன்றோ, இப்படியாக வேண்டாவோ" என்றுஜீயர். இருந்தபடியால் அவ்வூரிலேபுக்கு அவனைக் கண்டாளாக வேணுமென்னென்ன; நெஞ்சிழந்தார் வார்த்தையாயிராநின்றதே இவளது; அபஹ்ருதசித்தை யன்றாகில், தாய்முன்னே அவ்வார்த்தை சொல்லாளிறே. வந்துகண்டவர்கள் நெஞ்சை மேலெழுத்திட்டுக் கொடாநிற்பர்களாயிற்று. .... (௬)

ப்ரதமத்திலே கண்டபோது முன் கண்டாப்போலவும், பரிசயம் பண்ணும்போது காணாதாப்போலவுமாகிற இவ்விரண்டர்த்தத்தையும், "கண்டறிவதெவ்வூரில்" என்கிற சப்தம் தானே காட்டும்படி எங்ஙனேயென்னும் சங்கையை அநுவதிக்கிறார் (சொன்னவித்யாதி). "பண்டு இவரைக்கண்டறிவதெவ்வூரில்" என்கையாலேமுன்கண்டாப்போலவும், "எவ்வூரில் எங்கேகண்டது" என்கிற ஸ்வர விசேஷத்தாலே காணாதாப்போலவும் தோற்றுகையாலே ஒரு சப்தந்தானே இரண்டையும் காட்டுமென்று உத்தரம் திருவுள்ளம்பற்றி இரண்டு நியாமகமருளிச் செய்தாரென்கிறார் (பயில்கின்றாளித்யாதி வாக்யத்ரயத்தாலே). அதாவது -"பயில்கின்றாள்" என்கிறவர்த்தமாநபலத்தாலும், ப்ரதமதசையிலும் இதுவேவார்த்தையாகையாலும் இப்படியேஇரண்டர்த்தமாகத் தாத்பர்யம் கொள்ளவேணுமென்கை. அநுபவம் நித்யமாய்ச்செல்லும்போது, விஷயம்-நித்யா பூர்வமாயிருக்கவேண்டுகையாலே அதுக்குடலாக ப்ரதமதசையிலே காணாதே கண்டவனுக்கும் கண்டாப்போலேயிருக்குமென்றும், பரிசீலிக்கப்பரிசீலிக்க, கண்டறியோம் கண்டறியோமென்றும் தோற்றியிருக்கும். இங்ஙனன்றாகில் இதரவிஷயத்துக்கும் இவ்விஷயத்துக்கும் வாசியற்றிருக்கும். வர்த்தமாநஸித்தமாக உத்தரோத்தராநுபவம் கிட்டாதென்று கருத்து. (இருந்தபடியால்) இவள் வார்த்தையிருந்தபடியால். (என்னென்ன) என்றது - என்கொண்டென்ன வென்றபடி. சவரிப்பெருமாளைக் கண்டவராயிருக்கு மவ்வூரிலுள்ளார், தங்கள் மநஸ்ஸை, "வழங்கும்" ஸர்வஸ்வதாநமாகக் கொடுக்கும்படி இங்கிருக்குமவனை யென்று விசேஷிக்கையாலே, "இவளும் அவர்களைப் போலே நெஞ்சைக்கொடுத்துவிட்டாள்" என்று பலிக்குமென்று திருவுள்ளம் பற்றி கீழில்ப்ரஶ்நத்துக்கு உத்தரம் (நெஞ்சிழந்தாரித்யாதி). சப்தார்த்தம் (வந்தித்யாதி). மேலெழுத்திடுகை-தாங்களே ஸம்மதிக்கை. ... ... (௬)

மூ.— மாவளருமென்னோக்கி மாதரான்
மாயவனைக் கண்டாளென்று
காவளரும் கடிபொழில்சூழ் கண்ணபுரத்
தம்மானைக்கலியன்சொன்ன
பாவளரும் தமிழ்மாலை பன்னியநூலிவை
யைந்து மைந்தும்வல்லார்
பூவளரும்கற்பகம்சேர் பொன்னுலகில்
மன்னவராய் புகழ்தக்கோரே. (௧௦)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

* * *

பதம்.	உரை.
மா	மான்போலே
வளரும்	விசாலமாய்
மென்	ம்ருதுவான
நோக்கி	பார்வையையுடைய
மாதரான்	பெண்ணானவள்,
மாயவனை	ஆஶ்சர்ய பூ (பூ) தனாய்,
கா	பூந்தோட்டம்போலே
வளரும்	தானே பரவாநின்ற
கடி	பரிமளத்தையுடைத்தான
பொழில்	சோலைகளாலே
சூழ்	சூழப்பட்ட
கண்ணபுரத்து	திருக்கண்ணபுரத்தில் எழுந்தருளி யிருக்கிற
அம்மானை	ஸ்வாமியான சவுரிராஜனை,
கண்டாள்	கண்ணாரஸேவித்தாள்
என்று	என்ற விஷயமாய்
கலியன்	ஆழ்வார்
சொன்ன	அருளிச்செய்த,
பா	சந்தஸ்ஸுக்கள்
வளரும்	வளராநின்ற,
நூல்	ஶாஸ்த்ரமாகிறநூலால்
பன்னிய	விஸ்தரிக்கப்பட்ட
தமிழ்மாலை	தமிழ்மாலாரூபமான
இவையைந்துமைந்தும்	இப்பத்துப் பாட்டையும்
வல்லார்	அப்யஸிக்கவல்லவர்,
பூ	புஷ்பங்கள்
வளரும்	வ்ருத்தியடையாநின்ற
கற்பகம்	கற்பகவ்ருக்ஷங்கள்
சேர்	சேர்ந்திருக்கிற
பொன்னுலகில்	பரமபதத்தில்
மன்னவராய்	ஸ்வாமிகளாய் (நித்யஸூரிகளால்)
புகழ்	புகழப்பட்டவராய்
தக்கோரே	ப்ராப்யராவர்கள். (௧௦)

வ்யா.—பத்தாம்பாட்டு. (மாவளருமித்யாதி). இனி இவள்

அரு.—பத்தாம்பாட்டு. (மாவளருமித்யாதி) "கண்டாள்கொலோ" என்று ஸம்ஶயித்ததாக கீழெல்லாமிருக்க, இங்கே "கண்டாள்" என்றுநிஶ்சயித்ததாக அநுவதிக்கப்போமோவென்ன (இனிஇவளித்யாதி). "மா" என்று

மீளாதபடியானாளென்றுதாயார் சொன்னவார்த்தையிறே. மான் போலேயாய் பரப்பையுடைத்தாய் ம்ருதுவான நோக்கையுடைய தன் அவயவசோபைக்கீடாக ஆஸ்சர்யபூதனானவனைக் கண்டாளென்று. (காவளரும் கடிபொழில்) காவில்கடியானது, அதாவது- சோலையில் பரிமளம், பூமியெங்கும் வெள்ளமிடாநின்றது. பொழில் - பூமி. காவானது சிலர் இட்டாக்கினாப்போலே தானே வளராநின்றுள்ள பொழில்சூழ்ந்த. அவைபோலேயாயிற்றுச் சூழ்ந்த சோலையுடைய விருப்பது. (பாவளரும்) சந்தஸ்ஸுக்களால் குறைவற்று, லக்ஷணோபேதமுமான. உபரிதநலோகங்களுக்கடைய, கற்பகத்தைச் சிறப்பாகச் சொல்லக்கடவர்கள். பரமபதத்தில் (க) "ஆண்மின்கள்" என்கிறபடியே தாங்களே நிர்வாஹகராய் இவ்வருகுள்ளாரடங்கலும் ஸாத்யராவர்கள். .... (க௦)

பெரியவாச்சான்பிள்ளைதிருவடிகளே சரணம்.

எட்டாம்பத்து முதல்திருமொழி முற்றிற்று.

நாலுகால் பதார்த்தமாகையாலே (மான்போலே) என்றது. "காவில் - கடி பொழில்சூழ்-வளரும்" என்றந்வயித்தருளிச்செய்கிறார் (காவில்கடியித்யாதி). காவுபோலே- பூந்தோட்டம்போலே, ஶ்ரத்தையோடே தானேவளருமதாய், கடி - பரிமளத்தையுடைத்தான, பொழில் - சோலை, அத்தாலே சூழப்பட்ட திருக்கண்ணபுரம் என்றர்த்தாந்தரமருளிச் செய்கிறார் (காவானதித்யாதி வாக்யத்வயத்தாலே). (அவை) பூந்தோட்டங்கள். "பன்னிய" நூலாலே பன்னப்பட்ட வென்றாய் அருளிச்செய்கிறார் (லக்ஷணோபேதமான) என்று. (இவ்வருகுள்ளாரடங்கலும்) இங்கிருந்து கற்றாரடங்கலும். (ஸாத்யராவர்கள்) நித்யஸூரிகளுக்கு ப்ராப்யராவர்களென்று கருத்து. ... ... (க௦)

ஜீயர்திருவடிகளே சரணம்.

அந.—தெள்ளியீர்ப்ரவேசம்.—கீழ்த்திருமொழியில் "எற்றேகாண்" என்றும் "ஆரானும் காண்மின்கள்" என்றும் இவள் வார்த்தையாலே இவ்வுபதேசம்பலித்து, திருத்தாயார்க்கும் சவரிப்பெருமாளிடத்திலே பாவநாப்ரகர்ஷமுண்டாயிற்றென்று திருவுள்ளம்பற்றி, வினவவந்தவர்களுக்குத் தன் பெண்படி சொல்லுகிறவள் சவரிப்பெருமாளை முன்னிட்டே இவள் விரஹதசை சொல்லுகைகூடுமோ, ஸக்தியுண்டாகில் விரஹமில்லையென்று சங்கையிலே

(க) தி-வாய்-க௦-கூ-சு.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

பெரியதிருமொழி

எட்டாம்பத்து இரண்டாந்திருமொழி

தெள்ளியீர் ப்ரவேசம்.

வ்யா.—தெள்ளியீர் ப்ரவேசம்—"உண்டிவர் பாலன்பெனக்கு" என்று தன்மகள் பாசுரத்தைக்கேட்ட திருத்தாயார் இவள் அபஹ்ருத சித்தையானாள்போலே யிருந்தது. (க) "𑌪𑍁𑌂𑌸𑌾𑌂𑌦𑍃𑌷𑍍𑌟𑌿𑌚𑌿𑌤𑍍𑌤𑌾𑌪𑌹𑌾𑌰𑌿𑌣𑌂- பும்ஸாம்த்ருஷ்டி- சித்தாபஹாரிணம்" என்கிற சக்ரவர்த்தித் திருமகனைக் கண்டாளல்லள். * கண்டவர்தம்மனம்வழங்கும்கண்ணபுரத்தம்மானைக் கண்டாளாமித்தனையென்று நினைத்து, முன்னிலையாய், சவரிப்பெருமாள்முகத்தைப்பார்த்து, "இவள் நெஞ்சைப் பறிக்கையன்றிக்கே கையில் வளையையும் பறிக்கவேணுமோ" என்கிறாள். கண்டவர்தங்களுடைய கண்ணையும் நெஞ்சையும் பறித்துக் கொண்டுபோமவரிறே சக்ரவர்த்தித் திருமகன்; கண்டபோதே தந்தாமுடைய நெஞ்சுகளைக் கொள்ளலாகாதோவென்று எழுதிக் கொடுக்கும்படியிறே க்ருஷ்ணன் வடிவழகிருக்கும்படி. .... *

மூ.—தெள்ளியீர் தேவர்க்கும் தேவர் திருத்தக்கீர்
வெள்ளியீர் வெய்ய விழுநிதிவண்ணரோ
துள்ளுநீர் கண்ணபுரம் தொழுதாளிவள்
கள்வியோ கைவளை கொள்வது தக்கதே. (க)

பதம்.	உரை.	பதம்.	உரை.
தெள்ளியீர்	அறிவுடையராய்,	வெய்ய	காய்ச்சின
தேவர்க்கும்	நித்யஸூரிகளுக்கும்	விழுநிதி	நல்லபொன்போன்ற
தேவர்	நிர்வாஹகராய்,	வண்ணர்	வடிவழகுவுடையரான (உமக்கு)
திரு	பெரியபிராட்டியாருக்கு		
தக்கீர்	தகுதியானவராய்,	கை	(பெண்ணினுடைய) கையிலிருக்கிற
வெள்ளியீர்	சுத்தஸ்வபாவராய்,		

ஸங்கதி யருளிச்செய்கிறார் (உண்டிவர் பாலித்யாதி). சக்ரவர்த்தித் திருமகனன்றிக்கே இவ்விஷயத்திலே நெகிழ்ந்தாளென்கைக்கு இங்குத்தைக்கு ஆதிக்யமேதென்ன வருளிச்செய்கிறார் (கண்டவரித்யாதி). ... ... *

(க) ரா-அயோ-ங-உகூ.

வளை	வளையை	துள்ளும்	களித்துவர்த்திக்கிற
கொள்வது	அபஹரித்துக்கொடு போகையானது	கண்ணபுரம்	திருக்கண்ணபுரத்தை
தக்கதோ	தகுமோ?	தொழுதாள்	ஓர்அஞ்ஜலி பண்ணினாள்,
இவள்	இந்தப்பெண்,	கள்வியோ	இவள் கபடியோ?
நீர்	(அசேதநமான)ஜலமும்	ஓ!	இதென்ன அந்யாயம்!

வ்யா.—முதற்பாட்டு. (தெள்ளியீரித்யாதி) கைவளைகொள்வது தக்கதேயென்ன; என்றாள்; "நமக்குக்கைவளைகொள்ளத் தகாமையென்" என்று சவரிப்பெருமாள்கேட்க, தகாதென்னுமிடத்தை உபபாதிக்கிறாள் கீழ். (தெள்ளியீர்) தெள்ளிமை - அறிவுடைமை. நீர்தாம் சாலவாசியறிவீரொருவரன்றோ ? (க) "లోకే పురుషసారజ్ఞః పురుషాన్తరకోవిదః-லோகேபுருஷஸாரஜ்ஞஃ புருஷாந்தரகோவிதஃ" என்றிறே பெருமாளைச் சொல்லுவது. அப்படியே லோகத்தில் புருஷர்களைக்கண்டால், "இவன் இன்னான், இவனுடையஅளவிது" என்று வாசியறிந்துபோரக்கடவ நீர், பெண்பிறந்தார் வாசியறிய வேண்டாவோ?; உம்முடைய ஸர்வஜ்ஞதைக்குப்போருமோ இவள் கையில் வளையை அபஹரிக்கை. அதுகிடக்கிடும். (தேவர்க்கும் தேவர்) (உ) "தெள்ளியார்பலர்கைதொழும் தேவனார்" என்கிறபடியே, அக்லிஷ்டஜ்ஞாநரான நித்யஸூரிகளுக்குநிர்வாஹகராயிருக்கக் கடவநீர், ஓர் அப(ப)லைகையில்வளையை அபஹரிக்கைஉம்முடையமேன்மைக்குப்போருமோ?. நாட்டில் க்ஷுத்ரதேவதைகளும்(ந)[నాదా

அரு.—முதற்பாட்டு. (தெள்ளியீரித்யாதி)"தெள்ளியீர்"இத்யாதியான வைந்துபதங்களும் "தக்கதே" என்றதுக்குச்சேர உபயோகிக்குமென்கிறார் (கைவளையித்யாதி). நாம்ஸர்வஜ்ஞரான மாத்ரத்திலே உம்முடைய பெண்பிள்ளையண்டையிலிருக்கவேணுமோ? (ச) "సదా పశ్యన్తి - ஸதாபஶ்யந்தி" என்று இமைக்கொட்டாமலநுபவிப்பித்ததில்லையோவென்று கருத்தாகக் கொண்டு அதுகிடக்கிடுமென்று, மேலேயொன்றைச் சொல்லுகிறானென்று திருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிறார் (அதித்யாதி). "தேவர்க்கும்" என்கிற சகாரம் அப்ராதாந்யத்திலேயாக்கி, சில அப்ரதாநதேவர்க்கும் கொடுக்கையே ஸ்வபாவமன்றோ? உமக்குக் கேட்கவேணுமோவென்றும் தாத்பர்யத்தை யருளிச்செய்கிறார் (நாட்டிலித்யாதி). பெருமாளுக்குக்கொடுக்கைஸ்வபாவமென்னுமத்தை

(க) ரா-அயோ-க-கஅ. (உ) நா-தி-ச-க. (ந) (ச) ஸாம-உத்தர-கஅ-உ-ச.

తుందేవావరమర్హన్తి - நாதாதும் தேவாவரமர்ஹந்தி] என்கிறபடியே மநுஷ்யர்களுக்கு ப்ரத்யக்ஷத்ருஷ்டராளுல் வரங்கொடுத்தல்லது போகாரிறே. அத்தேவதைகள் தாங்கள் மநுஷ்யஸ்த்தாநீயரென்னும்படியிறே நித்யஸூரிகள்படி யிருப்பது. (க) "యత్రపూర్వేసాధ్యాస్సన్తి దేవాః -யத்ரபூர்வே ஸாத்த்யாஸ்ஸந்தி தேவாః" என்னக்கடவதிறே. அவர்களுக்கும் அபேக்ஷிதப(ஃ)லங்களைக்கொடுக்கக்கடவீராயிறே தேவரிருப்பது. அந்தக்ஷுத்ர தேவதைகளுடையபடி இதுவாளுல் உமக்குக் கொடுக்கத்தகுமோ? கொள்ளத்தகுமோ வென்கிருள். பெருமாள் திருவயோத்யையில் நின்றும்போந்து ஶ்ருங்கிபேரபுரத்திலே எழுந்தருளி, ஶ்ரீகுஹப்பெருமாள் மலைத்தேனையும் காட்டுப்பழமும் கொண்டு சென்று உபஹாரமாகக்கொடுக்க, "நாம் கொள்ளப் பிறந்தோமல்லோம்காணும், கொடுக்கப் பிறந்தவர்காணும்" என்றருளிச் செய்தாரிறே; ஆளுல் பிறருடைமை கொள்ளத் தகுமோ? கொடுக்கத்தகுமோ வென்கிருள். உம்முடைய மேன்மை கிடக்கிடும். (திருத்தக்கீர்) (உ) "అస్యేశానా జగతో విష్ణుపత్నీ - அஸ்யேஶாநா ஜகதோ விஷ்ணுபத்நீ" (ங) "ఈశ్వరీం సర్వభూతానామ్-ஈஶ்வரீம் ஸர்வபூதாநாம்" என்று சொல்லுகிறபிராட்டிக்குத்தகுதியாயன்றோ தேவரிருப்பது. லோகத்தில் சேதநர் மூன்றுகோடியாயிறே யிருப்பது;—நித்யரும், முக்தரும், முமுக்ஷுக்களும், என்று த்ரிவிதமாயிறேயிருப்பது. ஸம்ஸாரிகள் (ச) "అసన్నేవ - அஸந்நேவ" யிறே. அதில் நித்யஸூரிகளுக்கும் அவ்வருகாய் தேவரோடே ஒப்புச் சொல்லலாம்படியிறேபிராட்டியிருப்பது. (ரு) "அலர்மேல் மங்கை" என்றும், (சா) "తుల్యశీలవయోవృత్తాం తుల్యాభిజనలక్షణామ్। రాఘవోఽర్హతి- துல்யஶீலவயோ வ்ருத்தாம் துல்யாபிஜநலக்ஷணம் ராகவோ௨ர்

தர்ஶிப்பிக்கிருர் (பெருமாளித்யாதி). நம்முடைய மேன்மைக்குக்குறையென்? நாம் கொடுக்கவே பிறந்தோமாகிலும், * நூரீணாமுத்தமையான இவளைப் பிரியமாட்டாமையொழிந்தோ மித்தனையன்றோ வென்னுமவர் கருத்தையுட்கொண்டு மேலும் சொல்லுகிருளென்னுமிடத்தை ஸூசிப்பிக்கிருர் (உம்முடையவித்யாதி). தகுதியைஉபபாதிக்கிருர் (லோகத்திலித்யாதி). பத்த(బద్ధ)ருமுண்டேயென்ன (ஸம்ஸாரிகளித்யாதி) நீர் அவளையும் பிரியாதேயிருக்கிற

(க) புருஷஸூ. (உ) யஜுர்-ச-ச-ஙஎ. (ங) ஶ்ரீஸூ.
(ச) தை-ஆ-சா-க. (ரு) தி-வாய்-சா-க0-க0. (சா) ரா-ஸு-கசா-ரு.

ஹாதி” என்றும் சொல்லுகிறபடியே தகுதியாயிறே யிருப்பது; ஆனால் உம்முடைய ப்ரணயித்வத்துக்கு நமஸ்காரம். ஒரு பெண் பெண்டாட்டியை மார்விலே வைத்துப் பார்த்துக்கொண்டிருக்கிறீர் ஓர் அப(ப)லைகையில்வளையை அபஹரிக்கைத் தகுதியோவென்கிறாள்.

(வெள்ளியீர்) உம்முடைய ப்ரணயித்வம் கிடக்கிடும். நீர்தாம் ஹேயப்ரதிப(ப)டரன்றோ? ஒருத்திகையில்வளையை அபஹரிக்கை உமக்கு ஹேயமன்றோ. அதவா-நீர்தாம் சுத்த(த)ஸ்வபாவரே, பரத்ரவ்யாபஹாரம்பண்ணுகை உம்முடைய சுத்திக்குப்போருமோ?. (௧) “[ஸர்வேஷாம் ஶௌசாநா மர்த்தஶௌசம்-யோர்த்தேசுசிஸ்ஸஹி ஶுசிர்நம்ருத்வாரி சுசிஶ்ஶுசி:” என்கிறபடியே த்ரவ்யசுத்தியே ஶுத்தியென்றும், மண்ணாலும் நீராலும்பிறக்கும் ஶுத்தி, ஶுத்தியல்லவென்றதிறே. அதவா “வெண்மை”என்று ஆர்ஜவமாயிருக்கிறது. மனோவாக்காயங்களினுடைய ஸத்யதை வருகிறபோது, “பிரியேன், பிரியில் தரியேன்” என்றுசொன்ன சொலவுக்கும் போகட்டுப்போகைக்கும் என்னசேர்த்தியுண்டு. (வெய்யவிழுநிதிவண்ணர்) “உம்முடையஸ்வரூபம்கிடக்கிடும். இவ்வடிவைப்படைக்கவும் கொடாதிருக்கவும்தகுமோ?, இவ்வடிவை அபேக்ஷித்தார்க்குக் கொடுக்கவன்றோதகுவது” என்கிறாள். வெய்ய-காய்ச்சின, விழுநிதி-நல்லபொன்; இத்தால் (௨) “சுட்டுரைத்த நன்பொன்னுன் திருமேனி” என்கிறாள். “வெய்ய” என்கையால் - சுட்டுரைத்தவென்

தறிவோம், அதுக்கு நமஸ்காரமென்றுஉட்கருத்தையருளிச்செய்கிறார் (ஆனவித்யாதி). முன்பு ப்ரமாணத்தைப் பண்ணுவித்துக்கொண்டு, ஜநக குலஸுந்தரியைக் காட்டிலே விட்டதறியோமோவென்று கருத்து.நாம் (௩) “நஜீவேயம்க்ஷணமபி - நஜீவேயம்க்ஷணமபி” என்றிருக்குமவனன்றோ? மார்விலே வைத்துக்கொண்டே யிருக்கிறோம், லோகாபவாத பீதியால்அனுப்பினதைக் கொண்டு ப்ரணயித்வத்துக்கு நமஸ்காரமென்கிறதென் னென்ன சொல்லுகிறாளென்கிறார் (ஒருவித்யாதி).

“நமக்குப்ரணயித்வம்போகவேணுமோ ? நம்முடைய ஸ்வரூபம் ஸ்வதந்த்ரமன்றோ? வேண்டினபோதுவேண்டினார் கைவந்திருப்போமோ” என்னும் அபிப்ராயத்தின்மேலே உன்ஸ்வரூபத்துக்குத் தான்சேருமோ வென்கிறாளென்றத்தை யருளிச்செய்கிறார்(உம்முடையவித்யாதி). ஸ்வரூபக (௪) த

---

(௧) (௨) தி-வாய்-௩-௧-௨. (௩) ரா-ஸு-௬௬-௧௦.

றது. “விழுநிதி” என்கையாலே நன்பொன்னென்கிறது. அதவா-“வண்ணம்” என்று-ஸ்வபாவமாய், நிதியானஸ்வபாவத்தைச்சொல்லுகிறது. அப்போது, பிறர்க்கு உடைமையாமத்தனைபோக்கி, பிறருடைமையை அபஹரிக்குமோவென்கிறாள். இவன்படியை நேராகப் பேசினான்; தன்மகள்படியை முன்னாருக்கொண்டாள்; இவன்படி இதுவாவதாம்; இவள்படிஇதுவாவதாம்; இதென்ன அந்யாயமென்கிறாள்.

இப்படி இவள் கூப்பிட்டவாறே*அயர்வறுமமரர்களதிபதியான பெரியமேனாணிப்போடேயிருக்கிற சவரிப்பெருமாள், “ஒரு பெண் பெண்டாட்டி கூப்பிடாநின்றாள், அதுக்கடியென்” என்று விட்ட வாசலாலேபுறப்பட்டு எதிரேவந்து “வாரீர் எம்மைநீர் கூப்பிடுகிறதென்”என்ன; “கைவளைகொள்வது தக்கதே” என்கிறாள். நீயே சொன்னாயிறே “திருத்தக்கீர்”என்று; அத்திருவின்ஸ்வபாவம் இவளுக்குண்டானபோதன்றோ கையில்வளையைக்கொள்ளத்தகாதொழிவது. அவளுக்குஸ்வபாவமேதென்னில்? ஸ்வலாபத்துக்கு (க)“తత్తస్య సదృశంభవేత్ - தத்தஸ்ய ஸத்ருஶம் பவேத்” என்றன்றோ அவளிருப்பது. இவள்ஸ்வபாவம் ஸ்வலாபம் “ஸ்வயத்நஸாத்யம்” என்றிருந்

ஹேயப்ரதிபடதை- “வெண்மை” என்று கீழருளிச்செய்து, குணகதமான ஹேயப்ரதிபடதையாக விவக்ஷித்து அத்தை இரண்டுவகையாகவருளிச்செய்கிறார் (அதவேத்யாதி). (ஸத்யதை,) ஏகரூபதை. “உம்முடைய பெண்ணைக் கையில் வளையை நான் கையாலே கழற்றிக்கொண்டதுக்கு ப்ரமாணமில்லாமையாலே சுசித்வத்துக்குக்குறையில்லை, (உ) “తేనేదంపూర్ణంపురుషేణ- தேநேதம் பூர்ணம் புருஷேண” என்கிற ப்ரமாணமுண்டாகையாலே நான் பிரிந்தவனுமல்லன், அத்தால் ஆர்ஜவத்துக்குக் குறையில்லை; அதவ என் ஸ்வரூபத்துக்கும் ஹேயப்ரஸக்தியில்லையென்று சொல்லவல்லனென்று கருதி “பரார்த்தமான வடிவைப்படைத்தும்பிரிந்தாய்” என்கிறாளென்றருளிச்செய்கிறார் (உம்முடையவித்யாதி). ஸ்வரூபமென்றது-குணங்களுக்கு முபலக்ஷணம். கீழ்பதங்களையும் தொழுதாளென்றத்தையும் கடாக்ஷித்தது, “ஓ” என்றதுக்குத் தாத்பர்யமருளிச் செய்கிறார் (இவன்படியித்யாதி). நேராகஸ்வரூபரூபகுணவிபூதிகளெல்லாம் மின்னிமுன்னே தோற்றுகையாலே கூப்பிடும்.

மேலுக்கவதாரிகை (இப்படியித்யாதி-உரைக்க நின்றாரென்னுமளவும்).

(க) ரா-ஸு-௩௯-௩௦. (உ) ஶ்வே-௩-௯.

தாளே; இன்னமும் "விழிநிதிவண்ணர்" என்று ஸ்வபாவம் சொன்னாயே. "அந்நிதியுடையவன் கொடுக்கக் கொள்ளுமதொழிய மேல் விழுந்துகொள்ளுகை ஆத்மாபஹாரிகள்க்ருத்யமன்றோ? ஆனபின்பு இவ்வளையைக்கொள்ளத்தகுங்காண்" என்று சவரிப்பெருமாள் இதுக்கும் உறைக்க நின்றார். (துள்ளுநீர் கண்ணபுரம்தொழுதாளிவள் கள்வியோ?ஓ)படுகுலை படுகுலையென்கிறாள். தாபஹரமானதேசமாகையாலே அத்தேசஸ்வபாவத்தாலே ஓரஞ்ஜலிபண்ணினாளென்னா, இவளை ஆனைக்கிடவேணுமோ? (துள்ளுநீர்) அசேதநமான ஜலமும் தன்னபிமதம்பெற்று களித்து வர்த்திக்கிற தேசத்திலே தன்சைதந்யம் தோற்ற ஓரஞ்ஜலிபண்ணினாளென்னா, இதுகுறையாகவேணுமோ?. (கண்ணபுரம்தொழுதாள்) பராவஸ்த்தையைத் தொழுதாளோ? வ்யூஹங்களைத் தொழுதாளோ? அவதாரங்களைத் தொழுதாளோ? அர்ச்சாவதாரத்தில் நீர் நின்ற ஊரையன்றோ இவள் தொழுதது. (தொழுதாள்) ஆத்மாபஹாரியென்றிறே நீர் சொல்லிற்று. தொழுகை - ஆத்மாபஹாரிக்ருத்யமோ? (க) "𑌨𑌨𑌮𑍇𑌯𑌮𑍍 - நநமேயம்" என்றிருக்கையன்றோ தொழாதவர்கள் க்ருத்யம். (உ) 𑌯𑌸𑍍𑌯𑌾𑌽𑌸𑍍𑌮𑌿-யஸ்யாஸ்மி" என்றன்றோ இவள்ஸ்வரூபம். (ங) "[illegible]-

---

(உறைக்க நிற்கை) இவள் வார்த்தைக்குச் சலியாதிருக்கை. (இதுக்கும்) என்கிற ச(𑌚)காரத்தாலே ப்ரதிபதமும் கல்பித்தப்ரத்யுக்திகள்சொல்லிக்கொள்வது என்னுமர்த்தத்தை ஸூசிப்பித்தார். இவ்வவதாரிகைக்குத்தாத்பர்யம்-அவன் புறப்பட்டவளவிலே முறைப்படுவாரைப்போலே "கைவளைகொள்வது தக்கதே" என்று அவன்பேரில் களவை ஏற்ற, அவன் இவள்பேரில்தானே களவைச்சுமத்த, "தொழுத விவள்கள்வியோ" என்கிறானென்று - தொழுகை ஸாதகமாய், அத்தாலே ஸ்வாதந்த்ர்யம் ஸூசிதமாய், அத்தாலே ஆத்மாபஹாரத்தையும், விழுநிதிவண்ணனாய் ஆசைப்படுகையாலே பரத்ரவ்யாபஹாரத்தையும் சுமத்தினானென்கை. (ஆனைக்கிடவேணுமோ) என்றது - அபராதிகளை ஆனையின்காலில் இடுவாரைப்போலே அந்தஃபுரபரிகரத்தை ஆனைக்கிடவேணுமோவென்கை. நீர்மாத்ரத்தைச் சொல்லுகைக்குக் கருத்து (அசேதநேத்யாதி). (ச) "𑌅𑌰𑍍𑌚𑍍𑌯𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌸𑌹𑌿𑌷𑍍𑌣𑍁𑌃 - அர்ச்ச்யஸ்ஸர்வஸஹிஷ்ணு:-" என்கிறபடியேயிருக்கிற உன்னுடைய ஊரைத் தொழுதால் நீர் இத்தைக் குறையாக்கப்போமோ வென்னுமத்தைவ்யாவர்த்திபூர்வகமருளிச்செய்கிறார் (பரேத்

(க) ரா-ய-ஙஙு-கக. (உ) (ங) ஸ்ரீதந்த்ரா-க-ரு. (ச) ர-ஸ்த-உ-கச.

ஸ்தீரூபஸ்-பக்தாநாம்-நதேரூபம்’’என்றன்றோஉன்ஸ்வரூபம். உன்னுடைமையானதுநோற்றஅஞ்ஜலிபண்ணினாளே. இவளுடைமையைக் கட்டிக்கொண்டுகிடக்கிற நீயன்றோ ஆத்மாபஹாரி. அவ்வளவேயோ ஸ்வர்ணாபஹாரமும் ஆத்மாபஹாரமும், பரமாத்மாபஹாரமும்மூன்றும் பண்ணினாய் நீயன்றோ வென்கிறாள். (இவள்கள்வியோ) இவளோகள்வி, நீயன்றோவென்கிறாள்.

(கைவளைகொள்வது தக்கதே) பிள்ளாய், தொழத்தொழ வெட்டுவாரைப்போலே தொழுதகையிலாபரணத்தைக் கழற்றுவாருண்டோ? கீழ்ச்சொன்ன “சிலையிலங்கு பொன்னாழி’’ என்கிறதன் கையில் வளைகளைக்கழற்றி இவள்கையிலிட்டுப் பார்த்துக்கொண்டிருக்கவன்றோ தகுவது. (தக்கதே) நாட்டில்க்ஷுத்ரப்ரணயிகளும் ப்ரணயிநிகளாயிருப்பார்க்குச் சிலஉபஹாரங்களைக் கொடுத்துக் கொடுபோரக் கடவதாயிருக்கும். பரமப்ரணயியாயிருக்கிற உனக்

யாதி). பூ(ஜ்ஞா)தநிர்தேசதாத்பர்யம்(உன்னுடைமையானதித்யாதி). “கள்வியோ’’ என்னவே இவளென்னுமது ஸித்தமாயிருக்க, மீளவும் “இவள்’’ என்கையாலே, இதுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார்(இவளித்யாதி). “வண்ணம்’’ என்றது- திருமேனியானபக்ஷத்திலே ஒருதாத்பர்யமருளிச்செய்து, வண்ணம்- ஸ்வபாவமென்றபக்ஷத்திலே திருவுள்ளமாய், விழுநிதிவண்ணர் தெள்ளியீர் தேவர்க்கும் தேவராயிருந்துவைத்து இவள்கைவளை கொள்ளுகையாலே, நிதியான ஸ்வபாவமும் தெளிவுடையராயிருக்கிறபடியும் மேன்மையோடிருக்கிறபடியும் போய்விடுகையாலே ஸ்வர்ணாபஹாராதிகள் நீரேபண்ணினீரென்கிறாளென்றருளிச்செய்கிறார் (அவ்வளவேயோவித்யாதி). தெளிவு - ஆத்மதர்மமாகையாலே அதில்லாமை தத(ஜ்ஞ)பஹாரமன்றோவென்றுகருத்து.

“கை’’ என்றுவிசேஷித்ததுக்கு “தொழுதாள்’’ என்றத்தைக்கடாக்ஷித்தருளிச்செய்கிறார் (பிள்ளாயித்யாதி). “தெள்ளியீர்’’ இத்யாதியாலே பூஜித்துச் சொல்லச்செய்தேயும் கைவளைகொள்ளுகையாலே * நின்பிள்ளை தானே இல்லம்புகுந்தென்மகளைக் கூவிக்கையில் வளையைக்கழற்றிக்கொண்டமைக்கு ப்ரத்யபிஜ்ஞாபகமாகையாலே, “பிள்ளாய்’’ என்றுஸம்போதித்தாளென்றுகருத்து. “கொள்வது- தக்கதே’’என்றால், இனி எதுதான் தக்கதென்னவருளிச்செய்கிறார் (கீழித்யாதி). “தக்கதே’’ என்கிற ஏகாரத்தாலே நிர்த்தாரணம் தோற்றுகையாலே லோகத்தில் ப்ரஸித்தமோ நிர்த்தரிக்கைக்கென்ன (நாட்டிலித்யாதி). திருத்தக்கீரென்றத்தைக் கடாக்ஷித்து உட்கருத்து (சங்கித்

குக் கொடுபோகைதகுமோ?, (க)"சங்குதங்குமுன்கை நங்கை" என்கிற அவனைப்போலே யிருக்கையன்றோ தகுவது; தக்கதல்ல. (உ) "𑌨 𑌤𑍇 𑌰𑍂𑌪𑌂- நதேரூபம்," என்கிறாள். .... (க)

மூ.—நீணிலாமுற்றத்து நின்றிவள்நோக்கினாள்
காணுமோ கண்ணபுரமென்றுகாட்டினாள்
பாணனார்திண்ணமிருக்க வினியிவள்
நாணுமோ நன்றுநன்று நறையூரர்க்கே. (உ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
இவள்	இந்தப்பெண்ணானவள்	திண்ணம்	த்ருடமாக
நீணிலாமுற்றத்து	மூன்றாம் ப்ராஸாதத்தில்	இருக்க	இருக்கும்போது,
நின்று	இருந்து	இனி	இப்படி இடைவிடாமல் ஶிக்ஷிக்கச் செய்தேயும்
நோக்கினாள்	லோகதர்சனம் பண்ணினாள் (பிறகு)		
கண்ணபுரம்	திருக்கண்ணபுரத்தை	இவள்	இந்தப்பெண் .
காணுமோ	பாருங்கோள்	நாணுமோ	மீளக்கூடுமோ? [மே
என்று	என்று	நறையூரர்க்கே	அந்நறையூரர்கார்ய
காட்டினாள்	காட்டாநின்றாள்;	நன்று நன்று	நன்றாய்த்தலைக்கட்டிற்று. (உ)
பாணனார்	பாடுமவர்களான ஆசார்யர்கள்		

வ்யா.—இரண்டாம்பாட்டு. (நீணிலாவித்யாதி). (ங) "𑌨𑌨𑌮𑍇𑌯𑌂- நநமேயம்" என்கிற ப்ரதிஜ்ஞைகுலைந்து (ச) "𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌰𑌂 𑌦𑍇𑌵𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌿𑌨𑍀- க்ஷிப்ரம் தேவப்ரஸாதிநீ" என்கிறபடியே அவிவாதம்தோற்ற ஓரஞ்ஜலி பண்ணினாளாகில் இதுகுறையோ என்றிறே கீழ்ச்சொல்லிற்று. இத்தைக்கேட்ட சவரிப்பெருமாள் "நீநம்மைக்குறை சொல்லக் கடவையோ? உன்மகளை நியமித்துக்கொள்ளமாட்டாயோ; ஸ்த்ரீகளுக்கு "நாண்மடம் அச்சம் பயிர்ப்பு" என்கிற ஆத்மகுணங்களில் ப்ரதாநகுணமன்றோலஜ்ஜை; அது உன்மகளுக்கில்லையானபின்பு அவளைநிய

யாதி). "தொழுதாள்" என்றத்தைக் கடாக்ஷித்து * ஶரணாகதாநாம் பராபவம் உனக்குத் தகாதென்று சொல்லுகிறாளென்கிறார் (தக்கதித்யாதி). (க)

அரு.—இரண்டாம்பாட்டு. (நீணிலாவித்யாதி) (ஸம்ஸர்க்கதோஷம்)என்

(க) தி-ச-வி-ருஎ. (உ) ஜிதந்தா-க-ரு.
(ங)-ரா-யு-ஙகூ-சக. (ச)-காருட-பு-பூர்வ-கக-உகூ,

மிக்கவன்றோ அடுப்பது'' என்ன; அவளுடைய உக்திவ்யாபாரங்களிருந்தபடியாலும், ஸம்ஸர்க்கதோஷமிருந்தபடியாலும், அவளைநியமிக்க வென்பதொன்றுண்டோ? இவளை அடியிலே அலைவலையாக்கிப் புறப்படவிட்ட இவர்கார்யமே தலைக்கட்டிற்றேயென்கிறாள்.

(நீணிலாமுற்றத்து நின்றிவள் நோக்கினாள்) "மநுஷ்ய ஸஞ்சாரமில்லாதப்ரதேசத்திலே இவளைக்கொடுபோய் இட்டுவைக்கவே மீளக்கூடும்''என்றுநினைத்து நீணிலாமுற்றத்தே கொடுபோய்வைத்தாள். (நீணிலாமுற்றம்) அம்மநுஷ்யர்களுடைய வார்த்தையுங்கூடச் செவிப்படாதபடி ஓக்கத்தையுடைத்தான நிலாமுற்றம். முமுக்ஷுவானவனுக்கு சரீரஸம்பந்தாதிகளுள்ள விடத்து குத்ஸையும்பயமும் வர்த்திக்கச்செய்தேயும், பதார்த்தங்களினுடைய ஸந்நிதியில் கால் தாழ்கைக்கு யோக்யதையுண்டாமிறே, சரீரஸம்பந்தம் கிடக்கையாலே. தத்பரிஹாரார்த்தமாக விவிக்தஸேவியாய் வர்த்திப்பானென்று சொல்லிற்றிறே. அப்படியேதானும் பூர்வார்த்த(ஞ்)நிஷ்டையாகையாலே, தன்மகளுக்கு இந்த அதிப்ராவண்யமுண்டாகைக்கடி ஸம்ஸர்க்கதோஷமிறே என்றுநினைத்து, நிர்மாநுஷ்யமான நீணிலாமுற்றத்திலே வைத்தாள். (நின்றிவள்நோக்கினாள்) அந்நிலாமுற்றத்தைக்கண்டவாறே * கொற்றப்புள்ளொன்றேறி மன்றூடே

றது-"பாணனார்'' என்று சொல்லப்பட்ட திருநறையூர் நம்பியாகிற ஆசார்ய ஸம்ஸர்க்கத்தை. (இவர்) என்றது-திருநறையூர் நம்பியை. (கார்யம்) என்றது -நாணமறப்பண்ணுகை.

அநு. — கைவளை கழலும்படியான தசைபிறக்க, இவள் நீண்டநிலாமுற்றத்திலே போகக்கூடுமோவென்ன (மநுஷ்யேத்யாதி). (மீளக்கூடும்)பகவதலாப க்லேசத்தில் நின்றும் மீளக்கூடும். நீணிலாமுற்றமாவது-தளத்தின்மேல் தளமாக விருக்குமிதில், மூன்றாம் தளமான ப்ராஸாதம். அந்யாபதேசத்தை யருளிச்செய்து, "ப்ரஜ்ஞாப்ராஸாதம்''என்றுசொல்லப்பட்ட பகவதேகோபாயத்வஜ்ஞாந ஸஹிதமான நிலையில் நின்றும் பாகவத விஷயத்தில் மூட்டினாள் என்னும் ஸ்வாபதேசத்தை யருளிச்செய்கிறார் (முமுக்ஷுவானவித்யாதி). (பதார்த்தங்கள்) விஷயங்கள். (நீணிலாமுற்றத்திலே) பாகவத நிஷ்டையிலே. பாகவதாலாப க்லேசத்தாலே இட்டகாலிட்டகைகளாயிருந்த இவளை, "பாகவதரே உபாயம்'' என்கிற ஜ்ஞாநமாகிறப்ராஸாதத்திலேற்றிவிட்டால், எங்ஙனே நிற்கும்படி என்ன; பகவத்விஷயம்போலே இது பயஹேதுவாகாமையாலே நின்றாளென்கிறார் (அந்நிலாவித்யாதி). பகவத்விஷயங்

வந்து அநந்யார்ஹமாக்கி ப்ரதமஸம்ஶ்லேஷம் பண்ணினவிடம் போலே யிருந்ததீ என்று * இட்டகாலிட்ட கைகளாயிருந்த இவள் எழுந்திருந்து தரித்துநின்றாள். இதுபோலேகாணும் ஆசார்யோபதிஷ்டமான யதார்த்தஜ்ஞாநம் பிறப்பதற்குமுன்பு விஷயாந்தரங்களால் படும் கண்கலக்கமும், பின்புவகுத்த விஷயத்தில் புகுந்தால் (க) "𑌅𑌥𑌸𑍋𑌽𑌭𑌯𑌂𑌗𑌤𑍋 𑌭𑌵𑌤𑌿 - அதஸோऽபயம் கதோபவதி" என்று நிர்ப்பயனாய் தரித்துநிற்கும் நிலையும். (இவள்நோக்கினாள்) அவ்வளவேயன்றிக்கே லோகதர்ஶநமும் பண்ணக்ஷமையானாள்.

(காணுமோ கண்ணபுரமென்று காட்டினாள்) சுற்றும்கண்ணையோட்டிப் பார்த்தவாறே திருக்கண்ணபுரம் கண்ணுக்கு விஷயமாயிற்று; அல்லாத ப்ரதேசங்கள் கிடக்க, திருக்கண்ணபுரம் கண்ணுக்கு விஷயமாக வேண்டுவானென்னென்னில்; இவளுக்கு அபிமதம் சவரிப்பெருமாள்பக்கலிலே யாகையாலும், இவள்தான் லக்ஷ்யத்தை யுடையளாகையாலும், திருக்கண்ணபுரம் கண்ணுக்குவிஷயமாயிற்று. த்ரௌபதியை ஸ்வயம்வரிக்கவந்த ராஜாக்களுக்கு லக்ஷ்யத்தைக்காட்டி, அதின்கழுத்தற எய்யவல்லார்க்கு இவளைக் கொடுக்கக்கடவேனென்ன; அவர்களும் "அதின்கால் கண்டேன், வயிறுகண்டேன்" என்றாப்போலே சொன்னார்கள்; அர்ஜுநன் "அதின் கழுத்தைக் கண்டேன்" என்றானிறே. லக்ஷ்யமுடையனாகையாலும், இவளுடைய ஸ்வயம்வரத்திலே மிகவும் ஶ்ரத்தையை யுடையனாகையாலும். (காணுமோகண்ணபுரமென்று காட்டினாள்) (உ) "தொண்

தானே பயஹேதுவானபடி எங்ஙனேயென்ன ; (இதித்யாதி). " இது " என்றது - பாகவதநிஷ்ட்டையை. (லோகதர்சநம்) என்றதுக்கு ஸ்வாபதேசம், பாகவதருடைய ப்ராப்யத்வ ப்ரதிபாதக விசேஷசாஸ்த்ர பரிசீலநம்.

(லக்ஷ்யத்தையுடையளாகை) இலக்குப்படநோக்கவல்லளாகை. விசேஷ ஶாஸ்த்ரவிசாரத்தாலே பாகவதர் ப்ராப்யரானால் எங்குமுண்டாயிருக்க, இவளுக்குத்திருக்கண்ணபுரத்திலே கண்படுகைக்கு த்ருஷ்டாந்தம். (த்ரௌபதீத்யாதி). (லக்ஷ்யத்தை) மத்ஸ்யயந்த்ரத்தை. " காணும் " என்று பஹுவசநத்துக்குக் கருத்தை வெளியிடாநின்றுகொண்டு, " ஓ " என்றது - போக்யதையால்வந்த ஹர்ஷஸூசகமென்றும், காட்டுகை - தனக்குப்ரக்ருதியென்றும் விவக்ஷித்துத் தாத்பர்யம்(தொண்டீரித்யாதி). மநுஷ்யர்வார்த்தை

(க) தை-ஆ-எ.　　(உ) தி-வாய்-ரு-உ-உ.

டீரெல்லீரும் வாரீர்” என்றாப்போலே கண்ணால் கண்டவர்களையடங்க நீங்கள் கண்ணபுரத்தைக் காணிகோளென்னாநின்றாள். “உனக்கு இவ்வதிமாத்ரப்ராவண்யமாகாதுகாண்” என்றுநிஷேதிக்கிறதாயையுங்கூடத் திருக்கண்ணபுரத்தைப் பாராய் என்றாள். நல்லது கண்டால் தனியே அநுபவிக்கும் ப்ரக்ருதியன்றே. (கண்ணபுரமென்று காட்டினாள்) (௧) “பிரானிருந்தமை காட்டினீர்” என்று அவனைக் காட்டினாள் தாயார்; அவனிருந்தவூரைக் காட்டுகிறாளிறே இவள். இதுபோலேகாணும் ஸதாசார்யனிற்காட்டில் ஸச்சிஷ்யனுக்கு உண்டானவாசி. “உனக்குப்ராப்யப்ராபகங்களிரண்டும் ஈஶ்வரன்திருவடிகளே” என்றுகாட்டிக்கொடுக்கும் ஆசார்யன்; “அவ்விரண்டர்த்தத்தையும்என்னெஞ்சிலேப்ரதிஷ்டிப்பித்தஉன்திருவடிகளன்றோஎனக்குப் புருஷார்த்தம்” என்றிறே ஸச்சிஷ்யனிருப்பது. அதவா (காணுமோ கண்ணபுரமென்றுகாட்டினாள்) “திருக்கண்ணபுரத்தைக்காணிகோள், அஞ்ஜலியைப்பண்ணிகோள்” என்று சொல்லப்புக்கு முடியச் சொல்லமாட்டாதே குறையும் ஹஸ்தமுத்ரையாலே காட்டினாள். அதவா (காணுமோ) என்கிறாள். “இக்கண்ணால் கொள்ளும்

கேளாத நீணிலாமுற்றத்தில் நின்றும் உபதேசிக்கையாலே, “ஓ” என்று எல்லாரும் கேட்கும்படி கூப்பிட்டும், அதுகேளாதார்க்கும் கையாலே காட்டினாளென்று கருத்தாகவுமாம். “காணும்” என்று பூஜாவசநமாய் “ஓ” என்னுமது- ரஸ்யதையை ஸூசிப்பிக்கிறதாக்கி திருத்தாயார்க்கே காட்டினாளென்று தாத்பர்யாந்தரம்(உனக்கித்யாதி). கண்டவர்களுக்கெல்லாம்காட்டப்போமோ? நிஷேதிக்கிற திருத்தாயார் அருகேயிருக்கவென்ன (உனக்கித்யாதி). இதுக்கு ஸ்வாபதேசம் (இதுபோலேயித்யாதி). “பகவானாகிற ப்ராப்யம் ஸித்திக்கைக்கு பாகவதாபிமாநமென்று இரு” என்று திருத்தாயாருபதேசிக்கத் தரித்து நின்று, விசேஷசாஸ்த்ரதர்ஶநத்தாலே இவ்வர்த்தத்தை அறிவிப்பித்த ஆசார்யனே ப்ராப்யனென்னுமர்த்தத்தைத்தானே விண்ணப்பம் செய்வளென்று கருத்து. “காட்டினாள்” என்றதுக்கு, தான் அஞ்ஜலிபண்ணி இவளுக்குக் காட்டினாளென்றர்த்தாந்தரம் (அதவேத்யாதி). “காணுமோ - நமக்குக் காணப்பெறுமோ” என்றாக்கி, “காட்டினாள்” என்றதுக்கு இப்படித்ரஷ்டவ்யத்தை நிஷேதிக்கையாலுண்டான க்லேசத்தாலே இரண்டுகையையும் மறித்துக் காட்டினாளென்று மூன்றாம்யோஜநையை யருளிச்செய்கிறார் (அத

---

(௧) தி-வாய்-௯-௫-௫.

ப்ரயோஜநம் திருக்கண்ணபுரத்தைக் காண்கையன்றோ? இத்தை நிஷேதிப்பாரும் சிலருண்டாவதே" என்றுவிஷண்ணையாகிறாளென்றுமாம். வடமதுரைப்பிறந்தான்மகன், கோயிலாழ்வார் ஸந்நிதியிலே கண்ணைச் செம்பிளித்துக் கொண்டிருந்து ஜபித்தான். பட்டர் திருவடிதொழவெழுந்தருளினவர் இத்தைக்கண்டு "கோயிலாழ்வார் கண்ணுக்கு விஷயமாயிருக்க கண்ணைச் செம்பிளித்திருப்பதே; இவன்கண்ணால் ப்ரயோஜநம் கொள்ளமாட்டானாகாதே" என்று வெறுத்தெழுந்தருளினார். அவனுக்கு ஒன்றிரண்டுமாஸத்துக்குள்ளே கண்கெட்டதிறே. இது இவளுடைய உக்திவ்யாபாரமிருந்தபடி.

(பாணனாரித்யாதி) ஸம்ஸர்க்கஜப்ராவண்யம் சொல்லுகிறாள். (பாணனார்) தலைமகன் பிரிந்தால் எதிர்த்தலையிலுண்டான மறத்தைப் போக்கி சேரவிடுகைக்காக பாணனைக் கொடுத்துவரவிடும்; அவர்களும் இன்சொற்களாலே அவர்கள் நெஞ்சிலே மறத்தைப்போக்கி சேரவிடுவர்கள். இங்கு பாணனாராகிறார் - சேதநர்க்கு ஸ்வாதந்த்ர்யத்தால் வந்த மறத்தைப்போக்கி சேஷத்வஜ்ஞாநத்தைஉணர்த்திச் சேரவிடுமாசார்யனிறே. "பாணனார்" என்கிறாள்காணுமிவள். (க) "பேராளன்பேரோதும் பெரியோர்" என்று தன்மகள் சொல்லக் கேட்டவளாகையாலே, இன்னார் இன்னார்க்குச் சொல்ல யென்பதில்லையாகாதே, (உ) "𑌸𑌮𑌿𑌤𑍍𑌪𑌾𑌣𑌿𑌶𑍍𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌿𑌯𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌨𑌿𑌷𑍍𑌠𑌮𑍍 - ஸமித்பாணிஶ் ஶ்ரோத்ரியம் ப்ரஹ்மநிஷ்டம்" என்கிறபடியே தந்நிஷ்டனா

வேத்யாதி). "பாகவதவிஷயமே த்ரஷ்டவ்யம்" என்கைக்கு ஸம்வாதம் காட்டுகிறார் (வடமதுரையித்யாதி). (கோயிலாழ்வார்) ஶ்ரீரங்கவிமாநம்.

"பாணனார்"-பாடுமவர்கள். "திண்ண"ம்த்ருடமாக. இனிஇவள்நாணுமோ என்கைக்குப் பாணனார் செய்ததென்னென்ன; (தலைமகளித்யாதி). ப்ராப்யவைலக்ஷண்யத்தை உபதேசிக்கும் ஆசார்யன். ஸ்வாபதேசம் (இங்கித்யாதி). "பாணன்" என்றுதூதுவந்தவனைச்சொல்லவடுப்பதாயிருக்க, உபசரித்து "பாணனார்" என்கிறதென்னென்ன; (பாணனாரித்யாதி). மகள்சொல்ல, தாய் அத்தைக்கேட்கக்கூடுமோவென்ன (இன்னாரித்யாதி வாக்யத்வயத்தாலே). அவதாரிகையிலே சவரிப்பெருமாள், "உன்பெண்பிள்ளையை நீஅடக்கி ஆளப்போகாதோ" என்னுமதுக்கு உத்தரம்இப்பதமென்னுமத்தையருளிச்செய்கிறார்

(க) தி-மொ-எ-ச-ச. (உ) முண்ட-க-க-கஉ.

மிதுவே யாகாதே வேண்டுவது. (திண்ணமிருக்க) அவர்கள் அச(ஃ)லப்ரதிஷ்டராயிருக்க. (இனி இவள்நாணுமோ) இப்படி இடைவிடாமலிருந்து துஶ்ஶிக்ஷை பண்ணச்செய்தேயும், இவள் மீளவென்பதொன்றுண்டோ?. (இனி இவள்நாணுமோ) ஸம்ஸர்க்கஜப்ராவண்யத்தாலும் மீளமாட்டாள். ஸ்வக(X)தப்ராவண்யத்தாலும் மீளமாட்டாள். "உனக்கு இதுவாகாதுகாண்" என்றுசொல்லுகிற நான் லஜ்ஜித்து மீளுமித்தனைபோக்கி, இவள்மீளுமோவென்கிறாள். ஆசார்யனாலும் பசையில்லையிறே. தான்ஸத்ப்ரக்ருதியன்றாகில் இரண்டும் வேண்டியிறேயிருப்பது.

(நன்றுநன்று நறையூரர்க்கே) இவள்கார்யமும் கிடக்கிடும், அச்சவரிப்பெருமாள் கார்யமும் கிடக்கிடும். அடியிலே இவள் கையில் மடலைக்கொடுத்துக் கொல்லையாக்கிப் புறப்படவிட்ட அந் நறையூரர்கார்யமே நன்றாய்த் தலைக்கட்டிற்றிறே என்கிறாள். (௨)

மூ.—அருவிசோர்வேங்கடம் நீர்மலையென்றுவாய்
வெருவினாள் மெய்யம் வினவியிருக்கின்றாள்
பெருகுசீர்க் கண்ணபுர மென்று பேசினாள்
உருகினாள்மெலிந்தாளிது வென்கொலோ. (௩)

பதம்.	உரை.	பதம்.	உரை.
அருவி	மலையருவியானது	மெய்யம்	திருமெய்யமென்றும்
சோர்	ப்ரவஹியாநின்ற [ம்,	வினவி	கேட்டு
வேங்கடம்	திருவேங்கடமென்று	இருக்கின்றாள்	இராநின்றாள் ;
நீர்மலை	திருநீர்மலை	பெருகு	(ஆறுபோலே) பெருகாநின்ற
என்று	என்றும்,	சீர்	(குணபூர்த்தியாகிற) ஐஶ்வர்யத்தை யுடைய
வாய்வெருவினாள்	அஹ்ருதயோக்திகளைப் பண்ணினாள் ;		

(இப்படியித்யாதி). "இனி" என்றதுக்கு அர்த்தம் (ஸம்ஸர்க்கேத்யாதி). ஸ்வகதப்ராவண்யம், "கண்ணபுரம்" என்று காட்டுகையாலே ஸூசிதம். "இவள்" என்றதுக்குக்கருத்து (உனக்கித்யாதி). "இவள்" என்றதுக்கு-ஸத்ப்ரக்ருதியான இவள் என்று விவக்ஷித்துத் தாத்பர்யாந்தரம் (ஆசார்யனாலுமித்யாதி).

"நறையூரர்க்கே" என்ற அவதாரண வ்யாவர்த்த்யகதநபூர்வகம், "நன்றுநன்று" என்கிற மீமிசைக்குத் தாத்பர்யம் (இவளித்யாதி). அடியிலே மடலைக் கொடுத்ததில்லையேயாகிலும், மடலெடுக்கும்படியான ஸ்வவைலக்ஷண்ய ஜ்ஞாநத்தைக் கொடுத்தானென்று தாத்பர்யம். ... ... (௨)

கண்ணபுரம் என்று	திருக்கண்ணபுரமென்றும்	உள்	ஹ்ருதயத்திலேயே
பேசினாள்	பேசாநின்றாள் ; (உடனே	மெலிந்தாள்	வாடினாள்,
உருகினாள்	(நீராய்)உருகாநின்றாள்;	இதுவென்கொலோ	இதென்னகஷ்டம். (௩)

அவ.—மூன்றாம்பாட்டு. "இனிஇவள்நாணுமோ" என்றிறே கீழ்சொல்லிற்று. அந்தலஜ்ஜைதானுண்டாவது- ஸத்தையுண்டானாலிறே; "தான்பண்ணுகிற சிசிரோபசாரங்கள் கார்யமாய்த்தலைக்கட்டக் காண்கிறிலோம், என்னாய் முடியப்புகுகிறதோ" என்கிறாள். தாபார்த்தராயிருப்பார், தாபஹரனான ஜலநிலயனையிறேபற்றுவது; அவனைப் பற்றுமவளல்லளே இவள். அவனைப்பற்றுவார் முக்தப்ராயரானஸநகாதிகளிறே; இவள் பற்றுவது அர்ச்சாவதாரரூபத்திலேயிறே. அதில்தனக்குத் தாபஹரமான திருப்பதிகளிலேசிலவற்றைச் சொல்லுகிறாள்.

வ்யா.—(அருவிசோர்வேங்கடம்) இதுக்கடியானஸஹ்யம் மாறாமையாலே ப்ரவாஹமும் மாறாதேசெல்லும். (௧) "தெண்ணீர்பாய் வேங்கடம்" என்கிறபடியே ஶ்ரமஹரமான தேசமிறே. (நீர்மலை) அந்த அருவிவிழுந்தால் போக்குண்டாயிறேயிருப்பது. அங்ஙனன்

அரு.—மூன்றாம்பாட்டு. (அருவியித்யாதி) கீழ்ப்பாட்டிலே கண்ணபுரத்தம்மானைக்குற்றம் சொல்லுகிறதென், உன்பெண்ணையடக்கிக் கொள்ளவொண்ணாதோவென்ன; திருநறையூர்நம்பி நாணறப்பண்ணினாரென்ன; ஆகில் என்மேலே குற்றமில்லையென்றுவிட, திருத்தாயார் தன்னிலே தானே நொந்து தன்பெண்பிள்ளை படிகளைப்பார்த்து வினவ வந்தவர்களை நோக்கிப் புலம்புகிறாளென்று க(ஷ்)ட்டஸங்கதி திருவுள்ளம்பற்றி, கீழ்ப்பாட்டோடே ஸங்கதியருளிச்செய்கிறார் (இனியித்யாதி). "ஸத்தையுண்டானால் லஜ்ஜையுண்டாக்கலாம், அதுதானும் என்னாய்முடியுமோ" என்றுசொல்லுகிறாளென்று கருத்து. (தான்) என்றது- மகளை. (சிசிரோபசாரம்) வேங்கடத்தையும் நீர்மலையையும் நினைக்கை. தாபார்த்தையானால் (௨) "𑌤𑌾𑌪𑌾𑌰𑍍𑌤𑍋𑌜𑌲𑌶𑌾𑌯𑌿𑌨𑌮𑍍-தாபார்த்தோஜலஶாயிநம்" என்று க்ஷீராப்த்திநாதனையன்றோ எத்தவடுப்பது, அர்ச்சாவதாரத்தைப்பற்றுவானென்னென்ன; (தாபார்த்தனித்யாதி).

(ஸஹ்யம்) என்றது-ஜலம் பொசியும் மலை.

---

(௧) நா-தி-௮-௧. (௨) விஷ்ணு-தர்ம-௪-௩௦.

றியே சுற்றும்நீராய் அதினடுவே திருமலையாய், அதில் நடுவேயிறே கண்வளர்ந்தருளுவது. (என்றுவாய் வெருவினாள்) அபஹ்ருதஹ்ருதயையாகையாலே அஹ்ருதயோக்திகளைப் பண்ணாநின்றாள். (மெய்யம் வினவியிருக்கின்றாள்) "ஆஶ்ரிதர்க்கு மெய்யேநின்று கார்யம் செய்தவிட மென்றன்றோ திருமெய்யமென்று பேராயிற்று" என்று கேட்கும். மறுமாற்றம்சொல்லுவாரில்லை. (௧) స్తబ్ధోసి - ஸ்தப்தோஸி'' என்றிராநின்றாள்.

(பெருகுசீர்கண்ணபுரமென்று பேசினாள்) இவ்வோதிருப்பதிகள்போலேயுள்ளவளவும் ஸம்பத்தாயிருக்கையன்றிக்கே, ஆற்றுப்பெருக்குபோலே மேன்மேலென வரையிட்டுக் காட்டும் ஐஶ்வர்யத்தையுடைத்தான திருக்கண்ணபுரத்தை வாய்விட்டுப் பேசாநின்றாள். (கண்ணபுரமென்று பேசினாளுருகினாள்) பேசுவதோரவஸ்த்தையும், உருகுவதோரவஸ்த்தையுமின்றிக்கே, பேசினவாயோடே நீர்ப்பண்டமாகாநின்றாள். (உள்மெலிந்தாள்) (௨) "అచ్ఛేద్యోయమదాహ్యోయమ్- அச்சேத்யோயமதாஹ்யோயம்" என்கிறஆத்மவஸ்து நின்றநிலையிலே வாடிற்றென்கிறாள். அதவா, சரீரம் உருகுவது அந்தஃகரணம் உருகினாலிறே; நெஞ்சமுருகிற்றென்கிறாள். (இது வென்கொலோ) இவ்வாற்றாமைகளுக்கடி பாபமிறே. (௩) [మధురానామనగరీ పుణ్యాపాపహరీశుభా - மதுராநாமநகரீ புண்யாபாபஹரீஶுபா] என்று அநவத்யம் நின்றதேசத்தைப் பேசவே பாபங்களும்போம், போக (భోగ) ங்களுமுண்டாம் என்றதிறே ஶாஸ்த்ரம்; அது இவளளவும் காணாதொழிகிறது என்பாபமிறே என்கிறாள். .... (௩)

மூ.—உண்ணும்நாளில்லை யுறக்கமும் தானில்லைப்
பெண்மையும் சாலநிறைந்திலள் பேதைதான்
கண்ணனூர் கண்ணபுரம் தொழுங்கார்க்கடல்
வண்ணர்மேலெண்ண மிவட்கிதுவென்கொலோ. (௪)

(வரையிட்டு) என்றதுக்கு-அந்தந்த மலைகளையிட்டு என்றாய், திருமலை, நீர்மலை, மெய்யமலை இவற்றையிட்டுப் பெருகுமென்று கருத்து; அதாவது-அங்குள்ள கல்யாணகுணங்கள் இங்கே ஸம்ருத்தமாய் தோற்றுகிறதென்கை. (ஐஶ்வர்யத்தை) என்றது-ஈஶ்வரஸம்பந்தியான குணபூர்த்தியை. இது பூர்வ வாக்ய விவரணம். ... ... (௩)

---

(௧) சாந்தோ-௬-௧-௩. (௨) கீதை-௨-௨௪. (௩)

பதம்.	உரை.
உண்ணும்நாள்	(இவளுக்கு) புஜிக்கும் நாள்
இல்லை	இல்லை ;
உறக்கமும்தான்	நித்ரையும்
இல்லை	இல்லை;
பெண்மையும்	(இவள்) ஸ்த்ரீத்வத்தால்
சால	மிகவும்
நிறைந்திலள்	நிறைந்தவளன்று ;
பேதைதான்	(இன்னமும்) இளம் பெண்தான் ;
கண்ணன்	கண்ணனெழுந்தருளியிருக்கிற
கண்ணபுரம்	திருக்கண்ணபுரமென்கிற
ஊர்	திவ்யதேசத்தை
தொழும்	தொழாநின்றாள்;
இவட்கு	இவளுக்கு
கார்	கறுத்த
கடல்	ஸமுத்ரம்போன்ற
வண்ணர்மேல்	வடிவழகையுடையரான கண்ணன் மேல்
எண்ணம்	எண்ணமிருக்கிறது;
இதுவென்கொலோ	இதென்ன ஆஶ்சர்யம்தான் (சு)

அவ.—நாலாம்பாட்டு. "வாய்வெருவினாள், வினவியிருக்கின்றாள், பேசினாள், உருகினாள்" என்கிற இவ்வாற்றாமை தானுண்டாவது தா(ध)ரகமுண்டானாலிறே; அது இருந்தபடி யென்னென்ன; அதுதானே இல்லையென்கிறாள்.

வ்யா.— (உண்ணும் நாளில்லை யுறக்கமும்தானில்லை) கீழுண்டான தசைகள் ஸ்வஸ்த்த தசைகளென்னும்படி யிருந்ததீ யென்கிறாள். ஊணுமுறக்கமு முண்டானாலிறே கீழ்பிறந்த அவஸ்த்தைகளுக்கு அவகாசமுள்ளது. (உண்ணுநாளில்லை) உபவாஸக்ருசையாயிராநின்றாள். "ஊணில்லை" என்கையன்றிக்கே "உண்ணும்நாளில்லை" என்கிறாள். பிராட்டி பெருமாளைப்பிரிந்து பத்துமாஸம் உபவாஸக்ருசையாயிருந்தபோது, தேவேந்த்ரன் அம்ருதமயமான அந்நத்தைக் கொடுவந்து ராக்ஷஸரும் ராக்ஷஸிகளும் காணாமே கொடுக்க, அத்தை அமுதுசெய்தாளென்று ருஷி எழுதினான். இவளுக்கு அங்ஙனிருப்பது ஒருநாளுமில்லை யென்கிறாள். (உறக்கமும்தானில்லை) அஹோராத்ரம்கூடியிறே ஒருநாளாவது; அதில்பகலுக்கு க்ருத்யமானவூணில்லையாகில், ராத்ரிக்கு க்ருத்யமான உறக்கமுண்டோவென்னில், அதுவுமில்லையென்கிறாள். உறக்கமில்லைஎன்கையன்றிக்கே

அரு.-நாலாம்பாட்டு. (உண்ணுமித்யாதி). "உறக்கமும்" என்றதுக்கு "**ஊண்**" என்றத்தோடே ஸமுச்சயமாகத் தாத்பர்யம் (அஹோராத்ரமித்யாதி). "**தான்**" என்ற தானான தன்மைக்குக்கருத்து (உறக்கமித்யாதி). "உறக்கமும்,

உறக்கமுந்தானில்லை என்கிறது, உறங்குகைதான் வேணுமிறே; அதுதானே இல்லையென்கிறாள். பெருமாள் காட்டிலே எழுந்தருளினபோது, கண்வளர்ந்தருளப்புக்கதசையிலே இளையபெருமாளைப் பார்த்து "மைதிலியான குழைச்சரக்குக் கூடப்போந்தாள்; உம்முடைய உறக்கத்தையும் சோம்பலையும் வழிநடந்தத்தால் வந்த ஶ்ரமத்தையும் பொகட்டுக் காவல்சோர்வுபடாமல் நோக்குங்கிடீர்" என்று பெருமாளருளிச்செய்ய. (க) "𑌜𑌹𑍌𑌨𑌿𑌦𑍍𑌰𑌾𑌞𑍍𑌚 𑌤𑌨𑍍𑌦𑍍𑌰𑍀𑌞𑍍𑌚 𑌪𑍍𑌰𑌸𑌕𑍍𑌤𑌞𑍍𑌚 𑌪𑌥𑌿𑌶𑍍𑌰𑌮𑌮𑍍- ஜஹௌநித்ராஞ்ச தந்த்ரீஞ்ச ப்ரஸக்தஞ்ச பதிஶ்ரமம்" என்கிறபடியே அவற்றையெல்லாவற்றையும் பொகட்டாரிறே, அவரைப் போலே உண்டாய்விட்டவளன்றிறே இவள்.

(பெண்மையும் சாலநிறைந்திலள் பேதைதான்) பர்த்ருஸம்ஶ்லேஷத்தில் அவகாஹநமுண்டாகில் ஊணுமுறக்கமும்தவிரலாமிறே. அப்பருவமல்ல கிடீரென்கிறாள். (பெண்மை) ஸ்த்ரீத்வம்; ஸ்த்ரீத்வத்தில் ஏகதேசமும் புதியதுண்டிலள். அதவா (பெண்மையும் சாலநிறைந்திலள்) பர்த்ருஸம்ஶ்லேஷ ரஸஜ்ஞாநமுண்டித்தனை, அதில்தலைநிரம்பிற்றிலள் என்கிறாள். பேரிளம் பெண்ணான அந்நிரப்பமில்லையாகிலும், மங்கையான பருவந்தானுண்டோ வென்ன; (பேதைதான்) அதிமுக்த்தை (𑌗𑍍𑌧) யென்கிறாள்.

தானற்றாள்" என்னாதே, "இல்லை" என்றதுக்கு வ்யாவ்ருத்திபூர்வகம் தாத்பர்யம் (பெருமாளித்யாதி). நித்ரைதானே போயிற்றென்றுகருத்து.

ஊணும் உறக்கமும் இல்லையாகைக்கு ஸம்ஶ்லேஷரஸாநுசிந்தநமிறே ஹேது. அதுவே தா(𑌧)ரகமாகாதோவென்ன ; அதுவுமில்லை என்கிறாரென்றுவிவக்ஷித்தருளிச்செய்கிறார் (பர்த்ருஸம்ஶ்லேஷத்திலித்யாதி). "பெண்மையும்" என்ற ச(𑌚)காரத்தால் இதுவும் தா(𑌧)ரககோடிகடிதமாக வேணுமென்றுகருத்து. (ஸ்த்ரீத்வம்) என்றது-தத்ப்ரயுக்தமான ஸம்ஶ்லேஷமென்றபடி. "சால" என்றதுக்கு நிறைந்திலாமையில் மிகுதியாகக்கீழருளிச்செய்து, நிறையிலே மிகுதியாக வருளிச்செய்கிறார் (அதவேத்யாதி). "பேதை" என்றதுக்கு முந்தினபக்ஷத்தில் ஹேதுவாகை ஸ்பஷ்டமென்று திருவுள்ளம்பற்றி இரண்டாம்பக்ஷத்துக்குச்சேர அவதாரிகை (பேரிளமித்யாதி). "பேதை, பெதும்பை, தெரிவை, அரிவை, மடந்தை, மங்கை, பேரிளம்பெண்" என்கிற எழும் பருவத்திலும் முற்றாப்பருவமென்றுகருத்து.

(க) ரா-அயோ-ருகூ-ந.

(கண்ணனூரித்யாதி) இப்பருவமாயிருக்கிற இவளுக்கு தா(𑌧)ரக போஷகங்கள் வேண்டாவோ, இவையிருந்தபடி யென்னென்ன; (கண்ணபுரந்தொழும்) இது இவளுடைய தா (𑌧) ரகம். அது என்னம்புது, ஒருவரைத்தொழுதாளென்றால் தா (𑌧) ரகமாமோவென்ன; (கண்ணனூர்) (க) "எல்லாம் கண்ணன்" என்கிற க்ருஷ்ணனன்றோ உள்ளே நின்றான்; (உ) [𑌬𑌦𑍍𑌧𑌾𑌞𑍍𑌜𑌲𑌿𑌪𑍁𑌟𑌾𑌹𑍃𑌷𑍍𑌟𑌾𑌃-பத்தாஞ்ஜலிபுடாஹ்ருஷ்டா:] என்றிறே ஸ்வேதத்வீபவாஸிகள் இருப்பது. (ங)"தோற்றோம்" என்றும், (ச)"ஜிதம்"என்றும், அஞ்ஜலிமாறாதே இவர்களிருப்பது. அஞ்ஜலிமாறுவது ஸந்நிதிமாறிலிறே, அஞ்ஜலியாலே ஸர்வாவயவங்களும் புஷ்டமாயிறே அவர்களுக்கிருப்பது;

(கார்க்கடல்வண்ணர்மேலெண்ணம்) அவ்வூருக்குள்ளே ஒரு கடல் தேங்கினாப்போலே நிற்கிற க்ருஷ்ணனுடைய வடிவையணைக்கவேணுமென்று மநோரதியாநின்றாள். அவனூரைத் தொழுகையாலே ஊண்போயிற்று. அவன்வடிவை மநோரதிக்கையாலே உறக்கமும்போயிற்று இவளுக்கு. (பெண்மையும்சாலநிறைந்திலள், பேதைதான், எண்ணமிவட்கிது) - ஆரூடயோகராயிருப்பார்க்குப் பிற

பேரிளம்பெண்ணாகில்வ்ருத்தஸம்ஶ்லேஷரஸாநுசிந்தநம்-தாரகமாகலாம்; அதுவன்றாகில் பேதைத்தனத்துக்கு அடுத்ததாரகாதிகள் வேண்டியிருக்க, அதுவுமில்லை, இதுவுமில்லை என்றால், உல்லோகமாயன்றோ யிருக்கிறதென்னுமபிப்ராயேணப்ரஶ்நத்தைக்கிளப்புகிறார் (இப்பருவமித்யாதி). தொழுகைதாரமாகக் கண்டவிடமுண்டோவென்ன (பத்தாஞ்ஜலிபுடா இத்யாதி).

ஸந்நிதியுண்டாகில் தொழுகை தாரகமாகலாம், பிரிவில் தாரகமானவழியென்னென்னும் ப்ரஶ்நத்தில், "கார்க்கடலித்யாதி" என்றுவிவக்ஷித்தருளிச்செய்கிறார் (அவ்வூருக்குள்ளேயித்யாதி). இத்தால் மாநஸாநுபவத்தாலே ஸந்நிதியுண்டானாப்போலேயிருக்குமென்றுகருத்து. "பேதைதான்" என்னாநின்றாய்; எண்ணம் அவன்மேலேயாய், உறக்கமற்றாளென்னாநின்றாய்; இது பேரிளம்பிள்ளை; இப்படியன்றோ, இவைசேரும்படியென்னென்னும் ப்ரஶ்நத்திலே "இவட்கிதுவென்கொலோ" என்கிறாளென்று விவக்ஷித்துத்தாத்பர்யம் (பெண்மையுமித்யாதி). (ரு)"நும்மடியாரெல்லாரோடுமொக்கவெண்ணியிருத்தீர்" என்கிறபாசுரத்தையுட்கொண்டு "இவளுக்கு" என்று வ்யாவர்த்த்யங்களைக் காட்டாநின்றுகொண்டு கீழ்வாக்யத்தை விவரிக்கிறார் (ஆரூடயோகரா

(க) தி-வாய்-கூ-எ-க. (உ) பாரத- (ங) தி-வாய்-உ-க-எ.
(ச) ஜித-க-க. (ரு) தி-மொ-ச-கூ-கூ.

க்குமளவும் இவளுக்குப்பிறந்தபடியென். இதென்ன ஆஸ்சர்யமென்கிறாள். (என்கொலோ) ஆரூடயோகிகளான ருஷிகள்பக்கல் கண்டிலோம். ஸாக்ஷாத்கரித்து அநுபவித்த ஆழ்வார்பக்கல் கண்டிலோம். இருபத்தைந்து ஸம்வத்ஸரம் பகலோடு இரவோடுவாசியற அறுபது நாழிகையுங்கூடவிருந்து அநுபவித்து, பின்பு பத்துமாஸம் பிரிய க்ஷமையானாளிறே பிராட்டியும். அவளுக்கும் இதுகண்டிலோம், பருவமிதுவாவதாம்; தா (ध) ரகபோஷகங்கள் இவையாவதாம். இதென்ன ஆஸ்சர்யமிருந்தபடி யென்கிறாள். .... (௪)

மூ.—கண்ணனூர் கண்ணபுரம் தொழுங்காரிகை
பெண்மையும்தன்னுடையுண்மை யுரைக்கின்றாள்
வெண்ணெயுண்டாப்புண்டவண்ணம் விளம்பினால்
வண்ணமும் பொன்னிறமாவதொழியுமே. (௫)

பதம்.	உரை.	பதம்.	உரை.
கண்ணன்	க்ருஷ்ணனுக்கு	வெண்ணெய்	வெண்ணெயை
ஊர்	வாஸஸ்தாநமான	உண்டு	(களவாய்) அமுது செய்து
கண்ணபுரம்	திருக்கண்ணபுரத்தை		
தொழும்	தொழுதத்தால்(வந்த)	ஆப்புண்ட	கட்டப்பட்ட
காரிகை	அழகுடைய (பெண்)	வண்ணம்	(அவன்)ஸ்வபாவத்தை
தன்னுடை	தன்னுடைய	விளம்பினால்	சொன்னால்,
பெண்மையும்	பெண்மையையும்	பொன்னிறமாது	பொன்னிறமாயிருக்கிற
உண்மை	வாஸ்தவத்தையும்		
உரைக்கின்றாள்	சொல்லாநின்றாள்;	வண்ணமும்	தேஹசோபையும்
		ஒழியுமே	போய்விடுகிறது. (௫)

அவ.—அஞ்சாம்பாட்டு. "பெண்மையும் சாலநிறைந்திலள்" யித்யாதி). ஆழ்வாருக்குக் கண்ணன் தா (ध) ரகாதிகளானானித்தனை. கண்ணனிருந்தவூரைத்தொழுகையே தா(ध)ரகாதிகளாகையாலே வ்யாவ்ருத்தி சொல்லலாமென்று திருவுள்ளம். ... ... (௪)

அரு.—அஞ்சாம்பாட்டு. (கண்ணனூரித்யாதி) "சிலையிலங்கு" இத்யாதிகளாலே நாம் இவளை அடக்கி எம்பெருமானோடேசேர்த்து ஸம்ஶ்லேஷத்தை வர்த்தி(द्ध)ப்பித்துவிடலாம். "பெண்மையும் சாலநிறைந்திலள்" என்றுசொல்லுகையாலே ஸம்பாவிதமான ஸம்ஶ்லேஷரஸங்களை வெளியிடாதே அடக்கத்தோடேயிருக்கிறாளோ என்று இவர்கள் கேட்க; என்னோடுதானே அவற்றின் படிகளை வாய்விடுகிறாள், இவளுக்கு இனிஅடக்கமுண்டோவென்கிறாளென்று ஸங்கதியை ஸ்ப்புரிப்பிக்கிறாள் (பெண்மையுமித்யாதி). "பெண்மை" என்

என்றிறே கீழ்ப்பாட்டில் சொல்லிற்று. அதுகாலாந்தரேண உண்டாகிறது. அதுக்கடியான பெண்மைதானுண்டோ வென்ன; அதுதானே யில்லையென்கிறுள். நீ எதுகொண்டறிந்தாயென்ன; கரணத்ரயங்களும் அவனைநினைத்தமாத்ரத்திலே விக்ருதமாகா நின்றன; இவளுக்கு என்ன பெண்மையென்கிறுள்.

வ்யா.—(கண்ணனூர் கண்ணபுரம்தொழும்) உக்தத்தை அநுபாஷிக்கிறுள். முன்பே சொன்னேனிறே. அவனைத்தொழுமளவேயன்றியே அவனூரைத்தொழுகிற இவளுக்கு என்ன பெண்மையென்கிறுள். (கண்ணனூர் கண்ணபுரம்) ஶ்ரீ மதுரை, திருவாய்ப்பாடி, ஶ்ரீமத் த்வாரகை யென்கிறஇவையெல்லாம் "கண்ணன்விண்ணூர்" என்கிற ப்ரமபதத்தோபாதி கலவிருக்கையிறே. தா(దా)ரநியதியோபோதி, பிறந்ததும் ஓரிடத்திலேயாய் வளர்ந்ததும் அங்கேயாயிறே சக்கரவர்த்தித் திருமகனிருப்பது. அதுக்கு ப்ரதிசிரஸ்ஸாயிறே இவனுக்கிருப்பது; பிறந்தவன்றே போரவேண்டும்படியிறே ஊர்களின் ஸ்வபாவமிருப்பது; அவற்றை விட்டுத் திருக்கண்ணபுரத்தே புகுந்த பின்பு இத்தையேயாயிற்று ஊராகநினைத்திருப்பது. (தொழும்) அவனுக்கு அவ்வூர் நிரூபகமானுப்போலேயாயிற்று, இவளுக்கும் தொழுகையே நிரூபகமாயிருக்கிறபடி. (க) "ప్రాఞ్జలిం ప్రహ్వమాసీనమ్- ப்ராஞ்ஜலிம்ப்ரஹ்வமாஸீநம்" என்கிறபடியே பெருமாள் அந்தःபுரத்தினின்றும் புறப்படுகிறபோது, இரண்டாம் வாசலிலேநின்ற இளையபெருமாள், தலைமேல்வைத்தகையும், முக்கு

றது-வ்ருத்தஸம்ஶ்லேஷரஸகோ(ద్దీ)பகம். "விளம்பினுல்" என்றது-வாக்விகாரம்சொன்னது மாநஸவிகாரத்துக்கும் உபலக்ஷணமென்றருளிச்செய்கிறுர் (கரணத்ரயங்களுமித்யாதி).

கண்ணனூர் ஶ்ரீமதுரைமுதலானதன்றே? கண்ணபுரமானபடி யென்னென்ன; (ஶ்ரீமதுரையித்யாதி - நினைத்திருப்பதென்னுமளவும்). (கலவிருக்கையிறே) என்றது - கொலுச்சாவடிபோலே சிலகாலமிருந்து போமித்தனையிறேயென்கை. இப்படி பலவூர்களிருப்பானென்னென்ன; (தாரநியதியித்யாதி). (ப்ரதிஶிரஸ்ஸா) எதிர்த்தலை. கண்ணன் ஸ்வபாவத்தால் தானன்றியே, அவ்வூர்களின் ஸ்வபாவத்தாலும் பலவாக வேண்டிற்றென்கிறுர் (பிறந்தவித்யாதி).

(க) ரா-அயோ-கசு-உசு.

ணுக்கிட்ட உடம்புமாய் பெருமாள்கண்படும்படி நின்றாரிறே. அப்படியேயிறே இவள்கையும்அஞ்ஜலியுமாயிருப்பது. "காரிகை"என்று அழகு. இவ்வழகைக்கண்டால், அவன்மேல்விழுந்துகையும் அஞ்ஜலியுமாய் நிற்கவன்றோவடுப்பது. அத்தலை இத்தலையாயிருக்கிற இவளுக்கு என்ன பெண்மையென்கிறாள். இத்தால் காயிகவ்யாபாரம் சொல்லிற்று;

(பெண்மையித்யாதி)வாசிகவ்யாபாரம்,சொல்லுகிறாள். (பெண்மையும் தன்னுடை யுண்மையுரைக்கின்றாள்) பெண்மை-ஸ்த்ரீத்வம். அதாகிறது-ஏதேனும் ஓரவஸ்த்தை பிறந்தாலும் உயிர்த்தோழிக்குங்கூட மறைக்கும்படியிறேயிருப்பது. அவளும் இவளுடைய வ்யாபாரங்களைக்கண்டு, "இவளுக்குஒடுகிறதசைஇதுவாகாதே" என்றறியுமித்தனையிறே; ஆயிருக்கப் பெற்றதாயான எனக்கும் வாய்விடா நின்றாள்; இவளுக்கு என்னபெண்மையென்கிறாள். (தன்னுடையுண்மையுரைக்கின்றாள்) தன்னுடைய உள்ளிலுண்டான வ்யாபாரம்; அதவா, தன்னுடைய "உண்மை" உண்டு-ஸத்பாவம், அத்தைச்சொல்லாநின்றாள். (௧) "𑌆𑌚𑌚𑌕𑍍𑌷𑍇𑌽𑌥𑌸𑌦𑍍𑌭𑌾𑌵𑌮𑍍 - ஆசசக்ஷேதஸத்பாவம்" இத்யாதி. ஶ்ரீ பரதாழ்வான் வாராநின்றானென்று ஶ்ரீ குஹப்பெருமாள் கேட்டவநந்தரம், இளையபெருமாள் செய்தத்தை யெல்லாம் சொல்லத்துடங்கினார். "வந்தபோது செய்யும்படி சொல்லுகிறதென், ஓடம்நின்றதே, கோலிருந்ததே, தானும், தன்பரிகரமும் அக்கரைப்படும்படி காண்கிறேன்" என்று ஆக்ரஹசித்தனாயிருந்தான். அநந்தரம் ஸுமந்த்ரனுள்ளிட்டார் வந்து இளைய

"பெண்மையும்" என்ற ச (𑌚) காரம் விரோதத்திலேயாய், "உரைக்கப்போகாதத்தையும் உரைக்கின்றாள்" என்றாய், அத்தையருளிச் செய்கிறார் (அதாகிறதித்யாதி). பெண்மை யாவது-ஸம்ஶ்லேஷரஸஜ்ஞதையாய், அத்தையும், ததநுகுணமான தன்னுடைய ஸத்வ்ருத்திவிசேஷங்களாகிற உண்மையும் - சொல்லத்தக்க விஷயமல்லாதாக்கி, கேளாதிருக்கத்தானே யுரைக்கின்றாளென்றது கூடுமோவென்ன; கானவரான கு (𑌗𑍁) ஹப்பெருமாள், ரகுகுலத்தில்பிறந்து நாகரிகரான பரதாழ்வானுக்குத்தாமே உரைத்தாப்போலே என்றத்தை ஸம்வாதமாகவருளிச்செய்து வ்யாக்க்யாநம் செய்கிறார் (ஆசசக்ஷேயித்யாதி). "அத" என்றதுக்கு - ஆநந்தர்யமர்த்தமாகையாலே பூர்வவ்ருத்தத்தை யருளிச்செய்கிறார் (வந்தபோதித்யாதி). "𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌨𑌃" என்

---

(௧) ரா-அயோ-௮௬-௧.

பெருமாள் ஸ்வபாவம் போலே காண் பரதாழ்வானுடைய ஸ்வபாவமிருப்பது. அவனை நீ காணவேணுங்காணென்ன; இவனும்போய்க் கண்டவனந்தரம் "இவருடைய ஸ்வபாவமிருந்தபடியென்" என்று ஆஸ்சர்யப்பட்டு இவருக்கு நம்மால் கொடுக்கலாம் உபஹாரமென்னென்று பார்த்து, இவருக்கு ஸத்ருஶமான உபஹாரம் - இளைய பெருமாள் ஸ்வபாவங்களாமித்தனையென்று அவற்றைச்சொல்லத் துடங்கினான்; [ஆசசக்ஷே ஸத்பாவம்] ஸத்பாவமாகிறது-ஸத்துக்களுடையஆசாரம், (௧) సచ్ఛబ్దస్సాధువాచకః- ஸச்சப்தஸ்ஸாதுவாசகஃ" (௨) "సాధవః క్షీణదోషాస్తు-ஸாதவஃக்ஷீணதோஷாஸ்து" என்கிறபடியே ஸத்துக்களாவார் க்ஷீணதோஷரிறே. [பாவம்] ஆசாரம். ஒருவன்-அர்த்தவான், அபிஜாதன், வித்வான், என்றறிவது-அவர்களநுஷ்ட்டாநம் கொண்டிறே. அப்படியேயிறே இவருடைய அநுஷ்ட்டாநமும். "பெருமாள் கண்வளர்ந்தருளுகைக்குப் புல்கள் அறுப்பது. படுக்கை படுப்பது. தாமரைஇலையைப்பறித்துத்தண்ணீரைமுகந்து திருவடிகளை விளக்குவது, பின்னையும் தண்ணீரைமுகந்து அமுது செய்யப் பண்ணுவது, சேஷித்தத்தை பிராட்டியை அமுதுசெய்யப்பண்ணுவது. சுண்வளர்ந்தருளப்பண்ணி, கையும் வில்லுமாய்க் கொண்டு நம்மையும்கூட அசிர்த்து நோக்குவதாய்க் காணுமவருடைய ஆசாரமிருந்தபடி" என்று அவர் வ்ருத்தாந்தத்தைச் சொல்லத் துடங்கினான். [లక్ష్మణస్యమహాత్మనః - லக்ஷ்மணஸ்யமஹாத்மநஃ] கடலைக் கையாலே இறைக்கத்துடங்கினான். [லக்ஷ்மணஸ்யமஹாத்மநஃ ஸத்பாவம்-அப்ரமேயாய பரதாய-ஆசசக்ஷே] கழியின் பெருமையைக் கடலுக்குச் சொல்லத்துடங்கினான். பரதாயாப்ரமேயாய ஆசசக்ஷே] சேஷபூதனானால் " நான்பணிசெய்யக்கடவேன் " என்று சொல்லியோ பணிசெய்வது; அதுகிடக்க; (௩) [అహంసర్వం కరిష్యామి - அஹம்ஸர்வம்கரிஷ்யாமி] சொல்லிற்றெல்லாம் செய்யக்கடவேனென்று ப்ரதிஜ்ஞைபண்ணி "ராஜ்யத்திலே இரீர்" என்ன;

றதுக்குத் தாத்பர்யம் (கடலையித்யாதி). " அப்ரமேயாய " என்றத்தாலே, "மஹாத்மா" என்று பரிச்சேதிக்கக் கூடாமையை விவக்ஷித்தருளிச் செய்கிறார். (கழியினித்யாதி). இளையபெருமாள் காட்டிலே ஸகலவிதகைங்கர்யங்களும்பண்ணியிருக்க, அவரைக் கழிஸ்த்தாநேயாக்கப்போமோவென்னவரு

---

(௧) (௨) (௩) ரா-அயோ-௩௧-௨௫.

மாட்டேனென்று பின்போகை-சேஷத்வக்ருத்யமோ? நெருப்பிலே புகச்சொன்னாராகில் அத்தைச்செய்தல், அதில் நன்றும்படி ராஜ்யத்திலேயிருக்கச் சொன்னாராகில், அத்தைச்செய்தல்; பின்போகச் சொன்னாராகில், அத்தைச் செய்தல்; இப்படி சொல்லிற்றுச் செய்கையன்றோ சேஷத்வக்ருத்யம். [குஹ:] நெடுநாள் பரிசயித்த பரதனுக்கு ஒருநாள் சீலித்த குஹன் சொல்லும்படியாவதே; இன்னான் இன்னார்க்குச் சொல்லுகை யென்றில்லையாகாதே; கற்றவர்களாமித்தனையாகாதே வேண்டுவது. [𑌗𑌹𑌨𑌗𑍋𑌚𑌰𑌃- கஹநகோசர:] "காட்டில் மரத்திலும் மட்டையிலும் பழகிப்போந்த இவ்வன் இளைய பெருமாள் படிகளைப்பேசிப் போந்தபடி கண்டதே" என்று ருஷி கொண்டாடுகிறான். அங்ஙனன்றிக்கே பெருமாளுடைய வ்யதிரேகத்தில் தூற்றிலே தலைமடுத்துக்கொண்டு கிடந்தவன், பரதனைக் கண்டவாறே புறப்பட்டானென்னுதல்.

(வெண்ணெயுண்டித்யாதி) வாயாலே சொல்லுமளவேயோ? ஸகல கரணங்களாலும் சொல்லா நின்றாள், இவளுக்கென்ன பெண்மை யென்கிறாள். கீழ்ப்பாட்டிலே "கார்க்கடல் வண்ணர்மேலெண்ணம்" என்றவன் வடிவோடே அணையவேணுமென்று மநோரதித்து *முலையிலங்கு பூம்பயலை முன்போடவிறே இவளிருக்கிறது. "அவனாகிறான், ஒருத்தியுடைய உடைமையிலே ச(ச)பலனாய் அது கிட்டாமையாலே களவிலே இழிந்து, அது தன்னிலும் வாயது கையதாக அகப்பட்டு (க)"கட்டுண்டான்காண்" என்று சிலர்சொன்னால், "அங்ஙனே ஒருஸ்த்ரீ உடைமையிலே சபலனாவானொருவனைக்கப்பெற்றோமிறே. அது கிட்டாதென்று விட்டுப்போகையன்றிக்கே,

---

ளிச்செய்கிறார் (சேஷபூதனித்யாதி). (பின்போகச்சொன்னாராகில்) என்றது- மீண்டெழுந்தருளித்தாம் அபிஷிக்தராய்ப்போகச் சொன்னாராகிலென்றபடி. (சீலித்த) கண்டவென்கை.

கேவலம் வாக்வ்யாபாரமன்றிக்கே, மநஸ்ஸாலும் வெளியிடுகிறாளென்னக்கோலி, அதுக்கு அடையாளமாக வைவர்ண்யமும் போகக்கண்டோமென்கிறாளென்று விவக்ஷித்து, கீழோடுமேலெல்லாம்கூட்டித்தொகுத்தபாவத்தை யருளிச்செய்கிறார் (ஸகலேத்யாதி). வைவர்ண்யம் வருகைக்கு மூலத்தைக் காட்டுகிறார் (கீழித்யாதி). மகளுடைய ஸந்தோஷப்ரகாரந்தன்னை விவரிக்

(க) தி-மொ-கக-ரு-ரு.

களவிலே இழியப்பெற்றோமே, அதுதன்னிலும்அகப்பட்டுக்கட்டுண்ணும்படி எளியனாகப்பெற்றோமே" என்றவ்வபதாநங்களைக்கேட்ட மாத்ரத்திலே அவ்வுடம்போடே அணைந்தால் பிறக்கும் ஆஸ்வாஸங்களடையப் பிறந்து ஸந்துஷ்டையானாள். அவாப்தஸமஸ்தகாமனானவன், ஒருத்தி உடைமையை ஆசைப்படுவதாம், ஸர்வசக்தியானவன் களவிலேஇழிவதாம்; அதுதன்னிலும் அகப்பட்டுக் கட்டுண்ணும்படி எளியனாவதாம்; இனிநமக்கொரு குறையுண்டோவென்கிறாள்; .... (௫)

மூ.—வடவரைநின்றும் வந்தின்றுகணபுரம்
இடவகைகொள்வது யாமென்றுபேசினாள்
மடவரல்மாதரென்பேதை யிவர்க்கிவள்
கடவதென் கண்டுயிலின்றிவர் கொள்ளவே. (௬)

பதம்.	உரை.	பதம்.	உரை.
யாம்	நாம்	பேதை	பா(बा)லையாய்
வட	வடக்கிலுள்ள	என்	என்னுடைய
வரைநின்றும்	திருமலையில்நின்றும்	மாதர்	பெண்ணான
வந்து	வந்து	இவள்	இவள்
இன்று	இன்றைக்கு	இவர்க்கு	இந்த எம்பெருமானுக்கு
கணபுரம்	திருக்கண்ணபுரத்தை	கடவதென்	என்ன செய்யப்ராப்தியுண்டு ;
இடவகை	வாஸஸ்தாநமாக	இவர்	இந்தஎம்பெருமான்
கொள்வது	கொள்ளுகைக்காக (வந்தோம்),	இன்று	இன்றையதினம் (இவளுடைய
என்று	என்று	கண்டுயில்	நித்ரையை
பேசினாள்	சொன்னாள் ;	கொள்ளவே	கொள்வதற்குப்ரயோஜநமென். (௬)
மடவரல்	ப(भ)வ்யையாய்		

அவ.—ஆறாம்பாட்டு. கீழ்ப்பாட்டிலே "தன்னுடையுண்மையுரைக்கின்றாள்" என்றும், "வெண்ணெயுண்டாப் புண்டவண்ணம் விளம்பினால் வண்ணமும் பொன்னிறமாவதொழியும்" என்றும் சொன்னாய். அதிலுண்மை எது; பொன்னிறம்போனபடியென்னெகிறார் (அவாப்தேத்யாதி). ... ... (௫)

அரு.—ஆறாம்பாட்டு. (வடவரையித்யாதி) "உண்மை" என்றது - ஸத்வ்ருத்திவிசேஷம். அந்தஸத்வ்ருத்திதானும் ப்ரகாரப்ரகாரிபாவாநுஸந்தாநத்தில் உறைப்பாலே அபேதாநுஸந்தாநமென்று விவக்ஷித்து விரஹதசை

ன்ன; அத்தைச்சொல்லுகிருள். கண்ணனூரென்ருளிறே கீழ்; அந்தக் கண்ணனூரான திருவாய்ப்பாடியில் பெண்களடைய (க) [గురవః కింకరిష్యన్తి దగ్ధానాం విరహాగ్నినా - குரவః கிம்கரிஷ்யந்தி தக்த்தாநாம் விரஹாக்நிநா] என்று - "இக்குருக்கள் நம்மைச் செய்யப்புகுகிறதென்; விரஹாக்நியாலே வெந்துகிடக்கிறநம்மை ஆற்றி ஒருகுடம் நீர்சொரிவார்களோ" என்று பந்துவர்க்கங்களை நேராகவிட்டு க்ருஷ்ணனை அநுபவிக்கக் கடவதாக யமுநாதீரத்தேற வந்தார்கள்; அங்கு க்ருஷ்ணனைக்கண்டிலர்கள்; பின்பு அநுகாரத்திலே இழிந்து, "நான் நடவாநின்றேன், நீ நடைச்சக்ரவத்துப் பிடித்துக்காண் என்பது; (உ) [దుష్టకాళియతిష్ఠాత్ర కృష్ణోఽహమితిచాపరా] துஷ்டகாளியதிஷ்ட்டாத்ர க்ருஷ்ணோஹமிதிசாபரா] என்று - "பாரடா காளியனே! நான் உன்மேலேஏறி ஆடப்புகாநின்றேன்" என்பது-இப்படிகளாலே அநுகரித்தார்களிறே. இவளும்திருவாய்ப்பாடி-திருக்கண்ணபுரமாகவும், க்ருஷ்ணன் - சவரிப்பெருமாளாகவும், அச்சவரிப்பெருமாள்-தானுகவும், அநுகரித்துப்பேசுகிருள். (ங) "సర్వం ఖల్విదం బ్రహ్మ -ஸர்வம்கல்விதம் ப்ரஹ்ம"(ச)"అహం బ్రహ్మాఽస్మి-அஹம்ப்ரஹ்மாஸ்மி" என்று-தான் அவனுய், அவன்தானுயிறேயிருப்பது. இதிறே இவளுண்டயவைதிக லோகாயதமதமிருக்கிறபடி. வேறே அநுகரித்தாரும் சிலருண்டிறே. (ரு) "கடல்ஞாலம் செய்தேனும்யானேயென்னும்" என்று.

யில் அவ்வநுஸந்தாநம்வர ப்ரஸக்தியுண்டோவென்ன (கண்ணனூரித்யாதி). இருக்கண்ணபுரத்தைக் கண்ணனூராகவே தொழுவாளாகையாலே, தான் கோபிகாவஸ்த்தாபநனையாயும், சவரிப்பெருமாளை க்ருஷ்ணனுகவும், ஊர்திருவாய்ப்பாடியாகவும், அநுஸந்தித்திருந்தவளாகையாலே அந்தப்ரஸங்கத்தில் அவர்களைப்போலே இப்பாட்டிலநுகரித்தபடி சொல்லுகிறதென்று கருத்து. "இவள் அநுகரிக்கைக்கு மூலம் - ப்ரகார்ப்ரகாரிபாவத்தாலுண்டான ஐக்யம்" என்று விவக்ஷித்தருளிச்செய்கிருர் (ஸர்வமித்யாதி). தேஹமே ஆத்மாவென்கிற சார்வாகனைப்போலே அவனே தானுகப்ரமித்தாளோவென்ன (இதிறேயித்யாதி). அநுகரிக்கிருளாகில் ஆழ்வாரைப்போலேகாரணவஸ்துவை அநுகரியாமல், அர்ச்சாவதாரத்தை அநுகரிப்பானென்னென்ன (வேறேயித்யாதி). முன்னும்பின்னும் ஏகரூபேணவிருக்க, நடுவே அநுகாரம் பிறந்ததென்னப்

(க) வி-பு-ரு-கஅ-உஉ. (உ) வி-பு-ரு-கங-உஎ. (ங) சாந்தோ-ங-கச-க.
(ச) ப்ருஹ-ங-ச-கo. (ரு) தி-வாய்-ரு-சு-க.

அவளைப்போலே ஜகத்காரணரூபியைப்பற்று மவளன்றிறே இவள். அர்ச்சாவதாரரூபியையிறே இவள்அநுகரிப்பது. இவ்வர்ச்சாவதாரரூபத்தால் பிறக்கும் அநுபவமொழிய, அந்தந்த அவதாரங்களால் பிறக்குமநுபவத்தை நாய்க்கிடவென்றிருக்குமவளிறே இவள். ஆப்பான்திருவழுந்தூரரையரும், ஆழ்வார்திருநறையூரரையரும், இப்பாட்டைஅநுஸந்தித்து "இப்பாட்டுக்கு ஒருசேர்த்தி கண்டிலோம்" என்று பட்டர்பாடேவந்து, "இப்பாட்டிருக்கிறபடியென்" என்று கேட்க; "மகளநுகாரத்தைத் தாய் அநுபாஷிக்கிறாள்" என்றருளிச்செய்தார். ஆரூடயோகராயிருப்பார் சிலர்வந்தால் (க) "యోంభవాన్ యన్నిమిత్తంవా యదాగమనకారణమ్- யோபவாந்யந்நிமித்தம் வாயதாகமநகாரணம்" என்கிறபடியே "நீயார், வந்ததெங்குநின்றும்" என்று கேட்கக்கடவதிறே. அப்படியே "நீஎங்கு நின்றும் வந்தது, வந்த காரணமேது" என்ன; "வந்தது இன்னிடத்தில்நின்றும், வந்தகார்யம் இன்னது" என்கிறாள்.

வ்யா—(வடவரைநின்றும்வந்து) வடக்கில்திருமலையில்நின்றும்

போமோவென்ன; இதுஸம்ப்ரதாயஸித்தமென்று ஸம்வாதம் காட்டுகிறார் (ஆப்பானித்யாதி). அர்ச்சாவதாரத்தை அநுகரிக்கிறாளாகில், "வடவரைநின்றேனும் யானேயென்னும்" "வண்டிருவரங்கனும்யானேயென்னும்" என்றாப்போலேஅநுகரியாமல், "வடவரைநின்றும்வந்துஇன்றுகண்ணபுரமிடவகைகொள்வதுயாம்" என்று அநுகரியாநின்றாள்; ஆராகிலும் கேட்டாரோவென்ன (ஆரூடேத்யாதி). "பவாந் யாத்ருஶ:, யத்ஸ்த்தாநம்வா, யந்நிமித்தம்வா-வாசப்தஶ்சார்த்தே, ஆகமநஸ்ய ப்ரயோஜநதயாகாரணஞ்ச யத்" என்று ப்ரஶ்நத்ரயம் பண்ணுவாரைப்போலே, தோழிமார்இவளுடைய பொன்னிறமொழியும்படியான வடிவில் வேறுபாடுகண்டு, "எங்கேயிருந்தெழுந்தருளிற்று, எழுந்தருளின கார்யமென், தேவரீர் ஆர்" என்றார்கள். அதுக்கு உத்தரமருளிச் செய்கிறாளாக அநுவதிக்கிறாரென்று கருத்து. (வந்ததெங்கு நின்றும்) என்றவநந்தரம் "ப்ரயோஜநமென்" என்று கூட்டுவது. (அப்படி)என்றவநந்தரம் "நீர்ஆர்" என்றுகூட்டுவது. (என்ன) என்ற வநந்தரம் "நான்சவரிப்பெருமாள்" என்று கூட்டுவது.

(உ) "మాయావీపరమానన్దం త్యక్త్వావైకుణ్ఠముత్తమమ్॥ స్వామిపుష్కరిణీతీరే రమయాసహ మోదతే-மாயாவீபரமாநந்தம் த்யக்த்வா வைகுண்ட்ட முத்தம்।

வந்து. (௧)"திருமால்வைகுந்தமே தண் திருவேங்கடமே" என்று அத்தலையைப்பற்றி வருமவளன்றேஇவள். அர்ச்சாவதாரத்தைப் பற்றுமவளிறே. அர்ச்சாவதாரத்துக்குக்கொண்டக்கோல் நாட்டின தேசமிறே திருமலை. வந்தகார்யமேதென்ன (இன்றுகணபுரமிட வகைகொள்வதுயாம்) இன்று திருக்கண்ணபுரத்திலே நித்யவாஸம் பண்ணுவதாகக்காண்வந்தது, இதுகாண் நாம் வந்தகார்யம், இது என்னுடைய உண்மையிருந்தபடி. (என்றுபேசினாள்) "உரைக்கின்றாள்" என்றாளிறேகீழ். அத்தைப் "பேசினாள்" என்றுதாயார் சொல்லுகிறாள்.

(மடவரலித்யாதி) திருவாய்ப்பாடியில் பெண்களைப்போலேயோ? அலைவலைகளாய்ப் புறப்பட்டுப் பழிதூற்றி அநுகரித்தவர்களைப்போலேயோ? இவள் பந்துக்கள் சொன்னத்தைச்செய்துபோந்தவளன்றோ? (மடவரல்மாதர்) ப(ஃ)வ்யையானபெண். (என்பேதை) பந்துக்களுக்கு பவ்யையாய்ப் போந்தாளென்னுமளவேயோ? பெற்றெடுத்த என்வார்த்தையல்லதறியாதவளன்றோ?. (பேதை) ப்ராப்தயௌவனையாகில் என்வார்த்தை கொள்ளாதொழியவும் கூடுமிறே; பெற்றதமப்பனுக்கும் பர்த்தாவுக்கும் வாசியறியாத பருவம்கிடீர்

ஸ்வாமிபுஷ்கரிணீதீரே ரமயாஸஹமோததே" என்று அதுக்கும் அடியுண்டாயிருக்க "அங்குநின்றும்" என்பானென்னென்ன (திருமாலித்யாதி). ஆகில் திருவரங்கத்திலுமோவென்ன; (அர்ச்சாவதாரேத்யாதி). (௨) "செஞ்சொற்கவிகாள்" என்கிற திருவாய்மொழியில் நித்யஸூரிகளுக்கு ஆழங்கால்படாமைக்கு உபதேசிக்கும்போது மற்றும் திவ்ய தேசங்களிருக்க, தெற்குத் திருமலையில் ஸௌசீல்யத்தையிறே ஆழங்காலாக வருளிச்செய்தது; அப்படியேவடமலையும் *கானமும் வாநரமுமானவற்றுக்கும் முகங்கொடுக்குமிடமாகையாலே அச்சீலத்தில் ஆழங்கால்பட்டு மற்றொன்றைச் சொல்லாளென்று கருத்து. (என்னுடைய உண்மை) என்றது-தன்பெண் தோழிமாரைக்குறித்துச்சொன்னது. இத்தால் நீயாரென்னும் ப்ரஶ்நத்துக்கு உத்தரம்சொன்னபடியாயிற்று.

இப்படி (௩) "𑌶𑍍𑌵𑌶𑍍𑌰𑍍𑌵𑌃 𑌕𑌿𑌂 𑌵𑌦𑌿𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 - குரவ꞉ கிங்கரிஷ்யந்தி" என்று புறப்பட்டுப்போய் அநுகரித்தவர்களைப்போலே அநுகரித்தாளாகில், இனி நீ கைவிடுமத்தனையன்றோ வென்னும் சங்கையிலே, "மடவரல்" இத்யாதி என்று விவக்ஷித்தருளிச் செய்கிறார் (திருவாய்ப்பாடியிலித்யாதி). விவரணம் (அலைவலையித்யாதி). (தனிசு)கடன். (பணயம்)பிச்சை.

---

(௧) தி-வாய்-௧௦-௭-௮. (௨) தி-வாய்-௧௦-௭. (௩) வி-பு-௫-௧௮-௨௨.

இவளுக்கு. (இவர்க்கு) அத்திருவாய்ப்பாடியில்பெண்களோடே அநுபவித்துவைதக்த்யமூர்த்தாபிஷிக்தராயிருக்கிற இவர்க்கு. (இவள்) ஆருருக்ஷுவாயிருக்கிறஇவள். (கடவதென்) தனிசுடையார் பணயமெடுப்பாரைப்போலே இவள் கண்ணுறக்கத்தைக் கொள்ளுகைக்கு என்னப்ராப்தியுண்டு.

(கண்டுயிலின்றிவர் கொள்ளவே) அவர்களைப் போலே அலைவலையானால், பின்புவேணுமாகில் கொள்ளுகிறார்; இன்றுஇவள் கண்ணுறக்கத்தைக் கொள்ளுகைக்கு என்ன ப்ரயோஜநமுண்டென்கிறாள். கீழ் "வண்ணமும் பொன்னிறமாவதொழியும்" என்றாள்; "அந்தபொன்னிறமாவதுஎது,ஸ்வாபாவிகமானதன்நிறமாவதெது" என்ன; (க)"𑌯 𑌆𑌤𑍍𑌮𑌨𑌿 𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍-𑌆𑌤𑍍𑌮𑌨𑍋𑌽𑌨𑍍𑌤𑌰𑌃 -யஆத்மநிதிஷ்டந், ஆத்மநோऽந்தர:" (உ) "𑌯𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌾 𑌶𑌰𑍀𑌰𑌮𑍍-யஸ்யாத்மாசரீரம்" என்று ஸ்ருதிகள் சொல்லுகிறபடியே சரீரசேஷத்வமும், சேஷசேஷிஜ்ஞாநமும், அந்தஜ்ஞாநத்தால் பிறக்கும்ஆநந்தமும், ஆக சேஷத்வஜ்ஞாநாநந்தங்கள்-தன்நிறமாகிறது; பொன்நிறமாகிறது-"தேவோऽஹம்,மநுஷ்யோऽஹம்" என்று ப்ரவிஷ்டசரீரங்களிலே ஆத்மபுத்தியைப் பண்ணி (ங) "𑌦𑍁𑌃𑌖𑌾𑌽𑌜𑍍𑌞𑌾𑌨 𑌮𑌲𑌾𑌧𑌰𑍍𑌮𑌾𑌃- து:க்காऽஜ்ஞாநமலாதர்மா:" என்கிற தர்மங்களையேறிட்டுக்கொள்ளுகை. ஆரூடயோகராயிருப்பாக்குக் கிட்டாத ஸ்வபாவங்களடைய ஆருருக்ஷுவாயிருக்கிற இவளுக்குப்பிறப்பதே. இஃதோராஸ்சர்யமிருந்தபடி யென்னென்கிறாள். .... (சு)

மூ.—தரங்கநீர் பேசினும் தண்மதிகாயினும்
இரங்குமோ வெத்தனைநாளிருந்தெள்கினாள்
துரங்கம் வாய்கீண்டு கந்தானதுதொன்மையூர்
அரங்கமேயென்ப திவள்தனக்காசையே. .... (எ)

பொன்னிறம் போம்படி யென்னென்னும் ப்ரஸ்நத்துக்கு "கண்டுயில்கொள்ளுகை" என்றது உத்தரமென்று விவக்ஷித்து ஸ்வாபதேசம் (கீழித்யாதி). துயில்கொண்டானென்கையாலே தேஹாத்ம ப்ர(ப்ரு)மாதிகளாகிற அஜ்ஞாநத்தைப்போக்குகையாலே பொன்னிறம் போனபடி சொல்லிற்றாய்த்தென்றுகருத்து. பாட்டுக்கெல்லாம் பிண்டிதார்த்தமருளிச் செய்கிறார் (ஆரூடேத்யாதி). ... ... (சு)

(க) ப்ருஹ-ரு-எ-உஉ. (உ) ப்ருஹ-ரு-எ-உஉ. (ங) வி-பு-சு-எ-உஉ.

பதம்.	உரை.
தரங்கம்	திரைக்கிளப்பத்தை யுடைய
நீர்	ஸமுத்ரமானது
பேசினும்	கோ (𑌷) ஷிக்கிலும்,
தண்	குளிர்ச்சியையுடைய
மதி	சந்த்ரன்
காயினும்	காய்ந்தாலும் (இவள்)
இரங்குமோ	இளைக்குமோ?
எத்தனைநாள்	நெடுநாளாக
இருந்து	(இதுகளில்) இருந்து
எள்கினாள்	ஈடுபட்டாள்;

பதம்.	உரை.
துரங்கம்	அஶ்வரூபியான கேசியினுடைய
வாய்	வாயை
கீண்டு	கிழித்து (அதனால்)
உகந்தான்அது	களித்த கண்ணனுக்கு
தொன்மை	பழையதான
ஊர்	கோயிலான
அரங்கமே என்பது	திருவரங்கமென்பதே
இவள்தனக்கு	இவளுக்கு
ஆசையே	ஆசையாயிருக்கிறது. (எ)

அவ.—ஏழாம்பாட்டு. (தரங்கமித்யாதி) “இவர்க்கு இவள் கடவதென்” என்று-இவள் கண்ணுறக்கத்தை இவர்கொள்ளுகைக்குப்ராப்தியுண்டோவென்றாய், “இப்படி இவரோடும் இவளோடும் கொள் கொடையற்றோ விருக்கிறது, கார்க்கடல் வண்ணர்மேலெண்ணமென்றும், கண்ணபுரந்தொழுமென்றும், கண்ணபுரமென்று பேசினாளென்றும், *சிந்தையாலும் சொல்லாலும் செய்கையினாலும் அவனேயாம்படியன்றோ அவளிருக்கிறது; அவரோடு அவளோடு ப்ராப்தியில்லையென்று சொல்லக்கடவையோ? அதுகிடக்கிடும், உன்

அநு.—ஏழாம்பாட்டு. (தரங்கநீரித்யாதி) வினவவந்தவர்கள் திருத்தாயாரைக்குறித்து நீ சவரிப்பெருமாள்மேல் குற்றம் சொல்லியும், நறையூரர் கார்யமே நன்றாயிற்றென்றும், “உள்மெலிந்தாளிது வென்கொலோ, நோவுபடுமிவளுக்கு இதுவென்” என்று ஆஶ்சர்யப்பட்டும், கரணத்தாலும் கண்ணபுரத்தானைப் பற்றினாளென்றும், அவனே தானாக அநுகரித்தாளென்றும் சொல்லி, இவளை இப்படி படுத்துகைக்கு பஞ்சலக்ஷம் குடியில் பெண்களோடும் கலந்து விதக்த(𑌗𑍍𑌧)ரான இவர்க்கு, முக்தை (𑌗𑍍𑌧) யான இவள் கண்ணுறக்கத்தைக்கெடுக்க ப்ராப்தியென்” என்றும் சொல்லிக்கொண்டிருந்தால், பெண்ணின் விரஹக்லேசம்தீருமோ? இது தீரும்படியன்றோ நமக்குத்தேட்டமென்னும் கருத்தாலே ஆக்ஷேபிக்க; அதுக்குவெறுப்பாக “இனி என்செய்வோம், படுவதெல்லாம்பட்டாள், இன்னமும் படுகிறாள்” என்கிறாளென்று ஸங்கதியை யருளிச்செய்கிறார். (இவர்க்கு இவளித்யாதி).

இவள்தானே கரணத்தையும் அத்தலைக்காகக் கொடுத்துவிட்டாளே

மகள்தான் இவ்வீடுபாடுகள்தானே பொறுக்கக்ஷமையோ" என்ன; "இவற்றுக்கு இளைக்குமவளோ இவள்" என்கிறாள்.

வ்யா.—(தரங்கநீர்பேசினும் தண்மதிகாயினுமிரங்குமோ) உறக்கம்போய் கண்ணைவிழித்துப்பார்த்தாள், பிரிந்தார் இரங்கும்நிலம் கடல்கரையாகையாலே, ஸமுத்ரதீரத்திலேயிருந்து அவன்றன்னோடு ஸம்ஶ்லேஷிக்கிறபோது பெரியஅபி(ம)நிவேசத்தோடே மேல்விழுந்து அணைத்தகோளுக்கு ஸ்மாரகமாயும், ஸம்ஶ்லேஷிக்கிறபோது "அடியேன், குடியேன்" என்றாப்போலே சொன்ன நீசபாஷணங்களுக்கும் ஸ்மாரகமாயும், அணைக்கிறபோதை ஸ்பர்ஶஸௌக்யத்தால் வந்த குளிர்த்திக்கு ஸ்மாரகமாயும் இவைகளையாமின்றால் இளைக்குமோ?. (தரங்கநீர்பேசினும்) திரைக்கிளர்த்தியை யுடைத்தானஸமுத்ரம் கோஷிக்கிலும். (தண்மதிகாயினும்) அந்தகடலிலே பிறந்தவனிறே சந்த்ரன். ஸர்வபூதஸுஹ்ருத்தான அவன்இவளளவில் பாத(க)கனாப்போலே, ஸர்வப்ராணிகளுக்கும் ஆஹ்லாதகானான சந்த்ரன் நெருப்பைமுகந்து தூவிலும், அவன்படி இதுவானால் இவர்கள்படி சொல்ல வேண்டாவிறே. (௧) "𑌯𑌚𑍍𑌛𑍀𑌲𑌃 𑌸𑍍𑌵𑌾𑌮𑍀 𑌤𑌚𑍍𑌛𑍀𑌲𑌾𑌃 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌯𑌃 - யச்சிலஸ்ஸ்வாமீ, தச்சிலாப்ரக்ருதிঃ" இறே.

(இரங்குமோ) இளைக்குமோ; என்றாள். இவள் இளையாமைக்கு ஹேதுவென்னென்ன; (எத்தனைநாளிருந்தெள்கினாள்) முன்பே

யென்கிறார் (கார்க்கடலித்யாதி). (அதுகிடக்கிடும்) என்றது - அவர்க்கு ப்ராப்தியுண்டாகிறது, இல்லையாகிறது, நமக்கு விசாரணீயமன்றென்கை. இனி விசாரணீயந்தானேதென்ன (உன்மகள்தானித்யாதி). (இவ்வீடுபாடுகள்) விரஹத்தாலுண்டான து꞉க்கங்கள். "இளைக்கு மவளோ" என்றது - விரஹக்லேசமெல்லாம்பட்டே குண்டவளின்னம் படத்தக்கவளென்றபடி.

(உறக்கம்போய்) என்றது - கீழ்ப்பாட்டில் "கண்டுயில் கொள்ள" என்றத்தைப்பற்ற. நீர் என்றபதவாஸநை (அணைக்கிறபோதையித்யாதி). "தண்" என்கிறதுக்குத் தாத்பர்யமருளிச் செய்கிறார் (அந்தவித்யாதி). (அவன்படி இதுவானால்) என்றது - கண்ணபுரத்தான்படி விரஹாக்நியைக் கொளுத்துமதானாலென்றபடி.

பேதையான இவள்நெடுநாள்விஶ்லிஷ்டையாகப் படுவதெல்லாம்பட்டாளென்கிறது. (௨) "𑌤𑍍𑌰𑍁𑌟𑌿𑌰𑍍𑌯𑍁𑌗𑌾𑌯𑌤𑍇 - த்ருடியுகாயதே" என்னுமாபோலே

---

(௧)

(௨) பாக-௧௦-௩௧-௧௫.

நெடுநாள் இவற்றின்கையிலே அடியுண்டு தகணேறின இவள்இவற்றுக்கு ஈடுபடுமோ? ‘‘எள்குதல்’’ -ஈடுபடுதல். விடுநகத்தைப் பூட்டினுல் அதில் பழக்கமில்லாதவன் நோவுபடுமிறே; அதிலே பழகிப்போந்தவன் விடுநகம்பூட்டினுல் கட்டிக்கொள்ளாய் என்று கிடக்குமிறே.

(துரங்கமித்யாதி) இவள் இப்படி நோவுபடாநின்றுல் இதுக்குப் பரிஹாரம் பண்ணவேண்டாவோ, பெற்றநீயிறே பரிஹாரம் பண்ணுவாய்; அத்தைச் சொல்லிக்காணுயென்ன; அவளுக்குப் பரிஹாரமறிவேன் நானேயிறே. (அரங்கமேயென்பதிவள் தனக்காசையே) ‘‘திருவரங்கம்’’ ‘‘திருவரங்கம்’’ என்பதுஇவளுக்காசை. ஆனுல் அதுசொல்லத் தட்டென்னென்ன; இவள்ஸத்ப்ரக்ருதியாகையாலே வாய்விடில் சிதிலையாகக்கூடுமென்று, வாய்க்காவலிட்டு வைப்பர்கள் பந்துக்கள்; (ஆசையே) வருந்திச் சொல்லப்புகில் அருகேயிருந்து ‘‘வாய், வாய்’’ என்பர்களிறே. திருக்கண்ணபுரத்தில் நிற்கிற க்ருஷ்ணனேயன்றே இங்கும்; அவனில்காட்டில் இவனுக்குவாசியுண்டோவென்னில், (துரங்கம்வாய்கீண்டு கந்தானது தொன்மையூர்) (க) ‘‘𑌕𑍇𑌶𑌵𑌃 𑌕𑍍𑌲𑍇𑌶𑌨𑌾𑌶𑌨𑌃- கேசவஃ க்லேசநாசநஃ’’ என்றுபோக(𑌭𑍋𑌗𑍍𑌯)விரோதியான கேசியை அழித்தவனன்றே? ஶ்ரீப்ருந்தாவநத்திலே பெண்களும் தானுமாக அநுபவியாநிற்க, இதுக்கு விரோதியாய்வந்த கேசியின் வாயைக்கிழித்துப் பெண்களுக்கு ஒருகார்யம் செய்தானுயிருக்கையன்றிக்கே தன்னுடைய போக (𑌭𑍋𑌗𑍍𑌯) விரோதிபோயிற்று என்று உகந்தான்.

(தொன்மையூர்) பழையதானகோயில் .; கண்ணனூரென்கிற திருவாய்ப் பாடிபோலே பழையதாய், புராணபந்தமுமாயிறேயிருப்

நெடுநாளாய் தோற்றுகையாலே என்று விவக்ஷித்து அருளிச்செய்கிறுர் (முன்பேயித்யாதி).

(இதுக்குப்பரிஹாரம்) என்றது-சவரிப்பெருமாள்காலைக்கட்டிக்கொள்ளுகை. (பந்துக்கள்) என்றது-தாய்முறையான நங்கைமார்களை. பெற்றதாயாய் ப்ரியபரையாயிருக்க, ஏகாந்தத்திலேயாகிலும் இவளாசையைத் தலைக்கட்டலாகாதோவென்ன (வருந்தியித்யாதி).

(புராணபந்தம்) புராணத்திலே ஸம்பந்தத்தை யுடைத்தாகை. தத்ப்ரதிபாத்யமென்கை. ‘‘தொன்மை’’ என்றுவிசேஷித்ததுக்கு ப்ரக்ருதோப

(க) நாரஸிம்ஹ-உ௲-ா௭.

பது. திருக்கண்ணபுரமாகிறது - ஸமுத்ரமத்யத்திலே புதிதாகக் குடியேறின த்வாரவதிபோலேயிறே; (௧) "வேலைமோதும்மதிள்" (௨) "வெள்ளியேய்ந்தமதிள்" என்றது-தனக்குஸ்மாரகமாய், நலிந்த சந்த்ரனுக்கும் கடலுக்கும் தோள்தீண்டியாயிறேயிருப்பது. தன்னைநோவுபடுத்தின கடலின்வாயை அடக்கும்போது கேசிவாயைக் கிழித்தவனாக வேண்டாவோ. நெருப்பைத்தூவின சந்த்ரனை ஆறவிடும்போது தக்ஷசாபத்தாலே நோவுபட, தன்னுடைய சந்த்ரபுஷ்கரிணியிலே பரிசயிப்பித்து அவனுடைய க்ஷயத்தைப்போக்கினவனாகவேண்டாவோ.

(அரங்கமேயென்பதிவள் தனக்காசையே) திருக்கண்ணபுரமென்று சொன்னுளித்தனை; தானான தன்மை-கோயிலையே சொல்லுகையென்கிருள். கண்ணனூரேயது; இது-ஸ்ரீரங்கமிறே. (௩) "𑌨 𑌕𑌶𑍍𑌚𑌿𑌨𑍍𑌨𑌾𑌪𑌰𑌾𑌧𑍍𑌯𑌤𑌿-நகஶ்சிந்நாபராத்யதி" என்னும்பெண்ணரசிறே. மயர்வற்றயதாஜ்ஞாநம் பிறந்தால் ஆரூடயோகராயிருப்பார்க்கும் (௪) "𑌅𑌪 𑌏𑌵 𑌸𑌸𑌰𑍍𑌜𑌾𑌦𑍌 - அபஏவஸஸர்ஜாதௌ" என்கிற அப்ஸ்ருஷ்டிவாச்யமான மூலப்ரக்ருதியும் அதின் கார்யமான சப்தாதிகளும் போனுலல்லது அநுபவம் பூர்ணமாகாதிறே. இங்கு கடலினுடைய ஸ்த்தாநத்திலே ப்ரக்ருதி, அதில்பிறந்த சந்த்ரஸ்த்தாநே சப்தாதிகள். .... (௭)

யோகம் காட்டுகிருர் (திருக்கண்ணபுரமித்யாதி). இத்தால் கோபிகாவஸ்த்தாபந்நையான இவளுக்குத் திருவாய்ப்பாடியில் க்ருஷ்ணன் போக (𑌭𑍋𑌗) நிரவாஹகனாய், ஸ்ரீமத்த்வாரகையில் க்ருஷ்ணன் விரஹவர்த்தகனாகையாலே அவ்வூர்களும் அவனைப்போலே யிருக்குமென்று கருத்து. விரஹவர்த்தகமானபடி யெங்ஙனேயென்ன (வேலைமோதுமித்யாதி). திருவரங்கம் விரஹநிவர்த்தகமான்வழி என்னென்ன (தன்னையித்யாதி வாக்யத்வயத்தாலே).

எவகாரார்த்தமருளிச் செய்கிருர் (திருக்கண்ணபுரமித்யாதி). ஆசைப்படுகைக்கு பற்றுசேதென்ன (கண்ணனூரித்யாதி). அதில் அவனுக்குப்ராதாந்யம் தோற்றியிருக்கும், இதில் புருஷகார பூ (𑌭𑍂) தைக்கு ப்ராதாந்யம் தோற்றியிருக்குமென்று கருத்து. இப்பாட்டுக்கு ஸ்வாபதேசம் காட்டுகிருர் (மயர்வித்யாதி). ... ... (௭)

---

(௧) தி-வாய்-௯-௧0-௧. (௨) தி-வாய்-௯-௧0-௨.

(௩) ரா-யு-௧௧௯-௪௪. (௪) மநு-௧-௮.

மூ.—தொண்டெல்லாம் நின்னடியே தொழுதுய்யுமா
கண்டு தான் கண்ணபுரம் தொழப்போயினாள்
வண்டுலாம்கோதையென்பேதை மணிநிறம்
கொண்டு தான்கோயின்மை செய்வதுதக்கதே. (அ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
தொண்டெல்லாம்	ஸகல பாகவதர்களும்	உலாம்	ஸஞ்சரியாநின்ற
		கோதை	குழலையுடைய
நின்	தேவருடைய	என்	என்னுடைய
அடியே	திவ்யதேசத்தையே	பேதை	முக்தை (𑌗𑍍𑌧)யான பெண்ணினுடைய
தொழுது	அஞ்ஜலிபண்ணி		
உய்யுமா	உஜ்ஜீவிப்பதை		
கண்டு	பார்த்து	மணி	மணிபோன்ற
தான்	தாமும்	நிறம்	நிறத்தை
கண்ணபுரம்	திருக்கண்ணபுரத்தை	கொண்டுதான்	அபஹரித்து தான்
தொழ	தொழுவதற்கு	கோயின்மை	அநீதியை
போயினாள்	போனாள்;	செய்வது	பண்ணுவது
வண்டு	வண்டுகளானவை	தக்கதே	(உமக்கு) தகுமோ?.

அவ.—எட்டாம்பாட்டு. முதற்பாட்டிலே [வெள்ளியீர்,தொழுத இவள்கைவளை கொள்வதுதக்கதே] என்று தொழுத இவள் கையில் வளையைக்கொள்ளுகை உமக்குத் தகுமோவென்று இவள் சொன்னவாறே "தொழுத இவள்கையில் வளையவாங்குகை தகுதியல்ல, தப்பச்செய்தோம்" என்று இசைந்து நின்றார் சவரிப்பெருமாள்; பின்புதன்னிலே "இவர்க்கிவள் கடவதென் கண்டுயிலின்றிவர்கொள்ள" என்றும், "அரங்கமேயென்பதிவள்தனக்காசையே" என்றும் சொன்னத்தை சவரிப்பெருமாள் கேட்டார். (க) "𑌸𑌰𑍍𑌵𑌤

அரு.—எட்டாம்பாட்டு. (தொண்டித்யாதி) பூர்வார்த்தத்தையெல்லாம் கடாக்ஷித்து ஸங்கதியருளிச் செய்கிறார் (முதலித்யாதி - இத்தனை யென்கிறாளென்னுமளவும்). (இசைந்துநிற்கை) நெஞ்சுநெகிழ்ந்து கொடுப்பதாகநிற்கை. (தன்னிலே) தங்களிலே. சவரிப்பெருமாள் முன்னிலையாய்தோற்றியிருக்கையாலே செவிப்படாமல், வினவ வந்தவர்களோடே எகாந்தமாகச்சொல்லச் செய்தே அவர்கேட்டபடி யென்னென்ன (ஸர்வத இத்யாதி). (தன் அபி

(க) ஸ்ரீ-க௩-க௪.

ஶிரோமுகம் - ஸர்வதஸ்ஸ்ருதிமல்லோகே" என்றிருக்குமவரிறே அவர். இப்படி இவள்சொன்னவாறே "வளைகொடுப்பதாக நினைத்திருந்தோம், இனிகொண்டு அதுகொடுக்கிறதென், இன்னம் எட்டுமதுண்டாகில் வாங்கஅமையாதோ?"என்று சவரிப்பெருமாள்சிவட்கென்று "உன்மகளுக்கு அரங்கமேயென்பதாசை என்றாய், அவளோடு நம்மோடு ப்ராப்தியில்லையென்றும் சொன்னாய், ஆனால் நம் ஊருக்கு இவள்வருவானென், நாம்இவளை அழைத்தோமோ, ஆசைப்பட்டவிடத்தேறப் போகலாகாதோ?"என்ன; "அதில்ஸம்சயமில்லை; அரங்கமேயென்பதிவள்தனக்காசை, நினைவுமதுவே, ஸ்வாபிமதஸித்திக்கு உறுப்பாக நாட்டார் செய்கிறதைக்கண்டு தனக்கும்தன்னபிமதம் ஸித்திக்குமோ? என்று தன்ஆசையாலேசெய்வான்முறைமை கண்டுபோனாளித்தனை"என்கிறாள். கார்க்கடல்வண்ணர்மேலெண்ணமென்றென்றே இவளுக்குமனோரதம். (க) "இலங்கொலிநீர்பெரும்பௌவம்மண்டியுண்ணபெருவயிற்றகருமுகிலேயொப்பர்வண்ணம்" என்று கடலைப் பருகின காளமேகம்போலேயிறே பெரியபெருமாள் வடிவிருப்பது. ஆகையாலே நினைவும் அங்கேயென்னுமிடம் ஸித்தமிறே.

(தொண்டெல்லாம்) இப்பரப்பெல்லாமென்கிறாள். தொண்டர்-பகவத்பக்தர்களெல்லாம், ஆர்த்தராயும், ஆத்ம ப்ராப்தி காமராயும், பகவத்ப்ராப்திகாமராயுமிருக்குமவர்கள். இவர்களுக்கு பந்த(𑌬𑌨𑍍𑌧)த்திலும், ஆஶ்ரயணத்திலும் பேதமில்லையிறே. ப (ஃ) லத்திலேயிறே

மதம்) கோயிலில்வாழ்ச்சி. (செய்வான்முறைமை) செய்வார்களுக்குச்செய்யும் ப்ராப்தி. நினைவும்அதுவேயென்னப்போமோ "கார்க்கடல்வண்ணர்மேலெண்ணம்" என்றன்றோ சவரிப்பெருமாள் விஷயம் சொல்லிற்றென்ன வருளிச்செய்கிறார் (கார்க்கடலித்யாதி). அந்தப்பாட்டில் சவரிப்பெருமாள் விஷயமாகச்சொன்னாளேயாகிலும், சவரிப்பெருமாள் சிவட்கென்று வேறுபட்டு நிற்கையாலே, இவளும் இப்போது திருப்பித் தாத்பர்யாந்தரம் விவக்ஷித்தாளென்னலாமென்று திருவுள்ளம்.

(ஆர்த்தராயும்) என்றது - அர்த்தார்த்திகளுக்கு முபலக்ஷணம். ப்ரயோஜநாந்தரபரரையும் "தொண்டர்" என்னலாமோவென்ன (இவர்களுக்கித்யாதி).

(க) திருநெ-உச.

பேதம். ஆகையாலே "எல்லாம்" என்கிறாள். "தொண்டெல்லாம்" என்று - பக்தரைக் காட்டுமோவென்னில்; "𑌮𑌞𑍍𑌚𑌾𑌃 𑌕𑍍𑌰𑍋𑌶𑌨𑍍𑌤𑌿 -மஞ்சா: க்ரோசந்தி" என்னுமாபோலே. (தொழுதுய்யுமாகண்டு) சதுர்வித புருஷார்த்திகளும் உன்திருவடிகளை ஆஶ்ரயித்து தந்தாம்அபிமதங்களைப் பெறக்கண்டு. (தொழுது) (க) "𑌬𑌦𑍍𑌧𑌾𑌞𑍍𑌜𑌲𑌿𑌪𑍁𑌟𑌾𑌃 - பத்தாஞ்ஜலிபுடா:" என்று காயிகமான வ்ருத்தியிறே அஞ்ஜலி.

(கண்ணபுரம்தொழப்போயினாள்) நமக்கும் இங்கேகோயிலிலே சென்று புகலாமாகில் திருக்கண்ணபுரத்தைத் தொழுவோமென்று போயினாள். (நின்அடியேதொழுது) என்று உன்னையன்றே இவள் தொழுதது, திருக்கண்ணபுரத்தையிறே; யதோபாஸநமன்றோப(ஃ)லம். ஐஶ்வர்யார்த்திகள் ஐஶ்வர்ய விசிஷ்டனையிறே பற்றுவது. ஆத்மப்ராப்திகாமன்சுத்திவிஶிஷ்டனையிறேபற்றுவது. பகவத்ப்ராப்திகாமனும் (உ) "𑌸𑍋𑌽𑌶𑍍𑌨𑍁𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍 𑌕𑌾𑌮𑌾𑌨𑍍 -ஸோஶ்நுதேஸர்வாந்காமாந்" என்று குணவிஶிஷ்டனையிறே பற்றுவது. இவளும் இவ்வூரை ஆசைப்பட்டவளாகையாலே ஊரைத்தொழுகிறாள். யத்விஶிஷ்டவஸ்துவைப்பற்றினால் தத்விஶிஷ்டவஸ்துவேயிறேப்ராப்யம்; க்ருஷ்ணனை ஆசைப்பட்டபெண்கள், க்ருஷ்ணன் மகனானகாமன் காலிலே விழுந்தார்களிறே. உடையவர்பெருமாளுக்கு நெடுநாள் திருமஞ்ஜநமெடுத்து அவரை ஆஶ்ரயமாகப்பற்றி, பின்பிறே கோயிலிலே வந்

கண்ணபுரம் தொழப்போனது தனக்குமாத்ரம் கோயில்வாஸம் கிடைக்கைக்காகப் போனாளல்லள், தன்னடியாரான நமக்கும் கோயில்வாஸம் கிடைக்கும்படி கிடீர்போனது என்று வ்யாக்க்யாதா ஈடுபடுகிறார் (நமக்குமித்யாதி). ஊரைத்தொழுதாலும் நாமன்றோபலமென்ன; அன்றென்கிறாள்(நின்னடியேயித்யாதி). ஊரைத்தொழுதாலும்ஊரேபலமாவானென்னென்ன(யதோபாஸநமித்யாதி). அப்படியே பலமாக வேண்டுவானென்னென்ன (ஐஶ்வர்யேத்யாதி). "ப்ராப்யாநுகுணமாகப்ராபகம்"என்றருளிச்செய்து,ப்ராபகாநுகுணமாகப்ராப்யமென்கிறார் (இதித்யாதி). ப்ராப்யாநுகுணம்ப்ராபகமென்றதுக்கு உதாஹரணம் (க்ருஷ்ணனையித்யாதி). (ங) "𑌆𑌤𑍍𑌮𑌾 𑌵𑍈 𑌪𑍁𑌤𑍍𑌰𑌨𑌾𑌮𑌾𑌸𑌿-ஆத்மாவைபுத்ரநாமாஸி" என்கிறபடியே காமனைப் பற்றினார்களென்கை. ப்ராபகாநுகுணம் ப்ராப்யமென்றதுக்கு உதாஹரணம் (உடையவரித்யாதி). கண்ணபுரத்தைத்தொழு

(க) பார-சாந்தி-ஙஙஎ-சO.
(உ) தை-ஆ-க-உ.
(ங) மந்த்ரப்ர-செளள.

தது. தொண்டெல்லாம் என்கிறவர்களைப்போலே ஸாதநபேதம் கொள்ளுமவளன்றேஇவள். ப்ராபகவஸ்துவேப்ராப்யமென்று, (க) *தானுகந்தவூரெல்லாம் தன்தாள் பாடித்திரியுமவளிறே. "ஒருவர்க்குரியேனோ" என்றதும் ஸாதநாந்தரங்களில்லையென்றதத்தனையிறே. (தான்போயினாள்) தொழுதாப்போலே குறியழியாமல் போரவல்லளாகிலன்றோ போவது; தொழப்புக்கு நிறத்தைக் கொடுத்துப் போருவார் போருவர்களோ? (போயினாள்) ஶ்ரீமிதிலையில் பிறந்தாரிலும், குண்டிநபுரத்தில் பிறந்தாரிலும் போனாருண்டோ? வரக்கண்டவித்தனையன்றோ செய்தது. (போயினாள்) *வேயினதோள் விசிறிப் பெடையன்னமென நடத்தவவள்போக்கு நீ காணப் பெற்றதில்லை காணெணன்கிறாள்.

இப்படியிருக்கிற இவள்போனால் தன்னோடொக்க ரூபஸாம்யத்தைக் கொடுக்கவன்றோஅடுப்பது. நிவாரகரில்லாத தேசத்திலே தனிநிலத்திலே அடித்துப் பறிப்பாரைப்போலே இவள்நிறத்தையும் கொள்ளவேணுமோவென்கிறாள். (வண்டுலாங்கோதையென்பேதை) இவள்மயிரைமுடித்துப்பூவைச் சுற்றிவிட்டால் வண்டுகள்பறந்துவர்த்திக்குமதுக்கு வெருவி உள்ளேபுகுரும் பருவமென்கிறாள்.

தால், அரங்கத்தில் வாஸம்வருமோவென்ன (தொண்டித்யாதி). உகந்தருளின நிலங்களெல்லாம்ப்ராப்யமும் ப்ராபகமுமாகவும் அநுஸந்திக்குமவளாகையாலே உன்னை ஒன்றுக்கு ஸாதநமென்றாலும் ஸாத்ய ஸாதநங்களுக்கு பே(த்)த மில்லையென்று கருத்து. தேசத்தைத்தொழுகை ஸாதநாந்தரமாய் விழாதோவென்ன (ஒருவர்க்கித்யாதி). உன்னைப்ராப்யமாக்கி,தேசவாஸத்தை ஸாதநமாக்கிலிறே ஸாதநாந்தரமாவதென்றுகருத்து. திருவரங்கத்தைப்பெறுகைக்கு திருக்கண்ணபுரத்தைத் தொழவந்தாளாகில் நம்வடிவில் கண்வைப்பானென்; விஶ்லேஷித்து இப்பாடுபடுவானென்; என்னும் ப்ரஶ்நத்திலே "தான்" என்கிறாளென்று விவக்ஷித்து உட்கருத்து (தொழுதாப்போலேயித்யாதி). போயினாளென்று நீசொல்லி வெறுக்கைக்கு போகாதேயிருந்தார் சிலருண்டோ? தொண்டெல்லாமன்றோ வந்துதொழுவதென்ன (ஶ்ரீமிதிலையித்யாதி). (குண்டிநகரத்தில் பிறந்தார்) விதர்ப்பராஜன் பட்டணமான குண்டிநகரத்திலே பிறந்த ருக்மணிப்பிராட்டி. தாத்பர்யாந்தரம் (வேயித்யாதி). (போக்கு) என்றது-போனபோக்கை யென்றபடி.

மேலுக்கவதாரிகை (இப்படியித்யாதி). "பேதை" என்று ஸமபிவ்யா

(க) திரு-நெ-கூ.

(தொண்டெல்லாம்) தொண்டெல்லாம் பண்டு இவனடியைப்பற்றிக் கிடக்குமாபோலேகிடீர், தானுகந்தவூரிலே வண்டுகள் இவள் மயிரைப்பற்றி கிடக்கும்படி. இது ஒப்பனையழகிருந்தபடி. (என்பேதை) (௧) "മമസുതാ - ഇയംസീതാ" என்கிறபடியே அபி (ഭി) ஜாதையென்கிறாள். (பேதை) முக்த்தை (ഗ്ധ).

(மணிநிறங்கொண்டுதான்) உன்மகள்முக்த்தையன்றே, விதக்த்தைகளுக்கும் அவ்வருகேயன்றோ இவள் பரிமாற்றம், இவள்நிறம் கொள்ளக்குறையென்னென்ன; (௨) "நன்மணிவண்ணன்" என்கிறபடியே, உம்முடைய நிறத்தைக்கொடுக்கையன்றோ தகுவது; அது கிடக்க, முக்த்தையன்றோ, ஸ்வரூபஜ்ஞாநமில்லாதவளன்றோ, உமக்கு ஸ்வரூபஜ்ஞாநமின்றியிலே யொழியவேணுமோ?. (கொண்டுதான்) இவள் ஒப்பனையழகையும்கண்டால் ஆசைப்படுகைப்ராப்தம்; அதுகுற்றமல்ல, கொண்டால் பின்னைக்கொடாதொழிகைக்ருத்யமோ. (கோயின்மைசெய்வதுதக்கதே) ராஜநீதியில்லாதார் செய்வற்றை நீர்செய்யக்கடவீரோ? இழந்தவற்றை மீட்டுக்கொடுக்கையன்றோ ராஜக்ருத்யம்; ராஜாக்களே வழிபறிக்கை - ராஜநீதியோ? அமர்ந்தநிலத்திலேகொடுபோய் அநுபவிப்பிக்கையன்றோ தகுதியென்கிறாள். இவள் அடியில்தொழுதபோதே அமர்ந்தநிலத்திலே கொடுபோனால், இங்குநாமும் நம்முடையாரும் வாயிலே மண்ணைப் பொகட்டுக்கொள்ளவோ யென்றிறே அவனிருக்கிறது. (௮)

ஹாரலப்ய தாத்பர்யமருளிச்செய்கிறார் (தொண்டெல்லாமித்யாதி). (தானுகந்தவூரிலே வண்டுகள்) என்றது- தெய்வ வண்டுகளான எம்பெருமான்களை.

"தான்" என்றது நீதானென்றாய், தானுக்கர்த்தம்-ஸர்வஜ்ஞதையாய், அதுக்கு உபலம்பநம்தோற்ற உக்திப்ரத்யுக்திரூபேணபா(ഭാ)வம் (உன்மகளித்யாதி). (ஸ்வரூபஜ்ஞாநம்) என்றது-தன்பருவத்தைப்பார்க்க வல்லளென்கை. தானென்றத்தால் தோற்றின ஸர்வஜ்ஞதைக்கு ப்ரக்ருதோபயோகம் காட்டுகிறார் (இவளித்யாதி). மேலுக்கவதாரிகை (அதுக்கித்யாதி). திருத்தாயார் தானே தகாதென்ற அத்தை ஸர்வஜ்ஞனான அவன்செய்ய அடுக்குமோவென்ன; (இவளித்யாதி). இத்திருமொழியைத் தலைக்கட்டிவைத்துவாழலாயிருக்க, அங்கே கொடுபோனால் ப்ரயோஜநமில்லையென்று கருத்து. (௮)

---

(௧) ரா-பா-௭௩-௨௬. (௨) ௪-திருவ-௪௭.

மூ.—முள்ளெயிறேய்ந்திலக்கூழை முடிகொடா
தெள்ளியளென்பதோர் தேசிலளென்செய்கேன்
கள்ளவிழ்சோலைக் கணபுரம்கைதொழும்
பிள்ளையைப்பிள்ளையென்றெண்ணப் பெறுவரே. (௯)

பதம்.	உரை.	பதம்.	உரை.
எயிறு	(இவளுக்கு) தந்தங்களினுடைய	என்செய்கேன்	(இவளைப்பற்றி) என்ன செய்வேன்
முள்	அங்குரமும்	கள்	மதுவானது
எய்ந்தில	நிரம்பவில்லை;	அவிழ்	பெருகாநின்ற
கூழை	(இவளுடைய) குழல்கள்	சோலை	சோலைகளையுடைய
முடி	முடிப்பதற்கு	கணபுரம்	திருக்கண்ணபுரத்தை
கொடா	பிடிகொடுக்கவில்லை;	தொழும்	தொழாநின்ற
	(இன்னமும்)		(இப்படிப்பட்ட)
தெள்ளியள்	தெளிவுடையவள்	பிள்ளையை	பிள்ளையை
என்பது	என்று சொல்லும்படியான	பிள்ளையென்று	(தன்வயிற்றில் பிறந்த) பிள்ளையென்று
ஓர்	ஒருவிதமான		
தேசிலள்	தேஜஸ்ஸையும் பெற்றவளன்று;	எண்ண	எண்ணுவதற்கு
		பெறுவரே	பெறுவர்களோ?.

அவ.—ஒன்பதாம்பாட்டு. கீழ்ப்பாட்டிலே "என்பேதை மணிநிறம் கொண்டுதான் கோயின்மைசெய்வது தக்கதே" என்று நிவாரகரில்லாத தேசத்திலே வழியடிப்பாரைப்போலே முக்த்தை ([illegible]) யான இவள் நிறத்தைக் கொள்ளவேணுமோவென்று இவள் சொன்னவார்த்தையைக்கேட்ட சவரிப்பெருமாள், நீ நம்மை நியமிக்கக் கடவையோ. (௧) "సర్వస్యవశీ-సర్వస్యేశానః - ஸர்வஸ்யவஶீ - ஸர்வஸ்யேஶாநஃ" என்று ஸர்வர்க்கும் நியாமகராயிருக்கிறநம்மை நியமிக்கக்கடவையோ? [மடவரல்மாதரென்பேதை] என்று - உன்மகளென்றும், உனக்கு பவ்யையென்றும் சொன்னாய்; அவளை நியமித்

அரு.—ஒன்பதாம்பாட்டு (முள்ளித்யாதி) "பிள்ளையென்றெண்ணப் பெறுவரே" என்றத்தைக் கடாக்ஷித்து ஸங்கதி (கீழித்யாதி). அர்ச்சகபராதீநராயிருந்த உம்மைநியமித்தாலும் நியமிக்கலாமித்தனைபோக்கி, உம்மூரைத் தொழுதவளை நியமிக்கக் கூடாதென்று கருத்து. பல்லெழாத பருவமென்று

---

(௧) ப்ருஹ-௯-௪-௨௨.

துக்கொள்ளமாட்டாயோ? நீநம்மைநியமிக்கப்போராய்காணென்ன; இவள் பருவமிது, பா(భా)வமிது; ஆனபின்பு என்னாலே நியமிக்கலாயோ விருப்பது யென்கிறாள். இவளளவு இதுவாயிருக்க, இவளைப்போலே அவகாஹித்தாளொரு பெண்பிள்ளை வார்த்தையாலே சொன்னாளிறே அவளுடைய திருத்தாயார். (க) [முலையோ வித்யாதி] இவளளவு இதுவாயிருக்க, அவகாஹநமிருந்தபடி யென்; அளவன்றியிருந்ததீ என்றாளிறே. [முலையோமுழுமுற்றும்போந்தில) முலைபுரைகிறவித்தனை. வளருமளவும் செல்ல வரையிட்டதில்லை, இதுபருவமிருந்தபடி. [திருவேங்கடமென்று கற்கின்ற வாசகமே] திருமலையை விடாமல் சொல்லாநின்றாள். இது அவகாஹநமிருந்தபடி. [இவள்பரமே] இவளளவன்றிக்கே யிருந்ததீ என்றாளிறே. அவளுடைய பருவமில்லையே இவளுக்கு; அவகாஹநத்திலும் வாசிகமாத்ரமேயிறே அவளுக்குள்ளது. காயிகத்தால் வந்த அவகாஹநமுண்டே இவளுக்கு. பங்கு(గు)க்களாயிருப்பார்க்கும் அந்த(ధ)ராயிருப்பார்க்கும் போகவொண்ணாதபடி பரமபதத்துக்கு அடுத்தணித்தாய் அர்ச்சிராதிபோலே பெரியவேற்றமேற வேண்டியிறே திருமலையிருப்பது. அத்தனை துஷ்ப்ராபமாயன்றே திருக்கண்ணபுரமிருப்பது, இருந்தபடியே எல்லார்க்கும் புக்கநுபவிக்கலாம்படியிறே திருக்கண்ணபுரமிருக்கும்படி. ஆகையால்இவளளவு இதுவாயிருந்தது. அவகாஹநத்திலெல்லையிதுவாயிருந்தது; ஆனபின்புஇவளைநியமிப்பாருண்டோவென்றுபொதுவிலேசொல்லுகிறாள்.

பருவத்தில் குறைத்தலும், “கைதொழும்” என்று அவகாஹநத்தில் ஆதிக்யமும் சொன்னதுக்கு வ்யாவர்த்த்யம்காட்டத் திருவுள்ளம்பற்றி அதிஷ்ட்டிகையிடுகிறார் (இவளையித்யாதி). (வார்த்தையாலே) என்றது “கற்கின்ற வாசகம்” என்றத்தைப்பற்ற. (புரைகிற) முளைக்கிற. காயிகமான அவகாஹநத்தாலுண்டான ஏற்றமன்றிக்கே, மாநஸாவகாஹநத்திலும் திருமலைக்கும் திருக்கண்ணபுரத்துக்குமுண்டான ஸ்வபாவபர்யாலோசநாரூப அவகாஹநமுமுண்டென்கிறார் (பங்குக்களித்யாதி). பெறுவேனோவென்னாதே “பெறுவரே” என்கையாலே (பொதுவிலே) என்றது. இத்தால் (உ) “మమమద్భక్తభక్తేషు ప్రీతిరభ్యధికా భవేత్ - மம்மத்பக்த பக்தேஷு ப்ரீதிரப்யதிகாபவேத்” என்ற உன்னாலும், இவ்வளவு அவகாஹிக்கப்போமோவென்றிருக்கிற என்னா

(க) திருவிரு-கூ0. (உ)

வ்யா.—(முள்ளெயிறேய்ந்தில) எயிறு -தந்தம் ; முள்ளெயிறு-தந்தாங்குரம். எயிறுநிரம்பிற்றில்லை. (சூழைமுடிகொடா) இவள் குழலை வாரியெடுத்துப்பிடித்துக் கலிக்கட்டாகக் கட்டவென்று புக்கால் அதுக்குப்பிடிகொடாது. (தெள்ளியளென்பதோர் தேசிலள்) இப்படியிருந்தாலும் தன்வல்லபனைப் பத்துஇருபது பட்டினிகொண்டாளென்னும் சொல்படைத்திலள். ஸர்வஜ்ஞனானவன் மதிமயங்கும்படியான தேஜஸ்ஸைப்பெற்றிலள். (என்செய்கேன்) கீழில் இவளுடைய முக்த்ததை சொல்லி மேல் இவளுடைய ப்ரபாவத்தை நினைத்து என்செய்கேனென்கிறாள். (என்செய்கேன்) இவளை நியமிக்கவடுக்குமோ ? அநுவர்த்திக்கவடுக்குமோ வென்கிறாள்.

(கள்ளவிழித்யாதி) பூர்வாவஸ்த்தையைப்பார்த்து நியமிக்க அடாது. உத்தராவஸ்த்தையைப் பார்த்து அநுவர்த்திக்க வடுக்குமென்கிறாள். இவளை அநுவர்த்திக்க வடுக்குமென்று ஸித்தாந்திக்கிறது எதுகொண்டென்ன ; இப்படிப்பட்ட பேரளவுடையளான பெரியவளன்றோவென்கிறாள். (கள்ளவிழ்சோலைக் கண்ணபுரம்) நித்ய வஸந்தமானதேசம். புஷ்பங்களில் கட்டவிழ்ந்து மதுவைப்ரவஹிக்கும் சோலையையுடைத்தான தேசம். (கணபுரம்கைதொழும் பிள்ளை) (க) ‘‘బాల్యాత్ప్రభృతిసుస్నిగ్ధః- பால்யாத்ப்ரப்ருதி ஸுஸ்நிக்த்

லும், சேர்த்துவிடும் தோழிகளாலும் நியமிக்கப்படாதவளை என்வயிற்றில் பிறப்பைக் கருதி நியமிக்கவோ வென்கிறாள் என்றதாயிற்று.

(கலிக்கட்டு) குஞ்சி. தெள்ளிய தேஜஸ்ஸைப்படைத்தவள் ஜநககுல ஸுந்தரியென்று திருவுள்ளம்பற்றி, அவள் திருவடி வந்தழைத்தாலும் (உ) ‘‘తత్తస్యసదృశంభవేత్ - தத்தஸ்ய ஸத்ருஶம்பவேத்'' என்றுசொல்லி (ங) ‘‘ఊర్ధ్వం మాసాన్న జీవిష్యే- ஊர்த்த்வம் மாஸாந்நஜீவிஷ்யே'' என்றுநாளிட்டு (ச) ‘‘నమాంసం రాఘవో భుఙ్క్తే - நமாம்ஸம் ராகவோபுங்க்தே'' என்றத்தைக் கேட்டுவைத்தும், அதுக்கும் இசைந்துவிட்டாளே, அப்படி செய்யவறியாதாளாய் தொழுதாளென்னும் தாத்பர்யத்தை ஸூசிப்பிக்கிறார் (இப்படியித்யாதி). (பத்து இருபது) என்றது - பத்துமிருபதுமென்றபடி. வாக்யார்த்தம் (ஸர்வஜ்ஞனித்யாதி).

பல்லெழாததசையிலும் பராவண்யமுடையாருண்டே இவளுக்கேற்றமென்னென்ன (பால்யாத் ப்ரப்ருதியித்யாதி).

(க) ரா-பா-கஅ-உஎ. (உ) ரா-ஸு-ஙஅ-கூஎ.
(ச) ரா-ஸு-ஙசு-சக.

த:'' என்று பிறந்தவன்றே கால்கடையிலே தொட்டிவிட்டுவளரும்படி ஸஸ்நிக்த்தராயிறே இளையபெருமாளிருப்பது. இப்படியிருந்த அவரும் '' (௧)ప్రాఞ్జలింప్రహ్వమాసీనమ్ - ப்ராஞ்ஜலிம் ப்ரஹ்வமாஸீநம்'' என்று அவனைத்தொழுதாரித்தனையிறே. அவனூரைத்தொழுமவளிறே இவள். (பிள்ளையை) இப்படிப்பட்ட பெரியமுதன்மையையுடையவளை.

(பிள்ளையென்றெண்ணப் பெறுவரே) தன்வயிற்றிலே பிறந்தாளென்கிறபந்த(బన్ధ)த்தைக்கொண்டு நியமிக்கப்பெறுவர்களோ? (எண்ணப்பெறுவரே) நினைக்கத்தான் பெறுவர்களோ? நினைத்தாளாகில் (௨) ''హరిసంస్మరణంపరమ్- ஹரிஸம்ஸ்மரணம்பரம்'' என்கிறபடியே ப்ராயஶ்சித்தம்பண்ண வேண்டியிறேயிருப்பது. (௨) ''కృతేపాపేఽనుతాపో వై యస్యపుంసః ప్రజాయతే। ప్రాయశ్చిత్తం తు తస్యైకంహరిసంస్మరణం పరమ్ - க்ருதேபாபேऽநுதாபோவை யஸ்யபும்ஸ: ப்ரஜாயதே। ப்ராயஶ்சித்தந்து தஸ்யைகம் ஹரிஸம்ஸ்மரணம் பரம்''. [க்ருதேபாபே] ஒருத்தன் ஒருபாபத்தை புத்திபூர்வகமாகப் பண்ணுவது. [அநுதாப:] அநந்தரம் ''தப்பச்செய்தோம், புருஷோத்தமன் அறியில்செய்வது என்'' என்று அநுதபித்தவன் ப்ராயஶ்சித்தத்துக்கு அதிகாரி. [யஸ்யபும்ஸ: ப்ரஜாயதே] இதுக்கு இன்னாரென்றில்லை. ஆரேனுமாகவுமாம். [ப்ராயஶ்சித்தந்து தஸ்யைகம் ஹரிஸம்ஸ்மரணம் பரம்] ஸர்வபாபங்களையும் போக்குமவனை நெஞ்சாலே ஒருகால்நினைக்கவமையும். [பரம்] ப்ராயஶ்சித்தங்களில் தலையானப்ராயஶ்சித்தம் இதுவேயென்கிறது. ''பெரிய திருவடி எழுந்தருளச்செய்தே ஒரு பர்வதாக்ரத்திலே வைகித்தங்கப்புக்கான்; அந்த பர்வதசிகரத்திலே ஒரு பெண்பெண்டாட்டி பகவத்குணங்களைப்பேசக்கேட்டு, 'தான் ஸ்த்ரீயாயிருக்க பகவத்ப(ద్భ)ஜநத்திலே இத்தனை ருசியுண்டாவதே? இவள் ஒருபுண்யக்ஷேத்ரத்திலேயிருக்கப் பெற்றதில்லையே' என்று வெறுக்க, அநந்தரம் விடிந்தவளவிலே இவன்போகநினைக்க, இவன் சிறகுகள் உதிர்ந்து எழுந்திருக்கமாட்டாதேயிருந்தான்.'' என்று மஹாபாரதத்திலே ஆரண்யபர்வத்திலே எழுதிற்று.

ஆகவித்தால் சொல்லிற்றுய்த்து ''பகவத்விஷயத்திலேஒருகீற்றுப்புகுர நின்றான் யாவனொருவன், அவன் பூர்வவ்ருத்தத்தைப் பார்த்

ஸ்வாபதேசம் (ஆகவித்யாதி). ... ... (௬)

---

(௧) ரா-அ-௪-௪௨. (௨) வி-பு-௨-௬-௪0.

துக்குறைய நினைக்கக்கடவனல்லன், அவனிருந்தபடியேஉத்தேஶ்யம் பண்ணிக்கொண்டாட வடுக்கும்'' என்கிற அர்த்தத்தை வெளியிடுகிறது. (க) ''𑌸𑍁𑌰𑌾𑌚𑌾𑌰𑍋𑌽𑌪𑌿- துராசாரோபி'' இத்யாதி. (கூ)

மூ.—கார்மலி கண்ணபுரத்தெம்மடிகளை
பார்மலி மங்கையர்கோன் பரகாலன்சொல்
சீர்மலி பாடலிவைபத்தும் வல்லவர்
நீர்மலி வையத்து நீடுநிற்பார்களே. (க0)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பதம்.	உரை.	பதம்.	உரை.
கார்	மேகங்களாலே	சொல்	அருளிச்செய்த
மலி	வ்யாப்தமான	சீர்	காம்பீர்யமாகிற சீர்மை
கண்ணபுரத்து	திருக்கண்ணபுரத்திலே எழுந்தருளியிருக்கிற	மலி	நிறைந்த [யால்
		பாடலிவைபத்தும்	இப்பத்துப் பாட்டையும்
எம்அடிகளை	என்ஸ்வாமிவிஷயமாய்,	வல்லவர்	அப்ய (ஸ்ய) ஸிக்க
பார்	பூமியில் [ராய்	நீர்	கடலாலே [வல்லவர்
மலி	மிக்கபுகழையுடைய	மலி	சூழப்பட்ட
மங்கையர்	திருநகரிக்கு	வையத்து	பூமியிலே
கோன்	ஸ்வாமியான	நீடு	வெகுகாலம்
பரகாலன்	ஆழ்வார்	நிற்பார்களே	வாழப்பெறுவர்கள்(க0)

அவ.—பத்தாம்பாட்டு. இத்தால் ''கவிபாடிற்று இன்னுரை, பாடினேன் இந்நான், என்கவிதான் இன்னது, இதுகற்றூர்க்கு பலம் இன்னது'' என்று இவைநாலையும் சொல்லுகிறூர்.

வ்யா.—(கார்மலி கண்ணபுரத்தெம்மடிகளை) ஶ்ரமஹரமாய், தர்ஶநீயமுமாய், உபகாரகமுமான மேகஸஞ்சாரங்களையுடைத்தான தேசம். (எம்மடிகளை) அம்மேகங்களைப்போலே தர்ஶநீயமான வடிவை யுடையனாய், ஸுலபனுமாய், பரமோதாரனுமாய், தன்னை உக

அந.—பத்தாம்பாட்டு (கார்மலியித்யாதி) ''கார்மலி'' என்றதை கண்ணபுரத்துக்கு விசேஷணமாக்கிஅர்த்தஸ்வபாவத்தாலேவந்தகுணங்களை அருளிச்செய்துகொண்டு சப்தார்த்தம் (ஶ்ரமஹரமாயித்யாதி). ''கார்மலி'' என்றதை ''அடிகளை'' என்றதுக்கு விசேஷணமாக்கி அர்த்தாந்தரம் (அம்மேகங்களையித்யாதி). அன்றிக்கே ''கார்'' என்றபதம் தத்குணவாசகமாய், அந்தகுணங்

(க) ஸாத்வ-ஸம்-கக-உக.

லாதார் தலையிலே இடிவிழ விடக்கடவனுமான என் ஸ்வாமியை. (க) "గుణైర్దాస్యముపాగతః - குணைர்தாஸ்யமுபாகத:" என்றுகுணங்களுக்குத்தோற்று அடிமை புகுகிறாரல்லர் என்குடிநாதனென்கிறார். (பார்மலிமங்கையர்கோன் பரகாலன்சொல்) லோகத்தில் இருவர் கூடின விடமெல்லாம் "இதோர் அவகாஹநமே, இதொரு கவித்வமே, இவருக்கு ருஷிகள்ஒப்போ? வேதங்கள்தான் ஒப்போ? அல்லாத ஆழ்வார்கள்தான் ஒப்போ?" என்று நின்றார் நின்றபடி கொண்டாடும்படியான பெரியபுகழை யுடையவர். "பரகாலன்" என்று - பெயர்.

(சீர்மலிபாடலிவைபத்தும் வல்லவர்) தன்னைப்பொதிய வைக்கோலில்லாதபடி விளையும் செய்போலே, சப்தம் அல்பமாய், பகவத்குணங்கள் ப்ரசுரமாயிருக்கிறபாடல். "இவைபத்தும்" என்று கையிலேயிட்டுப்பார்ப்பாரைப்போலேசொல்லுகிறார். (வல்லவர்)இயலாகவுமாம், இசையாகவுமாம், ஏதேனுமொரு ப்ரகாரத்திலே வல்லவர்கள். (நீர்மலிவையத்து நீடுநிற்பார்களே) கடல் சூழ்ந்த பூமியிலே சிரகாலம் வாழப்பெறுவர்கள். இதுகற்றாருக்குப் பலம் ஸம்ஸாரத்திலிருக்கையோவென்ன; பரமபதத்திலே தெள்ளியீர் இல்லையே; தெள்ளியீருள்ளது - இங்கேயன்றோ?. (உ) "భావోనాన్యత్రగచ్ఛతి-பாவோநாந்யத்ரகச்சதி" என்றுதிருவடிராமகுணங்களைக்கேட்டு, அத்தாலேபூர்ணனாய், அத்தேசத்தேயிருந்தாப்போலே தெள்ளியீரை இங்கே

ளாலே ஸம்ருத்தமான தேசமென்றும், காரானது மலிந்திருந்துள்ள தேசமென்றும் இரண்டர்த்தத்தைக் கூட்டியருளிச் செய்கிறாரென்னுதல்; மூன்றாமர்த்தம் (மேகங்களையித்யாதி). அதவா "கார்மலி" என்றது தேசத்துக்கே விசேஷணமாய், இப்படி விசேஷிக்கையாலேபலித்ததாத்பர்யமென்று ஏகார்த்தமேயாகவுமாம். (ஸுலபனுமாய்) என்றது - ஸ்வயத்நஸாத்யமன்றிக்கே தன்னடையே வர்ஷிக்கையாலே மேகங்களுக்கு ஸௌலப்யமுண்டென்று திருவுள்ளம்பற்றி. என்னழகனை யென்னாதே "அடிகளை" என்றதுக்குக் கருத்து (குணைரித்யாதி). பாரிலேபுகழ்மலிந்த என்றாக்கி "இவட்கிதுவென்கொலோ" என்றவிடத்திலும் "முள்ளெயிறேய்ந்தில" என்கிறபாட்டிலும்விவக்ஷிதமான ஆழ்வாரில் வைலக்ஷண்யத்தையுட்கொண்டுதாத்பர்யம்(லோகத்திலித்யாதி).

(பொதிய) கோட்டைகட்ட. (தெள்ளியீரை) தெள்ளியீரென்கிற திரு

(க) ரா-கி-ச-கஉ. (உ) ரா-உத்த-ச0-கரு.

பாடக்கேட்டு பூர்ணராயிருக்கப் பெறுவர்கள். .... (௧௦)

பேரியவாச்சான்பிள்ளைதிருவடிகளே சரணம்.

பெரியதிருமொழி

எட்டாம்பத்து இரண்டாந்திருமொழி முற்றிற்று.

எட்டாம்பத்து மூன்றாந்திருமொழி,

கரையெடுத்தப்ரவேசம்.

வ்யா.—(௧) "ఏతైర్నిమిత్తైరపరైశ్చ సుభ్రూస్సమ్బోధితా ప్రాగపి సాధుసిద్ధైః। వాతాతపక్లాన్తమివ ప్రణష్టంవర్షేణబీజం ప్రతిసఞ్జహర్ష- ஏதைர்நிமித்தைரபரைஶ்சஸு ப்ரூஸ்ஸம்போதிதா ப்ராகபி ஸாதுஸித்தைஃ। வாதாதபக்லாந்தமிவ ப்ரணஷ்டம் வர்ஷேண பீஜம் ப்ரதிஸஞ்ஜஹர்ஷ" "கைவளைகொள்வதுதக்கதே" என்று தாயார்சொன்னவாறே, இத்தைக்கேட்டு உணர்ந்தபெண்பிள்ளை தன்கையைப்பார்த்து, "இழந்தேன்வரிவளை" என்கிறாள். கீழ்த்திருமொழியிலே "கைவளைகொள்வது தக்கதே" என்று திருத்தாயார் சொன்னாள்; அவள்பலகாலும் சொல்லக் கேட்கையாலும், இவள் அதுதன்னை வாய்வெருவுகையாலும் கீழ்பிறந்த மோஹமானதுபோய், அல்பமறிவுபிறந்து, அதுமொழியை. ... ... (௧௦)

ஜீயர்திருவடிகளே சரணம்.

அரு.—கரையெடுத்தப்ரவேசம். திருத்தாயார்வார்த்தை கேட்டுணர்ந்தமாத்ரத்துக்குத்ருஷ்டாந்தமருளிச்செய்கிறார் (ஏதைரித்யாதி). (ஸஞ்ஜஹர்ஷ) என்றவநந்தரம், "என்கிறபடியே பிராட்டி நிமித்தங்களாலே உணர்த்தப் பட்டாப்போலே உணர்த்தப்பட்டு பேசுகிறாள்" என்று பூரிப்பது. இங்கே உணருகைக்கு நிமித்தமென்னென்ன; (கைவளையித்யாதி). மணிநிறங்கொண்டதும், திருத்தாயார் கீழ்த்திருமொழியில் சொன்னாளேயாகிலும் கைமேலே காணலாயிருந்தது; வளை இழப்பாகையாலே, இத்தையே பேசுகிறாளென்று திருவுள்ளத்தே ஸங்க்ரஹேண வருளிச்செய்த ஸங்கதியை விஸ்தரிக்கிறார் (கீழிலித்யாதி). "கைவளைகொள்வதுதக்கதே" என்றொருகால் சொன்னதாயிருந்தாலும் "தெள்ளியீர் வளைகொள்வதுதக்கதே" "தேவர்க்கும்தேவரானவர் வளை கொள்வதுதகுமோ" என்றாப்போலே ப்ரதிபதம் ஹேதுகர்ப்பமாகையாலே பலகாலும் சொன்னவபிமதமென்கிறார் (இவளித்யாதி). "அதுதன்னையே) என்றவநந்தரம், "பரிஹரிக்கைக்கு வேங்கடம் முதலானவற்றை" என்று கூட்டுவது. ... ... *

---

(௧) ரா-ஸு-௨௯-௬.

தான் ஆஶ்வாஸத்துக்குடலாகை தவிர்ந்து, தான்படுகிற வ்யஸநத்தை அநுபாஷிக்கைக்கு உடலாக, அத்தாலே இரவல்வாயாலே தன்னிழவைச் சொல்லுகையன்றிக்கே தானே தன்னிழவுகளைச் சொல்லிகூப்பிடுகிறாளாயிருக்கிறது.

மூ,—கரையெடுத்தசுரிசங்கும் கனபவளத்தெழுகொடியும்
திரையெடுத்து வருபுனல்சூழ் திருக்கண்ணபுரத்துறையும்
விரையெடுத்ததுழாயலங்கல் விறல்வரைத்தோள் புடைபெயர
வரையெடுத்த பெருமானுக்கிழந்தேனென்வரிவளையே. (௧)

பதம்.	உரை.	பதம்.	உரை.
கரை	கோ (க^3) ஷத்தை	விரை	பரிமளத்தை
எடுத்த	உடைத்தாய்	எடுத்த	உடையதான
சுரி	வளைவுமுடையதான	துழாய்	திருத்துழாயின்
சங்கும்	சங்குகளையும்,	அலங்கல்	[மாலையையுடையதாய்,
கனம்	செறிந்திருக்கிற	விறல்	மிடுக்கையுடையதாய்
பவளத்து	பவளத்தினுடைய	வரை	மலைபோலிருக்கிற
எழு	வளர்த்தியை யுடைய	தோள்	திருத்தோள்கள்
கொடியும்	கொடிகளையும் [தான	புடைபெயர	அசையும்படியாக
திரை	அலைகளானவை	வரை	கோவர்த்தந மலையை
எடுத்து	எடுத்துக்கொண்டு	எடுத்த	எடுத்தவனான
வரும்	வாராநின்ற	பெருமானுக்கு	பெரிய உபகாரகனான ஸர்வேஶ்வரனுக்கு
புனல்	ஜலத்தாலே	என்	என்னுடைய
சூழ்	சூழப்பட்ட	வரி	தர்ஶநீயமான
திருக்கண்ணபுரத்து	திருக்கண்ணபுரத்திலே	வளை	கைவளையை
உறையும்	நித்யவாஸம் பண்ணுகிறவனாய்,	இழந்தேனே	இழந்துவிட்டேன். (௧)

வ்யா.—முதற்பாட்டு. (கரையெடுத்த)“கரை”என்று-கோஷத்துக்குப்பெயர். சங்கானது திரைமேல் திரையாகப்போந்து ஏறுகிற போது கரையில்பார்த்து நின்றார்கள், “ ஒருசங்கினுடையவளவு இருக்கிறபடியென்” என்றுசொல்லுகிற கோஷமாதல்; அன்றிக்கே

அநு.—முதற்பாட்டு. (கரையித்யாதி) “எடுத்த” என்றது - எடுவித்தவென்றாக்கி அருளிச்செய்கிறார் (சங்கானதித்யாதி).

சங்குதனக்கே ஸ்வதஃ உண்டாயிருப்பதொரு கோஷமுண்டிறே; அத்தைச்சொல்லிற்றுதல். (கனவித்யாதி) செறிந்தபவளத்தினுடைய வளர்ந்தகொடியும், திரைகளானவை எடுத்துக்கொண்டு வாராநின்ற ஜலஸம்ருத்தியை யுடைத்தான திருக்கண்ணபுரத்திலே நித்யவாஸம் பண்ணுகிற.

(விரையித்யாதி) பசுக்களுக்கும் இடையர்க்கும்வந்த ஆபத்தைப் பரிஹரிக்கைக்காக கோவர்த்தநகிரியைத் தோளசையும்படி யெடுத்துக்கொண்டு நின்றானாயிற்று: மிக்க பரிமளத்தை யுடைத்தான திருத்துழாய் மாலையையுமுடைத்தாய், பெரியமிடுக்கையுமுடைத்தாய், மலைபோலேயிருக்கிற திருத்தோள்கள் அசையும்படியாக மலையையெடுத்துப் பரிஹரித்த ஆபத்ஸகனான ஸர்வேஶ்வரனுக்கு என்னுடைய தர்ஶநீயமான வளை இழந்தேன். .... (க)

மூ.—அரிவிரவுமுகில் கணத்தாலகில்புகையால் வரையோடும்
தெரிவரியமணிமாடத் திருக்கண்ணபுரத்துறையும்
வரியரவினணைத்துயின்று மழைமதத்தசிறுதறுகண்
கரிவெருவமருப்பொசித்தார்க்இழந்தேனென் கனவளையே. (உ)

பதம்.	உரை.
அரி	கறுப்பானது
விரவும்	(கலந்து) பரவாநின்ற
முகில்	மேகங்களுடைய
கணத்தால்	ஸமூஹத்தாலும்
அகில்புகையால்	(அவ்வூரிலுண்டான) அகிற்புகைகளாலும்
வரையொடும்	மலையோடு
தெரிவு	பேதஜ்ஞாநமானது
அரிய	(உண்டாக) அரிதான
மணி	ரத்நமயமான
மாடம்	க்ருஹங்களையுடைய
திருக்கண்ணபுரத்துறையும்,	
வரி	ரேகைகளையுடைய
அரவின்	திருவநந்தாழ்வானாகிற
அணை	படுக்கையிலே
துயின்று	கண்வளர்ந்தருளின,
மழை	வர்ஷதாரைகள் போலேயிருக்கிற
மதத்த	மதஜலத்தையுடைய
சிறு	சிறுத்த
தறுகண்	(க்ரௌர்யம் தோற்றும்படிபார்க்கிற) கண்களையுடையதாய்

சுத்தஸ்வபாவரும் ராகப்ரதாநரும் நீர்மையிடும்படியான தேசத்திலிருந்தவனை மாத்ரமன்றிக்கே, அரியனசெய்தும் நோக்கினவனுக்கு இழந்தேன் வளையை இது வென்னென்னுமபிப்ராயத்தை ஸ்ப்புரிப்பிக்கிறார் (பசுக்களுக்குமித்யாதி). ... ... (ச)

கரி	குவலயாபீடமானது	என்	என்னுடைய
வெருவ	அஞ்சும்படியாக	கன	க (𑌘) நமான
மருப்பொசித்தார்க்கு	தந்தங்களை அநாயாஸேந முறித்துப் பொகட்டவனுக்கு		வளை இழந்தேனே. (உ)

வ்யா.—இரண்டாம்பாட்டு. (அரிவிரவுமுகில்கணத்தால்) கறுப்பானது எங்குமொக்கப் பரந்திருக்கிற காளமேகஸமூஹங்களாலும், அவ்வூரிலுள்ளார் உண்டாக்குகிற அகில்புகையாலுண்டானஇருட்சியாலே மலைக்கும் மாடத்துக்கும் வாசிதெரிந்து ப்ரதிபத்தி பண்ணவொண்ணுதபடியாய், ரத்நமயமான மாடங்களையுடைத்தான திருக்கண்ணபுரத்திலே நித்யவாஸம்பண்ணுகிற.

(வரியித்யாதி) நாநாவான வரிகளையுடைத்தாய், நாற்றம், குளிர்ச்சி, மென்மைகளையுடைத்தாயிருக்கிற திருவநந்தாழ்வானுகிற படுக்கையிலே கண்வளர்ந்தருளி, வர்ஷதாரைகள்போலேயிருக்கிற மதஜலத்தையுடைத்தாய் வடிவில் பெருமைக்கு ஈடாகப்பெருத் திருக்கையன்றிக்கே, ஜாத்யுசிதமாம்படிசிறுத்துக்ரௌர்யமெல்லாம் தோற்றும்படி பார்க்கிற கண்களையுடைத்தாயிருந்துள்ள குவலயாபீடமானது வெருவும்படியாக அதின்கொம்புகளை அநாயாஸேந முறித்துப்பொகட்ட அச்செயலுக்கு வளைஇழந்தேன். .... (உ)

மூ.—துங்கமாமணிமாட நெடுமுகட்டின் சூலிகைபோம்
திங்கள்மாமுகில் துணிக்கும் திருக்கண்ணபுரத்துறையும்
பைங்கண்மால்விடையடர்த்துப் பனிமதிகோள் விடுத்துகந்த
செங்கண்மாலம்மானுக்கு இழந்தேனென் செறிவளையே. (ரு)

அந.—இரண்டாம்பாட்டு. (அரியித்யாதி) "வரையெடுத்த பெருமானுக்கு" என்னுநின்ருய்; (க) "𑌮𑌧𑍁𑌰𑌾𑌂𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌗𑍋𑌵𑌿𑌨𑍍𑌦𑌃𑌕𑌥𑌂𑌗𑍋𑌕𑍁𑌲𑌮𑍇𑌷𑍍𑌯𑌤𑌿-மதுராம் ப்ராப்யகோவிந்தஃ கதம்கோகுலமேஷ்யதி" என்றுதிருவாய்ப்பாடியில்பெண்களெல்லாம் வளை இழந்தார்களேயென்ன; மதுரையிலும் தொடர்ந்துபோந்தேனென்கிருளென்று ஸங்கதி.

"அரி" என்று - மா, என்ருய், அத்தாலே கறுப்பை லக்ஷித்தருளிச்செய்கிருர் (கறுப்பானது) என்று. மாடங்களழகிலும், படுக்கை வாய்ப்பிலும் மீடுபட்டு களிறு தருபுணர்ச்சிகொடுத்து வளை இழவாமை சொல்லுகிருளென்று பாட்டுக்குத் தொகுத்தகருத்து. ... ... (உ)

(க) வி-பு-ரு-கஅ-கசு.

பதம்.	உரை.
துங்க	ஶ்ரேஷ்ட்டமாய்,
மா	பெருவிலையனான
மணி	ரத்நங்களையுடைய
மாடம்	க்ருஹங்களினுடைய
நெடு	நீண்ட
முகட்டின்	உச்சியிலிருக்கிற
சூலிகை	கூச்சானது,
போம்	(ஆகாசத்தில்) போகாநின்ற
திங்கள்	சந்த்ரனையும்
மா	பெரியவடிவையுடைய
முகில்	மேகங்களையும்
துணிக்கும்	பேதிக்கும்படியான
திருக்கண்ணபுரத்துறையும்,	
பைங்கண்	பசுமையானகண்களையுடையதுகளாய்

பதம்.	உரை.
மால்	பெரியவடிவையுடையதுகளான
விடை	எருதுகளை
அடர்த்து	அழியச்செய்து,
பனி	குளிர்ச்சியைப்பண்ணக்கடவனான
மதி	சந்த்ரனுடைய
கோள்	க்ஷயத்தை
விடுத்து	போக்கி (அதனால்)
உகந்த	உகப்பையுடையனாய்
செங்கண்	புண்டரீகாக்ஷனாய்
மால்	வ்யாமோஹமுடையனான
அம்மானுக்கு	ஸர்வேஶ்வரனுக்கு
என்	என்னுடைய
செறி	ஒருகாலும் கழற்றவொண்ணாமல் அமைந்த
வளை இழந்தேனே. (ங)	

வ்யா.—மூன்றாம்பாட்டு. (துங்கமித்யாதி) ஓக்கத்தையுடைத்தாய், பெருவிலையனான ரத்நங்களையுடைய மாடங்களிலுண்டான சூலமானது. (திங்களித்யாதி) சந்த்ரனையும், பெரியவடிவையுடைய மேகங்களினுடையவும் கீழ்வயிற்றை பேதி(భేద)க்கிற திருக்கண்ணபுரத்துறையும்.

அந.—மூன்றாம்பாட்டு. (துங்கமித்யாதி) நீ துடர்ந்து மதுரையில் செய்த அபதாநத்தில் ஈடுபட்டாலும் (க) "నగరస్త్రీకలాలాపమధుశ్రోత్రేణపాస్యతి- நகரஸ்த்ரீ கலாலாபமதுஶ்ரோத்ரேண பாஸ்யதி" என்கிற பதினாறாயிரவர்பேச்சில் பிச்சேறியிரானோ? உன்மேலே மாலேறுமவனோவென்ன, (உ) "பின்னைகொல்" என்கிறபடியே நான் நப்பின்னையைப்போலே, "அவனேமாலேறும்படியிருந்தவளன்றோ? நானும் அவனை இழக்க வழக்குண்டோ" என்னும் கருத்தாலே விடைகொண்டத்தைச் சொல்லுகிறாளென்று ஸங்கதி.

"சூலம்" என்றது - மகுடங்களின்கூச்சு. போந்திங்கள் - போகிற திங்கள் என்னுமது ஸ்பஷ்டமென்று மேலுக்குக் கருத்தருளிச் செய்கிறார் (சந்த்ரனையுமித்யாதி).

(க) வி-பு-ரு-கஅ-கச.

(உ) தி-வாய்-சு-ரு-க0.

(பைங்கண்மாலித்யாதி) பசுமையையுடைத்தான கலைகளையுடையவுமாய், பெரியவடிவையுடையவுமாயிருக்கிற ருஷபங்களை அழியச்செய்து, குளிர்ச்சியைப் பண்ணக்கடவனான சந்த்ரனுக்கு வந்தக்ஷயத்தைப்போக்கி, அது தன்னைத் தன்பேறாக நினைத்திருக்கிற புண்டரீகாக்ஷனான ஸர்வேஸ்வரனுக்கு ஒருகாலும் கழற்றவொண்ணாத வளையை இழந்தேன். .... (௩)

மூ.—கணமருவுமயிலகவு கடிபொழில்சூழ் நெடுமறுகில்
திணமருவுகனமதிள்சூழ் திருக்கண்ணபுரத்துறையும்
மணமருவு தோளாய்ச்சி யார்க்கப் போயுரலோடும்
புணர்மருதமிற நடந்தாற்கிழந்தேனென் பொன்வளையே. (௪)

பதம்.	உரை.
கணம்	ஸமூஹமானது
மருவும்	அதிகமாயிருந்துள்ள
மயில்	மயில்களானவை
அகவும்	ஆடாநிற்பதுமாய்,
கடி	பரிமளத்தையுடைய
பொழில்	சோலைகளாலே
சூழ்	சூழப்பட்டதாய்,
நெடு	பெரித்தான் [தாய்
மறுகில்	திருவீதிகளை யுடைத்
திணம்	தார்ட்ட்ய ([illegible]) த்
மருவும்	பொருந்தின [தால்
கனம்	க(ஞ)நமான
மதிள்	ப்ராகாரத்தாலே
சூழ்	சூழப்பட்டதுமான
திருக்கண்ணபுரத்துறையும்,	
மணம்	க (X) ந்தத்ரவ்யங்களாலே

பதம்.	உரை.
மருவும்	வ்யாப்தமான
தோள்	திருத்தோள்களையுடைய
ஆய்ச்சி	யசோதைப் பிராட்டியானவள்
ஆர்க்க	கட்ட (உடனே)
உரலோடும்	உரலோடு
போய்	போந்து
புணர்	ஒன்றாய் இணைந்துக் கொண்டிருக்கிற
மருதம்	மருதவ்ருக்ஷங்கள்
இற	முறிந்துவிழும்படி
நடந்தாற்கு	நடந்த எம்பெருமானு
என்	என்னுடைய [க்கு
பொன்	ஶ்லாக்யமான
வளை இழந்தேனே. (௪)	

“கோள்” என்று-சிறையாய், வ்யாதியாலுண்டான சிறை-க்ஷயமென்றருளிச் செய்கிறார் (சந்த்ரனுக்கு மித்யாதி). ... ... (௩)

அநு.—நாலாம்பாட்டு. (கணமருவித்யாதி) நப்பின்னையிடத்திற்போலே மாலேறியிருந்தவனுக்கு என்றுநின்றாய்; அவன் ஆஶ்ரிதகரஸ்பர்ஶமுள்ள த்ரவ்யத்தில் அதிச(ஞ)பலனாகையாலே கட்டுண்டானோ? தெரியாதே நீ இங்ஙனே புலம்புவானென்னென்ன; அந்தகட்டோடேதானே விரோதியைப்

வ்யா—நாலாம்பாட்டு. (கணமித்யாதி) திரள்மிக்கிருந்துள்ள மயில்களானவை தன்னுடைய ப்ரீதியாலே ஸஸம்ப்ரமந்ருத்தம் பண்ணுநிற்பதுமாய், பரிமளப்ரசுரமான சோலையையுடைத்தாய், பெரியதிருவீதிகளை யுடைத்தாய், திண்மைமிக்கிருக்கையாலே அரணாகப்போரும்படியான மதிளையுடைத்தாயிருந்துள்ள திருக்கண்ணபுரத்துறையும்.

(மணமித்யாதி) பிள்ளைபக்கல் பரிவாலே எப்போதுமொக்க கந்த(ᵡ)த்ரவ்யங்களாலே அலங்கரிக்கப்பட்ட தோள்களையுடையயசோதைப் பிராட்டிபோல்வார் பந்தி(ᵡ)த்தவற்றை அறுத்துக் கொடுபோகையன்றிக்கே கட்டினஉரலையும் இழுத்துக்கொண்டுபோய். பக(ᵡ)தத்தாதிகள்விட்ட அஸ்த்ரங்களாகிலிறே நேரே மார்வைக்காட்டி நிற்பது. பரிவுடையளாய் கட்டினதுக்குப் பண்ணலாவதொரு ப்ரதிக்ரியை இல்லை. ஆகையால் அத்தையும் இழுத்துக்கொடுபோய் இரண்டென்ன வொண்ணாதபடி நிர்விவரமாயிருக்கிற மருதுகள் முறிந்து விழும்படியாகப்போன முக்த(ᵡ)னுக்கு என்னுடைய ஶ்லாக்யமான வளை இழந்தேன். .... (௪)

மூ.—வாயெடுத்த மந்திரத்தா லந்தணர்தம் செய்தொழில்கள்
தீயெடுத்து மறைவளர்க்கும் திருக்கண்ணபுரத்துறையும்
தாயெடுத்த சிறுகோலுக்கு உளைந்தோடித்தயிருண்ட
வாய்துடைத்த மைந்தனுக்கு இழந்தேனென்வரிவளையே. (௫)

பதம்.	உரை.	பதம்.	உரை.
வாய் எடுத்த	உச்சஸ்வரமாகச்சொல்லப்பட்ட	மறை	வேதமர்யாதையை
மந்திரத்தால்	மந்த்ரங்களாலே	வளர்க்கும்	வளர்த்துக்கொண்டுபோருகிற
அந்தணர்	ப்ராஹ்மணர்கள்		திருக்கண்ணபுரத்துறையும்,
தம்	தங்களுக்கு	தாய்	தாயான யசோதைப் பிராட்டி
செய்தொழில்கள்	கர்த்தவ்யமான கர்மங்களை	எடுத்த	கையிலே எடுத்த
தீ	அக்நிகளை	சிறு	சிறிதான
எடுத்து	ஜ்வலிப்பித்து(செய்து)	கோலுக்கு	கொம்புக்கு

போக்கினவனுக்கு வரத்தட்டுண்டோவென்று * உரவிடையாப்புண்ட வண்ணத்தைப் பேசுகிறுளென்று ஸங்கதி.

"அகவுகை" ஆடுகையாய், அத்தையருளிச்செய்கிறுர் (ஸஸம்ப்ரமேத்யாதி). "மறுகில்" என்று - வீதிக்குப்பெயர். "திணம்" - திண்மை. (௪)

உளைந்து	பயந்து	துடைத்த	தடவிக்கொள்ளுகிற
ஓடி	ஓடிச்சென்று	மைந்தனுக்கு	ஸ்வாமிக்கு
தயிர்	தயிரை	என்	என்னுடைய
உண்ட	அமுதுசெய்த	வரி	ஶ்ரேஷ்ட்டமான
வாய்	முகமெங்கும்		வளை இழந்தேனே. (ரு)

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (வாயெடுத்த மந்திரத்தால்) உச்சஸ்வரமாக ப்ரயோகிக்கிறமந்த்ரங்களாலே ப்ராஹ்மணர் தங்களுக்குக் கர்த்தவ்யமானபடியாலே அக்நியை ஜ்வலிப்பித்து வைதிகமர்யாதையை நோக்கிக்கொண்டுபோருகிற திருக்கண்ணபுரத்திலே வர்த்திக்கிற.

(தாயித்யாதி) அநுகூல ஸ்பர்ஶமுள்ள த்ரவ்ய மொழியச் செல்லாமையாலே வெண்ணெயையும் பாலையும் களவிலே அமுது செய்ய, அவை ஈட்டப்பட்ட வருத்தத்தாலே யசோதைப் பிராட்டி கையிலே கோலைக்கொள்ள "அவள் தாயிறே, அச்சமுறுத்துகைக்குச் செய்த செயலிறே" என்றறிய மாட்டாதே ஈடுபட்டோடி அமுது செய்த தயிரைக்காட்டி "நீ களவுகண்டாய்" என்பர்களென்று பார்த்து அத்தை இல்லை செய்கைக்காக முகமெங்கும் தடவிக்கொள்ளுகிற இளிம்பனுக்கு நான் இளிம்புபட்டேன்.

மூ.—மடலெடுத்தநெடுந்தாழை மருங்கெல்லாம் வளர்பவளம்
திடலெடுத்துச் சுடரிமைக்கும் திருக்கண்ணபுரத்துறையும்
அடலடர்த்தன்றிரணியனை முரணழிய வணியுகிரால்
உடலெடுத்தபெருமானுக் கிழந்தேனென்னொளிவளையே. (சு)

பதம்.	உரை.	பதம்.	உரை.
மடல்	மடல்களை	வளர்	வளராநின்றுள்ள
எடுத்த	எடுத்துக்கொண்ட	பவளம்	பவளமானது
நெடும்	நீளமான [தான	திடல்	மேடுகளிலே
தாழை	தாழைகளை யுடைய	எடுத்து	படர்ந்து
மருங்கெல்லாம்	பக்கங்களிலெல்லாம்	சுடர்	ஒளியால்

அரு.—அஞ்சாம்பாட்டு. (வாயித்யாதி) "ஒருத்தி கையிலே கட்டுண்டும், அவள் விரோதியைப்போக்கி அவளுக்குத் தன்னைத்தந்தவன், இவ்வளவான எனக்கும் உதவானோ" என்று அவனுடைய பவ்யதையிலேதுவக்குண்டு என் வளை இழந்தேனென்கிறாளென்று ஸங்கதி.

(ஈட்டப்பட்ட) திரட்டப்பட்ட. ... ... (ரு)

இமைக்கும்	ப்ரகாஶியாநின்ற திருக்கண்ணபுரத்துறையும்,
அடல்	யுத்தத்திலே
அடர்த்து	நெருக்கி
அன்று	அந்த ஸமயத்திலே
இரணியனை	ஹிரண்யனுடைய
மூரண்	மிடுக்கானது
அழிய	அழியும்படியாக
அணி	அழகான
உகிரால்	நகங்களாலே
உடல்	(அவனுடைய) ஶரீரத்தை
எடுத்த	பே (பீ) தித்தவனை
பெருமானுக்கு	ஸர்வேஶ்வரனுக்கு
என்	என்னுடைய
ஒளி	ப்ரகாஶியாநின்ற

வளை இழந்தேனே. (கூ)

வ்யா.—ஆறாம்பாட்டு. (மடலித்யாதி) மடலினுடைய ஓக்கத்தையுடைத்தான நெடிதான தாழைகளையுடைத்தான பரிஸரமெல்லாம் வளர்பவளமானது திடல்களிலே மூடப்படர்ந்து ப்ரகாஶத்தைப்பண்ணாநின்றுள்ள திருக்கண்ணபுரத்துறையும். யுத்தத்திலே நெருக்கி, அன்று ஹிரண்யன் மிடுக்கழியும்படியாகப் பிராட்டிமாரும் கண்டுகொண்டிருக்கும்படியாக உகிராலே அவனுடைய சரீரத்தை பே(பீ)தித்து, தன்னுடைய ஈஶ்வரத்வத்தைநிலைநிறுத்தினவனுக்கு என்பருவத்திலே ஒருவனுக்கு உதவினவனன்றோ என்றிருந்தாயிற்று வளையிழந்தது. .... (கூ)

மூ.—வண்டமரும் மலர்ப்புன்னை வரிநீழலணிமுத்தம்
தெண்டிரைகள் வரத்திரட்டும் திருக்கண்ணபுரத்துறையும்
எண்டிசையு †மெழுசுடருமிருநிலனும் பெருவிசும்பும்
உண்டுமிழ்ந்த பெருமானுக்கிழந்தேனென்னொளிவளையே. (எ)

அரு.—ஆறாம்பாட்டு. (மடலித்யாதி) சிறுகோலுக்கு உளைந்தோடும்படியானமுக்தனாயிற்று அவன்; நீயும் "வாயில்பல்லு மெழுந்தில" என்கிறபடியே பேதைப்பருவமாயாயிற்றிருப்பது, "வளை இழக்கும்படி வந்ததென்" என்ன; "ஒருத்தன் வாசியறிந்து திருநாமம்சொல்லி, அவன் விரோதியை அழித்தவனன்றோ? நானும் அவன் வைலக்ஷண்யத்தாலே இப்பருவத்திலும் துஸ்ஸஹமான விரஹத்தாலே நோவுபட்டால் வந்துதோன்றுனோ" என்றாயிற்று வளை இழந்ததென்று சொல்லுகிறாளென்று ஸங்கதி.

"மடலையெடுத்த" என்ற சப்தார்த்தமாய், பலிதமருளிச்செய்கிறார் (மடலித்யாதி). அணி - அழகாய், பலிதார்த்தம் (பிராட்டிமாருமித்யாதி). உட்கருத்தை யருளிச்செய்கிறார் (என்னித்யாதி). ... ... (கூ)

---

† (பா)-எழுகடலும்.

பதம்.	உரை.
வண்டு	வண்டுகள்
அமரும்	படிந்திருக்கிற
மலர்	புஷ்பங்களையுடைய
புன்னை	புன்னைமரத்தினுடைய
வரி	இருண்ட
நீழல்	நிழலினுடைய (நடுவில்)
அணிமுத்தம்	வெளியான ப்ரதேசங்களிலே
தெண்	தெளிவான
திரைகள்	நீர்களானவை
வா	முத்துக்களைக் கொடுவந்து
திரட்டும்	சேர்க்காநிற்பதான
திருக்கண்ணபுரத்துறையும்,	

பதம்.	உரை.
எண்திசையும்	எட்டுத்திக்குக்களையும்,
எழு	எழாநிற்கிற
சுடரும்	(ஆதித்யாதி) தேஜஸ்ஸுக்களையும்,
இரு	பரப்பை யுடைத்தான
நிலனும்	பூமியையும்,
பெரு	விசாலமான
விசும்பும்	ஆகாசத்தையும்
உண்டு	(ப்ரளயகாலத்தில்) விழுங்கி (பிறகு)
உமிழ்ந்த	(வெளிநாடுகாண) உமிழ்ந்தவனான
பெருமானுக்கு	ஸர்வேஶ்வரனுக்கு
என்	என்னுடைய
ஒளி	ப்ரகாசமான
	வளை இழந்தேனே. (௭)

வ்யா.—ஏழாம்பாட்டு. (வண்டமருமித்யாதி) வண்டுபடிந்த பூக்களையுடைத்தான புன்னையினுடைய வரிநீழலிலே ஓரிடம் வெளியாய், ஓரிடம் நிழலாயிருக்குமாயிற்று; அதில் வெளியான ப்ரதேசங்களிலே தெளிந்த நீர்களானவை முத்துக்களைக்கொடுவந்து திரட்டாநிற்குமாயிற்று.

(எண்டிசையுமித்யாதி) எட்டுத் திக்குக்களையும், எழுவகைப்பட்ட கடல்களையும்; "எழுசுடரும்" என்று பாடமானபோது எழாநிற்கிற ஆதித்யாதிகளையும் நினைத்ததாகிறது. பரப்பையுடைத்தான பூமியையும் இவற்றுக்கெல்லாம் அவகாச ப்ரதானம் பண்ணுகிற ஆகாசத்தையும், ப்ரளயகாலத்திலே எடுத்துவைத்துப் பின்னை

அரு.—ஏழாம்பாட்டு. (வண்டித்யாதி) ஒருசிறுக்கனுக்காக ஒருகால் உதவினதைக்கொண்டு வளை இழப்பாருண்டோவென்ன; ப்ரளயாபத்ஸகனன்றோ எல்லாரையும் ரக்ஷித்தவனன்றோவென்றுகிடாய் நான்வளையிழந்ததென்கிறாளென்று ஸங்கதி.

நிழலிலும், முத்துக்களைத் திரட்டில் பரபாகமாயிராதென்று விவக்ஷித்தருளிச் செய்கிறார் (அதுவித்யாதி). ... ... (௭

வெளிநாடுகாண உமிழ்ந்த ஸர்வேஸ்வரனுக்கு இழந்தே னென்வரி வளையே. அவனுடைய ஆபத்ஸகத்வத்தை விஸ்வஸித்துக் கிடாய் நான்கெட்ட தென்கிறாள். .... (எ)

மூ.—கொங்குமலிகருங்குவளை கண்ணாகத்தெண்கயங்கள்
செங்கமலமுகமலர்த்தும் திருக்கண்ணபுரத்துறையும்
வங்கமலிதடங்கடலுள் வரியரவினணைத்துயின்ற
செங்கமலநாபனுக் கிழந்தேனென் செறிவளையே. (அ)

பதம்.	உரை.
கொங்கு	பரிமளத்தாலே
மலி	வ்யாப்தமாய்
கரும்	கறுத்தநிறத்தை யுடைத்தான
குவளை	குவளைப்பூக்களை
கண்ணாக	கண்களாகக்கொண்டு
தெண்	தெளிந்த
கயங்கள்	பொய்கைகளானவை
செம்	சிவந்த
கமலம்	தாமரைப்பூவாகிற
முகம்	முகத்தை
அலர்த்தும்	விகஸிப்பியாநின்ற
திருக்கண்ணபுரத்துறையும்,	
வங்கம்	மரக்கலங்களாலே
மலி	வ்யாப்தமாய்
தடம்	விசாலமான
கடலுள்	ஸமுத்ரத்திலே
வரி	தர்சநீயமான
அரவின்	திருவநந்தாழ்வானாகிற
அணை	படுக்கையில்
துயின்ற	கண்வளர்ந்தருளுகிறவனாய்,
செம்	சிவந்த
கமலம்	கமலத்தை
நாபனுக்கு	நாபியிலேயுடைய பத்மநாபனுக்கு
என்	என்னுடைய
செறி	(கையில்) அமைந்திருக்கிற
	வளை இழந்தேனே. (அ)

வ்யா.—எட்டாம்பாட்டு. (கொங்கித்யாதி) பரிமளப்ரசுரமாய், கறுத்தநிறத்தையுடைத்தாயிருந்துள்ள குவளைப்பூக்களைக் கண்ணா

அரு.—எட்டாம்பாட்டு. (கொங்கித்யாதி) ப்ரளயகாலமாகையாலே எல்லாரையும் ரக்ஷித்தான்; உனக்கு இப்போதென்ன ப்ரளயம்வந்தது வளை இழக்கைக்கென்ன; எனக்கு விரஹத்தை யுண்டாக்கினான் அவனே யென்று அவ்வழியாலே எல்லாவற்றையு முண்டாக்கின திருநாபீகமலத்தை நினைத்தா னென்று ஸங்கதி.

குவளையைக் கண்ணாக நிரூபித்து கமலத்தை முகமாக நிரூபித்தால், இரண்டுக்கும் யுகபத்விகாஸம் சொல்லக்கூடாமையால் "செங்கமல முகமலர்த்தும்" என்றதுக்கு செங்கமலமாகில் முகம் அலர்த்துமென்ன வொண்ணா

க்கொண்டுதெளிந்த பொய்கைகளானவை சிவந்த †தாமரைப் பூக்களாகிறமுகத்தை அலர்த்தாநின்றுள்ள திருக்கண்ணபுரத்துறையும்.

(வங்கமலியித்யாதி) மரக்கலங்களால் மிக்கிருப்பதாய் கண்வளர்ந்தருளுகைக்கீடான பரப்பையுடைத்தாயிருக்கிற கடலிலே தர்ஶநீயமான வடிவையுடையனான திருவநந்தாழ்வான்மேலே கண்வளர்ந்தருளுகிற சிவந்த கமலத்தையுடைத்தான திருநாபியையுடையவனுக்கு உத்பாதகனை விஶ்வஸித்து முடிந்தேனென்கிறாள்.

மூ.—வாராளுமிளங்கொங்கை நெடும்பணைத்தோள் மடப்பாவை
சீராளும்வரைமார்பன் திருக்கண்ணபுரத்துறையும்
பேராளனாயிரம் பேராயிரவாயரவணைமேல்
பேராளர்பெருமானுக் கிழந்தேனென் பெய்வளையே. (௯)

பதம்.	உரை.
வார்	கச்சாலே
ஆளும்	தாங்கப்பட்டதாய்
இளம்	இளமையை யுடைத்தான
கொங்கை	ஸ்தநங்களை யுடையளாய்,
நெடும்	நீண்ட
பணை	மூங்கில்போலே
தோள்	தோளையுடையளாய்,
மடம்	பவ்யையான
பாவை	பெரிய பிராட்டியார் (வர்த்திக்கையாலுண்டான)
சீர்	ஸம்பத்தாலே
ஆளும்	வ்யாப்தமாய்
வரை	மலைபோல் த்ருடமான
மார்வன்	திருமார்வை யுடையவனாய்
திருக்கண்ணபுரத்துறையும்,	

பதம்.	உரை.
பேராளன்	(அதனால்) பெருமையையுடையனாய்,
ஆயிரம்	ஆயிரமான
பேர்	திருநாமங்களை (ஸ்தோத்ரம் பண்ணுகிற)
ஆயிரம்	ஆயிரமான
வாய்	முகங்களையுடைய
அரவணைமேல்	திருவநந்தாழ்வான் மேல் (பள்ளிகொண்டிருக்கிற) வனான
பேராளர்	பெருமையை யுடைய
பெருமானுக்கு	எம்பெருமானுக்கு
என்	என்னுடைய
பெய்	ஶ்லாக்க்யமான
வளை இழந்தேனே. (௯)	

தென்று, செங்கமலம்போலே யிருக்கிற ஸ்த்ரீகளுடைய முகத்தை அலர்த்துமென்றருளிச் செய்கிறார் (சிவந்தவித்யாதி). (தாமரைப்பூக்களை) என்றவநந்தரம் "போலே" என்றுசேஷம். ... ... (அ)

---

† இங்கு அரும்பதத்துக்கு அநுகுணமாயில்லை.

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (வாராளுமித்யாதி). வாராலே தாங்கப்பட்டிருப்பதாய், இளமையை யுடைத்தாயிருக்கிற கொங்கைகளை யுடையளாய், நெடியபணைபோலே யிருக்கிற தோள்களை யுடையளாய், ஆத்மகுணோபேதையாய், நிருபாதிகமான ஸ்த்ரீத்வத்தை யுடையளாயிருக்கிற பெரியபிராட்டியார் வர்த்திக்கையாலே யுண்டான ஸம்பத்தை யுடைத்தாய், வரைபோலே திண்ணியதான திருமார்வையுடையவன். (திருக்கண்ணபுரத்துறையும் பேராளன்) திருக்கண்ணபுரத்திலேவந்து ஸௌலபனாகையால்வந்த ஏற்றத்தை யுடையவன்.

(ஆயிரம்பேரித்யாதி) தூங்குமெத்தைபோலே அசையாநின்றுள்ள திருவநந்தாழ்வான் மடியிலே எறட்டுக்கொண்டுஆயிரவாயாலும் அநுபவத்துக்குப் பாசுரமான ஆயிரம் திருநாமங்களையும் சொல்லி ஸ்தோத்ரம பண்ணுகையால் வந்த பெருமையுடையவனுக்கு, யசோதைப்பிராட்டி தன் மடியிலே வைத்துக்கொண்டு ஆடுமோபோலேயாயிற்று. (இழந்தேனென் பெய்வளையே) தன்னை யொழியச் செல்லாமை யுடையார்க்குத் தன்னைக் கொடுக்குமவனன்றோ ?, நம் செல்லாமை பரிஹரியானோவென்று விஸ்வஸித்து வளையிழந்தேனென்கிறாள். .... (௯)

மூ.—தேமருவுபொழில் புடைசூழ் திருக்கண்ணபுரத்துறையும்
வாமனனைமறிகடல்சூழ் வயலாலி வளநாடன்
காமருசீர்க்கலிகன்றி கண்டுரைத்த தமிழ்மாலை
நாமருவி யிவைபாட வினையாய நண்ணாவே. (௧௦)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பதம்.	உரை.	பதம்.	உரை.
தே	மதுவால்	பொழில்	சோலைகளாலே
மருவும்	வ்யாப்தமான	சூழ்	சூழப்பட்ட

அந.—ஒன்பதாம்பாட்டு. (வாராளுமித்யாதி) "ஸகல ஜகதுத்பாதகன்றானே உண்டாக்கினவிரஹம் அநுபவிக்கத் தீருமத்தனை, அவனேவருமளவும் ஆறியிருக்கவேணுங்காண்" என்ன; "தன்னைப்பிரியமாட்டாதாரைப் பிரியாமலிருக்கவில்லையோ, என்னைப் பிரித்து வைப்பானென்" என்று வளை இழந்தேனென்கிறாளென்று ஸங்கதி.

(பணைபோலே)மூங்கில்போலே. "ஆயிரம்பேருடைய ஆயிரவாய்" என்று விசேஷித்ததுக்குக்கருத்து (தூங்கித்யாதி). ... ... (௯)

புடை	பர்யந்தங்களையுடைய,
திருக்கண்ணபுரத்து	திருக்கண்ணபுரத்திலே
உறையும்	நித்யவாஸம்பண்ணுகிற
வாமனனை	வாமநன்விஷயமாய்,
மறி	ஶப்தியாநின்ற
கடல்	ஸமுத்ரத்தாலே
சூழ்	சூழப்பட்டதாய்,
வளம்	வளமையையுடைய
வயல்	வயல்களையுடைத்தான
ஆலிநாடன்	திருவாலிநாட்டையுடையராய்,
காமரு	ஆசைபண்ணத்தக்க
சீர்	ஸ்ரீவைஷ்ணவஸ்ரீயையுடையரான
கலிகன்றி	ஆழ்வார்
கண்டுரைத்த	க்ருபையால் அருளிச்செய்த
தமிழ்மாலை இவை	இந்தத் தமிழ்த்தொடையை
நா	நாவிலே
மருவி	பொருந்தும்படி
பாட	பாட
வினையாய	ஸஹ்ருதயமாகப்பண்ணின பாபங்களும்
நண்ணாவே	கிட்டாதுகள். (௧௦)

வ்யா.—பத்தாம்பாட்டு. (தேமருவுமித்யாதி) தேன்மிக்கிருந்துள்ள பொழிலாலே சூழப்பட்ட பர்யந்தத்தை யுடைத்தானதிருக்கண்ணபுரத்திலே நித்யவாஸம் பண்ணுகிற வாமநனையாயிற்றுக் கவிபாடிற்று. தன்னுடையபேற்றுக்குத் தான் அர்த்தியாய் வருமவனாயிற்று. (மறியித்யாதி) சப்தியாநின்றுள்ள கடலாலே சூழப்பட்டிருப்பதாய் பரந்த வயலையுடைத்தான ஆலிநாட்டையுடையராய், எல்லார்க்கும் ஸ்ப்ருஹைபண்ணவேண்டும்படியான ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீயை யுடையரான ஆழ்வார் அருளிச்செய்த இந்த தமிழ்த்தொடையை நாவிலே பொருந்தும்படிபாட, ஸஹ்ருதயமாகப்பண்ணின பாபங்களும் விட்டுப்போம்; உக்திமாத்ரத்தைச் சொல்ல புத்தி(புத்தி)பூர்வகமாகப் பண்ணின பாபங்கள் கிட்டாவென்கிறார். .... (௧௦)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

பெரியதிருமொழி

எட்டாம்பத்து மூன்றாந்திருமொழி முற்றிற்று.

அரு.—பத்தாம்பாட்டு. (தேமருவுமித்யாதி) "வாமனன்" என்றதுக்கு ப்ரக்ருதோபயோகம் காட்டுகிறார் (தன்னுடைய வித்யாதி). ஆஶ்ரிதர்பேறே தன்பேறென்று கருத்து. ... ... (௧௦)

ஜீயர்திருவடிகளே சரணம்.

எட்டாம்பத்து நாலாந்திருமொழி

விண்ணவர் தங்கள் ப்ரவேசம்.

ஆழ்வார் திருவடிகளேசரணம்.

◆

வ்யா.—(விண்ணவரித்யாதி) இப்பிராட்டி தன் இழவைச் சொல்லி பரவசையாய் விழுந்துகிடந்தாள்; தளர்த்தியாலே உடம்பு க்ருஶமாய், குழலும்பேணாதே பூவும் மறுத்துக்கிடக்குமிறே. இத்தை யறியாதே பழைய வாஸனையைக்கொண்டு மதுபானம்பண்ணுவதாகச் சிலதும்பிகள் வந்து பறந்தன; அத்தைப்பார்த்து (க) "వాహి వాత యతః కాన్తా తాం స్పృష్ట్వా మామపి స్పృశ - வாஹி வாத யதஃ காந்தா தாம்ஸ்ப்ருஷ்ட்வாமாமபிஸ்ப்ருஶ" என்னுமாபோலே மதுவுக்கு க்ருஷியைப்பண்ணி மதுபானம் பண்ணப்பாராயென்கிறாள். *

மூ.—விண்ணவர்தங்கள் பெருமான் திருமார்வன்
மண்ணவரெல்லாம் வணங்கும் மலிபுகழ்சேர்
கண்ணபுரத் தெம்பெருமான் கதிர்முடிமேல்
வண்ணநறுந்துழாய் வந்தூதாய் கோற்றும்பீ. (க)

பதம்.	உரை.
கோல்தும்பீ	கோல்களிலேவர்த்திக்கிற தும்பியே?
விண்ணவர் தங்கள்	நித்யஸூரிகளுக்கு
பெருமான்	நிர்வாஹகனாய்,
திரு	பெரியபிராட்டியாரை
மார்வன்	திருமார்வில் தரிப்பவனாய்,
மண்ணவரெல்லாம்	லீலாவிபூதியிலுள்ளாரெல்லாம்
வணங்கும்	தொழும்படியாய்,
மலி	அதிகமான
புகழ்	ஶீலாதிகுணங்கள்
சேர்	சேர்ந்திருக்குமவனாய்,
கண்ணபுரத்து	திருக்கண்ணபுரத்தில் எழுந்தருளியிருக்கிற
எம்பெருமான்	ஸர்வேஶ்வரனுடைய
கதிர்	ப்ரகாசியாநின்ற
முடிமேல்	திருவபிஷேகத்தின் மேலே
வண்ணம்	வர்ணத்தையும்,
நறும்	பரிமளத்தையும் (உடையதான)

அந.—விண்ணவரின் ப்ரவேசம். (மறுத்து) மற்றுமறுத்தென்றபடி. நாயகனுடையமாலையில் பரிமளத்தைக்கொடுவந்தூதினால் விரஹதாபம் தீர்ந்து பூவில் மதுசேர்ந்தால் உண்ணப்பார்க்கிற தாத்பர்யத்தை ஸத்ருஷ்டாந்தமாக வருளிச்செய்கிறார் (அத்தையித்யாதி). ... ... *

(க) ரா-ஆ.

துழாய்	திருத்துழாயிலே (படிந்து அங்குத்தை பரிமளத்தைக் கொண்டு)	வந்து	இங்கேவந்து
		ஊதாய்	ஊதவேணும். (க)

வ்யா.—முதற்பாட்டு. (விண்ணவர்தங்கள் பெருமான் திருமார்வன்) நித்ய ஸூரிகளும் பிராட்டிமாரும் அநுபவிக்கிற விஷயமிதுவன்றோ? நான் உன்னைக் குடிக்கச்சொல்லுகிற வேப்பங்குடிநீர். (க) * சூட்டு நன்மாலைகள் தூயனவேந்திக்கொண்டு நித்யஸூரிகள் அடிமை செய்யப்பிராட்டியும் தானுமாய் இருக்குமாயிற்று. (மண்ணவரெல்லாம் வணங்கும்) நித்யவிபூதியிலுள்ளாரெல்லாரும் அதிகாரிகளாயிருக்குமா போலேயாயிற்று இங்குள்ளாருமெல்லாம் அதிகாரிகளாம்படியாகத் தான்வந்து நிற்கிறநிலை. அங்கு அநதிகாரிகள் ஒருவருமில்லாதாப்போலே இங்கு எத்தனையேனும் தாழ்ந்தாரும் அதிகாரிகளாம்படியாக வாய்த்துவந்து நிற்கிறது.

(மலிபுகழ்சேர்) சீலகுணம் ஸத்கார்யவாதம் கொண்டு அறிய

அரு.—முதற்பாட்டு. (விண்ணித்யாதி) "கோற்றும்பி துழாயில் படிந்து வந்ததென்று சொல்லுகைக்கு இங்கேமதுமாறியிராதோ?, உன்னைப்பிரிந்திறே அவனிருப்பது" என்று அக்குறையில்லை அவனுக்கென்னுமது தோற்ற ப்ரக்ருதோபயோகம் காட்டுகிறார் (நித்யேத்யாதி). "தங்கள்" என்று விசேஷித்ததாலே நிரதிசயபோக்ய வஸ்துவினநுபவத்தாலுண்டான தானான தன்மை தோற்றுகையால் அதுக்குக்கருத்து (இதுவித்யாதி). ஸூரிகள் அநுபவிக்கும் விஷயமானால் எனக்கென்ன; பூவும் மதுவுமுண்டார்கிலன்றோ நான்போவதென்ன; அதுக்கும் குறையில்லையென்று தாத்பர்யமருளிச் செய்கிறார் (சூட்டித்யர்தி). இத்தால் செவ்விப் பூச்சூடுவாரும் சூட்டிக்கொள்ளுகைக்கு உடலாக ஒருசேர்த்தியுண்டாயிருக்க, மதுவெள்ளமிருக்கும்; இங்கே சூட்டுவாருமின்றியே சூடினதும் செருகாயிருக்கையாலே உனக்கு அநுபவிக்க அவகாசமில்லையென்றதாயிற்று. ஸூரிபோக்யனான ஶ்ரிய: பதியை நான்கிட்டுவதெங்ஙனேயென்னுமபிப்ராயத்தில் "மண்ணவரித்யாதி" என்றுவிவக்ஷித்துத் தாத்பர்யம் (நித்யவிபூதியிலித்யாதி).

இங்கே "மலிபுகழ்" என்கைக்குப்பரமபதத்தில்மலிவில்லையோவென்ன; (சீலவித்யாதி). (ஸத்கார்யவாதம்) என்றது - முன்புண்டானதுக்கே கார்யத்வாவஸ்தாபத்தியென்று நிர்ணயிக்கும் வாதமென்றபடி. (அரிய

(க) திருவிரு-உக.

வேண்டும்படியாயிருக்கும். அங்கு ப்ரமாணங்கள்சொல்லவறியுமித்தனை. இங்கு எத்தனையேனும் தாழ்ந்தார்க்கும் முகம்கொடுத்துக்கொடுநிற்கிற நிலையைக்கண்ணாலேகாண்கையாலே அதுஸ்பஷ்டமாவது இங்கேயாயிற்று. (கதிர்முடிமேல்) இப்படி உபயவிபூதிக்கும் கவித்ததாகையாலே ஒளியையுடைத்தாயிருக்கிற திருவபிஷேகத்தின்மேலே. (வண்ணநறுந்துழாய்) செவ்விமாறாதே பரிமளத்தையுடைத்தாயிருக்கிற திருத்துழாயிலே படிந்து அங்குத்தைபரிமளத்தைக் கொடுவந்து இங்கே ஊதுது. (கோற்றும்பி) கோல்களிலும் பணைகளிலும் வைத்தமதுவைப்பானம் பண்ணக்கடவ உன்னை: (க) ‘‘‘𑌸𑌰𑍍𑌵𑌰𑌸𑌃 - ஸர்வரஸஃ’ என்கிறவஸ்துவைப்போய் அநுபவி’’ என்றன்றோ சொல்லுகிறது. .... (க)

மூ.—வேதமுதல்வன் விளங்குபுரிநூலன்
பாதம்பரவிப் பலரும் பணிந்தேத்தி
காதன்மைசெய்யும் கண்ணபுரத்தெம்பெருமான்
தாதுநறுந்துழாய் தாழ்ந்ததாய் கோற்றும்பீ. (உ)

வேண்டும்படியாய்) என்றது-முன்புண்டானதே கார்யமாயிற்றென்னுமாபோலே அர்ச்சாவதாரத்தில் சீலகுணம் காணப்பட்டதாகையால் பரமபதத்திலும் தர்ம்யைக்ய நிபந்தநமாகவுண்டென்று அநுமாநவிதயா அறியவேண்டும்படியாயென்கை. அநுமாந ப்ரமாணமே யன்றியே சப்தப்ரமாணமுமுண்டென்கிறார் (ப்ரமாணங்களித்யாதி). ப்ரத்யக்ஷமே இங்கு அமையுமென்று ஏற்றமருளிச் செய்கிறார் (இங்கித்யாதி). ‘‘துழாய்’’ என்றவநந்தரம் ‘‘படிந்து’’ என்று சேஷம்பூரித்தருளிச் செய்கிறார் (செவ்வியித்யாதி). இத்திருமொழியில் மலர் செருகாயிருக்கும்படியை உரைத்ததும் வந்தூதசெவ்வி பெற்றிருப்பதாகச் சொல்லுமதுவும், தும்பிகளைப்போகச் சொல்லிற்றும் ஸ்வாபதேசத்தில் இவ்விபூதியில் சப்தாதி விஷயங்களின் நிஸ்ஸாரதையும், பகவதநுபவத்தின் நிரதிசய ஸாரவத்தையும் சிஷ்யர்க்கு அறிவிப்பித்தமையாகக்கொள்வது. (க)

அரு.—இரண்டாம்பாட்டு. (வேதமுதல்வனித்யாதி) ‘‘மண்ணவரெல்லாம் வணங்கும்’’ என்னாநின்றாய்; மண்ணவரில் தேவதாந்தரங்களையும் வணங்காநிற்கக்காணாநின்றோமென்ன; (உ) ‘‘மானிடவரல்லர்’’ என்கிறபடியே அஸத்துக்களை மண்ணவரென்றும் சொல்லப்போகாது, வைதிகரெல்லாம்

(க) சாந்தோ-௩-கச-ச. (உ)

பதம்.	உரை.
வேதமுதல்வன்	வேதப்ரதிபாத்யனான முதன்மையையுடையனாய்,
விளங்கு	(திருமேனியில்) விளங்காநின்ற
புரிநூலன்	திருயஜ்ஞோபவீதத்தை யுடையனாய்,
பலரும்	எல்லாரும்
பாதம்	திருவடிகளை
பரவி	பரக்கச்சொல்லி
பணிந்து	ஸேவித்து
ஏத்தி	ஸ்துதித்து (அதனால்)
காதன்மை	ஸ்நேஹத்தை
செய்யும்	பண்ண(ப்ராப்த)னாண
கண்ணபுரத் தெம்பெருமான், [ய்	
தாது	தாதுகளையுடைத்தா
நறும்	பரிமளத்தையுடையதான
துழாய்	திருத்துழாயிலே
தாழ்ந்து	அவகாஹித்து
ஊதாய்கோற்தும்பி. (௨)	

வ்யா.—இரண்டாம்பாட்டு. (வேதமுதல்வன்) புருஷர்கள் தங்கள் ஆஶ்ரயங்கள் தோற்றச் சொன்னவஸ்துவைப் பற்றச் சொல்லுகிறேனோ? ஆகமாதிகளாலே சொல்லப்படுகிற வஸ்துவைப்பற்றச் சொல்லுகிறதன்று. அபௌருஷேயமாகையாலே நிர்தோஷமான வேதைக ஸமதிகம்யனாகையால் வந்த ப்ராதாந்யத்தை யுடையவன்; (விளங்குபுரிநூலன்) (க) "𑌹𑌿𑌰𑌣𑍍𑌮𑌯𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 - ஹிரண்மயஃ புருஷஃ" என்கிறபடியே அழகிய விக்ரஹத்தையும் அதிலே விளங்காநின்றுள்ள திருயஜ்ஞோபவீதத்தையு முடையவன்.

(பாதமித்யாதி) திருவடிகளை அக்ரமமாக ஏத்தி அதிலே விழுந்து எல்லாரும் ஸ்தோத்ரம்பண்ணி ஸ்நேஹத்தைப் பண்ணுகிற. (௨) "𑌨𑌿𑌦𑌿𑌧𑍍𑌯𑌾𑌸𑌿𑌤𑌵𑍍𑌯𑌃- நிதித்யாஸிதவ்யஃ" என்று விதிக்கிற விஷயத்திலேயன்றோ நான் உன்னைப்பற்றச் சொல்லுகிறது. (தாதித்யாதி) பூத்துச் செவ்வியை யுடைத்தாயிருக்கிற திருத்துழாயிலேதாழ்ந்து இங்கேவந்து ஊதவேணும். .... (௨)

இவனையே தொழுவர்களென்னுநின்றுகொண்டு வேதவேத்யத்வம் சொல்லுகிறுளென்று ஸங்கதி.

(தங்கள் ஆஶ்ரயங்கள் தோற்றச் சொன்னவஸ்துவை) என்றது- தங்கள் ஆஶ்ரயங்களானவற்றுக்கு மாஹாத்ம்யமுண்டானதாகத்தோற்ற வஸ்துவான தேவதாந்தரத்தை யென்றபடி. விவரணம் (ஆகமேத்யாதி). (௨)

(க) சாந்தோ-க-௬-௬. (௨) ப்ரு-௬-௫-௬.

மூ.—விண்டமலரெல்லாமூதிநீ யென்பெறுதி
அண்டமுதல்வ னமரர்களெல்லாரும்
கண்டுவணங்கும் கண்ணபுரத் தெம்பெருமான்
வண்டுநறுந்துழாய் வந்தூதாய் கோற்றும்பீ. (௩)

பதம்.	உரை.	பதம்.	உரை.
விண்ட	விகஸிதமான	கண்டு	கண்ணாரக்கண்டு
மலரெல்லாம்	புஷ்பங்களிலெல்லாம்	வணங்கும்	ஆஸ்ரயிக்கும்படியானவனான
ஊதி	ஸஞ்சரித்து		
நீ	நீ		கண்ணபுரத்தெம்பெருமான்,
என்	என்ன (ஸுகத்தை)	வண்டு	வண்டுகள் (படிந்துகிடக்கிற)
பெறுதி	பெற்றாய் (ஆகையால்)		
அண்ட	அண்டத்துக்கு	நறும்	பரிமளப்ரசுரமான
முதல்வன்	நிர்வாஹகனாய்	துழாய்	திருத்துழாயின் (பரிமளத்தைக்கொண்டு)
அமரர்கள்	தேவர்கள்		
எல்லாரும்	ஸகலரும்		வந்தூதாய் கோற்றும்பி. (௩)

வ்யா.—மூன்றாம்பாட்டு. (விண்டு) திறந்து கிடந்தவாசலெல்லாம் நுழைந்து திரிவாரைப்போலேயிருந்ததீஉன்னுடையயாத்ரை. இதள் அலருமளவும்அவஸரம் பார்த்துநின்றால் மற்றுள்ளவற்றிலடங்கலும் மது ஒழுகிப்போமே, இதுதன்னில் உள்ளது அல்பமாய், அஸ்த்திரமாயிருக்கும்; அதுதான்முதலிலே கிடையாது. கிடைத்ததோ அத்யல்பம்; அல்பபலத்துக்கு யத்நம்பண்ணுவாருண்டோ?

அநு.—மூன்றாம்பாட்டு (விண்டவித்யாதி) "வேதவேத்யவஸ்து" என்று அத்தைச்சொல்லாநின்றாய், தேவதாந்தரங்களும் சிலப (ஃ) லங்களைக் கொடுக்க, பெற்றிருப்பாரும்சிலருண்டேயென்ன; அதுகொடுப்பது-க்ஷுத்ரபலத்தையென்று, அத்தைத் தவிர்த்து பகவத்விஷயத்திலே மூட்டுகிறாளென்று ஸங்கதி.

"விண்ட" என்று விசேஷித்ததுக்குக்கருத்து (திறந்தித்யாதி). ஓடித்திரிய வேண்டுவானென்னென்ன ஹேதுத்வயம் (இதுவித்யாதி). விள்ளாமலரிருந்தால் விண்டமலரில் தேன் சுவறிப்போமென்று அங்கோட, அங்கு தானும் நாக்கு நனைக்கவுமில்லாமல் மற்றொன்றைத்தேடிப் போகையுமாய் இப்படி திரிந்தபடி சொல்லிற்றாயிற்று. விஷயாந்தரங்களின் ஸ்வபாவமிருப்பது இங்ஙனென்று கருத்து. ... ... (௩)

அண்டமுதல்வன்) அண்டத்துக்கு நிர்வாஹகன். (அமரர்களித்யாதி) தங்களை ஆஶ்ரயணீயராக நினைத்து இறுமாந்திருக்கிறவர்களெல்லாரும் அவ்விறுமாப்பைப் பொகட்டு திருவடிகளிலேவிழுந்து ஆஶ்ரயிக்கும்படி திருக்கண்ணபுரத்திலேநிற்கிறவன். (வந்து) ஸஜாதீயருடைய யாத்ரை அமையாதோ உனக்கு. ....(௩)

மூ.—நீர்மலிகின்றதோர் மீனாயோராமையுமாய்
சீர்மலிகின்றதோர் சிங்கவுருவாகிக்
கார்மலிவண்ணன் கண்ணபுரத்தெம்பெருமான்
தார்மலிதண்டுழாய் தாழ்ந்துதாய் கோற்றும்பீ. (௪)

பதம்.	உரை.	பதம்.	உரை.
நீர்	ஸமுத்ரத்திலே	கார்	அழகால்
மலிகின்றது	வ்யாபித்த	மலி	நிறைந்த
ஓர்	அத்விதீயமான	வண்ணன்	திருமேனியையுடையனான
மீனாய்	மத்ஸ்யாவதாரமாய்,		கண்ணபுரத்தெம்பெருமான்,
ஓர்	அத்விதீயமான	தார்	மாலையிலே
ஆமையுமாய்	கூர்மாவதாரமுமாய்,	மலி	வ்யாப்தமான
சீர்	வீரஶ்ரீயால்	தண்	குளிர்ச்சியான
மலிகின்றது	பூர்ணமான	துழாய்	திருத்துழாயின் பரிமளத்தில்
ஓர்	அத்விதீயமான		தாழ்ந்துதாய் கோற்றும்பி. (௪)
சிங்க	நரஸிம்ஹத்தினுடைய		
உருவாகி	வடிவையுடையனாய்,		

வ்யா.—நாலாம்பாட்டு. (நீர்மலிகின்றதோர் மீனாயோராமையுமாய்) கடலிலே அக்கடலைக் கண்செறியிட்டாப்போலே யிருக்கிற வடிவையுடைய மத்ஸ்யமாய், (௧) "அலைக்கடல்நீர்க்குழம்ப" என்னக்கடவதிறே. கடலில் நீர்க்குழம்பிச் சேறாம்படியிறே கொண்டவடிவின்பெருமை. அன்றிக்கே ஜலசரஜாதியுமான வடிவையுடைய

அரு.—நாலாம்பாட்டு (நீரித்யாதி) அமரர்களெல்லாரும் கண்டுவணங்குகைக்கு இவன்செய்த ஏற்றமென்னென்ன; தன்னை அழியமாறி அவதரித்து வேதப்ரதாநாதிகளைப் பண்ணினான் காணென்றுசொல்லுகிறானென்றுஸங்கதி.
| கண்செறி - குழாய் மூடியிட்டாப் போலேயாய்
அத்தாலே கடலை நெருக்கமாக வ்யாபித்தமை தோற்றுகிறது. "நீர்"என்று கடலாய் கீழருளிச்செய்து, கேவலஜலமாக வர்த்தாந்தரம் (அன்றிக்கேயித்யாதி). "ஜலஸஜாதீயமாய்" என்றுபாடமான

---

(௧) தி-மொ-௧௧-௪-௧.

ஆமையாய். (சீர்மலிகின்றதோர் சிங்கவுருவாகி) வீரஸ்ரீயால்குறைவற்ற நரஸிம்ஹமாய் உகவாதவனுக்காகக்கொண்ட வடிவையோ தான் பற்றச் சொல்லுகிறது.

(காரித்யாதி) எல்லாருக்கும் மேல்விழுந்து பற்றவேண்டும்படியான வடிவையுடையனுமாய்க்கொண்டு திருக்கண்ணபுரத்திலே நிற்கிற ஸர்வேஶ்வரனையன்றோ பற்றச் சொல்லுகிறது. (தார்மலி) பூமிக்கு ஶ்ரமஹரமாயிருந்துள்ள திருத்துழாயிலே. (ச)

மூ.—ஏரார்மலரெல்லா மூதிநீயென்பெறுதி
பாராருலகம் பரவப்பெருங்கடலுள்
காராமையான கண்ணபுரத்தெம்பெருமான்
தாரார்நறுந்துழாய் தாழ்ந்தூதாய் கோற்றும்பீ. (ரு)

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஏர்	அழகினால்	பரவ	பரவும்படியான
ஆர்	நிறைந்துள்ள	பெரும்	மஹத்தான
மலர் எல்லாம்	புஷ்பங்களில் எல்லாம்	கடலுள்	ஸமுத்ரத்திலே
ஊதி	ஸஞ்சரித்த	காராமையான	பெரிய ஆமையான
நீ	நீ [தை	கண்ணபுரத்தெம்பெருமான்	
என்	என்னப்ரயோஜநத்	தார்	மாலையிலே
பெறுதி	பெற்றாய் ;	ஆர்	நிறைந்ததாய்
பார்	மண்ணில்	நறும்	பரிமளிதமான
ஆர்	மிக்கிருந்துள்ள	துழாய்	திருத்துழாயிலே
உலகம்	லோகங்களெல்லாம்	தாழ்ந்தூதாய்கோற்றும்பீ. (ரு)	

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (ஏரார்மலரெல்லாமூதி) ஒன்றிலே உன் அபேக்ஷை குறைவறக் கிடக்கிறதன்றே. நிறங்கொண்டு ப்ர(ஞ)

போது நீரிலேதானே புஷ்டமாயிருந்துள்ள என்றுசப்தார்த்தம். "ஜலம் மிக்கிருந்துள்ள லோகமெல்லாம் பரம்பும்படியான" என்று பாடமானபோது - நீர்மலிகின்ற லோகத்திலே அதுக்குத்தக்கதோர் ஆமையுமாயென்று சப்தார்த்தம். மேலுக்கவதாரிகை. (உகவாதவித்யாதி). (ச)

அரு. —அஞ்சாம்பாட்டு. (ஏராரித்யாதி) கீழ்ப்பாட்டுக்களிரண்டிலும் சொன்னவர்த்தந்தானே பின்னாட்ட் அத்தை அநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

"எல்லாம்" என்றதுக்குக்கருத்து (ஒன்றிலேயித்யாதி). ஏரார் என்றதுக்குத் தாத்பர்யம் (நிறமித்யாதி). "என்பெறுதி" என்றதுக்கு உட்கருத்து

மிக்கிற இத்தனையிறே உள்ளது. எங்கும்புக்கும் ஆத்மரக்ஷணம் பண்ணினாயென்னும் வார்த்தை கேட்கப் பெற்றிலையே. (பாராருலகம்பரவ) மணம்மிக்கிருந்துள்ள லோகமெல்லாம்பரவ. (பெருங்கடலுள் காராமையான) கீழ்ச்சொன்னதுதான் பின்னாட்டுகிறபடி. (காராமை) பெரிய ஆமை. (தாராரித்யாதி) பூமிக்குச் செவ்விபெற்றிருந்துள்ள திருத்துழாயிலே தாழ்ந்துதாய். .... (௫)

௬.—மார்வில்திருவன் வலனேந்து சக்கரத்தன்
பாரைப்பிளந்த பரமன் பரஞ்சோதி
காரில்திகழ்காயாவண்ணன் கதிர்முடிமேல்
தாரில்நறுந்துழாய் தாழ்ந்துதாய் கோற்றும்பீ. (௬)

பதம்.	உரை.	பதம்.	உரை.
மார்வில்	திருமார்விலே	காரில்	கறுப்புக்கிருப்பிட
திருவன்	பெரியபிராட்டியாரை	திகழ்	ப்ரகாசியாநின்ற [யாய்
	யுடையவனாய்,	காயா	காயாம்பூபோல்
வலன்	வலது திருக்கையில்	வண்ணன்	வடிவழகையுடைய
எந்தும்	தரிக்கப்பட்ட [வனாய்		னான எம்பெருமா
சக்கரத்தன்	திருவாழியை யுடைய		னுடைய
பாரை	பூமியை [னால்	கதிர்	ஒளியை யுடைத்தான
பிளந்த	பேதித்தவனாய் (அத	முடிமேல்	திருவபிஷேகத்தின்
பரமன்	மேன்மையை யுடைய	தாரில்	மாலையிலிருக்கும் [மேல்
		நறும்	பரிமளிதமான
	வனாய், [யாய்	துழாய்	திருத்துழாயில்
பரஞ்சோதி	பரமமான தேஜோரூபி		தாழ்ந்துதாய் கோல்தும்பி. (௬)

அவ.—ஆறாம்பாட்டு. நீ அங்கேசென்றால் முகம்தருவிப்பாருமுண்டு. அவன்றான் விரோதிநிரஸநசீலன்; என்றுமொக்க ஆபத்துக்களிலே உதவிப்போந்தவன். உதவாதொழியிலும் விடவொண்ணாத வடிவழகுடையவன்; ஆனபின்பு அவன் பக்கலிலேசென்று இங்கே வந்துதப்பாராயென்கிறாள்.

(எங்குமித்யாதி). ... ... (௫)

அநு.—ஆறாம்பாட்டு. (மார்விலித்யாதி) ஆமைக்கநந்தரம் வராஹாவதாரமாகையாலே அதைச்சொல்லிக்கொண்டு சேர்ப்பாருமுண்டென்கிறாரென்ற ஸங்கதியை தாத்பர்யகதநமுகேந ஸ்ப்புரிப்பிக்கிறார் (நீயித்யாதி)

வ்யா.—(மார்விற்றிருவன்) திருமார்விலே பிராட்டி யெழுந்தருளியிருந்து அவன் தன்ஸ்வாதந்த்ர்யத்தாலே இத்தலையில் குற்றங்கண்டு அழன்று கைவிடுமன்று தன்முழுநீர்மையாலே அவனை ஆற்றிப் பொருந்துவிடுமாயிற்று. (வலனேந்து சக்கரத்தன்) அவள் சொல்லவன்றிறே கையில் திருவாழியை ஏந்திற்று. (௧)* எப்போதும் கைகழலாநேமியானிறே. (பாரைப்பிளந்த பரமன்) அண்டபித்தியிலே புக்குச்சேர்ந்து உருமாய்ந்துபோன பூமியைக் கைவிடாதே அதுக்கீடாயிருப்பதொருவடிவைக்கொண்டுபுக்கு, இடந்தெடுத்துக்கொண்டேறி, ரக்ஷணத்தில் தன்னை எண்ணினால் பின்னை ஒருவரை எண்ணவொண்ணாதபடி யிருக்குமவன். (பரஞ்சோதி) எல்லார்க்குமொக்க ப்ராப்யனாயிருக்குமவன்.

(காரில்திகழ்காயாவண்ணன்) ப்ராப்யனன்றாகிலும் விடவொண்ணாதாயிற்று வடிவழகு. கறுப்பு இத்தனையுமே அதுக்கேற்றமாகச் சொல்லலாவது; பரிமளமித்தனையும் அவனுக்கேற்றமா யிருக்குமாயிற்று. (கதிரித்யாதி) ஆதி(ஹ)ராஜ்யப்ரகாசகமான திருவபிஷேகத்தின்மேலேயுண்டான செவ்வியையுடைத்தான திருத்துழாயிலே படிந்து இங்கே வந்துதப்பாராய். .... (௬)

மூ.—வாமனன்கற்கி மதுசூதன் மாதவன்
தார்மன்னுதாசரதியாய தடமார்வன்
காமன்றன்தாதை கண்ணபுரத்தெம்பெருமான்
தாமநறுந்துழாய் தாழ்ந்துதாய் கோற்றும்பீ. (௭)

பதம்.	உரை.	பதம்.	உரை.
வாமநன்	வாமநாவதாரம் செய்தவனாய்,	தார்	(ரக்ஷணத்துக்கு ஸ
கற்கி	கல்கி அவதாரம் செய்வதாக தீக்ஷித்திருக்குமவனாய்,		சகமான)மாலையினு
		மன்னு	பொருந்தியிருக்கிற
மதுசூதன்	மதுஎன்கிறஅஸுரனை நிரஸித்தவனாய்,	தாசரதியாய	சக்ரவர்த்தித் திருமக

மாதவன் - சிரிய:பதியாய்

(அழன்று)-கோபித்து. "பரமன்" என்றதினர்த்தம் (ரக்ஷணத்திலித்யாதி). (௨) "పరంజ్యోతిరుపసమ్పద్య- பரம்ஜ்யோதிருபஸம்பத்ய" என்றுசொல்லுகிற ஶ்ருதியை யுட்கொண்டருளிச் செய்கிறார் (எல்லார்க்குமித்யாதி).

"காரில் திகழ்" என்று விசேஷித்ததுக்குத்தாத்பர்யம் (கறுத்தித்யாதி).

---

(௧) பெரியதிரு-௮௭. (௨) சாந்தோ-௮-௧௨-௨.

தடம்	விசாலமான
மார்வன்	திருமார்வையுடையனாய்,
காமன்தன்	மந்மதனுக்கும்
தாதை	உத்பாதகனான
கண்ணபுரத்தெம்பெருமான்,	
தாமம்	மாலையாய்
நறும்	பரிமளிதமான
துழாய்	திருத்துழாயிலே
தாழ்ந்தூதாய் கோற்றும்பீ. (௭)	

வ்யா.—எழாம்பாட்டு. (வாமனன்) தன்னுடைமை பெறுகைக்குத்தானே அர்த்தி([illegible])யாய்வருமவன். (கற்கி) ப்ரதிபக்ஷத்தைத் துகைக்கக் கடவனாக தீக்ஷித்திருக்கிறவன். (மதுசூதன்) முன்பே முதல்களைப் பிடுங்கித் தந்தவன். (மாதவன்) இக்குணங்களுக்கடியாக ஸ்ரியஃபதியாயுள்ளவன். (தாரித்யாதி) ரக்ஷணத்துக்குத் தனி மாலை யிட்டிருக்கையாலே வளைத்துக்கார்யம் கொள்ளலாம்படி யிருக்குமவன்.

(காமன்றன்தாதை) அழகாலே நாட்டை வெருட்டித்திரிகிற காமனுக்குங்கூட உத்பாதகன். (தாமமித்யாதி) மாலையாய் பரிமளிதமான திருத்துழாயிலே தாழ்ந்து இங்கே வந்தூதாய். (௭)

மூ.—நீலமலர்கள் நெடுநீர்வயல்மருங்கில்
சாலமலரெல்லாமூதாதே வாளரக்கர்
காலன்கண்ணபுரத் தெம்பெருமான் கதிர்முடிமேல்
கோலநறுந்துழாய் கொண்டூதாய் கோற்றும்பீ. (௮)

பதம்.	உரை.
நெடு	அதிகமான
நீர்	ஜலஸம்ருத்தியையுடைய
வயல்	வயல்களிலுண்டான
நீல	நீலவர்ணமான
மலர்கள்	பூக்களிலும்,
மருங்கில்	(அந்தவயலினுடைய) பக்கங்களிலுண்டான
சால	அதிகமான
மலரெல்லாம்	பூக்களெல்லாவற்றிலும்
ஊதாதே	ஊதவேண்டாம்;
வாள்	வாளாயுதத்தையுடையரான
அரக்கர்	ராக்ஷஸர்களுக்கு
காலன்	ம்ருத்யுவான
கண்ணபுரத் தெம்பெருமான்,	
கதிர்	ப்ரகாசியாநின்ற
முடிமேல்	திருவபிஷேகத்தின் மேலிருப்பதாய்
கோலம்	அழகிய

அந.—எழாம்பாட்டு. (வாமனனித்யாதி) எனமாய் தன்னுடைமையை எடுத்தபடியை அநுஸந்தித்துச் சொன்னாள் கீழ்; வாமனனாய் தன்னுடைமையை எற்றளந்தமையைச் சொல்லுகிறாளென்று ஸங்கதி.

நறும்	பரிமளிதமான	கொண்டு	கொடுவந்து
துழாய்	திருத்துழாய்பரிமளத்தை		

ஊதாய்கோற்றும்பி. (அ)

வ்யா.—எட்டாம்பாட்டு. (நீலமித்யாதி) மிக்க நீரையுடைத்தாய் வயலிலே உண்டான நீலப்பூக்கள், அந்தவயலினுடைய பர்யந்தத்திலே உண்டான பூக்களெல்லாவற்றையும். (ஊதாதே) அல்பப்ரயோஜநத்துக்காகவும் யத்நியாதே. பூவாகில் மதுவின்றிக்கேயிருக்குமோவென்று ப்ர(ப்ரு)மஜநகமாமதுவேயாயிற்றுள்ளது. (வாளரக்கர் காலன்) ஸாயுதரான விரோதிகளுக்கும் ம்ருத்யுவானவன், திருக்கண்ணபுர்த்திலேவந்து ஸந்நிஹிதனான ஸர்வேஸ்வரனுடைய புகரையுடைத்தான திருவபிஷேகத்தின்மேலே யுண்டான தர்ஶநீயமான திருத்துழாய் மாலையிலே வந்தூதாய். (அ)

மூ.—நந்தன்மதலை நிலமங்கைநற்றுணைவன்
அந்தமுதல்வ னமரர்கள்தம்பெருமான்
கந்தங்கமழ் காயாவண்ணன் கதிர்முடிமேல்
கொந்துநறுந்துழாய் கொண்டூதாய்கோற்றும்பீ. (கூ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
நந்தன்	ஸ்ரீ நந்தகோபருடைய	வண்ணன்	திருநிறத்தையுடையனான எம்பெருமானுடைய
மதலை	திருமகனாய்,		
நிலமங்கை	ஸ்ரீ பூ (பூ) தேவிக்கு		
நல்	நல்ல	கதிர்	ப்ரகாசியாநின்ற
துணைவன்	ரக்ஷகனாய்,	முடிமேல்	திருவபிஷேகத்தின் மேல்
அந்தம்	ஸம்ஹாரத்துக்கும்		
முதல்வன்	நிர்வாஹகனாய்,	கொந்து	கொத்தாய்
அமரர்கள்தம்	நித்யஸூரிகளுக்கு	நறும்	பரிமளிதமான
எம்பெருமான்	ஸ்வாமியாய்,	துழாய்	திருத்துழாயின் பரிமளத்தை
கந்தம்	கந்த (கந்த) மானது		
கமழ்	வீசாநின்றுள்ள	கொண்டு	கொடுவந்து
காயா	காயாம்பூபோன்ற		

ஊதாய் கோற்றும்பி. (கூ)

(வெருட்டி) பயப்படுத்தி.

அரு.—எட்டாம்பாட்டு. (நீலமித்யாதி). கீழ்ப்பாட்டில் ப்ரஸ்துதரான தாசரதியின் வீரப்பாட்டை அருளிச்செய்கிறானென்று ஸங்கதி.

"நெடுநீர் வயலில் நீலமலர்கள் மருங்கில் சாலமலர்" என்று அந்வயித்தருளிச்செய்கிறார் (மிக்கவித்யாதி). ... ... (கூ)

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (நந்தனித்யாதி) நமக்கு அபூமியாயிருக்கிற விட்த்திலே போகச் சொல்லுகிறேனோ? (நந்தன்மதலை) ஸ்ரீநந்தகோபர் திருமகனாய்வந்து அவதரித்து ஸௌலபனானவன். (நிலமங்கை நற்றுணைவன்) பிறந்தது பூமிபாரத்தைப் போக்குகைக்காகவாயிற்று. (அந்தமுதல்வன்) ஸர்வஸம்ஹர்த்தாவுமாய், ஸர்வஸ்ரஷ்டாவுமானவன். (அமரர்கள் தம்பெருமான்) அயர்வறு மமரர்களதிபதி.

(கந்தமித்யாதி)பரிமளம் கந்தி(𑌗𑌨𑍍𑌧)யாநின்றுள்ள, காயாம்பூப்போலேயிருக்கிறதிருநிறத்தையுடையவன். காயாவோடு ஒப்புச்சொல்லலாவது நிறம்மாத்ரமே. (௧)"𑌸𑌰𑍍𑌵𑌗𑌨𑍍𑌧𑌃- ஸர்வகந்தஃ" என்கிற ஏற்றமேயுண்டு. கொத்தாய் பரிமளிதமாயிருந்துள்ள. .... (௯)

மூ.—வண்டமரும்சோலை வயலாலிநன்னாடன்
கண்டசீர்வென்றிக் கலியனொலிமாலை
கொண்டல்நிறவண்ணன் கண்ணபுரத்தானைத்
தொண்டரோம் பாட நினைந்தூதாய்கோற்றும்பீ. (௧௦)

—(*)—

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பதம்.	உரை.	பதம்.	உரை.
கோல்தும்பி	கோவில் வர்த்திக்கிற தும்பியே !	வயல்	வயல்களையுமுடைய தான
தொண்டரோம்	ஶேஷபூ(𑌭𑍂)தரான நாங்கள்,	ஆலி	திருவாலி யென்கிற
வண்டு	வண்டுகளானவை	நல்	நல்லதான
அமரும்	வாஸம்செய்கின்ற	நாடன்	நாட்டுக்கு நிர்வாஹகராய்,
சோலை	சோலைகளையுடைய தாய்	கண்ட	(கண்ணாலே) காணும் படியான

அநு.—ஒன்பதாம்பாட்டு. (நந்தனித்யாதி) கீழ்ப்பாட்டில் தாசரதியின் வீரவாசியை "வாளரக்கர் காலன்" என்று சொன்னாளாய், "காமன்றன் தாதை" என்று க்ருஷ்ணாவதாரத்தின் படிகளைச்சொல்லுகிறாளென்றுஸங்கதி.

"அந்தம்" என்று முடிவாய், அதுக்கும் முதலென்றபடியாய், அதுக்கும் நிர்வாஹகனென்று விவக்ஷித்துத் தாத்பர்யம் (ஸர்வேத்யாதி). "காரில்திகழ்" என்று கீழருளிச்செய்கையாலே "கந்தம் கமழும்" என்றது காயாவுக்கு விசேஷணமாகமாட்டாதென்று, எம்பெருமானுக்கே விசேஷணமென்று ஸூசிப்பிக்கிறார் (காயாவோடித்யாதி). ... ... (௯)

---

(௧) சாந்தோ-௩-௧௪-௪.

சீர்	ஸம்பத்தையுடையராய்
வென்றி	ப்ரதிபக்ஷத்தை ஜயித்தவரான
கலியன்	ஆழ்வார்
ஒலி	ப்ரஸித்தியையுடையதாக அருளிச்செய்த
மாலை	மாலாரூபமான (இப்பத்துப் பாட்டையுங்கொண்டு)
கொண்டல்	மேகத்தினுடைய
நிறம்	வர்ணம்போன்ற
வண்ணன்	(ஶ்ரமஹரமான) வடிவையுடையனை
கண்ணபுரத்தானை	திருக்கண்ணபுரத்திலெழுந்தருளியிருக்கிற ஸர்வேஶ்வரனை
பாட	பாடும்படியாக
நினைந்து	உன்மனதில் வைத்துக்கொண்டு
ஊதாய்	ஊதக்கடவை. (௧௦)

வ்யா.—பத்தாம்பாட்டு. நிகமத்தில் (வண்டித்யாதி) வண்டுகளானவை மதுபாநமத்தமாய்க்கொண்டு த்வநியாநின்றுள்ள சோலையையும் வயலையுமுடைத்தான திருவாலிநாட்டுக்குநிர்வாஹகராயுள்ளார், ப்ரமாணங்களிலே கேட்டுப்போகையன்றிக்கே கண்ணாலே காணலாம்படியான நிரவதிக ஸம்பத்தையுடையருமாய், ப்ரதிபக்ஷத்தை வென்றிருப்பாருமான ஆழ்வார் ஒலியையுடைத்தாம்படி சொன்ன இத்தொடையைக்கொண்டு,ஶ்ரமஹரமானவடிவையுடையனைக்கொண்டு திருக்கண்ணபுரத்திலேவந்து ஸந்நிஹிதனனை ஸர்வேஶ்வரனை சேஷபூதரான நாங்கள் இவற்றைக்கொண்டு பாடும்படியாக நீ உன் ஹ்ருதயத்திலேகொண்டு அவன்பக்கலிலே அறிவித்து, எங்களுக்கு அவன்முகம் தரும்படிபண்ணி எங்கள் குறையைத் தீர்க்கப்பாராய்; இவரொருவரும் ஆஶ்வஸ்தராகவே எல்லாரும் ஆஶ்

அநு.—பத்தாம்பாட்டு. (வண்டித்யாதி) சவரிப்பெருமாளுடைய திருத்துழாயின்தேனிலும் பரிமளத்திலுமுண்டான போக்யதாதிசயம் இவ்வாழ்வாரைமருளேற்ற, அத்தாலேதாமாகப்பேசும்போது பிராட்டி தசையைஅநுவர்த்தித்து, தும்பிகளைப்பார்த்து கண்ணபுரத்தம்மானைப்பாடுகையே ப(ஃ)லமென்னுமிடம் தோன்றவருளிச் செய்கிறாரென்று திருவுள்ளம்பற்றி வ்யாக்யாநம் செய்தருளுகிறார் (வண்டுகளித்யாதி). "தொண்டரோம்பாட" என்று எல்லாரையும் கூட்டிக்கொண்டதுக்குத் தாத்பர்யமருளிச் செய்கிறார் (இவரித்யாதி). ... ..., ... (௧௦)

வஸ்தர்காணும். .... (க0)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

பெரியதிருமொழி
எட்டாம்பத்து நாலாம்திருமொழி முற்றிற்று.

ஆழ்வார்திருவடிகளே சரணம்.

எட்டாம்பத்து அஞ்சாந்திருமொழி
தந்தைகாலில் ப்ரவேசம்.

அவ.—அங்குத்தை ஸம்பந்தமுள்ளதொன்றைக்கொண்டுவந்து என்னை ஆஶ்வஸிப்பிக்க வேணுமென்று சில தும்பிகளைப் போகவிட்டாள். அவையும் போய் அவனைக்கொடுவந்தால், தானும் அவனுமாக அநுபவிப்பதாக இவள் இலையகலப்பாரித்துக் கொண்டிருந்தாள். அவன் வந்திலன்; அதுக்குமேலே பாத(𑌬𑌾𑌧)கபதார்த்தங்கள் மிகைத்து அவற்றுக்கு ஆடல்கொடுத்து பதார்த்ததர்ஶநம்பண்ணிப் போதுபோக்க வொண்ணாதபடி கண்டவிடமெங்கும் இருள் மூடி ஹிதம் சொல்லுவாரும் அழைப்பாரும் தேட்டமாம்படியாய் வந்துவிழுந்தது. தானும் ராத்ரியும் பாதகபதார்த்தங்களுமேயாய் நோவுபட்டுத் திருவாய்ப்பாடியில் க்ருஷ்ணனைப் பிரிந்த பெண்களெல்லாரும் ஒருஸந்த்யையில் பட்டபாட்டை இவள் ஒருத்தியும் பட்டுக் கூப்பிடுகிறாளாய்ச் செல்லுகிறது. .... *

மூ.—

தந்தைகாலில்விலங்கற வந்துதோன்றிய தோன்றல்பின்றமியேன்
சிந்தைபோயிற்றுத்திருவருளவனிடைப்பெறுமளவிருந்தேனை [றன்
அந்திகாவலனமுதுறுபசுங்கதிரவை சுட வதனோடு
மந்தமாருதம் வனமுலைதடவந்து வலிசெய்வதொழியாதே. (க)

பதம்.	உரை.	பதம்.	உரை.
தந்தை	தமப்பனாரான வஸு தேவருடைய	விலங்கு	விலங்கானது
		அற	அறந்துவிழும்படி
காலில்	காலிலிருக்கும்	வந்து	எழுந்தருளி

அரு.—தந்தைகாலின்ப்ரவேசம். (அலைப்பாரும்) என்றது (க) "நிற்றி முற்றத்துளென்று நெரித்தகையராய் எம்மை நீர் சுற்றியும் சூழ்ந்தும் வைதிர்" என்கிறபடியே பாதி(𑌬𑌾𑌧𑌿)க்குமவரைச் சொன்னபடி. ... ... *

(க) தி-வாய்-எ-எ-க0.

தோன்றிய	அவதரித்த
தோன்றல்பின்	முக்த்த(ग्ध)னானக்ருஷ்ணன் பின்னே
தமியேன்றன்	(பிரிந்து) தனியிருக்கிற என்னுடைய
சிந்தை	மநஸ்ஸானது
போயிற்று	போயிற்று.
அவனிடை	அவனிடத்தில்
திருவருள்	க்ருபையை
பெறும்	பெறுவதற்கு
அளவிருந்தேனை	அவஸரம் பார்த்திருந்த என்னை
அந்திகாவலன்	சந்த்ரனுடைய
அமுதுறு	அம்ருதத்தால் மிக்க
பசும்	பசுமையான
அவை	அந்த
கதிர்	கிரணங்கள்
சுட	தஹிக்க,
அதனோடு	அத்தோடு
மந்தமாருதம்	ம்ருதுவானதென்றலானது
வனம்	அழகிய
முலைதடம்	முலைத்தடத்தில்
வந்து	புக்கு ஸ்பர்ஶித்து
ஒழியாதே	இடைவிடாதே
வலிசெய்வது	பாதி(बाधि)யாநின்றது.

வ்யா—முதற்பாட்டு. (தந்தையித்யாதி) பிறரால்வந்த விலங்கு பரிஹரிக்குமவன் தன்னால்வந்த விலங்கு பரிஹரியாதொழிவதே. ஶ்ரீவஸுதேவர் காலில் விலங்கு கழலும்படி வந்தவதரித்த முக்த்தனுடைய ஸ்வபாவத்தை அநுஸந்தித்து ஆபத்துக்களிலே வந்து உதவும் ஸ்வபாவனானபின்பு அந்தபித்ராதிகளளவல்லாத ஆசையுடைய நமக்கு வந்து உதவானோவென்று பிரிந்து தனியிருக்கிற என் நெஞ்சானது அவன்பின்னேபோயிற்று. (திருவருளவனிடைப் பெறுமளவிருந்தேனை) நெஞ்சு கைதாராத ஸமயத்தில் அவன் (க) "அருளாதொழியுமே" என்று அவனருள் பெறுவதாக அவஸரம் பார்த்திருந்தேன்நான். அவ்வருளின் கார்யம் பலியாமையேயன்றிக்கே த்வேஷகார்யமே தலைக்கட்டிற்று.

(அந்திகாவலனித்யாதி) பாடிகாப்பாரே களவு காணுமாபோலே ராத்ரிதத்வத்துக்கு நிர்வாஹகனானசந்த்ரனுடைய. (அமுதுறுபசுங்கதிரவைசுட) விஷம்பாத(बाध)கமானால் அம்ருதத்தையிட்டுப்

அரு.—முதற்பாட்டு. (தந்தையித்யாதி) வெறுப்பிலேயாக ஒரு தாத்பர்யமருளிச்செய்து சிந்தைபோகைக்கு உடலாகத் தாத்பர்யாந்தரம் (ஶ்ரீவஸுதேவரித்யாதி). மேலுக்கவதாரிகை (அவ்வருளித்யாதி).

"அந்தி" என்றது-லக்ஷணயா ராத்ரியாக வருளுகிறார் (பாடியித்யாதி).

(க) ௩-திருவ-கக.

பரிஹரிக்கலாம். அம்ருதம் பாத(𑌬𑌾𑌧)கமானால் பின்னைபரிஹரிக்கலாவதில்லை. அம்ருதகிரணங்களானவை நெருப்பை முகந்து எறட்டினாப் போலேசுட. (அதனோடுமெந்தமாருதம்)அதுதானே அமையுமாயிற்று பாத(𑌬𑌾𑌧)கத்தில் உறைப்புக்கு. அத்தோடுகூட அளவுபட ஸஞ்சரியாநின்றுள்ளதென்றலானது தோற்றிற்று. (வனமுலைதடம்வந்து) அவனுடைய கரஸ்பர்ஶமும் யாதோரிடத்திலுண்டாம், அவ்விடமெங்கும் புக்கு ஸ்பர்ஶித்துக் கொடுவாராநின்றதாயிற்று. (வலிசெய்வதொழியாதே) அத்தென்றல்தனக்கு நாம் இத்தனைநலிந்தோமாகில் இனி ஓரளவிலே விடவமையாதோவென்று தயைபிறந்துகைவாங்கவுமாமிறே; அதன்றிக்கே இடைவிடாதே நலியாநின்றது. ராவணன் பண்ணின ப்ராதிகூல்யத்துக்கும் ஓரவதி உண்டாயிற்றிறே. இது பண்ணுகிற ப்ராதிகூல்யத்துக்கு ஓரவஸாநம்காணாதொழிகிறது. (க)

மூ.—

மாரிமாக்கடல் வளைவணர்க்கிளையவன் வரைபுரை திருமார்பில்
தாரினாசையில்போயின நெஞ்சமும்தாழ்ந்த தோர் துணைகாணேன்
ஊரும் துஞ்சிற்றுலகமும்துயின்ற தொளியவன் விசும்பியங்கும்
தேரும்போயிற்றுத்திசைகளும்மறைந்தனசெய்வதொன்றறியேனே.

பதம்.	உரை.	பதம்.	உரை.
மாரி	மேகம்போன்றவனும்,	ஆசையில்	ஆசையினால்
மா	பெரிதான [னும்,	போயின	சென்ற
கடல்	ஸமுத்ரம் போன்றவ	நெஞ்சமும்	மநஸ்ஸும்
வளை	சங்குபோன்ற	தாழ்ந்தது	(அவனிடத்திலே) கால்
வணர்க்கு	வர்ணத்தையுடைய		தாழ்ந்தது;
	பலதேவருக்கு	ஓர் துணை	உதவியானஒருவரை
இளையவன்	தம்பியானக்ருஷ்ண	காணேன்	காண்கிறிலேன்; [யும்
	னுடைய	ஊரும்	ஊரிலுள்ளாரும்
வரைபுரை	மலைபோன்ற	துஞ்சிற்று	உறங்கினர்கள்,
திருமார்வில்	திருமார்பிலிருக்கும்	உலகமும்	லோகங்களும்
தாரின்	மாலையில்	துயின்றது	உறங்கிற்று;

“மந்த” என்றதினர்த்தம் (அளவுபட) என்றது. “ஒழியாதே” என்கிற ஸ்வரத்துக்குத்தாத்பர்யம் (ராவணனித்யாதி). இப்பாட்டில் சப்தாதி விஷயங்களின் ஸ்பர்ஶத்தின் பாத(𑌬𑌾𑌧)கத்வம் சொல்லிற்றென்று ஸ்வாபதேசம். … … … … … … … … (க)

ஒளியவன்	ஸூர்யனும்	திசைகளும்	திக்குக்களும்
விசும்பு	ஆகாசத்தில்	மறைந்தன	சூந்யமாயிற்று;
இயங்கும்	மயங்கினான்;	செய்வது	செய்யவேண்டுமெதான
தேரும்	(அவனுடைய) தேரும்	ஒன்று	ஒன்றையும்
போயிற்று	மறைந்தது;	அறியேனே	அறிகிறிலேன். (௨)

வ்யா—இரண்டாம்பாட்டு. (மாரியித்யாதி) புறம்பொரு ரக்ஷகரில்லாத வளவில் அணைத்தல்லது நிற்கவொண்ணாதபடியான வடிவு படைத்தவன். மாரிபோலேயும் கடல்போலவுமிருக்கிற வடிவை யுடைத்தானவன். (வளைவணர்க்கிளையவன்) அவ்வடிவழகோபாதியும் பெற்றல்லது நிற்கவொண்ணாதே யிருக்கிறதுகாணும் அவன் முன்பிறக்கப் பின்பிறந்ததுவும். (௧) "𑌸𑌨𑍍𑌦𑍇𑌶𑍈𑌰𑌿𑌤𑍍𑌯𑌾𑌦𑌿 - ஸந்தேசைரித்யாதி". க்ருஷ்ணன் தீம்பாலே புண்பட்ட நெஞ்சை ஆற்றி இருவரையும் சேரவிடுவானிறே. (௨)"𑌹𑌾𑌰𑌾𑌮𑌹𑌾𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣-ஹாராமஹாலக்ஷ்மண" என்னுமாபோலே. (வரையித்யாதி) ஒருப்ரயோஜநத்துக்காகப் போகிலிறே அத்தைக்கொடுபோகலாவது. வரைபோலே யிருக்கிற

அரு.—இரண்டாம்பாட்டு. (மாரியித்யாதி) க்ருஷ்ணனுடைய அரிஷ்டநிரஸநகுணத்திலே- நெஞ்சு பறிகொடுத்த கோபிமார் அவஸ்த்தையைக் கீழ்ப்பாட்டில் அருளிச்செய்து, தோளும் தோள்மாலையுமான அழகிலே நெஞ்சு பறிகொடுத்தவளுடைய அவஸ்த்தையை அடைந்து அத்தைப் பேசுகிறாளென்று ஸங்கதி.

பாட்டுக்கெல்லாம் தொகுத்தபா(𑌭𑌾)வமருளிச்செய்கிறார்(புறம்பித்யாதி). வளைபோலே - சங்குபோலேயிருக்கிற, வணர்க்கு-நம்பி மூத்த பிரானுக்கு என்றாய், அவரையிட்டு விசேஷித்ததுக்குக் கருத்தருளிச் செய்கிறார் (அவ்வடிவித்யாதி). "இளையவன்" என்றத்தால் தோற்றினபவ்யதையைச்சொன்னதுக்குத் தாத்பர்யமருளிச்செய்து, பலதேவரென்னாதே "வளைவணர்" என்றத்தாலே சுத்தஸ்வபாவர். மூத்தவர், என்றத்தாலே தங்கள் நெஞ்சில் மறத்தையாற்றிச்சேரவிட ப்ராப்தரென்னுமிடம் தோற்றுகையாலே, அப்படிச்சேரவிட்டாரோ வென்ன வருளிச்செய்கிறார் (ஸந்தேசைரித்யாதி). பிரிந்த தசையில் க(𑌘)டகரை நினைத்துக் கூப்பிட்டதுண்டோ வென்ன, (ஹாராமேத்யாதி).

---

(௧) வி-பு-௫-௨௪-௨0. (௨) ரா-ஸு-௨௮-௮.

திருமார்விலேஇரண்டருகும் அருவிவிழுந்தாப்போலே இட்டமாலையைப் பெறவேணுமென்னும் ஆசையாலே போனநெஞ்சானது, ஒருகால் மீளுகையன்றிக்கே அங்கே அதிமாத்ரப்ராவண்யத்தையுடைத்தாய்க்கொண்டு கால்தாழ்ந்தது.

(ஓர் துணைகாணேன்) போன நெஞ்சம்மீண்டதில்லை; நாயகனே பொகட்டுப்போனான்; இனி துணையாவாருண்டோ?; நீதான் ஒரூரிலேயன்றேயிருக்கிறது; அவ்வூரிலுள்ளாரோவென்னில், அவர்கள் அபஹ்ருதசித்தராயிருக்கிறார்கள் சிலரல்லர்களே; ஆகையாலே நித்ராகாலங்களிலே உறங்கத்தட்டில்லை. ஆக அலைப்பாரும்ஹிதம்சொல்லுவாருமில்லையாயிற்று. (உலகமும்துயின்றது) அத்தோடு சேர்ந்த லோகங்களுமடைய உறங்கிற்று. (ஒளியவனித்யாதி) ஆஸ்வாஸகரனான ஆதித்யனும்போனான். தனக்கு ஸஞ்சரிக்கைக்கு ஸ்தலமில்லாமைபோனானே. அவன் போனாலும் அவன் ஸஞ்சரிக்கும் ரதஸந்நிதியுண்டாகில்தான் நான்ஜீவியேனோ?. (திசைகளும் மறைந்தன) அவன் ஸந்நிதிகொண்டிறே திக்விபாகம் பண்ணுவது. அவையும்போய் மறைந்தன. (செய்வதொன்றறியேனே) புறம்புள்ளாரொருவருமில்லையாயிற்று அகவாய் குடிபோயிற்று. நாயகனே வந்தணைகிறிலன்; இனி எத்தைச்செய்வது. .... (௨)

மூ.—

ஆயன்மாயமேயன்றி மற்றென்கையில் வளைகளுமிறைநில்லா
பேயினாருயிருண்டிடும் பிள்ளை நம் பெண்ணுயிர்க்கிரங்குமோ
தூயமாமதிக்கதிர்சுடத் துணையில்லை யிணைமுலைவேகின்றதால்
ஆயன்வேயினுக் கழிகின்றதுள்ளமு மஞ்செலென்பாரில்லையே. (௩)

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஆயன்	க்ருஷ்ணனுடைய	வளைகளும்	வளைகளும்
மாயமேஅன்றி	வஞ்சனையொழிய	இறை	க்ஷணகாலமும்
மற்று	வேறான	நில்லா	நிற்கிறதில்லை ;
என்	என்னுடைய	பேயினார்	பூதனையினுடைய
கையில்	கையிலிருக்கும்	உயிர்	ப்ராணனை

“ஓர்” என்றது-ஒரு என்றாய் தாத்பர்யம். (போனவித்யாதி). மேலுக்க தாரிகை (நீ தானித்யாதி). கோபிமார் பலராகையாலே ஒருத்தி தன் தசையைப்புலம்ப மற்றொருத்தி தோழியாய் கேட்கிறாளென்று கருத்து. “தோழி நாமிதற்கென் செய்தும்” என்றிறேயிருக்கிறது. ... ... -)

உண்டிடும்	புஜித்த [ன்	இல்லை	இல்லை;
பிள்ளை	பாலனான க்ருஷ்ண	இணை	சேர்ந்திருக்கிற
நம்	நம்முடைய	முலை	முலைகள்
பெண்	பெண்ணின்	வேகின்றது	தஹிக்கப்படுகிறது
உயிர்க்கு	ப்ராணனுக்கு	ஆல்	கஷ்டம் [கள்;
இரங்குமோ	து:க்கிக்குமோ?	ஆயன்	க்ருஷ்ணனுடைய
தூய	களங்கமில்லாத	வேயினுக்கு	குழலுக்கு [சும்
மா	மஹத்தான	உள்ளமும்	(என்னுடைய) நெஞ்
மதி	சந்த்ரனுடைய	அழிகின்றது	அழியாநின்றது;
கதிர்	கிரணங்கள்	அஞ்சேலென்	அஞ்சேலென்று
சுட	தஹிக்க,	பார்	சொல்லுவர்களும்
துணை	(அத்தை அவிக்க)	இல்லையே	இல்லை. (௩)
	ஸஹாயபூதர்		

வ்யா.—மூன்றாம்பாட்டு. (ஆயனித்யாதி) க்ருஷ்ணன் பிரிகிற போது “பிரியேன் பிரியில் ஆற்றேன்” என்று பிரிந்துபோனான். அங்ஙனன்றிக்கே இவைசடக்கெனப் பிரிந்து கொடுநின்றது. (௧) “శైథిల్యముపయాన్త్యాశుకరేషువలయాన్యపి - ஶைதில்யமுபயாந்த்யாஶு கரேஷு வலயாந்யபி” என்னுமாபோலே. [ஆஶு சைதில்யமுபயாந்தி] கடுகப்பிரிந்து கொடுநிற்கக்கண்டவித்தனை. கைப்பட்டாரடைய விட்டுப்போகிற காலமாகாதே. (இறைநில்லா) இறையும்நில்லா. அவன்போனபின்பு ஒருக்ஷணமும் தங்கிற்றில்லை. (பேயித்யாதி) முதலிலே பூதனைகையிலே அகப்பட்டு நம்மை நலியப் பார்த்தவன் இன்றாகநம்பக்கலிலே இரங்குமோ? ; அடியிலே துடங்கிற்றிலனோ அவன் பெண்பிறந்தாரைநலிய.

அரு.—மூன்றாம்பாட்டு. (ஆயனித்யாதி) கீழ் இரண்டுபாட்டிலும் நெஞ்சிழந்தார்படியைப் பேசினாளாய், குழலோசையிலே அகப்பட்டு வளை இழந்தவள்படியை யடைந்து நோவுபடுகிறாளென்று ஸங்கதி.

“மாயம்” என்றது - பிரியேனென்று பிரிந்து போகையாய், அத்தை அருளிச் செய்கிறார் (க்ருஷ்ணனித்யாதி). வளைகளென்ன வமைந்திருக்க “என் கை” என்று விசேஷித்ததுக்குக் கருத்து (கைப்பட்டாரித்யாதி). பரிவிலேஒருதாத்பர்யமருளிச்செய்து பூதனையையும் பெண்பிறந்தாரிலே ஒருத்தியாக்கி தாத்பர்யாந்தரம் (அடியிலேயித்யாதி). ... ... (௩)

---

(௧) வி-பு-௫-௧௮-௨௧.

(தூயமாமதிக்கதிர்சுட) மறுவற்ற சந்த்ரனுடைய கிரணங்களானவை நெருப்பை எறட்டிச்சுட. (துணையில்லைஇணைமுலை வேகின்றதால்) அவிப்பாரின்றிக்கே ஒழிந்ததே. தான் கண்டபடியே வேவாநின்றதாயிற்று. (ஆயனித்யாதி) இவ்வளவில் வாராதேயிரானென்கிற நெஞ்சையுமழித்துக் கொடுவந்து தோற்றுநின்றதாயிற்று, இடையனூதுகிறகுழல். ப்ராஹ்மணர் ஊதுகிற குழலுக்கு அகப்படாள் காணுமிவள். (அஞ்சலென்பாரில்லையே) (க) “𑌮𑌾𑌶𑍁𑌚𑌃 - மாசுசஃ” என்பாரொருவரையும் காண்கிறதில்லை. .... (ரு)

மூ.—

கயங்கொள்புண்டலைக்களிறுந்துவெந்திறற்கழல்மன்னர்பெரும்போரில்
மயங்கவெண்சங்கம் வாய்வைத்த மைந்தனும்வந்திலன் மறிகடல்நீர்
தயங்குவெண்டிரைத்திவலைநுண்பனியெனும்தழல்முகந்திளமுலைமேல்
இயங்குமாருதம் விலங்கிலென்னுவியை யெனக்கெனப்பெறலாமே.

பதம்.	உரை.
கயங்கொள்	வ்ருணஜலம் மாருமலிருக்கிற
புண்	வ்ருணத்தை
தலை	தலையிலேயுடைய
களிறு	ஆனைகளை
உந்து	நடத்தவல்லராய்,
வெம்	க்ரூரமான
திறல்	பலத்தையுடையராய்,
கழல்	வீரக்கழலையுடைய
மன்னர்	அரசர்களின்
பெரும்	மஹத்தான
போரில்	யுத்தத்தில்
மயங்க	அறிவு கலங்கும்படி
வெண்	வெளுத்த
சங்கம்	ஶ்ரீபாஞ்சஜந்யத்தை
வாய்வைத்த	வாயில்வைத்து (ஊதின)
மைந்தனும்	மிடுக்குடையக்ருஷ்ணனும்
வந்திலன்	வருகிறிலன்;
மறி	திரைக்கிளர்த்தியையுடைய

பதம்.	உரை.
கடல்	ஸமுத்ரத்தின்
நீர்	ஜலத்தில்
தயங்கும்	அசைந்து வாராநின்ற
வெண்	வெண்மையான
திரை	அலைகளாலுண்டான
திவலை	ஜலகணங்களாகிற
நுண்	ஸூக்ஷ்மமான
பனியெனும்	பனியென்றுசொல்லப்படுகிற
தழல்	நெருப்பை
முகந்து	க்ரஹித்துக்கொண்டு
இள	இளமையான
முலைமேல்	முலையில்
இயங்கும்	வீசாநின்ற
மாருதம்	தென்றலானது
விலங்கில்	மீளில்
என்	என்னுடைய
ஆவியை	ப்ராணனை
எனக்கென	எனக்குரித்தாக
பெறலாம்	அடையக்கூடும். (ச)

(க) கீ-கஅ-சுசு.

வ்யா.— நாலாம்பாட்டு. (கயங்கொளித்யாதி) எப்போதும் மொக்க மதித்திருக்கையாலே துறட்டியாலே குத்துண்டு, அருக்கயமான புண்ணைத்தலையிலே யுடைத்தாயிருக்கிற ஆனைகளை மேற்கொண்டு தங்கள் கருத்திலே நடத்தவல்லாராய், பெருமிடுக்கராய், வீரக்கழலையுமுடைய ராஜாக்கள் யுத்தத்தில் மயங்கும்படியாக (௧) "𑌸 𑌘𑍋𑌷𑍋 𑌧𑌾𑌰𑍍𑌤𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌾𑌣𑌾𑌂- ஸகோஷோதார்த்தராஷ்ட்ராணாம்" என்கிறபடியே ஸ்ரீபாஞ்சஜந்யத்தைத் திருப்பவளத்திலே வைத்தூதி ப்ரதிபக்ஷத்தை அழியச்செய்த மிடுக்கனும் வருகிறிலன்; ரக்ஷகனானவன் இவ்வளவில்வந்துஉதவிற்றிலன்; பாத(𑌬𑌾𑌧)கபதார்த்தம்தானே இனிக்ருபைபண்ணிமீளில் நான் எனக்கு உரியேனாயிருக்கலாம்;

(மறிகடலித்யாதி) கிளர்த்தியை யுடைத்தாயிருந்துள்ள கடலில் நீரிலே அசைந்து வாராநின்றுள்ள வெளுத்த திரையாலுண்டான திவலையாகிற நுண்ணியபனியென்று சொல்லப்படுகிற நெருப்பை முகந்து விரஹஸஹமல்லாத முலையிலே எறட்டிக்கொண்டுஸஞ்சரியாநின்றுள்ள தென்றலானது. (விலங்கில்) ஓரளவில் ஸ்த்ரீவதமன்றோ இதாமோவென்று மீளில். பாத(𑌬𑌾𑌧)கரே ரக்ஷராகவேண்டும் தசைகாணும். "ராவணா நீ என்னைப் பெருமாளோடேசேர்க்கவல்லையே" என்றாளிறே பிராட்டி. நான் எனக்கு உரியேனாயிருக்கலாம்.

மூ.—

ஏழுமாமரம் துளைபடச் சிலைவளைத்திலங்கையை மலங்குவித்த
ஆழியான்நமக்கருளிய வருளொடும் பகலெல்லைகழிகின்றதால்
தோழிநாமிதற்கென்செய்தும் துணையில்லை சுடர்படுமுதுநீரில்
ஆழ வாழ்கின்றவாவியை யடுவதோரந்திவந்தடைகின்றதே. (௫)

அரு—நாலாம்பாட்டு. (கயங்கொளித்யாதி) கீழ்ப்பாட்டில் குழலோசைக்கு வளைஇழந்தவள் படியை அருளிச்செய்தாராய், இதில் சங்கொலியில் ஈடுபட்டு நோவுபடுமவள் படியை அடைந்தருளிச்செய்கிறாரென்று ஸங்கதி.

(துறட்டி) அங்குசம். (அருக்கயமான) என்றது-கயம்போலே சீயும், ரக்தமும் மாறாதிருக்கிற வென்கை. மேலுக்கவதாரிகை (ரக்ஷகனானவித்யாதி).

முன்அலை பின்அலையை மறிக்க அது கிளம்புகையாலே (கிளர்த்தியை) என்றது. ... ... (௪)

---

(௧) கீதை-௧-௧௯.

பதம்.	உரை.
ஏழு	ஏழான
மா	பெரிய
மரம்	ஸாலவ்ருக்ஷங்கள்
துளைபட	துளைப்படும்படி
சிலை	தநுஸ்ஸை
வளைத்த	வளைத்தவனாய்,
இலங்கையை	லங்கையை
மலங்குவித்த	கலங்கப்பண்ணின
ஆழியான்	கணையாழியையுடைய சக்ரவர்த்தித்திருமகன்
நமக்கு	நமக்கு
அருளிய	க்ருபைபண்ணின
அருளொடும்	க்ருபையோடுகூட
பகல்எல்லை	மத்யாந்ஹத்தின் முடிவும்
கழிகின்றது	போகாநின்றது;
ஆல்	கஷ்டம்,
தோழி	ஸகியே
நாம்	நாம்
இதற்கு	இதுக்கு
என்செய்தும்	என்னசெய்வோம்,
துணை	உதவிசெய்பவர்
இல்லை	இல்லை;
சுடர்	ஸூர்யனும்
படும்	தான் தோற்றின
முதுநீரில்	ஸமுத்ரத்தில்
ஆழ	மூழ்கி (அஸ்தமிக்க)
வாழ்கின்ற	ஜீவநத்தில் நசையையுடைய
ஆவியை	ப்ராணனை
அடுவது	முடிக்கப்பண்ணுவதான
ஓர்	அத்விதீயமான
அந்தி	ஸந்த்யையானது
வந்து	வந்து
அடைகின்றதே	தோன்றாநின்றது. (௫)

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (ஏழுமாமரம் துளைபட) பிறரை விஶ்வஸிப்பித்துக் கார்யம் செய்யுமவன்கிடீர்; விஶ்வஸித்து ஆசையோடே யிருக்கிற எனக்கு உதவாதொழிகிறான் (இலங்கையித்யாதி) இலங்கையை ஒருவர்கூறை எழுவருடுக்கும்படிபண்ணின. (ஆழியான்) கைகேயியுடைய வரத்தில் அகப்படாதது கையிலே அறுகாழியொன்றுமேபோலே. (நமக்கருளிய) நமக்கு அவன்பண்ணின அருளோடேகூட அதினுடையப(ஃ)லரூபமானபகலும்போய் நின்றதாயிற்று. அருள்போகவே பகலும் போமிறே.

அநு.—அஞ்சாம்பாட்டு. (எழித்யாதி) கீழ்ப்பாட்டில் பூமிப்பிராட்டியின் பாரத்தை இறக்கவேண்டி வெண்சங்கு ஊதினசெயலில் ஈடுபட்டு அவள்படியாகப் பேசினார்; பெரியபிராட்டிக்கு ஆஶ்வாஸகரமான திருவாழிமோதிரத்தில் துவக்குண்டு அவள்படியாகப் பேசுகிறாளென்று ஸங்கதி.

கோபிமார்க்கும் க்ருஷ்ண ஸம்ஶ்லேஷத்தால் அவனுடையபலபடிகளும்

(தோழிகாமிதற்கென்செய்தும்) இனிஇரண்டப(ஃ)லைகளிருந்து நோக்கிக்கொள்ளவோ. (துணையில்லை) அவனிருந்தானாகில் அப்பொழுதைப் பிழைக்கவுமாமிறே. (சுடர்படுமுது நீரித்யாதி) ஆதித்யனானவன் தான் தோற்றின கடலிலேபுக்கு அஸ்தமிக்க, ஆப்வாஸகரான அவனைஇழந்து, பின்னையும் ஜீவிப்பதாக நசைபண்ணியிருக்கிற ப்ராணன்களை முடிப்பதாக அத்விதீயமாயிருப்பதொரு ஸந்த்யைவந்து தோன்றாநின்றது. .... (௫)

மூ.—

முரியும்வெண்டிரை முதுகயம்தீப்பட முழங்கழலெரியம்பின்
வரிகொள்வெஞ்சிலை வளைவித்தமைந்தனும் வந்திலனென்செய்கேன்
எரியும்வெங்கதிர் துயின்றது பாவியேனிணை நெடுங்கண் துயிலா
கரியநாழிகையூழியில்பெரியன கழியுமாறறியேனே. (௬)

பதம்.	உரை.	பதம்.	உரை.
முரியும்	கீர்த்தியையுடைய	என்செய்கேன்	என்னசெய்வேன்,
வெண்	வெளுத்த	எரியும்	ப்ரகாசியாநின்ற
திரை	அலைகளையுடைய	வெங்கதிர்	வெப்பத்தையுடைய ஸூர்யன்
முதுகயம்	பழமையான ஸமுத்ரமானது	துயின்றது	அஸ்தமித்தான்;
தீப்பட	நெருப்புக்கொளுத்தி எரியும்படி,	பாவியேன்	பாவியானஎன்னுடைய
முழங்கு	த்வநியாநின்றுள்ள	இணை	பரஸ்பர ஸத்ருஶமான
அழல்	நெருப்பை	நெடும்	விசாலமான
எரி	எரியாநின்றுள்ள	கண்	கண்கள்
அம்பின்	அம்பையுடைய	துயிலா	உறங்கிற்றில்லை.
வரி கொள்	அழகையுடையதான	ஊழியில்	கல்பங்களைக்காட்டிலும்
வெம்சிலை	வெவ்விய தநுஸ்ஸை	பெரியன	பெரிதான
வளைவித்த	வளைத்த	கரிய	கறுத்த [யானது
மைந்தனும்	மிடுக்குடைய சக்ரவர்த்தித் திருமகனும்	நாழிகை	(ராத்ரியின்) நாழிகை
வந்திலன்	வருகிறிலன்;	கழியுமாறு	ஒழியும்படியை
		அறியேனே	காண்கிறிலேன். (௬)

பார்த்திருக்கை யுண்டாகையாலே ராமாவதாராபதாநத்திலும் ஈடுபடலாமென்று திருவுள்ளம். பகலையருளின ப(ஃ)லமென்று பாதகமல்லாமையாலே. (அப்பொழுதை) என்றது - பாத(ஃத)கமான ஸந்த்யர்காலத்தை. ... (௫)

வ்யா.—ஆறாம்பாட்டு. (முரியுமித்யாதி) கிளர்ந்து ஸஞ்சரியாநின்றுள்ள வெளுத்த நீரையுடைத்தான முதுகயமுண்டு - கடல்; அது. (தீப்பட) நெருப்புக்கொளுத்தி எரிய. விக்ரமசோழதேவர் "இதென்ன வைக்கோல்போர்தான்" (முழங்கு) த்வநியுண்டாம்படி நெருப்பெரியாநின்றுள்ள. (க)"𑌦𑍀𑌪𑍍𑌤𑌪𑌾𑌵𑌕𑌸𑌙𑍍𑌕𑌾𑌶𑍈𑌃- தீப்த பாவக ஸங்காசைஃ" என்கிறபடியே நெருப்பைத்தூவாநின்றுள்ள அம்பையுடைத்தாய் தர்ஶநீயமாயிருக்கிற வில்லை வளைத்த மிடுக்கன்வருகிறிலன். (என்செய்கேன்) இனிஓரபலையிருந்து நோக்கிக் கொள்ளவோ?.

(எரியும் வெங்கதிர் துயின்றது) தன்னுடைய ப்ரகாசத்தாலே பதார்த்த தர்ஶநத்தைப் பண்ணுவித்து ஆஶ்வாஸத்தைப் பண்ணக்கடவனான ஆதித்யனும்போய் அஸ்தமித்தான்; ஈஶ்வரபாரதந்த்ர்யத்தையேமுடிய அநுஷ்டித்து ஓரளவில் தோற்றாதே நித்ரையிலே அந்யபரனானான். (பாவியேனிணை நெடுங்கண் துயிலா) லோகத்ருஷ்டியான தான் கண்ணுறங்கினால் என்கண்ணுறங்க ஆகாதோ? (கரிய) தனக்கு அநபிமதமான ராத்ரி கறுத்திருக்கையாலே ததவயவமான நாழிகையும் கறுத்திருக்குமோ வென்கிறாள்; அன்றிக்கே கொடிதான நாழிகை யென்னவுமாம்; அன்றிக்கே அந்த ஸந்த்யாகாலமானது. (கரியநாழிகை) அந்திகாலம். (கழியுமாறறியேன்) இது ஒருகால் கால்வாங்கிற்றாம்படி அறிகிறிலேன். பண்டு சிலகல்பங்கள் கழியும்படி கேட்டிருந்தோம். இந்நாழிகை கால்வாங்கவும் காண்கிறிலோம். .... (சு)

அரு.—ஆறாம்பாட்டு. (முரியுமித்யாதி) கையும் அறுகாழியுமான வடிவில் ஈடுபட்டவள் படியாகக் கீழருளிச்செய்து, கையும் வில்லுமாயிருந்து கடலைக் கலக்கினவன் வீரத்திலே அகப்பட்டவள்படியை யடைந்து அருளிச்செய்கிறாளொன்று ஸங்கதி.

(போர்தான்) என்றவநந்தரம் "என்றார்" என்றுசேஷம்.

(லோகத்ருஷ்டியான) என்றது-ஆதித்யனை. ஸந்த்யாகாலமானபடி யெங்ஙனேயென்ன நியாமகம் (கரியவித்யாதி). கவிகள் சொல்லுவர்களென்று கருத்து. ... ... (சு)

அரு.—ஏழாம்பாட்டு. (கலங்கவித்யாதி). பிராட்டிக்காகக் கடலைக் கலக்கின வீரத்தையநுஸந்தித்தவள்படியே யன்றிக்கே, பிராட்டிக்காகக் கடலைக்

(க) ரா-யு-கரு-உஉ.

மூ.—

கலங்கமாக்கடல் கடைந்தடைத்திலங்கையர் கோனதுவரையாகம்
மலங்கவெஞ்சமத்தடுசரம்துரந்த வெம்மடிகளும் வாரானால்
இலங்குவெங்கதிரிளமதி யதனோடும் விடைமணியடுமாயன்
விலங்கல்வேயின் தோசையுமாயினி விளைவதொன்றறியேனே. (௭)

பதம்.	உரை.
மா	பெரிதான
கடல்	ஸமுத்ரமானது
கலங்க	கலங்கும்படியாக, (அதுதன்னை)
கடைந்து	மத (थ) னம் செய்து
அடைத்து	அணைகட்டி
இலங்கையர்	இலங்கையிலிருக்கும் ராக்ஷஸர்க்கு[டைய
கோனது	ராஜாவான ராவணனு
வரை	மலைபோல்த்ருடமான
ஆகம்	மார்வானது
மலங்க	துடிக்கும்படி
வெம்சமத்து	யுத்தத்திலே
அடுசரம்	கொலையம்பை
துரந்த	நடத்தின [ம்
எம்அடிகளும்	ஸர்வஸ்வாமியானவனு
வாரான்	வருகிறிலன்;
ஆல்	கஷ்டம்;
இலங்கு	விளங்காநின்றதாய்
வெம்	தபியாநின்ற [ளுன

பதம்.	உரை.
கதிர்	கிரணங்களையுடைய
இளமதியதனோடும்	பால சந்த்ரனோடே
விடை	வ்ருஷபத்தினுடைய
மணி	(கழுத்தில் கட்டின) மணியின் ஓசையும்
அடும்	(என்னை) முடியாநின்றது;
ஆயன்	இடையனான கண்ணனாகிற
விலங்கல்	(வேத) பர்வதத்திலுண்டான
வேயினது	மூங்கிலால் செய்யப்பட்ட குழலின்
ஓசையும்	த்வ (ध्व) நியும் உண்டானதாய்
ஆய்	(என்னை பாதிக்கிறது)
இனி	இனிமேல்
விளைவது	நேரிடும்படியான
ஒன்று	ஒன்றையும்
அறியேனே	அறிகிறிலேன். (௭)

வ்யா.—ஏழாம்பாட்டு. (கலங்கவித்யாதி) ஒருவராலும் பரிச்சேதிக்க வரிதானகடலானது கீழ்மண்கொண்டு மேல்மண்ணெறியும்படி பிராட்டிக்காகக்கடைந்து, அவள் தனக்காகவடைத்து, லங்கைக்கு நிர்வாஹகனானவனுடைய வரைபோலே திண்ணிதான மார்

கடைந்தசெயலிலும், அடைத்தசெயலிலும்துவக்குண்டாளொருத்திபடியால் அருளிச்செய்கிறாரென்றுஸங்கதி.

“மாக்கடல், கலங்க” என்றந்வயித்தருளுகிறார் (ஒருவராலித்யாதி).

விலே அம்புதைத்துத் துடிக்கும்படி யுத்தத்திலே கொலையம்பை நடத்தின ஸர்வஸ்வாமியானவனும் வருகிறிலன்.

(இலங்கித்யாதி) விளங்காநின்றுகொண்டு சுடுகிற கிரணங்களை யுடைய பாலசந்த்ரனோடே வ்ருஷபத்தினுடைய கழுத்தின் மணி ஓசையும் முடியாநின்றது. இவைதான்போருமிறே பாத(बाध)கத்[illegible]க்கு. அதுக்குமேலே(ஆயனித்யாதி)இடையனுடையகையில்அபிஜாதமாயிருந்துள்ள குழலோசையுமாய் என்னை முடியாநின்றது. (இனி விளைவதொன்றறியேனே) நான்முடியவே அவனைக்கிடையாது; அவன்போகவே அவனாலே நோக்கப்படும் விபூதித்வயமும் இல்லையாம்; ஆனபின்பு இது எவ்வளவாய்த் தலைக்கட்டுமென்றறியேன்.

மூ.—

முழுதிவ்வையகம் முறைகெடமறைதலும் முனிவனும்முனிவெய்த
மழுவினால்மன்னராருயிர்வவ்விய மைந்தனும் வாரானால்
ஒழுகுநுண்பனிக்கொடுங்கியபேடையை யடங்க வஞ்சிறைகோலித்
தழுவுநள்ளிருள்தனிமையில் கடியதோர் கொடுவினையறியேனே.

பதம்.	உரை.	பதம்.	உரை.
இவ்வையகம்	இந்தலோகமானது	ஒழுகு	பெருகாநின்றுள்ள
முழுது	அடங்கலும்	நுண்	அஸஹ்யமான
முறை	மர்யாதையானது	பனிக்கு	பனிக்காக
கெட	குலையும்படியாக	ஒடுங்கிய	ஒடுங்கிக் கொண்டிருக்கிற
மறைதலும்	மறைந்துபோனதாலும்		
முனிவனும்	ஜமதக்நிபகவானும்	பேடையை	பெண்பறவையை
முனிவெய்த	சீறினதாலும் (அது ஹேதுவாக)	அடங்க	அடங்கும்படியாக (பக்ஷிகளானவை.)
மழுவினால்	மழுவாலே	அம்	அழகிதான
மன்னர்	க்ஷத்ரியர்களுடைய	சிறை	பக்ஷங்களினுடைய
ஆருயிர்	அருமையான ப்ராணன்களை	கோலி	கீழ்பாகத்தில்
		தழுவும்	அணைக்கும்படியான
வவ்விய	போக்கினவரான	நள்ளிருள்	நல்இருள்நடுவில்
மைந்தனும்	ஸ்ரீபரசுராமாழ்வானும்	தனிமையில்	தனியாயிருப்பதைக் காட்டிலும்
வாரான்	வருகிறிலன்;		

“விலங்கல்” வேதபர்வதத்திலுண்டான. “வேய்” என்றத்தால் பலிதம் (அபிஜாதமாயிருந்துள்ள) என்றது. … … … … … (௭)

கடியது	க்ரூரமாயிருக்கிற	கொடுவினை	கொடியபாபத்தையும்
ஓர்	ஒருவிதமான	அறியேனே	அறிகிறிலேன். (அ)

வ்யா.— எட்டாம்பாட்டு. (முழுதித்யாதி). ப்ராஹ்மணரை முன்னாகக்கொண்டு நடக்கக் கடவதான க்ஷத்ரிய மர்யாதையானது குலைய, அத்தாலே ஜமதக்நிபகவான் சீற; அதுஹேதுவாக இதுக்கு நிமித்தபூதரான க்ஷத்ரியரை இருபத்தொருபடிகால் மழுவாலே துணித்துப்பொகட்ட மிடுக்கையுடைய ஸ்ரீபரசுராமாழ்வானும் வருகிறிலன். க்ஷத்ரியமர்யாதையைக் குலைக்கையாலும், பிதாவைப் பரிபவிக்கையாலும் ராஜவம்சத்தைத் திரட்டி வைத்து அறுத்துப் பொகட்டானாயிற்று.

(ஒழுகித்யாதி) கூடுகளினுள்ளே வந்து பாயாநின்றுள்ள நுண்ணிய பனிக்கு ஒடுங்குகிறபேடையை அடங்கும்படியாக சிறகைவிரித்துபக்ஷிகள் அணைக்கிற காலத்திலே பிரிந்துதனியிருக்கிறஇருப்பிற்காட்டிலும். (கொடியதோர் கடுவினையறியேனே) (க) “𑌅𑌵𑌶𑍍𑌯𑌮𑌨𑍁𑌭𑍋𑌕𑍍𑌤𑌵𑍍𑌯𑌮𑍍- அவஶ்யமநுபோக்தவ்யம்” என்கிறபடியே அநுபவித்தல்லது நசியாதபடி க்ரூரமாயிருப்பதொரு பாபமுண்டாக வறிகிறிலேன். இன்னமிதிற் காட்டில் நரகத்தில் போய் அநுபவிப்பதொரு அநுபவந்தானுண்டாக வறிகிறிலேன். .... (சு)

மூ.—

கனம்செய்மாமதிள் கணபுரத்தவனொடும் கனவினிலவன்தந்த
மனஞ்செயின்பம்வந்துள்புக வெள்கியென்வளை நெகவிருந்தேனை
சினஞ்செய்மால்விடைச் செறுமணியோசையென் சிந்தையைச்சிந்து
அனந்தலன்றிலினரிகுரல் பாவியேனாவியை யடுகின்றதே. [விக்கும்

அரு.—எட்டாம்பாட்டு. (முழுதித்யாதி). பிராட்டிக்கு அரியன செய்த செயலிலே* பண்டைநாள்படியே கீழ்அருளிச்செய்து, லோகத்தில் மர்யாதா பங்கம் பிறவாமல் அத்தை ஸ்தாபிக்கப் பிறந்த மழுவேந்தியன் மிடுக்கில் ஈடுபட்டு, அவன்படியை யருளிச்செய்கிறாரென்று சங்கதி.

“இவ்வையகமுழுதும் முறைகெட மறைதலாலும், அத்தால் முனிவர் முனிவெய்தத்தாலும் மழுவினாலித்யாதி” என்று விவக்ஷித்து அருளுகிறார் (ப்ராஹ்மணரையித்யாதி). “இதிலும்க்ரூரமான நரகமில்லையோ” என்ன அருளிச்செய்கிறார் (இன்னமித்யாதி). ... ... (அ)

(க)

பதம்.	உரை.	பதம்.	உரை.
கனம்	க (घ) நமாக	இருந்தேனை	இருந்த வென்னை
செய்	செய்யப்பட்டதாய்	செறு	பாதி (बाध) யாநின்ற
மா	பெரிதான	சினம்செய்	கோபத்தையுடைய தாய் [யதான
மதிள்	மதிளையுடையதான	மால்	பெரியவடிவை யுடை
கணபுரத்தவனொடும்	திருக்கண்ணபுரத்தி லெழுந்தருளி இருக்குமவனோடே	விடை	வ்ருஷபத்தினுடைய
		மணி	மணியினுடைய
கனவினில்	ஸ்வப்நகல்பமாம்படி	ஓசை	த்வ (ध्व) னியானது
அவன்	அந்த எம்பெருமான்	என்	என்னுடைய
தந்த	கொடுத்த	சிந்தையை	மனதை [து
மனம்செய்	மனதிலுண்டான	சிந்துவிக்கும்	ஶிதிலமாக்கா நின்ற;
இன்பம்	ஸுகமானது	அனந்தல்	அனந்தலையுடைய
உள்	உள்ளே	அன்றிலின்	அன்றிலினுடைய
வந்து	வந்து [லே	அரி	பாதகமான தழுதழுத்
புக	ப்ரவேசிக்க (அத்தா	குரல்	பேச்சானது [த
வெள்கி	ஈடுபட்டு	பாவியேன்	பாபத்தைப்பண்ணின என்னுடைய
என்	என்னுடைய		
வளை	கைவளையானது	ஆவியை	ப்ராணனை
நெக	கழலும்படி	அடுகின்றதே	ஹிம்ஸியா நின்றது.

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (கனஞ்செயித்யாதி) திண்ணியதாய் அரணாகப்போரும்படியான மதிளையுடைய திருக்கண்ணபுரத்திலே எழுந்தருளியிருக்கிறவனோடே ஸ்வப்நகல்பமாம்படி அவன் தந்த. (மனஞ்செயின்பம்) மாநஸமாத்ரமாய், பாஹ்ய ஸம்ஶ்லேஷமில்லாமையாலே அது உள்ளேவந்துபுகுர அத்தாலேஈடுபட்டுகையில்

அரு.—ஒன்பதாம்பாட்டு. (கனஞ்செயித்யாதி). கோபிமார் தசைகளையடைந்து நோவுபட்டார் கீழெல்லாம். இதில் *சிலையிலங்கு பொன்னாழியில் பிராட்டியாயே நோவுபடுகிறாரென்று ஸங்கதி.

“கனமாகச்செய்யட்டமதிள்” என்றாய் தாத்பர்யமருளுகிறார் (திண்ணியவித்யாதி). “கனவினில்” என்றது - லக்ஷணயாஸ்வப்நஸத்ருஶமான மாநஸாநுபவத்தைச் சொல்லுகிறதென்று திருவுள்ளம்பற்றியருளுகிறார்(ஸ்வப்நேத்யாதி). “வெள்கி” என்றதின் அர்த்தம் (ஈடுபட்டு) என்றது. “செறு” என்ற

வளைகழலும்படியாக இருந்த வென்னை. (சினமித்யாதி) சீற்றத்தையும் பெரியவடிவையுமுடைத்தான வ்ருஷபத்தினுடைய கழுத்திலேயுண்டாய் கண்ணுக்கு ஆபாஸமாய் கார்யத்தில் முடித்து விடவற்றான மணியினுடைய த்வநியானது என்னுடைய ஹ்ருதயத்தை சிதிலமாக்காநின்றது. (அனந்தலித்யாதி) அனந்தலையுடைத்தான அன்றிலினுடைய தழுதழுத்தபேச்சானது. (பாவியேனுவியை படுகின்றதே) கண்டதுக்கெல்லாம் பாத்ய (𑌬𑌾𑌧𑍍𑌯) கோடியிலே அந்வயிக்கும்படி மஹாபாபத்தைப்பண்ணின என்னுடைய தர்மிலோபத்தைப் பண்ணுகையிலே ஒருப்படாநின்றது. .... (௯)

மூ.—

வார்கொள்மென்முலைமடந்தையர் தடங்கடல்வண்ணனைத்தாள்நயந்து
ஆர்வத்தாலவர் புலம்பியபுலம்பலை யறிந்துமுன்னுரைசெய்த
கார்கொள்பூம்பொழில் மங்கையர்காவலன்கலிகன்றியொலிவல்லார்
ஏர்கொள்வைகுந்தமாநகர்புக்கிமையவரோடும் கூடுவரே. (௧௦)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

◆

பதம்.	உரை.	பதம்.	உரை.
வார்கொள்	கச்சையை யுடைய	தாளை	திருவடிகளை
மென்	ம்ருதுவான [தாய்	நயந்து	ஆசைப்பட்டு
முலை	ஸ்தநங்களையுடைய	ஆர்வத்தால்	அபிநிவேசத்தாலே
மடந்தையர்	பெண்கள் [ரான	அவர்	அவர்கள்
தடம்	விசாலமான	புலம்பிய	கூப்பிட்ட
கடல்	ஸமுத்ரம்போன்ற	புலம்பலை	கூப்பீடை [ணி
வண்ணன்	திருமேனி நிறத்தை	அறிந்து	அப்படியே புத்திபண்
	யுடையனான எம்	முன்	முதலிலே
	பெருமானுடைய	உரைசெய்த	கூப்பிட்ட,

தின் தாத்பர்யம் (கண்ணுக்கித்யாதி). (கார்யத்தில்) பாதி (𑌬𑌾𑌧𑌿) க்கையில். "அரி" சத்ருவான வென்னுதல்; சப்தார்த்தமாய்பலிதம் (தழுதழுத்த) என்றது. நாகைத்துடர்ந்துபோகிற விடையின் மணிக்குரலும், போக (𑌭𑍋𑌗) மத்த்யத்தில் போக (𑌭𑍋𑌗) தசையில் பிரிவைஅதிசங்கை பண்ணிக்கத[illegible] அன்றில் குரலும் தன்நாயகன் வரவுக்கும் பிரியமாட்டாமல் கதறுகைக்கும் ஸ்மாரகமாய் பாதி (𑌬𑌾𑌧𑌿) க்கு மென்று கருத்து. ... ... (௯)

கார்கொள்	மேகஸஞ்சாரத்தையுடையதாய்
பூம்பொழில்	புஷ்பச்சோலைகளையுடையதான
மங்கையர்	திருமங்கையிலுள்ளார்க்கு
காவலன்	ரக்ஷகராயிருக்கிற
கலிகன்றி	ஆழ்வார்
ஒலி	ஒலியையுடைத்தாம்படி (அருளிச்செய்த இத்திருமொழியை)
வல்லார்	அப்ய(ஸ)ஸிக்க வல்லவர்கள்
ஏர்கொள்	அழகையுடைய
வைகுந்தமாநகர்	நித்யவிபூ(பூ)தியில்
புக்கு	ப்ரவேசித்து
இமையவரோடும்	நித்யஸூரிகளோடே
கூடுவரே	டி (புநராவ்ருத்தியில்லாத)பேற்றைப்பெறுவர்கள்.

வ்யா.—பத்தாம்பாட்டு. (வார்கொளித்யாதி) ப்ராப்தயௌவனைகளான திருவாய்ப்பாடியில் பெண்கள் க்ருஷ்ணன் திருவடிகளை ஆசைப்பட்டு கிட்டாமையாலே அபிநிவேசம் கரைபுரண்டுகூப்பிட்ட கூப்பீடைபுத்திபண்ணி அவ்வவஸ்தை பிறந்து கூப்பிட்ட. (கார்கொளித்யாதி) நிரந்தரம்மேகஸஞ்சாரத்தையுடைத்தானபரந்த பொழிலையுடைய திருமங்கையிலுள்ளார்க்கு ரக்ஷகராயுள்ள ஆழ்வார் ஒலியையடைத்தாம்படி அருளிச்செய்த இத்திருமொழியைஅப்ப்ய ஸிக்கவல்லார். (ஏர்கொளித்யாதி) பிரிவாற்றாமை கூப்பிடுவது தவிர்ந்து நித்யவிபூதியில் நித்யஸூரிகளோடேகூடி (௧) "ஹாவு ஹாவு ஹாவு- அஹமந்நமஹமந்நம்" என்கிறபடியே ஹர்ஷத்துக்குப் போக்குவிட்டுக் கூப்பிட்டுப் பின்னை ஒருகாலும் புநராவ்ருத்தியில்லாதபேற்றைப் பெறுவர். ....(௧௦)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

பெரியதிருமொழி

எட்டாம்பத்து அஞ்சாந்திருமொழி முற்றிற்று.

அரு.—பத்தாம்பாட்டு. (வார்கொளித்யாதி). "நயந்து" என்றதினர்த்தம் (ஆசைப்பட்டு) என்றது. ... ... (௧௦)

ஜீயர் திருவடிகளே சரணம்.

---

(௧) தை-ப்ருகு-௧௦-௬.

பெரியதிருமொழி

எட்டாம்பத்து ஆறுந்திருமொழி

தொண்டீருய்யும் ப்ரவேசம்.

அவ.—ஆதித்யனும் வந்து உதிக்கிறிலன்; நாழிகையும் கற்பத்திற் காட்டில் நெடிதாய்ச் செல்லாநின்றது; அநுகூலபதார்த்தங்களும் பாதகமாகாநின்றன; ஒருதுணை காண்கிறிலேன்; ஸத்தையுங்கூட அழியுமளவாகாநின்றது; இது எவ்வளவாய்த்தலைக்கட்டுமோ? அறிகிறிலேனென்றார் கீழ்த்திருமொழியிலே; ஸம்ஸாரஸ்வபாவத்தாலே இவைதான் ஒருபடிப்பட்டு நில்லாவிறே. ஆகையாலேஆதித்யனும் ஒருகால்வந்து உதிக்கக்கூடுமிறே. இவைதான் அகஞ்சுரிப்பட்டவாறே சொன்னவார்த்தையும் செவிப்படும்; அவன் வந்திலனென்று நீர்நம்மைச் சொன்னவிடம் தப்பச்சொன்னீர்; நாம்திருக்கண்ணபுரத்திலேவந்து நிற்கிறது ஏதுக்காக; ஆஸ்ரிதார்த்தமாகவன்றோ இங்குவந்து நிற்கிறது; நமக்காகவென்று நீர் அறிந்தீராகில் நமக்கொருகுறைகளுமில்லை; நினைத்தவன்றே எல்லாம் செய்கைக்கு ஒருதட்டுமில்லையென்றிருந்தீராகில், இனி அவ்வருகுள்ளவையுமெல்லாம் தன்னடையே வருகிறதென்று ஆறியிருக்க வமையாதோவென்று அவன் ஸமாதானம்பண்ண, ஸமாஹிதராய் ஆழ்வார்தம் இடையாட்டத்தில் தாம்கைவாங்கியிராநின்றார்; அவனோவந்து உதவுகிறிலன்; இதுஎவ்வளவாய்த் தலைக்கட்டுகிறதோவென்று ஒரு நீர்ச்சாவியாய்க்கிடக்கிற அநுகூலவர்க்கத்தைப்பார்த்து, நீங்கள் இங்ஙன்நோவுபடவேண்டா; நமக்குஉஜ்ஜீவிக்கைக்குஒருவிரகுண்டென்ன; அதாகிறது ஸர்வேஸ்வரன் நம்முடைய ரக்ஷணத்திலே உத்

அரு.—தொண்டீர்ப்ரவேசம். கீழே "பாவியேனாவியை யடுகின்றதே" என்றுநிரதிசய க்லேசத்தை யடைந்தவர், இத்திருமொழியில் "உய்யும் வகை கண்டேன்" என்று களிக்கைக்கு ஸங்கதியேதென்ன வருளிச்செய்கிறார் (ஆதித்யனுமித்யாதி). (இவைதான்)என்றது-ஆதித்யாதிகள் தானென்றபடி. (இவைதானகஞ்சுரிப்பட்டவாறே) என்றது - இவற்றாலுண்டான ஆற்றாமைகள் தான் ஸங்குசிதமானவாறே யென்கை. (சொன்னவார்த்தை) கண்ணபுரத்தான் சொல்லும்வார்த்தை யென்றபடி. (ஸமாஹிதராய்) என்றவநந்தரம் பரோபதேசம் பண்ணுகிறாரென்று ஸங்கதிகூட்டுவது. பரோபதேசப்ரகாரத்தை யருளிச் செய்கிறார் (ஆழ்வாரித்யாதி). ... ... *

யுக்தனுய்க்கொண்டு திருக்கண்ணபுரத்திலே ஸந்நிஹிதனுனன் ; நா மும் அவனை ஆஸ்ரயித்து உஜ்ஜீவிப்போம்; போருங்கோளென்கிறுர்.

மூ.—

தொண்டீருய்யும் வகைகண்டேன் துளங்காவரக்கர் துளங்கமுன்
திண்தோள்நிமிரச் சிலைவளையச் சிறிதேமுனிந்ததிருமார்பன்
வண்டார்கூந்தல் மலர்மங்கை வடிக்கண் மடந்தைமாநோக்கம்
கண்டான்கண்டுகொண்டுகந்த கண்ணபுரம் நாம்தொழுதுமே. (க)

பநம்.	உரை.	பதம்.	உரை.
தொண்டீர்	பகவத் கைங்கர்ய பரர் களே! (நான்)	ஆர்	நிறைந்துள்ள [ளான
		கூந்தல்	மயிர்முடியை யுடைய
உய்யும்	உஜ்ஜீவிக்கைக்கு உறுப்பான	மலர்மங்கை	பெரியபிராட்டியாரோடும்
வகை	ஒருஉபாயத்தை	வடி	கூரிதானவாள் போலே யிருக்கிற
கண்டேன்	கண்டேன்;		
முன்	முன்பு	கண்	திருக்கண்களை யுடையளான [டும்
துளங்கா	அச்சப்படாமலிருக்கிற		
அரக்கர்	ராக்ஷஸர்கள்	மடந்தை	ஸ்ரீ பூமிப்பிராட்டியோ
துளங்க	அஞ்சும்படியாகவும்,	யா	(ஜகத்ரக்ஷணத்துக்குச்சேர்த்தியுண்டாக வேணுமென்று) மஹத்தான
திண்	பலிஷ்ட்டமான		
தோள்	திருத்தோளானது		
நிமிர	நிமிரும்படியாகவும்,		
சிலை	தநுஸ்ஸானது	நோக்கம்	ஸங்கல்பத்தை
வளைய	வளையும்படியாகவும்	கண்டான்	பண்ணா நின்ற வெம்பெருமான்
சிறிதே	(ஜகத்தில்) சிலராக்ஷஸர்களையே	கண்டுகொண்டு	(ஏகாந்தமான ஸ்த்தலமென்று) கண்டு
முனிந்த	அழியச் செய்தவனாய், (அதனாலுண்டா	உகந்த	ஸந்தோஷித்தருளின
திரு	வீரலக்ஷ்மியை [ன)	கண்ணபுரம்	திருக்கண்ணபுரத்தை
மார்வன்	திருமார்வி லுடையனா	நாம்	நாம்
வண்டு	வண்டுகளாலே [ய்,	தொழுதுமே	தொழுவோம். (க)

வ்யா—முதற்பாட்டு. (தொண்டீர்) (க) "வழுவிலாவடிமை

அரு.—முதற்பாட்டு. (தொண்டீரித்யாதி) அல்பமாக முனியவேண்டு

(க) தி-வாய்-ந-ந-க.

செய்யவேண்டும்'' என்றுபாரித்துக் கொண்டி-ருக்கிறவர்களே! (உய்யும்வகைகண்டேன்) (க) ''అసన్నేవ స భవతి-அஸந்நேவ ஸ பவதி''என்னும் நிலைகழிந்து அவனை ஆஶ்ரயித்து உஜ்ஜீவிக்கைக்கு ஒருவிரகு கண்டேன்; அதேதென்றால், (கண்ணபுரம் நாம்தொழுதும்). (துளங்காவரக்கர் துளங்க) இதுக்குமுன்பு அச்சமிருக்குப்படி புதியதுண்டறியாத ராக்ஷஸஜாதியானது அஞ்சும்படியாக. (திண்டோளித்யாதி) ப்ரதிபக்ஷமென்றால் சலியாத தோளானது நிமிரும்படி-யாகவும், வில்லானது வளையும்படியாகவும். (சிறிதேமுனிந்த) ஜகத்து ஸம்ஹாரத்தோடே தலைக்கட்டுமளவன்றிக்கே ராக்ஷஸஜாதியளவிலே முனிந்தானாயிற்று. ஸங்கல்பத்தாலே இத்தையெல்லா முண்டாக்குமவன் சீறினால், பின்னை ஒன்றாக அழியுமத்தனையிறே. (திருமார்பன்) வீரஶ்ரீக்குக் குடியிருப்பான மார்வுபடைத்தவன்.

(வண்டாரித்யாதி) அச்சேர்த்தியிலே அடிமைசெய்ய வேணுமென்னுமதுவும் உண்டாகப் பெற்றதாயிற்று. (வண்டார் கூந்தல் மலர்மங்கை) தொழுவார் குற்றம்காண்கைக்குஅவஸரமில்லாதபடி மயிர்முடியாலே அவனைத் துவக்கும் பெரியபிராட்டியார். (வடிக்கண்மடந்தை) ஒருமயிர் முடிவேண்டாதே தன்நோக்காலே அவனை ஒடியெறிந்திட்டு வைக்கும் கண்ணையுடைய ஶ்ரீபூமிப்பிராட்டி. (மாநோக்கங்கண்டான்) (உ) ''ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே நிலாநிற்ப கண்டசதிர்'' என்னுமாபோலே ப்ரஜைகளுடைய ரக்ஷணத்துக்கு இவர்களும் தாமுமானசேர்த்தி யுண்டாகவேணுமென்று பார்த்து வைத்தானாயிற்று. (கண்டுகொண்டித்யாதி) அவனும் நாமும் இவர்களும் சேரவர்த்திக்கைக்கு ஏகாந்தமான ஸ்த்தலமென்று உகந்த திருக்கண்ணபுரத்தைத் தொழுவோம். .... (க)

வானென்னென்ன; (ஸங்கல்பேத்யாதி). மலர்மங்கையென்று மேலேதிருவைச்சொல்லுகையாலே இதுவீரஶ்ரீயாக வருளிச் செய்கிறார் (வீரேத்யாதி).

ப்ராப்யகோடியிலேயாக வருளிச்செய்து க (ஷ்) டகத்வ விவக்ஷயாதாத்பர்யாந்தரம் (தொழுவாரித்யாதி). ''வடி'' என்று கூர்மையாய், அத்தாலே கூரிதானவாளாய், ''அதுபோலேயிருக்கும்கண்'' என்று விசேஷித்ததுக்குத் தாத்பர்யம் (ஒருவித்யாதி). மலர்மங்கையோடும், வடிக்கண்மடந்தையோடும் கூடி, மஹத்தானநோக்கத்தை-ஸங்கல்பத்தை, கண்டான்-பண்ணினானென்று திருவுள்ளம்பற்றி யருளுகிறார் ஒண்டொடியாளித்யாதி). ... ... (க)

(க) தை-ஆ-கூ-க.

(உ) தி-வாய்-ச-கூ-க0.

மூ.—

பொருந்தாவரக்கர் வெஞ்சமத்துப்பொன்ற வன்றுபுள்ளூர்ந்து
பெருந்தோள்மாலி தலைபுரளப் பேர்ந்தவரக்கர் தென்னிலங்கை
இருந்தார்தம்மையுடன்கொண் டங்கெழிலார் பிலத்துப்புக்கொளிப்ப
கருந்தாட்சிலைகைக் கொண்டானூர்கண்ணபுரம் நாம்தொழுதுமே.

பதம்.	உரை.	பதம்.	உரை.
பொருந்தா	பொருந்தாமலிருக்கிற	இருந்தார்தம்மை	இருந்த ராக்ஷஸர்களையும்
அரக்கர்	ராக்ஷஸர்கள்	உடன்கொண்டு	கூட்டிக்கொண்டு
வெஞ்சமத்து	யுத்தத்திலே	அங்கு	அவ்விடத்திலிருந்து
பொன்ற	முடியும்படியாக	எழில்	அழகாலே
அன்று	அக்காலத்தில்	ஆர்	வ்யாப்தமான
புள்ளூர்ந்து	திருவடியைமேல் கொண்டு	பிலத்து	பாதாளத்திலே
பெரும்	பெரிதான	புக்கு	ப்ரவேசித்து
தோள்	தோள்வலியையுடையனை	ஒளிப்ப	மறையும்படியாகவும்
மாலி	மாலியினுடைய	கருந்தாள்	வயிரம்பற்றின
தலை	தலையானது	சிலை	தநுஸ்ஸை
புரள	புரளும்படியாகவும்,	கை	திருக்கையிலே
பேர்ந்த	அவனையொழிய மற்றுமுண்டான	கொண்டான்	தரித்தவனுடைய
அரக்கர்	ராக்ஷஸர்கள்,	ஊர்	ஊரான
தென்	தெற்கு திக்கிலுள்ள	கண்ணபுரம் நாம்தொழுதுமே. (உ)	
இலங்கை	இலங்காநகரத்தில்		

அவ.— இரண்டாம்பாட்டு. அது பிராட்டி பக்கல் ஓரத்தால் செய்த செயலன்றோ, நாம் அதற்குப் பிற்பாடரானோமேயென்ன; அதுவேண்டா; அவன் விரோதி நிரஸநசீலனென்கிறார்.

வ்யா.-(பொருந்தாவித்யாதி) ஸர்வதா(க)நாம் அநுகூலித்தாலும்

அநு.—இரண்டாம்பாட்டு. (பொருந்தாவித்யாதி) ஸங்கதிதன்னேற்றமே காட்டுகிறார் (அதுவித்யாதி). (அது) துளங்காவரக்கனான ராவணவதம். (விரோதி)என்றது-ஆஶ்ரிதவிரோதியென்கை.

(க) "'𑌨 𑌮𑍇 𑌦𑍍𑌵𑍇𑌷𑍍𑌯𑍋𑌽𑌸𑍍𑌤𑌿 𑌨 𑌪𑍍𑌰𑌿𑌯𑌃- நமேத்வேஷ்யோஉஸ்திநப்ரிய:' என்றிருக்கிற நாம்" என்று ஈஶ்வரோக்தியாகக்கண்டு கொள்வது. (அநுகூலித்

(க) கீ-கூ-உரு.

பொருந்தாமையிலே நிலைநின்ற ராக்ஷஸஜாதியானது யுத்தத்திலே முடியும்படியாகத் திருவடியை மேற்கொண்டு மிக்க தோள்வலியையுடைய மாலிதலையானது புரளும்படியாக, அவனையொழிந்த மற்றுள்ள ராக்ஷஸர்கள் புற்றுப்போலே என்றுமொக்க துர்வர்க்கம்மாறுதலங்கையிலுண்டான ராக்ஷஸரையும் கூட்டிக்கொண்டு போக ([illegible]) பூமியான பாதாளத்திலே புக்கு மறைய வயிரம்பற்றித் திண்ணிதான வில்லைக் கையிலே பிடித்தவனுடைய ஊரான திருக்கண்ணபுரத்தை நாம் தொழுவோம். .... (௨)

மூ.—வல்லியிடையாள் பொருட்டாக மதிள்நீரிலங்கையார்கோவை
அல்லல்செய்து வெஞ்சமத்துளாற்றல் மிகுத்த வாற்றலான்
வல்லாளரக்கர் குலப்பாவைவாட முனிதன்வேள்வியைக்
கல்விச்சிலையால் காத்தானூர் கண்ணபுரம் நாம்தொழுதுமே.

பதம்.	உரை.	பரம்.	உரை.
வல்லி	கொடிபோன்ற	ஆற்றலான்	பெரியோனாய்,
இடையாள்	மத்யப்ரதேசத்தையுடையளான பிராட்டியின்	வல்லாள்	வலிய ஆண்மையையுடையரான
பொருட்டாக	நிமித்தமாக	அரக்கர்	ராக்ஷஸர்களுடைய
நீர்	கடலை அகழாகவுடையதாய்,	குலப்பாவை	குலத்திலுண்டான தாடகியானவள
மதிள்	மதிளையுடையதான	வாட	முடியும்படியாக
இலங்கையார்	இலங்கையிலுள்ள ராக்ஷஸர்க்கு	முனிதன்	விஶ்வாமித்ரருடைய
கோவை	நியாமகனாயிருக்கிற ராவணனை	வேள்வியை	யாகத்தை
அல்லல்செய்து	து:க்கப்படுத்தி	கல்வி	தநுர்வித்யாப்யாஸதசையிலிருந்த
வெஞ்சமத்துள்	யுத்தத்திலே	சிலையால்	வில்லால்
ஆற்றல்	வலிமையால்	காத்தான்	ரக்ஷித்தவனான எம்பெருமானுடைய
மிகுத்த	அதிகனான	ஊர்	ஊரான

கண்ணபுரம்நாம் தொழுதுமே. (௩)

தாலும்) என்றவநந்தரம் "பொருந்தார்களேயென்று நினைத்து" என்றுபூரிப்பது. "கருந்தாள்" என்று விசேஷித்ததின் கருத்தையருளிச்செய்கிறார் (வயிரம்பற்றி) என்றது. ... ... (௨)

அவ.—மூன்றாம்பாட்டு. ப்ரஸ்துதமான ராமாவதாரம் பின்னாட்டினபடி சொல்லுகிறது.

வ்யா.(வல்லியித்யாதி)கொடிபோன்றஇடையையுடையபிராட்டிக்காகக் கடலை அகழாகவுடைத்தாய், மதிளையுடைத்தான லங்கையிலுள்ளார்க்கு நான் நியாமகனல்லேனோவென்றிருக்கிறவனை. (அல்லல்செய்து) தேரை அழித்து, வில்லைமுறித்து, அவன் முதுகுகாட்டும்படிபண்ணி எளிவரவு படுத்தினபடியைச் சொல்லுகிறது. யுத்தத்திலே இன்றுபோய் நாளைவாவென்னவல்ல வில்வலியையுடையவன். (ஆற்றல்மிகுத்த) வலிமிகுத்தபெரியோன்; கைபுகுந்த சத்ருவைக்கடுக முடித்துவிடாதே, இன்றுபோய் நாளைவாஎன்றானிறே. நீ இளைத்த ஸமயத்திலே உன்னை அழிக்கை போராதுகாண். (க) "ఆశ్వాస్య - ஆஶ்வாஸ்ய" இவன் இளைத்தால் தன் பரிகரத்திலுள்ளாரை ஆஶ்வஸிப்பிக்குமாபோலே நீ போய் ஆஶ்வஸித்துவாவென்றானிறே.

(வல்லாளித்யாதி) பருவம்நிரம்புகிறதற்குமுன்னே செய்த செயல் இதுவன்றோ? (வல்லாளரக்கர் குலப்பாவைவாட) வலிய ஆண்மையையுடைய ராக்ஷஸஜாதிக்காகக் கண்காட்டியானவள்முடியும்படியாக. (முனியித்யாதி) ருஷியினுடைய யாகத்தை. ஶ்ரீபரசுராமாழ்வானையென்று தன்னதானவில்லை வாங்குவதற்குமுன்பே பிடித்தவில்லைக்கொண்டு காத்தானார். .... (ங)

அரு.—மூன்றாம்பாட்டு. (வல்லியித்யாதி) (ப்ரஸ்துதமான) என்றது-முதற்பாட்டில் ப்ரஸ்துதமானவென்கை. "நீர்மதிளிலங்கை" என்றந்வயித்தர்த்தம் (கடலையித்யாதி). "ஆற்றல்" என்று வலிமையாகக்கீழருளிச்செய்தது க்ருபையாக விவக்ஷித்துத் தாத்பர்யாந்தரம் (நீஇளைத்தவித்யாதி). (க) "ఆశ్వాస్యనిర్యాహిరథీసదన్వీ తదాబలం ద్రక్ష్యసిమేరథస్థః - ஆஶ்வாஸ்யநிர்யாஹி ரதீஸதந்வீததாபலம் த்ரக்ஷ்யஸிமே ரதஸ்த்த:" என்று உக்தார்த்தத்தை ப்ரமாண ப்ரதர்ஶநபூர்வகமாக விவரிக்கிறார் (ஆஶ்வாஸ்யேத்யாதி).

ஒருவீரத்தை யநுஸந்தித்து மீளவும் ஒருவீரத்தை அநுஸந்தித்தவர்க்குக்கருத்து (பருவமித்யாதி). "பாவை" மரப்பாவை; அத்தைப்போலே தர்ஶநீயை என்று விவக்ஷித்தருளுகிறார் (கண்காட்டியான) என்று. "கல்விச்சிலை" தநுர்வித்யாப்யாஸதசையில் சிலையென்றாய், இப்படி விசேஷித்ததுக்குத் தாத்பர்யமருளுகிறார் (ஶ்ரீ பரசுராமாழ்வானையித்யாதி). ... ... (ங)

(க) ராயு-ருகூ-கசச.

மூ.—மல்லைமுந்நீரதர்படவரிவெஞ்சிலைகால் வளைவித்துக்
கொல்லைவிலங்குபணிசெய்யக்கொடியோனிலங்கைபுகலுற்றுத்
தொல்லைமரங்கள்புகப்பெய்து துவலைநிமிர்ந்து வானணவக்
கல்லால்கடலை யடைத்தானூர்கண்ணபுரம் நாம்தொழுதுமே.

பதம்.	உரை.
கொடியோன்	க்ரூரனான ராவணனுடைய
இலங்கை	இலங்கையில்
புகல்	ப்ரவேசிப்பதை
உற்று	உத்தேசித்து,
மல்லை	அதிகமான
முந்நீர்	மூன்றுவகைப்பட்ட ஜலத்தையுடைய கடலானது
அதர்பட	வழிபடும்படியாக
வரி	(அழகான) வரிகளையுடையதாய்,
வெம்	வெம்மையை யுடையதான
சிலைகால்	தநுஸ்ஸை
வளைவித்து	வளைத்தும்,
கொல்லை	அரண்யங்களிலுண்டான கிளைகளிலே திரியாநின்ற
விலங்கு	வாநரங்கள்
பணி	கைங்கர்யத்தை
செய்ய	பண்ணும்படியாகவும்,
தொல்லை	பழையதான
மரங்கள்	வ்ருக்ஷங்கள்
புக	(பறியுண்டு) புகும்படியாக
பெய்து	(ஸமுத்ரத்திலே) ப்ரவேசிப்பித்து
துவலை	ஜல பிந்துக்களான துகள்
நிமிர்ந்து	கிளர்ந்து
வான்	ஆகாசத்தில்
அணவ	ஸ்பர்சிக்கும்படியாகவும்,
கல்லால்	மலைகளாலே
கடலை	ஸமுத்ரத்தை
அடைத்தான்	கட்டினவனான சக்ரவர்த்தித் திருமகனுக்கு
ஊர்	வாஸஸ்தானமான

கண்ணபுரம் நாம்தொழுதுமே. (ச)

வ்யா.—நாலாம்பாட்டு. (மல்லைமுந்நீரதர்பட) “மல்லை” என்று மிகுதி. ஜலராசியாய்மூன்றுவகைப்பட்டஜலத்தையுடைத்தான கடலானதுவழிபட; (க)“𑌅𑌪𑍍𑌰𑌮𑍇𑌯𑍋𑌮𑌹𑍋𑌦𑌧𑌿𑌃- அப்ரமேயோமஹோத

அரு.—நாலாம்பாட்டு. (மல்லையித்யாதி) கீழ்ப்பாட்டில் சக்ரவர்த்தித் திருமகனுடைய வீரரஸத்தில் ஈடுபட்டுப் பேசினாராய், அவ்வளவன்றிக்கே கடலைவற்றக் கோல்தொடுப்பது, குரங்கைக்கொண்டு பணிகொள்வது, கல்லை மிதக்கப்பண்ணுவதான அத்புதரஸத்தில் ஈடுபடுகிறாரென்று ஸங்கதி.

“மல்லை” என்று விசேஷித்ததுக்குத் தாத்பர்யமருளுகிறார் (அப்ரமேய

(க) ரா-யு-கக-ஙக.

திः" என்று ஒருவராலும் பரிச்சேதிக்கவரிதான கடலானது வழிப்பட. (வரிவெஞ்சிலைகால்வளைவித்து) தர்ஶநீயமான வரிகளையுடைத்தாய், பிடித்தபிடியிலே எதிரிகள் அஞ்சும்படியான வெம்மையையுடைத்தான வில்லைவளைத்து. (கொல்லைவிலங்கு பணிசெய்ய) ஒரு காலும் பூசல்கண்டறியாதே என்றுமொக்கப்பணையிலே திரியக்கடவ குரங்குகள் பணிசெய்ய; அஸ்ப்ருஷ்டஸம்ஸாரகந்த(𑌧)ரான திருவடி திருவநந்தாழ்வான் தொடக்கமானார் செய்யக்கடவகைங்கர்யத்தை இடக்கை வலக்கைவாசியறியாத திர்யக்குக்கள்செய்ய. (கொடியோனிலங்கை புகலுற்று) அவன்பண்ணினக்ரௌர்யத்தைத்திருவுள்ளத்தாலே முன்னேட்டுக்கொண்டு கொடியோனென்கிறார். ஜநகனும் ஜநகியும் ஓரிடத்திலேயிருக்கப் பொறாத க்ரௌர்யமிறே. [இலங்கை புகலுற்று மல்லைமுந்நீர் அதர்பட வரிவெஞ்சிலைகால் வளைவித்துக் கொல்லைவிலங்கு பணிசெய்யக் கல்லால் கடலை யடைத்தானூர்].

(தொல்லைமரங்கள் புகப்பெய்து) இதுக்குமுன்பு பறியுண்டறியாத பழைய மரங்களடையப்பறியுண்டுபோம்படி அதிலேப்ரவேசிப்பித்து. (துவலைநிமிர்ந்துவானணவ) அடைக்கிறபோதைத் திவலைகளானவை கிளர்ந்து ஆகாசாவகாசத்தை இடமடைக்க, நீரிலே இட்டால் ஆழக் கடவமலைகளைக்கொண்டு கடலையடைத்த சக்ரவர்த்தித் திருமகனுக்கு வாஸஸ்தாநமான. .... (௪)

மூ.—ஆமையாகி யரியாகி யன்னமாகிஅந்தணர்தம்
ஓமமாகி யூழியாகி§ உவரிசூழ்ந்தநெடும்புணரிச்
சேமமதிள்சூழிலங்கைக் கோன்சிரமும் கரமும்துணித்துமுன்
காமன்பயந்தான் கருதுமூர்கண்ணபுரம்நாம்தொழுதுமே.(௫)

இத்யாதி) .(௧) "'𑌪𑌦𑍍𑌭𑍍𑌯𑌾𑌂𑌯𑌾𑌨𑍍𑌤𑍁 𑌪𑍍𑌲𑌵𑌙𑍍𑌗𑌮𑌾𑌃 - பத்ப்யாம்யாந்து ப்லவங்கமா:' என்றத்தைக் கடாக்ஷித்து வழிப்படவென்றது" என்று திருவுள்ளம்பற்றிசப்தார்த்தமருளுகிறார் (தர்ஶநீயேத்யாதி). கொல்லை - வரம்பில்லாத நிலமாய், அத்தாலே காட்டை விவக்ஷித்துத் தாத்பர்யமருளுகிறார் (ஒருகாலுமித்யாதி). பணை - சாகை. கொல்லைஎன்றது -மர்யாதை யில்லாமையைச் சொல்லுகிறது என்று விவக்ஷித்துத் தாத்பர்யாந்தர மருளுகிறார் (அஸ்ப்ருஷ்டேத்யாதி). அந்வயம் காட்டுகிறார் (இலங்கையித்யாதி). ... ... (௪)

---

(௧) ரா-யு-௨௧-௨௨.

§ (பா)-உலகுசூழ்ந்த.

பதம்.	உரை.
ஆமையாகி	கூர்மரூபமாய்,
அரியாகி	நரஸிம்ஹரூபமாய்,
அன்னமாகி	ஹம்ஸரூபமாய்,
அந்தணர்தம்	ப்ராஹ்மணர்களுடைய
ஓமமாகி	யாகரூபமாய்,
ஊழியாகி	காலரூபமாய்,
நெடும்	விசாலமாய்
உவரி	உப்புமயமான
புணரி	கடலாலே
சூழ்ந்த	சூழப்பட்டதாய்
சேமம்	காவலான
மதிள்	மதிளாலே
சூழ்	சூழப்பட்டதான

பதம்.	உரை.
இலங்கை	இலங்கைக்கு
கோன்	ராஜாவான ராவணனுடைய
சிரமும்	தலைகளையும்
கரமும்	தோள்களையும்
துணித்து	அறுத்தவனான சக்ரவர்த்தித் திருமகனாய்
முன்	முன்பு
காமன்பயந்தான்	காமனுக்கு உத்பாதகனுமான க்ருஷ்ணன்
கருதும்	விரும்பிவர்த்திக்கிற
ஊர்	திவ்யதேசமான

கண்ணபுரம்நாம்தொழுதுமே. (௫)

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (ஆமையித்யாதி) ஆஶ்ரித ரக்ஷணம் ஒருதலையானால் தன்னைப்பேணாதே ரக்ஷிக்கும் ஸ்வபாவனாயிற்று. (ஆமையாகி) கூர்மரூபமாய். (அரியாகி) ஹயக்ரீவமாய்; ஸிம்ஹமென்றுமாம். (அன்னமாகி) இழந்தவேதசக்ஷுஸ்ஸை மீட்டுக் கொடுக்கைக்காக அன்னமாய், ப்ராஹ்மணருடைய ஹவிஸ்ஸுக் கொள்வான்தானேயிறே. காலமே சேஷித்திருந்துள்ள காலமாகி. ஒருவருமில்லாதவன்றுதான் உளனாயிருக்குமிறே. (உவரியித்யாதி) ஓங்கினதிரைகளை யுடைத்தான உவரியான கடலாலே சூழப்பட்டிருப்பதுமாய், ஒருவராலும் ப்ரவேசிக்க வரிதான மதிளையுடைத்தான லங்கைக்கு நிர்வாஹகனான ராவணனுடைய தலைகளை அறுப்பது, தோள்களைத் துணிப்பதாய்க்கொண்டு போதுபோக்காகக் கொன்றபடி. (முனனித்யாதி) நாட்டைத்தன் வடிவாலே பகட்டித்

அநு.—அஞ்சாம்பாட்டு.(ஆமையித்யாதி). கீழ்ப்பாட்டில்அத்புதரஸத்தையநுஸந்தித்து அவ்வளவன்றிக்கே சக்ரவர்த்தித் திருமகனுடையரௌத்ரரஸத்தை அநுஸந்திக்கப்பார்த்து, முன்னும் பின்னுமுண்டான அவதாரங்களில் வித்யாப்ரதாந போக ([illegible]) ப்ரதாநங்களிலுண்டான சாந்திரஸ ஶ்ருங்கார ரஸங்களையும் சேர்த்து அநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

“நெடுமுவரிப்புணரியாலே சூழ்ந்த” என்றந்வயம் திருவுள்ளம்பற்றிசப்தார்த்தமருளுகிறார் (ஓங்கினவித்யாதி). “சேமம்”என்றதுக்குத்தாத்பர்யம் (ஒருவராலுமித்யாதி). ... ... (௫)

ஷிரிகிற காமனுக்கும் உத்பாதகனான க்ருஷ்ணன் விரும்பி வர்த்திக்கும் தேசம். "உலகு" என்றுபாடமாகில் லோகத்தைச் சூழ்ந்த பெரிய கடலென்றபடி. .... (ரு)

மூ.—

வருந்தாதிருநீ மடநெஞ்சேநம்மேல் வினைகள்வாராமுன்
திருந்தாவரக்கர் தென்னிலங்கைச் செந்தீயுண்ணச் சிவந்தொருநாள்
பெருந்தோள்வாணற்கருள்புரிந்து பின்னைமணாளனாகிமுன்
கருந்தாள்களிறொன்றொசித்தானூர் கண்ணபுரம்நாம்தொழுதுமே.

பதம்.	உரை.	பதம்.	உரை.
மடநெஞ்சே	ஸாதுவான மநஸ்ஸே	ஒருநாள்	ஒருகாலத்தில்
நீ	நீ	பெரும்	அதிகமான
வருந்தாது	க்லேசியாமல்	தோள்	புஜங்களையுடையனான
இரு	இருக்கக்கடவை;	வாணற்கு	பாணாஸுரன் விஷயத்தில்
நம்மேல்	நம்பக்கல்	அருள்	க்ருபையை
வினைகள்	பாபங்கள்	புரிந்து	பண்ணுகிற்பனாய்,
வாரா	வரமாட்டாது,	பின்னை	நப்பின்னைப் பிராட்டிக்கு
முன்	முன்னே	மணாளனாகி	வல்லபனுமாய்,
திருந்தா	திருந்தாமலிருக்கிற	முன்	முன்னே
அரக்கர்	ராக்ஷஸருடைய	கரும்	கறுத்திருக்கிற
தென்னிலங்கை	தெற்கிலுள்ள இலங்கையை	தாள்	கால்களையுடைய
செம்	சிவந்த	களிறுஒன்று	ஒருகுவலயாபீடத்தை
தீ	ஜ்வாலையை யுடைய அக்நியானது	ஒசித்தான்	நிரஸித்தவனான கண்ணனுடைய
உண்ண	புஜிக்கும்படியாக	ஊர்	திவ்யதேசமான
சிவந்து	சீறினவனாய்,	கண்ணபுரம்நாம் தொழுதுமே. (சு)	

வ்யா.—ஆறும்பாட்டு. (வருந்தாதிருநீ) பூர்வவ்ருத்தத்தை அநுஸந்தித்து "நாம்என்படக்கடவோம்" என்றுக்லேசியாதே நிர்ப்பயமாக விருக்கப்பார். (மடநெஞ்சே) ஸாதுவான நெஞ்சே! உன்

அநு.—ஆறும்பாட்டு. (வருந்தாதித்யாதி) கீழ்ப்பாட்டுக்களில் தொண்டருக்கு உபதேசித்துவிட்டு ப்ரஸ்துதமான ராமக்ருஷ்ணாவதாரங்களில் விரோதி நிரஸந சீலதையை நெஞ்சுக்கும் அறிவிக்கிறாரென்று ஸங்கதி.

[illegible]யே பார்த்து பகவத்ப்ரபாவமொன்றையும் பாராத நெஞ்சே!. பாபங்களைக் கூடுபூரித்துவைத்து வருந்தாதிருக்கும்படி யெங்ஙனேயென்னில்; (நம்மேல்வினைகள்வாரா) "நாம்பண்ணினவையன்றோ" என்று அவை நம்பக்கல் வந்துகிட்டவற்றோ?; ந்யஸ்தப (ஃ) ரரைகலியமாட்டாவிறே. (க) "நயவேனித்யாதி" (உ) "ஆரேயித்யாதி" சொல்லிக்கொள்வது. அவன் ஏறிட்டுக்கொண்டு போக்கநங்கேகண்டோமென்னில் (முன்னித்யாதி) பிராட்டி தன்ப்ரதிபந்தகத்தைப்போக்குகைக்குத்தான்யத்நித்ததுண்டோ? ப்ரதிபந்தகம் ப்ரபலமான்தனையும் அவனுக்குக் கார்யம் செய்தோமாம்படியன்றோ அவன்படி. மால்யவான்போல்வார் சொன்னஹிதத்துக்குக்கேளாத ராக்ஷஸருடைய லங்கையை. (செந்தீயுண்ண) முன்பு ராவணபயத்தாலே பாகாதிகளுக்கு வேண்டுவதுஸஞ்சரித்துஉடம்பு வெளுத்திருக்கக்கடவ அக்நி தன்நிறம் பெற்று புஜிக்கும்படியாக, (சிவந்து) சீறி.

(பெருந்தோள் வாணற்கருள்புரிந்து) அநேகம் தோள்படைத்தோமென்று அபிமாநித்திருக்கிற பாணனுடைய தோள்களாயிரத்தையும் துணித்து, அவனுக்கு தேஹயாத்ரை நடத்தும்படியாக இரண்டு கையைக்கொடுத்தானாயிற்று. நப்பின்னைப்பிராட்டிக்கு வல்லபனுமாய் முன்கறுத்துத்திண்ணிதான தாளையுடைய குவலயாபீடத்தை அநாயாஸேந முறித்தானூர். .... (சு)

மூ.—இலையார்மலர்ப்பூம்பொய்கைவாய் முதலைதன்னாலடர்ப்புண்டு
கொலையார்வேழம்நடுக்குற்றுக்குலைய வதனுக் கருள்புரிந்தான்
அலைநீரிலங்கைத் தசக்ரீவற்கிளையோற் கரசையருளிமுன்
கலைமாச்சிலையா லெய்தானூர் கண்ணபுரம்நாம் தொழுதுமே.

பதம்.	உரை.	பதம்.	உரை.
கொலையார்	மதித்துக்கிடக்கிற	ஆர்	வ்யாப்தமாய்
வேழம்	யானையானது,	மலர்	விகஸிதமான
இலை	இலைகளால் .	பூம்	புஷ்பங்களையுடைய

நாம்பண்ணினால் நம்மைக்கிட்டவன்றோ வடுப்பதென்ன வருளுகிறார் (ந்யஸ்தேத்யாதி). இருந்தாவென்று விசேஷித்ததுக்குத் தாத்பர்யம் (மால்யவானித்யாதி). தீயாகில் சிவந்திராதோ? "செம்" என்று விசேஷிப்பானென்னென்ன வருளிச்செய்கிறார் (முன்பித்யாதி). ... ... (சு)

(க) ச-திருவ-[illegible]

(உ) கூ-திருவ-உஎ

பதம்.	உரை.
பொய்கைவாய்	ஸரஸ்ஸிலே(புக்குஅங்குள்ள)
முதலைதன்னால்	ஒருமுதலையால்
அடர்ப்புண்டு	நெருக்குண்டு
நடுக்குற்று	நடுக்கமுற்றதாய்
குலைய	ஒருவ்யாபாரமின்றிக்கே இருக்கும்போது
அதனுக்கு	அந்தயானையின்விஷயத்தில்
அருள்புரிந்தான்	க்ருபைபண்ணினவனாய்,
அலை	அலைகளை (எறியாநின்ற)
நீர்	ஸமுத்ரத்தாலே சூழப்பட்ட
இலங்கை	இலங்காநகரத்துக்கு (ராஜாவான)

பதம்.	உரை.
தசக்ரீவற்கு	ராவணனுடைய
இளையோற்கு	தம்பியானவிபீஷணாழ்வானுக்கு
அரசை	லங்காராஜ்யத்தை (கொடுத்து)
அருளி	க்ருபைபண்ணினவனாய்
முன்	(அதுக்கு) முன்னே
கலை	மாயாம்ருகத்தை
மா	பெரிதான
சிலையால்	தநுஸ்ஸினால்
எய்தான்	முடித்தவனான எம்பெருமானுடைய
ஊர்	திவ்யதேசமான

கண்ணபுரம்நாம் தொழுதுமே. (எ)

வ்யா.—ஏழாம்பாட்டு. (இலையித்யாதி) இலைகளால் மிக்கிருப்பதாய் பரப்புமாறப்பூத்து தர்ஶநீயமான பொய்கையிலே போய்ப்புக்கு ஒரு ஜலசரஸத்வத்தாலே நெருக்குண்டு மதித்துக் கொடுதிரிகிற ஆனையானது விழுக்காடறியாதே வேற்றுநிலத்திலே புக்கு அகப்பட்டு தன்வ்யாபார மற்று முதலையினுடைய வ்யாபாரமேயாய் அத்தாலே நடுங்கிக்குலைய, அவ்வவஸ்த்தையிலே வந்து உதவினான்.

(அலைநீரித்யாதி) ராவணன் பண்ணினப்ராதிகூல்யம் தம்பியளவும் வந்தேறுவதாயிருக்கச் செய்தேயும் அத்தைப்பாராதே அவன் தம்பிக்கு ராஜ்யத்தைக்கொடுத்தானாயிற்று; அதுக்கு முன்பு தமயனுடைய வைரத்துக்குஹேதுவாய்க்கொண்டுவந்தமாயாம்ருகத்தை ஓரம்பாலே முடித்தவன். .... (எ)

அநு.—ஏழாம்பாட்டு. (இலையித்யாதி) துஷ்டமான ஓரானையைக் கொன்றத்தைக் கீழ்ப்பாட்டிலருளிச் செய்தார். அந்தப்ரஸங்கத்திலே அநுகூலமான ஆனையைக்காத்தமைதோற்ற அத்தையும், ராமாவதாரத்தில் அபதாநத்தையும் நெஞ்சுக் கறிவிக்கிறாரென்று ஸங்கதி.

முதலையென்னாதே "தன்னால்" என்றத்தாலே நிகர்ஷம்தோற்றுமென்று விவக்ஷித்தருளுகிறார் (ஒருஜலசரஸத்வத்தாலே) என்று. ... ... (எ)

மூ.—மாலாய் மனமே யருந்துயரில் வருந்தாதிருநீ வலிமிக்க
காலார்மருதும் காய்சினத்தகழுதும் கதமாக் கழுதையும்
மாலார்விடையும் மதகரியும் மல்லருயிரும் மடிவித்து
காலால்சகடம்பாய்ந்தானூர் கண்ணபுரம்நாம்தொழுதுமே.

பதம்.	உரை.
மாலாய்	பிச்சேறின
மனமே	நெஞ்சே
நீ	நீ
அரும்	(அநுபவித்து) தலைக்கட்டவொண்ணாத
துயரில்	து:க்கங்களில்
வருந்தாது	க்லேஶியாமல்
இரு	இரு;
மிக்க	அதிகமான
வலி	பலத்தையுடைத்தாய்
காலார்	வேரூன்றியிருந்துள்ள
மருதும்	மருதவ்ருக்ஷங்களையும்
காய்சினத்த	அதிகமானசீற்றமுடையளான
கழுதும்	பேயான பூதனையையும்
கதம்	கோபத்தையுடைய
மா	குதிரையையும்,
கழுதையும்	கழுதையையும்,

பதம்.	உரை.
மாலார்	பெரியவடிவையுடைத்தான
விடையும்	வ்ருஷபங்களையும்,
மத	மதத்தையுடைத்தான
கரியும்	குவலயாபீடத்தையும்,
மல்லர்	(சாணூரன்முதலான) மல்லர்களுடைய
உயிரும்	ப்ராணன்களையும்
மடிவித்து	நிரஸித்தவனாய்,
காலால்	திருவடிகளால்
சகடம்	சகடாஸுரனை
பாய்ந்தான்	(துகளாய்ப் போம்படி) நிரஸித்தவனுமான க்ருஷ்ணனுடைய
ஊர்	திவ்யதேசமான
கண்ணபுரம்நாம் தொழுதுமே. (௮)	

அநு.—எட்டாம்பாட்டு. (மாலாயித்யாதி) கீழ்ப்பாட்டில் ஶ்ரீகஜேந்த்ராழ்வானுக்கு (௧) "𑌦𑌿𑌵𑍍𑌯𑌂 𑌵𑌰𑍍𑌷𑌸𑌹𑌸𑍍𑌰𑌂- திவ்யம் வர்ஷஸஹஸ்ரம்" என்று பதினாயிரம் ஸம்வத்ஸரம் க்லேசப்பட்டு ஸ்வயத்நநிவ்ருத்தி பிறந்தபின்வந்து உதவினன்; ஶ்ரீவிபீஷணாழ்வானுக்கு(௨) "𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌂𑌶𑍍𑌚 𑌦𑌾𑌰𑌾𑌂𑌶𑍍𑌚-த்யக்த்வா புத்ராம்ஶ்சதாராம்ஶ்ச" என்று ப்ராப்யாபாஸங்களையும்விட்டு சரணம் புகுருகையாலே அரசளித்தான்; எனக்கங்ஙனே யிருப்பதொரு நிலையுமின்றிக்கே (௩) "𑌚𑌞𑍍𑌚𑌲𑌂 𑌹𑌿 𑌮𑌨𑌃-சஞ்சலம் ஹிமந:" என்கிறபடியே நின்றவாநில்லாதஸ்வபாவத்தை யுடைத்தாயிருக்கை உண்டாகையாலே எங்ஙனே வந்திருப்பதென்ன; பாஞ்சாலிக்கு விரோதிகளென்று பேர்பெற்றவற்றை யெல்லாம்

---

(௧) வி-தர்ம-௬௯-௪௬. (௨) ரா-யு-௧௭-௧௪. (௩) கீ-௬-௩௪.

வ்யா.—எட்டாம்பாட்டு. (மாலாயித்யாதி) "முன்பு பண்ணின பாபங்களை அநுஸந்தித்து என்படக்கடவோம்" என்று பிச்சேறின நெஞ்சே அநுபவித்துத் தலைக்கட்டவொண்ணாத துஃக்கங்களில் நீ க்லேசியாதிரு. என்கொண்டு வருந்தாதிருப்பதென்றால் (வலியித்யாதி) அவன்படி இதுவன்றோ? மிக்க பலத்தையுடைத்தாய் வேரூன்றியிருந்துள்ள மருதும், மிக்க சீற்றத்தை யுடைத்தாயிருக்கிற பூதனையும்; கோபத்தையுடைத்தாயிருந்துள்ள குதிரையும், கழுதையும், பெரியவடிவையுடைத்தான வ்ருஷபங்களும், மதத்தையுடைத்தான ஆனையும், மலைதுள்ளினாப்போலே கிளர்ந்துவருகிற மல்லருடைய ப்ராணன்களும் இவற்றையடைய நிரஸித்து முலைவரவு தாழ்த்ததென்று சீறிநிமிர்த்த திருவடிகளுக்கு இலக்காய் சகடாஸுரன் துகளாய்ப் போம்படி பண்ணினவன். .... (௮)

மூ.—குன்றால்மாரிபழுதாக்கிக் கொடியேரிடையாள் பொருட்டாக
வன்தாள்விடையேழன்றடர்த்தவானோர்பெருமான்மாமாயன்
சென்றான்தூதுபஞ்சவர்க்காய்த்திரிகால்சகடம்சினமழித்துக்
கன்றால்விளங்காயெறிந்தானூர்கண்ணபுரம்நாம்தொழுதுமே

பதம்.	உரை.	பதம்.	உரை.
குன்றால்	கோவர்த்தநமலையால்	இடையாள் பொருட்டாக	மத்ய ([illegible]) ப்ரதேசத்தை யுடையளான நப்பின்னைப் பிராட்டிக்காக
மாரி	கல்மழையை	வன்	பலிஷ்டமான
பழுதாக்கி	வ்யர்த்தமாம்படி பண்ணினவனாய்,	தாள்	கால்களையுடைய
கொடி	கொடிபோலே	ஏழு	ஏழான
ஏர்	அழகையுடைய	விடை	வ்ருஷபங்களையும்

கையாலும்காலாலும் கொன்றுநின்றக்ருஷ்ணன்படி அதுவாயிருக்க "உனக்கு நிலையுமுண்டாக்குவன்; நீக்லேசிப்பானென்" என்று மீளவும் நெஞ்சைத்தேற்றுகிறார் இரண்டு பாட்டிலுமென்று ஸங்கதி.

காய்தலும்-கோபமாய், சினமும்-கோபமாகையாலே(மிக்கசீற்றத்தை)என்றது. கீழ்ச்சொன்னவற்றுக்குவிசேஷணங்களிட்டு,மல்லர்க்கு விசேஷணமிடாமையாலே இவர்கள் மிடுக்கு ப்ரஸித்தமென்று திருவுள்ளமாகையாலே அதுக்குத் தாத்பர்யம் (மலையித்யாதி). ... ... (௮)

பதம்.	உரை.	பதம்.	உரை.
அன்று	அக்காலத்தில்	கால்	கால்களையுடையனான
அடர்த்த	அழியச்செய்தவனாய்,	சகடம்	சகடாஸுரனுடைய
வானோர்	நித்யஸூரிகள் பரியவிருக்கும்படியான	சினம்	சினத்தை
பெருமான்	மேன்மையை யுடையனாய்,	அழித்து	போக்கினவனாய்,
மாமாயன்	ஆஶ்சர்ய சேஷ்டிதங்களை யுடையனாய்,	கன்றால்	தேநுகாஸுரனால்
பஞ்சவர்க்காய்	பஞ்சபாண்டவர்களுக்காக	விளங்காய்	விளவின்காயாக நின்றவஸுரனை
தூது	தூத (தௌத்ய) னாய்	எறிந்தான்	பொகட்டு நிரஸித்தவனுமான க்ருஷ்ணனுடைய
சென்றான்	(துர்யோதனன் பக்கலில்) சென்றவனாய்,	ஊர்	திவ்யதேசமான
திரி	ஊருகிற	கண்ணபுரம்நாம் தொழுதுமே. (௯)	

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (குன்றாலித்யாதி) மலையைஎடுத்து இந்த்ரன் வ்யாபாரம் வ்யர்த்தமாம்படிபண்ணி, கொடிபோலே அழகிய இடையையுடைய நப்பின்னைப் பிராட்டிக்காக வலிய தாளையுடைய ருஷபங்களேழையு மழியச் செய்த. (வானோர் பெருமான்) *அயர்வறு மமரர்களதிபதி. நித்யஸூரிகள் பரியவிருக்கும் மேன்மையையுடைய தன்னைக்கிடீர் தன்னைப்பேணாதே இவற்றின்காலிலே பொகட்டது. (மாமாயன்) ஆஶ்சர்யசேஷ்டிதங்களை யுடையவன். தன்னைப்பேணாதே கால்நடையே கழுத்திலே ஓலைகட்டிப் பாண்டவர்களுக்காக துர்யோதனன் பக்கலிலே தூதுபோனவன். ஊருகிற காலையுடைத்தான சகடத்தினுடைய சினத்தைப்போக்கி, இருவரும் தங்களிலே க்ருதஸங்கேதராய்வர ஒருவனைக் கொண்டு ஒருவனை நிரஸித்தவன். .... (௯)

மூ.—கருமாமுகில்தோய் நெடுமாடக் கண்ணபுரத் தெம்மடிகளைத்
திருமாமகளாலருள்மாரிச் செழுநீராலிவளநாடன்
மருவார்புயல்கைக் கலிகன்றிமங்கை வேந்தனொலிவல்லார்
இருமாநிலத்துக்கரசாகி யிமையோரிறைஞ்சவாழ்வாரே. (௧௦)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

அரு.—ஒன்பதாம்பாட்டு. (குன்றாலித்யாதி) ஶ்ரோதாக்களைக் குறித்து வ்யாக்க்யாதா ஈடுபாடுதோற்றத் தாத்பர்யமருளுகிறார் (நித்யஸூரிகளித்யாதி). (இவற்றின்)விடைகளின். "வலியதாள்"என்றுவிசேஷிக்கையாலே(காலிலே) என்றது. ... ... (௯)

பதம்.	உரை.
கரு	கறுத்தும்
மா	பெரிதான
முகில்	காளமேகங்களானது
தோய்	தங்கும்படியாய் [கள்
நெடு	உயரமான
மாடம்	க்ருஹங்களையுடைய
கண்ணபுரத்து	திருக்கண்ணபுரத்திலே எழுந்தருளியிருக்கிற
எம் அடிகளை	என்ஸ்வாமியான க்ருஷ்ணன்விஷயமாய்,
திருமாமகளால்	பெரிய பிராட்டியாருடைய க்ருபைக்கு பாத்ரரானதால்
அருள்மாரி	அருள்மாரி என்றே திருநாமமுடையராய்,
செழு	ஸம்ருத்தமான
நீர்	ஜலத்தையுடைத்தான
ஆலிவளநாடன்	திருவாலிநாட்டை யுடையராய்,
மருவார்	(வர்ஷா காலத்திலுண்டாய்) பூர்ணமான
புயல்	மேகம்போல் (என்றுமொக்கக் குறைவறக் கொடுக்குமதான) [ராய்
கை	திருக்கைகளையுடைய
மங்கை	திருமங்கைக்கு
வேந்தன்	ராஜாவுமான
கலிகன்றி	ஆழ்வார்
ஒலி	ஒலியை யுடைத்தாம்படி அருளிச்செய்த இத்திருமொழியை [லவர்
வல்லார்	அப்ய(ஸ்ரீ)ஸிக்க வல்
இருமாநிலத்துக்கு	பூலோகஸ்வர்க்க லோகங்களுக்கு
அரசாகி	ராஜாவாயிருந்து(பிறகு)
இமையோர்	நித்ய ஸூரிகள்
இறைஞ்ச	திருவடிகளில் வணங்கும்படியாக
வாழ்வாரே	வாழ்வர்கள். (கo)

வ்யா.—பத்தாம்பாட்டு. (கருமாமுகிலித்யாதி) நீர்கொண்டெழுந்தகாளமேகங்கள்வந்து தோயும்படி ஓங்கினமாடங்களையுடைத்தான திருக்கண்ணபுரத்திலே என்ஸ்வாமியைக் கவிபாடிற்று. பெரிய பிராட்டியாருடைய முழுநோக்குக்கு இலக்கானபடியாலே "அருள்மாரி" என்றதுதன்னையே திருநாமமுடையரானாராயிற்று. ஜலஸம்ருத்தியையுடைத்தான திருவாலி நாட்டையுடையவர்.

என்று மொக்க உண்டாய், குறைவறவர்ஷிப்பதான புயலுண்டாகிலாயிற்று இவர் கைக்கு ஒப்புச் சொல்லலாவது. என்று மொக்கக் குறைவறக் கொடுக்கிறவர்க்கு காதாசித்கமாகத் தோற்றி ப்ராதேசிகமாக வர்ஷிக்கிறது ஒப்பாகமாட்டாதே. திருமங்கைக்கு

அரு.—பத்தாம்பாட்டு. (கருமாமுகிலித்யாதி) "புயல்"என்று-மேகமாய், அத்தை, "மருவார்" காலத்தோடு பொருந்துதலாலே பூர்ணமான வென்ற

ராஜாவான ஆழ்வார் ஒலியையுடைத்தாம்படி அருளிச்செய்த இத்திருமொழியை வல்லார். (இருமாநிலத்துக்கரசாகி) (க) "𑌭𑍌𑌮𑌂 𑌮𑌨𑍋𑌰𑌥𑌂 𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑍍𑌯𑌂 - பௌமம் மநோரதம்ஸ்வர்க்யம்" என்கிறபடியே அலங்காரங்களை யெல்லாம் பெற்று. (இமையோ ரிறைஞ்சவாழ்வாரே) இவ்வளவிலே போகாதே, பரமபதத்திலே போய்ப் புக்கு (உ) "பதியினில் பாங்கினில்" என்கிறபடி நித்யஸூரிகள் திருவடிகளிலே விழும்படியான பேற்றைப்பெறுவர். .... (க௦)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

பெரியதிருமொழி
எட்டாம்பத்து ஆறாந்திருமொழி முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளேசரணம்.

பெரியதிருமொழி எட்டாம்பத்து ஏழாந்திருமொழி
வியமுடையின் ப்ரவேசம்.

அவ.—"வருந்தாதிரு" என்றார், என்னவாசிகண்டு வருந்தாதிருப்பதென்ன; பரமபதம் நமக்கு ப்ராப்யமாகிறதும் ப்ராப்யனானவன் நித்யவாஸம் பண்ணுகையாலேயன்றோ? ஆனபின்பு பிராட்டிமாரோடு சேதநரோடு ப்ரஹ்மாதிகளோடு வாசியற எல்லார்க்கும் ஒக்கப்ப்ராப்யனானவன்றான் தனக்கு ப்ராப்யமென்று விரும்பி வர்த்

விசேஷித்ததுக்குக்கருத்து (என்றுமொக்கவித்யாதி). (அலங்காரங்களை) என்றது-சத்ர சாமராதி ராஜசிஹ்நங்களை. ... ... (க௦)

ஜீயர் திருவடிகளே சரணம்.

அரு.—வியமுடையின்ப்ரவேசம். கீழ்த்திருமொழியிலே திருக்கண்ணபுரத்தை ப்ராபகமாகத் தொழச்சொன்னார்; இதில் ப்ராப்யமென்கிறாரென்று விவக்ஷித்து ஸங்கதி யருளுகிறார் (வருந்தாதித்யாதி). (என்னவாசி) என்றது-திருக்கண்ணபுரத்தை ப்ராபகமென்னவே ப்ராப்யமான பரமபதம் கைபுகுந்ததோ வில்லையோவென்கை. ... ... *

(க)

(உ) தி-வாய்-க௦-க-க௦.

திக்கிற தேசம் திருக்கண்ணபுரம்; ஆனபின்பு நமக்கும் அவ்விடமே ப்ராப்யமென்று அத்தேசத்தை அநுபவிக்கிறார். .... *

மூ.—வியமுடைவிடையின முடைதர மடமகள்
குயமிடைதடவரை யகலமதுடையவர்
நய†முடைநடையன மிளையவர் நடைபயில்
கயமிடைகணபுர மடிகள்தமிடமே. (௧)

பதம்.	உரை.	பதம்.	உரை.
இளையவர்	(திருக்கண்ணபுரத்தில் வர்த்திக்கும்)ஸ்த்ரீகளுடைய	விடை இனம்	எழுவ்ருஷபங்களும்
நடை	நடையழகை	உடைதர	முறியும்படியாகப்பண்ணி (அதனால்)
பயில்	(கற்றுக்கொண்டு)பழகி	மடமகள்	ஆத்மகுணோபேதையானநப்பின்னைப்பிராட்டியின்
நயம்உடை	ஆநந்தத்தை விளைவிக்குமதான	குயம்	ஸ்தநங்களாலே
நடை	நடையழகையுடைய	இடை	நெருக்கப்பட்டதாய்,
அனம்	ஹம்ஸங்களையுடையதான	தடம்	விசாலமான
கயம்	பொய்கைகளாலே	வரை	மலைபோலிருக்கிற
இடை	வ்யாப்தமான	அகலமது	திருமார்வை
கணபுரம்	திருக்கண்ணபுரமான	உடையவர்	உடையவரான,
வியம்	வேறுபாட்டை [து,	அடிகள்தம்	நமக்கு ஸ்வாமியான கண்ணனுடைய
உடை	உடையதுகளான	இடம்	வாஸஸ்தாநம். (௧)

வ்யா.— முதற்பாட்டு. (வியமுடை விடையினமுடைதர) "வியம்" என்று வேறுபாடு. அதாகிறது - கம்ஸப்ரேரிதமாய் வந்த வையிறே. அன்றிக்கே, "வியம்" என்று - ஒக்கமாய், பயாவஹமாம்படி மலைபோலே பெரியவடிவை யுடைத்தாயிருந்தபடியைச் சொல்லுதல். இப்படியிருக்கிற வ்ருஷபங்களேழும் பசளைக்கலம்போலே யுடைய. (மடமகளித்யாதி) ஆத்மகுணோபேதையான நப்பின்னைப் பிராட்டியுடைய குயங்களுண்டு - குசங்கள்; திருமுலைத்தடங்கள். அவைநெருக்குகிற மலைபோலே அகன்ற திருமார்பையுடையவன்.

அரு.—முதற்பாட்டு. (வியமுடையித்யாதி) (பசளைக்கலம்) பச்சைப்பானை. (அவைநெருக்குகிற) என்றது - அவற்றாலே நெருக்குண்டிடவென்ற

---

† அரும்பதாநுகுணமாக "நயமடநடை" என்றிருக்கவேணும்.

அன்றிக்கே, "குயமுடை" என்று பாடமானபோது, "குயமுடைத் தடவரை" என்கிறதை மெலித்து "குயமுடைதடவரை" என்று கிடக்கிறது.

(நயமித்யாதி) கண்டார்க்கு ஆகர்ஷகமாம்படி தர்ஶநீயமான நடையையுடைத்தான அன்னங்களானவை அங்குத்தை ஸ்த்ரீகளுடைய நடையிலேகுருகுலவாஸம்பண்ணாநிற்குமாயிற்று. (கயமிடை கணபுரமடிகள்தமிடமே) பொய்கைகளாலே நெருங்கியிருந்துள்ள திருக்கண்ணபுரம் நமக்கு ஸ்வாமியானவனுடைய வாஸஸ்தாநம்.

மூ.—இணைமலிமருதினொடெரு திறவிகல்செய்து
துணைமலிமுலையவள் மணமிகு கலவியுள்
மணமலிவிழவினொடடியவரளவிய
கணமலிகணபுரமடிகள்தமிடமே. (உ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
மணம்	கல்யாணகுணங்கள்	இற	இற்றுவிழும்படியாக (நடந்தவனாய்,)
மலி	மேன்மேல் உண்டாகும்படியான	துணைமலி	அதிகமான சேர்த்தி அழகையுடைய
விழவினொடு	திருநாளிலே	முலையவள்	ஸ்தநங்களை யுடையளான நப்பின்னைப் பிராட்டியினுடைய
அளவிய	அந்யோந்யம் கலந்திருக்கிற	மணமிகு	ஸ்வயம் வரத்திலுண்டான
அடியவர்	ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய	கலவியுள்	ஸம்ஶ்லேஷத்தில் (ஆசையாலே)
கணம்	ஸமூஹத்தாலே	எருதினொடு	வ்ருஷபங்களோடே
மலி	வ்யாப்தமான [து,	இகல்	யுத்தத்தை
கணபுரம்	திருக்கண்ணபுரமான	செய்து	பண்ணினவருமான
இணைமலி	நன்றாய் சேர்த்தியையுடைத்தான		
மருது	மருதவ்ருக்ஷங்களானதுகள்		

அடிகள்தம்இடமே. (உ)

படி. (மெலித்து) மெல்லொத்தாக்கி.

"நயம்" என்றுரஞ்ஜநீயதையும் "மடம்" என்று - மடப்பத்தையுமுடைய நடைஎன்று லக்ஷணயா இவ்வர்த்தம் விவக்ஷித்தருளுகிறார் (கண்டார்க்கித்யாதி). ... ... (க)

வ்யா.—இரண்டாம்பாட்டு. (இணைமலி) சேர்த்திமிக்கிருந்துள்ள மருதுகளானவை. இரண்டும் தன்னிலொன்றென்னலாம்படி க்ருதஸங்கேதமாய்ப் பொருந்திநிற்கிற மருதுகள், இவன் தவிழ்ந்து போகிற போக்கிலே இற்றுவிழும்படி. (எருதித்யாதி) ருஷபங்களோடேகூட யுத்தம்பண்ணி, சேர்த்தி அழகு மிக்கிருந்துள்ள முலைத்தடங்களையுடைய நப்பின்னைப் பிராட்டியுடைய ஸ்வயம்வரத்திலுண்டான ஸம்ஶ்லேஷம் பெறுகைக்காக. (மணமித்யாதி) கல்யாணங்கள் மேன்மேலுண்டாகிற திருநாளிலே; அன்றிக்கே, "மணம்" என்று கைகோக்கைக்குப்பேராய், நெருங்கக்கோத்துக்கொண்டு ஸேவித்து நிற்கிற திருநாளிலே. (அடியவரளவியகணமலிகணபுரம்) ஶ்ரீவைஷ்ணவர்களுடைய நெஞ்சுகலந்த திரள் மிக்கிருந்துள்ள திருக்கண்ணபுரம். மணமிக்க உத்ஸவத்துடனே அடியவர்கூடின வென்றுமாம். (௨)

மூ.—புயலுறுவரைமழை பொழிதரமணிநிரை
மயலுறவரைகுடை யெடுவியநெடியவர்
முயல்துளர்மிளைமுயல்துளவள விளைவயல்
கயல்துளுகணபுரமடி கள்தமிடமே. (௩)

பதம்.	உரை.	பதம்.	உரை.
முயல் துளர்	யத்நியாநின்ற களைக்கொட்டுகளை (உடையவர்கள் முகத்திலே)	மிளை	சிறுதூறிலிருந்து) புறப்பட்ட)
		முயல்	முசல்களானதுகள்
		துள	துள்ளும்படியாகவும்,

அரு.—இரண்டாம்பாட்டு. (இணையித்யாதி). கீழ்ப்பாட்டிலே நப்பின்னைப்பிராட்டியும் தானுமாயிருக்கிற சேர்த்தியிலே அடிமைசெய்கிற * மதிமுக மடந்தையர் உண்டாகையாலே வைகுந்தமாநகர்போலே ப்ராப்யமாயிருந்ததென்று அநுபவித்தார்; இதில் இவ்விருவருமான சேர்த்தியிலே * அடியார் குழாங்கள் அடிமைசெய்கிறபடி யுண்டாகையாலே ப்ராப்யமென்றநுபவிக்கிறாரென்று ஸங்கதி.

"இகல்" என்றதினர்த்தம் - யுத்தமென்றது. (பெறுகைக்காக) என்றதுக்கு (பண்ணி) என்ற கீழ்பதத்தோடே அந்வயம். (கல்யாணங்கள்) ஒப்பனையால் வந்தரூபகுணங்கள். "அளவிய" என்றதுக்கு அந்யோந்யம் கலந்திருக்கையாக வருளிச்செய்து, திருநாளோடு கலக்கையாக அர்த்தாந்தரமருளுகிறார் (மணமித்யாதி). "மணமலிவிழவினொடு அடியவரளவியகணமலி கணபுரம்-இணைமலிமருதிற நடந்து - துணைமலிமுலையவள் மணமிகுகலவியுளாசையாலே, எருதினோடு-இகல்செய்திருக்கிறவடிகள்தமிடமே" என்று சில பதங்களைக் கூட்டிக்கொண்டு அந்வயம் கண்டுகொள்வது. ... ... (௨)

வளம்	அழகானது [யான	மணி	(க்ருஷ்ணனையே ரக்ஷகனாகப் பெறுதலாகிற) அழகையுடைய
விளை	விளையும்படி நேர்த்தி		
வயல்	கழனிகளில் (உழுகிறவர்கள்முகத்திலே)		
கயல்	மத்ஸ்யங்களானதுகள்	நிரை	பசுக்கூட்டமானது
துளு	துள்ளும்படியாகவுமிருக்கிற	மயல்	(புத்தியில்) மயக்கத்தை
கணபுரம்	திருக்கண்ணபுரமான	உற	அடைந்து (கலங்குமளவில்)
புயல்	மேகங்களில் [து,		
உறு	(இந்த்ரன்) ப்ரவேசித்து	வரை	கோவர்த்தநமலையை
		எடுவிய	எடுத்தவனாய்
வரை	கல்மயமான	நெடியவர்	ஜகத் ரக்ஷணத்தில் முக்க்யனான
மழை	மழையை		
பொழிதர	வர்ஷிக்கும்போது		அடிகள்தம் இடமே. (௩)

வ்யா.—மூன்றாம்பாட்டு. (புயலித்யாதி) மேகத்திலேபோய் புக்கொன்றி, அவன் கல்வர்ஷத்தைவர்ஷிக்க, இந்த்ரன் கருத்தைப் பின்சென்று வர்ஷிக்குமத்தனையிறே. (மணிநிரைமயலுற) தன்னையே ரக்ஷகனாக வுடைத்தாயிருந்துள்ள பசுநிரையானது அறிவு கெட்டுக்கலங்க. "மணி" என்று - அழகாய், அதாகிறது - அவனும் ரக்ஷிக்கத்தானும் ஒருதலைபற்றுகையன்றிக்கே அவனே ரக்ஷகனாம்படியிருக்கை. மலையைக் குடையாகவெடுத்துப் பரிஹரித்து ரக்ஷணத்தில் தன்னை எண்ணினால் பின்னை ஒருவரில்லாதபடி யிருக்கிறவர்.

அரு.—மூன்றாம்பாட்டு.(புயலித்யாதி) கீழ்ப்பாட்டில், அடியார்கள்குழாங்களையுடைய தேசம்போலே ஸ்ரீவைஷ்ணவ ஸம்ருத்தியையுடைய தேசமென்றநுபவித்தார். திருவுள்ளமானது-(௧)"బహుధాస న్తతదుఃఖవర్షిణి - பஹுதாஸந்தத துஃக்கவர்ஷிணீ" என்கிறபடியே ஈப(ஶ்)வ துர்திநமேநடையாடுகிற லீலாவிபூதியிலே யிருக்கிற கண்ணபுரத்தை ப்ராப்யமென்கிறபடியென்னென்ன; அரியனசெய்து அவ்வர்ஷத்தைப் போக்குவானுள்ள தேசமாகையாலே ப்ராப்யமென்னக் குறையில்லை யென்கிறாரென்று ஸங்கதி.

இந்த்ரன் மேகத்திலேபோய் புகுகையாவதென்னென்ன வருளிச்செய்கிறார் (இந்த்ரனித்யாதி). நெடியவரென்றதுக்குத் தாத்பர்யமருளுகிறார் (ரக்ஷணத்திலித்யாதி).

---

(௧) ஸ்தோத்ரரத்நம்-௪௧.

(முயல் துள்ர்மிளைமுயல் துள) யத்நியாநின்றுள்ள துளருண்டு களைக்கொட்டு; அத்தைக்கொண்டு களைபறிக்கிறவர்கள் முகத்திலே, மிளையுண்டு-சிறுதூறு, அதில் நின்றும் புறப்பட்ட முயல்களானவை இவர்கள் முன்னே துள்ளுமாயிற்று. (வளவிளைவயல்) அழகிய வயலிலே உழுகிறவர்கள் முகத்திலே கயல்கள் துள்ளாநிற்குமாயிற்று, குறுஞ்சிநிலமும், மருதநிலமும் கலந்தாப்போலே காணுமிருப்பது.

மூ.—ஏதலர்நகைசெய விளையவரளைவெணெய்
போதுசெய்தமரிய புனிதர்நல்விரைமலர்
கோதியமதுகரம் குலவியமலர்மகள்
காதல்செய்கணபுர மடிகள்தமிடமே. (௪)

பதம்.	உரை.
நல்	நல்லதான
விரை	பரிமளத்தையுடைய
மலர்	பூவில் (இருக்கிற மதுவை)
கோதிய	பாநம்பண்ணின
மதுகரம்	வண்டுகளாலே
குலவிய	சூழப்பட்ட
மலர்மகள்	பூவையிருப்பிடமாகவுடைய பெரிய பிராட்டியார்
காதல்செய்து	விரும்பிவர்த்திகும்படியான [து
கணபுரம்	திருக்கண்ணபுரமான

பதம்.	உரை.
ஏதலர்	சத்ருக்களான சிசுபாலாதிகள்
நகைசெய	சிரிக்கும்படியாக
இளையவர்	பெண்களால்
அளை	கடைந்துவைத்த
வெணெய்	வெண்ணெயை
போதுசெய்து	அமுதுசெய்து
அமரிய	பூர்ணனாய்
புனிதர்	புனிதருமான

அடிகளதம் இடமே. (௪)

(முகத்திலே) என்றதின்விவரணம் (முன்னே) என்றது. முயல்துள்ளுதலையும், கயல்துள்ளுதலையும் சொல்லுகிறவர்க்குத் தாத்பர்யமென்னென்ன வருளுகிறார் (குறுஞ்சியித்யாதி). (குறுஞ்சி)மலைச்சார்பு-கொல்லைநிலமென்கை.

அநு.—நாலாம்பாட்டு. (ஏதலரித்யாதி) கீழ்ப்பாட்டில் துஃக்கவர்ஷத்தைப் போக்குமவன் நிற்கையாலே ப்ராப்யதேச மென்னுகின்றீர்; நமக்கு கிஞ்சித்கரிக்கப் பெற்றாலிறே நமக்கு ப்ராப்யதேசமாவதென்ன; அதுக்குக் குறையுண்டோ? அவன் ஆஶ்ரித கரஸ்பர்ஶமுள்ளதிலே அபிநிவிஷ்டனன்றோ? நமக்கு கிஞ்சித்கரிக்கைக்கு உறுப்பாக பிராட்டி விரும்பிவர்த்திக்கிறவிடமென்றருளுகிறாரென்று' ஸங்கதி.

வ்யா.—நாலாம்பாட்டு. (ஏதலர்நகைசெய) சத்ருக்களுண்டு சிசுபாலாதிகள்; அவர்கள் சிரிக்கும்படியாகபெண்கள் அளைந்த வெண்ணெயை அக்காலத்திலே அமுதுசெய்து அதுதனக்கு தா (ध) ரகமாயிருந்த விருப்பில் புரையற்றிருக்குமவன். (நல்விரையித்யாதி) மிக்கபரிமளத்தை யுடைத்தான பூவில் மதுபானம் பண்ணின வண்டுகளானவை தந்தாம் செருக்காலே அவற்றைக்கோதி, அது - ஆத்தஸாரமானவாறே அத்தை விட்டுப்போந்து கொண்டாடிச் சூழப்பரவாநின்றுள்ள பூவை இருப்பிடமாகவுடைய பெரியபிராட்டியார் விரும்பி வர்த்திக்கிற திருக்கண்ணபுரம் புநிதான வடிகளுக்கு ஸ்தாநம்.

மூ.—தொண்டருமமரரும் முனிவரும் தொழுதெழ
அண்டமொடகலிடமளந்த வரமர்செய்து
விண்டவர்படமதிளிலங்கை முன்னெரியெழக்
கண்டவர்கணபுரமடிகள்தமிடமே. (ரு)

பதம்.	உரை.
கணபுரம்	திருக்கண்ணபுரமானது
தொண்டரும்	ஸ்ரீ வைஷ்ணவர்களும்
அமரரும்	ப்ரஹ்மாதிதேவர்களும்
முனிவரும்	ஸநகாதிருஷிகளும்
தொழுது	பணிந்து
எழ	உஜ்ஜீவிக்கும்படியாக
அண்டமொடு	ஆகாசத்தோடே
அகலிடம்	பூமிப்பரப்படங்கலும்
அளந்தவர்	அளந்தவனாய்,
அமர்	யுத்தத்தை

பதம்.	உரை.
செய்து	செய்து,
விண்டவர்	சத்ருக்கள்
பட	முடியும்படியாகவும்
முன்	முன்பு
மதிள்	மதிளையுடைத்தான
இலங்கை	இலங்காநகரத்தை
எரி	அக்நியானது
எழ	கிளர்ந்து வ்யாபரிக்கும்படியாகவும்
கண்டவர்	பண்ணினவனுமான அடிகள்தம்இடமே. (ரு)

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (தொண்டருமித்யாதி) ஸ்ரீவைஷ்

(ஆடி) என்றவநந்தரம் "அவைகள்" என்றுசேஷம். ... ... (ச)

அந.—அஞ்சாம்பாட்டு. (தொண்டருமித்யாதி). கீழ்ப்பாட்டில் பெண்கள் அளைந்த வெண்ணெயமுதுசெய்தானென்னாநின்றீர்; "அவர்கள் அவனையல்லது அறியாதபடி மிகவும் வ்யாமுக்தரன்றோ? நாம் கிஞ்சித்கரிக்கும்போது தாத்ருஶப்ரேமம் பிறக்கமாட்டாமையாலே செய்ததுகுற்றமாய் விழாதோ" என்று அஞ்சினநெஞ்சுக்கு அவன்ப்ரயோஜநாந்தரபரனுக்காகத் தன்னை இரப்பாளனாக்கியும், அவர்களை அழித்தும் செவ்வையாகப் பரியுமவனாயிருப்பானொருவன், அதுக்கு நமக்கஞ்சவேண்டா வென்கிறாரென்று ஸங்கதி.

ணவர்களும் ப்ரஹ்மாதிகளும் ஸநகாதிகளும் தொழுது உஜ்ஜீவிக்கும்படியாக அந்தரிக்ஷத்தோடே பூமிப்பரப்பை அளந்தவர். (அமர் செய்து) பூசல்செய்து.(க) "த்விதாபஜ்யேயம்-த்விதாபஜ்யேயம்" என்று பொருந்தாமையிலே நின்றவர்கள் முடிய; ப்ரஹ்மாதிகளுக்கும் கூடக்கணிசிக்கவரிதான ஊரை அக்நியானதுகிளர்ந்து வ்யாபரிக்கும்படி பண்ணினவர். .... (ரு)

மூ.—மழுவியல்படையுடையவனிடம் மழைமுகில்
தழுவியவுருவினர் திருமகள்மருவிய
கொழுவியசெழுமலர் முழுசியபறவைபண்
எழுவியகணபுரமடிகள்தமிடமே. (சு)

பதம்.	உரை.	பநர்.	உரை.
திருமகள்	பெரியபிராட்டியார்	உடையவன்	உடையவனான எம்பெருமானுக்கு
மருவிய	நித்யவாஸம் பண்ணுகையாலே இளமையையுடையதாய்,	இடம்	வாஸஸ்தாநமுமான
கொழுவிய	ஶ்லாக்க்யமானதாய்	கணபுரம்	திருக்கண்ணபுரமானது
செழு	அழகியதான		
மலர்	புஷ்பங்களிலே	மழை	ஜலத்தாலே(ஸம்ருத்தமான)
முழுசிய	மூழ்கிக்கிடக்கிற		
பறவை	வண்டுகளுடைய	முகில்	மேகம்போலே
பண்	கா ([illegible]) நத்தாலே	தழுவிய	ஶ்ரமஹரமான
எழுவிய	வ்யாப்தமாய், [தை	உருவினர்	திருமேனியையுடையனான
மழுவு	மழுவுஎன்கிற ஆயுதத்		
இயல்படை	விதேயமான ஆயுதமாக		அடிகள்தம் இடமே. (சு)

வ்யா.—ஆறும்பாட்டு. (மழுவித்யாதி) மழுவைத் தனக்கு

"விண்டவர்" என்றது-நெஞ்சுவிண்டவரென்றாய், சத்ருக்களைச்சொல்லுகிறதென்றருளிச் செய்கிறார் (த்விதேத்யாதி). ... ... (ரு)

அந.—ஆறும்பாட்டு. (மழுவித்யாதி) அவன்கலந்து பரியாறும் ஆஶ்ரிதவ்யாமுக்தனுகிலும், ஒருதலைக்காமமாய் விழாதோ? இத்தலையிலும் ப்ரேமம் விளையவேண்டாவோவென்ன; அதுக்கு அவன் திருமேனியைக் காணவே ஸகலதாபங்களும் தீர்ந்து காதலும் கடல்புரைய விளையுமென்கிறாரென்று ஸங்கதி.

(க) ரா-யு-ஙசு-கக.

விதேயமான ஆயுதமாக வுடையவனுடைய ஸ்தாநம். (மழைமுகிலித்யாதி) மேகம்போலே ஶ்ரமஹரமான வடிவையுடையவர். (திருமகளித்யாதி) பெரிய பிராட்டியார் நித்யவாஸம் பண்ணுகையாலே இளைதாய் கொழுவியதாய் அழகியதான பூவிலே முழுகின வண்டினுடைய பண்கிளர்ந்த திருக்கண்ணபுரம் அடிகள்தமிடமே. (௬)

மூ.—பரிதியொடணிமதி பனிவரைதிசைநிலம்
எரிதியொடெனவினவியல் வினர்செலவினர்
சுருதியொடருமறை முறைசொலுமடியவர்
கருதியகணபுர மடிகள்தமிடமே. (௭)

பதம்.	உரை.
சுருதியொடு	நல்லஸ்வரத்தையுடை
அரு	அரிதாயிருக்கிற [த்தான
மறை	வேதங்களை
முறை	முறையிலே
சொலும்	சொல்லாநிற்கிற
அடியவர்	தாஸஜநங்களாலே
கருதிய	ப்ராப்யமென்று விரும்பப்பட்ட
கணபுரம்	திருக்கண்ண புரமான
பரிதியொடு	ஸூர்யனுடன் [து
அணி	அழகான
மதி	சந்தரன்,
பனிவரை	ஹிமவான் முதலான குலபர்வதங்கள்
திசை	திக்குக்கள்
நிலம்	பூமி
எரி	ஜ்வலியாநின்ற
தீ	அக்நி
என	என்றுசொல்லப்படுகிற
இன	இப்படிப்பட்டபதார்த்தங்களை
இயல்வினர்	ப்ரகாரமாக உடையராய்
செலவினர்	நடத்திக் கொண்டு போருகிறவரான
	அடிகள்தம்இடமே. (௭)

வ்யா.—ஏழாம்பாட்டு. (பரிதியித்யாதி) ஆதித்யனோடே தர்ஶநீயமான சந்த்ரன், குலபர்வதங்கள், திக்குக்கள், பூமி, எரிகிற அக்நி

“மழுவியல் படையுடையவனுடைய விடமான கணபுரமடிகள்தமிடம்” என்றந்வயம். ... ... (௬)

அநு.—ஏழாம்பாட்டு. (பரிதியித்யாதி) அவன்திருமேனி நமக்குக் காதல் விளைக்குமென்றாலும் போனகாலத்திலே நாம் விமுகராய்ப் போந்தபடியை நினைத்தால் அச்சமாயிருக்கிறதேயென்ன; அத்தசையிலும் நம்மைவிடமாட்டாதே ஸர்வவ்யாபகனாய் ஆபி (௩) முக்க்யம் பார்த்திருந்தானவனென்று சொல்லாநின்றுகொண்டு அடியவர் பலரும் நமக்கு உசாத்துணையுண்டாகையாலே நமக்குப் பூர்வவ்ருத்தத்தை நினைக்கவும் விரகில்லையென்கிறாரென்று ஸங்கதி.

என்று சொல்லப்படுகிற இப்படிப்பட்ட பதார்த்தங்களைத் தமக்கு ப்ரகாரமாகவுடையராய் நடத்திப்போருகிறவர். இத்தால் ஜகதாகாரதையைச் சொன்னபடி. (சுருதியித்யாதி) நல்ல ஸ்வரத்தையுடைத்தாய் தன்னைப்பெறிலும் பெறவரிதாயிருக்கிற வேதங்களை "அவன்சேஷி, நாம் சேஷபூதர்" என்றிருக்கிறமுறையிலேசொல்லுகிற அடியார்தங்களுக்குப்ராப்யமென்று புத்திபண்ணி வர்த்திக்கிற திருக்கண்ணபுரம். (௧) "வேதநாவர் விரும்பும் திருக்கண்ணபுரம்" என்னக்கடவதிறே. .... (௭)

மூ.—படிபுல்குமடியிணைப் பலர்தொழமலர்வைகு
கொடிபுல்குதடவரை யகலமதுடையவர்
முடிபுல்குநெடுவயல் படைசெலவடிமலர்
கடிபுல்குகணபுர மடிகள்தமிடமே. (௮)

பதம்.	உரை.	பதம்.	உரை.
முடி	நாத்துமுடிகளோடே	படி	பூமியை
புல்கு	கூடியிருக்கிற	புல்கும்	அளந்துகொண்ட
நெடு	விசாலமான	அடியிணை	திருவடிகளை
வயல்	வயல்களிலே	பலர்	ஸகலரும்
படை	கலப்பையை	தொழ	ஆஶ்ரயிக்கும்படியாக,
செல	நடத்தியதாலும்	மலர்வைகு	பெரியபிராட்டியாரா
அடி	காலாலே	கொடி	லே
செல	குழப்புவதாலும் (அரு	புல்கு	ஆஶ்ரயிக்கப்பட்டதா
	கிருந்த)	தடம்	விசாலமான [ய்
மலர்	தாமரைப்பூக்களுடை	வரை	மலைபோலிருப்பதுமா
கடி	பரிமளத்தாலே [ய	அகலமது	திருமார்வை [ன
புல்கு	வ்யாப்தமான [து	உடையவர்	உடையனான
கணபுரம்	திருக்கண்ணபுரமான	அடிகள்தம் இடமே. (௮)	

"பனிவரை" என்று ஹிமவானைச் சொன்னது உபலக்ஷணமாயருளுகிறார் (குலேத்யாதி). இயல்வு - ஸ்வபாவமாய், அதினர்த்தம் (ப்ரகாரேத்யாதி) "செலவினர்" என்றதுக்கர்த்தம்(நடத்தியித்யாதி). (தன்னை)ப்ரதிபாத்யனான ஈஶ்வரனையென்றபடி. ... ... (௭)

அநு.—எட்டாம்பாட்டு. (படியித்யாதி) பூர்வவ்ருத்தத்துக்கும் நினைக்க விரகில்லை யென்னவே நெஞ்சு உகந்து, நாம்கிஞ்சித்கரித்து உஜ்ஜீவிப்போமென்று நினைத்து கிஞ்சித்கரிக்க உபகரணங்கள் வேணுமேயென்ன; அவற்

---

(௧) தி-வாய்-௯-௧௦-௧.

வ்யா.-எட்டாம்பாட்டு. (படியித்யாதி) "படி" என்று-பூமி; அத்தை புல்கும் அடியிணையுண்டு-பூமிப்பரப்பை அளந்துகொண்ட திருவடிகள். (க) "ஸ்ஜ்ஜஸ்ராணாம்- ஸங்கைஸ்ஸூராணும்" என்கிறபடியே அவற்றை யெல்லாருமொக்க விருந்ததே குடியாக ஆஸ்ரயிக்க; மலர்வைகு கொடியுண்டு - பெரியபிராட்டியார், அவள் விரும்பி அணையாநின்றுள்ள பெரியவரை போன்றிருந்த மார்வையுடையவர். (முடியித்யாதி) நடுகைக்காக எங்குமொக்கப் பரப்பிக்கிடக்கிற முடிகளையுடைத்தான பரந்தவயலிலே கலப்பையைக் கொடுபுக்குநடத்தி. (அடிசெல) அடைவிலே காலாலே ஒருகால்குழப்புவர்கள். அவ்வளவிலே இடையிலே தப்பிக்கிடந்த தாமரைப்பூவானது பரிமளத்தைப் புறப்படவிடாநிற்குமாயிற்று. .... (அ)

மூ.—புலமனுமலர்மிசை மலர்மகள்புணரிய
நிலமகளெனவின மகளிர்களிவரொடும்
வலமனுபடையுடை மணி வணர்நிதிகுவை
கலமனுகணபுரமடிகள் தமிடமே. (கூ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
நிதிகுவை	பொற்குவைகளையுடைத்தான	புலன்	இந்த்ரியங்களானதுகள்
கலம்	மரக்கலங்களாலே	மனு	அழுந்தி கிடக்கும்படியாக (அழகையுடைய)
மனு	வ்யாப்தமான [து		
கணபுரம்	திருக்கண்ணபுரமான		

ருக்கும் குறைவில்லை. திருவுலகளந்த * பத்தியுழவன் அடிபட்ட ஆஸ்ரித முக கமலங்களோபாதி அவ்வூரில் உழவரடியாலு மடிபட்ட தாமரைப்பூ பரிமளம் அலையெறியாநிற்கும்; வேண்டினபடி இருவருமான சேர்த்தியிலே அடிமைசெய்யலாமென்று திருவுலகளந்த அபதாநத்தையும் பிராட்டியோட்டைச் சேர்த்தியையும் தாமரைகளின் ஸம்ருத்தியையும் அருளிச்செய்கிறரென்று ஸங்கதி.

மலரிலே வைகு-வர்த்திக்கிற கொடியென்று சப்தார்த்தமாயருளிச்செய்கிறர் (மலரித்யாதி). (முடிகளை) நாத்துமுடிகளை. "செல" என்றத்தை "படை" என்றத்தோடந்வயித்தது மாத்ரமன்றிக்கே "அடி" என்றத்தோடும் அந்வயித்துக்கொள்வதென்று திருவுள்ளம்பற்றி ப்ரதீக க்ரஹணம் பண்ணுகிறர் (அடிசெல) என்று. ... ... (அ)

(க)

மலர்மிசை	புஷ்பத்தில் (நித்யவாஸம்பண்ணாநிற்கிற)	மகளிர்கள்	ஸ்த்ரீத்வத்தையுடைய
		இவரொடும்	இவர்களோடும் [ரான
		வல	வலது திருக்கையிலே
மலர்மகள்	பெரியபிராட்டியார்	மனு	பொருந்தியிருக்கிற
புணரிய	நித்யஸம்ஶ்லிஷ்டையாயிருக்கிற	படை	திருவாழியை
		உடை	உடையனுமாய்,
நிலமகள்	ஶ்ரீபூமிப்பிராட்டியார்	மணி	நீலமணிபோலிருக்கிற
எனவின	என்றிப்படி சொல்லப்படுகிற	வணர்	நிறத்தையுடையனான
			அடிகள்தம்இடமே. (௯)

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (புலனித்யாதி) கண்டாருடைய இந்த்ரியங்கள் பிணிப்புண்ணும்படியாயிருக்கிற மலரைத் தனக்கிருப்பிடமாகவுடையளாயிருக்கிற பெரியபிராட்டியார், தன்னோடு நித்யஸம்ஶ்லிஷ்டையாயிருக்கிற ஶ்ரீபூமிப்பிராட்டி யென்றிப்படி சொல்லப்படுகிற நிருபாதிக ஸ்த்ரீத்வத்தை யுடையராயிருக்கிற இவர்களோடும், வலத்திருக்கையிலே மன்னுநின்றுள்ள திருவாழியை யுடையனுமாய், நீலமணிபோலே குளிர்ந்திருந்துள்ள வடிவையுடையவர். பொற்குவைமாறாத மரக்கலங்களையுடைய திருக்கண்ணபுரம். கடலொரு புறமாயிருக்கும்போலே காணும். .... (௯)

மூ.—மலிபுகழ்கணபுரமுடைய வெம்மடிகளை
வலிகெழுமதிளயல் வயலணிமங்கையர்
கலியனதமிழிவை விழுமியவிசையினொடு
ஒலிசொலுமடியவ ருறுதுயரிலரே. (௧௦)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

◆

பதம்.	உரை.	பதம்.	உரை.
வலி	தார்ட்ட்ய (த்ருட) த்தாலுண்டான	வயல்	வயல்களாலே
		அணி	அலங்கரிக்கப்பட்ட
கெழு	பெருமையை யுடைய	மங்கையர்	திருமங்கைக்கு நிர்வாஹகரான
மதிள்	மதிளினுடைய		
அயல்	ஸமீபத்திலே யிருக்கிற		

அரு.—ஒன்பதாம்பாட்டு. (புலனித்யாதி) கீழில் ஆராதனோபகரணமும் குறைவற்றதேசமாகையாலே ப்ராப்யமென்றநுபவித்தார்; இதில் இருவர்க்கும் கைங்கர்ய ப்ரதிஸம்பந்தி குறைவற்ற விஷயமென் றநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

"வணர்" என்றது-வண்ணரென்றாய் (வடிவையுடையவர்) என்றது.(௯)

கலியன	ஆழ்வாருடையதாய்	விழுமிய	அழகியதான
மலி	(பரமபதத்திற் காட்டில்) அதிகமான	இசையினோடு	ஸ்வரத்துடன்
புகழ்	புகழையுடைய	ஒலிசொலும்	அப்ய (ஸ) ஸிக்கவல்லரான
கணபுரம்	திருக்கண்ணபுரத்தை	அடியவர்	ஆஶ்ரிதர்கள்
உடைய	வாஸஸ்தாநமாகவுடைய	உறு	அநுபா(வ்ய)வ்யமாய் நேர்ந்திருக்கிற
எம்அடிகளை	என் ஸ்வாமிவிஷயமான	துயர்	பாபங்களை
தமிழ்இவை	இத்திருமொழியை	இலரே	அடையார்கள். (௧0)

வ்யா.—பத்தாம்பாட்டு. (மலிபுகழித்யாதி) பரமபதத்திற்காட்டில் மிக்க புகழையுடைத்தாயிருக்கிற திருக்கண்ணபுரத்தை வாஸஸ்தாநமாகவுடைய என்ஸ்வாமியைக் கவிபாடிற்று. வலிமிக்கிருந்துள்ள மதிளினருகே யுண்டான வயலாலே அலங்க்ருதமான திருமங்கைக்கு நிர்வாஹகரான ஆழ்வாரருளிச்செய்தவை. (விழுமியவிசையினொடு) அழகிய இசையோடேகூட. (ஒலிசொலுமடியவர்) இத்திருமொழியை வண்குறிஞ்சி என்று சொல்லுவர்கள். இத்தை அப்ப்யஸிக்குமவர்கள். (உறுதுயரிலரே) அவர்களுக்கு (க)"[illegible]- அவஶ்யமநுபோக்தவ்யம்" என்கிற பாபங்கள் கிட்டாது.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

பெரியதிருமொழி
எட்டாம்பத்து ஏழாந்திருமொழி முற்றிற்று.

அநு.—பத்தாம்பாட்டு. (மலிபுகழித்யாதி) "மலிபுகழ்" என்றதுக்கு ப்ரகரணோசிதமாகப் பரமபதத்திலும் ப்ராப்யபூமியென்னும் தாத்பர்யத்தையருளுகிறார் (பரமேத்யாதி). ... ... (௧0)

ஜீயர் திருவடிகளே சரணம்.

* * *

அநு.—வானோர்ப்ரவேசம். தொண்டருய்யும் வகையிலே திருக்கண்ணபுரத்துக்கு அநிஷ்ட நிவர்த்தகதயா ப்ராபகத்வத்தை யநுஸந்தித்து கீழ்த்திருமொழியிலே ப்ராப்யமென்றது ஸந்தித்தார். அவ்வளவுமன்றியே அவன் தானே உம்மைப் பெறவேணுமென்று திரியாநின்றான்; நீர் அவன்படியைக் காணீரென்று ஜ்ஞாநத்தை உண்டாக்குகையாலே அவன் படிகளையும் இத்தேசத்திலே கண்டேனென்று ஜ்ஞாநஸாதந்தயா அநுஸந்திக்கிறாரென்று

(க) ப்ருஹந்நாரதீ.

பெரியதிருமொழி

எட்டாம்பத்து எட்டாந்திருமொழி

வானோர் ப்ரவேசம்.

வ்யா.—வானோர், திருக்கண்ணபுரம் ப்ராப்யமென்றார்கீழ்; நமக்கு ப்ராப்யமென்னுமளவேயோ? அவன் அநாதிகாலம் எதிர்சூழல் புக்குத்தட்டித்திரிய நாம் அத்தை அறியாதே யிருந்துதிரிந்தநாளில் இழவெல்லாம் தீரும்படியான தேசமன்றோவென்கிறார்.

மூ.—வானோரளவும்முதுமுந்நீர் வளர்ந்தகாலம் வலியுருவில்
மீனாய்வந்து வியந்துய்யக்கொண்ட தண்தாமரைக்கண்ணன்
ஆனாவுருவிலானாய னவனையம்மா விளைவயலுள்
கானார்புறவில் கண்ணபுரத்தடியேன் கண்டுகொண்டேனே.

பதம்.	உரை.	பதம்.	உரை.
வானோரளவும்	தேவர்கள் எல்லையளவும்	கண்ணன்	திருக்கண்களையுடையனாய்
முது	பழமையான	ஆனா	அழியாத
முந்நீர்	ஸமுத்ரப்ரவாஹமானது	உருவில்	ஶரீரத்தை யுடைய
		ஆனாயன்	இடையனாயவதரித்த
வளர்ந்தகாலம்	வளர்ந்தகாலத்திலே	அவனை	அந்தகண்ணனை,
வலி	மிடுக்கையுடைத்தான	அம்	அழகிதாய்
உருவில்	ஶரீரத்தையுடைய	மா	பரப்பையுடைய
மீனாய்	மத்ஸ்யரூபமாய்	விளை	விளையும்படியான
வந்து	வந்தவதரித்து	வயலுள	வயல்களையுடைத்தாய்
வியந்து	(ரக்ஷகமாய்வைத்தகடலே வளர்ந்துவருவதைக்கண்டு) ஆஶ்சர்யப்பட்டு	கான் ஆர்	காடுகள் நிறைந்த
		புறவில்	பர்யந்தங்களையுடைத்தான
		கண்ணபுரத்து	திருக்கண்ணபுரத்திலே
உய்யக்கொண்ட	ஜகத்ரக்ஷணம் பண்ணின	அடியேன்	ஶேஷபூதனான அடியேன்
தண்	குளிர்ந்த	கண்டுகொண்டேனே.	காணப்பெற்றேன்.
தாமரை	தாமரைப்பூபோன்ற		(௧)

வ்யா.—முதற்பாட்டு. (வானோரித்யாதி) தேவர்கள் எல்லையளவும் செல்லக் கடல்வெள்ளம் பரந்தநாள், அத்தையடையத் தன்

ஸங்கதியை யருளுகிறார் (திருக்கண்ணபுரமித்யாதி).

னுடைய ஒருசெலுவிலே யடக்கவல்ல மிடுக்கையுடைய மத்ஸ்யமாய்வந்து. (வியந்துய்யக்கொண்ட) நாம் ரக்ஷகமாக விட்டகடல் தானே பாத(𑌬𑌾𑌧)கமாவதே? இருந்தபடி யென்னென்று விஸ்மயப்பட்டென்னுதல்; அன்றிக்கே வேறுபாட்டு. ஜகத்காரணபூதனை தான் ப்ரஹ்மாதிகளளவிலே தன்னை அமையவிட்டால் தான் நின்ற நிலைக்கு இதுசேராதாயிருக்குமிறே. அங்ஙனுமன்றிக்கே விஜாதீயமான வடிவையுடையனாகையாலே வந்த நெடுவாசியைச் சொல்லிற்றாகவுமாம். (தண்தாமரைக்கண்ணன்) (௧) "𑌮𑌤𑍍𑌸𑍍𑌯𑌃 𑌕𑌮𑌲𑌲𑍋𑌚𑌨𑌃 - மத்ஸ்யஃ கமலலோசநஃ" என்னக்கடவதிறே.

(ஆனாவுருவிலானாயன்) ஸதாஏகரூபமான வடிவை இதரஸஜாதீயமாக்கிக்கொண்டு வந்தவதரித்தவன். ஆனாதவுரு-கெடாதவுருவென்றபடி. அழகியதாய் பரந்திருந்துள்ள வயலையுடைத்தாய் கானார்ந்திருந்துள்ள பர்யந்தத்தை யுடைத்தான திருக்கண்ணபுரத்திலே. ஒருபுறம் காடாயிருக்கும்போலே காணும். (அடியேன் கண்டுகொண்டேனே) சேஷபூதனான நான் காணப்பெற்றேன். (௧)

மூ.—மலங்குவிலங்கு நெடுவெள்ளம் மறுகஅங்கோர்வரைநட்டு
இலங்குசோதியாரமுத மெய்துமளவோராமையாய்
விலங்கல்திரியத் தடங்கடலுள்சுமந்து கிடந்தவித்தகனை
கலங்கல்முந்நீர் கண்ணபுரத்தடியேன் கண்டுகொண்டேனே.

பதம்.	உரை.	பதம்.	உரை.
மலங்கு	மத்ஸ்யவிசேஷங்கள்	இலங்கு	(போனப்ராணன்களை மீட்கைக்கீடாய்) ப்ரகாசியாநின்ற
விலங்கு	தடுமாறும்படியாக		
நெடுவெள்ளம்	ஸமுத்ரவெள்ளமான		
மறுக	கலங்கும்படியாக [து	சோதி	தேஜஸ்ஸால்
அங்கு	(ஆழத்துக்கு அவதியில்லாத) அந்த ஸமுத்ரமத்யத்தில்	ஆர்	பூர்ணமான
		அமுதம்	அம்ருதமானது
		எய்துமளவு	தோன்றும் வரையில்
ஓர்	அத்விதீயமான	ஓர்	அத்விதீயமான
வரை	மந்தரபர்வதத்தை	ஆமையாய்	கூர்மரூபியாய்க் கொண்டு
நட்டு	நிறுத்தி		

அநு.—முதற்பாட்டு. (வானோரித்யாதி) (செலுவிலே) கீழ்வயிற்றிலே. வேறுபாட்டை விவரிக்கிறார் (ஜகதித்யாதி).

அம்மாவித்யாதிக் கர்த்தமருளிச் செய்கிறார் (அழகியதாயித்யாதி). (௧)

விலங்கல்	மந்தரபர்வதமானது	விந்தகனை	ஆஸ்சர்யாவஹனான எம்பெருமானை
திரிய	நான்குபக்கமும் ஸஞ்சரிக்கும்படியாக	சலங்கல்	கலங்காநின்ற
தடம்	விசாலமான	முந்நீர்	ஸமுத்ரத்தையுடைய
கடலுள்	ஸமுத்ரத்தில் (அந்த பர்வதத்தை)		கண்ணபுரத்து அடியேன் கண்டுகொண்டேனே. (உ)
சுமந்துகிடந்த	த (4) ரித்துக்கொண்டு கிடந்தவனாய், (ஆகையாலே)		

வ்யா.—இரண்டாம்பாட்டு. (மலங்குவிலங்கு நெடுவெள்ளம்) ஜலப்ராசுர்யமுள்ள விடத்தில்போலே காணும் மலங்குகள் தான் வர்த்திப்பது. உள்ளுக்கிடந்த பதார்த்தங்களடங்கலும் அங்கே இங்கே தடுமாறும்படி கடல்குழம்ப, அங்கு ஆழத்துக்கு அவதியில்லாத விடத்திலே மலையைக்கொடுபுக்கு நிறுத்தி, போனப்ராணன்களை மீட்கைக்கீடான தேஜஸ்ஸையுடைத்தான அம்ருதமானது தோற்றுமளவும் நீருக்கிறாயாதவடிவையுடைய ஆமையாய், மலைதிரிந்துவரும்படியாகப் பரப்பையுடைத்தான கடலிலே அதுக்கு தா(4)ரகபூதனாய்க்கொண்டு கிடந்த விஸ்மயநீயனை. (கலங்கலித்யாதி) கடல் ஒருபுறமாயிருக்கும்போலே. .... (உ)

மூ.—பாராரளவும் முதுமுந்நீர் பரந்தகாலம் வளைமருப்பில்
ஏராருருவத்தேனமா யெடுத்த வாற்றலம்மானைக்
கூராராரலிரைகருதிக் குருகுபாயக் கயலிரியும்
காரார்புறவில் கண்ணபுரத்தடியேன் கண்டுகொண்டேனே.

பதம்.	உரை.	பதம்.	உரை.
பாராரளவும்	பூமிப்பரப்படங்கலும்	மருப்பில்	கொம்பையுடைய
முது முந்நீர்	ஸமுத்ரமானது	ஏர்	அழகால்
பரந்தகாலம்	சூழ்ந்தகாலத்தில்	ஆர்	பூர்ணமான
வளை	வளைந்திருக்கிற	உருவத்து	ஶரீரத்தையுடைத்தான

அநு.—இரண்டாம்பாட்டு. (மலங்கித்யாதி) எதிர்சூழல்புக்குத் திரிகிற அவதாரங்களில் தமக்கு ஜ்ஞாந ப்ரதாநம் பண்ணுவதாக வேதப்ரதமான அவதாரத்தை யறிந்தபடியை யருளிச்செய்தார்கீழ்; தம்முடைய ஸகலபாரத்தையும் ப (4) ரிக்கப் பிறந்தானென்று மலைசுமந்த கூர்மரூபியைக் கண்டபடியை யருளுகிறாரென்று ஸங்கதி.

(மலங்குகள்) மத்ஸ்யவிசேஷங்கள். "அங்கு" என்று விசேஷித்ததுக்குத் தாத்பர்யமருளுகிறார் (ஆழத்துக்கித்யாதி). ..., ... (உ)

ஏனமாய்	வராஹரூபியாய் (அந்த பூமியை)
எடுத்த	எடுத்து வந்தவனாய் (அதனாலே)
ஆற்றல்	மிக்கவலிமையை யுடையனான
அம்மானை	ஸர்வேஶ்வரனை,
கூர்ஆர்	மிகவும் தீக்ஷ்ணமான (மூக்கையுடைத்தான)
குருகு	நாரைப்பக்ஷியானது
ஆரல்	மத்ஸ்யங்களை

இரை	ஆஹாரமென்று
கருதி	எண்ணி (அந்தமத்ஸ்யங்களின்மேல்)
பாய	பாயும்போது
கயல்	மத்ஸ்யங்களானதுகள்
இரியும்	ஓடாநிற்குமதாய்,
கார்	மேகங்களாலே
ஆர்	வ்யாப்தமான
புறவில்	பர்யந்தங்களையுடையதுமான

கண்ணபுரத்து அடியேன் கண்டு கொண்டேனே. (௩)

வ்யா.—மூன்றாம்பாட்டு. (பாராரித்யாதி) பூமிப்பரப்பையடையக் கடல்கொண்டகாலத்து வளைந்த கொம்பையுடைய ஏனமாய். (ஏராருவத்து) ஆயிரம்பண்ணை ப்ரளயம் கொண்டாலாகாதோ இப்படி அழகுநிறைந்தவராஹ விக்ரஹத்தை ஒருகால் காணலாமாகில். (எடுத்தவாற்றலம்மானை) அண்டபித்தியிலே சென்று சேர்ந்த பூமியை இடந்தெடுத்துக் கொண்டேறுகைக்கீடான வலியையுடைய ஸர்வேஶ்வரனை.

(கூராரித்யாதி) கூரியவாயலகையுடைத்தான குருகானது ஆரலை ஆமிஷமென்று புத்திபண்ணிப்பாய கயல்களானவை இரியாநிற்கும். (காராரித்யாதி) மேகங்களினுடைய நிரந்தரஸஞ்சாரத்தையுடைத்தான பர்யந்தத்தோடுகூடின திருக்கண்ணபுரத்திலே. (௩)

மூ.—

உளைந்தவரியும் மானிடமுமுடனாய்த் தோன்றவொன்றுவித்து
விளைந்தசீற்றம் விண்வெதும்ப வேற்றோனகலம்வெஞ்சமத்து
பிளந்துவளைந்தவுகிரானைப் பெருந்தண் செந்நெற்குலைதடிந்து
களஞ்செய்புறவில் கண்ணபுரத்தடியேன் கண்டுகொண்டேனே. (௪)

அநு.—மூன்றாம்பாட்டு.(பாரித்யாதி) தம்முடைய பா(ஞ)ரங்களைச்சுமக்கும்படியே யன்றிக்கே ஸம்ஸார ப்ரளயத்தில் நின்று மெடுக்கவல்லவனென்று வராஹாவதாரத்தை அநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

ஆழ்வாருடைய ஈடுபாடுதோற்றத் தாத்பர்யமருளுகிறார் (ஆயிரமித்யாதி). (பண்ணை) ப்ரகாரம்.

(இரியாநிற்கும்) ஓடாநிற்கும். பயத்துக்கு த்ருஷ்டாந்தம் (கடலையித்யாதி). ... ... (௩)

பதம்.	உரை.
உளைந்த	ஸகலரையும் பயப்படுத்துமதான
அரியும்	ஸிம்ஹரூபமும்
மானிடமும்	மனுஷ்யரூபமும்
உடனாய்	பொருந்தும்படி
ஒன்றுவித்து	சேர்த்து
தோன்ற	நரஸிம்ஹனைத்தோன்
விளைந்த	அப்போதுண்டான [ற,
சீற்றம்	சீற்றத்தைக்கண்டு
விண்	தேவலோகமெல்லாம்
வெதும்ப	நடுங்கும்படியாக
வெம்சமத்து	யுத்தத்திலே
வேற்றோன்	சத்ருவான ஹிரண்ய
அகலம்	மார்வை [னுடைய
பிளந்து	இருகூறாய்ப்பிளந்து (அதனால்)

பதம்.	உரை.
வளைந்த	வளைந்துகிடக்கிற
உகிரானை	திருவுகிரையுடையவனான எம்பெருமா
பெரும்	பெருத்ததாய் [னை
தண்	அழகியதான
செந்நெல்குலை	செந்நெல்குலைகள்
தடிந்து	(துணிந்தபிறகும்) வயிரம்பற்றி
களம்செய்	பரிமாற்றம்மாறாமலிருக்கிற
புறவில்	பர்யந்தங்களையுடைத்தான

கண்ணபுரத்து அடியேன் கண்டு
கொண்டேனே. (௪)

வ்யா.—நாலாம்பாட்டு. (உளைந்தவித்யாதி) தன்னுடைய தோற்றரவிலே சத்ருபக்ஷமானது குலைந்தோடும்படியிருக்கிற ஸிம்ஹமும், உளைமயிருமாய், மநுஷ்யவேஷமும் சேராதவடிவிரண்டும்சேர்ந்துதோன்ற, அப்போது பிறந்தசீற்றத்தைக்கண்டு ரக்ஷ்யகோடியிலே அந்வயித்ததேவலோகம்."எவ்வளவாய்த்தலைக்கட்டுகிறதோ?" என்றஞ்ச; வேற்றோனுண்டு - சத்ருவான ஹிரண்யன்; அவனுடைய மார்வை யுத்தத்திலே பிளந்து வளைந்த திருவுகிரையுடையவனை. (பெருந்தணித்யாதி) பெருத்தழகியதாயிருந்துள்ள செந்நெற் குலைகளை வயிரத்தை வெட்டுமாபோலே வெட்டி பரிமாற்றம் மாறாத பர்யந்தத்தையுடைத்தான. .... (௪)

அநு.—நாலாம்பாட்டு. (உளைந்தவித்யாதி) ஸம்ஸார ப்ரளயத்தில்நின்ற தம்மை யெடுக்கவல்லவன்படியை அநுஸந்தித்தவுடனே ஸம்ஸாரபீஜமான அஹங்காராதி விரோதிகளை நகாக்ரத்தாலே போக்க வந்தானென்று * நரங்கலந்த சிங்கத்தை அநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

"உளைந்த" - உளையப்பண்ணினவென்றாகி அருளுகிறார் (தன்னுடையவித்யாதி). "தடிந்து" என்றபத வாஸனையை அருளுகிறார் (வயிரமித்யாதி). "களஞ்செய்" என்றவர்த்தமாநார்த்தமருளுகிறார் (பரிமாற்றம்மாறாத) என்று.

மு.—

தொழுநீர்வடிவில் குறளுருவாய் வந்து தோன்றிமாவலிபால்
முழுநீர்வையம் முன்கொண்ட மூவாவுருவிலம்மானை
உழுநீர்வயலுள் பொன்கிளைப்பவொருபால் முல்லைமுகையோடும்
கழுநீர்மலரும் கண்ணபுரத்தடியேன் கண்டுகொண்டேனே. (ரு)

பதம்.	உரை.	பதம்.	உரை.
தொழும்	ஸகலரும் வணங்கும்படியான	அம்மானை	ஸர்வேஶ்வரனை
நீர்	நீர்மையையுடைய	உழுநீர்	உழுகையே ஸ்வபாவமாக உடைத்தான
வடிவில்	வடிவையுடைத்தான	வயலுள்	வயல்களிலே
குறளுருவாய்	வாமந வேஷத்தை யுடையவனாய்க்கொண்டு	பொன்	பொன்னானது
வந்துதோன்றி	வந்தவதரித்து	கிளைப்ப	விளையும்படியாகவும்,
மாவலிபால்	மஹாபலி பக்கல்	ஒருபால்	ஒருபக்கத்தில்
முழுநீர்	ஸமுத்ரத்தாலே சூழப்பட்ட	முல்லை	முல்லை புஷ்பமும்
வையம்	லோகத்தை	முகை	கருமுகில் புஷ்பமும்
கொண்ட	யாசித்துப் பெற்றவனான	கழுநீர்	செங்கழுநீரும்
மூவா	ஸதா ஏகரூபமான	மலரும்	விகஸிக்கும்படியானதுமான
உருவில்	விக்ரஹத்தையுடைய	கண்ணபுரத்து அடியேன் கண்டுகொண்டேனே. (ரு)	

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (தொழுநீரித்யாதி)(க)"𑌅𑌵𑌶𑌾𑌃𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑍇𑌦𑌿𑌰𑍇-அவசாஃ ப்ரதி பேதிரே'' என்கிறபடியே கண்டார்க்குத் தொழுதல்லது நிற்கவொண்ணாத வடிவையுடைய வாமநவேஷத்தையுடையனாய் வந்தவதரித்து, கடல்சூழ்ந்த ராஜ்யம் மஹாபலியதாய், அவன் பக்கலிலே தான் இரந்துபெற்றானும்படி பெற்ற.(மூவாவுருவிலம்மானை) ஸதா ஏகரூபமான விக்ரஹத்தையுடைய ஸர்வேஶ்வரனை. தோன்றுகிற வாமநவேஷமன்று கிடீர் இவனுக்கு நிலைநின்ற வடிவென்கி

அரு.—அஞ்சாம்பாட்டு. (தொழுநீரித்யாதி) தம்முடைய விரோதியை சக்ரத்தாலே போக்கினவளவேயன்றிக்கே (க)"அடிக்கீழ் கொள்ளுமப்பன்", என்கிறபடியேதம்மைத் திருவடிகளின்கீழ்வைத்துக்கொள்ள வந்தவனென்று ஸ்ரீவாமநாவதாரத்தை அநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

கண்டார்தொழுகையே நீர்மையாய் ஸ்வபாவமாயிருக்கிற வடிவென்று

(க) பார-உத்யோ.

றார். (உழுநீர் வயலுள்பொன்கிளைப்ப) உழுகைக்கே ஸ்வபாவமாக வுடைத்தான வயலிலே பொன்னானது வந்துதோன்றும். பொன் படுகுட்டமாயிற்று. பொன் படாதிடமடைய முல்லை, கருமுகை, செங்கழுநீர் இவையெல்லாம் மலராநிற்குமாயிற்று. .... (௫)

மூ.—வடிவாய்மழுவே படையாக வந்து தோன்றிமூவெழுகால்
படியாரரசு களைகட்ட பாழியானை யம்மானைக்
குடியாவண்டு கொண்டுண்ணக் கோலநீலம்மட்டுகுக்கும்
கடியார்புறவில் கண்ணபுரத்தடியேன் கண்டுகொண்டேனே.

பதம்.	உரை.	பதம்.	உரை.
வடி	கூரான	வண்டு	வண்டுகள்
வாய்	முகத்தையுடையதான	குடியா	(தாரபுத்ராதிகளோடு) கூட்டமாக
மழுவே	மழுவென்கிற ஆயுதத்தை	கொண்டு	மதுவைக்கொண்டு
படையாக	ஆயுதமாக வுடைய பரசுராமனாய்	உண்ண	புஜிக்கும்போதும்
		கோலநீலம்	அழகிய நீலோத்பலமானது
வந்துதோன்றி	வந்தவதரித்து	மட்டு	மதுவை
மூவெழுகால்	இருபத்தொருபடிகால்	உகுக்கும்	ப்ரவஹியாநிற்குமதாய்
படி	பூமியில்	கடி	பரிமளத்தால்
ஆர்	நிறைந்து கிடக்கிற	ஆர்	வ்யாப்தமான
அரசு	க்ஷத்ரியர்களை	புறவில்	பர்யந்தங்களை யுடையதுமான
களைகட்ட	நிரஸித்த		
பாழியானை	பலத்தையுடையவனான	கண்ணபுரத்து அடியேன் கண்டுகொண்டேனே.	
அம்மானை	ஸர்வேஸ்வரனை,		(௬)

வ்யா.— ஆறாம்பாட்டு. (வடிவாயித்யாதி) வடித்தவாயை யுடையமழுவே ஆயுதமாகவந்து தோன்றி இருபத்தொருபடிகால்

விவக்ஷித்தருளுகிறார் (அவஸா இத்யாதி). (பொன்படுரெட்டம்) பொன் விளையுமாகரம். ... ... (௫)

அந்.—ஆறாம்பாட்டு. (வடிவாயித்யாதி) தன்னடிக்கீழ் கொள்ளுமவனே யன்றிக்கே, ப்ரக்ருதி ப்ராக்ருதங்களாயுள்ள ஸகல ப்ரதிபந்தகங்களையும் அறுக்க வல்லவனென்று ஸ்ரீபரசுராமாழ்வானை அநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

(வடித்த) கூர்க்கின. குட்டிகளோடும் பார்யைகளோடும் உண்ண,

பூமி நெளியும்படியாகவந்து தோன்றின க்ஷத்ரியகுலத்தை அறுத்துப்போகட்ட வலியையுடைய ஸர்வேஶ்வரனை. (குடியாவித்யாதி) பசல்களோடும் குட்டிகளோடும் வண்டுகள்வந்துபுஜிக்க, பின்னையும் தர்ஶநீயமான நீலமானது மதுவை ப்ரவஹியாநிற்கும். கடலிலே ஒரு சிறுங்கையை புஜிக்குங்காட்டில் கடல்வற்றுதிறே. பரிமளப்ரசுரமான பர்யந்தத்தையுடைய திருக்கண்ணபுரம். .... (சு)

மூ.—

வையமெல்லாமுடன் வணங்க வணங்காமன்னனாய்த்தோன்றி
வெய்யசீற்றக்கடியிலங்கை குடிகொண்டோட வெஞ்சமத்து
செய்தவெம்போர்நம்பரனைச் செழுந்தண்கானல் மணநாறும்
கைதைவேலிக் கண்ணபுரத்தடியேன் கண்டுகொண்டேனே. (எ)

பதம்.	உரை.
வையமெல்லாம்	உலகமெல்லாம்
உடன்	உடன்பட்டு
வணங்க	திருவடிகளில் ஆஶ்ரயிக்கும்படியாய்
வணங்கா	(தான் ஒருவரையும்) வணங்காதவனான
மன்னனாய்	சக்ரவர்த்தித் திருமகனாய்
தோன்றி	வந்தவதரித்து
வெய்ய	கடுமையான
சீற்றம்	சீற்றத்தையுடைத்தான
கடியிலங்கை	அரணாகப் போரும்படியான மதிளையுடைய லங்காநகரத்திலுள்ளார்
குடிகொண்டு	பார்யா புத்ராதி குடிகளுடன்
ஓட	ஓடும்படியாக
வெஞ்சமத்து	க்ரூரமானயுத்தத்திலே
வெம்	க்ரூரமான
போர்	யுத்தத்தை
செய்த	பண்ணின
நம்	நம்முடைய
பரனை	ஸ்வாமியை
செழும்	அழகியதாய்
தண்	குளிர்ந்ததான
கானல்	நெய்தல் நிலத்தையும்
மணம்நாறும்	மிககபரிமளத்தையுடைத்தான
கைதை	தாழையையும்
வேலி	வேலியாக வுடைத்தான
கண்ணபுரத்து	அடியேன் கண்டுகொண்டேனே. (எ)

வுண்ணவற்றாதோவென்ன வருளுகிறார் (கடலிலேயித்யாதி). ... ... (சு)

அந.—ஏழாம்பாட்டு. ஸகலப்ரதிபந்தகங்களும் போகுமளவன்றிக்கே தன்னையேநாளும் நான்வணங்கும்படி தன்சேஷித்வம்தோற்றவந்தவனென்று சக்ரவர்த்தித் திருமகனை அநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

“எல்லாம்” என்றதுக்குக் கருத்தருளுகிறார் (உகந்தாரித்யாதி). (எ)

வ்யா.—ஏழாம்பாட்டு. (வையமித்யாதி) உகந்தாருடன் உகவாதாருடன் வாசியறதன்னை வணங்கத் தான் ஒருவரையும் வணங்காத ராஜனாய்த்தோன்றி, வெவ்விய சீற்றத்தையுடைய கடியிலங்கை குடிகொண்டோட யுத்தத்திலே வெவ்விய போரைப்பண்ணின நம்முடையஸ்வாமியை. (செழுந்தணித்யாதி) அழகிய குளிர்ந்த நெய்தல்நிலத்தையும் பரிமளத்தையுமுடைத்தான தாழையையும் வேலியாகவுடைத்தான திருக்கண்ணபுரம். (எ)

மூ.—

ஒற்றைக்குழையும் நாஞ்சிலுமொருபால் தோன்றத்தான்தோன்றி
வெற்றித்தொழிலார் வேல்வேந்தர் விண்பாற்செல்லவெஞ்சமத்து
செற்றகொற்றத் தொழிலானைச் செந்தீ மூன்றுமில்லிருப்ப
கற்றமறையோர் கண்ணபுரத்தடியேன் கண்டுகொண்டேனே. (அ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஒற்றை	ஒருகாதில் தொங்குகிற	கொற்ற	ஜயத்தையே
குழையும்	குண்டலம் (ஒருபக்கத்திலும்)	தொழிலானை	தொழிலாகவுடையவனை
ஒருபால்	ஒருபக்கத்தில்		
நாஞ்சிலும்	கலப்பையும்	செம்	சிவந்த ஜ்வாலைகளோடுகூடிய
தோன்ற	தோன்றும்படி		
தான்	தாமே	தீமூன்றும்	(கார்ஹஸ்த்யாதி)மூன்று அக்நிகளும்
தோன்றி	பலராமனாய்த்தோன்றி		
வெற்றி	ஜயத்தையே	இல்	க்ருஹங்களில்
தொழிலார்	வ்யாபாரமாக வுடைய	இருப்ப	இருக்க
வேல்	ஆயுதத்தைதரியாநின்ற	கற்ற	வேத ஶாஸ்த்ரங்களை கற்றவர்களான
வேந்தர்	ராஜாக்கள்		
விண்பால்	வீரஸ்வர்க்கத்துக்கு	மறையோர்	ப்ராஹ்மணர் வர்த்திக்கிற
செல்ல	செல்லும்படியாக		
வெஞ்சமத்து	யுத்தத்திலே		
செற்ற	அழியச்செய்வதாலுண்டான		

கண்ணபுரத்து அடியேன்கண்டு கொண்டேனே. (அ)

அநு.—எட்டாம்பாட்டு. (ஒற்றையித்யாதி) கையும் கலப்பையுமாய்ப் பிறந்த நம்பி மூத்தபிரான் விஜயத்திலே தாம்தோற்று “ஜிதம்தே- ஜிதந்தே” என்னப்பண்ணினானென்று அவ்வவதாரத்தை யநுஸந்திக்கிறாரென்றுஸங்கதி.

வ்யா.—எட்டாம்பாட்டு. (ஒற்றைக்குழையுமித்யாதி) ஒரு காதுக்குழையும் கலப்பையும் ஒருபால்தோன்றத்தான் வந்து வெற்றியே தொழிலாகவுடைய வேலையுடைய ராஜாக்கள் விண்ணிலே செல்ல, யுத்தத்திலேசெற்ற வெற்றியைத் தொழிலாகவுடையவனை. (செந்தீயித்யாதி) த்ரேதாக்நிகள் தங்கள் க்ருஹங்களிலேயிருக்கை. த்ரேதாக்நி முகத்தாலே பகவத்ஸமாராதநம் பண்ணுகையாலே ஹவிஸ்ஸைக் கொள்ளத் தங்கள் க்ருஹ்ங்களுக்குள்ளே ஸர்வேஸ்வரனெழுந்தருளியிருக்கும்படி கற்றப்ராஹ்மணர். .... (அ)

மூ.—

துவரிக்கனிவாய் நிலமங்கை துயர்தீர்ந்துய்யப் பாரதத்துள்
இவரித்தரசர்தடுமாற விருள்நாள்பிறந்த வம்மானை
உவரியோதம் முத்துந்தவொருபா லொருபாலொண்செந்நெல்
கவரிவீசும் கண்ணபுரத்தடியேன் கண்டுகொண்டேனே. (கூ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
துவரி	இலவந்தம்பூப்போலேயும்	இருள்	நன்றாய் இருண்ட
கனி	கோவைப்பழம்போலேயும் (இருக்கிற)	நாள்	க்ருஷ்ணபக்ஷாஷ்டமியில்
வாய்	திருவதரத்தையுடையளான	பிறந்த	அவதரித்தவனான
நிலமங்கை	ஸ்ரீபூமிப்பிராட்டியானவள்,	அம்மானை	ஸ்வாமியான கண்ணபிரானை
துயர்	கஷ்டமானது	உவரி	ஸமுத்ரத்தினுடைய
தீர்ந்து	நிவ்ருத்தமாகி	ஓதம்	அலைகளானதுகள்
உய்ய	உஜ்ஜீவிக்கும்படி	ஒருபால்	ஒருபக்கத்தில்
பாரதத்துள்	பாரதயுத்தத்திலே	முத்து	முத்துக்களை
இவரித்த அரசர்	எதிரிட்டராஜாக்கள்	உந்த	ஒதுக்கும்படியாகவும்
தடுமாற	தடுமாறும்படியாக	ஒருபால்	ஒருபக்கத்தில்
		ஒண்	அழகிதான

(ஒருகாது) என்றது கலப்பையை ஒருதோளிற் சுற்றிக்கொண்டு புறப்படுகையாலே ஒருகாதிற்குழையே புறம்புள்ளாருக்கு தோற்றுமென்னும் கருத்தாலே யென்றுகொள்வது. (விண்ணிலே) வீரஸ்வர்க்கத்திலே. "செற்ற" நசிப்பித்த. "மறையாளர்" என்னவமைந்திருக்க, "கற்ற" என்கையாலே ததர்த்தஜ்ஞாநநிஷ்டராம்படி கற்கை பலிக்கையாலே, அத்தை அருளுகிறார் (த்ரேதாக்நிமுகத்தாலே யித்யாதி). ... ... (அ)

செங்நெல்	செங்நெலானது	கண்ணபுரத்து அடியேன் கண்டு கொண்டேன். (௯)	
கவரி	சாமரங்களை		
வீசும்	வீசாநிற்குயதான		

வ்யா.—ஒன்பதாம்பாட்டு, (துவரிக்கனிவாயித்யாதி) இலவங்துவரிகள்போலேயும் கோவைக்கனிபோலேயு மிருக்கிற வாயையுடைய நிலமங்கை க்லேசம்கெட்டு உஜ்ஜீவிக்கைக்காக. (பாரதமித்யாதி) பாரதஸமரத்திலே இவரித்தரசர் என்னுதல்; அன்றியே பாரதத்திலே அரசர்தடுமாற இவரித்தென்னுதல். இவர்தல் - ஏறுதல். (இருள்நாள்பிறந்தவம்மானை) அபரபக்ஷத்திலே அஷ்டமியிலே நள்ளிருளிலே பிறந்தவனை. (உவரியித்யாதி) ஓரருகு கடல் திரையானது முத்தைத்தள்ள; ஓரருகு அழகியசெங்நெலானது கவரியெறட்டும் கண்ணபுரம். .... (௯)

மூ.—மீனோடாமை கேழலரிகுறளாய் முன்னுமிராமனாய்
தானாய்பின்னுமிராமனாய் தாமோதரனாய்க் கற்கியும்
ஆனான்றன்னைக் கண்ணபுரத்தடியன் கலியனொலிசெய்த
தேனாரின்சொல் தமிழ்மாலை செப்பப்பாவம்நில்லாவே. (௧௦)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பதம்.	உரை.	பதம்.	உரை.
மீனோடு	மத்ஸ்யரூபியாயும்	பின்னும் இராமனாய்	பலராமனாயும்
ஆமை	கூர்மரூபியாயும்	தாமோதரனாய்	க்ருஷ்ணனாயும்
கேழல்	வராஹரூபியாயும்	கற்கியும்	கற்கியாயும்
அரி	ந்ருஸிம்ஹனாயும்	ஆனான் தன்னை	அவதரித்தருளின எம்பெருமானை
குறளாய்	வாமநனாயும்	கண்ணபுரத்து	திருக்கண்ணபுரத்திலே (ஸேவித்து)
முன்னும்இராமனாய்	பரசுராமனாயும்	அடியன்	சேஷபூதரான
தானாய்	சக்ரவர்த்தித்திருமகனாயும்		

அநு.—ஒன்பதாம்பாட்டு. (துவரியித்யாதி) தம்மை ஜிதமென்னப் பண்ணின நம்பிமூத்தபிரானை அநுஸந்தித்துத் தம்முடைய ஸகலபாரங்களும் தீர்க்கப் பிறந்தகண்ணனை அநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

(இலவங்துவரிகள்) என்றது - முன் இலவமரத்திற்சிவந்த பூவென்றபடி. “இருளையுடையநாள்” என்று விசேஷித்ததுக்கு ப்ரமாண ப்ரஸித்தியுமுட்கொண்டு தாத்பர்யமருளுகிறார் (அபரேத்யாதி). (எறட்டும்) வீசும். ... (௯)

கலியன்	ஆழ்வாராலே
ஒலி	ஒலியுடன்
செய்த	அருளிச் செய்யப்பட்டதாய்
தேன்	அம்ருதத்தாலே
ஆர்	பூர்ணமான
இன்	அழகிதான
சொல்	சொற்களை யுடையதுமான
தமிழ் மாலை	இத்திருமொழியை
செப்ப	அப்ய (ப்₄) ஸிக்க
பாவம்	பாபமானது
நில்லாவே	நிற்கமாட்டாது. (௧௦)

வ்யா.—பத்தாம்பாட்டு. (மீனோடித்யாதி) மத்ஸ்யாதிதசாவதாரங்களையும்பண்ணி ஜகத்ரக்ஷணம்பண்ணின தன்னைத் திருக்கண்ணபுரத்திலே கண்டடிமைபுக்க ஆழ்வாரருளிச்செய்த தேனோடொத்த நல்லசொல்லையுடைய தமிழ்மாலை சொல்லப் பாவமானதுபோம்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

பெரியதிருமொழி
எட்டாம்பத்து எட்டாந்திருமொழி முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளேசரணம்.

எட்டாம்பத்து ஒன்பதாந்திருமொழி
கைம்மானம் ப்ரவேசம்.

வ்யா.—தாம் நெடுங்காலமிழந்த விழவுகளெல்லாம்தீர திருக்கண்ணபுரத்திலெ தம்மை அநுபவிப்பதாக வெழுந்தருளி யிருந்தானென்றார் கீழ்த்திருமொழியிலே; இதில் இப்படி என்னிழவெல்லாம் தீர்க்கவந்தெழுந்தருளி நிற்கிற திருக்கண்ணபுரத்திலே கருவரைபோல் நின்றானுக்கு அடியேன் வேறொருவர்க்குரியேனல்லேனென்கிறார்.

அரு.—பத்தாம்பாட்டு. (மீனோடித்யாதி) "ஆர்தல்" பொருந்துதலாய், அத்தால்பலிதம் (ஒத்த) என்றது. ... ... (௧௦)

ஜீயர் திருவடிகளே சரணம்.

கைம்மானம் ப்ரவேசம்.—கீழ்த்திருமொழியில் அவனுடைய பலபடிகளையும் காட்டுகையாலே ஜ்ஞாநப்ரதாநதேச மென்றார். அந்த ஜ்ஞாநகார்யமான க்ருதார்த்ததாநுஸந்தாநத்தாலே இனி ஒருவர்க்கும் சேஷமன்றென்றது ஸந்திக்கிறாரென்று ஸங்கதியை அருளுகிறார் (தாமித்யாதி).

மூ.—கைம்மானமதயானை யிடர்தீர்த்தகருமுகிலை
மைம்மானமணியை யணிகொள்மரதகத்தை
எம்மானையெம்பிரானை யீசனையென்மனத்துள்
அம்மானையடியே னடைந்துய்துபோனேனே. (க),

பதம்.	உரை.
கை	துதிக்கையினுடைய
மானம்	பெருந்தன்மையையுடையதான
மத	மதித்திருக்கிற
யானை	கஜேந்த்ராழ்வானுடைய
இடர்	(முதலையால் நேர்ந்த) து:க்கத்தை
தீர்த்த	போக்கினவனாய்,
கருமுகிலை	காளமேகம்போன்ற வடிவையுடையனாய்,
மை	மைபோன்ற நிறத்தையுடைய,
மானம்	பெருவிலையனான
மணியை	மணிபோன்றவனாய்,
அணிகொள்	அழகுடையதான
மரதகத்தை	மரதகமணிபோன்றவனாய்,
எம்மானை	எனக்குஸ்வாமியானவனாய்,
எம்பிரானை	எனக்கு உபகாரனான
ஈசனை	ஸர்வேஸ்வரனாய்
என்	என்னுடைய
மனத்துள்	ஹ்ருதயத்திலே (நித்ய வாஸம்பண்ணுகிற)
அம்மானை	ஸர்வேஸ்வரனை
அடியேன்	சேஷபூ (பூ) தனான
அடைந்து	ஆஸ்ரயித்து
உய்ந்து போனேனே	நான் உஜ்ஜீவித்துப்போனேன். (க)

வ்யா.—முதற்பாட்டு. (கைம்மானமித்யாதி) முன்கைமிடுக்காலே எல்லாவற்றையும் தூக்கி அடித்துப் பொகடுகிறேனென்றிருக்கிறபெருந்தன்மையையுடையமதயானையைஇடர்தீர்த்த, காளமேகம்போன்றவடிவையுடையவனை. மைபோன்ற நிறத்தையுடைய பெருவிலையனான மணிபோன்றவனை. அழகிய மரதகத்தை; அவ்வடிவழகாலே என்னையெழுதிக்கொண்டவனை. எனக்கு உபகாரகனான ஸர்வேஸ்வரனை. (என்மனத்தித்யாதி) என்நெஞ்சிலே யிருக்கிற ஸர்வேஸ்வரனை. அடைந்து உஜ்ஜீவித்துப்போனேன். .... (க)

அநு.—முதற்பாட்டு. (கைம்மானமித்யாதி) "மானம" பேரளவாய்; இப்படி விசேஷித்ததுக்குத் தாத்பர்யம் (முன்கையித்யாதி). "மானம்" பெருமையாய், அதின்தாத்பர்யம் (பெருவிலையனாய்) என்றது. ... ... (க)

மூ.—தருமானமழைமுகிலைப் பிரியாது தன்னடைந்தார்
வருமானம்தவிர்க்கும் மணியை யணியுருவில்
திருமாலையம்மானை யமுதத்தைக் கடல்கிடந்த
பெருமானை யடியேனடைந் துய்ந்து பிழைத்தேனே. (௨)

பதம்.	உரை.	பதம்.	உரை.
தரு	கல்பகதருபோன்றவ	திருமாலை	ஸ்ரீய:பதியாய்,
	னாய்,	அம்மானை	எனக்கு ஸ்வாமியாய்,
மானம்	பெரிதான [னாய்,	அமுதத்தை	அம்ருதம்போன்றவனா
மழைமுகிலை	காளமேகம் போன்றவ	கடல்	திருப்பாற்கடலிலே [ய்
பிரியாது	ஒருகாலும்பிரியாமல்	கிடந்த	கண் வளர்ந்தருளுகிற
தன்னடைந்	தன்னைச்சேர்ந்தவர்க		வனுமான
தார்	ளுக்கு	பெருமானை	ஸர்வாதிகனான எம்பெ
வரும்	வரும்படியான		ருமானை
மானம்	அவமானங்களை	அடியேன்	தாஸபூதனான நான்
தவிர்க்கும்	போக்குமதான	அடைந்து	ஆஶ்ரயித்து
மணியை	சிந்தாமணிபோன்றவ	உய்ந்து	உஜ்ஜீவித்து
அணி	அழகிதான [னாய்,	பிழைத்தேனே	பிழைக்கப் பெற்றேன்.
உருவில்	வடிவையுடையரான		

வ்யா.—இரண்டாம்பாட்டு. (தருமான மித்யாதி) அபேக்ஷித்தார்க்கு அபேக்ஷிதங்களைக் கொடுக்கக் கடவதாயிருந்துள்ள கல்பக தருபோலவும், அபேக்ஷாநிரபேக்ஷமாகக் கொடுக்கக் கடவதான பெரிய மேகம்போலவுமானவனை. தன்னைச்சேர்ந்தார்க்குவரும் அவமானங்களைப்போக்கும் மணியை. "மணியை" என்கிறது - சிந்தாமணியை. அழகியவடிவையுடைய ஶ்ரிய:பதியை; ஸர்வசேஷியை. என்னைச் சாவாமைக் கரத்தவனை; என்னுடைய ரக்ஷணத்திலே உத்யுக்தனாய்க்கொண்டு திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளுகிற ஸர்

அநு.—இரண்டாம்பாட்டு. (தருமானமித்யாதி) ஆனைக்கூக்குரல் கேட்டோடி வந்தபடியைக் கீழருளிச்செய்தார்; ஆனைக்கூக்குரல் கேட்கவேணுமென்று அணித்தாகக்கிடந்த கிடையைஅநுபவித்து க்ருதார்த்தனானேனென்கிறாரென்று ஸங்கதி.

தருவைப்போலவும், மானமழை முகில்போலவுமானவனையென்று சப்தார்த்தமாய் தாத்பர்யமருளுகிறார் (அபேக்ஷித்தார்க் கித்யாதி). ப்ரக்ருதோப

வாதிகளை. ப்ரஹ்மாதிகளுக்காகக் கடலிலேவந்து கண்வளர்ந்தருளின பெரியவனை. அடியேனடைந்துய்ந்து பிழைக்கப்பெற்றேன்.

மூ.—விடையேழன்றடர்த்து வெகுண்டு விலங்கலுறப்
படையாலாழி தட்ட பரமன் பரஞ்சோதி
மடையார்நீலம்மல்கும் வயல்சூழ் கண்ணபுரமொன்
றுடையானுக் கடியேனொருவர்க் குரியேனோ. (௩)

பதம்.	உரை.	பதம்.	உரை.
அன்று	அந்தகாலத்திலே	ஆர்	பரந்திருக்கிற
விடைஏழ்	ஏழ்வ்ருஷபங்களையும்	நீலம்	நீலோத்பலங்களாலே
வெகுண்டு	சீறிக்கொண்டு	மல்கும்	வ்யாப்தமான
அடர்த்து	நிரஸித்தவனாய்,	வயல்	வயல்களாலே
விலங்கல்	த்ரிகூடபர்வதத்தில்	சூழ்	சூழப்பட்ட
உற	சேரும்படியாக	கண்ணபுரம் ஒன்று	திருக்கண்ணபுரமொன்றையே
படையால்	வாநரஸேனையால்	உடையானுக்கு	(நித்யவாஸமாக) உடையனான எம்பெருமானுக்கு
ஆழி	ஸமுத்ரத்தில்	அடியேன்	சேஷபூ(ஶூ)தனான நான்
தட்ட	ஸேதுபந்தநம்பண்ணினவனாய்,	ஒருவர்க்கு	வேறுசிலர்க்கு
பரமன்	ஸர்வஸ்மாத்பரனாய்,	உரியேனோ	பவ்யனாவேனோ? (௩)
பரஞ்சோதி	பரமதேஜோரூபியாய்,		
மடை	மடைகளிலே		

அவ.—மூன்றாம்பாட்டு. இதுதான் உமக்கு எத்தனைகுளிக்கு நிற்குமென்ன; நான் பிறர்க்குரியேனல்லேனென்கிறார்.

வ்யா.—(விடையித்யாதி) சீறி ருஷபங்களேழையும் நெரித்து த்ரிகூடசிகரத்திலே சென்றுகிட்டும் படியாக * கானவெண்குரங்கும் முசுகும் படையாகக் கொண்டு கடலை யடைத்த. அன்றிக்கே அஸ்த்மய பர்வதத்திலே ஆதித்யனஸ்தமித்தா னென்னும்படி திருவாழியாலே ஆதித்யன் தேஜஸ்ஸைத்தடுத்து மறைத்த. (பரமன்) ஸமாதிக தரித்ரன். (பரஞ்சோதி) பிராட்டிக்கு வந்த ப்ரதிபந்தகத்தைப் போக்கி அத்தால் வந்த தேஜஸ்ஸையுடையனாயிருக்கிறவன்.

(மடையித்யாதி) மடைகளடைய மிக்கநீலத்தை யுடைத்தான

யோகியாக தாத்பர்யமருளிச்செய்து சப்தார்த்த மருளுகிறார் (ப்ரஹ்மாதீத்யாதி). ... ... (௩)

வயலாலே சூழப்பட்ட திருக்கண்ணபுரத்தைத்தனக்கு வாஸஸ்தாநமாக வுடையவனுக்கு. ஶ்ரீவைகுண்ட்ட நாதனாயிருக்கு மிருப்புக்கவ்வருகே ஒன்றுபோலே காணுமிது. (அடியேன்) சேஷபூதனான நான். (ஒருவர்க்குரியேனோ) வேறுசிலர்க்கு உரியேனல்லேன். இத்தால் தம்ஸ்வரூபம் சொல்லுகிறார். பிறர்க்குரியேனல்லேனென்னு மிடம் சொல்லுகிறார். அஸாதாரண விபூதியுக்தனானவனுக் கென்னு மிடம் சொல்லுகிறார். .... (௩)

மூ.—மிக்கானைமறையாய் விரிந்தவிளக்கையென்னுள்
புக்கானைப்புகழ்சேர் பொலிகின்ற பொன்மலையை
தக்கானைக்கடிகைத் தடங்குன்றின் மிசையிருந்த
அக்காரக்கனியை யடைந்துய்ந்து போனேனே. (௪)

பதம்.	உரை.	பதம்.	உரை.
மிக்கானை	ஸர்வாதிகனாய்,	தக்கானை	க்ருபாவானாய்,
மறையாய்	வேதப்ரதிபாத்யனாய்,	கடிகை	திருக்கடிகையாகிற
விரிந்த	பரிச்சேதிக்க வொண்ணாதவனாய்,	தடம்	விசாலமான
விளக்கை	விளக்குபோல் ஸ்வயம்ப்ரகாசனாய்,	குன்றின்	மலையினுடைய
என்	என்னுடைய	மிசை	சிகரத்தில்
உள்	ஹ்ருதயத்திலே	இருந்த	எழுந்தருளி யிருக்கிற
புக்கானை	புகுந்தவனாய் (அதனாலுண்டான)	அக்காரக்கனியை	சர்க்கரையைப்போலவும் கோவைப்பழம்போலவும் போ([illegible])க்க்யபூதனான எம்பெருமானை
புகழ்சேர்	புகழையுடையனாய்	அடைந்து	ஆஶ்ரயித்து
பொலிகின்ற	ப்ரகாசியாநின்ற	உய்ந்து போனேனே	உஜ்ஜீவிக்கப் பெற்றேன். (௪)
பொன்மலையை	பொன்மலைபோன்றவனாய்,		

அந.—மூன்றாம்பாட்டு. (விடையித்யாதி) ஸங்கதிதன்னை யருளுகிறார் (ஶ்ரீவைகுண்ட்டேத்யாதி). (அஸாதாரண விபூதியுக்தன்) என்றதுக்கு "வானவர்நாடு" என்னும்படியான பரமபதமன்றிக்கே *நான்முகனார்பெற்ற நாடான லீலாவிபூதியுமன்றிக்கே, *தானுகந்தவூர் திருப்பதிகளாகையாலே இதுவே அவனுக்கு அஸாதாரண விபூதியென்று கருத்து. ... ... (௩)

அந.—நாலாம்பாட்டு. (மிக்கானையித்யாதி) "ஒருவர்க்குரியேனோ" என்றார்கீழ். அதுக்கடி அவனுடைய நிரதிசயபோக்யதையென்று அக்காரக்கனியை அநுபவிக்கிறாரென்று ஸங்கதி.

வ்யா.—நாலாம்பாட்டு. (மிக்கானை) ஸர்வாதிகனை. (மறையாய் விரிந்தவிளக்கை) வேறொன்றால் காணவேண்டாதே தனக்குத் தானே ப்ரகாசகமாயிருப்பது. ப்ரமாணங்களாலே அறியப்பார்க்குமன்று அவற்றாலே ப்ர்காசிக்கிற மேன்மைக்கு எல்லையன்றிக்கே யிருப்பது. (என்னுள்புக்கானை) என்ஹ்ருதயத்திலே தானே புகுந்தவனை; "ஒருஸம்ஸாரி சேதநனுடைய ஹ்ருதயத்திலே அவனுக்கபேக்ஷையின்றிக்கே யிருக்கத்தானே போய்புகுவதே? இதொரு நீர்மை யிருக்கும்படியே" என்று இருந்ததேகுடியாக எல்லாருமொக்கச்சொல்லுகையாலே வந்தமிக்கபுகழையுடையனாய்க்கொண்டு உஜ்ஜ்வலனாயிருக்கிறவனை, பரமதார்மிகனை. திருக்கடிகையாகிற மலையின்மேலே அக்காரம்போலேயும் கனிபோலேயும் நிரதிஶயபோக்யனாயிருக்கிறவனை. .... (ச)

மூ.—வந்தாயென் மனத்தேவந்து நீபுகுந்தபின்னை
எந்தாய் போயறியாயிதுவே யமையாதோ
கொந்தார் பைம்பொழில்சூழ் குடந்தைக்கிடந்துகந்த
மைந்தாவுன்னையென்றும் மறவாமைப் பெற்றேனே. (ரு)

பதம்.	உரை.	பதம்.	உரை.
எந்தாய்	எனக்கு ஸ்வாமியானவனே!	போய்அறியாய்	நித்யஸூரிகள் பக்கல் போவதாகவும் நினைக்கிறிலை;
வந்தாய்	(நானிருந்தவிடத்தே) வந்தாய்;	இதுவே	(இனி) இந்தபேறே
என்	என்னுடைய	அமையாதோ	போதாதோ?;
மனத்தே	ஹ்ருதயத்திலே	கொந்து	கொத்துக்களாலே
நீ	நீயே	ஆர்	பூர்ணமாய்
வந்து	கிட்டி	பைம்பொழில்	அழகியதான சோலைகளாலே
புகுந்தபின்னை	ப்ரவேசித்தபிறகு	சூழ்	சூழப்பட்டதான
		குடந்தை	திருக்குடந்தையில்

"விளக்கு" என்றதுக்குத் தாத்பர்யம் (வேறொன்றாலித்யாதி). மறைக்கு ப்ரதிபாத்யனாய், அத்தாலும் ஆராலும் பரிச்சேதிக்கப் போகாதபடி விரிந்தவனென்று சப்தார்த்தமாய்தாத்பர்யமருளுகிறார் (ப்ரமாணங்களாலே யித்யாதி). புகழித்யாதிக்குக் கீழ்பதத்தைக் கடாக்ஷித்துத் தாத்பர்யமருளுகிறார் (ஒருவித்யாதி). "தக்கான்" - தகவுடையவன் என்றாக்கித் தாத்பர்யமருளுகிறார் (பரமதார்மிகனை) என்று. ... ... (ச)

கிடந்து	கண்வளர்ந்தருளி	என்றும்	என்றைக்கும்
உகந்த	(அதனால்) உகப்பையுடைய	மறவாமை	மறவாமலிருக்கும்படியாய்
மைந்தா	மைந்தனே?		
உன்னை	உம்மை	பெற்றேன்	ப்ராபித்தேன். (ரு)

அவ.—அஞ்சாம்பாட்டு. நாம் என்னஉபகாரம்பண்ணினோமாகத்தான் இப்படிகிடந்து படுகிறதென்ன;

வ்யா.—(வந்தாயித்யாதி) இதுக்குமேற்பட நீ பண்ணக் கடவதொருஉபகாரமுண்டோ? (வந்தாய்) நானிருந்தவிடம்தேடி நீயே வந்தாய். இவன் வந்திடுவானுக்கென்றுமிராத என்ஹ்ருதயத்திலே நீயேவந்து புகுந்தபின்பு, என்ஸ்வாமியானவனே! நித்யஸூரிகள் பக்கல் போவதாகவும் நினைக்கிறிலை. (இதுவேயமையாதோ) இனி இதுக்குமேற்பட ஒருவனுக்குப் பேறுகையாவதென்? கொத்துக்கள் மிக்கு அழகியதாயிருந்துள்ள பொழிலாலே சூழப்பட்ட திருக்குடந்தையிலே கண்வளர்ந்தருளி. "நாம் ஆஸ்ரிதர்க்கு உறுப்பாகப் பெற்றோமிறே" என்று அத்தாலே உகந்து இவர்களுக்கு விடவொண்ணாதபடி நவீக்ருதமான யௌவநத்தை யுடையனாயிருந்தவனே! இப்படி உபகாரகனான உன்னை மறவாதொழியப் பெற்றேன். நீயோ தீரக்கழிய உபகரித்து நின்றாய்; நான் அந்த உபகாரத்தை மறவாதொழியப் பெற்றேன். இனிஇதுக்குமேற்பட பேறுண்டோ?

மூ.—எஞ்சாவெந்நரகத்தழுந்தி நடுங்குகின்றேற்கு
அஞ்சேலென்றடியேனை யாட்கொள்ளவல்லானை
நெஞ்சேநீநினையாதிறைப்போது மிருத்திகண்டாய்
மஞ்சார்மாளிகைசூழ் வயலாலிமைந்தனையே. (சு)

பதம்.	உரை.	பதம்.	உரை.
எஞ்சா	(ஒருகாலும்) குறைவில்லாத	அஞ்சேல்	"பயப்படாதேகொள்"
வெம்	வெவ்வியதான	என்று	என்று சொல்லி
நரகத்து	நரகத்திலே	அடியேனை	சேஷபூதனான என்னை
அழுந்தி	ஆழங்கால்பட்டு	ஆட்கொள்ள	தாஸபூதனாக ஆக்கிக்கொள்ள
நடுங்குகின்றேற்கு	நடுங்குகிற எனக்கு	வல்லானை	ஸமர்த்தனாய்,

அரு.—அஞ்சாம்பாட்டு. (வந்தாயித்யாதி) பாட்டுக்கெல்லாம் தொகுத்துத் தாத்பர்யம் (இதுக்கித்யாதி). "பெற்றேன்" என்கிற ஸ்வரத்துக்குடலாகக் கருத்தருளுகிறார் (நீயோவித்யாதி). ... ... (ரு)

மஞ்சு	மேகம் (வரையில்)	மைந்தனை	ஸ்வாமியை
ஆர்	வ்யாப்தமான	நெஞ்சே	மனமே
மாளிகை	க்ருஹங்களால்	நீ	நீ
சூழ்	சூழப்பட்டதாய்	இறைப்போது	க்ஷணகாலமும்
வயல்	வயல்களோடே கூடினதுமான	நினையாது	நினையாமலே
ஆலி	திருவாலியில் எழுந்தருளியிராநின்ற	இருத்திகண்டாய்	இராநின்றாய். (சு)

அவ.—ஆறாம்பாட்டு. நெஞ்சைப்பார்த்து அதினுடைய நினைவைக்காதாசித்கமாக்கி அவன் நமக்கு உபகரித்துநின்றான். நீ தப்பச் செய்யாநின்றாயென்கிறார்.

வ்யா.— (எஞ்சாவித்யாதி) யமன் தண்டலானால் பண்ணின பாபத்தைக் கணக்கிட்டு அதுக்குத் தக்கடலத்தை அநுபவிப்பித்து பின்னை விட்டடிப்பார்கள்; அங்ஙனன்றிக்கே ஸம்ஸாரத்துக்கே ஹேதுவான பாபத்துக்கு ஓரவதியில்லாமையாலே ஒருகாலும் குறைந்துகாட்டாதாயிற்று. ஒருகாலும் குறையாதே யிருக்கிற ஸம்ஸாரத்திலே தரைகாணவொண்ணாதபடி அழுந்தி, நடுங்குகிற வென்னை, "நானுண்டே, நீ அஞ்சாதேகொள்" என்று. (அடியேனை யாட்கொள்ளவல்லானை) க்ஷத்ரிய புத்ரன்தலையிலே முடியை வைத்தாப்போலே.

(நெஞ்சே நீ நினையாதிறைப்போதுமிருத்திக்கண்டாய்) நீஜ்ஞானப்ரஸரத்வாரமன்றோ? "நீ நினை" என்று என்னைப்ரேரிக்கவேண்டாவோ? ஒருக்ஷணகாலமும் நீ நினையாதேயிராநின்றாய். (மஞ்சாரித்யாதி) நினைக்க அருமைப்படவேண்டும்படி அவன்றன்னை யரியனாக்கித்தான் நீ நினையாதிருக்கிறாயோ?. மேகபதத்தளவும் ஓங்கின மாடங்கள் சூழ்ந்திருப்பதாய், வயலோடு கூடின திருவாலி யிலே வந்து ஸந்நிஹிதனான மைந்தனையே. .... (சு)

அநு.—ஆறாம்பாட்டு.—(எஞ்சாவித்யாதி) கீழ்தாத்பர்ய மருளிச்செய்து சப்தார்த்தமருளுகிறார் (ஒருகாலுமித்யாதி). "அடியேன்" என்றத்தாலே ஆட்கொள்ள ப்ராப்தனென்னுமது தோற்றுமென்று த்ருஷ்டாந்தமருளுகிறார். (க்ஷத்ரியேத்யாதி). ... ... (சு)

மூ.—பெற்றார் பெற்றொழிந்தார் பின்னும் நின்றடியேனுக்கு
உற்றானாய்வளர்த் தென்னு யிராகி நின்றானை
முற்றா மாமதிகோள் விடுத்தானை யெம்மானை
எத்தால்யான் மறக்கேனிது சொல்லென்னேழைநெஞ்சே. (எ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
பெற்றார்	பித்ராதிகள்	நின்றானை	இருக்குமவனாய்,
பெற்று	அடியேனை (பெற்ற பின்பு)	முற்றா	பருவம் நிரம்பாத
		மாமதி	சந்த்ரனுடைய
ஒழிந்தார்	(யௌவந விரோதியென்று) பொகட்டுப் போனார்கள்;	கோள்	க்ஷயத்தை
		விடுத்தானை	போக்கினவனுமான
		எம்மானை	என்ஸ்வாமியை!
பின்னும்	பின்பு	எத்தால்	எந்தமார்க்கத்தாலே
அடியேனுக்கு	சேஷபூதனான எனக்கு	யான்	நான்
உற்றானாய்	ஸகலவிதபந்துவாய்	மறக்கேன்	மறப்பேன் ; [தான்
நின்று	நின்று	இது	இந்தவிஷயத்தை
வளர்த்து	உஜ்ஜீவிப்பித்து (அத	என்	என்னுடைய
என்	என்னுடைய [னால்)	ஏழை	அஜ்ஞதையையுடைய
உயிராகி	ப்ராணபூதனாய்க் கொண்டு	நெஞ்சே	மனமே!
		சொல்	நீசொல்லு. (எ)

அவ.—எழாம்பாட்டு. உமக்கித்தனை அதிமாத்ர நிர்பந்தமென்னென்ன; இவ்விஷயத்தை விட்டுப்போய் பின்னை நீ ஆரை நினைக்கவிருக்கிறாய்;என்? புறம்பு நினைக்க ஒருவருமில்லையோ வென்னில் ; இது வன்றோ புறம்புள்ளார்படி.

வ்யா.—(பெற்றார் பெற்றொழிந்தார்) பித்ராதிகள் ராகாந்தராய் ப்ரஜைகளை உத்பாதித்து யௌவந விரோதி யென்று பொகட்டுப் போக நிற்பர்களாயிற்று. பின்னையும் இவனுக் கொரு உறவு முறை யொழியச் செல்லாதிறே பண்ணிப் போந்த வாஸனையாலே, அவ்வளவில் அவர்கள் வழியாலே நின்று முகம்கொடுக்குமாயிற்று. தன் கைபார்த்திருக்கவேண்டும்படியான பருவத்தையுடைய வெனக்கு

அரு.—எழாம்பாட்டு. (பெற்றாரித்யாதி) "உற்றானாய்" என்று விசேஷித்ததுக்குக் கருத்தருளுகிறார் (பின்னையுமித்யாதி). வாக்யார்த்தமருளுகிறார் (தன்கையித்யாதி).

* எல்லா உறவு முறையும் தானேயாய் நின்று நோக்கி. (என்னுயிராகிநின்றானை) தாய் தகப்பன் பொகட்டவன்றும் நான் ஜீவிக்க வேணுமென்றிருக்குமிறே இச்சேதநன்தான்; அப்படி தனக்குப் பரிவனானதானாயும் நோக்கினானாயிற்று.

பருவம் நிரம்பாதசங்க்ரனுக்கு வந்த க்ஷயத்தைப்போக்கித்தன்னுடைய ரக்ஷகத்வத்தைக்காட்டி என்னையெழுதிக்கொண்டவன். (எத்தால்யான் மறக்கேன்) பண்ணின உபகாரம் அளவுபட்டு மறக்கவோ? புறம்பேயும் ஒரு புகலுண்டாய் மறக்கவோ? (இது சொல்லென் னேழை நெஞ்சே) ஸம்ஸாரத்தே சில விடவுமாய் பற்றவுமாயிருக்கிற விருப்பைக் கொண்டு பகவத்விஷயத்தை மறக்கலாமென்றிருக்கிற நீ சொல்லு. .... (எ)

மூ—கற்றார்பற்றறுக்கும் பிறவிப்பெருங்கடலே
பற்றாவந்தடியேன் பிறந்தேன் பிறந்தபின்னை
வற்றாநீர்வயல்சூழ் வயலாலியம்மானைப்
பெற்றேன் பெற்றதுவும் பிறவாமைப்பெற்றேனே. (அ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
அடியேன்	நான்	நீர்	ஜலஸம்ருத்தியையுடைத்தான
கற்றார்	ஜ்ஞாநிகள்	வயல்	வயல்களாலே
பற்று	ஸங்கங்களை [மதான	சூழ்	சூழப்பட்ட
அறுக்கும்	நிவர்த்தித்துக்கொள்ளு	வயலாலி	திருவாலியில் எழுந்தருளி யிருக்கிற
பிறவி	ஸம்ஸாரமாகிற [திலே	அம்மானை	ஸர்வேஶ்வரனை
பெரும்கடலே	பெரிதான ஸமுத்ரத்	பெற்றேன்	ப்ராபித்தேன்;
பற்றா	ஒருநிமித்தமாக	பெற்றதுவும்	அந்தபேற்றையும்
வந்து	வந்து	பிறவாமை	(விச்சேதம் பண்ணக்கடவ) மருபிறப்பில்லாதபடி
பிறந்தேன்	ஜநித்தேன் ;	பெற்றேன்	அடைந்தேன். (அ)
பிறந்தபின்னை	பிறந்தபின்பு		
வற்றா	ஒருநாளும் வற்றாமலிருக்கிற		

“முற்றா” என்றதுக்கர்த்தம் (பருவமித்யாதி). இதுசொல்லென்னும்படி பிடிக்கைக்கு நெஞ்சுசொல்லமாட்டுமோ வென்னும் சங்கை தீரத்தாத்பர்யமருளுகிறார் (ஸம்ஸாரத்தையித்யாதி). “ஏழை” என்று - அஜ்ஞதையாய், அதின் தாத்பர்யமென்னவுமாம். ... ... (எ)

அவ.—எட்டாம்பாட்டு. உமக்குஉற்றாய்நின்றவன்பண்ணின வுபகாரந்தானென்னென்ன; ஸ்வாநுபவத்துக்கு விச்சேதம் வாராத படிபண்ணித் தந்தவனன்றோ வென்கிறார். அதுக்கு உம்முடைய பக்கல் உள்ளதென்னென்னில்;

வ்யா.—(கற்றாரித்யாதி) அறிவுடையார் (க) "இந்நின்றநீர்மை யினியாமுறாமை" என்றுகழித்துக்கொள்ளத்தேடும் ஸம்ஸாரமாகிற பெருங்கடலிலேதிரைமேல் திரையாகக்கொண்டுபோந்து எறடுமா போலே ஒருஜந்மம் ஒருஜந்மத்திலே தோள்மாற * மாறிமாறிப் பலபிறப்பும் பிறந்துபோந்தேன்; இப்படிப்பிறந்து போராநிற்கச் செய்தே நான்பிறந்த ஸம்ஸாரத்திலே அவன்வந்து ஸந்நிஹிதனாகை யாலே அவனைப் பெற்றுக்கொண்டு நின்றேன்.

(வற்றாநீரித்யாதி) ஒருநாளும் நீர்மாறாத வயல்சூழ்ந்த திருவாலியிலேநிற்கிற ஸர்வேஶ்வரனைப் பெற்றேன். (பெற்றதுவும்) அந்தபெற்ற பேறுதானும். (பிறவாமைபெற்றேன்) இப்பேற்றுக்கு விச்சேதத்தைப் பண்ணக்கடவஜந்மம் மறுவலிடாதபடி பெற்றேனென்னுதல்; அன்றிக்கே இப்பேற்றுக்கடியாக என்பக்கல் ஒருநன்மை பிறவாதிருக்கச்செய்தே பெற்றேனென்னுதல்; அங்ஙனன்றிக்கே பெற்றேனென்னும் உபகாரஸ்ம்ருதியும் வர்த்தியாதபடி பெற்றேனென்னுதல்; உபகாரஸ்ம்ருதி அநுவர்த்தித்தவன்று ப்ரத்யுபகாரம்

அரு.—எட்டாம்பாட்டு. (கற்றாரித்யாதி) (விச்சேதம் வாராதபடி) என்றதுக்கும் "பிறவாமை" என்கிற பதத்துக்குச் சொன்னயோஜனைக்கும் சேரத் தாத்பர்யம்கண்டு கொள்வது. அதாவது - இனி ஒருபிறப்பும் வாராதபடி யென்னும்பக்ஷத்தில், அநுபவவிச்சேதத்துக்கு ப்ரஸக்தியில்லாதபடி யென்கிறது; நன்மை - பிறவாமை யென்கிற பக்ஷத்தில் நாம்பண்ணின நன்மை யாலே அநுபவம் வந்ததாகில் வேண்டினபோது அநுபவிக்கவும், மற்றைப் போது ஆறியிருக்கவுமாயிருக்கையாலே விச்சேதப்ரஸக்தியுண்டு. உபகாரஸ்ம்ருதிபிறவாமையென்கிற பக்ஷத்தில் ப்ரத்யுபகாரம் தேடித்தடுமாறவேண்டுகையால் விச்சேத ப்ரஸக்திவரும். ஆகையால் இம்மூன்று யோஜனைக்கும் அநுகுணமாக இப்படி தாத்பர்யம் கொள்ளவேணுமென்கை.

"பற்றாவந்து" நிமித்தமாகவந்து என்றாய்அத்தைஉபபாதிக்கிறார்(திரையித்யாதி). மேலுக்கவதாரிகை (இப்படியித்யாதி). ... ... (அ)

(க) திருவி-க.

தேடி நெஞ்சாறல் படவேண்டும்படி யிருக்குமிறே. அதுவேண்டாதே "ப்ராப்தம்இது" என்றிருக்கும்படி உபகரித்தானாயிற்று.

மூ.—கண்ணார்கண்ணபுரம் கடிகை கடிகமழும்
தண்ணார்தாமரைசூழ் தலைச்சங்கமேல்திசையுள்
விண்ணோர்நாண்மதியை விரிகின்றவெஞ்சுடரை
கண்ணாரக்கண்டுகொண்டு களிக்கின்றதிங்கென்றுகொலோ.(௯)

பதம்.	உரை.	பதம்.	உரை.
கண்	கண்களுக்கு	நாள்மதியை	சந்த்ரனைப்போலே நித்யாநுபாவ்யனாய்,
ஆர்	பூர்ணவிஷயமான		
கண்ணபுரம்	திருக்கண்ணபுரத்திலும்,	விரிகின்ற	உதயமாகாநின்ற
		வெம்	வெவ்வியதான
கடிகை	திருக்கடிகையிலும்,	சுடரை	தேஜஸ்ஸையுடைய ஸூர்யனைப்போன்ற ப்ரதாபமுடைய எம்பெருமானை
கடி	பரிமளத்தால்		
கமழும்	வ்யாப்தமாய்		
தண்	குளிர்ச்சியால்		
ஆர்	பூர்ணமுமான	இங்கு	இவ்விடத்திலேயே
தாமரை	தாமரைகளாலே	கண்ணார	கண்களுக்கு பூர்ணமாக
சூழ்	சூழப்பட்ட	கண்டு	ஸேவித்து
தலைச்சங்கம்	தலைச்சங்காட்டில்	களிக்கின்றது	ஆநந்திப்பது
மேல்திசையுள்	மேல்பார்ஶ்வத்திலும்	என்றுகொலோ	எந்தகாலம். (௯).
விண்ணோர்	நித்யஸூரிகளுக்கு		

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (கண்ணார்கண்ணபுரம்) கண்டார்க்குக்கண்மாறவைக்கவொண்ணாதபடியான திருக்கண்ணபுரம், திருக்கடிகை, பரிமளத்தைப் புறப்படவிடாநிற்பதாய், ஶ்ரமஹரமான தாமரைகளாலே சூழப்பட்ட தலைச்சங்காட்டில் மேல்பார்ஶ்வத்தில். (விண்ணோர்நாண்மதியை) நித்யஸூரிகளுக்கு என்று மொக்க அநுபாவ்யனானவனாயிற்று இங்கேவந்து ஸுலபனானான். (விரிகின்றவெஞ்சுடரை) உதயகாலத்தில் ஆதித்யனைப்போலே ப்ரதாபம்

அரு.—ஒன்பதாம்பாட்டு. (கண்ணாரித்யாதி) நெஞ்சும் தாமுமாய் உசாவிக்கொண்டு அநுபவியாநின்றார்கீழ். இப்படியிருக்கச்செய்தே கண்கள்தான் யுகபத் அநேக திவ்யதேசங்களையும் ஸாக்ஷாத்கரிக்க வேணுமென்றாசைபட்டு அது இங்குபிறவாமையாலே பதறுகிறாரென்று ஸங்கதி.

கண்ணுக்குப் பரிபூர்ணமானவிஷயமென்றாய், தாத்பர்யமருளுகிறார் (கண்டாரித்யாதி).

விஞ்சியிருப்பது, கண்ணாலே முகக்கலாயிருப்பது. (கண்ணித்யாதி) ஒருதேசவிசேஷத்திலேபோனல் ஸதாதர்ஶநத்தாலே(த) "𑌹𑌾𑌵𑍁 𑌹𑌾𑌵𑍁 𑌹𑌾𑌵𑍁 - அஹமந்நமஹமந்நம்" என்று களிக்குமத்தை இங்கே கண்ணாலேகண்டு களிக்கப்பெறுவதுஎன்றோவென்கிறார். இங்கே கண்ணாலே காண்கையாவதென்னென்னில்; இவருடைய த்வரையிருக்கிறபடியிறே. .... (௯)

மூ.—செருநீர வேல்வலவன் கலிகன்றிமங்கையர்கோன்
கருநீர்முகில்வண்ணன் கண்ணபுரத்தானை
இருநீரின்தமிழின்னிசைமாலைகள் கொண்டுதொண்டீர்
வருநீர்வையமுய்ய விவைபாடியாடுமினே. (௧௦)

திருமங்கையாழ்வார் திருவடிகளேசரணம்.

பதம்.	உரை.	பதம்.	உரை.
கரு	கறுத்தும்	இரு	அதிகமான
நீர்	ஜலபரிதமுமான	நீர்	நீர்மையுடையதாய்
முகில்	மேகம்போன்ற	இன்	இனியதான
வண்ணன்	திருமேனி நிறத்தையுடையரான	தமிழ்	தமிழ்ரூபமான
கண்ணபுரத்தானை	திருக்கண்ணபுரத்தில் எழுந்தருளியிருக்கிற சவரிப்பெருமாள் விஷயமாக,	இன்	இனியதான
செரு	யுத்தம் செய்கையே	இசை	கானரூபமான
நீர்	ஸ்வபாவமாகவுடைய	மாலைகள்கொண்டு	மாலாரூபமான ப்ரபந்தத்தைக்கொண்டு
வேல்வலவன்	வேல்கை வந்திருக்குமவரான	தொண்டீர்	கைங்கர்ய பரர்களான நீங்கள்
மங்கையர்	திருமங்கைக்கு	வரும்	(பூமிப்பரப்படங்கலும் சூழ்ந்து) வாராநின்ற
கோன்	ராஜாவான	நீர்	கடலாலே சூழப்பட்ட
கலிகன்றி	ஆழ்வார் (அருளிச்செய்த)	வையம்	லோகங்கள்
		உய்ய	உஜ்ஜீவிக்கும்படி
		இவை	இப்ப்ரபந்தத்தை
		பாடி	காநம்செய்து
		ஆடுமினே.	ஆடக்கடவீர்கள்.(௧௦)

(என்னென்னில்) என்றது-காண்கைக்குத் தடையென்னென்றபடி. (த்வரை) என்றது - நினைத்தபோதே அங்கேபோய் காணவேணுமென்னும் த்வரையென்கை. ... ... (௯)

(த) தை-ப்ருகு-ம-௯.

வ்யா.—பத்தாம்பாட்டு. (செருநீர் வேல்வலவன்) செருச்செய்கையை ஸ்வபாவமாகவுடைய வேல் கை வந்திருக்குமவருமாய், ப்ரதிபக்ஷநிரஸநஸ்வபாவருமாய், திருமங்கையிலுள்ளார்க்கு ப்ரதாநரான ஆழ்வார் ஶ்ரமஹரமான வடிவையுடைய சவரிப்பெருமாளையாயிற்றுக் கவிபாடிற்று.

(இருநீரித்யாதி) விஷயவைலக்ஷண்யத்தையொழியவே மிக்க நீர்மையை யுடைத்தாயிருக்கிற இன்தமிழாகிற இசைத்தொடையைக்கொண்டு கைங்கர்ய ருசியுடையரான நீங்கள் கடல்சூழ்ந்தபூமியிலே இவற்றைப்பாடுவது ஆடுவதாய் உஜ்ஜீவித்துப்போகப் பாருங்கோள். அன்றிக்கே (க) "సర్గేపినోపజాయన్తే ప్రళయేనవ్యథన్తిచ - ஸர்க்கேபிநோபஜாயந்தே ப்ரளயேநவ்யதந்திச" என்கிறபடியே வரக்கடவதான ப்ரளயத்திலேபுக்கு அழுந்திநோவுபடாமே நீங்கள் இவற்றைக்கொண்டு பாடுவதாடுவதாக உங்கள்ஸஞ்சாரத்தாலே ஜகத்தை உஜ்ஜீவிப்பிக்கப் பாருங்கோளென்னுதல். .... (௧௦)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

பெரியதிருமொழி
எட்டாம்பத்து ஒன்பதாந்திருமொழி முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளேசரணம்.

பெரியதிருமொழி
எட்டாம்பத்து பத்தாந்திருமொழி
வண்டார் ப்ரவேசம்.

வ்யா.—கண்ணாலேகண்டு களிக்கின்ற திங்கென்று சொல்லிநின்

அரு.—பத்தாம்பாட்டு- (செருவித்யாதி) "வருநீர்" பூமிசூழ்ந்துவருகிற நீரானகடலென்றும், மேலேவரக்கடவ நீர்ப்ரளயஜலமென்றும் இரண்டர்த்தமருளுகிறார் (கடலித்யாதி. வாக்யத்வயத்தாலே). "வையத்திலே நீங்கள் உய்ய" என்று முந்தினயோஜநைக்கு சப்தார்த்தம். ... ... (௧௦)

ஜீயர் திருவடிகளே சரணம்.

அரு.—வண்டார்ப்ரவேசம். "கண்ணாரக்கண்டு களிக்கின்ற திங்கென்று

(க)

றீரே; கண்ணாலே கண்டுகளிக்கை பேறானல் அதுக்குத்தன்கைபார்த்திருக்கவேண்டும்படி யிருக்கிறவனைக் கேட்போமென்று பார்த்து நீ சொல்லென்கிறார். உம்முடைய அநந்யகதித்வத்தை ஆவிஷ்கரித்து கைங்கர்யத்தையொழியச் செல்லாத உம்முடைய சாபலத்தை ஆவிஷ்கரித்தநீர், கைங்கர்யம் பெற்றீரே; வாசிகமான வடிமைசெய்யா நின்றீராகில் இனிவேண்டுவதுண்டோவென்று அத்தை இவர் திருவுள்ளத்திலேபடுத்த, அத்தாலே இனியராய்த்தலைக்கட்டுகிறார்.*

மூ.—வண்டார்பூமாமலர்மங்கை மணநோக்கம்
உண்டானே உன்னையுகந் துகந் துன்றனக்கே
தொண்டானேற்கு என்செய்கின்றாய் சொல்லுநால்வேதம்
கண்டானே கண்ணபுரத்துறையம்மானே. (க)

பதம்.	உரை.	பதம்.	உரை.
வண்டு	வண்டுகளாலே	கண்டானே	வெளியிட்டவனுமான
ஆர்	பூர்ணமாய்	கண்ணபுரத்துறை	திருக்கண்ணபுரமென்கிற திவ்யதேசத்தில் வர்த்திக்குமவனான
பூ	அழகியதாய்	அம்மானே	ஸ்வாமியே!
மா	பரப்புடையதுமான	உன்னை	உம்மை
மலர்	புஷ்பத்தில் நித்ய வாஸம்பண்ணாநின்ற	உகந்துகந்து	மிகவும் உகந்து
மங்கை	பெரியபிராட்டியாருடைய	உன்றனக்கே	உனக்கே
மணம்	மங்களாவஹமான	தொண்டானேற்கு	அடிமைசெய்யவேணுமென்றிருக்கிறஎனக்கு
நோக்கம்	வீக்ஷணத்தை	என்செய்கின்றாய்	(நீ) என்னசெய்வதாய் நினைத்திருக்கிறாய்
உண்டானே	(தாரகமாக) உடையவனாய்,	சொல்லு	சொல்லவேணும். (க)
நால்	நான்குவிதமான		
வேதம்	வேதங்களையும்		

வ்யா.—முதற்பாட்டு. (வண்டாரித்யாதி) வண்டுகள் ஜாதியாகப்படிந்திருப்பதாய், தர்ஶநீயமாய் பிராட்டிக்கு நினைத்தபடி

கொலோ'' என்றுவிடாய்த்தவர் '' காட்டினாய் கண்ணபுரத்துறை யம்மானே'' என்று களிக்கப்ரஸக்தி யென்னென்னும் சங்கையிலே ப்ரஸக்தியைக் காட்டாநின்றுகொண்டு ஸங்கதியருளுகிறார் (கண்ணாலேயித்யாதி). களிக்கப்பெறாதநாளிலே சொல்லாநின்றாரென்று கீழோடே அந்வயம். (அதுக்கு) காலரவதிக்கு. ... ... *

வர்த்திக்கைக்கீடான பரப்பையுடைத்தான தாமரைப்பூவையிருப்பிடமாகவுடைய பெரியபிராட்டியாருடைய நோக்கை தா(ஃ)ரகாதிகளாகவுடையவனே! (உன்னை) அவளோடுகூடி யிருக்கிறஉன்னை. ப்ரஹ்மசாரி யெம்பெருமானை யன்றாய்த்து இவர்உகந்திருப்பது. (உகந்துகந்து) மிகவுமுகந்து. (உன்றனக்கே தொண்டானேற்கு) தாயும் தமப்பனும் சேரவிருக்க அநுவர்த்திப்பாரைப்போலே, அவனுமவளுமான சேர்த்தியிலே அடிமைசெய்ய வேணுமென்றாய்த்து இவர் ஆசைப்பட்டிருப்பது. பிராட்டியும் அவனுமான சேர்த்தியிலே அடிமைசெய்யவேணுமென்னும் சாபலத்தையுடைய என்க்கு.

(என்செய்கின்றாய் சொல்லு) நீ செய்தருளப் பார்த்ததென் சொல்லு. ப்ராப்யப்ராபகங்களிரண்டும் அவளும் அவனுமானசேர்த்தியிலேயாயிற்று இவர்நினைத்திருப்பது. உபாய பா(ஃ)வத்தில் குறைவறவிருக்கிற நீ செய்தருளுவதாக நினைத்திருக்கிறதென் சொல்லு. (என்செய்கின்றாய் சொல்லு) தம்முடைய உகப்பைப் பேற்றுக்குப் பரிகரமாக நினைத்திருக்கிறிலர்; அவன் நினைவே பேற்றுக்குப் பரிகரமாக நினைத்திருக்கையாலே சொல்லுஎன்கிறார். (நால்வேதம்கண்டானே)ப்ரளயகாலத்தில் இவற்றினுடையஆநுபூர்வியை ஸ்மரித்திருந்து வெளியிடுகையிறே-இவற்றைக் காண்கையாவது. நித்யமானவேதத்தில ஸாக்ஷாத்காரத்துக்கு மேற்படவில்லையிறே. அன்றிக்கே பட்டர் அருளிச்செய்தாராகச் சிறியாத்தான்பணிக்கும்படி; "இதுகர்த்தரி அன்று, கர்மணிகிடாய்"என்றுப்ராப்யப்ராபகங்

அரு.—முதற்பாட்டு. (வண்டாரித்யாதி). "மணமான" மங்களாவஹமான நோக்கமென்றர்த்தம் விவக்ஷித்து தா(ஃ)ரகாதிகளென்று ஆதிபத ப்ரயோகம் பண்ணுகிறாரென்று கண்டுகொள்வது. உனக்கென்னாதே "உன்றனக்கு" என்றத்தாலே தோன்றின ஸம்பந்தவிசேஷத்தை ஸத்ருஷ்டாந்தமாக வருளுகிறார் (தாயுமித்யாதி).

(குறைவறவிருக்கிறநீ) என்றது-புருஷகாரத்தோடு கூடியிருக்கிற நீயென்கை. "சொல்" என்று நிர்பந்திக்கக் கூடுமோவென்ன அவன் நினைவைக்கேளாதே தீராமையாலே கேட்கிறாரென்று விவக்ஷித்துத் தாத்பர்யமருளுகிறார் (தம்முடைய வித்யாதி). (இது) என்றது - "கண்டான்" என்ற பதத்தை. (கர்மணிகிடாய்) என்றது-காணப்பட்டானென்று சொன்னபடி கிடாயென்கை. ... ... (க)

களிரண்டும் அவனே யென்னுமிடத்தையாயிற்று வேதங்கள் வெளியிட்டது. (கண்ணபுரத்துறையம்மானே) ப்ரமாணங்களிலே கேட்டுப்போகையன்றிக்கே கண்ணாலே கண்டநுபவிக்கலாம்படி திருக்கண்ணபுரத்திலேவந்து ஸுலபனான நீ சொல்லு. .... (௧)

மூ.—பெருநீரும்விண்ணும் மலையுமுலகேழும்
ஒருதாராநின்னுளொடுக்கிய நின்னையல்லால்
வருதேவர்மற்றுளரென்றென் மனத்திறையும்
கருதேன்நான் கண்ணபுரத்துறையம்மானே. (௨)

பதம்.	உரை.	பதம்.	உரை.
கண்ணபுரத்துறை யம்மானே?		மற்று	வேறான
பெருநீரும்	ஸமுத்ரத்தையும்	தேவர்	தேவதைகள்
விண்ணும்	ஆகாசத்தையும்	உளர்	இருப்பர்கள்
மலையும்	மலைகளையும்	என்று	என்பதையே
உலகுஏழும்	ஸப்தலோகங்களையும்	நான்	நான்
ஒருதாரா	ஒருமாலையாக	என்	என்னுடைய
நின்னுள்	உன்னிடத்திலேயே	மனத்து	மனதில்
ஒடுக்கிய	சேர்ப்பித்துக் கொண்ட	இறையும்	கொஞ்சமும்
நின்னையல்லால்	உன்னைவிட்டு	கருதேன்	நினைத்தறியேன். (௨)
வரும்	("நானேப்ராப்யன்" என்று) வாராநின்ற		

அவ.—இரண்டாம்பாட்டு. "உன்றனக்கே தொண்டானேன்" என்றாரே; இங்ஙன்சொல்லுவானென்? புறம்பே ஆஸ்ரயிப்பாரும் ஆஸ்ரயணீயருமாயன்றோ விருக்கிறதென்ன; அவர்கள் செய்தபடி செய்கிறார்கள்; எனக்கு முன்னம் இதர விஷயங்களில் புத்தியில்லை யென்கிறார்.

வ்யா.—(பெருநீருமித்யாதி) கடலும் ஆகாசமும் குலபர்வதங்களும் லோகங்களேழும் இவற்றையடையப்ரளயத்தில். (ஒருதாரா) ஒருமாலையாக. (நின்னுளொடுக்கிய) ஒருபூவை விழுங்கினாப்போலேயாயிற்று வருத்தமற்றிருந்தபடி. அன்றிக்கே (ஒருதாரா) ரக்ஷணத்துக்குத் தனிமாலையிட்டு நிற்கிறவனே! இவற்றையடையவும் திருவயிற்றிலேவைத்து நோக்கின உன்னையல்லது.

அரு.—இரண்டாம்பாட்டு (பெருநீருமித்யாதி) (என்றாரே) என்றவனந்தரம் "இதுக்குமறுமாற்றம் காணாமையாலே" என்றுகூட்டுவது.(என்ன)என்றதுக்கு ஈஸ்வரனுக்கபிப்ரேதமாகக் கொண்டென்று கருத்து.
ஸம்போதநயாக வர்த்தமருளுகிறார் (அன்றிக்கேயித்யாதி). ... (௨)

(வருதேவரித்யாதி) ப்ரளயம் வந்தபோதாக உன்வயிற்றிலே போய்ப்புக்கு நீ வெளிநாடுகாணப் புறப்படவிட்டவாறே நான் ஆஶ்ரயணீயனென்று வருவதொருதேவதை யுண்டாக நான் அறியேன். (இறையும்) பூர்வபக்ஷத்வேநவும் நினைத்தறியேன். (கண்ணபுரத்துறை யம்மானே) ப்ரளயாபத்தைப் பரிஹரித்து இன்று ஆஶ்ரயணீயனென்னுமிடம் தோற்ற நீ வந்து ஸந்நிஹிதனாக நானெங்ஙனே வேறுசிலரை ஆஶ்ரயணீய ரென்றிருக்கும்படி. ஸம்ஸாரப்ரளயத்தைப் பரிஹரிக்கைக்காகவிறே நீ இங்குவந்து நிற்கிறது. (௨)

மூ.—மற்றுமோர்தெய்வமுள தென்றிருப்பாரோடு
உற்றிலேனுற்றது முன்னடியார்க்கடிமை
மற்றெல்லாம்பேசிலும் நின்திருவெட்டெழுத்தும்
கற்றுநான் கண்ணபுரத்துறையம்மானே. (௩)

பதம்.	உரை.	பதம்.	உரை.
கண்ணபுரத்துறையம்மானே?		கற்று	அப்யஸித்து (அந்த திருவஷ்டாக்ஷரம்)
மற்றும்	"உன்னைவிடவேறான	மற்றெல்லாம்	மற்றுமுள்ள அநேகார்த்தங்களை
ஓர்தெய்வம்	ஒருதெய்வமானது	பேசிலும்	சொல்லிற்றேயாகிலும்
உளது	உண்டு"	உற்றதும்	(நான்) அர்த்தமாக உணர்ந்து அறுதியிட்டது
என்றிருப்பாரோடு	என்றுசொல்லுமவர்களோடு	உன்	உம்முடைய
உற்றிலேன்	ஸம்பந்தமுடையேனல்லேன்,	அடியார்க்கு	சேஷபூதர்களான பாகவதர்களுக்கே
நான்	அடியேன்	அடிமை	சேஷபூதனாயிருப்பதுதான். (௩)
நின்	உம்முடைய		
திருவெட்டெழுத்தும்	திருவஷ்டாக்ஷரத்தை		

அவ.—மூன்றாம்பாட்டு. வேறுசிலரை ஆஶ்ரயணீயரல்லரென்று நினைத்திருக்குமளவேயோ? தாமஸபுருஷர்களோடு ஸம்பர்க்கமுமில்லை. ஸாத்விகரையொழியக் காலம் செலுத்தவும் மாட்டேனென்கிறார். (௧)* எண்ணாதமானிடத்தை யெண்ணுமவனுமல்லேன். *(௨) பேராளன் பேரோதும் பெரியோரை யொருகாலும் பிரியுமவனல்லேனென்கிறார்.

அரு.— மூன்றாம்பாட்டு. (மற்றுமித்யாதி) இவர்சொல்லாலேதானே உக்தார்த்தத்தை த்ருடீகரிக்கிறார் (எண்ணாதவித்யாதி).

---

(௧) ௧௧-௬-௭. (௨) ௭-௪-௪.

வ்யா.—(மற்றுமோர்தெய்வ முளதென்றிருப்பாரோடுற்றிலேன்) தேவதாந்தர ஸ்பர்ஶமுடையாரோடு எனக்கொரு ஸம்பந்தமுமில்லை. (உற்றதுமித்யாதி) அவர்களைவிட்டு உன்னளவில் நின்றவனுமல்லேன். இவ்வநுஷ்டாநம் தான் நீர் எங்கேயார் சொல்ல பரிக்ரஹித்தீரென்ன; நீ சொன்ன முதல் வார்த்தைக்கு அர்த்தமாக நான் நினைத்திருப்பது இதுவென்கிறார். இதுபின்னை அநேகார்த்தங்களைச்சொல்லுமே? ஜீவஸ்வரூபத்தைச் சொல்லும், நம்முடைய ஸ்வரூபத்தைச் சொல்லும்; ஜீவவஸ்துக்களுக்கும்நமக்குமுண்டான ஸம்பந்தத்தைச் சொல்லும்; ப்ராப்திபலமான கைங்கர்யத்தளவும் வந்திருக்குமேயென்ன; அது அநேகார்த்தங்களைச் சொல்லிற்றேயாகிலும் அதில்எங்குமாக நான் அறுதியிட்டிருக்குமர்த்தம்-அநந்யார்ஹசேஷத்வம்; அதுதான் ததீயசேஷத்வ பர்யந்தமாயல்லதிராது.

(ஸ்பர்ஶமுடையாரோடே) என்றது "மற்றுமோர் தெய்வமுடையாரோடு" என்னாதே, "உளதென்றிருப்பாரோடு" என்கையாலே மாநஸஸ்பர்ஶமுடையாரென்கை. "மற்றெல்லாம்" இத்யாதிக்கு உக்திப்ரத்யுக்திமுகேந தாத்பர்யமருளுகிறார் (இவ்வநுஷ்டாநமித்யாதி). (முதல்வார்த்தை) என்றது -(க) "நான்கண்டுகொண்டேன் நாராயணாவென்னும் நாமம்" என்னும்படி உபக்ரமத்தில் சொன்ன திருமந்த்ரம். (ப்ராப்தி) என்றது - சேஷசேஷிபாவ ஸம்பந்த நிபந்தநமான முறையென்கை. (எங்குமாக) ஸகலபதார்த்தங்களிலுமாக. (அறுதியிட்டு) என்றது - ஜ்ஞாதவ்யதயா அறுதியிட்டுவென்கை. ஜீவஸ்வரூபம் ஆஶ்ரயதயா ப்ரஸக்தமாகையாலும், பகவத்ஸ்வரூபம் விஷயதயா சொல்லவேண்டுகையாலும், தத்விஷயகைங்கர்யம் சேஷத்வகார்யமாகத்தன்னடையே வருமாகையாலும், அநந்யார்ஹசேஷத்வமே ஜ்ஞாதவ்யமாகையால், அது-பாகவதபர்யந்தமானாலிறே நிலைநிற்பது; ஆகையாலேஉன்னடிமையாகையாயிற்று ப்ராதாந்யேந தோற்றுமர்த்தமென்று இவ்வாக்யத்துக்குத் தாத்பர்யம்.

"நின்திருவெட்டெழுத்தும் கற்றுநான் வல்லது". என்றதுக்கு என்னை உனக்கே அடிமையென்னுமர்த்தத்தை அறிவிப்பிக்கிறவார்த்தையிலேதானே "அடியார்க்காட்படுக்க வல்லவார்த்தை இது" என்று நான்தானே அர்த்தம் பண்ணவல்லது அது, என்று சப்தார்த்தம் விவக்ஷித்துகீழ் உக்தி ப்ரத்யுக்திரூபேண தாத்பர்யமருளிச்செய்து, கீழ்மேல்பாட்டுக்களில் ரீதியைவிடமாட்டாமல் "கண்ணபுரத்துறையம்மானே" என்று ப்ரதீகம் க்ரஹித்துத்தாத்பர்யமருளிச்செய்ய, அதுக்குமேலே எழுத்துக்கற்றதும், "நான்வல்லது கண்ணபுரத்து

(க) ௮-௧-௧.

(கண்ணபுரத்துறை யம்மானே) இதுவன்றோ நீ இங்குவந்திருந்து ஓதுவித்தவர்த்தம். கீழும்கண்ணபுரத்துறையம்மானேயென்று போருகையாலே இதுவும் அப்படி நடத்தப் பார்க்குமன்று அக்ஷரமேறிவரும். அதுக்காக ''கற்றுநான்வல்லது கண்ணபுரத்தானே'' என்னுதல். அன்றிக்கே ரீதிபேதம் பிறவாமைக்காக ''கண்ணபுரத்துறையம்மானே! நின்திருவெட்டெழுத்தும் கற்றுநானுற்றதும் உன்னடியார்க்கடிமை'' என்றாவது. ''உன்னளவில் நின்றவனல்லேன்'' என்றபோது, ''அவன் திருவுள்ளமென்படுகிறதோ?'' என்று நஞ்ஜீயரருளிச்செய்ய; பிள்ளை ''* அல்லிக்கமலக்கண்ணனாகிறான்'' என்றருளிச்செய்தார். (க) ''நீக்கமில்லாவடியார் தமடியாரடியாரெங்கோக்கள்'' என்று இவர் பாகவதசேஷத்வத்தளவிலே நின்றவாறே, அவன் * அல்லிக் கமலக்கண்ணனானான். ப்ரபந்நனுடைய லக்ஷணமாகிறது - ஶ்ரிய:பதியே உபாயோபேயங்களென்றிருக்கையும், தேவதாந்தர ஸ்பர்ஶமும், தாமஸபுருஷர்களோடு ஸம்பர்க்கமுமின்றிக்கே யிருக்கையும். பாகவதரையொழியச்செல்லாமையுண்டாயிருக்கையும். தர்மியை அநுபந்தித்திருக்கும் தர்மங்களை

றையம்மானே'' என்று சேரப்பிடித்துக் கொள்ளுமளவிலே பதினாறு எழுத்தாய்விழுகையாலே கீழ்அடிகளில் ஸங்க்யைக்கு ஏற்றம் வருமென்று காட்டா நின்றுகொண்டு ரீதிபேதத்தை அங்கீகரித்து ''கண்ணபுரத்தாய்'' என்று பாடத்தைக் காட்டுகிறார் (கீழுமித்யாதி). இப்பக்ஷத்தில் ''அதுநான் அல்லது'' என்றத்தைவிட்டு பன்னிரண்டு எழுத்தாகவே அநுஸந்திப்பதென்று திருவுள்ளம். இப்படி பாடமே பஹுகோசஸித்தம். முந்தினது உண்டானவிடத்தில் கண்டுகொள்வது. அவனருளிச்செய்த திருமந்த்ரத்துக்கு ஸார்த்தமானவர்த்தம் - பகவதநந்யார்ஹசேஷத்வமாயிருக்க, இவருக்குக் கருத்தாகவெண்ணிற்று-அவனடியார்க்கடிமையானால், அவனுக்கு முகச்சுளிப்பு வாராதோவென்ன; வாராது; ப்ரத்யுத ஆநந்தமேயுண்டாமென்று ஸம்வாதமுகேந தாத்பர்யமருளுகிறார் (உன்னளவிலித்யாதி). மூன்று பாட்டாலும்பலித்த ப்ரமேய விசேஷந்தன்னையருளுகிறார் (ப்ரபந்நனுடையவித்யாதி). பாகவதர்களை யொழியச் செல்லாமை ஸ்வரூபமானால், திருமந்த்ரத்தில்இத்தை சப்தார்த்தமாகச்சொல்லாமல்போவானென்னென்னவருளுகிறார்(தர்மியையித்யாதி). பகவத்விஷயத்தில் அநந்யார்ஹசேஷத்வம் சொன்னபோதே அவ

(க) தி-வாய்-அ-கo-கo.

நேரே வ்யவஹரித்ததில்லையேயாகிலும் தர்மியைச் சொன்னபோதே தர்மங்களுமெல்லாம் சொல்லிற்றாமிறே. .... (௩)

மூ.—பெண்ணானாள் பேரிளங்கொங்கையினாரழல்போல்
உண்ணாநஞ்சுண்டு கந்தாரை யுகந்தேன்நான்
மண்ணாளா வாணெடுங் கண்ணி மதுமலராள்
கண்ணாளா கண்ணபுரத் துறையம்மானே. (௪)

பதம்.	உரை.	பதம்.	உரை.
மண்ணாளா	ஸ்ரீ பூமிப்பிராட்டிக்கு வல்லபனாய்	பேர்	பெரிதாயும்
		இளம்	இளமையுடையதுமான
வாள்	ப்ரகாசமாயும்		
நெடும்	விசாலமுமான	கொங்கையின்	ஸ்தநத்திலிருக்கிற
கண்ணி	திருக்கண்களையுடையளாய்	ஆர்	பூர்ணமாய்
மது	மதுஸ்யந்தியான	அழல்போல்	அக்நிபோன்றதாய்
மலராள்	புஷ்பத்தில் வாஸம் பண்ணுமவளான	உண்ணா	ஒருவராலும் புஜிக்கப்படாததுமான
	பெரியபிராட்டியாருக்கு	நஞ்சு	விஷத்தை
		உண்டு	புஜித்து (பூதனையை முடித்து, அதனால்)
கண்ணாளா	வல்லபனுமான		
கண்ணபுரத்துறையம்மானே!			
பெண்	ஸ்த்ரீரூபமாய்	உகந்தாயை	உகப்பையுடைய உன்னை
ஆனாள்	வடிவுடையளானபூதனையினுடைய	நான்	நான்
		உகந்தேன்	ஸந்தோஷித்தேன்(௪)

அவ்.—நாலாம்பாட்டு. அக்குணங்களெல்லாமுண்டானாலும் நாம் விரும்பியிருத்தல் வலியபுருஷகாரமுண்டாதல்செய்தவன்றன்றே, அதுகார்யகரமாவதுவென்ன; நஞ்சு தா (ஞு) ரகமான உனக்கு ஆகாதில்லை; பிராட்டிமார் எனக்குப் புருஷகாரமானபின்பு என் கார்யத்துக்குக் குறையுண்டோவென்கிறார்.

வ்யா.—(பெண்ணானாள்) பேயாயிருந்துவைத்துப் பெண்ணானாள். நிருபாதிக ஸ்த்ரீத்வமுள்ளது யசோதைப் பிராட்டிக்கிறே. அவளாகத்தன்னைபா(ஞு)வித்துவந்தாளாயிற்று.(பேரிளங்கொங்கை)

னுக்கு அநந்யார்ஹரான இவர்களை யொழியச் செல்லாமை சொல்லிற்றாமென்றுகருத்து. ... ... (௩)

அரு.—நாலாம்பாட்டு. (பெண்ணித்யாதி) கீழ்மூன்று பாட்டோடும் ஸங் காட்டுகிறார் (இக்குணங்களித்யாதி).

பெருமையையும் இளமையும் இரண்டும் அருளிச்செய்ததுக்குத் தாத்

ஏறிட்டுக்கொண்டதொழியபேயான படியாலே முலைபெருத்திருக்குமிறே. யசோதைப் பிராட்டியாக வநுகரித்து வருகையாலே இளமையும் கிடக்கும். அக்நிகல்பமான விஷமாயிற்று; நெருப்பைவாயிடுவார் இல்லையிறே; (உண்ணாநஞ்சு) அறிவுடையார் புஜித்தறியாத விஷத்தைத் தா ([illegible]) ரகமாக புஜித்து ப்ரதிகூலையான பூதனையை முடித்து "அநுகூலர்விரோதிபோகப் பெற்றோம்" என்று உகந்தவுன்னை உகந்தேன்நான்.

(மண்ணாளா வித்யாதி) விஷம்தாரகமான உனக்கு ஆகாதாரில்லை. நீ கைவிடப்பார்க்குமன்றும் விடவொண்ணாத புருஷகாரமுண்டு. (மண்ணாளா) பொறைதானாயிருக்கை. தான் பொறையாளாயிருக்குமளவன்றிக்கே, செய்தகுற்றங்களை அவன் திருவுள்ளத்திலே படாதபடி,(க) "கார்யம் கருணமார்யேண-நகஸ்சிந்நாபராத்த்யதி" என்று அவனையும் பொறுப்பிக்குமவளாயிற்று. நோக்காலும் போக்ய([illegible])தையாலும் அவன் தன்வழியே போம்படி நியமிக்குமவளாயிற்று. (கண்ணபுரத்துறையம்மானே) இவையெல்லாம் உண்டானாலும் கார்யமாகாதிறே நீ தூரஸ்தனாயிருந்தாயாகில்; அக்கண்ணழிவையும் அறுத்துவைத்தாயே. .... (௪)

௫—பெற்றாரும் சுற்றமுமென்றிவை பேணேன்நான்
மற்றாரும் பற்றிலேனாதலால் நின்னடைந்தேன்
உற்றானென் றுள்ளத்து வைத்தருள் செய்கண்டாய்
கற்றார்சேர் கண்ணபுரத்துறை யம்மானே. (௫)

பர்யமருளிச்செய்கிறார் (ஏறிட்டித்யாதி). விஷத்தைபுஜித்தாலும் உகப்பு வருமோவென்ன வருளிச்செய்கிறார் (ப்ரதிகூலையித்யாதி).

"வாணெடுங்கண்ணி" இத்யாதிக்குத் தாத்பர்யமருளுகிறார் (தானித்யாதி). திருவுள்ளத்தில்படாதபடி நோக்காலுமித்யாதியை ஏகமாக அந்வயித்துக்கொள்வது. இப்படிமயக்கி அவனை வசீகரிக்கவல்லாளோவென்ன வருளுகிறார் (நகஸ்சிதித்யாதி). (அவனையும்) என்றது- சொல்மிறுங்கணை திருவடியையுமென்றபடி. ... ... (௪)

அரு.—அஞ்சாம்பாட்டு. (பெற்றாரித்யாதி) "கீழேதேவதாந்தரங்களிலும் தேவதாந்தர ஸம்பந்திகளிடத்திலும் பற்றிலேன்" என்றீராகிலும் சரீரஸம்பந்திகளிடத்திலும் ரக்ஷகத்வ ப்ரதிபத்தியும், ஸ்வரக்ஷணேஸ்வாந்வயமும் தீர்ந்தாலிறே அதிகாரிபூர்த்தியுள்ளது. அதுவேண்டாவோவென்று பகவத

(க) ரா-யு-௧௧௩-௪௪.

பதம்.	உரை.	பதம்.	உரை.
கற்றார்சேர்	(ஸகலசாஸ்த்ரங்களையும்)கற்றவர்வர்த்திக்கிற	ஆதலால்	ஆகையால்(நிராலம்பனனான்)
கண்ணபுரத்துறையம்மானே?		நின்னடைந்தேன்	உம்மையே ஆஶ்ரயித்தேன் (ஆகையால்)
நான்	அடியேன்	உற்றான்	"இவன் நமக்கு உறவானவன்"
பெற்றாரும்	மாதாபித்ராதிகளும்		
சுற்றமும்	உறவாளிகளும்	என்று	என்று
என்றிவை	என்றிப்படிப்பட்டவர்களை எல்லாம்	உள்ளத்து	உம்முடைய திருவுள்ளத்திலே
பேணேன்	பந்துக்களாக விரும்பமாட்டேன்;	வைத்து	வைத்துக்கொண்டு(அடியேன் பக்கல்)
மற்றாரும்	மற்றுயாரிடத்திலும்	அருள	க்ருபையை
பற்றிலேன்	ஸங்கமுடையேனல்லேன்	செய்கண்டாய்	செய்தருளவேணும்.

அவ.—அஞ்சாம்பாட்டு. நாமும் உகந்து, வலியபுருஷகாரமுமுண்டாய், ஸுலபனுமானாலும் நீர்புறம்பு பற்றற்று அகிஞ்சநராய் வருமன்றன்றோ அதுகார்யகரமாவதென்ன; என் குறையறுத்து வைத்தேன்; நீ உன்தலையில் குறைகிடவாதபடி பரிஹரித்துக்கொள்ளாயென்கிறார்.

(பெற்றாரித்யாதி) நான் வேறுசிலரை பந்துக்களென்று நினைத்திருப்பதில்லை. (மற்றாரும் பற்றிலேன்) ஐயோ? இவனுக்குப்புறம்பொருவருமில்லையென்பாரையுமுடையேனல்லேன்; புறம்பொருவருமில்லையாகில் நீர் உண்டேயென்ன; நானும்எனக்குக் கழுத்துக்கட்டி. (ஆதலால் நின்னடைந்தேன்) நிராலம்பநனாய் விழுமவனுக்கு ஒருதரையிலே விழவேணுமே. (க) "సతంనిపతితంభూమౌ - ஸதம் நிபதிதம்பூமௌ".

பிப்ராயத்தைக் காட்டாநின்றுகொண்டு ஸங்கதியருளுகிறார் (நாமுமித்யாதி). (அகிஞ்சநராய்) என்றது "மற்றாரும்" என்றவிடத்தில் தாமும் அந்விதராகையாலே ஸ்வரக்ஷணத்தில் ஸ்வாந்வயமற்றவரென்கை.

நின்னடைந்தேனென்ன வமைந்திருக்க "ஆதலால்" என்றுவிசேஷித்தவருக்குக்கருத்தை யருளுகிறார் (நிராலம்பநேத்யாதி).

(க) ரா-ஸு-௬௮-௬௯.

(உற்றானென்றுள்ளத்துவைத்து) "இவன்நம்மைவிட்டுப் புறம்பேபோய் படக்கடவதெல்லாம் பட்டான்" என்று உன்திருவுள்ளத்திலேகொண்டு என்பக்கலிலே க்ருபையைப்பண்ணி யருளவேணும். அன்றிக்கே "என்னாலறுத்துக் கொள்ளவொண்ணாத ஸம்பந்தம்உன் கையதன்றோ? இவன்கீழ் விட்டுப்போந்த உறவுமுறையெல்லாம் நாமேயன்றோ" என்றுஇத்தைத் திருவுள்ளத்திலேகொண்டு என் பக்கலிலே க்ருபையைப்பண்ணி யருளவேணும். என்றான் இங்ஙனே செய்யவேண்டுகிறதென்னென்ன; (கற்றாரித்யாதி) நீ வர்த்திக்கிற ஊரிலுள்ளார் விழுந்தவேடெடுத்து வாசித்தறிவாருண்டோ? அறிவுடையார்க்கெல்லாம்படவேண்டாவோ?.(க) "𑌆𑌰𑍍𑌯𑍇𑌣 𑌕𑌰𑍁𑌣𑌂 𑌕𑌾𑌰𑍍𑌯𑌮𑍍- ஆர்யேண - கருணம் - கார்யம்" என்னக்கடவதிறே என்று ஜீயரருளிச்செய்தவார்த்தை. அவர்கள்பக்கல் வேண்டாதவற்றைக்கிடந்து ஆராயாநிற்கிறதென்? நம்ஸ்வரூபத்துக்கீடாகச் செய்யவேண்டுவதுகிடக்க ஆராய்ந்தால் கைவிடவொண்ணாதவற்றை ஆராய்கிறதென்? .... (ரு)

மூ.—ஏத்தியுன்சேவடி யெண்ணியிருப்பாரை
பார்த்திருந்தங்கு நமன்றமர்பற்றாது
சோத்தம்நாமஞ்சுதுமென்று தொடாமைநீ
காத்திபோல் கண்ணபுரத்துறையம்மானே. (சா)

பதம்.	உரை.	பதம்.	உரை.
கண்ணபுரத்துறையம்மானே ?		எண்ணி இருப்பாரை	(நித்ய கைங்கர்யம்செய்யவேணுமென்று) எண்ணி இருக்குமவர்களை
உன்	உம்முடைய	நமன்றமர்	யமபடர்கள்
சேவடி	திருவடிகளை		
ஏத்தி	ஸ்தோத்ரம் செய்து		

"உற்றான்" என்றதுக்கு து:க்கங்களையுற்றானென்றும், எனக்கு உறவானவனென்றும் இரண்டர்த்தமருளுகிறார் (இவனித்யாதி வாக்யத்ரயத்தாலே). ஸம்வாதமுகேந தாத்பர்யமருளுகிறார் (அறிவுடையார்க்கித்யாதி). (க) "𑌪𑌾𑌪𑌾𑌨𑌾𑌂 𑌵𑌾 𑌶𑍁𑌭𑌾𑌨𑌾𑌂 𑌵𑌾- பாபாநாம் வா சுபாநாம்வா" என்றெடுத்தஶ்லோகத்துக்கு அர்த்தத்தை யுட்கொண்டு தாத்பர்யமருளுகிறார் (அவர்கள் பக்கலித்யாதி). (நம்ஸ்வரூபத்துக்கு) என்றது - ஆர்யரான நம்முடைய விசேஷஜ்ஞதைக்கென்றபடி. ... ... (ரு)

(க) ரா-யு-கககூ-சச.

பார்த்திருந்து	(ஶரீரவியோகஸமயம்) பார்த்திருந்து	நாம்	"நாம்
		அஞ்சுதும்	பயப்படுகிறோம்"
அங்கு	அந்த அந்திமதசையில்	என்று	என்று
பற்றாது	இட்டாமல்	தொடாமை	ஸ்பர்ஶியாமலிருக்கும்படி
சோத்தம்	சோத்தமென்று தாழ்ந்தார் சொல்லும் சப்தத்தைச் சொல்லி	நீ	தேவரீர்
		காத்திபோல்	காத்திருப்பாய்போலும்.

அவ.— ஆறும்பாட்டு. நீ என்குற்றங்கள்பாராதே என்னைக் கொள்ளுமளவுபோராது; செய்த குற்றங்கள் ஆராய்வதாக நீ இட்டயமாதிகளும் என்பக்கல் வாராதபடி பண்ணவேணுமென்கிறார்.

வ்யா.—(எத்தியித்யாதி) உன் திருவடிகளை எத்தி (௧) "வழுவிலா வடிமை செய்யவேண்டுநாம்" என்கிற மநோரதத்தையுடையராயிருக்குமவர்களை. (பார்த்திருந்து) அவர்களுடைய சரீரவிஸ்லேஷஸமயம் பார்த்திருந்து. அவ்வவஸ்தையிலே அந்திமஸமயத்திலே யமபடர்வந்துகிட்டாதே.

(சோத்தநாமஞ்சுதுமென்று) அவர்கள் அநுகூலராயிருப்பாரைக்கண்டால் சொல்லுவன இச்சப்தங்கள். (௨) "இறைஞ்சியும் சாதுவராய்ப்போதுமின்கள்" என்கிறபடியே, "அவர்களைக்கண்டால் நாங்கள் அருகுவாரோம்" என்று கடக்கப் போம்படியாயன்றோ உன்ஸ்வபாவம். (கண்ணபுரத்துறையம்மானே) அவ்வவளவுகளறிந்து நோக்குகைக்காகவன்றோ இங்குவந்து நிற்கிறது. (௬)

மூ.—வெள்ளைநீர்வெள்ளத்தணைந்த வரவணைமேல்
துள்ளுநீர்மெள்ளத் துயின்ற பெருமானே
வள்ளலே யுன்றமர்க்கென்றும் நமன்றமர்
கள்ளர்போல் கண்ணபுரத்துறையம்மானே. (௭)

பதம்.	உரை.	பதம்.	உரை.
வெள்ளை நீர்	திருப்பாற்கடலினுடைய	வெள்ளத்து	வெள்ளத்திலே
		அணைந்த	அணைத்துக் கொண்டு கிடக்கிற

அரு.—ஆறும்பாட்டு. (எத்தியித்யாதி) உன் சேவடியெண்ணியிருப்பாரை நீ காத்திருப்பாயென்று அந்யாபதேசேந வநுஸந்தித்தது - ஸ்வகதமான தசையென்று விவக்ஷித்து ஸங்கதியருளுகிறார் (நீ யித்யாதி).

அவ்வவளவுகள் - அந்தந்த அவஸ்த்தைகள். ... ... (௬)

---

(௧) தி-வாய்-௩-௩-௧. (௨) ௪-திருவ-௬௮.

அரவணைமேல்	திருவநந்தாழ்வான் மேலே
துள்ளும்	துள்ளாநின்ற
நீர்	திவலைகள்(ஸ்பர்ஶிப்பதால்)
மெள்ள	மெள்ள
துயின்ற	திருக்கண் வளருமவனாய்,
பெருமானே	ஸர்வாதிகனாய்,
வள்ளலே	உதாரனுமான
கண்ணபுரத்துறை யம்மானே?	
உன்றமர்க்கு	உன்னடியார்பக்கல்
என்றும்	எந்த காலத்திலும்
நமன்தமர்	யமபடர்கள்
கள்ளர்போல்	சோரரைப்போல் மறைந்துவர்த்திப்பார்கள்.

அவ.—ஏழாம்பாட்டு. அவர்கள்கிட்டாமையேயோ? உன் ப்ரபாவத்தாலே அவர்களுக்கு மறைந்து வர்த்திக்கவேண்டும்படியாயன்றோ இருக்கிறதென்கிறார்.

வ்யா.—(வெள்ளையித்யாதி) திருப்பாற்கடலிலே திருவநந்தாழ்வான்மேலே. (துள்ளுநீர்) கடலில் சிறுதிவலைகளானவை திருமேனியில் ஸௌகுமார்யத்துக் கீடாகவந்து துடைகுத்த. (மெள்ளத் துயின்ற பெருமானே) ஆர் யமவஶ்யராகிறார்; ஆர்கூப்பிடுகிறார், என்றுகூக்குரல்கேட்கும்படி செவிதாழ்த்துக்கொண்டு மெள்ள கண் வளரும் ஸர்வாதிகனே!

(வள்ளலே) ஆஶ்ரிதவிஷயத்தில் பண்ணின ஔதார்யவெள்ளமிருந்தபடியென். (உன்றமர்க்கென்றும்) உன்னுடையாரைக் கண்டால் யமபடர்கிட்டாமையேயோ? மறைந்தன்றோ வர்த்திப்பது. (கண்ணபுரத்துறையம்மானே) காக்கிற நீ ஸந்நிஹிதனாயிருக்க, அவர்கள் எங்ஙனே வெளியிலே திரியும்படி. .... (எ)

மூ.—மாணாகிவையமளந்ததுவும் வாளவுணன்
பூணாகம்கீண்டதுவுமீண்டு நினைந்திருந்தேன்
பேணாதவல்வினையே னிடரெத்தனையும்
காணேன்நான் கண்ணபுரத்துறையம்மானே. (அ)

அரு.—ஏழாம்பாட்டு. (வெள்ளையித்யாதி) ஸங்கதியை யருளுகிறார் (அவர்களித்யாதி). அவர்கள் - யமபடர்.

துள்ளுநீராலே மெள்ளத் துயிலுகிறானென்று விவக்ஷித்து நீராலே துயிலுகையை வெளியிடுகிறார் (கடலித்யாதி). ... ... (எ)

அரு.—எட்டாம்பாட்டு. (மாணாகியித்யாதி) "ஈண்டு" என்றது நீட்டிக்கிடக்

பதம்.	உரை.
கண்ணபுரத்துறை யம்மானே?	
மாணாகி	(நீர்முன்பு) ப்ரஹ்மசாரியாய்
வையம்	லோகங்களை
அளந்ததுவும்	அளந்துகொண்டதையும்,
வாள்	வாளாயுதமுடையனான
அவுணன்	ஹிரண்யனுடைய
பூண்	ஆபரணங்களாலே (அலங்க்ருதமான)
ஆகம்	மார்வை
கீண்டதுவும்	கிழித்ததையும் (நான்)
ஈண்டு	இப்போது
நினைந்திருந்தேன்	நினைத்திருந்தேன்; (அதனால்)
பேணாத	(ஆத்மாவுக்கு ஒருஹிதமும்) செய்யாதவனாய்
வல்வினையேன்	கொடிய பாபங்களைப் பண்ணினவனுமான
நான்	அடியேன்
இடர்எத்தனையும்	ஸகலபாபங்களையும் (இப்போது)
காணேன்	காணவில்லை. (௮)

அவ.—எட்டாம்பாட்டு. நீபாபங்களைக் கனக்கக்கூடுபூரித்து வைக்கஅதினுடையப(ஃ)லாநுபவத்தைப்பண்ணுவிக்குமவர்களுக்கு மறைந்து வர்த்திக்கைக்கு வேண்டுகிற ஹேதுவென்னென்ன; நீ ஆஸ்ரிதர்க்காக உன்னை அர்த்தியாக்கின படியையும், விரோதிநிரஸநசீலனாயிருக்கிறபடியையும் அநுஸந்தித்தேன். அவைவாஸனையோடே போய்நிற்கக் கண்டேனென்கிறார்.

வ்யா.—(மாணாகி) உண்டென்று இட்டபோதோடு இல்லையென்று தள்ளிக் கதவையடைத்தபோதோடு வாசியற முகமலர்ந்து போம்படி இரப்பிலே தகணேறினவடிவையுடையனாய் பூமிப்பரப்பையடைய அளந்துகொண்டதும், சிறுக்கனுக்காக ஸாயுதனான ஹிரண்யனுடைய ஆபரணங்களாலே அலங்க்ருதமான மார்வைக்கிழித்ததுவும். (ஈண்டுநினைந்திருந்தேன்) நீமுற்காலத்திலே செய்தசெயலை நான்இப்போது நினைத்திருந்தேன்.

(பேணாதவித்யாதி) தேஹாத்வ்யதிரிக்தமா யிருப்பதோர் ஆத்மா உண்டென்று அதுக்கொருநன்மைபாராதே, தேஹாத்மாபிமானியாய் மஹாபாபங்களைத் திரட்டினநான், அவையடங்கலும் நிஸ்

கிறதாய், அதுதானும்இன்றுயென்றபடியாகையாலே இப்படிவிசேஷித்ததுக்குத் தாத்பர்யம் (நீயித்யாதி).

ஆத்மாவைப்பேணாதவனாய் வல்வினையேனானவென்று அர்த்தம்விவக்ஷித்தருளுகிறார் (தேஹாதீத்யாதி). போக்குமவன் கிட்டிநிற்கையாலே போம்

ஶேஷமாகப்போய்க்கொடுநிற்கக்கண்டேன். (கண்ணபுரத்துறையம்மானே) போக்குமவனளவுக்கு ஈடாயன்றோ போமதினளவு இருப்பது. .... (அ)

மூ.—நாட்டினாயென்னையுனக்கு முன்தொண்டாக
மாட்டினேனத்தனையே கொண்டென்வல்வினையைப்
பாட்டினாலுன்னை யென்னெஞ்சத்திருந்தமை
காட்டினாய் கண்ணபுரத்துறையம்மானே. (கூ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
கண்ணபுரத்துறை யம்மானே?		வல்வினையை	கொடியபாபங்களை
முன்	ப்ரதமத்திலே	மாட்டினேன்	போக்கினேன்; (மேலும்)
என்னை	அடியேனை		
உனக்கு	உமக்கு	பாட்டினால்	அடியேன் பாடின பாட்டினால்
தொண்டாக	தாஸ பூ (பூ) தனாக		
நாட்டினாய்	ஸ்திரப் படுத்தினாய்; (பிறகு அடியேன்)	என்	என்னுடைய
		நெஞ்சத்து	மனதில்
அத்தனையே கொண்டு	அந்தக்ருபாவி சேஷத்தைக்கொண்டே	உன்	உம்முடைய
		இருந்தமையை	இருப்பை
என்	அடியேனுடைய	காட்டினாய்	அறிவித்தாய். (கூ)

அவ.— ஒன்பதாம்பாட்டு. உம்முடையவிரோதி போனபடி தானென்? நீர்பெற்ற பேறுதா னென்னென்ன;

வ்யா.—(நாட்டினாயென்னை யுனக்குமுன் தொண்டாக) முந்

பாபங்கள் தூரப்போயிற்றென்று தாத்பர்யத்தை யருளுகிறார் (போக்குமவனித்யாதி). ... ... (அ)

அந.—ஒன்பதாம்பாட்டு. (நாட்டியித்யாதி). முதற்பாட்டுத்தொடங்கி இவ்வளவும், கைங்கர்யத்தில் தம்முடையசாபல்யத்தையும், தம்முடைய அநந்யகதித்வாதிகளையும், அவனுக்குத்தாம்அறிவிப்பித்து "இப்படிப்பட்ட எனக்கு கண்ணாலே உன்னைக் கண்டுகளிக்கப்பெறுகையென்று சொல்" என்றுகேட்க, ஈஶ்வரனும் இவர்திருவுள்ளத்திலே களிப்புண்டாம்படி அடிமைகொண்டமையை அறிவிப்பித்து, இத்தையும் அவர் திருப்பவளத்தாலே கேட்கவேணுமென்று ஆசையாலே கேட்கிறானாக மேற்பாட்டோடே ஸங்கதியை தர்ஶிப்பிக்கிறார் (உம்முடைய வித்யாதி).

முன் என்னை உனக்கு நாட்டினாயென்று யருளுகிறார் (முந்துறவித்யா

துறமுனனம் நீசெய்தது இவனை நம்முடையானென்று அங்கே நாட்டுங்களென்றாய். நீ எனக்கு ப்ரதமஸுக்ருதமாகச் செய்தது இவனை நம்முடையனாக அங்கே நாட்டுங்களென்று சொன்னாய். (மாட்டினேனித்யாதி) நானும் அவ்வளவைக்கொண்டு உன்னைப்பற்றின ராஜகுலத்தாலே அநாதிகாலம் புத்திபூர்வகமாகப்பண்ணின பாபங்களை நிஶ்ஶேஷமாகப் போக்கினேன்.

(பாட்டினாலித்யாதி) விரோதிபோகப் பெற்றவளவேயோ? அதுபோனால் பெறக்கடவ கைங்கர்யத்தையும் பெற்றேன். வாசிகமானவடிமையும் செய்யப்பெற்றேன். நாம்பாடின கவியினுடைய மதிப்பிருந்தபடியால், இதுநம்மால் வந்ததாகக்கூடாது, உள்ளேயிருந்து பாடுவிக்கிறானொருத்தனுண்டென்றறிந்த விதுகொண்டே நீ என்ஹ்ருதயத்திலேயிருக்கிற விருப்பை நிஶ்சயிக்கலாம்படி பண்ணினாய். (கண்ணபுரம்) இவரைப்பாடுவித்த மூக்கோட்டையிருந்தபடி. .... (௯)

மூ.—கண்டசீர்க் கண்ணபுரத்துறையம்மானை
கொண்டசீர்த்தொண்டன் கலியனொலிமாலை
பண்டமாய்ப்பாடுமடியவர்க் கெஞ்ஞான்றும்
அண்டம்போயாட்சி யவர்க்கதறிந்தோமே. (௧௦)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பதம்.	உரை.	பதம்.	உரை.
கண்ட	கண்ணாலே கண்டநுபவிக்கலாம்படியான	உறை	நித்யவாஸஸ்த்தலமாக வுடையரான
சீர்	ஸம்பத்தையுடைய	அம்மானை	ஸர்வேஶ்வரனை,
கண்ணபுரத்து	திருக்கண்ணபுரத்தையே	கொண்ட	(எல்லாரும் நெஞ்சிலே) கொள்ளும்படியான

தி). (என்றாய்) என்றவநந்தரம் "என்கை" என்றுசேஷம். ஏதத்விவரணம் (நீ எனக்கித்யாதி). (அங்கே) என்று அடிமையெழுதிக்கொள்ளும் அக்கணக்குத் திட்டத்திலென்கை. தொகைமுறியான எட்டெழுத்தில் முதலெழுத்திலேதானே பகவதநந்யார்ஹ சேஷபூதரிலே நீருமொருவரே என்று அறிவிப்பித்தானென்று திருவுள்ளம்.

மலையாளத்தில் "மூக்கோட்டை" என்கிறவூரை நினைத்தால் கவிகளுக்

சீர்	ஸ்வபவமுடைய
தொண்டன்	பகவத் கைங்கர்ய ஸ்ரீயை யுடையரான
கலியன்	ஆழ்வாராலே
ஒலி	ஒலியுடன் அருளிச் செய்யப்பட்ட
மாலை	மாலாரூபமான இத் திருமொழியை
பண்டமாய்	நிதியாகக்கொண்டு
பாடும்	பாடுமவர்களான
அடியவர்க்கு	தாஸபூதர்களுக்கு
எஞ்ஞான்றும்	எந்தகாலத்திலும்
அண்டம்போய்	பரமபதத்தில்சென்று
ஆட்சி	ஆளுகைஉண்டாகக் கடவது;
அவர்க்கு	இத்தை அப்யஸித்தவர்களுக்கு
அது	அந்தபேறுஸித்திக்குமென்பதை
அறிந்தோம்	அறிந்தோம். (௧௦)

வ்யா.—பத்தாம்பாட்டு. (கண்டசீரித்யாதி) உண்டான ஸம்பத்தை ப்ரமாணங்களிலே கேட்டுப் போகையன்றிக்கே கண்ணாலே கண்டநுபவிக்கலாம்படி நிரவதிக ஸம்பத்தை யுடைத்தான திருக்கண்ணபுரத்திலே நித்யவாஸம்பண்ணுகிற ஸர்வேஶ்வரனை. (கொண்டசீர் தொண்டன்) ஆழ்வாருடைய ஶ்ரீவைஷ்ணவ ஶ்ரீயைச் சொன்னால் அதிலே சிலர்விப்ரதிபத்தி பண்ணுகையன்றிக்கே "ஆழ்வாராகில் தொண்டர்" என்று எல்லாரும் நெஞ்சிலே கொள்ளும்படியான நன்மையை யுடையராயிருப்பாராயிற்று. இதில் விமதி விஷயமன்றிக்கேயிருக்கை. ஆழ்வார் ஒலியையுடைத்தாக வருளிச் செய்தமாலை.

இவற்றை நிதியாகக்கொண்டு பாடுமடியார்களுக்கு காலதத்வமுள்ளதனையும் (௧)"ஆண்மின்கள்வானகம்" என்கிறபடியேபரமபதம் குப் பாட்டுக்கிளம்புமாபோலே இவருக்கும் திருக்கண்ணபுரத்தை நினைத்தால் பாட்டுக்கிளம்புமாகையாலே இவரைப் பாடுவித்த மூக்கோட்டை என்கிறது.

அரு.—பத்தாம்பாட்டு. (கண்டவித்யாதி) "கண்ட"என்றத்தாலே பரமபதத்தை வ்யாவர்த்திக்கிற தென்றருளுகிறார் (உண்டானவித்யாதி). (விமதி) விப்ரதிபத்தி.

பண்டமாவது - பண்டே அமர்ந்திருக்கிற வைப்பாகச் சேமித்ததாகவருளுகிறார் (இவற்றையித்யாதி). ... ... (௧௦)

ஜீயர் திருவடிகளே சரணம்.

* * *

---

(௧) தி-வாய்-௧௦-௯-௯.

"Forwarded Free of Cost, & with the Compliments of the Department of Education, Government of India, New Delhi

ஆட்சியாகக்கடவது. (அதறிந்தோமே) ஸர்வேஶ்வரன் என் பக்கல் பண்ணின ஓரமிருந்தபடி கண்டேனுக்கு இத்தை அப்ப்ய(ஸ்ய)ஸித்தவர்களுக்கும் அவ்வளவு சென்றல்லது பர்யவஸிக்கவொண்ணாததென்னுமிடத்தை அழகிதாகவறிந்தோம். (அண்டம்) ஆகாசம்; பரமாகாசம். * * * * * * * * * (௧௦)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

8135

பெரியதிருமொழி

எட்டாம்பத்து பத்தாம்திருமொழி

முற்றிற்று.

GURUKUL KANGRI LIBRARY
Accession ५।१।९७
Class on
Cat on
Tag etc.
Checked
Any Other